திருமந்திர ஆய்வுரைக் களஞ்சியம்

9 தந்திரங்கள், 97 ஆய்வுரைகள்



ஆகாயம்



காற்று



நெருப்பு

பதிப்பாசிரியர்
திலகவதியார் திருவருள் ஆதீனம்
தயானந்த சந்திரசேகரன்



நீர்



நிலம்

வெளியீடு
அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி நிறுவிய
திலகவதியார் திருவருள் ஆதீனம்


Nalli®
Since 1928
கோலங்கள்
கலெக்ஷன்

திருச்சிற்றம்பலம்

திருமந்திர ஆய்வுரைக் களஞ்சியம்


9 தந்திரங்கள், 97 ஆய்வுரைகள்

பதிப்பாசிரியர்:
திலகவதியார் திருவருள் ஆதீனம்
தவத்திரு **தயானந்த சந்திரசேகரன்**

வெளியீடு:
அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி நிறுவிய
திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120, தஞ்சைச் சாலை, மச்சுவாடி,
புதுக்கோட்டை - 622 001.
தமிழ்நாடு.
தொலைபேசி : 04322 - 228024

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	திருமந்திர ஆய்வுரைக்களஞ்சியம்
பதிப்பாசிரியர்	:	தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்
பொருள்	:	ஆய்வுக்கட்டுரைகள்
உரிமை	:	பதிப்பாசிரியருக்கே.
பதிப்பு	:	முதல் பதிப்பு டிசம்பர், 2005
நூலின் அளவு	:	1x8 டெம்மி
எழுத்து	:	11 பாயிண்ட்
பக்கம்	:	711
விலை	:	250/=
அச்சிட்டோர்	:	சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி) லிட், சிவகாசி
வெளியீடு	:	திலகவதியார் திருவருள் ஆதீனம் 1120, மச்சுவாடி, தஞ்சை சாலை புதுக்கோட்டை – 622 001. தமிழ்நாடு. தென்னிந்தியா. தொ.பே.எண்: 04322 – 228024
நூல்கள் கிடைக்குமிடம்	:	திலகவதியார் திருவருள் ஆதீனம் அன்னை சாயிமாதா நினைவு பொது நூலகம் 1120, மச்சுவாடி, தஞ்சை சாலை, புதுக்கோட்டை 622 001.




திலகவதியார் திருவருள் ஆதீனம்

அருள்மிகு **அன்னை சாயிமாதா சிவபிருந்தாதேவி**

அவர்களின் அருட்புதல்வர்

தவத்திரு. **தயானந்த சந்திரசேகரன்**

காணிக்கை



இத்திருநூல் உருவாக்கத்திற்கு எமக்கு உடனாக இருந்து இயக்கிய கருணையின் வடிவான தில்லை அம்பலக்கூத்தனுக்கும், திருமூலர் பெருமானுக்கும், அன்னையின் குருவருளுக்கும் இந்நூலினைக் காணிக்கையாக்குகின்றோம்.

1/5

இத்திருநூலின் புரவலர்களை நன்றிப் பாராட்டி மகிழ்கின்றோம்...



அருட்செல்வர் பெருந்தகை
டாக்டர்.
நா. மகாலிங்கம்
சென்னை.



பண்பாட்டுக் காவலர்
பத்மஸ்ரீ
நல்லி குப்புசாமி செட்டியார்
சென்னை.

ஆன்மீகச்செம்மல்
டாக்டர். **மேஜர். கே. சீனிவாசன்**
திருச்சிராப்பள்ளி.

திருமதி. **மீனாட்சி ஆச்சி**
புதுக்கோட்டை.

இங்ஙனம்
தவத்திரு. **தயானந்த சந்திரசேகரன்**
பதிப்பாசிரியர்

1/5

திருமந்திர ஆய்வுரைக் களஞ்சியம்

பொருளடக்கம்

ஆசியுரை-வாழ்த்துரை	- திருப்பனந்தாள் ஆதீனம், திருவருள்திரு. காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள்	xi
அணிந்துரை	- அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்	xiii
வாழ்த்துரை	- டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி	xix
பதிப்புரை	- தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்	xxi
பதிப்பாசிரியரைப் பற்றி..	- பேராசிரியர் டாக்டர். அய்க்கண்	xxiii
1.திருமந்திரப்பாயிரம்	- கயிலைக்குருமணி, திருப்பெருந்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்	1
2.வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு	- சித்தாந்த சரபம். வை. இரத்தினசபாபதி	10
3. திருமூலர் தம் வரலாறு கூறுதல்	- அருட்பா அவதானி சி. செகந்நாதன்	24
4. திருமந்திரத் தொகைச்சிறப்பு	- பேராசிரியர். எஸ். சேதுபதி	32
5. மும்மூர்த்திகளின் முறைமை	- தமிழறிஞர். தி.வே.கோபாலய்யர்	41

முதல் தந்திரம்

6. உபதேசம்	- சிவநெறிச்செல்வர். டாக்டர்.வீ. ஜெயபால்	48
7. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை	- பேராசிரியர். டாக்டர். அ.அறிவொளி	55
8.கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை	- புலவர். மா. நாகூர்	61
9. மகளிர் இழிவு, நல்குரவு	- கவிஞர். வீ.கே. கஸ்தூரிநாதன்	67
10. அக்னிகாரியம், அந்தணரொழுக்கம்	- பொற்கிழிக்கவிஞர்.கா. நாகப்பன்	73
11. வானச்சிறப்பு	- அருட்பாத் தொண்டர். கூ. சங்கரய்யா	78
12. தானச்சிறப்பு	- திருமதி. ஆர். மகேஸ்வரி	83
13. அன்புடைமை, அன்பு செய்வாரை அறிவன் சிவன்	- பேராசிரியர். கு.ப. கண்ணன்	88
14.கல்வி, கல்லாமை	- பேராசிரியர். முனைவர். பழ.முத்தப்பன்	94

15. நடுவு நிலைமை, கள்ளுண்ணாமை	- பேராசிரியர். க. பூரணச்சந்திரன்	101

இரண்டாம் தந்திரம்

16. அகத்தியம்	- சைவத்திரு. வா. ஞானப்பிரகாசம்	108
17. பதிவலியில் வீரட்டம் எட்டு, பிரளயம், சக்கரப்பேறு	- வள்ளல் அடிப்பொடி. அ. சுவாமிநாதன்	110
18. இலிங்கபுராணம், தக்கன் வேள்வி	- முனைவர். சு. திருநாவுக்கரசு	122
19. எலும்பும் கபாலமும்	- திருமதி. ச. ஜெயலெட்சுமி	128
20. அடிமுடி தேடல்	- சித்தாந்த ரெத்தினம். கணபதி ராசேந்திரன்	132
21. படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல்	- சிவநெறிச்செல்வர். டாக்டர்.வீ.ஜெயபால்	140
22. கரு உற்பத்தி	- சிவநெறிச்செல்வர் டாக்டர்.வீ.ஜெயபால்	154
23. மூவகை சீவவர்க்கம், பாத்திரம் அபாத்திரம்	- சொல்லின் செல்வர். எல்.கே.சுபாஷ் சந்திரபோஸ்	164
24. தீர்த்தம், திருக்கோயில், அதோமுகதரிசனம்	- பேராசிரியர். முனைவர். கு.வெ. பாலசுப்பிரமணியன்	169
25. சிவநிந்தை, குருநிந்தை, மகேசுவர நிந்தை	- ஒளிநெறிப்பிழம்பு. தவத்திரு ஊரன்அடிகள்	174
26. பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல்	- கவிஞர். பால நடராசன்	178

மூன்றாம் தந்திரம்

27. அட்டங்க யோகம், இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம்	- கவிஞர். இராகவன் முத்து	185
28. பிரத்யாகாரம், தாரணை, தியானம்	- திருமந்திரச்செல்வர். டி.வி.வெங்கட்ராமன்	197
29. சமாதி	- அருட்பாத்தொண்டர். ஞானசேகரன்	206
30. கரிமா, பிரகாமியம், ஈசத்துவம் வசித்துவம்	- டாக்டர். பழனி இளங்கம்பன்	210
31. கலைநிலை	- முனைவர். மு. சிவச்சந்திரன்	216

32. காயசித்தி உபாயம்	- முனைவர். தா. மணி	221
33. காலச்சக்கரம்	- திருக்குறள்செல்வர். மு.வைத்தியநாதன்	227
34. ஆயுள்பரீட்சை	- ஆன்மீகச்செல்வர். எஸ்.கே.வைத்தியநாதன்	234
35. வாரசரம், வாரசூலம்	- புலவர். அர. பிரகதம்பாள்	239
36. கேசரி யோகம்	- சித்தாந்த இரத்தினம். தனக்கோடி நாரயாணன்	246
37. பரியங்க யோகம்	- புலவர். மா.கி. இரமணன்	257
38. அமுரிதாரணை, சந்திரயோகம்	- நாவுக்கரசர். டாக்டர். சோ. சத்தியசீலன்	262

நான்காம் தந்திரம்

39. அசபை	- கல்லாடர். க. கிருட்டிணமூர்த்தி	270
40. திருவம்பலச்சக்கரம்	- சேக்கிழார் பாதசேகரன் சி.சு. கண்ணாயிரம்	276
41. அர்ச்சனை, நவகுண்டம்	- பெரும்புலவர். மயிலம் சிவசுப்பிரமணியன்	283
42. திரிபுரைச்சக்கரம்,வைரவச்சக்கரம், சாம்பவி மண்டல சக்கரம், புவனாபதி சக்கரம்	- கவிஞர்கோ. ஞா. மாணிக்கவாசகம்	291
43. பூரணசக்தி	- முனைவர்.தவத்திரு. மௌன குமாரசுவாமி தம்பிரான்	305
44. ஆதார ஆதேயம்	- முனைவர். ஆறு. அழகப்பன்	311
45. நவாக்கரிச் சக்கரம்	- திருமந்திரச்செம்மல். சி. செகந்நாதன்	315

ஐந்தாம் தந்திரம்

46.சுத்த சைவம், அசுத்த சைவம் மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம்	- பொற்கிழிக் கவிஞர். சொ.சொ.மீ.சுந்தரம்	325
47. சரியை, கிரியை, யோகம், ஞானம்	- கல்லாடர். க. கிருஷ்ணமூர்த்தி	333
48. சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம்	- தமிழாகரர். பேராசிரியர். தெ. முருகசாமி	342
49. சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்	- சித்தாந்த இரத்தினம். இல.குணசேகரன்	347

50. சத்தி நிபாதம்	- பேராசிரியர். ம.வே. பசுபதி	354
51. புறச்சமயதூடணம்	- பெருங்கவிக்கோ. வா.மு.சேதுராமன்	361
52. நிராசாரம், உட்சமயம்	- புலவர். இராம. வள்ளியப்பன்	365

ஆறாம் தந்திரம்

53. சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு	- முனைவர். பா. ஜம்புலிங்கம்	372
54. ஞாதுரு, ஞானஞேயம், துறவு	- பேராசிரியர் .டாக்டர்.சுப.திண்ணப்பன்	380
55. தவம், தவநிந்தை, அருளுடைமையின் ஞானம் வருதல்	நற்கதை நம்பி, - பேராசிரியர். டாக்டர். அய்க்கண்	390
56. அவவேடம், தவவேடம், ஞானவேடம், சிவவேடம்	- பேராசிரியர். ஆ. சிவலிங்கனார்	398
57. திருநீறு	- சைவத்திரு. வா. ஞானப்பிரகாசம்	402
58. அபக்குவன், பக்குவன்	- பேராசிரியர். பழ. பழனியப்பன்	405

ஏழாம் தந்திரம்

59. ஆறாதாரம், அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம் ஆத்மலிங்கம் ஞானலிங்கம், சிவலிங்கம்	சைவத்தமிழ்மணி, முனைவர். - பேராசிரியர். இரா. செல்வக்கணபதி	411
60. சம்பிரதாயம், அருளொளி, திருவருள் வைப்பு	- முனைவர். அ. மலர்	419
61. சிவபூசை, குருபூசை, மகேசுவரபூசை	- வள்ளல் அடிப்பொடி சுவாமிநாதன்	433
62. முத்திரை பேதம்	- புலவர். முத்து வெங்கடேசன்	440
63. பூரணகுகை நெறிச் சமாதி, சமாதிக் கிரியை	- அருட்கவியரசு. சி. செகந்நாதன்	445
64. விந்துற்பணம்	- அகத்தீஸ். மு. உடையப்பன்	456
65. விந்துசெயம், போக சரவோட்டம்	- முனைவர். சபா.அருணாசலம்	464
66. அண்டாதித்தன், பிண்டாதித்தன் மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன்	- பேராசிரியர். அரங்க இராமலிங்கம	468
67. பிராணன், புருடன், சீவன், போதன்	- சித்தாந்த இரத்தினம். மு. செல்வநாதன்	480

68. ஐந்திரியம் அடக்கும் அருமை ஐந்திரியம் அடக்கும் முறைமை	- சிவநெறிச்செல்வர். சிவ. ஆ. பக்தவக்சலம்	487
69. அசற்குரு நெறி, சற்குருநெறி	- இலக்கிய சுடர். கவிஞர். மு.பா.	491
70. கூடாவொழுக்கம், கேடு கண்டிரங்கல்	- திருமதி. ஆர். தமிழரசி	496
71. இதோபதேசம்	- முனைவர். வே. பரமேசுவரன்	502

எட்டாம் தந்திரம்

72. உடலிற் பஞ்சபேதம், உடல்விடல்	- தவத்திரு. சாது சண்முக அடிகளார்	508
73. அபத்தை பேதம், கீழாலவத்தை, மத்திய சாக்கிரவத்தை, அத்துவாக்கள்	- பெரும்புலவர். வீ. தமிழ்ச்சேரனார்	512
74. சுத்த நனவாதி பருவம்	- புலவர். தி.சு. மலையப்பன்	516
75. கேவல சகல சுத்தம்	- திருமுறைமாமணி. சுவர்ணா சோமசுந்தரம்	520
76. பராவத்தை	- அகத்தீஸ். மு. உடையப்பன்	525
77. முக்குண நிற்குணம், அண்டாதி பேதம், கலவு செலவு	- முனைவர். மு. சாதிக்பாட்சா	540
78. பதினொராந்தானமும், அவத்தையெனக் காணல்	- முனைவர். நா. வள்ளி	547
79. அறிவுதயம்	- பேராசிரியர்.முனைவர். ச. முத்துக்குமரன்	552
80. பதி பசு பாசம்வேறாண்மை, அடிதலை அறியும் திறம் கூறல்	- பேராசிரியர். சி. சேதுராமன்	558
81. முக்குற்றம், முப்பதம், முப்பரம் முத்துரியம்	- வேம்பைப்புலவர். ஆறு.மெ.மெய்யாண்டவர்	563
82..பரலட்சணம்	- பெரும்புலவர். கோ. சுப்பிரமணியனார்	567
83. மும்முத்தி, முச்சொரூபம், முக்கரணம், முச்சூனிய தொந்தத்தசி,முப்பாழ்	- டாக்டர். அருணாசலனார்	573
84. காரிய காரண உபாதி, உபசாந்தம் புறங்கூறாமை	- தமிழறிஞர். இரா. இளங்குமரனார்	578

85. எட்டிதழ்க்கமல முக்குண அவத்தை
ஒன்பான் அவத்தை,
ஒள்பான் அபிமானி - பெரும்புலவர். நா. சுப்பிரமணியன் 581

86. சுத்தாசுத்தம் - சித்தாந்த வித்தகர். நா. சுப்பிரமணியன் 586

87. முக்தி நிந்தை, இலக்கணத்திரயம்,
தத்துவாசிவாக்கியம், - முனைவர்.கரு. முத்தையா 595

88. விசுவக்கிராசம், வாய்மை,
ஞானிசெயல் - பேராசிரியர். ம. கார்மேகம் 599

89. அவாவறுத்தல், பக்தியுடைமை
முக்தியுடைமை, சோதனை - முனைவர். கி. சுப்பிரமணியன் 604

ஒன்பதாம் தந்திரம்

90. குருமட தரிசனம்,
ஞானகுரு தரிசனம் - தவத்திரு.சங்கர நாராயணனார் 610

91. பிரணவ சமாதி, ஒளி - தவத்திரு. சொக்கலிங்க சுவாமிகள் 619

92. தூல பஞ்சாட்கரம்,
சூக்கும பஞ்சாட்கரம்,
அதிசூக்கும பஞ்சாட்கரம் - சித்தாந்த கவிமணி
மு.பெ. சத்தியவேல் முருகனார் 625

93. திருக்கூத்து தரிசனம் - பேராசிரியை.
டாக்டர். சரஸ்வதி இராமநாதன் 632

94. ஆகாசப்பேறு, ஞானதோயம் - புலவர். பொன். தெய்வநாயகி ஜோதி 643

95. மறைபொருள் கூற்று,
மோன சமாதி, - அருட்பா அவதானி. சி. செகந்நாதன் 648

96. வரையுரை மாட்சி - அருட்கவியரசு. சி. செகந்நாதன் 673

97. அணைந்தோர் தன்மை,
சர்வவியாபி - பெரும் நாவலர். துரை. நமசிவாயம் 679



உ
சிவ சிவ

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

திருப்பனந்தாள்-612504
தஞ்சைமாவட்டம்

தேதி: 28.10.05

ஆசியுரை

புதுக்கோட்டை திலகவதியார் ஆதீனம் தயானந்த சந்திரசேகரன் பதிப்பித்த திருமந்திர ஆய்வுரைக்களஞ்சியம் நூல் வெளியீட்டு விழாவும், ஆய்வரங்கமும் 10, 11. 12. 2005 நாட்களில் நடைபெறவிருப்பது அறியலாயிற்று.

தமிழோடு இசைபாடல் மறந்தறியாத ஆமூர் நாவரசர் 'கண்ணுதற்பெருங்கடவுளைத் தோத்திரமும், சாத்திரமும் ஆனார் தாமே' எனப்பாடிப் பரவுவார். இறைவன் புகழ்பாடுவன தோத்திரங்கள். தத்துவங்களை உணர்த்துவன சாத்திரங்கள். சைவத்தில் தோத்திரமும், சாத்திரமும் இருகண்கள். தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் சைவத்தின் மேல் சமயம் வேறு இல்லை என்பதையும், சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை என்பதையும் அறுதியிட்டுக்கூறுவன. அவை பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களுமாகிய தெய்வீக நூல்களாம். இவற்றுள் தோத்திரமும் சாத்திரமுமாக விளங்கும் தனிச் சிறப்புடையது 10-ஆம் திருமுறையாகிய திருமந்திரமாகும். வேத ஆகமங்களின் சாரமாக விளங்குவது. வேதாந்தம் எனும் உச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்த கனிந்த சைவ சித்தாந்தச் செந்நெறியைத் தமிழில் விளக்கிக் கூறும் ஆகமப் பிழிவாக விளங்குவது திருமந்திரம்.

அந்நூலில் உள்ள ஒன்பது தந்திரங்களில் உள்ளனவற்றைப் பல்வேறு தலைப்புகளாகப் பிரித்துக் கொண்டு 100 ஆய்வு கட்டுரைகள் அடங்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

சைவமும், தமிழும் தழைத்தினிது ஓங்கப் பாடுபட்டுவரும் தமிழறிஞர்கள் பலர்.

அரிதின் முயன்று திரட்டிய அரிய கருத்துக்கள் அடங்கிய கட்டுரைக்களஞ்சியமாகத் திகழ்கிறது. எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத செய்திகளையும், எளிதாக உணர்ந்து கொள்ளும் வகையில் தந்திருப்பது இந்நூலின் சிறப்பு.

பல்வேறு அறிஞர்கள் கட்டுரைகளின் தொகுப்பாயினும் திருமந்திரத்தின் கருத்துக்களைப் பாயிரம் முதல் இறுதிவரை முறையாக அமைந்திருப்பது படிப்போருக்குத் திருமந்திரம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பை தருவதாகும். எளிய இனிய தமிழ்நடை மேலும் மெருகூட்டுகிறது.

வெளியீட்டு விழாவும், ஆய்வரங்கமும் இனிதே நிறைவேறவும், பெரு முயற்சி எடுத்து இந்நூலைப் பதிப்பித்த பதிப்பாசியரும், படித்துப் பயன் பெறுவோரும் சிவஞானமும், தீர்க்காயுளும் மேன்மேலும் பெற்று வாழவும் திருவருள் புரியுமாறு செந்தில் நகர்க் கந்தவேள் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ



அணிந்துரை

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்
தலைவர், சக்தி குழுமம், சென்னை

திருமந்திரம் நூல் சில தனிச் சிறப்புக்களை உடையது.

பன்னிரு சைவத் திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகளும் முழுமையும் தோத்திரம்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் சாத்திரம்.

பதினொராம் திருமுறை பலவகை பிரபந்தம்.

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் சரித்திரம்.

இரண்டாவதாக வேறு தமிழ் நூல்களில் காணப்படாத வகையில் திருமந்திர நூல் மந்திரங்கள் என்றும் தந்திரங்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

உலகியல் ஒழுக்கங்களில் சில திருக்குறளில் போல வலியுறுத்தப்பட்டு அருளியல் ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன.

உடல் தொடர்பான செய்திகள் அழுத்தம் கொடுத்துப் பேசப்படுகின்றன. கர்ப்பை கிரியை, பரியங்க யோகம் முதலியவற்றில் (போகம்) இணை விழைச்சுத் தொடர்பான செய்திகள் பேசப்படுகின்றன.

சைவ சித்தாந்தம் முதன் முதல் பேசப்படுகிறது. அதே நேரத்தில் வேதாந்த சித்தாந்தமும் வேதாந்த சித்தாந்த சமரசம் என்னும் அனுபவமும் கூறப்படுகின்றன. திருக்கோயில் வழிபாட்டைச் சிறப்பிக்கும் திருமந்திர நூலில் சக்கரங்கள், மந்திரப் பிரயோகங்கள் ஆகியவையும் காணப்படுவது ஒரு வியப்பான செய்தி.

திருமந்திரம் ஆறு சமயங்களைப் பற்றி கூறுகிறது. இந்த ஆறு சமயம் மணிமேகலையில் கூறப்படுவனவாகிய தொன்மையான ஆறு சமயங்கள். அவை:

உலோகாதயம்	(வியாச முனிவர் உருவாக்கியது)
பௌத்தம்	(புத்த முனிவர் உருவாக்கியது)
சாக்கியம்	(கபிலர் உருவாக்கியது)
நையாயிகம்	அட்சபாதன் உருவாக்கியது
வைசேஷிகம்	கனாதர் உருவாக்கியது
மீமாஞ்சம்	ஜைமினி உருவாக்கியது.

இவை ஆறு வகைச் சமயங்கள். இதுவல்லாமல் சைவம், பிரமம், வைணவம், வேதம், ஆஜீவகம், நிகண்டம் இந்த ஆறும் அடுத்த நிலையில் ஆறு சமயங்கள் எனப்படும்.

முதல் ஆறும் கொள்கை வழி ஆறு சமயங்கள். அடுத்த ஆறும் வழிபாட்டு வழி ஆறு சமயங்கள்.

இவற்றையே முன்னோர்கள் ஆறு சமயங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். 'ஒன்றுள பேரூர், வழிஆறு அதற்குள்' என்று திருமந்திரம் கூறுகிறது. மிகப் பிற்காலத்தில் கடவுளர்களை மையமாக வைத்து ஆறு சமயங்கள் சொல்லப்பட்டன.

அவை சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சவுரம் இவைகள் பிற்காலத்தில் ஆறு சமயங்கள் எனச் சொல்லப்பட்டன.

பிற்காலத்தில் உருவான காணாபத்தியம் முதலாகிய சமயங்கள் திருமந்திர நூலுக்குப் பிற்பட்டவை.

குறிப்பு:

எட்டாம் திருமுறையில் உள்ள திருக்கோவையார் பிரபந்தமாக இருப்பதால் இதனை மாணிக்கவாசகருடையது அன்று என்று சிலர் கருதுவார்கள். அதனை பதினொன்றில் வைத்தால் மாணிக்கவாசகருடைய அருளிச் செயல்கள் தொடர்ந்தாற்போல் அமையாது போய்விடும் என்ற எண்ணத்தில் எட்டிலேயே அடக்கிவிட்டார்கள் என்று தோன்றுகிறது. இதனை ஒரு காரணமாக வைத்து மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடவில்லை என்று சொன்னவர்களும் உண்டு.

தன் வரலாற்றைத் தானே கூறும் முறையைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே திருமந்திரத்தில்தான் முதன் முதலில் காண்கிறோம்.

திருக்குறள், நாலடியார் போல மூவாயிரம் பாட்டையும் ஒரே யாப்பில் பாடியிருக்கிறார் ஆசிரியர். சூனிய சம்பாஷனை என்ற பகுதி முழுமையும் உருவாகம், த்வனி (இறைச்சிப் பொருள்) ஆக வரைந்திருக்கிறார்.

இவ்வாறாக அடுக்கிக் கொண்டு போகலாம். திருமந்திர நூலாசிரியர் சித்த மார்க்கத்தில் நின்றவராகக் காணப்படும் அதே நேரத்தில் பக்தி மார்க்கத்தில் பகுத்தவராகவும், தத்துவ ஆராய்ச்சியில் தலை நின்றவராகவும் விளங்குகிறார்.

இதனைத் தமிழருடைய ஆகமம் என்று பாரதிதாசன் முதலான கடவுளுண்மை மறுப்பார்கள் கூடப் போற்றியிருக்கிறார்கள்.

திருமந்திரம் உடற்கூற்றை நன்கு ஆராய்கிறது. சிவயோகத்தையும், ஹடயோகத்தையும் கூட விவரிக்கிறது.

உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன.

மூலாதாரம்	:	இது முள்ளந்தண்டினுடைய நுனி
சுவாதிஷ்டானம்	:	கொப்பூழ் (உந்தி) கருவுக்கு உணவு கொடுக்கும் நாடி இதன் வழியே சென்றதால் இது ஒரு ஆதாரமாக கொள்ளப்பட்டது.
அநாஹதம்	:	இருதயம்
விசுத்தி	:	இது குரல்வளை (மிக முக்கியமான பகுதி)
ஆக்ஞா	:	புருவ நடு இதன் உள்ளே பல வழிகள் இணைகின்றன. (பிட்யூட்டரி சுரப்பி உள்ள பகுதி)
பிரமரந்திரம்	:	உச்சி மண்டையில் தோலால் மூடப்பட்டு உள்ள துவாரம். ஆறு ஆதாரங்களுக்கும் நவதுவாரங்களுக்கும் தொடர்பு இல்லை. அவை உடம்புக்கு வேண்டாதவற்றை வெளியிடவும், வேண்டியவற்றை உள்ளே ஈர்த்துக் கொள்ளவும் பயன்படும் தொளைகள்.

நவ துவாரம்

தொளைகள்	இழுப்பது	வெளியிடுவது
மெய்(தோல்)	வெப்பம், குளிர்	வியர்வை
வாய்	உணவு	எச்சில்
கண்	காட்சி	பீளை
மூக்கு(2)	காற்று	சளி
செவி(2)	ஓசை	குறும்பி
எருவாய்	ஒன்றுமில்லை	மலம்
கருவாய்	ஒன்றுமில்லை	சலம்

ஆறாதாரத்தின் வழியே நடப்பது ஹடயோகம். திருமூலர், தாயுமானவர், வள்ளலார் முதலியோர் கடைப்பிடித்தது சிவயோகம்.

ஞானிகளுக்கு அனுபவம் கண்டத்திற்குமேல் என்கிறார் வள்ளலார்.

பீனியல் சுரப்பியோடு தொடர்புப்படுத்திப் பேசப்படும், யோக அனுபவம் சித்தர்களின் குண்டலினி அனுபவம், ஹைஸ்ரராரச் சக்கரத்தில் கிடைப்பதால் ஞானிகளுக்கு அனுபவம் கண்டத்துக்குமேல் என்கிறார் வள்ளலார். ஹடயோகத்தைப் போகத்துக்கும் பலர் பயன்படுத்துவார்கள். போகம் கண்டத்துக்கும் கீழான அனுபவம்.

இவை இரண்டையுமே திருமந்திரம் பேசுகிறது என்பது வியப்பு.

யோகமும் போகமும் வாழ்க்கையின் இரு கூறுகள்.

'ஒன்றிய யோகமும் போகமும் ஒத்தார்' என்பது கம்பராமாயணத் தொடர்.

திருமந்திரம் கூறும் நெறிகள், உண்மைகள் பலருக்கு அனுபவம் ஆகாதவை. அனுபவத்தில் உணரப்படாதவை.

அவைகளைச் சிலர் பதவுரையாக விளக்கிவிட்டு கடமை முடிந்தது என்ற நிறைவோடு விட்டுவிட்டார்கள்.

திருமந்திரம் காட்டும் உண்மைகள் எந்த அளவிற்கு அனுபவ சாத்தியமானவை? என்பதை அருளியல் வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் பயிற்சி செய்து மற்றவர்களுக்கு உள்ளபடி உணர்த்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இல்லாவிட்டால் திருமந்திர நூல் இருந்தும் பயனற்றது என்றாகிவிடும். இந்தப் பயிற்சிக்கு காலம் நிரம்பப் பிடிக்கலாம். இடையிடையில் தோல்வியும் வரலாம். பொருட் செலவும் நேரலாம்.

எத்தனை எத்தனையோ முயற்சிகளுக்கும் பொருளிழப்புக்கும், உயிரிழப்புக்கும் இடையே சந்திரனுக்கும், மற்ற கிரகங்களுக்கும் விண்கலங்களை மனித சமுதாயதம் அனுப்பியது. இறுதியில் வெற்றி கிடைத்தல்லவா?

ஆன்மிகத் துறையில் மட்டும் கேள்வி கேட்ட மறுகணமே உண்மை கிடைக்க வேண்டும் என்பது முடிகிற காரியமா?

தொடர்ந்து முயற்சி செய்வது அருளியல் வாழ்வு மேற்கொண்டவர்களுக்கு இன்றியமையாத கடமையாகும்.

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்களால் உருவாக்கப்பட்டது. சாயிமாதா அவர்கள் மிகக் கற்றவர்கள். கற்றவற்றை மற்றவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லும் திறம் படைத்தவர்கள். அவர்களோடு பழகும் நற்பேறு எனக்கு உண்டு. அவர்கள் விட்டுச்சென்ற அருட்பணிகளை ஆதீனத்தை இப்போது நிர்வகித்து வரும் திரு. தயானந்த சந்திரசேகரன் அவர்கள் தொடர்ந்து சிறந்த முறையில் நடத்தி வருகிறார்கள். அவர்களது சீரிய முயற்சியால் அறிஞர் பலர் திருமந்திரத்தைத் திறம்பட ஆராய்ந்து கட்டுரைகளாக்கித் தந்துள்ளனர். அக்கட்டுரைகளின் தொகுப்பு கண்கவரும் அழகிய கட்டமைந்த நூல் வடிவில் வெளிவந்து அருள்மணம் கமழ்கிறது.

இதுபோலவே இந்த அருள்நிலையம் நமது திருமுறைகள் முதலான அருட்செல்வங்களை மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும் என விரும்புகிறேன்.

திலகவதியார் ஆதீன குரு முதல்வர் அருட்டிரு சாயிமாதா அவர்களுடைய குருவருளும் இறையருளும் கைகூட்டுவதாக என வாழ்த்துகிறேன்.

திரு. தயானந்த சந்திரசேகரருக்கு இறைவன் நீடிய வானாளும் நலங்களும் அருளவேண்டும் என அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பணிந்து பிரார்த்திருக்கிறேன்.

நா. மகாலிங்கம்.



வாழ்த்துரை

டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி
மக்கள் சக்தி இயக்கம், சென்னை

திலகவதி அம்மையார் (அன்னைசாயிமாதா) செய்த ஆன்மீகப் பணியினையும், புதுக்கோட்டையில் செய்து வந்த சமுதாயப் பணியினையும் அதிகம் பேர் அறியமாட்டார்கள்.

இதை நினைவுறுத்துவதன் மூலம் நம்மையும், அப்பணிகளையும், ஆன்மீக வாழ்வையும் பற்றி சிந்திக்கச் செய்யும் வகையில் ஒரு அற்புத நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறார் தயானந்த சந்திரசேகரன். மனம் திறந்த பாராட்டுக்கள்.

நூலோ வாழ்க்கைக்களஞ்சியம். பெரும் ஆன்மீக கையிருப்பு! இப்படிப்பட்ட நூல்களை நாம் பிற நாடுகளில் பார்க்க முடிவதில்லை. விஞ்ஞானத்தின் பல்வேறு புதிய கண்டுபிடிப்புக்களில் இன்னும் அணுவுக்குள் என்ன இருக்கிறது என்பதை இன்று வரை அவர்கள் சொல்லவில்லை; சொல்ல முடியவில்லை.

ஆனால், இதை எல்லாம் சென்னை பிரம்ம ஞான சபையின் அன்றைய தலைவர் பிளவட்ஸ்கியும், அன்னிபெசன்ட் அம்மையாரும், பிஷப்லெட் பீட்டரும் 1875 லேயே கண்டு, அதை இங்கிலாந்திலிருந்து பௌதிக விஞ்ஞானிகள், "அட்டமா சித்தியில் ஒன்றான 'அணிமா' வை உபயோகித்து என்ன இருக்கிறது அணுவுக்குள்" கண்டு பிடிக்க முடியுமா? என்று கேட்டபோது செய்து காட்டினார்கள்! அதுதான் உண்மை என்பதை இன்றைய ஆராய்ச்சி முடிவுகள் உறுதி செய்கின்றன.

அதேபோல இறைநிலை அடைவதைப் பற்றி நமது சைவப்பெரியார்கள் நால்வரும், பதினெண்சித்தர்களும் மற்றும் பல ஞானிகளும் எழுதி வைத்திருக்கும் மற்ற மறை நூல்களும் படிக்க படிக்க நம் கண்கள் அகல விரிகின்றன. எப்படிப்பட்ட முன்னோர்கள், ஞானிகள், யோகிகள் இந்த தமிழ் மண்ணில் வாழ்ந்தார்கள் என்று எண்ணும் போது உடல் சிலிர்க்கிறது.

அப்படிப்பட்ட சித்தரான திருமூலரது மூவாயிரம் பாடல்களையும் நல்ல தமிழறிஞர்களைக் கொண்டு ஒரு சிறந்த நூலை

கால காலத்திற்கும் *திலகவதியார் பீடம்* அளித்திருப்பது பெரிதும் போற்றுதற்கு உரியது.

இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் மனிதப்படைப்பு எவ்வளவு மேன்மையானது என்பதை உணர்வார்கள். நம் நாட்டில் இப்படிப்பட்ட மகான்களும் ஞானிகளும் பிறந்தும் மக்கள் ஏன் அந்த உயர் நிலையை தொடர்ந்து அடையவில்லை என்று கேட்போமானால், உலகாயதம் எனப்படும் காம, குரோத, மோக, மத, மாச்சர்யங்களில் மக்கள் மூழ்கி விடுகிறார்கள் என்பது ஒன்று. அடுத்து, ஞானி சிவவாக்கியர், 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் ?' என்று கேட்கிறாரே. அந்த அவன் நமக்குள்ளே இருக்கிறான் என்பதைப் பலரும் அறியாமைதான் காரணம்; முயலாததுதான் காரணம்.

இந்த நூல், அந்த நிலையைப் போக்கும்; மாற்றும். விவேகாநந்தரும், அரவிந்தரும் மற்றும் பல ஞானிகளும் அறிஞர்களும் சொல்லி இருப்பது போல இந்த நூற்றாண்டு, "உலகிற்கு இந்தியா வழிகாட்டும் நூற்றாண்டாக இருக்கும்" என்பதை நம்பலாம்.

நமது சிந்தனையினாலும் நமக்கு வழி காட்டும் மாபெரும் சக்தி நமக்குள்ளே இருக்கிறது என்பதை உணரும்போதும், மனிதன் மாறுவான்; உலகம் உயர் நிலை அடையும்.

உலக வாழ்வில், பொருளே எல்லாமல்ல என்று நம்புங்கள். பொருளைப் பற்றிய இன்றைய விஞ்ஞான ஆய்வு ஆன்மீகத்திலே முடிகிறது என்பதை Fritzo Cafora என்ற புகழ் பெற்ற பௌதிக விஞ்ஞானியும், அமித் கோஸ்வாமி என்ற வங்காளத்தில் பிறந்து பௌதிக ஆராய்ச்சியில் ஈடுபட்டு இன்று அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலிருந்து கொண்டு தன் ஆராய்ச்சிகளை எழுதும் இந்திய விஞ்ஞானியும் உலகிற்கு உணர்த்துகின்றனர்.

உலகம் இந்தியாவை நோக்கித்தான் நகர்கிறது. நாம் நம்மையும் அடுத்த தலைமுறையையும், அதற்கு தகுதி உள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

திருமூலரைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளைப் படிக்கும் போது பிரமிப்பும், அதன்பின் சொல்ல முடியாத பாரம்பரியப் பெருமையும் தான் மனத்தை நிறைக்கின்றது; ஒரு மகத்தான விழிப்புணர்வு ஏற்படுகின்றது.

-எம்.எஸ். உதயமூர்த்தி.



பதிப்புரை

மனிதன் நிலைபேறுடைய பெருநிலையை அடையலாம் என்ற உயர்ந்த கருத்தினை நமக்கு தந்தருளிய திருநூல் திருமூலப் பெருமானின் திருமந்திரமாகும்.

திருமந்திரத்தின் வாயிலாக நமக்குத் தந்தருளிய உட்கருத்துக்களை அனைவரும் அறிய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்பது தந்திரங்களிலும் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் கருத்துக்களைத் ஆய்வுரையாகப் பெற்று முழு வடிவமாக வெளியிட எண்ணினோம். எல்லாம் வல்ல சிவபரம்பொருள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம், தலைசிறந்த தமிழறிஞர்களிடத்தில் உடன் தொடர்பு கொண்டு தெரிவித்தபோது மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். ஒன்பது தந்திரங்களில் உள்ள உட்தலைப்புக்கள் 86 அறிஞர்களிடத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டு 97 ஆய்வுக் கட்டுரைகளாகப் பெற்றோம். இத்திருப்பணியில் பங்கு கொண்ட அறிஞர் பெருமக்கள் பெரும் சிறப்புக்குரியவர்கள் ஆவர்.

திருமந்திர ஆய்வுரைகளை அற்புதமாக வழங்கி, நம் முயற்சிக்கும், அன்னையாரின் திலகவதியார் திருவருள் ஆதீனத்திற்கும் சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆய்வுரைஞர்கள் அனைவருக்கும் நமது நன்றி கலந்த வணக்கத்தினையும், வாழ்த்தினையும் நமது திருமடத்தின் சார்பில் ஒருங்கே உரித்தாக்குகின்றோம்.

திருப்பனந்தாள் ஆதீன குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இத்திருநூலிற்கும், நமக்கும் நல்லாசி வழங்கி வாழ்த்துரை தந்தமைக்கும், நூலிற்கு அணி சேர்க்கும் விதமாக அணிந்துரை நல்கி நம்மையும் பாராட்டி வாழ்த்திய மிகச் சிறந்த நிறுவனங்களின் தலைவர், பன்முகம் கொண்ட பெருந்தகையாளர் அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் ஐயா அவர்கட்கும், அர்த்தங்கள் பொருந்திய இனிய வாழ்த்துரையோடு தன்னுடைய தத்துவ எழுச்சியான எழுத்தால் பல இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகின்றவரும், நம் அன்னையிடத்திலும், அதனைத் தொடர்ந்து நம்மிடத்திலும் அன்பு செலுத்தி வருகின்ற சிந்தனைச் சிற்பி டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி

அவர்கட்கும் நன்றிப் பெருக்கோடு நமது வணக்கத்தினை உரித்தாக்குகின்றோம்.

இத்திருநூல் உருவாக்கத்திற்கு வித்திட்ட எல்லாம் வல்ல சிவபரம்பொருளையும், திருமூலப் பெருமானின் அருளையும், அன்னையாரின் குருவருளையும் நினைந்து அவர்கள் திசைநோக்கி வணங்குகிறோம்.

மாபெரும் பணியான திருமந்திர ஆய்வுரைக்களஞ்சியத் திருநூல் வெளிவருவதற்கு ஆக்கமிகு சக்தியாக இருந்து ஊக்கம் தந்த அன்பிற்குரியவரும், சிறந்த அறப்பணியாளருமான, பண்பாட்டுக் காவலர். பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கட்கும், சக்தி குழுமங்களின் தலைவர், நம் போற்றுதலுக்குரிய அருட்செல்வர் பெருந்தகை டாக்டர். நா. மகாலிங்கம் அய்யா அவர்கட்கும், திருச்சிராப்பள்ளி அறுவகைச் சமய வழிபாட்டு ஆராய்ச்சி நூலகத்தின் தலைவர் ஆன்மீகச்செம்மல். மேஜர். கே. சீனிவாசன் அவர்கட்கும், புதுக்கோட்டை மீனாட்சி அறக்கட்டளை நிறுவனத்தலைவர். திருமதி. மீனாட்சி ஆச்சி அவர்கட்கும் நமது நன்றி கலந்த வணக்கத்தினையும், பாராட்டினையும் உரித்தாக்குகின்றோம்.

இத்திருநூலை சிறப்பான முறையில் அச்சுப்பிழைத்திருத்தம் செய்து உடனுக்குடன் அனுப்பி நம் பணிக்கு ஏற்றம் தந்த, நற்கதை நம்பி, பேராசிரியர், டாக்டர். அய்க்கண் அவர்கட்கும், விளம்பரம் தந்து இந்நூலிற்கு உதவிய பெருமக்கள் அனைவருக்கும், அருட்பா அவதானி சி. செகந்நாதன் அவர்கட்கும், புதுக்கோட்டை ஜெயம் செல்வராஜ் அவர்கட்கும், குறிப்பிட்ட நேரத்தில் இத்திருநூலினை அச்சு ஏற்றி அழகுடன் தந்த சிவகாசி சூர்யா பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் இத்தருணத்தில் நமது நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

அரும்பணியாக, நாம் எடுத்த இம்முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அறிஞர்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றியினைக் கூறி, திருமூலப் பெருமானின் திசைநோக்கி வணங்கி, இத்திருநூலினை தமிழ்ச் சமுதாயத்திற்கு கருத்துக் கருவூலமாக வழங்குவதில் பெரும் மகிழ்வு கொள்கிறோம்.

என்றும் சமய, சமூக சேவையில்,
தவத்திரு. **தயானந்த சந்திரசேகரன்**
பதிப்பாசிரியர்

பதிப்பாசிரியரைப் பற்றி....

ஒரு பெரிய மரம், வலிய கிளைகள், பசுமையான இலைகள், வண்ணம் குலுங்கும் மலர்கள், திண்ணிய காய்கள், தீஞ்சுவைக் கனிகள் ஆகியவற்றுடன் கம்பீரமாக நிற்கும்போது, அதன் அழகிலும் தோற்றத்திலும் மனதைப் பறிகொடுத்து நிற்பவர்களுக்கு, அந்தப் பெருமரத்தை வளர்த்து நிலைபெறச் செய்யும் ஆணிவேரின் நினைப்பு வருவதில்லை. அந்த மரத்தின் உருவாக்கத்தில் முழுப் பங்கேற்றுள்ள வேர், கண்ணுக்குப் புலனாவதில்லை.

அதேபோல, அழகிய கட்டமைப்புடன் திகழும் ஒரு நூலைப் பார்க்கும் போது, அதை உருவாக்கிய வேர் போன்ற பதிப்பாசிரியரின் பணி புலனாவதில்லை.

இப்போது உங்கள் திருக்கரங்களில் எழிற்கோலம் கொண்டு வீற்றிருக்கும் அரிய நூலான திருமந்திர ஆய்வுரைக் களஞ்சியத்தை உருவாக்கிய திருக்கரங்களுக்கு உரியவர் அருட்திரு தயானந்த சந்திரசேகர அடிகளாரின் ஒப்பரிய உழைப்பை நன்றியுடன் நினைவு கூர்வது, நமது கடப்பாடு ஆகின்றது.

புதுக்கோட்டைத் திருக்கோகர்ணத்தில், கருவிலே திருவுடையாராய் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்கள் அவதரித்த இல்லத்திலேயே பிறக்கும் தவப்பேறு பெற்றவர் நம் தயானந்த சந்திரசேகர அடிகள். ஏழுபேரைச் சகோதரர்களாகக் கொண்டு தோன்றிய சந்திரசேகரர் நான்கு வயதிலேயே அன்னையிடம் கொண்டிருந்த அளப்பரிய அன்பின் காரணமாய், அவர்தம் வளர்ப்பு மகனாகும் வாழ்நாட் பயன் பெற்றார்.

சீர்காழிப் பதியில் தெண்ணீர்த் திருக்குளத்தில் ஒரு குழந்தைக்கு உலக நாயகியின் ஞானப்பால் கிடைத்தது; உலகம் சுற்றி வந்த ஞானநாயகியான அன்னை சிவ பிருந்தாதேவியின் அருட்பார்வை, திருக்கோகர்ணத்தில் ஒரு சிறுவனுக்கு வாய்த்தது. ஞால குருவாகவும், ஞான குருவாகவும் விளங்கிய காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள், இந்த ஞானக் கொழுந்துக்குத் தயானந்த சந்திரசேகரன் என்று முழுப்பெயரிட்டு ஆசியருளினார்; பிற்காலத்தில் சமுதாயத்துக்குத் தயையும் ஆனந்தமும் வழங்குவார் என்ற தீர்க்கத் தரிசனத்துடன் இப்பெயரைக் காஞ்சி முனிவர் இணைத்தார் போலும்!

இயல்பூக்கமாய் அமைந்த ஆன்மீகச் சிந்தனையோடு, உலகியல் அறிவும் கல்வியால் பெற வேண்டும் என்ற அவாவில் அருட்டிரு தயானந்த சந்திரசேகரர் தம் பள்ளிப் படிப்பைப் புதுக்கோட்டையிலும், நிர்வாக இயல் பட்டப் படிப்பை (BBA) திருப்புத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியிலும், கணிப்பொறி முதுநிலைப் பட்டயப்படிப்பை (PGDCA) திருச்சி உருமு தனலெட்சுமி கல்லூரியிலும் பெற்றார். பாரதிதாசன் பல்லைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் கணிணி இயக்குநராகப் பணியாற்றி பட்டறிவையும் மேம்படுத்திக் கொண்டார்.

தமிழகத்திலேயே முதலாவதாகப் பெண் குலத்துத் திலகமாவாள் பெயரில் ஓர் ஆதீனம் நிறுவி வரலாற்றுப் புகழ் கொண்டவர் புதுக்கோட்டை அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்கள்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுவாக்கில், தமிழகத்தின் இருட்படலமாகப் போந்த வேற்றுச் சமய ஆதிக்கத்திலிருந்து தமிழ்மண்ணைக் காத்தவர்கள் இரு பெண்ணரசியரே. சைவமும் தமிழும் தழைத்திணிதோங்கத் தலைநிமிர்ந்து பணியாற்றியவர்கள், அப்பரின் தமக்கையார் திலகவதியாரும், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாருமே என்பதை வரலாறு புகழ்த் தடத்தில் பொறித்து வைத்துள்ளது.

அன்னையார் ஈசன் இணையடி நீழலை யடைந்த பின்னர், திருமடத்தின் பொறுப்பினை ஏற்ற தயானந்த சந்திரசேகர அடிகள், சிறப்பாக ஆதீனப்பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

'நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பரமர்க்கு அது ஆமே

என்னும் திருமூலப் பெருமானின் கொள்கைப்படி, திருமடத்தின் பணிகளைச் சமுதாயத்தை மையப்படுத்தி நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அன்னையின் திருப்பெயரால் பொது நூலகம், ஆராய்ச்சி நூலகமாக மேம்படுத்த செயலாற்றி வருகிறார்.

பத்மபூசண் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் பெயரால் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி நிறுவி கல்விப் பணியாற்றி வருகிறார்.

சமுதாய மாந்தர்க்கு ஆன்மீக உணர்வும், இலக்கிய ஈடுபாடும் முகிழ்த்திட வேண்டி பல சமய, இலக்கிய விழாக்களை பெருவிழாவாக நடத்தி வருகிறார்.

எதிர்கால சந்ததியினர் உணர்ந்து அறியும் வண்ணம் திருமுறைகள், திருக்குறள், திருவருட்பா ஆகியவற்றிலுள்ள அருட்பாடல்களை ஒப்புவிக்கும் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கி பாராட்டி வருகிறார்.

அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி கல்வி, சமூக அறக்கட்டளை நிறுவி, ஆன்மீகப் பணிக்காகவும் இயல், இசை, கலை மற்றும் சமூக பணிக்காகவும், சேவையாற்றி வருகின்றவர்களுக்கு ஆண்டுதோறும் பொற்கிழி விருதுகளை வழங்கி வருகிறார்.

திலகவதியார் திருமடம் செய்கின்ற தலையாய பணியாக அரிய நூல்களை வெளியிடும் பணியினைக் குறிப்பிடலாம்.

தொன்மையும் வளமையும் நிறைந்த பழம்பெரும் திருமடங்களைப் பின்பற்றி, இந்த இளைய மடமும் திருநூல்களை வெளியிடும் தொண்டினை செய்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தத்தேனினைச் சொரியும் ஒரு வாசகமாம் திருவாசகத்தினை, தமிழறிஞர்கள் 51 பேரைக் கொண்டு ஆய்வுக்கட்டுரைகளாகச் எழுதுவித்துத் தொகுத்து, 2002–ஆம் ஆண்டு அன்னையின் பவளவிழா நிகழ்ச்சியில் வெளியிட்டது இவ்வாதீனம்.

அருள் அன்னையின் வாழ்க்கையினையும் அன்பார்ந்த சமுதாயப் பணிகளையும் தொகுத்து ஒரு வரலாற்று ஆவணமாக **'ஒரு பெண் துறவியின் சமய வாழ்வும் -சமுதாய வாழ்வும்'** என்னும் நூலாக 2004 ஆம் ஆண்டு அன்னையின் குருபூசை விழாவில் வெளியிட்டடார்கள்.

இப்போது பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திர நூலை, 87 தமிழறிஞர் பெருமக்களின் ஆய்வுக்கட்டுரைகளாகப் பதிப்பித்து வெளியிடும் பணியை நிறைவு செய்துள்ளார்கள்.

தொடர்ந்து அனைத்துத் திருமுறைகளையும் வடித்துத் தொகுத்து அடுத்தடுத்து வெளியிடும் நல்நோக்கத்தோடு எண்ணி பணியாற்றி வருகின்ற சீர்மிகு தயானந்த சந்திரசேகர அடிகளாருக்குத் தமிழிலக்கிய உலகும் ஆன்மீக உலகும் நன்றி கூறும் என்பது திண்ணம்.

'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்று அறிவுறுத்துவார் வாழ்க்கை வழிகாட்டி வள்ளுவப் பெருமான்.

'குறைவான குறிக்கோள் குற்றம்' (Low AIM is a Crime) என்று தெருட்டுவார் இந்திய வழிகாட்டி மேதகு அப்துல் கலாம் பெருமகனார்.

'சிறியன சிந்தியாத' செம்மாந்த நெஞ்சோடு, உயர்ந்த குறிக்கோள்களை முன்னிறுத்திச் செயல்படுத்தி வருகிறார் அருட்டிரு தயானந்த சந்திரசேகர அடிகளார்.

திருமுறைகளும் இலக்கியங்களும், அறிவார்ந்த இறையன்பர்கள், நூல் அறிமேலோர் ஆகியோரோடு முடங்கி விடாமல், அவை எளிய படிப்பாளிகளிடமும் போய்ச் சேர வேண்டும் என்ற இலட்சியத்தோடு, அவற்றை எளிமைப்படுத்தி இனிய நடைபயிலும் நூல்களாக வெளியிடும் அவருக்குத் தமிழ்ப்பற்றாளர்கள் துணை நிற்க வேண்டும்.

ஆய்வுக் களஞ்சிய நூல்களுக்கான கட்டுரைகளைத் தமிழறிஞர்களிடம் அஞ்சல் மூலம் வேண்டிப் பெறுவது என்பது எவ்வளவு 'பகீரத முயற்சி' என்பது அத்தகைய தொகுப்புப் பணியில் ஈடுப்பட்டவர்களுக்கே தெரியும்.

அப்பணியில் சிறிதும் தளர்ச்சியோ சோர்வோ அடைந்து விடாமல், அளப்பரிய பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றி வெற்றி கண்டுள்ள தவத்திரு தயானந்த சந்திரசேகர அடிகளாரின் வினைத் திட்பம் போற்றுதற்குரியது.

இத்தகைய ஆய்வு நூல்களுக்கு அறிஞர்பெருமக்கள் ஒத்துழைப்பு நல்குவதுபோல், தமிழ் கூறு நல்லுகத்துக்குச் சான்றோர் பெருமக்கள் இந்த நூல்களை வாங்கி ஆதரவும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திலகவதியார் திருமடம், ஆன்மீகம் வளர்க்கும் தவச்சாலையாகவும், கல்வியைப் பெருக்கும் பல்கலை மையமாகவும், சமுதாயப்பணிகள் இயங்கும் தொண்டு நிலையமாகவும் நிலை பெற்று விளங்க, தவத்திரு. தயானந்த சந்திரசேகர அடிகளாருக்குத் துணையாக நின்று அருள் பாலிக்க அன்னையின் பேரருளை வணங்கிப் பணிகிறேன்.

–பேராசிரியர். **டாக்டர். அய்க்கண்**
காரைக்குடி.

திருச்சிற்றம்பலம்

1. திருமந்திரம் – பாயிரம்

கயிலைக்குருமணி

திருப்பெருந்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பேரூர் ஆதீனம், கோயம்புத்தூர்

திருநெறியத் தமிழ் மரபுக்கு ஊற்றமாக விளங்குவன திருமுறைகள். இத்திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமந்திரம். இது புகழ் நூலாகவும், பொருள் நூலாகவும் விளங்குவது. இதனை அருளியவர் திருமூலர். இவர் சித்தராகத் திகழ்ந்தவர். யோகக்கலையில் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். அருளார்ந்த செந்தமிழ் உணர்வினர். திருக்கோயில்களின் திருவுருவ அமைப்புக்களையும், வழிபாட்டு நெறிமுறைகளையும் திருமந்திர நூலாக இயற்றியுள்ளார். தமிழகத்தின் மிக உயர்ந்த கலைச் சிறப்புடையவை திருக்கோயில்கள். இவை சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்திற்கு வழிகாட்டுவன. சிற்பக்கலையின் சிறப்பை உலகறியச் செய்யும் கலைக்கருவூலங்கள். ஓவியத்தின் எழிலார்ந்த நுண்மையை கலைஞனின் தூரிகையாகக் கலை வளத்தை உள்ளக் கிழியில் உருவாக்கும் வளமை உடையன். படிமக் கலையை விரிவாக்கிப் பக்தியால் உணர்வோருக்கு உள்ளும் புறம்பும் உறவாடச் செய்வன. "நெக்கு நெக்கு நினைப்பவர் தம்முளே புக்கு நிற்கும் மெய்யியல் கலையை" நுனித்துணர வழிகாட்டுவன.

திருக்கோயில் வழி பாட்டுச் செந்நெறியை வளப்படுத்துவன ஆகமங்கள். திருவுருவ அமைப்பு, வழிபாட்டு முறை யாதியனவற்றை நெறிப்படுத்துவனவாகிய ஆகமங்கள் பல. அவை தமிழ் ஆகமங்கள் ஆதலின் "மன்னு மாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளினார்". என மணிவாசகர் அருளியுள்ளார். இறைவனால் அருளிய ஆகமங்கள் மறைந்தபோது தானே மகேந்திரத்திருந்து தோற்றுவித்து அருளியும் என வாசகத்தேனில் வழங்கியுள்ளார் மணிவாசகப் பெருந்தகை. இவ்வாகமங்கள் காலச்சூழலில் அயலாதிக்கத்தால் மறைக்கப்பட்டு வடமொழியாய் அமைந்தன. ஆகம வழிபாடும், திருக்கோயில் அமைப்பும் தமிழகத்தில், மணிக்கோயில், மாடக்கோயில் எனப் பலவாக வளர்ந்து கற்கோயிலாகவும், கலைக்கோயிலாகவும் உருவெடுத்து உலகில் எங்கும் காண முடியாததாய் வியத்தகு சிறப்பில் விளங்குகின்றன. வளர்ந்த

திருக்கோயில்களின் ஆகமக் கலைகள் மட்டும் வடமொழியில் இருப்பது வியப்புக்குரியது.

ஆகம வழிபாடு தமிழர்க்கே உரியது. மற்றைய இனத்தவர் இதைப் பேணுவது இல்லை. தமிழ் கூறும் நல்லுலகம் இவ்வழிபாட்டில் ஊன்றி நிற்கிறது. ஆனால் செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்காய் மாறிற்று. மீண்டும் திருநெறிய தமிழில் வழிபாடு மேலோங்கத் தோன்றியவர் திருஞானசம்பந்தர் எனச் சேக்கிழார் கூறியுள்ளார்.

திருமந்திரத்தில் முதலிடம் பெறுவது பாயிரம். நூல்களுக்கு பாயிரம் இன்றியமையாததாகும். "ஆயிரம் முகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்பது இலக்கணம். திருமந்திரத்தின் பாயிரப் பாடல்கள் திட்ப நுட்பம் செறிந்தவை. கருத்தாழம் உடையவை. பாயிரத்தின் முன் கடவுள் வணக்கம் அமைந்துள்ளது. அப்பாடல்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந் தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. என்பதாகும்.

இது ஒன்றியிருந்து நினைப்பதற்குரியது. வடமொழியாளர் தியான சுலோகம் எனக்கூறும் பாடல் இத்தகையதாகும். இப்பாடலில் பிள்ளையாரது திருவுருவத் தோற்றம் எல்லோரும் புரிந்துகொள்ள எளிதாக, இனிதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் ஐந்து கரம், யானைமுகமுடையவர். நிலவின் இளம்பிறை போல வண்ணமும் வடிவும் உடைய தந்தத்தை உடையவர். சிவனது மகன் என்பதாகும். இதில் ஞானக்கொழுந்து என்பது நூலின் உட்பொருளைக் கொண்டது. கொழுந்து வளர்ச்சியைக் காட்டித் தளிர்க்கும். வளர்ந்து கொண்டே இருக்கும். அதுபோல அறிவு வளரும் தன்மையது. அறிவின் முதிர்வு ஞானமாகத் திகழும். அது "அறிவொன்றிநின்று அறிவார் அறிவு" எனக்கூறுவர். "அறிதொறும் அறியாமை கண்டற்றால்" என்பது தமிழ் மறை. இத்தகைய பிள்ளையார் காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறது பாயிரத்தின் முதற்பாடல்.

ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தான்உணர்ந் தெட்டே.

"ஒன்றவன்தானே தனக்கு உவமையில்லாதான்" என்று தமிழ்மறை கூறுகின்றது. "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" எனத் திருநாவுக்கரசர் அருளியுள்ளார். அம் முழுமுதல் உலகனைத்தும் ஆனவர் என்பதை 'ஒன்றாய் உலகனைத்தும் ஆனார்தாமே' என்கிறது தாண்டகப் பாடல். ஆதலின் அவனை 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றார் திருவள்ளுவர். மேலும் ஒன்றவன் ஒன்றுதற்குரியவன்; மனம் நிலைபெற்று திருவருள் உணர்வில் திளைக்க அருள் புரிபவன் எனவும் அமைகிறது. ஒன்றியிருத்தல், இணைந்திருத்தல், ஒன்றாய் உடனாய், வேறாய் இருப்பவன் என்பது மெய்யியல்.

இரண்டவன் இன்னருள் உலகத் தோற்றத்திற்கும் உயிர்கட்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் ஆற்றலை வழங்குதற்கும் சத்தியுடன் கூடி 'சத்தியாய் சிவமாகி நிற்கும்' தனிப்பரம் என்பர். மேலும் உயிர்கட்கு, உடம்பு, கருவிகள், இவ்வுலக இன்ப நுகர்ச்சி ஆதியனவற்றை நல்கும் மறைப்புச் சக்தியாய் வளர்த்து அழுக்கு ஆகிய ஆணவ மலம் அகன்ற பிறகு அருட்சக்தியாய் திருவருளில் பேராயியற்கையாகிய ஆனந்தத்தை நல்கி 'நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரிந்து' விளங்கும் இனிய அருள் வடிவினன் எனலாம்.

நின்றனன் மூன்றினுள்

அமைதி, எழுச்சி, மயக்கமாகிய முக்குணங்களில் கலந்து நின்று அருளுகின்றான். படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில் கடவுளர்களாகவும் நிற்கிறான். மேலும் ஒன்றுதல், இன்புறுதல், செயலாற்றுதல் (இலயம்,போகம், அதிகாரம்) என்னும் நிலையின் நின்றனன். இச்சை, செயல், அறிவு (இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி) ஆகியவற்றை நல்கும் ஆற்றலாகவும் விளங்குகிறான். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் மூன்றனுள் ஒன்றி உயிர்கட்கு விளக்கமளிக்கிறான் எனலாம்.

நான்குணர்ந்தான்

அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கினையும் உணர்த்தும் தோற்றத்தில் நின்று கல்லால நீழலில் மயக்கமற நால்வர்க்கு உறுதிப் பொருள்களை உணர்த்தினான். இதனை 'அழிந்த சிந்தை அந்தணர்க்கு அறம் பொருள் இன்பம் மொழிந்தவாயான்' என்பார் அப்பரடிகள். 'உம்பர்

உம்பர் பெறும் பதமே அடியார் பெயராத தன்மையனே' எனும் திருவாசகக் கருத்துப்படி உம்பர் தனது சிவ உலகத்தில் இருக்கும் நிலையினையும். உம்பர் சமீபமாக தன்பக்கத்திருக்கும் தகுதியையும் பெரும் பதம், தன்னுருவில் நிற்கும் நிலையினையும் அடியார் பெயராத தன்மையர் சாயுச்சியமாகிய வீடு பேற்றினையும் உயிர்கட்கு வழங்கும் நிலையில் உணர்ந்து போற்றும் பொருளாகியவன். மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகளில் நின்று உணர்ந்தோர்க்கு அருள்பவன். தொண்டு நெறி, நன்மகன் நெறி, தோழமை நெறி, கலப்பு நெறி (தாச, சத்புத்திர,சக, சன்மார்க்க) என வழிப்பட்டார்க்கு உணர்ந்து அருளும் பெருவள்ளல் என விரியும்.

ஐந்து வென்றவன்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன்களுக்குரிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தையும் வென்றவன் என்பதை 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார்' என தமிழ்மறை கூறும். மேலும் நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களிலும் அப்பாலும் வென்று நின்றான். ஐம்பெரும் கடவுளர்களாகி அதன் மேலும் வெற்றிக்குரியவனாக விளங்குகின்றான் என்று விரிந்து செல்லும்.

ஆறு விரிந்தனன்

கங்கை ஆறு விரிந்த சடைமுடியன் எனலாம். ஆறு அத்துவாக்களாக விரிந்தனன். மேலும் சுழிமுனை , நாபி, இதயம், கண்டம், புருவ நடு, உச்சி என உடலிடத்து தங்கி உயிர்கட்கு நலம்தர விரிந்துள்ளான். பரிதி, ஈசன், பராசக்தி, திருமால், பிள்ளையார், முருகன் என ஆறு சமயக் கடவுளர்களாக விரிந்தவன். ஆறு அங்கமாக, இலக்கணம், ஓதல், எண், இசை, ஆடற்கலை, வேள்வி, இலக்கியம் இவைகளாக விரிந்து அருள்பவன் என்ற வகையில் மேலும் பலவாக விளக்கம் பெறும்.

ஏழும்பர் சென்றனன்

சுழிமுனை முதலான உந்தி, நெஞ்சு, கண்டம், புருவம், உச்சி என்னும் ஆறு இடங்களுக்கு மேலும் விரிந்து ஆயிர இதழ்க் கமலத்தின் அருளொளி பாய்ச்சி ஏழாக மேலோங்கி விரிந்துள்ளான். இன்னும் ஏழ்

கடலாகவும், ஏழு உலகமாகவும் விரிந்து விளங்கும் முதற்பொருள் என்பதை 'ஏழ் பொழிலும் ஏழ் திசையும் ஆனான் கண்டாய்' என்பார் அப்பரடிகள்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாங்
கூற்றுதைத் தானை யான் கூறுகின் றேனே.

ஓசை ஒளியெலாமான முழுமுதல் உலகுக்கு ஒருவனாய் நீக்கமற நிற்பவன். அவன் ஊனில் ஆவியாகக் கலந்துள்ளான். 'என்னில் யாரு எனக்கினியாரில்லை' என்பர் அப்பரடிகள். நமது உயிர் இனிய உயிர். அவ்வுயிருக்கு உயிராக விளங்குபவன் இறைவன் ஆட்படுத்தி ஆட்டுவிக்க ஆடுகின்றோம் என்று நீ அன்று நான் எனத்தம்முள் நிலை பெற்றுத் தூயவனாக விளங்குகின்றான். 'புன்புலால் யாக்கை புரைபுரை கனிய பொன்னெடுங் கோயிலாய் புகுந்து' நிற்கும் அச்சிவபரம் பொருளை போற்றுகின்றேன். 'இசையால் பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுகின்றேன்' என்கிறார் திருமூலர். பாலில் படுநெய் போல இறைவன் என்னுள்ளே புகுந்தாண்டு இமைப் பொழுதும் நீங்காது என் நெஞ்சில் விளங்குகிறான். நன்மை தரும் உலக அனைத்துக்கும் அவன் தலைவன். உலகியக்கத்துக்குரிய சிவசத்திக்கு நல்ல துணைவன். சத்தியின் வழியே உலகு இயங்க உயிருக்குயிராய் உலகாய் விளங்குகின்றான். சத்தியாகிய அன்னை தன் செயலென்று வெளிப்படுத்தாமல் சிவன் செயலே என்று தோன்றத் துணையாய் நிற்பாள். ஆதலின் நல்ல மாதுக்கு நாதன் என அருளினர்.

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ணற்கு அரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி
எண்ணாயிர நூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கும் நாதனை வணங்கிப் பாடுகின்றேன் 'போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி' என்னும் தேவாரப் பாடல் கருத்தும் சிந்திக்கத்தக்கது. சிவபெருமான் மேலான உலகங்களுக்கு எல்லாம்

மேலாகி மேலார்க்கு மேலாகி நின்றவன் அவனே தென்திசைக்கு வேந்தனாக உள்ள கூற்றுவனாகிய காலனைக் காலாற் கடிந்தான் ஆதலின் அவ்விறைவனடியைப் போற்றி உய்தி பெறுகிறேன் உயிராக்கம் பெறுகிறேன் என்பதாகும். எனவே விண்ணுலகங்களுக்கு ஒரு மருந்தாய் விளங்கும் பெருமான் நமது அடியார்க்காகக் கூற்றை உதைத்தான். அத்திருவடி திசைகட்கும் மேலுலகங்கட்கும் அப்பாற்பட்டன என்பதை 'மாதிர மாநில மாவன வானவர் மாமுகட்டின் மேலன' என்பார் அப்பரடிகள். கூற்றுதைத்த திருவடியை வணங்குகின்றேன் அவன் புகழைக் கூறுகின்றேன் என்பது இப்பாடல்.

முழுமுதல் தன்மையை, முதற்பாடலில் கூறி அம்முழு முதலாகிய சிவத்தின் செயல்களை விளக்கி வணங்கத் தலைவைத்து, வார்கழல் வாய் வாழ்த்த வைத்து அணங்கொடு திருத் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற குணங்கூறி வணங்கிப் பாடினேன் என்று நுதலிய பொருளுடன் அதனை கூறும் முறையையும் கூறினார்.

மனவாக்குக் கெட்டா நிலையில் நிற்கின்றான். ஆதலின் அவனை அடைய உயிர்கள் முயன்று ஒன்றியிருந்து எட்டுதல் வேண்டும். தான் உணர்ந்தான் இருந்து எட்டே ஒன்று முதல் ஏழு வரை தானே உணர்ந்து இருந்தான். 'உணர்ந்து எட்டே என்பது இவ்வாறாகிய முதல்வனை உணர்வுக் கயிற்றால் அணுகுக' 'உணர்வுக் கயிற்றினால் முருக வாங்கிக் கடைய முன்னிற்கும்' என்பது திருமுறை. ஒன்றவன்தானே என்பதை உணர்ந்து எட்டுதற்கு அரிதாகிய அப்பரம்பொருளை எட்டுக. 'உன்னும் உணர்வுக்கு உணர்வாய் எனக்கு உண்மை தந்தாய்' என்பது வைராக்கிய சதகம்.

உணர்வது உடையார் முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்தற்று

என்பது தமிழ்மறை. மேனிலையில் வளரும் உயிர் உணர்ந்து எட்டுதல் வேண்டும். உயிராக்கத்திற்கு வளர்ச்சிக்கு உணர்வு துணையாகும் என்பதை விரிந்து ஒன்று முதல் ஏழு வரை தனித்தனி கூட்டி உணர்தல் வேண்டும். மன வாக்கிற்கு எட்டாதவனை முயன்று பற்றுக எனக் கொள்ளலாம்.

ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணான் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாயுடன் ஆனானிடம் வீழிமிழலையே

என்னும் திருமுறைப் பாடல் முதலும் ஈறுமாய் நிற்கும் ஒருவன் நிலம், நீர், வளி, நெருப்பு, ஆகாயம் எனும் பூதங்கள் தோறும் நின்று நிறைவுடைய ஆறுசுவையாய் (இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு) ஏழிசையாய், எட்டுத்திசையாய் விளங்கி, வேறாகவும், உடனாகவும் அனைத்திலும் கலந்து நின்றான் என்பதும் பொருந்தும்.

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

உலகெங்கும் திசைதோறும் மேலும் கீழும் பரவியுள்ள அண்டங்கள் அளக்க முடியாத அளவுக்கு அகன்று விரிந்துள்ளன. இவைகளை இயக்கிக் கடந்து நிற்கும் மெய்ப்பொருள் இறைவன். அவைகளை உள்ளிருந்து இயங்கச் செய்பவன். கடந்தும் நிலைகொள்ள அருள்பவன். உள்ளும் இருப்பவன். ஆதலின் கடவுள் என்கிறோம். எல்லா உயிரினும் கலந்து மக்கள் தேவர் முதலான எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும் எனத் திகழும் மெய்ப்பொருளாகத் திகழ்பவன். அண்டங்கள் அளப்பரியன. ஆதலின், அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கும் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என்கிறது திருவாசகச் செம்பொருள். நல்வினைக்கேற்ப உயிரை புகலிடமாகிய உடம்பில் சேர்த்தனன். உட்கருவியாகிய மனம், புத்தி, சித்தம், எழுச்சி (அகங்காரம்) ஆகியவற்றை உதவி, புறக்கருவிகளாகிய ஐம்பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வாக்கு, கால், கை, கருவாய், எருவாய் ஆகியவற்றையும் நல்கினன். அந்தியும் நண்பகலும் அஞ்சு பதம் சொல்லிப் பணிந்தால் பாவங்கள் நீங்கும் ஆதலின் அங்கணனைப் பணிந்து புகழின் மாலைகள் சூட்டிப் போற்றுகின்றேன். மாறுபாடு செய்கின்ற ஐம்பூத வழிவந்த புலன்களால் எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு இளைத்தற்கரிய இம்மண்ணுலகத்தில் இருள் நீங்கி இன்பம் பயக்கும் நின் திருவடிகளை இரவும் பகலும் பணிந்து ஏத்துகின்றேன் என்கிறார்.

முதற்பாடலில் மெய்ப்பொருள் தன்மை கூறி அம்மெய்ப் பொருளாகிய சிவத்தை வணங்கிப் பாடி உய்தி பெறும் நிலையை விளக்கி மூன்றாவதாகிய இப்பாடலில் வழிபடும் முறையை விளக்குகின்றார் திருமூலர்.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ் செய்யு மாறே.

'தனைந்தனைய திருவடியை என் தலைமேல் வைத்து' சித்தாந்த சித்தத்தில் நிறுத்தி வணங்குகின்றேன். என் உள்ளும் புறமும் ஞானச்சுடராய் நடுவே நிற்கும் நந்தியாகிய பிறைசூடும் பெருமானது திருவடியை நாளும் நவின்றேத்திச் சித்தத்தைச் சிவன்பால் வைத்து ஆகமத்தைச் செப்பலுற்றேன் என்பது அவனருளே கண்ணாகக் கண்டு தமிழாகமம் ஆகிய திருமந்திரத்தை மொழிகின்றேன் என்று தமது குறிக்கோள் இதுவென்று அவனருளாலே அகத்தினிது நோக்கி அருளியுள்ளார். குருமரபு கூறிப் பின் தன் குறிக்கோளை நிறைவு செய்கிறார். அயல் தாக்கங்களால் ஆகமங்கள் செந்தமிழில் இடம் பெறாததை அறிந்து திருமூலர் அருளிய உட்கிடக்கையை இதனால் அறிகிறோம்.

யான்பெற்ற இன்பம்பெறுக இவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி' என மதித்து வாழ்நாள் வீழ்நாள் ஆக்காமல் காலங் கழிப்பவர்கள் ஊழையும் உப்பக்கம் காணும் முயற்சியில் ஈடுபடுவர். கூற்றம் குதித்தலும் கைகூடுவதாகிய தவத்தை செய்யாமல் இருக்கிறார்கள் பலர். யான் இரவு பகல் நினைந்தொறும் காண்தொறும் அனைத்து எலும்பு உள்நெகச் செய்யும் தவத்தின் முயற்சியால் சிவனுக்கு அடைக்கலமானேன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு என்னைப் படைத்தனன் சிவ வழிபாட்டுக்குரிய ஆகமம் தன்னை நன்றாகத் தமிழால் செய்யுமாறு படைத்தனன் என்றும் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றும் தமிழாகமத்தை

அருளியுள்ளார். மேலாகிய வானிடத்தைப் பற்றுக் கோடாக உள்ள மறைப்பொருள் எதுவென்றால் நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நாவும் உள்குவார்க்கு உள்ளத்துள்ளே ஓங்கும் உணர்வும் பொருந்தும் மந்திரமாகும். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாகிய மந்திரத்தைப் பற்றுக' பற்றற்றான் பற்றினைப் பற்ற முழுமையாக முயலுக என்பதாம் இது. பாயிரப் பகுதியின் முடிந்த முடிவு விரிக்கிற் பெருகும்.

திருச்சிற்றம்பலம்

2. வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு

சித்தாந்த சரபம்
பேராசிரியர். முனைவர். **வை. இரத்தினசபாபதி**
சென்னைப்பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறைத் தலைவர், (ஓய்வு)

முன்னுரை

திருநெறிய தமிழ் எனப் பெறும் திருமுறை வரிசையில் பத்தாம் திருமுறையாக அமைந்தது திருமந்திரம்.

திருமுறைகளுள் ஒன்று எனச் சேர்க்கப் பெற்றமையால் திருமந்திரத்தைத் தோத்திர நூல் என்று கொண்டாலும் வள்ளலார் போன்றவர்கள் திருமந்திரத்தைச் சாத்திர நூலாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருப்பதை மறுப்பதற்கில்லை.

'அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே'

என்பது மெய்கண்டார் அருளிய <u>சிவஞான போதம்</u> என்ற நூலின் பத்தாம் நூற்பா. ஏகன் ஆதலும் இறைபணி நிற்றலும் என்ற சாத்திரப் பொருளே திருமந்திர நூலின் அனுபவப் பொருள் என்பது மரபு.

சுந்தரர் பெருமான் தம் திருத்தொண்டத் தொகையில் திருஞானசம்பந்தரை எடுத்துக்கூறி அறிமுகப்படுத்தும்போது <u>எம்பிரான் சம்பந்தன்</u> என்று கூறினார். அவரே திருமூலரை அறிமுகப்படுத்தும்போது **'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'** என்று அருளியதன் வாழ்வியற் பெரும்பேற்றனுபவத்தின் உள்ளக் கிடக்கையை நாம் உய்த்துணர்ந்து சிவமாம் தன்மை பெறும் பேறு பெற வேண்டும்.

ஆன்மாவானது இறைவனை நூல்களில் வாயிலாக அறியும். அறிந்த அந்த அளவில் ஒருவகை இன்பத்தை ஆன்மாவானது பெறும். இது முதல் நிலை.

ஆன்மாவானது இறைவனை இன்ப பொருளாகத் துய்த்து நிற்கும். பின்னர் இன்பத்துய்ப்பின் வழிநின்றும் இறைவனை அறியும். இத்தகைய இரண்டாம் நிலையில் திருமூலர் நின்ற காலத்தில் இறையருளால் வெளிப்பட்டதே திருமந்திரம். இதனாலேயே திருமூலர்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய் யுமாறே

என்று அருளினர். இதுவே இரண்டாம் நிலைப் படைப்பு.

தமிழ் செய்தல் என்பது திருமூலர் தந்த வழக்காறு. இறைவனை இன்பப் பொருளாகத் துய்த்து நிற்றல் என்பதே அதன் பொருள். தமிழ் செய்தல் என்ற வழக்காறு இங்கே வெற்று மொழியாக்கத்தைக் குறிக்கவில்லை.

'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்' என்பது பிங்கல நிகண்டு.

'தமிழ் தழீஇய சாயலவர்

என்பது சங்க இலக்கியம். இங்கெல்லாம் தமிழ் என்பது மொழியை குறிக்கவில்லை. 'மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்' என்பதுதான் மரபு. திருமந்திரம் என்ற பெயர் இந்நூலுக்கு பிற்படப் போந்த பெயர் ஆதல் வேண்டும். திருமூலருக்குரிய பெருமைகள் பலவற்றுள்ளும் இத்தலைப்புக்கு ஏற்ற வகையில் அமைந்த பெருமை ஒன்று உண்டு. .வேதமும் ஆகமும் ஒன்றே. என்ற கருத்தை முதன் முதல் தமிழகத்தில் வெளியிட்டவர் திருமூலரே,

வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் சிறப்பும் பொதுவும் என்றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க்கு அபேதமே

என்பது எட்டாந்தந்திரத்திலும் வரும் 2397 ஆம் தமிழ். அதன் தலைப்பு ஆறந்தம் என்பது. ஆயினும் இப்பாடல் பாயிரத்தில் இடம்பெறவில்லை.

பாயிரப்பகுதியில் 'வேதச்சிறப்பு' என்ற தலைப்பில் ஆறு பாடல்களும் 'ஆகமச் சிறப்பு' என்ற தலைப்பில் பத்துப்பாடல்களும் காணப்

பெறுகின்றன. ஆயினும் திருமந்திரப் பதிப்பாசிரியர்களில் ஒரு சிலரும் உரையாசிரியர்களில் ஒரு சிலரும் இவ்விரண்டு தலைப்புக்களையும் முதல் தந்திரம் என்ற பகுதியில் சேர்த்தே பதிப்பித்தும் உரையெழுதியும் வந்துள்ளார்கள்.

'வேதச்சிறப்பு', 'ஆகமச்சிறப்பு' என்ற தலைப்புகளில் திருமூலர் அருளும் செய்திகளை இங்கே முறைப்படுத்திக் காணலாம்.

வேதச்சிறப்பு

'வேதம்' என்ற சொல்லானது 'வித்' (VIDH) என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியது. 'அறிதல்' என்பது பொருள். ஒரு பொருளை அறிந்தவன் கூறியது, ஒரு பொருளை அறிவதற்கு உதவுவது என இரண்டு வகையாலும் பொருள் கண்டுள்ளார்கள்.

வேதத்தை 'சுருதி' எனக் கொண்டு கேட்கப் பெற்றது எனவும், அது ஒரு புருடனால் எழுதப் பெற்றது (அ) கூறப் பெற்றது அன்று எனக் கொண்டு 'அபௌர்ஷேயம்' எனவும் கொள்வது வடமொழி வழக்கு. தமிழில் 'எழுதாக் கிழவி' என்பது வழக்கு. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் 'வேதம்' என்ற சொல் அருகியே காணப் பெறுகிறது. 'மறை' என்ற சொல் பயின்று வருகிறது.

'சிறந்த வேதம் விளங்கப்பாடி' என மதுரைக் காஞ்சியிலும்.
(அடி 468)

'அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றி' என்று பரிபாடலிலும் வருகிறது.

திருமூலரின் வேத அறிமுகம்:

நான்கு அடைமொழிகளைக் கூறித் திருமூலர், வேதம், மறை என்பவைகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

வளம் உற்ற வேதம்
இருக்கு உருவாம் எழில்வேதம்
உருக்கு உணர்வாய் உணர்வேதம்
ஆறு அங்கமாய் வரும் மாமறை

என்பனவே அவை. முதல் மூன்று அடைமொழிகளில் வேதம் என்ற சொல்லையும் நான்காவது அடைமொழியில் மாமறை என்ற இருமொழித் தொடரையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

விளக்கமும் விளைவும்

சாதனை எதுவானலும் படிமுறைப் பயிற்சி எதுவானாலும் ஆன்மாவானது அடையக்கூடிய பயன் இரண்டுதான். அறியாமை நீக்கம், இன்பப் பேறு.

1. வேதத்தை முறைப்படி ஓதிக் கொண்டிருந்தாலே போதும். அதுவே அறியாமை நீங்குவதற்குரிய அறவழியைக் காட்டி முக்தி (விடுதலை) பெறுவதற்குரிய வாய்ப்பினை நல்கிவிடும்.

2. வளங்கள் பலவற்றை கொண்டது 'வேதம்' எனப்படுதலின் வேதத்தை முறைப்படி ஓதி விளக்கம் சொல்லி ஓதுவித்தல் வேண்டும். ஓதுவிப்பவன் தானும் விளக்கம் பெற்று, பிறருக்கும் விளக்கம் செய்வதற்குரிய வளமை- செழுமை, பொருண்மை வளம் ஆகியவை வேதத்திலேயே உள்ளன.

3. மந்திர ஒலிகளின் தொகுதியாக (இருக்கு-மந்திரம்) வேதம் அமைந்திருத்தலின், அதனை முறைப்படி ஓதியும் ஓதுவித்தும் வரும் ஒருவனுக்கு நாதப் பெரும் பொருள் அனுபவமும் அதனால் உண்டாகும் உண்மை உணர்வு எனப்பெறும் சோதி அனுபவமும் உண்டாகும். நாத வலிமையும் சோதி அனுபவமும் இணையும் போது உள்ளத்தை உருக்கும் அருளனுபவம் உண்டாகும். அதன்பின் தோன்றும் ஞான அனுபவம் பெற்றவனே வேதா. அவன் வேள்வி செய்யும் முறைமையும் திறமையும் நுட்பமும் திட்பமும் தெரிந்த 'வித்வத்' ஆகிறான். அவனே வேள்வியைச் செய்யவும் செய்விக்கவும் ஆம் தகுதிகளைப் பெறுகிறான்.

4. வேதத்தை ஓதியும், பிறருக்கு உரைத்தும் ஓதுவித்தும் வருவானேயானால் அவனுக்கு மெய்ப்பொருள் துணிவு உண்டாகும். ஆணவம் அழிந்து போகும். பரம்பொருளே மெய்ப்பொருள் எனத் தேர்ந்து அதனையே வாழ்வியல் முதற்பொருள் எனக்கருதி, நாடி, அடைந்து, துய்க்கும் நாட்டம் உண்டாகும்.

வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு

ஓதிஉணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். - 834

என்ற திருக்குறள் வேதம் ஓதுதலை அடிமையாகக் கொண்டு வந்ததே.

வேதத்தின் பாடுபொருள்

வேதம் ஓர் அறநூல். மேலே குறிப்பிடப் பெற்ற சிறப்புகள் பலவாக இருந்தாலும் அது ஓர் அறநூலே. அனைத்துவகை மக்களுக்கும் உரியனவாய் ஓதி உணரக்கூடிய அனைத்து அறங்களும் வேதத்தில் உள்ளன என்று அறுதியிட்டு கூறுகிறார் திருமூலர்.

'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படுஉம் தோற்றம் போல'

என்று தொல்காப்பியமும்

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை'

என்று திருவள்ளுவரும் கூறியன கொண்டு உணர்க.

திறனாய்வு நோக்கில் வேதம்

திருமூலர் காலத்தில் வேதத்தைப் பற்றிய திறனாய்வுக் கருத்துக்கள் தோன்றியிருந்தன. அவைகளை மிகுதிப்படுத்துவதாகிய தர்க்க வாதத்தை விலக்கிவிட்டு, மதிநலம் சான்றவர்கள் வேதத்தை ஓதியே வீடுபெறும் நெறியைப் பெற்றார்கள் என்று திருமூலர் கூறுகின்றார்.

பரம் பொருளுண்மையைப் பறந்து சென்றும் உணர முடியாத பிரமனும், பல பிறவிகள் எடுத்த கண்ணனும் வேதத்தை தோற்றியவர் ஆகார்.

பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா என ஆறு வகையில் அங்கம் அங்கி என்ற இரட்டைகளாக நின்று ஆன்மாவை நெறிப்படுத்துபவன் இறைவன். சித்தாந்தம், வேதாந்தம், யோகாந்தம், கலாந்தம், போதாந்தம், நாதாந்தம் என்ற ஆறுபடிகளில் மேலேற்றுபவன். அதற்காக ஆறுவகை மந்திரங்களை

அருளியவன் அவன் (மாமறை ஓதி) அத்தகைய பரம்பொருளின் குணங்களை அங்கமாகக் கொண்டு அவனைத் துய்த்தல் வேண்டும். அவ்வாறில்லாமல், சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என்று வேறுபட்ட ஆறு அங்கங்களை அமைத்துக் கொண்டு, அவைகளால் வரும் பொருள் முதலிய பேறுகளையே பெரியனவாகக் கொண்டு வேதியர்கள் மயக்கம் கொண்டு மாறுபட்டு நிற்கின்றார்கள்.

இயல், இசை, கூத்து என்ற கலைகளின் மூலம் இறை இன்பம் பெற வேண்டும் என்று கொள்ளாமல், அவைகளின் பயன் பொருளீட்டுதலே என்று கருதி, அவைகளை இடையறவு படாமல் நிகழ்த்தி நிற்கின்ற இவ்வுலகில், வேதத்தை ஓதுகின்ற வேதியரும் மேலே குறிப்பிடப்பெற்ற அவர்களைப் போலவே, பொருள் பெற விரும்பி, பொருளாசை நிறைந்து, நெறிமுறை இல்லாத அக்கலைஞர்கள் பொருள் ஈட்டும் இடத்திற் சென்று, சொல்லால் வேதியர் எனவும் செயலால் உலகப் பற்றாளராகவும் மாறுகொண்டு நிற்கிறார்கள்.

வேதத்தின் முடிநிலைப் பொருள்

பிரான் - பெருமான்; பெரியவன். பெரியவன் தன்னைத் துய்ப்பதற்கு விரும்புவர்கள் வருகின்ற வழியாகவும்; அவ்வாறு வந்தவர்கள் பெறும் துய்ப்பு இன்பப் பயனாகவும் இருக்கிறான். இதுவே பெருநெறி ஆயபிரான் என்பதன் பொருள்.

பெருநெறியே 'திரு' எனப் பெறும் திருநெறிய இன்புறு தமிழ் நெறி.

சித்து எனப் பெறுவது ஞான நெறி; அசித்து எனப் பெறுவது விஞ்ஞான நெறி. இரண்டிலும் பரம்பொருள் இருந்தாலும், இரண்டு நெறிகளையும் கடந்த பெருநெறியில் நின்றும், அந்நெறி நின்றவர்களாலேயே துய்த்து உணரப் பெறுபவனும் ஆக உள்ளான்.

திருநெறிய தமிழால் அப்பெருமானை இடைவிடாது நினைந்து நினைந்து உருக, நினைவு அழுத்தம் பெறப்பெற அவனே குருவாக வெளிப்பட்டு, சிவஞானம் பெறுதல் எனப்பெறும் சிவமாம் நெறியில் கூட்டுவிப்பான். பின்னர், சிவமா நெறி எனப்பெறும் சிவானந்தப் பெருவாழ்வில் திளைக்கச் செய்வான்.

இதுவே ஒப்பற்ற நெறி (ஒருநெறி). வேதாந்தம் எனப்பெறும் உபநிடதங்கள் அனைத்தும் ஒருமுகப்பட்டுக்கூறும் ஒரு நெறியே அது.

ஒன்றுதல் உடையதாக நிற்கும் நெறியே அது. ஒன்றுதல் - பொருந்தி நிற்றல். ஒன்று எனத் தோன்றுமாறு இருபொருளும் (ஆன்மாவும் இறைவனும்) அத்துவிதக்கலப்பில் நிற்கும் நெறியே அது. இதனை

அருநெறிய மறைவல்ல முனிஅகன் பொய்கைஅலர் மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே

என்ற ஞானசம்பந்தரின் திருநெறிய தமிழால் தெளிந்துணரலாம்.

ஆகமச்சிறப்பு - முன்னுரை

'ஆகமம்' என்ற சொல்லானது நூல் என்ற பொருளைத்தரும். மெய்ப்பொருளியலார் (PHILOSOPHER) நூலளவையை ஆகமப் பிரமாணம் என்பர்.

'<u>கமம்</u>' நிறைந்தியலும் என்பது தொல்காப்பியம். கேட்பவர்களின் உள்ளத்தில் வரையறையுடனும் திட்பமாகவும் நுட்பமாகவும் தெளிவாகவும் நிறைந்து நின்றும் அவர்களைச் செயற்படுமாறு செய்தும் அமைகின்ற ஒரு கருத்தோ அல்லது பல கருத்துக்களின் தொகுப்போ 'ஆகமம்' எனப்பெற்றது. <u>ஆகு +அம்+அம்</u> எனப் பிரித்து ஒருவனை உயர்த்துவதற்குத் துணை செய்வனவெல்லாம் 'ஆகமம்' எனப் பெற்றன. 'ஆ+கமம்' எனப் பிரித்து, ஆன்மாக்களில் நிறைந்து விளங்குவது ஆகமம் எனவும் பொருள் கூறுவர். 'ஆ' என்பது பசுவைக் குறித்து பின்னர் ஆன்மாவைக் குறித்தது.

சங்க இலக்கியங்களில் .ஆகமம். என்ற சொல்லாட்சியைக் காண இயலவில்லை. பரிபாடல் பாடல் 3 அடி 48-ல் .நினக்கு விரிந்து அகன்ற <u>கேள்வி</u> அனைத்தினும். என்ற தொடரில் அமைந்த கேள்வி என்பதற்கு உரையாசிரியர் ஆகமம் என்று பொருள் கண்டுள்ளார்.

'ஆகமம் ஆகி நின்று அண்ணித்தல்'

'மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்'

என்பவை திருவாசகச் சான்றுகள். மணிவாசகர் திருவாக்குகளால் இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன.

1. ஆகமம் ஆகி நிற்றல் (அ) தோற்றுவித்தல்
2. அண்ணித்தல் (அ) அருளுதல்

ஆகமம் ஆகி நிற்றல் என்பதையும் தோற்றுவித்தல் என்பதையும் இணைத்து நோக்கினால், ஓர் உண்மை புலப்படும்.

ஆசாரியன் மாணாக்கனுக்கு உபதேசம் செய்யும்போது, உபதேசத்துக்கு உரிய பொருளாக - இலக்கியமாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுதல் வேண்டும். பின்னர் அண்ணி நின்று உபதேசம் செய்தல் வேண்டும்.

குருவாக வருதல் - ஆகமம் ஆகி நிற்றல்
உபதேசித்தல் - அண்ணித்தல்

திருமூலர் அருளிய பாயிரப்பகுதியில் அமைந்த 'ஆகமச்சிறப்பு' என்ற தலைப்பில் பத்துப்பாடல்கள் காணப் பெறுகின்றன. அவைகளில் இரண்டு அமைப்புகளும் காணப்பெறுகின்றன.

ஆகமங்களைக் குரு சீடன் என்ற முறையில் இறைவன் உபதேசிக்கும் முறையும் காணப்பெறுகின்றது. அவ்வாறே நூல் வடிவில் இன்று விளங்கும் ஆகம அமைப்பு முறைகளும் காணப் பெறுகின்றன.

சிவாகம வகைகள்

உலகியலாளர்கள் அறத்தில் நின்ற அந்த அளவே வாழ விரும்புவர். அவர்களுக்காகவே அருளப் பெற்றது வேதம் என்றும் அதனால் அது பொது என்றும் கூறப்பெறும்.

இறை உண்மையை உணர்ந்து அவனை அடைதல் வேண்டும் என்ற வேட்கை உடையவர்களுக்குப் பயன் தரும் வகையில் இறைவனால் அருளப்பெற்றவை சிவாகமங்கள் என்றும் கொள்வது சைவ வழக்கு.

ஆகமங்களை, அத்வைத வேதாந்திகள் பிரமாண நூல்களாக ஏற்றுக் கொள்ளுதல் இல்லை.

சிவ ஆகமங்கள் பொதுவாக, சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்ற நான்கு பிரிவுகளை உடையவனாக

இருக்கும். எல்லா ஆகமங்களும் எல்லாப் பிரிவுகளும் உடையன என்று கூறுதல் இயலாது.

திருக்கோயில் அமைப்பு முறை, சிவனுடைய பல்வேறு உருவத் திருமேனிகள், பரிவாரமூர்த்திகள் முதலியவைகளின் அமைப்பு முறை, செபமாலை, புட்பவிதி, பிராயச்சித்தம், அந்தியேட்டி, சிரார்த்தவிதி போன்ற பகுதிகளை உடைய பகுதி சரியா பாதம் எனப் பெறும்.

மந்திரமுறைகள், தீட்சைமுறை, ஆன்மார்த்தம், பரார்த்தம், பூசைமுறைகள் ஆகியவை பற்றியும் அவை சார்ந்த விதிமுறைகளும் கூறும் பகுதி கிரியாபாதம்.

அட்டாங்க யோகப் பகுதி, ஆறாதார விளக்கப்பகுதிகள் போன்றவைகளை விரிவாகக் கூறும் பகுதி யோகபாதம்.

பதி,பசு,பாச விளக்கம், இறந்து பிறந்து உழலும் பிறப்பு முறைகள் வினை வகைகள் ஞான மறைப்பு, ஞான விளக்கம் பற்றிய விளக்கம் ஞான பாதம்.

திருமூலரின் பாடல்கள் (ஆகமச்சிறப்பு) ஆழ்ந்து நோக்கினால் உலகப்படைப்பு முதலான ஐந்தொழில் செய்யும் முறை, முன்னே குறிப்பிட்டது போன்ற சரியா, கிரியா, யோக, ஞான, பாத அமைப்புகளைக் கொண்ட செய்திகளைக் கூறும் பாடல்களும் உள்ளன.

இனி, உபதேச முறையால் இறைவன் குருவாக நின்று உணர்த்தும் பகுதியும் அதன் விளக்கமும் காணப் பெறுகின்றன.

இரு வேறு வகைகளையும் நாம் பிரித்துக் கண்டு தெளிதல் வேண்டும். இருவேறு வகைகளையும் திருமந்திர நூலில் அமைத்துக் காட்டுகிறார் திருமூலர். திருமந்திரம் யோகபரமான நூல் என்பார் கூற்றுக்கிணங்க யோக பாதம் பற்றிய செய்தியைக் கூறினாலும் மாமறை - மந்திரமொழி - சார்ந்த உபதேசப்பகுதியும் பிறவும் விளக்கமாகக் கூறப் பெறுகின்றன.

தொழின்மை வழியில் ஆகமம்

ஐந்தொழில் செய்யும் முறைமை, அவை சார்ந்த பிற விளக்கங்கள் என அமைந்த ஆகமமுறையும் உபதேச முறையே என்றாலும், அவை கேட்போரின் ஆன்ம ஆற்றலை வளர்ப்பதாக அமையா. அவைகளை

உணர்த்துதலும் கேட்டலும் ஆகிய செயல்கள் தொழின்மை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் செம்மைப்படுத்துவதற்கம் தேவைப்பட்டவைகளே. அத்தகைய ஆகமங்களை வரிசைப்படுத்திக் கூறும் பாடல்கள் ஆகமச் சிறப்பு என்ற பிரிவில் உள்ளன.

உமையை ஒரு பக்கத்தில் கொண்ட இறைவன் இருபத்தெட்டு ஆகமங்களை வெளியிட்டான். தற்புருடன் வாமம், அகோரம், சத்யோஜாதம், ஈசானம் என்ற ஐந்து முகங்களாலும் வெளிப்படுத்தினான்.

அண்ணல் என நின்ற இறைவன் அருள் காரணமாக வெளிப்படுத்திய சிவாகமங்கள் இருபத்தெட்டு என்ற எண்ணிக்கையுடன் நில்லாமல் கோடி, நூறாயிரம் என விரியும். அவற்றைக் கேட்ட தேவர் முதலானோர் ஈசனுடைய மேன்மையை வியந்து கூறினர் என்று கூறிய திருமூலர் தானும் ஈசன் பெருமையை ஏத்துவதாகக் கூறுகிறார்.

அண்ணல் அருளிய மேன்மை பொருந்திய அந்த ஆகமங்கள் வானில் உள்ள தேவர்களுக்கும் விளங்கிக் கொள்ள முடியாத பொருட்செறிவு உடையன ஆதலின் அவைகள் ஆன்மாக்களுக்கு எத்தகைய பயனை அளிப்பதாக அமையும்?

சிவம், சத்தி, சதாசிவம், சம்புட்சமகேசர், அணுபட்சமகேசர், உருத்திரதேவர், திருமால், பிரமீசர், என்ற இவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவராகப் பெற்றுப் பயனடைந்த ஆகமங்கள் பல. அவற்றுள் சிறந்தவை ஒன்பது.

காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பவைகளே அந்த ஒன்பது ஆகமங்கள். இவைகளையே தமிழாக்கி ஒன்பது தந்திரங்களாக வகுத்துள்ளார் திருமூலர் என்ற கருத்து அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

சிவபெருமான் தன் திருவருள் காரணமாக அருளிச் செய்த ஆகமங்கள் இரண்டு வகைகளாக வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. பிரதிசங்கிதை முறை - ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாக வகுத்துச் சொல்லும் முறை. அடுத்தது மகௌகிக முறை எல்லாவற்றையும் ஒருங்கு தொகுத்து ஒருவருக்குக் கூறப் பெறும் முறை.

முறை எதுவாயினும் அருள் காரணமாக அருளிய சிவன் உள்ளார்ந்த நிலையில் அமைத்த குறிப்புப் பொருளை அறியவில்லையானால் பயனின்றிப் போய்விடும் என்று திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆன்ம நலம் வளர்க்கும் ஆகம முறை

'அகர உயிர் போல்' என வரும் தொடருக்கு உயிர் எழுத்துக்கள் அனைத்துக்கும் முதலாக நின்ற அகரம் போல என உரை கொள்வர். அகரத்திற்கு மூல உயிராக நின்ற நாதம்போல எனக் கொண்டால் நாதம், அகரம் ஏனைய உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் என நால்வகை நிலைகளில் நாதம் நிற்கிறது. அவ்வாறே வாக்கு மனம் கடந்த சொரூபப் பரம்பொருள் அனைத்து ஆன்மாக்களிலும் ஒரு கூறு. உலகை ஐந்தொழில் நடத்தும் சதாசிவம் ஒரு கூறு. உலகப் பொருள்கள் அனைத்திலும் ஒரு கூறு என நிற்கும். 'தான் ஒரு கூறு சதாசிவன் எம் இறை' என்பது திருமூலர் வாக்கு.

ஆன்மாவின் உள்ளே ஒரு கூறாய் நின்ற இறைவன் தானே தடத்த மூர்த்தியாய்- குருவாய் வெளிவந்து ஆன்மாவின் முன் நிற்பான். அந்நிலையில் அவன் பரன் + அவன் தனக்கு மேல் உள்ள இரண்டு நிலைகளை உணர்த்துவான். அவை முறையே பரம், அபரம் என இருவகைப்படும். பின்னர் உலகனைத்திலும் நிறைந்து நின்று அதனைத் தாங்குபவன் தானே என தன்னிலையை உணர்த்தும்போது தரன் அமைத்து தெளிவு படுத்துவான். பின்னர் சிவதர்மம் சொல்ல முற்படுவான் (உபதேசம்) அப்போது அவன் அரன் எனப்படுவான் (மலங்களை எரித்து நீக்குபவன்)

ஆன்மாவில் ஒரு கூறாய் நின்றவனே நந்தி. நந்தி என நின்ற இறைநிலையே, அந்தந்த ஆன்மாவின் மல அழுத்தம், பக்குவம் ஆகியவைகளுக்கேற்ப, வெளிப்போந்து உபதேச முறையால் தனக்கும், ஆன்மாவுக்கும் உள்ள உறவை உணர்த்தியும் தன்னையே இன்ப பொருளாகத் துய்க்குமாறு செய்தும் ஆன்மாவை நிறைவு செய்வான்.

ஆன்மாவில் 'நந்தி' என நின்ற அப்பொருளானது ஞான விளக்கம் தரும் காலத்து ஆன்மாவானது ஞான வலிமை பெறும். அப்போது அவன் உரனாகி நிற்பான். உரம்-ஞான வலிமையை உண்டாக்கி ஆணவ வலிமையை அடக்குவான்.

உபதேச முறையால் ஆன்மாவானது செயல் வலிமையும், ஞானத்திண்மையும் பெற்றாலும் ஆணவத்தாக்கம் காரணமாக சுருங்கியே நிற்கும். சுருக்கம் என்பது எழுச்சி இல்லாத நிலை. அப்போது நந்தியானவன் ஓங்கி நிற்பான்.

உத்தமன் ஆகுதல்
ஓங்குதல்

என இத்தகைய இரண்டு நிலைகளையும் எடுத்துக்காட்டி விளக்கினார் திருவருட் பிரகாச வள்ளலார்.

நந்தி எனத் திருமூலர் குறிப்பிடுவது ஆன்மாவினுள் அமைந்திருக்கும் இறைக்கூறு. அது குருவாக வெளிப்படும். உலகப்படைப்பு முதலிய தொழில்களும் அவ்வாற்றிற்கேற்ற ஒன்பது ஆகமங்களும் அவனுக்குத் தெரியும். ஆயினும் ஆன்மாவினுள் நின்ற நந்தி ஒன்பது ஆகமங்களை ஆன்மாக்களுக்கு உபதேச கிரமத்தின் மூலம் அனுபவம் ஆக்குகின்றான். உலகளவில் நின்றவன் சதாசிவன். ஆன்மாவை இடமாக கொண்டவன் நந்தி.

பரன்ஆய்ப் பரா, பரம் காட்டி உலகில்
தரன் ஆய் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரன் ஆய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரன்ஆகி ஆகமம் (ஆகி) ஓங்கி நின்றானே

என உபதேச முறையால் ஆன்ம நலம் ஒன்பது என நிற்றலில் ஈண்டும் நவ ஆகமம் எனப் பெற்றது. ஆன்மாவானது தனித்தனி நின்று அனுபவம் பெறுதலின் 'நவம்' என்ற சொல்லானது ஒன்பது என்பதுடன் புதியது என்ற பொருளையும் தரும்.

உபதேச ஆகமம் சொன்ன முறை

தொழின்மை ஆகமங்களை வெளிப்படுத்தத் தேவையானது மொழி உபதேச ஆகமத்தை உணர்த்த ஒரு சொல், இரண்டு சொற்களே போதும். உபதேச மரபைக் கூறும்போது சொல் என்பதையே எடுத்தாளுகின்றார்.

அருள் என்னும் மழைபொழியும் காலத்து ஆன்மாவானது உலகியியலில் சிறிது இன்பத்தையும், கோடை மலியும் காலத்தில் சிறிது ஞானத்தையும், பனி மலியும் காலத்தில் ஒருவகை மந்த நிலையையும் பெற்று, இறை நிலையையும், இறை உண்மையையும் மெல்ல மெல்ல உணர்ந்து தொண்டாற்றும் (இளைத்தல்-பணி செய்தல்) காலத்தில், ஆன்மாவின் அகத்தே நின்ற 'நந்தி' வெளிப்போந்து, குருவடிவில் நின்று ஆசாரியனாக- ஆரியனாக நின்று மந்திர மொழிகளைக் கூறியும் (ஆர்யம்) அதனால் விளையும் இன்ப அனுபவ விளைவு இன்னது எனக் (தமிழ்) காட்டியும் கருணை செய்வான்.

காரிகை- செயலாற்றும் நிலையில் உணர்த்தப் பெற நிற்கும் ஆன்மா; செயலாற்றும் ஒழுக்கமுடைய ஆன்மா, அருள் அன்னைக்குக் கருணை செய்தான் என்று கூறுதல் பொருந்தாது.

ஆர்யம், தமிழ் என்பன இங்கே மொழிகளைக் குறிக்கவில்லை. ஆர்யம்-நிறைமொழியாளன்- ஆசாரியன்- ஆசரிப்பவன்- செயற்படுத்துபவன் கூறும் மறைமொழி எனப் பெறும் சொல். தமிழ் என்பது இன்ப அனுபவம். ஆரியமும், தமிழும் உடனே சொல்லி என்பதே திருமூலர் வாக்கு.

தமிழ்ச்சொல் - வடசொல் , விளக்கம்

தமிழ்ச்சொல்- இன்ப விளைவை ஆக்கும் சொல். வடசொல் - வடம்- மூலம். மூலச்சொல். மந்திரச்சொல். ஓம், சிவ, ஐம், ரீம் என நின்ற சொற்கள். மந்திரச் சொற்கள் அவனை அறியத் துணை செய்யும். உணர்தல் என்ற நிலையை அடைய உதவுவது மூலச்சொல்- வடசொல்.

பரம்பொருளை இன்பப் பொருளாகத் துய்த்து நிற்க உதவுவது தமிழ்ச் சொல். வடசொல்லால் உணர்தல் திறம் பெற்ற ஆன்மா, அவனை இன்பப் பொருளாகத் துய்த்து இன்புறும் நிலையே உணர்த்தல். அதனை ஆன்மாவுக்கு வழங்குவது தமிழ்ச் சொல். இதனாலேயே திருமூலர்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே

எனக்கூறினார். இங்கே இவ்விரண்டு சொற்களும் சமஸ்கிருதம், தமிழ் என்ற மொழிகளைக் குறிக்கவில்லை.

ஆணவம் முதலிய மலங்களால் ஆன்மாவானது கட்டுற்று நின்ற நிலையும் அதனை முறைப்படி அவிழ்க்கும் நிலையும், சிமிழ்த்து (சுழன்று) அலைக்கப்பட்டு நின்ற ஆன்மா அவற்றிலிருந்து நீங்கி முக்தி பெற்று இன்புறும் நிலையையும் இவ்விரண்டு சொற்களும் உணர்த்தும். குரு மொழியால் சிவமாம் நெறிகூட்டும் முறையே இது.

உணர்தல், உணர்த்தல் என்பவை தன் வினை, பிற வினை என இலக்கணம் காட்டி மலையற்க. உணர்த்திய பிறகு ஆன்மா உணரும். உணர்ந்த நிலையில் ஆன்மாவுக்கு தொட்டுக்காட்டி இன்ப ஊற்றினை எழுப்புவன். இவையே அவ்விரண்டன் நிலை.

உலகவர்க்குச் சிவதன்மம் சொன்ன முறை

சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுகுடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கௌடம் கடும் குசலம்
தங்கும் புகழ் தமிழ்சூழ் பதினேழ் புவிதாம் இவையே.

என்ற தனிப்பாடலின் வண்ணம் மொழிகள் பதினெட்டு உள்ளன. மொழிகள் அடிப்படையில் சித்தர்களும் பதினெண் வகையினர். பதினெண் மொழிகளில் உள்ள பண்டிதர்கள் மொழியறிவு பெற்றவர்கள். மேலே சுட்டப் பெற்ற மறைமொழிச்சொல், தமிழ்(இன்ப)ச் சொல் ஆகியவற்றின் கருத்தை உணரமாட்டார்கள்.

உலகைத் தோற்றுவித்த முதல்வன் மொழிகள் பதினெட்டுடைப் பண்டிதர்களுக்கெல்லாம் 'அறம்' எனப் பெறும் சிவ தன்மத்தைக் கூறியுள்ளான்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

3. திருமூலர் தம் வரலாறு கூறுதல்

அருட்பா அவதானி **சி. செகந்நாதன்**
புதுக்கோட்டை

உலக நாடுகளில் மிகப்பெரும் தலைவர்களாக, பெரிய சாதனையாளர்களாக வாழ்ந்த அனைவரும் சுயசரிதை எழுதுதலை வழக்கமாக கொண்டுள்ளனர். இவ்வாறு சுயசரிதையை ஏன் எழுத வேண்டும் எனின் தன்முயற்சி, உழைப்பு, நேர்மை, அணுகுமுறை, செயல்திறனால் தாம் எவ்வாறு உயர்ந்த இடத்திற்கு வந்தோம் எனக்கூறல் பின்வரும் உலகவர் அறிந்து கொள்ளற்கும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்குமேயாம். காந்தியடிகள் தன் சுயசரிதை மிக அருமை வாய்ந்தது. சுயசரிதை என்ற வடமொழிக்கு, தன் வரலாறு என்று தமிழ்ப் படுத்தி இசைப்பது சிறந்தது.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் தான் எழுதிய தன் வரலாறு கூறும் பகுதி இதுவாகும். இந்தப் பகுதியில் மொத்தம் 22 பாட்டுக்கள் தரப் பெற்றுள்ளன.

22 x 4= 88 வரிகளே ஆயினும் இப்பகுதியில் திருமூலரை அவரே பட்டவர்த்தனமாக வெளிக்காட்டும் மிக உயரிய பகுதியாகும். இதனுள் புதைந்துள்ள செய்திகள் ஏராளம், ஏராளம்.

இப்பகுதியில் திருமூலரே தன்னைப் பற்றிக் கூறுவது நமக்கெல்லாம் அவரைப்பற்றிய அகச்சான்றாகும். திருமந்திரத்திற்கும் அகச்சான்றாய் விளங்குகின்றது இப்பகுதி. இப்பகுதியில் சில இடைச் செருகல் பாடல்களும் உள. இப்பகுதியில் 1. தான் வந்த வழி, 2. தான் மூலன் ஆன வரலாறு, 3. தன் வரலாற்றுப் பகுதியில் தான் கூறுவது எதைப் பற்றி என்பது 4. தான் பெற்ற இன்பம், அதனை உலகவர் அனைவரும் பெற வேண்டும் எனும் மிக்கவா, 5. இத்திருமந்திர நூலே ஆகமம், வேதம், சாத்திரம், தோத்திரம் ஆகிய நான்கும் என்பது, 6. தன் ஆயுட்காலம் வரையறையற்றது என்பது, 7. உலகவர் வணங்கும் சிவன் கற்பனை என்பது, 8. திருவாவடு தண்துறையில் சீருடையான் ஆய அருட்பாதம் சேர்ந்திருந்தமை என எட்டுப் பகுதியாகப் பிரிக்கலாம்.

1. தான் வந்த வழி கயிலை வழி

தான் வந்த வழி கயிலை வழி என்கின்றார் இப்பகுதியில். 'வளப்பில் கயிலை வழி வந்தேனே' என்பது அவர்தம் வாக்கு. கயில் என்றால் பிடரி

என்று பொருள் உண்டு. கயில்+ஐ = கயிலை. நான் பிடாரி மார்க்கத்தின் வழியில் வந்தேனே என்பதுதான் உண்மை. பிடரி மார்க்கம் என்பது சித்தர்களில் சிலர் மட்டுமே கூறும் மிக நுண்ணியமான ஞான வழி. பிடரி என்பது நமக்கு முகுளம் இருக்குமிடமாகும். அவ்விடத்தே ஆணுக்கும் பெண்ணுக்கும் தலையில் ஒரு மொக்கு போன்று பகுதியிருக்கும். அதுவே உயிரின் இருப்பிடம் என்பர் சித்தர்கள். உயிரைப் பிடித்து, உயிரை நிறுத்தி ஒப்பற்ற ஞானம் பெறுதல் என்பதே கயிலை வழி என்பதாகும். இதனை,

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞான சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்த கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை வழியில்வந் தேனே. - 9

என்பதனால் அறியக்கிடக்கின்றது.

2. தான் மூலன் ஆன வரலாறு கூறுதல்

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே. -92

ஒரு மெய்ஞானியே கூடுவிட்டுக் கூடுபாய முடியும். கூடுவிட்டு கூடுபாய்ந்து மூலன் உடம்பில் புகுந்த பின்னரே சதாசிவன் ஆகினேன் என்றும், அதன்பின் சதாசிவத்தன்மைக்கு மேல் படியில் உள்ள மெய்ஞ்ஞானத்தை எய்தியதாகவும், அதன்பின் மெய்ஞ்ஞானத்தின் முழுப் பயனாகிய 'நானிருந்தேனே' எனவும் (சாகாது என்றுமிருத்தல்) கூறும் இப்பாடலுக்கு மூலனாகிய இடையன் உடம்பில் புகும் திறம் மெய்ஞ்ஞானத்தால் அன்றி வேறு எதனாலும் முடியாத காரியமல்லவா? ஆக, இடையன் என்ற சொல்லை ஆயப் புகுந்தால், இடை என்பது நடு என்று பொருள்படும். நடு என்பது சூரிய, சந்திர கலைகளுக்கு நடுவிலுள்ள சுழுமுனை கலையாகும்.

எல்லாக் கலையும் இடைபிங் கலை நடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர் மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநின் றாரே. - 657

உலகில் உள்ள கலைகள் அனைத்தும் நடுநாடியாகிய சுழுமுனையில் இருந்துதான் வெளிப்படும். இதனை 'சொல்லா நடுநாடி யோடே தொடர் மூலம்' என்று கூறப்படுவது காண்க. இந்த நடுநாடியை சிரத்தினுள் செல்லுமாறு எழுப்பினால் திருவடியை அடையலாம். திருவடி சேர்ப்பு என்பது சிவசேர்ப்பு. ஆகவேதான் சிவமாக ஆவதற்கு நம்முள் நடுநாடியினுள் (இடையனுள்) புகவேண்டும் என்னும் உண்மையே இடையன் உடலுள் புகுதல் என்னும் கதை வடியில் கூறப்படுகின்றது. நடுநாடியின் உள்ளே நாம் இருந்து விட்டாலோ, நாம் நடுநாடியாகவே ஆகி விட்டாலோ சதாசிவம் ஆகலாம், மெய்ஞானத்துள் நண்ணலாம், என்றும் இறவா வரம் பெற்று என்றும் அழிவுறாது இருக்கலாம்.

'நானிருந்தேனே' என்ற வாசகம் திருவாசகத்தை நினைவு படுத்துகிறது. திருவாசகத்துள் திருவண்டபகுதியில்,

உள்ளம் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்கு
அள்ளூ றாக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்பதாக் கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளோடு பராவமு தாக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றியோனே.

இப்பகுதியில் மாணிக்கவாசகர் 'என்னையும் இருப்பதாக்கினன்' என்று தான் மரணமில்லா பெருவாழ்வை அடைந்ததாகக் கூறுவர். இவரை அடியொற்றி அருட்பிரகாச வள்ளலார் ஆளுடை அடிகள் அருள்மாலையுள்,

உருஅண்டப் பெருமறையன்என் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்ட பகுதியெனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றப் பெரியவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணமெனக் கியம்புதியே

-3260 (திருவருட்பா)

என்று மாணிக்கவாசகத் தந்தையாரிடம், என்னையும் இருப்பதாக்கினன் என்றீரே, அந்த 'இருக்க' வைத்ததின் இரகசியத்தை எனக்கும் இயம்புதியே என்பார்.

ஆக, மூலர் கூறிய இருந்தேனே என்பதை பின் வந்த இருவரும் பெற்றார்கள் என்பது நமக்குத் தெற்றெனத் தெரிகிறது. மரணமற்று

என்றுமிருத்தல் நடுநாடியில் உள்ளது. இந்த நடுநாடியே இடையன். அடுத்து மூலன் என்பது மூலம் என்ற சொல் அன் என்ற ஆண்பால் விகுதி பெற்று மூலன் ஆயிற்று. நாம் கர்ப்பத்துள் உருவாகியபோது நம்மின் இந்த நடுநாடியே நம்மை உருவாக்கியது. ஆக, நாம் நாமாக உருவாவதற்கு மூலமே மூலனாயிற்று.

இப்பகுதியில் மூலன் இடையன் என்றோ, அவன் பசு மேய்த்துக் கொண்டிருக்கும்போது அவ்விடையனாகிய மூலன் இறந்துவிட, அவன் மேய்த்த பசுக் குழாங்கள் கதறித் துடிக்க, அவ்வழியே வானூடு வந்த சுந்தரநாதன் அப்பசுக் குழாத்தின் வாட்டம் நீக்க மூலன் உடலுள் புகுந்தார் என்ற கதை இப்பகுதியில் உள்ள 22 பாட்டுக்களில் எங்கும் திருமூலரால் கூறப்படவில்லை. ஆனால் பெரியபுராணத்துள் சேக்கிழார் பெருமான் இதனை ஒப்புக் கொண்டு,

அந்தணர்தஞ் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலனெனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்றான் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண விடிநிலத் திடைவீழ்ந்தான்.

மற்றவன்தன் உடம்பினைஅக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கியர்காணா நம்பனரு ளாலேஆ
உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன் எனஉணர்கின்றார்.

இவனுயிர்பெற் றெழலன்றி ஆக்களிடர் நீங்காவென்
றவ னுடலில் தம்முயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்முடம்புக் கரண்செய்து தாம் முயன்ற
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினார்.

என்று உரைக்கின்றார். சேக்கிழார் பெருமானது கூற்றையும், நாம் ஏற்றுக் கொண்டு, இடையனாகிய நடுவின் உள்ளே தம்முயிரைப் பாய்த்தினார் என்றும், பசுக்குலத்தை மேய்ப்பவன் மூலன் என்பது பசு-உயிர். உயிர்க் குலங்களை மேய்த்துக் கொண்டிருந்த ஜீவ உயிர்ப்பாகிய மூலம் இறப்பைத் தர, உயிர்க் குலங்கள் இறப்பைக் கண்டு கதறி அழக்கண்ட அவர், ஜீவ உயிர்ப்பாம் மூலம் அழியவும், ஆன்ம உயிர்ப்பாம் மூலம் உலகில் வெளிப்பட்டு இறவாமையை பசுக்கள் (உயிர்கள்) பெற்று இன்புற இடைநாடியுள் புகுந்தார் என்பதுதானே பொருத்தமாக உள்ளது.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே. - 79

என்று வரும் இப்பாடலில் ஆவடுதண்துறையாம் சிவனாடுதண்துறை என திருவாவடுதுறையைக் குறிப்பதாக எண்ணுகிறோம். திரு- அழகிய, ஆ-பசு, வடு-இளமை, தண்-குளிர்ச்சி, துறை- இடம், எல்லை, தங்குமிடம். சீவ உயிர்ப்பு அழிய ஆன்மா உயிர்ப்பாம் உயிர் தோன்றியது. அது எப்படியிருந்தது எனின், அழகு பொருந்திய உயிராய் என்றும் இளமை செவ்வி வாய்த்ததுவாய் அவ்வுயிர்ப்பு குளிர்ச்சி பொருந்தியதாய் இருக்குமிடமே திருவாவடுதண்துறையாகும்.

இதில் 'சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்' என்பதில் வரும் போதி என்பது அரசமரமன்று. போதி என்றால் அறிவு என்று ஒரு பொருள் உண்டு. போதித்தான் என்ற சொல்லை நினைவில் கொள்க. மேற்கண்ட ஆன்ம உயிர்ப்பாம் திருவாவடுதண்துறை அறிவுக்குள் இருந்தது. இங்கே அறிவு என்பது அறிவுக்கறிவு ஆகும். ஏனெனில் 'சேர்ந்திருந்தேன் போதியின் நீழலில்' என்று திருமூலர் பாடவில்லை. சிவபோதி என்ற சொல்லை ஓர்ந்தால் அறிவுக்கறிவையே கூறுகிறார் என்பது விளங்கும். அறிவுக்கறிவாம் தன்னை அறிந்து இன்பமுறும் போதியின் நீழலிலிருந்து திருமந்திரம் பாடினார் என்பதே உண்மைப் பொருளாகும்.

3. தான் எதைப்பற்றிக் கூறுகிறேன் என்பது

1. ஞேயம் - காட்சிப்பொருள். 2. ஞானம் - காட்சி. 3.ஞாதுரு - காண்பான் 4. மாயை 5. மாமாயை 6. அதில் வரும் பரை ஆயம் 7. அதில் உள்ள சிவம் 8. அகோசரவீயம் ஆகிய எட்டினையும் திருமந்திரத்துள் முற்றும் விளக்கி கூறிவிட்டேன் என்பது அவர்தம் வாக்கு. இதனை,

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. -90 என்பார்.

4. மேலே கண்ட எட்டினையும் அறிந்து, தெளிந்து, அனுபவித்து, தான் அதுவாகிய பின்பே அவைகளை முற்றும் விளக்கிட முடியும். அப்படித் திருமூலர் இந்த எட்டினையும் அனுபவித்து, தான் அதுவாகிய தன்மையில் அவர் அடைந்த இன்பத்தை இவ்வுலகம் முழுமையும் அடைதல் வேண்டும்

என்பது அவர்தம் பேரவா. இப்பகுதியில் அவர் தாம் அடைந்த இன்பத்திற்கு உறுதுணை என்னுள் நான் என் உணர்வை உணர்ந்தேன். அவ்வுணர்வு ஊனைப் பற்றியதாக இருந்தது. அதன்மேலும் உணர்வை உணர்ந்தேன். அப்பொழுது ஊன்பற்றி நின்ற வான் பற்றி நின்ற உணர்வாக, அவ்வுணர்வே எல்லாவற்றிற்கும் மேலான, எல்லாவற்றையும் தன்னுட் கொண்டதாக அதுவொரு மந்திரமாக இருந்தது. அவ்வுணர்வே உண்மை இன்பமாக, உண்மை ஆனந்தமாக இருந்தது. இந்த இன்பத்தை உலகம் பெறுதல் வேண்டி உலகவரை அழைக்கின்றார். இந்த உணர்வை திருவருட்பிரகாசர்,

உறும் உணர் உணர்வாய் உணர்வெலாம் கடந்த
அனுபவ மாகிய அருட்பெருஞ் சோதி

என்று உணர்வாய், உணர்வெலாம் கடந்த உணர்வாய், அதன் அனுபவமாய் இருப்பவரே அருட்பெருஞ் சோதியர் என்பார். இதனை,

யான் பெற்ற இன்பம் பெறுகயிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே - 85

என்று கூறி நமக்கும் வழிகாட்டுகின்றார். நம்முள் உணர்வைப் பற்றுங்கள். அதனைப் பற்றப்பற்ற வான்பற்றி நின்ற மறைப்பொருளாம் இன்பத்தை அடைவீர்கள் என்கின்றார்.

5. இத்திருமந்திர நூலை வேதம், ஆகமம், சாத்திரம், தோத்திரம் என்பது

திருமந்திரமே வேதநூல் என்பது பற்றி அவரே கூறும் பாடல்.

(அ) *மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்*
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே - 77.

(ஆ) திருமந்திரமே ஆகம நூல்.

நந்தி இணையடி யான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே. - 73

(இ) திருமந்திரமே சாத்திரம்

அங்கிமி காமை வைத் தானுடல் வைத்தான்
எங்குமி காமை வைத் தானுல கேழையும்
தங்குமி காமை வைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமை வைத் தான்பொருள் தானுமே - 87

(ஈ) திருமந்திரமே தோத்திரம்

பிறப்பிலி நாதனை பேர்நந்தி தன்னை
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பவர் நெஞ்சினுள் மந்திர மாலை
உரைப்பொடும் கூடிநின்றோதலு மாமே - 86

6. திருமூலர் தம் ஆயுட்காலம் பற்றி உரைப்பது

திருமூலர் தம் சாவா நிலையின் தன்மையை நான்கு பாடல்களில் குறிப்பிடுவார்.

1. ஏழுகோடி யுகம் இருந்தேனே. 2. ஒன்பது கோடி யுகம் இருந்தேனே. 3. இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி. 4. இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி - என்பது அவர்தம் வாக்கு.

தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே - 74

ஞானத் தலைவிதன் நந்திநகர் புக்கு
ஊனமில் ஒன்பதுகோடி யுகம்தனுள் - 82

இருந்தேனிக் காயத்தே எண்ணிலிகோடி
இருந்தேன் இராப்பகல் அற்றஇடத்தே - 80

இருக்கில் இருக்கும் எண்ணிலிகோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே யிருக்கும் - 93

7. இப்படிப்பட்ட நந்தியாம் சிவத்தை விட்ட வேறுவடிவில் உள்ள சிவம் கற்பனையே என்பது.

பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனையாகும் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தானெங்கள் நந்தியே.

பெற்றம் - எருது, மான், மழு இவற்றை எப்பொழுதும் பிரிவறியாத தற்பரசிவம் கற்பனையாகும் என்பது கவனிக்கத்தக்கது.

8. தான் தமிழ் செய்ய வந்தது (வருகைக்குரிய காரணம்)

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே. - 81

தமிழ் செய்த ஞானிகள்

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்- அருணகிரிநாதப் பெருமான்

முத்தமிழ் கற்று முயங்கு மெய்ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி - குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி - குதம்பைச் சித்தர்

ஐந்தொழில் நான் செயப்பணித்தாய் அருளமுத உணவளித்தாய்
வெந்தொழில்தீர்த் தோங்கியநின் மெய்யடியார் சபைநடுவே
எந்தைஉனை பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச்
செந்தமிழின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்

4802. திருஅருட்பா.

செந்தமிழ் உயிரை வளர்ப்பது போல ஆண்டவரே நீர் என்னை வளர்க்கின்றீர் என்று இறைவனே தமிழ் எனப் பாடுகிறார். இவ்வாறு முப்பெரும் ஞானிகள் தமிழ் செய்யப் பெற்றமைக்கு முன்னரேயே நான் நன்றாகத் தமிழ் செய்யுமாறு படைக்கப்பட்டு வந்துற்றேன் என்பது.

இவ்வாறு திருமூலர் தம் வரலாற்றை எட்டுப்பகுதியாகப் பிரித்து 22 பாடல்கள் பாடியுள்ளார். இவ்வெட்டு பகுதியே அவரைப்பற்றிய அகச்சான்றுகளாக பாடப்பெற்றவையாகும். இவைகளை உய்த்துணர்ந்து பிழையற நாமும் உய்தி பெறுவோமாக.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

4. திருமந்திரத் தொகைச் சிறப்பு

பேராசிரியர். **எஸ்.சேதுபதி** எம்.ஏ. எம்.ஃபில்.,
தூய வளனார் தன்னாட்சிக் கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி

தமிழ்நெறி உலகப் பொதுநெறி. உயிர்களை உய்விக்கும் உயர்நெறி. அதற்கான கூறுகளை முறைப்படுத்தித் தொகுத்து வழங்கும் பேறு தமிழ் இலக்கியத்துக்கு உண்டு. அம்மரபில் 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று உலகம் இன்புற உரத்துக் கூறியது திருமூலர் அருளிய திருமந்திரம். அது, வான் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம். தான் பற்றப் பற்றத் தலைப்படும் வண்ணம் முகிழ்த்த பெருமந்திரம்.

இந்நூலின் மூவாயிரம் பாடல்களுக்கும் முன்னதாய் இடம்பெறும் பாயிரப் பாடல்களுள் இடம்பெறும் அவையடக்கம், திருமந்திரத் தொகைச்சிறப்பு, குருமடவரலாறு ஆகியவற்றின் வழி மூலன் செய்த ஞாலத்தமிழ் குறித்து ஆய்வது இக்கட்டுரை.

நந்தி அருள் பெற்ற நம்பிரான் திருமூலர்

நந்தி எம்பெருமானின் நல்லருள் பெற்று, திருத்தலங்கள் தோறும் வழிபட்டு அகத்திய முனிவரைப் பொதிய மலையில் காணப் புறப்பட்டவர் கயிலாய மலை முனிவர். அவர் வரும் வழியில் சாத்தனூரில் மேய்வதை விடுத்து ஆநிரைகள் யாவும் கதறி அழுவதனைக் கண்டு வருந்தி அதற்கான காரணம் தேடினார். அவற்றின் மேய்ப்பன் மூலன் என்பான் இறந்து கிடக்கிற துயரந்தான் என்பதை உணர்ந்த அவர், தம் உடலினை மறைத்து அம்மூலனின் உடலில் புகுந்து எழுந்தார். ஆநிரைகளின் துயரினைக் களைந்தார். பின்னர் அரண் செய்து வைத்த தன்னுடல் தேடித் திரும்பும் போது அது காணப் பெறவில்லை. இது இறைச்சித்தம் எனத் தேர்ந்து மூலன் உடலிலேயே தங்கி திருவாவடுதுறை எனும் திருப்பதியில் படரரசின் கீழ் இருந்து சிவயோகம் புரியத் தொடங்கினார். அந்நிலையில் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் இனிதிருந்து மூவாயிரம் பாடல்கள் அவர் மொழிந்தார் என்பதனைத் திருத்தொண்டர் திருவந்தாதியும், சேக்கிழாரின் பெரியபுராணமும் இன்னோரன்ன நூல்களும் செப்பி நிற்கின்றன. இவற்றிற்கெல்லாம் அகச்சான்றாக தம் வரலாற்றினை திருமூலர் தம் மாணாக்கர்கட்கு உரைக்கும் இடங்களில் விளக்கி நிற்கின்றார்.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே. -திருமந்திரம்

எனும் பாடலில் நந்தி அருள்பெற்ற நாதர்கள் தம்மொடு சேர்த்து எண்மர் என்கிறார் திருமூலர். அவர் தவிர்த்த ஏனையர், நந்திகள் நால்வர், சிவயோக முனி, பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகிய எழுவர் ஆவர். இவர்களுள் நந்திகள் நால்வர் இன்னாரெனத் திருமூலர் சுட்டவில்லை என்றாலும், அவருக்கு பின்வந்த பெரியோர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்று குறிக்கின்றனர்.

பதஞ்சலி எனும் பெயரில் பலர் இருந்த சூழலில் 'மன்று தொழுத பதஞ்சலி' எனும் தொடர் தெளிவு கொடுக்கின்றது. இவர் மாபாடியம் (மகாபாஷ்யம்) பாடிய பதஞ்சலியிருந்தும் (கிமு.150) யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலியிருந்தும் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு) வேறு பட்டவர் ஆவார்.

வியாக்கிரமர் என்பவர் வியாக்கிரபாதர். வியாக்கிரபாதர் புலிக்கால் முனிவர் எனப் பலவாறாகப் பேசப்படுபவர். இவரும் பதஞ்சலியாரும் வடதேசத்திலிருந்து தமிழகத்துக்கு வந்து திருமடங்கள் தோற்றியவர்கள்.

சிவயோக மாமுனி எனும் சிவமுனி சித்தன் தென்னகத்தார். பல சித்தர்களுக்கு ஞானம் போதிக்கப் பல்வேறு திருமடங்களை தோற்றுவித்தவர். ஆக, திருமூலரோடு சேர்ந்த எண்மரும் தந்நெறி பரப்பத் தமிழகம் எங்கும் திருமடங்கள் நிறுவினர் என்பது திருமந்திரத்தின் குருபாரம்பரியம் உணர்த்தும் செய்தி.

இஃது இவ்வாறிருக்க, குருமட வரலாறு வேறு விதமான செய்திகளைத் தருகிறது. திருமூலர் காலத்தில் ஏழுமடங்கள் இருந்து நிலைபெற்ற நன்னெறிகளை 'மன்னு சன்மார்க்கத்தை' மாந்தர்க்கு உரைத்தன. அவற்றுள் சிறப்புக்குரியது திருமூலரின் திருமடம். அதுவே ஏழுக்கும் முதல். திருமூலர் தவிர்த்த ஏனைய அறுவர் காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதந்தர், பரமானந்தர், போகதேவர் ஆகியோர் ஆவர். பாசத் துன்பம் அற்ற இவர்களின் பட்டியலைப் பாடல் விளக்கி நிற்கிறது.

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலம்திகழ் மூலர் நிரா மயத் தோரே. -திருமந்திரம்

ஆன்மாக்களோடு ஒன்றி நின்று அருள் செய்யும் காலாங்கரை, கலந்தருள் காலாங்கார் எனச் சுட்டும் இப்பாடலில், நலந்திரு மாளிகைத்தேவர் எனக் குறிப்பிடுவது நரசிங்கன் என்பவனுக்காக மதில் நந்திகளையெல்லாம் ஏவிச் சித்த நாதராய்த் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்து என்றும் நலம் தரும் திருமாளிகைத் தேவரை என்பது திருவாவடுதுறை ஆதீன வெளியீட்டு நூல் விளக்கம் -2 .

இத்திருமாளிகைத் தேவர் குறித்துச் செவி வழியாக வழங்கும் செய்திகளில் ஒன்று. இவர் போகரின் மாணாக்கர் என்பது, அவரிடம் தீக்கைப் பெற்று திருவாவடுதுறையில் திருமாளிகைத்தேவர் இருந்தார் என்பதற்கு, மேற் சுட்டிய பாடலைச் சான்றெனச் சிலர் காட்டுவர். இது வரலாற்று முரண் என்று குறிப்பிடும் வித்வான் கா. வெள்ளைவாரணனார் அதற்கான விளக்கமாக அளிப்பதாவது,

இச்செய்யுளின் இரண்டாமடி 'நலம்தரு நமனியத் தேவர் நாதாந்தர்' எனவும் சில சுவடிகளில் காணப்படுகின்றது. இதன்கண் 'நிலம்திகழ் மூலர் நிரா மயத்தோரே' என்ற இறுதியடியை நோக்குங்கால் திருமூலருக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய சான்றோர் ஒருவரால் இயற்றப்பட்டது இச்செய்யுள் என்பது நன்கு துணியப்படும்.

மூலன் மரபின் முதல்வராக விளங்கிய திருமூலரே தமக்கு நெடுங்காலம் பிற்பட்டு தோன்றித் தம் மரபில் வந்த திருமாளிகைத் தேவர் முதலியோரைத் தாம் பாடிய செய்யுளில் தொகுத்துக் கூறினார் என்று கொள்வது வரலாற்று முறைக்கு முற்றிலும் முரணாகும். அன்றியும் திருமூலர் பரம்பரையில் வந்த அடியார்களுள் சிறப்புடையார் சிலரைக் கூறும் இப்பாடல்களில் காலாங்கர், பாலகோர்ரர், மாளிகைத்தேவர், பரமானந்தர், போகதேவர் என்ற வழிமுறையில் போக தேவருக்கு ஒரு தலைமுறை முந்தியவராகக் குறிக்கப்பட்ட மாளிகைத்தேவரைப் போகத்தேவருக்கு மாணவரெனத் திட்டமாகக் கூறுதல் சிறிதும் பொருந்தாது -3.

ஈங்குச் சுட்டப்பெறும் போகதேவர், பதினெண் சித்தர்களுள் ஒருவராக கருதப்பெறும் பழனிமலை உறை போகரா என்பதும் ஆய்வுக்குரியது. ஏனையோர் வரலாறும் தேடலுக்குரியது. இந்நிலையில் தன்னோடு சேர்த்து எண்மரை சுட்டிய திருமூலரின் குரு பாரம்பரியப் பட்டியலில் ஒட்டாது விலகி, திருமடம் தோற்றுவித்த எழுவரைச் சுட்டும் இப்பாடலில் இடம்பெறுவோரையே .திருமூலர் மரபு. என்று 'அபிதான சிந்தாமணி' குறிப்பிடுவதும் இங்குக் கவனிக்கத்தக்கது. - 4. இக்குருமட வரலாற்றுப் பகுதியில் முதலாவதாக அமையும் பாடல்,

வந்த மடமேழு மன்னுசன் மார்க்கத்தின்
முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே -101 என்பது.

இதற்கு முன்னதாக,

மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்கு
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்
நந்தி எந்நாதன் நாவார ஓதினான்
பைந்தொடி மேனிப் பயனது தானே.... எனும் பாடலைத் தந்து திருமூலரின் மூலப் பெயர் சுந்தரநாதன் என்று சுட்டுகிறார். துடிசைக்கிழார். அ. சிதம்பரனார் (5)

மூலர் உடம்பில் புகுவதற்கு முந்தைய வரலாறு குறித்துப் போதிய சான்றுகள் புலப்படாத காரணத்தால் நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் முதலான சான்றோர்கள் பொதுவான நிலையிலே சொல்லிய கதைக்கு இது பொருந்தாது என்பதோடு இதன் பொருள் குறித்து க. வெள்ளைவாரணனார் தரும் விளக்கமும் இங்குக் கருதத்தக்கது.

இது திருமூலர் வாக்கன்று என்பதும் திருமூலர் வழியில் பின்வந்தோர் ஒருவர் அவரது நூலைக் குறித்துக் கூறியது என்பதும் மூலன் மொழிந்தான் எனப் படர்க்கையில் அமைந்திருத்தலால் நன்கு துணியப்படும். இதன்கண் மூலன். 'சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே' என்ற சொல், 'சுந்தர ஆகமம்' என ஆகமத்துக்கு அடைமொழியை இறைவன் அருளிய திவ்யாகமம் என்னும் சிறப்புணர வந்ததாகும். ஆகவே இதனைத் திருமூலரது முந்தை யாக்கையிற் பெற்றோர் இட்ட பெயர் எனத் துணிந்து கூறுதல் சிறிதும் பொருந்தாது. இப்பாடலின் நான்காம் அடிக்கு உரியதாக அவர் கொண்ட 'சுந்தரனாகமச் சொல் மொழிந்தானே' என்ற பாடல் எந்தச் சுவடியிலும் இருப்பதாக தெரியவில்லை. அவ்வாறு பாடங் கொண்டாலும், சுந்தரன் ஆகமம் என்ற தொடருக்கு சுந்தரனாகிய சிவபெருமானால் அருளிச் செய்ய பெற்ற ஆகமம் எனப் பொருள் கொள்ளுதலே ஏற்புடையதாகும்.

திருமந்திரத் தொகைச்சிறப்பு

திருமந்திரப் பாடல்கள் மொத்தம் மூவாயிரம் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எனினும் காப்புச் செய்யுளோடு சேர்த்து, 3028 பாடல்களாகத் திருமந்திரப் பாடல்கள் வெளியிடப் பெற்று வருகின்றன.

திருமந்திரச் செய்யுட்கள் என வேறு நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுத் திருமந்திரச் சுவடிகளிலும் வெளிவந்த பதிப்புக்கள் நூலுள் சேர்க்கப்படாது உள்ளன. 11 பாடல்கள். சில ஏட்டுச் சுவடிகளில் இருந்து அச்சில் வெளிவராதனவாய்ச் சைவ சித்தாந்த சமாசப் பதிப்பில் வெளியிடப் பெற்றவை 17 பாடல்கள். இவற்றின்மேலாக வெள்ளியம்பல வாணத்தம்பிரான் சுவாமிகளால் ஞானாவரண பாடியத்திலும் முத்தி நிச்சயப் பேருரையிலும் மேற்கோளாகக் காட்டப்பட்ட திருமந்திரப் பாடல்களில் இதுவரை வெளிவராதனவாக உள்ளவை ஏறக்குறைய 30 திருப்பாடல்களாகும். இவை எல்லாவற்றையும் சேர்த்து எண்ணுங்கால் திருமந்திரப் பாடல்களின் தொகை 3100 ஆக உயர்கின்றது (7) இந்நிலையில் வரலாற்று நெறி பிழையாது முறைப்பட ஓதும் சேக்கிழார் பெருமானின்

'ஏனவெயி றணிந்தாரை ஒன்றவன்றானென வெடுத்து
முன்னிய அப்பொருண் மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி'

என்ற பெரியபுராணத் தொடரை நோக்கும்போது திருமூலர் அருளியது மூவாயிரம் பாடல்களே; அந்நூல் 'ஒன்றவன்றான்' என்றே தொடங்குகிறது என்பது தெளிவு. அதற்கு முன்னதான ஐந்து கரத்தனை எனத் தொடங்கும் காப்புப் பாடல் முதலிய அனைத்தும் பின்வந்தோரால் எழுதிச் சேர்க்கப் பெற்ற இடைச் செருகல்கள் எனக் கொள்வது தவறாகாது.

எனவே, திருமந்திரத் தொகைச் சிறப்பு எனும் தலைப்பில் கீழ்வரும் பாடல்கள் திருமூலர் வழியில் பின்வந்தோர் பாடிய பாடல்கள் எனக்கொள்வது தகும். அவர்பால் அன்புற்ற மாணாக்கர்கள் நூற்பயன் கூறும் 'மரபுக்கேற்பப் பாடிய சிறப்புப் பாயிரம்' என்பதும் பொருத்தமுடையதே.

திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்களின் அருந்தொகுப்பாகிய இந்நன்னூல், நான்கு பொதுவாகவும், ஐந்து-சிறப்பாகவும் நின்று ஒன்பது தந்திரங்களைப் பகுப்புகளாக விளங்கி முத்தியாகிய வீடுபேற்றினை நல்கும். அத்தகு பாடல்களை, அன்றாடம் காலை எழுந்து உணர்ந்து ஓதினால் உலகத்தலைவனாம் இறைவனை அடையலாம் என்பதனை உணர்த்தும் பாடல்கள் இவை.

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் எழுந்து நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத்தலைவனை நண்ணுவர் அன்றே - 98

வைத்தபரிசே வகை வகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவாயிரத்திலே
புத்தி செய் பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தரும் இவைதானே - 99

இவை தவிர, இன்னும் மூன்று பாடல்களைச் சிறப்புப் பாயிரத்தில் சேர்த்தளிக்கிறது கழக வெளியீட்டு நூல். அப்பாடல்களும் இக்கருத்துக்களை உணர்த்துவனவேயாம்.

மூலர் உரை செய்த ஞாலத்தமிழ்

திருமூலரைச் சுட்டும்பொழுதும், திருமந்திர நூல் குறித்துப் பேசும்பொழுதும் தமிழ் எனும் அடைமொழி தவிர்க்க இயலாது இடம் பெறுவது ஆய்வுக்குரியது.

"முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவவிட்டு"
என்று திருத்தொண்டர்த் திருவந்தாதியும்,

"ஊனுடம்பில் பிறவிடந் தீர்ந்(து) உலகத்தோ(ர்) உய்ய
ஞான முதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மை முறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனெயி(று) அணிந்துரை ஒன்றவன்றான் என எடுத்து
முன்னிய அப்பொருள் மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி"

என்று பெரியபுராணமும்,

"திருமன்னும் மறைமுறையும் தீந்தமிழால் ஞாலம்
தேறிவழி பாடியற்றச் செப்பிய நம்பெருமான் திருமூலர்......" என்றும்

"சேர்ந்த திருமூலரவர் செந்தமிழால் வையம்
சிறந்தோங்கி வாழ்த்திடவும்......" என்றும்

செந்தமிழின் முறை வைப்பாம் திருமூலர் மந்திர நூல்
முந்துமறை ஐந்தெழுத்தின் முற்றுமுறை - தந்ததமிழ்
ஆகமமாம் பேறுவழி அவ்வழிபா டாமுறுதி
போகம் சிவாயசிவ போற்று

என்றும் பிற பாடல்களும் பேசுகின்றன.

இத்தொடர்கள் சுட்டும் தமிழினை வெறுமனே மொழியாகக் கருதி, வடமொழியில் உள்ள ஆகமங்களைத் தமிழில் ஆக்கினார் திருமூலர் என்பர் சிலர்.

திரு. மா.வே. விசுவநாதப் பிள்ளை என்பார் பதிப்பித்த திருமந்திரப் பதிப்பில், டாக்டர் ரமண சாஸ்த்திரி என்பவர் எழுதிய ஆங்கில முகவுரையில், திருமூலராகிய சிவயோகியார் தாம் கயிலையிருந்து வரும்பொழுதே மந்திரமாலிகா என்றொரு வடமொழி நூலைக் கொண்டு வந்து தமிழில் மொழி பெயர்த்தார் என்கிறார். இதற்கு உபமன்யு பக்திவிலாசம் எனும் வடமொழி நூலில் சான்றுள்ளது எனும் அவர் கூற்றினைத் தமிழறிஞர்கள் பலரும் மறுக்கின்றனர். அவற்றுள் க. வெள்ளைவாரணனாரின் மறுப்புரை பொருத்தப்பாடுடையது.

உபமன்யு பக்த விலாசம் என்பது சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்தை அடியொற்றி வடமொழியில் அமைந்த மொழிபெயர்ப்பு நூல் என்பது காய்தல் உவத்தல் அகற்றி ஆராயவல்ல நல்லறிஞர் பலரும் ஒப்ப முடிந்த உண்மையாகும். வடமொழியில் அமைந்த அந்நூலில் திருமந்திரமாலை என்னும் இந்நூலின் பெயர் ஸ்ரீ மந்திரமாலிகா என வடமொழி மரபிற்கேற்ப மொழிபெயர்த்து அமைக்கப் பெற்றிருக்கிறது. திருமந்திரமாலை எனும் தமிழ் நூற்பெயர் வடமொழி நூலில் அம்மொழி மரபிற்கேற்ப ஸ்ரீ மந்திரமாலிகா எனக் குறிக்கப்பட்டிருத்தலை ஆதாரமாகக் கொண்டு திருமூல நாயனாரால் முதல்முதலாக அருளிச் செய்யப் பெற்ற இத்திருமந்திரமாலையை வடமொழி நூல் ஒன்றின் மொழிபெயர்ப்பு எனத் துணிந்து கூறுதல் நடுநிலையில் நின்று ஆராய்ந்து உண்மை காணும் கடப்பாடுடைய ஆராய்ச்சியாளர்க்கு அடாத செயலாகும்.

ஒரு வேளை இக்கூற்று மெய்யுடையது எனில் வரலாறு பாடும் சேக்கிழார் தம்நூலுள் அவசியம் குறிப்பிட்டிருப்பார். எனவே, மொழிப்பகைமை காரணமாய்ப் பிரித்துப் பூசலிடும் போக்கிற்கு மாறாகத் தமிழையே இறைவனாக்கிச் செய்தது திருமந்திரம் என்பதனைப் பின்வரும் திருமூலர்தம் கூற்று உறுதிப்படுத்தும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்னும் இவ்வடிகளில் இடம் பெறும் தமிழ் எனும் சொல், மொழியினைக் குறிப்பதன்று. அது கடந்தது. திருமூலரை இறைவன் இவ்வுலகில் படைத்ததே, தன்னை அதாவது, இறைவனைத் தமிழாகச் செய்வதற்கே என்பது பொருத்தமுடைய பொருள் எனலாம்.

அத்திருப்பணி மிகப் பெரிது என்பதால்தான், தான் உணர்ந்தபடி உரைக்க முடியாத இறைவனின் தோற்றப் பெருமையினை அடக்கமுடியா ஆற்றல் சிறப்பினை அவையடக்கமாக்கிப் பின்வரப் பாடுகிறார்.

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்
வேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே - 101

இப்பாடல் எல்லாச் சமயக்கடவுளர்க்கும் பொது; எங்கள் எனும் சொல்லும் எவர்க்கும் உரியது. இப்பாடலில், அநேகமாய் எல்லாச் சமயங்களும் ஏற்கும் சுடராகவே இறைவன் சொல்லப் பெற்றிருப்பது அருமை.

'*ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி*' என்ற மாணிக்கவாசகரும்,

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி

என்ற சம்பந்தர் மொழியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

சீலம்,நோன்பு,செறிவு, அறிவு எனும் நன்னெறி நான்கினை முறையே, பாடல்,ஆடல், நாடல், தேடல் என வகைப்படுத்தி அவ்வழியே இறைவனை ஏத்தும் தொழில் என்று பொதுமை நிலையில், அவையடக்கம் பாடும் செய்யுள் இது.

பாடவல் லார்நெறி பாடஅறி கிலேன்
ஆடவல் லார்நெறி ஆடஅறி கிலேன்
நாடவல் லார்நெறி நாடஅறி கிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லனே. -96

இப்பாடலில், உணர்வுத்தளத்தில் மெல்லிய இழையாகத் தாம் எழுதியது முதல் நூல் என்பதை திருமூலர் சொல்லாமல் சொல்லியிருப்பதைக் காண முடிகிறது.

இவ்விரு பாடல்களோடு அவையடக்கப்பகுதியினை நிறைவுப்படுத்திக் கொண்டது கழகப்பதிப்பு. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்போ பின்வரும் மேலும் இருபாடல்களைக் கொண்டு அமைகிறது.

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனை
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலு மாமே. - 97

தத்துவ ஞானம் உரைத்தது தாழ் வரை
முத்திக் கிருந்த முனிவரும் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பக்திமையால் இப்பயனறி யாரே - 98

திருமுறைகளின் மரபில், மால் அயன் அறியொணாச் சிவனின் பெருமையை ஏழிசையாய், இசைப்பயனாய் நிறைந்த ஈசனை முனிவரும் தேவரும் பக்தியோடு தொழுது ஏத்தும் பரம்பொருளை எவ்வாறு உணர்ந்த வண்ணம் உரைப்பது என்கிற படைப்பாளியின் வாக்காக இப்பாடல்கள் அமைகின்றன எனலாம்.

தொகுப்பாக

திருவள்ளுவமாலை அறுதியிட்டு திருக்குறளின் எண்ணிக்கை 1330 என்றது போல, திருமூலர் அருளிய திருமந்திரம் மூவாயிரம் என்பது பொது மரபு. ஆயினும் நூற்றுக்கணக்கில் இடைச்செருகல்கள் அதனுள் புகுந்து, மெய்யான வரலாறு அறிய விடாது திசை திருப்பி விடுகின்றன என்றாலும் திருமூலர் தம் வாக்காக உரைக்கும் தன் வரலாறு அகச்சான்றாகி திருமூலர் மற்றும் திருமந்திரத்தின் மூலம் தமிழ்தான் என அறிய வழிவகுக்கிறது எனலாம்.

திருச்சிற்றம்பலம்

5. மும்மூர்த்திகளின் முறைமை

தமிழறிஞர். **தி.வே. கோபாலய்யர்**
புதுச்சேரி

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் யோகத்தின் பேராற்றலால் இறையருளில் திளைத்திருந்த திருமூலர் திருவாவடுதுறையை அடுத்து மூலன் என்ற இடையனுடைய உடலில் தங்கி மூவாயிரம் ஆண்டு யோகத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு திருமந்திரமாக மூவாயிரம் ஆண்டுகளில் மூவாயிரம் திருமந்திரங்களை அருளிச் செய்தார் என்பது சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருமூலர் நாயனார் புராணம் குறிப்பிடும் செய்தியாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முற்பட்டுத் தமிழகத்தில் வாழ்ந்து திருவாவடுதுறையை வழிபட்ட திருஞானசம்பந்தரோ, திருநாவுக்கரசரோ அத்தலத்தில் திருமூலர் எழுந்தருளியிருந்த செய்தியை குறிப்பிடவில்லை. திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் திருவாவடுதுறையில் பொற்கிழி அளித்த வரலாற்றை அகப்படுத்திப் பதிகம் பாடியுள்ளார். ஆனால் திருமூல நாயனார் பற்றிய சுவடு ஒன்றும் அவர் பதிகங்களில் இடம்பெறவில்லை.

சங்க காலத்தில் சிவபெருமான் பற்றியனவாக நாம் அறியும் செய்திகளுள் இக்கட்டுரைக்குத் தேவைப்படுவனவற்றை முதற்கண் நோக்குவோம். பரிபாடலில் திருமாலைப் பற்றி ஏழு முழுப்பாடல்கள் உள்ளன. முருகனைப் பற்றிப் பரிபாடலில் எட்டுப்பாடல்களும் திருமுருகாற்றுப்படையும் உள்ளன. சிவபெருமானைப் பற்றிய தனிப்பாடல்கள் எட்டுத் தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல்களே. எட்டுத் தொகையுள் பெரும்பாலும் உவம வாயிலாகச் சில செய்திகளே சிவபெருமானைப் பற்றி அறியப்படுகின்றன. சிவன் என்ற சொல்லே சங்க இலக்கியத்துள் இல்லை. சிவபெருமான் அந்தணன், அருந்தவத்தோன் என்றே குறிப்பிடப்படுகிறார். அவருடைய பேராற்றலாகிய சக்தி உமை என்ற பெயராலேயே சங்க இலக்கியத்துள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகமும் முகிழ்த்தன முறையே (கலித்தொகை.கடவுள் வாழ்த்து)

நீல நிறத்தினையும் தூய அணிகலன்களையும் உடைய உமையொரு பாகனாகிய சிவபெருமானுடைய இரு திருவடிகளின் நிழலின் கீழே மேல் கீழ் இடை என்னும் முத்திற உலகங்கள் முறையே தோன்றின என, சிவபெருமான் படைப்புக் கடவுளாகவும் குறிக்கப் பெற்றுள்ளார்.

யாழ்கெழு மணிமிடற்று ஒருவன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றாம் உலகே (அக. கடவுள் வாழ்த்து)

யாழ் ஓசை போன்று அழகிய மிடற்றொலியை உடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய வருத்தமற்ற திருவடி நிழலிலே உலகம் நல்லிருப்பினைப் பெற்றுள்ளது.

எல்லாம் உயிர்க்கும் ஏமம்யாகிய.... அருந்தவத்தோன் (புற.கட.வாழ்)

எல்லா உயிர்களுக்கும் பாதுகாவலாகிய பெரிய தவத்தை உடையவன் என்ற தொடர்களால் சிவபெருமான் காத்தற் கடவுளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

சூலம்பிடித்த சுடர்படைக்
காலக் கடவுட்கு உயர்கமா வலனே. (பதிற்.கட.வாழ்)

ஒளி வீசும் முத்தலை சூலப்படையை உடைய அழித்தல் கடவுளாகிய சிவபெருமானுக்கு பெற்றி விளங்குக.

கூற்றுறத் தீயே மாற்றறாச் சீற்றம் (புற. 56)

பாண்டியனே! நீ கோபத்தில் உலகை அழிக்கும் சிவபெருமானை ஒத்திருக்கிறாய்.

கொலைவன் சூடிய குழவித்திங்கள்- (கலி. 103)

இவன் சிவபெருமானே என்று என் நெஞ்சம் அஞ்சியது என்றாற் போன்ற இடங்களில் காலக்கடவுள், கூற்று, கொலைவன் என்ற பெயர்களால் சிவபெருமான் அழித்தற் கடவுளாகவும் குறிப்பிடப்படுகின்றார். இவற்றை நோக்கச் சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும் உடையவனாகச் சங்கக்காலத்தில் கருதப்பட்டமை போதருகிறது.

திருமால் நற்றிணைக் கடவுள் வாழ்த்துப் பாடலிலும், பரி பாடலில் திருமாலைப் பற்றிய பாடல்களிலும் எல்லாப் பொருள்களிலும் உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்து இருக்கும் நுண்ணிய வடிவத்தினையும் எல்லாம் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் பெருவடிவத்தினையும் ஒரே காலத்தில் உடையவன் என்பதும், அவனை

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ
நலமுழுது அளைஇய புகர்அறு காட்டிப்
புலமும் பூவனும் நாற்றமும் நீ (பரிபாடல். 1)

ஐந்து தலைகளை உடையவராய் தெய்வத்தன்மை பொருந்திய பேராற்றல் உடைய உருத்திரனும் அவனால் செய்யப்படும் அழிப்பும், எல்லா நலமும் வழங்கும் குற்றமற்ற சிறப்பினை உடைய வேதமும் அவ்வேதத்தை ஓதும் பிரமனும் அவன் நிகழ்த்தும் படைப்புத் தொழிலும் எல்லாம் திருமாலாகிய காத்தல் கடவுளாகிய நீயே என்று கூறுவதால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும் ஓரே தெய்வத்தின் மூன்று வேறுபட்ட செயல்களே என்பது குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயும் கலை அந்தணர்க்குரிய (தொ.பொ. 625)
உரைசான்ற முக்கோலும் (கலி.9)
முக்கோல் கொள் அந்தணர்
முதுமொழி நினைவார்போல் (கலி.126)
கல் தோய்த்து எடுத்த படிவ பார்ப்பான் முக்கோல் (முல்லைப்பாட்டு. 38)

என்ற தொடர்களில் காணப்படும் முக்கோல் அந்தணத் துறவிகளால் அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளாக விளங்குபவர்கள் ஒரே முழுமுதற் கடவுளின் கூறுகளே என்பதனைக் குறிக்க வந்ததாக நச்சினார்க்கினியர் போன்ற சான்றோர்கள் கருதுகின்றனர்.

தொல்லூழி தடுமாறித் தொகல் வேண்டும் பருவத்தான்
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான் கண் பெயர்ப்பான் போல்
எல்லுறு தெறுகவிர் மடங்கித்தன் கதிர்மாய (கலி. 129)

பல உலகங்களின் உயிர்க்கெல்லாம் பழையதாகிய ஊழிகாலத்துப் பிறந்து இறந்து தடுமாறித் திரியும் படி அயனாய் நின்று படைத்த முதல்வன் அரனாய் அவ்வுயிரெல்லாம் தன்னிடத்தே வந்து தொழுதலைத் தான் விரும்பும் ஊழி முடிந்த காலத்தே தன்னிடத்திலே மீட்டு ஒடுக்கிக் கொள்கிறவனே போல ஞாயிறு பகற்பொழுது வந்து சேர்வதற்கு காரணமான தன்னுடைய தெறுகின்ற கிரணங்களைத் தன்னிடத்தே மீட்டுக் கொண்டு மறைய - என்ற இவ்வடிகளிலே ஞாயிற்றின் கிரகணங்கள் தோன்றுவதற்கும் பகற்பொழுது நிலை பெறுவதற்கும் மாலையில் மறைவதற்கும் முழுமுதற் கடவுள் அயனாய்ப் படைத்து அரியாய்க் காத்து அரனாய்த் தன்னிடத்து கொடுக்கும் செய்தி உவமையாகக் கூறுகின்ற அளவு நன்மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருந்த செய்தி அறிப்படுகிறது.

இவற்றால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல்களை செய்யும் அயன், அரி, அரன் என்ற மூவரும் ஒரே முழுமுதற் கடவுளின் முக்கூறுகளே

என்ற கருத்து சங்க காலத்திலேயே நன்மக்கள் உளத்தில் இடம் பெற்றிருந்த செய்தி உணரப்படுகிறது.

இதே செய்தி சங்க இலக்கியத்துக்குச் சில நூற்றாண்டுகள் பிறபட்டு தோன்றிய தேவாரத்திலும் இடம் பெற்றுள்ளது.

படைத்தளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை (தேவாரம்)
நாரணன் காண் நான்முகன் காண் நால்வேதன் காண் (தேவாரம்)
ஆதிஅரியாகிக் காப்பான் அயனாகிப் படைப்பான் (ஞான உலா)
புவம், வளி, கனல், புனல், கலை, உரைமறை, திரிகுணம், அமர் நெறி
திவம் மலிதரு சுரமுதலியர் திகழ்தரும் உயிரவை, அவைதம்
பவம் மலிதொழிலது நினைவொடு, பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநிலனில் நிலை பெறுவரே. (1-21-1)

மலை பல வளர் தரு புவி இடை மறை தரு வழி மலி மனிதர்கள்
நிலைமலி சுரர் முதல் உலகுகள் நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல் நடுவு அறிதுயில் அமரரி உருவு இயல்பரன் உறைபதி
சிலைமலி மதில் சிவபுரம் நினைபவர் திருமகளோடு திகழ்வரே (1-21-2)

என்றாற் போன்ற திருமுறைப் பாடல்களில் சிவபெருமானே பிரமனாக படைப்புத் தொழிலையும், திருமாலாகக் காத்தல் தொழிலையும் செய்கிறான். அவனே உருத்திரனாக அழித்தலையும் செய்கிறான் என்ற செய்தி வலியுறுத்தப்பட்டுள்ள வற்றையும் காணலாம். இந்த முன்னுரையை உளம் கொண்டு திருமந்திரத்தில் மும்மூர்த்திகளின் முறைமை என்ற தலைப்பினை நோக்குவோம்.

திருமூலர் "வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தில் ஓதத்தகும் அறம் எல்லாம் உள" என்றும் கருதினார். சைவ ஆகமங்கள் 28 உள. அவை பல ஆயிரம் சுலோகங்களாக அமைந்தவை. அவற்றுள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்ரம், சுப்ரம், மகுடம் என்ற ஒன்பதனையும் தழுவித்தான் திருமந்திரம் இயற்றிய செய்தியைத் திருமூலர் குறிப்பிடுகிறார். எனவே மும்மூர்த்திகள் தொடர்பாகக் கூறப்படும் செய்திகள் யாவும் ஆகமங்களில் கூறப்பட்டனவையாம்.

1. என்றும் ஒழிவில்லாது செய்யும் படைப்பு, காப்பு, அழிப்பு, அருளல் என்ற நான்கினையும் சோர்வின்றிச் செய்பவன் சிவபெருமானே. அவனுடைய அடியவர்கள் அவனுக்குக் குறிப்பிடும் எல்லையற்ற பெருமைகளுள் சிற்சில திருமாலுக்கும் பரமனுக்கும் பொருந்தும்.

2. உருத்திரனும், நீலமணி நிறத்தனாகிய பெருமாளும், முதல் தொழிலாகிய படைப்பினைச் செய்யும் பிரமனும் ஆகிய மூவரும் உலக இயக்கத்திற்குப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களும் இடையறாத தொடர்புடையவை ஆதலின் அம்மூவரும் தம்முள் ஒருமனப்பட்டு இம் முத்தொழிலையும் இயற்றுகின்றனர். இவ்வாறு இம்மூவரும் தொழில் பற்றி உயர்வு, தாழ்வு கருதாது முத்தொழிலும் உலக இயக்கத்திற்கு இன்றியாமையாதவை என்பதனை மாறுபாடின்றி மனம் கொண்டு இணக்கத்தோடு செயற்படுவதற்குக் காரணம் உருத்திரன், திருமால், பிரமன் என்ற மூவரும் தத்தம் பதவிகளில் இருந்து கொண்டு பரசிவத்தின் ஆணையைத் தலைமேல் தாங்கித் தொழிற்படுகின்றனர். அவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்றாற்போலச் சிற்றறிவோர் மனம் மயங்கிப் பூசலிடுகின்றனர்.

3. நல்வினை, தீவினை என்ற இருவினையையும் கடந்து அவற்றிற்கு அப்பால் இருக்கும் பரசிவமே உலகிற்குக் காரணம். காரணப் பொருள் எதுவோ அதுவே வணங்கத்தக்கது. அவன்தான் இறைவன், இவன்தான் இறைவன் என்று வாதாடுபவர்கள் உண்மையான நினைப்பு அற்றவர்கள். அவர்கள் வாழ்க்கை பிறவிப்பிணியை அறுக்க உதவாது. மலம் மாசுகளைத் தழுவித் தூய்மை உற்றவர்களே பிறவிப் பிணியை அறுத்தவராவர்.

4. சிவபெருமான் ஒருவனே. அவனுடைய நிலை வேறுபாடுகளை ஒட்டி அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் என ஐந்தாகவும், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், விந்து, நாதம், சக்தி, சிவம் என ஒன்பதாகவும் வகுக்கப்படுகிறான். சிவம், சக்தி, நாதம், விந்து என்பன அருவம். சதாசிவம் அருவுருவம். மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் உருவம்.

முழுமுதற் கடவுள் செயற்படாது வாளா இருக்கும் போது அதன் பெயர் பரசிவம். பரசிவத்தின் சக்தி பராசக்தி. பரசிவம் உலகைத் தொழிற்படுத்த நினைக்கும் பொழுது அதன் பெயர் சிவம். சிவத்தின் சக்தி ஆதிசக்தி அல்லது திரோதன சக்தி.

சிவம் உலகை உய்ப்பித்தற்குக் கொள்ளும் விருப்பமே இச்சா சக்தி. விருப்பை நிறைவேற்ற ஆவன அறியும் அறிவே ஞான சக்தி. அறிந்தவாறு செயல்படும் செயலாற்றாலே கிரியா சக்தி.

ஞானவடிவான சிவன் செயற்படத் தொடங்கிய அளவில் சிவன் சக்தி என இரண்டாய் இருப்பர். சிவன் சுத்த மாயையை ஞானத்தால் சிறப்பாக

நோக்குதல் நாதமாகும். ஞானத்தால் கிரியா சக்தியைச் சிறப்பாக நோக்குதல் விந்துவாகும். சிவம் , சக்தி, நாதம், விந்து என்ற நான்கிலும் ஞானமே மிக்கு இருப்பதனால் இவை அருவமாகும்.

ஞான சக்தியின் கிரியா சக்தியும் சமமாகச் செலுத்தி மாயையை செயற்படுத்தும் நிலை சதாசிவம். சுக்குமத்திற்கும், காலத்திற்கும் இடைப்பட்ட சதாசிவம் அருவுருவ நிலை.

ஞான சக்தியைக் குறைவாகவும், கிரியா சக்தியை மிகுதியாகவும் செலுத்தி சீகண்ட உருத்திரரை ஏவி அவர் வாயிலாகப் பிரகிருதி மாயையில் சிவம் ஐந்தொழில் நிகழ்த்துவார்.

ஐந்தொழில்களில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்றும் மாயையின் மேலும், மறைத்தல், அருளல் என்ற இரண்டும் ஆன்மாக்கள் மேலும் நிகழ்வன. படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் பிரம்மன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் என்பவரால் நிகழ்வன. இவர்கள் யாவரும் பரம்பொருளில் உருவ வேறுபாடுகளே ஆதலின் மும்மூர்த்திகளும் பரம்பொருளுக்கு வேறல்லர். அவர்கள் செயல்கள் யாவும் பரம்பொருள் உள்ளிருந்து இயக்க நிகழ்வனவாம்.

5. எனவே பிரமன், திருமால் என்பவர் நமக்கு அயலானவர் அல்லர். அக்கடவுளரைச் சார்ந்தும் நாம் சிவபெருமானுக்கு அடியவராகும் நிலைமையைப் பெறலாம்.

6. தேவர்கள் வணங்கும் திருவோலக்கத்திலே திருமூலர் சிவபெருமானைப் பணிந்து நிற்க. மூலனே நீ திருமாலையும், பிரமனையும் நிகர்ப்பாய். நில உலகில் நம் திருவருட் பெருமையை நிலை நிறுத்து என்று சிவபெருமான் திருமூலருக்கு ஆணையிட்டார்

7. மனிதராகினும், தேவராகினும் பிறவிப் பிணியிலிருந்து உய்ந்து போவதற்கு வழிபட வேண்டும் தெய்வம் சிவபெருமானே.

8. சிவபெருமானுடைய ஒன்பது வகை வடிவு வேற்றுமைகளுள் பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூம்மூர்த்திளும் அவர்களோடு சதாசிவம், மகேசுவரன் என்ற ஐந்து மூர்த்திகளும் சிவபெருமான் கூறுகளாகவே உள்ளனர். ஆதலின் அவர்களைத் தனித்தனியே பிரித்து உயர்வு தாழ்வு கூறுதல் மயக்க உணர்வின் பயனேயாகும்.

9. சிவபரம்பொருளே உடல் மிசை உயிரென எல்லாம் பொருள்களினுள்ளும் கலந்து நின்று பிரம்மனாய்ப் படைத்துத் திருமாலாய்க் காத்தும் உருத்திரனாய் அழித்தும் செயல்படுகிறான்.

10. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற அட்டமூர்த்தியாய் உள்ளவனும் சிவபெருமானே- என பத்து மந்திரங்களால் மும்மூர்த்திகளும் சிவத்தின் வேறானவர் அல்லர். அம்மூவரிலும் சிவபெருமான் உள்ளிருந்து முத்தொழில்களைச் செய்விக்கின்றான். அவருள் ஏற்றத்தாழ்வில்லை. அவர்களை வழிபட்டால் அவர்கள் வாயிலாகச் சிவபெருமான் திருவடிகளை அடையலாம் என்ற செய்திகளால் தெய்வங்களின் பெயரால் பூசலிடும் பேதைமை விலக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

6. உபதேசம்

சித்தாந்த இரத்தினம். புலவர். அரு. சோம. குஞ்சிதபாதம்
சைவ சித்தாந்தப் பேராசிரியர், தஞ்சாவூர்

முன்னுரை

உலகவர் யாவர்க்கும் உரிய பொது நூலாகிய பழமையான ஞான நூல் திருமந்திரம் ஆகும். இப்பிறப்பிலேயே சிவகதி அடைவதற்குரிய நெறிமுறைகளை இந்நூல் எடுத்துரைக்கிறது.

உபதேசம் என்பது, ஞானம் தொடர்பான செய்திகளைக் குரு எடுத்துக்காட்டுதலாகும். தமிழில் இதனை போதித்தல் என்பர். தான் பெற்ற குழந்தைக்குத் தாய் அதன் தந்தையைக் கூடவே இருந்து காட்டி விளக்குவது போன்று, ஞான ஆசிரியர் சீடனுடனிலிருந்து சிவனைக் காட்டுவது (போதனை) போன்ற உபகாரமே உபதேசம் ஆகும்.

முதல் தந்திரம் காரணாகமச் செய்திகளைக் கூறும் பகுதியாகும். இப்பகுதியில்தான், மக்களுக்கு இன்றியமையாத ஞான உபதேசம் எச்சமயத்தார்க்கும் பொதுவான முறையில் அறவடிவில் கூறப்பட்டுள்ளது. இப்பகுதி 'விண்' எனத் தொடங்கி 'விண்' என முடியும். இப்பகுதியில் உள்ள முப்பது பாடல்களும் அந்தாதித் தொடையால் ஆனது.

இறைவன் களிப்பறுக்கும் செயல்

இறைவன் கருணைக்கடல். உயிர்கள் மும்மலச் சேர்க்கையினால் பிறவிக்கு உட்படுகின்றன. இம்மும்மல அழுக்கை நீக்கி, உயிர்களை ஆட் கொள்வது இறைவனது திருவுளம்பாங்காகும். உயிர்களின் உள்ளே நின்று உணர்த்தி வந்த இறைவன், உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப குருவடிவில் வந்து உபதேசம் செய்து பழ மலமாகிய களிம்பை நீக்குகிறான். பின்பு அருளால் நெறிப்படுத்தி இருவினையொப்பு, மலபரிபாகம், திருவருள் வீழ்ச்சியை அமைத்து அகக்கண்ணாகிய அருட்கண்ணைத் திறக்கிறான்.

இதனை,

கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே (10:113) எனும் திருமந்திர வரிகளால் உணரலாம்.

முப்பொருள் உண்மையும் இயல்பும்

சைவ சித்தாந்த்தில் இறை, உயிர், தளை எனப்படும் முப்பொருள் சிறப்பாக பேசப்படுகிறது. அதன் உண்மையையும் இயல்பையும் திருமூலர் திருமந்திரம் தெளிவாகப் பேசுகிறது.

இம்மூன்றினுள் இறையின் (பதி) தொன்மையை எல்லா நெறியினரும் சொல்லாலும் பொருளாலும் ஐயம் திரிபு இல்லாமல் உடன்படுகின்றனர். இது போன்று உயிரும்(பசு), தளையும் (பாசம்) தொன்மையே. இவற்றுள் சீவத்தன்மையுடைய உயிரும். கடத்தன்மையுடைய தளையும் இறைவனைச் சென்றடையாது. ஆனால் உயிரில், இறைப்பொருள் விளங்கித் தோன்றும்போது உயிரில் உள்ள சீவத்தன்மையும், உயிரைத் தடைசெய்து கொண்டுள்ள தளையாகிய தடையும் (ஆணவம், கன்மம், மாயை) முனைத்து நில்லாமல் ஒடுங்கும்.

பதியினைப் போல் பாசம் அநாதி...
பதியணுகிற் பசு பாசம் நிலாவே (10:115)

எனவே பிறவிக்குக் காரணமான தடைகள் நீங்க, உயிருள் இறைவனைக் கண்டு, கலந்து, உணர்ந்து அவனை விளக்கமடையச் செய்ய வேண்டும். அப்போது அவனே, ஞான சூரியனாக பால் நினைந்தூட்டும் தாயினும் அன்பொடு உயிரின் மும்மலங்களையும் மாற்றி அருள்வான்.

குரு உபதேசத்தின் அவசியம்

சூரியனுடைய ஒளி பஞ்சைச் சுடாது. சூரியனுக்கும் பஞ்சுக்கும் இடையில் சூரியகாந்தக் கல்லைக்காட்டும் போது, பஞ்சைச் சுட்டுவிடும். அதுபோல் சிவசூரியனாகிய இறைவன், குருவடிவில் வந்து வெளிப்பட்டுத் தோன்றும் போது குருவின் முன்பு உபதேசத்தால் உயிரில் உள்ள பாசம் நீங்கி, அவ்வுயிர் விளக்கம் பெறும்.

சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. (10:117)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களும், அழிவினுக்கு அழைத்துச் செல்லும். அந்நிலை எல்லை காண முடியாத அழத்தையுடைய நீர்நிலையில் ஏவம் துறையறியாது செல்லும் மனிதரைப் போன்றது. குருபரனாகிய இறைவன் குருவுபதேசம் செய்து வழியைக் காட்டுவான். அதன் பிறகு இவ்வுலக வாழ்வு சிவவுலக வாழ்வாக அமையும்.

சிவயோக நிலைக்குச் செலுத்தப்படுதல்

குருவுபதேசம் பெற்றவர்களுக்குப் பிறவிக்கு வித்தாகிய ஆணவ மலத்தினை கெடுக்க குருவால் உபதேசிக்கப்படும் திருவைந்தெழுத்தின் உபதேச முறைப்படி கணித்தலால், உண்மைப் பேருறக்கமாகிய சுத்த துரியம் தோன்றும். அப்போது பாசப்பிணிப்பு நீங்கும்.

சுத்தத் துரியம் பிறந்து துடக்கற (10:121)

அப்போது பொறிபுலன்கள், உடம்பு முன்போலவே தோன்றிடினும், தமக்கெனச் செயலின்றி, சிவநினைவோடு வாழ்வர். இந்நிலை சிவயோக நிலை என்பதாகும்.

சிவயோகப் பயன்

சிவயோகியர்களுக்கு, எல்லா உலகமும் ஆனாய் நீயே எனும் அப்பர் பெருமானின் ஞான வாக்கிற்கு ஏற்ப, சிவன் உலகத்தையே உருவமாகக் கொண்டுத் திகழ்கிறான் என்ற பேருண்மை தெரியவரும். தேவர்களாலும் அறியமுடியாத இன்பவுலகத்தை அனுபவிக்க இயலும். பரவெளியில் திருநடனம் புரிகின்ற சிவபெருமான் தனது திருவடியைச் சூட்டி யருள்வான். பின்பு பேரின்ப நிலையாகிய சிவமும் சக்தியும் பிரிப்பற்ற நிலையில உள்ள அருள்வெளியையும் அளிப்பான்.

அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருந்தாள்
அளித்தான் பேரின்பத் தருள் வெளிதானே (10:123)

சிவசித்தர் நிலை

சிவஞானம் பெற்ற சிவ சித்தர்கள் சிதாகாயப் பெருவெளியில் ஒளிமயமாய் ஒடுங்குவதை உணர்வர். இவர்கள் சிவலோகத்தில் பெறும் பேரின்பத்தை இங்கேயே சமாதி நிலையில் பெறுவர்.

சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்...... (10:125)

நாதத்தையும் (ஓசை), நாதத்தின் முடிவாகிய நாதாந்தத்தையும் (தூமாயை), தம்முள்ளே உணர்வர். அவர்கள் சிவத்துடன் கூடினமையால் பிறப்பு இறப்பு அற்று, தூய்மையான பேரின்பத்தில் உறைபவர். மலச் சார்பால் நிகழும் இருவினை மாசு இலாதவர். மனம் உள்பட 36 தத்துவங்களையும் பதமுத்திக்கு ஏறும் ஏணிப்படிகளாகும். அவ்வழியே திருவருளால் கடந்து, தனக்குத் தானே ஒப்பாய் நிகரில்லாமல் விளங்கும்

அறிவுப் பேரின்ப உள்ளொளியோடு உள்நுழைந்து சொல்லற்கரிய சிவனைக் கண்டு சிவ உணர்வாய் தெளிவுடன் திகழ்வர்.

இந்நிலையை,

செப்பரிய சிவங்கண்டு தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந்தாரே (10:126)

சிவயோகியும் ஆன்ம சுத்தியும்

சிவமாயிருந்த மெய்யடியார், அச்சிவனிறைவில் சமமாய் நிற்றலால் எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பர். அச்சிவன் செய்யும் அருளை அவனருளால் காண்பர். எல்லாம் சிவன் செயல் என்று உணர்ந்து அனைத்தையும் தரிசித்து இருப்பர். முக்காலங்களையும் உணர்ந்து இருப்பர்.

இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து...... (10:127)

சிவச் செயலாகச் சோம்பலற்று இருக்கும் யோகி, தூவெளியாகிய சிவ வெளியில் தங்கியிருப்பார். அச்சிவ வெளியில் பேரின்பத்தைத் துய்ப்பர். அவர் உணர்வு, மறைக்கும் எட்டாத சிவவெளியில் திருவடி உணர்வோடு கிடக்கும்.

சிவயோகியர் காணும் காட்சிகள்

தூங்காமல் தூங்கி யோக நித்திரையில் நிற்கும் மெய்யடியார்கள் தம்முள் சிவனை நினைத்தாலும், படைத்த உலகைத் தன் முனைப்பாக நினைத்தாலும், சிவலோகத்தைத் தம்முள் காண்பர்.

சிவத்தோடு கலந்த சிவயோகத்தையும் உணர்வர். அவர்கள் சிவபோகமாகிய பேரின்பத்தையும் தம்முள்ளே அனுபவிப்பர்.

தூங்கிக்கண்டார் சிவபோகமும் தம் உள்ளே (10:129)

ஐந்து அம்பலங்களிலும், அன்பர்கள் நெஞ்சத்திலும் சிவகாமி களிக்க திருநடனத்தைப் புரிகின்ற சிவபெருமான், சிவயோகியர் தியானிக்கின்ற முறைகளுக்கு ஏற்ப காட்சியளிக்கிறான்.

திருநடனப் பெருமை

சிவயோகியர், தம்முடைய சிரசின் மேலே சிவநடனத்தைக் கண்டு இன்புறுவர். சிவயோகியர் பிராசாத யோக நிலையில் சிரசில் மேல்

விளங்கும் செவ்வொளியில் (மாணிக்கம்) பரவலாகப் பின்னிக்கிடக்கும் பச்சை ஒளியில் (மரகதம்) மாற்றறியாத செழும் பசும்பொன்னால் செய்யப் பெற்ற ஞான சபையில் சிவன் ஆடுகின்ற ஆனந்தத் திருக்கூத்தினைக் கண்டு இன்புறுவர்.

சிவயோகியர் பெருமை

திருவடி உணர்வு நெறியே இறவாத இன்ப அன்பு நெறி ஆகும். இச் செந்நெறியில் நின்று சிவத்தொடு ஒன்றியவர்கள். இவ்வுலகினின்றும் பிரியாத பெருநெறியைப் பெற்றவராவர். இவர்கள் மீண்டும் பிறவா பெரும் பயனுடன் இறைவனது திருவடி விளங்கும் சித்சபையை விட்டு நீங்காத அரிய பேற்றினைப் பெற்றவராவர். இவர்கள் உலகத்தாருடன் அதிகம் பேசாத பெருமையையும் உடையவராவர்.

பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே (10:132)

இறைவனது பெருமையையும், அருமையையும், எளிமையையும் உணர்த்த இவர்கள் அடக்கத்துடன் இருப்பர்.

குருநாதர் உபதேசித்த உபதேசங்களை புரை குத்தாத பாலில் உள்ள நெய்போல திடமான மனத்தை உடையவரும் மௌன நிலையில் சிவ உணர்வோடு ஒன்றுதலையும் உடைய இச்சியோகியர் முடிவில் எல்லையற்ற திருவருட்சோதியில் கலந்து விடுவார்கள்.

இதனை,

உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழித்தால்
கரையற்ற சோதி கலந்த சத்தாமே (10:134)

எனும் திருமந்திரத் தொடர் மூலம் அறிய முடிகிறது.

சிவயோகியர் சிவத்தில் ஒடுங்கும் முறைமை

சித்துப்பொருள் சடப்பொருளுடன் ஒன்றாது. இறை சித்துப்பொருள். உயிரும் சித்துப்பொருள். அறிவித்தத் மட்டுமே அறியக்கூடிய சித்தாகிய உயிர், பேரறிவாகிய சிவத்தேடு சேர்வதுதான் இயற்கையின் நியதி.

சித்துக்கு சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ (10:135)

சிவம் பேரொளிப் பிழம்பு. உயிரும் ஒளிப்பொருள். ஒளியுடன் ஒளிசேரும். ஆகாயத்தில் உள்ள சூரிய ஒளியுடன் விளக்கொளி கலந்து நிற்பது போல சிவத்துள் சிவயோகியர் கலப்பர். அப்படி கலந்தாலும், சூரிய

ஒளியும் விளக்கொளியும் தனித்து நிற்பது போல் சிவயோகியர் சிவத்துடன் இருப்பர்.

சூரிய ஒளியின் பெருமையில், விளக்கொளி தனித்து பிரகாசமாகத் தோன்றாது அடங்கி நிற்பது போல் சிவ வியாபகத்துள் சிவயோகியர் வியாபகமாய் அடங்கி நிற்பர்.

உப்பின் உருவம் நீங்கி கடல் நீரில் அடங்குவது போலி, சிவயோகியரும் உருவம் நீங்கி (கரைந்து) சிவத்துள் அடங்குவர்.

திருவடிச் சிறப்பு

இறைவனடி திருவடியே எல்லாமாய் நின்று ஐந்தொழில் செய்கிறது. இறைவன் திருவருளால் முப்பொருள் உண்மையின் நெறிநின்று திருவைந்தெழுத்தை உணரும் தெளிவுணர்வுடையோர் - சிவமும் சிவயோகமும் செல்கதியும் அடைக்கலமும் திருவடியே என்று உணர்வர்.

ஞானகுருவால் தெளிவு பெறுதல்

குருவருளின்றி திருவருள் வாய்க்காது. ஞானத்திற்கு வழிகாட்டி சிவகுருவே. பெருமைமிகு ஞான குருவின் திருமேனியைத் தரிசிப்பதும், அவருடைய திருநாமத்தைச் சொல்வதும், அவருடைய அருளுரையைக் (உபதேசத்தை) கேட்பதும், அவருடைய திருவுருவைச் சிந்தித்து இன்புறுவதும் தெளிந்த ஞானத்தை நல்குவதாகும்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே (10:139)

குருவுருச் சிந்தையின் பயன்

திருவருளால் திருவடியுணர்வு கொண்டு உணர்வால் உணர்ந்து வரும் நிலையில், ஐந்து புலன்களும் வசமாகும். முன்பு பிறப்புக்கு மூலமாக ஆசையைத் தூண்டிய ஐம்புலன்கள், குருவுரு சிந்தையினால், ஐந்து புலன்களும் மடைமாறி, அருள்வழி இருந்து சிறப்புக்கு மூலமாக இறைவனது திருவடியில் சிவயோகி சிந்திப்பதும் சிவனின் திருமேனியையே. புகழ்வது அவனது திருநாமத்தையே. மனத்துள் நிலை நிற்பது சிவஞானமே.

சிவஞானம் பெற்ற சிவஞானியர், பரஞானத்தை அருளிய சிவபெருமானின் ஆனந்த தாண்டவ தரினத்தைக் கண்டு மகிழ்ந்து ஞானகோசமாகிய பெருவெளியை அடைவர்.

நிறைவுரை

நாமும் நம்முடைய வாழ்வை குரு உபதேசம் பெற்று புனிதமாக்கி, சிவ சிந்தனையுடன் பிறவாபெருநிலையை அடைவோமாக.

திருச்சிற்றம்பலம்

7. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை

பேராசிரியர். டாக்டர். அ. அறிவொளி
திருச்சிராப்பள்ளி

திருமந்திரத்தில் முதல் பகுதியில் (முதல் தந்திரம்) 1. யாக்கை நிலையாமை. இது 23 ஆம் பகுதியாக 26 பாடல்களைக் கொண்டது. உடம்பு அழியும் என்பது இதில் கூறப்படுகிறது. 2. செல்வம் நிலையாமை. இது 24 ஆம் பகுதியாக 9 பாடல்களைக் கொண்டுள்ளது. செல்வமும் அழியக்கூடியது என இதில் கூறப்படுகிறது. 3. இளமை நிலையாமை. இது 25 ஆம் பகுதியாக 9 பாடல்கள் கொண்டுள்ளன. இளமையாகிய பருவமும் அழியும் என்று கூறப்படுகிறது. 4. உயிர் நிலைபேறு. இது 26 ஆம் பகுதியாக 7 பாடல்கள் கொண்டுள்ளது. இதை உயிர் நிலையாமை என்று சிலர் கூறுவது தவறு. காரணம் உயிர் அழியாது. மேலும் இதற்கு முன்பு கூறிய மூன்றில் இக்கருத்தே வந்துள்ளதால் நிலையாமை கூறத் தேவையில்லை. பொதுவாக மூன்று நிலையாமை மட்டுமே கூறுவது வழக்கம். ஆகவே இது உயிர்நிலைபேறு என்பதே சரி.

சங்கக்காலத்துக் காதல் இலக்கியத்தில் கூட இந்த மூன்று நிலையாமைகள்தான் பேசப்படுகின்றன. உடல் நிலையற்றது, இளமை நிலையற்றது. ஆகவே மனைவியைப் பிரிந்து நிலையற்ற செல்வத்தைத் தேடிப் போகாதே என்று தோழி கூறுவதாகச் சங்கப்பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை இன்பத்தை அனுபவிப்பதற்காகச் சங்க இலக்கியம் நிலையாமையைக் கூறியது போல திருமூலர் யோகத்தைக் கற்று முடித்துவிடுங்கள் என்பதற்காக இந்த நிலையாமைகளைக் கூறுகிறார். இவைகளில் யாக்கை நிலையாமை என்பது பிற நிலையாமைப் பகுதிகளிலும் கூறப்படுகிறது. மற்றவையும் அப்படியே. ஆகையால் இவை தொகுக்கப்பட்டபோது திரிந்து பிறழ்ந்துள்ளன என அறியலாம்.

முன்பு செய்த வினைகளை அனுபவித்துக் கழிக்கவே உடம்பும் இளமையும், செல்வமும் நமக்குக் கொடுக்கப்பட்டன. அவைகளுக்கு ஒரு கால வரையறையும் அதனாலேயே வகுக்கப்பட்டன. வாழ்வின் இலக்கு இறைவனை அடைவதே. அதற்குரிய வழியில் யோக மார்க்கம் இந்த நூலில் கூறப்படுகிறது.

யோக நெறிக்குத் தடையாக இவை இருக்கக்கூடாது என்பதற்கு அவற்றின் நிலையாமையை விளக்கிப் பேசுகிறார் திருமூலர். உயிர் பிரிந்தபின் உடல் அழியும். அந்த உயிருடன் இரண்டு பொருள்கள் மட்டுமே உடன் வரும். ஒன்று விரதங்கள், அடுத்தது ஞானம். இவை இரண்டும் உயிர் இவ்வுலகில் இருக்கும்போது சேர்த்தவையாகும். ஆகவே யோகம் செய்வதால் இந்த இரண்டும் உயிருடன் கூடி வரும். ஆகவே யாக்கை நிலையாமையை திருமூலர் வலியுறுத்துகிறார்.

கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே -317

என்பதை அறிக.

நாம் உயிர் வாழும்போது நம்மோடு தொடர்பு கொண்ட பலரில் யாருமே நாம் இறந்த பின் தன் நினைவில் நம்மை வைத்திருப்பதில்லை. ஆகவே யாக்கை நிலையாமையை முழுதும் உணர்க என்கிறார்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரையம் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார் களே. -318

என்பது காண்க.

இந்த உடலுக்குள் கடவுள் உயிரைப் புகுத்தி அனுப்பியுள்ளார். அவர் அனுப்பிய காரணம் நிறைவேறாது உயிர் பிரிந்தால் மீண்டும் அதை நம் உடலிற்குள் புகுமாறு யாராலும் செய்ய முடியாது என்று கூறியே யாக்கை நிலையாமையை வற்புறுத்துகிறார்.

மேல்உள கூரையும் பிரியும் பிரிந்தபின்
போல்உயிர் மீளப் புகஅறி யாதே. -319

என்பது காண்க.

மேல் கூரை பிரியும் என்பது நம் தலைப்பகுதி பிளந்து உயிர் போவதை குறித்தது. உயிர் பிரிவது என்பது மிகச் சுருங்கிய நேரத்தில் நடக்கும். சமைத்த உணவைச் சாப்பிட்டார்-மனைவியுடன் இன்பம் கண்டார்-இடது பக்கம் மார்பில் சிறிது வலிப்பதாகக் கூறிக் கீழே படுத்தார், படுத்தபடியே உயிர் போய்விட்டது என்று மாரடைப்பால் மரணம் வந்ததைக் காட்டுகிறார்.

அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரோடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந் தாரே -321

இந்த உடலில் உயிர் சேர்ந்து வாழ்வதற்கு துணை செய்வன 96 தத்துவங்கள் ஆகும். இவை கடவுளால் தவிர வேறு ஒருவரால் கொடுக்க முடியாது. இப்படிக் கொடுத்தற்கு ஒரு சிறந்த காரணம் இருக்கவே வேண்டும். அது முழுதும் நிறைவேறுவதற்கு முன்பு இந்த உடல் அழிந்துவிட்டால் அந்த தொண்ணூற்றாறு தத்துவங்களும் நம்மை விட்டு ஓடிப்போகும். ஆகவே, அவை நமக்குள் இருக்கும்போதே யோகம் பயின்று வீடுபேறு பெற வேண்டும் என்கிறார்.

முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்பும் மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்பும் மதிலுடை கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தாரே. -327

செம்புமதில் எடுத்த கோயில் என்பது நம் பாதுகாப்பான உடம்பை என்று அறிக.

மண்குடம் உடைந்தால் உடைந்த பகுதியை ஓடு என்று பயன்படுத்த நினைத்துப் பாதுகாப்பதுண்டு. ஆனால் மனித உடல் உடைந்து போனால் சிறிது நேரம் கூட வைத்திருக்க மாட்டார்கள் என்று நிலையாமையை மிகவும் வலியுறுத்துகிறார்.

குடமுடைந் தால்அவை ஓடென வைப்பர்
உடல்உடைந் தால்இறைப் போதும் வையாரே - 331

சிவன் அல்லது திருமாலால் படைத்த இந்த உடலில் உயிர் இருக்கும் போதே அவர்கள் உருவைத் தொழுது வாழாமல் துன்பம் மிகுந்த ஏழாம் நரகில் குடல் வெந்து வாட கூப்பிடுவதா? என்று கூறுவது மூலம் முறைப்படி வாழாது இறந்தால் நரகமே தண்டனை என்று கூறினார்.

மடல்விரி கொன்றைமாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர்படர்ந்து ஏழாம் நரகில் கிடப்பர்
குடர்பட வெந்து அமர் கூப்பிடு மாறே -338

உடம்பில் உயிர் வாழும்போது மட்டுமே கடவுளும் உடம்பில் இருப்பான். உயிர் பிரிந்தால் அவனும் புறப்பட்டுப் போய்விடுவான் என்றும், அவனில்லாத வெறும் கூடான இந்த உடலைக் காக்கை உண்டால் என்ன? பார்த்தவர் பழித்தால்தான் என்ன? பால் தெளித்து கடன் செய்வதுதான் என்ன? பலரும் கூடி புகழ்ந்தால் என்ன? என்று பேசுகிறார்.

காக்கை கவரில்என் கண்டவர்பழிக்கில் என்
பால்துளி பெய்யில்என் பல்லோர்பழிச்சில் என்
தோல்பையினின்று தொழில்அற செய்து ஊட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக் கூட்டையே. -340

தோல் பையிலிருந்து அறுத்து என்பது கருப் பையிலிருந்து நீக்கி என்பதாம். ஊட்டும் -பலவித இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்யும் என்பதாம். கூத்தன்- ஐந்தொழில்களையும் கடமையாகச் செய்யும் சிவன் என்க.

தன் உடல் நிழலில் தானே ஒதுங்க முடியாதது போல, என் செல்வம் என்று இறுமாந்து இருப்பவர்களுக்கு அது கடைசி வரை பயன்தராது. அதனால் செல்வம் இருந்தும் அவர்கள் ஏழைகளே ஆவார். நாம் பிறந்தபோதே நம்மோடு செல்வம் பிறக்கவில்லை. ஆனால் கண்ணின் ஒளி நம்மொடு பிறந்தது. அது உயிர் போகும்போது போய்விடும். அது போவதற்கு முன் யோகம் முதலியன செய்து பயன்பெறுவீர் என்று கூறுகிறார். கண்ஒளி கடவுள் தந்த வரம் என்க.

தன்னது சாயை தனக்குஉத வாது கண்டு
என்னதுமா டென்றிருப்பர்கள் ஏழைகள்
உன்உயிர் போம்உடல் ஒக்கப்பிறந்தது
கண்ணது காண்ஒளி கண்டுகொள் ளீரே - 344.

இப்பாடலில் யாக்கை நிலையாமையையும் இணைத்துக் கூறியதைக் காண்க.

செல்வமும் அதன் பயனாய் வந்த யாவும் கடல் நீரில் கவிழும் கப்பல்போல் உள்ளன. தனித்தனியே கட்டவிழுந்து போகும் இந்த உடம்பிற்குள் வீடுபேறு பெறுவதற்காக ஒரு சிமிழ் போல ஒன்றைக் கடவுள் வைத்துள்ளான். இதை உணர்ந்தால் அவர்கள் மரணமடைந்து நரகம் போகத் தேவையில்லை. சிறிய சிமிழ் போல யோக ஆதாரங்கள் உள்ளன. இதில் மூலதாரம், மணிபூரகம், அநாகதம், ஆக்ஞை என்பன மிகவும் சிறந்தன. அச்சிமிழ்கள் என்றும் கவிழாதன. அவற்றை அறியுமாறு கூறுகிறார்.

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர்வீடு பேறாகவும்
சிமிழ்ஒன்று வைத்தமை தேர்ந் தறியாரே - 347

எவ்வளவோ காலங்கள் வாழ்ந்தபோதும் நம் உடலில் இருக்கும் கடவுளை யாரும் புகுந்து ஆய்ந்து அறிவதில்லை. நமக்குள் சுடர்விளக்காக அக்கடவுள் ஒளிர்ந்தாலும் யாரும் அது கடவுள் எனக் காண்பதில்லை. ஆகவே இளமை கழிவதற்குள் அதைக் காண்பது நலம் என்றார்.

தூண்டு விளக்கின் சுடர் அறியாரே -352

நம் இளமை கழியும்போது நம் சக்திகள் அழிகின்றன. நம் உணர்வுகளும் தளர்கின்றன. ஆகவே இளமையும், உணர்வும் இருக்கும்போதே கடவுள் இருப்பை ஓர்ந்து அதை அடையுங்கள் என்கிறார்.

ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உணர்வு உள்ளபோதே -353

இந்த உடலில் பருஉடம்பையும், நுண்ணுடம்பையும் இணைப்பன இடா பிங்களா என்னும் இரண்டு நாடிகள். இவை மூச்சில் உணரப்படும். வீடுபேறு பெறுவோர்க்கும், வினைசெய்து உலகில் வாழ்வோர்க்கும் இந்த இரு நாடிகளும் முப்பத்தாறு தத்துவங்களில் சிவதத்துவம் ஐந்தும் புருடன் என்பதும் நீங்க எஞ்சிய முப்பதனோடும் இவை சேர்ந்தே தொடர்புடையன என்பதாம்.

மூச்சின் நிறம் கறுப்பு. ஆகையால் இடைநாடி கரியநிறமுள்ள கண்ணன் எனப்பட்டது. பிங்களா நாடி சூரியநாடி ஆகையால் கதிரவன் எனப்பட்டது. விண்ணுறுவர் என்பதால் நுண்ணுடம்பையும், வினைசெய்வார் என்பதால் பருவுடம்பும் அறிக. உடலை இங்கு உலகு என்று உருவகித்து கூறியதையும் பாடலால் அறிக.

கண்ணனும் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண்ணுறுவாரையும் வினையுறுவாரையும்
எண்ணுறு முப்பதின் ஈர்ந்து ஒழிந் தாரே - 358

வீடுபேறு பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதேயே உயிர்நிலைப் பேறு என்று கொள்கிறார். ஐந்து பேர்களிடம் ஒரு செய் அளவு நிலம் கொடுத்துக் காத்துவரச் செய்தார். அவர்கள் ஐவரும் அப்படியே அந்த நிலத்தைக் காத்து வந்தனர். நாயகனாகிய (முதலாளி) கடவுள் அந்த

ஐவரையும் காவல் நீங்கிப் போகுமாறு கட்டளையிட்டார். அவர் ஓலை வந்ததும் நிலத்தை அந்த ஐவர்களும் விட்டு விலகினர். ஐவர் என்பது ஐந்து ஐந்தாக எண்ணப்படும் பலவித தத்துவங்களாம். செய் என்பது ஓரளவுடைய நிலம். இங்கு உடலைக் குறித்தது.

ஐவர்க்கு ஒரு செய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல் விட் டாரே. - 362

இதுவும் வீடுபேறு குறித்ததால் இப்பகுதி உயிர்நிலைப்பேறு என்பதும் அறிக. பல பதிப்புக்களில் 'அவ்வியம் பேசி' எனும் பாடல் இத்தலைப்பில் உள்ளது. உயிர் நிலை பெற்று வீடுபேறு பெறுவதற்கான விதிகளை அப்பாடலில் கூறுகின்றார்.

பொறாமை பேசி அறத்துக்கு மாறாக நிற்காதீர்கள். கொடியவனாகிப் பிறர் பொருளைக் களவாடாதீர்கள். நல்ல மனமுடையவராகி நீங்கள் உணவு உண்ணும் போது இருப்பது குறைவாக இருந்தாலும் எதிரில் யார் வந்தாலும் அதில் ஒரு பகுதியை அவருக்குக் கொடுத்து உண்ணுங்கள்.

அவ்வியம் பேசி அறங் கெட நில்லன்மின்
வெவ்வியனாகி பிறர்பொருள் வெவ்வன்மின்
செவ்வியனாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொடு உண்மின் தலைப்பட்ட போதே - 410

அறம் செய்தல், பொறாமை நீங்கல், களவு செய்யாமை முதலியன நம் யோக வாழ்வுக்குப் பயன் தருவானவாகும். பொறாமை என்ற குணம் ஒன்றே எல்லா அறத்தையும் கெடுக்கும். எனவே நல்வழியில் நடப்பதே யோகம் பயில்வதற்குத் தேவையான அடிப்படை என்று கூறுகிறார்.

கடவுள் நம் பாவங்கள் நீங்கவே உடலையும், உலகம் முதலானவற்றையும் படைத்திருப்பதை உணர்ந்து இந்த அறச் செயல்களை இடைவிடாது செய்து வந்தாலும் நியதிகள் கடைப்பிடித்தாலும் ஒரே பயன் என்றார். காலை எழுதல், குளித்தல், மதிய உணவு, மாலை எளிதாக உண்ணல் முதலியன யோகிகள் கடைப் பிடிக்க தக்கனவாகத் தரப்பட்டன என்க.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

8. கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயத்தல்

புலவர். மா. நாகூர் எம்.ஏ. எம்.எட்.,
தலைமை ஆசிரியர், (ஓய்வு), புதுக்கோட்டை

*செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.*

என்பது வள்ளுவப் பெருந்தகையின் அமுத வாக்கு. செய்யத் தகுதியற்றவற்றைச் செய்தாலும், செய்யத் தகுந்தவற்றைச் செய்யாமலிருந்தாலும் கேடு பயக்கும் என்பது இக்குறட்பாவின் பொருள்.

செய்யத் தகாதன எனத் திருமூலர் அறஞ்செய்யாதிருத்தல், கள்ளருந்துதல், கொல்லுதல், பிறன்மனை நயத்தல், புலால் உண்ணுதல் முதலான பலவற்றைப் பட்டியலிடுவார். அவற்றில் கொலையை மறுக்கும் கொல்லாமையையும், புலால் உண்ணுதலை மறுக்கும் புலால் உண்ணாமையையும், பிறன் மனை நயத்தலை மறுக்கும் பிறன் மனை நயவாமையையும் இக்கட்டுரையில் காண்போம்.

நந்தி அருளால் நற்றமிழில் திருமூலர் திருவாய் மலர்ந்தருளியது திருமந்திரம். சித்தாந்தச் சைவர்கள் தங்களின் உயிரினும் மேலாகப் போற்றி மதிக்கும் சாத்திரம் பதினான்கு மற்றும் தோத்திரம் பன்னிரண்டில் மந்திரம் எனப் போற்றப்படுவது- சுட்டப்படுவது திருமந்திரம் ஒன்றேயாகும்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவோம். அத்தந்திரங்களில் முதலாம் தந்திரம் காரண ஆகமம் எனப்படும். இதில் ஆறாவது அதிகாரம் கொல்லாமை. ஏழாம் அதிகாரம் புலால் மறுத்தல், எட்டாம் அதிகாரம் பிறன்மனை நயவாமை ஆகும்.

திருமூலர் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை என முறைப்படுத்தத் திருவள்ளுவர் பிறன்மனை நயவாமை (பிறனில் விழையாமை) புலால் மறுத்தல் கொல்லாமை என முறை வைப்பார். பிறன் மனை நயவாமையைப் பிறனில் விழையாமை என இல்லறத்திலும், புலால் மறுத்தல் மற்றும் கொல்லாமையைத் துறவறத்திலும் வைப்பார். திருமூலர் இல்லறம், துறவறம் எனப் பிரிக்காமல் அறம் அனைவருக்கும் பொதுவெனக் கருதினாரோ என்னவோ ஒன்றாகவே கூறுவார். திருவள்ளுவர் கூறும் துறவறத்தைப் பரிமேலழகர் விரதம் ஞானம் என்றும் பிரிப்பார்.

கொல்லாமை

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேரும் அவருக்கே

என்பது உழவாரப் பணியால் உலகத்தார் போற்றும் அப்பரடிகளின் அருள் வாக்கு. எட்டு நாண்மலர்கள் என்பன புன்னை, வெள்ளெருக்கு, செண்பகம், நந்தியாவர்த்தம், நீலோத்பவம்(குவளை), பாதிரி, அலரி, செந்தாமரை முதலியனவாம். இவை புறமலர்கள். இவற்றுக்கெல்லாம் மேலான அகமலர்கள் எட்டு உள்ளன. அவையாவன கொல்லாமை, அருள், புலனடக்கம், பொறை, தவம், வாய்மை, அறிவு, அன்பு என்பனவாம்.

மேலே குறித்த அகமலர்கள் எட்டினையும் கொல்லாமையை ஆதியாகவும், புலனடக்கம், அருள், பொறுமை, தவம், வாய்மை ஆகியவற்றை நடுவாகவும், அன்பை ஈறாகவும் வைத்து விளக்குவார் சன்மார்க்கி குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்கள்.

கொல்லாமையை எண்ணும் போது அதன் தொடர்பான புலால் புசிப்பை மட்டும் எண்ணக் கூடாது. மனத்தாலும், மொழியாலும், செயலாலும் கொல்லாமையைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவேதான் திருமூலர் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை எனக் கூறுகிறார். கொல்லாமை என்றால் ஓர் உயிரை உடம்பினின்றும் பிரிக்காமை என்பதாம். இப்பொருளால் நம் முன்னோர்கள் உடல் வேறு உயிர் வேறு எனப்பிரித்து அறிந்த பெற்றிமை புலனாகின்றது.

இறைவனைப் போற்றி வழிபட பூக்கள் தேவை. புறப்பூக்களை விட அகப்பூக்களே வழிபாட்டிற்கு உகந்தவை. அகப்பூக்களில் முதன்மையாகக் கருதப்படுவது கொல்லாமை ஆகும். அதனாலேயே திருமூலர் கொல்லாமை அதிகாரத்தைத் தொடங்கும்போதே இறை வழிபாட்டிற்குக் கொல்லாமை எனும் அகப்பூவையே முன்னெடுத்துச் சொல்கிறார்.

பற்றுக் கோடாக விளங்கும் குருவிற்கு எடுக்கும் மலர்களில் கொல்லாமையே சிறப்பானதாகும். கண்மலரின் ஒளியே நல்ல மாலையாகும். நடுக்கற்ற மனமே சிறந்த விளக்காகும். இவையனைத்தும் கொண்டு பூசிக்கும் உயிர் விளங்குமிடம் சிரசின் உச்சியாகும். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் சிவகுரு வழிபாட்டிற்குச் சிறந்த மலர்-

அகமலர்- கொல்லாமையேயாகும். அகப்பூசை செய்வதற்கு வேறு பொருள்கள் தேவையில்லை என்பதும் நாம் அறிந்து கொள்ளத் தக்க செய்தியாகும்.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே -197

எனத் திருமூலர் கூறுவார். நிற்க.

கொல், குத்து என்று சொல்லும் விலங்குகளை ஒத்த கீழ்மக்களைக் காலனுடைய ஏவலர்கள் வலிமையான கயிற்றால் கட்டி, போ, நில் என்று அதட்டி மிரட்டி அனலை உமிழ்கின்ற கொடிய நரகத்தில் நிற்கும்படிச் செய்வார்கள் என்று கொலை செய்வார் பெறும் தண்டனையையும் திருமூலர் கூறுவார்.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே - 198

இவையெல்லாவற்றையும் ஒன்றாய்க் கூட்டி வள்ளுவப் பெருந்தகை

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி குறள், 324

எனக் கொல்லாமையை வலியுறுத்துவார்.

புலால் மறுத்தல்

இவ்வதிகாரத்தின் வைப்பு முறை பற்றிப் பரிமேழலகர் திருக்குறளுக்கு விளக்கம் கூறும்போது காரண காரிய வகையால் அருளுடையார் ஊன் உண்ணார். அருளில்லாதவரே கொன்று தின்பர். ஆதலால் அருளுடைமையின் பயன் புலால் மறுத்தல் என்பதனால் அருளுடைமையின் பின் வைக்கப்பட்டது என்பார்.

அருளுடையார் புலால் உண்ணார் என்பதனால் அருளில்லார் புலால் உண்பர் எனப் பெறப்படும். புலால் உண்போர் எல்லாம் புலையர் என்பதால் புலையர் என்பது ஒரு சாதியன்று. அதனால்தான் திருநாவுக்கரசர்

ஆவுரித்துத்தின்றுழலும் புலையர் என்றார். இதனாலேயே திருமூலர் புலாலைக் குறிப்பிடும்போது பொல்லாப் புலால் என்பார்.

கொடுமையான புலாலை உண்ணும் புலையரை எமதூதர்கள் யாவரும் காணும்படி கறையானைப் போல அரித்து எடுத்துப் பின் அனல் கங்குகள் பரந்து கிடக்கும் தீய நரகத்தில் மல்லாக்கப் படுக்க வைப்பர் என்று புலால் உண்போர் பெறும் தண்டனையைக் கூறி அப்புலாலை மறுப்பார் பெறும் உன்னத நிலையினையும் அழகாகக் கூறுவார்.

கொலை, களவு, கள், காமம், பொய் போன்ற ஐம்பெருங் குற்றங்களை நீக்கிச் சிவனின் திருவடிகளைச் சிரசில் சூட்டி இன்பம் அடைவதோடு அதனால் வரும் துன்பங்கள் சாராததினால் அவர்கள் பேரின்பத்தில் திளைத்து மகிழ்ந்திருப்பர் என்றும் கூறிப்போற்றுவர்.

புலால் உண்போர் பெறும் தண்டனை

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப் பாரே - 199

புலாலை மறுத்தோர் பெறும் சிறப்பு

கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம்அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே -200

புலால் உண்பதால் வரும் இழிவினையும், மறுப்பதால் வரும் உயர்வினையும் திருமூலர் இவ்வாறு கூற

அருளல்ல தியாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் -குறள், 254

என்றும்

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு -குறள், 255

என்றும் வள்ளுவர் கூறுவார்.

பிறன்மனை நயத்தல்

காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. வள்ளுவர் ஒழுக்கமுடைமைக்குப் பின் இதனைக் கூறுவார். காம மயக்கம் என வள்ளுவர் கூறிட, திருமூலர் அறியாமை, சிந்தனை அற்ற தன்மை, மன அடக்கமின்மை என மூன்று காரணங்களைக் கூறுவார். வீட்டிலிருக்கும் பலாக்கனியை விட்டுவிட்டு காட்டிலிருக்கும் ஈச்சம் பழத்திற்காக அலைதலையும், மாங்கனியிருக்கப் புளியம்பழத்தை விரும்புதலையும் சிற்றறிவைப் பெரிதென்று எண்ணுதலையும் கூறி விளக்குவது சிறப்பாகும்.

அன்புடைய மனைவி வீட்டிலிருக்கும்போது மாற்றானுடைய காவலிலுள்ள அவனுடைய மனைவியை விரும்பும் காமுகர், வீட்டில் காய்த்துப் பழுத்துள்ள பலாக்கனியை உண்ணாமல் காட்டிலுள்ள ஈச்சம் பழத்தைப் பெறத் துன்பப்படுவதைப் போன்ற அறியாமையாகும் என விளக்குவார்.

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே -201.

அருமையாகப் பாதுகாப்புடன் வீட்டில் வளர்த்திட்ட மாமரத்தின் பழுத்த மாங்கனியைச் சேமித்த பொருள்களைப் போல வீட்டில் அறையில் வைத்துவிட்டு, தகுதியில்லாத புளியம் பழத்துக்காகப் புளிய மரத்தினைக் கிளையில் ஏறிப் பறிக்க விரும்பும் சிந்தனையற்றோர் போன்று உயிர்ச் சத்தியற்று வருந்துகிறாரே என்பர்.

திருத்தி வளர்த்தோர் தேமாங் கனியை
அருத்தமென்று எண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இல்லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்து அறியாதவர் காலற்ற வாறே. - 202

மேலும்,

பொருளுடையோரும், அறிவற்றுச் சிற்றொளியைப் பேரொளியாக மதிப்போரும், மருண்ட பார்வையை உடைய பெண்களிடம் மயக்கம் கொண்டு, மயங்கிய மனத்தை மாற்ற முடியாதவர்களாகி விடுவார்கள் என்பார்.

பொருள்கொண்ட கண்டனும் போதகை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்டு மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே. - 203

இதனாற்றான் வள்ளுவர் ஆண்மையில் சிறந்தது பேராண்மை என்றும், பிறன் மனையை நோக்காத ஆண்மையே பேராண்மை என்றும் கூறுவார்.

பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனன்றோ ஆன்ற ஒழுக்கு குறள், 148

திருமந்திரம் மற்றும் திருக்குறளைப் போற்றும் வடலூர் வள்ளலார் அவர்கள்

ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ
(-மனுமுறை கண்ட வாசகம்)

என்று கலங்குவார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட கொலையினைக் கனவிலும் கருதாது, புலாலைப் போற்றாது, பிறன் மனை நயவாது செய்யத் தக்கவற்றைச் செய்து செய்யத் தகாவற்றை நீக்கிக் குருவருளையும் திருவருளையும் பெறுவோமாக.

மானுடம் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

9. மகளிர் இழிவு, நல்குரவு

கவிஞர். **வீ.கே. கஸ்தூரிநாதன்** *எம்.ஏ.பி.எட்.*
குழிபிறை

முன்னுரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று இயம்பிய நற்றமிழ் முனிவர் நம் திருமூலர். "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ், மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம். மூலன் உரை செய்த முப்பது உபதேசம் மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே". என்ற பழம்பாடல் ஒன்றின் மூலம் திருமூலர் எழுதிய திருமந்திரத்தின் சாரத்தையும், ஈரத்தையும், காரத்தையும் அறியலாம். அவர் எங்கு பிறந்தார்? எப்படி வாழ்ந்தார் என்பது எல்லாம் சர்ச்சைக்கு உரியவைகளாக இருக்கலாம். தெள்ளிய தமிழில் அவர் வடித்துத் தந்த தீந்தமிழ்ப் பாடல்களும், அவை தரும் கருத்துக்களும் காலத்தை வென்று, காலா காலத்துக்கும் நின்று மனித வாழ்வுக்கு மகத்தான வழிகாட்டும் கருவூலங்கள் ஆகும். அவர் வழங்கிய அமுத மந்திரங்களில் முதல் தந்திரத்தில் உள்ள மகளிர் இழிவும், நல்குரவும் உண்மையை உரைக்கும் உயர்ந்த பொருளைத் தருகின்றன. அவற்றில் புதைந்து கிடக்கும் புதுமை நிறைந்த புனிதக் கருத்தாக விளங்குகின்றன. அவற்றைப் பற்றி இக்கட்டுரையின் கண் சிறிதே காண்போம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல!

தன்னை விற்றுப் பொன்னைக் குவிக்கும் வரைவின் மகளிரின் வஞ்சனையைப் பற்றியும் அதில் வாலிபர்கள் வீழ்ந்து விடாது இருக்க வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும் பொய்யில் புலவன் பத்துக் குறள் பாக்களில் பாங்குறப் பேசுகின்றார். பொதுமகளிருடன் கொள்ளும் உறவு பிணத்துடன் கொள்ளும் உறவுக்கு ஒப்பாகும் என்று அவர் செப்புகிறார்.

> "பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதில் பிணந்தழீஇ யற்று".

என்ற குறள் பாவால் அவர் கூறுவதை உணரலாம். மாதர் ஆசையில் மயங்குபவர் செல்வம் இழந்து சிறப்பும் இழப்பர். பொருள் நீங்கியதும் பொது மகளிரும் நீங்குவர் என்பதை "இயலுறும் வாழ்க்கை இளம்பிடி

மாதர் புயல்உறும் புல்லின் புணர்ந்தவரே யினும் மயல்உறும் வானவர் சாரஇரும் என்பார். அயல்உறப் பேசி அகன்று ஒழிந்தாரே " என்ற பாடல் மூலம் திருமூலர் விளக்குகிறார். "ஆளைக்கண்டு ஏமாறாதே! ஊது காமாலையாக இருக்கும்" என்ற சொற்றொடர் நாட்டுப் புறங்களில் வழங்கப்படும் பழமொழி. சாதாரண மக்களுக்கே இது சாலப் பொருந்தும் எனில் பொது மகளிர்க்கு இத்தொடர் மேலும் பொருந்துவதாக உள்ளதன்றோ? பொது மகளிர் ஒப்பனைகள் மூலம் இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி ஆடவரை மயக்குவர் என்பதையும் நயம்பட நவில்கின்றார். மன்னவரும், விண்ணவரும் மதிகெட்டு அழியக் காரணம் கன்னியரே என்பர் சித்தர்கள்.

"அன்னையின் அன்பை விட்டு
கன்னியின் பார்வை பட்டு
புண்ணினை அடையு முன்னே
புனிதனைக் காண வேண்டும்"

என்று தற்காலக் கவிஞர் பாடிய வரிகள் இங்கே நோக்கத்தக்கது. பொதுவாக மகளிரிடம் மையல் கொண்டவர்கள் மதிநலம் கெட்டு, புகழ்பொருள் விட்டுத் துன்புறுவர் என்பது திருமூலரின் திருவாக்கு. ஒப்பனையால் காளையரை அழைக்கும் இயல்புடையவர் பொது மகளிர். அப்படிப்பட்டவர்களின் செயற்கை அழகை உண்மை என்று நம்பி உடன் சென்று உறுதுயர் படக் கூடாது. மனதை அடக்கும் வலிமை அற்ற ஆடவரே இப்படிப்பட்ட மகளிரிடம் மயங்கி ஒழுக்கம் கெட்டு உயர்வு குலைகின்றனர் என்ற கருத்தை வள்ளுவப் பெருந்தகை

*"நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்"*

என்ற குறட்பா மூலம் சுட்டுகிறார்.

ஆசை கொண்டவர் அழிவர்!

காலத்தை வெல்லும் கருத்துக்களைச் சொல்ல வந்த மூலரும் இக்கருத்தை வழிமொழிகிறார். பொது மகளிரின் அன்பு பொல்லா அன்பு! இல்லா அன்பு! நிலைத்து நில்லா அன்பு! ஆகவே அவரைக் கண்டு அலமறுதல் நன்றன்று என்கிறார்..

*"இலைநல வாயினும் எட்டிப் பழுத்தால்
குலைநலமாம் கனிகொண்டு உணலாக*

முலைநலம் கொண்ட முறுவல் செய்வார்மேல்
விலகுறும் நெஞ்சினை வெய்து கொள்வீரே"

என்ற வரிகள் மூலம் நமக்கு விளக்குகிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்

பிறிதோர் இடத்தில் பேசும் திருமூலர் மங்கையர் மீது ஆசை கொண்டால் என்ன என்பதையும் நயம்பட நவில்கின்றார்.

கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்
ஆழ நடுவர் அளப்பு உறுவார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்து அவர் போகின்ற வாறே

என்ற திருமூலரின் பாடல் வரிகள் பொதுவாக நோக்குமிடத்து மங்கையர் உறவே மாய உறவு என்று சொல்வது போல் தோன்றும். நன்னெறி விட்டுப் புன்னெறி தொட்டு வாழும் பொது மகளிரைப் புல்லுவோர் அடையும் தீமையை மட்டும் திருமூலர் சுட்டுவதாகவே கொள்ள வேண்டும். ஏன்எனில் முக்காலமும் உணர்ந்த முனிவராகிய திருமூலர் உலகம் இயங்க ஆண்-பெண் சேர்க்கை அவசியம் என்பதை அறியாதவர் அல்லர்! தறிகெட்டு அலையும் நெறிகெட்ட, முறையற்ற பொது மகளிருடன் கொள்ளும் காம உறவு கூடாது என்பதையே அவர் தம் கொள்கை என்பதை நன்குணரலாம்.

நல்குரவு என்னும் நஞ்சு

காமத்தாலும், கவறாடலாலும் செல்வத்தைச் செலவழிப்பவர் இல்லத்தைத் தேடி நல்குரவு என்னும் நச்சுப் பாம்பு மெல்ல ஊர்ந்து வரும். கல்லாதவரைக்கூட கணக்கில் சேர்த்துக் கொள்ளும் இவ்வுலகம் இல்லாதாரை ஏறெடுத்தும் பாரார் என்பதை,

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்ற தாய்வேண்டாள்
செல்லா தவன்வாய்ச் சொல்

என்ற பழம்பாடல் பகரும். வறுமையின் கொடுமையினை விளக்கப் புகுந்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் வறுமையைப் போல் கொடியது எது என்றால் வறுமைதான் என்று கூறி வியப்பூட்டுகிறார்.

இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது

என்ற குறட்பாவால் இதை அறியலாம். வறுமையால் வரும் வாட்டம் பற்றி திருமூலர் தெளிவாகவே கூறுகிறார்.

புடவை கிழிந்தது; போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்புஇலர் ஆனார்
கொடை இல்லை, கோள் இல்லை கொண்டாட்டம் இல்லை
நடைஇல்லை நாட்டில் இயங்கு கின்றார்கட்கே!

என்ற அவரது பாடல் மூலம் வறுமை வந்துற்றால் வாழ்வில் என்ன நடக்கும் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதை அறியலாம்.

நல்லிசை அகற்றும் நல்குரவு

'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று பாடினார் தமிழ் மூதாட்டி ஔவை. கொடிய வறுமை குடும்பத்தில் புகுந்து விட்டால் மானம் அழிக்கும், மற்றவர் வாயில்முன் நிறுத்தும். வறுமையும் புலமையும் சேர்ந்தே இருக்கும் சிறப்புடையது. சத்திமுத்துப் புலவர் என்று தமிழ்க் கவிஞர் ஒருவர் இருந்தார். அவர் தமது *நாரை விடு தூது* என்ற நற்றமிழ்ப் பாட்டில் புலவரின் வறுமையை நெஞ்சம் நெகிழப் பாடுகிறார்.

நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே

என்ற அவரது வரிகளைப் படிக்கும்போது வறுமையின் கொடுமையை எண்ணிக் கல்நெஞ்சமும் கரைந்துருகும். வயிற்றுப் பசியைப் போக்கா விட்டால் வையகம் இல்லை என்று கூறுகிறார் திருமூலர். ஒரு நாள் சாப்பிடாமல் இரு என்றால் வயிறு கேட்காது. இரு நாள்

உணவை ஏற்பாய் என்று திணித்தால் வயிறு ஏற்காது. அப்படிப்பட்ட வயிற்றுக்கு உணவளிப்பாரே நல்குரவு நாடாமல் தடுக்கும் வழியாகும் என்பதைத் திருமூலர்,

கற்குழி தூரக் கனகமும் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே

என்று பாடுகிறார். நல்குரவு ஒருவரின் பெருமையினை அழித்துப் பிடரியைப் பிடித்துப் படுகுழியில் தள்ளும்.

நல்குரவு நீக்கும் நல்வழி

வறுமையிலும் செம்மையுடன் வாழ்வது என்பது எல்லோர்க்கும் எளிதல்ல, நெருப்பில் கூட தூங்க முடியும். ஆனால் வறுமையுடன் வாழ முடியாது என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாது ஒன்றும் கண்பாடு அரிது

என்ற குறட்பாவின் மூலம் இதை உணரலாம். நல்குரவு என்ற நரகத்தை வெல்ல முடியாது என்று வள்ளுவர் கூறுகிறார். ஆனால் திருமூலர் நல்குரவை வெல்ல முடியும் என்று சொல்வதுடன் உரிய வழியும் காட்டுகிறார். ஆன்மீகத்தால் மட்டுமே வறுமையை ஒழித்து அகற்ற முடியும் என்பது அவர்தம் கூற்றாகும். நடைமுறைக்கு இது ஒத்து வருமா என்ற ஐயம் எழலாம். வறுமையில் வாடும்போது இறைவனை நினைக்க முடியுமா என்ற வினா எழுவது இயல்பே.

ஒறுத்தன வல்வினை ஒன்று அல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டி நின்றானே

என்ற வரிகளுக்கு வறுமையைப் போக்க ஆன்மீக உணர்வோடு அடுத்தவர் பசியைப் போக்க வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

திருமூலர் பிறிதோர் இடத்தில் பாடுவதை நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

முடிவுரை

திருமூலரின் பாடல்கள் பழுத்த பலாக்கனி போன்றவை. மேலோட்டமாகப் பார்த்தால், படித்தால் புரியாது. கீறிச்சுளை எடுத்தால் கிட்டாத புதிய பொருள் கிட்டும். எட்டாத ஞானம் எட்டும். வாழ்வாங்கு வாழும் வாழும் வழிகள் பல திருமூலரின் திருமந்திரத்தில் பொதிந்துள்ளன! அவற்றை நுணுகி ஆய்ந்து பின்பற்றுவோம்! பிறவிப் பயன் பெறுவோமாக!

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

10. அக்னி காரியம், அந்தணர் ஒழுக்கம்

பொற்கிழிக் கவிஞர். **கா. நாகப்பன்**
காரைக்குடி

முன்னுரை

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான், சொல்லவும் அரிதான பெருமையுடைய அடியார்களுள் ஒருவராகத் திருமூலரைத் திகழ வைக்கிறார். அவர் அருளிச் செய்த திருமந்திரம் ஆன்மீகம் தழைக்கத் தோன்றிய ஒப்பற்ற நூலாகும். சைவத் திருமுறைகளுள் பத்தாவது இடத்தைப் பிடித்த இந்நூல் மனச்செம்மையை வளர்க்கும் மாபெரும் நூலாகும்.

சுவரை வைத்துச் சித்திரம் போல உடம்பினுள் உறையும் உயிரிருக்கும் போதே பரம்பொருள் அறிவைப் பாங்குறப் பெறவும், வாழ்வியல் குறிக்கோளாகக் கொள்ளவும் வலியுறுத்துகிறது இந்நூல். இந்நூலில் முதலாம் தந்திரத்தில் *அறம்* முழுமையாக வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

நிலையாமைத் தன்மையை வலியுறுத்தும் முதலாம் தந்திரத்தில், *அக்னி காரியமும் அந்தணர் ஒழுக்கமும்* என்னுந்தலைப்பில், அடியேன் சில கருத்துக்களை சிந்தித்து இக்கட்டுரையில் எழுதியுள்ளேன்.

அந்தணர் என்போர் அறவோர் என்னும் திருவள்ளுவப் பெருந்தகையின் சொல்லுக்கு எத்துணை வலிமை பாருங்கள்! எவ்வுயிரும் தம்முயிர்போல் கருதும் அந்தணர்களைக் கொண்டு வேள்வி செய்தால், விண்ணவரும் வளம் பெருகி நலம் பெறுவர். அசைவிலா அந்தணர் என்னும் அடைமொழி, திருமூலர் தந்துள்ள ஒப்பற்ற சொல். மறையோதும் தன்மையில் அசைவிலாது இருப்பவர் என்றும் வாழ்க்கையில் எந்நிலை வந்தாலும் அசைவிலாத- வழுவிலாத நெறியுடைய அந்தணர் என்றும் அச்சொல் பொருள் மேவி நிற்கிறது.

உத்தமமான விண்ணில் உறைபவர், மண்ணில் உறைபவர், சகல திக்குகளில் பொலிபவர், அட்டதிக்கு பாலகர் இவர்களெல்லாம் நான்மறையைப் பிரதானமாகப் பாவித்து உத்தம அந்தணர்களை வைத்து வேள்வி புரிவார்கள் எனில் சுபிட்சம் அடைவார்கள் எனத் திருமூலரின் தந்திரச் செய்யுள் கூறுவதன் சிறப்பு, உத்தம அந்தணர் செய்யும் வேள்வியால் விண்ணவரும், மண்ணவரும் ஜெயம் பெறுவதுடன்,

வான்மழை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதும் அச்செய்யுளில் தொனிக்கிறது. செய்யுள் இதோ,

வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே -214

ஆகுதியால் வரும் புகைதான் நோய், நொடியைத் தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தது என நம் முன்னோர் கண்டனர். அதனையே இன்றும் என்றும் ஆன்மீகத்தால் விரும்புவர் என்பதும் உண்மை. வான்மழை ஏற்படவும் அக்னி காரியம் நற்சான்றோர்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதனை வள்ளுவப் பெருந்தகையும் திருக்குறளில் காட்டியுள்ளார். வான்மழைக்கு அடிப்படையாகத் துலங்குவது அந்தணர் வேள்வி; அதனாலன்றோ. நம் திருமூலச் சித்தர் திருமந்திரத்தின் மூலம் சித்திரித்துக் காட்டுகிறார்.

வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்து வாழ்கின்ற தன்மையில், அந்தணர் தம் அகத்தாள் எனப்படும் மனைவியுடன் கூடிக் கலக்கும் இன்பத்தால் பெறுவதே உத்தமமான மார்க்கம் என்பர் திருமூலர். இல்லறம் அல்லது நல்லறமன்று என்பார் ஔவைப் பிராட்டி. அக்னி காரியமாக புறத்தே நிகழும் நிகழ்வுகளில் ஈடுபடும் வேதியர் தாம் செய்ய வேண்டிய அக்னியின் தத்துவார்த்த உட்பொருளை உணர்ந்து தத்தம் இல்லாளுடன் இணைந்து, அவற்றுள் விளங்கும் மெய்ப்பொருளைத் தெளிந்து சிவசக்தியின் ஒடுக்கத்தைச் சிந்தித்து முன் இரவு வேளைகளில் இந்தக் காரியங்களை மேற்கொள்வர். இல்லாளுடன் ஒன்றிப் பண்ணுவதால் சந்திர பிம்பம் தேகத்தில் துலங்குவதற்குரிய உத்தம வழியாகும் என இச்செய்யுள் உணர்த்துகிறது.

அணை துணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணை துணை வைத்ததின் உட்பொருளான
இணை துணை யாமத் தியங்கும் பொழுது
துணை யணை யாயதோர் தூய்நெறியாமே -216

இச்செய்யுளில் அங்கி என்ற சொல்லினை அற்புதமாகத் திருமூலர் சித்திரித்துள்ளார். அங்கியுள் அங்கி என்னும் தொடர் ஆழமான கருத்தினை அள்ளித் தருகிறது. கலவியின்பத்தில் கடவுள் இன்பம் கிடைக்கும் என்பதனை வலியுறுத்துகிறார்.

அருட் பெரும் ஜோதியாக விளங்குகிறான் ஆண்டவன். அவனைத் தேக சக்தியால் தித்திக்கக் காணலாம். வேள்விவஸ்துவும் அவனே. வேள்விக்குரிய எஜமானன் அவனே. மரணமிலாப் பெருவாழ்வு எய்திச் சிவஜோதியில் கலந்தவர் வடலூர் வள்ளலார் பெருமான். உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே எனக் கடவுள் தன்மையை எளிமைப் படுத்தியவர் திருமூலர். உடம்பையும், உயிரையுங் கொண்டே சிவசக்தியாகிய ஜீவ ஜோதியை அடைய முடியும் என்பதே திருமூலரின் அசைக்க முடியாத கருத்து. தேகத்தினுள் அனைத்து அக்னியால் துலங்கும்படியான விஷயத்திற்கும் ஈசனே தன்னை மறைத்து பேருதவி புரிகிறான். மரணத்திற்கு பின்னர் வாழ்வின் சாரமாகிய சூட்சும தேகத்திலும் அவனே காணப்படுகிறான். வாசனை முதலான இன்ப வேறுபாடுகளில் சிக்கிக் கடலுள் அகப்பட்ட கலம் போல கர்மவினைகள் அலைக்கழிக்கப்பட்டு கடல் போலவே காட்சியளிக்கின்றன. அந்த சமயத்தில் உயிரானது, பரசிவப் பொருளைக் குறித்துத் தன் நினைவைச் சுழற்றுவதால் ஒலிக்கின்ற நாதத்தால் கர்ம வினைகள் திரும்பவும் எழாமல் இருக்க ஏதுவாகும். ஆண்டவன் அக்னி காரியங்களில் துலங்கிப் பலன் நல்குவான் என இச்செய்யுள் பகருகின்றது.

ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்மிறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே -222

அந்தணர் ஒழுக்கம்

அந்தணர் என்போர் தர்ம சிந்தனை உடையவர்; உத்தம வேள்வி புரிபவர்; ஜனனத்தைப் போக்கும் காரியத்தை மேற் கொள்வர்; காலை, நண்பகல், மாலை வேளைகளில் உயர் தவமாகிய மேலான காரியங்களை ஆற்றுவர்; சதாசிவத்தினை, சதா சிந்தனை செய்யும்படியான சம்பிரதாய முறைகளில் தவறாமல் ஈடுபடுவர்; வேதியர்கள் தமக்கென்று விதிக்கப்பட்ட உயர்தவமான செயல்களை முறையாகச் செய்து மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதனைக் கடமையாகக் கொள்வர். இதனைத் திருமூலரின் இச்செய்யுள் உணர்த்திக் காட்டுகிறது.

அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநன் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதி சடங்கறுப் போர்களே -224

முறை திறம்பாதவர் அந்தணர் என்பதும், அறவொழுக்கத்திற்கு ஆட்பட்டவர் என்பதும், அக்னி காரியத்தால் அற்புதத் தத்துவத்தை உணர்பவர் என்பதும், சந்தியா வந்தனம் சரியாகச் செய்பவர் என்பதும் இச்செய்யுள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

உண்மையான துறவு எது என விளக்கவந்த திருவள்ளுவர், நீட்டலும் மழித்தலும் வேண்டா எனக் குறிப்பிடுவர். சிகையைப் வளர்ப்பதாலோ, சிகையை மழிப்பதாலோ அவர் துறவி என்று சொல்லிவிட முடியாது என்பர் தெய்வப்புலவர். இதனையே திருமூலரும் தம் மந்திரத்தில் அந்தணர் என்பவரை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். சாதாரணமாக சிரேஷ்டமான பூணூலைத் தரித்து குடுமி வைத்தவாறு தோற்றமளிப்பதால் மட்டும் வேதியத் தன்மை துலங்குமா? செம்மையான பருத்தி இழைகளால், பின்னப்பட்டதே பூணூல் என்பது. கொஞ்சமான மயிர்த் தொகுதியே குடுமி என்பது. இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்பதான மூவகை நாடிகளையும் ஒன்றுபடுத்தி யாகம் பண்ணி, தெளிவது மட்டுமே வேதங்களின் சாரமாகும். இதனால் பிரம்ம சாஸ்வதமாகிய பிரதான நாடியானது மிகையாக எழுந்து, நந்தனத்தில் (தலைஉச்சி) பரம்பொருளறிவு சித்தியாகும். இவ்வாறு பரம்பொருளைச் சிந்தித்து, பூணூலை அணிந்த வேதியர்கள் மட்டுமே பரஞானத் தெளிவினை அடைவார்கள்.

இதனையே,

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே -230

எனச் சான்று பகருகின்றார் திருமூலர்.

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டும் மனத்தினை உடையவர் அந்தணர். மேன்மையான நான்மறையின் முடிவாக விளங்கும் பரசிவப் பொருளைச் சதா சிந்திக்கும் இயல்புடையவர் ஆவார். அவர்கள் வாழ்கின்ற மண்வளம், தன்வளம் குன்றாது; கொண்ட வளநலம் எப்போதும் குறைவதில்லை; அந்த தேசத்தின் மன்னனும் உத்தமனாகவே விளங்குவான். காலை, மாலை வேளைகளில் எல்லாம் புனிதமான ஆகுதிகளை மேற்கொண்டு சகலரும் மேன்மையுறுவர்; அந்தணத் தன்மைக்குரித்தான சிறப்பியல்புகளை மேற்கொண்டொழுகும் வேதியர்கள்

உறைகின்ற வையகமும் உயர்வுற்று விளங்கும் எனத் திருமூலரின் இச்செய்யுள் உணர்த்துகிறது.

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே -234

நான்மறை அறங்கள் ஓங்கவும், நற்றவ வேள்வி மல்கவும், வான்முகில் வழாது பெய்யவும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும், அந்தணர் செய்யும் அக்னி வேள்வியும், அவர்தம் ஒழுக்கமும் இன்றியமையாதவை என்பது திருமூலரின் மேற்கண்ட தந்திரச் செய்யுள்களால் அறியக் கிடக்கின்றன.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

11. வானச்சிறப்பு

சன்மார்க்கத் திலகம் கூ. சங்கரய்யா பி.ஏ.,
சென்னை

அமுதூறு மாமழை நீரதனாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசைதோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங்காஞ்சிரை ஆங்கதுவாமே

புற அமுதம் எனப்போற்றப்பெறும் மழையின் பெருமையைக் குறித்த செய்யுள் இது. திருமூலரின் முதலாவது தந்திரத்தில் உள்ளது. வான் என்பது ஆகாயம். இதனைப் பரமாகாசம் என்றும் கூறுவர். குலவுபேர் அண்டப்பகுதிகள் முழுவதும் வகுத்தபடி நிலையாக மாறாத வகையில் இயங்குகின்றன. கோடானகோடி சூரிய குடும்பங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் பேரண்டம் விரிந்தது. விஞ்ஞானிகள் இதனை, Ever Expanding Universe என்கின்றனர்.

அண்டத்திலுள்ளதுதான் பிண்டத்திலுள்ளது என்பதை அறிஞர் பெருமக்கள் ஏற்கின்றனர். பரமாகாசத்திலிருந்து சிதாகாசம், காற்று, நெருப்பு, நீர் மண்தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த ஐவகை பூதங்கள் தோறும் நிலைத்து நின்று விளங்குகிறது இறையருள். நிலம் என்னும் மண்பூதந்தான் கடையாகிய ஆதார பூதம். உயிர்கள் தோன்றி வாழவும் வீழ்ந்து மடிந்து மண்ணவாவதும் இதில்தான். அழிந்த பொருட்களை மீண்டும் மீண்டும் பயனுள்ள வாஸ்த்துக்களாக மாற்றுவது வியத்ததற்குரிய திருவருள் செயலாகும். இத்தகைய மண்ணுக்கு பொருந்தி நின்று உதவுவது நீராகும். நீரின்றேல் உயிர்கள் இல்லை. உயிர்களை மூவகையாகப் பிரிக்கின்றார் வள்ளலார். அவை தாவர உயிர்வர்க்கம், சீவ உயிர்வர்க்கம், ஆன்மஉயிர்வர்க்கம் என்பனவாகும். எவ்வுயிரும் தளைத்து ஓங்கி வளர உதவுவது மழை நீராகும். வேண்டுதல் வேண்டாமையிலாத, தனக்குவமை இல்லாத தலைவனாகிய அறவழி அந்தணன் கருணையால் வானம் பொழிகின்றது. எவ்வுயிர்க்கும் அதனதன் இயல்பாய் நின்று ஆட்படுத்தும் கருணைக்கடலாம் அம்மையப்பனின் பேரிரக்கத்தை உணர்ந்த மெய்ஞானியர் போற்றிப் புகழ்கின்றனர். உயிர் அன்பின் வழி வந்ததல்லவா? அன்பைப் பெருக்கி ஆருயிரைக் காத்துக் கொள்ள வேண்டுவது உயர் மனிதப் பிறவியைப் பெற்றுள்ளவர் கடமையாகும்.

பரந்து விரிந்த ஆழ்கடல் நீரை எவரே அருந்தக்கூடும்! பருகுவதற்கு நீராகவும் பயிர்வித்து உணவாகவும் பயன்படுவது கார்மேகமல்லவா? மழைநீரை அமுதமெனப் போற்றுகின்றனர் சான்றோர். உயிர்காக்கும் உன்னதமான அருட்பிரசாதம் மழை. திருமூலர் திருமந்திரம், திருக்குறள், மெய்கண்ட சாத்திரம் போன்ற சாத்திர நூல்கள் இறைவனைப் போற்றி புகழ்கின்றன. தெய்வப்புலவர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்கு அடுத்த படியாக வான்சிறப்பு என்ற அதிகாரத்தை வைத்துள்ளார். கடவுள் துணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய மழையின் சிறப்பை தெளிவாக விளக்கி உள்ளார். வான்சிறப்பில் திருவள்ளுவர் கூறுவதாவது: சீவர்களுக்கு உணவை விளைவித்து உதவவும் அருந்துவதற்கு நீராகவும் அமைகிறது. உயிர் காக்கும் மழை பெய்யத்தவறினால் உலக உயிர்கள் பட்டினியால் வாடி மடியும். உணவுப்பண்டங்களைப் பெருக்கும் உழவர்கள் மாரி பொய்த்தால், எங்ஙனம் உழவுத் தொழிலை மேற்கொள்வர்? மழை உயிர்களை வாழவும் வைக்கும், கெடுக்கவும் செய்யும். பசும்புல் தலைகாட்டாது. தொடர்ந்து மழை பெய்யாது போனால் பரந்த கடல் நீரும் வற்றிவிடும். தானமும் தவமும் தடைப்படும். மழை பெய்யாது விட்டால் மனித ஒழுக்கமும் குன்றிக் கெடும்.

இந்த வானமுதம் ஓரறிவுள்ள, கமுகு, தென்னை, கரும்பு போன்ற இனிய சுவையளிக்கும். வஸ்துக்களை அளிக்கும் நன்மரங்களை வளர்விக்க உதவும். காஞ்சிரை என்னும விஷவித்தைத்தரும் எட்டிமரத்தையும் வளர உதவும். மனிதர்கள் தங்கள் சரீரத்தால் செய்யும் பாவங்களுக்குத் தாவரங்களாகப் பிறப்பார்களாம். பாவங்களின் தரம் கருதி அரசு, வேம்பு, ஆல், சந்தனமரம் போன்ற நன்மரங்களாகவும், அற்புத உயிர்காக்கும் மூலிகைகளாகவும் பிறப்பார்களாம். வேலிக்கருவையை யாரே விரும்புவர்? மர வகையில் காஞ்சிரையை ஏன் திருமூலர் குறித்தார் என்றால் எட்டிக்காய் விஷம் என்றாலும், யோக நெறியிலிருப் பவர்களுக்கு விந்து பலம் பெருக்கவும் திடப்படுத்தவும் உபாயமாகும். விந்துவே அமுத ஊற்றாக நிலை பெறுவதை, விந்தையை ஞானயோக நூல்களில் படித்துணரலாம். காம எழுச்சி மனதில் தோன்றாதிருக்கவும் மனம் அலை பாயாது ஒன்றைப் பற்றி ஒன்றி நிற்கவும் யோகிகள் சிலர் கஞ்சாவை பயன்படுத்துவர். அதைப் போலவே எட்டிவிதையையும் (விஷமாயிருந்தாலும்) அணுஅணுவாகச் சேர்த்து உடலைப் பக்குவப்படுத்துவார்கள். விஷமாகிய எட்டி சிறுகச்சிறுக உடலில் சேரும். அவ்வுடலை பாம்பு தீண்டினால் தீண்டிய பாம்புதான் சாகுமே தவிர யோகி சாகமாட்டார். சாமானியர்கள் எட்டிக்காயை நினைக்கவும் கூடாது. ஆபத்து. எச்சரிக்கை.

உலகியலார்க்கு மழைவேண்டும் பொழுது பெய்யாது திருவருள் சித்தப்படியே அமையும். அட்டாங்க யோகத்தில் சமாதி பாதம் ஒரு சிறந்த நிலை. தவறாத ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துக் கடுந்தவம் இயற்றுபவர்களே இந்த ஆதிக்குச் சமமான சமாதிநிலை கிட்டும். மணி, மந்திர, ஔஷதத்தால் பெற வேண்டியது சமாதி. காஞ்சிரங்காய் பயன்படுத்துவதைக்கருதியே திருமூலர் குறிப்பிட்டுள்ளார் போலும்.

எளிதாக ஆண்டவன் திருவருளைப் பெறுவது எங்ஙனம்?

திண்ணையில் உட்கார்ந்திருந்தால் தெய்வம் படியளக்குமா? காடு, மலை, குகை போன்ற தனியிடங்களுக்குச் சென்று இலை, சருகு, கந்த மூலங்களைப் பசி வந்த போது புசித்துக் கடுந்தவம் இயற்ற இல்லறத்தார்க்கு வாய்ப்பில்லை. அத்தகைய கடுந்தவத்தால் பெறக்கூடிய (பல ஆண்டுகள் முயன்று முயன்று பெறுவது) சுத்த உஷ்ணத்தை அதாவது மெய்யருள் கனலை எல்லோரும் எளிதாகப் பெற மெய்ஞானியர் வ.ழிகாட்டியுள்ளார். தன் குறையை உணர்ந்து அழுது ஆண்டவனை வேண்டி அழுது பிரார்த்திப்பதுதான். பிறரை சொல்லால், சரீரத்தால் தாக்கி கண்ணீர் சிந்த வைக்க அறிவோம். மாசற்ற, மாற்றறியாத செழும் பசும் பொன்னாகிய இறைவனைக் கண்டு கலந்து இன்புறத்தடையாயுள்ள உள் எதிரிகளை ஆணவம், கன்மம், மாயை, காம, குரோத, மத மாச்சரியங்களைக் கண்டு பயந்து ஆற்றாமையால் வல்லமையுள்ள வாலறிவனைப் போற்றவோ அழுது வேண்டவோ தெரியவில்லை என்றால் எங்ஙனம் திருவருளைப் பெறக்கூடும்?

யானே பொய், என்நெஞ்சும்பொய், என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்று எண்ணி மலைத்துப்போய் நின்ற வாதவூரடிகளுக்கு ஒரு தாய்ப்பசு பாடம் புகட்டியது. ஈன்ற மூன்றே நாளான தன் இளங்கன்றுக்குட்டியை மாட்டொடு கன்றையும் விலை பேசி தன் ஊருக்கு எடுத்துச் செல்கிறார் வியாபாரி, பசுங்கன்றை ஒரு கூடையில் போட்டு தலையில் வைத்துக் கொண்டு நடக்க, தாய்ப்பசு மா......மா.... என்று கதறி அழுது கொண்டே வேகமாய் பின்னாலே ஓடியது. கன்றைப் பார்த்த தாய்ப்பசுப்போல தான் அழ வேண்டுமென்று முடிவு செய்தார் அடிகள். முடிந்த பாடல் வருமாறு.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்தமைந்துறையும் கூத்தா உன்குரை கழற்கே
<u>கற்றாவின் மனம் போல கசிந்துருக வேண்டுவனே</u>

கன்று + ஆ= தாய்ப்பசு

பர்மா நாட்டில் மழை வேண்டியிருந்தால் எல்லா மக்களும் சாதி, மதபேதமின்றி கடற்கரைக்குச் சென்று பிரார்த்தனை செய்வார்களாம். மழை கொட்டு கொட்டு என்று கொட்டுமாம். வேண்டிய மழை பெய்தானதும், அனைவரும் கடற்கரைக்கு சென்று போதும் இறைவா என்று பிரார்த்திப்பார்களாம். மழையும் வேண்டியபடி நின்று விடுமாம். பொது விதிப்பிரகாரம் மழை திருவுளச் சித்தப்படியேதான் பெய்யும். சிறப்பு விதிப்படி வேண்டுவார் நிலையறிந்து வேண்டிய மழை பொழியும். அருளமுதத்தை வள்ளலார் போற்றுகின்ற விதத்தைப் பாருங்கள்.

ஞானஆரமுது, சத்திய அமுது, தனித்திரு அமுது, நித்தியஅமுது, நிறைசிவ அமுது, சச்சிதானந்தத் தனித்திரு அமுது, மெய்ச்சிதாகாச விளைவருள அமுது, ஆனந்த அமுது, அருளொளி அமுது, தானந்தமில்லாத் தத்துவ அமுது, நவநிலைதருமோர் நல்லதிருவமுது, சிவநிலை தனிலே திரண்டவுள்ளமுது, பொய்படாங்கருணைப் புண்ணிய அமுது, கைபடாப் பெருசீர் கடவுள் ஆரமுது.

வான் சிறப்பில் திருமூலர் பெருமானின் அடுத்த செய்யுள்.

வரையிரை நின்றிழிவான் நீர் அருவி
உரையில்லை உள்ளத்தக்கது நின்றூறும்
நுரையில்லை, மாசில்லை, நுண்ணிய தெண்ணீர்
கரையில்லை எந்தை கழுமணியாறே

பகீரதன் கங்கையை ஆகாயத்திலிருந்து பூமிக்குத் தன் கடுந்தவத்தால் கொண்டு வந்தான் என்று புராணம் கூறுகிறது. கடுந்தவத்தால் இயற்கையைத் தன் வசமாக்கலாம் என்பது உண்மை. நளாயினிக்கு அவன் விருப்பப்படி சூரியன் எழாமல் உதவியதும், அபிராமி பட்டருக்கு அமாவசை அன்று பூரணச்சந்திரன் வருவிக்கவுற்றதும் கருணையங் கடலான இறைவனின் தனிச்சிறப்புத்தான்.

வானம் அளிக்கும் மழை புற அமுதம். மலைமிசை விழுந்து ஓடி உயிர்க்கெல்லாம் உதவிக்கடலில் சங்கமாகிறது. பிரிதிவி சம்பந்தத்தால் மாசு பட்டிருக்கும் ஆத்ம சாதகரின் சிரசில் ஊறும் அருளமுதம் மெய்யருள்கனலாய் விளைந்த அக அமுதமாகும். திருபாற்கடலை மேருமலையை மத்தாகவும் ஆதிசேசனை கயிறாகவும் கொண்டு தேவர்களும், அசுரர்களும் கடைந்தனராம். முதலில் விஷம் கிளம்பியதாம். மறக்கருணையில் சிவபெருமான் விஷத்தையுண்டாராம். மறுமுறை தொடர்ந்து கடைய அமுதம் தோன்றியதாம். அமுதத்தை வானவர்கள் அருந்தினராம். புராணக்கதையிது. இது அகப்புற அமுதமாகும்.

இங்கு ஆத்மசாதகர் சிரசில் ஊறும் தெள்ளமுதத்தைக் குறிக்கின்றார் திருமூலர். சுக்கிலத்தை மேலேற்றும் வித்தை பயின்ற யோகியார் மூலாதாரத்தில் மூண்டெழுகனலை காலால் எழுப்பி குண்டலினி ஆற்றலைக் கைவசப்படுத்துவர். ஏழாவது சக்கரமாகிய சகஸ்ரதளத்தில்(பொற்சபை என்று வள்ளற்பெருமான் குறிக்கின்றார்) இறுகிய இரத்தம் சுக்கிலமாகி மூளையில் பாவி அனுபவித்தறியாத இன்ப உணர்ச்சியை, மலர்ச்சியை எற்படுத்தும். இத்தகைய அமுத ஊற்றால் பேரின்ப உணர்வும் எல்லையில்லா பேராற்றலும் உண்டாகும். தன்னகத்தே தோன்றும் அருளமுதம் கலங்கமற்றது. துரிசில்லாதது. ஒளிமிக்கது. முன்பு செய்த பாவங்களை அனைத்தையும் நெருப்பில் தூசாகப் பொசுக்க வல்லது.

நித்த வாழ்வை- மரணமில்லா பெரு வாழ்வை நல்கும். இத்தகைய தேவாமிர்தத்தை உண்டுதேக்கும் தகவுடையார் தெளிந்த சித்தராவார். உத்தமராவார். இகபரசுகம் வேண்டுவோர் தெளிந்த அறிவினராய் தெய்வ பாவனையில் அயராது இலயித்திருப்பர்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

12. தானச்சிறப்பு

திருமதி. ஆர்.மகேஸ்வரி எம்.ஏ., எம்.பில்.,
மேலூர்.

கீழ்க் குறித்த திருமந்திரச் செய்யுள் முதலாவது தந்திரத்தில் அமைந்துள்ளது.

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன் மின்
பார்த்திருந்துண்மின் பழம்பொருள் போற்றன் மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன் மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே

எந்நாட்டினர், எம்மதத்தினர், எந்நிறத்தவர், எம்மொழியினர், எந்த சாதியினர், பெரியவர், சிறியவர், வேண்டியவர், வேண்டாதவர் என வித்தியாசம் பாராட்டாது கொடுக்க வேண்டும். நெருங்கிய உறவினர்களை மட்டும் கருத்தில் கொள்ளாது அந்நியர்களையும் அன்புடன் விருந்தினர்களாக உபசரித்து முடிந்த மட்டும் கொடுத்தல் வேண்டும். இம்மை மறுமையில் விருப்பம் உடையவரே, மிக விரைந்து உண்ண வேண்டாம். காகங்களே உண்ணும் காலத்தில் பிற காகங்களை அழைத்து உண்பதை அறியுங்கள். தமிழர் பண்பாடு விருந்தோம்பல் என்று கீழ்கண்டவாறு கூறுகிறார்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

பரம்பரைச் சொத்தாகப் பாதுகாத்து வந்த பொருளை எளியோருக்கு கொடுப்பதில் தயக்கம் காட்டலாகாது. குமணன் தன் தலையையே கொடுக்க முன் வந்த வரலாறு நம் நாட்டில்தான். சமீப காலமாக பலவிதமான தானங்கள், கண்தானம், சிறுநீரக தானம், ரத்த தானம், இறந்த பின் உடலை மருத்துவ ஆராய்ச்சி செய்ய உடல் தானம் அளிப்பதையும் காண்கிறோம். தானங்களில் சிறந்தது ஞான தானம் என்கின்றனர் மெய்யுணர்ந்த ஞானிகள் சிலர். சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய வேண்டும்! உண்ண உணவு இன்றேல் உணர்ச்சியில்லை, உணர்வில்லை. ஏன் மெய்யுணர்வும் இல்லை. அத்தனை தானங்களிலும் மேலான தானம் பசிப்பிணி போக்கும் அன்னதானந்தான். சோற்றிலிருக்கிறான் சொக்கநாதன் என்ற பழமொழி கூட நம் வழக்கில் உண்டு. எடுத்த பிறவிப் பெரும் பயனை அடைய உதவுவது பசி தவிர்த்தல்தான்.

தமிழ் மூதாட்டி, சித்த புருஷி ஔவையார்,

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியார் இடாதோர் இழி குலத்தார்
பட்டாங்கில் உள்ளபடி"

என்று பகர்வதை நாம் உற்று நோக்க வேண்டும். 'தானமும் தவமும் தான்செய்வராகில் வானவர் நாடு வழி திறந்திடும்' என்கிறார்.

அறம், பாவம் என்றும் அருங்கயிற்றால் சீவர்கள் கட்டப்பட்டுள்ளனர். இவ்விரு கட்டுகளும் நீங்க வேண்டும். பிற சீவர்களுக்கு உதவி செய்யா விட்டாலும் அவற்றை வதைத்துக் கொலை செய்து தன் ஊன் வளர்க்க பிறிதொரு சீவனைக் கொல்வது எத்தனை பாவம்! இரக்கமற்ற செயல். நல்லது செய்ய இயலாவிட்டாலும் கொடுமைகளைச் செய்யாதிருத்தல் சிறந்ததல்லவா! இவ்வுலக வாழ்வில் இன்பத்தையும், மேலுலக வாழ்வில் பேரின்பத்தையும் பெற ஆண்டவன் அருள் வேண்டும். அருள் பெற விழைவார் கொலை புலை தவிர்த்து நேரிட்ட வறியவர்களுக்குத் தம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும். இது பற்றியே வடலூர் வள்ளல் பெருமான் புலை கொலை தவிர்த்தவரை அகவினத்தார் என்றும், தவிர்க்காதவர்களை புறவினத்தார் என்றும் வேறுபடுத்திக் கூறுகிறார்.

பசிப்பிணி உடலையும், உயிரையும் எவ்வாறு வருத்தித் துன்பத்திற்குள்ளாக்கும் என்பதை சீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலில் விளக்கமாகத் தெளிவுப்படுத்தியிருக்கிறார்கள். விளக்கில் எண்ணெய் தீர்ந்து விட்டால் திரி முழுமையாக கருகி எரிந்து விளக்கு அணைந்து விடும். ஒரு சீவனுக்கு ஆகாரம் உரிய காலத்தில் கிடைக்காவிட்டால் அவ்வுயிர் உடலை விட்டு நீங்கி விடும்.

பசியின் அவத்தை

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில்,- ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகிறது. அது மயங்கவே அறிவுக்கு அறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது,- அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகிறது,- அது மழுங்கவே, குணங்களெல்லாம் பேதப்படுகின்றன, - மனம் தடுமாறிச் சிதறுகின்றது,- புத்தி கெடுகின்றது,- சித்தம் கலங்குகின்றது,- அகங்காரம் ஒடுங்குகின்றது,- பிராணன் சுழல்கின்றது, பூதங்களெல்லாம் புழுங்குகின்றன,- வாதபித்த சிலேட்டுமங்கள் நிலை மாறுகின்றன,- கண் பஞ்சடைந்து குழிந்து

போகின்றது,- காது கும்மென்று செவிடுபடுகின்றது,- நா உலர்ந்து வற்றுகின்றது,- நாசி குழைந்து சுழல்கின்றது,- தோல் மெலிந்து ஸ்மரனை கெடுகின்றது,- கை கால் சோர்ந்து துவளுகின்றன; வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது,- பற்கள் தளருகின்றன; மலசல வழிகள் வெதும்புகின்றது,- மேனி கருகுகின்றது,- ரோமம் வெறிக்கின்றது,- நரம்புகள் குழைந்து நைகின்றன,- நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன,- எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்கு விடுகின்றன,- இருதயம் வேகின்றது,- மூளை சுருங்குகின்றது,- சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றன,- மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது, வயிறு பகீர் என்று எரிகின்றது. தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபத்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு, பசி நீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவாங்களெல்லாம், தழைத்து,- உள்ளங் குளிர்ந்து,- அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும், கடவுள் களையுந் துளும்ப ஒப்பில்லாத திருப்தி இன்பம் உண்டாகின்றது.

இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண்ணியத்திற்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்றவர்களை எந்த தெய்வத்திற்குச் சமம் என்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்மென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரக வேதனை,- சனைவேதனை,- மரண வேதனை,- என்கின்ற மூன்று வேதனைகளுகங் கூடி முடிந்த வேதனையே பசி வேதனையென்றும்; அகம், புறம், நடு எக்காலத்தும் வேறுபடாத மோட்ச இன்பமே ஆகாரத்தினால் உண்டாகும் திருப்தி இன்பம் என்றும் அறியப்படும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை

என அருளும் வள்ளுவ பெருந்தகை, சீவரின் உள்நின்று வருத்தும் பசியைப் போக்க வேண்டுகிறார்.

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு நாட்டமே
நாட்டத்துள் நிறைந்த வானமே

எனக்குள் வந்து வந்து ஓங்கும் மார்க்கமே
மருளர் தாமறியா மோனமே முத்தி நல் வித்தே
முடிவிலா இன்பமே தரும் தானமே தவமே

என்று தாயுமானவர் தானத்தைப் பெருமைபடக் கூறுகிறார்.

கடவுளைக் காண வேண்டுமா? பசித்தோர் முகம் பார் என்கிறார் பட்டினத்தடிகள்.

வள்ளற்பெருமான் தாம் அருளிய திரு அகவலில் (1596 வரிகள் அடங்கியது) இறுதியாக மனிதன் தெய்வமாக வாழ வழி சொல்கிறார்.

உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெல்லாம்
விலக நீயடைந்து விலக்குக மகிழ்க
சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக உத்தமனாகுக
ஓங்குக என்றனை

(உத்தமன், அத்தன், உடையான் என்பன கடவுளின் நாமங்களில் சில)

வள்ளலார் மேலும் சொல்கிறார்:-

அறிவு விளங்கிய ஜீவர்களுக்கு எல்லாம் உயிர் வழிபாடே கடவுள் வழிபாடாகும்; ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவு கோல்

மனித சமுதாயத்தை விட்டு விலகிக் கடவுளைக் காண காடு மலை குகைகளில் சென்று கடுந்தவம் செய்ய முன்வினைப் பயனால் ஒரு சிலருக்கு கிட்டும். ஆனால் எல்லோரும் எளிதாகக் கடவுளைக் கண்டு ஆனந்திக்க முடியுமா? முடியும் என்கிறார் வள்ளலார். எப்படி? சன்மார்க்க சாதகர்களுக்கு என்றே பயிற்சி நிலையமாக சத்திய தருமச்சாலையை வடலூரில் 1867 - ல் நிறுவினார். நிறுவிய முதல் நாளே ஆயிரக்கணக்கான பசித்தவர்களுக்கு எவ்வித பேதமில்லாமல் பசி தவிர்க்கப்பட்டது. ஞான யோகியாகி மெய்யின்பத்தை பெற எளிதான வழி இதோ:

அருட்பிரகாச வள்ளலார் பதிப்பித்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதல் பகுதியில்,

உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்தக் கரணமாகி நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும் போது, அவருண்ணுவது

தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால், ஞானிகளென்றே உண்மையாக அறிய வேண்டும்- ஆகாரங் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும், மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேகம் முழுவதும் சில்லென்று தழைய முகத்தினிடமாகக் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும், திருப்தியின்பமாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்தி அட்சத்தில் தரிசித்து அநுபவிக்கின்றார்களாதலால், அந்தப் புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்களென்றும் கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறிய வேண்டும். பசி நீங்க உண்டு மகிழ்ச்சியினை அடைந்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்களாதலால்; இவர்களே தெய்வமென்று அறிய வேண்டும் என்று வலியுறுத்தி கூறுகின்றார்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

13. அன்புடைமை,
அன்பு செய்வாரை அறிவன் சிவன்

பேராசிரியர். கு.ப. கண்ணன் எம்.எஸ்ஸி., எம்.ஃபில்.,
முன்னாள் இயற்பியல் துறைத்தலைவர்,
மாமன்னர் தன்னாட்சிக் கல்லூரி, புதுக்கோட்டை

சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமும் சாத்திரமு மானார் தாமே

என்பது ஆளுடைய அரசர் அருளிய திருவாக்கு. சைவ உலகில் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் ஒருங்கே வைத்து எண்ணப்படும் தகுதி பெற்றது திருமந்திரம். திருவாவடுதுறையில் திருவரசின் கீழே சிவயோகத்தில் இனிதமர்ந்து "அந்திமதிபுனை அரனடியை நாள்தொறும் சிந்தை செய்து" அப்பெருமான் திருவருளால் நம்பிரான் திருமூல நாயனார் சிவமாம் செந்நெறிக்கு அருளிய செந்தமிழ் ஆகமம் அது. மூலம் என்னும் சொல்லுக்கு அடிப்படை என்பது பொருள். திருமூலர் தமிழுக்கும் சிவநெறிக்கும் அடிப்படையானவர் எனக் கருதி மகிழலாம்.

திருமந்திரத்தின் முதல் தந்திரம் அறத்திறன் பற்றிப் பேசுகிறது. அதன் உட்பிரிவுகளாக அமைந்துள்ள அன்புடைமை மற்றும் அன்பு செய்வாரை அறிவன் சிவன் எனும் இரு தலைப்புகளில் திருமூலர் அன்பைப் பற்றி பேசுகிறார். அன்பு கனிந்து முழுமை பெறுகிறபோது, அன்பு வேறு, சிவன் வேறு என்னும் நிலை மறைந்து அன்பே சிவமாகிறது. இங்கு குறிக்கோளும் அதனை அடையும் வழியும், சாத்தியமும், சாதனமும் இரண்டற்று ஒன்றாகி விடுகின்றன.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்று திருமூலர் பேசுகிறார்.

அன்பாகிய திருவருளும், இன்பாகிய சிவனும் இருவேறு பொருள்கள் என்று கூறுபவர்கள் மெய்யுணர்வு பெறாதவர்கள். இவர்கள் அன்பே சிவமாகும் என்னும் உண்மையை உணரமாட்டாமல் அலைகிறார்களே என்று திருமூலர் துயரமடைகிறார். அன்புதான் சிவமாகிறது என்பதை உணர்ந்த பின், அன்பிலே சிவத்தைக் கண்டு அன்பு மயமாகி சிவானந்த

பேறு பெறுவார்கள் என்று உலகத்துக்கு உறுதி கூறுகிறார் திருமூலர். 'அமர்ந்திருப்பாரே' என்று எதிர்காலத்தில் பாடாமல் 'அமர்ந்திருந் தாரே' என்று இறந்த காலத்தில் பாடுவது அவரது உறுதி காரணமாக என்பது உன்னி உணர்ந்து இன்புறத் தக்கதாம்.

'அன்பில் விளைந்த ஆரமுதே' என்றும் 'ஈரிலா பதங்கள் யாவையும் கடந்த என் இன்பமே' என்றும் மணிவாசகப் பெருந்தகை பேசுவதும் ஈண்டு ஒப்பு நோக்கி மகிழத்தக்கதாகும்.

சிவபெருமான் புலித்தோலை ஆடையாகக் கொண்டு இருக்கிறான். அவனது சடையில் இளம்பிறை மின்னி கொண்டிருக்கிறது. அவனது திருமேனி திருவெண்ணீற்றுத் திருக்கோலத்துடன் திகழ்கிறது. கை தேர்ந்த ஓர் ஓவியன் ஒரு சில கோடுகளில் ஓர் உருவத்தை உருவாக்கி நம் கண்முன் நிறுத்துவதைப் போல, சில சொற்களிலேயே சிவபெருமானை நம் கண்முன் அழகிய சொல்லோவியமாகக் காட்டி, அவன்மாட்டு என் பேரன்பு பிரிவிலாக் கலப்பாக பின்னிக் கிடந்தது என்று பெருமிதம் தோன்றப் பேசுகிறார் திருமூலர். திருவள்ளுவர் போல தொடர்புடையார் மாட்டு காட்டும் அன்பு பற்றி பேசாமல் இறைவனோடு முழுமையாகக் கலந்து நிற்பதையே அன்பு என விளக்குகிறார் திருமூலர்.

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே

என்னும் திருமந்திரப் பாடல் இதனை உணர்த்தும்.

இப்பாடலை பக்தியுடன் ஓதினால் அதுவே தவமாகி சிவபெருமானை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும். அன்பு வழிப்பாட்டின் சிறப்பைத் திருமூலர் தெரிவிக்கும் திறன் நமக்கெல்லாம் வியப்பளிக்கிறது. விரதங்கள், கடுமையான நோன்புகள், உடலை வருத்தும் யோகப் பயிற்சிகள், வேள்விகள் இவையெல்லாம் இன்ப வடிவினான இறைவனை வெளிப்படுத்த வல்லன அல்ல என்று திருமூலர் கருதுகிறார். அன்பொடு உருகி அகம் குழைவார்க்கு மட்டுமே இறைவன் வெளிப்பட்டு அருள் செய்வான் என்பதுதான் அவர் கருத்து. இதனை உணர்த்தும் திருமந்திர பாட்டு இதோ,

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்

அன்போடுருகி அகங்குழைவார்க் கன்றி
என்போன்மணி யினை எய்த வொண் ணாதே.

அன்பு மிகுதியினால் ஆர்வம் உடையவர் இறைவனைக் காண்பார். அன்பில்லாதவர் இறைவனை அடையும் வழி தெரியாது இடர்ப்படுவர். ஆதலின் அன்பினால் மனத்தை உருக்கி இறைவனை நாடுங்கள். அம்பிகையைத் தன் அழகிய இடப்பாகத்துக் கொண்ட கொன்றை மாலையணிந்த சிவபெருமான் என் அன்பில் எழுந்தருளி நின்றனன். ஆதலின் அகண்ட உலகமாக உள்ள, இன்பம் படைத்த பெருமானிடம் அன்பு செலுத்துங்கள். ஒளி வடிவான இறைவன் நம் வாழ்விலும் ஒளி பெருகச் செய்வான். உலக போகங்களில் விருப்பத்தைச் செலுத்தும் மனிதர்கள் 'எந்தைபிரான்' என்று விரும்பி அண்ணலாகிய சிவபெருமானை நாடுங்கள். உலகத் தோற்றத்திற்கு முன்னும், உலக அழிவுக்குப் பின்னும் அழியாது நிற்கும் சிவபெருமான் முனிவர்களுக்கெல்லாம் தலைவன். அன்பின் வழி அணுகுவோர்க்கு மட்டும் அவன் என்றும் நீங்காப் பெருந் துணையாக நிற்பான். இவ்வாறெல்லாம் திருமூலர் ஞானக்குரல் ஓங்கி ஒலிக்கிறது.

திருமூலரின் ஞானக் குரலோடு உலக ஞானியர்களின் ஞானக் குரல்களும் ஒத்து அதிர்வு செய்து ஒலிப்பதைக் கண்டு மகிழ முடியும். தமிழ்நாட்டு ஞானி, மூத்த திருப்பதிகம் அருளிய காரைக்கால் அம்மையார் தம் நெஞ்சத்துக்கு அறிவுரையாகக் கூறுகிறார்; 'நெஞ்சே, உனக்கு இறைவன் அருளாகிய பெரும் சேமம் கிடைத்து விட்டது. நீ மகிழ்ச்சியுடன் இருக்கிறாய். ஆனால் போதும் என்று நிறுத்தி விடாதே. எலும்பு மாலை அணிந்து பிச்சைக் கோலத்துடன் திரிந்து வரும் சிவபெருமானை சாதாரணமாக நினைத்து விடாதே. அவன் மீது மேலும் மேலும் பேரன்பினைப் பெருக்குவாயாக' என்கிறார்.

மகிழ்தி மடநெஞ்சே மானிடரின் நீயும்
திகழ்தி பெருஞ்சேமம் சேர்ந்தாய்- இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு.

என்பன அற்புத திருவந்தாதியின் ஞான வரிகள்.

திருச்சட்ட நூலின் தலைசிறந்த கட்டளை எது என வினவிய போது ஏசுபிரான் கூறிய, 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் உன் இறைவனிடம் அன்பு செலுத்து' (மத்.22:37) என்னும் ஞான மொழியையும் ஈண்டு நினைத்து மகிழலாம்.

அன்பு செய்வாரை அறிவன் சிவன்

அன்பு செய்வாரை அறிவன் சிவன் என்பது அன்பினால் பெரும் பயன் பற்றிப் பேசுவது. நாம் இறைவனிடம் அன்பு செலுத்தி வாழும்போது அவனும் அதனை அறிந்து நம்மீது அருள்சொரிந்து பேரின்பம் தருகிறான்.

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல்லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யுமரு ளதுவாமே

என்பது திருமூலர் தவமொழி. 'ஆருயிர்கட்கு அன்பு செய்வாரை ஈசன் அறிவன்' என்பது சிவஞான சித்தியார்.

இன்பப் பிறவிக்கு வேண்டுவன அனைத்தும் அருளால் அமைத்து அதனை அனுபவிக்க இறைவன் வழங்கிய இப்பிறவியில் துன்பம் பலவாகும். அந்த நிலையிலும் இறைவனோடு நீங்கா அன்பு செய்து கலப்பின், இறைவன் திருவருள் வலிமையால் இப்பிறவி இன்பமாக நிறைவெய்தும்.

இறைவனிடத்தில் அன்பு செய்து அதனால் நிறைந்த உள்ளத்தில் அவன் திருவருள் பேரொளி மேலேழுந்து நிற்கும். துன்பத்தை மிகுவிக்கும். ஐம்புலன்களின் வழி செல்லாது, இன்பம் வழங்குகின்ற திருக்கண்களை உடைய அம்மையுடன் இசைந்து நிற்கும் இறைவனிடம் நட்புக் கொள்ளும் நல்ல உள்ளத்தை நாடுங்கள்.

உணர்வு கெட்டு அனுபவிக்கும் சிற்றின்பம் போன்றதே பேரின்பமாகும். இறைவனைப் புத்தியால் அறிந்துவிட முடியாது. பக்தியால் மட்டுமே அவனை அறிதல் இயலும்.

பத்திமையாலே பணிந்தடியார் தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே - என்றும்

கண்டேன் கழலதென் அன்பினுள் யானே - என்றும் திருமூலர் பாடுவது இதனை நன்கு உணர்த்தும்.

இறைவன் இன்ப வடிவானவன், உயிர்களின் இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவானவன். எனினும் 'யாரும் அறியகி லாரே' என்று அன்பினால் அன்றி இறைவன் அறியொணாதவன் என்பதைத் திருமூலர் விளக்கும் திறன் சிந்தித்து மகிழத் தக்கதாகும்.

இறைவன் பிறப்பும், இறப்பும் இல்லாதவன். அவனை வணங்கி பிறப்பும் இறப்பும் அறியாத ஞானியர் 'அன்பினால் இறைவனை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்' என்று சொல்லியும் கூட பலபேர் இறைவனை உணர்ந்து பிறப்பு இறப்பைப் போக்கிக் கொள்ள அறியாமல் இருக்கிறார்களே என்று திருமூலர் வருந்துகிறார்.

நமக்குத் தொழில் அன்பு செய்தல் மட்டுமே, வேறு செயல் எதுவும் இல்லை என்று தெளிந்து இறைவனைச் சரண் புகுந்து பக்தி செலுத்தினால் தேனாய் இன்னமுதமூாய் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து நம்மிடத்தில் மிக நெருங்கிப் பிரிப்பின்றி உடனுறைவான்.

ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற்றறிந்து செயலற்றிருந்திடில்
ஈசன் வந்து எம்மிடை ஈட்டிநின்றானே

என்பது திருமூலர் வழங்கும் உறுதிமொழி. 'நின்றானே' என்பதில் உள்ள இறந்தகால வினையும், ஏகாரமும் உறுதியையும் அதிலுள்ள மகிழ்ச்சியையும் உணர்த்தி நிற்கின்றன.

இறைவனை விட்டுவிட்டு நினைப்பதில் பயனில்லை. பெருமைமிகு ஒளிவடிவான இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு அவன் வழியே தொடர வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லையற்ற பெருமை கிட்டும். அஃதே ஓர் இனிமையான நீராடலாகவும் அமையும். அத்தகைய நீராடலுக்கு உலகத்தாரை உவந்து கூவி அழைக்கிறார் திருமூலர்.

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியை
தொட்டுத் தொடர்வன் துலையாப் பெருமையை
எட்டுமென் ஆருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சனமாமே.

என்பது திருமூலர் அழைப்பு. அன்பே இறைவனுக்கு மஞ்சனம் ஆதலை 'நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டி' என்னும் அப்பர் திருவாக்காலும் அறியலாம்.

திருமூலர் முன்னை வினை முடிச்சை அவிழ்த்தவர். பின்னை வினையைப் பிடித்துப் பிசைந்தவர். ஆகவே வினைப் பயன் காரணமாக இம் மண்ணுலகில் அவர் பிறக்கவில்லை. இறைவன் பெருமையைப் பாடவும், மக்களைச் சிவநெறி செலுத்தவும் தமிழகம் செய்த தவப்பயனாய்

தவராச யோகியாய் வந்து பிறந்தவரேயாவர். அவர் வழங்கும் செய்திகள் இன்றைய அறிவியல் உலகுக்கு அருள்நெறிக் காட்டி அதனைச் செந்நெறியில் செலுத்தும் என்பது ஒருதலை.

சக்கரவர்த்தி தவராச யோகி எனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ -தாயுமானவர்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

14. கல்வி, கல்லாமை

முனைவர். **பழ.முத்தப்பன்** எம்.ஏ.பி.எச்.டி.,
முதல்வர், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி

திருத்தொண்டத் தொகையில் 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று திருமூலரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழைத்துப் போற்றுவார். பன்னாளும் போற்றும் யோக நெறியில் வழிவழி வந்த சுந்தரர், நம்பிரான் என்று திருமூலரைஅழைப்பது - யோக நெறியின் பரம்பரையைப் போற்றுவதாகும். சைவ சமய அருளாளர்களில் யோக நெறியைப் பெருமைப்படுத்தியவர்களில் முதன்மையானவர் திருமூலர் என்பது குறிப்பிடத்தக்கது. யோக நெறியில் வாழ்ந்த திருமூலர் 'திருமந்திரம்' என்ற தமிழ் ஆகமத்தைத் தந்துள்ளார். இதனைப் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடும்பொழுது,

தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப

என்று குறிப்பிடுவார். ஆகமப் பொருளை யோக நிலைத் திருமூலர் பாடித் தந்தமையால் சைவ ஆகமப் பொருள்கள் வரையறையாக அமைந்தன. தந்திரம் தந்திரமாக வரையறைப் படுத்தி ஒன்பது தந்திரங்கள் மூலம் சைவத் தத்துவக் கருத்துக்கள் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன.

முதல் தந்திரம் பொது நிலையில் அறங்களைப் பற்றிக் கூறுகிறது. பல்வேறு நிலையாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவை பற்றிய செய்திகள் செறிவாகத் தரப்பெற்றுள்ளன. கல்வி, கல்லாமை, கேள்வி என்ற பொருட்பகுதிகள் ஏற்றத்தோடு தரப் பெற்றுள்ளன.

முதல் தந்திரத்தில் அமைந்த கல்வி, கல்லாமை பற்றிய செய்திகளை ஆய்வு நோக்கில் இக்கட்டுரை தர முற்படுகின்றது. 'தந்திரம்' என்பது 'கயிறு' எனப் பொருள் தரும். கயிறு என்பதை நூல் என்று கொள்வது உலக வழக்கு. இலக்கிய வடிவ நூல் என்று பெயரிட்டு வழங்குவதை நன்னூல் பொருள் நிலையில் உறுதி செய்யும். எனவே திருமந்திரத்தில் 9 தந்திரங்களும் 9 நூல்கள் போல் அமைந்து ஒன்பது வடங்கள் கட்டிய பெரிய மாலையாகத் திருமந்திரமாலை அமைந்துள்ளது.

முதல் தந்திரத்தில் இருபத்தி நான்கு தலைப்புகளில் 338 பாடல்களில் செய்திகள் இடம் பெற்றுள்ளன. பதிப்புக்களில் பாடல்

தொகை வேறுபட்டுக் காணப் பெறுகின்றது. இக்கட்டுரை தருமை ஆதீனப் பதிப்பின் அடிப்படையில் பாடல் எண்களைக் கொண்டுள்ளது. இருபத்தி நான்கு அதிகாரங்களில் யாக்கை, செல்வம், இளமை, உயிர் ஆகியவற்றின் நிலையாமை கூறப்பெற்று, கொல்லாமை, பிறன்மனை நயவாமை, உள்ளிட்ட ஒழுக்க நெறிகள் வலியுறுத்தப் பெறுகின்றன. நால்வகை வருணத்தின் ஒழுக்க நெறியும், அறச்செயல்களின் சிறப்பும் அடுத்து இடம் பெற்றுள்ளன. இறுதிப்பகுதியாக கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை உள்ளிட்ட நெறிமுறைகள் வகுத்துத் தரப் பெற்றுள்ளன.

கல்வி என்ற பகுதி இருபதாவது அதிகாரமாக அமைந்துள்ளது. முன் பத்தொன்பது பகுதிகளில் மானிட ஒழுக்கத்தையும், பண்பையும் கூறிய திருமூலர் ஒழுக்கத்திற்கும், பண்பிற்கும் ஏதுவாகிய கல்வியை 10 பாடல்களில் சிறப்பிக்கின்றார்.

பத்துப் பாடல்களிலும் இறைவனை அறிவதற்குத் துணை என்றும், இறைமையை அறிவதுதான் கல்விப் பயன் என்றும், இருகோணங்களில் கல்வியின் மேன்மையை வலியுறுத்துகின்றார். கல்லாமை 22 ஆம் பகுதியாக அமைந்து கல்லாமையால் வரும் கேடுகள் உணர்த்தப் பெறுகின்றன.

உவமை நலம்: எந்த ஒரு கருத்தையும் வலியுறுத்தப் படைப்பாளர்கள் உவமை நலத்தைத் தக்கவாறு பயன்படுத்துதல் - இலக்கிய உத்திகளில் ஒன்றாகும். தத்துவ நிலையோடு கருத்துக்களைத் தருவதாகிய திருமந்திரத்தில் உவமைநலம் என்னும் தவலருங்கூத்தி ஆனந்தக் கூத்தாடுகிறாள் எனலாம்.

நூலறிவு பெறல் கல்வியின் வளர்ச்சியைக் காட்டும். நூல்கள் பலதிறப்பட்டதாயினும் ஞான நூல்கள்தான் மெய்ப்பொருளை உணர்த்தும் என்பதால் திருமந்திரம் மெய்நூல்களைப் பற்றுகின்றவர்கள் ஆன்மலாபத்தைப் பெறுவர் என்பதைத் தக்க உவமைகள் மூலம் விளக்குகிறது.

நூலேணி ஒன்றைப் பற்றிக் கோட்டையில் ஏறுவோர் அதன் உச்சியை அடையலாம். அவ்வாறு நூலாகிய ஏணியின் துணையை நாடாது பக்கச் சுவர்களைப் பற்றி ஏறினால் இடையேதான் நிற்பார்கள். முழுமையை அடையமாட்டார்கள். அதேபோலத்தான் ஞானநூல்களைப் பற்றி அதனை நன்கு கற்று ஆன்ம லாபத்தைப் பெறக் கருதாதவர்கள், பிற நூல்களைக் கற்று மயக்க நிலையைத்தான் பெறுவார்கள் என்பதை,

"நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பால் ஒன்று பற்றினால் பண்பின் பயன் கெடும்" (பா. 6)

என்ற பகுதியின் மூலம் குறிப்பிடுகின்றது. அதுமட்டுமல்லாது அதே பாடலில் உணவு உண்பவர் தமக்கு இடையூறு செய்யும் பறவைக் கூட்டங்களைத் தன் கையில் உள்ள கோல் கொண்டு எவ்வாறு விரட்டுகின்றார்களோ - அதேபோல ஐம்புலன்களாகிய பறவைக் கூட்டத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் மெய் நூலைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்கிறது.

எத்தனை நூல்களைக் கற்றாலும் மெய்ப்பொருளை அறிய மெய்ஞ்ஞான நூல்களையே கற்கவேண்டும் என்று திருமந்திரம் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றது. இதனை வலியுறுத்த பாடல் 7 ல் ஓர் உவமை இடம் பெற்றுள்ளது. சூரியனின் கதிர்கள்-எங்கும் பரவி நின்றாலும் சூரியகாந்தக்கல் மூலம்தான் தீயை நாம் பெற முடியும். அதுபோல இறைவன் திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும் மெய்ஞான நூலறிவு பெற்றிருந்தால்தான் இறைவனை அவன் திருவருளை உணரமுடியும் என்பதே அவ்வுவமை தரும் பொருளாகும்.

இதேபோல, கல்லாமை அதிகாரத்தில் கண்ணிருப்பவரே விளாம்பழத்தைப் பார்த்துப் பறித்து ருசிக்க முடியும். குருடர்கள் கனியை உணரமுடியாது. கையால் தடவுகின்ற நிலையில் பிஞ்சுகளையோ அல்லது செங்காய்களையோ பெற முடியும். அதுபோல, கற்றவர்கள்தான் மெய்ப்பொருளை அறியமுடியும். கல்லாதவர்கள் மெய்ப்பொருளாம் இறைவனை அறிய முடியாது என்று உவமைநலம் சிறக்கக் கருத்தினை தந்திருக்கின்றது திருமந்திரம் (பாடல்,6)

சொற்சுருக்கம்

உவமை மூலம் கருத்தை வலியுறுத்தும் திருமந்திரம் தக்க செய்திகளைச் சுருக்கித் தருவதிலும் முதன்மை பெறுகிறது. கல்வியை இளமையில் பெற வேண்டும் என்பது 'நிற்கின்ற போதே கல்' என மூன்றாம் பாடலில் குறிக்கப் பெறுகின்றது. கற்றவரே இறையருளாம் பேரின்பத்தை அடைய முடியும் என்பதை,

கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே (பா. 9)

என்ற பகுதி வலியுறுத்துகிறது. கற்றவரே கண்ணுடையவர் ஆவார் என்பதை,

கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண்ணுண்டு (பா. 2)

என்ற பகுதி காட்டுகிறது. எழுபிறப்பும் கல்வி துணையாகும் என்பதை 'துணையாய் வரும் தூய நற்கல்வியே' என்ற தொடர் (பா.5) வலியுறுத்தும்.

கல்லாதவர்கள் இறைவனை அறியமுடியாது என்பதைக் கல்லாமை அதிகாரத்தில் "*கல்லாதவர்கள் கலப்பறியாரே*" (பா.2) என்ற தொடர் தருகிறது. இதில் கலப்பறியாரே என்பது எங்கும் நிறைந்த இறைத்தன்மையைக் குறிக்கும். கல்லாதவரோடு கூடுதல் கூடாது என்பதைக்,

"*கல்லாத மூடரைக் காணவும் ஆகாது*" என்ற தொடர் மூலம் திருமந்திரம் (பா.8) விளக்குகிறது.

தத்துவ விளக்கம்

இவ்வாறு இரு அதிகாரங்களிலும் கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளமை படித்து இன்புறத் தக்கதாகும். திருமந்திரம் இலக்கியத்திற்கு இலக்கியமாகவும், தத்துவத்திற்குத் தத்துவ நூலாகவும் விளங்குவதாகும். எனவே பொது நிலையில் கல்வியின் மேன்மையைப் பற்றி இரு அதிகாரங்களில் கூறினாலும் கல்வியால் பெறக்கூடிய பயன் இறைவனை அறிவதே என்பதைச் சிறப்பாக இரு அதிகாரங்களும் கூறுகின்றன. அவ்வாறு கூறுகின்ற பொழுது இறைத் தத்துவத்தைத் தத்துவ அடிப்படையில் விளக்கவும் செய்கின்றன. இறைவனின் திருவடியை உணருகின்ற கல்வியே கல்வி. அத்திருவடிக் கல்வியைக் கற்றால் வினையறும் என்பதை,

"*நிலையுடையவான் கழல் கற்கின்ற*
செய்மின் கழிந்து அறும் பாபங்கள்" (பா.3)

என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இதனையே சேக்கிழாரும்,

"*பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*"
(திருஞான- பா.70)

என்று குறிப்பிடுவார். எனவே ஞானநூல்களைக் கற்று மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றால் இறைவன் திருவடியை அடையலாம் என்ற தத்துவப் பொருள் விளக்கப்படுவதைக் காணலாம்.

இறைவன் இயக்க உலகம், உயிர்கள் இயங்குகின்றன. இதனை சிவஞான போதம், "*போக்கு வரவு புரிய ஆணையின்*" என்று (சூத்திரம்.2) குறிப்பிடும். இத்தகைய இறைநிலைத் தத்துவத்தை,

"*உள்நின்ற சோதி நடத்தும் தொடர்பு*" (பா.10)

என்று கல்லாமை அதிகாரம் குறிப்பிடும். இந்தத் தத்துவத்தை ஞானநூல் கற்றவர் அறிவர். கல்லாதவர் அறியமாட்டார்கள் என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது.

இவ்வாறு பிற்காலச் சாத்திர நூல்களுக்கு வழிகாட்டியாகத் தத்துவக் கருத்துக்களை உரிய வகையில் வகுத்துரைக்கின்றது திருமந்திரம்.

மேலும் திருமந்திரத்தின் இவ்விரு அதிகாரங்களும், "ஞானக் கல்வியைப் பெற்றால்தான் இறைவனை அறியலாம்" என்று சுட்டுவதைப் பல எடுத்துக்காட்டுகளால் காட்டலாம்.

1. .குறிப்பறிந்தேன் - கல்வி கற்றேனே. (பா.1)
2. .ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும். (பா.9)
3. .கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே. (பா.0)
4. .கணக்கறிந்தோர் கல்வி கற்றறிந்தோரே. (பா. 7)
5. .கல்லா மூடர் கருத்தறியாரே. (கல்லா- பா. 8)

கல்வியின் தேவை

வாழ்வில் வளம்பெற செல்வங்கள் தேவை. பொருட்செல்வம், மக்கட்செல்வம், கல்விச்செல்வம், கேள்விச் செல்வம் எனச் செல்வங்கள் பலதிறப்படும். செல்வங்களில் எது வேண்டுமோ வேண்டாமோ- கல்விச் செல்வம் மிக அடிப்படையானது. இக்கல்விச் செல்வம் வெறும் நூலறிவால் மட்டும் வாராது. ஞானத்தை அருளுகின்ற அனுபவ அறிவாலும் வரும். இந்த அனுபவ அறிவைத்தான் திருமந்திரம் இவ்விரு அதிகாரங்களில் மேலான கல்வி அறிவாகக் குறிப்பிடுகின்றது. அனுபவ அறிவு என்பது இறைவனைப் போற்றுவதால், இறைத் தொண்டு செய்வதால், இறைவனை இதய வீட்டில் தங்க வைப்பதால், பக்தியால் கிடைப்பதாகும். எனவேதான் கல்வி என்னும் அதிகாரத்தில் இறைவனோடு கல்வியை இணைத்துக் கூறுகிறது திருமந்திரம்.

முதல் பாடலிலேயே இறைவனை அறிகின்ற அனுபவ அறிவே ஞானக் கல்வியாகும் என்பதனைத் தெளிவாகத் திருமந்திரம் காட்டுகிறது.

"குறிப்பறிந்தேன் உடலோடு உயிர் கூடிச்
செறிப் பறிந்தேன் மிகுதேவர் பிரானை
மறிப்பறியாது வந்துள்ளம் புகுந்தான்
கறிப் பறியாமிகும் கல்வி கற்றேனே" (பா. 1)

என்பது பாடல், இதன் பொருள்- உடல் பற்றியும், உயிர் பற்றியும் அறிந்தேன். அதாவது அனுபவத்தால் உணர்ந்தேன். அவ்வுணர்வு தேவர்பிரானாம் இறைவனை உள்ளத்தில் தங்க வைத்தது. இறைவன் உள்ளத்தில் புகுந்ததால் உவர்ப்பு இல்லாத மாசில்லாத உயர் கல்வியைக் கற்றவனானேன் என்பதாகும். இதன் பொருளைச் சுருக்கிச் சொன்னால் என்னை அறிந்து - இறையை உணர்ந்து - ஞானம் பெற்றேன் எனக் கூறலாம். எனவே இறைவனை அறிய - ஞானம் கிடைத்திடும் என்பது பெறப்படுகிறது.

இதனையே எதிர்முகமாகக் 'கல்லாமை' அதிகாரத்தில்,

கில்லேன் வினைத் துயரார்க்கும் அயலார்னேன்
கல்லேன், அரனெறி கல்லாத் தன்மையின் (பா. 6)

எனக் குறிப்பிடப் பெறுகின்றது. அரனெறியாகிய இறையை உணரும் அறிவு இன்மையால் - வினையை அனுபவிக்கின்றேன், மயங்கி நிற்கின்றேன் என்பது இப்பகுதியின் பொருளாகும். எனவே அனுபவ-ஞானக்கல்வி மிகவும் தேவை என்பது பெறப்படுகின்றது. இக்கல்வி இல்லாதவர் பற்றி,

1. *'கல்லாதவர்கள் கலப்பறியாரே' (பா.1)*
2. *'கல்லாதார் நெஞ்சத்து காண ஒண்ணாதாரே' (பா.3)*
3. *'கல்லா மனிதர் கயவர்' (பா.5)*
4. *'கணக்கறிந்தார்க்கன்றி காணவொண்ணாது' (பா.7)*
5. *'கல்லா மூடர் கருத்தறியாரே' (பா.8)*

என்று பலவாறு திருமந்திரம் குறிப்பிடுகிறது.

மந்திரமும் திருக்குறளும்

திருமந்திரம் பிற்காலச் சாத்திர நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பது போல, முன்னோர் மொழி பொருளைத் தன்னகத்தும் கொண்டு விளங்குவதுமாகும். தமிழ் மறையாம் திருக்குறள் கருத்துக்களைப் பொன்போல் பொதிந்து வைத்துக் கொண்டுள்ளது.

"கண்ணுடையவர் என்பவர் கற்றோர்- முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்"

என்ற குறட்பாவின் கருத்தைக் கல்வி அதிகார இரண்டாம் பாடல் "கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண்ணுண்டு" என்று திருமந்திரம் வெளிப்படுத்துகிறது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை" என்ற குறள் வரியைக் கல்வியதிகார ஒன்பதாம் பாடல் "பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்" எனப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை (பா. 331)

என்ற குறட்பாப் பொருளைக் கல்லாமை அதிகார மூன்றாம் பாடல்

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென்று உணர்வீர்காள்

எனப் போற்றிக் கொள்கிறது. இவ்வாறு முன்னவற்றின் வழிபற்றிப் பின்னவைகட்கு வழிகாட்டியாய் விளங்கும் பெருமை பெற்றது திருமந்திரம்.

இவ்வாறு திருமந்திரம் என்னும் பத்தாம் திருமுறைப் பனுவல் கல்வி-கல்லாமை என்ற இருபகுதிகள் மூலம் கற்றவர் சிறப்பு, கல்வியின் பயன், கல்லாமையின் தீமை ஆகியவற்றைச் சமயக் கருத்துக்களோடு தருகிறது எனலாம்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

15. நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை

பேராசிரியர். முனைவர். க. பூரணச்சந்திரன்
தமிழ்த்துறை, பிசப் ஹீபர் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி

திருக்குறள் எல்லாற்றினின்றும் நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்கும் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த நூல். (electic school of thought) இதனை பரிமேலழகரும் தமது உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதனால் அதனை எந்தச் சிந்தனைக் குழுவாயினும், எந்த தத்துவத்தைச் சேர்ந்தவராயினும் ஏற்றுப் பயன்படுத்திக் கொண்டனர். திருமந்திரமும் ஏறத்தாழ அதுபோன்று எல்லாவற்றினின்றும் நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்கும் ஒரு சிந்தனைப் பள்ளியை சேர்ந்த நூலேயாகும். (electic school of mysticism)

திருக்குறள் அமைப்பு யாவருக்கும் தெரிந்த ஒன்று. ஆதலின் அதனை விட்டு திருமந்திரத்தைப் பற்றிய அடிப்படை செய்தியான சில செய்திகளை காணலாம். திருமந்திரம் ஏறத்தாழ கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இது அறநூல்களின் காலம். திருக்குறளின் காலமும் ஏறத்தாழ அதுவாகவே இருக்கலாம். சற்றே முன்பின்னாக இரு நூல்களும் தோன்றியிருக்கலாம் என வாய்ப்புள்ளது. அதனாலும் இரண்டின் கருத்தோட்ட ஒப்புமையும்- அதாவது நல்லனவற்றைப் பல நூல்களின்றும் திரட்டிச் சொல்லுதல் - ஏற்பட்டிருக்கலாம். மேலும் இரண்டிற்கும் சொல்-தொடர் ஒப்புமைகளும் மிகுதி.

திருமந்திரம் ஒரு சாத்திர நூல் - ஆகமநூல். எனவே இதைப் பிற்காலத்தில் தோன்றிய சாத்திர நூல்களுடன் வைப்பது ஒருபுடை பொருந்தும். அதுவும் முற்றிலும் பொருந்தாது- காரணம், ஆகம நூல்களினின்றும் மேம்பட்டு, திருமந்திரம் யோகமார்க்கத்தை- சித்தர் மார்க்கத்தை புகட்டும் எளிய நூலாகவும் விளங்குகிறது. கால முதன்மை நோக்கியோ, அதன் எளிமை நோக்கியோ, அதனைப் பத்தாம் திருமுறையாக சேர்த்து விட்டார்கள். சித்தர் நூல்கள் வரிசையிலும் முதல் நூல் இதுதான்.

திருமந்திரத்தின் செறிவு, சொல்லாட்சி, இலக்கிய நயம் ஆகியவை சிறப்புடையவை. இதன் அடிகள் பெரும்பாலும் தம்மளவில் முடியும் தன்மை கொண்டவை. பலசமயங்களில் முதலிரு அடிகளில் தம்மளவில் முடிந்து மூன்றாம் நான்காம் அடிகள் இணைத்து வரும் தன்மை

கொண்டுள்ளன. இவற்றில் சொற்களில், தொடர்களில் திரும்பத்திரும்ப வருதலும் மிகுதி. இத்தன்மைகளாலும் வெண்சீரில் இவ்வடிகள் அமைவதாலும் மனத்தில் எளிதாக நிற்கும் தன்மையைத் திருமந்திர அடிகள் பெற்றுள்ளன. ஒரு பொன்மொழி பழமொழித் தன்மையும் பெற்றுள்ளன.

திருமந்திரத்தில் கையாளப்படும்-யாப்பு- வெண்சீர்களால் நான்கடிகள் தொடர்ந்து அமையும் யாப்பு-திருக்குறுந்தொகை என்னும் தனி யாப் பாகவே பிற்காலத்தில் உருப்பெற்றது. நாயன்மார் பாக்களிலும் இது மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. திருக்குறளின் வடிவமும் இதனை ஒத்ததே. வெண்சீர்கள் முதலடியில் நான்கும், அடுத்த அடியில் மூன்றும் அமைவது. வெண்சீர்கள் அறம் சொல்ல ஏற்றவை என்பதால் திருக்குறுந்தொகை யாப்பினைத் தேர்ந்தெடுத்த திருமூலர் குறள் வெண்பாவைத் தேர்தெடுத்த திருவள்ளுவருக்கு எந்தவிதத்திலும் குறைந்தவரல்லர்.

திருமந்திரம் முப்பது உபதேசங்கள், 300 சூத்திரங்கள், 3000 பாக்களைக் கொண்டது என்பது வழக்கு. 3000 பாக்கள் என்பதில் ஐயமில்லை. நூல் ஒன்பது தந்திரங்கள், 232 அதிகாரங்கள் கொண்டு இன்று அமைந்துள்ளது. சிவபெருமான உபதேசித்தருளியவை 28 ஆகமங்கள் என்றும், அதில் ஒன்பது ஆகமங்கள் திருமந்திரம் நூலாக அமைந்துள்ளன என்றும் சொல்வது மரபு.

திருமந்திரத்தின் ஆசிரியர் பற்றியும், திருக்குறளின் ஆசிரியர் பற்றியும் ஆதாரபூர்வமான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை. ஆனால் இருவரைப் பற்றியும் கட்டுக்கதைகள் ஏராளமாக உண்டு. திருமந்திரப் பாயிரத்திற்கு முன்னால் ஒரு விநாயகர் துதி உள்ளது. அது பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப் பட்டதாகலாம். அதிகாரங்கள் சமஅளவிலான பாட்டுகள் கொண்டவையாக இல்லை. இரண்டு மூன்று பாட்டுகள் முதலாக ஐம்பது பாட்டுகள் வரை அமைந்திருக்கின்றன.

கருத்துகள் ஒப்பீடு

திருமந்திரத்திற்கும் திருக்குறளுக்கும் கருத்து நிலையில் பல ஒப்புமைகள் உண்டு. சைவக் கருத்துக்களையே கூறுவதாகச் சொன்னாலும் திருமூலரது ஒரு மிகப் பரந்த நன்னோக்குக் கொண்ட இதயம். '*நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு நெறியின் நெருஞ்சில் முட் பாயகில்லாவே*'(1617) என அறநெறியை வலியுறுத்துகிறார் திருமூலர். அதனால் '*நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*' (85) என்னும் நேரத்தில்

அக்கருத்துக்களைத் தாம் இவ்வையகத்திற்குச் சொல்வதாகக் குறிப்பிடுகின்றார்.

கடவுள் வாழ்த்தில் '*தன்னையொப்பார் ஒன்றுமில்லாத் தலைமகன்*' எனக் கடவுளைக் குறிப்பிடுகிறார் மூலர். இது தனக்குவமையில்லாதான் என்னும் குறள் தொடரையும் கருத்தையும் நினைவூட்டுகிறது. இவ்வாறே 'உடம்பொடு உயிரிடை விட்டோடும் போது'(126) என்ற திருமந்திரத் தொடர் '*உடம்பொடு உயிரிடை அன்ன மற்றன்ன*' என்னும் காமத்துப்பால் குறட் கருத்தினை நினைவூட்டுகிறது. '*பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்*' (298) என்னும் திருமந்திரத் தொடர் '*பற்றுக பற்றான் பற்றினை*' என்னும் குறட் கருத்தையும் தொடரையும் ஒத்துள்ளது.

திருவள்ளுவர் 'மலரன்ன கண்ணாள் முகமொத்தியாயின்' என்பது போலப் பெண்களின் கண்களைப் பூவுக்கு ஒப்பிடுவார். உழவன் உழவினிற் பூத்த குவளை/உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு/உழவன் அதனால் உழவொழிந்தானே (1219) என்பது மந்திரம். இம்மாதிரி ஆங்காங்கு காணப்படும் தொடர் ஒப்புமைகளும் இவ்விருநூல்களும் ஏறத்தாழ ஒரே காலத்தில் எழுந்திருத்தல் வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

அதிகாரப் பெயர்களில் திருமந்திரத்திற்கும் குறளுக்கும் ஒப்புமை ஒருபுடை காணப்படுகிறது. திருமந்திரத்தில் இடம்பெறும் பின்வரும் அதிகாரத் தலைப்புகள் திருக்குறள் அதிகாரத் தலைப்புகளை ஒத்துள்ளன. பாயிரம்-கடவுள் வாழ்த்து, முதல் தந்திரம்- கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, நல்குரவு, அன்புடைமை, கல்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை, வான் சிறப்பு என்பது திருமந்திரத்தில் வானச் சிறப்பு எனக் காணப்படுகிறது. கேள்வி என்பது, திருமந்திரத்தில் கேள்வி கேட்டமைதல் என மாறுகிறது. வரைவின் மகளிர் என்பது திருமந்திரத்தில் மகளிர் இழிவு என்பதாக அமைகிறது.

அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்திற்கு ஒப்ப திருமந்திரத்தில் அறன் செய்வான் திறன், அறஞ் செயான் திறன் என்னும் இரு அதிகாரங்கள் உள்ளன. வானச் சிறப்பினை அடுத்து தானச் சிறப்பு என்னும் அதிகாரம் அமைந்துள்ளது. இது குறளின் ஈகை என்னும் அதிகாரம் ஒத்தது. அன்புடைமை என்னும் அதிகாரத்தை ஒட்டி 'அன்பு செய்வாரை அறிவான் சிவன்' என்னும் ஓர் அதிகாரம் உள்ளது. நாலடியாரை ஒத்து திருமந்திரத்திலும் மூன்று நிலையாமை அதிகாரங்கள் தொடக்கத்திலேயே அமைந்துள்ளன.

இரண்டாம் தந்திரத்தில் பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் ஆகிய அதிகாரங்கள் உள்ளன. மூன்றாம்-நான்காம்-ஐந்தாம் தந்திரங்களில் ஒப்புமை அதிகாரங்கள் அறவே இல்லை. ஆறாம் தந்திரத்தில் துறவு, தவம் ஆகிய அதிகாரப் பெயர்கள் ஒன்றியிருக்கின்றன. அருள் என்னும் அதிகாரம் திருமந்திரத்தில் காணப்படுகிறது. கூடாவொழுக்கம் என்னும் அதிகாரக் கருத்துகள் தவதூடணம் என்னும் அதிகாரத்தில் உள்ளன. அதே சமயம் ஏழாம் தந்திரத்தில் கூடாவொழுக்கம் என்னும் அதிகாரமும் காணப்படுகிறது. திருக்குறளின் நீத்தார் பெருமையுடன் திருமந்திரத்தின் அடியார் பெருமையை ஒப்பிடலாம். எட்டாம் தந்திரத்தில் புறங்கூறாமை, வாய்மை, அவா அறுத்தல், என்னும் அதிகாரங்கள் உள்ளன. ஒன்பதாம் தந்திரத்தில் ஒப்புமையுடைய ஒரே அதிகாரம் ஊழ். ஏறத்தாழ திருமந்திரத்தில் இருபத்தைந்து அதிகாரப் பெயர்கள் திருக்குறள் அதிகாரப் பெயர்களோடு ஒத்துப் போகின்றன. அதிகாரப் பெயர்களில் ஒப்புமை காணப்பட்டாலும் திருமந்திரம் ஓர் ஆகமநூல், திருக்குறளே வாழ்க்கையில் அடையவேண்டிய முப்பொருள்களையும் பற்றிக் கூறும் நூல் என்னும் வேறுபாடு அடிப்படையானது.

இக்கட்டுரையில் நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை என்னும் அதிகாரங்களில் காணப்படும் ஒப்புமைகளை நோக்கலாம். திருமந்திரத்தில் நடுவுநிலைமை அதிகாரத்தில் (23) நான்கே பாக்கள் மட்டுமே உள்ளன. அடுத்த அதிகாரம் கள்ளுண்ணாமை(24)யில் பதின்மூன்று பாக்கள் உள்ளன. திருக்குறளில் நடுவுநிலைமை, அறத்துப்பாலில் (அதிகாரம் 12) உள்ளது. கள்ளுண்ணாமை, பொருட்பாலில் (நட்பியல் - அதிகாரம் 93) உள்ளது.

நடுவுநிலைமை

நடுவுநிலைமை என்பதற்கு இரு ஆசிரியர்களும் கொள்ளும் பொருள்வேறு. திருமூலர் காட்டும் நடுவுநிலை என்பதற்கு சிரசின்மேல் விளங்கும் ஒளியில் நிற்றல், நடுவாகிய சுழுமுனையில் நிற்றல், சிவசக்திக்கிடையே நிற்றல், சூரிய சந்திரனாகிய இரு கண்களுக்கு மேல் புருவநடுவில் நிற்றல், எல்லா உயிர்களிடமும் அந்தண்மை பூண்டொழுகல் எனப் பல்வேறு அர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் கடைசிப்பொருளை மட்டுமே திருவள்ளுவர் கொள்கிறார். நீதிவழங்குவதில் சமநோக்குக் கொள்ளுதல் என்பதும் அவரது பொருட்பாடு. திருமூலர் தேவர்கள் அனைவரும்- நான்முகன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளும், ஞானிகளும் நிற்பதாகக் கூறித், தாமும்

நடுநிற்பதாக உரைக்கிறார். 'நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை' என்பது அவரது கூற்று. இறைவன் கருணையை நினைந்து திருவடி ஞானம் பெறுபவரே நடுவுநிற்பவர் என்பது அவர் கருத்து. குறள் கூறும் நடுவுநிலை வேறானது. 'கேடும் பெருக்கமும் இல் அல்ல - நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி' என்பது குறள். மேலும் 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்பதும் திருவள்ளுவர் வாக்கு. எனவே நடுவாக நிற்றல் என்பது சான்றோரின் பண்பு என்பது பெறப்படும். இது சைவஞான நோக்கினது அன்று. வாணிகம் செய்வோரும் நடுநிலையாளராக இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் இவ்வதிகாரத்தின் கடைசிக் குறட்பாவில் வலியுறுத்துகிறார்.

கள்ளுண்ணாமை

கள்ளுண்ணல் என்பது பற்றியும் இருவேறுபட்ட நோக்குகளே காணப்படுகின்றன. திருமூலர் சைவநோக்கிற்கு ஒப்ப, சிவானந்தத் தேறல்(மது) உண்ணல் என்பதோடு சாதாரணக் கள்ளுண்ணலை முரண்படுத்தி நோக்குகிறார். சிவானந்த மதுவுண்ணலை விட்டுக் கள்ளுண்போரை இடித்துரைக்கிறார். 'காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும், மாமலமும் சமயத்துள் மயலுறும், போமதியாகும்' என்று கள்ளுண்பார் நிலையை விளக்குகிறார் மூலர், அதாவது கீழ்மக்களே கள்ளுண்பர், சமயச் சண்டைகளில் ஈடுபடுவர், அவர்களது மதி அறிவு கெட்டுப்போகும் என்பது திருமூலர் வாக்கு. திருவள்ளுவரும் கள்ளுண்போருக்குப் புத்திசொல்ல இயலாது என்பார். களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்குளித்தானை தீத்துரீஇ அற்று என்பது குறள். அதாவது கள்ளுண்டவருக்கு தர்க்கநியாயங்களை எடுத்துரைத்தல் நீருள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுதல் போன்ற பயனற்ற செயலாகும் என்பது வள்ளுவர் கருத்து. இதேபோலத்தான் திருமூலரும், உள்ளுண்மை ஓரார்... தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் தேர்வுறார். கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே என்று கள்ளுண்பவர்கள் என்றும் உண்மையுணர மாட்டார்கள் என்கிறார். 'மயங்கும் தியங்கும் கள் வாய்மையழிக்கும்' என்றும் கள்ளின் இயல்பைச் சொல்கிறார். திருவள்ளுவர் திருமூலரைப் போல கள் வாய்மையை அழிக்கும் என்று சொல்லாவிட்டாலும் கள்ளுண்பவர்கள் சான்றோரால் எள்ளப்படுவர் என்றும், அவர்கள் இறந்தவர்க்கு ஒப்பானவர் என்றும் சொல்லிச் செல்கிறார்.

திருமூலர் கள்ளோடு காமத்தையும் ஒன்றாக இணைத்தே நோக்குகிறார். திருவள்ளுவர் அவ்வாறு செய்யவில்லை. 'வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர், காமத்தோர் காமக் கள்ளுண்டே கலங்குவர்' என்பது அவர்

கூற்று. வாமமதத்தினர் (சக்தியை வழிபடுவோர்) கள்ளுண்பதால அட்டமா சித்திகளும் உண்டாகும் என்று நம்பிக் கெடுகிறார்கள் என்றும் திருமூலர் சாடுகின்றார்.

திருமூலரும் திருவள்ளுவரும் கள்ளுண்ணலைக் கடிந்தாலும் இருவரது நோக்கங்களும் வேறாதலை நாம் காண்கிறோம். கள் அறிவை அழிக்கும், சான்றோர் இனத்தில் இழிவைத் தரும், மானங்கெடுக்கும், புகழை அழிக்கும் என்ற நடைமுறைக் காரணங்களுக்காக அதனை இழித்துரைக்கிறார் வள்ளுவர். கள்ளுண்பவன் தன் தாயின் பார்வையிலும் வெறுக்கப்படுவான். அவன் திருந்தவேண்டுமானால் அவன் கள்ளுண்ணா வேளையில் கள்ளுண்ட ஒருவனைக் காட்டி ஒருவேளை திருத்த முயலலாம். இவ்வாறு நடைமுறை ஒழுக்கம் சார்ந்ததாக வள்ளுவர் நோக்கு அமைகிறது.

திருமூலர் நோக்கு நடைமுறை சார்ந்ததன்று. சமயம் சார்ந்தது. அட்டமா சித்திகளையும் இறைவன்-இறைவி மனம் வைத்தால் அடையலாம். கள்ளுண்டு அவற்றை அடையலாம் என்பது எவ்வளவு அறியாமை என சாக்த மதத்தினரைச் சாடுகிறார். இறைவனது ஆனந்தத்தேன் பருக அறியாதவரே கள்ளுண்டு மயங்குவார் என்கிறார். மேலும் கள்ளுண்ணல் சிற்றின்ப மோகத்தைத் தூண்டி மனிதனின் மேலான நாட்டத்தை அழித்துவிடும் என்கிறார். 'எண்சித்தி மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று ஆகும் மதத்தால் அறிவழிந்தாரே' என்பது திருமூலர் வாக்கு. எனவே அவரது கள்ளுண்ணாமை என்பது சமயம் சார்ந்த கருத்தாக மலர்கிறது.

மேற்கண்டவற்றால் திருவள்ளுவர் சமயம் சாராத - நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்த கருத்துக்களைக் கூறுகின்றார் என்பதையும், திருமூலர் சிவஞானம் அடையும் நோக்கிலிருந்து- சமய நோக்கிலிருந்து கருத்துக்களைக் கூறுகின்றார் என்பதையும் நாம் நன்குணரலாம். எனினும் திருமூலருடையதும் முழு அளவில் சமயநோக்கு என்றே சொல்லிவிட முடியாது. மேற்கண்டவை தீவிர சாதகனுக்கு உதவக்கூடிய நோக்கு என நாம் கருதினாலும் திருமூலரும் ஒரு சமயத்தை உண்மையாக அறிந்தவனுக்கு எல்லாச் சமயமும் ஒன்றே என வலியுறுத்துவது போலவே தோன்றுகிறது. 'ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள' என்பது திருமந்திரம். எனவே திருமந்திரமும் திருக்குறள் போலவே சமயப் பொது நூலாகவே இயங்குவதைக் காணமுடியும். எச்சமயத்தினரானலும் மூலர் குறிப்பிடும் மார்க்கங்களை மேற்கொண்டால் அட்டாங்க சித்திகளைப் பெறலாம்.

குறளும் மந்திரமும் வெவ்வேறு நோக்கில் அறிவுரைப்பது சுட்டிக்காட்டப்பட்டது. ஆயினும் இரண்டும் மனிதகுலத்தின் பொதுத்தன்மையை நோக்கின. குறளின் பொதுத்தன்மை உணரப்பட்ட அளவு மந்திரத்தின் சமயச் சார்பற்ற தன்மை உணரப்படவில்லை. திருமந்திரத்தின் நோக்கு சமயத்தை அறிவு வழியில் அணுகும் நோக்கு. அது சாதாரண மனிதர்களால் உணர்ப்படாதது ஆச்சரியமன்று. திருமந்திரம் சமயச் சார்பாகக் கூறுவதுபோலத் தோற்றமளிக்கின்ற பல கருத்துக்கள் (சிவன் சக்தி போன்ற தெய்வப் பெயர்கள் உட்பட) குறியீடுகளாகவே கொள்ளத்தக்கன. அறிவுபூர்வமான சமய நோக்கு மனிதனுக்கு அந்நியமாக இருப்பதாலும் திருமந்திரத்தின் சமயப்பொதுமை உணரப்படாமையாலும் அது சைவநூலாகக் கருதப்படும் போக்கு உருவாகி விட்டது. திருக்குறளுக்கு அவ்வாறு நேரவில்லை என்பதை மட்டும் நாம் சுட்டிக்காட்டலாம்.

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் தந்திரம்

16. அகத்தியம்

சைவத்திரு. **வா. ஞானப்பிரகாசம்**
திருப்பாதிரிப்புலியூர்

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தின் முதல் தலைப்பாக அமைந்தது அகத்தியம் என்பதாகும். அகத்தியம் என்பது அகத்தியரது பெருமை கூறும் பகுதியாகும்.

தமிழ் ஆகமம் எனப் போற்றப்படும் திருமந்திரம், தமிழ் முனிவராகிய அகத்திய முனிவரது வரலாற்றை இங்கு முதலில் இரண்டு திருமந்திரங்களால் குறிப்பிடுகின்றார்.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. -333

என்பது முதல் தந்திரம்.

ஒரு பொழுது நிலம் சமனாய் நின்று உயிர்களைத் தாங்காது. ஒருபக்கம் சாய்ந்து கீழ்மேலாகப் புரண்டு அழியும் நிலை உண்டாக, அதனை, அறிந்த தேவர்கள் அச்சமடைந்து, சிவபெருமானிடம் விண்ணப்பித்து முறையிடுதலும், அப்பெருமான் அகத்திய முனிவரை அழைத்து, 'இதய வெளியுள் பரஞ்சுடரை எப்பொழுதும் இருத்தி நிற்றலால் அகத்தியன் எனப் பெயர் பெற்ற முனிவனே, உலகை நிலை நிறுத்த வல்லவன் நீ ஒருவனுமே ஆவாய்; ஆதலால், விரையக் கெடும் நிலை எய்திய நிலத்தில், மேல் எழுந்த இடத்தில் நீ சென்று அமர்ந்து சமன் செய்' என்று அருளிச் செய்தான். அதனால், இவ்வுலகம் நிலை பெற்றது என்பது இதன் பொருள்.

சிவபெருமான், மலைமகளை மலையரையனிடம் சென்று மணம் புரிந்த பொழுது, தேவர், முனிவர், கணங்கள் முதலிய பலரும் ஒருங்கு கூடினமையால் நிலம் தென்பால் எழுந்து, வடபால் வீழ்ந்து புரள்வதாகலும், தேவரது வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் அகத்திய முனிவரைத் தென்பால் பொதிய மலையில் சென்று இருக்கச் செய்து, நிலம் முன்போலச் சமனாகும்படி நிறுத்திய வரலாறு கந்தபுராணத்துள் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

அகத்தியன், அகத்தில் பரஞ்சுடரை எப்பொழுதும் இருத்தியிருப்பவன் - அகத்தியன் எனப் பெயர்க்காரணம் இப்பாடலில் சொல்லப்பட்டது.

'உலகின் எப்பொழுதெல்லாம் அதர்மம் பெருகுகின்றதோ, அப்பொழுதுதெல்லாம் நான் அவதாரம் செய்வேன்' எனக் கண்ணன் சொன்னதாக வைணவம் கூறும். ஆனால் சிவபெருமான தனது திருவருள் வழிநிற்கும் பெரியோரை விடுத்தே செந்நெறி நிறுத்துகின்றான் என்பது சைவநெறி.

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி உதயஞ் செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே -334

என்பது அடுத்த பாடல்.

புறத்தும் அகத்தும் தீயை உண்டாக்கி வளர்க்கின்ற, மேற்குத் திசையில் ஞானாக்கினியாய் விளங்கிய அகத்திய முனிவர் தென்திசையிலும், தவம் உடையவரே காணத்தக்காராக. அரிதில் விளங்குகின்ற தவக் கோலத்தை உடைய முனிவராகிய சிவபெருமான் வடதிசையிலும் வீற்றிருந்து உலக முழுவதையும் விளக்குகின்ற ஒளியாய்த் திகழ்கின்றார்கள். என்பது இதன்பொருள்.

இங்கு மேல்பால் என்றது சையமலைப்பக்கத்தை, அகத்தியர் முதலில் இங்குத் தங்கியிருந்தமையைக் கந்த புராணம் அகத்திய படலத்தால் அறியலாம்.

மேற்குத்திசை குடதிசை எனப்படுதலால், அகத்தியார் குடமுனி எனப்பட்டார். இதைத் தவறாகப் புரிந்து கொண்டவர், குடத்திலிருந்து தோன்றியவர் எனப்பொருள் கொண்டு, கும்பமுனி எனக் கூறினர்.

வடக்கில் கயிலாய மலையில் சிவபெருமானும் தெற்கில் பொதிய மலையில் அகத்திய முனிவரும் வீற்றிருத்தலாலே இவ்வுலகம் வளப்பமும், ஞானமும் பெற்றுத் திகழ்கின்றது என்பது இப்பாடலால் பெறப்படுகிறது.

இதனால் அகத்திய முனிவரது பெருமை கூறும் முகத்தால் சிவபெருமானது மெய்யடியார் உண்மையாகவே சிவனோடு ஒப்பவராதல் கூறப்பட்டது.

'சிவனை நிகர் பொதியவரை முனிவன்' என்பார் அருணகிரிநாதர்.

திருச்சிற்றம்பலம்

17. பதிவலியில் வீரட்டம் எட்டு, பிரளயம், சக்கரப்பேறு

வள்ளல் அடிப்பொடி . அ. சுவாமிநாதன்
புதுக்கோட்டை

உலகினில் தோன்றிய உயிரினங்கள் உய்தல் பொருட்டு, இவ்வுலகின் தோன்றிய ஞானியர்கள் பலர், தான் அனுபவித்துத் தேர்ந்த உண்மைகளை உயிரினங்கள் உணர்ந்து அனுபவித்து மேன்மையடைய வேண்டுமென்பதற்காக வேதம், புராணம், இதிகாசம் இவைகளை ஆக்கியருளியுள்ளார்கள்.

அவ்வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியவைகள் உணர்த்தும் சம்பவங்களும், கதைகளும் உண்மையென்றும் அவைகளெல்லாம் நடந்து முடிந்தவைகள் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஞானியர்கள் தங்கள் பெரும் முயற்சியால் (முயற்சி திருவினையாக்கும் - மனிதன் முயன்றால் தெய்வம் செயலாக்கி முடித்தருளும்) கிடைத்த அனுபவங்களின் உண்மையை வேதம், ஆகமம், புராணம், இதிகாசமாக நமக்கு ஆக்கியருளியுள்ளவைகளின் சொற்பொருளும் இலக்கியமும் கூறும் உண்மையென்னவென்று பகுத்துணராமல் ஏமாந்து கொண்டிருக்கிறோம்.

தோன்றியவே தாகமத்தைச் சாலமென வுரைத்தேன்
சொற்பொருளு மிலக்கியமும் பொய்யெனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக்கண் டுணர்வாய்

-திருவருட்பா

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

-திருவாசகம்

திருவருட்பா, திருவாசகம் கூறும் உண்மையிலிருந்து, வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியவைகளில் ஞானியர்கள் அருளியுள்ள இலக்கியத்தின் உண்மையை உணர்தல் வேண்டும். ஆகவே, திருமூலர் அருளிய திருமந்திரம். அதாவது (திரு - தெய்வத்தன்மை. மந்திரம் - மன்-நிலைபேறு. திரம் -உறுதி.) தெய்வமாக நிலைபெறுவதற்கு உறுதி அளிக்க கூடியது என்பது தெளிவு.

பதிவலியில் வீரட்டம்

பதி - உயிர் குடியிருக்கும் இவ்வீடு.
வலி- வல்லமை
இல் - இல்லாமையால்
வீரட்டம் - சிவபதி, கூத்துவகை.

உயிர் குடியிருக்கும் இவ்வீடு நிலைபேற்றுக்கு வல்லமை இல்லாமையால் நிலைபேறடைய கூத்து வகை கற்று, சிவ பதியாய் மாற்றும் உணர்வுகளை உண்டாக்கும் பாடல்கள்.

கருத்துறை யந்தகன் றன்போ லசுரன்
வரத்தி ன்உலகத் துயிர்களை யெல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. -திருமந்திரம்

சிவபெருமானிடம் பெற்ற வரத்தால், உலகத்துயிர்களையெல்லாம் அசுரன் வருத்துவானாயினான். இதையறிந்த நற்பண்புடைய தேவர்கள் அக்கொடுமையைப் பொறுக்கலாகாது, இறைவனிடம் முறையிட்டு வேண்டியமையால், சிவபெருமான் முத்தலை வேலாகிய சூலம் கொண்டு அசுரர்களை அடக்குதலாகிய கொலைத் தொழிலைச் செய்தருளினான் என்பது கிடைக்கும் கருத்து.

அசுரன், சுரன், சிவன் எல்லாமும் மானிட தேகத்திலுள் உள்ளது. சுர-அசுர போர் என்பது தேகத்தினுள் நடைபெறுவது. மனம் -இரு கூறாகவுள்ளது. (1) நல்ல மனம் (2) கெட்ட மனம். (நடராசர் கையில் மான் இரண்டு விரல்களுக்கு இடையில் வைத்துக் காட்டப்பட்டுள்ளது). நல்ல மனதால் - நல்வினையும், தீய மனதால் - தீவினையும் ஒவ்வொரு ஜீவனையும் செயலுக்கேற்ப வந்தடைகிறது. இவ்வினை இரண்டையும் இறைவன் திருவடியைச் சேரட்டும் - நன்மை தீமைகளுக்கான வினை தங்களைச் சேர வேண்டாமென்தற்காகத்தான் காவடி, இருமுடி இவைகளை நமது தோளிலும், தலையிலும் சுமந்து இறைவன் சன்னிதானத்தில் கொண்டுபோய் இறக்குகிறோம். ஆனால் இது சடங்காக முடிகிறதே தவிர, வேறு உண்மையை உணர்ந்தோமில்லை.

நாடாக்கொடிய மனமடக்கி நல்ல
மனத்தைக் கனிவித்து - திருவருட்பா

இருமனத்திற்கும் இடையே நடக்கும் போரை, அறிவாகிய சிவன் தலையிட்டு முத்தலை வேலாகிய சூலம் (ய காரம் என்னும் ஃ வலது கண், இடது கண் (சூரியன் - சந்திரன்) நடுக்கண்ணோடு (அக்னி) சேர்ந்து செய்யும் யோகத்தின் பயனாக,

கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். -குறள்

கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள்

என்ன பயனு மில.

ஒருமை, பன்மையை உணர வேண்டும்.

"கண்ணுடையர் - கண்ணொடு" என்பது ஒருமை - நெற்றிக்கண் - "முகத்திரண்டு புண் - கண்ணிணை" என்பது பன்மை - இரண்டு கண்கள்.

"*கற்றதென்றும் சாகாத கல்வி*' - திருவருட்பா

ஆக, நல்ல மனம், தீய மனத்தால் பெறப்படும் நல்வினை, தீவினை இரண்டும் அற்றால்தான், தேகத்தில் நடக்கின்ற போரில் வெற்றிகொளல் என்பதாகும்.

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைய ரிந்திட்டுச் சந்திசெய் தானே.

தக்கன் செய்த வேள்வியைத் தடுத்து, தக்கன் தலையை அறுத்து அவ்வேள்வித் தீயினில் இட்டருளினான். ஆட்டின் தலையைத் தக்கன் உடலில் பொருத்தியருளினான் என்பது கருத்து. 'நான்' 'எனது' என்னும் ஆணவத்தை அறுத்து மனமும் சிந்தனையுமில்லா ஆட்டினுடைய தலையைப் பொருத்தியமையால், ஆணவம் தோன்றுவதற்கு வழியில்லை. ஏனென்றால் மன அறிவு இல்லை. ஆகவே, மனம் இருக்கின்ற வரையிலும் ஆணவம் உண்டு. இதில் நாம் தெளிவது.

'சுத்தமுறும் மனமெனும் நல் ஏவலும் என்பதும்
'மனமான ஒரு சிறுவன் மதியான குருவையும் மதித்திடான் சும்மா இரான்'

என்பதும் வள்ளற்பெருமான் வாக்கு. இதிலிருந்து மனமானது தனித்த செயல்பாடில்லாமல் இருப்பதற்காக ஆணவம் உடைய தக்கன் தலைமை அறுக்கப்பட்டது என்பது தெளிவு.

எங்கும் பரந்து மிருநிலந் தாங்கியும்
தங்கும் படித்தவன் றாளுணர் தேவர்கள்
பொங்கு சினத்து ளயன்றலை முன்னற
வங்கச் சுதனை யுதிரங்கொண் டானே.

சிவபெருமான் திருவடி எவ்விடத்தும் விரிந்து இருநிலம் தாங்கியும், உலகங்களையெல்லாம் நிலைபெறத் தாங்கியும் நிற்கும் தன்மையுடையது. நான் முகனின் கல்விச் செருக்கையும், அச்சுதன் எனும் அரியின் செல்வச் செருக்கினையும் தண்டித்து அறிவு, தெளிய, அயன் தலையை வைரவக் கடவுளால் அறுப்பித்து அச்சுதன் ஆகிய அரியின் குருதியை அத்தலையின் ஏற்கச் செய்தனன். இதுவும் ஆங்காரம் அல்லது ஆணவம் அழிக்கப்பட வேண்டிய ஒன்று, ஆணவம் இருக்கின்ற வரையில் உயிர் மேன்மையடைய முடியாதென்பதின் பொருளை உணர்வதின் தெளிவு.

எங்கும் கலந்துமென் துள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வ னருமறை யோதிபாற்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே.

சிவபெருமான் எல்லா இடங்களில் எல்லா உயிர்களிலும் கலப்பால் ஒன்றாகக் கலந்தும் உள்ளான். என்னுள்ளத்திலும் எழுந்தருளியுள்ளான். ஆறு சமயங்களில் கடவுளர்களுக்கும் முதல்வனாவான். நான்கு மறைகளை ஓதியருளிய தலைவனாவான். அப்படிப்பட்டவனுடைய முதன்மையை உணராது, வஞ்சனையான சலந்தரன் அவருடன் போர் செய்தான். தீய மனம் அறிவாகிய சிவமுடன் போர் செய்து (அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவே என்பது திருவருட்பா) சிவன் தன் கால் கட்டைவிரலால் ஏற்படுத்திய ஆழியில் சலந்தரன் மாண்டான். அறிவு தன் ஆற்றலால் உண்டாக்கிய ஆழியில் தீய மனம் அடங்கியது என்பது பொருள்.

கருவியின்றி கருத்தாவே எல்லாத் தொழில்களையும் செய்யக்கூடியவனின் ஆற்றலாகிய அவ்வாழிப்படைதான் திருமால் சிவ பூசை செய்தபோது 1000 மலர்களில் ஒரு மலர் குறைய, தன் கண்ணை மலராக சிவன் திருவடிக்கு இட்டு வழிபட்டுப் பெற்ற படை-சக்கரம். சக்கரப்படை அறிவின் ஆற்றல்தான். திருமால் அறிவாற்றலை சிவனிடமிருந்து பெற்றான் என்பது தெளிவு.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்

முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே. -திருமந்திரம்

சலமாகிய கங்கையையும் (சலந்தரம்) செஞ்சடையையும் உடைய பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமான், ஆருயிர்கள் உய்தல் பொருட்டு, உயிர்களைச் சார்ந்துள்ள (செம்பில் களிம்பு - இயற்கை, ஆன்மாவுக்கு ஆணவம் - இயற்கை - என்பது திருவருட்பா) மும்மலத்தை, அவ்வுயிர்களால் சுத்தம் செய்வித்தும், செய்தும் வருகின்ற திருவருள் நோக்கத்தின் உண்மையினை எளியவர்களுக்கும் உணர்த்தும் முகத்தான் உருவகக் கதை அமைத்துக் கூறியுணர்த்தினர். அவ்வுண்மையினை மறந்து, கதையை மெய்யாக்கி விட்டனர். இதையறிந்த திருமூல ஞானியார் அவர்களை மூடர்கள் எனக் கூறுகின்றார். 'முப்புரமாவது மும்மல காரியம்' என்றும் அதனை மறுப்பாரை நோக்கி, மேலும் இரக்கங்கொண்டு 'அப்புரம் எய்தமையாரறிவாரே' எனவும் கூறுகின்றார். முப்புரம் என்பது ஆணவம், மாயை, கன்மம், இதை நீக்குவதற்கு - அன்பு, அறிவு, ஆற்றல் இம்மூன்றும் நற்பண்புகளாகும். இவற்றை வள்ளற்பெருமான் - 1. இரும்பு - ஆணவ காரியத்தையும், 2. வெள்ளி - மாயா காரியத்தையும் 3. பொன்-செயலின் (வினை) காரியத்தையும் குறிப்பனவாக:- எல்லாச் சமய மதங்களுக்கும் பொதுவான கோயிலாக ஞானசபை அமைத்தருளியுள்ளார்கள். அந்த ஞான சபையின் அமைப்பில் முதலில், இரும்பாலான சங்கிலியும், வெள்ளியம்பலமெனும் சிற்சபையும், பொன்னம்பலமெனும் பொற்சபையும் ஆகும். இவற்றின் நடுவிலிருப்பது ஞானசபை - உயிராகும். இது அன்பு, ஆற்றல் ஆகிய மூன்று பண்புகளோடு கூடியது. இதைத்தான் முப்புரம் என்கிறார்கள் என்பது தெளிவு.

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயி னுள்ளெழுந் தன்று கொலையே.

வேதாக்கினி வகை மூன்று - 1. ஆக வனீயம் 2. காருகபத்தியம் 3. அங்கி ஆகிய முத்தீயினை எழுப்புதல் செய்த வேள்வியிலிருந்து யானை ஒன்று வந்தது. (யானை - யான் ஐ என்பது யானே தலைவன் எனும் ஆணவம்) அவ்வானையின் தோலை நகத்தால் உரித்துப் போர்த்திக் கொண்டார்.

முத்தீ:-(இறைனையடைய நினைக்கின்ற ஜீவர்களெல்லாம் - ஆண், பெண் - இருபாலரும் பெண்ணே) (1) கல்வி, (2) கற்பு (3) அன்பு ஆகும். இம்மூன்றும் அமையப்பெற்றவர்கள், தன்னிலையில் செருக்கடைந்தார்கள்.

அதாவது -யானை -யான் ஐ - ஆணவம் கொண்டனர். ஆணவத்தை நீக்கி அருளல் பொருட்டு, (மனிதன், பன்றி, யானை ஆகியவற்றின் தோலை உரிக்க இயலாது) ஆணவம் இறைவனைக் காணுகின்ற வரையில் உயிரை விட்டு நீங்காது. மறைப்பாற்றலென்பதும், நந்தனாருக்கு நந்தி விலகிக் காட்சி காணக் கிடைத்ததென்பதும் இதுவே. இத்தன்மையை உயிரடைய கல்வி, கற்பு, அன்பு (பிரபஞ்சத்தின் மீது வெறுப்பும், உயிர்களிடத்து இரக்கமும் ஆண்டவனிடத்தில் அன்பும் உண்டாக வேண்டுமென்று வள்ளற் பெருமான் கூறுவார்) இம்மூன்றும் தான் - முத்தீ எனும் யாகம். இதைத் தவறவிடாத செயல் வினையுடையார்களுக்கு ஆண்டவன் காட்சி தந்து ஆணவத்தை தலை தூக்காது நிலைபெறச் செய்வான் என்பது தெளிவு.

மூலத் துவாரத்து மூளு மொருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே.

விநாயகர் சதுர்த்தியன்று, விநாயகரைப் பூசை செய்து, மூன்று நாட்கள் வைத்திருந்து, நீரில் கரைப்பது வழக்கம்.

மூலாதாரத்திலுள்ள அக்கினியை (கனல்) மேலேயுள்ள துவாரமாகிய (பொந்தைப் பரவி என்பார் மணிவாசகர்) ஆக்ஞைக்கு ஏற்றுவது அக வழிபாட்டில் அடிப்படை. இவ்வுக வழிபாடு செய்கின்றவர்களை அருள் வியாபகத்துள் வைத்து இறைவன் ஆளுகின்றபோது அவர்களைக் கொல்ல வந்த காலனை உதைத்துக் காய்ந்தனன் என்பர்.

பிறந்தால் சிறப்புண்டு என்பதை மாற்றி, இறந்தால் பிறப்புண்டு. ஆகவே இறவாமை வேண்டுமென்பது ஞானியர்கள் கண்ட உண்மை. இவ்வுண்மையைச் சகலரும் அறிந்து அடைதல் பொருட்டு வழிமுறைகளை இயம்புகின்றனர்.

இறப்பைத் தவிர்ப்பதற்குரிய இடம் - மேலைத் துவாரம் - அதன் மேலுற - அதாவது - மூலாதாரத்திலுள்ள கனலை எழுப்பி மேலைத் துவாரத்து மேல் உற (பொருந்துதல்) வைத்து விட்டால் - காலன் எனும் இறப்பு இனி இல்லை. நலமாய் இருந்ததே. அதாவது - இவ்வுடலும், இவ்வுடலை இயக்குகின்ற உயிரும் இணைந்து இறப்பற்று நலமாய் வாழ்கின்றது என்பது தெளிவு.

இருந்த மனத்தை யிசைய விருத்திப்
பொருந்தியி லிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழி யத்தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை யமர்ந்தே. - திருமந்திரம்

மால் மகனாகிய காமன், இறைவன் அறம் போதித்துக் கொண்டிருந்தபோது, காமச் சார்பை எழுப்ப நினைத்தான். நினைத்தபடி பூக்களாலான அம்பைத் தொடுத்தான். சிவபெருமான் நெற்றிக் கண்ணால்(அறிவாற்றலால்) அவனை அடக்கினான்.

காம உட்பகைவன் என்பார் வள்ளற்பெருமான், உட்பகைவனாகிய காமம் உள்மனத்தினுள் ஏற்படுவது. இந்த உணர்வை அறிவுக் கண்கொண்டு அகற்றவேண்டும். (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், அகங்காரமெனும் இவ்வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும் எனைப் பற்றிடாமல் அருள்வாய் என்பார் வள்ளற்பெருமான்) இதை மானிடதேகம் பெற்று அறிந்து அடக்குதல் எவ்வாறு என்பதை உணர்த்துவதற்காக காமனுக்கு உருவிலானாக்கி உணர்த்தியருளினார்.

ஆண்மைச் செயல் - எட்டு

ஆண்மை - ஆளுந்தன்மை, வீரம், வெற்றி, மனமுயற்சி, வாய்மை உடைமை ஆகிய பொருள்களையுடையது.

1. உடலையடையாது உயிர் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் எனும் ஐந்தினுக்கும் நடுவுவிருப்பது - இயற்கையான குற்றம்.

2. ஆணவச் செருக்கு உடலுடன் கூடிய பின் தோன்றுவது.

3. யான், எனது எனும் செருக்கு.

4. ஆணவம், மாயை, கன்மம், பிரார்த்தம், சஞ்சிதம்

தேகத்தினுள் உள்ள இவைகளைத்தான் உருவகமாக அந்தகன், தக்கன், சலந்தரன், அயன், அரியெனக், கற்பனையாக அமைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

கிடைத்ததற்கரிய இம்மானிட தேகம் கிடைக்கப் பெற்றபோதே, அறிந்து அடையத் தக்க ஆன்ம லாபத்தை, அறிந்து அடைதல் வேண்டும் என்பார். வள்ளற்பெருமான், இதே கருத்தைத்தான் நமது நாட்டில் தோன்றிய ஞானியரனைவரும் தாமடைந்த பேருண்மையை ஆன்ம லாபத்தை - ஒவ்வொருவரும் அறிந்து அடைதல் பொருட்டு, இலக்கியங்களாக அமைத்தருளியுள்ளார்கள் என்பது தெளிவு.

பிரளயம்

கருவறை மூடிக் கலந்தெழும் வெள்ளத்து
இருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. - திருமந்திரம்

திருவாணையால் கடல் பொங்கி எங்கும் ஒரே வெள்ளமாய்ப் பெருகிற்று. அதனைக் கண்ட அயனும் அரியும் ஆகிய பெரும் தேவர்கள் இருவர்களும் சிறிய தேவர்கள் போல 'ஓ' வென்று அலறினர். அதுசமயம் சிவபெருமான் அந்நீரின் மேல் பேரொளியாகத் தோன்றினான். அவ்விருவரையும் அஞ்சற்க என்று அருள் செய்தனன்.

நீர் - அருளாகிய அம்மையைக் குறிப்பது, தீ - சிவபெருமானைக் குறிப்பதாகும்.

இரவிற் பெரிய வெள்ளம் பரவி
யெங்குந் தயங்கவே
யானுஞ் சிலரும் படகி லேறி
யேம யங்கவே
விரவிற் றனித்திங் கென்னை
யொருகன் மேட்டி லேற்றிய
விண்ணி லுயர்ந்த மாடத்திருக்க
விதித்தாய் போற்றியே. -திருவருட்பா

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயையில், பிரகிருதி மாயை - இரவு. மாயையிலிருந்து விடுபட மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் - பிரம்மஸ்தானம் விஷ்ணு ஸ்தானம் கடந்து ஆக்ஞை ஆகிய இடத்தை அனுபவத்தால் அடைந்ததைக் குறிப்பதுதான் வள்ளற்பெருமான் கூறும் 'படகிலேறுதல்', 'விண்ணில் உயர்ந்த மாடத்திருக்க விதித்தல்' என்பதும் ஓங்கொளியாகி அருவரையாய் என்னும் திருமந்திரமும், பிறப்பறுத்தலாகிய தன்மையை உணர்த்தி, அருள்புரிந்ததென்பதின் தெளிவு.

அலகட லூ டறுத் தண்டத்து வானோர்
தலைவ னெனும்பெயர் தான்றலை மேற்கொண்
டுலகா ரழற்கண் டுள்வீழா தோடி
அலைவாயில் வீழா மலஞ்சலென் றானே. -திருமந்திரம்

ஊழியாகிய அலையுள்ள கடலின் நடுவில் உள்ள மாறுபாடுகளை அறுத்து அதாவது - மனத்தின் எண்ணங்கள் அலைபோல தோன்றக்கூடியதை, நடுக்கடலில் அலையில்லாமல் இருப்பது போல் மனதை அமைதியடையச் செய்தல் ஆகிய, ஒளியை தன்னுள்ளே கண்டும் இதர தத்துவங்களையும், தாத்துவிகளையும் உலக மாயையில் வீழாமல் அஞ்சலென்று அருளினான். அவன்தான் சிவபெருமான் என்பது தெளிவு.

தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந்த தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. -திருமந்திரம்

பிரகிருதி மாயையிலிருந்து அதாவது - பெரு வெள்ளமாகிய கடல் அடங்கிற்று, தத்துவங்களும், தாத்தூவிகளும் தான் - அமரரும் தேவரும் அன்பர்களுடைய காதல் மிகுதியால் சூழப்பட்ட ஆனந்த வடிவினாகிய சிவபெருமானை இறைஞ்சுவர் ஆயினர். பிரகிருதி மாயையெனும் கடலில் பெருக்கினை உண்டாக்கி, எங்கும் வெள்ளமாகச் செய்த பெருமான், அதன் மேலும் பேரொளியாய் எழுந்ததோடல்லாமல் சிறப்புறப் பெற்ற (ஆருயிர்) உயிர்களுக்கு திருவடி உணர்வாகிய (அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவான் - இறைவன் திருவடிதான் -அடி). சிவஞானத்தை - பசு கரணங்களாக அருள்புரிந்தான். கண் என்பது - ஞானத்தை உணர்த்தல் - எனும் திருவுள்ளத்தை யாரும் அறியார் என்பது தெளிவு.

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திகைத்ததெண் ணீற் கடலொலி யோசை
மிகைக்கொள வங்கி மிகாமைவைத் தானே. -திருமந்திரம்

எல்லாவற்றையும் உண்டு பண்ணும் வல்லவனை, தன்னருளால் தானே தோன்றியருளும் முதலானைச் சுயம்பு என்பர். சுயம்பு தானே உண்டானது. அச்சிவபெருமானை முன்செய்த தவத்தாலன்றி, வேறு எவ்வகையிலும் தம் உள்ளத்தில் அமைக்க வல்லமை உடையவர் வேறு யாரியிருக்கிறார்கள். அனைவரும் எண்ணங்களை உற்பத்தி செய்து கடலலையென இருக்கும் மனதை இனிவரும் காலங்களில் எழாதிருக்கும்படி அக்கடலின் நடுவாகிய - அசையாத - சலனமற்ற் மனத்தில் - அதாவது நீர்- அவனது அருளாகும். நீரை ஒடுக்கும் தீ - சிவபெருமானின் சீராகும். சமைக்க வல்லான் - எல்லாவற்றையும் படைக்கும் வல்லமை.

அமைக்க வல்லான் - மனத்தில் நிறுத்தித் துதிப்போர்களுக்கு அருள வல்லான் என்பது தெளிவு.

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்திகொண் டானே -திருமந்திரம்

தேவர்கள் சுயநலமுள்ளவர்கள் - தாம் வாழ்வதற்காக, இறை வழிபாடு செய்கின்றவர்கள். ஆதலால் அவர்கள் செய்யும் வழிபாடு பண்பாடில்லா வழிபாடு என்பதாகும். அத்தகைய வழிபாடு செய்யும் கமலத்திலிருக்கும் நான்முகன் உடனிருக்கின்ற திருமாலுடன் நட்பின்மையாகி, செருக்குற்று நட்பைக் கெடுத்தவனுமானான். இருவரும் திருவருளாணையின்படி படைத்தல், காத்தல்களைச் செய்யக்கூடியவர்கள். செருக்குக் கொண்டமையால் - நான்முகன் தலை அறுக்கப்பட்டது. தலை - தலைமையாகும். ஏனையோர்களும் செருக்கடைந்து இறந்து போகாமல் இருக்க திருமாலின் குருதியை நான்முகன் தலையில் ஏந்தினான். சிவபெருமானின் இச்செயலால் மேலுலகத்தவரிடம் பொல்லாங்கில்லாத படைத்தல், காத்தல் தொழிலைக் கொண்டவர்களானார்கள் என்பது தெளிவு.

சக்கரப் பேறு

மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்
கால்போதங் கையினோ டந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலையம ராபதி
பார்போக மேழும் படைத்துடை யானே. -திருமந்திரம்

சுத்த மாயையில் வாழ்கின்ற அயனும் அரியும் வேறு. உலகத்திற்குக் காரணமான பிரகிருதி மாயையில் வாழ்கின்ற அயனும் அரியும் வேறு. காமம், வெகுளி, மயக்கமாகிய குணங்களைக் கடந்த மால், காமம், வெகுளி மயக்கமாகிய குணங்களைத் தவிர்க்க முடியாத மாலுக்கு மேன்மையானவன். இரண்டு மாலும் ஒருவரேயென்று உலகியலார் மயக்குறுவதுபோல், காமம், வெகுளி மயக்கத்தைத் தவிர்க்க இயலாத மாலும் செருக்குறுகின்றான். இச்செருக்கினால் அம்மாலின் கையிலிருந்த சக்கரம், அம்மாலினுடைய கையுடன் வானத்தில் பறந்தது. சக்கரம் மறைந்ததும் சிவபெருமானால் அளிக்கப்பட்ட ஆற்றல் அம்மாலுக்கு செருக்கும் அழிந்தது. பிறகு மால் சிவபெருமானைத் தொழுது வேண்டினதால், பொன்னம்பல வாணனான சிவபெருமான்

சிற்றம்பலமான வெள்ளி மலையின்கண் அமர்ந்து. ஆ- பசுப்பொதுவாகிய ஆன்மா- தரும சொருபமாகிய ரிஷபத்தின் மேல் வரும் பதிவாகிய பரமன் ஏழு உலகத்திலுள்ளவைகளையும் படைத்துக் கடவுளாக விளங்குகிறான் என்பது தெளிவு.

சக்கரம் பெற்றுநற் றாமோ தரன்றானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணாமையால்
மிக்கரன் றன்னை விருப்புட னர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே -திருமந்திரம்

தாமோதரன் - கயிறைத் தரித்தவன் ஆகிய மாலின் கையில் சக்கரம் - (சிவபெருமானால் அளிக்கப்பட்ட ஆற்றல்) வந்து அமர்ந்தது. அச்சக்கரமாகிய பெருமானின் ஆற்றலைத் தாங்கும் வல்லமை மாலுக்கு இல்லாமையால் மேலோனாகிய சிவபெருமானை வேண்டி விருப்பத்துடன் பூசிக்கப்பட்டதால், அவ்வாற்றலைத் தாங்கும் வல்லமையையும் உதவி செய்தருளினான். தன்னுடைய அருளாற்றலை தாமோதரனான மாலுக்கு பகுத்துக் கொடுத்தனன் என்பது தெளிவு.

கூறது வாகக் குறித்தநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே -திருமந்திரம்

சிவபெருமான் தனது ஆற்றலின், காரணமாகச் சக்கரமாகப் படைத்ததை, மாலுக்கு, அதன் தன்மையைக் கொடுத்தருளினன், அவ்வாற்றல் திருவருளையே தனக்குத் திருவுருவமாகவும் படையாகவும் திருமேனியின் பாதியை அருளாகிய அம்மைக்கு கொடுத்தருளினான் என்பது தெளிவு.

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பாற்
றக்கன்தன் வேள்வியிற் றாமோ தரன்றானும்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி யுமிழ்ந்தது வாயுக் கரத்திலே. -திருமந்திரம்

தக்கன் செய்த வேள்வியை அழித்தொழிக்கச் சென்ற வீரபத்திரன் சிவபெருமானின் படையாள். ஆகையால், சிவபெருமானுக்குரிய அடையாளங்கள் அவருக்கு இருந்தன. தக்கன் வேள்வியில் தலைமையாக இருந்த மால் வீரபத்திரர் தலையிலிருந்த பிறைமுடிமேல் சிவபெருமானிடம் பெறப்பட்ட ஆற்றலாகிய சக்கரத்தை வீசினான். அதையறிந்த வீரபத்திரர் தன் வாயிலிருந்து கோபத் தீ வெளிப்படச் செய்தார். அச்சக்கரம் அடங்கி வலிமையிழந்து கீழே விழுந்தது. சிறு நெருப்பு பெரு நெருப்பினுள்

அடங்குமே அல்லாது, சிறு நெருப்பு பெரு நெருப்பை அழிக்க இயலாதென்பது தெளிவு.

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு வேதத்தின் பொருள் உணர்ந்து, அறம், பொருள், இன்பம் என்பதையடைந்தால் வீடு தானே வந்து சேரும்.

1. அறம், சிவபெருமான் தரும சொரூபமான ரிஷப வாகனத்தின் மீது அமர்கிறான் என்றால் தனக்கென வாழாது, பிறருக்காக வாழ்ந்து பிறருக்குத் தேவையில்லாதவைகளைத் தானுண்டு உயிர் வாழ்கின்ற குலத்தையுடைய ரிஷபமாக மானுடம் மாறுமானால் இம்மானுடத்தினுள் இறைவன் அமர்ந்து வாழ்வான்.

2. பொருள் - எந்நிலை நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர் சங்கரன் மறவாமை பொருள். -என்பார் சேக்கிழார் பெருமான். மானுடம் அடைய வேண்டிய பொருள் இறையருள். வள்ளற்பெருமான் சிவமே பொருள் என்பார்.

3. இன்பம் - இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பம் எல்லாம் நிலையானதல்ல, ஆன்மாக்கள் எல்லாம் பெண்களே! இறைவன் மட்டும்தான் ஆண். பெண் அனுபவிக்கும் இன்பங்களின் செயலுக்கு தேக இன்பத்துக்கு - அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவைகளைத் துறந்தால்தான் தன் கணவனிடம் தேக சுகம் அனுபவிக்க முடியும். அதுபோல் இறைவனிடம் ஆன்ம சுகம் அனுபவிக்க வேண்டுமாயின் காமக்குரோதங்களை நீக்காத வரையிலும் ஆண்டவன் இத்தேகத்தில் குடிக்கூலிக் கொடுத்துக் குடியிருக்கின்ற உயிருக்கு ஆன்ம சுகமளிக்க வரமட்டான். விலக்க வேண்டியதை விலக்காத வரையிலும் அடைய வேண்டிய லாபம் அடைய முடியாது என்பதைத் தான் எல்லா ஞானிகளும் தங்கள், தங்கள் இலக்கியங்களில் (இலக்கு - அடைய வேண்டியதை இயம்-இயம்புதல், சொல்லுதல் ஆகும்.) தன் அனுபவத் தெளிவுகளை விவரித்துக் கூறுகிறார்கள். நாம் உலக மயக்கத்தில் இலக்கை அடைய இயலாமல் இறந்து பிறந்து பிறவிக் கடலைவிட்டு எழ முடியாமல் தவிக்கிறோம் என்பது தெளிவு.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

18. இலிங்கபுராணம், தக்கன் வேள்வி

முனைவர். சு. திருநாவுக்கரசு எம்.ஏ.பி.எச்.டி.,
முதல்வர். ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்

முன்னுரை

வையத்தை வாழ்வாங்கு வாழ்விக்க, வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினருள் முதன்மையானவர் திருமூலர். நந்தியருளாலே நாதனாம் பேர் பெற்றவர்.

தண்டமிழ் நாட்டுச் சித்தர் மரபுக்கு இவரே முதல்வர் என்பதை தவராச யோகி தாயுமானவர் தம் குருநாதராகிய மௌன குருவைப் போற்றும் போது 'மூலன் மரபில் வரும் மௌனகுருவே' என்பார்.

திருமந்திரம்

சைவசமயத்தின் இருகண்களெனத் திகழ்வன திருமுறைகளும் சாத்திரங்களும். சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திரங்கள். இவைகளுக்குப் பின்னர்த் தோன்றியவை மெய்கண்ட சாத்திரங்கள் என்னும் பதினான்கு நூல்கள். இவை யாவற்றிலும் இறைவன் விளங்குகிறான் என்பதனை,

சொல்லும் பொருளும் ஆனார் தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே (6-திருவாலங்காடு 5)

என்னும் அப்பர் பெருமானின் ஒப்பரிய வாக்கினால் உணரலாம். திருமுறைகளுள் காலத்தால் முற்பட்டது திருமந்திரம். இந்நூலுள் சைவசித்தாந்த நுண்பொருள்களாகிய சாத்திரக்கருத்துக்கள் மிக்கு விளங்குகின்றன. இது மந்திரம், தந்திரம், உபதேசம் என்னும் மூன்று வகைகளும் ஒருங்கு அமைந்த ஞானப்பெருநூலாகும்.

2 ஆம் தந்திரம்

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உடையது. தந்து என்பது கயிறு (அ) நூலினைக் குறிக்கும். 'சசிதேவி மாங்கல்ய தந்து' (கந்தர் அலங்காரம்) என்னுமிடத்தில் மங்கல நாணைக்குறிக்கும். அவ்வகையில் தந்து என்பது நூல் என்னும் பொருளில் ஆகமத்தைக் குறிக்கும். சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் தம் குருநாதர்க்குக் கிடைத்த ஒன்பது ஆகமங்களின் பிழிவுகளையே ஒன்பது தந்திரங்களாக மொழிந்துள்ளார் திருமூலர்.

திருமந்திரப்பாயிரத்திலுள்ள ஆகமச்சிறப்பு என்னும் பகுதியின் 6,7 ஆம் பாடல்களால் இவ்வுண்மைகள் விளக்கமுறுகின்றன. காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் ஆகியவை 9 ஆகமங்கள்.

இலிங்கபுராணம்

திருமந்திரம் இரண்டாந்தந்திரத்துள் அகத்தியம் முதலாக பெரியாரைத் துணைக்கோடல் ஈறாக 25 உட்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் மூன்றாவது உட்பிரிவு இலிங்க புராணம். இதன்கண் சிவபெருமான் முருகனைத் தோற்றுவிக்க ஐந்து முகத்தோடு அதோமுகமும் கொண்டதுபோல் 6 திருமந்திரங்கள் உள்ளன.

இலிங்கம்

இறைவன் உயிர்களை ஆட்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளும் திருமேனிகள் அருவம், அருவுருவம், உருவம் என மூவகைப்படும். இவை நம் கருமேனி கழிக்க வந்த கருணைத் திருமேனி என்று போற்றும் சிவஞான சித்தியார்.

அருவுருவத் திருமேனியாக இறைவன் கொள்ளும் வடிவம் சிவலிங்கமேயாகும். இதனை,

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்

என்று பெரியபுராணம் விளக்கும்.

புராணம்

இவ்வாறு இறைவன் தோன்றி அருள் செய்யும் முறையை விளக்குவது புராணம் எனப்படும். புராணம் என்பது இறைவனைப் போலவே பழமைக்கு பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் அமைவது எனலாம். பழமையைக் குறிக்கும் புராதனம் என்னும் சொல் புராணம் ஆயிற்று என்பார் சிலர். வடமொழியில் புரா, ந(நவம்) என்னும் சொற்களின் இணைப்பே புராணம் எனப்படுவது.

புரா என்றால் பழைமை: ந என்றால் புதுமை: எனவே பழைமையும் புதுமையும் சேர்ந்தது புராணம். புரா, ந இரண்டும் சேர்ந்து புராணம் ஆயின. ரகரம் வந்தல் ந, ணவாக மாறும். நடந்த காலத்தால் பழைமையானது. ஆனால் இன்றைக்கும் அது பயன் தருவதால்

புதுமையானது. பழங்காலத்தில் நடந்த கதையைச் சொன்னாலும் அதிலிருந்து நாம் அறிய வேண்டிய கருத்தைப் புலப்படுத்துவதால் இன்றும் பயன்தருகின்றது. நடந்ததனால் பழைமையுடையதாக இருந்தாலும், இப்போதும் நாம் பயனடையவதற்கு உரியதாக இருப்பதால் புதுமை உள்ளதாக இருக்கிறது. இப்படி பழமையும் புதுமையும் கலந்ததுதான் புராணம் என்பார் அறிஞர். கி.வா.ஜ.

முதல் தந்திரம்

இது உமையம்மை இறைவனை உண்மை அன்பினால் வழிபட்டு அவனை மணம் செய்து கொண்டதை விளக்குகிறது.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரிய ஆ தரித்தாள்
பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து
(பெரியபுராணம்-திருக்குறிப்புத்தொண்டர்- 51)

என்னும் தெய்வச்சேக்கிழார் வாக்கும் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாம். திருமூலர் பாடிய *அர்ச்சித்து* என்னும் சொல் இவர்தம் வாக்கிலும் இடம்பெற்றுள்ளது. சிவபிரான், மலைமகளை மணங்கொண்டது புவன வாழ்க்கைச் செயல் வண்ணம் நிலை நிறுத்துவதற்காகவே(கலி.பரணி-சிவ வணக்கம்) என்பார் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார்.

இது முப்புரம் எரித்த இறைவனாயினும், அன்பினால் வழிபடுவோர்க்குப் பரிவோடு நின்று பரிசறிவான் என்கிறது.

வெயிலில் வாடியவர்கள், நிழல் தரும் மரத்தை அடைந்தால் வாட்டம் நீங்கி மகிழ்வர். அடையாதார் மகிழ்வுறுதல் இலர். அவ்வாறே வேண்டுதல் வேண்டாமையிலாதவனாகிய இறைவன் நண்ணியவர்க்கு நல்லன்; நண்ணாதவர்க்கு நலமிலன் என்கிறது திருவருட்பயன். அப்பாடலானது,

நலம் இலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்;
சலம் இலன் பேர்சங்கரன் (9)

3 ஆம் தந்திரம்

இது இறைவன்மாட்டு அன்பினால் அகங்குழைவதன்றி பேரொளி வடிவமாக நின்ற இறைவனின் அடியையும் முடியையும் தேடிக்காணும் பொருட்டு ஆணவத்தால் முறையே திருமாலும் நான்முகனும் பன்றியாயும், அன்னப்பறவையாயும் வடிவெடுத்து அலைந்து காணாது வருந்தினர்.

பிழையுணர்ந்து வருந்திய அவர்களுக்கு முறையே சக்கரப்படையையும், வாளினையும் கொடுத்தருளினான் என்கிறது. இவ்வருட்செயலை விளக்குவதற்கு திருநாவுக்கரசர் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை என்று (5-95-பொது) ஒரு பதிகமே பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

4 ஆம் தந்திரம்

இறைவனை நோக்கிக்கடுந்தவமிருந்து வரம் பல பெற்ற இராவணன் ஆணவத்தால் அறிவிழந்து கயிலைமலையைத் தூக்கி எறிய முற்பட்டபோது, இறைவன் கால்விரலால் மலையை அழுத்தி அவனை அழ வைத்ததும், தவற்றையுணர்ந்து அவன் முறையிட்டு வழிபட்டபின், அழிவிலா வரம் அருளியும் மறக்கருணை, அறக்கருணையை இறைவன் வெளிப்படுத்தினான். வழிபட்டால் அருள் பெறலாம் என்பது இப்பாடலால் உறுதிப்படுகின்றது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பதிகந்தோறும் 8 ஆம் பாடலும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் பதிகந்தோறும் இறுதிப்பாடலும் இந்நிகழ்வினைச் சுட்டுகின்றன.

5 ஆம் தந்திரம்

சிவ வழிபாட்டிற்கு இடையூறு செய்த தந்தையின் தாளைத் தடிந்தவர் விசாரசருமர். இதனால் இறைவன் உளம் உவந்து அடியார்க்குத் திருத்தொண்டின் பயனை வழங்கும் 'சண்ட' என்னும் பதவியையும் அதற்கு அடையாளமாக கொன்றைமாலை, உண்பன, உடுத்துவன அருளியும் ஈசன் என்னும் பட்டத்தையும் அளித்தருளியதை இத்திருமந்திரம் இயம்புகின்றது.

இதனால் இறைவனின் அளப்பரிய கருணை வியத்தகு முறையில் வெளிப்பட்டுள்ளதை அறியலாம்.

6 ஆம் தந்திரம்

தேவர் முதலானோர் பற்பல காலங்களில் இறைவன்பால் சென்று, அவன் திருநாமத்தைச் சொல்லி மலர் கொண்டு வழிபட்டுத் துன்பநீக்கத்தையும், இன்ப ஆக்கத்தையும் பெற்றதாக இத்திருமந்திரம் இயம்புகின்றது.

இறைவனை மனத்தால் நினைந்தும், வாயால் வாழ்த்தியும், மெய்யால் வழிபட்டும் பேறு பெறலாம் என்னும் இக்கருத்தினை,

புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரிய நிற்கும்

என்று திருமூலரும்

கற்றுக்கொள்வன வாயுள நாவுள;
இட்டுக்கொள்வன நீருள பூவுள
கற்றைச்செஞ் சடையான்உளான் நாமுளோம்
ஏற்றுக்கோ நமனான்முனிவு உண்பதே

என்று அப்பரடிகளும் அறிவுறுத்துகின்றனர்.

தக்கன் வேள்வி

இப்பகுதி திருமந்திரத்துள் இரண்டாம் தந்திரத்துள் 4 ஆம் உட்பிரிவில் ஒன்பது திருமந்திரங்களைப் பெற்றுள்ளது. நவந்தருபேதமாக நடிக்கும் இறைவனை இவ்வெண்ணிக்கை நினைவுறுத்துகின்றது. நான்முகன் மகனான தக்கன் சிவபிரானது அளப்பரிய அருள், ஆற்றல்களை அறிந்து, தவமிருந்து உமையை மகளாகப் பெற்று வளர்த்து சிவனுக்களித்துச் சிறந்தான். ஆணவத்தால் அறிவிழந்த தக்கன், வரமருளிய சிவபெருமானின் முழுமுதன்மைக்கு மதிப்பளியாமல், அவரை விடுத்து ஏனைய தேவர்களை அழைத்துப்பெருவேள்வி செய்தான். வேள்வி செய்தல் நல்லதேயாயினும், இறைவன் மதியாமல் செய்ததாலும், தேவர்கள் யாவரும் சிவபெருமான் தங்களுக்குச் செய்த நன்மைகளை மறந்து அவ்வேள்விக்கு அழைத்த தக்கனின் ஆணைக்கு அஞ்சிக் கலந்துகொண்டதாலும், இறைவனின் ஆணையையேற்ற வீரபத்திரராலும், உமையின் ஆணையையேற்ற மகாகாளியாலும் தக்கன் வேள்வி அழிக்கப்பெற்றது. தேவர்கள் அனைவரும் தண்டிக்கப் பெற்றனர்.

இப்பகுதியிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகளை கீழ்க்காணும் பாடல் தெரிவிக்கின்றது.

அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரன் அடிக்கு அன்பிலார் செய்யும் புண்ணியம் பாவ மாகும்
வரனுடைத் தக்கன்செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தே

(சிவஞான சித்தியார் -119)

இறைவன் மீது கொண்ட இடையறா அன்பினால் செய்யும் செயல் உலகியல் நோக்கில் பாவமாகத் தோன்றினாலும் அது அறமேயாகும். அவ்வாறே இறைவனிடத்து அன்பிலார் செய்வது புண்ணியச் செயலானாலும் அது பாவமேயாகும். இவற்றுக்கு விளக்கம் சண்டீசர், தக்கன் ஆகியோர் வாழ்வாகும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

தக்கன் வேள்வியால் நிகழ்ந்த விளைவுகளைத் திருவாசகத்துள் திருவுந்தியார்ப் பகுதி விரித்துரைக்கின்றது.

ஒருவர் செய்த நன்றியை மறந்தால், நன்றி மறத்தலாகிய அப்பண்பே அவர்களைக் கொல்லும் கூற்றுவனாகும் என்பதையும் இக்கட்டுரையிலுள்ள இருபகுதித் திருமந்திரங்களும் தெரிவிக்கின்றன.

ஒன்றொரு பயன்தனை உதவி னோர்மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?

என்னும் கந்தப்புராணப் பாடல் இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

அன்னையின் அருள்

9 ஆம் திருமந்திரம் இறைவனை இகழ்ந்த தக்கன் முதலானோர் அழியுமாறும் வேள்வி அழியுமாறும் செய்ததேயன்றி அழிந்த அனைவரையும் சிவபெருமானை வேண்டி உயிர்ப்பித்தலையும் செய்தருளிய உமையம்மையைப் போற்றும் நிலையில் நிறைவுறுகின்றது.

இவ்விரு பகுதிகளாலும் அறியத்தக்க உண்மைகளாவன

1. முழுமுதற் கடவுள் சிவபெருமான்.
2. அவன் அன்பினால் வழிபடுவார்க்கு அறக்கருணை புரிபவன்.
3. தவறு செய்பவர்களை மறக்கருணையால் தண்டித்து அவர்களுக்கு கருணை செய்து வாழ்விப்பவன்.
4. உண்மை அன்பினால் முக்கரணத் தூய்மையுடன் வழிபடுவார்க்கு இன்னருள் புரிந்து பேரின்பப் பெருவாழ்வினை அவன் நல்குவன்.
5. சிவபெருமானின் இத்தகைய முழுமுதல் தன்மைக்கு இவ்விருபகுதித் திருமந்திரங்கள் சான்றுகளாகும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

19. எலும்பும் கபாலமும்

திருமதி. ச. ஜெயலெட்சுமி எம்.ஏ.பி.எட்.,
புதுக்கோட்டை.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்றுணர்.

என்று போற்றுதலுக்குரிய ஔவையாரால் பாடப்பெற்ற திருமந்திரம் தந்த சைவப் பெரியார் திருமூலர் என்ற காரணப் பெயர் பெற்றவருமான, போக தேவரால் தனது பாட்டனார் என்று உரிமையுடன் குறிக்கப் பெற்றவருமான திருமூலர் திருவடிகளை வணங்குகிறேன்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் இது பத்தாம் திருமுறையாகும். ஒன்பான் தந்திரங்களுள் இரண்டாம் தந்திரத்தினுள் அடங்கிய இருபத்தி ஐந்து தலைப்புகளுள் சக்கரபேறு, அடிமுடிதேடல் என்ற இரு தலைப்பிற்கு நடுவே அமைந்துள்ளது. இந்த ஏழாம் தலைப்பாகிய 'எலும்பும், கபாலமும்' என்பது.

சிவன் உலகினைப் படைப்பவனாகவும், அழிப்பவனாகவும், உடலைக் காத்து மாற்றம் செய்பவனாகவும், அவற்றைக் கடந்து நிறைந்து விளங்குபவனாகவும் திருவருள் சோதியாகவும், குவிதல் இல்லாத இயல்போடு ஊழைச் செலுத்துபவனாயும் என்றும் அழியாத தன்மையுடன் உள்ளான் என்று பேசப்படும் சிவன். ஊழிக்காலத்தில் எல்லாம் அழியும் நேரத்தில் உலகின் சிருஷ்டிக்காகச் சிலவற்றைக் காக்கும் கட்டாயத்தில் உள்ளான். உலகில் சிவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களும் ஊழி முடிவில் அவனிடம் ஒடுங்குகிறது. அவ்வாறு ஒடுங்கிய உயிர்களை மீண்டும் படைக்க அவன் நினைக்கும்போது அதற்கு ஆதாரமான அறிவாகிய மண்டையோட்டையும், உருவமாகிய எலும்பையும் மண்ணில் விழுந்து புதைந்து மக்கி அழியாதிருக்குமாறு கைகளில் ஏந்துகிறான், ஏந்தினான் என்பதை திருமூலர்,

எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணிமுடி வானவராதி
எலும்புங் கபாலமும் ஏந்திலனாகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே. -திருமந்திரம்

என்று பாடுகிறார். இதன் பொருளாவது, பிரளய வேளையில், எலும்புகளையும், கபால ஓட்டையும் கரத்தில் ஏற்தியவராய் பவனி வந்த சிவன், நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற திவ்யமான மணிமகுடம் தரித்த மகாவிஷ்ணு முதலானவர்களும், வடிவயமான எலும்புகளையும், அறிவு நலமாகிய கபாலத்தையும் சூட்சுமமாகத் தரிக்கவில்லை எனில் ஜனனத்திற்கென்று ஏகுங்காலத்தில் மாந்தர்களுடைய தொன்மையான வடிவமும் அறிவுச்செறிவும் தத்தம் விஷயங்களில் யாதொரு தொடர்பும் இல்லாமல் போகுமே! ஜனனம் வாழ்க்கை, மரணம் என்ற காரியங்களை எல்லாமே அவற்றிற்குரிய காரணாதிகளாக ஈசனிடத்தில் துலங்குகின்றன என்பது இதன் கருத்து.

இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. இவ்வுலகில் வாழும் உயிரினங்களும் பஞ்சபூதங்களாலானது.

உடல் -நிலம்
இரத்தம் -நீர்
உடலின் வெப்பம் -நெருப்பு
பிராணன் - காற்று
உயிர் - ஆகாயம்

உடம்பின் அமைப்பில் சதையும் எலும்பும் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. சதையின்றி எலும்பு மட்டும் இருந்தாலோ எலும்பின்றி சதைமட்டுமிருந்தாலோ எந்தவித பயனும் இல்லை. இவைகள் தனித்தனியே இருப்பதாக சற்று கற்பனை செய்து பாருங்கள். எப்படியிருக்கும்? சட்டமில்லா துணிபோன்று அன்றோ இருக்கும் வெறும் சதை.? இதனால் உருவம் கொடுக்க இயலுமா? குவியலாக அன்றோ இருக்கும்? அதைத் தாங்கி நிற்கவும், அதனாலான முக்கிய உடலை இயக்கும் உறுப்பாகிய இதயம், நுரையீரல், மூளை போன்றவற்றைச் சுற்றி பாதுகாப்பாக அரணாக, கவசமாகவும் இருந்து பாதுகாப்பது எலும்பு மண்டலமல்லவா? இதுவன்றோ மனிதனையோ, விலங்கினையோ வேறு உயிர் வாழ்வனவற்றை அடையாளங்காட்ட உதவுகிறது.

எலும்பு மண்டலத்தால் பின்னப்பட்டு, நரம்புகள் என்னும் வலிய கயிற்றினால் செம்மையாகக் கட்டுண்டு குருதியுடன் கலந்த மாமிசத்துடன் செழுமையான மனையை அமைத்து சுகமடைய வேண்டி, ஜீவன் உறையும்படியான இந்த தேகத்தைப் பண்ணுவதற்காக எம்பெருமான் எலும்பைத் தாங்கினான்.

பேரின்பம் அடைய விரும்புகிறவர்கள் யோக நிலையில் இருந்து, மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தியை சுழுமுனை நாடி மூலமாக எழுப்பி மூலாதாரம் சுவாதிஸ்டானம், மணிபூரம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் வரை தடையின்றிச் செல்ல பாதுகாப்பாக அமையும் எலும்பை, மண்ணோடு மண்ணாகாதவாறு ஊழி முடியுங்காலத்தில் எலும்பை ஏகாம்பர நாதனான சிவன் தாங்கினான். உலகில் உயிர்கள் ஜனனத்திற்கு அவசியமான எலும்பு இற்று விடாதிருக்க மண்ணில் விழாது தாங்கினான்.

அவ்வாறு பிறந்த உயிர் அறிவு சார்ந்து விளங்க சிறந்த உறுப்பாகிய மூளை சிதையாது காக்க கபாலத்தையும் தாங்கினான்.

உடல் என்றால் அதனுள் எலும்பு இருப்பது எப்படி தெளிவோ, அதே போல்தான் மணிமுடிதரித்த விஷ்ணு மற்றும் தேவர்களும், வைரமுடிதாங்கியிருந்தாலும் கபாலமும் எலும்பும் தாங்கியிருப்பது மறைபொருளாகக் கொள்ளப்படுவதேயாகும்.

அறியப்படும் அறிவின் இருப்பிடமான மூளையின் அவசியத்தையும் அதன் பகுதிகளையும் காப்பதற்காக கபாலத்தைத் தாங்கினான் கபாலி.

இத்தனை அவசியமான, முக்கியமான ஆதாரமான, அடிப்படையான எலும்பு மண்டலம் சிதையாது காக்க, சீவனை உற்பத்தி பண்ணும் சிவன் அதன் அவசியமறிந்து தாங்கினான் என்பதை அறிவுறுத்த, வலியுறுத்தத்தான்,

எலும்பும் கபாலமும் ஏந்திலனாகில்
எலும்பும் கபாலமும் இற்றுமண் ணாமே.

என்றார்.

உலக உற்பத்திக்கு வித்தான இவை மண்ணோடு மண்ணாவதை மண் படைத்த மகேசன் பார்த்துக் கொண்டிருப்பானா? அப்படி மண்ணில் போனால் என்ன ஆகும்? அந்தப் பேரழிவைத் தடுக்கவே,

'எலும்பும் கபாலமும் ஏந்தி எழுந்தான்' என்கிறார் திருமூலர்.

ஒன்பான் தந்திரங்களுள் இரண்டாவது தந்திரத்தில் எலும்பும் கபாலமும் என்ற தலைப்பில் ஓர் பாடல்தானே எழுதியுள்ளார்என்று நினைப்பது அறிவுடைமையல்ல. இந்த ஒரு பாடல் அத்தனை பாடலுக்கும் அடியானது அன்றோ? உடலுக்கு எலும்பு அடிப்படையாவதுபோல இப்பாடலும் உடலுக்குச் சொல்லப்படும் சாஸ்த்திர விதிகளின் அடிப்படையன்றோ?

இத்தகு சிறப்புமிகு, நேர்த்தியான திருமூலர் பாடல்கள் இறை வணக்கத்துக்கு மட்டுமின்றி ஆத்ம சாதனைக்கும் அச்சாரமாக விளங்குகிறது என்று நினைக்கும்போது மெய் சிலிர்க்கிறது.

அனைவரும் திருமூலர் பாடல்களைப் படித்து உய்வோமாக.

நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!!

திருச்சிற்றம்பலம்

20. அடிமுடி தேடல்

சித்தாந்த இரத்தினம். கணபதி இராசேந்திரன்
புதுக்கோட்டை

ஊனுடம்பிற் பிறவி விடந் தீர்த்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்கு மலர் ஏற்றிருமந் திரமாலை - சேக்கிழார்

சைவத் திருமுறைகளில் திருமந்திரம் 10 ஆம் திருமுறை, திருமந்திரம் வேதமாகவும், ஆகமமாகவும், சாத்திரமாகவும், மருத்துவ நூலாகவும் உலகுக்கு கிடைத்த அரிய பிறவா பெருநிலையைக் கூறும் நூலாகும்.

சித்தராகவும், யோகியாகவும், ஞானியாகவும், சைவ நாயன்மாராகவும் விளங்கும் திருமூலர் 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று உலகுக்கு அளித்த அருட்கொடை திருமந்திரமாகும். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உடையது.

இரண்டாம் தந்திரத்தில் எட்டாவது தலைப்பில் வருவது அடிமுடிதேடல் ஆகும். அதாவது இறைவனுடைய அடியையும், முடியையும் தேடல் என்பதாகும்.

பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதமையாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன் நிற்க
அரன தேடி அரற்றுகின் றாரே.

பிரமன், மால் இருவரும் தம் பேதைமையால் தாங்களே உயர்ந்தவர் என்றும் அனைத்துக்கும் தலைமையானவர் என்று எண்ணவும், பரம் பொருளாகிய இறைவனே அவர்கள் முன்னே சோதிப் பிழம்பாய் தோன்றவும், மாலும் பிரமனும் அச்சோதியின் அடியும் முடியும் உணராது, அறியாமையினாலே தேடுவாராயினர்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. - திருக்குறள் (358)

பிரமனும் மாலும் பிறப்புக்குக் காரணமான பேதைமையில் இருப்பதினால் பிறப்பிறப்பில் நீங்கினார்அல்லர் என்பது பெறப்படும். மாலும் துஞ்சுவன் மலரவன் இறப்பன் என்று வள்ளற் பெருமானும் கூறுவார்.

சித்தாந்த சாத்திரமாகிய திருவருட் பயனும் 'பால் ஆழி மீன் ஆளும் பான்மைத்து அருள் உயிர்கள் மால்ஆழி ஆளும் மறித்து' என்றும் கூறும்.

பாற்கடலில் வாழும் மீனானது பாலை அருந்திச் சுகம் அடையாமல், அதன் இயல்பாகிய மயக்கத்தினால் வேறு சிறிய உயிர்களைத் தேடுவது போன்று, மாலும் பிரம்மனும் சிவ வியாபகத்திற்குட் பட்டிருந்தும், அருளை அடைந்து இன்புறாமல் போயினர். மாயாகாரியமாகிய ஆணவ இருளில் மூழ்கி, தம்மையும் உணராமல் தன் தலைவனையும் உணராமல் போயினர்.

ஆமே ழுலகுற நின்றஎம் அண்ணலுந்
தாமே ழுலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே ழுலகுறும் மாமணி கண்டனை
யானே அறிந்தேன் அவன் ஆண்மையாலே - 373

ஏழு உலகங்களும் பொருந்துமாறும், நிறைந்தும் அக்கினி வடிவில் தோன்றியும், மேலான ஏழு உலங்களிலும் நிறைந்து விளங்கும் நீல மிடற்றனை அவன் அருளினாலே அறிந்தேன் என்று திருமூலர் கூறுகிறார்.

இறைவனுடைய வியாபகத் தன்மையைப் பாடும் மணிவாசகப் பெருமான் ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்சோதி என்று பாடுகின்றார். மேலும்,

'*மாலறியா நான் முகனும் காணா மலை*' என்றும்
'*செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங்காண்பரிய*

என்றும் அவர்கள் அறியாமையினாலே இறைவனை உணர முடியாத முறைமையையும் விளக்குகின்றார். ஆனால் 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று பாடுகின்றார்.

அப்படி எல்லாம் ஆனவனை, எல்லாம் கடந்தவனை எங்கும் நிறைந்து விளங்குபவனை அவன் அருளாலே அறிந்தேன் என்கிறார்.

'அண்ட கோடிகள் எல்லாம் அரைக்கணத் தேகி கண்டு கொண்டிட ஒளிர்கலை நிறை மணியே' என வள்ளல் இராமலிங்க அடிகளார் அருள் உணர்த்தும் பாங்கும் ஈண்டு நோக்கத் தக்கது.

ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்
சேணாய் வானோங்கித் திருவுரு வாய் அண்டத்
தாணுவும் ஞாயிற்றுந் தண்மதி யுங்கடந்
தாண்முழு தண்டமு மாகி நின் றானே.

இறைவனுடைய வியாபகத் தன்மையை கூறுமிடத்து உடம்பாகவும், அதனுள் உயிராகவும், அதனுள் உணர்வாகவும், அக்கினியாகவும் உள்ளான் என்றும், பிரமன் மால் அறிய முடியாத தூரத்தில் உள்ளவனாகவும், எங்கும் நிறைந்த சோதியாகவும், அண்டங்களையும், சூரிய சந்திரர்களையும் கடந்து எல்லாமுமாகி அதற்கு ஆதாரமுமாகியுள்ள தன்மை உணர்த்தப்பட்டது.

உடல் தானாக இயங்கா. அதை உயிர் இயக்க வேண்டும். அவ்வுயிரை உயிருக்கு உயிராக உணர்வாய் இருந்து இறைவன் இயக்குகின்றான். அவ்விறைவனது அடிமுடியை அறிய முடியுமோ?

திருவாசகத்தில் திருத்தேணேக்கம் பதிகத்தில் 'நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன் புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்து நின்றான் உலகேழ் எனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே பலவாகி நின்றவா தேணேக்கம் ஆடாமோ' என்று இறைவனின் வியாபகத் தன்மையும்

பாதம் இரண்டு வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணி முடி சொல்லில் சொல்லிறந்து நின்ற தொன்மை

என்றும் மணிவாசகர் பாடுவார்.

நாவுக்கரசர் பெருமானும் தனது திருத்தாண்டகம் முழுவதிலும் இறைவனின் வியாபகத்தன்மையை விரித்துக் கூறப்படுவதைக் காணலாம்.

நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே

எங்கும் நிறைந்த சிவம் எல்லா அண்டங்களையும் தனக்குள் அடங்க, சிவன் பேரொளியாக நீண்டு நின்றார். அதன் அடிமுடி காணச் சென்ற நான்முகனும், மாலவனும் ஆய்ந்து செல்லச் செல்ல அடிமுடி அறியாத வராயினர்.

அரிக்கும் பிரம்மர்க்கும் அல்லாத தேவர்க்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் - மாணிக்கவாசகர்.

ஊமன் கண்போல ஒளியும் மிக இருளை
யாம்மன் கண் காணாதவை. -திருவருட்பயன்.

பகலவன் ஒளி எங்கும் நிறைந்திருந்தும். கூகையானது அந்த ஒளியை உணராத் தன்மையைப் போல் தங்கள் பேதைமையாகிய ஆணவத்தால், சிவ வியாபகத்துட்பட்டிருந்தும் சிவத்தை அறியாது போயினர் என்பதாம்.

சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப் பெய்து மாறே. - 376

செம்மையான திருவடியை ஏத்துகின்ற தேவர்களும் மூன்றடி நிலம் தானம் கேட்ட திருமாலும், முனிவர்களும், இசை வடிவான மந்திரங்களைக் கொண்டு விரும்பியதைச் செய்யலாம் என்ற நான்முகனும், சுற்றி அலைந்தாலும் சிவனைச் சேர முடியாது என்பதாகும்.

வானவரும் மாலவனும், மலரவனும் முனிவர்களும் ஆசையுட்பட்டு தங்கள் எண்ணம் ஈடேற வேண்டும் என்று முயன்றதனால் அவர்கள் இறைவனை அடைய முடியவில்லை.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. குறள்- 361.

மேலும்,

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே.

என்று பாடுகிறார். ஆக அவா என்பது பிறப்புக்குக் காரணமாவதோடு எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகும்.

எல்லோரும் ஒன்றாகக் கலந்திருப்பினும் கற்றார் கண்ணுக்கு எழுத்து புலனாவது போன்றும் கல்லாதார் கண்ணுக்கு அஃது புலனாகாமையோடு ஒக்கும்.

தானக் கமலத்து இருந்த சதுமுகன்
தானக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும் பொருள் தன்மையது ஆமே. -377

கமலத்தில் உறைகின்ற நான்முகனும், கருங்கடல் வாசம் செய்யும் திருமாலும், ஊனுக்குள் உயிர்போல் உணர்கின்ற சிவமாம் தன்மையஆமோ எனில் இல்லை என்பதாம்,

ஒரு பொருளுங் காட்டா திருள் உருவம் காட்டும்
இருபொருளுங் காட்டா திது - 23. திருவருட்பயன்.

இருளானது தனக்குள் இருக்கின்ற எந்த பொருளையும் காட்டாது. ஆனால் இருளாகிய தான் இருப்பதைக் காட்டும். அதுபோல் ஆணவ மலமானது தன்னையும் காட்டாது. தான் மறைத்த ஆன்மாவையும் காட்டாது. அதுபோல ஆணவ மலத்துட்பட்டதால் மாலும், பிரமனும், தம்மையும் உணராமல் தன் தலைவனையும் உணராதவராயினர். ஆகையினால் அருட்பெருஞ்சோதியாகிய சிவனை ஒப்பார். ஆனால் இறைவன் இருக்கும் முறைமையை மாணிக்கவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் திருவம்மானையில்,

'*ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து*', என்றும், திருப்பூவல்லி பதிகத்தில்

தேனோடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடி வந்துள் புகுந்தான் உலகர் முன்னே

என்று இறைவனுடன் இரண்டற சோதியில் கலந்த மாணிக்கவாசகர் சான்று பகருகின்றார்.

திருமூலரும்,

தேனுக்குள் இன்பஞ் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடு மதியிலீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே.

என்ற பாடலும் ஈண்டு சிந்திக்கத் தக்கதாகும்.

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்
டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங் கமைஞ்சருள் கூடலு மாகும் - 378.

பிரபஞ்சம் முழுவதும் எல்லாமாயும் கலந்தும், ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருக்கின்ற மேலான சுடரை சோதியை ஆன்மாக்கள்

உய்வடையும் பொருட்டு அமைக்கப் பெற்ற உண்மை நெறியை அறிந்து ஒழுகினால் எல்லாவற்றிலும் கலந்தும் கடந்தும் நிற்கின்ற 'சதாசிவ ரூபம்' ஆகிய சிவ சதாக்கியத்தின் அருளைப் பெறலாம் என்று உணர்த்துகின்றார்.

ஆன்மாக்கள் உய்வடையும் நெறியாகிய மெய்நெறி அறமாகும். 'அறம் தான் அறியும் அளவு' என்பார் திருமூலர். அறமாவது, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம். (-குறள்,35.) என்று திருவள்ளுவர் அறத்துக்கு இலக்கணம் வழங்குகிறார்.

மேற்குறிப்பிட்ட நான்கும் மனதில் தோன்றுபவை ஆகவே 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்று குறிப்பிடுகின்றார். அப்படியானால் மனம் எங்குள்ளது என்றால் அதற்கும் திருமூலரே,

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே. -620

மனம் நாம் விடும் மூச்சுக் காற்றுக்குள் இருக்கிறது என்று விடை பகர்கின்றார்.

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக் கோளாகத்
தாள் கொடுத் தானடி சாரகிலாரே -379

தேவர்கள் தமக்கு ஒளியைக் கொடுத்த சிவபெருமானை வணங்கினார்களே தவிர, அவர்கள் என்னைப் (திருமூலரை) போல் பரமனை உணர்ந்தாரில்லை. இறைவன்பால் தம்மை அடைக்கலப் பொருளாக்கவில்லை. தன்னை அடைந்தார்க்கு தன்னையே கொடுத்து முடிவற்ற பேரின்பத்தை நல்கும் இறைவனுடைய திருவடியை எம்மைப் போல் பெற்று உய்ந்தாரில்லை என்றும் கூறுகின்றார். சிவனை வழிபட்டும் சிவனை அறிகிலர் அவன் திருவடியைப் பொருந்தாதவர் ஆயினர்.

ஊழி வலஞ்செய்தாங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே. 380

ஊழியைச் செய்கின்ற உருத்திர மூர்த்தியை ஆராய்ந்து அறிகின்றவன் சிவபெருமானாகும். பிரம்மபதத்தில் இருக்கும் நான்முகன் வெளிப்பட்டு, என்னுடைய சிரசில் தாங்கள் விதிக்கும் கட்டளையை தாரும் என வேண்ட பிரம்மமாய் விளங்கும் சிவன் பிரமனுக்குப் படைப்புத் தொழிலை அருளினான் என்க.

அடிமுடி தேடல் நான்முகனும், மாலும் இறைவனுடைய வியாபகத்துள் இருந்து தங்கள் பேதைமையால் அறியாது போயினர் என்றும்,

ஏழ் உலகினும் அருட் பெருஞ்சோதியாய் பரந்து நிற்கும் சிவனை அவர் அருளால் நான் அறிந்தேன் என்றும்,

ஊனாய் உயிராய் உணர்வாய், ஞாயிறும் மதியும், அண்டமாயும் அதற்கோர் ஆதாரமாகவும் சிவன் எங்கும் நிறைந்தும் கடந்தும் நின்ற தன்மையை விளக்கியும்,

நான் முகனும் திருமாலும், தம் அறிவால் ஆராய்ந்து அறியவொண்ணாது நானும் கொண்டது கூறியும், புகழ்ச்சியினாலோ, ஆசையினாலோ இசைவடிவான மந்திரங்களினாலோ சிவபெருமானது திருவடியை பொருந்த முடியாது என்றும்,

உணர்வாய ஒருவனை நான்முகனும் திருமாலும் அறிய முடியாத தன்மையையும், அறமாகிய உண்மை நெறியில் சென்றால் சிவ சாதக்கியத்தைப் பெற்று உய்யலாம் என்றும்,

இறைவனிடம் சரண் புகாமையால் இன்பம் ஆகிய சிவயோகத்தை பொருந்தாதவர் ஆயினர் என்றும், வேண்டியவர்க்கு வேண்டியவை ஆகும் சன்பிரமனுக்கு படைப்புத் தொழிலை அருள் செய்ததையும் விளக்கப்பட்டது.

தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலந்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே - 2426

இணையார் திருவடி என்றலை மேல் வைத்ததுமே - மாணிக்கவாசகர்.

பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ - நாவுக்கரசர்.

இப்படி திருவடி இணையாகவே சிறப்பாகக் குறிக்கப்படுகின்றது. திருவடியாவது கால், காலாவது காற்று. நடந்தால் மூப்பு, இருந்தால் இளமை. 'ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப் பேராமற் கட்டிப் பெரிது வல்லீரேல் நீராயிரமும் நிலமாயி ரத்தாண்டும் பேராது காயம் பிரான்நந்தி ஆணையே' என்றும் திருமூலர் ஆணையிட்டு வலியுறுத்தும் காற்றைப் பிடிக்கும் கணக்கையும் கூற்றை உதைக்கும் குறியையும் நமக்கு அருளியிருக்கின்றார். திருமூலர் வழிநின்று அருள்பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

21. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

சிவநெறிச்செல்வர். முனைவர். **வீ. ஜெயபால்** எம்.ஏ.எம்.எட்.,
சைவசித்தாந்தப் பேராசிரியர், தஞ்சாவூர்.

முன்னுரை

உலகில் மிகவும் தொன்மையான சமயம் சைவ சமயமேயாகும். இச்சமயத்திற்கு உரித்தான 28 ஆகமங்களிலுள்ள உண்மைப் பொருள்களை யாவரும் எளிதில் அறிந்து அனுபவத்தில் மேற்கொள்ள திருமந்திரம் வழிமுறை வகுத்துள்ளது. ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்ட இந்நூலில் இரண்டாம் தந்திரத்தில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இறைவனாகிய சிவபெருமான் ஒருவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான். இவற்றுள் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களும் உடலுக்கும், அருளுதல், மறைத்தல் எனும் இரு தொழில்களும் உயிருக்கும் உரியனவாகும்.

1.படைத்தல் (சர்வசிருஷ்டி)

சிவபெருமான் ஆற்றும் ஐந்தொழில்களில் முதல் தொழில் படைத்தல் ஆகும். அநாதியே உயிர்கள் ஆணவ மலத்தைப் பற்றி அறியாமை வயப்பட்டிருந்தபோது, அறிவு விளக்கம் ஏற்படுவதற்காக இறைவன் மாயையிலிருந்து உடல் (தனு) மனம் முதலிய உட்கருவிகள் (கரணம்), உலகம்(புவனம்), உயிர்கள் அனுபவத்திற்குரிய போகப்பொருள்கள் (போகம்), இவற்றைப் படைத்தான். இது படைத்தல் எனப்படும்.

முதல்பொருளாகிய சிவப்பரம்பொருள், பொருளால் ஒன்றேயாயினும் 'சிவம் சக்தி' என இரண்டு நிலையில் இருக்கும். அந்நிலை ஆதியும் அந்தமும் இல்லாததாய் 'பராபரசிவம்' என்று வழங்கப்படும். சிவம் பராபரமாய் நிற்கும்போது அதன் சக்தி 'பராபரசக்தி' எனப்படும்.

சொரூப நிலையில் உள்ள பராபரசிவம் உயிர்களை ஆணவ மலக்கட்டிலிருந்து மீட்டு உய்விக்க வேண்டும் என்னும் விருப்பத்தால் உலகத்தைப் படைக்க நினைக்கும் அந்நிலை உலகத் தோற்றத்திற்குத்

தொடக்க நிலையாதலால் அந்நிலையில் நிற்கும் சிவம், 'ஆதிசிவன்' என்றும், அதன் சக்தி ஆதிசக்தி என்றும் வழங்கப்படும்.

பராபரசிவம் முதன்முதல் சர்வசிருஷ்டி செய்யும்போது, ஆதிசிவனாய் நிற்பதோடு மட்டுமின்றி, ஆற்றலும் ஞானவடிவுமாகிய ஆதிசக்தியுடன் கூடியே இருப்பான்.

இச்சக்தி உலகைத் தொழில்படுத்த விரும்பும் நிலையில், அவ்விருப்பமே இச்சையாகவும், அத்தொழில் முறையை அறிவதே ஞானமாகவும், அறிந்தவாறு செய்வது கிரியையாகவும் வழங்கப்படும். அந்நிலையில் ஆதிசிவன், தனது ஆதிசக்தி வழியாக முதல்முதலில் எழுத்தோசையைத் தோற்றுவித்தல் பொருட்டு, அதன் தோற்றத்துக்கு நிலைக்களமாகிய நாதத்துவத்தைச் சுத்த மாயையினின்று தோற்றுவித்து அதில் நின்று படைக்கின்றான்.

ஆதிசக்தியின் வழியே நாதம் தோன்றுதலையே
தீதில் பரையதனபால் திகழ்நாதமே (பாடல் 381)

எனத் திருமூலர் குறிக்கிறார். நாதத் தத்துவத்திலிருந்து விந்து தத்துவம் தோன்றுகிறது.

குடத்திற்கு மண் முதற்காரணம் போல் உலகத்திற்கு முதற்காரணம் மாயை ஆகும். இது பல்வேறு வகைப்பட்ட சட ஆற்றல்களின் தொகுதியாகும். சுத்த மாயையினின்று தோற்றுவிக்கப்படுகின்ற தத்துவங்களையே இடமாகக் கொண்டு, இறைவன் தனது அருளாகிய சக்தியைக் கொண்டு மாயையிலிருந்து தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றைப் படைக்கின்றான்.

சுத்த மாலையில் நிகழும் படைப்பு

சிவபெருமான் உலகைப்படைக்கும்போது, தானே சதாசிவர், மகேசுவரர், உருத்திரர், மால், அயன் என ஐவராய் நின்று (புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்- பாடல் 386) முறையே வான், காற்று, தீ, நீர், நிலம் எனும் பூதங்களுக்குத் தலைவராக நின்று படைக்கின்றார். அவர்களுக்குரிய சக்திகள் முறையே மனோன்மணி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள் என்பவராவர். இதனை 'சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும் சார்வத்துச்சத்தி' எனும் திருமந்திரக்குறிப்பின் (பாடல்384) மூலம் அறியலாம்.

சூக்குமத்திலிருந்து தூலம் தோன்றும் என்பது விஞ்ஞான உண்மையாகும். அதன்படி 'ஐந்தும் செறிந்து ஐந்து பூதமாய்' (பாடல் 385) எனும் திருமந்திரத் தொடர்க்கு ஏற்ப, சூக்குமத் தன்மையாகிய ஓசையிலிருந்து வானும், ஊறிலிருந்து காற்றும், ஒளியிலிருந்து தீயும், சுவையிலிருந்து நீரும், நாற்றத்திலிருந்து நிலமும் தோன்றின.

நிலந்தீ நீர்வளி விசும்போடைந்தும்
கலந்த மயக்கம் உலகமாதலின் (தொல்-பொருள்)

உடலும் தத்துவங்களும்

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்பர் ஆன்றோர். நிலத்துவம் உடலில், எலும்பு சதையாயும், நீர்த்தத்துவம், வியர்வை, இரத்தமாகவும், நெருப்புத்தத்துவம் கோபம், பசியாகவும், காற்றுத்தத்துவம், தச வாயுக்களாகவும், ஆகாயத்தத்துவம் இடைவெளியாகவும் உள்ளன.

மாயை, பொருளால் ஒன்றாயினும், செயல்படும் தன்மையால் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை என்று மூன்றாகக் கொள்வர். சைவ சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களில் சிவத்தத்துவமாகிய சிவம், சக்தி, சாதாக்கியம், ஈஸ்வரம், சுத்தவித்தை என்னும் ஐந்தும் சுத்த மாயையில் உள்ளவை. வித்தியா தத்துவமாகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை எனும் ஏழு தத்துவங்களும் அசுத்தமாயையில் உள்ளவை. அசுத்த மாயையில் உள்ள மாயை கலக்கப்பட்டு பிரகிருதிமாயையாகச் செயல்படும். இப்பிரகிருதி மாயையில் மெய், வாய் (சுவைக்கும் நாக்கு), கண், மூக்கு, செவி எனும் ஞானேந்திரியங்களும், கை,கால், வாய் (பேசும் நாக்கு), எருவாய், கருவாய் எனும் கன்மேந்திரியங்களும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் தன்மாத்திரைகளும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூதங்களும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனும் அந்தக்கரணங்களும் ஆக இருபத்திநான்கு ஆன்ம தத்துவங்களும் உள்ளன.

அனந்தேஸ்வரர் செயலால் அசுத்தமாயையில் உள்ள மாயை கலக்கப்படும்போது கலை, காலம், நியதி தத்துவங்களும், கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றும். சீகண்ட ருத்திரரது செயலால், கலைத் தத்துவத்திலிருந்து மூலப்பிரகிருதி தோன்றும். மூலப்பிரகிருதி என்பது சத்துவம், தாமதம், இராசதம் எனும் முக்குணங்களும் விளங்காமல் இருக்கும் நிலையாகும். அந்த மூலப்பிரகிருதியிலிருந்து குணத்தத்துவம் தோன்றும். குணத்தத்துவத் தினின்று அந்தக்கரணங்களில் ஒன்றாகிய புத்தித்தத்துவமும்,

புத்தித்தத்துவத்திலிருந்து ஆங்காரத் தத்துவமும் தோன்றும். முக்குணங்களும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் தம்முன் ஒத்து நிற்கும் இடம் 'சித்தம்' எனப்படும்.

உடலில் உள்ள ஆன்மாவுக்கு அறிவு, இச்சை, செயல்களில் ஆங்காரத் தத்துவம்தான் நைசத ஆங்காரம் (சாத்வீகம்), வைகரி ஆங்காரம் (இராசதம்), பூதாதி ஆங்காரம் (தாமதம்) என மூன்று நிலைகளில் விளக்கத்தைத் தருகிறது. சாத்வீக குணத்தோடு தொடர்புடைய மனம், ஞானேந்திரியங்கள் எனப்படும் மெய், வாய்,கண், மூக்கு, செவி எனும் கருவிகளின் இடமாக நின்று உயிருக்கு அறிவை விளக்கும்.

வைகரி ஆங்காரத்தில், இராசத குணத்தோடு தொடர்புடைய கை, கால், வாய், எருவாய், கருவாய் எனும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் பொருந்தித் தோன்றும்.

தாமதக் குணமுடைய பூதாதி ஆங்காரத்திலிருந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற தன்மாத்திரைகளாகிய பஞ்ச பூதங்களின் குணங்களும், பின்பு அவற்றின் நின்று முறையே, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் எனும் பஞ்ச பூதங்களும் தோன்றும். இவ்வாறு உடலில் சிவத்தத்துவம் ஐந்தும், நீங்கலாக எஞ்சிய முப்பதொரு தத்துவங்களும் தம்முள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு நிலையில் கூடியுள்ளன. உயிர், உடலை விட்டுப் பிரியும்போது, ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், பஞ்சபூதங்கள் ஐந்தும் ஆக பதினைந்து தத்துவங்களை நீக்கி விட்டு மீதமுள்ள பதினாறு தத்துவங்களோடு செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்ச சரீரங்களும் அதிகாரமூர்த்திகளின் எல்லைகளும்

மாயை காரண சரீரமாகவும், வித்யா தத்துவங்கள் ஏழனுள் மாயை தவிர ஏனைய ஆறும் கஞ்சுக சரீரமாகவும், குணம், சித்தம், மூலபிரகிருதி என்று பலவகையில் நிற்கும். ஒன்று குண சரீரமாகவும், தன்மத்திரைகள் ஐந்தும் அந்தக்கரணங்களுள் மனம், புத்தி, ஆங்காரம் எனும் மூன்றும் சேர்ந்து, எட்டும் புரியட்டக்காயம் என வழங்கும் சூக்கும சரீரமாகவும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், பஞ்ச பூதங்களாகிய ஐந்தும் ஆக பதினைந்தும் தூலசரீரமாகவும் இருக்கின்றன.

சர்வேசுவரனாகிய சிவபெருமான் ஒருவனே, தமது திருவருளால் எல்லாவற்றிலும் கலந்தும், யாவற்றையும் அறிந்தும், எங்கும் வியாபித்து இருக்கிறான். திருமால், தூலசரீரம் முதல் நடுவுடலாகிய குண சரீரம் வரை நிறைந்து நின்று செயலாற்றுகிறான். பிரமன், முதல் உடம்பாகிய

தூலசரீரத்தில் மண் (பிருதிவி) தத்துவத்தளவில் நிறைந்து நின்று செயலாற்றுகிறான். இதனை,

காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுடலாய் நிற்கும்
பாரணன் அன்பிற் பதம்செய்யும் நான்முகன் பாடல் 391.

எனும் திருமந்திரத் தொடர் மூலம் அறியலாம்.

சிவபெருமான் உலகைப் படைத்ததன் காரணம்

சிவபெருமான் உயிர்களிடம் கொண்ட கருணையின் காரணத்தால், உலகம், அழித்தல், தோன்றல், நிற்றல் எனும் செயல்கள் அவனது திருவுள்ளத்தில் எழுந்தபோது, மாயையின் நின்று தனது சிற்சக்தியுடன் பொருந்தி உலகைப் படைத்தான். இதனை,

போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்து
ஆக்கமும் சிந்தைய தாகின்ற காலத்து - 393

எனும் திருமந்திரத்தில் திருமூலர் அருளியுள்ளார்.

சிவபெருமான் உடலைப் படைத்ததன் காரணம்

சிவபெருமான் நடுவுநிலைமை உடையவன். இறைவன் உடலைப் படைக்கும்போது, உயிர் செய்த வினைகளை வரையறை செய்து பின்பு உடலையும், உயிரையும் சேர்ப்பிக்கிறான்.

'அறம் பாவம் எனும் அருங் கயிற்றால் கட்டி' என்கிறது திருவாசகம். (சிவபுராணம், வரி 52) உயிர்கள், செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பவே அவைகளுக்கேற்ற உடல்கள் இறைவனால் வழங்கப்படுகின்றன. வினைகள் ஜடமாக இருப்பதால், அவை உயிர்களைத் தாமாகச் சென்றடையாது. உயிர்களோ சிற்றறிவுடையவை. எனவே, தமக்குரிய உடல்களைப் படைத்து கொள்ளவும், அவற்றுள் பொருத்திக் கொள்ளவும் இயலாது. முற்றறிவினனாகிய சிவபெருமான் ஒருவனே, உயிர்கள் செய்த வினைக்கேற்ற உடல்களைப் படைத்து, அவற்றை அவ்வுயிர்களுடன் கூட்டுவது மட்டுமின்றி, அவை வினைப்பயனை நுகர்வதற்கு உடல்களுக்குத் துணையாக நின்று அவைகளை இயக்குகிறான்.

இதனை,

'........*உடற்குத் துணையதா*
நன்றுயிர்ப்பானே நடுவு நின்றானே' (பாடல் 394)

எனும் திருமந்திரத் தொடர் நன்கு விளக்குகின்றது.

இக்கருத்தினை,

'*என்னுள்ளே உயிர்ப்பாய் புறம்போந்து புக்கு*
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே' (பாடல் 5:21:1)

எனும் தேவாரத் தொடர்கள் மெய்ப்பிக்கின்றன.

உடல் பேதங்கள்

உயிர்கள் செய்த வினைகளுக்கு ஏற்ப இறைவன், எண்பத்து நான்கு நூறாயிரம் வேறுபாடுகளுடைய உடம்புகளைப் படைத்து அவற்றை இயக்குகிறான்.

இவ்வுடல் பேதங்களை,

'*அப்பரி செண்பத்து நான்கு நூறாயிரம்*
மெப்பரி செய்தி விரிந்து யிராய் நிற்கும்' (பாடல் 409)

எனும் திருமந்திரத் தொடர் மூலம் அறியலாம். இதனையே,

'*உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதம்*' (1:132:4)

என்று தேவாரமும்,

அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயு சத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தால்
உண்டு பல் யோனி......... (பாடல் 179)

என்று சிவஞான சித்தியாரும் உரைக்கின்றன.

இவை அனைத்தும் அண்டசம் (முட்டை), சுவேதசம் (வியர்வை), உற்பீசம் (விந்து), சராயுசம் (கருப்பை) எனும் நால்வகைத் தோற்றமும், தேவர், மக்கள், விலங்கு, பறவை; ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புமாய் அமையும்.

2. காத்தல் (திதி)

சிவபெருமான் ஆற்றும் ஐந்தொழில்களுள் இரண்டாவது தொழில் காத்தலாகும். மாயையிலிருந்து படைக்கப்பட்ட தனு,கரண,புவன, போகங்களை ஒரு குறிப்பிட்ட கால எல்லை வரை நிறுத்தி வைத்து, அவற்றை உயிர்களுக்குப் பயன்படும்படி வினைப்போகங்களை நுகரச் செய்தல் காத்தல் எனப்படும்.

சிவபெருமானும் காத்தல் தொழிலும்

சிவபெருமான், தான் ஒருவனே பல பொருள்களிலும் நிறைந்து நின்று அவற்றை நிற்பிக்கின்றான். மேலும், உடலாயும், அதனுள் தங்கும் உயிராயும் தத்துவங்களாயும் நிற்கும் அவன், அவற்றைத் தன் இச்சை வழியே நடத்துகிறான்.

.........தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்.......
........தானே உலகில் தலைவனுமாமே (பாடல் 412)

சிவபெருமான் காக்கும்போது திருமாலாகத் தோன்றுகிறான். அவன், அன்பு, அடக்கம், இன்பம் ஆகிய எல்லாமாய் நிற்பதுடன், தோற்றக்காலமும், இறுதிக்காலமுமான ஊழியுமாகவும் இருப்பான்.

காத்தல் தொழிலின் பயன்

பரவொளி வடிவான சிவபெருமான், ஒளியுடன் சுவாசிக்கும் உணர்வோடு உடலுள் பரவி, நின்று, உயிரைத் தனது கால எல்லைக்கு முன் தள்ளப்படாவண்ணம், உயிர்ப்பாயும் காத்து நிற்கின்றான்.

இதனை,

......உள்ளுயிர்க்கும் உணர்வே யுடலுட் பரந்
தள்ளுயிரா வண்ணந் தாங்கி நின்றானே (பாடல் 418)

என்று திருமந்திர வரிகள் நன்கு உணர்த்துகின்றன. இதனை அப்பரடிகளும் தனது தேவாரத்தில்,

சுடர் ஒளியாய் உள் விளங்கு சோதி........ (6:31:1)

பிறவாதே எவ்வுயிர்க்கும் தானே ஆகி....... (6:68:8)

என்று குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கதாகும். எனவே, உடல் இருக்கும்போதே சிவபெருமானை நினைந்து ஞானம் பெற வேண்டும்.

3. அழித்தல் (சங்காரம்)

ஐந்தொழில்களில் மூன்றாவது தொழில் அழித்தல் ஆகும். சிவபெருமான் ஒவ்வொரு பிறப்பிலும் இறப்பிலும் உழலும் உயிர்களைச் செயலற்ற நிலையில் வைப்பதுடன், தனு, கரண, புவன, போகங்களை உயிர்களிடமிருந்து பிரித்து, இவற்றை மீண்டும் மாயையில் ஒடுக்குவதே அழித்தல் எனப்படும்.

சிவபெருமான் செய்யும் இத்தொழிலால் உயிர்களுக்குச் சிறிது ஓய்வு கிடைக்கிறது. இந்நிகழ்வைச் சாத்திர நூலான சிவஞான சித்தியார், 'அழிப்பு இளைப்பாற்றல்' (பாடல் 57) என்றே உரைக்கிறது.

சிவபெருமானும் அழித்தல் தொழிலும்

சிவபெருமான் தனது கையில் உள்ள நெருப்பால், உலகம் முழுவதும் அழித்ததும் அசுரர்களை அழித்ததும் மட்டுமல்லாமல், கடல் நீரை அதிகம் வாராதவாறு அடங்கியிருக்கவும் செய்கிறான். உலையிலிட்ட அரிசி மேலும் கீழுமாக மாறிச் சுழன்று வேதல் போல இவ்வுலகமும் துன்ப, இன்பச் சுழலில் சிக்கிச் சுழல்கிறது. இறுதியில் காணப்படும் உலகம் வெந்தொழியும். இதுவே சங்காரம் என வழங்கப்படும்.

இதனை,

உலை தந்த மெல்லரி போலும் உலகம்
மலை தந்த மாநிலம் தான் வெந்ததுமே (பாடல் 422)

என்று திருமந்திரத் தொடர் நினைவுப்படுத்துகிறது.

காத்தல் தொழிலானது அதன் கால எல்லையில் முற்றுப்பெறும்போது இறுதியில் உலகம் ஓம் எனும் பிரணவமாகிய நாதத்தில் ஒடுக்கப்படும்.

சங்காரத்தின் வகைகள்

சங்காரம் பொதுவாக நித்தசங்காரம், வைத்த சங்காரம், சுத்தசங்காரம், உய்த்தசங்காரம் என்று நான்கு வகைப்படும்.

நித்த சங்காரம்

தூல, சூக்கும உடம்புகள் உள்ளபோதும் அவற்றொடு உயிர், கூடாமல் நீங்கியிருத்தலைக் குறிக்கும். உயிர், அன்றாடம் நுகர்ந்த வினைப்பயனால் விளைந்த அயர்வினை நீக்குதல் பொருட்டு, கருவிகரணங்களுக்கு ஏற்பட்ட

துன்பங்களைத் துடைக்க காரண சரீரத்துடன் அழுந்தி துரியாதீத நிலையில் ஞான வடிவமாக நிற்கும் நிலையாகும்.

வைத்த சங்காரம்

உயிர், மாயைக் கடந்து நிற்றலைக் குறிக்கும். மனம் முதலிய அந்தக்கரணத் தொடர்பை விட்டு நீங்கி, மாயையின் விருத்தியும் (தூல உடல்) நீங்கி, துரித நிலையில் தனியாய் நிற்கும் நிலையாகும்.

சுத்த சங்காரம்

உயிர், சூக்கும உடம்பையும் கடந்து நிற்றலைக் குறிக்கும். இந்நிலையில், உயிர் தனிமையில் மனம் முதலிய அந்தக்கரணங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்மலமாய் நிற்கும்.

உய்த்த சங்காரம்

உயிர், சிவத்தில் கலந்த நிலையைக் குறிக்கும். குருவருளாலும் திருவருளாலும் உயிர் சிவபெருமானின் திருவருளில் தோய்ந்து அருளையன்றி வேறொன்றும் அறியாத நிலையில் சிவமாம் தன்மையைப் பெற்று சிவபோகத்தை அனுபவிக்கும் நிலையாகும்.

இந்நிலையை, 'சிவமாக்கியெனை ஆண்ட' எனும் திருவாசகத்தொடர் (8:51:1) நன்கு விளக்குகிறது. திருவருட்சங்காரமாகிய இச்சங்காரத்தின் வழியே உயிர்,பிறத்தல், வாழ்தல், இறத்தல் என்னும் மூன்றும் அற்ற நான்காம் நிலையாகிய வீடுபேறு எனப்படும் சிவப்பேற்றினை அடைவதாகும்.

இந்நிலையினை,

நித்த சங்காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்த சங்காரமும் மன்னும் அனாதியில்,
சுத்த சங்காரமுந் தோயாப் பரன் அருள்:
உய்த்த சங்காரமும் நாலாம் உதிக் கிலே (பாடல் 428)

எனும் திருமந்திரப்பாடல் நன்கு விளக்குகிறது.

உயிர்களுக்கு நிலையான வாழிடம் சிவபெருமானின் திருவடியேயாகும். இதனை உயிர்கள் உணருவதற்காகவே சிவபெருமான், உயிர்கள் உய்யும் பொருட்டு, நிலையில்லாததாகிய உலகத்தைப் படைத்து, நிறுத்தி, அதனை, உயிர்களின் நிலையான வாழிடமாக வைக்காமல்

அழித்தும் விடுகிறான். உயிர்களுக்கு வினைக்கேற்ற உடம்பையும் பல உட்கருவிகளையும் அருள் நூல்களையும் வழங்கியருளியுள்ளான்.

தக்க குருநாதரின் துணையுடன் இவற்றை நன்குணர்ந்து, அழியும் இவ்வுடலைக் கொண்டு ஊழ்வினையை, அனுபவிக்கும்போதே, திருவருள் துணையால் ஆகாமிய வினை ஏறாமல் எச்சரிக்கையாக இருப்பதுடன், பழவினையையும் நீக்குதல் வேண்டும். இதுவே பிறப்பை நீக்குவதற்குரிய உபாயம் ஆகும்.

4. மறைத்தல் (திரோபவம்)

சிவபெருமான் ஆற்றும் ஐந்தொழில்களில் மறைத்தலும் ஒன்றாகும். இது உயிருக்கு உரியது. உயிர்களின் அறிவை மறைத்து நிற்கின்ற ஆணவ மலத்தின் ஆற்றலை அதிகமாக்கி, மாயை கன்மங்களால் உலக இன்பங்களைத் தோற்றுவித்து இறைவன், தன்னைக் காட்டாமல், உலகத்தையே உயிர்கள் நோக்கியிருக்குமாறு செய்து, பக்குவப்படுத்துதலே மறைத்தல் எனப்படும்.

உயிருக்குள் இறைவன், ஒன்றாகவும் வேறாயும் உடனாயும் இருக்கிறான். ஒளி வடிவான இறைவன், மனத்தைவிட்டு ஓரடியும் நீங்கவில்லை. இருப்பினும் உயிர் உணரமால் இருக்கிறது. இதற்குக் காரணம் இறைவனது மறைப்புச் சக்தியே ஆகும்.

இறைவன் செய்யும் உதவி

மருத்துவர் நோயாளியின் நோயைத் தீர்ப்பதற்கு, அறுவை சிகிச்சை உட்பட பல சிகிச்சையளிக்கிறார். அதுபோன்று உயிர்கள் செய்த வினையால் வரும் தீவினைகளை, இறைவன் உயிர்களுக்கு மறைத்தல் தொழில் செய்வதன் மூலம் தீர்த்து வைக்கிறான்.

உயிர்களும் உலகியலும்

கண்ணுக்கு உடனாக இருந்து காட்டுகின்ற ஒளியைப் போன்று, உயிருக்கு உதவும் சிவபெருமானை நினைப்பற நினைந்து பேரின்பத்துள் திளைக்க வேண்டிய உயிர், பூண் அணிந்த நாக்கு செயலற்று இருப்பதுபோல சிவபெருமானை நினைக்காமல் மறைக்கப்பட்டு உலகியலோடு வாழ்ந்து வருகிறது.

அடியார் நிலை

மறைத்தல் தொழிலை எல்லா உயிர்களிடத்தும் உள்நின்று இறைவன் செய்தாலும், இறைவனை மிக்க அன்பினால் கசிந்து உருகி வழிபடும்போது அவன் வெளிப்படுவான். அப்படி வழிபடும் அடியார் பெருமக்கள், சிவபெருமானை உள்ளத்தில் ஒளிந்து வைத்துக் கொள்வர்.

இதனை,

ஒளித்து வைத்தேன் உள்ளூற உணர்ந்ததீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடும்.... (பாடல் 437)

என்று திருமந்திரம் பேசுகிறது.

மெய்யுணர்வுடையோர் இறைவனைத் தங்கள் உள்ளத்தில் ஒளித்து வைத்திருப்பதாக,

.....நெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து (11 ஆம் திருமுறை)

என்று திருமுறைகளும் சுட்டுகின்றன.

உயிரின் பரிதாப நிலை

கங்கைக்கரையில் நிற்பவன் அதனுள் மூழ்கி அழுக்கைப் போக்கிக் கொள்ளாமல் கரையில் நிற்றல்போல், உயிர்கள் பிராரப்த கன்மத்தை நுகர்வதற்காக உதவிய திரோபவமாகிய மறைப்பாற்றலைக் கொண்டு அதனைப் போக்கிக் கொள்ளாமல், மேலும் ஆகாமிய, சஞ்சித கன்மங்களைப் பெருக்கிக் கொள்கின்றன.

இறைவனும் கண்ணும்

கண் தன்னையே காணாது. ஆனால் பலவற்றைக் காணும். அதுபோன்று இறைவன், உயிரோடு ஒன்றி நின்று எல்லாப் பொருள்களையும் உயிருக்குக் காட்டினாலும் தன்னை உயிருக்குக் காட்டாமல் உள்ளான். இறைவனது மறைப்புச்சக்தியை,

கண்ணொன்று தான் பல காணுந் தனைக்காணா;
அண்ணலும் இவ்வண்ணமாகி நின்றானே (பாடல்.440)

என்று முழங்கும் திருமந்திரக்கருத்தினையே,

காட்டிய கண்ணே தனைக் காணா; கண்ணுக்குக்
காட்டிய உள்ளத்தை கண்காணா - காட்டிய
உள்ளம் தனைக் காணா; உள்ளத்தின் கண்ணாய
கள்வன் றான் உள்ளத்தின் கண் (சிவஞானபோதம், சூத்திரம் 9, அதிகரணம்-1)

என்று சைவசித்தாந்த சாத்திர நூலும் தெளிவு படுத்துகின்றது.

5. அருளுதல் (அநுக்கிரகம்)

ஐந்தொழில்களுள் உயிருக்குரிய மற்றொரு தொழில் அருளுதலாகும். பல்வேறு பிறப்புக்களில் பிறந்து உழன்று அதனால் ஏற்பட்ட அனுபவத்தின் பயனாக உயிர்களுக்கு ஆணவமலப்பற்று சிறிது சிறிதாகக் குறைந்து இறைப்பற்று மிகுதியாகிறது. அந்நிலையில் இறைவன், உயிர்களுக்குத் தன்னைக்காட்டி, ஆணவ மல மறைப்பிலிருந்து காத்துத் தன் திருவடிகளை அடையும்படி செய்வதே அருளல் எனப்படும்.

பஞ்சபூதங்களின் முறையான ஒருங்கிணைப்பால் பின்னப்பட்ட இந்த உடம்பாகிய பைதான், உயிருக்கு இடம் என்று சொல்லப்படுகின்றது. இந்த பைக்குள் உயிர்களைச் சிவபெருமான் முன்பு அடைத்து, அறம் பாவம் என்கிற நல்வினை, தீவினையாகிய அருங்கயிற்றால் கட்டிவைத்துப் பின்பு அவிழ்த்து வெளிவிடுகின்றான்.

நம் தலை உச்சியிலிருந்து பன்னிரண்டங்குலத்திற்கு மேலாய் ஓங்காரத்துட்பொருளாய் அறிவு வடிவாய் சிவபெருமான் ஓங்கி நிற்கின்றான். அந்நிலையை உணர்வதற்கு, துவாதச கலாப்பிரசாதத்தின் கலைகளாகிய அகாரம், உகாரம், மகாரம், விந்து, அருத்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, சமனை,. உன்மனை, வியோமரூபினி, அனந்தை, அனாதை, அனாசிருதை எனும் பதினாறு சோடசக் கலைகளை (பிரசாத கலை) மந்திர யோகத்தின் வழியாக உணரவேண்டும். அப்படி உணர்ந்து பரநாத தரிசனத்தை விருப்பத்துடன் அடைபவர்களுக்கு இறப்பு இல்லை.

இதனையே,

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங் கொள்வார்க்கு நமனில்லை (பாடல் 442)

என்கிறார் திருமூலத்தேவர்.

சிவபெருமான், உயிர்களின் நலம் கருதி, அவைகள் உய்வடைவதற்காக, சுத்தம், மிச்சிரம், அசுத்தம் என உலகங்களை மூவகையாக மாயையினின்று படைப்பதும், காலங்களை, நல்லூழி, தீயூழி, பொதுவூழி என முத்திறத்து பல்வகையில் படைப்பதும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பூதங்களை ஐந்தாகப் படைப்பதும், உடம்புகளை தேவ உடம்பு, மக்கள் உடம்பு முதலான ஏழு வகையாகப் படைப்பதும் இவற்றைக் காப்பதும், அழிப்பதும் அவனது அருட்செயலேயாகும்.

சிவபெருமான் தனது திருவுள்ளக்கருத்தின்படியே, உயிர்களின் வினைகளுக்குத் தக்க பரிசாக இவ்வுலகத்தைப் படைக்கிறான். அவற்றைக் கொடுத்து, அவ்வுயிர்களின் அறிவிற்கறிவாய் நின்று வினைப்பயனைத் துய்ப்பிக்கச் செய்கிறான். உயிர்களின் திருத்தத்திற்குப் பின் முதிர்ந்த வீடுபேற்றினையும் அளிக்கிறான்.

இறைவனே குருவாய் வந்து உபதேசித்தல்

சைவ சித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றை முறைப்படி செய்து உயருதலே தவம் என்று போற்றப்படுகிறது. இத்தகைய இறப்பில்லாத தவத்தை மேற்கொண்டு ஒழுகும் மெய்யடியார்கள் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாத நிலைகளை அடைந்தவராவர். பக்குவப்பட்ட அந்நிலையில், அதுவரை அவர்களின் உயிருக்கு உயிராக எழுபரஞ்சோதியாக, கண்ணின் உள்ள கருமணி நன்னெறியைக் காட்டுவது போல் உள்ளின்று காட்டிய சிவபெருமான். ஞானாசிரியனாய் மானிட வடிவச்சட்டைத் தாங்கி வந்து அவர்களுக்கு ஞானோபதேசம் செய்து அருளுவான். இறைவன் ஞானாசிரியனாய் வந்து உபதேசிக்கும் இந்நிலையை 'தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த' என்று சிவஞான போதம் (எட்டாம் நூற்பா) குறிக்கிறது.

இந்நிலையினை சிவபெருமான், திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு திருநல்லூரில் திருவடி தீட்சையளித்ததையும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு திருவதிகை சித்தவடமடத்தில் திருவடி தீட்சையளித்ததையும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் திருவடி தீட்சையளித்து உபதேசித்ததையும் திருமந்திரக்கண் கொண்டு உணரவேண்டிய அருள் நிகழ்ச்சிகளாகும்.

நிறைவுரை

சிவபெருமானிடம் குருவடியில் தீட்சை பெற்ற பின், அவ்வுபதேசத்தின்படி, திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்து

மலவாசனையின்று நீங்க வேண்டும். அடியார்களையும், சிவப்பரம்பொருளையும் வணங்கி, மும்மலத்தாக்கம் நீங்கிய நிலையில், 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' எனும் மாணிக்கவாசகரது மணிமொழிக்கேற்ப இறைவனது திருவருளையே சார்ந்து, பின்பு அத்திருவருள் வழியே சிவனடியாகிய முத்திநிலையை அடையவேண்டும். பேரின்பமும் பிறவாப் பெருநிலையுமாகிய முத்திநிலையை, பெறுவதற்கரிய இப்பிறவியிலேய நாம் பெறுவதற்கு எல்லாம் வல்ல சிவபெருமானது திருவடியைச் சிக்கெனப் பற்றி நிற்போமாக!

திருச்சிற்றம்பலம்

******

22. கரு உற்பத்தி

சித்தாந்த வித்யாநிதி. டாக்டர். **வீ. ஜெயபால்**
சைவ சித்தாந்த பேராசிரியர், மெய்கண்டார் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

முன்னுரை

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் உயிர், உடல், பிறவி முதலிய அரிய நுட்பமான இரகசியங்கள் பல உண்டு. அவற்றுள் கருவுற்பத்தி எனும் தலைப்பில் உள்ள சில இரகசியங்களைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

உயிரும் உடம்பும் பொருந்திய விதம்

உயிர்கள், தாம் செய்த வினைக்குப் பயனாக இறையுதவியுடன் மறுபிறவி எடுக்கும். அச்சுமாறி பிறத்தலும் உண்டு. அவ்வாறு மறுபிறவி எடுக்கும்போது சூக்கும உடம்பாகிய புரியட்ட காயத்துடன் கருவில் பிறக்கும். (சூக்கும உடம்பு-சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம்,மனம்,புத்தி, அகங்காரம்) இந்த சூக்கும உடம்பு எல்லா உயிர்களுக்கும் பொதுவானது.

கருவிலேயே, பின்பு வழங்கப்படுவது தூல உடம்பு. இவ்வுடம்பு பிறவிகள்தோறும் வினைப் பயனுக்கு ஏற்ப மாறக்கூடியது. முற்பிறவியில் உயிரைவிட்டு நீங்கிய இவ்வுடம்பில் 25 தத்துவங்கள் உண்டு. அவை பூதம் ஐந்து, புலன் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து. அந்த கரணம் நான்கு. புருடன் ஒன்று ஆகும்.

ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு (10:451)

இவற்றை இறைவன் கருப்பையுள் உயிர்க்கு உயிராய் நின்று காக்கிறான். இந்தத் தூல உடம்பினுள், ஆருயிரை வினைப்பயனுக்கு ஏற்ப, இறைவனே புகச் செய்கிறான். முன்வினைக்கு ஏற்ப விளங்கும். அறிவுடன் கூடிய உயிர் தங்கிய அக்கரு, தீயும் நீரும் நிறைந்துள்ள தாயின் கருப்பையுள் தங்குகிறது.

உலக வாழ்வு கருவில் பதிதல்

தாய் தந்தையர் அன்புடன் கூடி இன்புற்ற காலத்தில், கருணைமிகு சிவபெருமான் ஆருயிரைக் கருவினுள் புகுமாறு திருவுள்ளம் கொள்வன். உயிர்கட்கு, அவ்வுயிர்கள் செய்த வினைக்கு ஏற்ப பண்பு, வாழ்நாள், உலக வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்பங்கள், செல்வம், வறுமை, முதலியவற்றைக் கருவினுள் பதித்து அருளுகின்றான். இதனை,

பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்து அமைத்து (10:453)

எனும் திருமந்திரத் தொடரால் நன்கு அறியலாம்.

கருவில் இறைவன் உதவி செய்யும் விதம்

கருவினுள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், புத்தி, அகங்காரம் எனும் சூக்கும உடம்பினையும், பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனும் பத்து வாயுக்களையும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், துன்பம், அகங்காரம் என்னும் எட்டு குணங்களையும், இவற்றுடன் அழுந்தியிருக்கின்ற உயிரையும் இறைவன் பொருத்துகிறான். மேலும் கண், காது, மூக்கு, வாய், எருவாய், கருவாய் எனும் இவற்றில் உள்ள நவதுவாரங்களையும் குண்டலினியையும் (நாகம்), இவற்றுடன் பன்னிரண்டு விரற்கடையளவு செல்லக்கூடிய பிராணவாயுவை (குதிரை)யும் இறைவன் பக்குவத்திற்கேற்ப தொழில் படுத்துகிறான்.

இதனை,

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்...... (10:457)

எனும் தொடர் மூலம் நன்கு அறியலாம்.

கருவில் குணமும், சூக்கும தேகமும் உருவாதல்

தாய் தந்தையர் கூடும் காலத்தில் தந்தையின் மனநிலை மிகவும் முக்கிய இடம் வகிக்கிறது. தந்தைக்கு காமம் மிகுதியாக இருந்தால் பிறக்கும் குழந்தைக்குத் தாமச குணம் அதிகமாக இருக்கும். காமம் குறைந்திருந்தால் சத்துவ குணம் அதிகமாக இருக்கும். காமம் மிகுதலும் குறைதலும் இல்லாமல் சரியான அளவில் இருந்தால் இராசத குணம் அதிகமாக இருக்கும். இவற்றுள் சத்துவ குணம் உடைய குழந்தை அரசனாவதற்குத் தகுதியுடையனாகிறது.

பேரொத்த மைந்தனும் பேரரசாளுமே (10:458)

இப்பண்புகளை, இறைவன் கருவிலே அமையுமாறு செய்தான். கருவில் நின்ற உயிர்க்கு இறைவன் சூக்கும தேகத்தையும் வாக்குகளைச் சொல்லும் வன்மையையும் தந்தான். ஆனால் கருவுள் பேசாது.

கருவில் தூல தேகம் அமைதல்

தூலதேகம் வீடு போன்றது. அதற்கு எலும்புகள் கழிகளாகும். நரம்புகள் கயிறுகளாகும். இறைச்சியாகிய மண்ணை இரத்தமாகிய நீரால் பிசைத்து சுவர்களாக அமைக்கப்பட்டுள்ளது. அவரவர்கள் செய்த வினைக்கு ஏற்ப, நடுநிலை தவறாமல், உயிர் இன்புற்று வாழ இறைவனே இந்த வீடாகிய தூலதேகத்தை கருவுள் அமைத்தான். தாயின் சந்திர கலையாகிய மூச்சுக்காற்று, கருவறையில் உள்ள குழந்தையின் தூல தேகம் முழுவதும் பரவிக் குளிர்ச்சியைத் தரும். அவ்வாறே சூரிய கலையாகிய மூச்சுக்காற்று குழந்தையின் உடலில் வெப்பத்தை உண்டாக்கி, அதனை வளர்க்கும்.

பதஞ்செய்யும் பால் வண்ணம் மேனிபகலோன்
இதஞ்செய்யும்.... (10:462)

(பால் வண்ணன்-சந்திரன்: பகலோன்-சூரியன்)

இறைவன் கருவுள் குழந்தையைக் காத்தல்

கருவுள் வீழ்ந்த உயிருக்கு, கருவிலேயே வாழ்வு முடியும் எனும் விதி இருந்தால், பதிந்த கருவைப் பல நிலைகளில் அங்கேயே (abortion) அழியச் செய்வான். உலகில் பிறந்து வாழும் விதி இருந்தால், தாயின் வயிற்றில் உள்ள நீராலும் நெருப்பாலும் அழியாது காப்பான்.

எண் சாண் உடம்பு வந்த விதம்

இறைவன் உதவியால் பஞ்சபூதக் கலப்பின் காரணமாக சுக்கில சுரோணித கலப்பின் போது உடம்பு உண்டாகிறது. அப்போது ஓங்காரத்துள் உள்ள அகார உகார மகாரங்களுடன் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய மாபூதங்களுக்கும் முறையே உரிய ல,வ,ர,ய, அ எனும் பீஜ எழுத்துக்களும் சேர்வதால் (எட்டு எழுத்துக்கள்) அக்கரு தனது கையால் எட்டு சாண் அளவுடையதாக வளரும்.

இதனையே,

அக்கரம் எட்டும் எண் சாணது வாகுமே (10:464)

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

இறைவன் செய்த அருட்கொடை

என்பு, நரம்பு, தோல் ஆகிய இவைகளால் மூட்டப்பட்ட வினை மூட்டையாகிய ஒன்பது வாயில் உடலை, வினை நீக்கத்தின் பொருட்டு இறைவன், கொடையாக வழங்கியுள்ளான். கருவிலே உள்ள காரண உடம்பு, கஞ்சுக உடம்பு, குண உடம்பு, சூக்கும உடம்பு, தூல உடம்பு எனும் ஐந்து உடம்புகளிலும் உயிரைப் புகுமாறு இறைவனே செய்கிறான். இத்தகைய உடம்பு ஒன்றாகக் காணப்படுகிறது. இவ்வுடம்பில் இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும் (உடல், மெய்); ஏழு வித்தியா தத்துவங்களும் (உணர்வு மெய்) உண்டு.

.... கொடைத் தொழில்
ஏகத்துள் அங்கே இரண்டெட்டு மூன்றைந்து
மோகத்துள் ஆங்கொடு மூட்டை செய்தானே (10:465)

அவ்வுடம்பில் புலன்களும் பொறிகளும் இருப்பது போன்று, உயிரும் கருவினுள் நாதத்தத்துவத்தில் பொருந்தியிருக்கும்.

குயவனிட்ட சூளை

கருவாகிய உடம்பில் ஓர் உயிரே தங்கியிருக்கும். அதில் ஒன்பது துவாரங்களுடன், ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், புரியட்ட காயம் எட்டும் ஆகிய பதினெட்டுத் தத்துவங்களும் உண்டு. ஒன்பது துவாரங்களை நீர்ச்சாலாகவும், பதினெட்டுத் தத்துவங்களை கலசமாகவும், இறைவனைக் குயவனாகவும், இறைவனது செயலைச் சூளையாகவும் திருமூலர் உருவகிக்கிறார்.

ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே (10:468)

உடல் இயல்பும் பயனும்

பஞ்சபூத சேர்க்கையாகிய இவ்வுடம்பு முன்வினைக்கு ஈடாக இறைவனால் தரப்பட்டது. செல்வம், வறுமை, இன்பம், துன்பம், மூப்பு, சாக்காடு எனும் ஆறினுக்கும் ஏற்றவாறு உடம்பில் தங்கிய உயிரில் குணம் உண்டாகும். இதனை,

பேறு இழவு இன்பமொடு பிணி மூப்புச் சாக்காடு என்னும்
ஆறும் முன் கருவுட் பட்டது (சிவஞானசித்தியார் சுபக்கம்-99)

என்று சைவசித்தாந்தம் பேசுகிறது.

இறைவன், வேம்பினோடு தீங்கரும்பும் விரவி ஊட்டுதல் போல, உயிருக்கு வினைப் போகத்தை, நுகர்வித்தலோடு, அணிமா, மகிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம் எனும் எட்டுச் சித்திகளைப் பெற்றுப் பின் மெய்யுணர்வைப் பெறுவதற்காகவும், கருவை உருவாக நீட்டிக் காத்துத் தருகின்றான்.

அறியீர் உடம்பினில் ஆகிய ஆறும்
. . . . .
செறியீர் அவற்றினும் சித்திகள் இட்ட(து)
அறிவீர் ஐந்தினுள் ஆனது பிண்டமே (10:469)

கருவுள் உடல் நிலைப்பெறுதல் பொருட்டு அதன் நெஞ்சத்தாமரையில் இறைவன், தனது உருவத்தைத் தீயின் முனை போல வைத்துள்ளான்.

உடலின் நிலை

தாய் தந்தையரது கூட்டுறவால், தந்தையுடலில் நின்ற கரு, தாயின் கருப்பையுள் கலந்து பிண்டம் ஆகிறது. அப்பிண்டத்துள், நீரில் உண்டாகும் குமிழியின் நிழல் போல் நுண்ணுடம்பு கருவிகள் எட்டும் பரவி, அதனைத் தாங்கி நிற்கும். இக்கருவிகள் பேரூழிக்காலம் வரை அழியாதிருக்கும். இந்நுண்ணுடம்புக் கருவிகள் பின்பு தூல உடலில் புகும். இத்தூல உடம்பிற்கு நுண்ணுடம்பு இன்றியமையாதது அதன் பின்னர்தான் சுட்டுணர்வு ஏற்படும். இத்தூல உடம்பே காயப்பை எனப்படும். இறைவனே,

பாசவுணர்வென்னும் காயப்பையை (10:473)

வினைக்கீடாக அருளி, வினைநீக்கம் ஏற்படும்போ ஒழித்திடுவான்.

இறைவனின் பெருங்கருணை

சிவபெருமான் தன்னுடைய திருநாமமாகிய நமச்சிவாய எனும் திருவைந்தெழுத்துக்களைக் கலந்து உயிர்களுக்கு உடம்பாக அமைத்துள்ளான். திருஞானசம்பந்தர், நாதன் நாமம் நமச்சிவாயவே என்று அருளியுள்ளதைச் சிந்திக்க வேண்டும். உயிர்கள் பாசக்கட்டினையும், பசுதத்துவத்தையும் நீக்க வேண்டும் என்பதற்காகவே மண் முதல் நாதம் ஈறாக முப்பத்தாறு தத்துவங்களையும் கொண்டு இறைவன் பெருங்கருணையுடன் இவ்வுடலைப் படைத்தான்.

கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்
பண்ணுதல் செய்து பசு பாசம் நீங்கிட... (10:474)

இறைவனும் இறைவியும் கருவில் உயிர்க்கு உணர்வாயும் உயிராயும் இருந்து உதவுகின்ற கருணைத்திறத்தை எண்ணி, அவர்களை வழிபடுவது நம்முடைய கடமையாகும்.

கருவினுள் ஆண் பெண் உருவாகும் விதம்

கருப்பையில் வளர்கின்ற கருவை, இறைவன் ஆண், பெண், அலி என்னும் மூவகையாகச் செய்கிறான். இவர்களுக்கு, தாய் தந்தையரின் பரம்பரைப் போலவே பதிவுகளை அமைக்கிறான். பெரும்பாலும் உடலமைப்பு தாயைப் போன்றும், உணர்வின் வளர்ச்சியமைப்பு தந்தையின் உணர்வினைப் போன்றும் அமையும். விதிவிலக்காக மாறி அமைவதும் உண்டு. கூட்டுறவின் போது தந்தையாரின் உடலியக்கத்தைக் கொண்டே கருவினுள் உள்ள குழந்தையைக் கணித்துவிடலாம். கருவுறும் நேரத்தில், தந்தையாரின் வலது மூக்குத்துவாரத்தின் வழியே (சூரிய கலையில்) சுவாசம் ஓடினால் பிறக்கும் குழந்தை ஆணாகத்தான் இருக்கும். அந்த தருணத்தில் ஆணின் உயிர்ச்சத்தாகிய விந்தணுவில் உள்ள **Y** என்ற சத்து, **X** சத்து மட்டுமே உள்ள பெண் நாதத்துடன் கலப்பதால் ஆண் கரு உண்டாகிறது. **(XY** =ஆண்). தந்தையாரின் இடது மூக்குத் துவாரத்தின் வழியே (சந்திரகலையில்) சுவாசம் ஓடினால் அப்போது ஆணின் உயிர்ச்சத்தாகிய விந்தணுவில் உள்ள **X** என்ற சத்து, **X** சத்து மட்டுமே உள்ள பெண் நாதத்துடன் கலப்பதால் பெண் கரு உண்டாகிறது. **(XX** பெண்). இதனை,

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்..... (10:482)

எனும் திருமந்திரத் தொடர் மூலம் நன்கு உணரலாம்.

சுவாசம் இருகலைகளிலும் சமமாக ஓடினால் பிறக்கும் குழந்தைக்கு இரண்டு தன்மைகளும் கலந்தே காணப்படும். கருவுறும் நேரத்தில், ஓடிக்கொண்டிருக்கும் பிராணவாயுடன் அபானவாயு எதிர்நோக்கி வரும்போது இரட்டைக் குழந்தை உருவாகும். ஆண்கள் இடப்பக்கமாகப் படுத்து உறங்கும்போது சுவாசம் வலது நாசிவழியே(சூரியகலையில்) நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உள்ள இரகசியங்களை அனுபவம் மிக்க சிவயோகியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வயது நிர்ணயம்

உயிர் அணுக்கள், கருவுறும் நேரத்தில் கருவறையில் நுழைந்தபின், தந்தைக்கு ஐந்து மாத்திரை அளவு பிராணவாயு ஓடினால், அவ்வாயு

கருவுக்குச் சென்று எல்லா இடங்களிலும் பரவும். அதனால் கருவறையுள் தங்கிய கருவின் உள்ளே அமைந்த உடல் வலிமையடையும். உடற்கட்டு முதல் நிலையிலையே நன்கு அமையும் அதனால், அக்குழந்தையின் ஆயுள் பூரணமாக நூறு ஆண்டுகள் என நிர்ணயிக்க முடியும். நான்கு மாத்திரை வாயு ஓடினால் எண்பது வயது என, ஆயுள் கருவறையிலேயே நிர்ணயம் ஆகிவிடும். எனவே தந்தையாரின் மூச்சுக்காற்று கருவுற்ற குழந்தைக்கு மிக்க பயனளிக்க கூடியதாகும்.

ஆற்றல்மிக்க ஆண் குழந்தை உருவாகும் விதம்

தாய் தந்தையார் கூடும் காலத்தில், தந்தையின் சுவாசம் சூரிய கலையில் இயங்கும்போது, தந்தையின் சுக்கிலம் (விந்து) அதிக ஆற்றல் உடையதாய் சென்று, தாயின் கருவறையில் கூடுமாயின் நாட்டை ஆளக்கூடிய அரசனைப்போல் ஆற்றல் மிக்க ஆண் குழந்தை பிறக்கும் என்று திருமந்திரம் பேசுகிறது.

தாண்மிகு மாகில் தரணி முழுதாளும் (10:478)

உடற்குறைகளுக்கான காரணம்

கருவுறும் காலத்தில், தந்தையின் சுவாசம் இயல்பைவிட அளவில் குறைந்த நிலையில் இயங்கினால், (சுவாசத்தின் நீளம் குறைவாக இருந்தால்) கருவுற்ற குழந்தை குட்டையாக பிறக்கும். சுவாசம் மெலிதாக இருந்தால், கருவுற்ற குழந்தைக்கு வலிமை இல்லாமல் (கை/கால்/உடல் உறுப்புகள் வலிமை குன்றி) முடமாகப் பிறக்கும். பிராணவாயு தடைப்பட்டு மூச்சுத் திணறலுடன் கூடிய சுவாசம் இருந்தால், அந்நிலையில் கருவுற்ற குழந்தைக்குப் போதிய பிராணவாயு கிடைக்காததால் அக்குழந்தை கூனாகப் (உடல் குறையுடன்) பிறக்கும். இக்கருத்தினை,

பாய்கின்ற வாயுக் குறையின் குறலாகும்
பாய்கின்ற வாயு கிளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்.... (10:480)

என வரும் திருமந்திரத் தொடர்கள் நன்கு உணர்த்துகின்றன.

சுவாசத்தின் இயல்பான நீளம் பன்னிரண்டு அங்குலம் என யோக நூல்கள் கூறுகின்றன. பிராணாயாமப் பயிற்சி மூலம் சுவாசத்தின் நீளத்தை குறையாமல் வைத்துக் கொள்ளலாம். எனவே பிராணாயாமப் பயிற்சியும், மன அமைதியைத் தருகின்ற சிவயோகப் பயிற்சியும் அவசியமாகிறது.

கருவிலேயே, அக்குழந்தையின் வினைக்கு ஏற்ற புற உறுப்புகளையும், அக உறுப்புக்களையும் இறைவன் சில உத்திகள் மூலம் அமைத்து விடுகிறான். பொதுவாக தாய் தந்தையர் கூடும்போது உடலும் மனமும் செம்மையாகவும், தூய்மையாகவும் இருக்க வேண்டும். தாயாரது உடலினுள் மலம், நீர் தங்கியிருக்க கூடாது. தாயின் வயிற்றில் மலம் நீங்காது தங்கியிருந்தால், அப்போது கருவுறும் குழந்தை மந்த புத்தி உடையதாய் இருக்கும். நீர் நீங்காது தங்கியிருந்தால், குழந்தை ஊமையாகப் பிறக்கும். மலம், நீர் இரண்டுமே தங்கியிருந்தால் அக்குழந்தைக்குப் பார்வை சரிவரக் கிட்டாமல் குருடாகப் பிறக்கும். எனவே, இவ்விஷயத்தில் தாய் தந்தையர் சற்று கவனமாக இருக்க வேண்டும். குழந்தைகளின் எதிர்காலம் நன்கு அமைய, தாய் தந்தையருக்கு மிகுந்த பங்கு உள்ளது. எனவே, அவர்கள் கூடும் காலத்தில் எளிமையான சாத்வீகமான உணவும், மன அமைதியும் தெய்வீகச் சிந்தனையும் தேவை.

கருவுறுதலும், கருச்சிதைவும்

தந்தையின் உடற்கூற்றில் வளரும் உயிர்ச்சத்து(அணு) தாயின் கருவறையில் உள்ள பூப்புப் பொருளினுள் புகுந்து கெடாது நிற்றலே கருவுறுதலாகும். இப்படிப்பட்ட கருவுறுதல் நன்கு நிகழ்வதற்கு, தாய் தந்தையர் கூடும் காலத்தில் இருவருக்கும் சுவாசம் இடம், வலம் என்னும் வகையில் ஒருவகையில் சீராக நன்கு இயங்க வேண்டும். அப்போது பிராண வாயு போதிய அளவில் கிடைக்கும். அதனால் கருச்சிதைவு ஏற்படாமல் ஆணாகவோ, அல்லது பெண்ணாகவோ நிலைப்பெறும். அக்குழந்தை அழகாகவும் இருக்கும்.

குழந்தை ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ ஆவதற்குத் தந்தையின் மூச்சுக் காற்றுத் (சுவாசம்) துணைக்காரணமாகும். தாயின் மூச்சுக்காற்று ஒத்து இருந்தால்தான் குழந்தை அழகாக இருக்கும். தாயின் மூச்சுக்காற்று மாறியும், குழறியும், தடுமாறியும் இயங்கினால் கருச்சிதைவு ஏற்படும்.

கொண்டநல் வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளையார்க்கே (10:483)

இதனால் பெண்களுக்கும் சுவாசப் பயிற்சி தேவை என்பது பெறப்படும்.

தந்தையின் விந்து நீர்க்கூறாகக் குறிப்பிட்டாலும், அதனுள் உள்ள உயிராற்றல் தந்தையின் நடுநாடியில் விளங்கிய தீயின் கூறேயாகும்.

தால்வளையுள்ளே தயங்கிய சோதியாம் (10:484)

இதுவே பின்னர் தாயின் கருவறையுள் செஞ்ஞாயிறு நிறத்தை உடையதாக முற்றி, பின்னர் தக்க உருவமாகிறது.

கரு உருவாகிப் பிறக்கும் காலம்

தாயின் கருவறையுள் தங்கிய கரு, ஒன்பது மாதங்களில் முழுமையாக வளரும். பிறகு, பத்தாவது மாதமே பிறக்கும் பருவமாகும். இதனை,

உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில் (10:485)

எனும் திருமந்திர வாக்கு உணர்த்துகிறது.

தாயின் கருணை

குயில், தனது முட்டையைக் காக்கையின் கூட்டில் வைத்தால், காக்கை அதனைச் சிறிதும் வேறுபாடு காட்டாமல் அடை காக்கும். அதனைப் போன்று இறைவன், உயிர் மீது கொண்ட கருணையினால் உடல் பெற்று வினைநீக்கம் பெற உயிரைக் கருவினில் இட்டார். தாய், அதனைச் சிறிதும் வேறாக நினைக்காமலும், போக்கிவிட நினைக்காமலும், மனம் வருந்தாமலும் அக்கருவைப் பத்துமாதம் பேணிக் காக்கிறாள்.

எல்லாம் ஈசன் செயல்

இந்த இரகசியங்களை, கருவை இட்ட தந்தையும் அறியவில்லை. அதனை ஏற்றுக் கொண்ட தாயும் அறியவில்லை. பொன்னை அணிகலனாகச் செய்யும் பொற்கொல்லனைப் போல, கருவைக் குழந்தையாக்கின்ற பிரமனுக்கு எல்லாம் தெரிந்திருந்தும் யாருக்கும் சொல்லவில்லை. தலைவனாகிய சிவபெருமான் காரணகர்த்தாவாக உடன் இருந்தும், அவ்வினையின் இயல்பை யாருக்கும் உரைக்கவில்லை. உலகம் ஒடுங்கும் சங்கார காலத்தில், உடம்பும் பல தத்துவங்களாய் மாயையில் ஒடுங்கும். சிவபெருமானின் திருவருளாணையின் வண்ணம், உயிர்களின் வினைக்குத் தக்கவாறு ஒடுங்கிய உடல் மீண்டும், கடல் நீரில் உருவமாக இருந்து உவர்ப்புச் சுவை, பின் உப்பாகத் தோன்றி, உருவானது போல் மாயையினின்று மீண்டும் படைக்கப்படும். இதனை,

திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்தும் பிறக்கும் திருவருளாலே (10:491)

எனும் திருமந்திரத் தொடர் நன்கு உணர்த்துகிறது.

நிறைவுரை

இறைவன் திருவருளால் அரிதாகக் கிடைக்கப்பெற்ற இவ்வுடலைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும். அதுமட்டுமல்லாமல், இவ்வுடலைக் கொண்டே திருமுறைத் திருநெறியாகிய சைவநெறியில் வாழ்ந்து, வினை நீக்கி, இறைவனின் திருவடி நீழலில் நிலைத்திருப்போமாக!

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

23. மூவகை சீவவர்க்கம், பாத்திரம், அபாத்திரம்

சொல்லின் செல்வர்
எல்.கே. சுபாஷ் சந்திரபோஸ் எம்.ஏ.எம்.எட்.,
சிவகங்கை

முன்னுரை

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமந்திரம். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' எனும் தொல்காப்பிய இலக்கணத்திற்கேற்ப இறைநிலையின் மறைமொழியாக மாநிலத்திற்குக் கிடைத்த மாபெரும் கருவூலமே திருமந்திரம். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய மெய்ஞானியர் வழங்கிய இறைநூல்கள் புகழ்நூல்கள், பொருள்நூல்கள் என இரு வகையில் அமைகின்றன. புகழ் நூல்கள்- தோத்திரங்கள் எனவும், பொருள்நூல்கள் - சாத்திரங்கள் எனவும் வழங்கப்பெறும். இறைவன் 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே' என்பது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு. திருமுறைகள் அனைத்தும் புகழ்நூல்கள்; மெய்கண்ட மறைகள் பதினான்கும் பொருள் நூல்கள். தமிழ் வேதாகமங்களாகிய இவை அனைத்திற்கும் முழுமுதற் கருவூலமாகத் திகழ்வது திருமந்திரம். தோத்திரங்களும் சாத்திரங்களும் திருமந்திரத்தின் விளக்கங்களேயன்றி வேறில்லை. சைவ சமயக் கருத்துக்களை விளக்க எழுந்த முதல் நூல் திருமந்திரமே.

மூவகை சீவவர்க்கம்

இது ஒன்பது திருப்பாட்டுக்களில் விஞ்ஞானகலர், பிரளயகலர், சகலர் என மூவகைச் சீவவர்க்கத்தைச் செப்பும் பகுதியாகும். உயிர்களிடத்தே உறையும் மலங்களின் அடிப்படையில் சீவவர்க்கம் மூவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தம் வகுத்தளிக்கும் பதி, பசு, பாசம் எனும் மூன்றனுள் பதியாம் இறைவனோடு பசுவாகிய உயிர் இரண்டறக் கலந்து முக்திப்பேறு எய்த விடாது தடுப்பது பாசம் என்னும் மலம். மலங்கள் மூவகையின. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன.

சீவர் என்பவர் உயிர் வாழ்பவர். சீவன்-ஜீவன், உயிர் தங்கும் உடலும் பிறப்பால் வருவது. பிறப்பிறப்பில்லா பிஞ்ஞகனாகிய பெருமான் சக்தி சிவ நிலையில் நிகழ்த்திய விளையாட்டால் சீவர்தம் உடலில் உயிர் பொருந்துகிறது. ஆண்-பெண் சேர்க்கையினால் பிறப்பெடுக்கும்

ஊனுடம்பில் தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வத்தினால் உயிர் பொருந்துகிறது. 'ஒரு மட மாது ஒருவனுமாகி இன்ப சுகம்தரும் அன்புபொருந்தி, உணர்வு கலங்கி ஒழுகிய விந்து ஊறு சுரோணித மீது கலந்து, பனியிலோர் பாதி சிறு துளி மாது பண்டியில் வந்து புகுந்து திரண்டு' உருவம் பெறுவது ஆண்-பெண் விளையாட்டால் என்பார் பட்டினத்தடிகள். இவ் உருவம் உயிர் பெறுவது சக்தி சிவ விளையாட்டால் என்கிறது திருமந்திரம். உயிரினை சுத்தமும் அசுத்தமும் ஆகிய மாயையுள் கூட்டுவித்து சுத்தமாகிய மேனியை எய்தச் செய்து துரிய நிலையில் சித்தம் புகுந்து சிவமார்க்கம் சிவ சாயுச்சியம் பெற அருள்வது இறைவன் விளையாட்டே என்கிறார் திருமூலர்.

சக்தி சிவன்விளை யாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத்து இடைபூட்டிச்
சுத்தமது ஆகும் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமயம் ஆக்குமே

விஞ்ஞானகலர்

ஒரு மலம் உடையோர் விஞ்ஞானகலர் எனப்படும். ஒருமலமாவது ஆணவ மலம். ஆணவம் என்பது 'செருக்கு' அல்லது 'திமிர்' என்று சிற்றறிவால் நாம் கொள்ளும் பொருளன்று. அவ்வாறெனில் ஆணவம் என்பதன் பொருள்தான் என்ன? எது உயிரை அணுத்தன்மைப் படுத்துகிறதோ அதுவே ஆணவம் எனப்படும். செருக்கு அல்லது திமிர் என்பது உடல் சார்ந்தது. சைவ சித்தாந்தம் காட்டும் ஆணவம் உயிரோடு கலந்தது. ஆணவமலம் உயிரோடு உடன் தோன்றலால் அது மூலமலம் எனப்படும். இதுவே சகசமலம். இருள்மலம் எனவும் பொருள்படும். உயிர் (ஆன்மா) அனாதியானது. அது ஆணவ மலத்தைப் பற்றியமையால் தன்னியல்பிழந்து துன்பம், பிறப்பு, இறப்புகளுக்கு உட்பட்டு உழல்வது அதன் செயற்கை நிலை. ஆணவமலம் மட்டும் உடைய விஞ்ஞானகலர் நான்கு வகைப்படும். 1. தன்னலம் விட்டவர். 2. ஆன்மஞானம் உற்றவர். 3. உயர்ஞானம் பெற்றவர். 4. உண்மை ஞானம் உடையவர். விஞ்ஞானகலர் உடலுடன் கூடி இருந்தபோது சீவன் முக்தி அடையாமல் அடுத்த பிறவியில் மலபரிபாகம் உற்று சீவனை அடைவர்.

பிரளயகலர்

சக்திசிவ விளையாட்டால் உண்டான உயிர் ஆணவம், கன்மம் என இருமலம் உடைய நிலையில் பிரளயகலர் எனப்படும். இவற்றுள் உத்தம, மத்திம, அதமம் எனும் முப்பிரிவு உண்டு. இவர் இரண்டு பிறவிகளில்

நூற்றெட்டு உருத்திரர் பதம் எய்துவர். உள்நின்று உணர்த்தும் ஞானம் இன்மையால் சுத்த வித்தியா மண்டலங்களை அடைந்து இரண்டாவது பிறவியில் உண்மை ஞானத்தைப் பெற்று 'சிவசாயுச்சியம்' பெறுவர்.

சகலர்

மும்மலமுடையோர் சகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம், மாயை என்பன அம்மும்மலங்கள். உலக வாழ்வில் பொருந்தி அறியாமை மிக்கிருப்பவர் சகலர், உத்தம, மத்திம, அதம எனும் முப்பிரிவுகள் இவர்களிடமும் உண்டு. சகலரில் சிலர் சித்தாகிய சிவத்தைப் பேணி ஞானமும் கிரியையும் ஒத்து சதாசிவ நிலையினைப் பற்றி நிற்பர். ஞானவடிவால் மும்மலங்கடந்து அதாவது மலபரிபாகம் உற்று மேலாம் நிலையினை எய்துவர் சிலர். சிலரோ மும்மலத்தை நீக்க மாட்டாது நாத தத்துவம் வெளிப்படா நிலையில் நிற்பர். ஞானம் படிப்படியாகப் பெற்று மாயா சரீரத்தைக் கொண்டு மீண்டும் மீண்டும் வந்து பிறந்தும் உண்மை ஞானத்தைப் பெற்று சிவசாயுச்சியம் பெறுவர். மலபரிபாகம் பெற்ற பின்னரே சகலர் சிவதத்துவ மண்டலங்களை அடைந்து முக்திநிலை எய்துவர். ஞானியர் மலபரிபாகமுற்று சித்தராய் முத்திபெற்று அழியாத பேரின்பநிலை எய்துவர் என்பது திருமூலர் வாக்கு. உயிர் மலபரிபாகம் பெற்று சிவத்தோடு ஒன்றி முக்திபெறும் என்பது சைவ சித்தாந்தம்.

செம்மலர் நோன்தாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னிய மின்மையில் அரன்கழல் செல்லுமே (சிவஞான போதம்)

பாத்திரம்

நான்கு திருப்பாட்டுக்களில் பாத்திரம் பற்றிப் பகர்கிறது திருமந்திரம். பாத்திரம் என்பது கொள்கலன். வைப்பிடம் எனினும் ஒக்கும். அறவழியில் ஈட்டிய பொருளைச் சேமவைப்பாக வைக்கும் இடம் எனலாம். எள்ளின் அளவேயாயினும் ஏற்றவர்க்கு ஈந்தால் அதன்பலனால் இம்மைக்கு சித்தியும், மறுமைக்கு முக்தியும் போகமும் உண்டாகும். வைப்பிடம் (பாத்திரம்) எது என்பதுதான் திருமூலர் தெளிப்படுத்துவது. ஞானிகளே அவ்வைப்பிடம். அதாவது பாத்திரம் என்கிறார் திருமூலர். எவ்விதம் ஈவது என்பதையும் வகைப்படுத்துகிறார். அகனமர்ந்த அன்பினராய், மிகக் கனிந்த மொழியினராய், முகமலர்ந்த நகையினராய், தலைகுனிந்த நிலையினராய், குறிப்புணர்ந்த அறிவினராய் ஞானியர்க்குப் பணிவுடன் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு வழங்கினால் அளவற்ற, அழிவற்ற

செல்வ வாழ்வும், அறமும், பொருளும் திருவடிப் பெரு வாழ்வும் எளிதில் வந்தெய்தும். அவ்வாறின்றி பதி,பசு, பாசம் எனும் முப்பொருளுண்மை அறியாத மைபடிந்த மனத்தினராய் விளங்கும் முழுமூடர்க்கு அறிந்தோ அறியாமலோ ஈயுமாறு நேர்ந்துவிட்டால், பயனிழந்து போவது மட்டுமின்றி மேலாம் திருவடி இன்பமும் கிட்டாது. மூடர்க்கு ஈந்தால் இழிபிறப்பும் அடைந்து அழிவில் அல்லல் உழப்பர் என்று எச்சரிக்கையும் செய்கிறார் திருமூலதேவர்.

திலமத் தனைபொன் சிவஞானியர்க் கீந்தால்
பலமுத்தி சித்தி பரலோக மும்தரும்
நிலமத் தனைபொன் நின்மூடர்க் கீந்தால்
பலமும் அற்றே பரபோகமும் குன்றுமே

எவருக்கு எப்படிக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் திருமூலர் கொடுக்கத் தகாதவர் பற்றியும் எச்சரிப்பது ஈண்டு நோக்கற்பாலது. இது கருதித்தான் 'பாத்திரம் அறிந்து பிச்சை இடு' எனும் பாடம் தமிழகத்தில் வழங்குகிறதோ? 'செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்பது அய்யன் திருவள்ளுவரின் அருள்வாக்கன்றோ?

அபாத்திரம்

பாத்திரத்தின் எதிரானது அபாத்திரம். முன்னர் சொன்னது சற்பாத்திரம். ஈண்டு உரைப்பது துற்பாத்திரம். இது நான்கு திருப்பாட்டுக்களால் விளக்கப் பெறுகிறது. அபாத்திரத்திற் கீவது பயனற்றது என்று எச்சரித்த திருமூலர் ஈண்டு விசேடித்துக் கூறுகிறார். சிவஞானியார்க்கு வழங்கியதால் சிவகடாட்சம் கிட்டும் என்ற திருமூலர் அபாத்திரத்திற் கீவதால் பயனில்லை என்பதை சிறப்பாக உவமை ஒன்றின் மூலம் ஈண்டு விளக்குகிறார், வறட்டுப் பசுவிற்குப்(மலடு) பசுந்தழை இட்டால் பால்கிட்டுமோ? பருவம் தப்பிச் செய்யும் பயிர் பயன் தருமோ? என்று வினவுகிறார் திருமூலர்.

கோலவறட்டைக் குனிந்து குள கிட்டுப்
பாலைக் கறந்து பருகுவதே ஒக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீதது
காலம் கழிந்த பயிரது ஆகுமே.

உவமை நயம் எண்ணி மகிழத்தக்கது. நல்லோர்க்கு நல்கல் நலம் பயக்கும். பஞ்சமா பாதகன்கூட நல்லோர்க்கு நல்கலால் ஆழும் நரகிடை அழுந்தாமல் உய்வான். நான் கொடுக்கிறேன் என்கிற எண்ணமிலாது கொடுத்தல் வேண்டும். சிவனே முன்னின்று அருளுகிறான் என்று வழங்க

வேண்டும். கூப்பிய கையினனாய் எண்ணி வணங்கத் தகாதவர்க்கு ஈந்தவனும் ஏற்றவனும் ஆகிய இருவரும் ஏழ்நரகிடை அழிந்து உழல்வர் என்கிறார் திருமூல நாயனார்.

முடிவுரை

இறைவன் (சக்திசிவ) விளையாட்டால் உடல் உயிரைப் பெறுவதும், அவ்வுயிர் மலங்களுக்கு ஏற்ப வர்க்காதிகளாக (சீவவர்க்கம்) வகைப்படுத்தப்படுவதும், பாச நீக்கம் பெற்ற உயிர் (மலபரிபாகம்) மகேசுவரனோடு ஒன்றி முத்திப்பேறு எய்துவதும், நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈவதால் வரும் நன்மையையும், அபாத்திரத்தில் அள்ளி வழங்குவதால் அடையும் கேட்டினையும் அறிவுறுத்தி மனித குலத்திற்கு வழிகாட்டுவதால்,

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் - அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்கு
சந்நிதிக்கும் தற்பரமே தாம்.

திருமூலதேவரின் திருவடிகளே சரணம்... சரணம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

24. தீர்த்தம், திருக்கோயில், அதோமுகதரிசனம்

முனைவர். கு.வெ.பாலசுப்பிரமணியன்
சிறப்புநிலைப் பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

திருமூலச்சித்தர், சாத்திரமும் தோத்திரமும் சங்கமித்த மூலமந்திரத்தை அருளிய வினையின் நீங்கிய அறிவினர். மூர்த்தி,தீர்த்தம், தலம் ஆகியன குறித்து அப்பெருமான் கூறுவன சிந்தையுள் செறித்து எண்ணத்தக்கன.

தலபுராண நூல்கள் பல தலங்களின் தீர்த்தப்பெருமை கூறுவன. தீவினை போக்கும், பிணி துடைக்கும், செல்வம் அளிக்கும், வீடுபேறு தரும் எனத் தீர்த்தமாடலின் பயனைத் தலபுராணங்கள் மொழியக் காணலாம். தீர்த்தங்களில் தோய்ந்து படிந்தால் மட்டுமே நன்மைகள் கிட்டுமா?

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

என்றவாறு உளத்தூய்மை இல்லாமல் ஓடித்தேடித் தீர்த்தப்பதிகளின் நீர்த்துறையாடுவதில் பயனில்லை என்றார் திருவள்ளுவர், மனத்துக்கண் மாசிலனாகித் தீர்த்த நீர்ஆடுவார்க்கே மலம் நீங்கும்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித்துறை யாடிலென்
ஓங்குமாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசன் என்னாதவர்க்கு இல்லையே.

எனத் திருநாவுக்கரசர் கூறினார். திருமூலப்பெருமானும் இக்கருத்தினரே. இதனைத் திருமந்திரம் உரைக்கும் தீர்த்தம் எனும் பகுதியிற் காணலாம்.

தீர்த்தம்

மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற மூன்றும் வழிபடற்குரியனவே. நந்தனார் தில்லைத் தலம் காண ஏங்கினர்; இந்திரன் துவாதசாந்தத்தலமாகிய மதுரையின் பொற்றாமரைக் கயத்திடை மூழ்கித் தீவினை ஒழிந்தனன். திருநாவுக்கரசர் ஐயாற்றுத் தீர்த்த மூழ்கிக் கண்டறியாதன கண்டனர்; அவரே தில்லையுள் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புமுடைய, மூர்த்தியைக் கண்டு, ஆ! மனித்தப் பிறவியிதும்

வேண்டுவதே என்றனர். இவையெல்லாம் மனத்தூய்மை அமைந்தவழி நினைந்தபயன் கிட்டின.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி இலாரே

என்கிற திருமூலமொழி எண்ணத்தக்கது. உள்ளம் பெருங்கோயிலாய், ஊனுடம்பு ஆலயமாய்க் காணின் இவ்வுடம்பிலேயே தீர்த்தங்கள் இலாமற் போமா? கலைமலிந்த சீர் நம்பியாகிய கண்ணப்பர் வாயைக் கலசமாகக் கொண்டு இறைவனை ஆட்டிய எச்சில் நீர் புண்ணிய தீர்த்தமாய்ப் பொலியவில்லையா?

உருகிய அன்பு ஒழிவு இன்றி நிறைந்த அவன் உரு என்னும்
பெருகிய கொள்கல முகத்தில் பிறங்கி இனிது ஒழுகுதலால்
ஒருமுனிவன் செவி உமிழும் உயர்கங்கைமுதல் தீர்த்தப்
பொருபுனலின் எனக்கு அவன்றன் வாய் உமிழும் புனல் புனிதம்
(பெரியபுரா. 808)

எனக் கண்ணப்பரின் வாயெச்சில் கலந்த நீரைக் கங்கையிற் புனிதமானது எனக்குடுமித்தேவர் உவந்த வண்ணம் சேக்கிழார் மொழிவார். இறைவனை அறிவதற்கு மனமது செம்மையாதல் வேண்டும். யோகப் பயிற்சி செய்வார்க்கு இறைவுணர்வு வாய்த்தாலும் வாய்க்கலாம். உலக அறிவு வாய்த்தார் அவ்வறிவின் துணை கொண்டு இறையுணர்வு பெறுதல் இயலாது. ஆனால் தூய உள்ளம் கொண்டார் இறையுணர்வு எய்தல் உறுதியாகும்.

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாரும் கலந்தறி வார் இல்லை
வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவினைப்
பள்ளத்தில் இட்டதோர் பந்தர் உள்ளானே

என்றவாறு இறைவனைக் கோயிற் கருவறைகளிலும் தீர்த்தவாரிகளிலும் தேடியலைவது அறியாமை என உணர்வது, உள்ளத்தினுள்ளாக ஒளிதரும் ஒளியை அறிந்துணரும் உள்முக நோக்கு (Introspection) வேண்டுமென அறிவுறுத்தினர் மூலனாகிய அங்கணர். அவ்வாறுணர்ந்த நிலையில் கங்கை சென்று ஆடிடில் பல புண்ணியப் பேறுகளைப் பெறலாம் எனவும் அறிவுறுத்தினர் அப்பெருமான். உடலுக்குள் அமைந்த மெய்வீடாகிய

மனத்தால் இறைவனை அறிவதை விட்டு விட்டுப் புண்ணிய தீர்த்தங்களைத் தேடி அலைதல் கடலில் தொலைத்த பொருளைக் குளத்தினில் தேடுதல் போன்றது என்றும் தெளிவுறுத்துகின்றார் திருமூலராகிய அருளாளர். நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்பன ஐம்பூதங்கள், இவற்றுக்குத் தனித்தனி நிறமுண்டு. இவற்றால் விளையும் குணமாறுபாடுகளாகும் மாசுகளைப் போக்க வல்லது மனத்தமைந்த 'தீர்த்த மாடல்'. எனவே திருமூலப்பிரான், உள்ளத்தைத் தூய்மை செய்க, உள்நோக்கிய சிந்தையராகுக, பின் தீர்த்தங்களிற் சென்று படிக என அறிவுறுத்தினர்.

திருக்கோயில்

சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று வகையாய் விளங்கி அடியவரால் வழிபடப்பெறுவான். பசுவின் உடம்பெங்கும் பாற்சத்து பரவியிருப்பினும், அதன் மடிச்சுரைகளினின்றும் பால் வெளிப்படுமாறு உலகெங்கும் நிறைந்த பெருமான், திருக்கோயிலிடத்தே அடியவர்க்குக் காட்சி நல்குவன். இலிங்கத் திருவுருவம் ஆன்மப் பசுக்களைப் புறம்புறம் அலையாது கட்டி வைப்பதற்குரிய கட்டுத்தறியாகும். இலிங்க வடிவத்தைத் திருக்கோயிலில் நிறுவுதலும், வழிபடுதலும் புண்ணிய வினைகளாகும். ஆனால், அவ்விலிங்கத் திருவுருவை ஓரிடத்திலிருந்து பறித்து அகற்ற முனைந்தால் அந்நிலத்தை ஆளும் அரசு நிலை பெறாது என்றும், அத்தீவினை செய்வாரைப் பெருநோயாம் தொழுநோய் தொடரும் என்றும் திருமூலர் எச்சரிப்பார். திருக்கோயிற்கு ஏதம் செய்வார் எவராயினும் அவர்கள் அழிதல் ஒருதலை.

கட்டுவித்தா ர்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக்கும் அபிடேகத் தரசரை
முட்டுவிக்கும் முனிவேதியர் ஆயினும்
வெட்டுவித்தே விடும் விண்ணவன் ஆணையே.

திருக்கோயிற் பூசை என்பது நாள்தொறும் தவறாது இயற்றப்பட வேண்டிய கடப்பாடாகும். கோயிற் பூசையின்றிப் போமானால், நாடும் , அரசும் கேடுறும், வளம் பிழைக்கும், தீவினை சாரும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதும், கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்பதும் பின்னை அறமொழிகள். திருமூலரும்,

ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

என்றனர். உடம்பு ஒரு கோயில்; இதனுள் இறைவனை எழுந்தருளச் செய்து வழிபடல் சாலச் சிறந்தது. இராசசிம்ம பல்லவன் கட்டிய கற்கோயிலைப் பொருட்படுத்தாமல் பூசலார் எழுப்பிய மனக்கோயிற்கு எழுந்தருளிய இறைவனின் வான் கருணை எண்ணத்தக்கது. உளக்கோயிலில் இறைவனை இருத்தி வழிபடுவதோடு ஆங்காங்குள்ள திருக்கோயிலிற்குச் சென்று வழிபடலும் சிறப்புடையது. அகத்தும் புறத்தும் அமைந்த கோயில்களைப் பேணுதலும் ஆங்குப் பூசை முட்டின்றிச் செய்தலும் வேண்டும். இப்பூசைகள் தவறின் நாட்டையாளும் மன்னரும் நலங்குன்றுவர்; உலகில் கள்ளம் களவு மிகுதியாகும். அருச்சனை செய்வார் உயரொழுக்கமும் செந்தண்மையும் பூண்ட அந்தணராதல் வேண்டும். பார்ப்பான் எனப் பேருடையவன் சிறந்த சீலங்களின்றேல் அருச்சனை செய்யத் தக்கவனாகான்:

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

என்றார் திருமூல முனிவர்.

அதோமுக தரிசனம்

சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் அதோமுகம் ஒன்று. அதோமுகம் என்பது கீழ்நோக்கிய முகமாகும். இம்முகம் வழிபாடுவார்க்குத் திருவருள் செய்யும் இனிய நோக்குடையது. தேவர்கள் அசுரர்களின் கொடுமை பொறுக்க மாட்டாது சிவபெருமானிடம் சென்று அப்பெருமானின் அதோமுகதரிசனம் பெற்றுத் தம் குறையினைக் கூறினர். அந்நிலையில் சிவபெருமான் அறுமுகப் பெருமானை நோக்கித் தேவர் குறை களையக் கட்டளை இட்டனன். பெருமானின் அதோமுக தரிசனத்தில் அப்பெருமானின் குற்றம் பொறுக்கும் குணம் புலப்படும்.

அண்ட மோடு எண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டம் கறுத்த கருத்தறிவார் இல்லை
உண்டது நஞ்சென்று உரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே

என்பர் திருமூலர். கண்டம் கறுத்தது என்பது குற்றம் பொறுக்கும் குணத்தின் குறியீடேயாம். நஞ்சு என்பது சிவபெருமானை வழிபடாது மறந்த குற்றத்தைக் குறிப்பதாகும். அக்குற்றத்தை ஏற்றுப் பொறுத்தமையே

கண்டம் கறுத்ததாகும். இறைவன் தன்னை வணங்கிப் போற்றும் மெய்யன்பர்களின் நிலை உயர்த்துதற்குத் தவறான். மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வன் என்பர் மூலமுனிவர். இறைவன் அதோமுகம் கொண்டிருக்கும் நிலையில் அவனை வழிபடுங்காலத்து அப்பெருமான் மாயையினைக் காரியப்படுத்தி உயிர்க்குலம் உய்யுமாறு அருளுவன். எரியும் சோதியினுள் செம்மை நிறம் துலங்குவது போல அதோமுக தரிசனத்தால் அவனருள் துலங்கும்.

நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங்கு உலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐம்முகங்களின் வேறாக விளங்குவது அதோமுகம். இம்முகம் வழக்கத்தில் காணப்படாது தோன்றாது நின்று அருள்புரிவது. எனவே அறிஞரானோர் சிந்திக்கும் திருமுகம் என்றனர் கச்சியப்பர். தீயாகிய தழல் ஆகவனீயம் (வடதிசைத்தீ) தாட்சிணாக்கினியம் (தென்திசைத்தீ) காருகபத்தியம் (இல்லறத்தீ) என மும்முகமுடையது. இவற்றுள் நடுவுநின்ற இல்லறத் தீயொடு பொருந்தக் கலக்கும் அதோமுகம் ஏனை இருதிசைத்தீயொடும் சென்று கலந்து உலகு முழுவதும் பரவி நிற்கும். சிவபெருமானின் அதோமுகத்தோடு தோன்றியவன் அறுமுகப்பெருமான். நிலவுலகத்தினர்க்கு அருள் செய்யத் திருக்கோயிலில் தோன்றும் முகம் இவ்வதோமுகமேயாம். சிவபெருமானுடைய அளவிறந்த பேராற்றல்கள் சுத்தமாலையிலிருந்து கீழ்நோக்கி வரும். அப்பேராற்றல் நூறு இதழ்களுடைய தாமரை மலராய் விரிந்து நிற்கும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

25. சிவநிந்தை, குருநிந்தை, மகேசுவர நிந்தை

ஒளிநெறிப்பிழம்பு. தவத்திரு. ஊரன் அடிகளார்
சமரச சுத்த சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர்.

திருமந்திரம் தமிழில் உள்ள ஒரே (மந்திர) சாத்திரம். தோத்திரத்துக்குத் திருவாசகம். சாத்திரத்துக்குத் திருமந்திரம் என்று ஒரு பழமொழியே உண்டாகி விட்டது. நூலின் பெயர் திருமந்திரம். அதன் பகுதிகளின் பெயர் தந்திரம். தந்திரங்களெல்லாம் எண்ணுப் பெயரால் அமைந்தவை. முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம் - இப்படியே ஒன்பது தந்திரங்கள். திருமந்திரத்தின் பாடல் ஒவ்வொன்றும் ஒரு மந்திரம். திருமந்திரப் பாடல்களைச் செய்யுள் என்றோ பாடல் என்றோ கூறுவது மரபன்று; மந்திரம் என்று கூறுவதே மரபு. திருமந்திரம் 9 தந்திரங்களையும் 3000 மந்திரங்களையும் உடையது.

மணி, மந்திரம், மருந்து என்று ஒரு மும்மை தேவாரத்திற் காணப்படும். மந்திரம், தந்திரம், யந்திரம் என்றொரு மும்மை திருமந்திரத்திற் காணப்படும். திருமந்திரம் தேவார திருவாசகங்களுக்குக் காலத்தால் முற்பட்டது. திருமந்திரத்தைச் சைவ சித்தாந்த முதல் நூல் என்று கூறலாம். ஏனைய சைவத் திருமுறைகளிற் காணப்பெறாத வாதம்(ரசவாதம்) வைத்தியம் முதலியன திருமந்திரத்தில் உண்டு. திருமூலர் சைவசித்தாந்தி மட்டுமல்லர்; சித்தர்களிலும் ஒருவராக உள்ளார். சைவ சித்தாந்த நுண் பொருள்கள் அனுபவங்கள் பலவற்றையும், சைவ சித்தாந்தத்திற் சேராத தத்துவ நுண்பொருள்கள் அனுபவங்கள் பலவற்றையும் வகுத்தும் தொகுத்தும் கூறும் திருமந்திரம், பின்னாளைய சாத்திர நூல்களுக்கெல்லாம் முன்னோடியும் மூலமும் ஆகும்.

குரு லிங்க சங்கம வழிபாடு (சேவை) என்பது சைவத்தில் முக்கியமாகச் சொல்லப்படுவதொன்று. வீரசைவத்திலும் இது முக்கியமாகக் கொள்ளப்படும். இம்மூன்றையும் திருமந்திரம் அழகாகக் கூறுகிறது. நேர்முகமாகவும் கூறுகிறது. எதிர் முகமாகவும் கூறுகிறது.

திருமந்திரம் இரண்டாந் தந்திரத்தில் ***சிவநிந்தை, குருநிந்தை, மகேசுவரநிந்தை*** என்று மூன்று அதிகாரங்கள் தொடர்ச்சியாக உள்ளன. ஏழாந் தந்திரத்தில் ***சிவபூசை, குருபூசை, மகேசுவரபூசை*** என்று மூன்று அதிகாரங்கள் தொடர்ச்சியாக உள்ளன. இம்மூன்று நிந்தைகளையும் மூன்று பூசைகளையும் இணைத்து நோக்க வேண்டும். குருலிங்க சங்கம

வழிபாட்டை எதிர்முகமாகக் கூறுவது மூன்று நிந்தை என்றால் நேர்முகமாகக் கூறுவது மூன்று பூசை.

மூன்று நிந்தைகளுக்கும் மூன்று பூசைகளுக்கும் பாடல் எண்ணிக்கையிலும் பாடல்களிலும் நடையிலும் தரத்திலும் வேறுபாடுகள் உள்ளன. மூன்று நிந்தைகளிலும் பாடல் எண்ணிக்கை குறைவு. மூன்று பூசைகளிலும் பாடல் எண்ணிக்கை மிகுதி. நிந்தை மூன்றின் பாடல்கள் நடையும் தரமும் அவ்வளவு சிறப்பாக இல்லை. பூசை மூன்றின் பாடல் நடையும் தரமும் மிகச் சிறப்பாக உள்ளன. திருமந்திரத்திற்கே உரிய சிறந்த நடை அவற்றிற் காணப்படுகிறது. நிந்தை மூன்றில் அத்தகைய சிறந்த நடை இல்லை.

திருமந்திர மூலப் பதிப்புகளில் சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பே மிகவும் சிறந்தது. அதற்கு அடுத்த படியாகத் திகழ்வது திருப்பனந்தாள் காசி மடத்துப் பதிப்பு. இதுவே இப்போதும் பெரிதும் வழக்கத்திலுள்ளது. இப்பதிப்பின்படி,

2 ஆம் தந்திரத்தில்	**7 ஆம் தந்திரத்தில்**
சிவநிந்தை - 4 மந்திரங்கள்.	*சிவபூசை - 24 மந்திரங்கள்.*
குரு நிந்தை - 7 மந்திரங்கள்.	*குருபூசை - 10 மந்திரங்கள்.*
மகேசுவர நிந்தை - 2 மந்திரங்கள்.	*மகேசுவரபூசை -11 மந்திரங்கள்.*

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என்பது சிவபூசையின் முதல் மந்திரம். "படமாடக்கோயில்", "நடமாடக் கோயில்" என்ற மந்திரம் மகேசுவர பூசையில் முதலாவது மந்திரம். இத்தகைய சிறந்த பாடல்கள் நிந்தை அதிகாரங்களில் இல்லை.

குருநிந்தையிலுள்ள "ஒரெழுத் தொரு பொருள்" என்னும் மந்திரம் திருமூலர் வாக்கன்று என்று உரையாசிரியர் அருணை வடிவேல் முதலியார் நூலிற் சேர்க்காமல் தனிப்படுத்துகிறார். திருமந்திரத்திற்கு மூலபாட ஆய்வுப்பதிப்பு என்றொரு அருமையான பதிப்பு டாக்டர். சுப. அண்ணாமலை அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. குருநிந்தை மகேசுவரநிந்தை ஆகியவற்றின் 7+2=9 மந்திரங்களுமே இடைச் செருகல் என்பது இப்பதிப்பின் குறிப்பு. சிவ நிந்தையின் ஈற்றில், "குறிப்பு: இவ்வியலை அடுத்துக் குருநிந்தை மகேசுவர நிந்தை என்னும் இரண்டு இயல்கள் அனைத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ளன. அவற்றின் பாடல்கள் யாப்புப் பிழையுடைமை, இலக்கணப் பிழையுடைமை, ஆசிரியரின் நடையினின்றும் வேறுபடுதல் என்னும் காரணங்களால் இடைச்செருகல் ஆகும்" என்று சுப. அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

மூன்று பூசைகளின் மந்திரங்களைப் படித்துவிட்டு, மூன்று நிந்தைகளைப் படிக்கும்போது உள்ளம் அவ்வளவு ஈடுபாடு கொள்ளவில்லை. எனினும் சுவையான சில பாடல்களை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டி விளக்குவோம்.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வார் அமரா பதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழின்
கிளியொன்று பூனையிற் கீழது வாகுமே -சிவநிந்தை 1 (536)

கருத்து: தெளிவுடைய ஞானம் நிறைந்த சிந்தையில் சிவனை நாடி அன்பு கொள்பவர் அமரர் தலைவராவார். ஈசனை எளியன் என்று இகழ்ந்தால் பூனையிடம் அகப்பட்ட கிளியைப் போன்று கிழிக்கப்படுவர்.

அப்பகை யாலே அசுரரும் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாயினும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே -சிவநிந்தை 3 (528)

கருத்து: சிவனைப் பகைத்துக் கொண்டதால் அசுரரும் தேவரும் தம்முட் பகைத்துக் கொண்டு அழிந்தனர். நல்ல பகையோ தீயபகையோ எப்பகையாலும் இறைவனை அடைய முடியாது. பொய்யாகப் பகைத்தாலும் அது ஒன்றுக்குப் பத்தாய்ப் பெருகிவிடும்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அந்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே -குருநிந்தை 3 (532)

கருத்து: பத்தினிகள், பக்தர்கள், தத்துவஞானிகள் இம் மூவகையினரையும் சித்தம் கலங்கச் செய்தவர்களின் சொத்தும் உயிரும் ஓர் ஆண்டிற்குள் அழிவுறும். இது சத்தியம்; சதாசிவத்தின் ஆணை. இம்மந்திரம் எளிதிற் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இக்காலத்திற்கு இம்மந்திரம் மிகவும் இன்றியமையாத மந்திரம். பாலியல் கொடுமை இன்று பரவலாகி வருகிறது. பிறர் மனைவி (பத்தினி)யரைக் கற்பழித்தல், துன்புறுத்தல், தூஷித்தல் முதலியன எளிதில் நடைபெறுகின்றன. பக்தர்கள் தூஷிக்கப் பெறுகிறார்கள். இகழப்பெறுகிறார்கள்; தத்துவ ஞானிகள் நிந்திக்கப் பெறுகிறார்கள். இந்த நிந்தனைகளின் பயன் ஓராண்டில் தெரியும். அத்தம் -பொருள். ஆவி-உயிர். ஓராண்டுக்குள் பொருள் அழியும்; உயிர்போகும்.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி ஆணையே. - குரு நிந்தை 5 (534)

கருத்து: இதுவும் இன்றைய நிலையில் இன்றியமையாது தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு மந்திரம். சிவனடியார்கள்- இறைவன் அடியார்கள் - இதயம் கலங்கினால், கலங்குமாறு யாரேனும் செய்தால், தேசமும் நாடும் சிறப்பும் அழிந்து விடும். தேசம் அழியும், நாடு அழியும், சிறப்பு அழியும். தேசம் என்றது பல மாநிலங்கள் சேர்ந்த பெருநிலப் பரப்பு: நாடு என்றது ஒரு மாநிலமாகிய உள்நாடு. ஈசன் அடியார் இதயங்கலங்கும் நிலை ஏற்பட்டால் இந்தியாவும் அழியும். தமிழ் நாடும் அழியும் என்று இன்று நாம் எண்ண வேண்டும். வாசவன் பீடம் - இந்திரன் பீடம். மாமன்னர் பீடம் - பேரசர்களின் பீடம். ஈசனடியார்கள் இதயங்கலங்கினால் அரச பீடங்கள் நாசமாகும். ஆட்சிக்குக் கேடு விளையும். இதற்கு அடுத்த மந்திரத்தில் நாட்டில் பஞ்சம் வரும் என்றொரு குறிப்பும் உள்ளது.

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன் வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. மயேசுவர நிந்தை 2 (538)

கருத்து: ஞானிகளை நிந்திப்பது நல்லதன்று. வந்திப்பது நல்லது. ஞானிகளை வந்தித்து அவர் வயப்பட்டால் சிவ போகத்திற் புகலாம்.

கடவுள், குரு, அடியார் என்று மூவகையாகப் பிரித்துப் பேசியிருப்பது மிகவும் இயல்பான பேருண்மையாகும். கடவுளை நிந்திக்கக் கூடாது. குருவை நிந்திக்கக்கூடாது. அடியார்களை நிந்திக்கக்கூடாது. குருவே சிவம் எனக் கூறினான் நந்தி என்று (திருமந்திரம்- 1581) சிவனுக்குச் சமமான உயர்வு குருவுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. சிவனை ஈஸ்வரன் என்று சொல்லிச் சிவனடியார்களை மகா ஈஸ்வரர், மாகேஸ்வரர், என்று மகா அடைமொழி கொடுத்துச் சொல்லி ஈசனை விட அவனடியார்கள் உயர்த்தப் பெற்றனர்: எனவே அடியார் நிந்தையும், குருநிந்தையும் சிவநிந்தைக்குக் குறைந்தனவன்று.

கடவுள் நிந்தனை ஒரு மடங்கு பாவம் என்றால், குருநிந்தனை இரண்டு மடங்கு பாவம். அடியார் நிந்தனை மூன்று மடங்கு பாவம்.

சிவபூசையில் குருபூசை அடங்காது. குருபூசையில் சிவபூசை அடங்கும். மகேஸ்வர பூசையில், சிவபூசை, குருபூசை, மகேசுவர பூசை ஆகிய மூன்றும் அடங்கும்.

நிந்தைகள் மூன்றும் ஒழிக! பூசைகள் மூன்றும் ஓங்குக!!

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

26. பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல்

கவிஞர். பால. நடராசன்
கோனாபட்டு

முன்னுரை

திருமூலர் எழுதிய திருமந்திரத்தை மூலமந்திரம் என்று சொல்வார்கள். திருமந்திரத்தில் சன்மார்க்கம், சாதன விளக்கம், சிவத்தெளிவு ஆகியவை அடங்கியுள்ளன. இது ஓர் அருளறிவுச் சுரங்கமாகும். இதில் அடங்காத யோக சாத்திரமில்லை. தத்துவம் இல்லை. திருக்குறளுடன் இதனைச் சேர்த்துப் படித்தால், அறிவுக் களஞ்சியம் ஆகலாம் என்பது அறிஞர்கள் கருத்து.

திருமந்திரம்

அப்பனை நந்தியை ஆரா வமுதனை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே!

திருமந்திரத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஐம்பதில் 36 ஆம் பாடலாய் அமைந்த பாடல் இது. தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பது அறிஞர்கள் கருத்து. இந்நூல் விலை காணமுடியாத மாணிக்கம். மூலன் உரைத்த மூவாயிரம் தமிழும் உள்ளறிவுக் கடலில் ஆழ்ந்து எடுத்த ஆணிமுத்துக்கள் என்பர். இதில் வேதப் பொருள் உள்ளது. ஆகமச் சிறப்பு உள்ளது. எல்லாவிதமான யோகப் பயிற்சிகள் உள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மண்டிக்கிடக்கும் பொக்கிஷமாகத் திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் உரைக்கும் அருமையான நூலாகத் திகழ்கிறது. இந்நூல் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. தேவார, திருவாசகத் தத்துவங்கள் இதில் அடங்கி உள்ளன. சாதி சமய வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் அன்புகொண்டு அருள் வெளியில் ஆன்மநேய ஒருமைபூண்டு வாழ இந்நூல் வழிகாட்டுகிறது. இந்நூல் கருப்பொருளாகப் பேசப்படும் பாடல்,

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்

ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே!

என்ற பாடலாகும்.

திரு என்ற அடைமொழியுடன் மக்கள் வாழ்க்கையில் பெரிதும் பயன்படுத்தப்படும் மந்திரமாயிற்று. மந்திரம் என்பது கடவுளைக் குறித்துச் சொல்லப்படும் தோத்திரங்களாகும். மாந்தர் (மக்கள்) கூறும் சொல் மந்திரம் இந்த திருமந்திரம்.

செந்தமிழின் வைப்பாம் திருமூலர் மந்திரநால்
முந்துமுறை ஐந்தெழுத்தின் முற்றுமுறை - தந்ததமிழ்
ஆகமமாம் பேறுவழி அவ்வழிபா டாமுறுதி
போகம் சிவசிவ போற்று.

மறை என்றால் வேதம். முறை என்றால் ஆகமம். ஐந்தெழுத்தின் முற்றுமுறை என்றால் ஐந்தெழுத்தின் குறிக்கோளை விளக்குவனவே ஆகமம்.

இதில் ஒன்பது தந்திரங்கள் பேசப்படுகின்றன. முதல் நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும், ஐந்து முதல் ஒன்பது வரை பேறு, பேற்றுவழி, வழிபாடு, வழிபாட்டுறுதி, வாழ்வு என்னும் ஐந்தினையும் விளக்குகின்றது. முதல் நான்கும் வேதம். அடுத்த ஐந்தும் ஆகமம் எனவும் கொள்ளலாம்.

பொறையுடைமை, பெரியாரைத் துணைக் கோடல் என்ற இரண்டும் இரண்டாம் தந்திரத்தில் அடங்கும்.

பொறையுடைமை

பிறர் செய்யும், சொல்லும், இன்னாத செயல்களையும், சொற்களையும் பொறுத்துக் கொள்வதே பொறையுடைமையாகும். பொறுத்தார் பூமியாள்வார் என்பது பெரியோர் வாக்கு.

பற்றிநின் றார் நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையுந்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே (திரு. 522)

என்ற திருமந்திரப் பாடல் மூலம் நாம் அறிவது அறுவகைக் குற்றத்துள் ஒன்றாகிய பற்றுள்ளம் என்னும் பற்றுள்ளத்தார்பால் பொறாமை என்னும்

பல்லி பற்றிக் கிடந்தது. பெரும்பாலும் உண்பதும், உடுப்பதும் காண்பதனாலேயே பொறாமை உண்டாகிறது. அதனால் அப்பொறாமை மூக்கையும், நாக்கையும் பின்னிக் கிடந்த தென்றார் உண்பதூம் உடுப்பதூம் ஆகிய நாக்கையும் மூக்கையும் பற்றி நிற்கும். பற்று நம்மைப் பற்றாதிருக்க வேண்டுமானால் பெரிய பொறுமையை உயிரினும் மேலாகப் பற்றிக் கொள்ளல் வேண்டும்.

பொறுமை என்ற பயிற்சிக்கு எத்தனையோ சோதனைகள் வரும். நாக்கு எனப்படும் மண்ணும் நீரும் சேர்ந்ததால் வந்த வளமாகிய உணவையும், மூக்கு எனப்படும் மண்ணால் வரும் வளமாகிய உடையையும் பற்றிக் கொண்டு நிற்கும் பாபகுணமே பொறாமை. அத்தீய குணத்தை அதாவது பொறாமையை நம்மால் உறைய விடாது நீக்குவதுதான் மாகமை என்ற பெரிய பொறுமை. அப்படிப்பட்ட பொறுமைக்கு வரும் சோதனைகளை தியானத்தால் சிதைக்க வேண்டும். அவ்வாறு அதைச் சிதைத்து விட்டால் எல்லா நன்மைகளும் நம்மை வந்தடையும். இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

இதே கருத்தினை

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று -திருக்குறள் 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல் -திருக்குறள் 158

என்ற குறள்கள் வலியுறுத்துகின்றன.

ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை வளைந்தருள் எட்டலு மாமே -திருமந்திரம் 523

என்ற பாடலை நோக்கும்பொழுது உலகு உடல்களைப் படைத்து அருளும் சிவபெருமானைத் தவத்தால் கைவரப்பெற்றவர் மெய்யுணர்வினர். அதாவது மன்னாதி மன்னர்கள் கூட தம் சேனையுடன் சூழ்ந்து வந்து கைதொழும்படியாகத் திருவடி உணர்வு அதிகம் அனுபவித்தவர் துணையுடன் வணங்கினால் இறைவனுடைய திருவருளை எளிதில் எய்த முடியும் என்று விளக்குகிறார் திருமூலர். மேலும்,

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதம்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத இலயமுண் டாமே

என்ற திருமந்திரப் பாடலின் மூலம் திருமூலர் சிறந்த முறையில் வீட்டிலும், நாட்டிலும் பொறுமையைக் கைக்கொண்டால் அப்பயிற்சி நல்ல தகுதியை உண்டாக்கும். மேலும் பேரொடுக்கப் பெருவெளியில் கூத்தியற்றும் சிவபெருமான் திருவடியில் கூடி இன்புறுதல் உண்டாகும் என்று கூறி விளக்குகிறார். இதையே திருவள்ளுவர்,

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று குறள். 152

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும் குறள். 154

என்ற திருக்குறள் மூலம் தெளிவுறுத்துகிறார்.

முடிவாக வற்றாத பொறுமை கொண்டு சிந்தையில் அன்பு செய்ய வேண்டும். உலகினும் பொறுமை மிக்கவன் அனைத்திலும் நல்லவன். ஒவ்வொருவரும் உள்ளத்தைப் பல்வகையாலும் பண்படுத்திப் பதம் செய்ய வேண்டும். வீட்டிலும், நாட்டிலும், அகத்திலும், புறத்திலும் திண்மை மனம் கொண்டு பொறுமையை மேற்கொண்டு அன்புடன் அருள்பணி கொண்டு தியானம் போன்ற பல பயிற்சிகளால் உள்ளத்தைப் பண்படுத்தினால் அந்த மனதில் இறைவன் நடமாடுவான். அதையே கவனித்து நின்றால் ஆன்மா எல்லையில்லா அருள் உணர்ச்சி ஏற்பட்டு இறைக்கலப்பெய்தும். இவ்வாறு சிவனுடன் ஆன்மா ஒன்றும் இடமே சிவாலயமாகும். அந்தச் சிவாலயத்தை அடைய எண்ணற்ற, எல்லையற்ற பொறுமை வேண்டும். அதற்குப் பெரியாரைத் துணை கொள்ள வேண்டும்.

பெரியாரைத் துணைக்கோடல்

பெரியார் என்றால் யார்? அதற்குச் சரியான முறையில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் திருவள்ளுவர்-

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். குறள். 26

என்று கூறுவார். ஐம்புலனொடுக்கம் என்ற யாராலும் செய்ய முடியாத செயலைச் செய்பவர் பெரியர். அது இயலாதவர் சிறியராகப்படுவர். அப்படிப்பட்ட செயற்கரிய செயல்களைச் செய்பவர் யார் என்று பார்க்கும் பொழுது எண் பெருந்தொண்டு என்று சொல்லப்படுகின்ற நந்தவனம் பராமரிப்பவர், மணமிக்க மலர் கொய்பவர், மலர்களைக் கட்டுபவர், திருமஞ்சனம் செய்பவர், அல்லும் பகலும் கோயிலைச் சுத்தம் செய்பவர், அளவில்லாத வகையில் விளக்குகளை ஏற்றுபவர், திருமுறைகளை எழுதுவோர், அதைப் படிப்பவர் ஆகிய செயற்கரிய செய்யும் செந்நெறியாளரே பெரியார். இப்படிப்பட்ட எண்பணி செய்பவருடன் நடத்தல், வாழ்தல், தேடல், கூடல் செய்பவரே பெரியாரைத் துணை கோடற்குரியவராவர். இதனையே திருமூலர் ஓடவல்லார் தமரொடு என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறார். சிவத் தொண்டிற்கு ஓடவல்லார், சிவத் தொண்டராகப் பாடவல்லார், அவனை ஞானக்கண்ணால் மனமுவந்து தேட வல்லார் ஆகியோருக்கு இறைவன் எளிதில் அருள்புரிவான். ஆதலின் அப்பெரியாரின் துணையுடன் இறையருளைப் பெற முடியும் என்பது புலனாகிறது.

'தாமிடர்ப்பட்டு' என்ற பாடலின் மூலம் உலகமாயை வயப்பட்டு அல்லலுற்று உழலும் பொழுது மனம் வருந்துவர். இப்பொழுது உண்டான இவ்வருத்தம் சிவத்தொண்டில் மகிழும் பெரியவர்களை நான் கண்ட மாத்திரத்திலேயே அவ்வல்லல் அகலாதோ என்று கூறுவார் திருமூலர். ஈண்டு அப்பூதியடிகள் சிவனடியார்க்கு உணவு படைக்கலுற்ற போது இலை பறிக்கச் சென்ற மகன் அரவு தீண்டி இறந்தான். சிவனடியாராம் அப்பரடிகள் ஒரு பாடல் பாட விடமுண்ட பாலகன் விழித்தெழவில்லையா? மயிலையில் பூம்பாவை என்ற பதினாறு வயதுப் பெண் இறந்த பொழுது ஞானசம்பந்தக் குழந்தை, உமையம்மையிடமே ஞானப்பால் அருந்தி சிவனைக் குறித்துப் பாடப் பொற்றாளம் பெற்ற சிவக்கொழுந்தின் துணையுடன் பூம்பாவையின் உயிரைத் திரும்பத் பெற வில்லையா?

'அறிவார் அமரர்' என்ற திருமந்திரப்பாடல் சில பெரியவர்கள் தேவர்க்கும் மூவர்க்கும் மேலான சிவபெருமானைத் திருவருளால் உள்ளத்தே நாடி அறிவர். மெய்யுணர்வு கைவரப் பெறுவர். அத்தகைய பெரியவர்களைத் தேடிக் கூடி வாழ்வதே பேரின்பமாகும்.

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் குறள். 443

என்ற குறளும் இதனை வலியுறுத்துகிறது. மேலும் நாவுக்கரசர் தேவாரம் பாடத் தலைப்பட்டு, ஞானசம்பந்தரொடு இணைந்து ஊர்தோறும் சென்று தேவாரம் பாடி மகிழ்ந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தது அவர் தனக்குப் பெரிய தமக்கையாரைத் துணை கொண்டதாலன்றோ?

அடுத்து 'தார்சடையான்' என்ற பாடலின் மூலம் சிவபெருமானுக்கு உரியவராய் மதப்போரை விரும்பாமல் வாய்வாளாது உள்ளத்தே நினைவோர் பெரியர். அவருக்கு அருள் செய்யும் முதல்வன் சிவன். பெரியாரைச் சார்ந்தால் அவன் திருநெறி கூடலாம். அறிவு முதலியவற்றால் தம்மை விடப் பெரியாரைத் தமக்கு உறவாகக் கொண்டு நடத்தல் மன்னர்க்கு வல்லமை எல்லாவற்றையும் விட மேம்பட்டதாகும் என்ற கருத்தமைந்த

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந்தலை -குறள். 444

என்ற குறள் தெளிவுறுத்துகிறது

'உடையான் அடியார்' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல் மூலம் எல்லாம் உடையவனாகிய சிவபெருமானின் அடியார்கள் பண்டைப் பழவடியாருடன் கூடிப்புகுவர். அடியேனும் அவர்களுடன் முத்தலை வேற்படை நிறைந்தவனும், தழல் போலும் செம்மேனி உடையவனும் ஆகிய சிவபெருமானின் திருவெள்ளி மலைக்குப்போனேன். அங்கு கடைக்காவற் பெரிய தேவர் உடையானுக்கு அறிவிப்ப அவன் அருள்தர உட்புக்கு அவர்கள் ஓலமென்றனர் அதாவது வருக வென்றனர்.

இப்பாடலை உற்று நோக்குங்கால் சகுந்தலையானவள் தன் வாயிலுக்கு வந்த முனிவரை வணங்கி வரவேற்று உபசரித்துத் துணைக் கொள்ளாததால் அம்முனிவரின் சாபத்திற்கு ஆளாகித் தன் இல்வாழ்க்கையில் சிறப்படைய இயலாமலிருந்தாள். பல முனிவர்களைத் துணையாகப் பெற்றிருந்தும் வேறொரு முனிவரின் சாபமானது இவளுக்கு எளிதாகச் செயல்பட்டது. ஆனால் அவள் மகன் பரதனோ ஐந்து வயதிலேயே தன்னை நாடி வந்த பெரியாரை அவர்தான் தன் தந்தை துஷ்யந்தன் என்பது தெரியாதிருந்தும் அவரைப் பணிந்து துணைக் கொண்டதால் பாரத நாட்டையாளும் பெரும் வேந்தனாகத் தன் தந்தை துஷ்யந்தனை விஞ்சிய வேந்தனாக விளங்கினான்.

அடுத்து 'அருமைவல் லான்கலை' என்ற பாடல் மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனாகிய அருமை வல்லோன் கலை ஞானத்துள் தோன்றி யருள்வான். அவனைத் தினைத்துணைப் பொழுதும்

மறந்துய்யேனென்னும் திண்ணிய நெஞ்சினராய் உள்ளார் பிறவிப் பெருஞ்சுழி நீந்துவர். சிவனடியாராம் உரிமை வல்லார் தம்மையும் தமையுடையார் தன்னையும் உணர்வர். அருளால் ஊழிக்கும் வாழ்வர் என்ற கருத்தினைப் புலப்படுத்தும். இதனையே திருவள்ளுவர்-

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் -குறள். 10

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.

முடிவுரை

பொறுமை கடலினும் பெரிது. அப்பொறுமையை நாம் பெற வேண்டுமெனில் பெரியாரைத் துணைக்கோடல் வேண்டும். அப்படிப் பெரியாரைத் துணைக் கொண்டால் இறைவன் அடையும் வழியையும் அடையலாம். நம் உடைமை எல்லாம் அவன் உடைமை. அனைத்தையும் உடையான் அவனே. அவனடியாருடன் கூடிச் சென்றே அவனருள் பெறலாம். திருவருள் உணர்வுடன் நீடூழி வாழ்ந்திருக்கும் திருவாளரான பெரியாருடன் சேர்ந்து வாழ்ந்தால் நலம் பெறலாம். அருட்பெரியார் உறவே இருட்பெருநோய் தீர்க்கும். அருளாளர் உறவே அளவற்ற இன்பம்.

ஆம்! பொறுமையை மேற்கொள்ளப் பெரியாருடன் கூடல் பேரின்பம் பயக்கும். இது உண்மை.

திருச்சிற்றம்பலம்

மூன்றாம் தந்திரம்

27. அட்டாங்க யோகம், இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம்

கவிஞர். இராகவன் முத்து பி.எஸ்ஸி., சிஏஐஐபி.,
காரைக்குடி

தோற்றுவாய்

உலகங்கள் யாவினையும் படைத்தும், கரந்தும், புரந்தும், அருளியும், அழித்தும் திருக்கூத்தியற்றும் பரம்பொருளைச் சிவம் என்ற திருப்பெயரால் அழைத்து மகிழும் சமயம் சைவம் ஆகும். சைவ சமயத்தின் கருவூலம், தேவாரம் முதலாகிய திருமுறைகள் பன்னிரண்டும். இவற்றுள், பன்னிரண்டாம் திருமுறை ஆகிய பெரியபுராணமோ, தொண்டர்களின் வாழ்வியற் பதிவாகிய வரலாறு ஆகி நிற்கும்; முதல் ஒன்பது திருமுறைகள் சிவபரம்பொருளைப் பற்றி மட்டுமே போற்றிப் புகழும் வழிபாட்டுப் பாடல்களின் சுரங்கம் ஆயிலங்கும்; பதினோராம் திருமுறையோ, ஒரு கதம்பமாலை போலவும், இராக மாலிகை போலவும், சிவனார் தாமே இயற்றிய ஒரு பாட்டை (திருமுகப் பாசுரம்) முதலாய்க் கொண்டும்; மூத்த பிள்ளையாம் கணபதி, இளைய பிள்ளையாம் முருகவேள், திருமுறை ஆசிரியராம் சம்பந்தர், அப்பர் என்ற இருவர், அன்பு பிழம்பாய்த் திரிந்த கண்ணப்பர்- இவர்களையும் போற்றும் பாமாலைகளையும் கொண்டும்; திருத் தொண்டர்கள் வரலாற்றுடன் சுந்தரர் வணக்கமும் இணைய ஒரு திருவந்தாதியையும் பெற்றும், சிவனார் வணக்க மாலைகளுடன் வீறாய்ப் பொலியும். இவை பதினொன்றும் இவ்வாறு ஆக, பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம், ஒரு தனித்தன்மையுடைய அறிவுக் களஞ்சியமாகவும், அருட்பொதியாகவும் கொலுவிருக்கும் என்றால் அது மிகையன்று.

ஆசிரியரும் அமைப்பும்

'தோத்திரமும், சாத்திரமும் ஆனார் தாமே' என்று அப்பர்பிரான் உரைப்பார். சாத்திரம் என்பது அறிவியல் போன்றது. தோத்திரம் என்பது புகழ்மொழி. திருமுறைகளில் திருமந்திரம், தோத்திரம் சாத்திரம் இரண்டையும் ஒக்கக் கொண்டு உயர்ந்துள்ளது. இதை அருளியவர் திருமூல நாயனார்.

வடவர் மரபில் வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல் என்பர். செந்தமிழ் மரபில் திருக்குறள், பொது நூல்; திருமந்திரம் சிறப்பு நூல் எனல் வேண்டும். திருக்குறளை, உலகப் பொதுமறை என்றும் தமிழ்மறை என்றும் விதந்து ஓதும் வழக்கு, பரவலாய் உள்ளது. நம்பிரான் திருமூலர் என்று நம்பியாரூர் கொண்டாடும் திருமூலர், ஆகமப் பொருளை அருந்தமிழாக்கி வழங்கினார் என்பது தெய்வச் சேக்கிழார் வாக்கு.

'அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்
சிந்தை செய்(து) ஆகமம் செப்பலுற் றேனே'.

என்பது திருமூலரே அகச்சான்றாகக் கூறும் பாசுரம்.

திருமந்திரத்தின் முழுச் சாறும் சிவமே; சீவன் சிவமாதற்குரிய வழிமுறைகளும் கூறப்பெற்றமை, ஒரு புதிய பெரும்பயன்; அது, ஆசிரியரின் பெருங்கருணையும் இறைவன் திருவுள்ளக் கிடக்கையும் ஆம்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செயு மாறே

என்று தன் பிறவி நோக்கத்தையும்,

திருமந்திரத்தில் அகச்சான்றுப் பாடல்களாக ஆசிரியர் திருமூலர் வெளியிட்டிருப்பதை யாவரும் அறிவர்.

திருமந்திரம் ஒரு யோக நூலும் சிறந்த அருள் அனுபவ நூலும் ஆகும். ***மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்*** என்பது போன்ற தொடர்களால், திருமந்திரப் பாடல் தொகை மூவாயிரம் என்று கூறப்பெறும். ஆனாலும், பல பதிப்புகளில் 3047 பாடல்கள் அமைந்துள்ளன; *அதிகப் பாடல்கள்* என்று சில பாடல்கள் காட்டப் பெறுகின்றன. இடைச் செருகல் பாடல்களும் இருக்கக் கூடும்; பாட வேறுபாடுகளும் அதிகமாகவே உள்ளன.

யாப்பு வகையால், நூல் முழுமையும் ஒருவகை நாற்சீரடிகள் நான்கு கொண்ட பாடல்களாக அமைந்துள்ளது. அவை வெண்தளை அன்றி வேறு தளை பெறாத பாடல்கள் எனவே, கலிவிருத்தம் என்ற வகைப் பாக்கள் என்னலாகும். இவ்வாறான ஒரு கலிவிருத்தம் பிற நூல்களில் காணப் பெறவில்லை என்பர் அறிஞர். இந்த யாப்பிலக்கணச் செய்திகள் பெரும்பான்மைப் பாக்கள் பற்றியன; இதற்கு மாறான சில பாக்களும் சில பதிப்புகளில் இடம் பெற்றுள்ளன.

புதுமைச் செய்திகள்

நிலையாமை முதலிய பேரறங்களையும் இந்நூல் பேசுகிறது; எனினும் ஏனைய அறநூல்கட்கும் திருமுறை நூல்கட்கும் திருமந்திரத்துக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு ஒன்று உண்டு. மிக எளிதாக, விளக்கி உரைப்பாரே, தேவையில்லை என்னும் அளவு- ஒரே முறை படித்த அளவில்- பொருள் உணர்ந்து சுவை தெரியும் வண்ணம் மிக எளிய பாடல்கள் பல திருமந்திரத்தில் உண்டு.

'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை'
'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'
'ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்'

என்று தொடங்கும் பாக்கள், இவ்வகை எளிய பாக்களின் சான்று.

அவற்றுக்கு நேர் எதிராக (diametrically opposite) உரையாசிரியர்கள் பலர் கூடி விளக்கினாலும் ஓரளவுதான் உணரமுடியும் என்று சொல்லும் அளவு, மிகக் கடுமையான மறைபொருள் பாடல்கள் (பரிபாஷை) இந்நூலில் பற்பல உள்ளன.

'பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு'
'ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்'
'வழுதுணை வித்திடப் பாகல் முளைத்தது'
'மரத்தில் மறைந்தது மாமத யானை'

என்று தொடங்கும் பாக்கள், இவ்வகை செறிவுப் பாக்களிற் சில. (Pregnant)

சமய சாத்திரக் குறியீடுகளாகிய வடசொற்களும் தென்மொழித் தீஞ்சொற்களும், சொல் தொடர்களும் இந்நூலில் இனம் பிரித்து வகைப்படுத்த (identify -isolate & classify) இயலாவாறு தம்முள் தழுவியும் மயங்கியும் கலந்து விரவிக் கிடக்கின்றன. உலகியல் வழக்கில் இருந்த அக்கால வழக்குச் சொற்களும் காணக் கிடைக்கின்றன. தமிழ், வடமொழி இரண்டும் கலந்த கூட்டுமொழிச் சொற்களாக, *அணுவன், மாயாள்* என்பன போன்ற புதுச் சொற்களும் திருமந்திரத்தில் இடம் பெறக் காணலாம்.

'சித்தாந்தம் நடமாடும் கோயில்' என்பனவான புதுமைச் சொற்கள் திருமூலர் வழங்கியதாலேயே, அவர் காலத்தில் இருந்து, தமிழகத்தில் பெருவழக்காக இடம் பெறத் தொடங்கின என்பது ஆய்வாளர்களின் துணிவு.

முதல் இரண்டு தந்திரங்கள்

கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலியனவாக நூற்பாயிரம் அமைய, அதற்கடுத்த திருமந்திர நூற்பொருளடைவுப் பகுதிகள் ஒன்பது தந்திரங்கள் எனப் பெற்றன.

வேத, ஆகமச் சிறப்பு, யாக்கையும் செல்வமும் இளமையும் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல் முதலிய அறக் கூறுகள்- இவையும் இவையனைய பிறவும் முதலாம் தந்திரத்தில் இடம் பெறும். ஒழுக்க நெறியும் சிவநெறியும் பொருந்தும் இயல்பு முதல் தந்திரத்தில் விளக்கவும் விளங்கவும் பெறும்.

இரண்டாம் தந்திரத்தில் இறைவனது தடத்த நிலை என்ற பொது இயல்பு விரிவாகப் பேசப்பெறும். பழைய புராண வரலாறுகள் (தக்கன் வேள்வி, அட்ட வீரட்டம், பிரளயம், அடிமுடிதேடல், ஐந்தொழில்கள்) இலக்கண வகைகள், சாதனங்கள் இவை இத்தந்திரத்தில் எடுத்தாளப் பெற்று விரித்துரைக்கப் பெறும். அகத்தியர் வரலாறும் பெருமையும், கரு உற்பத்தியாகி வளரும் முறையும், அன்பர் பெருமையும் இத் தந்திரத்தின் அற்புதச் செய்திகள் எனலாம்.

மூன்றாம் தந்திரம்

உடம்பில் உறுபொருளாகிய முதல்வனைக் காண்பதற்கு உடம்பு நீடியிருக்கவும் வேண்டும்; மன ஒருமையும் (Concentration - ஏகாக்கிரச் சித்தம்) வேண்டும். அவற்றுக்குச் சிறந்த சாதனமாவது வாசியோகம் என்று அறிமுகம் செய்து, வாசியோகத்தை விவரிப்பது மூன்றாம் தந்திரம்.

அட்டாங்க யோகம்

யோகம், மெய்ந்நெறியாளர் யார்க்கும் வேண்டப்படுவதாகிய பொதுப் பண்பும் தேவையும் ஆம், *புறம் புறம் திரிந்து* சுழன்ற (அலமரல் உற்ற) மனம், சுழற்சியை விட்டுக் குவிதல் வேண்டும்- ஒரு முனைக்கு வரல் (Concentration) வேண்டும். தாம் விரும்பும் பொருளில் மனத்தை நிற்கவும் பற்றவும் செய்யலாம். இந் நன்னெறியில் நிற்பவர்க்கு ஞானம் எளிதில் தலைப்படும். ஞானத்தின் இறுதிப்பயனாக, பிறவி நீக்கம் பெறலாகும். உள்ளத்தைக் குவித்து (focus) ஒரு முனைப்படுத்துதற்குரிய யோக நெறி *அட்டாங்கம்* என்பதாகும்.

அட்டாங்கம் என்பதற்கு எட்டு உறுப்பு என்று பொருள். யோகத்தின் பயனாய் ஞானம் பெறலாம் என்று முன்னைப் பாட்டில் (3-1-3) கூறிய

ஆசிரியர், இப்பாட்டில் *அட்டாங்கம்* என்ற எட்டு உறுப்புகள் இவை இவை என்பார்.

இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவதும் ஆமே.

இதனால் யோகத்தின் எட்டு உறுப்புகள் ஆவன. 1. இயமம், 2. நியமம் 3. ஆதனம் 4. பிராணாயாமம் 5. பிரத்தியாகாரம் 6. தாரணை 7. தியானம் 8. சமாதி என்பவை என்று அறிகின்றோம்.

இப்பாட்டில் ஆதனம், பிராணாயாமம், தாரணை என்ற யோக உறுப்புக்களை அடைமொழி சேர்த்து (adjective) வழங்கியுள்ளமை ஊன்றி நோக்கி உணரவேண்டிய செய்தியாம்.

ஆதனம் என்றால் ஆசனம் என்று பொருள். ஆசனங்கள் பற்பல வகையினவாய் அமைதலும், பயிற்றுவிக்கப் பெறலும், பயன் கொள்ளப் பெற்றலும் நடைமுறையில் காணலாம். அவை, எண்ணற்றனவாய் உள்ளன என்பதைத் தெரியப்படுத்துகிறார் ஆசிரியர். *பிராணாயாமம்* என்றால் மூச்சுக் காற்றை அடக்கும் பயிற்சி எனப் பொருள். அதன் நயமுறும் என்றதனால், அப்பயிற்சி மனத்திற்கு ஒரு நன்மையைத் தரவல்லது என்று தேறலாம். *தாரணை* என்பதற்கு தடுத்து நிறுத்தித் தாங்கிக் கொள்ளல் என்று பொருள். இதனை *பொறைநிலை* (BEARING) என்பார் நச்சினார்க்கினியர். (தொல்- பொருள்-புறம் -20). பொறிகளின் வழிச்சென்ற மனத்தை, ஆதாரங்கள் ஆறின் வழிச் செலுத்திய பின், மீண்டும் அம்மனம் பொறிவழிக்குத் திரும்பி விடாமல் ஆதாரங்களிலேயே தடுத்து நிறுத்தி வைத்தல் தாரணையாம். இதில் வெற்றி பெற்றால்தான், ஞானம் பெறும் முயற்சி முழுவெற்றியாம் என்று காட்டவே, சயமிகு தாரணை என்று அறிவுறுத்தினார் திருமூலர்.

அயம் என்றால் குதிரை என்று பொருள். குதிரை என்பது உவம ஆகுபெயராக, விரைவுநடை உடைய மனத்தைக் குறிக்கும் யோகநூல் வழக்காகும். வடமொழியில் *வாசி* என்பதும் குதிரைக்குப் பெயர். எனவே, மனம் அடங்கிக் குவிதற்பொருட்டு மேற்கொள்ளப் பெறும் யோகம், *வாசியோகம்* ஆகிறது.

இயமம்

மேலைத் திருப்பாக்களில் யோக நெறியின் உட்டு உறுப்புக்களையும் தொகுத்துக் கூறிய திருமூலர், அவை ஒவ்வொன்றையும் விரிவாக விளக்கி மொழிகின்றார். இயமம் என்ற யோக நெறிப் பண்புகள் என்ன என்று ஒரு திருமந்திரம் சொல்கிறார்.

கொல்லான் பொய்கூறான் களவிலான் எள்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கள்காமம்
இல்லான் நியமத்(து) இடையில் நின்றானே. (3-2-1)

கொல்லாமை, பொய்கூறாமை, விருப்பு வெறுப்பு இன்மை, நிரம்ப உண்ணாமை, பொறையுடைமை, அடக்கம் உடைமை, நடுவுநிலைமை உடைமை, கரவாத ஈகை, மாசில்லாமை, கள் உண்ணாமை, காமம் இன்மை என்பவனாகிய பத்துப் பண்புகளும் முற்ற உடையவனே இயம யோகம் கைவரப் பெறுவான்.

யோகியாக விரும்பும் ஒருவன், இப்பத்து இயல்புகளை முற்றப் பெற வேண்டும்; முற்றப் பெற்றால்தான் இயமம் இயலும். எனவே முற்றப் பெறுவதற்கு முயலவும் வேண்டும்.

இவை யாவும் திருக்குறள் நூலிலும் பேசப் பெற்றன. இங்குப் பத்துப் பண்புகளையே கூறியிருப்பினும், இவற்றுடன் இணையாக எண்ணப் பெறும் பிற பண்புகளும் கொள்ளப் பெற வேண்டும். திருமூலர், இங்கு *பத்து* என்ற தொகை கொடாமல் விட்டதனால், இவ்வறிவுரை பெறப்படும்.

களவிலான் என்பதற்கு, கள்ளாமை (வாய்மை) விருப்பு வெறுப்பின்மை உடையவன் என்று பொருள் பெற வேண்டும். அது போலவே, *நல்லான்* என்றது பொறுமை உடையான் என்பதற்காகவும் *நடுச் செய்ய வல்லான்* என்றது, உவப்பு வெறுப்பு சினம் முதலியன இல்லாத சமநிலை, சாந்தம் உடையான் என்பதற்காகவும் பயின்றன. *எள்குணன்* என்றால், மறுக்கின்ற உணவை உடையான் என்று பொருள் பெற வேண்டும். (எள்குதல் - மறுத்தல்) எனவே, நிரம்ப உண்ணாமல் குறைய உண்பவன் என்பது சுட்டப் பெற்றது. *எள்கு ஊணன்* என்றும் இச்சொல்லுக்குப் பாடபேதம் கூறுவர்.

இயமத்தின் பண்புகளை,

பொய்கொலை களவே காமம் பொருள்நசை
இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்

என்று ஐந்துக்குள் அடக்கி உரைத்தார் நச்சினிக்கினியர். (தொல்-பொருள்- 75 உரைச் சூத்திரம்)

நியமம்

நியமம் என்றால், ஒழியாது மேற்கொள்தலாம். சிவபிரானைச் சத்தியோடும் உடனாகி நிற்பவனாக உணர்பவனே நியமத்தில் நிற்கவல்லவன் ஆவான்.

தவம் செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகம்சிவ பூசைஒண் மதிசொல் ஈரைந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே (3-3-2)

என்ற திருப்பாடலால் நியம யோகத்தின் பத்துக் கூறுகளையும் திருமூலர் தெரிவிக்கின்றார்.

1. தவம் என்பது முயற்சியுடன் கூடிய நெறிபிறழா ஒழுக்க வாழ்க்கை. 2. செபம் (=ஜெபம்) என்பது, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் மந்திரங்களை மிகுதியாகக் கையாள்தல்(ஓதுதல்) 3. சந்தோடம் என்பது, *உள்ளது போதும்* என்ற மனநிறைவுடைமை, 4. ஆத்திகம் என்பது, நூல்களில் கூறப்பட்டிருக்கும் கடவுள் உண்மை, இருவினை, மறுபிறவி, சொர்க்க நரகக் கோட்பாடுகள் இவற்றை ஏற்றுக் கொள்ளும் பணிவுடைமை. 5. தானம் என்பது, தீதற்ற நல்வழியில் உழைத்து ஈட்டிய தன் பொருளை உயர்ந்தவர்கட்கு ஈயும் வண்மை 6. விரதம் ஆவது, சிவபிரானுக்கு உரியனவாகிய சிறப்பு நாட்களில் தவச் செயல்களை மிகச் செய்தல் 7. கேள்வி ஆவது சிவ ஆகமங்களின் ஞானபாதப் பொருளைக் கேட்டல் 8. மகம்- யாகம், என்பது, இயன்ற பொழுது நெருப்புக் கடவுள் வழியாக வேள்விகள் புரிதலும், புரிவித்தலும் 9. பூசையாவது, சிவலிங்கத் திருமேனிக்குரிய வழிபாட்டினை மெய்யன்புடன் விடாது மேற்கொள்தல் 10. ஒண்மதியாவது நற்பண்புகளைப் பெற்று ஒழுகும் அறிவுடைமை.

இவ்வாறு நியமமும் பத்து என வரையறுத்து ஓதப் பெறினும், இவை ஒப்பன பிறவும் கொள்ளப்படும் என்க.

இயமத்தை ஐந்துறுப்பில் தொகை செய்த நக்கினார்க்கினியர், அதே போல, நியமத்தையும் ஐந்துறுப்பாகச் சொல்வார்.

பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பயன் ஆசாற்(கு) அளித்தலொ(டு)
நயனுடை மரபின் நியமம் ஐந்தே

என்பது அப்பகுதியாகும்.

ஆதனம்

ஆதனம் என்பது ஆசனம், அதாவது, இருக்கும் முறை. யோகம் புரிவதற்குக் கை, கால், உடல் உறுப்புக்களைத் தக்கவாறு அமைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் முறை,

பங்கயம் ஆதி பரந்தபல் ஆதனம்
அங்குள ஆம் இரு நாலும் (3-4-1)

என்ற திருமந்திரத்தால் யோக முறையில் பற்பல ஆசன நிலைகள் உள்ளன என்றும் அவற்றை எட்டுப் பிரிவுகளில் வகை செய்யலாம் (eight groups) என்றும் திருமூலர் பேசுவார். ஆசனங்கள் பங்கயம் (=பதுமம், தாமரை) முதலியவற்றின் வடிவத்தால் அவ்வப்பெயரைப் பெற்று பரந்து விரிந்துள்ளன என்றும் உணர்த்துவர். எட்டு வகை ஆசனங்களிலும் மிக உயர்ந்த ஆசனம் சுவத்தி என்ற (ஸ்வஸ்திக் - swastik) நிலையாம். அதில் இருப்பவன் யோகத்தில் மிக உயர்ந்த பதம் (position) பெற்றவனாம்.

பதுமாசனம் (தாமரை), பத்திராசனம் (பத்திரம்= வாள்) குக்குட ஆசனம் (குக்குடம் = கோழி), சிங்காசனம் என்ற நான்கு வகை ஆசனங்களும் தத்தமில் சிற்சில வேறுபாடுகள் உடையவை என்று கூறி, இவற்றுக்கு விளக்கம் தருவார் திருமூலர்.

பதுமம் முதலான ஆசனங்களை முறையாய்க் கூறிவந்த நாயனார், குன்றக் கூறார் ஆதலின், கோமுகாசனம், வீராசனம், சுகாசனம், சுவத்திகாசனம் என்பனவற்றையும் விரிவாக ஒவ்வொரு பாசுரத்தாலேனும் விளக்கியிருக்க வேண்டும். அந்தத் திருமந்திரப் பாடல்கள் கிடையாமல் ஒழிந்தன என்றே கருத வேண்டும். அருள் நூல்களில் கற்றுத் துறைபோகிய வித்தகப் புலமை உரையாசிரியர்கள் இவ்வாறு கொள்கின்றனர்.

பத்திரம் கோமுகம் பங்கயம் கேசரி
சொத்திரம் வீரம் சுகாதனம் ஓர்ஏழும்
உத்தமாம் முதுஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே (3-4-6)

என்ற பாடல் மேற்கூறிய உரையாசிரியர் கூற்றுக்குக் களம் தருவதாம். இப்பாசுரத்தின் உரைப்பகுதியில் சொத்திரம் என்ற சொல்லில் திரம் என்பது திராசனம் என்று நின்றது என்றும், அது குக்குட ஆசனத்தையே சுட்டியது என்றும் கருதப் பெறும்.

ஆசனங்களில் பெரும்பான்மை, உடலை நேரே நிமிர நிறுத்தி (முதுகுத் தண்டு வளைவுறாமல்) இருகண்களாலும் மூக்கு ஒளியை நோக்கி நிற்றல் என்பதே பொது அமைப்பு. இவற்றைப் பத்திராசனத்திலும் சிங்காதனத்திலும் எடுத்தியம்பக் காணலாம்.

அடித்தளமாகிய ஆசனம் (BASIC FUNDAMENTAL) ஆகிய பத்மாசனம் இவ்வாறு அமைய வேண்டும் என்பார் திருமூலர்.

பாதங்கள் தொடைகளில் மேல் ஒன்றாகப் பொருந்தும்படி ஏற்றி, பின் நன்கு வலித்து இழுத்து, அவை தொடைகளின் மேற்புறம் நிற்கச் செய்து, அவற்றின் மேல் இரு கரங்களையும் மலர வைப்பின், அந்நிலை தாமரை மலர் வடிவம் பெற்றதாகும். அதுவே பதுமாசனம்.

ஓரணை யப்பதம் ஊருவின் மேல்ஏறிட்டு
ஆர வலித்து, அதன் மேல் வைத்து அழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனம்எனல் ஆகுமே 3-4-2

என்ற திருமந்திரப் பாடல் பதுமாதனத்தை விவரிக்கும்.

பதஞ்சலி சூத்திரம் முதலிய யோக நூல்களும் சில உபநிடத நூல்களும் இன்னும் பற்பல ஆசனங்களை விவரிக்கின்றன. மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), மகரம் (முதலை), தனுசு(வில்), பச்சிமோத்தானம் (பின்பாகம் மேல் எழுதல்), மயூரம்(மயில்), மண்டூகம்(தவளை), மற்கடம் (குரங்கு), ஏகபாதம் (ஒற்றைக்கால்), சிரசு (தலை), அலம்(கலப்பை), நௌகம் (ஓடம்) சர்வாங்கம் (முழுஉடம்பு), சவம்(பிணம்) முதலிய நிலையில் பற்பல ஆசனங்களை அவை எடுத்துக் கூறும். அவை யாவும் இங்குக் கூறிய எட்டுவகைப் பெரும் பிரிவுகளின் கீழ் சிறிது சிறிதே வேறுபாட்டுடன் விளங்குவனவாம்.

பிராணாயாமம்

இப்பகுதி திருமந்திர நூலின் நாயகம் எனலாம். காற்று(மூச்சு)ப் பயிற்சியின் நிலைகள், பயன்கள் முதலிய பல செய்திகளை இங்கு உலகம் உய்யத் தருகின்றார் நாயனார். இப்பகுதியில் உள்ளங்கை நெல்லிக்கனி

போல் எளிய பாடல்கள் மிகக் குறைவு; பலாப் பழ முட்பாடல்கள் ஆகிய *பரிபாஷை*ப்பாடல்கள் மிகுதி.

பிராணாயாமம் மூன்று பகுதியினை உடையது. அவை பூரகம், கும்பகம், இரேசகம் என்பன. பூரகமாவது, வெளியில் நிலவும் தூய காற்றினை உடலுள் புகும்படி உயிர்க்கிழவன் (சாதகன்) இழுத்துக் கொள்ளுதலாம். இதன் உயர்ந்த அளவு பதினாறு மாத்திரை. இது, இடை நாடியில் இடமூக்கு வழியாகச் செய்தற்குரியது.

கும்பகம் என்பது, உட்புகுந்த காற்று அங்கேயே அடங்கி நிற்கும்படி, புறத்தே ஓட ஒட்டாது தடுத்தலாம். இதன் பேரளவு அறுபத்து நான்கு மாத்திரையாம். இரேசகம் என்பது, உள்புகுந்து நின்ற காற்றை வெளியேறும்படி உயிர்க்கிழவன் உந்துதலாம். (Break -in or Inhale; Retatin; Break-out or exhale) இதன் உயர்ந்த அளவு முப்பத்திரண்டு மாத்திரைப் போதாம். இம்மூன்றும் ஒருமுறை (Single cycle) இவ்வளவில் அமைவது ஒரு முழுநிலைப் பிராணாயாமம் ஆகும்.

பொறிகள் ஐந்தும் உடம்பில் தங்கியிருக்க, அவற்றை உயிர்க்கிழவன் தலைவனாய் இருந்து ஆள்கின்றான். அவன் உலாப் போதற்குரிய குதிரைதான் மூச்சுக்காற்று, பொறிகளை அடக்கி ஆளும் வல்லமை கொண்டவர்க்கு, அக்குதிரை அடங்கி நீண்ட நாள் பணி செய்யும்; பொறிபுலன்களில் அடக்கம் இல்லாதவரைக் கீழே வீழ்த்திவிட்டு, அக்குதிரை தான் நீங்கும்.

அந்த மூச்சுக் காற்று, இடைகலை, பிங்கலை என்ற இரு நாடிகளின் வழியே இரு கூறாக இயங்கும். இடைகலை நாடி என்பது வலக்கால் பெருவிரலிலும் பிங்கலை நாடி, இடதுகால் பெருவிரலிலும் தொடங்கும்; மேலேறிப் படரும். இவை கொப்பூழில் பிணைந்து, பின் முறையே இடப்பக்கமாகவும் வலப்பக்கமாயும் மாறி முதுகு, பிடரி, தலை வழியே சென்று மூக்கின் இட, வலது துளைகளில் முடிவுபெறும்.

ஆசிரியன் வாயிலாக, நேர்முகப் பயிற்சி பெற்று, பிராணாயாமம் செய்து வெற்றி பெற்றார் எய்தும் பயன்கள் ஏராளம்! தாராளம்! கோடி கொடுத்தும் விலைக்குக் கொள்முதல் செய்ய முடியாத அருமை உடையன அவை.

1. *தானே களிதரும்- பேரின்பம் கூட்டும்* (3-4-2)
துள்ளி நடக்கலாம் , சோம்பல் தவிர வைக்கும்

2. பல்லாண்டு வயது சென்ற பழம் (கிழம்) ஆனாலும்,
பளிங்கு போல் இளைய அழகிய வடிவம் (உடல்) கிடைக்கும்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம் (3-4-6)

3. *காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்*
கூற்றை உதைக்கும் குறியது வாமே (3-4-7)
கூற்றுவனை வெல்லும் இறுதிப் பயனும் எய்தல் இயலும்

4. இப்பிறவிலேயே, இவ்வுடல் வாழ்வின் இடையில்
சிவபிரான் திருவருளை முழுமையாக அடையலாம்.
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே (3-4-8)

5. உடம்பு, பொன் போல் ஒளிகொண்டு துலங்கிப் பொலியும்; உடம்பில் தோன்றிய உரோமங்கள் கால முதிர்வால் நரை எய்தாமல், கறுக்கக் காணலாம். யோகியின் நெஞ்சில் இடம் பெற்ற பரம்பொருளின் சோதிப் பிழம்பு, அங்கேயே சிக்கெனச் செறியும்; நீங்காது நிற்கும்.

உறுப்புச் சிவக்கும்; உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே (3-4-12)

இப்பகுதி முழுவதும் ஒரு அறிவியல் சுரங்கம், உடற் கூற்று மருத்துவம் உணராத பேரறிவுப் பேழை. இங்குக் கூறிய செய்திகள் அறிவியற் கண்டுபிடிப்புகளுடன் ஒத்திசைந்து நடப்பதாக ஆய்வாளர்கள் விதந்து ஓதி வியப்புறுகின்றனர்.

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன் (3-4-1)
ஆரியன், அல்லன் குதிரை இரண்டுள (3-4-2)
கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர் (3-4-13)

என்பனவாகிய மறைபொருள் (பரிபாஷை) பாடல்கள், நமக்கு வழங்கும் அறிவுரைகளின் வழி, திருமூல நாயனார் நம்மைக் கடைத்தேற்றி, வாழ்நாள் நீடும் வழியினைக் கூறியுள்ள பெருங்கருணைக்கு என்ன கைம் மாறுடையோம்? வியந்து வணங்கி பின்பற்ற முயல்வோம்; உலகம் முழுமைக்கும் எடுத்துரைத்து நெறிப்படுத்த முனைவோம்.

இவ்வுலகில் வாழும் மனிதர்களின் தூல உடம்பு (Physical body) - பருஉடம்பு ஒரு அரங்கம்(hall- theatre) போல்வது. உயிர் இயக்கமாகிய பிராண வாயு (மூச்சுக் காற்று) இரு மூக்கு வழியாக இயங்குவது. ஆடல் மகளிர் இருவர் ஆட்டத்தை ஒத்தது. இவ்வாறான ஒரு உருவகப் புனைவினால், வாழ்நாள் நீட்டிக்கும். பிராணாயாமம் என்பது ஒரு அறிவியல் - கணித அடிப்படைக் கோட்பாடு (scientific formula) என்று

காட்டும் திருமந்திரப் பாடல் ஒப்பதும் மிக்கதும் இல்லாத உயர்தனிப்பாடல் என்னலாம்.

மூச்சுக் காற்று, உடலில் இருந்து வெளியேறும்போது, இயல்பாக, பன்னிரண்டு அங்குல அளவாகும். மீட்டும் அது உட்புகுங்கால், முன் சென்ற அதே அளவில் அமையாது எட்டு அங்குல அளவே புகும். இது யோக நூல் வரையறை, வெளிச்சென்ற காற்றில் மூன்றில் இரண்டு பங்கே மீளவும் உட்புகுகின்றதாக, மூன்றில் ஒரு பங்கு அதாவது நான்கு அங்குல அளவு இழப்பாகின்றது. இவ் விழப்பினால் நாளும் வாழ்நாள் எல்லை குறைந்து கொண்டே வருகின்றது. அவ்விழப்பு நேராமல், பிராணாயாமப் பயிற்சி மேற்கொண்டால், வாழ்நாள் இழப்புக் குறைக்கப் பெறும். வாழ்வு நீடும்.

நிறைவுரை

பிறவாமை வேண்டும்; பிறந்து விட்டால் இறவாது இருக்க மருந்துண்டு என்று பட்டினத்தடிகள் பேசுவார். பின்னால் வந்த வடலூர் வள்ளலாரும் இணையான சிந்தனைகளைக் கூறி, *மரணமிலாப் பெருவாழ்வு* என்ற கோட்பாட்டினையும் தூல உடம்பு பொன் உடம்பாதல் என்ற நெறிமுறையினையும் பேசினார்.

மனித உடல், இறைவன் வழங்கிய கொடை, உடல் நன்றாய் இருந்தால் தான், உடலுள், உள்ளத்துள் உறைந்திருக்கும் சோதியாம் இறைக் கூற்றைப் பேண, ஓம்ப, உணர முடியும். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து, உடம்பை வளர்த்து, உயிரையும் வளர்த்தல் வேண்டும். இது திருமூலர் அறிவுரை.

இவை யாவற்றையும் சரிவிகித கலவையாக அசை போட்டுச் சுவைத்துப் பார்த்தால், இவை, பிறவியின் பயனாக அமைதல் என்பது முயற்சியுடைய யாருக்கும் கைகூடும்; அதற்கு ஒருவர் துறவியாக இருக்க வேண்டியதில்லை என்று தெளியலாம். அவ்வாறான பிறவிப் பயன் பெறும் முயற்சியின் பெரிய நிலை யோகப் பயிற்சியாகும். அதற்கு ஒரு நடைமுறை விளக்கம் (practical guide) என்ற நிலையில், அறிவியல் பூர்வமான விளக்கங்களுடன் (scientific reasoning) தான் பெற்ற பேரின்பச் செய்திகளை *கைம் மாறு கருதாத வான்மழை மேகம்* போல் தந்து போனது திருமந்திர நூல். அதன் இன்றியாமையாத பகுதியின் ஒரு சுருக்கத்தை ஈண்டு வழங்கியுள்ளேன். இதுவே நுழைவாயில்; இதன் வழி, *மூலன் உரை செய்த மூவாயிரம்* கற்றார், கற்றபின் நிற்க முயல்வார், மனிதரில் தலையாய மனிதரே!

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

28. பிரத்தியாகாரம், தாரணை, தியானம்

திருமந்திரச் செல்வர். ட்டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்(ஓய்வு) தமிழ்நாடு அரசு, சென்னை.

சைவப் பெருமக்களால் பத்தாம் திருமுறை எனப் போற்றி வணங்கப்படும் திருமந்திர மாலை திருமூலரால் அருளிச் செய்யப்பட்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருமூலரை சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் 'நம்பிரான் மூலன்' என்று புகழ்கின்றார். பிரான் என்ற சொல்லை சுந்தர மூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தருக்கும், திருமூலருக்கும் மட்டும் உபயோகித்துள்ளது சிந்திக்கத்தக்கது. திருமந்திரம், சைவத்தின் தோத்திரப் பகுதியாக திருமுறைகளிலே ஒன்றாக வைக்கப்பட்டிருந்தாலும், சைவ சமயத்தின் சாத்திரக் கருத்துக்களையும், தத்துவங்களையும் நிரம்பக் கொண்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகமென்றும், சாத்திரத்திற்குத் திருமந்திரமென்றும் வள்ளல்பெருமான் கூறிய உண்மை சிந்தித்து மகிழத்தக்கது.

திருமூலர்பெருமானை *நான்முறை யோகிகளில் ஒருவர்* என்று சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுகின்றார். திருமூலர் கயிலை மலையில் நந்தி தேவனிடமிருந்து வேதங்களையும், ஆகமங்களையும் கற்றுணர்ந்தார். இதை அகச்சான்றாக திருமந்திரத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம். அவற்றின் மையப் பொருள் சிவபெருமானே என்பது தெளிவு. சிவபெருமானை முழுமுதல் கடவுளாகக் கொண்டு, சிவத்தை, மனதில் வைத்து வழிபடு கரணங்களையெல்லாம் ஒடுக்கி, சிவத்துடன் ஒன்றிப்போய், சிவமாம் தன்மை பெறுவதே *நான்மறை யோகம்* எனக் கொள்ளலாம். இதையே,

பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறியாஞ் சிவமாநெறிகூடும்
ஒருநெறி

என்று திருமூலர் வேதச் சிறப்பு என்கிற பகுதியில் கூறுகிறார்.

திருமூலர் பெருமான் மேற்கொண்ட யோக நெறி, அவருக்கு *அகத்தியம்* என்கிற அனுபவத்தைக் கொடுத்திருக்கின்றது. அகத்திலே (உள்ளத்திலே) சிவப்பரம்பொருளை சோதியாகக் காண்பதும், அந்த சோதியில், ஆன்ம சோதியைச் சேர்ப்பதும், சிவ சோதி, மேலெழும்பி உடலையும், உயிரையும் தன்னுட்கொண்டு வளருவதும் அகத்தியமாகிய யோக அனுபவமெனக்

கொள்ளலாம். (இரண்டாம் தந்திரத்தில் *அகத்தியம்* என்கிற பகுதியைக் காண்க)

எனவே, திருமந்திரத்தில் திருமூலர் கூறும் யோகக் கருத்துக்கள் உயிரானது சிவப்பரம்பொருளோடு இணைவது பற்றியே ஆகும். தனிப் பொருட்கள் இணையும்போது, ஒரு கலத்தல் நிலை ஏற்படுகிறது. திருமந்திரத்தில், முதல் தந்திரத்தில், உபதேசப் பகுதியில், வெளியில் வெளிபோய் விரவுதல், அளியில் அளிபோய் அடங்குதல், ஒளியில் ஒளி போய் ஒடுங்குதல் ஆகிய மூன்று விதமான கலத்தல் நிலைகளைப் பற்றி திருமூலர் குறிப்பிடுகின்றார். இவற்றையெல்லாம் விவரிக்கின் பெருகும்.

திருமந்திரத்தில் மூன்றாம் தந்திரத்தில் பல யோக நெறிகள் விளக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பொதுவாக திருமந்திரம் ஒரு யோக நூல் என்று கொள்வது வழக்கம். இருப்பினும் மலத்தால் கட்டப்பட்ட உயிர், பிறப்பு தோறும் வினைகளைக் கழித்தும், மாயையை நீக்கியும், மூலமாகிய ஆணவத்தைத் தேய்த்தும், படிநிலை வளர்ச்சி பெற்று, திருவருள் துணையுடன் சிவஞானம் பெற்று, சிவஞானமேயாகி சிவானந்தத்தில் திளைத்து நிற்பதே சிவயோகமாகும் என்பதைப் பற்றிய தத்துவங்களும், நடைமுறைகளும், திருமந்திரம் முழுவதிலும் காணப்படுவதால், திருமந்திரச் செம்பொருளை சிவயோகம் என்று சொல்வது பொருந்தும். சிவயோகம் என்பது நெறி, சிவஞானம் என்பது அனுபவம் என்கிற வகையில் ஆழ்ந்த கருத்துக்களைத் திருமந்திர மாலையில் கண்டு மகிழலாம்.

மூன்றாம் தந்திரத்தில் பலவகைப்பட்ட யோக நெறிகளைப் பற்றி விளக்கங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைவது அட்டாங்க யோகம் எனப்படும். எட்டுப் படிகளைக் கொண்ட யோகம். யோகத்தில் ஒரு பொருளுடன் ஒன்றிப் போகும் அனுபவம் எட்டாம் படியான சமாதியில் கிட்டுகிறது. சமாதி நிலை அனுபவத்திற்கு வழிவகுப்பது. இந்த அட்டாங்க யோக நெறியை திருமூலரும்,

அறநெறி இந்நெறி என்னாதே அட்டாங்கத்
தன்னெறி சென்று சமாதியிலே நின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்
புன்னெறி ஆகத்திற் போக்கில்லை யாகுமே

என்கிறார்.

இயமம், நியமம், ஆதனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவை அட்டாங்க நெறியின் படிகள்.

பதஞ்சலி முனிவர் அருளிச் செய்த யோக சூத்திரம் என்கிற நூல் அட்டாங்க நெறியை உலகுக்கு அறிமுகம் செய்தது. திருமூலர் பெருமான், நந்தி தேவனிடம் ஆகமம் பயின்றபோது தன்னுடன் ஏழு சிபிகள் கல்வி கற்றனரென்றும், அவர்களில் பதஞ்சலி ஒருவர் என்றும் குறிப்பிடுகிறார். யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலியும் இவரும் ஒருவர்தானா என்பது பற்றி சரியான விவரம் காணப்படவில்லை.

திருமூலரும், பதஞ்சலி முனிவரும் அட்டாங்க யோகத்தைப் பற்றி விளக்கியிருந்தாலும், அடைய வேண்டிய சமாதி நிலையில் குறிக்கோள் வெவ்வேறாகும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பதஞ்சலியாரின் விளக்கப்படி, சமாதி நிலையில் புருடன் எனப்படும் பிரகிருதி என்கிற இயற்கைத் தத்துவத்திலிருந்து வேறுபட்டுத் தனித்து நிற்பதே குறிக்கோளாகும். இது கேவல சமாதி எனப்படும்.

ஆனால், திருமூலரின் அட்டாங்க யோகம் உயிரானது சிவப்பரம்பொருளோடு ஒன்றி இருப்பதையே குறிக்கோளாக வைக்கின்றது. திருமூலர் காட்டும் பாதை சிவப்பரம்பொருளை அடைந்து நிறைவு பெறுவதற்கான சிவயோக நெறியாகும்.

சைவ சமயம், சிவப்பரம்பொருளை உருவ, அருவுருவ, அருவ நிலைகளில் வழிபடும் ஒழுகலாறுகளைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகிறது. அதற்காக நால்வகைத் தவங்களை அமைத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். இவற்றை ஒருசேர தவநெறி என்றும் கூறலாம்.

சிவபெருமானை முதலில் புறத்தே வழிபடுவது, மனத்தால் நினைத்து, வாயால் துதித்து, கரங்களால் வழிபட்டு, உள்ளத் தூய்மையை வளர்ப்பது, பின்னர் தூய்மை பெற்ற உள்ளத்தில் சிவபெருமானை எழுந்தருளச் செய்து வழிபாட்டினை அகத்தே நடத்துதல்; உள்ளத்தைப் புலன்களின் ஆதிக்கத்திலிருந்து நீக்கி, அகமுகமாக உள்ளே எழுந்தருளியிருக்கும் சிவப்பரம்பொருளை நினைந்து, தியானித்து ஒன்றிக் கொள்ளல், அந்த நிலையில் பெறும் அறிவு விளக்கம் உணர்வாகத் தோன்ற, உள்ளத்தில் எழும் பேரானந்தத்தில் திளைத்து நிற்றல் என்பனவெல்லாம் தவநெறியின் கூறுகளாகும்.

அட்டாங்க யோகத்தின் படிகளை மேற்கூறிய தவநெறிகளின் பகுதிகளுடன் இணைத்து அமைக்கலாம். இயமமும், நியமமும் யோகத்தின் சரியையாகும். பிராணாயமும் ஆதனமும் யோகத்தின் கிரியையாகும். பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்தின் யோகமாகும். தியானமும், சமாதியும், யோகத்தின் ஞானமாகும். இவற்றில் இயமம், நியமம், ஆதனம் ஆகிய புறநிலை ஒழுக்கங்கள். பிராணன் பரு உடலுக்கும், நுட்ப உடலுக்கும் பாலமாக அமைவதால் பிராணாயாமம் என்பது, உட்கருவிகளை புலன்களிடமிருந்து பிரித்து, அகமுகமாகச் செலுத்த உதவுகிறது. பிரத்தியாகாரம், தாரணை, தியானம் ஆகியவை அகமுகப் பயிற்சிகள், மனத்தைக் கட்டுப்படுத்தி, ஒருமுகமாக ஒன்ற வேண்டிய பொருள் மீது முழுமையான கவனத்தைச் செலுத்த உதவுகின்றன.

பிரத்தியாகாரம்

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில், பிரத்தியாகாரம் என்ற கட்டத்தில், புலன்களால் பெறப்படும் விஷயானுபவங்களை ஞானேந்திரியங்கள் மனதிற்குள் செலுத்த விடாமல் தடுத்த நிறுத்த வேண்டியுள்ளது. அதுவே பிரத்தியாகாரப் பயிற்சியாகும். சாத்திரங்களில், குறிப்பாக விஞ்ஞான பைரவ தந்திரம் என்கிற நூலில் பலவகைப்பட்ட பிரத்தியாகாரப் பயிற்சிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மனதைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. கண்களை மூடிக் கொண்டால் உலகம் மறைந்து விடப் போவதில்லை. மனம், தான் சார்ந்த பொருளுடன் சேர்ந்து, அந்தப் பொருளேயாகிவிடும். உலகத்துடன் சேரும்போது உலகமாகி விடுகிறது. மனதை பொறி வழியிலிருந்து பிரித்து, அகமுகமாகச் செலுத்த வேண்டுமென்றால், அகத்தே மனத்தைக் காட்டும் அளவுக்கு ஒரு பொருளை வைக்க வேண்டும்.

திருமூலர் பெருமான் இதை அற்புதமாகச் செய்கிறார். பிரத்தியாகாரம் என்கிற பகுதியில் பத்து மந்திரங்களில் மனதை, சூக்கும உடலின் கூறுகளாகிய ஆதாரங்களில் நிறுத்த வேண்டும் என்கிறார். ஆறு ஆதாரங்களைக் கண்டு அங்கே நிற்குமாறு மனதைப் பயில்வித்தால், சிவபெருமானை ஆதாரங்களிடையே கண்டு இருத்தலும் கூடும் என்பார்.

மூலதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவை ஆறு ஆதாரங்கள். அவற்றிற்கு மேல், தலையில் இருப்பது ஆயிர இதழ் தாமரைத் தானம். பிறகு பன்னிரண்டு விரற்கடை இடைவெளி அதற்கு மேல் மீதானம் அல்லது மேல்தானமாகிய பெருவெளி,

சிவபெருமானை அங்கே அம்மையுடன் கண்டு, திருவடி நிழலில் அமரும் இடம், இவற்றைப் பற்றி யோக நூல்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

திருமூலர் பெருமானும், இவற்றைப் பற்றிப் பேசுகிறார். ஒவ்வொரு இடத்திலும் மனதை நிறுத்தி, அங்குள்ள ஆதார தேவதைகளை தியானிப்பதன் தேவையை வலியுறுத்துகிறார். அத்துடன் ஒவ்வொரு ஆதாரத்திலுமுள்ள இதழ்கள், தூய எழுத்துக்களுக்கு இருப்பிடம் என்பதைத் தெரிந்து கொண்டு, அந்த ஆதாரத்தின் பீச மந்திரத்தை தியானிப்பதையும், பயிற்சியாக மேற்கொள்ளச் சொல்வார்.

அவ்வாறு செய்யும்போது, சுவாதிட்டானத்தில் ஒரு பேரொளி மின்னல் போல் தோன்றும் என்றும், ஞான நாட்டம் உள்ளவர்கள் அந்த பேரொளியை புருவ நடுவில் நின்று தியானிக்க வேண்டும் என்றும் திருமூலர் சொல்வார். அப்படிச் செய்தால் இறைவனே சாதகனுடன் இரண்டறக் கலந்து நிற்பான்.

உருவிடும் சோதியை உள்க வல்லார்க்குக்
கருவிடும் சோதி கலந்து நின்றானே

கண்ட (கழுத்து)ப் பகுதியில் உள்ள ஆதாரம் விசுத்தி எனப்படும். பொருளை விட்டு அருளை நாடுபவர்கள் அதற்கு மேல் செல்லவேண்டும். அதற்கு பிராணாயாமப் பயிற்சி வேண்டும் என்கிறார். திருமூலர், எருவாயை அடைக்க வேண்டும். கும்பகம் செய்து, பிராண, அபானனை மேல்நோக்கிச் செலுத்த வேண்டும். புருவ மையத்தில் அகமுகப் பார்வையைச் செலுத்த வேண்டும். காலத்தை வெல்வதற்கு இதுவே முறை என்கிறார்.

மூலத் துவாரத்தை மொக்கர மிட்டிரு
மேலைத் துவாரத்தின்மேல் மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே - திருமந்திரம்

மனதை ஒடுக்கி, கருவி கரணங்களைப் பிரித்து, ஆன்ம அறிவை உணர்ந்து பின்னர் அதையும் நீக்கி, இறைவனைச் சிந்தித்து, அன்புடன் அங்கே அழுத்திக் கிடத்தலும் ஆகிய பயன்கள் பிரத்தியாகாரத்தால் கிடைக்கின்றன என்று திருமந்திரம் சொல்கிறது.

ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்

களைத்துணர் உன்னால் கரைதல் உள்நோக்கல்
பிரத்தி யாகாரப் பெருமைய தாமே. -திருமந்திரம்

தாரணை

தாரணையில் ஒரு முக்கியமான கட்டத்தை நெருங்குகின்றோம். பிரத்தியாகாரத்தில் மனதை புலன்கள் புறக்கருவிகள் போன்றவற்றிலிருந்து விடுவித்து, அகமுகமாக நிற்பதற்காக, ஆதாரங்களை உற்று நோக்கும் முயற்சியில் இறங்குகின்றோம். மனம் அவற்றில் நிற்க வேண்டும். மனம் அப்படி நிற்காமல் புலன்களால் இழுக்கப்படலாம். மனமே, சதா, தன்னிசையாக இயங்கிக் கொண்டிருப்பதையும் பார்க்கின்றோம். பழைய நினைவுகள், புதிய எதிர்பார்ப்புகள், பல வாசனைகள், குணங்களின் தாக்கம் போன்றவை மனதை அங்குமிங்கும் ஓட வைக்கின்றன. இதை மாற்றி மனதை, ஆதாரங்களில் தொடர்ந்து ஊன்றி நிற்கச் செய்வது தாரணையாகும். தாரணை தியானத்திற்குத் திறவு கோலாக அமைகிறது.

தாரணையின் சிறப்பு பற்றி திருமூலர், அந்தப் பகுதியில் பத்து மந்திரங்களை அருளிச் செய்துள்ளார். தாரணைக்கும் பிராணனை கட்டுப்படுத்துதல் தேவைப்படுகிறது. அத்துடன் கவனத்தை விசுத்தி (கண்டப்பகுதி)க்கு மேல் கொண்டு போய் ஆக்ஞையில் வைக்க வேண்டும். இதை ஆக்ஞா தாரணை என்று சொல்லுவார்கள்.

இதைப் பின்வருமாறு திருமூலர் விளக்குகிறார்.

மனதை கோணாதபடி, புலன்களிடமிருந்து விடுத்து, ஒரு வழியில் செல்வதால், மீண்டும் புறத்தே செல்லாதவாறு தடுத்து நிறுத்தி, பிராணனை சுழு முனை நாடி வழியாகச் செலுத்தி, ஐம்பொறிகள் செயலற்று இருக்கும் நிலைக்கு வர வேண்டும். இதைத் திருமூலர், காணாக்கண் கேளாச் செவி என்பார். அவ்வகையில் புருவ மையத்தில் மனதை வைத்து இருப்பவர்களுக்கு பிறவி வரும் வழியை அடைக்கலாம்.

கோணா மனத்தைக் குறிகொண்டு கீழ்கட்டி
வீணா தண்டூடே வெளியுறத்தான் நோக்கிக்
காணாக்கண் கேளாச்செவியென் றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே -திருமந்திரம்

திருமூலருடைய உபதேசத்தில் தாரணைப் பயிற்சிக்கு பிராணாயாமம் இன்றியமையாதது. மனத்தை ஆதாரங்களில் நிறுத்த வேண்டும். எருவாயைக் கட்ட வேண்டும். அதாவது இறுக்கி வைத்துக் கொள்ள

வேண்டும். இதுவே மூலபந்தம் என்பது. பிராணனை மேல் எழுப்ப வேண்டும். இடை, பிங்கலை என்னும் இரண்டு நாடிகள் வழியாக பிராணனைச் செலுத்தாது, சுழு முனை நாடி வழியே செலுத்த வேண்டும். அதன் மீது மனதைச் செலுத்தி, வேறு எங்கும் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆதாரத்திலும் மனதை ஊன்றி அங்குள்ள தெய்வத்தை வழிபட்டு, மடையில் நிற்கும் கொக்குபோல் காத்திருப்பவர்களுக்கு ஆதார யோகம் கைகூடும்.

கடை வாசலைக் கட்டி காலை எழுப்பி
இடை வாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயில் கொக்கு போல் வந்தித்திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலு மாமே -திருமந்திரம்

தாரணையை ஆதாரப் பயிற்சி வழியாக அடைவது போலவே, தத்துவங்களை ஆராய்ந்து, அவற்றை நீக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துவதன் மூலமும் மனதை புலன்களிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம் என்பார் திருமூல நாயனார். இதற்கு, தூல தேகம், ஐம்பூதங்களால் ஆனது என்றும், அவை சூக்கும நிலையில் தன்மாத்திரைகளாக உள்ளன என்றும், மனம், புத்தி ஆகிய சூக்கும உட்கருவிகள் சித்தத்தை மூலமாகப் பெற்றிருக்கின்றன என்றும் தெரிந்து கொண்டு கீழுள்ள கருவிகளை மேலுள்ள காரண கருவிகளில் ஒடுக்கிக் கொள்வதே தாரணையாகுமென்றும், இதை மேற்கொள்வதன் வழியாக தத்துவ ஞானம் பெற்று, இறைவனோடு ஒன்றியிருத்தலே தாரணையின் சிறப்பான இயல்பு என்றும் திருமூலர் விளக்குகிறார்.

அரித்த வுடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம்பூதஞ் சத்தாதியில் போந்து
தெரிந்த மனாதி சத்தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே -திருமந்திரம்

தியானம்

யோக நெறியைக் கடைப்பிடித்து, சிவத்துடன் ஒன்ற வேண்டுமென்ற விருப்பம் எல்லோருக்கும் இயல்பாக வந்து விடுவதில்லை. பக்குவான்மாக்களே அந்த முயற்சியில் இறங்கும். முயற்சி சாதனைக்கு வழிகோலும் என்பது உண்மைதான். முயற்சியின் விளைவாக ஆதாரங்களில் மனதை நிறுத்த இயலும். ஆனால் அதை முடிந்த முடிவாகக் கொள்ளக் கூடாது. அதற்கு மேலும் செல்ல திருவருளை நாட வேண்டும்.

சிவபெருமானின் திருவடி ஞானத்தைப் பற்றிய விளக்கங்களை திருவருள் துணையுடன் பெற வேண்டும். அந்த ஞானமேயாகி விட வேண்டும். அந்த நிலையே சிவானந்த நிலையாகும். சத்திநிபாதம் தீவிரமடைய இந்த குறிக்கோள் கைகூடும். அதுவே சமாதி நிலையாகும். சமாதி நிலைக்கான துவக்கக் கட்டமாக இருப்பது தியானமாகும். இங்கே இணைதல் அனுபவம் துவக்கப் பெறுகிறது. அதனால் இதை தியான யோகம் என்பார்கள்.

பதஞ்சலியார் யோக சூத்திரத்தில், தியானம் என்பது ஒரு பொருளை இடைவிடாது சிந்திப்பதன் மூலம் மனம் புலன்களிலிருந்து முழுமையாக விடுபட்டு, வேறு எந்த எண்ணமுமில்லாமல் அப்பொருளிலேயே நிற்பது என்றார்.

திருமூலர் தியானத்தை ஒரு ஒழுக்கமாக வைத்து, சிவப்பரம்பொருளை இடைவிடாது சிந்தித்து நிற்பதேயாகும் என்று கூறி, சிவத்தியானம் பற்றி பத்தொன்பது மந்திரங்களில் பேசுகிறார். குறிப்பாக மனதை, உடலோடும் உலகத்துடனும் கலக்கின்ற ஆதாரங்களை விட்டு, புருவ மையத்திற்கு வந்து அகமுகமாக அங்கே காணப்படும் வெளியில் நிற்பது இந்த தியானத்தின் இயல்பாகும். அந்த வெளியில் தோன்றும் மின்னல் போன்ற ஒளியினை தரிசித்து, அதில் மனதை நிலை பெறச் செய்ய வேண்டும்.

ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்து கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு பாயவெளி கண்டிட வோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே
- திருமந்திரம்

தியானம் என்பது மனதை உயர்த்தி, பரம்பொருள் சிந்தனையை இடைவிடாமல் மேற்கொள்வதேயாகும். உடலுடன் இணைந்துள்ள உணர்ச்சிகளைத் தன்வசப்படுத்த வேண்டும். சினத்தைத் தவிர்க்க வேண்டும். உள்ளத்து விளக்கை மேல்மாடத்தில் ஏற்றி வைக்க வேண்டும். கீழே வைக்கப்பட்ட விளக்குகளின் திரியையும் தூண்டி விட்டு, உள்ளம் முழுவதும் சிவசிந்தனையாகிய சோதியால் ஒளிபடரச் செய்ய வேண்டும்.

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே
- திருமந்திரம்.

அத்தகைய ஆக்ஞை தியானத்தை சாதகன் தீவிரமாக மேற்கொள்ளும் போது துன்பம், இறப்பு, கவலை போன்றவை இராது. உலகப்

பொருள்களைத் தேடி ஓட வேண்டுமென்பதில்லை. அவனே சிவமாம் தன்மையைப் பெறும் பேறும் வாய்க்கலாம்.

ஆக்ஞை தியானத்தில் நிற்பவர்கள் மணி ஓசை, கடல் அலை ஓசை, யானை எழுப்பும் ஒலி, சங்க நாதம் போன்றவைகளைக் கேட்கலாம் என்பார் திருமூலர்.

யோக நெறியில் தியான சாதனை முக்கியமானது. இது யோகத்தின் யோகம் என விளங்குகிறது. தியானத்தில் ஆதார யோக தியானம், நிராதார யோக தியானம் என்று இரண்டாக திருமூலர் பல கட்டங்களில் விளக்குகிறார். சிவத்தியானம் சாதனை முழுமையான திருவருளுக்கு ஆளாக்குகிறது.

யோகத்தை முறைப்படி பயில வேண்டும். முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து, அறிவு உருவாகி மாயையை நீக்கி, இறைவனுடைய திருவருளால், சிவபெருமானின் தன்மையைத் தானும் பெற்று, சிவஞானத்தையும் அடையலாம் என்கிறார் திருமூலர்.

அறிவாய் அசத்தென்னும் ஆறாத கன்று
செறிவான மாயை சிதைத் தருளாலே
பிறியாத பேரருளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே - திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்

✽✽✽✽✽

29. சமாதி

வழக்கறிஞர். க. ஞானசேகரன், பி.ஏ.பி.எல்.,
சேலம்

சமாதி யாவது உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல்:

சமாதி யமாதியிற்றான் செல்லக் கூடும்
சமாதி யமாதியிற்றானெட்டுச் சித்தி
சமாதி யமாதியில் தங்கினோர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படும் தானே (சமாதி - 618)

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டமாடி
குருடும் குருடும் குழி விழுமாறே!

நமது குருட்டினை நீக்கிய அனைத்து குரு மகா தெய்வங்களைப் போற்றி வாழ்த்துவோமாக. கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்க!

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமிலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச்சோதியும் தோன்றிடுந் தானே சமாதி- 619

விளக்கம்

விந்து-ஒளி, சந்தி, நாதம்-ஒலி. சிவன் தோன்றுதல் என்பது, சமாதி நிலையில் ஒருவர் தன்னை தகுதி உள்ளவராக மாற்றி தன்னை அறிந்து கொண்டால் அழகிய சோதியைக் காணலாம் என்பதே உண்மை நிலையாகும்.

உலகை உய்விக்க உதித்த உத்தமர்கள் அனேகர். அவரவர் மாணவர்கள் அவ்வழி நின்று அவரவர்கள் நெறியை உலகம் முழுவதும் பரப்பி வருகிறார்கள் என்பது இன்று அனைவரும் அறிந்த ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால் திருமந்திரம் என்னும் தெய்வ நூல் காலம் கடந்தது. இத் தெய்வ நூலை இயற்றிய திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் என்பது கற்றோர் அனைவரும் அறிந்ததே. திருமூலர் சிறந்த ஞானியாக விளங்கியவர். ஞானம் முதலில் நான்கு நெறியினைத் தெள்ளு தீந்தமிழால் அருளிச் செய்த சான்றோர்களில் தலையாயவர்.

சமய குரவர் நால்வரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், கூறும் பொழுது, 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டுகின்றார்.

திருமூலர் வாழ்ந்த காலம் சரியாக தெரியவில்லை என்றாலும், சிறந்த முறையில் திருமந்திரத்தை ஆராய்ந்து பார்த்தவர்கள் திருமூலர் வாழ்ந்த காலமானது கி.பி மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஐந்தாவது நூற்றாண்டுக்குள் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறார்கள் என்றும் திருமூலர் பலநூறு ஆண்டுகள் வாழ்ந்து வந்துள்ளார் என்பதற்கு அவரது பாடல் அடிகளால் புலனாகிறது.

தப்பில்லா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே -திருமந்திரம்

மேலும்,

மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது

என்ற திருமூலர் அருளிய பாடலிலேயே 3000 ஆயிரம் பாடல்களை கொண்டது புலனாகும். திருமந்திரம் சைவத்திருமுறை பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாகத் தொகுத்துள்ளனர். திருமூலர் அனைத்து அறநெறிகளைப் பற்றியும் தொகுத்துள்ளார். கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, அன்புடைமை ஆகிய அறங்களைப் பற்றியும், அடுத்து சரீர சித்தி உபாயத்தை கூறும் பகுதி திருமந்திரத்தில் மிகவும் சிறப்புடையதாகும்.

சமாதி என்னும் நிலைக்கு நம் தேகம் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வரும்பொழுது நம் தேகநிலை முற்றிலும் சுத்த தேகநிலை பெற்றிடும். அந்த நிலைதான் சமாதி நிலை என அறிய வேண்டும். இதை திருமந்திரத்தில்,

சமாதிய மாதியிற்றான் செல்லக் கூடும்
சமாதிய மாதியிற்றானெட்டுச் சித்தி
சமாதிய மாதியில் தங்கினோர்க் கன்றே
சமாதிய மாதி தலைப்படும் தானே

இயமம் முதலியவைகளைக் கடைபிடித்து சமாதி வரை செல்லும் முறையாக எட்டுச் சித்திகளையும் அல்லது எட்டு உறுப்புகளையும் ஒரே நிலையில் காலம் தவறாமல் தன் நிலையில் சயனம் செய்து வருபவர்களுக்கு நிச்சயம் சமாதி நிலை கைகூடும் என்பதே உண்மை நிலையாகும்.

திருமூலர் தனது திருமந்திரத்தில் 619 பாடலில் இன்னும் ஒரு நிலை உயர்ந்து வெளிப்படையான ஆன்ம கருத்தை தெள்ளத் தெளிவாக காட்டுகிறார்.

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமி லாத அறிவின் அரும் பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடுந் தானே

விந்து- ஒளி, சக்தி
நாதம் - ஒளி

ஜீவ சக்தியான ஆன்மா தோன்றுதல் என்பது முன் சீவனில் இருந்து சிவம் தகுதி வந்தபின் வெளிப்படுதல் என்பது தெளிவாகிறது. அதாவது இந்த நிலை ஏற்பட்டு சமாதிநிலை தன்னகத்தே உள்முகமாக ஜீவனை ஏற்றி கொண்டு சமாதி நிலையில் அழகிய சோதியை காணலாம் என்பது நம் தேகம் பரிசுத்த தேகமாக மாறி ஆன்ம சோதியை காணலாம்.

பிறவி பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்ற குறள் காண்க.

நமது புனித பூமியில் ஆங்காங்கு அவ்வப்போது தோன்றிய இயற்கை ஞானியர்களான ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், பல்லாயிரம் வருடங்கள் ஒரே தேகத்தில் வாழ்ந்ததாக கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், கிரந்தங்களின் கவி காவியங்கள் விளக்குகின்றன. இதற்கு மேலாக தந்தாதிரேயர், அத்திரி, மகரிஷிகள், பதஞ்சலி, வியாசகர், அகத்தியர், திருமூலர், காளாங்கி நாதர் மற்றும் பற்பல சித்தர்கள் மரணமின்றி, பிணியின்றி வாழ்ந்து காட்டிய மார்க்கமே ஆன்ம யோகமாகும். ஜீவ அங்க சமாதியில் நீண்ட நெடுங்காலம் காயம் அழியாமல் காப்பது சாகா அமுதமாகிய சாகா சைவம் யோகியர்களுக்கே உரியதாகும். அவர்கள் ஈண்டு இயம்பிய நன்னெறிகள் தாம் அறநெறிகள். இறைநெறிகளாக திருமந்திரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், திருவருட்பா இவையெல்லாம் மனிதனை தெய்வமாக்கும் ஆத்மஞான அறநெறிகளாகும். எனவே ஆன்ம நேயர்களே மன்மார்க்கத்தில் பன்மார்க்கம், பக்திமார்க்கம், ஞான மார்க்கம், சன்மார்க்கம் இவையாவும் பரம்பொருளின் அடிச்சுவடேயாகும். ஆனால் ஆத்ம நிலையில் நினைவை நிறுத்தி தரிசிக்கும் போது உள்ளொளி ஓங்கிட, உயிர் ஒளி விளங்கி..

வெள்ளோளி காட்டும் திருமந்திர ஒளியே அருட்பெரும் சோதியே நமையாளுகும் ஆத்ம சோதியாகும்.

ஒரு மனிதனுக்கு தன்னைப் பற்றிய ஞானம் வேண்டும். தன்னைப் பற்றிய ஞானம் இல்லாவிட்டால் தன் உடலில் உயிரைப்பற்றி அறியாதபோது உலகியலைப் பற்றி எங்ஙனம் அறியக்கூடும்? நாம் உயிரைப் பற்றி அறியும் வரை எண்ணற்ற பிறவிகள் எடுக்க நேரிடும். நான் யார் என்ற வினாவை எடுத்துக் கொள்ளுங்கள். அது அணு முதல் அண்டம் வரை விளக்கம் அளிக்கும். தன்னை அறியும் அறிவைப் பெறுவதுதான் திருமந்திர தவயோக சமாதிநிலை அறியும் அறிவைப் பெறுவோமாக.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. -திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

30. கரிமா, பிரகாமியம், சிவத்துவம், வசித்துவம்

கலைமாமணி, டாக்டர். இளங்கம்பன்
பழனி

தமிழ்ச் சித்தர்களின் வரலாற்றில் முதன்மைச் சித்தராக உள்ளவரும், மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவருமான திருமூலர் அருளிய திருமந்திரம் பொன்னூலாகப் போற்றப் படுகின்ற நன்னூலாகும். திருமூலரின் தவ அனுபவமும் சிவ அனுபவமும் மிக்குயர்ந்தவை என்று சொல்லத் தேவையில்லை.

திருமந்திரம் என்ற இந்நூலை நம் முன்னோர்கள் திருமந்திரமாலை என்றும் அழைத்து வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நம் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக அமைந்ததே தனிச் சிறப்பாகும்.

திருமந்திரத்தைத் தமிழ்ச் சித்தர்களின் மெய்யனுபவ வெளிப்பாட்டு நூலாகவே கொள்ள வேண்டும். சித்தர்கள் என்பவர்கள் நம்மைப் போல் அழிந்து விடுபவர்கள் அல்லர். நிலமிசை நீடு வாழும் பேற்றை, வெற்றியாகப் பெற்றவர்கள். ஆம். அவர்கள் அழியா நலம் பெற்ற அமரர்கள். நினைத்ததை நினைத்த வண்ணம் நிறைவேற்றக் கூடியவர்கள். மரணத்தை வென்ற மாண்பு நலம் பெற்றவர்கள். நெருப்பிலும் அழியாத நீர்மை, நிலத்துள் மறையும் ஆற்றலைப் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்களின் ஆற்றலை அளந்துரைத்தல் எளியதன்று. அத்தகைய சித்தர்களின் சிவானுபவத் திட்பத்தை ஒருசேரப் பெற்ற திருமூலர் தவ, சிவ நல மேம்பாட்டுத் துய்ப்பு நலத்தை தம் திருப்பாட்டுக்களால் விளக்குகின்றார். உடலில் பொருந்திய ஆறு ஆதாரங்கள் மூலம் உயிர்ப்பு பயிற்சியால், உயிர்ப்புச் செல்லும் ஓட்ட முறைக்கு உண்மையைக் காண முடியும். அந்த ஆறு ஆதாரங்கள்,

மூலம்	-	*மூலாதாரம்*
தொப்புள்	-	*சுவாதீஸ்டானம்*
மேல் வயிறு	-	*மணிபூரகம்*
நெஞ்சு	-	*அனாகதம்*
மிடறு	-	*விசுத்தி*
நடுப்புருவம்	-	*ஆக்ஞை*

இவைகளின் வழி இவைகளுக்குரிய மந்திரங்களில் தவமாற்றி கண்ட எண்வகைப் பேறுகளையே நம் சித்தர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள். எண்வகைச் சித்தியானது.

அணுவெனச் சிறுத்தல்	-	*அணிமா*
அருமலையாதல்	-	*மகிமா*
காற்றிலும் மென்மையாக்காணுதல்	-	*இலகுமா*
பசும்சுடர்ப் பொன்னாய்ப் பளுவினை ஏற்றல்	-	*கரிமா*
அனைத்தையும் ஆற்றலால் ஆண்டு மகிழ்தல்	-	*பிராப்தி*
அனைத்தையும் தன்வழி வசப்படுத்தல்	-	*வசித்துவம்*
நினைத்த கூட்டில் நேருறப் பாய்தல்	-	*பிரகாமியம்*
விரும்பிய செயலை விரைந்து முடித்தல்	-	*சிவத்துவம்*

இதனையே நம் திருமூலர் எண்பெரும் பேறு என்பதை அட்டமா சித்தி என்று படிமுறையில் விளக்கி உள்ளார்கள். திருமூலர் நோக்கில் கரிமா என்பது விண்ணகத் தன்மையை விளக்குவதாக அமைகின்றது. அகத்தவம் என்று பேசப்படுகின்ற யோகப் பயிற்சியில் காணுகின்ற மின்னலைப் போன்ற ஒளி எழும். அதைக் காணும் பேறு பெற்றவர்களுக்கு இருந்த இடத்தில் இருந்து கொண்டே உலகப்பரப்பு முழுவதையும் பார்க்க முடியும். அத்துடன் புருவ நடுவுக்கு மேல் காணப்படும் ஆயிரம் இதழை உடைய தாமரைப் பூவையும் ஒருங்கு காணலாம். இத்தகைய தவ நலம் வாய்ந்தவர்கள் இடத்தில் காலம் என்பது வெளிப்பட்டுத் தனித்து நிற்கின்றது. கழிகின்ற வாழ்நாள் இவர்களிடத்தில் கழிவதும் இல்லை. இதனையே,

ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பா கின்ற பூவிற் பரப்பவை காணலா
மேனின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே.

இந்த மெய்யுணர்வுச் சித்தர்களுக்கு உயிரானது. புறம் போவதும் இல்லை. அகம் புகுவதும் இல்லை. ஆம். இறப்பும் பிறப்பும் இவர்களுக்கு இல்லாமல் போகின்றது. இவர்களுக்கு முக்குணவழி ஏற்படுகின்ற துன்பமும் முற்றிலும் அகல்வதால் நடு நாடியில் உயிர்ப்பு நிறைந்து விடும். இதனால் ஒளியாவதும் இல்லாமல் போகின்றது. மெய்த்தவ உண்மை அறிவார்க்கே இது பொருந்துகின்றது.

போவ தொன்றில்லை வருவது தானில்லை
சாவ தொன்றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத்தின் னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே.

யோக சக்தியால் கண்டறிந்த பராசக்தியாகிய வனப்பாற்றல் ஆகிய திருவருள் அமரும் போது பூதக் கூட்டங்கள் எல்லாம் அகன்று விடும். ஓராண்டு செய்யும் இப்பயிற்சியினால் எவ்வுடலுக்குள்ளும் கூடுவிட்டு கூடு பாயவும் ஒல்லும் என்பதாம்.

அறிந்த பராசக்தி உள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை எல்லாம்
குறிந்தவை யோராண்டு கூட இருக்கில்
விரிந்தபர காய மேவலு மாமே.

நிறைவுண்மையாக விளங்கும் பிரகாமியம் பற்றி, திருமூலர் தெளிவுபட விளக்குகின்றார். எப்பொருளையும் நமக்கு விளக்கும் ஒளியை நாம் முழுமுதற் சிவத்தின் இயற்கை ஒளி என்கின்றோம். இதனை அறியாதவர்கள் பலர். ஆனால் யோக நலத்தால் புருவத்தின் நடுவில் நம் உயிர்க்கும் உயிராய் உதவும் சிவ ஒளி அதுவேயாகும். இதனைக் காணும் பேறு பெற்றவர்களுக்கு திருவடிப் பேறு எளிதாயிற்று என்பதாம்.

ஆனவிளக்கொளி யாவ தறிகிலர்
மூலவிளக் கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டு கொள் வார்கட்கு
மேலை விளக் கொளி வீடெளி தாகின்றே.

சிவ ஒளியே சிறந்த ஒளி! மூல ஒளி முதன்மை ஒளி. அதன் வழியேதான் திருவடிப் பேற்றை அடைய முடியும் என்பது திருமூலரின் முடிவான கருத்தாம்.

ஈசத்துவம் என்பது அனைத்தையும் முடிக்கும் ஆட்சியனாதலாம். ஐந்து பூதங்களையும் இணைந்தியக்கும் தெய்வங்களுள் அன்னை அத்தனே அவனுடன் பூதங்களின் தன்மையை உரிய இடங்களில் அடைத்துக் கொண்டால் அதுவே பண்டைய ஈசன் தொன்மையான முறைமையாக அனைத்தையும் ஆளுவோனாகலாம்.

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்ட னப்பூதப் படையவை எல்லாம்

கொண்டவை யோர்ஆண்டு கூடி இருந்திடில்
பண்புடையவ் வீசன் தத்துவ மாகுமே.

சந்திரனாகிய திங்கள் தண்மையைப் பொழிந்து தண்ணிய ஒளியைப் பொழிகின்ற தன்மையை நன்குணர்ந்தவன். அதன் ஒளியாகவே ஆகி விடுகின்றான். நிலவின் குளிர்ச்சியால் , நிலவின் கலைகளால் அதன் வளர்ச்சியாய் ஆகிநின்றதுடன் அவனே நிலவை ஒத்தவனாகி விடுகின்றான்.

ஆகின்ற சந்திரன் தன்ஒளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமும் ஆயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே.

இத்தகைய ஆற்றல் பெற்றவன் படைத்தல், காத்தல், துடைத்தலாகிய உடம்பின் கண் நிகழ்கின்ற முத்தொழிலையும் இயற்ற வல்லவன். சிவனுக்கு நிகராக இவன் கருதப்படுவதுடன், குளிர்ச்சியாக விளங்குகின்ற திங்களின் கலையினுள் மாறுபட்ட ஐம்பூதங்களையும் நன்னெறிக்கு உகந்ததாக மாற்றிக் கொள்வான். இவ்வாறு ஓராண்டு பயிற்சி பெற எப்பொருட்கும் சார்பாம் மென்மைத் தன்மை வாய்க்கும் மெய்ப் பொருளாம் சிவத்தைக் கண்டு களிக்கக் கூடும்.

தானே படைத்திட வல்லவனா யிடும்
தானே அளித்திட வல்லவனா யிடும்
தானே சங்காரத் தலைவனுமா யிடும்
தானே சிவனெனும் தன்மைய னாமே.

தன்மையதாகத் தழைத்த கலையினுள்
பன்மையதாக பரந்த ஐம்பூதத்தை
வன்மையதாக மறித்திடின் ஓராண்டின்
மென்மையதாகிய மெய்ப்பொருள் காணுமே.

அனைத்தையும் கவரவல்ல, தன்வசப்படுத்தவல்ல. வசித்துவத்தை திருமூலர் விரிவாக சுமார் 23 திருப்பாக்களின் வழி விளக்கியுள்ளார். இவ்வுலகில் உண்மைப் பொருளாக விளைந்ததுவே அருட்பொலிவாகிய வசித்துவம் என்கின்றார்.

மெய்பொருளாக விளைந்தது வேதெனில்
நற்பொருளாகிய நல்ல வசித்துவம்

கைப்பொருளாகக் கலந்த உயிர்க்கெலாம்
தற்பொருளாகிய தன்மைய னாகுமே.

மற்றும் அந்த அனுபவத்தில் இறைவனைக் காணும் பேற்றைப் பெற அமரும் உடல் வண்ணம் பொன் வண்ணமாக ஆகிட நன்மையே மேவும் என்கிறார்.

தன்மையதாக தழைத்த பகலவன்
மென்மையதாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மையதாக புலன்களும் போயிட
நன்மையதாகிய நற்கொடி காணுமே

பொருந்திய சிவன் அருளில் ஓராண்டு பயிற்சி பெற்றிட இறையருளால் இயங்கும் இருநூற்று இருபத்தி நான்கு எனும் உலகிற்கும் போய் வரலாம்

நற்கொடியாகிய நாயகி தன்னுடன்
அக்கொடியாகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடியாகிய புவனங்கள் போய்வரும்
கற்கொடியாகிய காமுக னாமே.

இத்துறையுள் முழுமையான வெற்றி கைவந்த பின் இங்கிருந்து நினைத்த இடங்களுக்குச் சென்று வர இயலும் என்கிறார்.

காமருதத்துவம் வந்தபின் எங்கும் சென்று வருவதுடன் இறைவுணர்வு ஒளியும் கூடும் என்கிறார். திருமூலரின் ஒளித்தத்துவம் இதில் தொடர்ந்து பேசப்படுகின்றது. இந்த யோக முறையில் இறுதியாக வாய்க்கும் வனப்பொளியின் வகையை அவர் மிகமிக அற்புதமாக விளக்குகின்றார்.

நாயகமாகிய நல்லொளி என்று விளக்க வந்த அவர்,

பேரொளி யாகிய பெரியஅவ் வெட்டையும்
பாரொளியாக பதைப்பறக் கண்டவன்
தாரொளியாக தரணி முழுது மாம்
ஓரொளி யாகிய காலொளி காணுமே.

இந்த முறையில் தொடர்ந்து திருமூலர் விளக்குகின்ற திட்பம் நிறைந்த செய்திகள் அனைத்தும்- ஆதாரம் யோக மென்பதை வலியுறுத்தி விளக்கியுள்ளார்.

ஆதார யோகத் ததிதே வொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு

மேதாதி யீரெண் கலை செல்ல மீதொளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே.

மற்றும் இடமூச்சு வலமூச்சுக்களை முறைப்படி ஒடுங்கிச் செய்கின்ற அகத்தவத்தோரை வானவரும் வணங்க அவர்களுக்கு அருள்செய்ய முழுமுதல் சிவனும் வந்து முன் நிற்பான் என்கிறார்.

மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வான வர்கள்
விதியது செய்கின்ற மெய்யடியார்க்குப்
பதியது காட்டும் பரமன் நின்றானே.

ஆகவே அக யோகத்தால் உயிர்ப்பினை ஒடுக்க வல்லார்க்கு இறப்பு தானே ஒழிகின்றது. ஆம்! அவர்களே காற்றைக் கட்டவல்ல கணக்கறிவார்கள். அவர்கள் எங்கும் தாமாவார். புருவ நடுவில் மலரும். தாமரை மணத்தை நுகர்வர். நடுநாடி என்னும் தண்டின் வழி ஆனந்தம் பருகி நிற்பர். அவர்களுக்கு என்றும் இறப்பில்லை என்பதே திருமூலர் ஈசத்துவம் மூலம் உணர்த்தி அக போக வெற்றியில் திளைக்க வைக்கின்றார்.

கட்டவல்லார்கள் கரந்தெங்கும் தானாவர்
மட்டவிழ் தாமரை உள்ளே மணம் செய்து
பொட்டெழக் குத்திப் பொறி எழத் தண்டிட்டு
நட்டறி வார்க்கு நமனில்லை தானே

அகயோகம் மூலம் சீவன் சிவனைக் கலக்க திருமூலர் கண்ட அனுபவ வெளிப்பாடுகள் சொற்களில் சற்றுக் கடினமாகத் தெரிந்தாலும் திருமூலரின் ஞான அனுபவ வாயில்களாகவே திருப்பாக்கள் நம்மை வசித்துவம் செய்கின்றன.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

31. கலைநிலை

முனைவர். **மு. சிவச்சந்திரன்** எம்.ஏ.பி.எச்.டி. பி.எட்.,
தமிழ்த்துறைத்தலைவர், தருமையாதீன கலைக்கல்லூரி

முன்னுரை

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையெனப் போற்றப்படுவது திருமந்திரம் ஆகும். இதனை அருளியவர் திருமூல நாயனார் ஆவார். மந்திரம் என்பது, நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்தவையாக இருக்க வேண்டும் என்பர் தொல்காப்பியர். திருவள்ளுவரும் இக்கருத்தினை ஒட்டியே, 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்று மொழிந்தார். இக்குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகர் 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை அவ்வாறே வழங்குவது' என்று மந்திரத்திற்கு விளக்கம் தந்தார். இந்த உலகத்தில் வாழும் பசுவாகிய உயிர் பாசமாகிய மலங்களை அறுத்துப் பசுபதியாக விளங்குகின்ற இறைவனை அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் மூவாயிரம் ஆண்டுகள் யோக நிலையில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாகத் திருமூலரால் அருளப்பெற்றதே திருமந்திரம் ஆகும். தோத்திரமாகவும், சாத்திரமாகவும் விளங்கும் 9 தந்திரங்களைக் கொண்டது. அவற்றுள், மூன்றாம் தந்திரத்தில் கூறப்பட்டுள்ள கலைநிலையைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

கலைநிலை - சொல்விளக்கம்

திருமூலர் கலை என்று குறிப்பிடுவது பிரணவ கலையை ஆகும். எனவே, இவ்வதிகாரம் பிரணவ யோகம் அல்லது மந்திரயோகம் கூறுவதாக அமைகிறது. பிரணவயோகம் அல்லது மந்திரயோகம் என்பதே பிரசாதயோகம் எனப்படுகிறது. பிரசாதம் என்ற சொல்லுக்குச் சிவஞான கதியைத் தருவது என்பது பொருளாகும். (பிரா- சிவஞானம்; ஸா-கதி; த-தருவது) இது வாசி யோகத்தினும் நுண்ணிதாய் அதனினும் மேம்பட்டு விளங்குவதாகும்.

கலைநிலையின் பயன்கள்

கலைநிலை என்பது பிரணவ யோகத்தைக் குறிப்பதாகும். பிரணவம் தொகையாய் நிற்குமிடத்து ஓம் என நிற்கும். இதனைப் பகுத்து நோக்கும் பொழுது அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என ஐந்தாகி நிற்கும். இவற்றுள் அகாரம், உகாரம், மகாரம் தூல எழுத்தாதலின் இவற்றைக்

கடந்தவுடன் ஒரு சூனிய நிலை தோன்றும். அதனின்று கீழிறங்காது மேலே நோக்க விந்து, அருத்த சந்திரன், நிரோதினி என்பன முறையே தோன்றும்.

விந்து, அருத்த சந்திரன், நிரோதினி என்பன சூக்கும எழுத்தாகலின் இவற்றைக் கடந்தவுடன் மற்றொரு சூனியநிலை தோன்றும். அதனின்று கீழே இறங்காது மேலே நோக்க நாதம், நாதாந்தம், சக்தி என்பவை முறையே தோன்றும். இவை, அதிசூக்கும எழுத்தாகலின் இவற்றைக் கடந்தவுடன் மற்றொரு சூனிய நிலை தோன்றும். அதனின்று கீழே இறங்காது மேலே நோக்க நோக்க வியாபினி தோன்றும். இது சுத்த மாயையின் காரிய நிலையாகலின் இதனைக் கடந்தவுடன் வேறொரு சூனிய நிலை தோன்றும். அதனின்று இறங்காது மேலே நோக்க அதிசூக்கும காரணமாகிய உள்மனை தோன்றும். இத்துடன் பாசங்கள் யாவும் கழிதலால் ஒரு பெரிய சூனிய நிலை தோன்றும். அங்கு அசையாது உறைத்து நிற்பின் பரம்பொருள் வெளிப்படும். இதுவே கலைநிலையாகிய பிரசாத யோகத்தின் பயனாகும்.

அன்பே இறைவனை அடையும் வழி

தன்னை அடைவதற்கு அன்பு ஒன்றையே வழியாக அமைத்துள்ள இறைவன் சிவபெருமான். அவ்வன்பைத் தரும் வழியாகிய அறிவை உண்டாக்கி அவ்வறிவு பொருந்த இறைவனை நோக்கினால் இன்ப வெள்ளம் பெருகும். இதனை வற்றிப் போகாமல் பார்த்துக் கொண்டால் அவ்வின்ப வெள்ளத்தின் வழி இறையை அடையலாம் என்பது திருமூலர் வாக்கு. அதனை,

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடின்
காதல் வழிசெய்து கங்கை வழிதரும்
காதல் வழிசெய்து காக்கலு மாமே.

என்னும் பாடல் விளக்கம்.

பிரசாத யோகம் அருள்வழிப்படும் நிலை

வலமும் இடமும் செல்லாமல் நடுநாடி வழிச் செல்கின்ற பிராணவாயு அத்தகைய செலவில் பிறழாது நிற்றலே அசைவில்லாது நிற்கும் பிராணாயாம நிலை என்கிறார் திருமூலர். அவ்வாறு நின்றால் அதன்வழி அறிவும் பிரணவ கலைகளில் நிலைபெற்று நிற்கும். முதல்வனது திருவருள், அப்பிரணவ கலைகளில் பல்வேறு வகையாய்க் கலந்து நிற்கும் கலப்பினை

அறியுமாயின் அறிவானது பலதலைப்படாது ஒருதலைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மனம் முதலிய அந்தக்கரணங்களை மருள் நெறியில் செல்லாது தடுத்து அருள்நெறியில் நிறுத்தும் பிரணவ கலைகளில் மாணாக்கன் ஆகிய நீ அறிவு பொருந்த நில் என்று அருள்கிறார் திருமூலர். அதனை,

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது; தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
அலைவற வாகும் வழியிது வாமே

என்னும் பாடல் விளக்கும்.

பிரசாத யோக நெறியின் சிறப்பு

ஒரு மனிதன், வாழ்வில் மெய்யுணர்வை உணர வேண்டும் எனில் அவனுடைய வாழ்நாளை நீட்டிக்க வேண்டியது அவசியம். அவ்வாறு வாழ்நாளை நீட்டிக்க மனிதனுகரு அவசியமாய் இருப்பது ஒருவழிப்படுகின்ற பிராணவாயுவே ஆகும். அப்பிராணவாயுவை, பிராணாயாமத்தின் வழி ஒருவன் தன் புறத்தே ஓடிய உணர்வுகளை எல்லாம் அவ்வாறு ஓடச்செய்யாது உள்ளடக்கி வைப்பானாயின் அவனே சாதகன் எனப்போற்றப்படுகிறான். அத்தகு சாதகனின் உள்ளத்தில் தான் இறைவன் இனிது விளங்கி நிற்கிறான் என்கிறார் திருமூலர். இதனை,

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியும்
சடையொன்றி நின்ற அச்சங்கர நாதன்
விடையொன்றில் ஏறியே வீற்றிருந் தானே.

என்னும் பாடல் விளக்கும்.

சாதனையும் அதன் பயனும்

சாதகன் சாதிக்கத்தக்க முறையை முழுமையாய் உணர்ந்து, பெருந்தவமாக அவ்வழிபாட்டினைச் செய்து வருகின்ற பொழுது, பிரணவ கலைகளின் உள்ளீடாக விளங்குகின்ற திருவருளிலே தன்னுடைய உணர்வைச் செலுத்துவானாயின் அச்செயல் அவனுடைய புலன் உணர்வாகிய இரும்பினை மெய்யுணர்வாகிய பொன்னாக மாற்றுகிற இரசகுளிகையாய் அமைந்து பயன்தரும்.

வேதகமாக விளைந்து கிடக்கும் எனப்பட்ட இச்சாதனை புலன்களின் மேல் செல்லுகின்ற அவாவை அறுத்தலும், திருவருள் தோற்றமும், திருவருட்பேறுமாகிய மூன்றுவிதப் பயன்களைத் தரும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானே உள்நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானே அச்சோதியுள் நின்றே.

என்னும் பாடல் விளக்கும்.

பிராணாயாமத்தின் பயன்

உடம்பு ஒளிபெற்று நெடுநாள் விளங்கப் பொருந்தியுள்ளதே பிராணவாயு. இது, ஒவ்வொரு மூச்சிலும் சிறிது சிறிதாக அழிந்து வருகிறது. இதனைப் பற்றிக் கவலைப்படுவார் இல்லை. அதனை அறிந்து அதற்காகக் கவலைப்பட்டு வருந்திப் பிராணவாயுவை அழியாமல் காப்பவர்கள் எடுத்த பிறப்பிலேயே சிவனை அடைய நீண்ட ஆயுளைப் பெறலாம்.

ஆசனம் முதலிய உறுப்புகளால் யோகநெறி கைவரப் பெற்றுப் பின் பிரசாத நெறியைத் தலைப்பட்டு மெய்யுணர்வைப் பெற வாழ்நாள் நீட்டிப்பு அவசியம். இத்தகு வாழ்நாள் நீட்டிப்புக்கு இன்றியமையாதது பிராணாயாமம் ஆகும்.

மேலும், பிராணாயாம வன்மையால் ஒருவன் தலையில் உள்ள அமுதத்தைப் பெரிதும் நுகர்வானாயின் அவனுக்கு உடம்பாய் அமைந்த நீர், நிலம் முதலான தத்துவங்கள் ஒடுங்குவதற்குப் பல காலங்கள் ஆகும். அங்ஙனம் ஆகவே உடல் அழியாது நெடுநாள் நிலைத்து நிற்கும். இது எம் ஆசிரியரான நந்திதேவர்மேல் ஆணை என்கிறார் திருமூலர். இதனை,

ஏராறு கால்கொண்டு எழுந்த புரவியை
பேராமல் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்
நீராயிரமும் நிலமாயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான் நந்தி ஆணையே.

என்னும் பாடல் விளக்கும்.

முடிவுரை

இறைவனை அடைந்து பேரின்ப நிலையை எய்துவதற்கே உயிர் அமைந்துள்ளது. இத்தகு இறைவனை அடைய வேண்டுமாயின் அதற்கு அடிப்படைத் தேவை உடல். இந்த உடலை ஒருவன் முறைப்படி வளர்க்க வழிவகை செய்வது பிராணாயாமம். இப்பிராணாயாமத்தை முறைப்படிச் சாதகம் செய்பவனால் மட்டுமே இறையை அடையும் சாதனையைச் செய்ய முடியும் என்பது திருமூலர் வாக்கு. ஆதலால் தான், *உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்* என்றும், *உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்* என்றும் மொழிகிறார். எனவே, உடலைப்பேணி அதன்வழி உயிரை வளர்த்து இறையினை அடைந்து உய்வோம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

32. காயசித்தி உபாயம்

பேராசிரியர். முனைவர். தா. மணி
தமிழ்த்துறை, கணேசர் செந்தமிழ் கலைக்கல்லூரி
மேலைச்சிவபுரி

மனித உடம்பை "*மெய்*" என்கிறது தமிழ். மெய் என்றால் உண்மை என்றும், நிலைத்தது என்றும் பொருள். மாறாகக் "காயமே இது பொய்யடா" என்னும் வழக்கும் உள்ளது. மனித உடம்பு நிலையின்றி அழிந்துபடும் என்பது இதன் பொருள். அவ்வாறாயின் அழியும் உடம்பை "மெய்" என்று கூறும் தமிழ் பொய்யாகிறது. தமிழ் வழக்கு- பொய்யாகுமா? மெய்யை (உடம்பை) மெய்யாகவே நிலைபெறச் செய்துவிட முடியுமா? மரணமிலா வாழ்வு இயலுமா? இவ்வினாக்களுக்கு விடையாக அமைவதே "சாரீர சித்தி உபாயம்" என்னும் பகுதியாகும்.

உடம்பும் உயிரும்

உடல் நலமும் மனநலமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. உடல் நலக் கேடுடையோர் இயல்பான மனநிலையில் இருத்தல் இயலாது. மாறாக உடல்நலக் குறைவு சிறிதும் இன்றி முழு ஆற்றலோடு இருப்பவர்களால் ஆழ்ந்து சிந்திக்கவும், செயலாற்றவும் முடிகிறது. இவ்வுடம்பைப் பற்றுக் கோடாகக் கொண்டே உயிர் உய்கிறது. உடம்பு இல்லாத உயிரை மெய்ப்பிக்க இயலாது. அதனால் உயிர்ப் பேணலுக்கு உடற் பேணல் அவசியமாகிறது. அதனால்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே -724

என்னும் பாடலோடு சாரீர சித்தி உபாயம் எனும் பகுதி தொடங்குகின்றது. உடம்பை வளர்க்கும் வழிமுறைகளை அறிவதும், அதன்வழி உடம்பை வளர்ப்பதும் மனிதப் பிறவியின் குறிக்கோளாகிறது. ஆன்மிக வாழ்வின் அடித்தளம் உடம்பாகும். அவ் அடித்தளத்தின் உறுதியில்தான் உயிர் நிலை பெறுகிறது. உடம்பைப் பேணி வளர்க்கும் அளவுக்கு உயிரின் நிலைப்பும், விளக்கமும், கடவுள் தன்மையும் அமைகிறது.

உடம்பு - வெறுக்கத் தக்கதா?

ஒன்பது ஓட்டைகள் கொண்டது என்றும், ஊத்தைப் பாண்டம் என்றும், ஓலைக் குடிசை என்றும், உடைந்து சிதறும் மண்பாண்டம் என்றும் மனித உடம்பை இழித்தும், பழித்தும், வெறுத்தும் பேசும் வழக்குகள் தமிழில் உண்டு. திருமூலரும் முதலில் இக்கருத்தினராக இருந்துள்ளார். பிறகே அவர் உடம்பின் இன்றியமையாமையை உணர்ந்துள்ளார்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே - 725

என்பது இப்பகுதியின் இரண்டாம் பாடலாகும்.

யாக்கை - நில்லாதது - என்றது முரணா?

திருமந்திரத்தின் முதல் தந்திரத்தின் இரண்டாம் பகுதி 'யாக்கை நிலையாமையாகும்'. இப்பகுதியில் உடம்பினைப் பண்டம் பெய் கூரை(144) என்றும், மேலுள கூரை (146) என்றும், பந்தல் பிரிந்தது (152) என்றும் திருமூலர் கூறியுள்ளார். மேலும் 'பேரினை நீக்கிப் பிணம் என்று பெயரிட்டு' (145) என்றும், 'கிடக்கப்படுத்தார் கிடந்து ஒழிந்தாரே' (148) என்றும் விறகிட்டு எரிமூட்டி (157) என்றும், உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே (188) என்றும் உடம்பின் கேட்டினையும், நிலைபேறின்மையையும் பலபட விளக்குவார். இவ்வாறு யாக்கை நிலையாமை கூறும் திருமூலரே காயசித்தி உபாயம் கூறுவது முரண்போலத் தோன்றலாம். ஆனால் அது உண்மையன்று. இவ் உடம்பின் மேன்மையைச் சரிவர உணர்ந்து அதைப் போற்றி வளர்த்தால்... அழியும் (அபாயத்திலிருந்து) கேட்டிலிருந்து அதை நிலைபெறச் செய்யலாம் என்பதே அவர் கருத்தாகும். யாக்கை நிலையாமைப் பகுதியின் முதற் பாடலே காயசித்தி உபாயம் கூறும் பாடலாக அமைந்துள்ளதை உணர வேண்டும்.

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே -143

என்ற பாடலில் இருவினைக் கொள்கலமாகிய (பாத்திரம்) இவ்வுடம்பு மண்பாண்டம் போன்றது என்றும், தீயில் சுடப்பட்ட பாண்டம்

நிலைபேறடைய, தீயிலிடப்படாத பசுமண் பாண்டம் மழையில் கரைந்து போவது போல், உடம்பினை ஒளியுடம்பாக மாற்றிக் கொண்டால் (அங்கி யோக முயற்சியால்) அதை நிலை நிறுத்தலாம் என்று கூறுகின்றார். எனவே மெய்யை (உடம்பை) மெய்யானதாக்க (நிலையானதாக) மெய்யுணர்ந்து (உண்மையுணர்ந்து) செயல்பட வேண்டும் என்பதே மூலரின் முரண்பாடில்லா கருத்தாகும்.

உடம்பை நிலைபெறச் செய்யும் வழிகள்

சாரீர சித்தி உபாயம் என்னும் இப்பகுதியில் இடம்பெறும் 16 பாடல்களில் 14 பாடல்கள் உடம்பை அழியாது நிலைநிறுத்த வழிமுறைகளைக் கூறுகின்றன.

1. உலகியலின்பங்களிலும், நிகழ்வுகளிலும் பற்றிப் படரும் மனதை இறை நினைவால் (சிவசிந்தனை) இட்டு நிரப்ப வேண்டும். நமது உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களுக்கு (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை) மேலுள்ள சகஸ்ரதளமாகிய தாமரை மலரை மலரச் செய்ய வேண்டும். உடலின்பங்கருதிய கீழ்முக நோக்கினை மாற்றி மேல்நோக்கி சிந்தித்திருப்போரின் உடம்பு வெம்மை குறைந்து குளிர்ந்து ஒளியுடம்பாகும். ஆக இடைவிடா இறை நினைவால் அகமும் புறமும் குளிர்ந்து உடல் கேடடைவது முதற்கண் தடுக்கப்படுகிறது. (பாடல் 726)

2. மேற்கூறியவாறு சகஸ்ரதளமாகிய தாமரையை மலரச் செய்யும் யோகத்தை மாலை வேளையில் செய்தால் 'கபம்' நீங்கும், நண்பகலில் செய்தால் 'வாதம்' தொலையும், காலைவேளையில் செய்தால் 'பித்தம்' கெடும். இம்மூன்றும் கெடவே நரை திரை என்னும் மூப்பின் அறிகுறிகள் உடம்பை நெருங்காது அழிந்துவிடும் (பாடல் 727)

3. மனித உடம்பில் ஆறு ஆதாரங்களும், மூன்று முடிச்சுகளாக உள்ளன. பிரமக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி உருத்திரக்கிரந்தி என்பன அவை. இவற்றொடு சூரியகலை, சந்திரகலை என்னும் இருநாடிகளும் பாம்புகள் போல் பின்னிக் கிடக்கின்றன. இவ்வுடம்பை 12 அங்குல நீளமுடைய பிராணன்(உயிர்க்காற்று) இயக்குகிறது. இந்நிலையில் இரு கண்பார்வைகளையும் (சந்திரன் சூரியன்) ஒருமித்து இணைத்து மேல்நோக்கி ஒன்றி இருத்தினால் மூல ஆற்றல் (குண்டலினி சக்தி) உயிர்க் காற்றோடு மேல் நோக்கிச் செல்லும். அதனால் உடம்பானது அழியாது நிலைபெறும் (பாடல் 728)

4. உடம்பிலுள்ள நூறு நாடிகளும்; அறுபது தத்துவிகங்ளும் (இவை 96 தத்துவங்களில் உள்ளன) ஆறு அத்துவாக்களும், இடகலை, பிங்கலை எனும் (மூச்சுக்காற்று) இரண்டால் தூய்மை பெற வேண்டும். இவ்வாறானால் சாதகரின் உடம்பு நெடுநாட்கள் நிலைபெறும் (729)

5. சந்திர கலையைச் சூரியகலையில் (இரு கண்களையும் ஒரு நிலைப்படுத்துதல்) பொருந்துமாறு பயிற்சியில் ஈடுபட்டால் இறை (சிவ) ஒளி-உரு- அசைவு (நடனம்) இவற்றை உடம்பினுள் உணர்ந்து கொள்ளலாம்.(730)

6. உயிர்க்காற்றை, பிராணன் என்பர். பிராணனை 'அம்சம்' என்ற குறியீடுகளால் குறிப்பிடுவர். அம்+சம் =அம்சம். 'அம்'- என்பதை 'அ' என்றும் 'சம்' என்தை 'ச' என்றும் சுருக்கிக் கூறுவர். பிராணாயாமம் செய்வோர் அம்+சம் என்பதைத் தொடர்ந்து மனனம் செய்து வந்தால் உடம்பில் தலையின் உச்சியில் (சதாசிவத் தானம்) அது படர்ந்து ச 'ஒலி' (நாதம்) உண்டாகும். இப்பயிற்சியை 'அம்ச வித்தை', என்பர். (731) (திருமந்திரம் நான்காம் தந்திரத்தில் 'அசபை' என்னும் பகுதியில் இதன் விரிவைக் காணலாம். குறிப்பாக 910 ஆம் பாடலில் காண்க.

7. உந்திக் கமலத்துப் பிராணனை (உயிர்க்காற்று), அம்சம் என்றும் மந்திரப் பொருளால் இடைவிடாது சிந்தித்துப் புருவநடுவில் நிறுத்த வேண்டும். பிறகு அபானன் (மலக்காற்று) நிலை கொண்டுள்ள மூலாதாரத்துக்கு அப்பிராணனைப் பிடரி வழியாக கீழ்நோக்கிச் செலுத்தி அதனோடு சேர்த்து குண்டலினி ஆற்றலுடன் கலந்து மேலேற்ற (பிரமப்புழை) வேண்டும்.

8. இறை ஆற்றல் (சிவன்) உடம்பில் உள்ள ஆறாதாரங்களின் அடியிலுள்ள மூலாதாரத்தில் விளங்குகின்றது. மூலாதாரம் என்பது குதத்திற்கு இரண்டு விடற்கடை மேலும், பாலுணர்வை ஊட்டும் குறிக்குச் சற்று கீழும் உள்ளது.

அம் மூலாதாரத்தையும், அங்கு நிலை கொண்டு உயிர்களை நடத்தும் சிவத்தையும் இடைவிடாமல் 'நினைவு' (தியானம்) கொள்ள வேண்டும் (733)

9. இறைவன் தனது ஆற்றலுடன் (சக்தியுடன்) வீற்றிருக்கும் தோற்றத்தைக் கண்மூடிப் பார்ப்போர்க்குக் கடல் நீலம் போல் காட்சியாக விரியும். அவ் இறை ஆற்றல் காட்சியில் தம்மை மறந்து திளைத்திருப் போர்க்கு நரை, திரை வாராது. இளையோராக எப்போதும் தோன்றுவர். (734)

10. கருவாய் (சுக்கிலத்தை வெளிப்படுத்தும் உறுப்பு- விதை) சுருங்கிச் செயலற்றிருந்தால் உடம்பிற்கு அழிவே வராது. அதுபோல 'உடம்பு' பருத்த நிலையில் இல்லாமல் சுருங்கி மெலிந்திருந்தால் அவ்வுடம்பில் உயிர் நீண்டகாலம் தங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். உடம்பு மெலிந்தால் நற்குணங்கள் (சத்துவகுணம்) ஏற்படும். ஆதலால் உடம்பு தனக்கு வரும் கேட்டிலிருந்து விடுபடுகிறது. உடம்பு சுருங்க வேண்டுமாயின் உட்புகும் உணவு பெருமளவு குறைதல் வேண்டும். அதனால் உடம்புக்கு எண்ணற்ற பயன்கள் உண்டு. இந்நெறி நிற்போர் நீல கண்ட பெருமான் என்று கூறப் பெறும் இறைநிலைக்கு உயர்வர். (735)

11. மேற்கண்டவாறு உடம்பைப் பேணி, மூலாதாரத்திலுள்ள அபானனை (மலக்காற்று அல்லது காமக்காற்று) பிராணனுடன் (உயிர்க்காற்றுடன்) சேர்த்துத் தலையின் மேல் இறையருள் விளங்குகின்ற இடத்திற்குச் (சகஸ்ரதளம்) செலுத்துகின்ற பயிற்சியை இடைநிறுத்தாது செய்து வந்தால் உடம்பானது பேரழகும் பேரொளியும் பெற்று பெண்கள் மையலுறும்படி விளங்கும். (736)

12. காலத்தைச் சுழற்றுகின்ற காலனை (எமனை) வெகுண்டு அழித்தாகக் கூறப்பெறும் இறைவன் (சிவன்) மூலாதாரத்தில் விளங்குவதைக் கண்டு கொள்ள வேண்டும். அவ்வாறு கண்டால் மாயா உலகமான இவ்வுலகிலும், அறிவு வெளியான இறையுலகிலும் வாழமுடியும்.

13. தீ வடிவான இறை (அக்கினி கலையாகிய சிவம்) சூரியன், சந்திரன், தீ, தாரகை என்னும் நான்கு கலைகளிலும், உச்சிக்கு மேல் இடமான சகஸ்ரதளத்தைக் உட்படுத்திய ஏழு இடங்களிலும் (ஆதாரங்கள்) உயிர்க்காற்றாய் (பிராணனாய்) நிறைந்துள்ளது. உடம்பு முழுவதும், உடம்பில் தோன்றும் நல்லுணர்வே அமுதமாக, சிவனுள்ளும் அது நின்று பொலியக் காணலாம்.

14. பத்மாசனத்தில் அமர்ந்து இருகைளையும் ஒன்றன்மேல் ஒன்றாக மடியின் மேல் வைத்துப் பிரணவ யோகத்தைச் செய்யும் போது நம்முள் மாற்றம் ஏற்படும். அம்மாற்றத்தை விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். நீரோடு சேர்ந்த நெல்லில் அதில் மறைந்திருந்த ஆற்றல் வளர்கின்ற பாங்கினைப் போல், பிரணவ மந்திரத்தால் .உயர்நிலையில் ஒடுங்க வேண்டும்.

முடிவு

உடம்பை இடமாகக் கொண்டு உயிரை வளர்த்து, அவ்வுடம்பைக் கருவியாகக் கொண்டு உயிரிலும் உடம்பிலும் நிறைந்துள்ள இறை

ஆற்றலைக் காண வேண்டும் என்பது மூலரின் முடிந்த முடிவாகும். உடம்பு அழியின் உயிர் அடைய வேண்டிய இம் மெய்யறிவுப் பயனை அடைய முடியாது. அதை இந்த இப்பிறவியிலேயே அடைய வேண்டுமாயின் உடம்பை நிலை நிறுத்தும் முயற்சி வேண்டியுள்ளது. அதுவே இவ்வாழ்வின் குறிக்கோளாகவும் அமைகிறது. பெரு வாழ்வு குறித்து அருட்பிரகாச வள்ளலார் நிறைய அருளியுள்ளார்.

உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. இவற்றைச் சங்கரங்கள் என்பர். இவ் ஆறையும் இணைத்து அதற்கு மேலும் செல்லக்கூடிய ஒரு நடு நாடி உள்ளது. அதுவே சுழுமுனையாகும். இச்சுழுமுனை நாடியின் அடிப்பாகம் தீ (அக்கினி) பகுதியாகும் (அக்கினி மண்டலம்) நடுப்பாகம் சூரிய மண்டலம் என்றும், புருவ நடுப்பகுதிக்கு மேல் சந்திர மண்டலம் என்றும் வழங்கப்பெறும். மனிதனின் அறிவே அக்கினிச் சக்தியாகும். இவ் அக்கினிச் சக்தி உலகியல் நுகர்வுப் பொருளில் செல்லும்போது (அறிவு உலகியல்களின் இன்பங்கள்பால் ஈர்க்கப்படும் போது) உடம்பின் கீழ்ப்பகுதிகள் உணர்வு பெற்று காமாக்கினி உருவாகிறது. மாறாத உலகியல் இன்பங்களில் அறிவு செல்லாதபோது இத் தீ (அக்கினி) தணிந்து ஒளிமயமாகி மேலேறி ஒளிரத் தொடங்குகிறது. உலகியல் எண்ணங்களால் உடல் வெப்பமாகிக் கெடுகிறது. எண்ணமற்ற (பேசாப் பெருநிலை) நிலையில் உடல் குளிர்ந்து ஒளிமயமாகிறது. இது அகண்ட சக்தியாக மாறுகிறது. இவ்வாறு அறிவும், சிந்தனையும் அகண்டமாகும்போது ஆன்மாவும் அகண்டமாகி விரிகிறது. இவ்வாறு இருப்போரின் உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்க இயலாது. உடம்பிலுள்ள இவ் அக்கினியைக் குளிர்வித்து ஒளிரச் செய்யும் யோக நெறியே அங்கி யோகமாகும். திருமூலர் கூறிய கருத்தினை, செயலாக்கமாக உணர்த்தியவர் அருட்பிரகாச வள்ளலார். மரணமிலாப் பெருவாழ்வை இன்னும் விரிவாகக் கூறியவர் வள்ளலார் ஆவார். அவர்தம் சமரச சுத்த சன்மார்க்க நெறியின் முதற் பயனே மரணமில்லா நிலைத்த வாழ்வாகும். எனவே காயசித்தி உபாயத்தின் விரிவுகளையும், விளக்கங்களையும் திருவருட்பாவில் கண்டு தெளிக.

திருச்சிற்றம்பலம்

*****

33. காலச்சக்கரம்

திருக்குறள் செல்வர். புலவர். மு. வைத்தியநாதன் எம்.ஏ.
திருச்சிராப்பள்ளி

திருமூலர் அருளிய திருமந்திரம், சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகளை விளக்கும் சாத்திர நூலாகவும், சைவநெறியில் நின்று சிவபரம்பொருள் மனம் மொழிமெய்களால் சிந்தித்து வாழ்த்தி வழிபடுவதற்குச் சாதனமாகிய தோத்திர நூலாகவும் விளங்கும் தனிச்சிறப்புடையதாகும். ஒன்பது தந்திரங்களாகப் பிரித்து, மிகவுயர் உண்மைப் பொருளை விளக்குவதாகும்.

முதல் நான்கு தந்திரங்களும், சிவஞானத்தைப் பெறுவதற்கு விரும்பியவர், தம்மை உள்ளும் புறம்பும் தகுதியுடையராக்கிக் கொள்ளுதற்குரிய சாதனங்களையும், நடுவில் உள்ள ஐந்தாம் தந்திரம் சைவ சமயத்தின் முடிந்த முடிவாகிய சைவ சித்தாந்த உண்மைகளையும், ஆறு முதல் ஒன்பது வரையுள்ள நான்கு தந்திரங்களும் ஞானம் பெறும் நிலையில் உணர்ந்து பெறத்தக்கனவாயுள்ள நாற்பயன்களையும் பற்றி விரித்துக் கூறுகின்றன.

மூன்றாம் தந்திரம்

மூன்றாம் தந்திரம் முழுவதும் பல்வேறு யோக முறைகளை விளக்குவது. ஆனால், பதஞ்சலியார் கூறும் யோக முறைகள் பற்றியதன்று. இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவும், இவற்றை மேற்கொண்டோர் அடையும் பேறுகளும், அணிமா, இலகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண்வகை சித்திகளின் இயல்புகளும் பயன்களும், கலைநிலை, காயசித்தி உபாயம் முதலியனவும் இதன்கண் விளக்கப் பெற்றுள்ளன.

மூன்றாம் தந்திரத்தின், உள்ளுறைப் பொருளாவது; சரீரசித்தி உபாயமாகும். உடம்பின்றி, உயிர் தனித்து நின்று தொழில் புரிதல் இயலாது. உயிர், அறம் பொருள் இன்பம் வீடு முதலிய உறுதிப் பொருள்களைப் பெற வேண்டுமாயின், அதற்குரிய முயற்சிகளை உடம்போடு கூடிநின்றே செய்தல் வேண்டும். ஆகவே, உயிர்க்கு ஞான சாதனமாகவுள்ள, உடம்பினைப் பேணுதல் அவசியமாம் என்பதறிய வேண்டும்.

இத்தந்திரத்துள், அட்டாங்கயோகம் முதலாக சந்திரயோகம் ஈறாக இருபத்தொரு உட்பிரிவுகள் விளக்கப் பெற்றுள்ளன. அவைகளுள், காலச்சக்கரம் பதினான்காம் உட்பிரிவாகும். இப்பிரிவுள் முப்பது மந்திரங்கள் இடம் பெறுகின்றன.

காலச்சக்கரம்

திருமூலரின் திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரத்துள், சரீரசித்தி உபாயம் என்னும் உட்பிரிவை அடுத்து அமைந்து இருப்பது காலச்சக்கரம் என்னும் பகுதியாகும். காலம், ஒரு சக்கரம் சுழன்று சுழன்று மீண்டும் மீண்டும் தான் தொடங்கிய இடத்தையே அடைதல் போல, முடிவின்றி இயங்குவதாகும். அக்காலத்தை ஒரு நாளின் கூறாகவும், ஒரு ஆண்டின் கூறாகவும் பகுக்கலாம்.

ஒரு நாளின் கூறுகள், காலை, நண்பகல், எற்பாடு, யாமம், வைகறை என்பன. ஒரு ஆண்டின் கூறுகள் கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன.

காலம் என்பது

காலம் என்பது ஒருமணியின், ஒரு நாழிகையின், ஒரு நாளின், ஒரு ஆண்டின் கூறுகளாகப் பகுக்கப் பெற்றிருப்பினும், அது முடிவின்றி மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். அதுபோல ஓர் உயிர், தனு கரண புவன போகங்களை (உடல், கருவி, உலக இன்பம்) தான் இயற்றிய இருவினைகள் வழி- அடைந்து நுகருங்கால், மேலும் இருவினைகளை இயற்றி மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் வரும், சுழற்சியை விளக்கக் காலச் சுழற்சி பயன்படுத்தப் பெற்றுள்ளது. அதாவது காலச் சக்கரம் இடையறாது சுழலுதல் போல, உயிர் வினைகள் வழிப் பல பிறவிகளை எடுத்து எடுத்து இளைத்துப் போகின்றன என்பதாம்.

காலச்சக்கரம் முப்பது மந்திரங்களை (பாடல்களை) உடையது. திருமூலர் இப்பிரிவின் வழியாக ஓர் உயிர், பசு ஞானங்களை பாச ஞானங்களைக் கடந்து, பதி ஞானம் பெற்றுயர வேண்டிய உயர்நிலையை விளக்கியுள்ளார். முதலில் பிறவி என்னும் தளையை அறுக்க வழி கூறுகின்றார். மூலாதாரத்தில் மூண்டு எழும் கனலை, காலால் (காற்றால்) சிரசின் மேல் செலுத்தித் துவாத சாந்தம் என்னும் பெருவெளியில் நிறுத்தினால், சிவசக்தியின் அருளை அறியலாம். அதன்வழிப் பிறவி என்னும் பெரும் பணியை அறுக்கலாம் என்பது அவர் விளக்கும் அனுபவப் பொருளாகும்.

பத்தாம் அறிவு பதிஞானம் கூட்டும்

சாந்தம் முதலாகிய ஐம்புலன்களைப் பொருந்தி அறியும் அறிவும், ஐவகைக் கருவிகள் பற்றிய அறிவை வேறாக இருந்து அறியும் ஆறாவது அறிவும், பொருள்களின் நன்மை தீமைகள் பற்றிய ஆராய்ச்சியுடைய ஏழாம் அறிவும், கல்வியால் பெற்ற எட்டாம் அறிவும், தம் அனுபவம் பற்றிய ஒன்பதாம் அறிவும் இவைகளுக்குக் காரணம் சிவசக்தியே என்னும் பதி ஞானமாகிய பத்தாம் அறிவும் ஓர் உயிர் பெற வேண்டும். அவ்வாறு பெற்றால் பிறவியறுக்கலாம் என்கிறார்.

உடல் அழியுமுன் யோகம் கூடுக

உயிர் ஓர் உடலில் வாழுங்காலத்து, அவ்வுடலுக்கு முதல் இருபத்து எட்டுக்குள், தொடரும் முப்பத்து மூன்றிற்குள், கழியும் அறுபத்திரண்டிற்குள், எழும் நூறாண்டிற்குள் ஆக நான்கு கண்டங்களும் கடக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இதையுணர்ந்து, நல்ல பொழுதில் யோகப் பயிற்சி மேற்கொள்ள அறிவுறுத்துகின்றார். தொடர்ந்து யோகம் பயின்று, ஞானநிலை அடைய முயலுக என்கிறார். நல்ல யோகம் கூட, முதலில் பொறிபுலன் அடக்கங்களோடு கூடிய மெய்யடக்கம் தேவையாம். பின்னர் முறையாக மூச்சுப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அதன்பின்னர் பொறிகள் வழிச் செல்லா மனமடக்கம் பெற வேண்டும். இவைகள் கூடிய வழியே யோகம் கைகூடும் என்கிறார். யோகத்தின் உயர்நிலை ஞானமாகும்.

ஞானதரிசனம்

உருவங்களாகிய பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன் என்னும் நான்கையும், அருவுருவமாகிய சதாசிவத்தையும், அருவங்களாகிய நாதம், விந்து, சக்தி, சிவம் என்னும் நலந்தரும் பேதங்களைக் கடந்து ஞான சூரியனைத் தரிசிக்க வேண்டும். அப்பொழுது ஆன்மாவில் பேரொளிப் பிரகாசிக்கும்.

உபதேச முறை

யோகம் கைகூடுதல் என்பது உபதேச முறையால் மட்டுமே அமையும். ஏன் எனில், யோகியாலேயே யோகம் கூட்ட முடியும். உபதேச முறையால் அல்லாமல் பிறவழியால் முயன்றால், இறைவனுடன் தொடர்பு கொள்ளுதல் யாவருக்கும் அருமையாகும். எனவே, யோகம் கூடுதல்

உபதேச முறையால் மட்டுமே அமையும் என்பதாம். குருநாதர் உபதேசப்படி யோகம் பயில்வோர் தம் உயிர்க்கு நலன்தேடுவர்.

ஞானியார் கலை

வீணாத் தண்டமாகிய முதுகுத் தண்டோடு சுற்றிச் சென்று பிரமந்திரத்தை அடைந்த யோகிக்கு, சோமமண்டலம், சூரியமண்டலம், அக்கினிமண்டலம் என்னும் மூன்றும் ஒத்து உடற்கண் மகிழும்படியாக பொருந்தியிருக்கும். இவைகளைக் கண்டவர்களே மெய்ஞ்ஞானிகள் ஆவர். இதனை அறியாதவர்கள், வணங்குதற்குரிய வாழ்வு கெட்டு அழிவார்கள்.

அம்பலவாணனின் அருட்காட்சி

சுணங்கன் (நாய்) மனிதக் கழிவை உண்ண விருப்பம் கொள்வது போல, மனிதர் காம மயக்கில் அகப்பட்டால், சகஸ்தரதளத்திற்கு மேல் விளங்கும் துவாத சாந்தப் பெருவெளியாம் பெருநிலையில் பரம்பொருளின் திருவடியை உணரமுடியாத நிலை ஏற்படும். தம்பேராற்றலை மேல் நோக்கிச் செலுத்தாமல், கீழ்நோக்கிச் செலுத்தி அக்கினியால் அழிவைத் தேடுகின்றனர். பரம்பொருளின் திருவடிச் சிலம்பொசையை உணர்ந்து, அறிந்து அதன்வழிச் செல்லும் சாதகருக்குச் சுழுமுனை நாடியில் அம்பலவாணர் அருள் தரிசனம் தருவார். நாதசம்மியமாகிய சிலம்போசை வழியில் தொடரும் சாதகருக்குக் காம மயக்கம் அறும். அவ்வகைச் செல்வோர் மெய்ப் பொருள் நூல்களின் மெய்பொருளை உணர்ந்து அனுபவிப்பர். அகநோக்கி ஈடுபடும் அன்பருக்கு அவர் விரும்பும் பரம்பொருள் ஏகபோகமாக வேறின்றியிருப்பர்.

கூத்தன் குறியில் குணம்பல கண்டவர்
சாந்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந்துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி யலர்ந்திரு மொன்றே -16

மேலும், இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்பார்தம் ஆயுள் நீண்டு வளர்ந்திடும். உலக போகம் கருதி மூச்சுப் பயிற்சியில் பூரகரேசக கும்பகமாகிய நிலைகளில் ஈடுபட்டால் வாழ்நாள் குறைந்து போகும். மூச்சில் பூரகரேசக கும்பகமற்று முப்பது நாழிகை சமாதியிருப்பின் சகஸ்ரதளப் பொன்னொளியில் அம்பலவாணர் அருட்காட்சி வழங்குவர். இத்தகையோர் என்னில் காலம் அறிவால் முதிர்ந்து வாழ்வர்.

நூறாண்டு வாழ்வு

மனித உடம்பில், அருட்கூத்தை இயற்றும் பரம்பொருள் குறித்த தெளிவு பெற்றால், உடலில், உயிர்மூச்சு சூக்குமமாக அடங்கும் நிலையை அறியலாம். அவ்விடத்தில் இருந்து எண்திசையும் விளங்கும் பரம்பொருள் அருட்காட்சி புரிவர். அட்டதள கமலத்தில் விளங்கும் பரம்பொருளைக் கண்டு இன்புற்றிருந்தால், எடுத்த இவ்வுடம்புடன், புகழ்ந்து சொல்லப் பெறும் நூறாண்டு காலம் வாழலாம். சொல்லப் பெற்ற நூறாண்டு வாழ்ந்தவர் இவ்வுடலையே ஆயிரம் ஆண்டுகட்குக் குலையாத வண்ணம் காப்பார்கள். இவ்வாறு உடம்போடு கூடி ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர்கள் மேலும் பல யுகம் அறிவால் முதிர்ந்து வாழலாம்.

சிவமாம் தன்மை எய்தல்

அட்டதளக் கமலத்தில் சிவனைக் கண்டவர்கள், பல நாட்கள் தளர்வின்றி இருப்பர். உள்ளத்தால், உணர்வால் பரம்பொருளை இடையறாது தியானிப்போர், சிவம் என்றும் தான் என்றும் இரண்டாக அறியாமல் ஒன்றாகவே உணர்ந்து அங்கேயே உறைந்து சிவமாம் தன்மை எய்துவர். இவ்வாறு சிவமாம் தன்மை எய்தி உயர்ந்தவரே உலகத்தோடும் கூடிப்பயன் அடைந்தவர் ஆவர். மிகப்பலர் இவ்வுண்மை உணராமல் புண்ணிய பாவங்களை மேலும் மேலும் செய்து அதன் பயன்களைச் சேமிப்பாராயினர். வேறு சிலர், இவை குறித்த சிந்தையே இல்லாமல், உலகியலில் உழன்று, மீன்போல எப்பொழுதும் இமைக்காத கண்களையுடைய அன்னையை அறியாதவர் ஆயினர். மக்கட்குத் தொண்டு செய்தல் அது மகேசர்க்குச் செய்த தொண்டாகும். அதையும் செய்யாது, தொடர்ந்து புண்ணிய பாவமியற்றிப் பிறப்பறுக்க முடியாதவர் ஆயினர்.

அனுபவ ஞானம் வேண்டும்

கயலுறு கண்ணியைக் காணாதவர்கள், பிறவிப் பயன்எய்தார். தம் வாழ்நாளை வீணே கழிப்பர். அவர்கள் வெட்கமில்லாமல் அனுபவமில்லாச் சாத்திர நயங்களைச் பேசித்திரிவர். அம்மையின் அருட்காட்சி பெறாமையால், அவர்கூறும் தத்துவப் பொருள் யாவும் முழுமை அடையா. மேலும் அவை தொண்டு நிலைக்கு வராமலேயே பயனற்றுப் போகும். பூரண ஞானம் பெற்றோர் மேல்நிலை உணர்வும் கீழ்நிலை அறிவும் உடையவர் ஆவர். பந்தப்படுத்தும் உலகப் பொருளைப் புறக்கண்களால் காணாதவர், நீங்கும் அப்பொருள்களின் தன்மையை அகக்கண்ணால்

காண்பர். நீங்குகின்ற பொருளினுள்ளே மன ஒருமையுடன் பார்த்தால், எப்பொருள்களிலும் இருந்து நீங்காத பரம்பொருளைத் தரிசிக்கலாம்.

கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகும்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கில்
கழியாத அப்பொருள் காண லுமாமே -22

யோகியர் அடையும் பயன்

சாதகர் மூன்று கண்களை யுடையவனும், பிறப்பு இறப்பு இல்லாதவனும், யாவர்க்கும் யாவைக்கும் குருநாதனுமாகிய நந்தியெம் பெருமானை, உயிரினுள்ளே ஆராய்ந்து காண வேண்டும். அப்பொழுது, எட்டுத்திசைகளுடன் மேலும் கீழுமாகிய பத்துத் திசைகளிலும் அவன் வியாபித்து இருப்பதுடன், உயிர்களிடத்துத் தனித்தும் இருப்பதும் அறிவிற்கு வரும் உறுதியைத் தரும் சிவசக்தியும் அமையும். இது உள்ளே ஆராய்ந்து பார்க்க வல்ல யோகியர்களே அடையும் பயன் ஆகும். யார் ஒருவர் அகநோக்கு மேற்கொள்ள விரும்புகின்றாரோ, அவர்க்கே, யோக நிலையில் வழிகாட்ட வேண்டும். பரம்பொருளை அறியும் யோகம் கூடியவர்கட்கு ஆயுள் நீளும்; அவர்கள் யாவரினும் மேம்பட்டு விளங்குவர்; இது யோகிகள் அறிந்த யோக வழியாகும். அடையும் அன்பு மிக உடையார்க்கே அடையும் வழி கூறவேண்டும். அல்லாதார்க்குக் கூறல் அறமன்றாம்.

சகஸ்தரதள மலர்

மூலாதாரப் பேராற்றல் சுழுமுனையாம் குழல் வழியே உயரே சென்று நாதமாக அமைய, உலக மாயையின் காரியங்களான ஆதாரங்கள் ஆறும் தன் செயல் அறும். அப்பொழுது சிவம் விளங்கித் தோன்றும். வல, இடக் கண்களைக் குருநாதர் காட்டிய வழியில் செலுத்த அருட்காட்சி விளங்கும். அங்கே பிரணவ ஓசை எழும். ஆறு ஆதாரங்களும் ஒன்றாகும். மூலாதாரமும் சகஸ்ரதளமும் நேரே தொடர்பு பெறும். இது மந்திர யோகத் திறவு கோலாகும். கீழ்நிலையில் ஓடிக்கொண்டிருந்த சக்தி நிலைமாறி மேல் முகமாக ஓடிச்சென்று சகஸ்ரதளம் விரிந்து அமைய, அண்ணல் சிரசில் வெளிப்பட்டுத் தோன்றுவான்.

சிவனைச் சிந்திப்பவர் சிவமாவர்

அண்ணல் இருப்பிடம் ஆரும் அறியார். அந்த அண்ணல் ஓசை ஒளியாக எழுந்தருளியிருக்கும் இடத்தை அறிந்தவர் உள்ளத்து, அவர்

அகலாது இருப்பர். அப்பொழுது அவரும் சிவம் ஆவர். கட்டிக் கரும்பாம் கருணைக்கடலை ஒவ்வொரு ஆதாரத்திலும் ஒவ்வொரு கடவுளாகக் கண்டு இறுதியில் நீலகண்டரைக் காணலாம். சதாசிவரையும் காணலாம்.

தொகுப்புரை

காலச்சக்கரம் என்னும் தலைப்புடைய பகுதி முப்பது மந்திரங்களையுடையது. காலச்சக்கரம் தடையின்றிச் சுழன்று கொண்டே இருப்பது போல, வினைவயப்பட்ட பிறப்புகளும் மாறி மாறி வந்து கொண்டேயுள்ளன. ஓர் ஆன்மா, பொய்யான இந்த உடலை, மெய்யென்று கருதாமல், அந்த மெய்யைக் கொண்டே, இறைவன் திருவடியென்னும் மெய்ம்மையை அடைந்து விட வேண்டும் என்று துணிந்து, பாச ஞானப் பயனாம் அட்டமாசித்திகளை விடுத்து, யோக நெறி நின்று, பிறவாப் பெருநிலை அடைய வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

34. ஆயுள் பரீட்சை

ஆன்மீகச் செம்மல் **எஸ்.கே. வைத்தியநாதன்** எம்.ஏ.எம்.எட்.,
குறிஞ்சிப்பாடி

பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைத்து எண்ணப்படுவது திருமூலரின் திருமந்திரம். மிகமிக அற்புதமான நூல். திருமூலருடைய வாழ்க்கை வரலாற்றை சேக்கிழாருடைய பெரிய புராணம் நமக்குக் காட்டுகிறது.

அந்தி இளம் பிறைக் கண்ணி
அண்ணலார் கயிலையினில்
முந்தை நிகர் கோயிலுக்கு
முதற் பெரு நாயகமாகி
இந்திரன் மால் அயன் முதலாம்
இமையவர்க்கு நெறியருளும்
நந்தி திருவருள் பெற்ற நான்மறை
யோகிகள் ஒருவர்

என்று அவரை அறிமுகப்படுத்துகிறது சேக்கிழாருடைய பெரியபுராணம்.

அவர் திருவாவடுதுறையில் இருந்து ஓர் அரசமரத்தின் கீழ் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடலை இயற்றினார் என்பது செவி வழிச் செய்தி. பெரிய புராணத்திலும் இச்செய்தியே பேசப்படுகின்றது.

திருமூலர் அருளிய திருமந்திரம் ஆகமங்களின் சாரம். திருமூலர் தம் திருமந்திரத்தில் வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துகிறார்.

தமிழில் தோன்றிய முதல் யோக நூல் இதுவே! முதல் சித்தரும் இவரே! இந்நூலை ஒட்டிப் பிற நூல் இக்கருத்துப் பற்றித் தோன்றவில்லை! இதுவும் இந்நூலின் சிறப்பு.

இந்நூலை குருவின் வாயிலாகக் கேட்க வேண்டும். அப்போதுதான் நூலின் பொருள் நிறைவுறும்.

திருமந்திரம் என்னும் சொல்லில் '*மந்*' என்றால் நினைப்பவர் என்று பொருள் '*தர்*' என்றால் காப்பது என்று பொருள். ஆகவே

நினைப்பவரை எடுத்துக் காப்பது எதுவோ அது மந்திரம் எனப்படும். திரு என்பது தெய்வீகத்தைக் குறிக்கும். ஆக, இது தெய்வீக ஆற்றலுடன் விளங்கி நினைப்பவரைப் பாவக் குழியிலிருந்து எடுத்துச் சிவகதி சேர்த்துக் காக்கும் தகுதியுடையதனால் திருமந்திரம் எனப்பட்டது.

திருமந்திரத்தில் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்தவரையில் நூலின் உட்பிரிவு ஆகும்.

இதன்கண் உள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு தந்திரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் உணர்த்துகின்றன எனலாம். ஐந்து முதல் ஒன்பது வரையில் உள்ள ஐந்தும், வீட்டுப்பேறு, வீடுபேற்றுவழி, வழிபாடு, வழிபாட்டுறுதி வாழ்வு ஆகிய ஐந்தையும் ஒருவாற்றால் உணர்த்துவன எனலாம்.

இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கம் 3 ஆம் தந்திரத்தில் உள்ள ஆயுள் பரீட்சையை விளக்குவதேயாகும். மூன்றாம் தந்திரமானது அட்டாங்க யோகம் முதல் சந்திர யோகம் வரை 21 பகுதிளைக் கொண்டது. இவற்றுள் 15 ஆவது பகுதியாக ஆயுள் பரீட்சை விளக்கப்படுகிறது.

ஆயுள் பரீட்சை

வாழ்நாளை அறிதற்குரிய தேர்வு ஆயுள் பரீட்சையாகும். இஃது உயிர்ப்பின் இயக்கத்தை அறிந்து ஆயுட்கால எல்லையை முடிவு செய்தலாகும். மூச்சு குறைந்து சென்றால் ஆயுள் நீளும். இப்பகுதி 20 பாடல்களைக் கொண்டதாகும்.

தலையின் மேல் வைத்த கை பருத்தும் சிறுத்தும் இல்லாது அளவாய்த் தோன்றினால் நன்மை விளையும். பெருத்துத் தோன்றினால் ஆறு மாதங்களில் இறப்பு ஏற்படும். கையானது இரண்டு பங்கு பருத்துக் காணப்பட்டால் ஒரு மாதத்துக்குள் இறப்பு உண்டாகும் என்று ஆயுளை அறியும் முறையை கீழ்க் காணும் பாடலில் உணர்த்துகிறார்.

வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடில் ஓராறு திங்களாம்
அத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்த லுயிர்க்கொரு திங்களி லோசையே

இன்னொரு பாடலில் நூறு ஆண்டு வாழும் முறைமை பற்றி தெரிவிக்கிறார்.

தலைவனாகிய சிவபெருமான் வாழ்கின்ற இடக்கண் பார்வையை சக்தி வாழ்கின்ற வலக்கண் பார்வையோடு பொருந்தும் வகை அறிந்தவர்கள், இவ்வுலகில் இல்லை. இடக்கண்ணை வலக் கண்ணோடு பொருத்தினால் ஒளியாகிய சக்தி விளங்கும். இச்சாதனையால் ஞானேந்திரியங்கள் ஐந்தும் தன் வயப்பட்டமையால் அவரது வாழ்நாள் நூறாண்டாகும் என்கிறார்.

தலைவன் இடம்வலம் சாதிப்பார் இல்லை
தலைவன் இடம்வலம் ஆயிடில் தையல்
தலைவன் இடம்வலம் தன்வழி அஞ்சில்
தலைவன் இடம்வலம் தன்வழி நூறே

இங்கே இடக்கண் சிவமாகவும் வலக்கண் சக்தியாகவும் பேசப்படுகிறது. இடக்கண் வலக்கண் பொருந்தும் வகை என்பது இடக்கண் வலக்கண்ணுக்கு மேல் பார்த்தால் என்பதாம். அவ்வாறு நோக்கின் ஒளி விளங்கும். குருவானவர் உபதேசம் செய்தபடி தலைவனை வலமாகவும் தலைவியை இடமாகவும் மாற்றுவதால் நூறு ஆண்டு வாழலாம் என்பதும் கருத்துமாம்.

அடுத்து ஒரு பாடலில் மூச்சுக்காற்று நீண்டால் ஆயுள் குறையும் என்றும், மூச்சுக் காற்று குறைந்தால் ஆயுள் நீளும் என்று தெரிவிக்கின்றார். அதாவது மூச்சுக் காற்று ஆறுவிரல் கடை அளவு வெளியேறினால் எண்பது ஆண்டுகள் வரை வாழலாம் என்றும் மூச்சுக்காற்று ஏழுவிரல் கடை அளவு வெளிப்படுவதை எண்ணினால் ஆயுட்காலம் 62 ஆய் அமையும் என்று தெரிவிக்கின்றார்.

ஏறிய ஆறினில் எண்பது சென்றிடும்
தேறிய ஏழில் சிறக்கும் வகை எண்ணில்
ஆறுஒரு பத்தாய் அமர்ந்த இரண்டையும்
தேறியே நின்று தெளியிவ் வகையே

அடுத்து ஒரு பாடலில் ஐம்பது, முப்பது ஆண்டுகள் வாழ்பவரின் மூச்சு அளவுகள் பற்றியும் பேசுகின்றார்.

எட்டு விரற்கடை அளவு மூச்சு நீண்டு இயங்குமானால் அவர்களின் ஆயுள் ஐம்பது ஆண்டுகள் என்றும் செம்மையாக மூச்சுக் காற்று ஒன்பது விரற்கிடை இயங்குமானால் அவர்களின் ஆயுள் காலம் முப்பத்து மூன்று ஆண்டுகள் என்றும் துல்லியமாகத் தெரிவிக்கின்றார்.

இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே என்ன அறியலாம்

செவ்வகை ஒன்பதும் சேர வேநின்றிடின்
முவ்வகையாம் அது முப்பத்து மூன்றே

அடுத்து ஒரு பாடலில் இருபத்தெட்டு மற்றும் இருபத்தைந்து ஆண்டுகள் வாழ்வதற்குரிய உபாயத்தைக் கூறுகின்றார். பத்துவிரல் கடை அளவு மூச்சு முடிவு பெற நின்றால் இருபத்தெட்டு ஆண்டுகள் வாழலாம் என்றும், பதினைந்து விரற்கடை மூச்சுக் காற்று ஓடினால் இருபத்தைந்து ஆண்டுகள் வாழலாம் என்றும் தெரிவிக்கின்றார்.

மும் மூன்றும் ஒன்றும் முடிவு உற நின்றிடில்
எண் மூன்றும் நாலும் இடவகையாய் நிற்கும்
ஐம் மூன்றும் ஓடி அகலவே நின்றிடில்
பன் மூன்றொடு ஈராறு பார்க்கலும் ஆமே.

ஒரு பாடலில் இறைவனோடு பொருந்தி அன்பைச் செலுத்துகின்றவர்களுக்கு காலம் செல்வதே தெரியாது என்று கூறுகின்றார். அவர்களை யோகியர்கள் என்றும் அழைக்கின்றார் திருமூலர்.

ஈரைந்தும் ஐந்தும் இரு மூன்றும் எட்டுக்கும்
பார் அஞ்சி நின்றபகை பத்துநாள் ஆகும்
வாரம் செய்கின்ற வகை ஆறஞ்சு ஆமாகில்
ஓர் அஞ்சொடு ஒன்று ஒன்று என ஒன்றும் நாளே!

அதாவது பத்தும், ஐந்தும் ஆறும், எட்டுமாகிய அதாவது இருபத்தொன்பது நாட்களும் உலகோர் அஞ்சும்படி பகை செய்யும் நாட்களாகும். இந்நாட்கள் யோகியர்க்குப் பத்து நாட்கள் போலத் தோன்றும். அன்பினைப் பெருக்குகின்ற வகையில் இறைவனோடு கலந்திருக்கின்ற முப்பது நாட்களும் ஏழு நாட்கள் கழிந்தன போலத் தோன்றும் என்கின்றார்.

அடுத்து, சிவத்தின் இயல்பு பற்றி ஒரு பாடலில் தெரிவிக்கிறார். காற்றுடன் கூடி ஐந்து தன்மாத்திரைகளை அறியும் அறிவாகிய சிவம் அறிவாகும். அச்சிவமே உலகுயிர் எல்லாவற்றின் அறிவாகும். எனவே சிவத்தைப் பிரித்து அதனை வேறாகக் காணாமல் ஒன்றாய்க் காணின் அப்பொருளான சிவமே உயிருடன் கூடிநின்று எல்லாப் பொருளையும் விளக்கித்தானும் விளங்கும்.

அறிவது வாயுவொடு, ஐந்து அறிவு ஆய
அறிவு ஆவது தான் உலகுயிரத்தின்
பிறிவு செய்யா வகை பேணி உள்நாடின்
செறிவது நின்று நிகழும் அதுவே

இத்தந்திரத்தின் இறுதிப் பாடலில் ஆன்மாக்களுக்கு எப்பொழுது பற்று நீங்கி அகன்ற அறிவு உண்டாகும் என்பதைத் தெரிவிக்கின்றார்.

பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழுப்பதி யாவது பற்று அறும்பாசம்
அழுப்படி செய்வார்க்கு அகலும் மதியே

அதாவது படைப்புச் செயலை எண்ணிய பெருமையுடைய சிவத்துக்கும் பிறப்பு இன்றிக் காண்பவரது அழகிய உடம்பு பழமையான இடமாகும். இவ்வுண்மையை உணர்ந்தவர்களுக்கு ஆசை நீங்கும். பின் ஆசைக்குக் காரணமான பாசங்களை வருந்துமாறு செய்யும் அறிவு உண்டாகும் என்கிறார்.

திருமந்திரத்துக்கு நிகரான நூல்களே இல்லை என்பது உறுதி. இப்புனிதமான திருமந்திரத்தை காலையில் எழுந்து கருத்தறிந்து ஓதுவோர் பாசம் நீங்கிப் பதியைச் சாருவர்.

மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்
ஞாலமறியவே நந்தியருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடில்
ஞாலத் தலைவனை நண் ணுவரன்றே.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

35. வாரசரம், வாரசூலம்

புலவர். அர. பிரகதம்பாள் எம்.ஏ.எம்.எட்.,
கோனாபட்டு

முன்னுரை

நிறைமொழி மாந்தராம் திருமூலர்-ஆம்! திரு என்னும் சொல் அடைமொழியாகி மூலர் என்பது உலக உயிர்கட்கெல்லாம் மூலமாகும் கருத்துக்களைக் கூறியவர் என்றாகி அவரது ஆணை என்னுமிடத்து, அவரது எண்ணத் தொகுப்பே மந்திரமாக வெளிப்பட்டதெனக் கொண்டால் திருமூலரின் திருமந்திரம், அதாவது புகழ்நூல், பொருள் நூல் என்ற இருவகைப் பட்ட நூல்களுள் ஐம்புல நுகர்வில் சிறப்புடன் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமை கூறும் மந்திர மாலையாகப் புகழ் நூலாக அமைந்துள்ளது. வேதாகமங்களின் கருவூலமெனப்படும் திருமந்திர நூலில் மூன்றாம் தந்திரமாய் விளங்கும் பகுதியுள் வாரசரம், வாரசூலம் என்பன பற்றி அறிய முற்படுவோம். மூன்றாம் தந்திரத்துள் பேசப்படும் பொருள் வீராகமத்தின் சாரமே ஆகும்.

வாரசரம்

வாரசரம் என்னும் கூற்றினை ஆராயுமிடத்து வாரத்தின் ஏழு நாட்களில் நம் உயிர் மூச்சின் ஓட்ட கதி என்ன என்பதை ஆராய்தல் என்பது புலனாம். சாதாரணமாக ஒவ்வொரு உயிரியும் இறைவன், உலகுடன் ஒத்து இயங்குதல் வேண்டும். இல்லையெனில் உடல் ஒவ்வாமை என்னும் நோய்க்கு ஆட்பட்டு மடிய நேரிடும். மேலும் இந்த உலகம் என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டது. இந்த ஐம்பெரும் பூதங்களின் மிக மென்மையான பகுதியின் சேர்க்கையால் ஆனது உலக உயிர்களின் மனம். இப்பூதங்களின் தாக்கம் ஒரு சிறிதேனும் அதிகமாக மனதில் சேருமானால் மனம் நொறுங்கி அழிய ஏதுவாகும். உதாரணமாக மயக்க மடைந்த ஒருவர் பக்கம் கூட்டமாகச் சுற்றிலும் மக்கள் நின்றால் மயக்கமடைந்தவர்க்குக் காற்று கிடைக்க வாய்ப்பில்லை. உடனே எல்லோரும் சற்று விலகி நில்லுங்கள், காற்று வரட்டும் என்று கூறுவர். அது போலவே நெருப்பின் சக்தி குறைந்தால் *ஜன்னி* ஏற்பட்டு வருகிறது. ஆகவே நம்மனம் வழி நாம் நன்கு செயல்பட இந்தக் காற்று நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் நம் உயிர்ப்பு எனப்படும் மூச்சு நன் முறையில் இயங்க வேண்டும்.

இம்மூச்சு செல்லும் வழி இடகலை, பிங்கலை ஆகியவைகளை நாடிச் சென்று நன்முறையில் முழுமையுடன் செயல்பட்டால் அதாவது உடலை நோய், நொடியின்றி நீண்ட காலம் வாழ வைக்க, அதாவது சரமென்னும் மூச்சை அடக்கிவிடும் (உயிரின் ஓட்டத்தைச் சரமென்பர்) வழியினை நன்முறையில் முழுமையுடன் செய்தால் நரைத்த நம் தலைமுடி கூடக் கருப்பாய் மாறும் என்பதனைத் திருமூலர்,

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே

என குண்டலினி சக்தியை எழுப்பப் பயன்படும் இந்த மூச்சுப் பயிற்சியால், நம்மிடம் விட்டு இறைவன் அகலான்; அதாவது நமக்கு இறப்பு எளிதில் வாரா.

வாரசரம் என்னும் மூச்சுப் பயிற்சி செய்யும் முறை பற்றிப் பேச வந்த திருமூலர்,

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே

என்ற பாடல் மூலம் வெள்ளி, திங்கள், புதன்கிழமைகளில் இடமூக்கின் வழி மூச்சு செலுத்துதல் வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் வல மூக்கின் வழியாகச் செலுத்துதல் வேண்டும். வியாழக்கிழமைகளில் வளர் பிறையில் இடமூக்கும், தேய் பிறையில் வல மூக்கிலுமாக மூச்சு ஓடுதல் வேண்டும். **Normal Body** என்ற மருத்துவர் வழங்கும் ஒவ்வொரு உயிரிக்கும் வாரத்தின் எந்தெந்தக் கிழமைகளில் அந்தந்த மூக்கின் துளை வழி மூச்சுச் செல்வது இயல்பு வாழ்க்கையாகும். மூச்சுப் பயிற்சி செய்வோர் இடகலை, பிங்கலை என்று மாற்றி மாற்றிச் செய்து உடலினைச் சாதாரண நிலையிலிருந்து உறுதி நிலைக்கு உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யலாம். அம் முயற்சி முறையுடன் கூடியதாக அமையுமானால் உயிர்க்கிறுதி இல்லை என்பதை அடுத்த பாடல் தெளிவாக விளக்குகிறது. அதாவது, வெள்ளி, திங்கள், புதன், ஆகிய மூன்று நாட்களிலும் இயற்கையாகவே பயிற்சி வயத்தால் வலமூக்கை விட்டு இடமூக்கின் வழியாகவேோடின் சிறந்த உடம்பினுக்கு அழிவில்லை என்று சிவன் கூறுவதாகச் சொல்வர்.

வார், வாரம் என்பதன் கடைக்குறையாக நின்று செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் முற்கூறியபடி ஓட்டம் அறிபவர் இடமூக்கை ஒழித்து வலமூக்கின் வழியாகவே மூச்சினைச் செலுத்தி அழியா இன்பம் எய்துவர். இது இறைத்தன்மையின் இரகசியம் என்றும் கொள்வர்.

யோகாசனப் பிராணாயாம நியதிப்படி வாழ்வாங்கு வாழ்பவர் தங்கள் பயிற்சியின் மூலம் மூச்சினையும், ஒலியினையும், மனத்தையும், தன் மனச் செயல்களையும் தங்கள் உடலில் ஆங்காங்கே நிறுத்தி உடலின் பற்பல இடங்களில் ஏற்படும் சிறுசிறு நோய்கள் முதல் பெரும் நோய்கள் வரையில் உண்டாகும் நோவினை எளிதில் குணமாக்கிச் சாதனை செய்தமைக்கு பதினெண் சித்தர் முதல், பல மகரிஷிகள் வரை சான்றாக அமைவர்.

திங்கட்கிழமை இடமூக்கின் வழியாகவும், ஞாயிற்றுக்கிழமை வல மூக்கின் வழியாகவும் உயிரோட்டம் எனப்படும் நாடி செல்ல வேண்டிய இயல்பு மாறி நடந்து ஏறி இறங்குவதும், நடு நாடியிற் மூச்சுக் காற்றுப் புகுவதும் ஓர் உடலில் உண்டாகுமாயின் வளரும் உயிருக்கு இடர் உண்டாகும். அதாவது மூச்சோட்டத்தில் தடை ஏற்பட்டு உயிருக்கு இறுதி ஏற்பட வாய்ப்புண்டு. இஃது மூச்சுப் பயிற்சி செய்யத் தெரியாத அஞ்ஞானிகட்கும் மூச்சுப் பயிற்சி செய்ய முடியாத வியாதியஸ்தர்களுக்கும் ஏற்படும் நிலையாகும். நம் உடலில் ஏற்படும் இரத்த அழுத்தம் பற்றி சோதனை செய்கின்ற மருத்துவர்கள் நம் இரத்த ஓட்டத்தைத் திரையில் அலை அலையாகப் பதிவாவதைக் கண்காணித்து வருவர். இவ்வலை மேலும் கீழும் ஒரே சீராகச் சென்று வந்தால் அலை உயர்ந்தும், தாழ்ந்தும் ஓடும். அலைகளின் இடைவெளி சில நேரங்களில் மிகுந்து காணப்படும். இதனை மருத்துவர்கள் இரத்த ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் காற்று சிதறி ஓடுவதாகக் கணக்கிடுவர். மேலும் இரத்த ஓட்டத்திற் காணப்படும் காற்றின் வீச்சு அளவில்லாமல் ஓடுவதாகவும் கணக்கிடுவர். இவ்வலை வீச்சு வித்தியாசப்படும்போது இறப்பு நெருங்கும் அல்லது உடன் இறப்பர் என்பதை,

உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்
உவத்தது வேமிகு வோடிடு மாகில்
உதித்த விராசி யுணர்ந்துகொ ளுற்றே

என்ற பாடல் மூலம் விளக்குவார் திருமூலர்.

நம் வேலைகள் தடையின்றி நடந்தால் நமக்கு நல்ல இராசி என்றும், வேலைப் பளுவினிடையே தடங்கல் ஏற்பட்டு மனம் வேதனைகட்கு

ஆட்படும்போது நம் இராசி சரியில்லை என்றும் நாம் எண்ணுவது இயல்பு. நமது மூச்சு ஓட்டம் வலப்புறம் உள்ளபோது ஒரு செயல் செய்யத் தொடங்கினால் அவ்வேலை இனிது முடியும். மூச்சு ஓட்டம் இடப்புறம் செல்லும்போது செய்யத் தொடங்கினால் அவ்வேலை நன்கு நடைபெறாதென்பதையே திருமூலர் இவ்விதம் விளக்குவார் போலும்.

தமது உடலில் உள்ள யோக ஆதாரத் தானங்களைத் தனது வசப்படுத்தியவர்கள் மூலாதாரம், ஸ்வாதிஸ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை சக்ரம் மற்றும் சகஸ்ராரம் என்ற தளங்களில் ஏதேனும் ஒன்றின் மூலம் நேரடியாகப் பிராணனை இடது நாசி, வலது நாசி என்று மூச்சுக் காற்றை மாறி மாறி விடுவது உயிர்ப்போட்டம். நடு நாடியில் நிற்றல் எனப்படும். அப்படி இல்லாமல் மூச்சோட்டம் விரைவாக இடம், வலம் என்று அளவின்றிச் சிதறி ஓடினால் இறப்பு ஏற்படும். அவ்வாறு இறப்பினைத் தரும் மூச்சோட்டத்தைச் சிவபெருமான் திருவடிக் கீழ் நிறுத்தினால் மூலவாற்றல் எழும்பும். திருவருள் ஒளி ஆவியுடன் விளங்கும் என்று திருவடி மறவா நெறியினை ஈண்டு உணர்த்துகிறார்.

உள்ளத்தில் உள்ளானடி- அது நீ
உணர வேணுமடி
உள்ளத்தில் காண்பாயெனில் - கோயில்
உள்ளேயும் காண்பாயடி

என்னும் கவிமணியின் பாடல் அடிகளை உற்று நோக்கினால் இறைவன் என்பவன் உலகில், ஆம்! அண்டவெளியில் எவ்விடத்திலும் காண முடியாத அந்த பேருண்மையை வேறெங்கும் காண முடியாது. உள்ளந் தனிலே உறையும் அவனை வேறெங்குதான் காண இயலும்? கடவுள் எனும் சொல்லை ஆராய்ந்தால் கட+வுள்; வெளிச் சிந்தனைகளையெல்லாம் வேறாக்கி உள்ளத்தைத் தூயதாக்கி ஆராய்ந்தால் அங்கு குண்டலினி சக்தியில், திரோதான சக்தியாக இறை உறைவது புலனாகும். இதனையே திருமூலரும் தனது “ஆயும் பொருளும் அணிமலர் மேலது” என்ற பாடலில், வெளிப்படையான காடுறை தவம், காஷாயம் உடுத்திய தவம் இவற்றால் எல்லாம் எளிதில் காணமுடியாத இறைவன் அகத்தவத்தோர் எனப்படும் யோகிகளால் ஆராயப்பட்ட அவன் மனத் தாமரையில் உறைந்து, பரவெளித் தாமரையில் விளங்கும் முழுமுதற் சிவனேதான். அதற்காகப் பயிலும் மாத்திரை பற்றித் திருமூலர் கூறுமிடத்தும் 16 மாத்திரையளவு இடகலையால் மூச்சை உள்ளே இழுத்துப் பூரகம் செய்து 16,64,32 மாத்திரை காற்றை உள்ளே நிறுத்தித் தடுத்தம் கும்பகம் (மூச்சடக்கல்) செய்து 32 மாத்திரை அளவில் மெல்ல வெளிப்படுத்துதல் இரேசகம் (மூச்சு

வெளிவிடல்) இம்மூன்றும் சேர்ந்து செய்யும் ஒவ்வொரு முழுநிலைப் பிராணாயாமம் செய்ய ஆகும் கால அளவான மாத்திரை என்ற கால அளவை ஆராய ***ஓம்*** என்ற சொல் ஒலிக்கும் கால அளவு இரண்டு. ***சிவ*** என்ற சொல் இரண்டு மாத்திரை. ***சிவ சிவ*** என்பவை நான்கு மாத்திரை அளவு ஒலிக்கும் எனக் கணக்கிட்ட வகையில் ஒலிக்கும் (16+64+32) 112 மாத்திரை எனக் கணக்கிட்டுள்ளனர்.

இம்மாத்திரைக் கணக்களவில் மனவொடுக்கத்தைத் தரும் காரணப் பொருளும் சிவன்தான். வாழ் நாட்களைக் கூறுபடுத்தி வழங்கும் நாள், கிழமை, திங்கள், ருது, ஆண்டு, முழுத்தம் (முகூர்த்தம்) முதலியவற்றின் காரணப் பொருளும் சிவனேதான். அதாவது சிவனைச் சிவமாக்குவதும் அவன்தான் என்பது பொருள். இவ்வாறு சிந்தித்து வாழ்நாளைக் கழிப்பதால் அகவை மிகும்.

அறிவியலில் சூழ்நிலைத் தகவமைப்பு என்பதைக் கடைப்பிடிப்பவர் நோய் நொடியின்றி வாழலாம் என்பது வழக்காறு.

வார சூலம்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்- கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்னும் ஔவையின் பாடல் ஒன்றின் மூலமே உலக மக்கள் அனைவரும் இறைவனுடன் ஒன்றும் மார்க்கத்தை இயம்ப வேறு எடுத்துக் காட்டு இயம்ப முடியா நிலையில் வாரசூலம் என்னும் கூற்று இயம்புவது யாதெனின் இறைவனின் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் என்னும் ஐந்தொழில்களுள் மறைப்பாற்றலின் கைப்படையாகிய முத்தலை வேல் (சூலம்) வரும் வழி வருமாறாகும்.

உலக உயிர்கள் உய்வதற்கான மார்க்கத்தைக் காட்டும் சாதகம் திருமந்திரமன்றி வேறொன்றில்லை என்னும் கூற்றினை மெய்ப்பிக்கும் வண்ணம் திருமூலர் தனது ஐந்து தந்திரத்துள் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற பற்பல கருத்துக்களைக் கூறத் தலைப்பட்டவர் உடலில் உள்ள சுமார் 72,000 நாடி நரம்புகளை நன்முறையில் வைக்க சுமார் 84 லட்சம் ஆசனங்கள் வாயிலாக உடலைச் சமநிலைப்படுத்தி வைத்திருக்கலாம். ஆனாலும் மக்கள் தங்கள் கடமைகளை ஆற்ற இல்லம்

விட்டு அகலச் சில தடைகளை அடியொற்றிச் சென்றால் காரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறுமன்பர்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

என்று முருக பக்தர்கள் கூறினாலும் வாரசூலம் என்பது மக்கள் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு தத்துவம். அச்சூலம் வாரத்தின் ஏழுநாட்களுக்கும் வரும் முறைகளைக் கணக்கிடத் தலைப்பட்ட திருமூலர்-

இறைவனின் மறைப்பாற்றல் கைப்படையான சூலம் நமை நோக்கி வரும் நாட்கள் திங்களும் சனியும் கீழ்த்திசை என்றும், செவ்வாய், புதனும் வடதிசை என்றும், ஞாயிறு, வெள்ளி, மேற்றிசை என்றும் பகுப்பர்.

உலகியல் கூறுபாடுகளின்படி தங்களின் வாழ்நாளை தங்கள் சாதி, மத பேதங்களின்படி அமைத்துக் கொண்டு தங்கள் முயற்சிக்கேற்பச் சிறப்புப் பெற்று வள்ளுவர் கூறுவது போல-

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் . (972)

என்னும் குறளுக்கு ஏற்ப எல்லோருக்கும் பிறப்பு ஒரே மாதிரியாய் இருந்தாலும் அவரவர் செய்கின்ற செயல்களின் சிறப்பிற்கேற்ப அவர்கள் சிறப்பும் வேறுபடும். ஆனாலும் மக்கள் ஒவ்வொருவர் பிறந்த நாள், நேரம், மணிக்கணக்கின் படியும் நட்சத்திரங்களுக்கேற்பவும், அவர்கள் முன்வினைப் பயனுக்கேற்பவும் பிறவி எடுத்து அதிர்ஷ்டம் உள்ளவராகவோ, இல்லாதவராகவோ இருந்தாலும் நேரம் நன்கிருந்தால் எல்லாம் நல்லதாக நடக்கும் என்பதையே திருமூலர்-

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே

என்ற பாடலின் மூலம் வியாழக்கிழமை தென்புலம் சூலமாகும் என்பர்.

இச்சூலம் நம்மை என்ன செய்யும் என்று வேண்டுமென்றே இராகு காலத்தில் ஒரு செயலைத் தொடங்கினாலோ, அந்த நாளுக்குரிய சூலத்திசை

என்செயுமென அத்திசைப்பயணம் செய்தாலோ நம்மனத்தளவோ, அல்லது உடலளவிலோ அல்லல், அவதிப்பட்டுத்தான் தீரவேண்டியது நியதி.

எலும்பு மாலை சூட்டப்பட்ட முத்தலைவேல் இடப்பக்கத்தும், பின்பக்கத்தும் உறுதுணையாய் நிற்பின் முயலும் செயல் அனைத்தும் இன்பமாய் முடியும். வலப்பக்கத்தும், முன்பக்கத்தும் தோன்றுமானால் செயல் துன்பமாய் முடியும்.

எடுத்துக் காட்டாக வெள்ளி, ஞாயிறு, செவ்வாய் புதன் ஆகிய நான்கு நாட்களில் கிழக்கு நோக்கிச் செல்லலாம். திங்கள், சனி, வியாழன் மேற்கு நோக்கியும் செல்லலாம். வியாழன் வெள்ளியும், ஞாயிறும் வடக்கு நோக்கியும் செல்லலாம். செவ்வாயும், புதனும், திங்களும், சனியும் தெற்கு நோக்கியும் பயணம் செல்லலாம். அப்படிச் செல்வது நன்மையாம்.

பின்னுரை

திருமூலர் அருளிய திருமந்திரம் மூன்றாம் தந்திரம் பகுதியில் வாரசரம், வார சூலம் ஆகியவற்றில் கூறப்பட்ட ஒன்பது பாடல்கள் கூறும் கருத்தை ஊன்றிக் கவனித்து அதன்படி நடந்தால் நம் வாழ்வு நலம் பெறும் என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

36. கேசரி யோகம்

சித்தாந்த இரத்தினம். **வீ.ஜெ. தவகோடி நாராயணன்,** *பி.இ.,*
மெய்கண்டார் சைவசித்தாந்த ஆய்வு மையம், தஞ்சாவூர்

முன்னுரை

யோக நெறியில் வல்லவர்கள் தங்களது அனுபங்களை உலகுக்கு எடுத்துக்கூறுவர். யோக நூல்கள் நமது உள்ளத்தின் நிலைகளை அலையவிடாமல் ஒருவழிப்படுத்த உதவுனவாகும். நாம் மனத்தை ஒருவழிப்படுத்தும்போது உள்ளுணர்வு உண்டாகும். அதனால் விளக்கம் பெற்ற பின் உள் ஒளி உண்டாகும். இவ்வொளி, ஆன்மாவுக்கு நற்பயனை அளிக்கும். இதனை உணரச் சற்குருவை நாடவேண்டும். குருவினது அருளால் செம்பொருளாகிய விழுப்பொருளை அறியமுடியும்.

யோகம்

யோக நூல்கள் நெறிகளை எட்டுவகையாக வகைப்படுத்துவர். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர்க்கு எந்த யோக நெறியும் கைகூடிவராது. மனத்தினைப் புலன்கள் வழியாகச் செல்வதைத் தடுக்க நல்லொழுக்கத்தைக் கொடுப்பது இயமம் ஆகும். அதற்குரிய தினசரி கடமைகளைச் செய்யும்போது, உடல், பொருள், உயிர் இவற்றை இறைவனுக்கே கொடுத்தல் நியமம் எனப்படும். அதற்கு உதவி செய்ய உடலையும், மனத்தையும் பக்குவப்படுத்த மேற்கொள்ளும் நிலையான இருக்கை ஆசனம் ஆகும். அதற்கடுத்து, பிராணனைத் தன்வயமாக்குவதற்குரிய உபாயம் பிராணாயாமம் ஆகும். இதில் ஓம் எனும் பிரணவத்தினைச் சேர்த்துப் பயிற்சி மேற்கொள்ளுதல் சிறப்பாகும். புலன்களை வெளிச்செல்லாமல் தடுப்பது பிராணாயாமம். மனத்தினை ஓரிடத்தில் நிலைபெறச் செய்தலே தியானம். உரையும், உணர்வும் கடந்து விளங்கும் நிலை சமாதி நிலையாகும். முறையாகப் பிராணாயாமம் செய்வோர் செம்மையான மனத்தைப் பெறுவர். செம்மையான மனத்தை உடைய யோகிக்கு மட்டுமே சுழுமுனை திறக்கப்பட்டு இருக்கும். சுழுமுனையைத் திறக்கச் செய்வதே யோகியின் முதற்படியாகும்.

முள்ளந்தண்டுக் கொடியின் அடியில் உள்ளது மூலாதாரம். அதற்கு மேல் உள்ளது சுவாதிட்டானம். மூன்றாவதாக உள்ளது மணிபூரகம். அதற்கு மேல் நான்காவதாக உள்ளது அநாகதம். ஐந்தாவது இடம் விசுத்தம். ஆறாவது இடம் ஆக்ஞை. அதற்கு மேலே உள்ளது ஆயிரம் இதழ்த் தாமரையாகிய சகஸ்ராரம்.

யோக நெறி பற்றி நிற்போர் மேற்கூறிய யோகப்படியின் நிலையறிந்து அதன் வழியில் நிற்கப் பழகவேண்டும். அவ்வாறு பழகுவதால், அவரது சித்தம் தூய்மையை அடையும். அந்த நிலையில் உள்ள யோகியரால்தான் முழுமையான நிலையை அடைய முடியும். அவர்கள் பிறவாப் பெருநிலையை அடைவர். அவர்கள் செய்யும் தொழில்கள் சிறந்தனவாக இருக்கும். வினைகள் அவர்களைக் கட்டுப்படுத்தாது. யோகியைப் பிறப்பு இறப்பு எப்போதும் பற்றுவதில்லை. யோகி தனது உடலை அணுவினைப் போல் நுண்ணியதாக்கவும், மலையைப் போல் பெரிதாக்கவும், காற்றினைப் போல் இலகுவாக்கவும், பூமியைப் போல் மிகப் பளுவுள்ளதாக்கவும் வல்லவர் ஆவார். இடகலை, பிங்கலை நாடிகள் வழியாகப் பிராணவாயு நுகர்தலை மாற்றமடையச் செய்து நடுநாடி வழியாக உட்கொள்ள வேண்டும். இப்பயிற்சி உடையவர்களுக்கு மனச்சோர்வு உண்டாகாது.

துதிக்கையில் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம் -801

ஊண், உறக்கம் நீக்கி தியானிக்கும் இவர்களுக்கு இறப்பு என்பதே இல்லை. இவர்களால் உரை உணர்வு கடந்த காட்சியைப் பெறமுடியும். இத்தெய்வீக ஞானத்தை இறைவனிடத்து அன்பு செலுத்தியும் பெறலாம்.

கேசரி யோகம்

கேசரி ஆசனத்திலிருந்து செய்யும் யோகம் கேசரி யோகமாகும். திருமூலர் கேசரி ஆசனத்தை விளக்கும்போது, பாதத்தின் நுனிகளைப் பூமியில் ஊன்றி முழங்காலில் கைகளை நீட்டி, அன்போடு வாயைப் பிளந்து கொண்டு அழகுற நிலையில் கண்களை மூக்கு நுனியில் வைத்திருப்பது என்பார்.

சேகரி யோகத்தில், அமர்ந்த யோகியானவர் தன் உடல் தளர்ந்து கீழே தொங்கி விழாத வண்ணம் நிமிர்த்திக் காட்ட வேண்டும். தம்மிடம் உள்ள அடுப்பாகிய குதத்தை அணை கோல வேண்டும். புட்டமாகிய பின் பக்கத்தை அணையின் மேல் பூட்ட வேண்டும். இம்முறையில் உடலை நேராக நிமிர்த்தி இருப்பவர்கட்கு இறப்பு இல்லை.

கேசரி யோகத்தை மேற்கொள்ளும் யோகி, மிகுந்த புலன் நுகர்ச்சி, கடுந்தவம் எனும் இரண்டையும் விலக்குதல் வேண்டும். மிதமான உணவும், மிதமான உறக்கமும் தேவை. திருமூலர் ஆன்மாவை சலவைத் தொழிலாளியாகவும், நெற்றியை அவன் ஒலிக்கும் பலகையாகவும் (கல்), சுழுமுனைத் தியானத்தைக் குளமாகவும் உருவகப்படுத்துகிறார். அவர்களால் தான் இருந்த இடத்திலிருந்தே எந்தப் பொருளையும்

அடையவும், எண்ணிய அனைத்தையும் அடக்கியாளவும், விரும்பிய எதனையும் வெல்லவும் முடியும். அவர்களது உடல் என்றும் அழிவற்றதாகிறது. யோகி விரும்புகின்ற வரை அதற்கு ஒன்றும் தீங்கிழைக்க முடியாது. இதனால் யோகியர் நற்கதி அடைகிறார்கள். யோகியை பிறப்பு இறப்பு என்றும் பற்றுவதில்லை.

கேசரி யோகத்தின் பயன்

யோகப் பயிற்சி செய்பவரின் உடல் நிமிர்ந்திருக்க வேண்டும். உடலை நேராக வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் சுழுமுனை திறக்க உதவியாக இருக்கும். உடல் வளைந்திருந்தால் முள்ளந்தண்டுக் கொடி கலக்கம் அடையும். நம்மிடம் நம்மை அறியாமல் ஒருவித ஆற்றல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஆற்றலை முறையறிந்து செலுத்தி நற்பயனை அடையலாம். இதற்கு அடிப்படையான பயிற்சி தேவை.

முதலாவதாக மூச்சை மெதுவாக உள்ளிழுக்க வேண்டும். மூச்சை வெளியிடும்போது மெதுவாக விட வேண்டும். சுவாசத்தை நிறுத்தி வைக்கும் பயிற்சியை அளவுக்கு மேல் செய்தல் கூடாது. இதனைப் படிப்படியாகத் தான் செய்ய வேண்டும். இவ்வாறு செய்பவர் அமுத ஊற்று ஊறப்பெறும் நிலையை அடைவர். அதன் பயனாக நல்ல தோற்றப் பொலிவு கிடைக்கும். முகத்தில் அமைதி தவழும். அந்த யோகி அழகிய குரலையும் பெறுவார்.

நீடுவாழும் உபாயம்

யோகியானவர் மார்பு, கழுத்து, தலை ஆகிய மூன்றையும் நேராக நிமிர்த்தி வைக்கப் பழக வேண்டும். அவ்வாறு பழகும்போது உடல் உறுதியே மன ஒருமைப்பாட்டுக்கு வேண்டப்படுவதாகும். இவர்களுக்கு நோய், மூப்பு வருவதில்லை. சிவயோகி, தனது நாவின் நுனியைப் புருவ மத்தியில் வீசிப் பயில வேண்டும். அப்புருவ மத்தி ஆன்மாவும் இறைவனும் உறைகின்ற இடமாகும்.

சீவனும் அங்கே சிவனும் உறைவிடம் -803

அங்கே பிரும்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோருடன் முப்பத்து முக்கோடி தேவர்களும் தோன்றுவார்கள்.

ஒரு பொருள் எங்கு ஆய்வு செய்யப்படுகிறதோ, எங்கு காற்றானது கட்டுப்படுத்தப்படுகிறதோ, எவ்விடத்தில் இன்பரசம் ஓடுகின்றதோ அவ்விடத்திலே ஒரு *பூரணமான மனம்* படைக்கப்படுகிறது. சாரதி

முரட்டுக் குதிரைகளை அடக்கியாளுவது போல, யோகியும், மனத்தை அடக்கி ஆளுகின்றார். கருவிக்கரணங்களை மனத்தில் செலுத்தும்போது யோகிக்கு அச்சம் ஏற்படாது. அவர்களுக்கு *அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை* எனும் நிலை வந்துவிடும்.

பிரமந்திரமும் தேனூறலும்

உடலை மலையாக உருவகப்படுத்தும் திருமூலர், பிரமந்திரத்தை உயர் வரை உச்சி என்று குறிப்பிடுகின்றார். இவ்விடத்தில் அமுது ஊறும் நிலையை சிவயோகியரே உணர்வர். இந்த அமுதினைப் பருகி நீடுவாழ்வார்கள். நிலைத்த மகிழ்ச்சியும் ஏற்படும். மனம் ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியிருக்கும் இயல்பினை உடையது. அது ஒரு பொருளை நினைக்கவும், தலையுச்சி, இதயம் முதலிய இடங்களில் நிறுத்தவும் முயலுகிறது. அந்த நிலையில் நிறுத்தி, மற்ற உணர்வுகளை நீக்கி, ஒரு குறிப்பிட்ட இடத்தில் உண்டாகின்ற உணர்வுகளை மட்டும் பெற்று வெற்றி பெற்றால் அமுதம் ஊறும். இதற்கு உறுதுணையாக வேண்டப்படும் தியான நிலையில், புறவுணர்வு விலகி, அகவுணர்வு தானே வந்து கூடுகிறது. மனம் அங்கே குவிக்கப்படும்போது, நிலைபெறச் செய்யும் நிலைமையை அடையலாம். அப்போது அப்பொருளின் நுண்ணிய நிலையை ஆய்ந்து உணரமுடிகிறது.

சுழுமுனை திறக்கும் உபாயம்

நாம் சுவாசிக்கும் காற்றினை, இடகலை பிங்கலை வழியாக அண்ணாக்கில் விரைந்து செலுத்த வேண்டும். அங்ஙனம் செலுத்துவோர்க்குச் சுழுமுனை திறக்கும்.

மேலையண்ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும் -805

அவர்களிடம் எமன் அருகில் வரமாட்டான். கதவு திறந்த நிலையில் உலகம் அறிய நரை திரை மாறிவிடும். மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கும் தீங்கினை, யோகக் கனலால், சுட்டெரிக்க வேண்டும். பின்பு அறிவு தூய்மை அடையும். தூய்மையான அறிவு யோகத்துக்கு உறுதுணையாகவே இருக்கும். அவனை இறைவன் விரும்புவான். சிவயோகி புறத்தூய்மையுடனும், அகத்தூய்மையுடனும் விளங்க வேண்டும். யோகி, இறைவனின் புகழை எப்போதும் எண்ணி வழிபடல் வேண்டும். அதனால் மனம் வாக்கு காயங்கள் தூய்மையடையும்.

உலகம் முழுதும் ஆளும் நிலைமை அடைய வழி

குருவைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டால் சிவபெருமானைக் காணலாம். குருவே சிவத்தைக் காட்ட முடியும். குரு காட்டிய வழியே, நாவினை மேலே ஏற்றிப் புருவ நடுவாகிய இடத்தில் சந்திக்கும் நிலையைப் பெற்ற யோகி உலகம் முழுவதையும் ஆளுவார்.

நந்தி முதலாக நா மேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழு தாளும் -806

சூரிய நாடி வழியாகச் சிந்திக்க வேண்டும். அவ்வழியைக் குருவின் அருளால்தான் பெறமுடியும். குருவின் உதவியில்லாமல் கேசரி யோகம் கைகூடாது.

வினை நீக்கி தெய்வத் தொண்டாற்றும் நெறி

கேசரி யோகத்தில் நாவினைப் புருவமத்தியில் வைத்துத் தியானிக்க வேண்டும். நாம் செய்த வினைகளின் பயன்கள், இறையருளால் மட்டுமே நீங்க முடியும். இதனை நன்கறிந்த மக்கள் சிவத்தொண்டாகிய இறைப்பணியைச் செய்ய வேண்டும்.

சிவயோகம் செய்வோர் தமது மனத்தை மூக்கு நுனியிலே நிறுத்தினால் அற்புதமான நறுமணங்களை நுகர்வார்கள். காதில் அடிப்பகுதியில் நிறுத்தினால் சிறந்த நுட்பமான ஒலிகளைக் கேட்கமுடியும். நாவின் நுனியில் மனத்தை நிறுத்தும்போது சுவைகளை அனுபவிக்க முடியும்.

இதயத் தாமரையை மனத்தால் எண்ணவேண்டும். அத்தாமரையின் இதழ்கள் கீழ்நோக்கி உள்ளன. அவற்றின் வழியே சுழுமுனை நாடி செல்லுகின்றது. மூச்சுக்காற்றினை உள்ளிழுக்கும்போதும், வெளியிடும் போதும் இதயத்தாமரையின் உள்ளே ஒளி ஒன்று உள்ளது. இந்த உள் ஒளியை உணர தூய்மையான மனத்துடன் இறைவனைத் தியானிக்க வேண்டும். நம்மைப் பற்றியுள்ள தீவினைகள் நம்மை விட்டு நீங்க வேண்டுமாயின் இறையுணர்வுடன் இறைவனை வழிபட வேண்டும்.

கேசரியோகத்தால் அமுதத்தை உட்கொண்டு நீடு வாழலாம்

இறைப்பணியைச் செய்யும் ஆன்மா, நிலையான இன்பத்தை அடைய விரும்பும். உடல் இனிமை வேறு. உள்ள இனிமை வேறு. உள்ளம் இனிமை அடைய வேண்டுமாயின், நாவின் நுனியை மடித்துப் பூவின் மொட்டுப் போலக் குவித்துப் பழக வேண்டும். அதனை நாசியின் வழியாக

புருவமத்திக்கு ஏற்ற வேண்டும். அதனால் குண்டலினி சக்தியானது புருவ மத்தியைச் சென்று அடையும். அப்போது மதிமண்டலத்தில் அமுதம் ஊறும். மேலான இன்பம் கிடைக்கும். எனவே, கோங்கரும்பு போன்ற தலையை உடைய பாம்பின் (குண்டலினி) கோணலை நிமிர்த்த வேண்டும். இதனை,

கோங்கரும்பாகிய கோணை நிமிர்த்திட
ஊன் கரும்பாகியே ஊனீர் வருமே -808

என்கிறார் திருமூலர்.

அமுத நீர் சுரக்கும் வழி

மனத்தை இதயத்தாமரையிலோ அல்லது புருவ மத்தியிலோ நிறுத்தி வைப்பது 'தாரணை' யாகும். கேசரியோக நெறியில் வாழ்பவர் 'சிவாய நம'என்று தாரணை செய்ய வேண்டும். தாரண நிலையில் பிரமரந்திரத்தில் வியர்வை உண்டாகும்.

தேனீர் பருகிச் சிவாயநம வென்று..... -809

சிவத்தைப் பொருந்திப் புருவ நடுவில் வழிபட்ட சிவயோகியருக்கு மும்மலங்கள் நீக்கப்பட்டு, அதன் பயனாகச் சிவஞானம் கைவரப் பெறுவர். அவர்கள், குண்டலினி கீழ்ப்படாத வண்ணம் பார்த்துக் கொள்வதுடன், கீழ் நோக்கும் நிலையில் உள்ள வாயிற்படிக்கு மனத்தால் கதவினை அமைத்து தியானிக்க வேண்டும். அவ்வாறு மனம் ஒடுங்கி வழிபடும்போது ஆன்மா, சிவத்தைப் பொருந்தும் நிலையினை அடையும்.

சிவஞானம் அடையத் தகுதிகள்

சிவஞானம் கைவரப் பெற்றவரே நல்லறிவினைப் பெறுவர். எல்லாப் பொருள்களின் உண்மை நிலையை அறிவர். சிவஞானத்தை அடைய முதலில் பணிவு வேண்டும். குருநாதர் சொல்லுவதைப் பொறுமையுடன் கேட்க வேண்டும். சிவஞானியாகிய குருநாதரோடு தொடர்பு கொண்டு, அவருக்குப் பணிவிடை செய்தல் வேண்டும். குருநாதர் காட்டிய வழியில் மனம் மொழி மெய்களால் *சிவபூஜை* செய்ய வேண்டும்.

ஞானம் எப்போதும் ஆன்மாவிற்குத் தூய்மை தரும். யோக சித்தி பெற்றவர்கள் திருவருளின் கருணையால் ஞானத்தைப் பெறுவர். புலனடக்கமும் ஞான நாட்டமும் இருக்கும்போதுதான் ஞானம் வளர்ச்சிடையும்.

இறைவன் இயல்பு

இறைவன் நமது உள்ளமாகிய கோயிலில் வாழ்பவர்.

உள்ளம் பெருங்கோயில் -1823

அவர் எல்லா உலகங்களிலும் தாயை விட நல்லவர். தாயிற் சிறந்த தயாவான தத்துவன்.

இறைவன் நிலையை,

தாயினும் நல்லர் தரணி முழுதுக்கும் -811

என்று திருமந்திரம் குறிப்பிடுவதையே மணிவாசகர்,

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ.....
....
........*செல்வமே சிவபெருமானே* (திருவாசகம்)

என்று குறிப்பிடுகின்றார்.

இறைவன் எழுந்தருளியுள்ள நிலை

மூலாக்கினியை எழுப்பி கேசரி யோகம் செய்யும் யோகியரது சிரசின் மேல் உள்ள இறைவன், இதயத்தாமரையில் வைத்து எண்ணுடவர்க்குத் தலைவனாகவும் விளங்குகின்றான். இமைப்பொழுதும் நெஞ்சினைவிட்டு அகலாது நினைப்பவருக்கு, அவர்களது பாவகத்திலும் மதியிலும் விளங்குகின்றான்.

சிவயோகியரின் சிவானுபவ நிலை

சந்திரனில் 16 கலைகள் உள்ளது போல் நமது உடலிலும் கலைகள் உண்டு. மூலாதாரம் முதல் அநாகதம் வரை 224 ஒளிக்கதிர்கள் பரவியுள்ளன. அவற்றுள் இறைவன் எழுந்தருளியிருப்பதை உணர முடியும். உயிருக்குக் கதியாக உள்ள உடலில், சிவயோகி தனது உச்சி முதல் உள்ளங்கால் வரை ஊனீராகிய அமுத மழை சொரியப் பெற்று இன்புற்று மகிழ்வர்.

கதிமனையுள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலையாமல் இருந்தனன் தானே -813

மதிமண்டலத்து பராசக்தி விளக்கம்

பராசக்தியானவள், கலைகளுக்கு மத்தியில் எழுந்தருளியுள்ளாள். யோகியின் புருவமத்தியில் கன்னியாகிய பராசக்தி உள்ளாள். சிவயோகி, பராசக்தியால் எல்லா நலன்களையும் அடைகிறார். தீங்கு நீங்கிய நிலையில் சிறந்த ஒளியாகிய ஞானம் உண்டாகிறது. அந்த ஞான ஒளி வழியே அறிவின் ஆதாரம் அனைத்தையும் தங்களுக்குள்ளே கண்டார்கள். அச்சம் இல்லாத அவர்களை, எந்த ஒரு தீச்செயலும் கீழே தள்ளிவிடாது. அவர்களுக்குத் துன்பம் இல்லை.

சித்திகள் கைகூடும் நிலை

திருவருட்சக்தியோடு கூடியவர்களுக்கு எல்லா சித்திகளும் கைகூடும். ஆன்மாவில் ஒன்றிய திருவருட்சக்தியைப் பிரிக்கமுடியாத நிலையில்,

குணமதுவாகிய கோமளவல்லி -816

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். அந்நிலையில், தத்துவத்தடைகள் நீக்கப்படும். சிவயோகிக்குக் காட்சித்தெளிவு உண்டாகும்.

பிராணாயாம நெறியே நித்தியத்துவம் அடைய வழி

கேசரி யோகம் பயின்ற சிவயோகி, எடுத்த உடலோடு நீண்ட நாள் வாழ்வர். மூலாதாரத்தில் சுருண்டு கிடந்த பிராணனை நடுநாடி வழியே எழுப்பி, ஆயிரம் இதழ்த் தாமரை மலர்ந்திருக்கும் பிரமரந்திரத்தை அடையச் செய்து, பின்பு மதிமண்டலம் வரை மேலெழச் செய்தால் நித்தியத்துவத்தை அடையலாம்.

ஒட்டியாண பந்தம்

வயிற்றில் நாபியின் மேற்பாகத்தையும் கீழ் பாகத்தையும் முதுகோடு ஒட்டும்படி பின்னுக்கு இழுத்தல் ஒட்டியாண பந்தம் எனப்படும். பிராணன் சுருண்டு கிடக்கும் இயல்பினை உடையது. யோகப் பயிற்சியினால் பிராணனை நேர் நிற்குமாறு செய்ய வேண்டும். பிராணன் சந்திரமண்டலத்தில் பொருந்தியிருக்குமாறு கட்ட வேண்டும். அவ்வாறு கட்டினால், அங்கே தோன்றும் சூரிய ஒளியில் சிவபெருமான் காட்சியளிப்பார்.

கேசரி யோகத்தின் பயன்

பிராணவாயுவை உள்ளே தங்குமாறு யோகி பயிலவேண்டும். மூலாதாரத்தில் உள்ள குண்டலினியை நடுநாடி வழியே முதுகுத்தண்டின்

உள்துளை வழியே மேலே ஏற்ற வேண்டும். அதனால் ரேசகமாக வெளிப்படும் பிராணவாயு உள்ளே தங்கும். அதன் வழியே வீணாகின்ற ஆயுளையும் வீணாக்காமல் காக்கலாம்.

கழிகின்ற வாயுவும் காக்க லுமாகும் -819

மதிமண்டலத்தில் அமுதம் ஊறுகின்ற காலத்தில், குண்டலினியை அடக்க வேண்டும். அவ்வாறு அடக்கவே, பிராணன் இயக்கம் தடைபடுவதால் ஆயுள் வளரும்.

அக்கினி எழுப்பும் முறை

ஒட்டியாண பந்தத்தால் உடலுள் ஒளி விளங்கும் கட்டப்பட்ட பிராண வாயு சப்தத்துடன் மேல் எழும். பத்துவிதமான சப்தங்களுள் சிலவற்றை யோகியர் அனுபவித்து உள்ளனர். அந்நிலையில் சிவம். இரத்தின தீபம் போலப் பிரகாசிக்கும். இதனை,

.................வாயுக் கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக்காமே -820

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

மூலபந்தம்

மூலாதார வாயிலை இரண்டு குதிகாலால் இறுகச் செய்தலே மூலபந்தம் எனப்படும். மூலபந்த முத்திரையால் அங்குத் திகழும் பிராணனை, சுழுமுனை வழியாக மேலெழுப்புகின்ற போது, அப்பிராணன் இருதயம், கண்டம், புருவமத்தி இவற்றைக் கடந்து பிரம்மரந்திரமாகிய உச்சியை அடைகிறது. அங்கே சிவ ஒளி காட்சியளிக்கிறது.

ஒட்டியாண முத்திரையோடு கேசரியோகம் செய்தலால் வரும் பயன்

பிராணனைச் சுழுமுனை வாயில் திறப்பின் மூலம் நடுநாடி வழியாக பிரமரந்திரத்தைக் கொண்டு வருவதை,

விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி -821

என்று திருமூலர் உணர்த்துகிறார்.

அவ்வாறு கொண்டு செல்லும்போது, கழுத்து மற்றும் நாபிகளுள் கும்பகம் ஏற்படும். அங்கே நிலையான அனுபவங்களைப் பெறலாம்.

தூர தரிசனம்

நமது உடலில் முழந்தாள் வரை பிருதிவி மண்டலம் எனவும், அதற்கு மேல் அடிவயிறு வரை அப்பு மண்டலம் எனவும், அதற்கு மேல் மார்பு வரை தேயு மண்டலம் எனவும், அதற்கு மேல் மூக்கினடி வரை வாயு மண்டலம் எனவும், அதற்கு மேல் உச்சி வரை ஆகாய மண்டலம் எனவும் அழைக்கப்படும். இவ்வைந்து மண்டலத்திலும் பிராண வாயு கூடி வியாபித்திருந்தால் தூர தரிசனம் கிட்டும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதத்தில் பிராணன் வியாபித்திருப்பதைப் பிண்டமாகிய உடலில் கண்ட யோகி மட்டும்தான், தான் இருந்த நிலையிலேயே அண்டத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் (நெடுந்தூர நிகழ்ச்சிகள்) அறியமுடியும்.

தியான நிலையில் கருமை நிறம் பொருந்திய கண்களையுடைய திருவருட்சக்தியை மனத்துள் நிறுத்தி, அதனை அங்கு விளங்கும் சிவமாகிய தீப ஒளியுடன் பதிக்க வேண்டும். அவ்வாறு பதித்தால் பூமியும், மற்ற உலகங்களும் பகல் காலத்தில் பார்ப்பது போன்று நன்கு தெளிவாகத் தெரியும். இதனை,

தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடை ஞானமுட் பெய்தி
ஏராருந் தீபத் தெழிற் சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன் முன்னதாமே -823

என்று திருமூலர் விளக்குகிறார்.

சிவயோகமும் சிவபோகமும்

உந்திக்குப் பன்னிரண்டு விரற்கடைக் கீழே பகல் போல் ஒளி உண்டு. இதனையே,

நல் அக விளக்கு அது நமச்சிவாயவே

என்கிறார் திருநாவுக்கரசர். அவ்வொளியாகி ஒளியில் தீபஜோதியை வைத்துத் தியானித்தால் உள்ளமாகிய பெருங்கோயிலில் சிவம் பிரகாசிக்கும். அந்த இடமே,

தன்னெழு கோயில் -824

என்று அழைக்கப்படுகிறது. அங்கே சிவத்தோடு நாம் கலக்கும் நிலையே சிவயோகம் ஆகும். அந்நிலையில் நாம் அடைகின்ற பேரின்பமே

சிவபோகம் ஆகும். இந்நிலையை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

நிறைவுரை

யோக நிலையை விளக்கும் நூல்கள் பல இருப்பினும், அவற்றுள் திருமந்திரம் தனிச்சிறப்புடையது. யோக நுணுக்கங்களைத் தெளிவாக விளக்கும் திருமந்திரத்தில் அருளியுள்ளபடி, கேசரி யோகத்தைத் தக்க குருநாதரின் துணைகொண்டு பயின்று இறையருள் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

திருச்சிற்றம்பலம்

37. பரியங்க யோகம்

ஆன்மநேயமாமணி. புலவர். **மா.கி. இரமணன்**
சென்னை

திருமந்திரம் எது?

மறைமொழியே மந்திரம்! மறைவாகச் சொன்ன செய்தியாகவும், வேத நெறியாகவும், தமிழ் ஆகமம் ஆன திருமந்திரம் போற்றப்படுகிறது!

தொல்காப்பியர் காட்டிய ' நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப' (தொ.பொ.49) என்பதும்; திருவள்ளுவர் கூறிய 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்' (குறள் 28) என்பதும் திருமந்திரத்தையே குறிக்கும்!

மறைமொழியாகவே திருமந்திரம் பல புதிய சிந்தனைகளை, யோக ரகசியங்களைக் கூறுகிறது.

எப்பாடல் எக்கருத்தைத் தந்தாலும், அப்பாடலின் மெய்ப்பொருள் வேறொன்றாய் மறைந்திருக்கும். இதுவே திருமந்திரமாகும்! மறைபொருள் 3000 கொண்டது தமிழ்மறை திருமந்திரம்!

யோகம் எது?

சரியை, கிரியை, யோகம், ஞானத்தை சத்புத்ரமார்க்க திருஞானசம்பந்தர், தாசமார்க்க அப்பர், சகமார்க்க சுந்தரர், சன்மார்க்க மாணிக்கவாசகர் வழி சமய உலகம் போற்றும்! நால்வகை மார்க்கங்களையும் திருமந்திரம் 5 ஆம் தந்திரத்தில் விளக்கும்.

சிவனும் சுந்தரரும் தோழராய் சகமார்க்கத்தில் யோக வடிவாய் நின்றனர்.

யோகமும் போகமும் யோகியர்க்கு ஆகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும், உள்ளத்தோர்
போகம் புவியில் புருடார்த்த சித்தியது
ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே. - 1491

சிவயோகியருக்கு போகமும், யோகமும் ஒன்றென்றார் திருமூலர்.

பகவத் கீதை இரண்டாம் அத்யாயம் 53 ஆம் பாடலில் *புத்தி ஸ்ததா யோக மவாப்ஸ்யாயி* என்று; மோகம் கடந்து இறைமையுடன் ஒன்றுதலே யோகம் என்று கண்ணன் கூறுகிறார்.

பதஞ்சலி யோக சூத்திரத்தில் யோகத்தை; யோக: சித்தவ்ருத்தி நிரோத: (சூத் 2) என்று மனதின் மாறுதலை அடக்கி ஒன்றுதலே என்று பதஞ்சலி யோகி கூறுகிறார்.

மனித உடல் ஒன்றுதல் போகம்!
இறைவனுடன் ஒன்றுதல் யோகம்!

பரியங்க யோகம் யாது?

மூன்றாம் தந்திரத்தில், 19 ஆம் தலைப்பில் *பரியங்க யோகம்* பற்றி 20 பாடல்கள், பிறிது மொழிதல் அணியாக போகத்தைச் சொல்லி, யோகத்தை உணர வைக்கிறார் திருமூலர்.

'*பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை போகமும்* திருவும் உணர்வானை' என்று ஆரூர்த் தேவாரத்தில் யோகியான சுந்தரர், போகத்தை சிவன் உணர்வதாகப் பாடியுள்ளார். சமயக்குரவரில், போகமும் யோகமும் பற்றி பரவை சங்கிலியை மணந்து, ஊடல் தீர, சிவனையே தூது செல்ல வைத்த சுந்தரரை அன்றி வேறு யார் கூற இயலும்?

வென்றி நெடுந்தகை வீரனும், ஆர்வத்து
இன்துணை அன்னமும், எய்தி இருந்தார்
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார். -கம்பராமாயணம் 1244

இராமனைப் போகம் என்றும், சீதையை யோகம் என்றும் கம்பர், திருமண மேடையில் காட்டுகிறார்.

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே, முற்ற வரும் பரிசு உந்தீபற,
முளையாது மாயை என்று உந்தீபற

என்று திருவுந்தியார் 233 பாடுகிறது.

சிற்றின்பத்தால் பேரின்பத்தை உணரலாம் என்று ஓஷோ கூறுகிறார்.

இன்பக் கலவியில் இட்டு எழுகின்றதோர்
அன்பிற் புகவல்லனாம் எங்கள் அப்பனும் -1128

புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல்லார்க்கே -283

என்று திருமூலர் கூறும் கருத்தினையே மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் அகத்துறையில் சிவத்தைக்காட்டி ஒப்பிடுகிறார்.

பரியங்கம் = கட்டில், யோகம்=சேர்வது; போகத்தை யோகமாய் ஆக்குதலே பரியங்க யோகமாகும்.

நாயகி நாயகன்! போகம் யோகம்

வெங்கதிருக்கும் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோர் ஆனந்தம் - 836

சூர்ய மண்டல அதிபதியாகிய சதாசிவனுக்கும், அவர்தம் கீழ்நோக்கிய பகுதியில் அதோமுக மண்டலத்தில் உள்ள சனிக்கும் இடையே நின்ற நங்கை மனோன்மணியைக் கண்டு கலந்த பேரின்பம்! ஆண் விந்து வெள்ளியாகவும், திங்களாகவும், பெண் நாதம் பொன், செவ்வாயாகவும் இங்கு குறிப்பிடுகிறார்.

வெள்ளி உருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார் -834

விந்துவாகிய வெள்ளி உருகி, நாதமாகிய பொன்வழி ஓடாமல், விந்து விரயமின்றி காத்திட முடியாத போலி யோகியரை இங்கு கள்ளத்தட்டான் எனக்குறிப்பிடுகிறார். சிலம்பில் வரும் பொற்கொல்லர் போல இங்கும் பொய்யான பொற்கொல்லர் காட்டப்படுகிறார்.

ஆணுக்கு வயது 30, பெண்ணுக்கு வயது 20 என, திருமண வயதாக காட்டுகிறார்.

ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கும் ஆனந்தம்
வாய்ந்த குழலியோடு ஐந்தும் மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமும் சோர்வில்லை வெள்ளிக்கே -833

ஆண் 30 வயதிலும், பெண் 20 வயதிலும், ஐம்புலன் மலர வாழ்ந்தாலும், வெள்ளியாகிய விந்துவுக்கே விரயமில்லை என்று போக வாழ்வல்ல இது யோகவாழ்வு என்று காட்டுகிறார்.

போகத்தில் யோகம் கண்டவர்!

திருநீலகண்ட நாயனாரும், அவரது மனைவியும் தேக சம்பந்தமே இன்றி, யோகமாக வாழ்ந்தனர்.

அற்புறு புணர்ச்சி இன்மை அயல் அறியாமை வாழ்ந்தார் என்று சேக்கிழார் போகமற்ற யோக வாழ்வைக் கூறினார்.

அருட்பிரகாச வள்ளலாரும், தனக்கோட்டியாரும், இராமகிருஷ்ண பரமகம்சரும் சாரதா தேவியாரும், பரியங்க யோக நிலையில் திருமணத்திலும் காமங்கலவாது ஞானமுடன் இருந்தனர்.

காமம் கடந்த ஞானம்!

காமத்தைக் கடந்தால் ஞானம் பெறலாம்! புலன்களைக் கடந்தால் மெய்யுணர்வு பெறலாம்! போகம் கடந்தால் யோகம் ஞானம்! சிற்றின்பம் விட்டால் பேரின்பம்! சதையின்பம் விட்டால் சிவானந்தப் பேரின்பம்!

ஊசிமுனை அளவுகூட காமம் உள்நுழையக் கூடாது. கப்பலில் ஓட்டை விழுந்தால் கரையேற முடியுமா?

காயக் குழலி கலவியொடும் கலந்து
ஊசித் துளையுறத் தூங்காது போகமே -825

ஊசிக்காதின் ஓட்டையளவு சிறிதாகப் பெண்ணாசை வரினும், வாசமும் போக நேசமும் வந்து சூறையாடிவிடும் நம்மை!

அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மை
தங்கிக் கொடுக்கத் தலைவனும் ஆமே -828

நாத விந்துகள் வீணாக பங்கப்படாமல் பாதுகாத்து ஆறு ஆதாரங்களின் மேல் நோக்கி செல்ல வைத்தால் யோகம் ஞானம் கைகூடும்! கீழே போகும் விந்துவை மேல் நோக்கி யோகத்தால் புருவநடுவில் தேக்கினால் பூரணஞானம் 5 கடிகையில் 2 மணி நேரத்தில் கிடைக்கும். (24 நிமிடம் =1 கடிகை; நாழிகை)

அஞ்சு கடிகைமேல் ஆறாம் கடிகையில்
துஞ்சுவது ஒன்றத் துணைவி துணைவன்பால்
பஞ்ச கடிகை பரியங்க யோகமே -830

பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை -831

பண்ணார் அமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணாம் என எண்ணி இருந்தான் இருந்ததே -832

இன்றையத் தேவை பரியங்க யோகமே!

கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்ட கண்மூடிப் பழக்கம் மண்மூடிப் போக என்று வள்ளலார் பாடிய வண்ணம்; காட்சியால் இன்று

வெள்ளித்திரையிலும், சின்னத்திரையிலும், வீதிச் சுவரொட்டிகளிலும், கண்ணையும், மனதையும், வாழ்வையும் இழந்து தடுமாறும் உலகம், போகத்தில் மூழ்காமல் யோகமாய் வாழக் கற்க வேண்டும்!

வைத்த இருவரும் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தம் கலங்காது செய்கின்ற ஆனந்தம் - 835

தம்பதிகள் சித்தம் கலங்காது ஆனந்தம் காண்கிற, தாமரை இலைத் தண்ணீர் யோக வாழ்வே ஞான வாழ்வாகும்!

கருத்து அழகாலே கலந்து அங்கு இருக்கில்
வருத்தமும் இல்லையா மங்கை பங்கற்கு -837

காமம் கலவாது யோகத்தால் வாழும் வாழ்வே வருத்தமற்றது! காமமே மோகம், கோபம், கொலைக்குக் காரணம்! பரியங்க யோகப் பயிற்சி செய்தவர் உடல் அழிவதில்லை! வள்ளற் பெருமானைப்போல மரணமிலாப் பெருவாழ்வு வாழ பரியங்க யோகம் தேவை! சாத்திரங்களில் சிறந்தது திருமூலர் திருமந்திரம். இஃது மொத்தம் எண்ணாயிரம் என்று வள்ளலார் உபதேசம் செய்துள்ளார்.

எழுகின்ற தீயைமுன்னே கொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும் பரிசு எய்திடும் மெய்யே
உழுகின்றது இல்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்றது இல்லை வெளி அறிவார்க்கே -838

இப்படி உடல் அழியாது பல ஊழிக்காலம் வாழ பரியங்க யோகம் வழிகாட்டுகிறது.

தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லாரே
மண்ணிடைப் பல்ஊழி வாழலும் ஆமே -841

போகத்தில் வீழாமல், யோகத்தால் பல்லாண்டு வாழ்ந்து மகிழ்வோம்!

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

38. அமுரி தாரணை, சந்திரயோகம்

நாவுக்கரசர். டாக்டர். **சோ. சத்தியசீலன்** *எம்.ஏ. பி.எச்.டி.,*
திருச்சிராப்பள்ளி

தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம். சாத்திரங்களிற் சிறந்தது திருமந்திரம் என்று வள்ளற் பெருமான் கூறுகின்றார்.

உலகத்தில் அருளாளர்கள் தந்து சென்ற நூல்களில் சில உயிருக்கு உறுதி பயப்பன. சில உடலுக்கு உறுதி தருவன. உயிருக்கு உறுதி தரும் சாத்திரங்கள் உடலை மதிப்பதில்லை. உடலுக்கு நலம் பேசும் சாத்திரங்கள் ஆன்மாவைப் புறந்தள்ளி விடுகின்றன.

ஆனால் ஆன்ம ஈடேற்றத்திற்கும், அதற்குத் துணை நிற்கும் உடல் நலத்திற்கும் சமமான இடம் கொடுத்து நம்மை வழி நடத்தும் சாத்திரம் திருமந்திரம்.

அருளியல் வாழ்வையும் உலகியல் வாழ்வையும் ஒரு சேரச் செம்மை செய்யும் திருமந்திரத்தில் சில பகுதிகள் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதும், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மைகள்.

அத்தகைய ஒரு பகுதிதான் அமுரிதாரணை என்னும் இப்பகுதி.

நம் உடலிலேயே உயிருக்கு உறுதி தரும் குடிநீர் ஒன்று ஊறிக்கிடக்கிறது. கடலுக்கு அருகில் கிணறு தோண்டி, ஏற்றம் இட்டு இறைத்து நீர் எடுத்துப் பருகுவது போல் யோக சாதனத்தால் இந்த அமுதத்தை எடுத்துப் பருகினால் உயிருக்கு எந்த ஊனமும் இல்லை.

உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடலு மாமே - 845

நூறு மிளகு அளவு இந்த நீரைப் பருகினால் உடலுக்கு வேறு எந்த மருந்தும் தேவையில்லை.

நூறு மிளகு நுகருஞ் சிவத் தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே. -847

மனம் பேயாய் அலையாமல் ஒடுங்கி நம் வசம் நிற்கும். உடல் தங்க மயமாக ஒளிவீசிப் பிரகாசிக்கும். நரை தோன்றாது. உடல் சுருக்கங்காணாது செம்மையுறும்.

அறிவில்லாத மக்கள் இதன் பெருமையை உணராமல் வாழ்ந்து அழிகின்றார்கள்.

கடல் நீர் மேகத்தால் எடுத்து வந்து தரப்படும் போது அது இனிய நீர் ஆகிவிடுகின்றது. அதைப்போல யோகத்தால் அந்த அமுதம் உருவாகிறது.

சிறுநீர் என்று கழிக்கப்படும் நீரில், புறத்தே மருத்துவ முறையில் மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகிய மருந்துப் பொருள்களைக் கலந்து பயன்படுத்தினால் உடல் மென்மையாகும். முடி கருமையாகும்.

உண்மையுணர்ந்தவர்கள் இதனைப் போற்றிப் பயன்படுத்துவர்.

அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே -849

இதுதான் உலகில் தோன்றிய முதல் மருந்து. இதனை நந்தியெம் பெருமான், உயர்ந்த மருந்து, தெய்வீக மருந்து, திருவருளால் உருவாகிய ஒப்பற்ற மருந்து என்று கூறுகின்றார். இம்மருந்தின் பெருமையைச் சொல்லி முடிக்க இயலாது.

திருமூலர் பெருமான்,

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண் ணாதே -850

என்று கூறுகின்றார்.

மனித உடலில், Bio-electricity, Bio-Electro magnet என்னும் மின்சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று உடற்கூற்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

உடலிலேயே உற்பத்தியாகும் சில தாதுப் பொருட்களும் உள்ளன. அவையும் சிறுநீரில் கலப்பதாலும், மாற்றங்கள் புரிவதாலும் சிறுநீருக்கு

மருத்துவ குணம் உண்டு என்பது சில அறிஞர்களுடைய கருத்தாக உள்ளது.

திருமூலர் வழியில் இதன் மூலம் பயன் பெறுகின்றவர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

சந்திரயோகம்

ஆன்மாக்கள் தங்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் நீக்கிக் கொண்டால்தான் உய்தி பெற இயலும்.

இந்த மலங்களை, அழுக்குகளை நீக்கிக் கொள்வது எவ்வாறு? அப்படிக் கழுவித் தூய்மை செய்து கொள்ள இறைவன் ஏதேனும் துணை தந்துள்ளானா?

ஆம்! நம்முடைய உடம்புதான் மல நீக்கத்திற்குத் துணைபுரியும் சாதனமாகும். இந்த உலகம்தான் நீர்நிலை. இங்குதான் ஆன்மாக்கள் நீராடித் தம்மைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும்.

நிலவு எப்படிச் சிறியதாக இருந்து வளர்ந்து, தேய்ந்து மறைகின்றதோ அதைப் போலத்தான் நம் உடம்பும். அணுவில் தோன்றிப் பருமை அடைந்து மீண்டும் மறைந்து விடுகின்றது.

மலநீக்கம் பெற்றுத் தூய்மை அடையாத ஆன்மா ஒரு போதும் உய்தி பெறாது.

உடம்பிலேயே சந்திரமண்டலம் அமைந்திருப்பதை உணரலாம். யோக சாதனையில் இதையுணர்வது இன்றியமையாததாகும்.

உடம்பு எழிலுடன் விளங்க வேண்டுமானால் திங்களுக்குரிய பதினாறு கலைகளையும், சூரியனுக்குரிய பன்னிரண்டு கலைகளையும், தீயினுக்குரிய பத்துக் கலைகளையும் யோகப் பயிற்சியினால், நடுநாடி வழியாக மேல் நோக்கிச் செலுத்தல் வேண்டும்.

உலகத்தவர் விரும்பும் பேறுகள் அனைத்தையும் பெற வேண்டுமானால் சூரியனுக்குரிய பன்னிரண்டு கலைகளையும் சந்திர வெளியில் செலுத்த வேண்டும்.

மூச்சுக் காற்றில் இடது மூக்கு வலது மூக்குக்குரிய பதினாறு கலைகளையும், தீயின் பத்து கலைகளோடு இணைத்து உள்முகமாக நடுநாடி வழியாகச் செலுத்தினால் அனைத்து உலகியல் நலன்களையும் பெற்று மகிழலாம்.

அமாவாசையன்று திங்களின் கதிர்கள் ஒடுங்கியிருக்கும். அப்போது திங்களிடத்தில் விண்மீன்கள் போன்ற நான்கு கதிர்களும் அடங்கி இருக்கின்றன.

சூரியன், சந்திரன் ஆகியவற்றின் கலைகள் அனைத்தையும் கீழ்நோக்கிச் செல்ல விடாமல், மூச்சுப் பயிற்சியால் நடுநாடி வழியாக மேல் நோக்கிச் செல்ல வைத்தால் சிவபெருமானுடைய திருவடியை அடையலாம்.

வானம் எல்லையற்றது. அது நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கினுக்கும் இடம் கொடுத்துள்ளது. மேற்கண்ட ஐந்தும், அவற்றுடன் சார்ந்த ஞாயிறு, திங்கள், சிவவேள்வித்தீ, விண்மீன்கள் ஆகிய ஒன்பதும் சிவபெருமானின் சார்பு ரூபங்களாகும்.

ஓங்காரமாகிய பிரணவத்துள் அவையும் ஒடுங்கியுள்ளன.

தேய்பிறையில் விண்மீன்கள் ஒளிவிட்டு மின்னுகின்றன. வளர் பிறையில் அவை மங்கிக்கிடக்கின்றன.

அது போலத்தான் திருவடி உணர்வு தலைப்படாதபோது ஆன்மாக்கள் தன்முனைப்போடு துள்ளுகின்றன. ஆனால் திருவடி உணர்வு வெளிப்படும்போது முனைப்பு அடங்கி அருள்வழியில் அவை அமைதி பெறுகின்றன.

திங்களின் தோற்றமும் மறைவும் நமக்கு நிலையாமையைத் தெளிவாக உணர்த்துகின்றன.

நம் உடலில் சந்திரமண்டலம், மிடறு முதல் ஆயிர இதழ்த்தாமரை அமைந்துள்ள இடம் வரையிலாகும்.

மூலத்தீயை எழுப்பி சந்திரமண்டலத்தில் காணப்படும் திங்களுடன் சேர்த்தால் ஐம்புலன்களும் ஒடுங்கி நம் வசமாகிவிடும்.

பிறப்பு இறப்பு என்னும் சுழலில் சிக்கிய ஆன்மாக்கள் தடுமாறித் தத்தளிக்கின்றன. காலனின் கையில் அகப்படுகின்றன. அப்படி அழியாமல் நிலைபெறுவதற்கு ஒரு வழி இருக்கின்றது.

மூலாக்கினியும், சந்திரகலையும் சேரும் போது திருவடி உணர்வு ஆன்மாக்களுக்குத் தோன்றும்.

சந்திர கலைகள் பதினாறும் பெண் கலைகள். சூரிய கலைகள் பன்னிரண்டும் ஆண்கலைகள். இவ்விரு வகை கலைகளையும், யோகப்

பயிற்சியால் மூலத்திடத்தில் நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்திவிட்டால் திகட்டாத திருவடி இன்பத்தை நிலையாகப் பெறலாம். அழிவின்றி நிலை பெறலாம்.

வலது மூக்காகிய சூரிய வழியில் இயங்கும் மூச்சுக்காற்றை, சந்திர வழியாகிய இடது மூக்கில் வாங்க வேண்டும். இடது மூக்காகிய சந்திரன் வழியில் இயங்கும் மூச்சுக் காற்றை வலது மூக்கின் வழி வாங்க வேண்டும்.

தவறில்லாமல் இந்தப்பயிற்சியைச் செய்தால் அளவற்ற ஆண்டுகள் அழியாமல் வாழலாம்.

உடம்பில் அமைந்துள்ள நவத்துவாரங்கள் வழியாகவும் தண்ணுமையாகிய இனிய பறை ஒசை கேட்கும். சிவபரம்பொருள் உடலையே மேடையாகக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவான். இந்தப் பயிற்சியே திருவடிப்பேற்றை அடைய வழிகாட்டும ஒளிவிளக்காய்த் திகழும்.

மூலாதாரம் தொடங்கி புருவநடு ஈறாக உடைய ஆறு நிலைகளிலும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலிலும் நடைபெறுகின்றன. முடியில் காத்தல், அருளல் ஆகியவை திகழ்கின்றன.

மூலாதாரத்தில் தோன்றி ஒளி வீசித்திகழும் சிவ ஒளியை வழிபடும் நெறியை யாரும் உணரவில்லை. உணர்ந்து விட்டால், *தந்தைக்கு முன் மகன் பிறந்தான்* என்னும் உண்மையை அறிந்து கொள்ளலாம்.

பகலில் பார்வையற்ற ஆந்தையை ஒத்த அறிவிலிகள் இந்த சூட்சமத்தை உணர மாட்டார்கள்.

மூக்கின் தொடக்கத்தையும், முடிவையும் உணர்ந்து விடுவார்களே யானால், ஞானமே வடிவாகிய சிவபெருமான் முற்பட்டுத் தோன்றுவான்.

ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லீரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந்தானே.

என்பது திருமந்திரம்.

மேற்கண்ட யோகப் பயிற்சியில் குறைகள் நேர்ந்தால், சிக்கல்கள் உருவானால் அங்கே சிவபெருமான் தோன்றிப் பிழைகளை நீக்கி, நிலவையும் பாம்பையும் ஒற்றுமைப்படுத்தியருள்வான்.

பாம்பு மதியும் பகை தீர்த்து உடன் கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகையானே!

புருவ மத்தியில் மதி அமிழ்தம் உண்டாகும் வரையில் மூச்சுப் பயிற்சியை நிறுத்தலாகாது.

மதியமிழ்தம் தோன்றி அது உடம்பு முழுவதும் பரவும் வரை பயிற்சியை நிறுத்திவிடக் கூடாது. அப்படிப் பரவியவுடன் புறத்தே உள்ள உலகம் பற்றிய உணர்ச்சிகள் அறவே நீங்கிவிடும்.

யோகம் செய்பவர்கள் உயிர்ப்பினை, உயிர் வளியை உள்ளேயே அதிகம் வைத்துக் கொள்கின்றனர்.

யோகம் செய்யாதவர்கள் மூச்சினை அதிகம் வெளிவிடுகிறார்கள். எனவே காலன் அவர்களை விரைவில் பற்றிச் சென்று விடுகிறான்.

யோகமாகிய அகத்தவம் செய்யாதவர்கள் தங்களுடைய வாழ்நாளை நாள், கிழமை, வாரம், மாதம், ஆண்டு என்னும் முறையில் அளக்கின்றார்கள்.

ஆனால் யோகப்பயிற்சி செய்யும் சான்றோர்கள் தங்களுடைய ஆயுளைப் பிராணவாயுவைக் கொண்டு அதாவது தாங்கள் விடும் மூச்சுக்காற்றைக் கொண்டு அளவிடுகின்றார்கள்.

அகத்தவமாகிய யோகத்திலும் சான்றோர் தங்கள் ஆயுளைத் தாங்களே கணிக்கின்றனர்.

ஆனால் மற்றவர்களுடைய ஆயுளை எமன்தான் நிர்ணயிக்கின்றான்.

அகத்தவமாகிய பயிற்சியை மேற்கொள்பவர்கள் முக்காலங்களையும் உணரும் ஞானத்தைப் பெறுவார்கள். இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்றும் அவர்களுக்குத் தெரியும்.

தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
தண்மதி வீழ்வள விற்கண மின்றே -875

மதியமிழ்தம் கீழ் நோக்கிக் கழியுமானால் மனித உயிர் குன்றிப்போகும். யோகமாகிய அகத்தவம் பயின்றவனால் காம வேட்கையைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலும். விந்து வீணாகாது. அழிவு அவனை அணுகாது.

எனவே ஒருவன் நீண்டகாலம் நிலை பெற விரும்பினால் ஓங்காரத்தைப் புருவ மத்தியில் இடைவிடாது எண்ண வேண்டும்.

ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல் விந்து
போம்வழி எங்கணும் போகாது யோகிக்குக்
காமுற இன்மையிற் கட்டுண்ணு மூலத்தில்
ஓமதியத்துள் விட் டுரையுணர் வாலே. -877

என்னும் மந்திர மொழியை ஆழமாகச் சிந்தித்துப் பயன்பெற வேண்டும்.

முறையாகக் கட்டுப்படுத்தப்பட்ட மனமும், உயிர்ப்பும் ஒன்று கூடிப் பொருந்த வேண்டும். பிரிவின்றி அவை யோகத்தில் நிலைக்க வேண்டும். *சிவ* என்னும் சிவபெருமானின் தனிப்பெரும் மந்திரத்தை அருள் ஒலியாக ஓயாமல் ஒலிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நம்முடைய முரட்டுத்தன்மை பொருந்திய ஐம்புலன்களும் நமக்குக் கட்டுப்படும்.

ஒரு சிறிதும் விலகாமல் இறைவனுடைய திருவடியின்பம் நமக்குச் சித்திக்கும்

விடாத மனம் பவனத்துடன் மேவி
நடாவு சிவசங்கின் நாதங்கொளுவிக்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே

என்னும் திருமந்திர மொழியை உள்ளத்திற் கொள்ள வேண்டும்.

மதியமிழ்தம் பெருக்கெடுக்கும் புருவ மத்தியில் அறிவு, ஆற்றல், ஓசை, ஒளி, ஆவி என்னும் ஐந்தையும் ஒன்றாக இணைக்க வேண்டும். நடுநாடி வழியாக மூச்சுக் காற்றினைச் செலுத்தி வலிமையுடன் யோகம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்பவரிடம் எமன் வரமாட்டான். நாளும் கோளும் அவரை நலியும் கொடுமை ஒரு போதும் இல்லையாம்.

அமுதப்புனல் வரும் ஆற்றங்கரைமேல்
குமிழிக்குள் சுடர் ஐந்தையும் கூட்டிச்
சமையத் தண்டோட்டித் தரிக்க வல்லார்க்கு
நமன் இல்லை நற்கலை நாள் இல்லைதானே

என்று திருமூலர் பெருமான் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மதியமிழ்த ஊற்றினைத் திருவருளின் திறத்தால், சிறந்த பயிற்சியால் திறக்க வேண்டும். இறைவனுடைய திருவடித் தாமரையை இடைவிடாது

சிந்திக்க வேண்டும். ஆழமான நிட்டையைக் கைக் கொள்ள வேண்டும். திருவடி ஞானத்தின் வழி இறைவனுடைய திருவடித் தாமரையில் நிலைத்து நிற்க வேண்டும். அப்போது மூச்சுக் காற்று இடம் வலம் என்ற வேறுபாடில்லாமல் நடுநாடி வழியே செல்லும். அகத்தவத்தின் உச்ச நிலை இதுதான்.

இயற்கையிலேயே உடம்பில் உள்ள சந்திரமண்டலம் சூரிய மண்டலம் ஆகிய இரண்டும் மாறுபட்டவைதான். ஆனால் அவையிரண்டும் யோகத்தால் நடு நாடியில் ஒன்று கூடும்போது இந்த உலகத்தில், என்றும் அழிவே இல்லாத திருவடிப் பேரின்பத்தை இடையீடில்லாமல் பெறலாம்.

திருமூலர் பெருமான் இந்தப் பகுதியில் அகத்தவமாகிய யோக சாதனத்தின் வழிமுறை, அதனைச் செய்வதனால் நாம் பெறும், பெறுவதற்கரிய பயன்ஆகியவற்றை மிக மிக ஆழமாகப் பேசுகின்றார். அவர் வழி நிற்போம்! அருட்பயன் பெறுவோம்!

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

நான்காம் தந்திரம்

39. அசபை

கல்லாடர். க. கிருஷ்ணமூர்த்தி
அரிமழம்.

மூலனின் மூலமாய் மூல மலமறுக்க
மூலனின் மெய்யணுக் கன்மொழிந்தான் - ஓலமேன்
ஓதியுணர்ந் துள்ளொளி கண்டுநீ ஒன்றிடத்
தீதிழியும் ஓங்கும் திரு.

திருவாவடுதுறையில் எழுந்தருளிய சுந்தரநாதனே மூலன் மேய்த்த பசுக்களுக்காக இரங்கி மூலனின் உடலுட் புகுந்து உலகின்கண் உள்ள உயிர்ப்பசுக்களுக்குக் கடைத்தேற்றம் காட்டி அருளத் திருவாய் மலர்ந்து அருளிய நூலே திருமந்திரம்.

திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் மந்திர செபத்தால் உய்தி பெறும் நிலையினை விளக்குவதாகும். *நாத விந்து கலாதி நமோ நம* என அருணகிரிநாதரும், *ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே* என அப்பர் பெருமானும் கூறியுள்ளமை இறைவடிவினை விளக்குவதாகும். மணிவாசகரும் *நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க* எனத் தொடங்குதலைக் காண்கிறோம்.

ஒலி என்பது ஒரு வெளிப்பாடு. இவ்வெளிப்பாடு உணர்வின் வழியே தோன்றும். உட்செல்லும் மூச்சுடனும், வெளிச்செல்லும் மூச்சுடனும் ஸ என்ற ஒலியுடனும் *ஹ* என்ற ஒலியுடனும் இயங்குவதாய்த் தாயுமானவர் பாடல்கள் என்ற நூலின் உரையில் காணப்படுகிறது.

ஓர் எழுத்து எனப்படும் *பிரணவம்* உச்சரிக்கப்படா நிலையில் உள்ளதால் அதனை *அசபை* என்பர். அதற்கு மந்திரம் என்னும் பெயரும் உண்டு. ஓர் எழுத்து எனத் திருமூலர் குறிப்பிடும் இடத்தில் ஓர் என்பதை வினைத்தொகையாகக் கொள்ளின் உயிர்கள் கடைத்தேற்றம் பெற ஓர்ந்த, ஓர்ந்து கொண்டிருக்கும், ஓரவேண்டிய எழுத்து என விரித்துப் பொருள் கொள்ள இடம் தருகிறது. மந்திரம் என்று சொல்லிற்குத் தன்னை நினைப்பவரைக் காப்பது என்பது பொருளாகும்.

திருமூலர் நான்காம் தந்திரத்தைத் தொடங்கும் போதே தாம் சொல்ல வந்த *அசபை* யின் பெருமையைப் *போ* என்ற எழுத்தில் தொடங்கிக் காட்டுவது ஒரு நுட்பமாகும். ஏனெனில் போ என்பது *ப்+ஓ* எனப் பிரியும்.

இதில் அசபை எழுத்தைக் காட்டுவது மட்டுமின்றிப் பதி,பசு,பாசம் என்னும் முப்பொருள்களைக் காட்டும் பெயர்கள் தொடங்கும் *ப்* என்றும் ஒற்றிலேயே தொடங்குகின்றார். ஓங்கார ஒலியே பாசவினையை விடுத்துப் பசுவிற்குப் பதியினைக் கூட்ட வல்லது எனக் குறிப்பால் உணர்த்தினர் போலும்.

எம்பிரானின் ஓர் எழுத்தாம் ஓங்காரத்தைப் போற்றிச் சிவஞானத்தை எய்தி, அவன் சேவடி கண்டு யோகத்தில் இருக்கின்றேன் எனத் திருமூலர் முதற் செய்யுளில் விளக்குகின்றார்.

ஓர் எழுத்து எனத் திருமூலர் குறிப்பிடும் **ஓம்** என்பது *அ+உ+ம்* என மூவெழுத்தாய் மலரும் தன்மையது ஆகும். எவ்வொலி பிறப்பிக்கப் பெறினும் அதன் அடிநிலை அகரமேயாம். ***அகர முதல எழுத்தெல்லாம்*** எனத் திருவருள்ளுவர் கூறுதலும் இவ்வடிப்படையிலேயே அமைந்துள்ளது. திருமூலர் *அ* என்னும் ஒலியால் உலகமெங்கும் தானாகி விளங்கும் இறைநிலையைக் காட்டுகின்றார். உ என்னும் எழுத்து உயிர்களுடன் அது ஒன்றாய், உடனாய், வேறாய் இசைந்திலங்குவதையும், *ம்* என்னும் மூன்றாம் எழுத்து ஒளி பொருந்திய மாயையே எனினும் உயிர்களை மயக்குதலையும் விளக்குகின்றார்.

இன்று நாம் எழுதும் இவ்வெழுத்துக்களின் வரிவடிவங்கள் கூடக் கூர்ந்து நோக்கில் முப்பொருள்களின் இயல்பினை உணர்த்துவதாகவே உள்ளன எனலாம்.

அ என்னும் வடிவம் ஒடுக்கம், நீட்சி (வியாபகம்) நிலைப்பு என்னும் இறைநிலையைக் காட்டுகிறது.

உ என்னும் வடிவம் ஒடுக்கம், சிறுநீட்சி, பின்னர் இறையருளின் படிந்து கிடக்கும் உயிர்களின் தன்மையினைப் புலப்படுத்துகின்றது.

ம என்னும் வடிவம் நிலைப்பில் தோன்றிப் படிந்து கிடப்பதைப் போல் தான் இருந்து செயல்படுவதைக் காட்டிக் கொள்ளாமல் பதியை உணர்ந்த பின் செயல்படா நிலையில் உயிர்களிடம் இருப்பதைக் காட்டுகின்றது.

சிவபெருமான் சிற்றம்பலம், சிதம்பரம், திருவம்பலம் எனப் பெருமை வாய்ந்த இடத்தில் ஆடுமாப் போலே உயிர்களின் உள்நின்றும் ஆடிக்கொண்டிருக்கின்றான்.

சிவன் ஆடும் தாண்டவம் ஐவகையின. அவத்தினின்று உயிர்களை மீட்டுத் தவம் செய்யத் துணை நின்று அழியாத இன்ப நிலை

ஊட்டுவதற்காகவே அவன் நடனமாடுவதால் அஃது தாண்டவம் எனப் பெயர் பெற்றது. ஐவகைத் தாண்டவங்களும் அவனது ஐவகைச் செயல்பாடுகளான தனு, கரண, புவன, போகங்களைப் படைத்தல், உயிர்களுக்கு வினைக்கேற்ப இன்பம் ஊட்டல், உயிர்களை இயங்க வைத்தல், உறங்க வைத்தல், உயிர்ப்பக்குவத்திற்கு ஏற்பத் தன்பால் அணைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றை நிகழ்த்துவான் வேண்டியே நடைபெறுகின்றன.

சேர்க்கும் துடிசிகரம் சிகரம் சிக்கனவா லீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்.

என்னும் உண்மை விளக்கச் செய்யுள் சிவபெருமானின் தாண்டவத்தை விளக்கும்.

உயிர்கள்பால் கருணை கொண்ட இறைவன் அவற்றின் கடைத்தேற்றத்திற்காகவே தானே தனக்கு ஆதாரமாகித் தத்துவக் கூத்தினை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான்.

உயிர்களின் மூலாதாரத்தில் சிவம் *நமவாசிய* என விளங்குகிறார். அம்மூலாதாரம் நெருப்பு மண்டலமாகும். மேலாதாரமாகத் திகழும் ஒளி மண்டலத்தில் நவாசிய என்றும் மேல் விளங்கும் சக்கரத்தில் யவாசி என்றும் திகழ்கின்றார். உயிர்களின் அறிவு, உணர்வு இவற்றிற்கேற்ப, நான்முகன் திருமால் ஆகியோர் அவற்றின் பாச நீக்கத்தைத் தோற்றுவிக்கின்றார். ய சிவத்தை அடையும் போது தத்துவ நிக்ரகம் ஏற்படுகின்றது. கூத்தை விட்டு மேலான அறிவு மலரும். அறிவாம் விந்து நாதம் ஆகிய இரண்டுடன் அ,உ,ம என்ற ஆனந்தம் கூடிப் பிரணவமாம். சி காரத்தை நம உடன் பொருத்தாது ஆன்மாவுடன் பொருந்தும் சக்தியாய் மாற்றிவிடில் சிவானந்தப் பெருவெள்ளம் வந்து எய்தும். இந்நிலைக்கண் சிவனது ஆனந்தத் திருநடனம் புலனாகும்.

பற்பல கலை வல்லார்கள் பிரணவம் அல்லது திருவைந்தெழுத்தால் விந்து, நாதம் இவை விளங்கும் குரு மண்டலத்தை எய்துவர். இந்நிலைக்கண் அவர்கள் சங்காரமாகிய அனைத்து உயிர்களையும் தன்னுள் அணைத்துக் கொள்ளும் தாண்டவத்தை உணர்வர். ஆயிரம் இதழ்த் தாமரை என்னும் சகசிரதளத்தில் விளங்கும்.

சிவகதி என்னும் எடுக்க வற்றாத வண்துறையில் உயிர் திளைக்கப் பாசமாம் புல் நையும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் நீங்கிய இடமே இறைவன் தன்னுள் அடக்கும் சங்காரக் கூத்து ஆடும் இடம். மலமற்ற நிலையே மறைப்பு நீக்கம் என்னும் திரோதாயியின் அடிநிலை. அந்நிலைக் கண் ஆனந்தம் மலர்கிறது.

சிவகதி பெற்ற உயிர் நாமார்க்கும் குடியல்லோம் என உணர்கிறது. எய்தற்கரிய பெரும் பேறு அஃதன்றி வேறில்லை என அறிகிறது. மாயையின் பிடியில் அகப்பட்டு, அது ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடிவந்த உயிர் சிவகதி பெற்றபின் தனக்குத்தானே தலைவன் என உணர்கிறது. எய்தற்கரிய பெருஞ்செல்வம் சிவமேயன்றி வேறில்லை என உணர்ந்து அது தன்வயப்பட்டு நிற்கிறது. இக்கூத்தே தற்பரக் கூத்தாம்.

எட்டு என்பது அ என்னும் குறியீட்டாலும், பத்து என்பது ய என்னும் குறியீட்டாலும் தமிழில் குறிக்கப்பெறுகின்றன. ஐம்பத்தோரெழுத்துக்களும், பல்வேறு மந்திரங்களும் தோன்றுவதற்கு இறைவனின் ஒப்பற்ற திருவடிகளே காரணம்.

ஏழு கோடி மந்திரங்கள் நம, சுவதா, சுவாஹா, வஷடு, வௌஷடு, ஹும், ஹூம்படு. இவை ஏழும் முடிவுகளாம். வியாகிருதி மந்திரம் ஏழு. அம்ச மந்திரம் இரண்டு.

அசபை எனக் கூறப்பெறும் பிரணவமே எல்லா மந்திரங்களாகவும் எவ்விடத்தும் நிறைந்ததாகவும் உள்ளது. அம்மந்திரமே சிவபெருமானின் திருமேனியாகத் திகழ்கின்றது. அஃதே செந்நிறங் கொண்டது.

ஓம் என்னும் மந்திரம் சிவன் சக்தி இணைந்த நிலை. ஹ்ரீம் என்பது ஐந்தொழில் ஆற்றும் தலைவர்களைப் பிரித்து விளங்கும் நிலை.

சங்காரக் கூத்தும், அற்புதக் கூத்தும் இகழ்ந்து கூறத்தக்கனவல்ல. முறையே உயிர்களைத் தன்னுள் ஒடுக்குதலும், பிறவியில் ஈடுபடுத்துவதும் அக்கூத்துக்களால் நிகழ்வன. செம்பை உருக்கிப் பக்குவம் ஆக்கிப் பொன்னாக்கும் வேலையைப் போல இறைவன் இக்கூத்துக்களால் உயிர்களைப் பக்குவம் ஆக்குகின்றான். இத்தகைய பொன்னாக்கும் வேலையைச் செய்யும் மந்திரம் சிவய நம எனும் திருவைந்தெழுத்தேயாம். ஸ்ரீம் ஹ்ரீம் என்னும் மந்திரங்களும் உடலைப் பொன்னாக ஒளிர வைப்பனவாம்.

திருவம்பலச் சக்கரம் இருபத்தைந்து கட்டங்களைக் கொண்டது. சிவாய நம என்பதை எழுதிப் பின்னர் மசிவாய்ந என்றும் நமசிவாய என்றும்

நமசிவாய என்றும் யநமசிவா என்றும் வாயநமசி என்றும் மாற்றி அக்கட்டங்களை நிரப்பி அமைக்கப் பெறுவதாகும்.

சிவாய நம சிவாய நம என ஓதிப் பிறப்பற்ற பெருநிலை எய்தலாம். சிவபெருமானின் திருக்கூத்தைக் காணலாம். உயிர் மலமற்றுப் பொன்னாய் விளங்கும். திருவெந்தெழுத்தை வாய்விட்டு ஒலிக்காது, உதட்டளவில் தான் ஒலித்தல் வேண்டும். மூச்சோடு ஒன்றியவாறு திருவைந்தெழுத்தைக் கூறுதலால் ஆற்றல் பெருகும்.

திருவைந்தெழுத்தே குருநிலை எய்துவிக்கும்; கூடுவிட்டு கூடு பாயும் ஆற்றல் தரும்; பாசம் அறுக்கும். திருக்கூத்துக் கண்டவர் நலன்கள் இவையாம். உரு ஏற, உரு ஏறத் திருவேறும். ஓர் ஆயிரம் எண்ணிக்கை செப்பினும் பயன் கைகூடும். சிவானந்தம் மலரும்.

ஆ, ஈ, ஊ,ஏ,ஓம் மற்றும் அம், ஹ்ரீம், ஹம், ஆம் இவை சிதம்பரச் சக்கர பீஜ எழுத்துக்களாகும். இவ்வெழுத்துக்கள் நுண்ணுடல், பருவுடல் ஆகியவற்றை ஒன்றுக்கொன்று தடையில்லாது இயங்க வைக்கும்.

சிவபரம்பொருள் சொல்லுருவம், பொருளுருவம் ஆகிய இரண்டிலும் விளங்குகிறார். மந்திரம் ஒலிக்குங்கால் சொல்லுருவில் விளங்கும் சிவபெருமான் உறுப்புகளுடன் விளங்கும்கால் பொருளுருவில் விளங்குகிறார். ஐ, ஔ நீங்கலான நெட்டை எழுத்துக்கள் வித்தெழுத்துக்களாம். ஐந்தெழுத்து மந்திரம் ஆன்மாவைக் குழைவிக்கும். இக்குழைவே ஆன்ம நிவேதனம். சிவாய நம, நமசிவாய ஆகிய நுண்மையும், பருமையும் ஆகிய இருவகைத் திருவைந்தெழுத்துடன் ஈ,ஊ, ஆ,ஏ,ஓம் என்னும் ஐந்தெழுத்துக்களுடன் கனிந்து வழிபடுதலே செந்நெறிக் கொள்கையாம்.

ஒன்றெனும் வானும், இரண்டெனும் காற்றும், மூன்றெனும் தீயும், இறைவனின் திருக்கூத்தினால் இயங்குகின்றன. தீயும் அஃதனைய ஒளிப்பொருள்களான ஞாயிறு மற்றும் திங்களும் இயங்க, ஓரேழ் உலகங்களும் அவற்றில் வாழும் எழுவகை உயிர்களும் ஆடுகின்றன. படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல், கலப்பித்தல், களிப்பித்தல் ஆகிய எழுவகை ஆற்றல்களும் முறையே வாணி, திரு, உமை, மகேசை, மனோன்மணி, விந்து, சத்தி என்றழைக்கப் பெறுகின்றன. சிவன் ஒருவனாய் ஆட, அவனும் சிவம், சத்தி, நாதம், விந்து, சாதாக்கியம், மகேசுரம், உருத்திரன், திருமால், நான்முகன் என்னும் தத்துவங்களுடன் சிற்றம்பலத்துள் ஆடுகின்றான். இக்கூத்து உயிர்களுக்கு ஞான ஒளியை

ஊட்டுவான் வேண்டி இறைவனின் கருணையால் ஆதலால் மாணிக்கக் கூத்து என்றழைக்கப் பெறுகிறது.

அசபை என்னும் தலைப்பினில் கூறப்போந்த திருமூலர் திருவைந்தெழுத்து மற்றும் திருவம்பலச் சக்கரத்தின் அடிப்படை பற்றித் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார். அசபையும், திருவைந்தெழுத்தும் முறையே நுண்மையும், பருமையும் ஆம்.

ஓங்காரம் நுண்மையாம் ஓதும்ஓர் ஐந்தெழுத்து
பாங்காய்த் தோன்றும் பருமையாம் - தாங்கிட
நீங்கா நினைவலைகள் நீங்கிச் சிவயோகம்
தேங்கும் உயிரில் தழைத்து.

வாழிய சிவநெறி! வாழிய வையகம்!

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

40. திருவம்பலச் சக்கரம்

சேக்கிழார் பாதசேகரன். சி.சு. கண்ணாயிரம்
கோயம்புத்தூர்

தோற்றுவாய்

திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரம் மூவாயிரம் பாடல்கள் கொண்டது. இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஒன்பது சிவாகமங்களின் சாரமாக ஒன்பது தந்திரங்களாக இயற்றப்பட்டது. நூலின் மணிமுடியாகத் திகழ்வது நான்காம் தந்திரம். நூலின் பெரும் பகுதி யோக நெறிகளை மறைபொருளுள்ள சொற்களால் பாடப்பட்டது. அவற்றை ஒருவாறு விளக்கும் உரை நூல்கள் ஆங்காங்கு எழுந்துள்ளன. ஆனால் அனுபவம் வாய்ந்த தேசிகரின் நேர்முக உதவியால் யோக முறைகளைப் பயில்வோருக்கன்றி ஏனையோருக்கு உண்மைப் பொருள்கள் விளங்கா. நான்காம் தந்திரத்தில் பல மந்திர மொழிகளைச் சக்கரங்களில் அமைத்துப் பயிலல் கூறப்படுகின்றது. அவற்றுள் திருவம்பலச் சக்கரமும் ஒன்று. திரு- வீடு பேறாகிய செல்வம். அம்பலம் - கூத்தாடு தேவர் பக்குவான்மாக்கள் பொருட்டுத் தன் திருவைந்தொழிற் கூத்துக்களில் ஒன்றான அருட்கூத்து இயற்றும் ஆடரங்கு. அது திருவருளேயாகும். திருவருளை ஆடரங்கமாகக் கொண்டு அவன்புரியும் அருளியக்கமாகிய கூத்தைக் கூறும் மொழியைச் சக்கரங்களில் பல்வேறு விதங்களில் அமைத்து வழிபடுவதையே இப்பகுதியில் நாயனார் உபதேசம் செய்துள்ளார்.

இறைவன் திருப்பெயர்

திருவைந்தெழுத்தே, இறைவன் பெயராகவும் அவன் வடிவமாகவும், அவனாகவும் உள்ளது. குறுக்கும் நெடுக்குமாகப் பன்னிருநேர் கோடுகள் வரைந்து நூற்றிருபத்தோரறைகளாக அமைக்கின்ற சக்கரத்தில் உரிய முறையில் திருவைத்தெழுத்தின் அக்கரங்களை அமைப்பின் அதன் நடுவினில் கூத்தாடுதேவனின் பெயர் விளங்கித் தோன்றும் என்கின்றார். திருவைந்தெழுத்தின் சி கரம் சிவத்தை குறிப்பது. இது சக்கரத்தின் நடுவில் நிற்பது. நான்கு மூலைகளில் அமைந்துள்ள ஏனைய நான்கு சக்கரங்களில் திருவைந்தெழுத்தின் ஏனைய நான்கெழுத்துக்கள் தோன்றி நிற்கும்.

சக்கரத்தின் நடுவில் உள்ள சி கரம் ஓரெழுத்து மந்திரமாகிய மகர காரண பஞ்சாட்சரம். இதை மகா மநு என்றும் வழங்குவர். இது

வாய்விட்டுக் கணிப்பதன்று. தியானத்தில் நிறுத்தி இறைவனாகவே வழிபடப்படுவது. இது சிவபெருமானே ஆதலின் அரன் என்றும் ஓதப்படும். அரஹர என்றால் அரனே என தீவினைகளைஅறுப்பாயாக என்று கணித்தலாகும். இவ்வாறு கணிப்பின் பிற பிறப்பு நீங்கி வீடு பெறலாம் என்பது உபதேசம்.

திருவைந்தெழுத்தின் விளக்கம்

ஒம் என்பது திருவைந்தெழுத்தின் சுருக்கம். இதனைச் சமட்டிப் பஞ்சாட்சரம் என்பர். இது சிவபெருமானே ஆகும். இதனை மேற்கூறிய சக்கரத்தின் நடுவில் அமைத்து வடக்கு திசையில் ஹூம் கிழக்கில் ஹௌம் தெற்கில் ஹம் மேற்கில் ஹ என்ற பீஜ மந்திரங்களை அமைத்து, ஹூம், ஹௌம், ஹம், ஹ என்பவற்றைக் கூட்டிக் கணித்தால் அஃது இறைவன் உமையம்மை இருவருக்கும் உரிய சக்கரமாகிப் பயன்தரும்.

சிவ என்பது, இறைவன் உமையம்மையுடன் கூடி நிற்கும் நிலை. சிவ என்பது காரண பஞ்சாட்சரம். இதனைக் கணிப்பவர் தன் முனைப்பு இன்றி சிவத்தையும் திருவருளையுமே தரிசித்து நிற்பர். பாச நீக்கம் பெறுவர்.

திருவைந்தெழுத்தில் உள்ள ய கரம் ஆன்மாவாகும். இதனை மேற்குறித்த சிவ என்ற காரண பஞ்சாட்சரத்துடன் இணைப்பின் சிவய என்ற மூன்றெழுத்து மந்திரமாகும். இதனை அதி சூட்சும பஞ்சாட்சரம் என்பர். இதனைக் கணிக்கும் பொழுது ஆன்மா சிவத்தையும் திருவருளையும் கணிக்கும் தன் இருப்பையும் உணரும். ஏனைய உலக நினைவுகளை விட்டு விலகி மலபரிபாகம் எய்தத் தகுதியாக நிற்கும்.

சிவய நம என்பது சூட்சம பஞ்சாட்சரம் இதனையே சிவ பெருமான் தன் திருக்கோயிலாகக் கொண்டு இதனுள் எழுந்திருளியிருப்பான். இதிலுள்ள ந கரம் திரோதான சக்தியையும் மகரம் ஆணவமலத்தையும் குறிப்பன. இதைக் கணிப்பதால் திரோதான சக்தியும் ஆணவமலமும் பின் தள்ளப்பட்டு ஆன்மா திருவருளை ஒட்டி சிவத்தை எண்ணத் தகுதி பெறுகின்றது.

இவ்வாறு திருவம்பலச் சக்கரம் ஒன்றிலிருந்தே பல பகுதியினைத் தனித் தனியாகப் பிரித்துத் தனித்தனி சக்கரங்களாக அமைத்து அவ்வொவ்வொன்றிலும் திருவைந்தெழுத்தின் பல்வேறு பேதங்களை அமைத்து அவற்றைக் கணிக்கும்படி நாயனார் உபதேசம் செய்கின்றார். அச்சக்கரங்கள் ஒவ்வொன்றையும் இங்கு வரைந்து காட்டி விளக்க இந்தச்

சிறிய கட்டுரையில் போதிய இடமின்று. அனுபவம் வாய்ந்த தேசிகர் மாட்டு நேரில் கேட்டு அதன் வழி நின்று பயின்று பலன் பெறுக.

இறைவனும் இறைவியும் தம்முள் வேறல்லர்; நெருப்பும் வெப்பமும் போன்று பிரிப்பின்றி நிற்பவர். எனினும் இருவரையும் இருநிறத்து மந்திரங்களைக் கணித்து வழிபட்டால் மட்டுமே மெய்ப்பொருளை உணரலாம்.

சக்கரத்தின் சந்திகளில் உள்ள குற்றெழுத்துகளில் முதலாவதாகிய என்ற அகரத்தை வாங்கி அடியிலும் இகரத்தை வாங்கி முடியிலும் அமைத்து நடுவில் ஹர என்ற மந்திரத்தை அமைத்தால் சிவலிங்கம் தோன்றும். அதனை முறைப்படி மூலாதாரம், இருதயம், புருவ நடு என்ற இடங்களில் வைத்துத் தியானம் செய்து மகரத்துடன் கூட்டிப் பிராணாயாமத்துடன் கணித்தால் அம்பலவாண ஒளிவடிவம் காட்சி தரும்.

திருவம்பலச் சக்கரத்துள் அடங்கியுள்ள ஏதேனும் ஒரு சக்கரத்தில் உணர்வை நிறுத்தி பிராணாயாமத்தால் மூலாதாரத்தில் உள்ள கனலை எழச் செய்து சக்கரத்தில் உள்ள எழுத்துக்களில் ந கரத்தைக் கணித்தால் திரோதான சக்தி அந்தச் சக்கரத்துள் மறைந்து நிற்கும் அம்பவாணனை வெளிப்படக் காட்டுவாள்.

அருட் சத்தியாகிய வ கரத்தை கணித்தால் அவள் சிவநாமத்தை அளித்து அதன் வழி பரமுக்தி கிட்டச் செய்வாள். அவர் உபதேசம் செய்த ம கரத்தை ஓதினால் உயிர் பயம் நீங்கி ஒளியுடையதாக நிற்கும்.

சக்கரத்தில் உள்ள சி கரத்தைத் தியானம் செய்தால் ஆன்மா சிவத்தை தரிசித்து நிற்கும். ந கரத்தை அவன் திருவடியாகவும், ம கரத்தை வயிறாகவும், சி கரம் தோள்களாகவும், வ கரம் முகமாகவும் ய கரம் சென்னியாகவும் நின்று திருக்கூத்தைக் காட்டும். அவற்றுடன் பிரணவத்தையும் கூட்டி ஆறெழுத்து மந்திரமாக தியானம் செய்து கணித்தல் வேண்டும். இம் மந்திரம் பல வகையாக விரிந்து பல்வேறு ஆன்மாக்களுக்கு அவற்றின் பக்குவம் நோக்கிப் பல்வேறு பயன்களை நல்கும்.

பிரணவத்துடன் கூடிய திருவைந்தெழுத்தாகிய சிவய என்பதைப் பிராணயாமத்துடன் தியானம் செய்து கணிக்கின் திருவம்பலம் காட்சி தரும்.

திருவம்பலச் சக்கரத்தினின்றும் பிரித்து எடுத்த மற்றொரு சக்கரத்தின் **மயநவசி** என்ற மந்திரம் நிற்கும். இவ்வெழுத்துக்கள் முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பூதங்களாக

நிற்கும். இந்த மந்திர சக்கரத்தில் அம்பலவாணர் எழுந்தருளி தியானம் செய்பவர்களுக்கு அருள் புரிகின்றார்.

திருவம்பலச் சக்கரத்திலுள்ள உ கரத்தை தனியே எடுத்துக் சுழியை கீழ்நோக்கியும் நேர் கோட்டை மேல் நோக்கியும் அமைத்தால் ஆத்மலிங்கம் என்ற வடிவம் கிட்டும். இதில் சுழி நெருப்பையும் நேர்கோடு காற்றையும் குறிக்கும். இதனைப் பிள்ளையார் சுழி என்று கொண்டு எந்த மந்திரத்தையும் எழுதுமுன் இதனை எழுதுவர். இஃது ஓங்காரமாகிய சமட்டிப் பஞ்சாட்சரமாகப் பலன் தரும்.

திருவம்பலச் சக்கரத்திலுள்ள மந்திரத்தில் மறைந்து நிற்கும் அ கரம் முதலியவற்றை பிராணாயாமத்துடன் கணித்தால் திரோதன சக்தி விலகி ஆணவமலம் வலிகுன்றும். ஆன்மா மலபரிபாகம் எய்தும். அப்பொழுது உயிர் நுகரும் இன்பம் சொற்களால் கூற முடியாததாகும். பிராண வாயுவைக் கும்பகம் செய்து தியானத்தில் நின்றால் ஐம்பத்தொரு எழுத்துக்களும் புலனாகும். உயிர் வீட்டின்பம் நுகரும்.

உந்தியின் கீழ் உள்ள எழுத்தில் இறைவன் அன்னையுடன் எழுந்தருளி இருப்பான். அந்த நிலையைத் துறவிகளும் தரிசித்து அறிவது அரிதாகும். இந்த ஓர் எழுத்தே ஏனைய ஆதார இடங்களிலும் வெவ்வேறு எழுத்துக்களாக நிற்கும்.

சிவனை ஔ என்றும் சௌ என்றும் பிரித்துப் பொருந்திய மந்திரம் அம் என்றும் சம் என்றும் அமைத்து அம்சம் என்று சிவமாய் நிற்கும்.

சி என்ற ஓரெழுத்தே ஆதாரத் தாமரைகள் அனைத்திலும் வெவ்வேறு எழுத்துக்களாக வெவ்வேறு மூர்த்தங்களாக நிற்கும். சந்தியா வந்தனம் செய்வோர் பெரும்பாலும் அதனை ஒரு சடங்காகவே செய்கின்றனர். இநத உண்மையை அறிந்து அம்மூர்த்தங்களில் சிவபெருமானை வழிபடுவதில்லை.

இந்த ஓரெழுத்தைப் பிரணவ வடிவில் வழிபட்டால் ஐம்பொறிகளை அடக்கி ஆளலாம். திருவைந்தெழுத்தைக் கணித்தவாறு தலையில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையை சிந்தனை செய்யில் அமுதம் ஊறிப்பெருகும். ஒப்பற்ற திருவைந்தெழுத்தைப் பிரணவத்துடன் கூட்டிக் கணித்தவாறு தியானம் செய்வோர் சிவபோகம் துய்ப்பர். மேற்கூறிய ஆறெழுத்து மந்திரத்தை நால்வகை வாக்குகளிலும் வைத்து ஆய்வு செய்க.

சுத்த மாயையினின்றும் தோன்றும் பிரணவமே குண்டலினி சத்தியாகும். அது தலை, கால், உடல் என்ற உறுப்புகளில் நிலையாக நின்று ஐம்பத்தொரு எழுத்துக்களாக விரிகின்றது. அவற்றின்றும் வேதங்கள் தோன்றும். அனைத்தும் திருவைந்தெழுத்துக்களேயாக சிவபெருமான் திருவைந்தெழுத்தில் எழுந்தருளி அனைத்தையும் படைத்துக் காக்கின்றான். அவ்வைந்தெழுத்தை உறுதியாகப் பற்றிக் கணிப்பவர் வினைகள் நீங்கிச் சிவத்தை பெறுவர். தேவர்கள் சகல போகங்களையும் எய்துவர்.

உலகம் நிலைபெற்றிருத்தலும், சிவாலயங்களும் அவற்றில் இறைவன் கோயில் கொண்டிருப்பதும் உயிர்களுக்கு அருள்புரிதலும் ஐந்தெழுத்தின் பெருமையாலாவன. ஐந்தெழுத்தே இறைவனின் அட்ட மூர்த்தங்கள்.

ஓம் நமசிவ என்று கணிப்பவருக்கு அந்த மந்திரமே நன்னெறியாகும். நான் பிற மந்திரங்களை நீக்கி இதனை மட்டும் கணித்துப் பயனடைந்தேன். நீங்களும் அவ்வாறே கணித்துப்பயன் பெறுங்கள் என்று நம் நாயனார் ஆற்றுப்படுத்துகின்றார்.

ஐந்தெழுத்தில் இறைவன் எழுந்தருளியிருந்து இடையறாது திருக்கூத்து இயற்றுகின்றான்.

ஐந்தெழுத்தில் உள்ள அகரம் இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களைப் பற்றியும் உகரம் சிவ தத்துவங்கள் ஐந்தை பற்றியும் மகரம் வித்தியா தத்துவங்கள் ஏழனையும்பற்றி நிற்கும்.

நமசிவாய என்று கணிப்பவர் உள்ளத்தில் சிவன் எழுந்தருளி இருப்பான்.

பஞ்ச கலைகளில் உள்ள நகரம் முதலிய ஐந்து எழுத்துக்களைப் பிரணவம் முதலாக மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும் சந்தியா காலங்களில் தியானம் செய்பவர்களுக்கு சந்தியா வந்தனம் முதலிய சடங்குகள் மிகை.

சிவய என்றும் மந்திரம் யோகமும் ஞானமுமாகி நிகழ்வித்து உயிர் சிவத்தை எய்தச் செய்யும். திருவைந்தெழுத்தால் ஐந்து மலங்களும் விலகிப்போகும். சிவன் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருப்பான். இம்மந்திரமே அனைவருக்கும் புகலிடமாகும்.

ஔ என்றும் மந்திரத்துடன் சிவய என்பதையும் புணர்த்துக் கணிப்பவர் சிவவடிவம் பெறுவர்.

எட்டும் இரண்டும் என்பதன் கூட்டுத்தொகை பத்து. இது ய என்ற எண் வடிவம். அது ஆன்மாவைக் குறிக்கும். அது திருவைந்தெழுத்தில் உள்ளது. இஃதே சிவாகமங்களின் ஞானபாதகக் கருத்தாகும்.

செங்குத்தாக எட்டு நேர்க் கோடுகள் கிழித்து அவற்றின் மேல் குறுக்காக எட்டுக் கோடுகளை இழுக்க நாற்பத்தொன்பது அறைகள் வரும். நடு அறையில் சிவபெருமான் எழுத்தாகிய சிகரம்அமையுமாறு திருவைந்தெழுத்துக்களை ஐந்து வகையாக மாற்றிமுறையே இருபத்தைந்துஅறைகளில் பொறித்த பின் நடு அறையொழிந்த நாற்பத்தெட்டு அறைகளிலும் பிற எழுத்துக்களைப் பொறிக்கவும். இந்தச் சக்கரத்தை வழிபட்டுத் திருவைந்தெழுத்தைக் கணிக்கத் தொடங்குக.

திசைக் காவலர்; பைரவர்; வீரபத்திரர்; விநாயகர்; முருகர்; உருத்திரர்; திருமால்; நான்முகன்; மகேசுரர்; சதாசிவர்; விந்து;நாதம்; பரிவாரதேவதைகள் என்பவர்கள் எழுத்துக்களைப் பொறித்துச்சிவசக்கரம் அமைத்து வழிபட்டுத் தியானம் செய்து வீடுபெறுவீர்களாக.

முப்பத்தாறு அறைகள் கொண்ட சக்கரம் அமைத்து, இடதுபுறமுள்ள பதினாறு அறைகளைச் சந்திரன் கூறாக கொண்டு, ஐம்பதொரு எழுத்துக்களில் ஐவருக்கத்தில் இடைநின்ற பதினைந்தையும் நீக்கி ஒடுக்க முறையில் க்ஷ காரம் முதலாக ட கரம் ஈறாக உள்ள பதினாறு எழுத்துக்களையும் சந்திரனின் பதினாறு கலைகளாகப் பாவிக்க. வலப்பால் பன்னிரண்டறையில் ஞ காரம் முதலாக உயிர் எழுத்துக்களில் எகர ஒகரம் குறில்களையும் சேர்த்து எ கரம்ஈறாகப்பன்னிரண்டெழுத்துக்களையும் சூரிய கலைகளாகப் பாவிக்க எஞ்சி நின்ற ஏழு அறைகளுடன் மேற்பக்கத்தில் கொடுமுடிபோல நடு இரண்டு அறைக்கு நேராக இரண்டு அறைகள் நிராதாரமாக இறைவன் இறைவிக்குக் கீறுக. ஆகப் பத்து அறைகளில் எஞ்சிய ஞ காரம் முதலிய பத்து உயிரெழுத்துக்களையும் அக்கினிக் கலைகளாகப் பாவித்து காயத்திரியை தியானம் செய்த பின் இவ்வெழுத்துக்களை விந்து ஈறாக ஓதுக.

சிவபெருமானை இந்தச் சக்கரத்தின் வழி தரிசனம் செய்யின் உயர்வு பெறுதல் உறுதி. அதன் பின்பு அவனை நம் உள்ளத் தாமரையில் அடக்கினால் மேலும் உயர்வு பெறுதலும் உறுதி. அதன் பின் தன் இயல்பு

கெடாத பதி ஞானத்தின் வழியே சென்று அழியாத அன்புடன் திருவைந்தெழுத்தைக் கணிக்கும் பேறு பெறுவது திண்ணம்.

தேவர்களில் பக்குவம் எய்தினோர் மலர்களை மழை போலச் சொரிந்து சிவசக்கரத்தில் உள்ள திருவைந்தெழுத்தின் வழியாகச் சிவபெருமானின் இரு திருவடிகளையும் தியானத்தில் இருத்துவர். இறுதியில் அத்திருவடிகளிலேயே கலந்து விடுவர்.

பிரணவத்துடன் கூடிய பஞ்சாட்சரம் ஆறெழுத்து மந்திரம். அவற்றை ஆறு சமயங்களும் பற்றி நிற்கின்றன. சிலர் இந்த ஆறெழுத்து மந்திரத்தினும் இருபத்துநான்கெழுத்து மந்திரமாகிய காயத்திரியே சிறந்தது என மயங்குவர். ஆனால் காயத்திரி மந்திரமும் திருவைந்தெழுத்தில்அடங்குவது. காயத்திரியின் முன்பும் பிரணவம் உள்ளது. அது சமட்டி பஞ்சாட்சரமே என்பதை அறிய வல்லார் திருவைந்தெழுத்தைக் கணிப்பதைக் கைவிடார்.

படுக்கை வசமாக நான்கு நேர்கோடுகளும் அவற்றின் மேல் செங்குத்தாக நான்கு கோடுகளும் வரைந்தால் ஒன்பது அறைகள் கிட்டும். நடு அறையில் அகரத்தை வரைந்து, கரம் எட்டு முகமாய்அந்தஎட்டு அறைகளும் நோக்கும் வண்ணம் அவற்றை உம என்ற கலையால் நிரப்பி எல்லா அறைகளும பிரணவத்துடன் அடங்கும்படி ஓங்காரத்தைப் பொறித்தால் உமாபதி சக்கரம்தோன்றும். இது மற்றொரு வகையான திருவம்பலச் சக்கரம். இதை நினைத்து திருவைந்தெழுத்தைக்கணிப்போர் பெரும்பயன் அடைவர்.

நிறைவுரை

இதன் பின்னர் ஆறு மந்திரங்களும் அவற்றை அமைத்து வழிபடும் முறைகளும் கூறப்பட்டு இந்தப் பகுதி நிறைவு பெறுகின்றது. இவ்வாறு மந்திரங்களும் மாந்திரிக முறையில் அட்டகன்மவித்தை என்ற முறையில் ஆறு பகுதிகள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவை வாம மார்க்கத்தினர் கைக்கொள்ளும் முறை. திவ்வில் ஆகமப்பொருளாகிய சைவ சித்தாந்தத்துக்கு மாறானவை. எனவே அவை பிற்காலத்தில் வாம மார்க்கத்தினரால் பாடி இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டன என்று தெரிகின்றது. ஆதலின் அவை ஈண்டு விளக்கப்படவில்லை.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

41. அருச்சனை, நவகுண்டம்

மகாவித்வான். **வே. சிவசுப்பிரமணியன்**
மயிலம்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமந்திரம். பத்து என்பதைத் தமிழ் எண்ணில் எழுதும் போது ய என்று குறிப்பிடுவர். இது பஞ்சாட்சரத்தில் உயிர் என்பதன் குறியீடு ஆகும். ஆக பத்தாம் திருமுறை உயிர் ஆம் திருமுறை ஆகும். உயிர் மேலும் மேலும் ஆகும் நிலையைக் காட்டலால் திருமந்திரம் உயிர்க்கு உறுதுணையாகும் ஒரு மந்திரமாய் ஓங்கியது எனலாம்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உடையது. யந்திரங்கள் என்றால் சக்கரங்கள். மந்திரங்கள் சக்கரங்களில் அடைக்கப்படும் மந்திர ஒலிகள். தந்திரங்கள் என்றால் சடங்குகள் அதாவது உபாசனா முறைகள். யந்திர, தந்திர, மந்திரங்களை உள்ளடக்கியதே திருமந்திரமாகும். தோத்திர நூல் வரிசையில் திருமுறைகளில் சேர்க்கப்பட்டாலும் முழுமையான சாத்திர நூல் திருமந்திரமே. இதுவே இந்நூலின் உயிர்நாடி எனலாம். இந்நான்காம் தந்திரத்தில் சிவம் முதலான பல்வேறு கடவுளுக்குரிய மந்திரங்கள், யந்திரங்கள், உபாசிக்கும் முறையாகிய தந்திரங்கள். அவ் உபாசானமுறையால் கிடைக்கும் பயன்கள் என அனைத்தும் உணர்த்தப் பெறுகின்றன.

திருமந்திரம் பெரும்பாலும் யோகமார்க்கத்தை விளக்கி நிற்பது. யோகமாவது சேர்தல்- அதாவது இடையறாது நினைத்தல், தியானிக்கப்படும் பொருளோடு மனம் இடையறாது ஒன்றி நிற்கப் பண்ணுதல் தியானத்தால் மட்டும் வாராது. மனம் ஒன்றைத் தியானிக்கும் போது, புறக்கருவிகளாகிய ஞானேந்திரிய, கன்மேந்திரியங்கள் வேறு வியாபாரங்களில் ஈடுபடுதலும் கூடுமன்றோ? மனம், மொழி, மெய் என்ற மூன்றுள் மனம் என்ற ஒன்று தியானத்தில் தொழிற்படுமானால் மொழியும் மெய்யும் வாசனையளவில் வினைத்தொடர்பால் வேறொன்றைப் பற்றி நிற்றலும் கூடுமல்லவா? ஆக மொழியும் மெய்யும் மனத்தோடு ஒத்து இயங்கப் பயிற்சி வேண்டியுள்ளது. தியானமாகிய உண்முக யோகத்தை மூலக்குறிக்கோளாக வைத்துப் புறத்தே கருவிகளை அந்த உண்முகத் தியான யோகத்தோடு இணைக்க வேண்டி மந்திர யந்திர பூஜையும், உருவத்தியானமும் அமைந்தன. நாம் மூர்த்திகளுக்கு வழிபாடு செய்யும் போதும் புறவழிபாட்டுக்கு அங்கமாக அகவழிபாடாகப் பிராணப் பிரதிட்டைக்கு உதவுவன பீஜாக்ஷரங்களோடு கூடிய மந்திரங்களே ஆகும்.

ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து, ஒன்பதெழுத்து, பதினாறெழுத்து, மூலமாகிய மூன்றெழுத்து என்ற மந்திரங்கள் நம் சமய வழிபாட்டில் முதன்மை வகிக்கின்றன.

மந்திரமதனிற் பஞ்ச மந்திரம் வடிவதாகத்
தந்திரம் சொன்ன வாறு

என்று சிவஞான சித்தியார் கூறுவதும் இங்கு நினைக்கத் தகுவதாகும். உருவத் திருமேனியினும் மந்திரத் திருவுரு மிக மேன்மையுற்றதாகும்.

நான்காம் தந்திரத்தில் உள்ள பதின்மூன்று அதிகாரங்களுள் மூன்றாவது அதிகாரம் ***அருச்சனை*** என்பதாகும்.

அருச்சனை

யந்திரத்தில் மந்திர வடிவாக இறைவனை எழுந்தருளுவித்து தியானிக்கத் தொடங்குவதற்கு முன்னால் மனத்தால் செய்யப்படும். அத்தியானம் உறுதிப்பட வேண்டி மொழி, மெய், இரண்டாலும் வழிபாடு செய்தலே அருச்சனை எனப்படுகிறது. அருச்சனை சிறப்பு பொருளில் தோத்திரம் செய்தலாகிய மொழி வழிபாட்டை மட்டும் குறிப்பதாயினும் பொதுவாக வழிபாடு முழுவதையுமே *அருச்சனை* என்றே குறிப்பதாகக் கொள்ளுதலே பெரு வழக்கிற்று ஆகும் என்க. *அருச்சனைவயலுள்அன்பு வித்திட்டுத், தொண்ட உழவர் ஆரத்தந்த, அண்டத்தரும் பெறல் மேகன் வாழ்க* (93-98) திருவண்டப்பகுதி) என்ற திருவாசகத்துள்ளும் வழிபாடு என்னும் பொருளில் அருச்சனை என்பது வந்துள்ளது. புறத்தே செய்யும் யந்திர வழிபாடும் அகத்தே செய்யும் மந்திரத் தியானமும் ஒன்றுபட்டால் எண்ணிய எண்ணியாங்கு எய்திப் பயன் விளைக்க வல்லதாகும்.

இறைவனை மந்திர வடிவாக யந்திரத்தில்(சக்கரங்களில்) எழுந்தருளப் பண்ணி அந்த யந்திரத்திற்கு வழிபாடு செய்தல் வேண்டும்.

தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், கருநெய்தல், கமுகம்பூ, குருக்கத்தி(மாதலி), மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, சண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்களைச் சாத்தி வழிபாடு செய்க.

முறைப்படி புனுகு, கள்தூர் முதலிய மணத்தோடு கூடிய சந்தனம், இனிய மணம் வீசும் குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், அகிற்குழம்பு இவற்றைப் பனி நீரிலிட்டு நன்றாகக் குழைத்து சக்கரத்திற்குச் சாத்தி அன்புடன் வழிபடுக.

அன்பாக அமுதத்தை(அன்னம்) நிவேதனம் செய்து பொன்விளக்கு ஏற்றிவைத்து, தூபதீபங்கொடுத்து, திசைதோறும் மனத்துன்பமற்றுத் தொழுபவர்களை முத்திப் பேறும் வந்தடையும்.

இவ்வாறு வழிபட்டால் எல்லாச் செல்வமும் வந்தடையும். இந்திர போகமும் .ரண்வகை சித்திகளும் உண்டாகும். அவற்றை வெறுத்தொதுக்கி மேலும் வழிபட முத்தியும் எய்தலாம்.

இவ்வாறு வழிபாடுவார் தாமே வந்தணுகும் பிறர் மனைவியையும் விரும்பார். ஐம்பொறிகளையும் அடக்கியவர் ஆவர். தூய்மையுடையவர், பஞ்சாங்க நமஸ்காரம், தபசெபம் உடையர். மூச்சுக்காற்றோடு ஒன்றித்துத் தியானத்தில் உறைத்திருப்பவராவர்.

இத்தகைய நிலையில் சிவபரம்பொருளுக்கு மீளா அடிமையானவர்கள் கன்மங்களின் வசப்படமாட்டார். தன்னலம் கருதார். சிவயோகத்தில் நிலைத்து நிற்பர். யோகக் காட்சியில் மணியொளி போல் உள்ள இறைவனைக் காணுதலும் உண்டாம். சரியை முதலான ஒழுக்கங்களும், கிரியை முதலாகிய செயல்களும் இன்றி சிவயோகத்தில் ஒன்றிய நிலையில் சிவப் பேரொளியைக் கண்டிருப்பர்.

மனம் இருளும் ஒளியும் போல் இருநிலை உடையது. பரவெளியாகிய ஒளியைச் சார்ந்து ஒளியாகவும், உலகமயக்கமாகிய இருளைச் சார்ந்து இருளாகவும் இருநிலை அடைகிறது.

உலகமயக்கத்தை அறிவுத்தெளிவால் அகற்றி வீசினால் உயிர் அறியாமையின் நீங்கி அறிவு ஒளியில் சேரும். சிவஞானிகள் இத்தகைய சிவயோக நிலையில் சித்தம் சிவயோகமாக இருப்பர்.

தான் அவனாக, அவனே தானாக நிற்கும் நிலை வந்தால் சிவசாயுச்சிய நிலை கைகூடும். சிவதுரியராக அவர் ஆவர்.

உந்திக்குக் கீழே மூலாதாரத்துள் நிலைபெற்றிருக்கும் ஓங்காரம். அந்த ஓங்காரத் தியானம் மிகமிக சிவாக்கின் மேல் எழும்பும். அப்போது குண்டலினி சத்தி கழுத்தில் வந்து பொருந்துவாள். துன்பக் காலத்தும் இன்பக் காலத்தும் எப்பொழுதும் ஆன்மாவைவிட்டு நீங்காதவள் சக்தியாவாள். தாய் போல அருள் வடிவாக இருந்து ஆன்மாவை ஈடேற்றம் செய்பவள் அவள், இந்த சக்தியை மேல் ஓங்கச் செய்தால் சிர உச்சியில் உள்ள விந்து நாதம் இரண்டும் விளங்கும்.

ந.ம. வை விட்ட *சிவாய* என்பதும் பிரணவம் என்பதும் ஒன்றே. அ.உ.ம. என்றும் பிரணவ மூன்றும், சிவய என்ற சிவம், சக்தி, உயிர் என்ற பொருளையே உடையன. உயிர்கள் ந, ம என்ற மல திரோதானங்களை இருப்பிடமாகக் கொண்டு இயங்குவன. அவற்றைவிட்டு *சிவ* என்பதைச் சார்ந்து சித்தத் தியானத்தில் பழக வேண்டும். அப்போது சிவமாம் பதியாகும். முதலில் நமசிவாய என்று கூறிவந்து, பிறகு நமஹ சிவய நம என்றாகி சிவமாகும் நிலையைச் சேர்க. அதுவே வீடாகும்.

இத்தகைய மோன நிலையில் தெளிவு பிறக்கும்போது சிவஅமுதம் சுரக்கும். ஞான உதயம் உண்டாகும். ஞானஒளி உண்டானால் எட்டு எனற்குரிய *அ* என்னும் பதத்தில் காண்பான் காணப்பொருள் என்ற இரண்டு நிலை வெளிப்படின் சிதாகாயத்துள் சிதம்பரநாதன் தோன்றுவான். இவ்வாறே புறத்தே செய்கிற வழிபாடும் அகத்தே செய்கிற தியானமும் ஒன்றுபட்டு உயிரினிடத்தில் சிவம் பிரகாசிக்கச் செய்கிற தன்மையை அருச்சனை என்ற பிரிவு விளக்கியது.

நவகுண்டம்

நான்காம் தந்திரத்தில் நான்காம் பிரிவு நவகுண்டம் என்தாகும். அவரவர் விரும்பும் செயல்களை நிறைவேற்றிக் கொள்ள அதற்குத் தக்கவாறு குண்டங்களை அமைத்து அவிசொரிந்து வேள்வி செய்து பயன் பெறுவது நவகுண்டமாகும்.

எட்டுத்திக்கிலும் எட்டுக் குண்டங்கள், நடுவில் ஒன்று என்று ஒன்பது குண்டங்கள் அமைத்தலால் நவகுண்டங்கள் எனப் பெயர் பெற்றது என்பர்.

மந்திரப் பயிற்சிக்கு இன்றியமையாதன மூன்று, ஜபம்,ஹோமம், தர்ப்பணம் என்பன. மந்திர செபத்தை விட நூறுமடங்கு உயர்ந்தது ஹோமம் ஆகும். அதனின் நூறுமடங்கு உயர்வு தருப்பணம். ஹோமம் சிவாகம விதிப்படி வாகீஸ்வரன் வாகீஸ்வரியை ஆராதித்து சிவாக்கினி பெற்று அக்கினிக்குச் சாதகன்மிதி கிரியைகள் செய்து ஓமகுண்டத்தில் பிரதிட்டை செய்து, எரியச் செய்து, சிவமாகப் பாவித்து பூஜை செய்து உரிய பொருள்களால் ஒமஞ் செய்வதாகும். அதற்கு மிக இன்றியாமையாதது குண்டம்.

சிவயாகத்திற்கு ஒன்பது வகையான(வடிவான) குண்டங்கள் இடுதல் மரபு. அவற்றை,

சதுரம், யோனி, பிறை, முக்கோணம், வட்டம், அறுகோணம், பதுமம், அட்டகோணம், வாத்துவம் என்னும் வடிவங்களில் அமைத்தலால் ஒன்பது வகையான வடிவுடைய நவகுண்டங்கள் எனப்பெற்றன.

புறத்தே இவ்வாறு வேள்வி புரிவது போல நம் உடம்பின் அகத்தேயும் வேள்வி செய்தல் வேண்டும். அந்த அகவேள்வியும் நவகுண்டம் என்னும் இப்பகுதியில் சொல்லப் பெறும்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் என்ற உலக வழக்கிற் போல புறத்தே செய்யும் வேள்வியும், அகத்தே (உடலுக்குள்ளே) உயிர் செய்யும் வேள்வியும் இங்கே சொல்லப் பெறுகின்றன.

உடம்பிலும் ஆதார தானங்களில் ஒளிக்குண்டங்கள் உண்டு. அவற்றை ஆதாரச்சக்கரங்கள் என்பர்.

நிலம் என்னும் பூதத்திற்கு இடம் மூலதாரம் (நாபிக்குக் கீழ் 4 அங்குலம்) அங்கிருந்து எழும் மூலக்கனல் மேல் எழும்பி ஒவ்வோர் ஆதாரச் சக்கரங்களிலும் படிந்து நிற்கும். அதனால் அச்சக்கரங்கள் பிரகாசிக்கும். அதன் விளைவைச் சொல்லால் வருணிக்க இயலாது என்கிறார் திருமூலர். மேலாகிய சிதாகாச பரவெளி உண்மையை யானறிந்த படியால் உயிர்க்கு உள்ளேயே அச்சக்கரங்கள் உள்ளன என்ற உண்மையை எனக்கு அறிவித்துக் காட்டி அருளினான் சிவபெருமான்.

பிராணாயாமத்தால் சிவபரம்பொருளை உள்ளே தேடுக. அப்போது சிகாரமாகிய செம்பொருள் தோன்றும்.

ஆதாரமும் ஆதேயமும் தானே ஆக இருப்பது ஆகாயம் அவ்வாறே பரவெளியாகிய இறை எல்லாவற்றையும் தாங்குகிறது. இதனை வள்ளலார்,

வெளியினில் முடிநிலை விளங்குற அகத்தே
அளிபெற விளங்கும் அருட்பெரும் சோதி

என்றார். உடலுக்குள்ளே ஒன்பது குண்டங்களில் எழும் சோதியாம் சிவத்துடன் கலந்து நின்றால் இறைவனது ஐந்தொழில்களை நம் செயலாகச் செய்யலாம் என்கிறார் திருமூலர்.

உள்ளே வெளிப்பட்ட சிவம் நடுவாகிய ஆஞ்ஞை வரை வியாபிக்கிறது. மூச்சுக் காற்றை அறிந்தடக்க தியானித்திடமாகிய செஞ்சோதி அண்டமுகட்டைத் தாண்டி நின்றது. பிரமரந்திரம் வரை

உள்ளே வெளிசெய்து ஆறு ஆதாரங்களிலும் அங்கங்குள்ள மூர்த்திகளாய்த் தோன்றி நிற்கும் சிவம்.

உடல் எனும் இந்த குண்டத்தில் சோடச (பதினாறு) கலைகளும் விளங்கித் தோன்றும். அதனைக் கண்டார்க்கு வினைகள் சேரமாட்டா.

மூன்று கோணங்களாக உள்ள மூலாதார குண்டத்தில் அ,உ,ம, விந்து, நாதம் என்ற ஐந்தும் அகம், புறமாய் நிற்கும். 12 இராசியும் ஒலி மாத்திரையால் அங்கு எழும். சிவ சோதி தோன்றும். குண்டத்தில் தோன்றும் அங்கியே சிவலிங்கமாகும்.

சிரம், முகம் சோதியாகும். கைகள் சுடராகும். அந்தக் கைகளோடு திருமேனியாக ஒளிரும் இலிங்கமும் சோதியாக எழும். இதுவே நன்மை பயப்பதாகும். திருவருட் சக்தியாகும். இப்படி முடியும் பாதமுமாக சீ பஞ்சாக்கர வடிவினமாகிய சத்தியை அறியாதவர் எது கற்றும் பயனில்லை. குண குணி பாவத்தினால் சிவமும் சத்தியும் சோதியே என்றார் ஆயிற்று.

பிறை வடிவாகிய சுவாதிட்டான குண்டத்தில் (மார்பு) அட்ட நாகங்களும் எண்திக்கிலும் சுற்றி இருப்ப, நான்கு பாம்புகள் (திருக்கரம், இடுப்பு, முடி என்ற நான்கு இடங்களில்) அமைய பரஞ்சுடராகிய சிவம் எழுந்தருளியுள்ளது.

அச்சுடர் உருவே ஆனந்தக்கூத்தன் திருவுரு. அரனுக்கு ஊன்றிய பாதமாகிய சோதி ஒன்று. அச்சோதிக்கு நடமிடும் பாதம், நீர், எட்டுக் கரங்களே உலகைத் தாங்கி நிற்பன. சூரியனே முகம். சிவனே. முத்தொழிலையும் செய்கிறார். அரியும் அயனும் அவனே.

சோதி வடிவான சிவனிடத்து 6 வட்டச் சோதிகளாகத் திருமுன்னர்கண்முகம் தோன்றுதலால் கந்தனாக சிவன் கலந்து எழுந்தருளினன். இருவரும் வேறல்லர். தோற்றமுறையால் முருகன் சிவனுக்கு மைந்தன் முறையானவன் என அறிக.

மூலாதாரத்து முக்கோணக் குண்டத்தில் எழுந்த மூலக்கனல் மேல் எழுகின்றது. மூலாதாரம். நால் இதழ்த்தாமரை, சுவாதிட்டானம் ஆறு இதழ், மணிபூரகம், பத்து இதழ், இதயம் எட்டு இதழ், விசுத்தி 16 இதழ், நாக்கு இருபத்து நான்கு இதழ், ஆக்ஞை (புருவநடு) 4 இதழ், பிரமரந்திரம் 16 இதழ். சிரம் மேல் ஒன்பது இதழ் துவாத சாந்தம், சிரத்துக்கு மேல் 12 அங்குலம். ஆயிரம் இதழ். இதுவே முடிந்த சக்தி மண்டலம். இங்கு சர்வ வியாபியான சிவம் வீற்றிருக்கின்றது. குண்டலினி சக்தியாகிய மூலக்கனலில்

வியாபகமாகிய செஞ்சோதி துவாத சாந்தப் பெருவெளி வரை வியாபித்து 9 இடங்களைத் தொட்டு மேலே சென்று பரவொளியாக பெரு ஒளியாக நிற்பதே உடம்பில் காணும் நவகுண்டங்களாகும்.

பிராணவாயுவை மேல் எழுப்பி இத்தகைய சாதனை புரிந்து தலைக்குமேல் 12 அங்குலமாகிய துவாதசாந்தப் பெருவெளியில் சிவசக்தியை சோதி வடிவில் காண்பவர்களுக்கு முகத்தில் ஓர் ஒளிவரும். அவர்களைச் சுற்றி ஒளிவட்டம் உண்டாகும்.

காற்றை இடகலை,பிங்கலை என்னும் இடம், வலமாகிய நாசித்துளை இரண்டிலும் செலுத்தினால் இரண்டும் சுழுமுனையில் சந்திக்கும். அப்போது மூலக்கனல் மேல் எழும்பி புருவ நடுவில் எரியும். அத் தீ குளிர்ந்திருக்கும். உடம்பு ஒளி உடம்பாகும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை. சிவபரம்பொருள் அருட்பெருஞ்சோதியாகக் காட்சி தரும்.

மூலக்கனலாகிய குண்டலினி அம்மை. நம்மை ஆள்வதை நல்லது என்று நினைக்கிறாள். திருவைந்தெழுத்தை ஓதி அவளை எழுப்புக. அடிமுடியாக, அகப் புறப் பிரபஞ்சங்கள் அனைத்திலும் அவள் ஆட்சியே நிகழ்கிறது.

ஒளிக்கு இடமான பிரணவ குண்டம் அறுகோண வடிவம். புருவமத்தி இடம், தீ பிரணவ மந்திரத்தால் உண்டாக்கப்பட்டு புருவநடுவை அடைகிறது. 36 தத்துவங்களாக விளங்கும் பிரணவம் தத்துவங்களை எல்லாம் தன்வயமாக ஆக்கி, தன்மயமாகச் செய்யும் உடலை பிரணவ ஒளி உடலாக ஆக்கும்.

இந்நிலை அடைந்த யோகி தன் உடம்பை இலேசாக ஆக்கி பறவை போல் எங்கும் எடுத்துச் செல்ல இயலும். இவன் கால இடத்திற்கு கட்டுப்படாதவன் ஆவான். அவனை அளக்கும் கருவி எதுவும் இல்லை. அவன் நிலை பரம்பொருள் நிலையே ஆகும்.

இந்த பிரணவ குண்ட வழிபாட்டால் மனம் குளிர்ந்து தெளிந்து இருக்கும். மனம் ஒருமுகப் பட்டால் சிரத்தின்மேல் சக்தி தரிசனம் கிட்டும். இறைவன் அம்மையப்பனாய்க் காட்சி அளிப்பான். இருவரும் ஒன்றியிருப்பதால் அவன் முகங்கள் 10. கண்கள் 30. திருமுடி 10. திருவடி இரண்டே என்று வியந்து கூறுகிறார் திருமூலர்.

அடியார்க்கு இரண்டே கைகள் ஆதலின் பற்றுதற்கு வசதியாக பெருமான் திருவடியை மட்டும் இரண்டாகவே அமைத்துக் கொண்டான் போலும். அவன் பரங்கருணையாளன் அல்லவா?

திருவைந்தெழுத்தின் வடிவம் இப்பிரணவ குண்டத்தில் நடனத் திருக்கோலத் தரிசனம் தரும். தத்துவம் அகம் சுத்தமாகும். அந்த சிவச்சுடரில் யோகியின் மூலக்கனல் கலப்பதே முத்தியாகும்.

வெல்ல இனி ஒன்றும் இல்லை இதுவே பேரின்பம்.

மூலாதாரத்தில் சிவன் பாலன். மத்திமதளத்தில் யௌவனன். சகன்ரதளத்தில் ஈசானன்- சக்தி வாலி, தருணி, சக்தி ஆகிறாள். யோகியின் நவகுண்டச் சுடரில் உலகம் முழுவதும் அடங்கித் தோன்றும்.

இனி நவகுண்டங்கள் வருமாறு

1. சரியை, கிரியை,யோகம், ஞானம் போன்றது சதுரகுண்டம்
2. ஆகவநீயம், காருகபத்தியம், தாட்சணாக்கிநீயம் ஆகிய முத்தீ போன்றது முக்கோண குண்டம்.
3. வில்போல் வளைந்தது பிறைவடிவக்குண்டம்
4. ஆகாயம் போன்ற வட்டம் ஆகாய குண்டம்
5. ஓதல் முதலிய அறுதொழில் போன்றது அறுகோண குண்டம்
6. அரசிலை போன்றது யோனி குண்டம்
7. தாமரை போன்றது பதும குண்டம்
8. ஐந்து மீன்களின் வடிவு பஞ்சகோண குண்டம்
9. பஞ்ச பூதம், திங்கள், ஞாயிறு, ஆன்மா என்ற எட்டு போன்றது அட்டகோண குண்டம்.

மண்ணிடைப் பிறந்த மக்களை மண்ணிலே விண்ணாள வழி
வகுத்த வித்தகச் சித்தர் திருமூலரென்னும் மகாயோகி
அவர் யோகக் கலையின் சக்கரவர்த்தி

சக்கரவர்த்தி தவராசயோகி எனும்
மிக்க திருமூலர் அருள் மேவு நாள் எந்நாளோ

என்று திருமூலரை நிமிர்ந்து பார்த்து வியக்கிறார் தாயுமானவர் என்றால் அவரது ஞானசாகரத்தை அனுபவமும் அறிவும் அற்ற குளப்படி நீர் போன்ற கல்வியுடைய எம்மனோர் அளந்து எழுதுதல் என்பது கற்பனையிலும் நினைக்க ஒண்ணாது. விளங்காதவற்றுக்கு விளக்கம் வல்லார் வாய்க் கற்றுணர்க என்று கூறி நிறைவு செய்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

42. திரிபுரைச்சக்கரம், வயிரச்சக்கரம், சாம்பவிமண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம்

கவிஞர்கோ. ஞா. மாணிக்கவாசகன்
சென்னை.

திருமூலர் திருமந்திரம், நான்காம் தந்திரம். அசபை தொடங்கி, நவாக்கரிச் சக்கரம் வரை பதிமூன்று அழகிய கண்ணிகளில், ஐந்நூற்று முப்பத்து ஐந்து மந்திர மணிகள், அருமையாகக் கோர்க்கப்பட்ட அற்புதப் பாமாலையாகத் திகழ்கிறது.

திருமூலர் திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

திருமூலர்

திருமூலர் ஞானத் தவயோகி, அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். இவர்

. . . .

கொற்றவனார் திருக்கயிலை மலையினின்று குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினால் உடன் சிலநாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிகண்டார்

என்று இவர் பூவுலகு வந்ததைப் பாடுகிறார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான். திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் 'நம்பிரான் திருமூலர்' என்கிறார்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி;

குடிமன்னு சாத்தனூர்க் கோகுலம் மேய்ப்போன் குரம்பை புக்கு
முடிமன்னு கூனல் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரசிட்டேன் உச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூலன் அங்கனனே

என்று மூலன் உடலில் புகுந்த தவஞானயோகி, திருமூலர் என்னும் திருப்பெயர் கொண்ட வரலாற்றைக் கூறுகிறார். தான் மண்ணுலகில் வரப் பணிக்கப்பட்ட- படைக்கப்பட்ட காரணத்தைத் திருமூலரும்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்று தன்னிலை விளக்கமாகத் தந்தருளியுள்ளார் திருமூலர். இயற்பெயர் சுந்தரநாதன் என்று குருபரம்பரை என்ற தலைப்பில்,

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்

என்பதைக் கொண்டும், சுந்தரநாதன் சொல்லிய மந்திரம் முந்நூறு நூலின் சிறப்புப் பாயிரத்தைக் கொண்டும் குறிப்பிடுவர். பெயர் ஏதாயினும் தமிழ் இமயம் திருமூலர்- தமிழ் ஞானத் தவச் செல்வம் திருமந்திரம் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமிருக்க நியாயமில்லை.

திருமூலர் காலம்

செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பில்லா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே

என்றும்,

இருந்தேன் இக்காயத்தே எண்ணில் கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே.

என்றும்,

சேர்ந்து இருந்தேன் சிவமங்கை தன் பங்கனை
சேர்ந்து இருந்தேன் சிவன் ஆவடுதண்துறை
சேர்ந்து இருந்தேன் சிவபோதியின் நீழலில்
சேர்ந்து இருந்தேன் சிவன்நாமங்கள் ஓதியே

என்றும் பாடியுள்ள திருமந்திர வரிகளால், திருமூலர் திரு ஆ அடு துறை செம்பொன்னீசர் கோயிலில் படர்ஆலின் நீழலின் கீழிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு பாடல் என மூவாயிரம் ஆண்டுகள் இருந்து *மூலன் தமிழ் மூவாயிரம்* மொழிந்தார் என்ற வரலாற்றுச் செய்திகள் இவர் கி.மு. வுக்கு முன் தலைச் சங்கத்துக்கு முன்பிருந்தே வாழ்ந்தவராதல் வேண்டும் என்றும், *நரியைப் பரிசெய்வானும்* என்று வாதவூரர் வரலாறு கூறுதலின், மாணிக்கவாசகர் காலம் நான்காம் நூற்றாண்டாதலின், இவர் திருமூலர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவரோ எனவும் நினைக்க இடந்தருவதாகக் கூறுவாரும் உண்டு.

விநாயகர் காப்பு காப்பியத்தில் முதலாவதாக வைக்கும் மரபு சங்க காலத்தில் இல்லை. திருவாசகத்திலும் இல்லை. எனவே நூற்றாண்டுக்குப் பின் வாதாபி வரை சென்று புலிகேசியை வென்று வந்த பல்லவர் படைத்தலைவர் பரஞ்சோதி கொண்டு வந்து முதலில் நிறுவியதே விநாயகர் உருவம். திருமந்திரத்தில் காப்புச் செய்யுளாக உள்ள ஐந்து கரத்தனை *ஆனை முகத்தனை* என்ற பாடல் திருமூலர் அருளியதல்ல, *ஒன்றவன் தானே* எனத் தொடங்கும் பாடலே இறைவணக்கப் பாடல் என்றும் கூறுவர்.

திருமூலர் வாழ்ந்த காலம் ஏதாயினும் அவர் வழங்கிய திருமந்திரம் வேதாந்த சித்தாந்த வேலியெல்லாம் தாண்டி, நாதாந்த வடிவாக நாயகனைக் காண உதவும் யோக சாதனம். தமிழ்செய்த தவம் திருமூலர் என்றால், தமிழ்ஞானம் தந்த செல்வம் திருந்திரம்.

திருக்குறள் அதிகார வைப்புப் போலத் திருமூலர் திருமந்திரம் முதல் தந்திரத்தில் உள்ள இருபத்தி நான்கு தலைப்புகளில் ஒன்றிரண்டு தவிர, கொல்லாமை, புலால் மறுத்தல், கல்வி, கள்ளுண்ணாமை போன்ற தலைப்புகள், திருவள்ளுவரைப் போலவே.... திருமூலருக்கும் இருந்த சமுதாய அக்கறைக்கு மானுடம் பேணும் மகத்துவத்துக்கு அடையாளமாகத் திகழ்கின்றன.

ஞானயோகம், பக்தியோகம் பாடும் அருட்கவி மட்டுமல்ல திருமூலர், எவ்வுயிர்க்கும் அன்பு செய்யும் அருளுடைமையை, தானச் சிறப்பை, ஓதி உணர்த்தும் உயர் சிந்தனைக்கு உரியவராகவும் திகழ்கிறார்- திருமூலர்.

'காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா'

என்று வறட்டு வேதாந்த, வாய் முழக்கம் பெருகிக் கொண்டிருந்த நாளில்;

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.

என்று மானுட தேகத்தை மதிக்கச் சொன்ன ஞானக்கவி திருமூலர் ஒருவரே.

யாதும் ஊரே யாவரும் கேளிர் - என்ற புறநானூற்றுப் புலவன் சிந்தனைக்கு ஈடாக 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று உலகு

தழுவிய சமரச சன்மார்க்க ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை உச்சரித்த ஞானக்கனல் திருமூலர் ஆவார்.

திருமந்திரம்

திருமந்திரம் தோத்திர நூல் மட்டுமன்று. தமிழர் சாத்திர நூலும் ஆகும். வழிபாட்டு முறையை மட்டுமன்று, வாழ்க்கை முறையையும் மிக எளிதாக்கிய, எல்லோரும் இயல்பாக, இலகுவாக ஏற்றுச் செயல்பட உதவும் மா மந்திரம் திருமந்திரம்.

பூசை வழிபாடு என்றால் பாலாலும் தேனாலும் பரமனை நீராட்ட வேண்டும். பொன்னும் வைரமும் பூட்டித் துதிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், ஆரவாரத்தை எள்ளி நகையாடும் விதமாக;

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு, நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே...

என்று பாடுகிறார். இப்படிச் செய்வது..... என்ன பைத்தியக்காரணம் என்கிறார்.

இதேபோல இன்னும் சிலர் அறம் செய்வது, தர்மம் செய்வது என்றால்..... அது நிறையப் பொருள் வளம் உள்ளவர்களுக்கே சாலும்.... நம்மால் ஆகுமா அது? என்று ஏக்கப் பெருமூச்சு விடுபவர்களுக்கு, அறம் செய்ய மிக எளிதாக வழிகாட்டுகிறது திருமந்திரம். கோவில் குடமுழுக்கு குடம் குடாகப் பாலாபிஷேகம்! இதுதானா பக்தி? தர்மம் என்பது என்ன? அன்னதானம் செய்வதுதானா.......? அன்னச்சத்திரம் கட்ட நம்மால் ஆகுமா? என்று தயங்குபவர்களைப் பார்த்து, அவர்கள் தெளிவு பெறத் திருமந்திரம் கூறுகிறது. வீட்டோரம் படர்ந்து கிடக்கும் பச்சிலை போதும் பரமனை வழிபட. பலவண்ண-வாசமலர்கள் வேண்டுமென்பதில்லை. பசுவுக்கு ஒரு வாய் உணவு. உண்ணும் போது இல்லை என்று வருபவர்க்கு.... இல்லை என்னாது; இந்தா என்று ஒரு பிடி சோறு; எல்லாவற்றிற்கும் மேலாகப் பிறர் மீது எரிந்து விழாமல், அவர் மனம் புண்படும்படிப் பேசாமல், அவர் கேட்டு மகிழும் விதமாக இன்சொல் பேசுவது.... இது போதும். இதுவே மேலான அறம். இதை விடப் பெரிய தர்மம் வேறில்லை என்பதை;

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாய்உறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே

என்று நான்கு வரிகளில் திருமந்திரம் உலகுக்கு வழங்கும் செய்தி, உண்மையானதோர் அறச்சிந்தனைக்கு எழுதிய உரை விளக்கம் அல்லவா?

ஏழை ஒருவனுக்கு உணவளிப்பது, இறைவனுக்குப் படைக்கும் நிவேதனத்துக்கு ஈடானாது என்பதை;

நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்
படமாடக் கோயில் பகவர்க்கு அதுஆமே

என்று திருமந்திரம் விளக்கியது போல எந்தச் சமய நூலும் சொல்லவில்லை.

மனிதரை வருத்தும் வயிற்றுப் பசியைப் பசி என்னுமொரு பாவி என்கிறார் வள்ளல் பெருமான். பசி வந்த மனித மனம் படும்பாட்டைத் தனது சத்திய தருமச்சாலை விண்ணப்பத்தில், பலபட விளக்கியுள்ள வள்ளல் பெருமான், வடலூரில் மூட்டிய அடுப்பு நெருப்பு அணையாது எரியவும், வந்தர்க்கெல்லாம் இல்லை என்னாது; அவர் குல ஒழுக்கம், சாதி ஒழுக்கம், தேச ஒழுக்கம், பேதித்து அறியாது; அவர் புறஇனத்தவராயினும், அவர் வயிற்றுப் பசி நெருப்பணைய உதவ வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர்என்னன்மின்

என்ற திருமந்திரச் சிந்தனையின் செயல் வடிவமல்லவா. வள்ளலாரின் சத்திய தருமச்சாலை?

பாவம் பல பண்ணிவிட்டு, பண்ணிய பாவத்துக்குப் பரிகாரம் வேண்டிக் கோயில் குளம் என்று திரிகின்றவர்களைக் கல்வி அறிவில்லா மூடர்கள், கடவுளையே ஏமாற்ற நினைக்கும் கள்ள மனமுடைய தீயர்கள் என்கிறார் திருமூலர், கோயில் குளமென்று திரியும் குலாமரைப் பார்த்து, கோயிலும் குளங்களும் கும்பிடும் மனத்துள்ளே என்கிறது திருமந்திரம்.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகேடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக் கல்வி இலாரே

என்கிற திருமூல ஞானம உள்ளத்துள்ளே உறுபொருள் காண உதவும் மந்திர மணி அல்லவா? மனம் கோயிலாகச் செய்யும் உபதேச மொழி அல்லவா?

கல்லிலும் செம்பிலுமோ உள்ளான்
எங்கள் கண்ணுதலான்......?

என்ற சிவவாக்கியார் வினாவுக்கு,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே

என்று விடை சொன்ன திருமந்திரம்,

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்

என்றும் பாடுகிறது!

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்கிற திருமூலர் கடவுளிடம் கூட ஆசை வைக்கத் தேவையில்லை என்கிறார். ஏன்? கடவுளிடம் பக்தி செலுத்தலாம். அன்பு காட்டலாம்! ஆசை ஏன் வைக்க வேண்டும்? வேண்டாம் என்கிறார் திருமூலர். காரணம், அன்பு பக்தி, பணிவிடை என்பதெல்லாம் உள்ள ஈடுபாடு-அக உணர்வு. ஆனால் ஆசை அப்படியல்ல. அது உடலைப் பற்றிய - உணர்வைப் பற்றிய புறப்பற்று. எனவே ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்கிறது திருமந்திரம்.

திருமந்திரச் சக்கரங்கள்

உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம் என்றும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும், கோவிலும் குளங்களும் கும்பிடும் மனத்துள்ளே என்றும் பாடிய திருமூலர், சக்கரங்கள் பற்றியும், சக்கர எழுத்துக்கள் பற்றியும், பூசை முறை பற்றியும் பாடியிருப்பது வியப்புக்குரியதாகப் பட்டாலும், திருமூலர் அருள்ஞானத்தவயோகி மட்டுமல்ல, அட்டமா சித்திகள் பெற்ற மாபெரும் சித்தர். எனவே சரியை, கிரியை, தாண்டி யோக மார்க்கத்தில் ஈடுபட விரும்புவோர்க்கு, உதவும் என்று இந்த சக்கர அமைப்புகள் பற்றி அருளியிருக்கலாம் என்று நம்புவதற்கு நியாயம் உண்டு.

சரியை, கிரியை யோகமிக்க பெருவாழ்வு என்று பாடுகிறார் அருணகிரி நாதரும். எனவே சரியை கிரியை நிலையடைந்த, யோக நிலை அடைய விரும்புவோர்க்குச் சக்கரங்கள் துணை செய்யக்கூடும்.

சொல்லை வலிமையுடையதாக்கும் சூட்சமமே சக்கரங்கள், அதன்மேல் வரையப்படும் எழுத்துக்கள் - அட்சரங்கள்.

தன்னை மறப்பதும், தன்னை இழப்பதும், தன்னில் இலயிப்பதும் தவத்தின் பல கட்டங்கள். சித்தத்துள்ளே சிவனைக் காண, சீவன் சிவமாகும் உன்னத நிலை இதை அடைய, மனம் ஒருமுகமாக வேண்டும். தியானம், தவமுறையாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் தனக்கு சமாதி நிலை கைகூட, மனம் ஒருமுகப்பட மறுக்கிறது சிந்தனை சிதறுகிறது என்றபோது, இராமகிருஷ்ணர், விவேகானந்தர் நடு நெற்றியில் கட்டை விரல் நகத்தால் கீறி இந்த ரணத்தையும், வலியையும் நினைவில் நிறுத்தித் தியானப் பயிற்சி செய் என்றாராம்.

மனம் ஒரு குரங்கு, ஒன்றில் ஒன்றாது, ஓடிக்கொண்டே இருக்கும். பூசை, தியானம், தவம் என்று முயல்வாருக்கு முதல் தடையும் பகையும் அவரவர் மனமே என்பதே உண்மை!

கையொன்று விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்ச நாவொன்று பேசப்புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே

என்று பாடுகிறார் தவ ஞான யோகி பட்டினத்தார். பட்டினத்தார் பண்ணும் பூசையே இப்படியென்றால், மற்றவர் பண்ணும் பூசை பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

உருவ வழிபாடு தேவையா என்று கேட்கப்பட்ட போது கூட வள்ளலார், அருவத்தில் மனம் பற்றாது. எனவே முதலில் ஓர் உருவத்தைப் பற்றிப் பயிற்சி செய்து படிப்படியாக முயன்றால்தான் அருவத்தில் மனம் பற்றும். ஆனந்த அனுபவம் கிட்டும் என்றார். இது ஞானிகள் கண்ட உண்மை.

கிரியை யோகங்கள் கிளர் ஞானபூசை
அரிய சிவன் உரு அமரும் அரூபம் - என்றும்

உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கு ஒளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறும் ஆவாகனம் புறப்பூசை
செயிற் கடை நேசம் சிவபூசை ஆமே.

என்றும் சிந்தையில் கலந்த சிவசொரூபம் சித்தத்தில் பதிவதை, காட்சிகள் கண்வழிப் புகுந்து கருத்தினில் கலப்பது போல; சிவசிந்தனை புறப்பூசைகளால் நினைவில் பதிந்து, பின் மனத்துள் தங்கும் என்று பாடும் திருமூலர்; இதுவே மேலான பூசை என்கிறார். இதற்கு உதவுவன இறைவன் திருவுருவங்கள். இதே போல இறைக்காட்சி உள்ளத்துள்ளே எழுந்தருளச் செய்ய உதவுவன, மந்திரங்கள், யந்திரங்கள், சக்கரங்கள்.

புறப் பூசையில் வாய் மந்திரங்களைத் - தோத்திரப் பாமாலை முணு முணுக்கிறது. செவி கேட்கிறது. அகப் பூசையில் மந்திரங்களை மனம் நினைக்கிறது. நினைப்பு மௌனத்தில் கரைகிறது. இந்த நினைப்பற நின்ற சுகம்- இதுவே யோக சித்தியில் முதல் கட்டம்.

இந்த மனித தேகம் - ஊனுடம்பு ஆலயம் - இது கூட ஒரு வகையில் ஒரு வித சக்கர அமைப்பைக் கொண்டு திகழ்கிறது என்று சொல்வதில் தவறில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது.

மூலாதாரம் (எருவாய்) சுவாதீட்டானம்(கருவாய்) மணிபூரகம் (தொப்புள்(சுழி) அநாகதம் (மார்பு) விசுத்தி(தொண்டைக்குழி) ஆக்ஞை (புருவநடு) சகஸ்ரதளம்(தலைஉச்சி) என்னும் இவை முறையே, நான்கு, ஆறு, பன்னிரண்டு, பதினாறு, இரண்டு, மற்றும் ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரை உரு என்றும்; ஓம் நமசிவாய மந்திரத்தை ஓதி, மூலாதாரத்தில் இருந்து குண்டலினி சக்தியை மேலெழச் செய்து, நெற்றிப் புருவநடு ஆக்ஞையில் நிறுத்த; உச்சித் தலையில் சகஸ்ரதளத்தில் - ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரையில் ஆனந்தத் தேன் பிலிற்றும் அமுதாய் இனிக்கும், சுகானுபவம் கிட்டும். இதுவே மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருக்கின்ற தவம்-தத்துவம் என்கின்றனர் யோகிகள்.

அவ்வை மூதாட்டி பாடிய மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக் காலாலெழுப்பும் விநாயகர் அகவல் குறிப்பும்,

காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறி அது ஆமே

என்ற திருமூலர் திருமந்திரக் கருத்தும்; உணர்த்தும் உண்மையும் இதுதான்.

மனம் ஒன்றைப் பற்றி ஒன்றி நின்று தியானிக்க- உருவ நினைவுகள் உதவுதல் போல சக்கர அமைப்புகளும் துணை செய்யக் கூடுவன. எனவே தவஞான சித்தரான திருமூலரும் சில சக்கர அமைப்புகளை அருளியுள்ளார். அவற்றில் திரிபுரைச்சக்கரம், ஏரொளிச்சக்கரம், வயிரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச்சக்கரம் பற்றிச் சிந்திப்போம்.

திரிபுரைச் சக்கரம்

முப்புரம் எரித்தவன் அப்பணி கொன்றை வார்சடை இறைவன். திரிபுராந்தகன் எனப்படும் ஈசனின் தேவி திரிபுரை. இவளே சிவசக்தி. முப்புரம் என்பது பொன், வெள்ளி. இரும்பாலான கோட்டைகள், அசுரர் உறைவிடங்கள். இவற்றை நெற்றிக்கண் நெருப்பால் அழித்தான் ஈசன். முப்புரம் எரிசெய்தனன் என்பார்கள் மூடர்கள். முப்புரம் என்பது மும்மல காரியம் என்றே கூறுகிறார் திருமூலர். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை அழித்த கதையே முப்புரம் எரி செய்த செய்தி. பொன்னின் திறம் செம்மை. வெள்ளியின் நிறம் வெண்மை. இரும்பின் நிறம் கருமை. இவை சீவன்களிடைப் பொருந்தியிருக்கிற உத்தம, மத்திம அதமகுண இயல்புகளைச் சுட்டும் குறியீடாகவும் உள்ளன. செல்வமும், கல்வியும் பேரின்ப வாழ்வும் நல்கும் அலைமகளாகவும் (பொன்னிறம்) கலைமகளாகவும் (வெண்ணிறம்) மலைமகளாகவும (கருமை நிறம்) தனித்தனியே அருளுபவளாக இருந்தாலும், இத்தேவியர் மூவரும் ஒன்றான மூலசக்தி திரிபுரையே. அவளே மகேசன் மனம் கவர் மகாசக்தி, ஈசனுடனுறை ஈசுவரி மனத்துள் நினைத்துத் தியானிப்பவர் மனக்கோயில் முடிபுகும் மனோன்மணி, நான்முகி, நாராயணி, சாம்பவி, சங்கரி, மாலினி, மாதங்கி என நவசக்தி நாயகியாகத் திகழும் தேவி திரிபுரையே, சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், பிரமன் என ஐவரையும் படைத்து, ஆக்கல், அருளல், அழித்தல், காத்தல், படைத்தல் என்று ஐந்தொழிலையும் நடத்துகிறாள். ஓம் ரீம் என்பது திரிபுரையின் மந்திர எழுத்து என்கிறது வரும் திருமந்திரப் பாடல்.

ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே.

ஏரொளிச் சக்கரம்

ஏர் - ஏற்றம். ஒளி-உயிர்ப்பு, வெளிச்சம். ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினை வாதவூரர் சொல்லியபடி உள்ளும் புறமும் நிறைக்கும் சக்கரம் ஏரொளிச் சக்கரம். ஓம் என்னும் பிரணவத்தை நமசிவாய என்னும் ஐந்தெழுத்துடன் உச்சரித்தால் உள்ளுக்குள்ளாக எழும் மூலக்கனலை, மூலாதாரத்தில் இருந்து முதுகுத் தண்டு வழியாக மேலேற்றி, சுவாதிஷ்டானம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை இவற்றில் நிறுத்தி ஐந்தெழுத்தை உச்சரிக்க வேண்டும். கீழிலிருந்து மேல் நோக்கியும், மேலிருந்து கீழாகவும் இத்தியானப் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். நாத விந்து வடிவான இச்சக்கரம் நூற்றி நாற்பத்து நான்கு கட்டங்கள் கொண்டது. காற்றாய், நீராய் நெருப்பாய் எங்கும் பரவி நிற்பது. சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள் என்னும் மூன்றும் ஒன்றி நிற்கும் ஆன்ம சொரூப அமைப்பு இந்த நட்சத்திர சக்கரம். இந்தச் சக்கரப் பயிற்சி- தியானத்தால் உள்ளொளி பெருகும். சித்தத்துள்ளே சிவ சொரூபம் தோன்றும். சீவன் சிவனாகும் பக்குவ நிலைபெற, இந்தச் சக்கரப் பயிற்சி உதவும். ஆனால் யோகப் பயிற்சியால் உள்ளத்துள்ளே ஒளிவடிவான- சோதி சொரூபத்தைக் காண முயலாமல், சக்கரக் கோடுகளிலும், அதனுள் கீறியுள்ள எழுத்துக்களிலும் மனம் பற்றி நிற்பதால் ஒரு பயனும் இல்லை என்பதைக் *கந்தரத்துள்ளும் இரேகையிலும் ஒன்றில்லை* என்று திருமூலர் கூறுகிறார்.

சக்கர நினைவும், மந்திர உணர்வும் முறைப் படுத்தப்பட்டால் உள்ளத்துள்ளே உறுபொருள் தோன்றும் என்பதைத் திருமந்திரம்

கொண்ட இம்மந்திரம் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டை உள்நாவில் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணி விளக்காயிடும்
இன்றும் இதயத்து எழுந்து நமவெனே.

என்று விளக்குகிறது.

வயிரவச் சக்கரம்

வயிரவர் சிவமூர்த்தங்களில் ஒன்று. அந்தகாசுரனை அழிக்க இறைவன் கொண்ட கோலம் வயிரவர் திருக்கோலம். சூலம் கபாலம் ஏந்திய வைரவரைப் பூசித்தால், பகை வெல்லாம் என்பது பக்தர்கள் நம்பிக்கை. அந்தகாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்ததால் பைரவர் காவல் தெய்வமாகவும் போற்றப்படும் பெற்றியராவர். பைரவத் திருக்கோலம்.

ஆறு திருக்கரங்களோடு பொன்னிறமாகப் பொலிவது. இந்தத் திருமேனியை மனத்துள் நினைத்து வழிபடுபவர் மனத்துயர் நீங்கும் என்பதை;

கையது ஆறும் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யர் உள்ளத்தில் துளங்கு மெய் உற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே....

என்று பாடி விளக்கும் திருமந்திரம்.

வயிரவச் சக்கரத்துக்குத் தனி அட்சரங்களோ சக்கர அமைப்போ குறிக்கப்படவில்லை ஆயினும், வயிரவ மூர்த்தம் சிவ மூர்த்தமாதலின், சிவப்பரம் பொருளுக்குரிய ஐந்தெழுத்தையே வயிரவ மந்திரமாகவும், வயிரவர் திருக்கோல அமைப்பையே சக்கரவடிவாகவும் கொள்ளுதல் தவறாகாது. அருவமான பரம்பொருளை அட்சரமாகவும் சக்கரமாகவும் மனத்துள் நிறுத்திப் பூசிப்பதற்குப் பதிலாக அப்பரம்பொருள் உருவையே மனத்துள் வாங்கி நினைத்துத் தியானிப்பதில் தவறில்லையே!

சாம்பவி மண்டலச் சக்கரம்

சக்தியும் சிவனும் சிவசக்தி. இந்த சிவசக்தியே சாம்பவி சிவலிங்கம் சிவசக்தி சொரூபம். தூல பஞ்சாட்சரம். இந்த சிவலிங்க வடிவான சக்கரமே சாம்பவி மண்டலச் சக்கரம். சாம்பவி மண்டலச் சக்கரம் எட்டிதழ்த் தாமரை வடிவானது. சாம்பவி மண்டலச் சக்கரத்தின் மந்திர எழுத்து நமசிவாய நாமமே.

சாம்பவி மண்டலச் சக்கரத்தை எவர் விரும்பினாலும் வணங்கி வழிபடலாம். ஓம் சிவாய என ஓதி இந்தச் சக்கரத்தை வழிபடுவோர் எல்லா நலனும் வளனும் பெறுவர் என்கிறார் திருமூலர். விண்ணும் - மண்ணும், உயிரும் உடலும், கதிரும் நிலவும் இச்சக்கரமே என்கிறது தொடரும் திருமந்திரப் பாடல்.

ஆரும் உரை செய்யலாம் அஞ்செழுத்தால்
யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலும் மதியாதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே.

சாம்பவி மண்டலக் சக்கரம் இருபது கோடுகள் அமைய நான்கு பக்கம் நான்கு இலிங்கம், இடையே நான்கு பூக்கள் நடுவிலொரு பூ அமைப்புள்ளது. இந்த நடுப்பூ மனத்தைக் குறிக்கும் என்கிறது திருமந்திரம்.

நாலைந்து இடவகை உள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலுநற் கோணமும் நந்நால் இலிங்கமாய்
நாலுநற் பூதடு நண்ணல் அவ்வாறே

இதற்கடுத்த திருமந்திரப் பாடலில் இன்னொரு நுட்பத்தையும் சொல்கிறார் திருமூலர். அது பழந்தமிழ் எழுத்துக்கள் முப்பத்து ஐந்து என்றும், இவற்றின் புனிதமான ஐந்தெழுத்தை (நமசிவய) வேறு வேறு நிறங்களில் சக்கரத்தில் அமைக்க வேண்டும் என்கிறார்.

ஆறிரு பத்து நாலஞ்சு எழுத்து அஞ்சையும்
வேறு ருவாக விளைந்து கிடந்தது
....
....

(ஆறு, 6. இருபத்து-20 , நாலு-4, அஞ்சு-5, ஆக முப்பத்தி ஐந்து) என்பது அத்திருமந்திரத்தின் பாடல். இச் சக்கரத்தைப் பணிவார்க்கு பகையில்லை, துயர் இல்லை, இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்கிறார் திருமூலர்.

புவனாபதி சக்கரம்

புவனாபதி சக்கர விளக்கத்தில் திருமூலர் சக்கரம் எப்படி, எதில் அமைக்க வேண்டும் என்பது பற்றியும், அதை எப்படி எவர் மூலம் கற்க வேண்டும் என்பதையும், வழிபடும் முறை என்ன என்பதை எல்லாம் விரிவாக விளக்கியுள்ளார்.

அன்னை பராசக்தி ஒருருவே என்றாலும் அவர் சிவத்தோடு பொருந்தி எண்வகைச் சக்தியாக விளங்குகிறாள். இவளே எட்டுவிதமான சித்திகளும் கிடைக்க அருளுபவன். சக்திக்குரிய திருநாமங்கள் பலவற்றுள் ஒன்று புவனை. இப்புவனையின் சக்கரத்தை அறுகோண வடிவில் அமைத்து, குரு உபதேசம் பெற்றுச் செப்புத் தகட்டில் அமைத்து வழிபட வேண்டும்.

இப்புவனாபதிச் சக்கர பூசையில், பூசிப்பவர் இடுப்பில் கட்டிய வேட்டிக்கு மேல் துண்டு, போர்வை இன்றிப் பூசிக்க வேண்டும். பூசை முடிவில் பால்பாயசம் நிவேதனமாகப் படைத்து, நான்கு திக்குகளுக்கும் காட்டி பின் உண்ண வேண்டும். இந்த அறுகோணச் சக்கரத்துக்கு உரிய அட்சரங்களாக ஹவ், உ, கிரோம், சிரோம் எழுத்துக்கள் குறிக்கப்பட வேண்டும் என்பது திருமந்திரக் குறிப்பு.

ஓரில் இதுவே உரையும் இத்தெய்வத்தைத்
தேரில் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோண மனம் இன்பமுத்தியும்
தேரில் அறியும் சிவகாயம் தானே

நான் நன்றாக ஆலோசித்துக் கண்ட முடிவான உண்மையினைச் சொல்லுகிறேன் கேட்டுக் கொள். மழை மேகம்போல் அருள் பொழியும் புவனாபதிக்கு ஈடான தெய்வம் வேறில்லை. மனம் பொருந்தி இவளைத் தியானிக்க சித்தியும், முக்தியும், சிவ உடம்பும் பெறலாம் என்று, தம் வாக்காக உறுதி கூறுகிறார் திருமூலர். நம்பினோர் கெடுவதில்லை அல்லவா.....? கருமூலம் அறுக்கும் திருமூலர் வாக்கை நம்புவோம். நலம் பெறுவோம்.

திருமூலர் சக்கரங்கள் பற்றிச் சொல்லியுள்ளார். திருமந்திரத்தில் சக்கரம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. ***பூசைக்குப் பூவும் நீரும்*** போதுமென்றவர் ***களபம், கஸ்தூரி சந்தனம்*** இட்டு சக்கர பூசை செய்யச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மனிதனுக்கு ஜாதகம் எப்படியோ, அப்படித்தான் வழிபடு கடவுளுக்கான சக்கரங்கள்- அட்சரங்கள்.

குழந்தை பிறந்த உடனேயே (சிரோதயம்) பிறந்த இடம், நாள், நேரம், திசை இவை துல்லியமாகக் கணக்கிடப்பட்டு, கணிக்கப்படுகிற- விருப்பு வெறுப்பற்றுச் சொல்லப்படுகிற, ஜாதகத்தின் பலன் பலிதமாவதைப் போலவே, சக்கரம் செய்யப்பட்ட பொருள், செய்தவரின் மனம், குணம், செயல் தன்மை, அது அமைக்கப்பட்ட இடம் நேரம், அடைக்கப்பட்ட சக்கர அறைகளின் அளவு, குறிப்பிடப்பட்ட அட்சரங்ககளின் அமைப்பு இவையெல்லாவற்றையும் பொறுத்தே, சக்கரப் பலன்கள் இருக்கும். இவை முறைப்படியும் விதிப்படியும் அமையாவிடில், சக்கரங்கள் உரிய பலனைத் தரா என்பதுடன் எதிர்விளைவுக்கும் இடமாகக் கூடும்.

எனவே சக்கரங்கள் பற்றித் தெரிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும், யோக சாதனைகளில் ஈடுபடுவோர்க்கு; சக்கரங்கள் ஒருவித சாதனங்கள்தான், என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுவதுமே பயன்தரும் பயிற்சியாகும்.

அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே

என்கிறார் தாயுமானவர்.

இந்த அன்பர் பணிக்கு ஆளாக,

சித்தம் சிவமயமாக;
சீவன் சிவனாக...;

என் கடன் பணி செய்து கிடப்பதே - என்ற அப்பர் பெருமான் திருவாக்கைத் திருவுளம் கொண்டால்

வேண்டத் தக்கது அறிவான்
வேண்ட முழுவதும் தருவான்

பிறகெதற்குச் சக்கரம், சடங்கு, சம்பிரதாயம்? இவை ஏதும் இல்லாமலே *உள்ளத்துள்ளே உறுபொருள்* காணும் வல்லமை தமக்குத் தானே வந்து வாய்க்கும். வரவேற்கக் காத்திருப்போம்.

திருச்சிற்றம்பலம்

✲✲✲✲✲

43. பூரண சத்தி

முனைவர். ஸ்ரீமத் மௌன குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
தருமபுர ஆதீன மௌன மடம், திருச்சிராப்பள்ளி

முன்னுரை

ஒளி உலகும் பொருள் உலகும், ஒளியும் உலகுமாகி எங்கும் விளங்கி இயங்குவன, நிற்பனவாகிய எல்லாப் பொருளிடத்தும் பராசத்தி கலந்து நிறைந்து இருத்தலை உணர்த்துதலின் இவ்வதிகாரம் பூரணசத்தி எனப்பட்டது. பூரண சத்தியென்பது பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகையாய், சத்தியது- பூரண நிலையை உணர்த்திற்று. சத்தியின் பூரணம்-பூரண சத்தி. சத்தியின் பூரணத்தை முப்பது மந்திரங்களால் உணர்த்துகிறார் திருமூலர்.

எங்கும் நிறைந்தவள்

உலகத்தோற்ற ஒடுக்கங்களை ஆய்ந்தும் உலகிற்கு ஆதி முதல்வனாகிய சிவ பரம்பொருளை ஆய்ந்தும் உலகத்துள்ள ஆண், பெண் வடிவாகிய உயிர்ப் பொருள்களை ஆய்ந்தும் பார்த்ததில் எல்லாம் சத்தியின் அருளாகும் என்று முதல் தந்திரப் பாடலில் உணர்த்துகிறார். இதை சிவஞான சித்தியார் *அனைத்தும் அவளால் வந்த ஆக்கம்* என்ற தொடரில் அருள்நந்தி சிவம் உணர்த்துகிறார். பாரதி கூட, *யாதுமாகி நின்றாய் காளி, எங்கும் நீ நிறைந்தாய்* என்று அங்கிங்கெனாதபடி எங்கும் சத்திக் கலப்பினை பாடல் முழுவதிலும் விளக்கிச் செல்லுவார். அப்பர் பெருமான் வடக்கே கயிலாயம் சென்றிருந்தபோது, உடலெல்லாம் தேய்வுற, உள்ளம் தளர்ச்சியிலாது செல்லும் நிலைமையை உணர்ந்த இறைவன் அந்தணர் வடிவில் வந்து எங்கு போகின்றீர்? என்று கேட்க, கயிலைநாதனைத் தரிசிக்க என்க, மானிடச் சட்டைத் தாங்கியவரால் இயலுமா என்று சொல்ல, ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என்ற உறுதிப் பாட்டினை உணர்ந்த இறைவன் மானசரோவர் தடாகத்தில் மூழ்கி, திருவையாற்றில் எழுந்திருக்கக் காட்சி கிடைக்கும் என்றருள, அது போழ்து, அவ்வண்ணமே செயல்பட்ட அப்பரடிகள் திருவையாற்றில் வலம் வந்த போது பார்த்த உயிரினங்கள் அனைத்தும் ஆண் பெண்ணாகப் பாராமல், அம்மையப்பராக (இறைவனும் இறைவியுமாக கண்டு) காதல் மடப்பிடியோடு, களிறுவரக் கண்டேன் என்றும் மாதர் பிறைக்கண்ணியானை பதிகம் முழுவதும் உணர்த்திக்

காட்டுகின்றார். சத்தி எங்கும் எவையிலும் நிறைந்த தன்மையை இது உணர்த்தி காட்டுகிறது. இதைத் திருமூலர்,

அளந்தேன் அகலிடத் தந்தமும் ஈறும்
அளந்தேன் அகலிடத் தாதிப் பிரானை
அளந்தேன் அகலிடத் தாளொடு பெண்ணும்
அளந்தேன் அவனருள் ஆய்ந்துணர்ந்தேனே.

என்று கூறுகின்றார். வேதமும் சர்வம் சக்திமயம் என்று வழங்குகிறது.

அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்

என்னம்மை என்னப்பன் என்று எடுத்த உடலுக்கு உரியராய் வணங்கும் செருக்கு நீங்கி அம்மையையும் பேரூழித் தலைவனாய பெருமானும், அங்குள்ளான் என நினைக்க வேண்டும். அம்மையோடு பிணைந்து நிற்கின்ற பெரிய பெருமானே நமக்கெல்லாம் நிலைபேறுடைய மறுமை இன்பம் சித்திக்கும் வண்ணம் அருளுபதேசம் செய்வான். தாய் தந்தையருடன் மதுரையம்பதியைத் தரிசிக்க வந்த ஞானசம்பந்தன் சொக்கநாதர் மீனாட்சியைக் கண்டவுடன் உயிர் தந்த அம்மையப்பர் உள்ளிருக்க உடல் தந்த உம்மை உள்ளம் தொடராது என்ற ஞானநிலை கைவரப் பெற்று குருஞான சம்பந்தராயினார் என்ற வரலாறும், *அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்* என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் வரியும் உணர்த்தும் முகத்தான், உலக உயிர்களுக்கெல்லாம் உண்மைத் தாய் தந்தையர்கள் சிவசக்தியே என்பதை திருமூலர்,

என்னம்மை என்னப்பன் என்னுஞ் செருக்கற்று
உன்னம்மை ஊழித்தலைவனும் அங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய் நின்ற பேர்நந்தி தானே

என்ற மந்திரத்தில் உணர்த்துகின்றார்.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிதல்

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து உலகெங்குமாய் நின்றாய் என்பார் அபிராமி பட்டர். சிவபெருமானுடைய சிந்தையில் உலாவும் சிவசக்தி விந்து நாதங்களாக விரிந்தனள் அச்சத்தி சந்திரமண்டலத்தில் விளங்கும் சடாதரி, சாத்தவி, அந்தமும் ஆதியுமாகிய நிறமுடையவளாக விரிந்திருக்கிறாள் என்றும் எம்மை ஆளாகவும், சடப்பொருள்களை உடமையாகவும் உடையவனும் அக்கினி மண்டலாபதியான ஜோதி வடிவ

உருத்திரமூர்த்தியாக விளங்குபவரும், அறவடிவமான இடபத்தை வாகனமாக உடைய இறைவன், பசியகொடி போன்ற பூரணசத்தியும், பரசிவம் இருந்த நிலையிலிருக்க திண்ணியக் கொடிபோல் ஒளி போல்வர். விண்கொடி போல் விளங்கி தோன்றுவதால் உலகு சத்தியமாதல் நடந்தது என்பது என 14,16,18 ஆகிய மந்திரங்களில் சத்தியினுடைய பூரணத்துவத்தை விளக்குகின்றார். மேலும், 18 ஆம் பாடலில், சிவம் இருந்தபடி அசைவற்றிருக்க சத்தி ஒலிக்கொடிபோல அபினமாய் அசைய, விண் கொடிபோல பிரிந்து தோன்றுவதலால், உலகு சத்தி மயமாக தோற்றம், திதி நாசங்களை அடைந்து இயங்குவதாயிற்று என்ற கருத்தைக் காட்டுகின்றார். அதாவது, சிவம் அசைவற்ற இருக்க, சத்தி ஒளியாவும், மின்னலுமாயும் ஒன்றியும், பிரிந்தும் தோன்ற உலகம் முத்தொழில் பட்டு இயங்குவதாயிற்று. *திண்கொடியாகத் திகழ்தரு சோதி* என்றது சத்தி சிவத்துடன் அறியப் பெற்று, வேறாகாது, ஒன்றியிருக்கின்ற நிலை. *விண்கொடியாகி* என்றது மின் கொடிபோல் பிரிந்து விளங்கும் நிலை, சத்தி சிருஷ்டி உள்முகமான போது சிவத்திலிருந்து பிரிந்து தோன்றுதலைக் குறித்தது. உலகு பெண் கொடியாக நடந்தது என்றது. உலகமே பெண் வடிவமாக (சத்திமயமாக நடைபெற்றது என்பது) இக்கருத்தினை 22 வது *இருந்தனள் தன் முகம் ஆறோடு நாலாய்* என்று பத்து திசைகளிலும் பத்து முகங்களாக அம்மை நோக்கி அருள் பாலிக்க அவளிடமிருந்து பிராணவாயு பத்து திக்கும் பரவிற்று என்றும், அவள் திருமுகத்திலிருந்து ஒளிக்கும் ஒளியானது முத்தைப் போல் குவிந்தன. அவளின் தேறலாகிய நீர் அதோமுகமாக ஓடிப் பறந்தது என்று சத்தி ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிதலை, திருமூலர் விளக்குகின்றார்.

விஸ்வரூபம்

அணுவிற்கணுவாகவும் விளங்குகின்ற சத்தி அப்பாலுக்கு அப்பாலாய் கடந்து நிற்கின்ற காட்சியினை திருமூலர் காட்டுகின்றார். பூவுலகையும் அண்டங்களைக் கடந்து மறைகின்ற பாதமாக அம்மையினுடைய பாதம் விளங்குகின்றது. அவருடைய திருமுடி அகில அண்டங்களையும் கடந்து நிமிர்ந்து இருக்கக்கூடியதென்றும், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்களையும் அணி ஆபாரணமாக புனைந்திருக்கிறாள் என்றும், வேதங்களை அம்மையே அருளிச் செய்தாள் என்றும், பட்டாடையும், மான்தோலும் புனைந்து அம்மை அப்பராக விளங்குகிறாள் என்றும் திருமூலர் காட்டுகின்றார். *நிலம்பொதி பாதம்* என்பது *பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்* என்ற திருவாசக வரியும் *அகிலமும் அண்ட முழுவதும் செம்மாந்து* என்ற வரியை போதார் புனை முடியும் எல்லாப்

பொருள் முடிவே என்னும் திருவாசக வரியும், *துகில் உழை ஆடை* என்ற வரியினை *பேதை ஓர்பால்* எனவும் *தோலும் துகிலும்* என்றும் காட்டும் திருவாசக வரியும் ஒப்பு நோக்கும் முகத்தான் அம்மையினுடைய விஸ்வரூபம் விளக்கும் முகத்தான் திருமூலர்,

நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சத்தி
துகிலுடை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமும் அண்ட முழுதுஞ்செம் மாந்து
புகலுமுச் சோதி புனையநிற் பாளே

என்பார்.

அம்மையினுடைய பேராற்றல்

புவனாதிபதியாகிய இறைவனை தன் மேனியின் ஒரு பாகத்துப் புனைய வல்லவள். எல்லா அண்டங்களையும் சங்கற்ப மாத்திரையினை சிருஷ்டிக்க வல்லவள். எல்லா மண்டலங்களிலும் உள்ள ஒளியை தனக்கு விரலாழியாக அரைக்கச்சின் பட்டிகை மணியாக முடிமணியாக புனைய வல்லவள், அனைத்தையும் அழகு செய்பவள் என்றும் இறைவியால் ஸ்தாபிக்கப்பட்ட அப்பொருளாகிய எமது பரமசிவம் திருவுள்ளத்தில் சங்கல்பித்து, உலகத்தைப்.படைக்கின்ற காலத்து பாரசக்தி விரும்பி, மேலும் கீழுமாக எங்கும் வியாபித்து, அப்பொருளாகவே தானிருந்து உயிராக்குகிறவள் என்றும் 25,26 -வது மந்திரங்களில் விளக்குகின்றார்.

அம்மையைத் தியானித்தல்

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம்பெரிய முலையும் முத்தாரமும் பிச்சி மொய்த்த
கன்னங்கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கிது போலும் தவமில்லையே

என்று அபிராமிபட்டர் தியானம் செய்கின்ற முறையைக் குறிப்பிடுவது போல மிக செருக்கும் ஐயமும் கொண்ட மனத்தை ஒருமுகப்படுத்தி. பிறகு நாதவடிவாகிய நுணுகிய சிவபரம்பொருளை அறிந்தபின், திருவடியிடத்துப் பற்றுக் கொடை தானே தனக்கு ஆதனமாக என்பார். மேலும் ஞானேந்திரியங்களும், ஐம்புலன்களுமாகிய இவற்றை அறியும் சக்தி, திருவருளைச் சாரின் நீங்காத அறிவினை அறிவார் உள்ளத்து பேணப்படும் நெறியினுடைய சித்தத்தில் அருள் வழங்க நினைத்திருப்பர் என்றும், சிவத்துள் அடங்கியிருந்த அமுதமயமான பயோதரங்களை உடையாளாகிய சத்தி மாறியிருந்த வழியை அறிவார் யாரும்

இல்லையாம். உள்ளே தியானிப்பவருக்கு அதனை ஒளித்து புருவமத்தியில் காணப்படும் தீப ஒளியுடன் கலந்திருந்தாள் என்றும் 7,9,15 மந்திரங்களில் விளக்குகின்றார். மாறியிருந்தலாவது *வசி* என திருவருள் முற்பட்டு சிவம் பின்னது ஆதல். இது *உடையாள் நடுவுள் நீ இருத்தி* என்ற திருவாசக வரியை உணர்த்துகின்றது. இம்மந்திரத்தை தியானிப்பவர்களுக்கு வசியத்தை விளைவிப்பது ஆதலின், இதனை அறிந்து உய்வாரில்லை என்றும் இவ்வம்மையை மனத்துள் கண்டவள் உறடயோக சாதகர் என்றும், காணாதவர்கள் கடையர்களே, போங்கள் என்றும் 16 வது மந்திரத்தில் திருமூலர் கூறுகின்றார். மிண்டு மனத்தவர் போம்மிங்கள், மெய்யடியார் விரைந்து வம்மின் என்ற திருப்பால்லாண்டு சிந்திக்கத் தக்கது. அப்படி தியானிக்கின்றவர்களுக்கு ஆறு ஆதார சக்கரத்துள் குண்டலினி சத்தி எழுப்பி அதன் மூலமாக த்வாத சாந்த பெருவெளியில் துரியம் கடந்த பரநாத மூலதலத்து முளைத்த முழுமுதலாக அம்மை விளங்குவதை, அதற்குரிய சக்கரங்களை 20,21 மந்திரங்களில் திருமூலர் விளக்குகின்றார். அம்மை மனோன்மணியாகி பூமண்டலத்தின் மத்தியில் நிற்க வானாம சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிதரணி, பலவிகரணி, பல ப்ரதமணி, சர்வ பூத தமணி, மனோன்மணி ஆகியோர் இருந்து நவசக்தியாக உலகைக் காப்பர் என்று 19-வது தந்திரத்தில் காட்டுகின்றார்.

ஆன்மாவுக்கு உபதேசம்

ஆன்மா உடல் விடுகின்ற போது இறைவன் இறைவியோடு சென்று, அவ்வான்மாவை அம்மை மடியில் வைத்து, தனது முந்தானையினால் ஆன்மாவிற்கு விசிறி, ஆசுவாசப்படுத்த இறைவன் உபதேசம் செய்கின்றான் என்ற புராண நிகழ்வுகளை திருமூலர் அம்மையோடு சென்று உபதேசிக்கும் காட்சியினை 23 ஆம் மந்திரத்தில் எடுத்துக் கூறுகின்றார்.

திருமூலருக்கு அம்மை அருளியவாறு

மெல்லிய விசையையுடைய பாவை பராகாயத்தில் பரந்துள்ள மெல்லிய கொடி போல்வாள். பலவகையான புகழோடு கூடிய பாவை போல்வாள். அன்போடு வழிபடும் அனைத்து உயிர்களுக்கும் அவரவர் பரிபாக நிலைக்கேற்ப பயன் தருகின்ற பைங்கொடி, புல்லிய புகழோடு கூடிய பாவையாகும். உடலை அழியக் கெடுத்து, வலிய இசையோடு கூடிய பாவையாகிய பராசத்தி அடியேன் மனத்தில் புகுந்து ஆண்டு கொண்டாள் என்பதை,

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம் புகுந் தாளே

என்ற திருமந்திரத்தில் திருமூலர் விளக்குகின்றார். பூரண சத்தியை ஆதி பராசக்தி என்றும் உண்மை ஞானிகளாக இருப்பவர்கள் யாரென்றும், அம்மையினுடைய திருவிளையாடல்களையும் முப்பது மந்திரங்களில் விளக்குகின்றார்.

முடிவுரை

நம் கையைக் கொண்டு நாம் அனைத்துக் காரியங்களை செய்விப்பது போன்று இறைவன் நங்கையைக் கொண்டே அனைத்து காரியங்களையும் செய்கின்றார். இதனை *நங்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாயகனும் நங்கையினால் செய்தளிக்கும்* என்ற திருக்களிற்றுப் படியாரும், இறைவனுடைய அறக்கருணை மறக்கருணை இரண்டையும் தாம் பெற்று, ஆன்மாக்களுக்கு ஊட்டும் அருட் செய்கை எப்படியெனில் ஆறுமாதக் குழந்தைக்கு நோயென்றால், அக்குழந்தைக்கு நேரே மருந்து கொடுக்காது. தாய்தானுண்டு, தன் முலைப்பால் வழியாக குழந்தைக்கு கொடுத்து நோயை நீக்குவது போன்று, *பாலுண் குழவி பசுங்குடல், பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு* என்ற சிதம்பர செய்யுட் கோவை வரிகளுக்கு ஏற்ப உலகத்திலுள்ள அனைத்து தாவர சங்கமங்களிலும் சத்தி கலந்திருப்பதால், பூரண சத்தி எனப்பெற்றாள். இறைவனுடைய அருட் செய்கைக்கு அருள் என்றும், கருணையென்றும், அம்மையென்றும் பொருளாம். *அருளது சத்தியாகு அரன் தனக்கு* என்றும் *கருணையும் நீயும் அவனியில் புகுந்து* என்றும் சாத்திரமும் தோத்திரமும் பின்னமில்லா எங்கள் சத்தி பிரானைக் காட்டுகின்றது. அவ்வகையில் அனைத்திலும் இயைந்திருக்கின்ற அருளே பூரண சத்தியாக விளங்குகிறாள் என்பதை திருமூலர் 30 மந்திரங்களில் சிறப்பாக காட்டுகின்றார். படித்து அனுபவித்து உணரும்படி விளக்கி தான் ஒரு சத்தி உபாசகர் என்பதை நிலைநாட்டுகின்றார்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

44. ஆதார ஆதேயம்

முனைவர். ஆறு. அழகப்பன்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

திருமந்திரத் திருமுறையுள் நான்காம் தந்திரத்தின் ஒரு பகுதியாக விளங்குவது ஆதார ஆதேயம். இது நூறு பாடல்களைக் கொண்டது. ஆதாரம் என்பதற்கு நிலைக்களம் என்பது பொருள். ஆதேயம் என்பதற்கு அந்த ஆதாரத்தினிடத்து நிலைத்து நிற்கும் பொருள் என்பது பொருள்.

மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களில், சுத்த தத்துவம் ஐந்தும், புருடன் ஒன்றும் தவிர்த்த ஏனைய தொண்ணூற்று தாத்விகங்களும் அடங்கி உள்ளன. இடையேயுள்ள நான்கு ஆதாரங்களின் தாமரைகளில் நாற்பத்து நான்கு இதழ்கள் உள்ளன. ஆஞ்ஞைத் தாமரைக்கு இரண்டிதழ்கள் உள்ளன. இவற்றுக்கெல்லாம் அடிநின்று ஆதாரத் தாமரையாய், சக்தி நின்று அனைத்தையும் தாங்குகின்றனள். ஆதாரமும் அவளே; ஆதேயமும் அவளே. இதனைத் திருமூலர்,

பாலித மானவள் பங்கய மூலமாய்த்
தான் இதழாகித் தரித்திருந்தாளே

என்றனர். சக்தி சிவனை விட்டு நீங்காமல் ஒரு பாதியே தானாய் விளங்குகின்றாள். அவளை வழிபட வெளுக்கப்பட்ட ஆடைபோல ஆன்மா மும்மலங்களும் நீங்கும். சிவம் சத்தியாய் விளங்குதலும் சத்தி சிவமாய் விளங்குதலும் உண்டு என்பர் திருமூலர்,

சத்திதான் நாதமாதி தானாகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதியாகும்; தரும் வடிவான எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்.

என சிவஞான சித்தியார் இக்கருத்தை உரைக்கும். இச்சத்திதான் யார்? சிவனுக்கு என்ன உறவுடையவள்?

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே

என மூன்றுவகையாகக் குறிக்கப் பெற்றனள். சத்தி தத்துவத்திலிருந்தே சதாசிவம் தோன்றுமாதலின் அவர் தாயெனப்பட்டாள்; சிவதத்துவத்திலிருந்து சத்தி தோன்றுதல் பற்றி அவள் மகளெனப்பட்டாள்;

எப்பொழுதும் சத்தனுடன் தேவியாய் நிற்றல் பற்றித் தாரம் எனப்பட்டாள். எனவே எல்லா நிலைகளிலும் நிற்கும் இவள் ஆதார ஆதேயமாய்ப் பொலிகிறாள் என்றனர் திருமூலர்.

சத்தியின் செயல்

சத்தி ஆன்மாக்களின் உள்ளத்திலிருக்கும் கள்ளம் துடைக்கும் தன்மை உடையவள். ஐம்புலன்களாலும் உண்டாகும் துன்பம் நீக்குபவள். நெறி பொருந்திய நன்னெறிக்கண் செலுத்துவாள். உயிர்களின் இடத்தே அச் சத்தி தங்கியிருந்து ஆற்றும் இன்பம் அளப்பரியதாகும்.

புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார் -
பொருந்தி யிருந்த புதல்வி பூவண்ணத்து
இருந்த இலக்கில் இனிதிருந் தாளே.

எனக் கூறுகிறார். பூவில் வண்ணம் போல் சத்தி அழகும் பொலிவும் அடைய உடனிருப்பாள் என்பது கருத்தாகும். சத்தி வழிபாடு மேற்கொண்டவர், அச்சத்தி விளங்கியருளிய அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்ற மும்மண்டலங்களிலும் உள்ள பொருள்களைப் போற்றிச் சுழுமுனையில் நின்று பொருந்த நோக்கினால் விதியையும் வெல்லக்கூடும். இந்த மூன்று மண்டலங்கள் எங்கே உள்ளன? இவை நம் உடம்பிலேயே உள்ளன.

மூன்றுள மண்டலம் மோகினி சேர்வு இடம்
என்றுள ஈராறு எழுகலை உச்சியில்
தோன்றும் இலக்குறவா குதல் மாமாயை
என்றனள் ஏழிரண்டு இந்துவோடு ஈறே.

நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில், மூலாதாரம் முதல் சுவாதிட்டானம் முடிய அக்கினி மண்டலம், சுவாதிட்டானத்திற்கு மேல் விசுத்தி முடியச் சூரிய மண்டலம், அதற்குமேல் பிரமரந்திரம் முடியச் சந்திர மண்டலமாம். திருமூலர் நம் உடம்பையே கோயிலாகவும், பிரபஞ்சமாகவும் எண்ணியவர். சத்தி இவ்வுடம்பில் தங்கி நின்று ஆன்மாவைப் பேரானந்தப் பெருவெளியில் செலுத்தும் உபகாரம் செய்கின்றனள். புற ஆதாரங்களைப் பொருளெனக் கொள்ளாது அகத்தினுள் சத்தியை வழிபாடு செய்வோர் உள்ளத்தில் சத்தி குடி கொள்ளுவாள்.

முத்து வதனத்தி; முகந்தொறும் முக்கண்ணி
சத்தி சதிரி; சகளி; சடாதரி

பத்துக் கரத்தி; பராபரன் பைந்தொடி;
வித்தகி என்னுள்ளம் மேவிநின் றாளே

இவளது வடிவாக உள்ள சிவானந்தத்தை ஆறு ஆதாரங்களிலும் யோக சத்தி வழங்குவாள். இந்த யோக சத்தி நம் ஆன்மாவோடு வந்து சேர்ந்திருக்கும் பொழுது சிற்றின்ப வேட்கை முதலான உலகியயில் நாட்டங்கள் அறவே மறையும்.

யோக சத்தியின் தரிசனம்

ஐம்புல நாட்டத்தை ஒழித்துச் சத்தியை உள்ளத்துள்ளே குடியேற்றி, ஓங்காரத்தை வழிபட அச்சத்தி உள்ளொளியாக, யோகசத்தியாக விளங்கி அருள் செய்வாள்.

ஆமை ஒன்று ஏறி அகம்படியான் என
ஓம என்றோதி எம் உள்ளொளியாய் நிற்கும்

என்றனர் திருமூலர். உலகிற்கு முதல்வராய் விளங்கும் அயன், மால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐவரும் சத்தியை வழிபட்டே உயர்ந்தனர். காமன், சாமன், சூரியன், அங்கி, சந்திரன் என்பார்களும் அச்சத்தியைப் பணிந்து போற்றுகின்றவரேயாவர். சத்தி சிவனோடு தாதான்மியமாய் ஒன்றுகூடி, உயிர்களின் அறிவு, கலைகள், வேதம் ஆகியவற்றிலெல்லாம் பிரிவின்றி அத்துவிதமாய்க் கலந்து நிற்கிறாள். ஆகவே அவள் தனித்த ஆற்றல் இல்லை. சிவனோடு ஒன்றிணைந்தவளேயாவாள்.

பாகம் பராசக்தி; பைம்பொற் சடைமுடி
ஏக இருதயம், ஈரைந்து திண்புயம்
மோக முகம் ஐந்து, முக்கண் முகந்தொறும்
நாகம் உரித்து நடம் செய்யும் நாதர்க்கே

செயலின்றி இருக்கும் நிலையில் சிவம்; அது தொழிற்படும்போது சத்தியைச் சேர்கிறது. சிவனின் உருவும் பண்பும் செயலும் சத்தி கூட அமைவனவாகும். உயிர் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உணர்ந்து உணர்ந்து மொழியும் நிலையில் சிவனும் சத்தியும் உயிரை மேல்நிலைக்கு கொண்டு செல்வர். உயிர்களுக்கு அறிவு உண்டெனினும், அவ்வறிவு சிவானுபவம் என்ற அறிவின் வழி இயங்குதல் வேண்டும். சிவனுடைய அறிவும் அருளும் கொண்டே அவனை அறிய வேண்டும். அவ்வாறு அறியப்படும் அறிவே உயிரைப் பேரின்பத்தே செலுத்தும்.

நுண்ணறி வாகும் நுழைபுல மாந்தர்க்குப்
பின்னறிவாகும் பிரானறிவு அத்தடம்
செந்நெறி யாகும் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாவது சன்மார்க்க மாமே.

சிவனை உணர்ந்த அறிவே சன்மார்க்க அறிவாகும். பிற அறிவெல்லாம் தீவினை பயக்கும். சன்மார்க்க அறிவு பயக்கும் அறிவே சன்மார்க்க நெறியாகும். அதனை அறிவிக்கும் சத்தி சிவசக்தியாவாள். இதனைத் திருமூலர்,

சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமும்
துன்மார்க்க மானவை எல்லாம் துரந்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி ஆவதும்
சன்மார்க்கத் தேவியும் சத்தி என்பாளே.

என்றனர். இத்தகைய சன்மார்க்கச் சிந்தனையோடு உயிர்க் காற்றாகிய பிராண வாயுவைக் கட்டுக்குள் கொணர்ந்து சுழுமுனைக்குக் கொண்டு செல்ல உயிர் வீடுபேறடையும் வழியைப் பொருந்துவதை அத்திமேல் வித்திடின், *அத்தி பழுத்தக்கால் மத்தியில் ஏற வழியதுவாமே* என்றார் திருமூலர்.

சத்தியையும் சிவத்தையும் ஒருவர் மனத்துள் ஒருங்கு நினைந்து வழிபட அவ்விரண்டலா ஒன்று அவர்க்குக் கிடைத்து விடுமாயின் வித்தின்றியே எல்லாம் விளையும். சுவாதிட்டானம் முதலிய ஆதாரங்களில் பொருந்தியிருக்கும் அயன் முதலாயினாரும், இவர்கட்கு மேலே விந்து, நாதம் ஆகியவற்றிக்குரிய சதாசிவனும், அவனுக்கு மேற்பட்ட சக்தி முதலான நால்வருமாகிய ஒன்பது பேர்களுக்கும் உரிய நிலைகளில் யோக நெறியில் பொருந்தியபோது ஆன்மா தேனுண்ட வண்டு களிப்பால் இசையிடுவது போல், இன்ப மயத்தில் நிலைத்து நிற்கும். சத்தி சிவன் இரண்டும் ஒன்று என்று உணராத நிலையில் சத்தியை மட்டும் வழிபடினும் அதுவும் நன்மை பயக்கும்; அது சிவனையும் மகிழ்வுறுத்தும். சிவனுக்கு மனைவியும் உயிர்களுக்குத் தாயாம் ஆகிய சத்தியாம் மனோன்மணி எல்லாவற்றுக்கும் ஆதாரமாவாள். உயிர்கட்கு வேண்டுவன எல்லாம் வழங்குவாள். அவளே ஆதாரம்; அவளே ஆதேயம்; அவளே ஆதார ஆதேயம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

45. நவாக்கரிச் சக்கரம்

திருமந்திரச்செம்மல். **சி. செகந்நாதன்**
புதுக்கோட்டை

நவாக்கரிச் சக்கரம் திருமந்திரத்துள் நாலாம் தந்திரத்தின் இறுதிப் பகுதியில் உள்ளது. இது நூறு பாடல்களைக் கொண்ட பகுதியாகும். இந்த நூறு பாடல்களையும் விரிக்கில் பெருகும். ஆகவே இப்பகுதியின் சாரம் குறையாதவாறு தொகுப்பது இக்கட்டுரை.

நவாக்கரி என்பது நவ+அக்கரி என்று பிரித்து, ஒன்பது அட்சரம் என்று பொருள்படும். ஒன்பது எழுத்துக்களையுடைய மந்திரம் என்பது. ஒன்பது எழுத்துக்களை வித்தெழுத்தாக (பீச எழுத்து) கொண்ட தேவி மந்திரம் இது. ஓர் எழுத்தே ஒன்பது எழுத்தாகாவும் இவைகள் தம்முள் மாறி மாறி அமையும் வகையில் எண்பத்தொரு எழுத்தாக விரியும்.

சத்தியின் வித்தெழுத்து. ஸ்ரீம் என்பது. ஹ்ரீம் என்றும் கூறுவர். இது ஏகாட்சரம் ஆகும். இந்த ஒரெழுத்து கீலிம் ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், கிரீம், ஹௌம், ஔம், ஸௌம் என ஒன்பது எழுத்தாக விரியும். நவாக்கரிச் சக்கரத்தில் ஒவ்வொரு வித்தெழுத்தையும் முதலாக வைத்து செபிக்க எண்பத்தொரு எழுத்தாக விரியும்.

நவாக்கரிச் சக்கரம் நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரியாக
நவாக்கரி எண்பத் தொருவகையாக
நவாக்கரியக் கிலீசௌமுதல் ஈறே -1319

இந்த ஒன்பது வகையான வித்தெழுத்துக்களை சக்கரத்துள் அமைத்து வழிபாடு இயற்றும் முறைமையையும், அதனால் தேவியின் அருளைப் பெறும் முறைமையையும் கூறுவது இப்பகுதியாகும்.

இதனை நன்கு ஓர்ந்து ஒரு சாதகன் செபிக்க ஒவ்வொரு மந்திர பீச செபத்திற்கும் ஒவ்வொரு ஆற்றலும், நிலையும் கூடிவருவதும் திண்ணம். இந்த நவாக்கரிச் சக்கரமே நான் அறிந்தவற்றுள் முழுமையான வித்தையாகும். இச்சக்கரத்துள் எல்லா நன்மைகளும் விளைந்து எழும். இம்மந்திரத்தை வெளியில் ஒலி வராது நாவுக்குள்ளே வைத்து ஓதஓத நவாக்கரியின் தலைவியாகிய சக்தி, அச்சாதகனுக்கு எல்லா நன்மைகளையும் தருவாள்.

நவாக்கரியாவது நாளறி வித்தை
நவாக்கரியுள்ளெழும் நன்மைகளெல்லாம்
நவாக்கரி மந்திரம் நாவுளே ஓத
நவாக்கரி சத்தி நலந்தருந் தானே. -1321

நலம்தரும், கல்விதரும், ஞானம் தரும், வல்வினைகளை நம்மைவிட்டு ஓட்டும். இப்பிறவியில் நம்மால் செய்யப்படுகின்ற ஆகாமிய வினைகளை செய்யாது அகற்றும். வரம் அனைத்தையும் வாரி வழங்கும். ஒளியையும் நம்முள் வாய்க்கச் செய்யும். சிரத்துள் விளையும் முதுமை, மரணம் ஆகிய தீவினைகளையும் அகற்றும்.

நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை யும்மைவிட்டோடி
சிரந்தரு தீவினை செய்வதகற்றி
வரம்தரு சோதியும் வாய்த்திடும் காணே. -1322

இந்த ஒன்பது வித்தெழுத்தையும் மாறி மாறி முதலெழுத்தாக வைத்து ஓதி வழிபட, ஒன்பது வகையான ஆற்றல்கள் வந்து கூடும். இந்த ஒன்பது வகையாம் சக்கரத்தையும், மந்திரத்தையும் அறிந்து கடைப்பிடிப்பது சாதகனுக்கு அருள்வாழ்வைத் தரும் என்பது திருமந்திரம்.

திருமந்திரம் நாலாம் தந்திரத்துள் எழுவகையான சக்கரங்கள் கூறப்பட்டுள்ளன. அவை, ஏரொளிச்சக்கரம், திரிபுரைச் சக்கரம், சாம்பவி-மண்டலச் சக்கரம், திருவம்பலச்சக்கரம், நவாக்கரிச் சககரம், புவனாபதிச் சக்கரம், பைவரச்சக்கரம்.

இந்த ஏழு சக்கரத்துள்ளும் நவாக்கரிச் சக்கரம் சிறந்தது. ஏனெனில் நவாக்கரியாவது *நானறிவித்தை* என்று நானறிந்த சக்கரங்களுள் எல்லாம் சிறந்த வித்தையை உடையது நவாக்கரியே என்று திருமூலரே சான்று பகர்வதனான் என்க

முதலாவது சக்கரம்

நவாக்கரி தேவி பராசக்தியின் ஒன்பது கைகள். அந்த ஒன்பது கரங்களிலும் ஒன்பது வித்தெழுத்துக்கள் உள்ளன. இதுவே நவ அட்சரி என்னும் நவ அக்கரமாக வழங்கப்படுகிறது. அந்த ஒன்பது வித்தெழுத்துக்கள். *கிலிம் ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம் ,ஹௌம், ஔம், ஸௌம்.* இந்த ஒன்பது சக்கரங்களில் முதல் சக்கரம் இது. இதனை நாவுளே ஓதி வழிபட பராசக்தியாம் நவாக்கரி சக்தியானவள் நலம் பல செய்வாள். அவள் தரும் நலங்கள் முழுமையும் நமக்குக் கிடைக்க எண்ணினால்

அவளை காயாம்பூ வண்ணத்தளாக உள்ளத்துள் நினைந்து ஓதுதல் வேண்டும்.

முதல் சக்கரத்தின் பலன்

காலன் நமது வாழ்நாளை எண்ணிக் கொண்டிருப்பதைத் தடை செய்ய முடியும். அவனைக் கடக்கலாம். எங்கும் பரவும் ஞாயிற்றின் ஒளிக்கதிர் போல் எங்கும் நம் பெயரும் புகழும் எத்திசையிலும் தடையின்றிப் பரவும். பொன், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவை தாமே வந்தடையும். ஆதிபராசக்தியினுடைய அருளும் ஞானமும் கிட்டும். தேவ உலக வாழ்வு சித்திக்கும். மக்களுள் உயர்ந்தவர்கள் இந்த நவாக்கரியை உச்சரித்து தேவர்களாகி உயர்ந்து நின்றனர். தேவர்களுக்கும் தேவனான பரமேஸ்வரன் இவர்களுக்கு அருள் புரிவான்.

இரண்டாவது சக்கரம் (நினைந்திடு சக்கரம்)

இந்த மந்திரத்திற்குரிய வித்தெழுத்துக்கள்:

ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம், ஔம், ஸௌம், க்ளீம்

இந்த இரண்டாவது சக்கரத்தின் பயனாவது யாதெனின் முதற் சக்கரத்தின் பயனோடு, அருள் கூட்டும். கங்கையாற்றினை முடிமேல் சூடி கொண்டு அதன் வேகத்தை மாற்றி அருளியவனும், தேவர்களுக்கெல்லாம் தேவனான பரமேஸ்வரனை அடைவதற்காகவே இம்மந்திரத்தின் முயற்சி இருந்திடல் வேண்டும்.

அறிந்திடு வார்கள் அமரர்களாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடுவானை முயன்றிடு நீரே. -1328

மூன்றாவது சக்கரம் (பணிந்திடு சக்கரம்)

இந்த மந்திரத்திற்குரிய வித்தெழுத்துக்கள்,

ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம், ஔம், ஸௌம், க்லீம், ஸ்ரீம்

இந்த மந்திரத்தின் பயன்

இந்த மந்திரத்தை நாக்கை அசைக்காது உள்ளத்தின் உள்ளேயே செபித்து, உள்முகமாகவே பார்வையைச் செலுத்தி கொண்டிருக்க வேண்டும். உள்முக பார்வை என்பது எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு

ஒரு அரிய உவமையை விளக்குகிறார். பூவின் அடியில் தங்கியிருக்கும் தேனைப் போல் உள் இனிக்க உள்ளாக இருக்கவேண்டும். மேலும் அத்தேனை உண்ண வரும் வண்டின் நோக்கம், அப்பூ, அதன் அழகு அதன் வடிவம், வண்ணம், மரமா, செடியா என்றெல்லாம் பார்க்காது வண்டானது மலரின் தேனை மட்டுமே குறியாகக் கொள்ளுவது போல, பராசக்தியின் திருவடியே குறியாகக் கொண்டு இம்மந்திரத்தை ஓதவேண்டும்.

ஒப்பற்ற தனி நாயகியாகிய பராசக்தியை தரிசியுங்கள். அவளை நோக்கிய திருமுகம் பொலிவுடன் திகழ்ந்து எல்லோரையும் நம் பாலதாக ஆக்கும் வசியம் ஆகிவிடும். பரமாய பரஞ்சுடராகிய சிவம் அம்மையுடன் வெளிப்பட்டு நின்று நம்மை ஆட்கொள்ளும்.

இவ்வாறு பராசக்தியே உள்முகமாக பார்த்து செபிக்கின்றவர், அப்பராசக்தியின் பெருமையை எண்ணிப்பார்த்திடல் வேண்டும். அப்படி எண்ணினால் நாட்டை ஆளும் மன்னர்களும் நம் வசம் ஆவர். நமக்கென பகை என்பது ஒன்றுமில்லை. பகைவர்கள் வாழப் போவதும் இல்லை.

எட்டுத் திசைக்கும் நாயகியானவள் தம் மந்திரத்தை கூறுங்கள். அண்டத்துள் வாழ்பவர்களின் வாழ்க்கை எம்மாத்திரம் என்று அதன்கண் வைத்த ஆசையை அறுத்து, நவாக்கரியால் உண்டாம் வாழ்வில் திளையுங்கள். மீண்டும் இப்பூமியில் பிறந்து வரும் வழியை இல்லாது மாற்றுங்கள். இவைகளுக்கெல்லாம் நவாக்கரியின் தலைவியாம் பராசக்தியின் திருவடியைப் பற்றிய தெளிவில் இருக்க வேண்டும்.

நாலாவது சக்கரம் (வளர்ந்தெழுச்சக்கரம்)

இம்மந்திரற்குரிய வித்தெழுத்துக்கள்:

ஐம், கௌம், கிரீம், ஹௌம், ஔம், ஸௌம், கிலீம், ஸ்ரீம், ஹ்ரீம்

ஐம்முதலாக வளர்ந்தெழு சக்கரம்
ஐம்முதலாக அமர்ந்திரீ மீறாகும்
அம்முதலாகி அவர்க்குடையாடனை
மைம் முதலாக வழுத்திடு நீயே -1334

இம்மந்திரத்தின் பயன்

ஒப்பற்ற அன்னையாகிய அந்த நல்லாளை, நாவுக்கரசியான சத்தியாம்பிகையை வணங்குங்கள். மெய்மையான ஆகமங்கள் எல்லாம் பகுத்துப் பகுத்துக் கூறும் அவை யாவினையும் தொகுத்துத் தந்துள்ள

இம்மந்திரத்தை நாவிடையே சொல்லுங்கள். சொல்லச் சொல்ல அவள் நம்மின் அண்ணாக்கின் முன்னே எழுந்தருளக் காணலாம்.

இம்மந்திரம் கூத்தப்பெருமானது மந்திரமாகும். இச்சக்கரத்தை ஒருவன் நாவில் எழுதிடில், அவன் கூத்தப்பெருமானுக்கு ஒப்பானவன் ஆவான். பொன் மன்றிலே ஆடும் சபா வித்தையும் அவன் கையகப்படும். மெல்லிய இயல் பொருந்திய நவாக்கரியின் கருணை பொருந்துதலால், அவன் இவ்வுலகத்தையே வென்றிடலாகும். நாவில் எழுதுதல் என்பது நாக்கு அசையாது எண்ணுதலாகும். இச்சக்கர வழிபாட்டால் எல்லாவற்றையும் ஓதாதே அறியும் உணர்வறிவை அடையலாம்.

இம்மந்திரத்தை கூறும் நாவுள் வந்தமர்வாள் பராசக்தி. அதனால் அவன் கூறும் எச்சொல்லும் சொன்னபடி நடக்கும். சொன்ன சொல்லுக்குரிய பொருட்பயன் தொடர்ந்து வரும். அவனது நாவில் வாக்குக்கு அரசியே வீற்றிருக்க பெற்ற அவன், கல்வியைக் கடந்தவனாகி கல்விக்கு அரசன் ஆவான். இவனுக்கும் பகை என்பது இல்லை.

ஐந்தாவது சக்கரம் (பகையறு சக்கரம்)

இம்மந்திரத்திற்குரிய வித்தெழுத்துக்கள்:

கௌம், கிரீம், ஹௌம், ஔம், ஸௌம், கிலீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம்,

பகையில்லை கௌமுதல் ஐயது ஈறாய்
நகையில்லை சக்கரம் நன்றறிவார்க்கு
மிகையில்லை சொல்லிய பல்லுரு எல்லாம்
வகையில்லை யாகவணங்கிடும் தானே -1339

இம்மந்திரத்தின் பயன்

நலத்திற்கு உரியனவாகிய உயிர்கள் எல்லாம் தத்துவ நாயகியாகிய நவாக்கரியை வணங்கிடுவர். அவர்களுக்கு காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றமும் அண்டாது. அவர்கள் எண்ணியதெல்லாம் கைகூடிச் சித்திக்கும்.

தனக்கு மேல் பிறரின்றித்தானே தலைவனாக இருப்பான். அவன் ஒருவனே நினைத்தை எல்லாம் சொல்ல வல்லவனாவான். அனைத்துயிர்களையும் ஈன்றவன்தன் மந்திரமாகிய இந்த மந்திரத்தால் வினைகள் முற்றிலும் நீங்கி விடும்.

புண்ணியனாக உலகம் எங்கும் பொருந்தலும், மதிக்கத்தக்கவனாக அனைவருடனும் கலந்து விளங்குதலும், கருணை நிறைந்தவனாக உலகம் முழுவதுக்கும் இன்பம் தருபவனாகி மேலோனாக அமர்ந்திருப்பான்.

ஆறாவது சக்கரம் (தானதுவான சக்கரம்)

இம்மந்திரத்திற்கு வித்தெழுத்துக்கள்

கிரீம், ஹௌம், ஔம், ஸௌம், கிலீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம்

தானது கம்மிறீக் கௌவது ஈறும்
நானது சக்கரம் நன்றறி வார்க்கெலாம்
கானது கன்னி கலந்த பராசக்தி
கேளது வையங் கிளரொளி யாமே. -1344

இம்மந்திரத்தின் பயன்

இச்சக்கரம் தான் அது என்றும், நான்அது என்றும் அறிபவர்களுக்கு உரியது. அஞ்ஞானக் காட்டில் அலைந்து திரிந்தவர்களுக்கு, அறிவாம் கிளரொளியான பராசக்தி உறவாவாள்.

இப்பராசக்தியை இம்மந்திர சக்கரத்தின் வழி அறிந்து கொள்வார்களுக்கு ஒளிமயமாகி அவன் மனத்துள் எழுந்தருளுவாள். உண்மைப் பொருளை விளக்கி, நம் சிந்தையை எப்பொழுதும் களிப்புடன் இருக்கச் செய்வாள். மழையை வருவிக்கும் ஆற்றலையும், செல்வத்தை உடனே அதிட்டித்துத் தரும் ஆற்றலையும் உண்டாக்கித் தருவாள்.

இச்சக்கரத்தையும் பூசை செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வைத்துக் கொண்டால் உலகத் துன்பங்கள் யாவும் விலகி ஓடும். பகை என்பதே கிடையாது. அரசனே வந்து வணங்கி மகிழ்வான். உள்ளம் கலங்கி ஒடுங்காது.

இச்சக்கர வழிபாடு உடையோர்க்கு என்றும், எங்கும் துன்பமே யில்லையாம். இவ்வுடம்பு பொன்னுடம்பாகும் என்ற மறை வாக்கியபடி அவர் மேனி பொன் மேனியாகும். அவர் கொல்லா விரதம் தலைமேற் கொண்டவராவர். அவர் மீட்டும் தாய் கருப்பை ஆகிய குகையுள் தங்கமாட்டார். அதாவது பிறப்பு அற்றவராவர். மரணமற்று வாழ நினைக்கின்ற மன்னிய உயிர்க்கெல்லாம் இந்த வகையான மந்திரச் சக்கர வழிபாடு தவிர வேறு வகை உபாயம் கிடையது. இம்மந்திரத்தின் அருமை பெருமைக்கு ஓர் எல்லையே கிடையாது.

இம்மந்திரத்தைத் தியானித்தால் ஒளியுடம்பு உண்டாகும். சினந்து எழுகின்ற பின்வினை இல்லை. இவரிடம் பரந்து நின்ற ஒளி அவர் இருக்கும் பிரதேசம் எங்கும் பரவி நிற்கும். இவரது ஒளியுடம்பால் கார் இருளாகிய அறியாமை மறைந்து அப்பிரதேசம் எங்கும் அறிவுக் கறிவாகிய ஒளிபொருந்தியிருக்கும்.

ஏழாவது சக்கரம் (ஒளிச்சக்கரம்)

இம்மந்திரத்திற்கு வித்தெழுத்துக்கள்:

ஹௌம், ஔம், ஸௌம், கிலீம், ஶ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், கிரீம்

ஒளியது ஹௌமுன் கிரீமது ஈறாம்
களியது சக்கரம் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமும் சிந்தையும் தேறப்
பணிவது பஞ்சாக் கரமது வாமே. -1350

இம்மந்திரம் நவ அக்கரமாகிய ஒன்பது வித்தெழுத்துக்களின் சிறப்பை ஓதவந்தது. மேலே இம்மந்திரத்தில் கடைசி வரி பணிவது பஞ்சாக் கரமது வாமே என்பது இடைச் செறுகல். அந்த இடத்தில் இருந்த வரி இன்னது என்று உணரமுடியவில்லை.

இம்மந்திரத்தின் பயன்

இம்மந்திரம் இன்பமே மயமானது. இன்பமே சிந்திக்க வல்லது. தெளிவான ஞானமும், தெளிவான சிந்தையும் உண்டாக்கும்.

அனைத்து உயிர்களையும் அணைத்துக் கொண்டவள். இவளே சதா சிவமூர்த்திக்கு அனுக்கிரக சத்தியாக விளங்குவாள். இவளே உள்மூச்சுக் காற்றுக்கு உரியவள். அதோடு உள்ளுள் அறிவுக்கறிவானவள். சுவை,ஒளி, ஊறு, ஓசை, என்ற அவற்றை அறியும் அறிவாகத் திகழ்பவள்.

சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. -குறள்

(இக்குறள் வரும் அவ்வைந்தின் வகையை உணர்த்துவது இச்சக்கரமாகும்)

தன்னுள்ளே உலக முழுமையும் கொண்டவள். அவள் என்னுள்ளும் நீங்காது இருந்தனள். ஏனெனில் இம்மந்திர வித்தெழுத்துக்களை விடாது தியானித்திருந்தால் மேலும் மண், நீர்,அனல், காற்று, வான் ஆகிய

பூதங்களின் உள்ளுள்ளவள். என் கண்ணுள்ளும், மெய்யுள்ளும் கலந்துள்ளவள்.

சத்தியானவள் உயிர்களுக்கெல்லாம் உயிராய் நின்று காத்து வருவதைக் காணலாம். சிவபோதம் இன்றி அவளைக் காண வேண்டும் என்ற ஒரே விருப்புடன் கூடி நிற்பவர் காண்பார். அவளிடம் என்றும் பிரிவில்லாத கருத்தைச் செலுத்திய வண்ணம் இருத்தல் வேண்டும்.

இச்சக்கர மந்திர சாதகருக்கு ஏழுலகமும் ஒருசேரக் காணும் வல்லமை உண்டாகும். எல்லா உயிரும் தன்னுயிராகக் காணும் வித்தகத் தன்மை உண்டாகும். உலகிலுள்ள அனைத்துயிர்களின் குணங்களையும் உள்ளவாறு அறிதல் கூடும். அவளே மெய்ப்பொருளாகவும் ஆவாள்.

எட்டாவது சக்கரம் (மெய்ப்பொருள் சக்கரம்)

இம் மந்திரத்தின் வித்தெழுத்துக்கள்:

ஔம், ஸௌம், க்லீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம்

மெய்ப்பொருள் ஔமுதல் ஹௌவது ஈறாக்
கைப்பொருளாகக் கலந்தெழு சக்கரம்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேஸ்வரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே -1354

இம்மந்திரத்தின் பயன்

இச்சக்கரத்திற்குரியவள் அமுதேஸ்வரி ஆகும். இச்சக்கரமே அவள் பக்குவமாய் உறைந்த இடம் ஆகும். இவளே நடுவாம் அருளைத்தருபவள்.

இவளே நமது உயிர்ப்புக்குள் பக்குவ கதியாகி ஒருமையாய் இருப்பவள். மூலாதார முதல் 7 -வது நிலையே பிரம்மரந்திரம் முடிய ஒரே பேரொளி மயமாகி விளங்கும் இவளுடன் நமது மூல வாயுவை மேலே கொண்டு வந்து பொருந்தும்படி செய்தால், நாள்தோறும் நவநவமாய் புதுமைகள் காணலாம். இந்த உடம்பு நம்மை விட்டுப் போகாது, நமக்கு உறவாகி நம்முடன் உறவாடி மகிழும். அழியாமை பெற்றதுமாகும். இம்மந்திரத்தின் உட்பொருள், நமது சுவாசம் இயங்காது பிடரியின் கண்ணே இருப்பதால் உடலுக்கு அழிவில்லை என்பதாம்.

இறப்பாகும் கேடு இல்லையாதலால், தேசவேறுபாடு, சமயமத ஆச்சார வேறுபாடுகள் அற்றுப் போவதோடு, நம்மை, நாள் என ஒன்று போல் காட்டி உயிரை மாய்க்கும் நாள் என்ற முதலும் அற்றுப்போகும்.

அமுதேஸ்வரியின் அருள் வரும் வழியாகிய இச்சக்கரத்தைக் கண்டபின் துக்கக் காடுகள் தூள் தூளாகிப்போகும். இதனை நாம் நன்குணர வேண்டும்.

உலகில் தான் தோன்றாதவாறு உள்ள நிலைமை வந்துறும். உலகில் தான் நினைத்த இடத்தில் தோன்றித் தன் உருவைக் காட்டலாம். உலகில் மட்டுமல்ல எவ்விடமும் இவருக்குத் தூரமில்லை. போக முடியாத இடம் இல்லை. இந்த இருப்பிடம் இதுதான் என்று வரையறுக்க முடியாது. எங்கும் வியாபித்திருக்கும் வியாபகத்தன்மையர் ஆவார்.

ஏழுகடல் சூழும் புவியெல்லாம் இச்சாதகரின் முன்வந்து நின்றிடும். இவர் நினைத்தால் அவைகளின் இயக்கங்களையும் நிறுத்தி விடலாம். இவர் நினைத்தது எல்லாம் நினைத்த மாத்திரத்தில் இவர் முன்னே நிற்கும். இவருக்கு ஏழாவது ஆதாரமாகிய தகராகாசத்துள் ஒளிநிறைந்து நிற்கும். பூரண அறிவும், பூரண வல்லபமும் பெறுவர்.

ஒன்பதாவது சக்கரம் (விளக்கொளிச் சக்கரம்)

இம்மந்திரத்திற்குரிய வித்தெழுத்துக்கள்

ஸௌம், க்லீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம், ஔம்

விளக்கொளி ஸௌமுதல் ஔவது யீறா
விளக்கொளிச் சக்கரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீயே -1359

இம்மந்திரத்தின் பயன்

இச்சக்கரம் மெய்ப்பொருள் சக்கரமாகும். மின்னற்கொடி போன்ற நவாக்கரி அம்பிகையை நீ வணங்கி, அவளே உள்ள ஒளிஎன்று அறிந்து விளக்கம் பெறுவதோடு நாமும் ஒளிபெற்றுத் திகழலாகும்.

இச்சக்கரத்தின் உண்மையை உணர்த்தப் புகுந்தால், இது எங்கும் விளங்கித் தோன்றும் மெல்லிய இயல்புடைமையே ஆகும். இந்த மெல்லிய இயல்புடைமையையே மெல்லியள் என்று பராசக்தியாய் வணங்கிக் கொள்கிறோம். இவளால்தான் மெய்ஞானம் கிடைக்கும் இம்மெய்ஞானத்தை விளங்கிக் கொண்டவர்கள் யாதுமாகி எங்ஙனும் விளங்கித் தோன்றுவார்கள். தாமே அருள்வடிவாகி விளங்குவர்.

அச்சக்தியானவள் தானே எங்கும் உருவமின்றி வியாபித்து நிற்கும் வெளியாய் ஆனவள். அவளே பரவெளியாயும் ஆவாள். அவளே

அனைத்துமாகி நிறைந்து விரிந்து நிற்பவள். அவளே அனைத்தையும் ஒடுக்குதலும் செய்வாள். அவளே அனைத்து அண்டங்களும் அவற்றின் உயிர், பொருளுமாவாள்.

அனைத்தும் அவளே அனைத்து அண்டங்களும் அவளே என்றானபின் அவளை அளந்தறிய முடியுமோ? அப்படிப்பட்டவள் இப்பிண்டமாகிய இவ்வுடலகத்து ஞானம் வரும் பெரிய வெளியைத் தனக்கு இருப்பிடமாக்கிக் கொண்டவள். நாபியான கண் நின்று நம்மைத் தோற்றுவித்தவளும் அவளே. அவளே நம் கண்டத்துள் இருந்து செய்யும் ஞான ஆற்றல்கள் மிகப்பல. இதை அறிந்தவர் சிலரே.

கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் அனைத்தும் சக்தியின் மயமே. இந்த உடலோடு கூடிய உயிர் ஒருநாள் இவ்வுடலில் ஒடுங்கும் என்பதை உணரார். இவ்வுலகில் இந்த உண்மையை உணராதவர்கள், அந்த அளப்பறும் சக்தியை வணங்கி வாழத் தெரியாது, சிறு தெய்வங்களாகிய தேவர்களை நாடி, பிறப்பு, இறப்பு என்னும் வலைக்குள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இது அவர்களின் தலைவிதி போலும் என்று ஒன்பதாவது சக்கரம் முடியப் பெறுகின்றது.

இதுவரை 45 பாடல்களில் மேற்கூறிய ஒன்பது சக்கரங்களையும் வித்தெழுத்துக்களையும், ஒவ்வொரு சக்கரத்தின் பயன்களையும் கூறி, பின் மீதம் 44 பாடல்களில் இந்த நவாக்கரிசக்கரம் அமைக்கும் முறையையும், வித்தெழுத்துக்களை அவ்வவ் அறைகளில் அடைக்கும் முறைமையையும், செபிக்கும் முறை, செபிக்கப் பயன்படும் பொருட்கள், இந்த ஒன்பது சக்கரத்திற்கும் உரிய பராசக்தியின் வடிவு, வண்ணம், அழகு, படைகள் முதலிய கூறப்பெற்றுள்ளன. அவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும் என நினைந்து விடுத்ததாம். ஆர்வமுள்ளவர்கள் இப்பகுதியியை ஊன்றிக் கவனித்தால் முற்றும் எளிதில் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

ஐந்தாம் தந்திரம்

46. சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம்

பொற்கிழிக் கவிஞர்.
பேராசிரியர். சொ.சொ.மீ. சுந்தரம் எம்.காம்., எம். பிஎல்.,
மதுரை

பன்னிரு திருமறைகள் நாம் வாழ நன்னெறி காட்டும் ஞான நூற்கள் ஆகும். இவற்றுள் திருமந்திரம் பத்தாம் திருமுறை. இது முத்தாம் திருமுறை. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று உலகுக்கு உணர்த்திய திருமூலர் திருமந்திரத்தை ஒன்பது தந்திரங்களாக வகுத்துக் கொண்டார். சாத்திரமும் தோத்திரமுமான தமிழ்த் வேதத் திருமந்திரத்தில் ஐந்தாம் தந்திரம் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் ஆகியவற்றை விளக்குகிறது. சிவஞான வளர்ச்சிக்கும் சமுதாய நன்மைக்கும் பயன்படக்கூடிய சிந்தனை மாத்திரைகளை அள்ளி வழங்கிய சித்த வைத்தியரான திருமூலர். சமய பேதங்கள், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த நெறிகள் அவற்றின் இலக்கணங்கள் ஆகியவற்றை ஐந்தாம் தந்திரத்தில் குறிப்பிடுகிறார் ஒன்பது ஆகமங்களை ஒன்பது தந்திரங்களாகக் கூறிய திருமூலர். வாதுளாகமத்தின் சாரத்தை ஐந்தாம் தந்திரத்தில் வடித்துக் கூறுகிறார்.

நான்கு பிரிவுகள்

சிவத்தோடு சம்பந்தப்பட்டது சைவம். நான்காம் தந்திரத்தில் சக்தி வழிபாட்டு நெறிமுறைகளைக் கூறிய திருமூலர் ஐந்தாம் தந்திரத்தில் சிவ வழிபாட்டு முறைகளை விளக்கத் தொடங்குகிறார். சைவம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. முதலாவது சுத்தசைவம். இது திருமூலரின், புரட்சி மனப்பான்மையை விளக்குவது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் சைவம் ஆகா. தலைவனையும் தன்னையும், இருவருக்கும் இடையிலுள்ள தடையையும் அறிந்து தடையை நீக்கித் தலைவனைச் சார்ந்து வாழ்வதே சுத்த சைவமாகும்.

நினைப்பதைக் கடவுள் சம்பந்தமாக நினைத்துச் செய்யும் செயல்கள் அனைத்தையும் கடவுள் சம்பந்தமாகவே செய்து கடைத் தேறுவது அசுத்த சைவம் எனப்படுகிறது. ஏறிய பிறகு ஏணி தேவையில்லை. சிவம் வரும்பொழுது தவம் முடிந்து போகிறது. செய்வன எல்லாம் சரியை. நினைப்பதும் செய்வதும் கலந்த நிலை கிரியை. சிவபெருமான்

திருக்கோயிலுக்குச் சென்று திருவலகிடுதல், திருமெழுகிடுதல், மலர்மாலை கட்டுதல் ஆகியவை ச்ரியை. சிவலிங்க மூர்த்தியை எழுந்தருளச் செய்து அகத்தும் புறத்தும் சிவவழிபாடு செய்தல் கிரியை. சரியையும் கிரியையும் சுத்த சைவமாகிய ஞான நிலைக்கு வாயில்கள் ஆகும். ஞானநிலை அடைகின்ற வரை இவற்றில் நிற்பது அசுத்த சைவம் எனப்பட்டது. அசுத்தம் என்பது சுத்தத்திற்கு மாறுபட்டது.

திருநீறும் சிவமணியும் அணிதல், ஆகம புராண சாத்திரங்களை முறையாகப் படித்தறிதல், வேதாந்த சித்தாந்த நுண்பொருள் உணர்தல், நல்லாரோடு சேர்ந்து அடியார் நடுவுள் இருத்தல், இவையெல்லாம் சிவனை அடையும் வழியைக் காட்டுவதால் இவை மார்க்க சைவம் எனப்படும். மார்க்க சைவர் யோக நெறியைக் கைக் கொண்டவர் ஆவர்.

முழுவதும் பக்குவப்பட்ட சிவஞானிகளுக்குத் திருநீறு அணிதல், சிவமணி புனைதல், சரியை, கிரியை யோகச் செயல்கள் ஆகியவை தூங்குபவன் கைப்பொருள் நழுவுவது போலத் தானே நழுவிவிடும். இத்தகைய சிவஞானிகள் சிவபோத நிலையில் சிறந்து விளங்குவர். உலக ஞானத்தில் எட்டமாட்டார்கள். இந்த நிலையே கடுஞ்சுத்த சைவம் எனப்படும். இது ஞானநெறியாகும். சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் ஆகிய நான்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கு நெறிகளைக் காட்டும் என்பர். சரியை, சீலம்; கிரியை நோன்பு; யோகம் செறிவு; ஞானம் அறிவு.

சீலம் இன்றி நோன்பின்றிச் செறிவே இன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி நெறிகாட்டி வாரா உலக வழியேறக்
கோலம்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே.

என்ற திருவாசகம் ஈண்டு நினைக்கத்தக்கது. நான்கு நெறிகளை நான்கு சைவங்களும் சுட்டிக் காட்டினாலும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து வேறுபாடு காண்பது மிக அரிதான செயல். ஒவ்வொன்றிலும் மற்ற மூன்றும் அடங்கியிருக்கின்றன. சுத்த சைவம் நான்கு பாடல்களிலும், அசுத்த சைவம் நான்கு பாடல்களிலும், மார்க்க சைவம் பதினொரு பாடல்களிலும், கடுஞ்சுத்த சைவம் ஐந்து பாடல்களிலும் விளக்கப்படுகின்றன. அன்பின் மூலம் அருளை அடையலாம் என்று காட்டும் இப்பகுதி திருமந்திரத்தின் அடிப்படைக் கருத்தான அன்பே சிவமாவது என்பதை விளக்கும் இன்றியமையாத பகுதியாகும்.

முழுமுதற் கடவுளாகிய சிவன் விளங்கித் தோன்றும் சமயம் சைவ சமயமே என்றும் அது நான்கு வகைப்படும் என்றும் அறுவகைச் சமயங்களுக்கும் அப்பாற்பட்ட சித்தாந்த சைவத்தின் சிறப்பு இன்னதென்றும் திருமூலர் விளக்குகிறார். இவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

சுத்த சைவம்

எல்லா உலகங்களையும் நினைத்த மாத்திரத்தில் ஒரு சேரப்படைக்கின்றவன் இறைவன். ஆன்மாக்களை ஈடேற்ற அப்பேரறிவாளன் பெருங்கருணையோடு இச்செயல் புரிகிறான். அவன் பெருமைக்கு யார் ஒப்பாவார்கள்? அளக்கலாகா அளவும் பெருமையும் உயரமும் வண்மையும் உடைய மேருமலையும், பரந்து விரிந்து அனைத்துயிரும் தங்க இடந்தரும் பூமியும், அவனுக்கு ஓரளவுக்கு ஒப்பாவார்கள். அப்பெருமான் திருவாக்கிய சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் ஆகியவை அவனை அறிய ஓரளவுக்குத் துணைபுரியும். என்றும் நிலைத்த பொருள் சத்து. அது சிவம்(பதி); நிலையற்ற பொருள் அசத்து. அது மாயை(பாசம்); இறைவனோடு கூடும்பொழுது நிலையாகவும், பாசத்தோடு கூடும் பொழுது நிலையற்றதாகவும் உள்ளது. ஆன்மா (பசு) இது சதசத்து. இறைவன் ஆன்மாவோடு பொருந்தியும் ஆட்டுவிக்கின்றான். உணர்த்த உணரும் ஆன்மாவுக்குத் தன்னை உணர்த்துகின்றான். சுத்த மாயை - அசுத்த மாயை இவற்றைக் கடந்து நிற்கும் இறைவன் உலகைப் படைக்கின்றான். வினைப் போகம் துய்ப்பிக்கிறான். பாசம் வந்து பசுவுடன் வந்த சேராமல் செய்கிறான். பாசம் தானே வந்து பசுவைப் பற்ற முடியாது. அது ஜடம். ஆன்மாவின் பக்குவத்திற்கேற்ப இறைவனே இக்கருணைச் செயலைச் செய்கிறான். இந்தப்பக்குவம் வரவேண்டுமானால் ஆன்மா இறைவன் மீது மட்டுமே அன்பு வைக்க வேண்டும். தன்னை இழந்து தலைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதுவே சுத்த சைவர் நிலையாகும்.

சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறா மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறா மேநின்ற
நித்தம் பரம் சுத்த சைவர்க்கு நேயமே -1402

தத்துவ ஞானத்தால் இறைவனை நேசிப்பது சுத்தசைவம் ஆகும். இப்படி நேசிப்பவர் கற்கத் தகுந்த மெய்யுணர்வு நூற்களைக் கற்பர். அவை கூறும் யோகத்தின் வழியே ஞானம் பெறுவர். சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யம்

எனப்படும் பதமுத்திகளை அடைவர். அவர்கள் மீது சத்திநி பாதம் (இறையருள் வீழ்ச்சி) வரும். சொற்பதம் கடந்த தொல்லோன் ஆகிய சிவனைக் கண்டு தெளிவார்கள். இவர்களே சித்தாந்த சைவர் எனப்படுவர். வேதமுடிவான சித்தாந்த சைவத்தின் மூலம் நாத வடிவான சிவனைக் காண்பர். பிறப்பு இறப்பு எனத் தடுமாற மாட்டார்கள். மெய்யுணர்வு பெற்றுத் தானெனும் ஆணவத்தை விட்டுத் தள்ளியிருப்பார்கள். வான்,மண், வளி, ஒளி, நீர் ஆகிய பூத தத்துவங்கள் இவர்களுக்கு ஞானவரம்பாக மாறும். காட்டை அழித்துத் தினைப்புனம் ஆக்குவது போல, மனத்தைப் பண்படுத்தி, நாதமுடிவாக விளங்கும் பெருமானை உணர்ந்து அறிவினால் பரிபூரணம் பெற்றுச் சிவமாவர். உண்மை ஞானத்தால் உண்மை நேயத்தைப் பெற்ற இவர்களே சுத்த சைவராவார்.

அசுத்த சைவம்

திருவேடப் பொலிவோடு சரியை கிரியை என்னும் இரண்டில் மட்டும் நிற்பவர் அசுத்த சைவர் ஆவார். தற்பரம் கண்டோர் சுத்த சைவர். எனவே சரியை, கிரியையோடு நின்றுவிட்டவர் அசுத்த சைவர். இவர்கள் காதுகளில் குண்டலங்கள் அணிந்து, தோள்களில் சிவமுத்திரையும் சூலமுத்திரையும் பொறித்துக் கொள்வர். செப மாலையும் கண்ட மாலையுமாக இரண்டு உருத்திராக்க மாலைகளை அணிந்திருப்பர். இந்த உடம்பு இறைவன் திருவடிகளைத் தாங்கும் திருக்கோயில் என்பதால் இதற்கு இவ்வளவு அலங்காரம் செய்வர்.

இணையார் திருவடி ஏத்தும் சீரங்கத்து
இணையார் இணைக்குழை ஈரணை முத்திரை
குணமார் இணைக்கண்ட மாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியையி னார்க்கே -1405

வேறு சிலர் காதுகளில் தங்கக் கடுக்கனும் உடம்பில் பூணூலும் அணிந்திருப்பர். உபதேச பரம்பரையினராய்த் திருவைந்தெழுத்தை ஓதியிருப்பர். தூலம், சூக்குமம், பரம் எனப்படும் மூன்று உடம்புகளையும் தூய்மை செய்வர். இவர்கள் பரதகண்டமாகிய புண்ணிய பூமியின் ஒன்பது பகுதிகளிலும் உள்ள இறைவன் திருப்பதிகளை வலம் வருவர். (இந்திரம்,கசேரு, தாமிரவர்ணி, சுபத்தி, நாகம், சாந்திரம், காந்தருவம், வாருணம், குமரி என்பன பரதகண்டத்தின் ஒன்பது பகுதிகள் ஆகும்) சிவபெருமானின் அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று ஆகிய ஒன்பது திருமேனிகளையும் கண்டவர் ஆவர். (மண், நீர்,ஞாயிறு,திங்கள், இவை உருவம் நான்கு. ஆகாயம் காற்று தீ இயமானன்

இவை அருவம் நான்கு சிவலிங்கம் அருவுருவம்) வேறுபட்ட அண்டங்களையும் கண்டவர்கள் இவர்கள், ஞானநூற்களை அறிந்து அட்டமாசித்தி பெற்று அனைத்துலகங்களின் இயல்பையும், அவற்றுக்கு முதல்வனாம் சிவனையும், அவனுக்கே அடிமை செய்யும் தம்மையும் உணரும் தவத்தினர் ஆவர்.

மார்க்க சைவம்

இது சாதன சைவ[illegible]ன்னால் செய்யப்பட்ட உருத்திராக்க மாலை என்னும் சிவ சாதனம், [illegible]றாகிய அருள் சாதனம், நல்வழிகாட்டும் திருவைந்தெழுத்தாகிய ஞான சாதனம். தீயோர்பால் சேராமல் நல்லோர் பால் சேர்ந்திருக்கும் சன்மார்க்க சாதனம் இவை மார்க்க சைவர்க்கு உரியவை. இவர்கள் கேடற்றவர், ஞானப் பேரரசர்கள். வேதாந்தம் சித்தாந்தம் இவற்றுக்கு இடையில் ஒளிவிடும் உண்மை ஞானம் உதிக்கப் பெற்றவர்கள். ஆகமம் ஒன்பதும் அவற்றினின்றும் விரிந்த ஆகமம் இருபத்தெட்டும் அறிந்தவர்கள். ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தன்மையை அறிந்து தெளிந்தவர்கள். இவர்கள் பராசக்தியால் இயக்கப்படுகிறார்கள். அவள் உயிரோடு பொருந்தியும் உயிர்க்குயிராகவும் நிற்பவள். மலத்துள் அழுந்திச் செயலற்று நிற்கும் கேவல நிலையில் சாக்கிரம் (நனவு) சொப்பனம்(கனவு) சுழுத்தி(ஆழ்ந்த உறக்கம்) என மூன்று நிலைக[illegible]ள்ளன. மலத்தின் நீங்கி நிற்கும் போது சாக்கிரமும் சொ[illegible]மும் [illegible]ிட்டுப் போகின்றன. துரியம் பேருறக்கம்; துரியாத்தம் உயிர்ப்படங்க[illegible]. இவை அனைத்திலும் திருவருட்சக்தியே நின்று இயக்குகிறாள். முத்தியின்பமே ஆனந்தசக்தியாகிறது. மார்க்க சைவர் சித்தாகிய சிவத்தோடு ஒன்றிச் சிவமேயான் என்ற சிவோகம் பாவனையில் இருப்பர். சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆட்கொள்ளும் சத்தியருள் பெற்ற ஞானிகள் எல்லாச் சித்திகளும் பெற்று விளங்குவர்.

இவர்கள் ஆன்மாவாகிய தன்னையறிவர். பரசிவத்தை அறிவர். ஐந்து முகங்களோடு கூடி ஆன்மாவை ஆட்கொண்டருளும் சதாசிவம் என்ற மன்னனை அறிவர். பதி பசு பாசம் அறிவர். முன் இருந்த பெத்தநிலை, அடைய வேண்டிய முத்திநிலை ஆகியவற்றை அறிந்து இந்த அறிவையே ஆன்மிக முன்னேற்றத்துக்கான உபாயமாய்க் கொள்வர்.

தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகும்சுத்த சைவர் உபாயமே -1414

இந்த ஞானிகள் ஞானநூற்களைப் பசுபோத நிலையிருந்து ஆராய்ந்து தாம் கண்ட முடிவே முடிவெனச் சாதிக்க மாட்டார்கள். பதிபோத நிலையிருந்து திருவருள் காட்டிய வழியில் நின்றுணர்வர். அனுபவத்தில் அழுந்துவர். துவாதசாந்தத்தில் சிவபோகம் நுகர்வோர். யோகநிலையே பெரிதென்று கூறி ஞானத்தை அவமதிக்க மாட்டார்கள் சித்தத்தைத் தெளிவித்துச் சிவத்தை அங்கே நிலைபெறச் செய்வர். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்குவர்.

மார்க்க சைவர்களில் மூன்று நிலைகள் உண்டு.

1. காணப்படுவன யாவும் பொய். இவை கானல் நீர் போன்றவை. சீவன் சிவமாகித் தன்னையுணர்ந்து தானன்றி ஒன்றில்லை என்றிருப்பதே வேதாந்தம். இதை உணர்ந்தோர் பிரமவித்துக்கள்.

2. ஆறாதாரங்களுக்கும் மேலே சகஸ்ராரத்தில் கேட்கும் ஒலியில் சிவத்தை உணர்பவர் யோகிகள்

3. வேதாந்தச் சார்பில்லாமல் சித்தாந்தம் கண்டு, அதில் நிற்கும் சாதகர் சாதாரண நிலை பேறுடைய சைவர்கள் ஆவர்.

பசுபாசம் சேர்ந்திருக்கும் போது அவை இறைவனை அணுக முடியாது. பெரிய பெரிய மேகங்களைப் பார்க்கிறோம். அவை ஆகாயத்தைச் சென்று அணுகுவதில்லை. காணும் காட்சிகள் கண்ணில் சென்று பொருந்துவதில்லை. கண் சென்று பற்றுமேயல்லது காட்சிப் பொருட்கள் கண்ணை வந்து பற்றுவதில்லை. பசுவாகிய ஆன்மாவின் எண்ணத்தைச் சென்றடையாத இறைவனை ஆன்மா அணுகமுடியாது. பாச ஞான பசு ஞானங்களால் அறியப்பெறாத சிவத்தைச் சிவ ஞானத்தால் மட்டுமே உணரமுடியும்.

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காமலெனப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே -1418

"அவனருளே கண்ணாகக் காணவேண்டும்". காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே என்ற தொடர்கள் சிந்திக்கத்தக்கன.

இறைவனை அத்வைதம் ஒன்றென்கிறது. துவைதம் இரண்டென்கிறது. சிலர் இல்லை என்கிறார்கள். இதற்காக இச்சமயங்களை நிந்திக்காமல்

சத்தியின் துணையால் சிவத்தைச் சார்ந்து சிவமாவதே சித்தாந்தம் பேசும் உயர்ந்த சித்தி நிலையாகும். இதுவே மார்க்க சைவரின் நிலை.

கடுஞ்சுத்த சைவம்

ஞானத்தின் முதிர்ச்சியால் மனம் பக்குவப்படும். வேடமாகிய சாதனங்களில் உள்ள பற்று, தானே, கழன்று போகும். ஆடம்பரங்கள் இன்றி மலமாயை நீங்கும். இதுவே கடுஞ்சுத்த சைவமாகும். அகப்பற்றும் புறப்பற்றும் விட்டுவிடும். துன்பத் தோடொன்றிய பாசமும் பசுத்தன்மையும் கெட, சிவஞானம் பெற்றவர் கடுஞ்சுத்த சைவர் ஆவர்.

வேடம் கடந்து விகிர்தன் தன்பால் மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சம்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடும் சிவபோதகர் சுத்த சைவரே. -1420

முப்பத்தாறு தத்துவங்களையும் இவை தோன்றக் காரணமான மாயை, கன்மம் ஆகியவற்றையும் ஒழிப்பதும், ஆன்மாவின் அறிவை மயக்கும் ஆணவத்தைத் துடைத்து, மீண்டும் அதைச் சாராமல் சிவத்தோடு பொருந்துவதும் கடுஞ்சுத்த சைவமாகும். இந்நெறியில் நிற்பவர் சாலோகம் முதலியன பதமுத்திகளைச் சாராமல், முத்திக்கு வித்தான மூலத்தை உணர்ந்து சிவபரம்பொருளைச் சார்ந்து சிவமாக வீற்றிருப்பர்.

இவ்வாறு கூறும் திருமூலர் இந்நிலையை அடைந்த தன்னுடைய சொந்த அனுபவத்தைக் கீழ்க்கண்டவாறு அழகாகச் சித்திரிக்கிறார்.

நான்என்றும் தான்என்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென்று இரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவம் நல்கலால்
தானென்றும் நானென்றும் சாற்றகில் லேனே. -1423

“நான் வேறு சிவம் வேறு என்றெண்ணிக் கொண்டு நான் சேர்ந்தேன் அப்படி இரண்டாயில்லாத தத் என்னும் பதப்பொருளாகிய சிவம் *தானே நானாகியநீ* என்ற உண்மையை உணர்த்தியது. நான் இனி இரண்டும் வேறெனக் கூறமாட்டேன்” என்கிறார் திருமூலர்.

அதுநீயாகிறாய் என்ற மகாவாக்கியம் இப்பாடலில் விளக்கப்படுகிறது. இந்நிலை வருமானால் ஐம்புலன்களும் அடங்கும். சிவஞான விளக்கு ஆடாமல் அசையாமல் நின்று எரியும். பரசாயுஜ்யமாகிய ஏகனாகிநிற்றல்

என்ற நிலை விளையும். இப்படி அகக்காட்சியில் உறைத்து நிற்றல் கடுஞ்சுத்த சைவமாகும். அப்பரடிகளின்,

தேடிக் கண்டுகொண்டேன்- திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

என்ற தேவாரம் இங்கு நினைக்கத் தக்கது.

இவ்வாறு நால்வகைச் சைவத்தின் இயல்புகளையும் அருமை பெருமைகளையும் கூறி அன்பினால் அவனை அகத்துள்ளே காண்க என்று அறிவுறுத்துகிறார் திருமூலர்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

47. சரியை, கிரியை, யோகம், ஞானம்

கல்லாடர். க. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.எம்.எட்.,
அரிமழம்

அருள்மூலம் நண்ணும் இருள்மூலம் நீங்கும்
திருமூலர் தேர்ந்த தமிழால்! - கருமூலம்
மண்ணிடை வாரா மதியளிக்கும் என்பரால்
உண்மையை ஓர்வம் உணர்ந்து.

சைவ சித்தாந்தம் இறைவனை அடைவதற்கு நால்வகை நெறிகளை விரித்துக் கூறும். அந்நால்வகை நெறிகள் திருவடிப்பேறு எய்துவதற்கு வகுக்கப் பெற்ற வழிகள் எனலாம். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம்.

திருமூலர் இந்நால்வகை நெறிகளை விளக்குவதோடு இந்நான்கு நெறியினர் எய்தும் நிலையினையும் தெளிவாகவே விளக்கியுள்ளார்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மயக்கத்தில் திளைக்கும் உயிர் பல்வேறு பிறவி எடுத்துத் துன்பத்தையும், இன்பத்தையும் வினை வழியே துய்த்து ஏதோ ஒரு நிலையில் இவையனைத்தையும் கடந்து நிற்கச் சிவஞானம் பெற்றுச் சிவ அனுபூதிச் செல்வராகத் திகழ்தலே வழி என அறிய முற்படுகிறது. இவ்வறிவு உயிர்கட்கு எளிதில் வந்து விடுவதில்லை. ஆன்றோர் உரை(சுருதி) தன்னறிவு (யுக்தி) பட்டறிவு (அனுபவம்) இம்மூன்றும் மெய்ஞானம் பெறத்தூண்டு கோல்களாக அமைகின்றன.

இம்மூன்றினுள்ளும் ஆன்றோர் உரை நேரடியாகவோ நூல் வழியாகவோ கிடைக்கப் பெறின் அதுவே ஏனைய இரண்டினைக் காட்டிலும் சிறப்புற அமையும். தன்னறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. பட்டறிவு வாய்ப்பு ஏற்படின் அமையும். எல்லா மாந்தர்க்கும் அது கிட்டுதற்கரியது. இக்கருத்தின் அடிப்படையில்தான் திருமூலரும் நால்வகை நெறியில் முதலாவதாகிய சரியை பற்றிக் கூறத் தொடங்கும் போது தம் மாணக்கர்களாகிய காலாங்கி, கஞ்சமலையமான், கந்துரு ஆகியோரை அழைத்துக் கேளுங்கள் எனக்கூறுமாறு முதற் செய்யுளில் அமைத்துள்ளார் எனலாம்.

சரியை என்னும் சொல் உயிர் பல்வேறு இன்ப துன்பங்களில் உழன்று அல்லலுற்று இவை நீங்க எச்சார்பும் காணாத நிலையில் இறையுணர்வு தோன்றத் தன் ஆணவ நிலையில் சற்றே சரிந்து, சார்பு எய்தி ஓரளவு

அமைதியில் ஒன்றுதலால் இஃது சரியை எனப்பெறும். ஏனெனில் அஃது ஒழுகலாற்றில் ஓர் உயர்ந்த மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இச்சரியையே சைவச் செந்நெறியின் முதற்படி ஆதலின் இஃதே உயிர் எனத் திருமூலர் இதன் பெருமையைக் கூறுகிறார்.

நேயம் மிகக் கொண்டு இறைவன் உயிர்க்கு உயிராய் இலங்குகின்றான் என உணர்தல் ஒப்பற்ற ஞான பூசையாகும். உயிர்க்கு ஒளியாக இறைவனை எண்ணிப் பார்ப்பது மகாயோக பூசையாம். வெளியில் உயிரூட்டி வருவித்து (பிராணப்பிரதிட்டையாக ஆவாஹனம் செய்து) ஓரிடத்தில் அல்லது வடிவில் வழிபடுதல் புறப்பூசையாகும்.

பல்வேறு திருத்தலங்கள் தோறும் சென்று இறைவழிபாட்டைத் தொடங்குதல் முதல் நிலையாகும். அத்திருத்தலங்களில் அன்பரொடுங்கூடி இறைவன் புகழைப் பாடிப் பணிதல் சாலச் சிறந்ததாகும். நால்வரும், ஏனைய பல அடியார்களும் பல்வேறு திருத்தலங்கள் சென்று இறைவனை பாடி வழிபட்ட முறைமை ஆராயத்தக்கது. அவர்கள் அவ்வாறு செய்தமை தமக்காகவன்று, தம் உள்ளத்திலும், இவ்வண்ட கோளத்தின் அனைத்திலும் இறைவனைக் கண்டு கண்டு அவனருளைத் துய்க்கும் தகுதி படைத்தவர்கள், திருக்கோயில் தோறும் சென்று பாடிப்பரவித் திருக்கோயில்களைப் புதுப்பிக்க செய்தமை உலகவர்க்குத் திருத்தல வழிபாட்டின் சிறப்பினை உணர்த்தவே எனலாம்.

மணிவாசகப் பெருமானும் சிவனுடைய அநாதி முறைமையான பழைமையையும், அவனைச்சார்தலின் பெருமையையும் முதல் அகவலின் வழி வெளிப்படுத்திய பின், பல்வேறு திருத்தலங்களில் திகழும் சிவபெருமானின் திருவுருவப் புகழ்ச்சி முறைமையைக் கீர்த்தித் திரு அகவலாகப் பாடியுள்ளார். இவ்வைப்பு முறைமை சிந்திக்கத்தக்கது.

மூர்த்திதலத் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கோர்
வார்த்தைச்சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

எனத் தாயுமானவரும் கூறியுள்ளார்.

தாயுமானவர் சற்குருவழியாக மெய்ஞ்ஞானம் உணர்த்தப் பெற்று உள்ளத்தின் உள்ளே இறைவன் வெளிப்படுவான் என்பதையே, திருமூலர் பக்குவ நெஞ்சம் பெற்றுத் திருத்தல வழிபாட்டின் வழியாக அடியார் உள்ளத்தையே கோயிலாகக் கொள்வர் என்கிறார்.

சரியையாளர் பத்தராம், கிரியையாளர் தொண்டராம்; இயமம் முதலான எண்வகை யோகம் செய்வோர் தூயயோகியராம், சிவஞானம் பெற்றோர் சித்தராம்.

மெய்ஞானம் பெற்றோர் தாமே இறைவனாக ஆனவர்கள். எண்வகை யோகம் பயின்று பெருநிலை எய்தியோர் சமாதியர். வழிபாட்டைத் தவறாது இயற்றுபவர் கிரியையர், சரியையர் திருத்தல வழிபாட்டை மேற்கொள்பவராவர்.

இதனைத் திருமூலர் விளக்கும் பாடல்

சார்ந்த மெய்ஞ் ஞானத்தோர் தான் அவனாயினோர்
சேர்ந்தஎண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அர்ச்சனை தப்பாதோர்
தோய்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே

சரியையில் நான்குவகை உண்டு. அவை சரியையில் சரியை, இந்நெறியில் நிற்போர் திருக்கோயில் அலகிடுதல், மெழுகிடுதல், மாலை தொடுத்தல் போன்ற திருத்தொண்டில் ஈடுபடுவர்.

ஒப்பிலா அப்பர் பெருமான் திருத்தலங்கள் தோறும் சென்று உழவாரப் பணியினை மேற்கொண்டமை இங்கு ஆராயத்தக்கது. தாம் இறை பணியில் திளைத்து இன்புறுதலோடும், உலகவரும் திருக்கோயில் வழிபாட்டைச் செய்ய உதவும் அரிய பணியன்றோ? அஃது இந்நாளில் கூட தொன்மைமிகு ஆலயங்கள் பலவற்றில் இப்பணி செய்வோரே தேவைப்படுகிறார்கள்.

சரியையில் சரியையாவர் சைவநெறி கூறும் ஆவரண மூர்த்திகள் இருபத்து ஐந்தனுள் ஒன்றினை ஏற்று முறைப்படி வழிபடுவோராவர். சரியையில் யோகம் பூண்டோர் நெஞ்சினில் உருத்திரனை தியானித்து இருப்பர். சரியையில் ஞானத்தைப் பின்பற்றுவோர் தியான நிலையின் கண் ஞான உணர்வு நிகழப்பெற்றோர் ஆவர்.

வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்னும் ஆறினையும் நந்தியம்பெருமான் குரு மண்டலத்தே வீற்றிருந்து, வணங்கும் மாந்தரின் மயக்க அறிவை நீக்கி அருள்கின்றான்.

குருவருள் பெற்று அவர்பால் தீக்கை பெறுதல் மிகச் சிறப்பு ஆகும். சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் என்னும் தீக்கைகளின் சிறப்பினைத் திருமூலர் விளக்குகிறார்.

சமையம் பலசுத்தித்தன் செயல் அற்றிடும்
அமையும் விசேடமு மரன்மந் திரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே

சமயதீக்கை ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மல வலிமையைக் குறைக்கும். சிறப்பான தீக்கையில் அருளப்பெறும் மந்திரம் இத்தூய நிலையை வளர்க்கத் துணையாய் அமையும். நிருவாண தீக்கை நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம் என்றும் கலைகளின் வழி தூநிலை தந்து மேலுயர்த்தும். அபிடேகம் என்பது சத்தி நிலைபெற போதித்து அந்நிலைக் கண் எப்போதும் விளங்குவதாகும்.

கிரியை என்பது புறத்தொழில், அகத்தொழில் இரண்டினாலும் சிவபரம்பொருளின் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இஃதே கிரியையிற் சரியை.

பத்துத் திசைகளிலும் பரமன் பரவி உள்ளான். அவன் யாண்டும் எக்காலத்தும் உளனாகலின் அவன் திருவடி நிழலினை அடைக்கலம் எனக்கொண்டு வினைக்கடலிற் சாராது உய்தலே இந்நெறி என்கிறார் திருமூலர். அச்செய்யுள் வருமாறு,

பத்துத் திசையும் பரம்ஒரு தெய்வம் உண்டு
எத்திக்கு இலர் இல்லை என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரண்எனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே

திருவருள் பரவி நிற்றலை உணர்ந்து வணங்கல் செய்யத் தொடங்குவது முதல் நிலை. அவ்வருட் பரம்பொருள் முழுநிறைப் பொருளாய் யாண்டும் காணத்தக்கதாய் அமைந்து உள்ளமை உணரத்தக்கது. இக்காரணம் பற்றியே திருவருள் விலாசப் பரசிவ வணக்கத்திற்குப் பின் பரிபூரணானந்தம் என்னும் தலைப்பிட்டுத் தாயுமானவர் பாடியுள்ளார். அதில்,

பார்க்கும் இடம்எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே

என்னும் மகுட வரியுடன் ஒவ்வொரு செய்யுளையும் முடித்துள்ளார் என்பது சிந்திக்கப்பாலது.

மணிவாசகப் பெருமானும் ஒலிதரு கயிலை உயர்கிழவோனின் திருவடிப் புகழ்ச்சியைப் பல்வேறு திருத்தலங்களில் துய்த்துத் திளைத்த ஆன்மா சிவனது தூல சூக்கும இணையில்லாத எழிலைத் திருஅண்டம் முழுதும் காணத் தலைப்படுதலே சிறப்பு எனக்கருதியே கீர்த்தித் திருஅகவலுக்கு அடுத்ததாக இணைக்குறள் ஆசிரியப்பாவில் திருஅண்டப் பகுதியைப் பாடிப் பரவியுள்ளார் போலும்.

புறப்பூசை அகப்பூசையாக மாறுதல் வேண்டும். புறவழி பாட்டிற்காகத் திருக்கோயில் எழுப்ப எண்ணிய பூசலார் நாயனார் பின்னர் அகப்பூசையில் ஈடுபட்டு இறையருள் பெற்று உய்ந்தமை ஈண்டு நோக்கற்பாலதாம். இதனைத் திருமூலர்,

ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே

என விளக்குகின்றார்.

இறைவனை வழிபட, வழிபட ஞானம் தரும் சுழுமுனை செயற்படும். வானவர் வந்து வணங்குவர். ஈசனின் திருவருட் பேற்றினைத் தாங்கும் தகுதி உடையவராவீர் என்கிறார் திருமூலர்.

மானிடராய் பிறந்தோர்க்கு, எண்திசைகளிலும் விரிந்து பரந்து விளங்கும் அருட்சக்தியை ஒரு கூறாகக் கொண்டவனின் திருவடிகளைப் பணிதல் கடமையாம். இஃதே அவன்பால் கொண்டுள்ள பக்தியின் வெளிப்பாடாகும்.

கோளிற் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்று இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

கிரியையில் சரியை, கிரியையில் கிரியை என்பன கடந்து கிரியையில் யோகம் பயிலுங்கால் மனத்தின் துரி நீங்கும். அஃதே அந்தரியாகம் எனப்படும். பூசை, ஓமம், தியானம் மூன்றிற்கும் முதலிடம் தருதல் மனவழிச் செயல்களாகும். அந்தரியாக உறைப்பின் நிகழும் பலவித உணர்வே கிரியையில் ஞானம் என்பர். அந்நிலைக்கண் சிவனருளால் சித்தம் சிவம் ஆகும்.

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துருசுஅற்ற யோகத்தில்
உய்த்த நெறிஉற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருவருளால் சிவம் ஆகுமே

பத்தன் சிவன்பால் கொண்ட இமைப்பொழுதும் நீங்காத அன்பினால் உருகி உருகி செம்பொன் நிகர்த்த சகசரதளத்தில் விளங்கும் விந்து நாதம் ஆகிய திருவடிகளை வணங்கி எனக்கு அருள்வாயாக என வேண்டுங்கால் இறைவன் தலையுச்சியில் சோதியாய் விளங்கி அருள்வான் என்கிறார் திருமூலர்.

மூலாதாரம் தொடங்கி வீணாத் தண்டின் வழியே பிரமரந்திரத்தைச் சேர்த்துச் சிவத்துடன் ஒன்றினோர் உடலில் ஏற்படும் புறத்தாக்குதல்களை உணரா நிலைக்கண் கூடியிருப்பர் என்கிறார் திருமூலர்.

நெடுங்காலம் யோகம் பயின்று ஞானம் எய்தினோர்க்கு அன்றி மற்றவர்கட்குச் சிவன் என்றும் எட்டாதவனாகவே உள்ளான். அரியும், மாலும் அவனைக் காண முற்பட்டக்கால் அவர்கள் அறியாத மேல்நிலையில் அவன் இருந்தனனல்லவா?

யோகம் என்ற சொல்லே இறையொடு ஒன்றியிருத்தல் என்பதைத் தெளிவாகக் காட்டுவதாகும். 'ய' என்பது சைவ சித்தாந்த்தில் உயிரைக் குறிக்கும். 'ஓ' என்பது நாதவடிவினான இறைவனாம் சிவபரத்தைக் குறிக்கும். 'கம்' என்பது ஒடுங்குவது என்னும் பொருளில் வரும் சொல். எனவே 'யோகம்' என்ற சொல்லே நாதவடிவினனான பரத்துடன் உயிர் தளை கடந்து ஒன்றி நிற்றலை விளக்குவதாக அமைந்துள்ளது.

'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை ' என்னும் அப்பர் தம் திருவாக்கு ஈண்டு எண்ணத்தக்கது. அவ்வொன்றுதல் பூவில் மணம் ஒன்றியதைப் போல சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது எனத் திருமூலர் விளக்குகின்றார். இவ்வுவமையிலிருந்து இயற்கையாய் சீவனுள் சிவமணம் பொருந்தி உள்ளது என்றும் பக்குவம் பெறுங்கால் வெளிப்படும் என்றும் திருமூலர் தெளிவுறுத்துகின்றார். சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் இயற்கை. ஆதலின் புனுகுப்பூனை அணைந்த நடப்பெற்ற தூண் மணமாதல் போல, உயிர் யோகத்தால் மணம் பெறும் என உவமை வழியாக விளக்கக் காண்கின்றோம்.

சிவப்பரம்பொருளை யோகத்தின் வழிநின்று கண்டவரே மாயையாம் இருள்நீக்கிப் பிறப்பின் மூலத்தை அழித்து உய்ந்தவராவர்.

இலக்கண இலக்கிய மற்றும் அறுபத்து நான்கு கலைகளின் அறிவு இகழவல்ல பாசத்தால் விளையும் பிறவியை உயிர்கட்கு நீக்கவல்லன வல்லவாம். திங்கள், நெருப்பு, கதிரவன் இவற்றை உடலில் ஒழுங்கு படுத்திச் செய்யும் யோகமே அதற்குத் துணை நிற்பதாகும் எனக் கூறுகிறார் திருமூலர்.

யோகம் விருப்பொடு செய்பவர் மெய்த்தவராம். அவரே தத்துவமசி என்னும் மெய்யுணர்வைத் தெளிந்தவராம். அத்தகு மெய்த்தவத்தால் அவர் விண்ணவராய் விளங்குவராம்.

சிவம் உடலில் நெருப்பு மயமாய் இலங்கி வெப்பம் அளிக்கிறது. ஆண், பெண் கலவியில் நெருப்பு மண்டலத்தில் விளக்கம் உறுகிறது. அந்நெருப்பினைக் காத்து யோக நெறி நின்று மேலெழுப்பின் பிறவாப் பெருநிலை வந்து எய்தும். அவ்வாறு செய்யத்தவறுதலே உயிர்களை நரகத்துள் வீழ்த்துகிறது.

சிறந்த செங்கோல் மன்னரும், வேதநெறி விளங்கிய மாதவத்தரும் கூட யோக நெறி நில்லாது அழிந்தனர். அவர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. ஆனால் சித்தர்கள், தேவர்கள் நான்முகன், திருமால், உருத்திரன் ஆகியோர் யோகவழி நின்று சுத்தனாம் பரசிவத்தை அறிந்து அவர்பால் அன்பு பூண்டு அழியாமல் மகிழ்வராம்.

யோகமாவது கரணங்களைச் சிவார்ப்பணம் செய்து ஆறு ஆதாரங்களில் அகத்தொழிலால் தியானித்தலாம். இதிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகள் உண்டு. இயமம், நியமம், பிராணாயமம் இவை யோகத்தில் சரியையாம். பிரத்யாகாரம், தாரணை என்பன யோகத்தில் சரியையாம். ஆசையை விடுதலே யோகத்தில் சரியையின் தொடக்கமாகும். ஒளி மண்டலச் சிவன்பால் அன்புகொண்டு யோகம் தொடங்கப் பெறல் வேண்டும்.

யோகத்தில் சமயதீக்கை என்பது பலயோக நெறிமுறையினை எண்ணுதலாகும். சிறப்பு தீக்கை எண்வகை யோகநெறிக்கண் நிற்றலாம். யோகத்தில் நிருவாண தீக்கை பராசக்தியைக் காணல். யோகத்தில் ஒளிமிகு சித்திகளை எய்துதல் அபிடேக தீக்கையாம்.

ஈடு இணையற்ற அறநெறி ஞானமேயாம். ஞானத்தைப் புறமிட்ட சமயம் உயர்ந்ததன்று. ஞானத்தினின்று மாறுபட்டவை முத்தியை நல்கா. ஞானத்தின் மிக்காரே அன்பிற் சிறந்தோரவார்.

நாதமும் அதன்வடிவான மனமும் தகுதி பெற மனம் தந்த புத்தியும், புத்தியை உணர்த்தும் அகங்காரமும் இம்மூன்றால் ஏற்படும் சிந்திக்கின்ற செயலும், அவற்றால் உண்டான நாதமும் கடந்த நெறியுறுதலே சன்மார்க்கமாகும்.

சித்தத்தில் சங்கற்பத்தால் தோன்றும் உலகமும், புற உலகமும் ஞானியருக்கு அன்பு அருள் சிவபாவனையைத் தந்து நேய வடிவினான சிவனைக் காணத் துணை நிற்கும்.

தேர்ந்த ஞானியர்க்கு பிரமம் பாதுகாப்பான இடத்தை நல்கும். அசைவன, அசையாதன என்னும் இருவகைகளாய் உள்ள இவ்வுலகு அவர்கட்கு ஒழுகலாற்றையும், அதன்வழி ஞானத்தையும் நல்கும்.

செம்பொருளான சிவனின் திருவுருவும், அவர்தம் மேலான குணங்களையும் தெளிந்து நாத ஒலியை ஓடும் நீரின் ஒலிபோல் கேட்டு அனுபவிக்கும் ஞானியர் அறிவு, அடக்கம், அன்பு இவற்றில் நீங்காதிருப்பரால் எக்காலத்தும் சிவத்தை உணர்வராம்.

ஞான முதிர்வு எய்தியோர் சிந்தையில் நாதம் விளையும். எவ்விடத்தும் முகத்தின் முன்பு இளம்பிறை ஒளிதோன்றி நிற்கும். உடலின் உணர்வின்றி ஒண்சுடராகவே உணர்வராம்.

ஞானத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகளும் உண்டாம். ஞானத்தின் வரம்பு மோனமாம். அதன் சித்தி பெற்றோருக்கு இவை தேவையற்றவை. இவற்றின் துணையின்றியே சந்திர மண்டல ஒளியில் சத்திஞானம் எய்துவர். ஞானநிலையில் ஆதாரங்களில் பொருந்தி யோகங்கூட முற்படுவோருக்கு சரியையும், கிரியையும் தேவையாம்.

ஞானத்தில் ஞானம் பெற்றோர் நிட்டை கூடி நான் என்னும் அகப்பற்றும் எனது என்னும் புறப்பற்றும் நீக்கியிருப்போராவர். நாதாந்த நல்லொளியில் திளைத்து இருப்பது ஞானத்தின் யோகம் கூடியவராவர். ஞானத்தில் கிரியை பூண்டோர் முத்தியை நாடி நிற்பவர். ஞானத்தில் சரியையர் முப்பொருள் உண்மையைக் கேட்டு, முத்திநிலை அடைய வேண்டுமென்னும் உறுதிப்பாட்டிற்குத் தம்மை அணியப்படுத்திக் கொள்வோர் எனலாம்.

இதனை,

ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே

என்கிறார் திருமூலர்.

ஞானத்தில் ஞானமொடு நான்கும் பெற்றவர் புண்ணியம் பாவம் என்னும் இருவினையும் சாராதவராவர். உயிரிரக்கமாகிய அன்பின் எல்லை கண்டவராம். நிலையிற் பிரியாது அடங்கிய தூநிலைகொண்ட சீவன் முத்தனும் அவரே.

ஞானத்தில் சமயதீக்கை தன்னை அறிதலாம்

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே- ஒரு
தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே

என வள்ளல் பெருமான் கூறுதல் இந்நிலையையே என்லாம்.

ஞானத்தில் சிறப்பு தீக்கை என்பது தன்னுள் பரம்பொருளாம் சிவஒளியை உணர்தலாம். ஞானத்தில் நிருவாண தீக்கை என்பது சிவனது அருள்வடிவான சத்தியை உணர்ந்து அவ்வருளில் திளைத்தலாம். ஞானத்தில் அபிடேக தீக்கையின் மூலம் குருமண்டலத்தில் அழுந்திச் சிவயோகத்தில் அழுந்துதலாம்.

திருமூலர் சைவ சமயத்தின் படிநிலைகளான சரியை கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றை மிகத் தெளிவாக விளக்கி உயிர்க்கு உறுதியான சிவயோகத்தில் அழுந்த வேண்டியது ஆன்ம முயற்சியாளர்களின் இன்றியாமையாத பிறவி நோக்கம் எனத் தெளிவு படுத்தியுள்ளார்.

தேர்மின் தெளிமின் தெளிந்தாரைப் பேணுமின்
ஓர்மின் திருமூலர் உண்மையை - சீர்சைவ
நன்னெறி போற்றுமின் நாளும் இறையருளாம்
இன்பினில் உய்வீர் இனிது.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

48. சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம்

தமிழாகரர். பேராசிரியர். **தெ. முருகசாமி**
இராமசாமி தமிழ்க்கல்லூரி முதல்வர், (ஓய்வு)காரைக்குடி

உலகம் மூன்று வகைப்படும். தெய்வ உலகம், மனித உலகம், விலங்கு உலகம். அறிவுமயமானது தெய்வ உலகம். அறிந்தும் அறியாமையும் உடையது மனித உலகம். அறியாமையே குடிகொண்டது விலங்கு உலகம். இந்த மூன்றைத்தான் பதி,பசு,பாசம் என்ற சித்தாந்தக் குறியீடாக ஆன்றோர் கூறினர்.

தெய்வ உலகமும், விலங்கு உலகமும் ஓர் முழுமையான உணர்வை உடையன. சூரியன் காயும் பகல் போன்றது தெய்வ உலகம். எல்லாம் மறைந்துள்ள இருட்டைப் போன்றது விலங்கு உலகம். பகலுக்கும், இருட்டுக்கும் இடைப்பட்ட மாலைநேரம் போன்றது மனித உலகம். முழு பகலும் முழு இருட்டும் இல்லாதது மாலைக்காலம். உணர்த்த உணரும் அறிவை உடைய மனிதனின் நிலை இரண்டும் கெட்டான் நிலைதான். இந்த நிலை ஆபத்தானது. இதிலிருந்து மீள வேண்டியே மனிதனுக்குப் பகுத்தறிவு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்தும் முயற்சிக்குத் தூண்டுகோலாக இருப்பதுதான் இறை பக்தி. அதுதான் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியை நல்குவது. அந்த வழிமுறையை எப்படிக் கடைப்பிடிப்பது என்பதை உணர்த்துவதற்கு மார்க்கம் என்று பெயர்.

இந்த மார்க்கம் நான்கு வகைப்படும். இவை சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் என்பனவாகும். சன்மார்க்கத்தைச் சத்மார்க்கம் என்றும் கூறுவதுண்டு. சத் என்றால் உண்மை. எது உண்மை? என்றும் உள்ளது எதுவோ அது உண்மை. அந்த உண்மைதான் கடவுள். அந்தக் கடவுள் கண்ணுக்குத் தெரியாதவர். ஆனால் அறிவால் அறியப்படும் அற்புதப் பொருளானவர். அந்த அறிவால் அறியப்படும் அற்புத நெறிமுறைக்குச் சன்மார்க்கம் என்று பெயர். இதை ஞானமார்க்கம் என்றும் கூறுவதுண்டு. இதுதான் ஏனைய சக,சற்புத்திர, தாச மார்க்கங்களுக்கு மணி முடியானது என்பதால் மார்க்கங்களைப் பற்றிக் கூறும் வரிசையில் சன்மார்க்கம் முதலில் வைத்து எண்ணப்படவேண்டியதாயிற்று.

மனித வாழ்வில் செய்யத் தகுவன இவை, செய்யக்கூடாதவை இவை எனப்பகுத்துணர்வது ஆன்மாவின் முதற்கடமை. அங்ஙனம் பகுத்துணருங்கால் செம்பில் களிம்புபோல் ஆன்மாவோடு உள்ள

மலவாசனையாகிய குற்றங்கள் பகுத்துணர விடாதபடி தடுக்கும். அவற்றை நீக்கிச் சிவத்தைக் காண முற்படுதல்தான் சன்மார்க்கத்தின் முதற்படி.

இதற்கு ஆன்மாவின் தன்முயற்சிமட்டும் போதாது. குருவின் துணை வேண்டும். குருதான் அஞ்ஞானத்தைப் போக்கும் ஞான சூரியன். அவர் காட்டும் ஞான வெளிச்சத்தில்தான் ஆன்மா இருள் நீங்கித் தெளிவடையும். இப்படியாக ஆன்மாவின் துணையான குருவை அவ்வளவு எளிதாகக் கண்டறிய முடியாது. வைரத்தையறியும் வைரப் பார்வை போல் குருவைக் குருபக்தி மூலம் கண்டறிந்ததும் அவர் உணர்த்த ஆன்மா ஆண்டவனை உணரப்படும்போதுதான் ஆன்மா சன்மார்க்கி என்ற புதுப் பெயரைப் பெற்று முத்திக்குத் தயாராகி விடுகின்றது.

இப்படிக் குருவருள் அன்றிப் பிறவற்றால் உண்மை ஞானம் பெறப்படாத ஆன்மா சிவத்தினது இயல்பை உணரப்படாததோடு சிவனாகிய தன் தன்மையையும் உணரமாட்டாத குறையால் முத்திக்கு மாறாய் பிறப்பிறப்புகட்கு உட்படும் என்பதாம்.

ஆதலால் குருஉபதேசம் ஆன்மாவுக்கு வெளிச்சம் தரும்போது சீவன் தற்போதம் நீங்கிச் சிவமாகிவிடும் என்கிறார் திருமூலர். இது வலிய இரும்பு கொல்லன்பட்டறையின் நெருப்பால் நெருப்பாகி விடுவது போல என்பர் ஆன்றோர். இதனால்தான் "குருவருள் இன்றி குலவு வாழ்வு உண்டோ, குருவருள் இன்றிக் குறுகும்". எனக் குருவின் இன்றியமையாமையை ஞானியாரடிகள் ஞானவாக்காகக் கூறினார்கள். அருணகிரிநாதர் குருவாய் வருவாய் என விண்ணப்பித்தார். ஏனெனில் குருவின் உபதேசமானது ஆன்மாவின் வெகு மாயை இருள் வெந்தொட மூல அழல் வீசும் என அருணகிரிநாதர் திருச்செங்காட்டான்குடித் திருப்புகழில் விளக்கியுள்ளார். இங்ஙனமாகக் குருஉபதேசத்தால் ஆன்மா அடையும் ஞான உணர்ச்சியே சன்மார்க்கி ஆனதற்கான அடையாளம் என்பதைத் திருமூலர் சன்மார்க்கம் என்ற தலைப்பில் விளக்கினார்.

மணிமுடியாகத் திகழும் ஞானமார்க்கத்தை அடைய ஏணியின் முதற்படியாக உள்ளது சன்மார்க்கம். இதை யோக மார்க்கம் என்றும் கூறுவர். வழிபாட்டு நிலையில் அகவழிபாட்டிற்கு அடித்தளம் அமைப்பது இந்த சன்மார்க்கந்தான். கோயில் வழிபாடு புறவழிபாடு. இதில் ஆண்டவன் மனத்தினின்றும் சற்று அந்நியப்பட்டவன் ஆவான். இது துவைத நிலை. அகவழிபாட்டில் ஆண்டவன் மனதிலிருந்து அந்நியப்படாமல் மனதுக்குள் அடங்கிக் கிடப்பவன். இது அத்துவித நிலை.

இதைத்தான் தாயுமானவர் தாம் கண்ட அக அனுபவமாக "ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டு பண்ணும் ஞானமாகும் " என்றார்.

மனம் ஒன்றிய இந்த யோக நெறியில் ஆன்மா ஆண்டவனைக் கண்டு அனுபவிக்கும் என்பதைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள என்ற பாடலால் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அனுபவத்தின் வழி விளக்கினார். பாரதப் போர் நிகழாமலிருக்க சகாதேவன் கண்ணனிடம் ஒரு யோசனை கூறியபோது, கண்ணா உன்னைக் கட்டிப் போட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்றான். நீ என்னைக் கட்ட முடியுமா எனக் கண்ணன் கேட்க, மனம் ஒன்றிய யோக நிலையில் சகாதேவன் கண்ணனை மனதில் கட்டிப்போட்டுவிட்டான். அந்த யோகக் கட்டில் திக்குமுக்காடிவிட்ட கண்ணன் பக்தனைக் கெஞ்சி விடுதலை பெற்றான். இப்படியாக ஆன்மாவும் ஆண்டவனும் தோழமை கொள்கின்ற உரிமையில் யோகப் பகிர்மானத்தை உணர்த்துவது சகமார்க்கம் ஆகும்.

இந்த யோகப் பகிர்வு இல்லையெனில் ஆன்மாவுக்கு எந்தச் சுகமும் இல்லை. மேலும் லௌகீக வாழ்க்கைக்கான செல்வங்கள் ஆன்மாவை அண்ட அஞ்சும் என்கிறார் திருமூலர். வெருவும் திருமகள், வீடில்லையாகும், உருவும் கிளையும் ஒருங்கிழப் பாரே, இவற்றை அடைய யோக சமாதி நிலையில் பயிற்சி பெற வேண்டும் என்றும் கூறுகிறார் திருமூலர். அந்த யோக சமாதிவான்களே சித்தம் ஒன்றிய சித்தர்கள் என்றும் திருமந்திரம் அடையாளம் காட்டுகிறது. இந்த யோகக் காட்சியுடையவர்களுக்கு உலகியலின் புருஷார்த்தங்களில் நாட்டம் இருக்காது. இதைத்தான் சிவன் பார்வதியோடிருப்பதை யோகநிலை என்றனர் ஆன்றோர். இராமனும் சீதையும் இருக்கும் காட்சி யோகமும் போகமும் போல இருந்ததாய்க் கம்பர் வருணிக்கிறார். எனவே பொறிவாயில் ஐந்தவித்த சீவஒடுக்கத்தால் ஆன்மா சிவத்தைத் தித்திக்கும் கனியாக அனுபவிக்க ஆயத்தப் படுவதைச் சகமார்க்கம் என்கிறார் திருமூலர்.

இந்த யோகமாகிய மன ஒருமைப்பாடான சகமார்க்கத்தை அடைவதற்குச் சில பயிற்சிகள் தேவை. வீட்டின் மேல் தளத்திற்குச் செல்ல வேண்டுமானால் படியேறிச் செல்வது போன்ற பாவனைப் பயிற்சி வேண்டும். பருப்பொருளாகக் காணப்படுவதைத் தொட்டுத் தடவி சுகங்கண்ட அனுபவந்தான் மனதில் நுண்பொருளாக நிலைக்கும். கண்ணப்பர் நிலை இதுவே. மனதில் நிற்கும் அரூப நிலைக்குக் கண்ணாற்காணும் உருவக் காட்சியே காரணமாகும். இந்த

அடிப்படையில்தான் யோகம் உறுதிப்பட கிரியைநிலை அவசியமாகிறது. இதைச் சற்புத்திர மார்க்கம் என்கிறார் திருமூலர்.

குழந்தையை மெய்தீண்டி ஆர இன்பம் அனுபவித்தல் போன்ற சுகத்தைக் கிரியை தருவதால் இது சற்புத்திர மார்க்கம் எனப்பட்டது. மக்கள் மெய்தீண்டல் உடற் இன்பம் போல வழிபாட்டில் இறைத் திருமேனியைத் தொட்டு வழிபடும் இன்பம் சற்புத்திர மார்க்கம் ஆகும் என்றதில் வியப்பில்லை தானே! இறை தான் "மேவிய சற்புத்திர மார்க்கம் மெய்த்தொழில்" என்றார் திருமூலர். மெய்த்தொழிலாவது, பூசித்தல், அர்ச்சித்தல், மாலைசூட்டல், தீப தூபம் காட்டல் போன்றவையாகும். இப்பயிற்சி இளமைக்காலந்தொட்டே வரவேண்டும் என்பதை சிறுகால் அரன்நெறிக்கே என்ற குறிப்பால் உணர்த்தினார் திருமூலர்.

இங்ஙனம் இறைத்திருமேனியைத் தொட்டு அனுபவிக்கும் சுகத்திற்குத் தொடர்பான சில பணிகள் உள்ளன. அவைதாம் தொழும்பாய் பணி செய்தல் என்னும் தாசமார்க்கம். இதனைச் சரியை என்பர். இறைவனுக்கு மலர் சூட்டுதல் கிரியை. மலர் பறித்து மாலையாகக் கட்டி அணிவிக்கத் தருதல் சரியை. நிவேதனம் காட்டல் கிரியை. நிவேதனம் தயாரித்தல் சரியை இந்தப் பணியைத் தொண்டாய், தொழும்பாய் (அடிமையாய்) செய்ய வேண்டும். பொறிபுலன்களை அடக்கி மனக் கட்டுப் பாட்டுடன் வழிபடுவது அரிதாகலின் பூப்பறித்துக் கொடுத்தல், அலகிடுதல், மெழுகுதல், தீபம் ஏற்றல் முதலியன செய்தல் எளிது என்பதால் அவற்றைத் தாசமார்க்கமாக அறிமுகப்படுத்தினார் திருமூலர்.

கரடுமுடான உள்ளம் பக்குவப்படுதற்கு இச்சரியை பயிற்சியே எளிது என்பதால், எளிய நற்றீபம் இடல் மலர்கொய்தல் எனப் பலப்பல புறச் செயல்களைத் திருமூலர் தாசமார்க்கமாக வரையறுத்தார். அடிமைக்குத் தன்னை ஆண்டவனிடம் அடைக்கலப்படுத்திக் கொண்ட ஒன்றன்றி வேறு அறியான் ஆதலால் பக்தியைத் தொண்டாகச் செய்கையில் சோதனை வரும். ஆன்மா சார்ந்ததின் வண்ணமாதலால் ஐம்புலச் சேட்டைகள் தலை தூக்கும் போது தொண்டு தடம் மாற நேரிடலாம். கல் விழுந்த வேகத்தில் குளத்தில் படர்ந்திருந்த பாசி விலகினாலும் உடனே ஒன்றுபட்டு குளத்தை மூடிவிடுவதைப் போல ஐம்புலச் சேட்டையால் தொண்டு பாழ்படலாம். எனவே எச்சரிக்கையுடன் தூய தொண்டைச் செய்வதே தாசமார்க்கம் என்கிறது திருமந்திரம்.

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம் பார்க்கின்

மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசித் திருந்த நினைவறி யாரே.

இப்படியாகத் திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் ஆன்மாவுக்குச் சைவ சித்தாந்த மெய்ப்பொருளை விளக்கும்படி நிலையில், அகப்பாட்டு நெறியாக, சரியை, கிரியை, யோகம், ஞானம் என முறைகளைக் கூறினாலும் புலப்பாட்டு நெறியாக மார்க்கம் என நான்கைக் கூறினார். இந்நான்கும் முன்னர்க் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றிக்கு நிரல் நிறையாகக் கூறாமல் எதிர்நிரல் நிறையாகக் கூறினார். திருமூலர் கூறிய இந்நான்கு மார்க்கங்களையும் சைவசமயக் குரவர் நால்வரோடும் பொருந்திக் கூறும் நெறியாகப் பிற்காலத்தில் சைவ உலகம் கொண்டாடியது.

தாசமார்க்கத்திற்குத் திருநாவுக்கரசரையும், சற்புத்திரமார்க்கத்திற்கு ஞானசம்பந்தரையும் சகமார்க்கத்திற்குச் சுந்தரரையும் சன்மார்க்கத்திற்கு மாணிக்கவாசகரையும் பொருத்திக் கூறுவதன் மூலம் இறையனுபூதி பெற்றவர்களை வழிபடுவதன் மூலமாகவும் இறையருளைப் பெறமுடியும் என்ற உண்மையைத் திருமூலரின் மார்க்கம் சொல்லாமல் சொல்கிறது எனலாம். இறையருள் நேரே பெறுவதினும் இம்மார்க்கங்கள் வழி அதனை பெறுவது மேலானது என்பது கருத்து. தித்திக்கும் சீனியின் இனிமையை நேரே அனுபவத்தைவிட அதை இனிப்புப் பலகாரமாக மாற்றி அனுபவிக்கும்போது அதன் சுவையைக் கூடுதலாக அறிதல் போன்ற நிலைதான் நன்மார்க்கம் நான்கின் வழி நடந்தார் வழி இறைவனை அனுபவித்தல் என்பதாகும். ஆன்மா உய்ய இந் நன்மார்க்கம் நான்கும் நல்வழி காட்டியாம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

49.சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்

சித்தாந்த இரத்தினம். **இல. குணசேகரன்**
பெரியபுராண விரிவுரையாளர், தஞ்சாவூர்

முன்னுரை

முத்தி என்பது உயிர் பிறவாப் பெருநிலையை எய்துவதாகும். இதனை வீடுபேறு எனவும் கூறலாம். வீடு என்பது பாசத்தை விடுவதாகும். பேறு என்பது சிவத்தைப் பெறுவதாகும். எனவே, வீடுபேறு என்பது உயிருக்குள்ள ஆணவமல மறைப்பு நீங்கப்பெற்று உயிர் சிவமாம் தன்மை பெற்று, மாறாத பேரின்பத்தில் இருப்பதாகும்.

உயிர் பிறப்புக்கு வருவதற்கு முன்பு ஆதியில் ஆணவ மலத்தை மட்டுமே பற்றிச் சார்ந்ததன் வண்ணமாம் தன்மை காரணமாக, ஆணவ மலத்தைப்போல சடமாய் பேரிருளில் மூழ்கிக்கிடந்தது. பிறப்பு நீங்கிய பின்பு முத்தி நிலையில் உயிர் சிவத்தை மட்டுமே சார்ந்து சிவமாம் தன்மையைப் பெற்று பேரானந்தத்தில் மூழ்கி இருக்கும். இவ்வுண்மையை சிவப்பிரகாசத்தில் உமாபதிசிவம்,

ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு
உவமை ஆணவத்தோடு ஒன்றே... (87)

என்று அருளிச் செய்துள்ளார்.

தவராஜசிங்கம் தாயுமானவரும்,

ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ?

என்றருளினார். இதே கருத்தைத்தான் திருமூலரும்,

ஆவதொன்றில்லை அகம்புறத் தென்ற கன்று
ஓவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே...

என்று அருளுகின்றார். மேலும், உயிர் என்றும் நீங்கப் பெறாத சிவானந்தத்தில் அழுந்தி நிற்கையில், அநாதியே உயிரின் மறைத்து நின்ற ஆணவ மலத்தின் ஆற்றல் அவ்வாறு சிவானந்தத்தில் அழுந்தி நின்ற உயிரினிடத்து செல்லுபடியாகாது. இக்கருத்தை,

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா....

என்ற திருமந்திர வரிகள் தெளிவுபடுத்துகின்றன. படரா என்றதனால் ஆணவ மலத்தின் ஆற்றல் இருக்கும். ஆனால் அஃது அந்த உயிரைப் பந்திக்காது என்பது பெறப்படும். உயிர் சிவமாம் தன்மை பெற்று பேரின்பத்தில் நிலைத்திருக்கும். இதுவே முக்தி நிலையாகும்.

முத்தியின் வகைகள்

முத்தி நான்கு வகை என்றுரைக்கும் சிவஞான சித்தியார். அவை சாலோகம், சாமீபம், சாரூபம் சாயுச்சியம் என்பனவாகும்.

சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய
சாமீப்பிய சாரூப்பிய, சாயுச்சியம்
என்று சதுர்விதமாம் -சிவஞான சித்தியார்

இதே கருத்தை திருமூலரும்,

பாசம் பசுவான தாகும் இச்சாலோகம்
பாசம் அருளான தாகும் இச்சாமீபம்
பாசம் சிரமான தாகும் இச்சாரூபம்
பாசம் கரைபதி சாயுச் சியமே

என்று அருளுகின்றார். பாசம் உயிர் உணர்ச்சியை சிவவுலகமாகிய சாலோகத்தில் தந்து நிற்கிறது. அதே பாசம் அருள் நிலையாகக் காட்டுவது சிவனண்மையாகிய சாமீபம். பாசம் யோக முதிர்ச்சியில் அதிகார மாத்திரையாய் சிவனுருவாதலாம் சாரூபத்தில் நிறுத்தும். பாசம் முற்றுமாய் ஒழிந்து பதியோடு கூடும்போது சிவானந்த வடிவாம் சாயுச்சியம் சாத்தியமாகும் என்று திருமூலர் முத்தியின் நான்கு வகைகளையும் வகுத்து அருளுகின்றார்.

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய நான்கு முத்திகளும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளின் வழியே சென்று அடையத் தக்கவையாகும். இதனைத் திருமந்திரம் மிகத் தெளிவாக விளக்குகிறது.

சாலோகம்

சரியை நெறியில் நின்று வழிபாடுகள் செய்தவர்கள், சிவலோகத்திற்குச் சென்று அவ்வுலகத்தில் உள்ள போகங்களை அனுபவிப்பர் என்பதை,

சாலோக மாதி சரியாதியிற் பெறும்

என்ற திருமந்திரத்தொடர் எடுத்துரைக்கிறது. மேலும்,

சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லா பரனுரு வாமே

என்று கூறுவதால் அடிப்படையானதும், முதலாவதுமான சரியை நெறியின் வாயிலாகத்தான் மற்றைய மூன்று நெறிகளையும் கடைப்பிடித்து ஒழுகி முத்தி பெற இயலும் என்பதையும் திருமந்திரம் உணர்த்துகிறது.

சாமீபம்

கிரியை நெறியில் நின்றவர்கள் சிவலோக போகத்தை அனுபவிப்பதோடு சிவபெருமானுக்கு அருகில் இருக்கும் பேற்றையும் பெறுவர் என்பதை திருமந்திரம் இனிதே விளக்குகிறது.

சைவஞ் சிவனுடன் சம்பந்தாவது
சைவந் தனையறிந்தே சிவஞ்சாருதல்

என்பதன் மூலம் உயிர் சிவசம்பந்தம் பெற்று உண்மை உணர்ந்து சிவம் அண்மையில் சார்ந்து சிவலோக அனுபவம் பெறும் என்று அருளப் பெறுகிறது. மேலும்,

சாலோகஞ் சாமீபம் தங்குஞ் சரியையான்

என்றதனால் சரியையால் கிரியை கண்டு சாமீபம் பெறலாம் என்றும் திருமூலர் அருளுகின்றார்.

சாரூபம்

யோக நெறியாளர்கள் சிவபெருமான் கொண்டுள்ள திருமேனிகளில் ஒன்றைப் பெற்று சிவலோகத்தில் சிவபோக அனுபவம் உடையவராய் வாழ்வர். இதுவே சாரூப முக்தியாகும். சிவயோக மார்க்கத்தால் சாரூபம் (சிவவுருவம்) கிட்டும் என்பதை திருமந்திரம் தெளிவுறக் கூறுகின்றது.

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்கும் சன்மார்க்கந் தனிலன்றி கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே.

எண்வகை உறுப்புகளால் அமைந்த சிவயோக நெறியால் எய்துவது சிவவுருவம் சாருதலாகிய சாரூபமாகும். சன்மார்க்கந் தனிலன்றி கைகூடா என்றதனால் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகை நெறிகளிலும் தொண்டு செய்து யோகத்தில் மிகுந்த தேர்ச்சியுடையார்க்குச் சாரூபம் கிட்டும் என்பதாக அறியமுடிகிறது. அச்சிவ யோகர் உடல் உறுப்புக்களோடு கூடியிருப்பினும் சித்திப் பயிற்சி பெற்றவராவர்.

சைவஞ் சிவந் தன்னைச் சாராமல் நீவுதல்

என்ற திருமந்திரத் தொடர் சிவவுருவம் பெறுதலாகிய சாரூபத்தையே விளக்குகிறது.

சாயுச்சியம்

ஞான நெறியில் நின்றவர்கள் சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து நின்று நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்வர். இதுவே சாயுச்சிய முத்தியாகும்.

சைவஞ் சிவானந்தஞ் சாயுச்சியமே

என்று ஒரே வரியில் சாயுச்சியத்திற்கான இலக்கணத்தைக் கூறுகிறது திருமந்திரம். மேலும்,

சாயுச்சியஞ் சாக்கிராதீதஞ் சாருதல்
சாயுச்சியம் உபசாந்தத்து தங்குதல்
சாயுச்சியம் சிவமாதல் முடிவிலாச்
சாயுச்சிய மனத்தானந்த சத்தியே

என்னும் திருமந்திரம் சிவமாம் தன்மை பெறும் நிலையில் மேலான அவத்தையில் நனவில் உயிர்ப்படங்குதல் கைகூடும். வேண்டுதல் வேண்டாமை இல்லாத உலகங்கடந்த உபசாந்த நிலை ஏற்படும். இதுவே சிவானந்தமாய் நிலைத்திருக்கும் சாயுச்சியமாகும் என்று விளக்குகிறது.

மேற்குறிப்பிட்ட நான்கு வகை முத்திகளும், பதமுத்தி என்றும் பரமுத்தி என்றும் இரண்டாக உரைக்கப்பெறும். இவை இரண்டன்றி சீவன்முத்தி குறித்தும் திருமந்திரம் இயம்புகிறது.

பதமுத்தி

பதமுத்தி என்பது சரியை, கிரியை, யோக நெறிகளின் மூலம் முறையே சாலோக, சாமீப, சாரூப நிலைகளை அடைவதாகும். பதமுத்தியில் உயிர்க்கு

சூக்கும சரீரம் இருக்கும். அது தொடர்பான ஆணவ கன்மங்களும் இருக்கும். மலவாசனை காரணமாக மீண்டும் பிறவி எடுப்பதற்கு வாய்ப்பு உண்டு.

பரமுத்தி

இது மீண்டும் பிறவிக்கு வராத பெருநிலையை அடைவதாகும். ஞான நெறியில் நின்றவர்கள் பெறும் சாயுச்சிய நிலையே பரமுத்தியாகும். இம்முத்தியில் உயிர்க்கு யாதொரு உடலும் இருக்காது. மும்மலம் அறவே நீங்கிய நிலையில் இறைவனுடன் உயிர் இரண்டறக் கலந்து நிற்கும். சிவமாம் தன்மை பெற்று பேரின்பத்தில் நிலைத்திருக்கும்.

சீவன்முத்தி

சீவன்முத்தி என்பது சிவானுபவம் மேலிட்டுப் பாசத்தை விட்டு நிற்கும் நிலையிலும் உயிர் சீவித்து நிற்கும் நிலையைக் குறிக்கும். சித்தாந்த சைவத்தில் சீவன் முத்தி நிலைக்கும், பரமுத்தி நிலைக்கும் அதிக வேறுபாடு இல்லை. சீவன்முக்தி உடலோடு கூடிய பரமுத்தி, பரமுத்தி உடல் இன்றி நிற்பது. அவ்வளவே வேறுபாடு. பரமுத்தி துரியாதீத நிலை. சீவன்முத்தி துரிய நிலை. இரு நிலைகளிலும் உயிர் சிவத்தின் தன்மையைப் பெற்று பேரின்ப நிலையிலேயே நிற்கும்.

மூன்றுவகை முக்தி குறித்தும் திருமந்திரம் தெளிவாகக் கூறுகிறது.

சீவன்றன் முக்தி, யதீதம், பரமுத்தி
ஓயுப சாந்தஞ் சிவமுத்தி, யானந்த
மூவயின் முச்சொரூப முத்தி முப்பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளு நாதாந்தமே

முக்தி பெறுவோர் நிலை

முத்தி நிலையை விரும்பும் மனத்தினராய் செந்நெறி ஒழுகும் அடியார்கட்கு சிவம் தானே தோன்றியருளும் என்பதைத் திருமூலர்.

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகம் என்போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே

என்று அருளிச்செய்துள்ளார். அதாவது, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும், சத்துவம், இராசதம், தாமதம் என்னும்

முக்குணங்களையும் பற்றறக் கழித்து, சிவமாம் தன்மையை உடைய பெருவாழ்வைப் பெற்று தவத்தால் பெறுதற்குரிய பரமுத்தி, பதமுத்தி ஆகிய பேறுகளைப் பெற்று சிவோகம் பாவனை செய்யும் புண்ணியம் உடையவர் சிவபெருமானுடன் ஒன்றுதலாகிய திருவடிப்பேற்றினை எய்துவர் என்பதாகும்.

முக்தி நிலை பெறுதற்குரிய உயிர், சிவபெருமான் திருவருள் பெறுதல் இயல்பாகும். இங்ஙனம் பெற்ற திருவருளால் முப்பத்தாறு தத்துவங்களும் தனக்கு வேறு எனவும், மீண்டும் அதனை அடைவது வேண்டாம் எனவும் கண்டுணர்ந்து கொள்வது தத்துவ சுத்தியாகும். அந்நிலையினைத் தலைப்பட்டவர் செய்யும் பணிகளெல்லாம் சிவப்பணியாகும். அப்பணியே மெய்த்தவமாகும். அப்பணியால் இருவினை அகன்று முத்தராம் தகுதி பெறுவர். இதனை,

முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியிலுற்றோர் பரானந்த போதரே

என்றருளுகின்றார் திருமூலர்.

உயிருள் இருந்தே வெளிப்படும் முத்தி

முத்தி என்பது புதியதாக ஏற்படுவதொன்று அன்று. அது எக்காலத்தும் உயிரினுள் பொதிந்துள்ளது. சிவத்தொடர்பு காரணமாக உள்ளது. சிறக்கின்றது. சந்தனத்தின் குளிர்ந்த தன்மையும், மலரின் மணமும் அப்பொருளில் அடங்கி நின்று வெளிப்படுவது போல முத்தி பெறுதற்குரிய இயல்பு, ஒவ்வோர் உயிரிடத்திலும் உள்ளது. இதனைத் திருமூலர்,

சிந்தைய தென்ன சிவன் என்னவேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவன் இருந்தானே

என்று அருளுகின்றார்.

முத்தி இன்பத்தின் தன்மை

முத்திநிலை இன்பத்தை, இன்ன தன்மையது என்று கூற இயலாது. அஃது அந்தந்த உயிர்க்கே உரிய அனுபவ நிலையாகும் என்பதையும் திருமந்திரம் விளக்குகிறது. சுத்தநிலையில் உயிர் பசு ஞானம், பாசஞானங்களைக் கடந்து,

ஏகனாகி, இறைபணி நிற்கும் நிலை, அருள் நிலையாகிய துரிய நிலையாகும். அதனையும் கடந்த அதீத நிலையே சிவபெருமானை அனுபவித்து உணரும் ஆனந்த நிலையாகும். அந்த ஆனந்தம் எவ்வாறு இருந்தது என்று சொல்ல இயலாது. அது அனுபவம் சார்ந்தது. இதனைத் திருமூலர்.

துரிய அதீதஞ் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியும் குவியும் விள்ளா மிளிருந்தன்
உருவும் திரியும் உரைப்பதெவ் வாறே

என்று அருளுகின்றார்.

முத்தி நிலை என்பது சிவபெருமானின் திருவடியில் அடங்கிய நிலையாகும். உயிர் சிவமாம் தன்மை பெற்று இருக்கும். அதாவது சிவமயம் ஆகிவிடும். இந்நிலையைத்தான் 'சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட' எனும் திருவாசகத் தொடர் குறிப்பிடுகிறது. நெருப்பில் காய்ச்சிய இரும்பு, துரு நீங்கி ஒளியுடையதாகத் திகழ்வது போல, உயிருக்குள்ள மலமாசுகள் நீங்கியதும் ஞானத்தை அடைகிறது. இரும்பு நெருப்பு மயமாய் இருப்பதுபோல் சீவனாகிய உயிர், சிவமாய் நிற்கிறது. சிவத்தின் செயலுள் அடங்கி இருக்கிறது. உயிர் சிவச்சார்பினால் சிவமாம் தன்மை பெற்றுப் பேரானந்தத்தில் திளைத்திருக்கும். இதற்குமேல் எதுவும் இல்லை. இதுவே முடிந்த முடிவான முத்தி நிலையாகும்.

நிறைவுரை

சைவத்திருமுறைகளில் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் அமைந்து சிறக்கும் திருமந்திரத்தில் குறிப்பிட்டபடி உயிர்களின் இறுதிக் குறிக்கோளான முத்தி நிலையை இப்பிறவியிலேயே பெற்று உய்வோமாக.

திருச்சிற்றம்பலம்

50. சத்திநி பாதம்

பேராசிரியர். **ம.வே. பசுபதி**
காப்பாட்சியர், தமிழ்த்தாத்தா உ.வே.சா. நினைவு நூலகம்
சென்னை

அற்புத நிகழ்வு

ஜீவர்கட்கு உடம்பு என்பது சட்டை. பிறப்புக்குப் பிறப்பு அது மாறும். சட்டைக்குள் ஒளித்து வைக்கப்பட்டுள்ள மிக மேலான விஷயம், ஆன்மா எனப்படும். அது கடைத்தேற வேண்டும். அதற்கான பயணத்தில் வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்வது என்னும் பங்கும் பராசக்தியுடையதே ஆகும். தகுதியையும் கொடுத்துத் தகுதிக்குரிய பலனையும் கொடுப்பதால், பராசக்தியின் கருணையைப் பரமகருணை என்கிறோம்.

மந்திரம் வேறு; குருவேறு; பராசக்தி வேறு என்று கருதக்கூடாது. மந்திரமும் குருவும் பராசக்தியும் ஒன்றே.

பராசக்தி ஆன்மாவில் வந்து பதியும் ஓர் அற்புதத்தைத்தான் சத்தி நிபாதம் என்கிறோம். இதில் சத்தி என்பது பராசக்தியைக் குறிக்கும்.

நிபாதம்

நிபாதம் என்பது நொறுங்குமாறு பதிவது. பராசக்தி செய்யும் நிபாதம் சத்தி நிபாதம். பராசக்தி, யாருக்கு எத்தகை ஆன்மாவுக்கு, இப்படி நிபாதம் செய்வாள் என்ற வினாத்தொகுப்புக்கு முதலில் விடை தேடுவோம்.

சத்திநி பாதம் தருதற்(கு) இருவினையும்
ஒத்து வரும்காலம் உளவாகிப் - பெத்த
மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமறுதல் கண்ணுற் றருளி

என்பன திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவில் வரும் தொடர்கள்.

மலபரிபாகம் என்பது இருவினை ஒப்பு- அப்படியென்றால், நல்வினை தீவினைகளின் கணக்குப் பாக்கி இல்லாத நிலை.

நல்லது செய்தால் நல்ல பலனை அனுபவிக்க வேண்டும். அப்படி கெட்டது செய்தால் கெட்ட பலனை அனுபவிக்க வேண்டும். இப்படி அனுபவிக்கவே பிறப்புகள், சங்கிலிபோல் தொடர்கின்றன. தேரை நிலையில் நிறுத்துவது போல இழுத்து இதை ஒரு நிலைக்குக் கொண்டு வருவதும் பராசக்தியே ஆவாள். மனம், சரீரம், ஜீவன் எல்லாம் சேர்த்து

வினைகளைக் குப்பைமேடாய்க் குவித்து வைத்துவிட்டு, சரிசெய்ய வேண்டுமென்றால்- பராசக்தி துணைக்கு வராவிட்டால் அதுவொன்றும் முடிகிற காரியமல்ல.

இப்படி நிலைக்கு வந்தபின் பராசக்தி பதிவு பெறுகிறாள். இதுவே கடைத்தேற்றம் ஆகாது. இது கடைத்தேற்றத்திற்கு மிக சமீபம் என்று சொல்லலாம்.

ஆகச் சக்திப் பதிவு யாருக்கு- எத்தகையவருக்கு என்ற வினாத் தொகுதிக்கு *மலபரிபாகம்* வந்தவருக்கு என்பதே விடையாகிறது.

எப்படி?

சத்தி நிபாதம் நிகழ்வது எப்படி? அதாவது சக்திப்பதிவு ஆன்மாவில் எப்படி நிகழும் என்பதற்கு விடை காண வேண்டும்.

திருமந்திரத்தில் சத்தி நிபாதம் பற்றிப் பதினொரு மந்திரங்களே- பாட்டுகள் (கலிவிருத்தங்கள்) உள்ளன. அவற்றிற்கு உரை எழுதியவர்கள் மந்ததரம், மந்தம்-தீவிரம் - தீவிரதரம் என்று நான்கு தலைப்புகளிட்டுப் பிரித்துள்ளனர். திருமூலர் அத்தலைப்புகளைச் சொல்லவில்லை. அத்தலைப்புகளை ஏற்று அவ்வழியே சிந்திப்போம். அத்தலைப்புகள் எதற்கு என முதலில் சிந்திப்போம்.

பராசக்தியின் பதிவுக்குத் தரப்பட்ட பெயர்களாக மட்டும் அவற்றைக் கொள்ள வேண்டியதில்லை. இந்நிகழ்வால் ஆன்மா அடையும் பலன்களுக்குத் தரப்பெறும் தகுதிச் சான்றுகளின் தரங்களாகவும் அவற்றைக் கொள்ள வேண்டும்.

பராசக்தி தானாக வந்து பதிவாளா?

ஆம். தானாகவே வந்து பதிவாள். எங்கே? ஆன்மாவில்.

அருள் என்பதுதான் சக்தி! அன்பின் பலநூறு மடங்கு பெருக்கமானதுதான் அருள். அருள் என்பது கருணை.

சத்தி நிபாதத்தின் அனைத்துச் செய்திகளையும் ஒருசேரக் கூட்டிப் பார்ப்போம்.

இரவும் பகலும் இல்லாத இடம் தேர்ந்தெடுத்து நிசப்தத்தை ஏற்படுத்தித் தியானிக்க வேண்டும்.

அந்த இடம் மனம்தான். தியானமே அந்த நிலையை உருவாக்கிக் கொடுக்கும். ஆழமாகத் தியானித்தால் மனம் இலேசாகிப் போகும். இரவு பகல் என்ற வித்யாசங்கள் போய்விடும். பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) மூடப்பட்டுவிடும். அதாவது அவற்றின் பிடியிலிருந்து மனம் விடுபடும். புலன்கள் (சுவை, ஒளி, தொடுஉணர்ச்சி, ஓசை, முகர்தல்) ஓய்வுக்குப் போய்விடும், தெரியாது.

இந்த நிலையில் ஆன்மாவைப் பார்க்கலாம். பார்ப்பது பராசக்தி. ஆன்மா அவளுக்காகக் காத்திருக்கும். ஆன்மாவில் பராசக்தி பதிவாள்; அழுத்தமாகப் பதிவாள். மிக அழுத்தமாகப் பதிவாள். ஐக்கியப்படுவாள்.

மந்த தரம்

மனத்தைக் கண்டுபிடித்து தியானத்தால், வெளிச்சமாக்கவும், விசாலமாக்கவும் தெரியவில்லை என்றால் மனம் இருட்டறையாகவே இருக்கும். இருட்டில் இருக்கும் ஆன்மா குருடுதான்

குருடன் என்பவன் கண்ணில்லாதவன். இருட்டில் தடுமாறிக் கொண்டுள்ள கண்ணுள்ளவனும் குருடன்தான்!

ஆக, இந்த இருட்டில் இருக்கும் குருட்டு ஆன்மாவை -கிழவன்- உரிமையாளன் என்ற முறையில் பராசக்தி பார்க்கிறாள்..

ஆன்மா, ஏகம், ஒன்று. சிவம். ஆன்ம நாயகி சக்தி. ஏகனாகிய நாயகன் அவளுக்கு இருந்தாலும் அவள் கன்னிதான்; குமரிதான்.

இருட்டில் இருக்கும் கிழவனை- உரிமையாளனை அவள் வசியப்படுத்துகிறாள். காடான மனம், பராசக்தியின் இந்தச் செயலால் ஒரு தொகுப்பாகிறது. அது ஒரு சுகானுபவம். பராசக்தியின் செயலால் அர்த்த புஷ்டியான இன்பம் ஜனிக்கிறது. வெறும் கலப்பினால் அர்த்த புஷ்டியான இன்பம் பிறக்கவே பிறக்காது!

மந்தம்

பேரின்பம் எப்படி இருக்கும் என்பதன் மாதிரிக்காக உள்ளவையே சிற்றின்பங்கள். சிற்றின்பம். அந்தம்-முடிவு உள்ளது. சிற்றின்பத்தில் பெறுவதனைத் தொடர்ச்சியாக - முடிவில்லாமல் பெறவேட்கை வரவேண்டும்- அதாவது பேரின்ப வேட்கை வரவேண்டும். அதற்குப் பராசக்தியின் மார்க்கத்தை அறிந்து உபாசிக்க வேண்டும். அந்தவேட்கை வந்து எந்தப்பிறப்பில் உபாசகனாகிறோமோ அதுவே கடைசிப்

பிறப்பாகும். அந்தப் பிறப்பில்தான் சக்தி நிபாதம் நிகழும்- ஆத்மாவில் சக்தி பதியும்.

பராசக்தி ஆன்மாவை வசப்படுத்தி அதில் பதிந்து, மயக்கத்தை நீக்கி, இன்பம் சுரக்கச் செய்து, குணம் காட்டி, அருள் பெருகச் செய்வாள்.

ஆன்மா என்னும் மாணிக்கத்தின் மேல் படிந்த அஞ்ஞானத்தூசு துடைக்கப்பட்டு ஆன்ம ஞானம் துலங்குமாறு செய்கிறாள்.

ஞானம் என்பது மிகு பேரறிவு. அந்த அறிவு கடைத்தேற்றத்திற்குரிய மார்க்கமே தவிர அதுவே கடைத்தேற்றம் ஆகிவிடாது.

ஞானம் துலங்கினால் பேதங்கள் மறைந்துவிடும். உதாரணத்திற்குச் சொன்னால் கருப்பு, சிவப்பு வெள்ளை, பச்சை என்றெல்லாம் பரம்பொருளுக்கும் நிறங்கள் கற்பித்துப் பார்க்கும் சாமான்யத்தனம் போய்விடும். அப்படிப் பேதம் பார்த்த நிலையில் பேரின்பத்தை அறிய வைக்குமே தவிர அடையச் செய்து விடாது.

ஞானம் துலங்கிய நிலையில் என்ன செய்ய வேண்டும்? பரம்பொருளைக் காதலிக்க வேண்டும்.

ஈஸ்வர ஸ்தானம் சிவன். பரம்பொருள் ஸ்தானம் சிவம். ஞானம் துலங்கிய நிலையில் எதைக் காதலிப்பது என்ற கேள்வி எழும். ஞானம் துலங்கிய நிலையிலும் ஈஸ்வரஸ்தானத்தைத்தான் காதலிக்க முடியும்.

அப்படிக் காதலித்தால் என்ன பயன் கிடைக்கும் என்பது அடுத்த கேள்வி. தனிப்பெரும் தலைவனாகிய ஈஸ்வரன் நினைத்ததைச் செய்யும் ஆற்றல் - சொன்னது பலிதமாகச் செய்யும் ஆற்றல் முதலிய ஆன்ம ஆற்றல்களைக் கொடுப்பார்- ஆன்ம நாயகனாக வந்து கைவினை-பணிவிடை செய்வான். இப்பொழுது ஆன்மா எஜமானன் ஆகிறது. அந்த நிகழ்வுகள்ஆச்சரியம் கொடுப்பவை. ஜீவ சரீரங்களால் கிஞ்சித்தும் செய்யமுடியாத காரியங்கள் நடக்கின்றன என்றால் ஆச்சரியம் வராதா என்ன?

ஆன்மா, சுடர். ஈஸ்வரன் பரஞ்சுடர். சுடருக்குப் பரஞ்சுடரின் ஆற்றல் வந்து விட்டதென்றால் அங்கே இருட்டின் சாயல்கூட இருக்க முடியாது.

ஜோதியின் மையத்தில் கருப்பு- இருட்டு இருக்கும். பரஞ்சுடரின் ஆதிக்கம் வந்து விட்டதால் இங்கே சுடரின் மைய இருட்டுக்கூட மறைந்து போகிறது.

ஆன்மதரம் இப்பொழுது சற்று உயர்ந்து ஈஸ்வர தரத்துக்கு வந்து விட்டது. இது சக்திப் பதிவின் அடுத்த நிலை ஆகும்.

தீவிரம்

ஆத்மா இருட்டில் குருடாக இருந்தது மாறி பரஞ்சுடர் ஆற்றல் பெற்றதால்- துலங்கியதால் சக்தியின் பதிவு மேலும் அழுத்தமாகிறது. இதுவே தீவிரதரம்.

ஏழேழு பிறப்பிலும் படிந்த மாசுக்கள் அகற்றப்படுகின்றன. சர்வ சுத்தமான ஆன்மா ஏற்றமுமாகிறது.

இந்த நிலையில் இனிப் பிறப்பில்லை என்பது உறுதியாகிறது. பிறப்புமில்லை, இறப்புமில்லை; தவம் செழிக்கிறது.

ஆன்மாவுக்கு ஞானத்தின் ஒரு பயனாகிய உணர்வு வந்துவிட்டது. பராசக்தி அழுத்தமாகப் பதிகிறதை உணரத் தொடங்குகிறது.

ஆன்மாவைப் பராசக்தி அழுத்திப்பதியும் போது அந்த சுகானந்தம் ஆன்மாவுக்கு ஒரு போதை மயக்கம் தருகிறது.

நீலமான நிறத்தைக் காட்டும் சுழற்சி நிலை மயக்கம் சுகமயக்கத்திலும் இந்த நீலம் தெரியும். சாதாரண, ஜீவசரீர மயக்கமல்ல இது. இது பராசக்தி தரிசன மயக்கம்.

மயக்கமான நிரந்தர முயக்கமே பேரின்பம். சிற்றின்பத்திலும் மயக்கம் உண்டு.

ஆன்மாவில் பராசக்தி பதியும், இந்த நிலையில் பராசக்தி தரிசனம் தருவது சிற்றின்பத்திற்கும் பலமடங்கு மேலான மயக்கமாகும்.

இந்தத் தரிசன காலத்தில் ஆன்மா பராசக்தியை வியப்பினாலும் அதீத மகிழ்ச்சியாலும் பணிந்து அர்ச்சிக்கும். மகிழ்ச்சிப் பெருக்கைப் பலபடியாகக் காட்டும். அந்தப்பரபரப்பில் தரிசனத்தை ரசிப்பதைக் காட்டிலும் பணி செய்வதிலேயே தீவிரம் காட்டும். எல்லா உலகங்களிலும் ஆவிபோல அது ஒன்றேயாகப் பரவி இருக்கும். இரக்சியம் - சர்வ வியாபகம் அப்பொழுது புலப்படும்.

தீவிரதரம்

சக்தி நிபாதம் செய்யத் தொடங்குவதற்கு நல்வினை தீவினை சமப்பட்டதை- அனுபவித்து நிலுவையற்ற நிலையை - அதாவது மலபரிபாகத்தை அடைய வேண்டும் என அறிந்தோம்.

மந்ததரத்தில் சத்தி மெல்லப் பதிந்து வயப்படுத்தி கூடியதைப் பார்த்தோம். மந்தத்தில் ஈஸ்வர சத்தி பெறுமளவு பதிந்ததைப் பார்த்தோம். இதனால் ஆன்மா தீவிரம் பெற்றதை அறிந்தோம்.

தீவிரதரம் என்பது அதிதீவிரம் என்ற பொருளிலேயே வருகிறது. இங்கேதான் சக்தி, மிக அழுத்தமாகப் பதிந்து ஈஸ்வரனாகவே ஆன்மாவை ஆக்குகிறது. குருவாகச் சக்தி விளங்குகிறது. இங்கே ஆன்மா தன் செயலற்றுப் போகிறது. ஆன்ம குணங்களும் நீங்கினால் தான் தன் செயலற முடியும். அது பரமஞானம் வந்தால்தான் நடக்கும்.

பரம ஞானத்தால் குணங்கள் அழிந்து தன்செயல் அற்று ஆன்மா சிவனாக ஆகிறது, சாரூபம் போல.

சத்தி ஆன்மாவில் மிக அழுத்தப் பதிந்தவுடன் இரவில்லை; பகலில்லை- ஏகாந்தம் உருவாகிறது. ஏகாந்தம் என்பது அரவமில்லா; நிசப்தமான தனியிடம். அங்கே மிக அழுந்திய சக்தி ஆன்மாவுடன் ஒன்றி விடுகிறாள்.

அந்தச் சேர்க்கை ஆன்மாவை, சக்தி வேறு என்ற பேதத்திலிருந்து நீங்கிய அபேத நிலையாகும். அந்த நிலையிலேயே சக்தி, நிபாதத்தின் பயன் ஆகும். ஆன்மா, ஜோதி ஸ்வரூபமாகும். தன்னை யொத்தவைகளே சந்திர சூர்யர்கள் என்பது விளங்கும்.

ஆன்மாவுள் பரை ஒன்றினாள்- பராசக்தி ஐக்கியப்பட்டாள். ஞான ஸ்வரூபமாகி ஆன்மா பரைக்குள் ஒடுங்கி ஒன்றாகிறது.

நிபாத நிறைவு

ஆன்மா ஒன்று. அது எல்லாச் சீவர்களுக்குள் வியாபித்திருக்கிறது. சீவர்களில் ஆன்மா அடங்கியிருக்கிறது. அதன் கடைத்தேற்றத்தில் முக்கியமான இடமே சத்தி நிபாதம் என்பதாகும்.

பராசக்தி சீவர்களின் உடன் இருக்கிறாள். நல்வினை தீவினைகள் செய்து நல்லதையும் கெட்டதையும் அனுபவிக்கும்போதும் உடனிருக்கிறாள்.

ஆன்மாவின் கடைத்தேற்ற காலம் அவ்வளவு எளிதாக வருவதில்லை. மிகப்பல பிறப்புகளுக்கும் பின் வருகிறது.

மலபரிபாகம் வந்த பிறகே சத்திநிபாதம் நிகழ்கிறது. அது நான்கு படி நிலைகளில் நிகழ்கிறது. ஒரு பதிவுக்கு ஒரு பதிவு அழுத்தம் அதிகமாகிறது.

ஒரு பதிவுக்கு ஒரு பதிவு ஆன்ம தரமும் உயர்கிறது. ஒரு பதிவுக்கு ஒரு பதிவு ஆன்மா அடையும் சுகானுபவமும் அதிகமாகிறது.

பராசக்தி ஆன்மாவுடன் ஒன்றியபிறகு ஆன்மக் கடைத்தேற்றத்திற்கு முழுத்தகுதி பெற்றுவிடுகிறது. அதற்குமேல் முயற்சி எதுவும் தேவைப்படுவதில்லை. குருவாக இருந்து கடைத்தேற்றத்திற்கு இட்டுச் செல்வது பராசக்தியே ஆவாள்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

51. புறச்சமயதூடணம்

பெருங்கவிக்கோ. முனைவர். **வா.மு. சேதுராமன்**
பன்னாட்டுத் தமிழுறவு மையம், சென்னை.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே

என்ற திருமூலர் திருமந்திர வாக்குப்படியாக இறைவனையே தமிழாகச் செய்யும் மந்திரமாகப் படைத்தளித்த பண்பாடே, வழிபாடே திருமந்திரமாகும்.

இன்றைய உலகியலில் பல்வேறு சமயங்கள்-மதங்கள், பல திசைகளிலிருந்தும் பரவிப் பெருகுகின்றன. இச்சமயங்களுக்கெல்லாம் மூல மந்திரம்தான், ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்னும் திருமந்திரமாகும்.

தற்காலத்தில், மதம்-சாதிப்பாகுபாடுகள் கடந்த, பேதங்களற்ற சமரசம் வெகுவாகப் பேசப்படுகிறது. 'மதச்சார்பற்ற' என்ற சொல் அரசியல் உலகில் முக்கியத்துவம் அடைந்து வரும் காலம் இக்காலம்.

திருமந்திரம், புறச்சமயதூடணத்தில் சமயங்களின் வழி மனிதநேயம், மனித அன்பு, மனித சமநோக்குப் பாதிக்கப்படுவதை கடிந்துரைக்கிறது. அறுசமயங்கள் அதன் வழியாக வணங்கும் தெய்வங்கள் ஆவன ஒருமையுடன் பக்தி உணர்வைக் குவிக்க வேண்டுமே அன்றிப் பிரிக்கும் வழியாக அமைக்கக் கூடாது.

ஆறு சமய முதலாஞ்சமயங்கள்
ஊற தெனவும் உணர்க உணர்பவர்

'அன்பே சிவம்' என 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற அய்யன் திருவள்ளுவர் கருத்தை, சிவமும் அன்பும் வேறல்ல என்று செப்பும் திருமூலர் அறுசமயம் முதலாகச் சொல்லப்படுகின்ற சமயங்கள், சிறப்புறு பேரின்பம் எய்துதற்கு இடையூறு செய்வதை உணர்க என்று அறிவுறுத்துகிறார்.

எண்ணாயிரத்தாண்டு யோகமிருப்பினும்
கண்ணா ரமுதினைக் கண்டறிவார் இல்லை
உண்ணாடிக் குள்ளே உள்ளோடிப்பார்க்கின்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே!

உள்நாடிக்குள்ளே உள்ளோடும் வகை உள்ளத்தை ஒளிரச் செய்தால் உள்ளொளி வழங்கும் கண்ணாடியில் சிவன் கலந்துள்ளான். இஃதன்றி எண்ணாயிரம் ஆண்டுகள் கண்மூடி யோகமிருப்பினும் இறைவனைக் காண இயலா என்பது திருமூலர் நோக்கு.

புறச்சமயதூடணத்தில், *உள்ளத்துள்ளேதான் கலந்தெங்கும் நின்றவன் வள்ளல் தலைவன்* என்கிறார். வள்ளலாகிய முதல்வன் நெஞ்சுக்குள்ளே மறைந்து, நிறைந்துள்ளான். இந்த வள்ளல்தலைவன் கள்ளத் தலைவனல்ல என்று தெள்ளியகாணாரைத் தெருட்டுகின்றார்.

திருமூலர் ஒரு ஒப்பற்ற புரட்சிக்காரர். ஆறு சமயத்தார் தத்தம் சமயமே சிறந்தது என்று சண்டையிடுவதை எண்ணி நகையாடுகிறார். ஒருவனே தேவன் என்பதற்கு மாறுபாடாக முரண்படும் அறுசமயத்தார் செய்கை, ஒரு யானையை முழுமையாக யானை என அறிவதை விடுத்து அறியாமையால், யானையின் முதுகு, வால், கொம்பு, செவி, துதிக்கை, கால்கள் என்ற அனைத்து அவயவங்களையும் தடவிப்பார்த்து யானையை வேறு வேறு பொருள்படக் கூறும் மடமைக்கு ஒப்பாகும் எனப் பல தெய்வ வழிபாட்டைச் சாடுகிறது திருமந்திரம்.

'ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர் ஆறுசமயப்பொருளும்' புறச்சமயத்தார் குறிப்பாக அறுவகைச் சமயத்தார் சமயங் கடந்த தனி முதற்சிவத்தைக் காண்கிலர். நிலையாப்பொருள். நிலைத்த பொருள்- என்ற இருவேறு பொருள்களின் தெள்ளிய அறிவை அறியாது பிதற்றுவர் பித்தேறி நிற்பர் என்கிறார்.

அறிவுத்தெளிவுதான் ஆன்மீகத் தெளிவு. அறிவின் நுட்பமும், சூட்சுமமும் 'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணர்வே' என்று திருவாசகச் சிவபுராணக் கருத்தின் ஆக்கமாகி அன்பின் வளர்ச்சியில் அருளாகும் நன்னெறியை எய்துவிக்கும் உச்சத்தின் ஒழுக்க நெறியே திருமந்திரம் தருமந்திரமாகும்.

உலக அரங்கில் பக்தியின் பெயரால் ஆன்மீகத்தின் பெயரால் இன்று நடக்கும் பொல்லா வினைகள்- புல்லர்தம் நடைமுறைகள் ஆன்மீக ஒழுக்கத்திற்கு அறைகூவலாகிறது. திருமந்திரம் கற்றுத் தெளிந்தால் இத்தகைய தீய நெறிகள் தீயினில் தூசாகும் நிலை அடையும். போலித்துறவிகள் மக்களுக்கு வழிகாட்ட முடியாது. ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட முடியுமா?

என் குருநாதர் ஊர், பேர் தெரியாது. *சாது குரு* என்று அவரை யாம் அழைப்போம். அப்பெருமான் அருள் யோகி திருமந்திரத்தில் இலயித்தவர். அப்பெருமான் சொல்லும் திருமந்திரத்தில் ஒரு மந்திரம்.

குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழிவீழு மாறே

குருமார்கள்-ஆன்மநேய உள்ளொளிக்கு வழிகாட்டுவோர், ஒரே நெறி, உய்யும் நெறி சிவநெறி நோக்கம் தெளிந்தவராக இருக்க வேண்டும். ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டினால், குழி தெரியாமல், அக்குழியிலேயே இருவரும் விழும் நிலை ஏற்படும். அர்ப்பணிப்பு, ஈகம், தியாகம் வேண்டும். அடைந்தவை அனைத்தும் துறப்பவனே துறவி! 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' என்ற மொழியும் திருமூலரைத் தழுவிய பொதுச் சமயநோக்காகும். செம்பொன்னையும் தூசாக மதிப்பவனே சித்தன். அறுசமய- பல சமய வடிவங்களில் தோய்ந்து பொன் பொருளை நாடி மூழ்குபவன் ஆன்ம ஒழுக்கமுள்ளவன் அல்ல. தூய தெளிவுடைய நன் நோக்க ஞானவானே சிவநெறியாளன். இதனை புறச்சமய தூடணத்தில்,

'தூயன துளக்கற நோக்க வல்லார்' என்கிறார் திருமூலர். துளக்க நோக்க வல்லவனே வாலறிவன். வல்லான் வாலறிவனை வாய்மை மனமே, மாசில் மனமே அறியும் அவ்வாறு அறியும் போதில் *சுழியறி வாளன்றன் சொல்வழி* ஆகூழ்- நல்வழி பிறக்கும்- நல் வழி என்பது சிவ வழி. அவ்வழியான ஆணை வழி- உலக அழிவினைத் தடுத்து நிறுத்தி வெல் வழியை திருமந்திரம் காட்டுகிறது.

எம் குருநாதர் சாது குருவிடம் ஒருமுறை மந்திரம் ஒன்று கேட்ட போது சொன்னார்.

'நல்லது நினை, நல்லது நடக்கும். தொண்டு செய் மேலான நிலை அடைவாய்' இந்த மந்திரம் கற்றுக் கொடுப்பதுதான் திருமந்திரம்.

அரனெறியப்பனை யாதிப்பிரானை
உரநெறி யாகி உளம்புகுந்தானைப்
பரநெறி தேடிய பக்தர்கள் சித்தம்
பரநெறி யாவிடிற் பல்வகைத் தூரமே

அறநெறி என்பது என்ன? சிவ நெறி. சிவநெறியாவது அறிவு நெறி. அந்நெறி ஆருயிர்களின் உள்ளம் புக வேண்டும். அவ்வாறு புகும் போது நன்னெறியாகிய வீடு பேறு கிடைக்கும். தொண்டு செய், தொண்டர்கள்

நல்லதையே எண்ணி நாளும் செயலாற்றுவர். அல்லாத வழி புறச்சமயம் தேடார் நாடார் என்பது திருமந்திரத் தந்திரமாகும்.

சமய கோடிகளெல்லாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எதிர் வழக்கிடவும் என்றது போல,

நூறு சமயம் உளவா நுவலுங்கால்
ஆறு சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறி நில்லா
ஈறு பரநெறி யில்லா நெறியன்றே!

பல நூறு சமயங்கள் கடந்த பரநெறி சிவநெறி. இயற்கையின் எழில் சேர் வீறுதரும் நெறி. அந்நெறியே செந்நெறி. புறச்சமய நெறிகளை விலக்கு முகத்தான் அறச்சமயம் புகட்டுகிறது திருமந்திரம்.

தவநெறி பேணாது, சிவநெறி காணாது அவநெறி போற்றும் பிற புறச்சமயங்களைத் திருமந்திரம்,

'*கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்*' என்று சாடிப் பித்தேறியவர் சிலர் என்றும் உண்மை உணராதார் என்றும் உணர்த்துகிறார்.

அன்புதான் உலகின் உன்னத சிவநெறி. அன்பே இறை என்பதே திருமந்திரம்.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே

இத்தகைய அன்போடு உருகி அகங்குழையும் மனநிலை சிவன் நிலைத் திருமந்திரம்! மற்றைய 'ஆனசமயம் அதுஇது' மாயம் என்பதை மாந்தர்க்கு உணர்த்தும் மந்திரம் திருமந்திரமாகும்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀

52. நிராசாரம், உட்சமயம்

புலவர். **இராம. வள்ளியப்பன்**
அமராவதிபுதூர்

சைவசமயப் பெருநூல்களைத் தோத்திரம், சாத்திரம் என இரு பிரிவுகளாகக் கூறுவர். திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திரம். சிவஞானபோதம் முதலிய பதினான்கு நூல்களும் சாத்திரம் எனப்படும். தோத்திர நூல்களை இலக்கியம் போன்றதாகக் கருதினால் சாத்திர நூல்களை இலக்கியம் கண்டதற்கு இயம்பும் இலக்கணமாகக் கருதலாம்.

தோத்திரங்கள் சமய வழிபாட்டிற்குரியன. சாத்திரங்கள் சமயம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தும் தத்துவமாக உள்ளவை. இவ்விரு அமைப்புகளும் தனித்தனியே உணரத்தக்கதாக இருந்தாலும் இவ்விரண்டும் கலந்த ஒரு நூலாக இருப்பது திருமூலர் திருமந்திரமாகும். பத்தாம் திருமுறையான இந்நூலின் பெயர், தத்துவப் பொருளைத்தரும் மந்திரம் என்ற பெயரில் அமைந்தாலும் நூல் என்ற பொருளைத் தரும் தந்திரம் என்ற ஒன்பது பெரும் பிரிவுகளைக் கொண்ட நூலாக விளங்குவதே திருமந்திரத்திற்கான பெருஞ்சிறப்பாகும்.

இந்தச் சிறப்புப் பிரிவுத் தொடர்ச்சியில் ஐந்தாம் தந்திரமானது சிவநெறியில் நிற்றற்குரியாரது தன்மைகளை உணர்த்தும் சீரிய பத்தொன்பது அதிகாரங்களை உடையது. இவற்றில் நிராசாரம், உட்சமயம் என்ற இறுதிப் பகுதிகளின் கருத்துக்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் முழு நோக்கமாகும்.

ஆசாரம் என்றால் ஒழுக்கம் என்று பொருள். ஒழுக்கங்களை வரிசைப்படுத்தி உரைக்கும் நூல் ஆசாரக்கோவை. ஆசாரத்திற்கு மாறானது நிராசாரம். ஒழுக்கமின்மை என்று பொருள்படும். மாலியம் என்றால் அன்றலர்ந்த மலராலான மாலை, நிர்மாலியம் என்றால் வாடிய மலராலானது என்பது போன்ற எதிர்மறையில் நிராசாரம் (நிர்-ஆதாரம்) அமைந்தது.

ஒழுக்கம் இருவகைப்படும். ஒன்று அக ஒழுக்கம். மற்றது புற ஒழுக்கம். ஈண்டு அகம் புறம் என்பன தமிழிலக்கணம் உணர்த்தும் அகம், புறம் அல்ல. சமய ஒழுக்கம், சாதாரண ஒழுக்கம் என்பதையே அக, புற ஒழுக்கங்களாகக் கூறப்பட்டது. ஆண்டவனை வழிபடும் நிலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளைச் சமய ஒழுக்கம் என்றும் இல்லறந் தொடங்கி சமூகம்

வரையான வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வாய்மை, பேராசையின்மை, அழுக்காறாமை போன்ற ஒழுகலாறுகளைச் சாதாரண ஒழுக்கம் என்றும் வரையறுக்கலாம். ஈண்டுத் திருமூலர் நிராசாரம் என்ற தலைப்பில் சமய நிலையில் கடைப்பிடிக்காத ஒழுக்கமின்மை பற்றி எதிர்மறையில் பேசினாலும் அதன் உட்பொருள், சமய ஒழுக்கத்தை ஒருவாறு கூறுவதாகவே உள்ளதால் அச்சமய ஒழுக்கத்திற்கு மேற்கூறிய சாதாரண ஒழுக்கம் அடிப்படையானது என்ற உண்மையே உணர்த்தும் விதமாகவே கருத்துக்களை விளக்குகிறார் திருமூலர்.

தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்,
பாரறி வாளர் படுபயன் தானுண்பர்
காரறி வாளர் கலந்து பிறப்பர்கள்
நீரறி வாளர் நெடுமாமுகி லாமே (நிரா-4)

இப்பாடல் அவரவர் அறிவு நிலைக்கேற்ப அவரவரது ஒழுக்கம் அமையும் என்பதைக் கூறுகிறது. பேதை, தோன்றா துணைவனாம் இறைவனை உணரான். பரந்துபட்ட பேரறிவுடையவர் ஆன்ம பயனைச் சீராக அனுபவிப்பர். இஃது எவ்வாறெனில் இருப்பதை இல்லை எனக் கூறி வஞ்சித்து வாழ்வோர் வறியராயும், அறத்தின் தன்மையை உணர்ந்தவர் மேகம் போல் எதையும் மறைக்காமல் வழங்கும் திறத்தால் செல்வராயும் பிறத்தல்போல இப்பாடற் கருத்தை லௌகீகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் பாலமாக அமைத்தார் திருமூலர் எனலாம்.

தற்காலத்தில் அடிக்கடி காதில் விழும் மத நல்லிணக்கம் என்பதைச் சமய நல்லிணக்கம் என்பதாகத் திருமூலர் இந்த நிராசாரப் பகுதியில் பதிவு செய்துள்ளார். திருமந்திரத்தில் பல்வேறுபாடுகளாலான சமயங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நூறுசமயம் உளவாம் நுவலுங்கால் என்று புறச் சமயதூடணம் என்ற பகுதி கூறுகிறது. இத்தகு சமயங்களைப் பற்றிய நூல்களைப் படித்தறிவதால் மட்டும் இறையருள் கிட்டி விடாது என்கிறார். திருமூலர் சமய ஒழுக்கத்தை இடைவிடாது கடைப்பிடிப்பதன் மூலமே இறையருள் கிட்டும் என்பது நிராசாரத்தின் முதற்பாடல் கருத்தாகும்.

இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர், சாத்திரம் ஓதி
அமையறிந் தோம்என்பர் ஆதிப் பிரானும்
கமையறிந் தாருட் கலந்துநின் றானே (நிரா-1)

அறிவில் இமயம்போல் உயர்ந்து நிற்கும் தேவர்கள் சமயங்களைப் பின்பற்றி சாத்திர அனுகுமுறையால் இறைவனை அறிந்ததாகக் கூறுவர். நூற்

பிரமாணத்திற்குள் அடங்காத இறைவனோ மன ஒருமைப்பாடுடைய பொறையுடையாரின் உயிருணர்வில் கலந்து நிற்கின்றான் என்பது இப்பாடலின் பொருள். 'ஓதலின் நன்றே ஒழுக்க முடைமை' என்று கொன்றை வேந்தன் கூறும் வாசகத்திற்கேற்ப சமய நூல்களை ஓதினாலும் கடைப்பிடிக்க வேண்டிய சமய ஒழுக்கம் இல்லாத வழி எந்தப் பயனும் இல்லை என்பது கருத்து.

இச்சமய ஒழுக்கம் ஒருவர்க்கு நல்வினையாலன்றி அமையாதென்றாலும் அதனை இப்பிறப்பால் பெற்ற அறிவின் துணை கொண்டு தேடிக் கொள்ளவேண்டும் என்பதை ஓர் உருவகத்தின் மூலம் விளக்குவது அதி அற்புதமாக உள்ளது.

அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறிவுடன் பாரம் பழம்பதி சிந்தும்
குறியது கண்டும் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே

ஆன்மாவானது நல் அறிவின் துணையால் சிவனது திருவடியாகிய தோணியை அடையாளங்கண்டு, அதில் வினையாகிய சரக்குடன் ஏறி, சிவலோகக் கரையிறங்கிப் பயன் அடைகின்ற உண்மையைத் தீவினையாளர்கள் கண்டும் இறைவனது திருவடியைத் தீவினையாளர்கள் சிந்திக்கவில்லையே என்று கவலைப்படுகிறார் திருமூலர். இதனால் சிவனது திருவடியைச் சிந்தித்தலே சிவ ஒழுக்கம் என்றும் பிறவெல்லாம் பவ ஒழுக்கம் என்றும் திருமூலர் இந்நிராசாரப் பகுதியில் வற்புறுத்துகிறார் எனத் தெரிகிறது. இக்கருத்து திருமூலரை ஒட்டிப் பிற்காலத்தில் பலரால் பெருமையாகப் பேசப்பட்டது. உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வேண்டும் என வரம் கேட்டார் அப்பரடிகள். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் எனப் பெரியபுராணம் திருவடி சிந்திப்பதை ஞானம் எனப் போற்றுகிறது. ஆக இவற்றால் அறியப்படுவது யாதெனில் இறைத்திருவடியை நினைக்கவில்லையேல் துன்பம் நீங்காது என்பதும் திருவடி நினைத்தலே சமய ஒழுக்கம் என்பதும் உணர்த்தப்பட்டது என்பதாம்.

இங்ஙனம் இறைத் திருவடியை நினைத்த சைவ சமயத்தவர் இவர் தேவர் அவர் தேவர் என்பதாக இல்லாமல் சிவன் ஒருவனையே நம்பி வாழ்வதை உட்சமய ஒழுக்கம் என்பதாகத் திருமூலர் தனியே உட்சமயம் என்ற தலைப்பில் கருத்துக்களைத் தொகுத்துரைக்கின்றார்.

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்-

என்ற சிவஞான சித்தியாரின் கருத்து பின்னாளில் உருவாகத் திருமூலரின் உட்சமயக் கருத்தே பேருபகாரமாகும் என்பதில் ஐயமில்லை.

ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போலும் இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை ஆளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே (உட்ச-2)

ஒரு பேரூருக்கு ஆறு வழிகள் இருக்கலாம். அவ்வழிகளில் செல்வோர்க்குத் தாம் சென்றடைப்போகும் பேரூரே இலக்காக இருக்க வேண்டுமேயன்றித் தாம் செல்லும் வழியே சிறந்தது என்றும் ஏனைய வழிகள் இத்துணையளவு சிறப்பு இல என்றும் கருதுதல் குறைமதியாம். அக்குறைமதி எதுபோன்றது எனில் பெயர்த்தெடுக்க முடியாத மலையைக் குரைத்தே அப்புறப்படுத்திவிடலாம் எனக் குரைத்து இளைக்கும் நாயைப் போன்றது என்கிறார் திருமூலர். எனவே அவரவர் சமய வழிப்பட்ட ஒழுக்கத்தில் ஆழங்கால் படுவதைத் திருமூலர் வற்புறுத்தினாலும் பிற சமயக் காழ்ப்பில்லாத நிலையில் சிவனைத் தலைமையாகக் கொண்ட சைவ சமயத்தைப் புரிய வைக்கும் விதமாக உட்சமயம் என்ற தலைப்புக் கருத்தை வரிசையாகக் கூறிச் செல்கின்றார் என்பது சமய நல்லிணக்கத்திற்கோர் எடுத்துக்காட்டாம்.

ஒவ்வொரு சமயத்திற்கும் ஒவ்வொரு ஒழுகலாறு உண்டு. அதுபோல் சைவத்தில் ஆணும் பெண்ணுமாய தத்துவ ஒழுகலாற்றைக் கடவுளின் கூறுகளாகப் பேசுவதைத் தோத்திரத்திலும் சாத்திரத்திலும் பரக்க காணலாம். அன்பு சிவம்(ஆண்), அவ்வன்பின் தொழிற்பாடான அருள்- சக்தி(பெண்) எனக் கூறுவது சைவமரபு. இதைத்தான் 'உயிர்கட்கு ஆதாரம் பூங்கொடியாளே' - என உட்சமயத்தில் (5) திருமூலர் கூறுகிறார். இங்ஙனமாக சிவனது அருளே சத்தி என ஒன்றி உணரும் சிவ நெறியை மறவாமலிருக்க சிவமந்திரம் உச்சரிக்கும் பயிற்சியைக் கீழ்க்கண்ட உட்சமயப்பாடலால் வற்புறுத்துகிறார் திருமூலர்.

ஊரும் மனத்தை இரண்டற வீசுமின்
யூரும் சகாரத்தை ஓதுமின், ஓதியே
வாரும் அரன்நெறி மன்னியேமுன்னியத்
தூரும் சுடரொளி தோன்றலு மாமே (உட்-8)

அலைபாய்கின்ற மனதை ஒருநிலைப்படுத்தி, இகரம் ஊர்ந்த சகர எழுத்தை(ச்) ஓதினால் (ச்+இ) உள்ளத்தில் மறைந்திருக்கும் ஒளிவடிவான சிவன் வெளிப்படுவான் என்பது இப்பாடலின் பொருள். இதில் சிவனை மந்திரமாக உச்சரிக்கும் எழுத்துப்பற்றிக் கூறியுள்ளதைச் சற்று விரிவாக உணர வேண்டும்.

சிவனை ஐந்தெழுத்து மந்திரத்தால் உச்சரித்து வழிபடுவதற்கு மாறாக ஓரெழுத்து மந்திரத்தால் உச்சரிக்கலாம் என்கிறது மேற்பாட்டு. சிவாயநம அல்லது நமசிவாய என்ற சொற்களை ஐந்தெழுத்து மந்திரம் என்பர். இரண்டும் ஒன்றேயாயினும் நுட்பமான வேற்றுமையால் தனித்தனியே மந்திரமாக உபதேசிக்கப்படும்.

சிவாய நம என்பதை முத்தி பஞ்சாட்சரம் அல்லது சூக்கும பஞ்சாட்சரம் என்பர். நமசிவாய என்பதைத் தூல பஞ்சாட்சரம் என்பர். முதலது மறுமைப் பயனையும் பின்னது இம்மைப்பயனையும் தரவல்லதாகப் பிரித்துக் கூறுவர் சமயப் பெரியோர். இத்தகு வேறுபாடிருப்பினும் இரண்டிற்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அதுதான் இச்சொற்களுக்குள் முப்பொருள் உண்மை பொதிந்து கிடப்பதான ஒற்றுமை.

1.	சி-சிவன்	வ- சக்தி	இறை
2.	ய - உயிர்		உயிர்
3.	ந- மறைப்பு		
4.	ம- மலம்		தளை

இவ்வெழுத்துப் பொருள் தெளிவு. சிவாயநம என்பதில் உள்ளது போல் நமசிவாயத்தில் காணப்பட்டாலும் நம சிவாயத்தினும் சிவாயநம என்பதே சிறந்தது என்பதாகச் சைவ உலகம் போற்றுகிறது. உலகியலில் ஐந்திற்கு இரண்டு பழுதில்லை என்பார்கள். இதன் பொருளைச் சமயத்தின் வழி உணர்கையில் சிவாயநம என்ற ஐந்தெழுத்தில சிவ என்ற ஈரெழுத்தைக் கூறினாலும் ஐந்தெழுத்தை உச்சரித்ததற்கான பயன் முழுமையையும் தருவதாகக் கருத்து. இந்த அமைப்பை நமசிவாயத்தில் முதல் ஈரெழுத்தாகக் கொள்ள முடியாததால் சிவாயநம என்பதே சிறப்புடையது எனப் பொதுவாக உணரலாம்.

இந்த ஈரெழுத்தைத்தான் திருமூலரும் 'சிவசிவ என்கிலர்' என்பதாக வேறோரிடத்தும் கூறினார். சிவ என்றது இறைநிலை. யநம என்றது உயிர் நிலையும் உயிரோடான பாச(தளை) நிலையும் பற்றியது. ஈண்டு உயிரும், உயிர் பற்றியதும் நீங்க தனித்து நிற்கும் இறை நிலையான *சிவ* என்ற

ஈரெழுத்தில் முதலெழுத்தான *சி* என்றதை மட்டும் கூறினாலும் அது திருவைந்தெழுத்தில் ஏனைய நான்கெழுத்தையும் தழுவி உச்சரித்ததாகக் கருதப்படும் என்பதாக திருமூலர் கூறுகிறார். எனவே *சி* என்பது ஓரெழுத்து மந்திரம் எது போன்றதெனில் தலை நுழைந்து விட்டால் உடம்பு நுழைந்து விடும் என்பது போன்ற சிறப்பிற்குரியதாகும். இந்த ஓரெழுத்து பற்றி வேறோரிடத்தில் நாயோட்டு மந்திரம் என்பதாகப் பேசப்பட்டது.

நாயைத் துரத்த சி என்கிறோம். போகக் கூடாத இடத்திற்குப் போய் உலவிய நாயை வீட்டுக்குள் அனுமதிக்காதபோது சி எனச் சொல்லி விரட்டுகிறோம். அதுபோலவே ஆன்மாவைப் பற்றும் தீமையை விரட்ட சி என்ற ஓரெழுத்தே போதும். தீமை விலகிவிடும். இவ்வாறாக ஓரெழுத்தை உச்சரிப்பதன் மூலமாக இறைச்சிந்தனை வளரும் என்பதைத் திருமூலர் வற்புறுத்தினார் எனலாம்.

இங்ஙனம் சமய ஒழுகலாறுகளை வரிசைப்படுத்திக் கூறும் ஐந்தாம் தந்திரத்தின் இறுதியில், சுவரை வைத்தே சித்திரம் வரைய வேண்டும் என்ற கருத்தைப் போல சமய ஒழுகலாறுகளுக்கு இலக்காகும் ஆன்மாவானது தனியான நின்று ஆன்ம அனுபவத்தைப் பெற முடியாது. அது மனிதப்பிறப்பு எடுப்பதாலேயே அதைப் பெறமுடியும் என்ற உண்மையை உணர்த்த உயிர் தங்கும் உடம்பின் பயனைக் பக்குவமாகக் கூறி ஐந்தாம் தந்திரத்தை நிறைவு செய்கிறார் திருமூலர்.

வடிவமற்ற தண்ணீர், தான்சார்ந்த பாத்திரங்களின் வடிவத்திற்கு உட்படுதல் போல ஆன்மா தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவும், அடையாளப் படுத்திக் கொள்ளவும் உடம்பாகிய ஓர் புகலிடத்தைப் பெற்றுக் கொள்கிறது. உயிர்க்குலத்துள் மனித உயிர் பகுத்தறிவு மிக்க மேம்பட்டதென்பதால் ஈண்டு உடம்பு என்றது மனித உடம்பை ஆகும். உடம்பினுள் உயிர் பிரிக்க முடியாததாக வாழும்போதுதான் அனுபவருசியை உயிர் பெறுகின்றது. இவ்வனுபவ ருசியை உயிர் உடலின்றித் தனித்துப் பெற முடியாதென்பதால்தான் இந்த ஐந்தாம் தந்திரத்திற்கு முன்னர்,

'உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்' என்றும், 'உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்' என்றும், 'உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே' என்றும் விரிவாகப் பேசினார் திருமூலர். அக்கருத்தின் சுவடுமாறாத வகையில் ஈண்டு (5 ஆம் தந்திரத்தில்)

அறிய ஒண்ணாத வுடம்பின் பயனை
அறிய ஒண்ணாத அறுவகை ஆக்கி
அறிய ஒண்ணாத அறுவகைக் கோசத்து
அறிய ஒண்ணாததோர் அண்டம் பதிந்ததே (உட்ச-16)

• அறிதற்கு அரிதாகிய (கிடைத்தற்கரிய) மானுட உடம்பின் பயனை அறிந்து கொள்வதற்குத் தடையாக உள்ள சமயங்களின் தன்மைகளை அறிந்து தெளியும் போது, அறிதற்கரிய ஆறு ஆதாரங்களை உடைய (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரதம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை) உடம்பில் புதையலாகப் பொதிந்துள்ள அறிதற்கரிய பரத்துவம் உள்ளது என்ற உண்மையை வெளிப்படும் என்பதாம்.

இவ்வாறாகப் பூமிக்குள் புதையல் எடுக்கும் முயற்சியாக உடம்பினுள் உள்ள உயிருள் உயிராயிருக்கும் சிவனை, சமய ஒழுகலாறுகளால் உணரலாம் என்பது இக்கட்டுரையின் சாரம் எனலாம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

ஆறாம் தந்திரம்

53. சிவகுருதரிசனம், திருவடிப்பேறு

முனைவர். பா. ஜம்புலிங்கம்
நிகர்நிலைக்கண்காணிப்பாளர்
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், பத்தாவதாக விளங்குவது திருமூல நாயனார் படைத்த திருமந்திரமாகும். மூவாயிரம் தமிழ்ப்பாடல்களைக் கொண்டமையால் இதனைத் தமிழ் மூவாயிரம் என்றும் அழைப்பர்.

ஒன்பது தந்திரங்களில் ஆறாம் தந்திரம் சிவமே குருவாக வந்து அருள்வதை விளக்குகின்றது. ஆறாம் தந்திரத்தில் சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, ஞாதுரு ஞான ஞேயம், துறவு, தவம், தவநிந்தை, அருளுடைமையின் ஞானம் வருதல், அவவேடம், தவவேடம், திருநீறு, ஞானவேடம், சிவவேடம், அபக்குவன், பக்குவன் ஆகியவற்றைப் பற்றி திருமூலர் விளக்குகின்றார். இவற்றில் சிவகுரு தரினம் மற்றும் திருவடிப்பேறு பற்றி இக்கட்டுரை விவாதிக்கிறது.

சிவகுரு தரிசனம்

சிவனே குருவாக மானிடச்சட்டை தாங்கி வந்து காட்சி தந்து காட்டுவன காட்டி, ஊட்டுவன ஊட்டி உண்மை காணச் செய்தலாகிய உபகாரத்தைச் செய்வதை இதில் வரும் 16 மந்திரங்கள் உணர்த்துகின்றன. இவற்றில் சிவகுருவின் பெருமை, சிவகுருவால் கிடைக்கும் சிவஞானம் மற்றும் பிற பயன்கள், ஞானகுருவே சிவன், சிவகுருவின் எல்லையற்ற ஆற்றல், சிவகுருவின் பெருமையை உணரமாட்டாதவரது இழிவு, குருவருளால் அன்றி ஒருவராலும் உண்மை உணரமுடியாது என்ற தன்மை, சிவஞானமாகிய முழு உணர்வைத் தந்தருளும் சிவகுருவே சிவஞானி என்பதன் தத்துவம், சிவகுருவை அணுகி நிற்கும் முறை, சிவகுருவைச் சிவன் என உணரும் மாண்பு, சிவனே குருவாய் வரும் நிலை, ஞானகுரு மற்ற குருமார்களையும்விட மேம்பட்டவர், சிவகுருவால் கிடைக்கும் பயன்கள் உள்ளிட்டவை பற்றி விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

சிவகுருவின் பெருமையினை முதல் இரு பாடல்களில் (சிவகுரு தரிசனம் 1,2) திருமூலர் எடுத்துக் கூறுகிறார். மெய்யாய பொருளிடம் அன்பினை உண்டாக்கி அனைவராலும் துதிக்கப்படுகின்ற திருவடியைப் பற்றிக் கொள்ளக் கொடுத்து, தூய சொல்லால், சத்தாகிய தன்னுடைய,

அசத்தாகிய பாசங்களுடைய, சதசத்தாகிய ஆன்மாவுடைய இயல்பை உணர்த்துவதால் சிவனே சிவகுருவாகிறார் என்றும், உயிர்ச்சார்பும், பொருட்சார்புமாகிய தளைகளைத் தெரிவிக்கின்றார் என்றும், அதனால் உடம்பின்மேல் உள்ள ஆசையிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதும் அவரேயாவார் என்றும் அவர் கூறுகிறார்.

சிவகுருவால் சிவஞானமேயன்றிப் பிற பயன்களும் கைகூடும் என்பதைப் பின்வரும் பாடலால் உணர்த்துகிறார்.

சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய
சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே.

இறை அன்பும், அதன்வழி ஓதப்படும் பலவகை மந்திரங்களின் சித்திகளும், யோகத்தில் நிலை பெற்று நிற்கும் உறுதிப்பாடும். அவற்றால் அடையப்படும் அட்டமா சித்திகளும், சிவஞானமும், முத்தியும் குருவருளால் கிடைக்கின்றன. அவருடைய அருளின்றி இவற்றைப் பெறமுடியாது. ஞானகுரு எல்லாம் வல்ல சிவனேயாவார். முப்பத்தாறு தத்துவங்களுக்கு உட்பட்ட உலகங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட அவர், இவ்வுலகத் தென்னாடுடைய சிவனாகத் திகழ்கிறார். உண்மை ஞானத்தை அருளுகின்றார். மழையானது எங்கும் ஒரே மாதிரிப் பெய்தாலும், பள்ளத்திலும் படுகுழிகளில் தேங்கியும், மேடுகளில் மண்ணீரமாகக் கலந்தும், மலையில் உடனே உலர்ந்தும் போவது போல சிவன் அவரவர்க்கு ஏற்றவாறு அருள்புரிந்து ஆட்கொண்டு நலம் செய்கின்றார்.

அந்தச் சிவகுருவின் ஆற்றல் எல்லையற்றது என திருமூலர் சுட்டுகின்றார். சிவன் தான் நேராகவும் குருமூர்த்தியிடமாக நின்றும் அருளுகின்றார். குரு என்ற நிலையில் அருளும்போது உபதேச மொழியால் எல்லாப் பொருளையும் பதி,பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களில் அடக்கி உணர வைக்கின்றார். இவ்வாறாக முப்பொருள்களில் ஒன்றாகச் சிவனும் குருவும் எண்ணப்பட்டாலும், குரு உபதேசத்தால் உயிர்களைப் பாசத்திலிருந்து நீக்கிப் பதியிடம் சேர்ப்பித்து முத்தி நிலையில் அடையத்தக்க அனைத்து இன்பங்களையும் தந்து உதவுகின்றார். அதனைப் பின்வரும் பாடல் அடிகளால் அவர் தெளிவிக்கிறார்.

தேவனும் சுத்த குருவும் உபாயத்துள்
யாவையும் மூன்றாய் உணக்கண் டுரையாலே

மூவாப் பசுபாசம் மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்கும் குருபரன் அன்புற்றே

'சுத்த சிவன் குருவாய் வந்து மலங்களைப் போக்கித் தூய்மைப்படுத்தி ஆன்மாக்களுக்கு அருள் செய்வார். ஞானக்கண் இல்லாதவர்கள் அக்குருவையும் நம்மில் ஒருவனாக எண்ணுவர். ஞானக்கண் கொண்டவர் அக்குருவை சிவனே என்று அறிந்து அவரது பாதங்களை வணங்கி நிற்பர்' என்றும், "குருவருளால் அன்றி ஒருவராலும் உண்மை உணரமுடியாது. மெய்ப்பொருள் எது என்பதையும், அதனை உணராமல் பொய்ப் பொருள்கள் மறைந்து நிற்கும் தன்மையையும், அப்பொய்ப் பொருள்களிலிருந்து நீங்கி, மெய்ப்பொருள்களில் நிலைத்து நிற்கும் முறையையும், அறுபத்து நான்கு சித்திகளால் விளையும் மயக்கத்தையும் இறைவன் உணர்த்துவதை குருவருளால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்" என்றும் பல்லாற்றானும் குருவருளின் பெருமையை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

சிவஞானமாகிய முழு உணர்வைத் தந்தருளும் சிவகுருவே சிவஞானி எனக்கூறும்போது, அவரே சிவன் என்கிறார். ஆதலால் சிவகுருவை இயற்கை உண்மைச்சிவன் என்று எண்ணித் திருவடியைத் தியானிக்க வல்லவர்களுக்கு புதிதான தத்துவங்களும், நல்ல முத்தியும் சேரும். பிறப்பும் அறும். பரலோகம் கிடைக்கும். இதனைப் பின்வரும் பாடல் வரிகள் மூலமாக உணர்த்துகின்றார்.

சிவனே சிவஞானி யாதலால் சுத்த
சிவனே எனஅடி சேரவல் லார்க்கு
நலமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே

குருவே சிவம், அரசன், தலைவன் என ஆசிரியர் உபதேசித்தாலும், உலகத்தவர் அதனை உணர்வதில்லை எனச் சிவகுருவை அணுகி நிற்கும் முறையைப் பலவாறு தெளிவுபடுத்தும் திருமூலர், உயிரின் அறிவு அறிவன அனைத்துமே சிவனது அருளால் அறிவிக்கப்படுபவை என்றும், அந்த நிலையில் உயிரின் அறிவு அறிவன யாவையும் உறுதியான சிவனேயாய் முடிந்து விட்டால், சிவனும் அவ்வறிவில் பிறவற்றைத் தோற்றுவிக்காது தன்னை மட்டுமே தோற்றுவித்து நிற்பார் என்றும் கூறுகிறார்.

"ஞானத்தைப் பெற்றவன் சீவனது இயல்பை தனது அறிவில் காணும்படி வைத்த ஆசிரியன் அந்தச்சிவனே என்க" என்னும் சிவனது திருவுள்ளத்தை அறிபவர் உலகில் இல்லை என்றும், அதனை அறியவல்ல ஒருவனுக்கு

அச்சிவன் மாலைக்காலத்தில் விளங்கும் அருட்சுடர்த் திருவிளக்காக நிற்பார் என்றும் கூறுகிறார். இத்தகு ஞானமாகிய பேற்றினையும் முத்திப்பயனையும் மெய்ம்மையை மறவாத அருள்நிலையையும், மயக்கத்தை நீக்குவதான வேத வடிவான ஞானத்தையும் சிவனே குருவாய் வராவிடில் ஒருவர்க்கும் அறிய இயலாது என்று கூறுகிறார். மானைக்காட்டி மானைப்பிடிப்பதைப் போல மானிட வடிவு தாங்கி அவர் எழுந்தருளி உபதேசம் செய்வதை இதன் மூலம் உணரமுடிகிறது. மற்ற குருமார்களைவிட மேம்பட்ட சிவகுருவின்பால் பக்தியும், அதன் விளைவால் திருவடியுணர்வும், அதனால் ஏற்படும் பற்றுறுதியும் திருவடிப்பேற்றிற்கு வாயில்களாகின்றன. அவற்றால் 'அவன் நான் ஆனேன்' எனக் கருதும் பாவனை உண்டாவதோடு, வீடுபேற்றிற்கு வித்தாகிய திருவடியுணர்வு எழுமென்றும், அது திருவருள் சக்தியால் எளிதாகக் கிடைக்கும் என்றும், இப்பிறவியை முற்பிறவியிலேயே வகுத்த முதல்வனை தியானிக்கும்போது சிவன்தானே குருவாய் வெளிவந்து அருள் செய்வார் என்றும் திருமூலர் கூறுகிறார்.

சிவஞானம் என்றாலும், திருவருள் என்றாலும் ஒன்றேயாகும். அத்திருவருளால் ஆருயிர்களின் அறிவு தெளிவு பெறும். அந்நிலையில் சிறந்த சித்திகள் கைகூடும். பற்றுதியாகிய வீடும் கிடைக்கும். இவையனைத்தும் சிவஞானத்தால் கிடைக்கும் என்பதைப் பின்வரும் பாடல் வழி திருமூலர் உணர்த்துகிறார்.

சிவமான ஞானந் தெளியஒண் சித்தி
சிவமான ஞானந் தெளியஒண் முத்தி
சிவஞான ஞானம் சிவபர தேயேகச்
சிவமான ஞானம் சிவானந்தம் நல்குமே

சிவஞானத்தால் இவை கிடைக்க, சிவகுருவால் பல பயன்கள் கிடைக்கின்றன. 'குருவின் அருளால் நான் இப்பெரிய பூமி முழுவதன் இயல்பையும் முன்னர்ப் பொதுவாகவும் பின்னர் உண்மையாகவும் உணர்ந்தேன். அவ்வாறே அவரது அருளையடைந்து சிவனது இயல்பையும் முன்னர்க் கேள்வியளவில் உணர்ந்து, பின்பு நூல்களை ஓதி உணர்ந்து அவனது திருவருள் பெற்றேன். அதனால் அறிவையிழந்துள்ள உலகவரது வாழ்க்கையில் பற்றுச் சிறிதும் இல்லாதவனானேன். அதனால் இவ்வுடம்பில் இருந்தும் அதனில் நீங்கி நிற்கும் நிலையை உடையவனானேன்' என அதனைத் திருமூலர் இப்பாடலில் தன்மீது வைத்துக் காட்டுகின்றார்.

திருவடிப்பேறு

சிவகுருநாதனுடைய இன்றியமையாமையை அறிந்து அவர் உணர்த்திய நெறியில் நின்று தெளிந்த மாணவன் திருவருள் வடிவாகிய திருவடியைப் பெற்று உயர்ந்து உய்ந்ததை உணர்த்தும் திருவடிப்பேறு பற்றி இதில் வரும் 15 மந்திரங்கள் கூறுகின்றன. இவற்றில் சிவகுரு, சிவஞானத்தையும், அது வழியாகச் சிவானந்தத்தையும் தருதல், சிவகுருவினது திருவடியே பிறவிக்கு ஏதுவாகிய பாசத்தை அறுத்து வீட்டிற்கு ஏதுவாகிய ஞானத்தைத் தருதல், குருவின் திருவடியைப் பெறுதல், ஞானத்திற்கும் வீடுபேற்றிற்கும் வழியாதல், திருவடிப்பேறு பரமுத்தியாகிய முடிந்த பயனைத் தருதல், தான் திருவடி சூட்டப்பெற்றவருக்குச் சிவகுரு பின்னும் நீங்காது உடன் இருந்து பயன் விளைவித்தல், திருவடி சூட்டி அருள் செய்யும் முறைமையின் பெருமை, திருவடி ஞானத்துச் சிறப்பு, திருவடிப்பேற்றால் சீவன் முத்தநிலை வருதல் உள்ளிட்டவை பற்றி விளக்கப்படுகின்றன.

அன்பே சிவமாதலின் அன்பு தோன்றச் சிவமும் உடனெழ, அன்பு முற்ற சிவகுருநாதன் எழுந்தருளி வந்து சீடனது உச்சந்தலையின் மேல் "*இவனுடைய மல கன்மங்கள் ஒழிவனவாக*" என எண்ணும் வகையில் தன் கையை வைத்து பரிச தீட்சை செய்ய, உள்ளப் பொய்கையில் சிவனது திருவடிகளாகிய தாமரை மலர்கள் மலர்ந்தன (திருவடிப்பேறு,1) என்கிறார் திருமூல நாயனார். திருவடி சூட்டிய பெருமையை திருமூலர், சிவகுருவினது திருவடியே பிறவிக்கு ஏதுவாகிய பாசத்தை அறுத்து, வீட்டிற்கு ஏதுவாகிய ஞானத்தைத் தருவதாகும். திருவடியை உள்ளத்தில் பதித்த பொழுதே தலைமையைத் தந்த எம்இறை ஞான வாள் தந்து, அஞ்ஞான வலியைப்போக்கி "*வீட்டுலகை என்றும் ஆள்க*" என உதவி என் முடியில் அடி சூட்டினார் என்றும் "அச்சிவன் தானே குருவாகி வடிவம் கொண்டு எழுந்தருளி வந்து என் இயல்புகளாகிய மலம், மாயை, கன்மம், தான் என்ற நான்கினையும் நீக்கிய மற்றொரு முத்திரையைக் கொடுத்து ஆட்கொண்டார். அவர் தன் திருவடியை முதற்கண் என் முடியிலே சூட்டினார்" என்றும் கூறுகிறார்.

சிவத்தோடு கூடியதால் பேச்சற்று நிற்பதாகக் கூறும் திருமூலர், "உரையும் உணர்வும், உயிர்ச்சுமையாகிய ஆணவ மலமும் நீங்கி ஆழ்கடலைப் போல அமைதியாயிருக்கும் சிவமாந்தன்மையால் அனுபவம் கூடாமையின் அதனை நீக்கித் துரியாதீதத்து விளங்கும் சோதிவடிவாகிய சொரூப ரூபத்தோடு என்னைக் கூட்டினான்" என்கிறார். உயிர்களுக்கு உள்ள மூன்று இயல்புகளையும் தான் கைக்கொண்டு, அவன் காட்டிய

சின்முத்திரையையே அறியத்தகும் அரிய பொருளாக யான் கொண்டு "*நந்தி* " என்னும் பெயருடைய பெரிய பெருமானாகிய சிவனது திருவடிக்கண் உள்ளம் உருகும்படி தன்னை அப்பொழுதே உய்யக் கொண்டருளியதாகப் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

குரவன் உயிர்முச் சொரூபமும் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி பேர்நந்தி பேச்சற்
றுருகிட என்னைஅங் குய்யக்கொண் டானே

மேற்கூறிய பயன் நிகழும் முறையைக் கூறும்போது, 'குற்றமற்ற சிவகுரவன் மலபரிபாகம் வாய்க்கப் பெற்ற என்னைத் தன் திருவடியைச் சூட்டி, மலம் காரணமாக எனக்கு நியதியாக வந்துபொருந்திய கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகளும் இனி நிகழாதவாறு தான் கைக்கொண்டு சிவமாகச் செய்து பேச்சற்றதும், எல்லையில்லாததுமாகிய இன்பத்திலே என்னையே யான் அறியாதபடி மூழ்குவித்து, அதனால் எனக்கு வருகின்ற புகழையும் யான் எண்ணாதபடி என்னோடு உடன் இருந்து அருளுகின்றார்' என்றும், சிவகுரு விளைக்கும் பயன் பற்றிக் கூறும்போது 'சிவன் குருவாகி வந்து தனது திருவடிகளை எனது இதயத்திலும், கண்ணிலும் மனத்திலும் நீங்காது பொருந்தியிருக்கச் செய்து, அதனானே ஞானத்தை உணர்த்திய வகையும், அந்த ஞானத்தினால் மெய்ப்பொருளைத் தலைப்படுவித்த வகையும், பின் அம்மெய்ப்பொருளை நீங்காதிருத்தற்குரிய முறைகளை உணர்த்திய வகையும் நான் சொல்லும் தரத்தன அல்ல' என்றும் கூறி வியப்படைகின்றார் திருமூலர்.

"எனது சென்னி மேல் தனது திருவடிகளைச் சூட்டி, அருளே எனக்கு வடிவாகும்படி பார்த்து, அதனால் பின்பு பரம்பொருளை யான் பெறும்படி தந்தவரும், ஞானத்தலைவரும், தம் தலைவரும் ஆகிய நந்தி பெருமானை குருவடிவில் தான் தனது பிறவி வரும்வழி வற்றி உலர்ந்து போகக் கண்டுகொண்டார்" என்பதைப் பின்வரும் வரிகளால் உணர்த்துகிறார்.

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனைஎங் கோவைக்
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே

திருவடி உணர்வு ஆருயிர்களை மும்மலப்பிணிப்பிலிருந்தும் செம்மையுற விடுவிக்கும். கிடைத்தற்கரிய திருவருட்சித்திகளை

எய்துவிக்கும், சிவ உலக வாழ்வினைச் சேர்ப்பிக்கும், சிவமாம் பெருவாழ்வையும் கூட்டுவிக்கும் என்றும், திருவடியைச் சூட்டிய அந்த முறைமையைச் செய்யாவிடில் அவர் அருள் செய்த பின்பும் வினைகள் தோன்றி, முன்பு மயங்கியிருந்த உள்ளத்தை மீளவும் அப்பழக்கம் பற்றி மயக்கமுறச் செய்யும் என்றும், அதனாலேயே சிவன் குருவாகி வந்து தனது திருவடியைச் சென்னிமேல் வைத்தது போலச் சிந்தையிலும் நீங்காது தங்குவித்தான் என்று உவகை கொள்கிறார் திருமூலர்.

'வெற்றியையுடையனவும், தாமரைமலர் போல்வனவும் ஆகிய குருவின் திருவடி என்னும் நிழலை யான் அடையப்பெற்றேன். அதனால் நெடியோனாகிய மாயோனாலும் அறியப்படாத, ஓங்கி வளர்கின்ற வேள்வித்தீயில் விளங்குகின்ற சிவன், எனது உயிர்க்கூடமாகிய உடம்பின் தன்மையையும் மாற்றி என் இதயத்தாமரையில் எழுந்தருளி விளங்குகின்றார்' என்று கூறும் திருமூலர், சிவனடியைச் சேர்ந்தவர் அடையும் இன்பத்தைப் பின்வருமாறு புலப்படுத்துகிறார்.

முடிமன்ன ராகிமூ வுலகம தாள்வர்
முடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்
குடிமன்ன ராய்க் குற்றமற்றுநின் றாரே

சிவனடியைச் சேர்ந்தவர் அடையும் இன்பத்திற்கு அளவில்லை என்பதை நிரூபிக்கத் திருமூலர், நிலவுலகில் முடிசூடு மன்னராய்த் திகழ்ந்து வாழ்ந்தாலும், சிவனடியார் பெறும் மாறா இன்பம் அவர்களுக்கு இல்லை என்றும்; முடிமன்னர்களாயிருந்த தேவர்களும் இறைவனுக்கு வழிவழியாக வரும் அன்பு நெறிக்குடிகளுக்கு அரசாய்க் குற்றம் நீங்கி நின்றோர் ஆவர் என்றும் கூறுகிறார்.

'என்னை மயக்குவனவாயும், கொடியனவாயும் உள்ள ஐம்பொறிகளின் வழிப்போகாமல் என் மனத்துள்ளே சிவனது திருவடிகளை வைத்தேன். அதனால் இணைத்து உழலுதற்கு ஏதுவாகிய இரு வினைகள் என்னும் புதரை அழித்து வேதமாகிய மரத்தின் உச்சிக்கொம்பில் உள்ள மெய்ப்பொருளாகிய உண்மைத் திருவடி இன்பத்தேனை அறிவினால் அடைந்து இன்புறுகின்றேன்' எனக்கூறி மகிழ்ச்சியுறும் திருமூல நாயனார், முற்கால ஞானிகள் பலரும் இறைவன் திருவடியை அடைய குருவின் திருவடியைத் தம் தலையில் வைத்து நலம் பெற்றார்கள் என்றும், உலக இன்பத்தைத் தருவதாகிய இந்தப் பழைய பௌதிக உடம்பை இகழ்ந்து ஒதுக்கும் அந்த உயர்ந்தோர்

கூட்டத்தையடைதற்குரிய நெறியைப் பற்றினவர்களது கொள்கையும் இதுவேயாகும் என்றும் வலியுறுத்துகின்றார்.

மந்திர மாவதும் மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தனை இணையடி தானே

என்னும் பாடலில் அம்மையப்பரின் இணையடிகளே உடல் நோய், உள நோய், ஊறு, பகை, பிறப்பு முதலிய எல்லா வகைத் துன்பங்களையும் முற்றிலும் அகற்றும் மந்திரமாகும். அதுவே பெரிய நன்மருந்துமாகும். நூலுணர்வுமாகும். உயர்ந்த இன்பமூட்டும் ஒப்பிலா ஒளி நிலங்களுமாகும். உயிர்,உணர்வு, உள்ளம், உடல், உடை, உறையுள் ஆகியவற்றிற்கு அழகினைத் தருவதுமாகும். திருவடி சேர்க்கும் தூய நெறியுமாகும் என்றும் பலவாறாகப் புகழ்கின்றார்.

இத்தகு பெருமையுடைய சிவகுரு தரிசனமும், அவருடைய திருவடிப்பேறும் கிடைக்க எல்லாம் வல்ல சிவபெருமானை எண்ணிப் போற்றிப் பரவுவோமாக.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

54. ஞாதுரு, ஞானஞேயம், துறவு

பேராசிரியர். டாக்டர். சுப. திண்ணப்பன்
சிங்கப்பூர்

திருமந்திரம் தோத்திரமும், சாத்திரமும் கலந்த தமிழில் தோன்றிய முதல் நூல்; விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணைத்து விளங்கும் நூல்; இந்திய நாட்டின் தெற்கையும், வடக்கையும் இணைக்கும் நூல். உடல், உயிர், உள்ளம் என்னும் மூன்றின் நலம் மேம்பட வழிவகுக்கும் நூல். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறிப் படைப்பின் இரகசியத்தை உணர்ந்த பரம ஞானியான திருமூலரால் இயற்றப்பட்ட நூல். திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்; திருமந்திரமே சிவமாம் எனப் பெரியோரால் போற்றப்பட்ட நூல். இந்நூலின் ஆறாம் தந்திரத்தில் இடம் பெற்ற - மூன்றாவது பகுதியாக இடம் பெற்ற ஞாதுரு, ஞான ஞேயம் என்பது பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமந்திரத்துக்கும் மூன்றுக்கும் தொடர்பு மிகுதி. ஆன்மாவுக்குரிய நிலைகளை மூவகையாகவும், கேவலாதி நிலைகளை மும்மூன்றாகவும், ஆன்மாக்களையே மூவகையாகவும், மலங்களை மூன்றாகவும், மாயையே மூன்றாகவும், குணத்தை மூன்றாகவும் பதத்தை மூன்றாகவும், பதி, பசு, பாசம் எனப் பொருளை மூன்றாகவும், குற்றத்தை முக்குற்றமாகவும், புரம் மூன்றெனவும், துரிய நிலைலய மூன்றாகவும், முக்தியை மூன்றாகவும், சொரூப நிலையை மூன்றாகவும், கரணங்களை மூன்றாகவும் பகுத்துக் கூறும் பண்பினைத் திருமந்திரத்தில் காணலாம். இதற்கேற்ப ஞாதுரு ஞான ஞேயம் என்னும் இத்தலைப்புத் தொடரும் மூன்று பொருள்களைப் பற்றிப் பேசுகிறது. ஆறாம் தந்திரத்தின் மூன்றாம் பகுதியாகவும் அமைந்துள்ளது இப்பகுதியில் 9 செய்யுள்கள் உள்ளன.

ஞாதுரு என்பது காண்பானையும், ஞானம் என்பது காணும் அறிவையும், ஞேயம் என்பது காணப்படும் பொருளையும் பொதுவாகக் குறிக்கும். இங்குத் தத்துவ நோக்கில் காண்பவன் ஆன்மா ஆகவும், காண்பது சிவஞானமாகவும், காணப்படும் பொருள் சிவமாகவும் கருதப்படும். ஆன்மா சிவஞானத்தால் சிவனைக் காணுகின்ற நிலையை இப்பகுதி உணர்த்துகிறது. இதற்குச் சிவகுரு தரிசனத்தால் - அதாவது உள்ளத்தில் உறையும் சிவனைக் குருவாகக் காண்பதால் சிரசின் மேல் திருவடிப் பேறு பெற்ற நிலையில் ஆன்மா பக்குவம் பெற வேண்டும் என்பதனை

இப்பகுதிக்கு முன்னேயுள்ள சிவகுருதரிசனம், திருவடிப்பேறு என்னும் பகுதிகள் உணர்த்தும்.

ஆன்மா சிவானந்தமாகிய சிவனுடன் ஒன்றி நிற்கும் போது அதனை அநாதியே பற்றியுள்ள ஆணவ மலம் அதனைப் பற்றியுள்ள அறிவை மறைக்காது. அதாவது ஆணவ மலம் அந்நிலையில் அதாவது முத்தி நிலையில் ஆற்றல் ஒடுங்கி நிற்கும். அப்போது பேரின்பமாகிய அமுத நிலையைப் பெறலாம். சைவ சித்தாந்தம் கூறும் முத்தி நிலையை முதற் செய்யுள் சாற்றுகிறது. இறைவன்- சிவன் ஆனந்தமாகவும் அமுதாகவும் இருப்பவன். *அத்தன், ஆனந்தன், அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்* என்பது திருவெம்பாவைத் தொடர். அவன் ஆன்மாவுக்கு முத்தி நிலையில் அளிக்கும் ஆனந்தம் பேரானந்தம் என்னும் பெயர் பெறும். ஏனெனில் அது என்றும் நிலைத்து இருப்பது. இதனைத் திருமூலர் நீங்காச் சிவானந்தம் எனக் குறிப்பிடுகிறார். அமுதம் என்பது சாவாமைக்குக் காரணமாக இருப்பது. அதாவது பிறவாமையைத் தருவது. இதனைத் தானே காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டுகிறார். இத்தகைய முத்தி நிலையில் ஆன்மா இறைவனை விட்டு நீங்காத நிலை பெறுவதால் நீங்காச் சிவானந்தம் எனத் திருமூலர் கூறுகிறார். சாயுச்சிய முத்தி எனச் சித்தாந்த சாத்திரம் கூறும் நிலையை முதற் செய்யுள் கூறுகிறது.

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்காரம் நீங்கி அதனிலை நிற்கவே
நீங்கா அமுத நிலை பெற லாமே

இது இப்பகுதிக்குப் பாயிரம் போல முன்னுரையாக அமைகின்றது. இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஆன்மா பெறும் பேரின்ப நிலையை- பிறவாத நிலை எய்தும் தன்மையைத் திருமூலர் முதலில் விளக்குகின்றார். அந்நிலையிலும் ஆணவமலம் ஆங்காரம் நீங்கி அதனிலை நிற்கவே என்பதால் பதி, பசு, பாசம் அநாதி என்ற கூற்றையும் மெய்ப்பிக்கின்றார். இதனைத் தான்

முத்திதனில் மூன்றும் முதலும் மொழியக் கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு- மெத்தவே
இன்பம் கொடுத்தல் இறை; இத்தை விளைவித்தல்(மலம்)
அன்புடனே கண்டுகொள் அப்பா

என்று உண்மை விளக்கம் உரைக்கிறது.

ஞேயம் என்பது நேயம், அதாவது நேசம்- அன்பு. *நேயமே நெய்யும் பாலா* என்பது அப்பர் வாக்கு. அன்பு தானே சிவம்?

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

எனவே ஞேயம் என்பது சிவத்தைக் குறிக்கிறது எனவே ஆன்மா தான் அறிவதற்கு உரிய பொருள் சிவனே என அறிந்து அதன்வழி நின்றால் ஞானமாகிய ஈசனிடத்து வைக்கும் பேரன்பில் திளைத்து நிற்கும். சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற முடியும். "ஞானம் என்பது ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார்" என்பது சேக்கிழார் வாக்கு. வீடு பேறு என்பது என்ன? பிறவியிலிருந்து விடுதலை பெற்று இறைவனுடன் இணைவதே வீடு எனப்படும்.

"ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்" என்கிறார் திருமூலர். வீடுபேறு பெறும் நிலையில் தாயாகிச்சத்தி உதவும் நிலை. உணர்த்தும் நிலையையும் திருமூலர் கூறுகிறார். நேயத்தின் ஞேயம். அன்பின் அன்பு எனச் சக்தியைச் சுட்டுகிறார். தாயின் உதவியால் தாதையைக் கூடுகின்ற நிலை இதுவே ஆகும்.

வீடுபேறு என்னும் முத்தி நிலையைப் பெறுவது எப்படி?

யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

என்று விடை கூறுகிறார் வள்ளுவர். இந்தச் செருக்கை அறுப்பதற்குரிய வழியாகப் பற்றுக பற்றற்றான் பற்றினை தாளை என்றும் அவர் கூறுகிறார். பற்றற்றான் தாளைப் பற்றுவது எப்படி என்று திருமூலர் விடைதருகிறார். தான் வேறு; சிவன் வேறு என்று இரண்டு பொருள்களாக எண்ணுகின்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு இரண்டும் ஒன்றுனுள் ஒன்று எனக் கருதிஉள்ளத்தில் உள்ள இறைவன் திருவடியில் தான் என்றும் பூவைச் சாத்தி வழிபட்டால் அவனுடன் இரண்டறக் கலத்தலாகிய வீடுபேறு பெறலாம் என்பது அவர் வாக்கு. பூவினால் செய்யப்படுவதுதானே பூசெய்- பூசை என்பார், தம் பெயரை நன்னெறி முருகன் என மாற்றிக் கொண்ட வங்காள மொழிப் பேரறிஞர் சுனித்குமார் சாட்டர்ஜி. இங்கே உண்மையில் பூவென்பது என்ன? பூ என்பது நான் எனும் ஆணவ உணர்வே- அது இறுதி வரை அழியாத ஒன்று அன்றோ? பூ என்பது ஆணவத்தின் - நான்

என்பதன் அறிகுறி அடையாளம் என்பது திருமூலர் கருத்து. *புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு* என்றும் திருமூலர் கூறுகிறார் அல்லவா?

நான் நீங்க நாம் என்ன செய்ய வேண்டும்? சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றால் வழிபாடு செய்ய வேண்டும். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொழுத நிலையில் வார்த்தை சொலச் சற்குருவாகச் சிவன் வந்து வாய்ப்பான். அவன் பாசஞானம், பசுஞானம், பதிஞானம் ஆகியவற்றை நமக்கு உணர்த்துவான். இவற்றை 1608,1609,1610 ஆகிய செய்யுள்கள் சுட்டுகின்றன. "வைச்சன ஆறாறும் மாற்றி, அச்சம் கெடுத்து",

"*என்னை அறிவித்து இருந்தனன் நந்தியே*, "*தன்னை அறியப் பரன் ஆக்கி*" *நாதாந்த போதமும் காட்டினன் நந்தியே* ஆகிய சொற்றொடர்கள் சான்றாகும்.

முக்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலர் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

என்பது திருவாசகம். அருளிய தன்மை என்ன என்பதைத் திருமூலர் விவரிக்கிறார். கீழே காண்க.

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணாய் என வந்து காட்டினன் நந்தியே

காணாத கண் என்பது கண்ணால் காண முடியாத காட்சியை அதாவது ஞானக்கண் கொண்டு - அவனருளே கண்ணாகக் கொண்டு காணும் காட்சியைக் குறிக்கும்- கேளாத கேள்வி என்பது செவிப் பொறியால் கேளாத கேள்வியைக் குறிக்கும். அதாவது இவை இரண்டும் சுட்டியறியும் அறிவின்றி ஒரு சேரக் கண்டும் கேட்டும் இருத்தலைக் குறிப்பதாகக் கூறுகிறார் ஜி. வரதராசனார். கோணாத போகம்-கூடிப் பிரியாத சேர்க்கையையும் நாணாத நாணம் நாணமில்லாத பற்றையும் உணர்த்தும் நாதாந்தத்தில் விளங்கும் அறிவும் காணாய் எனக் காட்டுகிறான் சிவன். "காண்பார் யார் அவன் காட்டாக்காலே" என்பது அப்பர் வாக்கு. அவன் அருளாலே அவன்தாள் வணங்க வேண்டும். அப்போதுதான் அவன்

"காட்டாதன எல்லாம் காட்டிக் கேளாதன எல்லாம் கேட்பித்துத் தாட்டாமரை காட்டுவான்" என்பது மணிவாசகர் துணிபு.

மோனம் என்பது ஞான வரம்பு என்பார் ஔவையார். ஞானத்தின் சிகரமாக மோன நிலையை-மனம் சும்மா இருக்கும் சுகநிலையை-மௌனமாகப் பேசா அனுபூதி பெறும் நிலையை அவர் குறிக்கக் காரணம் என்ன? விடை தருகிறார் திருமூலர். கீழே காண்க.

மோனம் கைவந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனம் கைவந்தார்க்கு சித்தியும் முன்நிற்கும்
மோனம் கைவந்து ஊமையாம் மொழி முற்றும்காண்
மோனம் கைவந்து ஐங்கருமமும் முன்னுமே

இங்கே, மோனம் கைவந்து ஐங்கருமமும் முன்னுமே என்னும் தொடர் உணர்த்தும் கருத்து அதாவது மோனநிலை உற்று முத்தி நிலையில் நிற்கும் ஆன்மாவுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலாற்றலும் வாய்க்கும் என்பது அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க பெருமானுக்கு உடன்பட்ட ஒன்றாகும். சைவ சித்தாந்தாந்திகள் இதனை ஏற்க மாட்டார்கள்.

பிறந்து இறக்காமலிருப்பவர் யார்? அதாவது மரணமிலாப் பெருவாழ்வு பெறுபவர் யார்? காண்பான், காட்சி, காணும் பொருள் ஆகிய மூன்றும் முடிந்து ஒன்றாக அமையும் நிலையில் அதாவது சமாதி நிலையில் இடங்கலை , பிங்கலை, சுழுமுனை வழியாகச் செல்லும் பிராணனைக் (மூச்சினை) கால் மாத்திரை அளவாக மாற்றிச் சிவானந்த ஒளியாகிய குரு திருவடியில் செலுத்திப் பந்தபாசங்களை விட்டவரே பிறந்து இறவாத நிலை பெறுவார். காண்பான், காட்சி, காணும் பொருள், அதாவது ஆன்மா, காணும் அறிவு, சிவம் ஆகிய மூன்றும் ஒன்றாகத் தென்பட - அமைய அருள் பாலிப்பவள் சத்தி. இவளது அருட் குறிப்பை அறிபவனே பரம ஞானி ஆவான். இவனே ஒலிக்கின்ற நடனம் புரியும் அன்பு வடிவமான சிவத்துடன் கலந்து தன் நிலை கெட்ட தன்மையன் ஆவான். இவனே பரமுத்தி அடைந்தவன் ஆவான்.

இவ்வாறு ஞாதுறு(ஆன்மா) ஞானத்தைக் கொண்டு ஞேயத்தை அடையும் நிலையையும், ஞாதுறு (காண்பான்) ஞானம்(காட்சி) ஞேயம் (காணும் பொருள்) மூன்றும் ஒன்றாகும் நிலையையும், ஆன்மா சிவமாகும் நிலையையும், ஆன்மாவைச் சிவமாக்கி இறைவன் ஆண்ட நிலைமையையும், அதனால் விளையும் விளைவையும், ஞாதுறு ஞான ஞேயம் என்னும் இப்பகுதி எடுத்து விளக்குகிறது. சைவ சித்தாந்த தத்துவம்

ஆன்ம நேய ஒருமைப்பாடாக வளர்ந்து மலரும் நிலையை எடுத்துக்காட்டும் இயல்பையும் இங்கே உணரமுடிகிறது.

துறவு

துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று

என்று திருவள்ளுவர் துறவிகளின் சிறப்பைப் பாராட்டுகிறார். உலகத்தில் இறந்தவர்களை எண்ணிக் கணக்கிட முடியுமா? முடியாதன்றோ? அதுபோலத் துறவிகளின் அளவில்லாத ஆற்றலைப் பேச முடியாது என்று அணுவைத் துளைத்து ஏழ்கடலைக் குறுகத்தறித்த குறளில் அடக்கிய மேதை கூறுகிறார். காரணம் என்ன? திருமூலர் தம் திருமந்திரத்தின் ஆறாம் தந்திரத்தில் நான்காவது பகுதியாக வரும் துறவு பகுதியில் பத்து செய்யுள்களால் விடை தருகின்றார்.

துறவு என்பது என்ன? பற்றுக்களிலிருந்து விடுபடுதல் என்று பனுவல்கள் பகரும். ஆனால் திருமூலரோ அன்பினால் இறைவனைப் பற்றி இயல்பான முறையில் பாசங்களிலிருந்து - பற்றுக்களிலிருந்து நீங்குதல் தான் துறவு என்கிறார். அதாவது பாசநீக்கம் ஒரு நெறி. குறி இறைவனை அடைவது தான். இந்தக் குறியை அடையவும் பாசநீக்கமாகிய நெறியில் செல்லவும் அவன் அருள்தான் துணை நிற்கும். அவனருளே கண்ணாகக் கொண்டு காணின் அல்லாது அவனைக் காண முடியாது. பற்று விடுவதற்கு நாம் ஒருவனைப் பின்பற்ற வேண்டும். அதாவது ஒருவனை முன்மாதிரியாகக் கொண்டு அவன் வழிகாட்ட நாம் செல்லவேண்டும். அவனே பற்றுள்ளவனாக இருந்தால் பயனில்லை. அவனும் பற்றற்ற துறவியாக இருக்க வேண்டும். இல்லாவிடில் குருடன் குருடனுக்கு வழிகாட்டியாக அமையும் குருட்டாட்டமாகத் துறவு அமையும். எனவே பற்றற்றானாகிய பரம்பொருளைப் பற்றிப் பற்றுகளினின்று நீங்கிப் பிறவாமையாகிய பேரின்பப் பேற்றை முத்தியைப் பெற வேண்டும். எனவே இறைவன் துறவு நிலையில் நிற்பதையும் இதற்கு மாறாக ஆன்மாக்கள் இருப்பதையும் கூறித் துறவு நிலை மேற்கொண்டு ஆன்மாக்கள் பேரின்பத்தை அடைவது எப்படி என்பதையும் திருமூலர் இப்பகுதியில் விளக்குகிறார்.

இறைவன் இயல்பு (துறவன்)

பிறவான் இறவான் பெம்மான் முருகன் என்னும் அருணகிரியார் கூற்றுப்படி இறைவன் பிறவா யாக்கைப் பெரியோன் ஆவான். துறக்கும்

தவம் கொண்ட சோதிப் பிரான். இயல்பாகவே இன்ப துன்பங்களினின்று நீங்கி ஆதியும் அந்தமுமில்லாத ஒளிப்பிழம்பாக இருப்பவன். அமரர் (தேவர்களின்) பிரான் (தலைவன்), சுடரொளி, அறவாழி, பிறப்பிலி, உறவு, பகை யாரும் இல்லாதவன். சுடுகாட்டைத் தங்குமிடமாகக் கொண்டவன். பிச்சை எடுத்து உண்பவன் துறவன். (*கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை, தாயுமிலி தந்தையுமிலி தான் தனியன் காணேடி, ஏதவன் பேர் யார் உற்றார் யாரயலார்* என்னும் திருவாசக அடிகளை ஒப்பு நோக்குக) ஆடல் வல்லான். விடையூர்தி உடையவன்; அண்ணல், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன், கூற்றுவன் நாள் துறந்தார்க்கு (மார்க்கண்டேயர் போன்றோர்க்கு) நண்பன்; ஆசையற்றவன். துறந்தார்க்கு வழிமுதல் (வழிகாட்டி), ஆதிப்பிரான். இவன் என்று சுட்டியறியும் எளிமை உடையவன் அல்லன்- இவ்வாறு துறவிகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்கும் இறைவனைக் காட்டுகிறார் திருமூலர்.

ஆன்மா இயல்பு

ஆன்மாவோ பிறந்தும், இறந்தும் உழலும் பேதைமை கொண்டது. அறியாமை வயப்பட்டது. அதனால் தக்கன எவை தகாதன எவை என்று அறியும் இயல்பற்றது. பாசங்களுக்கு ஆட்பட்டது. பந்தங்களால் பிணைக்கப்பட்டது. ஐம்பொறிகளின் வழிநின்று காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றால் அல்லல் உறுவது. வினைவழி செல்வது. ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்டிருந்தாலும் சிவனருள் இருக்குமானால் பேரின்பம் பெறும் தகுதியும் கொண்டது.

துறவன் துணையாய் நிற்றல்

நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் இறைவன். எனவே அவனை மறவாத நெஞ்சினராய் நாடோறும் ஏத்தித் துதிப்பார்களாகிய துறவிகளுக்கு இறைவன் தன் இருப்பிடத்தைக் காட்டுவான். அவனைக் காண அவன் அருள் வேண்டும். இத்தகைய அருள் சேர்க்கையை சத்திநி பாதம் என்பர் சான்றோர். அப்போது சுடரொளியாகத் துறவிகளுக்குத் தோன்றிக் காட்சி அளிப்பான்.

விறகில் தீயினன் பாலிற்படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்,
உறவுகோல் நட்டு உணர்வுக்கயிற்றனில்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே

எனும் அப்பர் வாக்கும், ஞானசம்பந்தப் பெருமான் தம் திருமண நாளன்று சோதியிற் கலந்த வரலாறும் இதற்குச் சான்றாகும்.

துறந்தவர் தம்மைப் பிறவி அறுத்திடும் பித்தன் இறைவன்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்பது குறளல்லவா? எனவே பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதுதான் அறிவாகும். இப் பேதைமையிலிருந்து ஆன்மாக்கள் நீங்குவதற்காகவே இறைவன் அவை கடைப்பிடித்து ஒழுக வேண்டிய வழிமுறைகளையும் (நெறிகளையும்) படைத்துள்ளான். கூடவே ஒதுக்கித் தள்ளவேண்டிய நெருஞ்சி முள் போன்றவற்றையும் படைத்துள்ளான். வழி தவறி நடந்தால் நெருஞ்சி முள் குத்தும். இறைவன் வகுத்த வழியில் சென்றால் நெருஞ்சி முள் துன்பம் இராது. எனவே இறைவன் வகுத்த வழியில் செல்லுதலே ஆன்மாக்கள் உய்யும் நெறியாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்

என்று திருவள்ளுவரும் இதனை வலியுறுத்துகிறார். ஐம்பொறிகளை அடக்கிய - வென்ற துறவியாகிய இறைவன் வகுத்த வழியில் நின்றால் பிறவாப் பெருநெறி அடையலாம் என்பது தானே இதன் பொருள். அதனால் அறத்தால் வரும் நன்மையையும் அறனல்லாத மறத்தால் வரும் கேட்டையும் உணர்ந்து ஆன்மா ஐம்பொறிகளால் வரும் ஆசைக்கு ஆட்படாது இறைவன் திருவடி கூடும் தவம் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஆன்மா காம வயப்படாதிருக்க வேண்டும். இதனை

உழவன் உழவுற வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவொழிந்தானே

என்னும் செய்யுள் வழி ஓர் உருவகத்தால் திருமூலர் விளக்குகிறார். உழவன் நெல் விளைவிக்க நிலத்தை நன்கு உழுகின்றான். வானம் மழை வழங்குகிறது. அவன் வயலில் குவளைப் பூக்கள் மலர்கின்றன. இவற்றைப் பார்த்து இக்குவளை மலர்கள் தன் மனைவியின் கண்களை ஒத்துள்ளன எனக் கருதி அந்நினைப்பின் வாயிலாகக் காம நோய் மேற்கொண்டு வியந்து

நிற்க உழவுத் தொழில் நின்று போயிற்று. பேரின்பம் பெறுவதற்குச் செய்யப்படும் முயற்சியே-தவமே உழவு என உருவகம் பெற்றுள்ளது. இதற்கு இறைவனின் அருள் மழையாய் இருந்து உதவும். நெல் விளைவித்தலே பேரின்பம் பெறுதல். உழவன் மலரைப் போற்றி மனைவி கண்ணொடு ஒப்பிட்டு நோக்கி உவந்ததே தவமுயற்சிக்குத் தடையாய் உள்ள பெண் இன்பம். மேனகை வயப்பட்ட விசுவாமித்திரர் தவமுயற்சி இதற்குச் சான்றாகும்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே

என்று திருநாவுக்கரசர் கூறும் உழவு நெறி இதற்கு மாறானது. இதனையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

அறியாமையாகிய மயக்கம் அற்றார்க்கு - அஞ்ஞானம் நீங்கியவர்க்கு இறைவன் தன் நெற்றிக்கண்ணால் ஞான ஒளியைக் காட்டுவான். இச்சைகளைத் தரும் மண்ணுலக ஆசையைத் துறந்தவர்கட்கு அவன் திருவடி காட்டுவான்.

நாகம் ஒன்று படம் ஐந்து நாலது
போகமும் உட்புற்றில் பொருந்தி நிறைந்தது
ஆகம் இரண்டும் படம் விரித்து ஆட்டு ஒழிந்து
ஏகப்படம் செய்து உடம்பு இடம் ஆமே

என்னும் செய்யுளில் திருமூலர் நாகப் படம் ஒடுங்க நாதன் அருள துலங்கும் எனக் காட்டுகிறார். இங்கு நாகம்- பாம்பு உயிரைக் குறித்தது என்றும் குண்டலினி சக்தியை குறித்தது என்றும் கூறுவர். படம் ஐந்து என்பது மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்பொறிகளைக் குறிக்கும். நாலது போகம்- மனம், சித்தி, புத்தி, அகங்காரம் என்னும் நான்கு உட்கருவிகளை உணர்த்தும். உட்புற்றில் என்பது உள்ளுக்குள் ஆகம் என்பது உடம்பு- ஆக இரண்டு என்பது நுண் உடல், பரு உடல் ஆகிய இரண்டினை உணர்த்தும். இந்த இரண்டு உடலும் படம் விரித்து ஆட்டொழித்து என்பது இவை தம் இச்சைப்படி தலைவிரித்து ஆடுவதை விட்டு நீங்குதலாகும். ஏகப்படம் எடுத்து என்பது ஒருமுகமாக ஒன்றித் தவநிலையில் இருத்தலைக் குறிக்கும். இந்த நிலையில் உடம்பை இடமாகக் கொண்டு வாழ்வதே துறவு ஆகும். உயிர் வெளி நாட்டத்தை விட்டொழிந்து அகநாட்டங் கொள்வதே துறவு எனப்படும். குண்டலினி சத்தி ஆற்றல் ஒழிந்து சிற்சத்தியோடு பொருந்தி

ஊர்த்துவமுகமான போது சிதாகாயக் கூறு விளங்குவதில் இரு உடல் போய் ஒருடலாய் அமையும் நிலை ஏற்படும் என்பார் வரதராசனார்.

சுட்டி உணர முடியாத சிவபெருமான் அவனைப் பணியும் துறவிகளின் மனப்பக்குவத்திற்கேற்ப அந்த அந்தச் சீவன்களோடு ஒன்றி இருப்பான். அவன் ஆன்மாக்களிடம் வந்து அருள்புரியும் வகையை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. இலயம், போகம், அதிகாரம் என்ற முத்திறத்தாலும் வேண்டுவார் வேண்டும் வண்ணம் இறைவன் ஆட்கொள்வான். ஆன்மாக்களின் பக்குவநிலை அறிந்து ஆட்கொள்ளும் விதத்தை நாம் அறிய முடியாது.

பத்தாவது செய்யுளில் துறவின் இறுதி நிலையைத் திருமூலர் கூறுகிறார். இந்த உடலாகிய வீட்டுக்கு ஒன்பது வாயில்களை- மூக்குத்துளை இரண்டு, செவித்துளை இரண்டு, கண் இரண்டு, வாய் ஒன்று, மலவாய், கருவாய் ஆக ஒன்பது வாயில்களை இறைவன் வைத்துள்ளான். இவை வழி திறந்தன. ஆம்பல் கொடிபோல விளங்கும் மூலாதாரத்தின் குண்டலினி சக்தி இடவல மூக்கு வழியாக மாறி மாறி இயங்கிப் பின் பிராணாயாமப் பயிற்சியால் நடுநாடி வழியாகச் சுழுமுனை மேலேறிச் செல்ல, தலை உச்சியில் உடலாகிய கப்பலைச் செலுத்தும் மீகாமனாக விளங்கும் பரம்பொருள். அங்கே சிதாகரத்தில் செந்தாமரை மலர்வது போல வெளிப்படும் குண்டலினி சத்தி உச்சித் தலையை அடையும் போது உலக இன்பங்கள் வேம்பு போலக் கசக்கும். கரும்பு கசப்பதாகவும், வேம்பு இனிப்பதாகவும் இந்நிலையில் ஞானிகள் உணர்வர். பட்டினத்தார் வாழ்வு இதற்கோர் சான்றாகும்.

இவ்வாறு துறவு பத்துச் செய்யுட்களால் திருமூலரால் உணர்த்தப் பெறுகிறது. பத்து என்பது பற்று என்பதன் பேச்சு வழக்கு என்பதைப் "பத்து உடையீர் ஈசன் பழஅடியீர்" என்னும் திருவெம்பாவைத் தொடரால் உணரலாம். பற்று என்பது பெயராகவும் வினையாகவும் அமைந்த ஒரு சொல். பற்று (பாசம்) நீக்குதற்கு இறைவனைப் பற்றுக என்னும் உட்கருத்தை வலியுறுத்துவது போல இப்பகுதியில் பத்துச் செய்யுள்கள் உள்ளன. பற்று விடுவதற்கு இறைவனைப்பற்றி நிற்பதும் பற்றி நின்று பரமன் அருள் பெறுவதும் தாம் துறவு என விளக்குகிறார் திருமூலர் எனலாம். இறை பக்தியே இனிய துறவாகும்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀

55. தவம், தவநிந்தை, அருளுடைமையின் ஞானம் வருதல்

நற்கதை நம்பி, பேராசிரியர். டாக்டர். அய்க்கண்
தமிழ்த்துறைத்தலைவர், ஆ.பி.சீ. கலைக்கல்லூரி (ஓய்வு)
திருப்புத்தூர்

தவம்

திருமூல நாயனார், தவமாவது மெய்ப்பொருளை அடைதற்குச் செய்யும் முயற்சி என விளக்குகிறார்.

திருவள்ளுவர் 'தவமாவது இன்னது' என்று இயல்பு கூறவில்லை; தவத்தின் பயனும் வெளிப்பாடுமே கூறினார்.

உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு -261

என்ற குறள் தவத்தோரின் செயற்பாட்டையே விதந்து கூறுகிறது. ஆயின், திருமூலர், உயிர் உலகப்பற்றினின்றும் மீட்ட மனத்தை இறைவன் திருவடிக்கீழ் ஒடுங்கி நிற்கச் செய்யும் பயிற்சியே தவம் என்பர். அந்த முயற்சி, செய்யும்போது தவம் என்றும், முயற்சி வெற்றியாக முற்றுப்பெறும் போது ஞானம் என்றும் பரிணமிக்கும்.

இத்தவநிலையை சாத்திரநூல்கள் *சரியை, கிரியை, யோகம்* என மூன்றாகக் கூறும். தவத்தில் மேம்பட்டவர்கள் யாருக்காகவும் அஞ்சுவதில்லை. *நாமார்க்கும் குடியல்லோம்: நமனை அஞ்சோம்* என்று அப்பர் சுவாமிகள் பயமின்றி நின்றது போல், தவத்தினர் இடர்களுக்கு அஞ்சாமல் நிற்பர். மார்க்கண்டேயனிடம் தோற்றதைப் போல், காலன் தவத்தோரிடம் தோற்றுப்போவான்.

உண்மைத் தவத்தை, தவத்தில் சிறந்தாரே புரிந்து கொள்ள முடியும். உண்மைத் தவம் என்பது இறைவழிபாடே. இறையருள் பெற்றவரே இந்த உண்மையான தவத்தை உணரமுடியும். இறையருள் இல்லாமையால், வேறு செயல்களைத் தவமாகக் கருதி மயக்குறுவர்.

உலகப் பற்றிலும் பாசத்திலும் உழலும் சிலர், பிறவியைத் துன்பமாகவே கருதுவதில்லை: எனவே பிறவிப்பிணியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற சிந்தனையும் அவர்களுக்கு எழுவதில்லை. பிறவியை நீக்கினால் வீடுபேறு அடைவதோடு, தான் விரும்பும் இம்மை மறுமைச்

செல்வங்களையும் சேர்த்தே பெற முடியும் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். -265

என்பார் திருவள்ளுவரும்.

பொறிபுலன்களை அடக்கி, மெய்வருத்தி உயர்ந்த தவத்தைச் செய்யும் பெரியோரை, முன்னை வினை வந்து தடையுறுத்தும். புராணங்களில், கடுந்தவம் மேற்கொண்டோருக்கு இந்திரன் முதலியோர் மயக்கம் ஏற்படுத்தி மனஉறுதியைக் குலைப்பதற்கான முயற்சிகள் செய்வதைக் கதைகளாகக் காணலாம். அவை போன்று, முன்னை வினைப்பயன்கள். நாம் மேற்கொள்ளும் தவத்திற்கு இடையூறாக வந்து நிற்கும். ஆயினும் முற்பிறவிகளிலும் தவம் மேற்கொண்ட சான்றோர் அந்த நல்வினையின் துணையால் இப்பிறவியின் தவத்தில் எதிர்ப்புகளை வெற்றி கொள்வர்.

தவமும் தவமுடையார்க்கு ஆகும். அவம் அதனை
அ:துஇலார் மேற்கொள்வது -262

என்றே குறளும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

சிவன் கண்ணுக்குப் புலனாகாது மறைந்திருப்பான் ஆயினும், அரிய தவசீலர்களுக்கு நேரில் தோன்றுபவனாக இலங்குவான். தவத்தோர் அன்றி வேறு யாரும் அவனைத் தரிசித்தல் இயலாது என்பதனை உறுதியாகத் தெரியப்படுத்துகின்றார் திருமூல நாயனார்.

உலகத்தில் நுண்ணறிவுமிக்க அமைச்சர்களையும் வலிமை பொருந்திய யானை முதலான படைகளையும் பெற்று, *தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமை* (புறநானூறு-199) உடைய அரசர்கள் எல்லோரும், நிலைபெறாமல் காலச் சுவடுகளாய் அழிந்து போனதை நாம் வரலாற்றில் காண்கிறோம். ஆனால் இவர்கள் இடையே, ஞானத்தையும் வீடுபேற்றையும் கருதித் தவம் மேற்கொண்ட தக்கோர் அழியாமல் அமரவாழ்வு பெற்று நிலைத்திருக்கிறார்கள்.

அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்து எழும் பூசல் உட்பட்டார் நடுவே
அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்து அழியாது இருந்தார் தவத்தாரே -1608

என்று நினைவுறுத்துகிறார் திருமூலர்.

'வெறுமே நூல்களை ஓதுவதே பெருமை' எனக் கருதுவதை விடுத்து, நாம் ஒரு வினாடிப் பொழுதாவது நம் அறிவை உள்பக்கம் திருப்பி அகத்தை நோக்க வேண்டும். அந்த அகப்பார்வை, பசுமரத்தில் ஆணி பதிந்து நிலைப்பது போல், நம் அறிவினுள்ளே பதிய, நம்மைப் பிணித்துள்ள பிறவி நம்மை விட்டு அகன்றுவிடும் என்று உறுதியாக வழிகாட்டுகிறார் திருமந்திரப் பெருமான்.

தவ நிந்தை

உயர்தவம் அல்லாத தவமும், உணர்வோடு இயையாமல், வேடம் மட்டும் இயைந்த போலித்தவமும் தவம் ஆகா என்பதனைத் திருமூலர் கண்டித்து இப்பகுதியில் 13 மந்திரங்கள் அருளியுள்ளார்.

மனத்தை அடக்கும் வன்மையில்லாத நிலையில், தவ வேடம் பூண்டு திரிதல், பசுவானது புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு புல் மேய்வதை ஒக்கும் என்பார் திருவள்ளுவர்:

வலியில் நிலையான் வல்உருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று -273

ஞானம் பெறுதற்பொருட்டே தவம் மேற்கொள்ளப் பெறுகிறது. அந்த ஞானப்பேறு கிடைத்துவிட்டால், அதன்பின்னர் தவம் வேண்டுவதில்லை. எனவே சிவயோக சிவபோக நிலையை எய்தியோர் தவம் மேற்கொள்ள வேண்டியதில்லை.

சிவத்தை ஒருவன் தன் அறிவினுள்ளே பெற்றுவிட்டால், அவன் ஞான நூல்களை ஓத வேண்டுவதில்லை. ஞானமாகிய சிவனருள் எய்தியபிறகு அதை அடைவதற்கான சாதனமாகிய தவம் வேண்டியதில்லை.

ஞான நூல்களின் கருத்தறிந்து அதன் வழியே அடங்கிவிட்டால், பின் அந்த நூல்களைக் குரல் கம்ம உரத்துக் கூற வேண்டியதில்லை: இறைவனோடு ஒன்றிய சமாதி நிலை எய்தியவர்கள்; பாடல்களால் துதிக்க வேண்டியதில்லை: அகத்தூய்மை வாய்க்கப்பெற்றுவிட்டால், நீரில் மூழ்குதல் முதலான புறத் தூய்மை தேவையில்லை: தன் முனைப்பற்று, எல்லாம் சிவச் செயல் என்று இருந்துவிட்டால், தியானமும் வேண்டியதில்லை.

கத்தவும் வேண்டா கருத்து அறிந்தாறினால்
சத்தமும் வேண்டா சமாதிகை கூடினால்

சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலால்
சித்தமும் வேண்டாஞ் செயல் அற்று இருக்கிலே -1612

என்று தெளிவுறுத்துகிறார் திருமூலர்.

தொன்றுதொட்டு வரும் தவம், வாய்மை, அறம் என்பவற்றைச் செய்வார் யாவரும், அவற்றால் விளையும் பயன்கள் இவை என்பதை உணர்ந்தே செய்வர்.

'சிவனடியார்களோடு கூடி, அவர்கள் செய்யும் தவத்தையே செய்து, அதன் பயனாகச் சிவனது திருவடியைத் தரிசித்தேன்: பின் அத்திருவடியின் கீழ் இருத்தலாகிய வீடுபேற்றை அடைய விரும்பியே தொடர்ந்து செய்து தவத்தால் அதனையும் அடைந்தேன். இவ்விரண்டு தன்மைகளையும் ஒதுக்கிவிட்டு, மெய்வருந்தச் செய்யும் தவம். தவமாகாது: சிவநெறி வழிபட்டுச் செய்வனவே தவமாகும்' என்று கூறுகிறார் திருமூலர்.

மனத்தின்கண் நிறைந்து நிற்கின்ற ஆசையை பெரிய ஏழ்கடல்களுக்கு உவமித்துக் கூறுகிறார் திருமூலர். அந்த ஆசைக் கடலை நீந்திக் கடந்து தவத்தில் நிற்பாரே, மெய்ப்பொருளை அடைவார். மனமாகிய உறையிலுள்ள ஞானம் என்ற வாளை உருவி, ஐம்பொறிகளாகிய பசுக்களைப் பிணித்துள்ள ஆசையாகிய கயிற்றை அறுத்து, அவற்றை ஏனைப் பசுக்கூட்டத்திலிருந்து பிரித்து, அப்பசுக்களோடு தாமும் கொல்லையில் சென்று மேயாதபடி மடக்கி வைக்கும் ஆற்றல்பெற்ற ஒருவனுக்கு, தவத்தின் முழுமையான பயன் கிடைக்கும்.

மனத் திடை நின்ற மதிவாள் உருவி
இனத் திடை நீக்கி இரண்டற ஈர்த்து
புனத் திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை ஆறொளி தன்னொளி யாமே -1616

என்று அரிய உருவக வாயிலாக உண்மை தெளிவிப்பார் திருமூலர்.

'பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்து உண்டு' என இந்நூலின் 9 ஆம் தந்திரத்திலும் புலன்களைப் பசுக்களுக்கு உவமிப்பார் அவர்.

உலகத்து அடியார் ஒவ்வொருவருடைய பரிபாக நிலைக்கு ஏற்ப, அவரொடு இயைந்து, நீங்காது நின்று அருள்பவன் இறைவன். அவனுக்கு அடியாராக நின்று வாயார வாழ்த்துதல், அவன்பால் பக்தியை மிகுவிக்கும். புலன் அடக்கிச் செய்யும் நோன்புச் செயல்கள், முனிவராகும் தகுதியை

நமக்குத் தரும். இறைவனைப் பணிந்து தொண்டு செய்வது, வீடு பேற்றை அருளும்.

தலையான நூல்களைக் கற்றறிந்து, பொருள் உணர்ந்து செய்யும் வழிபாடே பயன் தரும். எளிமையாய்ப் பச்சிலையும் பூவும் கொண்டு வழிபடுவதும், அறிவின்வழிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பார்.

தவம் மேற்கொள்வோருக்கு யாதொரு துன்பமும் வாராதவாறு இறைவன் தன் அருளை வழங்கிக் காப்பாற்றுவான். அந்த அருளை நாடாமல், மணிமந்திர ஔடதங்களால் காப்புச் செய்து கொள்ள நினைப்போர், மேலும் துன்பம் வருவதற்கான வழியைத் தாமே உண்டாக்கிக் கொள்ளும் பித்தர் ஆவர்.

மாதவத்தோர்க்கு ஈசன் எந்தை இடர் அகற்றி அருள்வான் என்பதற்கு அப்பர் சுவாமிகளின் வரலாறே ஒரு சான்றாகும். சமணர்கள் அவரை நீற்றறையில் இட்டபோதும், யானையின் காலால் இடறிக் கொல்ல முயன்ற போதும், கல்லொடு பிணித்துக் கடலில் தள்ளியபோதும், இறைவன் அருளாலே அப்பர் உயிர்பிழைத்து அமணரை வென்ற வரலாறு நாம் அறிந்ததே.

தவம் மேற்கொண்டார் அதன் கடுமை கண்டு தளர்ந்து தொடராமல், துறவியாய் வேடம் மட்டும் இட்டுத் திரிபவர்களை, ஆற்றின் ஒரு துறையிலுள்ள முதலைக்கு அஞ்சி மற்றொரு துறையிலுள்ள கரடியிடம் சென்று அகப்பட்டோர் போன்றவர் என்று இழித்துரைக்கிறார் திருமூலர்.

வீடுபேறடையும் உணர்வோடு செயல்படுவோர், சாதன நிலையில் தவமும், சாத்திய நிலையில் ஞானமும் அடைவர். தவத்தைப் பழத்திற்கும், ஞானத்தை அதனாற் கிடைக்கும் வித்திற்கும் உவமிக்கிறார் திருமந்திரப் பெருமான்.

'உள்ளத்தைச் சிவமாகச் செய்யும் பெருந்தவமே தவம் என்றும் மற்றைய சிறு தவங்கள் தவமாகா' என்பார். 'சித்தம் சிவம் ஆதல், செய்தவப்பேறே' (1622) என்று தெளிவுறுத்துகிறார் திருமூலர்.

அருளுடைமையின் ஞானம் வருதல்

தவம் காரணமாகச் சிவனே குருவாக வருவான் ஆதலின் அவன் அருள் பண்ணித் தருவதாலேயே ஞானம் பெற முடியும். யாரும் தன் திறத்தால் அதனைப் பெறுதல் இயலாது என்று உறுதியாகக் கூறுகிறார் திருமூலர். 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்பார் மணிவாசகப்

பெருமான். சிவன், உயிரிடத்து அருள் காட்ட, அதனாலேயே உயிர்க்கு ஞானம் கிட்டும் என்பது போதரும்.

பிரானின் அருள் இருந்தால், நற்செல்வம், நல்ஞானம், பெருந்தன்மை, தெய்வநிலை அனைத்தும் பெறலாம். அருள் இல்லையேல், யாதும் இல்லை எனலாம்.

எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்கும் சிவபெருமான், தமிழ் நாடுடையவன் என்பர் சான்றோர். 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாடுவார் மாணிக்கவாசகர், தமிழ்நாட்டில்தான் சைவ சித்தாந்தம் சிறந்து விளங்குகிறது என்பது ஒருதலை. இந்த உண்மையைத் திருமூலர் அழுத்தமாக எடுத்துரைக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு உரிய சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை ஆகிய 5 மண்டலங்களிலும் உயிர்களின் அன்பு, இறைவனது அருள் என்னும் சைவ சித்தாந்தம் உறுதியாக நிலைபெற்று விளங்குகிறது. எனவே பிற நாட்டவர் யாரும், தமிழ்நாட்டுத் தத்துவப்பொருளை அறிவிப்பதற்குத் தகுதியுடையவர் அல்லர் என்பதை,

தமிழ்மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வதுபோல உலகந் திரிவார்;
அவிழும் மனமும் ஆதியறிவும்
தமிழ்மண்டலம் ஐந்தும் தத்துவமாமே -1624

எனத் தெளிவாக உணர்த்தியுள்ளார் திருமூலர்.

வானம் தண் துளிதலைஇ ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல்..... (புறநானூறு-192)

என்பதற்கிணங்க, உலகியல் இருவினை வழிப்பட்டதே. ஆயின் மெய்ந்நெறி. இவ்வினைவழிக்கு அப்பாற் பட்டதாகலின், அண்ணல் இருப்பிடம் அருளே. எனவே அதனை ஆய்ந்துணர்ந்து அடைய, ஞானம் கிட்டும் என்பார்.

விருப்பு வெறுப்புகளை விடுதல், இரண்டையும் ஒன்றாக நினைத்தல், இருவினை ஒப்பு என்பர்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்"
(பெரியபுராணம்- திருக்கூட்டச் சிறப்பு-8) என்பதை நோக்குக.

இருவினை ஒப்பு இன்றி, இறைவனருள் பெறுதல் இயலாது என்பர். இருவினை நீங்கிய காலத்தில் சிவன் கண்முன் நின்று அருள் வழங்குவான். அருள் வழங்கிய பின்னர், அவ்வருள் நிலையிலிருந்து வழுவாதவாறும் சிவன் காப்பான். இப்பாதுகாப்பின் பயனாக, முடிவில் பிறவிப்பிணியையும் அறுத்து அருளுவான்.

சிவனருளாலே சிலர் தேவருமாவார். சிலர் தெய்வத்தோடு ஒத்த நிலை பெறுவர்: சிவனது அருள் உண்மையாகக் கூடிற்று என்றால், அதன் பயனாக அவர்க்குச் சிவலோகமே கிடைக்கும்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து -353

என்பார் திருவள்ளுவரும்.

உடம்பு என்னும் நிலையில்லாத தேரில் ஏறி, மனம் என்னும் பாகனால், கண்ட கண்ட இடங்களை நோக்கிச் சென்று தடுமாறி மயங்கும், உயிர்கள் இறையுணர்வு பெற்று, சிவன்பேரில் வைத்த அன்பு என்றும் தேரில் ஏறி, அவனது அருளைப் பெற்றால், அவ்வருளாளர் கூட்டத்தோடு உயிர்கள் சிவனை அடைந்து தாமும் சிவனாகி விடலாம். எனவே சீவன் சிவனாவதற்கு முதற்கண் அன்பு வேண்டற்பாலது.

சரியை, கிரியை, யோகம் என்பனவற்றின் பயனாக, சிவலோகவாசிகளாய் உயர்வு பெற்று அங்கே தவம் செய்து ஞானம் பெறுவர். அதன்வழி சிவனடியையும் பெறுவர். இதற்கும் சிவனருளை அவர்கள் முன்னர்ப் பெற்றிருக்க வேண்டும்.

சூரியனைக் கண்ட சூரியகாந்தக்கல் நெருப்பு வடிவாய்த் தீயுமிழும். நிலவைக் கண்ட சந்திரகாந்தக்கல், நிலவொளியாய் நீரை உமிழும்: கண்ணாடி, தான் காணும் பொருளின் வடிவைக் காட்டும். இவற்றைப்போல், சிவனருள் கண்ட உயிர்கள் சிவன் வடிவேயாகும்.

கதிர் கண்ட காந்தம் கனலின் வடிவாம்
மதி கண்ட காந்தம் மணிநீர் வடிவாம்
சதி கொண்ட சாக்கி எரியன் வடிவாம்
எதிர் கொண்ட ஈசன் எழில் வடிவாமே -1631

என்பது திருமந்திரம்.

'பலரோடும் சேர்ந்து சிவனைத் தேடி அலைவேன். தேடிக் கண்ட பிறகு, என் உயிர் அவனது திருவடியைச் சென்று சேர்வதற்காக இந்த உடம்பு அழிகின்ற வரை அவனை விடாது பற்றிக் கொள்வேன்' என்று திருமூலர் வழிகாட்டி நம்மை உய்விக்கிறார்.

சிவனது அருள் வேணடுவார், அஃது ஒன்றினையே நாடி முயல வேண்டும் என்பதும், முயன்று பெற்ற பின் அதனை விடாமையும் வேண்டும் என்பதும் திருமூலரின் பாடல்கள் வழி வலியுறுத்தப் பெறுகின்றமை காணலாம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

56. அவவேடம், தவவேடம், ஞானவேடம், சிவவேடம்

பேராசிரியர். **ஆ. சிவலிங்கனார்**
மயிலம் பொம்மபுர ஆதீனப்புலவர்
புதுச்சேரி.

வேடம்

வேடு எனும் சொல் மறைதல் அல்லது மறைத்தல் எனப் பொருள்படும். ஒரு பாண்டத்தின் (அண்டா அல்லது குண்டானில்) மேலே உள்ளிடத்தை மறைத்துக் கட்டுவதை வேடு கட்டுதல் என்பர். கட்டும் துணிக்கும் வேடு எனப் பெயர். சுடுநீர் நிரம்பிய பாண்டத்தின் வெளிப்படும் ஆவியை நோயுற்றவர் முகத்திற் பிடிக்கத் துணிப் போர்வையால் அவரை மூடுவர். அவர் அப்படி மூடி ஆவி பிடித்தலை வேடு பிடித்தல் அல்லது வேது பிடித்தல் என்பர்.

மலையில் மறைந்து வாழ்பவர் வேடர் எனப்படுவர். அவர் விலங்குகளை பறவைகளை மறைந்து கொல்லுதலுக்கு வேட்டை என்பது பெயர். 'புதல் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று' -(குறள் 274) எனும் குறளைக் காண்க.

நாடகத்தில் முருகனாக நடிப்பவன், தன்னை- தன் உடம்பை அதன் இயல்பில் விடாமல் மறைத்து முருகன் உடம்புபோல் அணி செய்து கொண்டு வேலையும் பிடித்திருப்பான். அவன் தன் உடம்பை முருகன் உடம்பாகக் காட்டி மறைக்கிறான். எனவே அவன் தன் உடம்பை மறைத்து முருகன் உடம்பில் இருப்பதால் அவனை வேடதாரி என்போம்.

உண்மையை மறைத்து மாறாகப் பேசுபவனை வேடம் போடுகிறான், நடிக்கிறான் என்று கூறுகிறோம். இங்கும் வேடம் என்பது மறைப்பையுணர்த்தும்.

எனவே, வேடம் என்பது தொழிற் பெயராய் மறைதல் அல்லது மறைத்தல் எனும் பொருள்படுதலையறியலாம். அதனால் வேடம் என்பது ஒருவன் தன்னைப் பிறர்போல் அல்லது பிறவற்றைப் போல் உருக் கொண்டு காட்டுவதாம்.

வாழ்க்கையில் பிறரை ஏமாற்றுவதற்காக நல்லவனின் நடை உடைகளைத் தாம் மேற்கொண்டு திரிபவரும் உண்டு. அவரின் இயல்புணர்ந்தோர் வேடம் போடுகிறார் என்பர். நல்லவர்தாம் கொள்ளும்

நெறிக்கேற்ப நடைஉடைகளைக் கொள்வர். அவர்களைக் காண்போர் மெய்ம்மையானவராகக் காண்பர். அவர் வேடம் கொண்டவர்அவ்வேடத்திற்கேற்ப நடவாமல் நடப்பது போல் காட்டிக் கொள்ளின் அவர் வேடம் பொய்வேடம் ஆம்.

நால்வகை வேடம்

சிவநெறிச் செல்வோர் சிவபிரானுக்குரிய திருநீறு, உருத்திராக்கம், தோலாடை முதலியவற்றைத் தாம் அணிந்து உலவுவர். அவர் சிவவேடர் எனப்படுவர். அவ்வேடத்துக்கேற்ப உண்மையாகவே நல்ல எண்ணம் நல்ல செயல் மேற்கொண்டு உலவுவர். அவர்போலவே சிவவேடம் கொண்டு தாமும் நல்லவர் போல் நடித்து உலகை ஏமாற்றிப் பிழைப்போரும் உண்டு. அவர் அவவேடர் அதாவது பொய் வேடர் எனப்படுவர். திருமூலர் இவ்வேடர்களை அவவேடர், தவவேடர், ஞானவேடர், சிவவேடர் என நால்வகையில் கூறுவர். அவவேடர் பொய்வேடர். மற்றையோர் மெய் வேடராயினும் அவரவர் கொண்ட வேடத்துக்கேற்ப நடத்தல் வேண்டும் என்றும், இல்லையேல் பொய் வேடராவர் என்றும் திருமூலர் கூறுகின்றார். அவர் அவவேடம், தவ வேடம், ஞானவேடம், சிவவேடம் எனும் தலைப்பில் கூறும் சில செய்திகள் வருமாறு.

சிவசாதனம்

சிவ வேடத்துக்கு வெளிப்படையாகத் தெரியவரும் அடையாளங்கள் பல. அவை சிவபதம் அடைதற்குரிய சாதனம் எனப்படும். சாதனம் - கருவி. சிவவேடத்துக்குரிய சாதனங்களாகத் திருமூலர் பின்வருவனவற்றைக் கூறுவர்.

கோவணம், போர்வை, தலைத்தொப்பி, திருநீறு, குண்டலம், உருத்திராக்கம், ஊதுசங்கு, திருநீற்று மடல், திருவோடு, பாதகுறடு, ஆசனம், யோகபட்டயம், தண்டு, பிரம்புக்கோல் என்பவனவாம் (திருமந்திரம் 1535,1536) இவற்றுள் நீறு என்றது உடம்பு முழுவதும் பூசும் திருநீற்றை, திருநீற்றுமடல் என்றது திருநீறு வைத்துள்ள கலம். திருவோடு பிச்சையேற்றுண்கலம். தண்டு என்பது யோகத்தமரும்போது கையை அமர்த்தும் யோகதண்டம். பிரம்பு என்பது ஒன்றைச் சுட்டிக்காட்டும் கோல். யோகபட்டம் என்பது மார்பில் குறுக்காகப் பூணும் துணிச்சீலை.

இனித் திருமூலர் நால்வகை வேடத்தார் பற்றிக் கூறுவன வருமாறு.

அவவேடம் என்பது பொய் வேடம்(1632) வேடம் மேற்கொள்ளும் போதே உலகை வஞ்சித்து ஏமாற்றிப் பலன் பெறப்போடும் வேடம்.

தவவேடம் என்பது தவம் செய்ய எண்ணிப்போடும் வேடம். இவ்வேடம் உடையவர் வேடத்துக்கேற்ப நடப்பர். அவ்வாறு நடவாதோர் அவவேடத்தர் ஆவர்.

ஞான வேடம் என்பது சிவஞானம் கைவரப் பெற்றவராகி அதற்கேற்ப நடைஉடை பாவனை கொண்டு நடக்கும் நிலை. இந்நிலையில் உண்மையாக நடப்பவர் உண்டு. இவ்வேடத்துக்கு ஏற்ப நடக்க எண்ணியும் உலகப்பற்றுக் காரணமாகவும் போகபோக்கிய விருப்புக் காரணமாகவும் மாறாக நடப்பவரும் உண்டு. அவரும் அவவேடத்தாரே.

சிவவேடம் என்பது சிவசாதனங்கள் கொண்டு அதற்கேற்பச் சிவநெறியில் நடப்பது. இதற்கு மாறாக நடப்பது சிவவேடமிருந்தும் அவவேடமேயாகும்.

அவவேடம் முதலிய நான்கும் பற்றிக் கூறிய இடங்களில் அவவேடமே அதிகம் கூறப்பட்டது. அவவேடம் பூண்டார் உலகை மயக்கித் தாம் அனுபவிக்க விரும்புவனவற்றைப்பெறுதலே பயனாக அடைவர். சிவகதியடையார் (1627)

சிவஞானம் இல்லாதவர் ஞானமுடையவர் போல் நடித்தாலும் இந்நாட்டில் இழிதொழிலே செய்வர். நாடும் நலம் கெடும் (1628) ஞான வேடம் அல்லது ஞானநெறி என்பது எப்போதும் உள்ளன்புடன் நமசிவாய மந்திரத்தைக் கூறுதல். ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொல்லாம் என்பது பெரியபுராணம் (1248)

அவவேடம் என்பது எல்லா வேடங்களிலும் பொய்யாக நடிப்பது. தவவேடம் என்பது தவத்தோர்க்குரிய ஆசனம், தண்டம் கோவணம் முதலியன கொண்டிருப்பது. ஞான வேடம் என்பது சாதனங்களால் தெரிவிப்பதன்றி மெய்யுணர்ந்தார் போல் நடிப்பது. சிவவேடம் என்பது சிவனைத் தன்னிடத்துக் கொண்ட அடையாளம் கொள்வது.

சிவ அடையாளமாவது இறையருளால் அவனுக்கு அடிமை என்ற உணர்வுடன் தன் உடம்பை இறைவன் உறையும் கோயிலாகக் கொண்டு ஆணவமின்றி நல்வினை தீவினை இன்ப துன்பங்களைச் சமமாக எண்ணி உலவுவதேயாம். (1648)

வேடத்தின் பயன்

பொய்வேடம் மெய்வேடம் இரண்டில் பொய்வேடம் ஒழிக்கத்தக்கது. இதை நாடாளும் அரசன் ஒழித்தல் வேண்டும் (1629) பொய் வேடத்தார்

நரகம் புகுவர் (1631) என்றாலும் உலகில் உள்ள அளவும் உலகை வஞ்சித்து உண்ணுதல் கூடும். அவ்வளவே பயன். அவ்வளவுதானா? பொய் வேடமும் ஒரு பயன் தரும்; சிவகதி தரும் என்பர் திருமூலர். மாணிக்கவாசகர்,

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன் (திருச்சதகம் 11)

என்றார்.

நடித்து வீடுபுக விரைகின்றேன் என்றார் அவர். பொய்யாக நடிப்பவன் அந்நடிப்பையே தன் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தாலும் ஒருகால், இப்பொய் நடிப்புக்கே இவ்வளவு சிறப்பும் பலனும் உண்டென்றால் மெய்யாகவே நடந்தால் எவ்வளவு சிறப்பும் பலனும் கிடைக்கும் என்று எண்ண நேரும். நேரின் அதற்கென முயல்வான். மெய்யடியார் கூட்டத்தை விரும்பிச் சேர்வான். பலனும் கிட்டும். மாணிக்கவாசகரும், அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் என இறைவனிடம் வேண்டுகிறார். (திருவாசகம் 376) எனவே பொய் நடிப்பும் போகப்போக மெய் நடிப்பாகிப் பயன் தரும். அதனால் திருமூலரும்,

பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும் உய்வேடமாகும் உணர்ந்தறிந் தோர்க்கே(1632) என்றார். இதன் பொருள், பொய்வேடத்தை மெய்வேடம் போலவே கொண்டு நடந்தாலும் அப்பொய் வேடத்தின் பயனை உணர்ந்து அதாவது அழிவு தருதலையுணர்ந்து மெய்வேடத்தின் பயனை அறிந்தவர்க்கு அப்பொய்வேடமே உய்தற்குரிய அதாவது உலகத்துன்பிலிருந்து பிழைத்துச் சிவகதியடைதற்குரிய வேடமாகும் என்பது.

எனவே திருமூலர் அவவேடம் பயன்தராது என்றாலும் அதுவும் ஒருகால் பயன்தரும் என்ற கொள்கையும் உடையவர் என அறியலாம். வேட நெறி நில்லார் வேடம் பூண்டென்பயன்(240) என்ற வினாவிற்கு விடையும் அதுவாம்.

திருச்சிற்றம்பலம்

✲✲✲✲✲

57. திருநீறு

சைவத்திரு. **வா. ஞானப்பிரகாசம்**
திருப்பாதிரிப்புலியூர்

இது திருமந்திரம், ஆறாம் தந்திரத்துள் பத்தாம் தலைப்பாக அமைவது. ஒன்பதாம் தலைப்பில் தவவேடம் சொல்லப்பட்டது. தவவேடங்களில் முதல் வேடமாக 'பூதி அணிவது சாதனம் ஆதியில்' எனச் சொல்லப்பட்டாலும் திருநீற்றின் பெருமையைத் தனி அதிகாரமாக மூன்று மந்திரங்களில் இங்குத் திருமூலர் சிறப்பாகக் கூறினார்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும்; சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே -1643

என்பது முதல் தந்திரம்.

யாவரேனும், சிவபெருமான் பூசுவதும், அணிந்தோர் யாவர்க்கும் கவசமாய் நிற்பதும் ஆகிய திருநீற்றை அதன் வெள்ளொளி மிக விளங்குமாறு பூசி மகிழ்ச்சியுறுவராயின், அவரிடத்து வினைகள் தங்கியிரா. சிவகதி கூடும். சிவனது அழகிய திருவடியையும் அவர் அடைவர். என்பது இதன் பொருள்.

திருநீற்றைச் சிவபெருமானே முழுவதும் பூசியுள்ளான். 'பூசுவதும் வெண்ணீறு' என்பது திருவாசகம். 'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு' என்றும்,

விலையிலி சாந்தமென்று வெறிநீறு பூசி
விளையாடும் வேட விகிர்தர்

என்றும் அப்பர் அருள்வார்.

சிவநெறியாளர்க்குத் திருநீறே கவசமாக அமைகின்றது. 'ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்' என்பார் மணிவாசகர்

அவ்வாறு திருநீற்றைப் பூசுவார்க்கு வினைகள் தங்கா. உயிர்களின் வினைகளை- பாவங்களை நீறு செய்வதாலேயே நீறு எனப் பெயர் பெற்றது. சிவாய நம என ஐந்தெழுத்து ஓதியே திருநீறு அணிவர். திருநீறு கவசம், அஞ்செழுத்து அம்பு என்பார் ஞானசம்பந்தர்.

வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திர மாவன அஞ்செழுத்துமே (3.22.10)

சிவகதி என்ற பதமுத்தி; திருவடி சேர்தல் என்பது பரமுத்தி.

இம்மந்திரத்தால் திருநீற்றது சிறப்பு வகுத்துணர்த்தப்பட்டது.

நூலும் சிகையும் உணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்தம்; நுண்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரம்உயிர்
ஓரொன் றிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே (1644)

என்பது அடுத்த மந்திரம்.

அந்தண வேடத்துள் முதன்மை பெற்று விளங்கும் முப்புரிநூல், சிகை என்பவற்றது உண்மை இன்ன என்பதை முழு மூடராயுள்ளோர் சிறிதும் அறிய மாட்டார். அவற்றின் உண்மையாவன யாவை எனின், முப்புரிநூல் என்பது வேதத்தின் முடிநிலைப் பகுதியாகிய உபநிடதங்களும், சிகை என்பது அவற்றின் பொருளுணர்வுமாம். நூலும் சிகையும் தம்பால் பொருந்தப் பெற்ற அந்தணர்கள், பரமான்மா சீவான்மா என்னும் இரண்டையும் தனித்தனி நன்குணர்வர் எனில், அது வேதத்தை நன்கு ஓதி, வேதாந்தத்தை நன்கு உணரும் பொழுதேயாம். வாளா நூலையும் சிகையையும் பொருந்த வைத்துக் கொள்வதனால் மட்டுமன்று, என்பது இதன் பொருள்.

வேதத்தில் உள்ளது நீறு(2.66.8) என்பார் திருஞானசம்பந்தர். எனவே வேத வேதாந்தங்களை நன்கு ஓதி உணர்ந்தவர் திருநீற்றின் பெருமையை உணர்வர் என இதனால் உணர்த்தப்பட்டது.

அரசுடன் ஆலத்தி ஆகும் அக் காரம்
விரவு கனலில் வியன்உரு மாறி
நிரவயன் நின்மலன் தாள்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே. (1645)

என்பது மூன்றாவது மந்திரம்.

பசுவின் சாணம் அரசு முதலிய சமித்துக்கள் பொருத்தப்பட்ட சிவாக்கினியில் வெந்து தனது முன்னைப் பருவுரு மாறி அமைந்த அந்தத் திருநீற்றை உடல் முழுவதும் பூசித் தூய்மையை அடைந்த நல்லோரது உடம்பே பிரம ஞானத்தை அடையும் உயர்ந்த குலத்து உடம்பாம் என்பது இதன் பொருள்.

இப்பாடலுள், க்ஷாரம் என்னும் வடசொல், காரம் எனத் தற்பவமாய் அகரச் சுட்டேற்று, அக்காரம் என வந்தது. ஆன்மாக்களின் மலமாசினைக் கழுவுவதால் திருநீறு காரம் எனப்பெயர் பெற்றது.

திருநீற்றை உடம்பில் பூசியவரே பிரம உயர் குலம் என்பதால் திருநீற்றைப் பூசாதார் கடவுளை உணரமாட்டார் என்பது வலியுறுத்தப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

58. அபக்குவன், பக்குவன்

முனைவர். பழ. பழனியப்பன்
உதவி இயக்குநர், தமிழ் இணையப்பல்கலைக்கழகம், சென்னை

உலக வாழ்க்கை மிக ஆச்சர்யமானதாக இருக்கிறது. இன்ன இடத்தில், இன்னநாளில், இன்னவர்க்கு இப்படி இவ்வுயிர் பிறிந்து, இன்னபடி வளர்ந்து, தேய்ந்து, தடுமாறி இன்ன நாளில் இப்படி இவ்வுயிர் போதல் வேண்டும் என்ற ஒவ்வொரு உயிரின் வாழ்வுக் குறிப்பேட்டையும் எவர் எழுதுகிறார்? ஏன் எழுதுகிறார்? இதனால் வரும் பயன் என்ன? எழுதியதுதான் நடை முறைப்படுத்தப்படுகிறா? நடைபெறுத்துவது யார்? என்ற சிக்கலும், சிடுக்கும் நிறைந்த கேள்விகளுக்கு தீர்வு கிடைத்துவிட்டால் எல்லா உயிர்களும் அமைதி என்ற இன்பத்தைப் பெற்று இளைப்பாறும்.

இந்த அமைதியை அடக்கத்தைப் பெற பல வழிகளை உலக உயிர்கள் கண்டு சேரலும் உண்டு; தானே வழியை கண்டறிய முற்படுதலும் உண்டு; நூல் வழித் தேடலும் உண்டு; ஆசான் வழிச்சார்தலும் உண்டு; இவை தவிர பக்தி வழி, தொண்டு வழி, தத்துவவழி எனப்பல வழிகளும் இதற்கு உண்டு; இவ்வழிகள் சென்று சேர்வதும் உண்டு; தொய்வடைவதும் உண்டு; திசை மாறுவதும் உண்டு; நேரான வழி, நிலையான வழி எனப் பலரால் பின்பற்றப்படுதலும் உண்டு.

இவற்றுள் நேரான, நிலையான திருவழி ஒன்றைத் திருமூலர் இறையருளாலும், குருவருளாலும் உயிர்களுக்கு திருமந்திரம் என்ற நூலில் காட்டியுள்ளார். இவ்வழி முன்னோரால் மொழியப்பட்ட பெருமையது. பின்னோரால் ஏற்கப்பட்ட தன்மையது. அதுவே சிவவழியாகும்.

சிவவழி

சிவநிலை எனப்படும் முழுநிலையை அடைய, குருவின் உபதேச மொழிகள் என்ற பாலம், பாதுகாப்பாக அமைகின்றது. குருகாட்ட சிவத்தை அடைந்துவிட்டால் உயிர் இளைப்பாறும்; மீண்டும் பிறவாது; களைப்புறாது என்ற சிவவழி திருமூலர் காட்டும் நிறை வழியாகும்.

தொழிலார மாமணித் தூய்தான சிந்தை
எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே
விழலார் விறலாம் வினையதுபோகக்
கழலார் திருவடி கண்டருளாமே -1696

உயிர்களிடத்துள்ள மாமணி போன்ற உள்ளத்தில் ஆண்டவனை எழிலாக இருக்க இடம் கொடுத்து விட்டால், அந்நேரத்திலேயே உயிர்களின் வினைகள் அகன்றுவிடும்; இறைவன் திருவடி கிடைத்துவிடும். அத்திருவடி மீண்டும் உயிரை அலுப்புறச் செய்யாது என்று சிவவழியை- மேற்செய்யுள் எடுத்துரைக்கின்றது. இவ்வழியை உயிர்கள் நூலுரை மூலமாகவோ, தாமாகவோ அடைந்துவிட இயலாது; குரு வழிகாட்டவே அடைய இயலும். அதிலும் மெய்யான குரு வழிகாட்ட வேண்டும்.

அடிவைத்தருளுதி ஆசான், இன்றுன்னா
அடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சக்தியாலே
அடிபெற்ற ஞானத்தன் ஆசற் றுளோனே -1699

மெய்யாசிரியனிடம் சென்று “என் தலை மீது அடிவைத்து அருளுக சிவவழியைக் காட்டுக” எனக் கேட்ட பின்னே சிவவழி கிடைக்கப் பெறும். அப்படி மெய்யாசிரியனால் அடிசூட்டப் பெற்றவன் முக்தன் ஆகிறான்.

இச்சிவமொழியைப் பெற மெய்யாசிரியர் மிகுந்த உதவி புரிகின்றார். ஆனால் இன்றைக்கு மெய்யாசிரியர் என்ற நிலையில் அமைபவர் சிலரே. மெய்ஞான குருவாகப் போலிருப்பார். இவர்-பலர். எனவே இவர்களை கண்டறிதல் ஒவ்வொரு உயிர்க்கும் இடர்ப் பாடுடையது. அதற்கு வழிகாட்ட திருமூலர் அபக்குவன், பக்குவம் என்ற இரு தலைப்புகளில் பக்குவம் ஆகாத குருவையும், பக்குவன் ஆன குருவையும்; பக்குவமாகாத ஆன்மாவையும், பக்குவமான ஆன்மாவையும்; அவரது இயல்புகளையும் எடுத்துரைக்கிறார். இதனைக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

அபக்குவன்

அபக்குவன் என்ற தலைப்பில் குரு, சீடன் ஆகாதார் இயல்புகளைத் திருமூலர் காட்டி நிற்கின்றார். குருவாகாதார் இயல்பை விட, சீடர் ஆகாதார் இயல்புகளே அதிகமாக இத்தலைப்பில் எடுத்துரைக்கப்பெறுகின்றது. ஏனெனில் பொய்யான சீடனே போலிக் குருவாக மாறுகிறான். அதனை நம்பி ஞான வழியில் இறங்கும் உயிர்கள் இடர்ப்பாடு அடைகின்றன. எனவே உண்மையான சீடனாகாதவன் உண்மையான குரு ஆக இயலாது என்பதால் பொய்ச்சீடனின் இயல்புகள் 8 பாடல்களிலும், 1 பாடலில் பொய்க் குருவின் இயல்பும் மந்திரமாகக் காட்டப்பெற்றுள்ளது.

பொய்ச்சீடன்

பொய்ச்சீடன் ஞானத்திற்கான தலைவாசலை நல்லாசிரியன் காட்டிய போதும் அவன் புழக்கடை வாசலையே விரும்பிச் சேருவான்.(2)

பொய்ச்சீடன் தன் அறிவை மறைத்து நிற்கின்ற மாயக் கண்ணாடியான மாயையோடும், அக்கண்ணாடியில் சேர்ந்திருக்கும் ஆணவ அழுக்கோடும் கலந்து தன் உண்மைநிலையை உணரா இயல்பினனாக இருப்பான் (2)

இவனுக்கு சிவபெருமான் உருவமற்றவராகவே, இவனால் அறிந்து கொள்ள இயலாதவராகவே இவனுள் உறைந்துள்ளார். அதனை ஓர் உவமை மூலம் திருமூலர் விளக்குகிறார். ஒரு தாய் குழந்தைக்குப் பால் ஊட்டுகையில் அவள் மார்பில் பால் சுரக்கின்றது. அதுவே பால் ஊட்டாத போதும், தாய்மை அடையாத போதும் அவள் மார்பு பாலைத் தருவது இல்லை. இதனால் அவளுள் பால் இல்லை என்ற முடிவுக்கு வர இயலாது. தன்னுள் இருக்கும் பாலை தான் உணராத தாயின் தன்மைபோல- பொய்ச்சீடனும் தன்னுள் இருக்கும் கடவுளை தான் உணர மாட்டான்(3)

பொய்ச்சீடனின் வாய் ஒன்று சொல்லும்; மனம் ஒன்று சிந்திக்கும்; உடல் ஒன்று செய்யும். இதனால் அவன் பேய்த்தன்மை உடையவனாக மற்றவரால் அறியப்பெறுவான். (4)

இவ்வாறு வாயொன்று சொல்ல மனம் ஒன்று கருத, உடலொன்று செய்ய இருக்கும் இயல்பினன் - ஞானவழிக்கு மட்டுமல்ல, உலக வாழ்வினுக்கும் தகாதவன் ஆவான். அவனை நாடாளும் மன்னர் நாடு கடத்தக் கூட தயங்கமாட்டார்கள் (5)

கன்மம் என்ற வினைகள் எல்லோர்க்கும், எடுக்கும் பிறவிதோறும் - அதற்கான பயனைத் தந்து உயிர்களை ஆட்டுவிக்கும். ஆனால் சிவத்தன்மையை அடைய தவவலிமை பெற்ற சான்றோர்க்கு அக்கன்மம்- எவ்வித இடர்ப்பாட்டையும் தராது; அது எவ்வாறு என்பதையும் தேவரும் அறியார்- ஆனால் தவமறியாத சீடன், இக்கன்மங்களை சிறிதும் குறைவுபடாது அனுபவித்தே ஆகவேண்டும் (6)

அறிவாகிய ஞானவொளியைக் காணும் கண் இல்லாதவன் பொய்ச்சீடனாவன். இவனுக்கு ஊனக்கண் பொருள்களைக் காட்டும்; ஞானவொளியைக் காட்டாது. மாயையாகிய இருளில் அமிழ்ந்து கிடக்கும் இவனுக்கு ஒளிவந்ததும் தெரியாது. ஒளி கொண்டு ஞானத்தைக் காணவும் முடியாது. (7)

பொய்மைச்சீடன் மலம் ஐந்தும் மாற்றும் வகை தெரியாதவன். காமம், வெகுளி, மயக்கம் ஆகியன நீங்காதவன். பிறப்பு, இறப்பு அஞ்சாதவன். இப்படிப்பட்ட ஒரு சீடன் கால வசத்தாலும், போலித்தன்மையாலும், ஆசிரியனாக மாறுகையில் அவனிடம் போலிப்பண்பே ஆட்சி செய்யும்.

இது அறியாமல் இவனிடம் சேரும் உயிர்கள்,

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழி விழுமாறே

என்ற நிலையில் பிறவித்துன்பத்தில் குருவும் அழுந்துவார்; அவரைச் சார்ந்த சீடர்களும் அழுந்துவார். குருடும், குருடும் என குருவிற்கும் சீடனுக்கும் வேறுபாடு காட்டாதிருக்கும் மந்திரக்குறிப்பு எண்ணத்தக்கது. இவ்வாறு அபக்குவநிலை திருமந்திரத்தில் எடுத்தியம்பப் பெறுகின்றது.

பக்குவன்

பக்குவப்பட்ட ஆசிரியனுடன், பக்குவிக்கப்பட்ட சீடனும் பக்குவன் ஆவார். அவர்களின் இயல்புகளை 14 பாடல்களில் திருமூலர் விரித்துரைக்கிறார். இப்பகுதியில் சற்குரு, சற்சீடன் ஆகிய இருவருக்கும் சமஅளவில் இயல்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மெய்க்குருவின் இயல்பு

இறையடி தாழ்ந்ததை வணக்கமும் எய்தி
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே (12)

என்றவாறு உடம்பை விடுத்து சிவத்தோடு இணையும் அறிவைத் தருபவர் உண்மை ஆசிரியர் ஆகின்றார்.

இவ்வுண்மையாசிரியர் அதிபக்குவமான உயிர்களுக்கு சிவ உண்மையைப் போதிக்க வேண்டும். முதலில் கேள்வி ஞானத்தால் இறை உண்மையையும், பின் நிட்டை வழியாக இறைவனின் வியாபகத்தையும் தெளிவு பெறச் செய்து, அதனுள் அவர்களை வியாபிக்க வைத்து நிட்டையின் உயர்நிலையான கிழக்கு முதலிய திசைகளற்ற இறைவியாபகத்தை அறிவித்தலே குருவின் வெற்றியாகும். அறிதலே ஆன்மாவின் வெற்றியாகின்றது (11)

குருவின் உபதேச தேவை

பக்குவமாக ஆன்மாக்களுக்கு குரு உபதேசம் தேவையாகின்றது. குருவினைக் கண்டு அடைதலும் சிவத்தை கண்டு அடைதலுக்குச் சமமாகும்.

அவ்வாறு சிவமாகிய நல்குருவை உயிர்கள் பெறவேண்டும். அக்குருவிற்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்துவிட வேண்டும். அவர் வழியில் எள்ளளவு சந்தேகமோ, சலிப்போ, பின் வாங்கலோ இல்லாமல் சிவத்தைச் சேரவேண்டும். இப்பணிக்கு குரு உபதேசம் தேவையாகின்றது (4)

குருவிடம் உபதேசம் கேட்கும் முறை

பக்குவப்பட வேண்டிய உயிர் குருவை அடைந்து, நூல்கள் சொன்ன முறைப்படி வணங்கல் வேண்டும் (1). அவரிடம், ஆசானே உம்மை அடையவே இத்தனைநாள் காத்திருந்தேன். உம்மை அடைந்துவிட்டேன். இனி மாற்றார் ஒருவரோடும் சேரமாட்டேன். எனவே என்னை ஏற்று இப்போதே உமது திருவடிகளைச் சூட்டி அருள்புரிய வேண்டும் என்று பணிமொழிகள் கூறி குருவிடம் உபதேசம் பெறவேண்டும்.

குருவிடம் உபதேசம் பெற ஏற்ற நாட்கள்

குருவிடம் உபதேசம் பெறுவதற்கு ஏற்ற நாட்களை திருமந்திரம் எடுத்துரைக்கின்றது. அவை பின்வருமாறு. விருச்சிகமும், கடகமும் ஆகிய இரண்டு ஓரைகளை உடைய சுவாதி, விசாகம் என்னும் இரு நட்சத்திரங்களும் குரு உபதேசம் பெற்றிட ஏற்ற நாட்களாகும். இந்நாட்களில் உபதேசம் பெற்றோர் சற்சீடனாக வருதல் திண்ணம்(9)

குரு கற்பிக்க வேண்டிய முறை

குரு தன்னிடம் பணிந்து நிற்கும் சீடனைத் தன் அருள்நோக்கால் தனக்கேற்றவனாக மாற்றிக் கொண்டு, அவனது மனம் எனும் நிலத்தில் ஞானம் என்னும் விதையை நட்டுக்காக்கும் உழவனாகச் செயல்பட்டு சிவத்தைப் பயிரிட வேண்டும். அவ்வப்போது ஐம்புலன் என்னும் கிருமிகளால் நோய் படரும்போது அவற்றை மெய்யுணர்வு என்னும் ஞானவெயிலால் விரட்ட வேண்டும். தன்னிடம் இணைந்த மாணவனை, தன்னவனாக, சிவத்தன்மையனாக மாற்றிடும்வரை நற்குரு ஓய்தல் கூடாது(3).

இவ்வாறு நற்குருவின் இயல்புகளை எடுத்துரைத்திட்ட திருமூலர் இதன்பின்னர் நற்சீடனின் இயல்பைச் சில பாடல்களில் எடுத்துரைக்கின்றார். அவை பின்வருமாறு.

நற்சீடனின் இயல்பு

சற்சீடன் முதலில் உண்மையான சமயம் எது என அறிதல் வேண்டும். அவன் பிறவித்துன்பத்திற்கு அஞ்சவேண்டும்; அறநெறி தளராதவனாக இருக்க வேண்டும்.(7)

இவன் ஆச்சாரியன்பால் அன்பும், சிவத்தில் மூழ்கவேண்டும் என்ற எண்ணமும் உடையவனாக இருக்கவேண்டும். சத்துப்பொருள் (நிலையான பொருள்-ஆண்டவன்) எது? அசத்துபொருள் (நிலையில்லாப் பொருள்- உயிர் தவிர்ந்த உலகப்பொருள்கள் எல்லாம்) எது? என்றறியத்தக்கவனாக இருத்தல் வேண்டும்(11)

ஆச்சாரியன்பால் அன்பு பெருக, அதனால் ஆச்சாரியனது திருவடிச் சூட்டப் பெறும் பெருமையை உடையவன் சற்சீடன் ஆவான். அவன் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்ற நான்கு சாதனங்களையும் முற்றக் கற்று, உணர்ந்து - உலகியல் நீங்கப்பெற்று, இவ்வழியாக ஞானம் பெறும் தகுதியுடையவனாகிறான். இவ்வழியில் சிவஞானத்தையும் பெற்று அவன் வெற்றி பெறுவான்.

இவ்வாறு பிறத்தல், அனுபவித்தல், அலைப்புறல் என்ற தொல்லைகள் நம்மைவிட்டு நீங்க நல்லதொரு வழியைத் திருமூலர் தன் மந்திரங்கள் மூலமாகக் காட்டியுள்ளார். இவரின் வழியில் குருட்டுவழியில் செல்லாமல் நேர்வழி பற்றிச் சிவவழியடைந்து பிறவித்துன்பம் போக்குவோம்.

திருச்சிற்றம்பலம்

ஏழாம் தந்திரம்

59. ஆறாதாரம், அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம்

சைவத்தமிழ்மணி,முனைவர். **இரா. செல்வக்கணபதி** *எம்.ஏ.பி.எச்டி.,*
தருமபுரம் ஆதீனக்கல்லூரி முதல்வர் (ஓய்வு) சென்னை.

திருமூலர் அருளிய திருமந்திரமாலையின் ஏழாம் தந்திரம் ஆறாதாரம் முதல், இதோபதேசம் ஈறாக முப்பத்தெட்டு உட்தலைப்புக்களில் நடையிடுகிறது. ஆறாதாரம், சிவபூசை, குருபூசை, சமாதிக்கிரியை, பசு இலக்கணம் முதலிய இன்றியமையா சைவ சமயப் பெரும் பொருள்கள் குறித்த விரிவான. முதல்-சைவ சமயப் பதிவுகளாக இவை அமைந்திருப்பதை அறிய முடிகிறது. ஏழாந்தந்திரத்தில் வரிசையாக இடம் பெற்றுள்ள ஆறாதாரம், அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்னும் ஏழு தலைப்புக்களுள் இடம் பெற்றுள்ள திருமந்திரப் பாடல்களில் சாரங்களைத் தொகுத்து வழங்கும் முறையில் இக்கட்டுரை நடையிடுகிறது.

முதலாவது ஆறாதாரம் என்பது. இப்பகுதியில் எட்டுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆறு ஆதாரங்களிலும் நின்று தியானித்து மேற்சென்றால் சிவனது திருவடியைக் காணலாம் என்று முதற்பாடலில் திருமூலர் குறிக்கிறார். ஆறாதாரம் என்பன. 1. மூலாதாரம் 2. சுவாதிட்டானம் 3. மணிபூரகம் 4. அநாகதம் 5. விசுத்தி 6.ஆஞ்ஞை.

இவற்றுள் மூலாதாரம் என்பது உடலில் குதத்திற்கும், கோசத்திற்கும் நடு இடம். வடிவம் முதலியன முக்கோணம், நாலிதழ்க்கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலி சக்தி, ஓங்காரம்.

சுவாத்திட்டானம் என்பது கோசத்திற்கும் நாபிக்கும் நடு இடத்தில் அமைவது. நாற்சதுரம், ஆறிதழ்க்கமலம், செம்பொன் நிறம், பிரம்மா, திரஸ்வச, ஐந்தெழுத்துக்கள் ந காரம்.

மணிபூரகம் என்பது நாபிகமலம் மூன்றாம் பிறை பத்திதழ்க்கமலம். மரகத நிறம், விஷ்ணு, லட்சுமி, மகாரம்.

அநாகதம் என்பது இருதய கமலம், பன்னிரண்டிதழ்த் தாமரை, முக்கோணம், ஸ்படிகநிறம், உருத்திரன், பார்வதி, சி காரம்.

விசுத்தி என்பது கண்டம். பதினொறிதழ்க்கமலம். அறுகோணம், மேகநிறம், மகேஸ்வரன், மகேஸ்வரி, வ காரம்.

ஆறாவது ஆஞ்ஞை, உலாடத்தானம், மூன்றிதழ்க் கமலம் வட்டம், படிகநிறம். சதாசிவம், மனோன்மணி. ய காரம்.

மேற்குறித்தவற்றுள் ஒவ்வொரு ஆதாரத்திற்கும் முறையே தானம். ஆசனம், மந்திரம், தேவதையின் நிறம், தெய்வம். சக்தி, அட்சரம் என நிரலே தரப்பட்டுள்ளன. ஆறாதாரங்களையும் அவ்வற்றிற்குரிய ஆசன அடையாளம் காட்டித் திருமூலர்.

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈறாறும்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்து முதலிரண்டும்
காலங்கண் டானடி காணலு மாமே

எனக்குறித்துள்ளளார்.

மேலும், ஆறாதாரம் என்ற இப்பகுதியில், பரசிவம் பதினாறு கலைகளையும் கடந்த நிலையில் விளங்குகின்றது. பிராசத நெறியில் (யோகம்) நின்று நிராதாரம் சென்றபோது ஒளிமயமாகிய பராபரன் அருளைப் பொழிவான். ஆறு ஆதாரங்களையும் சுத்தி செய்து ஆன்மாவில் பொருத்தி இருப்பதே சக மார்க்கம் என்பது. மேதை முதலாகப் பிரணவ உபாகணையை மேற்கொண்டால் அத்துவா சுத்தி உண்டாகி இன்பம் சிறக்கும். ஆதார தியானத்தை மேற்கொண்டால் ஓம் எனனும் பிரணவத்திலிருந்து விரிந்த ஐம்பது எழுத்துக்களும் ஒடுங்கி நாதமாகும். சூக்கும உடம்பும், தூல உடம்பும் பொருந்துவது மேற்குறித்த அட்சரங்களாலும், தத்துவங்களாலும் ஆகும். ஆன்மா விசுத்திச் சக்கரத்திற்கு மேல், நிராதாரத்தில் பற்றுக் கொள்ளும்போது பரிபூரணமாகத் திகழ்கிறது. இவ்வாறான செய்திகளை வரிசைப்பட உரைத்து ஆறாதாரம் என்ற பகுதியைத் திருமூலர் நிறைவு செய்கிறார்.

இரண்டாவதாகிய அண்டலிங்கம் என்ற பகுதியில் பதினான்கு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. விரிந்து பரந்து தோன்றும் இப்பேரண்டத்தையே சிவன் திருமேனியாகக் கண்டு காட்டும் முயற்சியை ஆசிரியர் இப்பகுதியில் விரித்துரை செய்து மேற்கொண்டுள்ளார். வேதம், காமிக ஆகமம், வாவள ஆகமம் முதலியவற்றில் இலிங்கம் பற்றி விரிவான பதிவுகள் காணப்படுகின்றன. இலிங்கம் என்ற சொல் இலிங்+கம் எனப்பிரியும். இலிங் என்பது லயம். கம்-தோற்றம். எனவே படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் சிவன் பெருமிதமே சிவலிங்கம்.

காணாத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாம்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்

என்று அருவுருவத் திருமேனியே நாம் காணும் சிவலிங்கம் என்பதைச் சேக்கிழார் விளக்கியுள்ளார். சிவலிங்கத்தின் அடிப்பாகம் (பிண்டிகை) சக்தி வடிவம். எழுந்து நிற்கும் தண்டுப்பகுதி சிவன் வடிவம். எனவே இலிங்கம் என்பது ஞானசக்தி வடிவம் என்பது புலனாகிறது. பீடம் கிரியா சக்தி வடிவம் என்பதும் பெறப்படுகிறது. இவை இரண்டும் சிவன் திருமேனியாகக் கொள்ளப்படும்.

இலிங்கமே பொருட்பிரபஞ்சமாகவும்; சொற்பிரபஞ்சமாகவும் விரிந்துள்ளது. சதாசிவ மூர்த்தி தன் சிற்சக்தியால் அறிவையும், குண்டலினி சக்தியால் உருவையும் தோற்றுவித்து அருளியுள்ளான். போகம் முதல் வீடு பேறு ஈறாக அனைத்தையும் அருளுபவன் சிவனே. வானத்துத் தேவர்கள் சிவனை இன்பம் கருதி வாழ்த்தினரே அன்றி, உண்மை அறிந்து வாழ்த்தவில்லை. அன்னார் சிவனை,

.: *அண்டம் கடந்து அப்புறம் நின்று*
காத்தனன் என்னும் கருத்து அறியார்

ஆக நின்று எய்த்தனர். சிவம், சிறந்த தேவர்களிடம் எண்ணொளி போன்றும், ஏனைய தேவர்களிடம் உணர்வாகவும் உள்ளான். சிவன் இலிங்கத்திலிருந்தும், குண்டலினியாக இருந்தும் அருளுவான். திருக்கோயிலின் விமானம் தூல லிங்கம். சிவமூர்த்தம் சூக்குமலிங்கம்-*பலி பீடம்* பத்திரலிங்கம்.

சிவலிங்கத் திருமேனியை முத்து, மாணிக்கம், பவளம், மரக்கொம்பு, கல், திருநீறு, மரகதம், சிவாகமம், சாதம், அரிசி, பூ, மணல் முதலியவற்றால் சமைத்து வழிபடலாம். மேலும்,

துன்றுந் தயிர்நெய்பால் துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்
வன்திறல் செங்கல் வடிவுடை வில்வம்பொன்
என்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே. -1720

என வரும் திருமந்திரத்தில் சுட்டப்பட்டவாறு தயிர் முதலியவற்றாலும் சிவலிங்கம் செய்து வழிபடலாம். துய்யமெழுகு என்றது பசுஞ்சாணம். கனல்- அக்கினி. ரதம்-பாதரசம். சலம் -நீர்வற்றிய கலச வடிவம். வில்வம் பொன்- வில்வ மரத்தின் பழம். ஒவ்வொன்றால் செய்து வழிபடுவதற்கும் வெவ்வேறு பயன் உண்டு. அந்தணர் வழிபட ஸ்படிகலிங்கமும்,

மன்னருக்குப் பொன்னாலான லிங்கமும், வைசிகருக்கு மரகதலிங்கமும், சூத்திரருக்கு வாணலிங்கமும் வழிபட உகந்தன. இவ்வாறு சிவனது அகண்ட வியாபகத்தை உணர்ந்த போது சீவனது உடம்பே சிவனாரது கோபுரமாகும். பாசவினாசனாகிய சிவன், நாடியவாறு, உடலையே கோயிலாகக் கொண்டு ஒளியினை நல்குவான். சிவத்துக்கு அண்டமே திருமேனியாகும். பூமி திருவடி, ஆகாயம் கங்கை சூடிய திருமுடியாகும். விசும்பே - உடலாகும்.

போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானகமாவது
நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற தப்பரி சாமே -1724

அண்டலிங்கம் அளத்தற்கரிய பெருமை உடையது. நிலம்- அதன் சக்தி பீடம். இலிங்கம் பாணம்- ஆகாயத்தை அளவி நிற்பது. கடல்- திருமஞ்சனசாலை. மேகநீர்- திருமஞ்சன தீர்த்தம். நட்சத்திரம் மாலை. திக்குகள்- ஆடை.

ஏழாந் தந்திரத்தின் மூன்றாவது பகுதி பிண்டலிங்கம் அமைந்துள்ளது. இப்பகுதியில் நான்கு பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே.

மனித உடம்பில் கால் முதல் இடுப்பு வரை பிரம பீடமாகக் கருதப்படும். உடல் பகுதி- சக்தி பீடம். தலை-பாணம் என்ற வகையில் சிவலிங்கமாகக் கொள்ளப்படும். தலைக்கு மேல் ஞானாவிகம் விளங்குதலின் சிதம்பரம். இவ்வாறு கொண்டு அறிவு உருவாகிய சதாசிவத்தை வணங்கியபோது (அறிவாற்றலைப் பெற்றபோது) மனிதன் சதாசிவமாகிறான். ஆக்கையின் அசைவே திருக்கூத்தாகும். இவ்வகையில் மனித உடலே பிண்டலிங்கமாக நிற்கிறது. ஐம்பூத நாயகரான சதாசிவனை வணங்கினால் நிலைபேறு வாய்க்கும்.

சிவம் மனித உடலையே இடமாகக் கொண்டு ஆண்டு அருளும் திறத்தைத் திருமூலர்,

கோயில் கொண்டன்றே குடிகொண்ட ஐவரும்
வாயில் கொண்டாங்கே வழிநின்று அருளுவர்

தாயில் கொண்டாற்போல் தலைவன் என்உட்புக
வாயில் கொண் டீசனும் ஆளவந் தானே

எனக் குறித்தருளுகிறார். இதில் கோயில்- உடல்; குடிகொண்ட ஐவர்- பிரமன் முதலாகிய ஐவர். அதன் திறம் வருமாறு.

பிரமன் - மண்- மூக்கு- மணம்
விஷ்ணு- நீர்- நாக்கு-சுவை
உருத்திரன்-தீ- கண்-ஒளி
மகேசன்- காற்று-தோல் -ஊறு
சதாசிவன் - ஆகாயம் -செவி-ஓசை

இவற்றையே திருமூலர் 'வாயில் கொண்டு ஆங்கே வழிநின்று அருளுவர்' எனக் குறித்தார். சிவம் ஆறாதலால் பஞ்சகிருத்தியம் இல்லை. மாநந்தி, நாடிகள் பத்தும்(தசநாடிகள்) தொழில் படப் புலன்கள் புறகிட, உடம்பைக் கோயிலாகக் கொண்டான். நாடிகள் பத்தாவன: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சுத்தி, சுலம்புடை, சிங்குவை, பூடை, சங்கினி, குனா என்பன.

நான்காவதாகிய சதாசிவலிங்கம் இருபத்து மூன்று பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. கட்டியபாதம் என்று தொடங்கும் பாடலில் சதாசிவ மூர்த்தியின் வடிவம் சுட்டப்பட்டுள்ளது. வேதா எனப்படும் பிரமன் முதலாக சிவன் ஈறாக வரும் அனைத்தும் பொதுமையில் சதாசிவம் எனக்குறிக்கப்பெறும். சதாசிவம் சிவனின் அண்ட கோசத்தில் ஒளிமயமாக நிறைந்து விளங்கும். அண்டமாகிய காயமே சிவனது அறிவுநிலையாகும். சதாசிவம் உருவமும்-அருவமாக இருந்து உயிருக்கு உபகாரம் செய்யும். சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களும் இவற்றின் நிறங்களும் கீழ் வரும் பாடலால் சுட்டப்பட்டுள்ளன.

நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கும வன்னம்
அடைவுள அஞ்சனம் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே

இவ்வாறே சதாசிவ மூர்த்தியின் திருவுருவ அமைப்பைத் திருமூலர்,

அஞ்சுமுகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொடஞ்சு கரதலந் தானுள

அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே

என இவ்வாறு விளக்கிச் செப்புகிறார்.

சதாசிவ மூர்த்தி உருவத்தையும், அருவத்தையும் தாங்கி நிற்பார். சதாசிவத்தை அகத்தில் நிறுத்தி வழிபடவேண்டும். 'இருளார்ந்த கண்டமும்' எனும் திருமந்திரம்? சதாசிவத்தைப் பாவிக்கும் முறைமை சுட்டுகிறது. 'சக்திதான்' - என்று தொடங்கும் பாடல் சதாசிவத்தின் ஐமுகங்களின் இயல்பு பேசுகிறது. சதாசிவமூர்த்தியைச் சிரத்தில் தொடங்கிப் பாதம் முடிய பாவிக்க வேண்டும். உரிய மந்திரங்களைக் கூறிய வண்ணம் தியானிக்கில் குண்டலினி ஒளிமயமாக விளங்கும். இதயம் முதலாயின சிவனது ஐந்து சக்திகளாகும். மூலாதாரம் முதல் உடலைச் சூழவும், சிரசின் மேலும் ஒளியாக விளங்குவது சதாசிவமாகும். சதாசிவமே பஞ்சப்பிரமமாய் நலந்தரு மேதமாய் உள்ளவை. சதாசிவன் உடலினும் - உயிரினும் கலந்து உடனாய் இயக்குகின்றான். இவ்வாறு உணர்ந்தோர்க்குச் சிவன் நாதமாக விளங்கி தன் இருப்பை வெளிப்படுத்துவான். சதாசிவமே உடம்பில் சந்திரமண்டலம் விளங்க உதவும். தமது உடம்பை ஒளிப்பிழம்பாகக் கண்ட ஞானியரிடம் சிவன் சதாசிவமாகிப் பொருந்துவான். அகர-உகரம் அல்லது சிவ-சக்தி சேர்ந்த நிலையே சதாசிவம். நிறைவாகச் சிவலிங்கத் திருமேனி அகர, உகர, மகர, விந்து, நாதமாகிய பிரணவமே என்பதைத் திருமூலர்,

இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்டம் நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே.

என எடுத்துரைத்துச் சதாசிவலிங்கப் பகுதியை நிறைவு செய்கிறார்.

ஏழாந் தந்திரத்தின் ஐந்தாம் பகுதியில் ஆத்மலிங்கம் பற்றிய விளக்கங்கள் 10 பாடல்களால் சுட்டப்பட்டுள்ளன.

அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கம தாமே

என்பதில் அகார-உகார இணைப்பாகச் சிவலிங்கம் உள்ளதைக் குறிக்கிறார் திருமூலர். நாதமும் விந்துவும் கலத்தலையே ஆசிரியர் ஆன்ம லிங்கம் என்று சுட்டுகிறார். தாவர -சங்கமங்கள் யாவும் சக்தி-சிவ சேர்க்கையால் அமைந்தனவேயாகும். இதனை,

சக்தி சிவமாம் இலிங்கமே தாபரம்
சக்தி சிவமாம் இலிங்கமே சங்கமம்

என்கிறார். சிவசக்தி சொரூபமான ஆன்மா அண்டகோசத்தின் உச்சியில் உள்ளது. விந்துவே பீடமாய், நாதமே பாணமாய் ஆத்மலிங்கம் அமைந்துள்ளது. இதனை,

விந்துவதே பீடம் நாத மிலிங்கமாம்

என விரிக்கிறார் திருமூலர். ஆத்மாவாகிய சதாசிவலிங்கத்திற்கு பீடம் ஆன்மதத்துவம். கண்டம் வித்யாத்தத்துவம். பாணம் சிவ தத்துவம். 36 தத்துவங்களே ஆத்மலிங்கம். சிவத்தை நாடிய ஆன்மாவினது மனமண்டலம் சிவசக்தி விளங்கும் இடமாகும்.

பாராபரன் எந்தை பனிமதிசூடி
தராபரன் தன்னடியார் மனக்கோயில்
சிராபரன் தேவர்கள் சென்னியில் மன்னு
மராமரன் மன்னி மனத்துறைந்தானே. -1760

என்பது குண்டலினித் தலைவன் அவனே என்றது. இதில் சிராபரன் என்றது- சிரசின் மேல் விளங்கும் பரன். அராபரன் என்றது அரவினை உடைய பரன். மனத்தைக் கோயிலாகக் கொண்டவனே உலகநாதன். இவ்வாறு உள்ளமே சிவன் விளங்கும் இடமாதல் பற்றி ஆத்மலிங்கம் எனப்பட்டது.

ஆறாவதாக ஞானலிங்கம் திருமந்திரத்தில் பத்துப்பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. அருவமாக உள்ள பரசிவமே, உருவ வடிவில் குருவாய் அருள் புரிவான். இதனை,

மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவு மென நிற்கும்

என்பதால் அறியலாம். பிரமன் முதல் சிவம் ஈறாக உள்ள ஒன்பதும் பரசிவமே. சதாசிவரை பிரான் என்று உணர்ந்து வணங்குவார்க்கு அவர் அருளுவார். சிவலிங்கத்ததைச் சிவசக்தி வடிவமாகக் கண்டு வழிபடின் வினைகள் நீங்கும். ஆதியாக உள்ள சதாசிவரிடம் பராசக்தி பொருந்தியே உள்ளாள். அண்டகோசத்தில் விளங்கும் சதாசிவ(ஒளி) நிலையைக் கடந்து சிவம் உள்ளது. சக்திக்கு மேலே அருவமாய் நிராதார கலைகளில் விளங்குவது ஞானலிங்கம். சக்தி-சிவன் விளையாட்டால் சீவன் சிவமாம் தன்மை எய்தும். சிவத்துக்கு உருவம் சக்தியே.

ஏழாவதாகச் சிவலிங்கம் பற்றித் திருமூலர் ஐந்து பாடல்களால் விளக்கம் தருகிறார். பஞ்சபூதமயமாக விரிந்த பொருளை ஒரு குறியில் வைத்து வணங்க இயலாது என்பதை,

குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறிவை நீண்டகன் றானை
வரைத்து வலஞ்செய்யு மாறறி யேனே.

என உரைக்கின்றார் ஆசிரியர். சிவன் நாமத்தை உணர்பவரிடம் நீங்காதிருப்பான் என்பது,

உரைத்தவன் நாமம் உணர வல்லார்க்குப்
புரைத் தெங்கும் போகான் புரிசடை யோனே.

என உணர்த்தப்பட்டுள்ளது. சிவத்தை வணங்கி இன்புறும்போது அவன் அருள்புரிவான். அயன் முதல் எண்ணப்பட்ட ஒன்பதும் ஒருங்கிணைந்தே சிவலிங்கமாகும். நிறைவாகத் திருமூலர் சிவலிங்கத்தைப் பார்க்கும் முறை கூறி பரகதிக்கான வழிகாட்டுகிறார்.

மேவி எழுகின்ற செஞ்சுடர் ஊடுசென்று
ஆவி எழுமளவு அன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வம்
பாவித் தடக்கிற் பரகதி தானே

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

60. சம்பிரதாயம், அருளொளி, திருவருள்வைப்பு

முனைவர். அ. மலர்
தமிழ் முதுநிலை விரிவுரையாளர், குடியேற்றம்

அறிமுகமாக

மெய்யியல் வரலாற்றில், சைவ சித்தாந்தத்திற்கு நல்லதொரு முன்னுரை வரைந்தவர் திருமூலரேயாவர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக அறியப்பெறும் இவர், சைவசித்தாந்தம் எனும் தொடரை முன்மொழிந்தவர் என்றளவிலும், ஏனை திருமுறை ஆசிரியர்களை விடவும் சைவசித்தாந்த கோட்பாடுகளை விரிவாகப் பேசியவர் என்றளவிலும் முக்கியத்துவம் பெறுகின்றார். தனிநிலைப்பட்ட இறையனுபவம் பெறுவதற்கான தேடலில் ஈடுபட்ட திருமூலர், அத்தேடலில் தாம் பெற்ற இன்ப அனுபவத்தைப் புறவயமான மெய்யியல் உரைகல் கொண்டு விளக்குமுகத்தான் அமைந்ததே சித்தாந்த மெய்யியல் எனலாம். அவ்வகையில் சைவ சித்தாந்தம் திருமூலர் என்ற தனி மனிதரின் ஆளுமை வளர்ச்சியின் வெளிப்பாடாகவும், பங்களிப்பாகவும் அமைந்தது எனில் மிகையில்லை. அவ்வழி, திருமந்திரத்தின் ஏழாம் தந்திரத்தில் இடம்பெறும் சம்பிரதாயம், திருவருள் வைப்பு, அருளொளி எனும் மூன்று தலைப்புகளில் இடம்பெறும் 45 பாடல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சைவசித்தாந்த மெய்யியல் கோட்பாட்டினை முறையாக வளர்த்தெடுத்துச் செல்லமுடியும் என்ற கருதுகோளை நிறுவுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

மெய்யியல்

தேடலையும் அறிதலையும் அடித்தளமாகக் கொண்டு அமைவதே மெய்யியல் எனலாம். விளங்கக்கூறின், உலகோடும் வாழ்வோடும் தொடர்புடைய மெய்ம்மைகளைத் தேடிக் கண்டெடுத்து, அவற்றின் காரண காரியத் தொடர்பை அறிவது மெய்யியல் எனலாம். மனிதன் அறிவுநிலை எய்திய நாள் முதல், வாழ்க்கைப் போக்கை உற்று நோக்கத் தொடங்கினான். அதனால் உலகு-உயிர் குறித்த சிந்தனையோட்டம் ஏற்பட்டது. விளைவாக, உயிர் என்பது என்ன, அதன் இயக்கம் எத்தகையது, உலகம் எத்தன்மையது, இரண்டிற்குமிடையிலான உறவு எவ்வகையது என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண முற்பட்டான். இவ்வினாக்களும் விடைகளுமே மெய்யியலுக்குத் தோற்றுவாயாய் அமைந்தன.

சைவ சித்தாந்தம்

உலகத்தில் உள்ள பொருள்களை, இறை-உயிர்-தளை என மூன்றாக வகைப்படுத்தி, அவற்றின் உளதாம் தன்மையையும், உண்மை இயல்பையும் நிறுவுவதே சித்தாந்த மெய்யியல் ஆகும். சித்தாந்த சாத்திரங்கள், பல்வேறு சமயச் சிந்தனைகளின் பரிமாணங்களையும், மாற்றுரைகளின் பல்வேறு கோணங்களையும் மறுத்துரைத்து, முடிந்த முடிவாக அளவையியல் (LOGIC) முறையில், உள்பொருள்களின் உண்மையை நிறுவ முற்படுகின்றன. இங்ஙனம், மறுத்தலும் நிலை நிறுத்தலும் முறையே பரபக்கம் என்றும் சுபக்கம் என்றும் வழங்கப்படும். ஆனால் சைவசித்தாந்த மெய்யியலுக்கு வித்திட்ட திருமூலர், அளவையியல் கோட்பாட்டின் வழி முப்பொருள் உண்மையைப் பேசவில்லை என்றாலும் மாற்றுச் சமயக் கருத்துக்களை ஆங்காங்கே மறுத்துரைக்கத் தவறவில்லை. வேதாந்தி, வைணவர், மாயாவாதி, சாக்தர் முதலானவர்களைத் திருமூலர் குறிப்பிடுவதால், அவர்தம் சிந்தனைகளை அளவை முறையில் முறைப்படுத்திக் காண்டற்குத் தடை ஏதும் நிகழவில்லை. பொதுவாக, சிவஞான போதம் எனும் மெய்கண்ட சாத்திரமே சித்தாந்த கலைச் சொற்களையும், சித்தாந்த கோட்பாடுகளையும் முறையாகத் தருகின்றது என்றொரு கருத்துண்டு. பத்தாம் திருமுறையாக அமைகின்ற திருமூலர் திருமந்திரமே, சிவஞான போதத்திற்கும் ஏனை சித்தாந்த சாத்திரங்களுக்கும், அனைத்து நிலையிலும் அடிப்படையாய் அமைகின்றது என்பதே உண்மை.

இறை

காலங்காலமாக, அதிக அளவிலான விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் ஆளான பொருள்களுள் இறையும் ஒன்று எனில் மிகையில்லை. நம்பிக்கை அடிப்படையிலும், அளவையின் அடிப்படையிலும் அறிவியல் அணுகுமுறையிலும் இடைவிடாது கேள்விக்கு உட்படுத்தப்பட்டும், உடன்பட்டும், மறுக்கப்பட்டும் வந்தாலும்கூட, இன்னும் முடிந்த முடிவு என்பது எட்டப்படாததாகவே இருக்கின்றது. ஏனென்றால், இறை ஓர் உள்பொருள் என்று எந்த அளவிற்கு வலியுறுத்தப்படுகின்றதோ, அதே வலிமையுடன் அது வெறும் கருத்தாக்கமே என்பதற்கான சான்றுகளும் முன் வைக்கப்படுகின்றன. இங்கு இறை பற்றிய சிந்தனைகள் திருமூலர் வழி, இறையுண்மை, இறையியல்பு எனும் இரண்டு உட்தலைப்புகளில் எடுத்துரைக்கப்படுகின்றன.

இறையுண்மை: இறையில்லை என்பாரது கருத்தை மறுத்து இறையுண்மை பேசப்படுகின்றது.

மேற்கோள்:

தரிக்கின்ற பல்லுயிர்க்கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை யேதும் உணரார் -1751

அருளே சகலமு மாய பௌதிகம்
அருளே சராசர மாய அகிலம்
இருளே வெளியே யெனுமெங்கும் ஈசன்
அருளே -1775

இறை குறித்து உலகில் இருவித கருத்து வேறுபாடுகள் நிலவினாலும், இறையின் இருப்பை, இயற்கையின் மூலகாரணமாக நிறுத்துவதன் வழி உறுதிப்படுத்துகிறார் திருமூலர்.

பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த குணத்தை ஓரிரு விதிகளில் அடக்கிவிட முயற்சி செய்கையில், கடைசியில் கிடைப்பது இப்படித்தான் இருக்கின்றன என்ற வருணனைதான் ஏன் இப்படி இருக்கின்றன என்கிற கேள்விக்கு விடை கொடுத்தால், அந்த விடையில் மற்றொரு ஏன் வந்து விடுகிறது. நமக்குத் தேவையானது இப்படித்தான் இருக்கிறது என்பதில்லை. இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற உத்தர வாதம் தரும் விடை, அந்த விடை கிடைக்க, கடைசிக் காரணமாக ஒரு சிருஷ்டிகர்த்தாவை ஏற்படுத்தி அவருடைய செயல்களே அவருடைய குணம்: அந்த அவருடைய குணம் அதிலிருந்து வேறுபடமுடியாது என்றும் கொள்ளத்தான் வேண்டும். கடவுள் இருக்கிறார் என்பது பிரச்சனையில்லை. கடவுள் தேவைப்படுகிறார். (சுஜா. பக்-94-95) என்ற கூற்று, இறையின் இன்றியமையாமை குறித்த ஐயத்திற்கு விடையளிப்பதாய் அமைகின்றது.

தடை:

இறையருளே உலகெங்குமாகி நிற்கின்றது என்பது உண்மையாயின், அந்த இறையைக் கண்டவர் யாராயினும் இருத்தல் வேண்டும்: ஆனால், கண்டவர் இல்லை. எனவே புலனாகின்ற பொருள்களைத் தவிரப் புலன்கடந்த பொருள் எதுவும் இல்லை என உலகாய்தர் தடை எழுப்புவர்.

பொருள் என்பது புறவயமாக நிலவுதல் வேண்டும். மேலும், புலன்களைப் பாதித்து இருப்பைப் புலப்படுத்த வேண்டும் என இயங்கியல் பொருள் முதலியலும் வலியுறுத்தும்.

விடை

புலனாகாமை ஒன்று பற்றியே இறையுண்மையை மறுத்தல் இயலாது. ஏனென்றால், புறக்காட்சிக்குப் புலனாகாவிடினும், அகக்காட்சியளவால் அறியக் கூடியதே இறை,

காண்டற் கரியன் கருத்திலன் நந்தியுந்
தீண்டற்கு சார்தற்குஞ் சேயனாத் தோன்றிடும் -1762

செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே -1763

என்று வலியுறுத்துபவர்,

ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர் -1766

என்றுரைப்பதன்வழி உயிர்க்குயிராகி உறைத்து நிற்கும் இறைத்தன்மையைத் தெளிவுறுத்துகின்றார்.

துணிபு

இதுவரை கூறப்பட்ட மேற்கோள், தடை மற்றும் விடைகளால் இறையுண்டு என்பதைத் துணிவாகக் கொள்ளலாம்.

இறையியல்பு

ஒரு பொருளின் உண்மை பற்றிப் பேசுகையில், அதன் தன்மை பற்றிப் பேசுவதும் இன்றியமையாததாகின்றது. சைவ சித்தாந்த மெய்யியலில், இறையின் இருப்புத் தன்மையோடு(Immenance), கடப்புத் தன்மையும் (Transcendence) முக்கியத்துவம் பெறுகின்றது.

உபநிடதங்கள் பிரமத்துக்கு உரியநிலைகளாக,

1. இயற்கையோடு இயைந்த - சப்பிரபஞ்சநிலை
2. இயற்கையாகக் கடந்த - நிஷ்பிரபஞ்சநிலை

எனும் இரண்டையும் சுட்டிச் செல்வது இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

கடந்த நிலை

மெய்யியலில் ஒரு பொருளின் இயல்பானது, உண்மையியல்பு (சொரூபலஷணம்) பொதுவியல்பு(தடத்தலஷணம்) எனும் இருநிலைகளில் பேசப்படுகின்றது. அவ்வழி, இறையின் கடந்த நிலையானது, அதன்

உண்மையியல்பாகக் கருதப்படுகின்றது. கடந்த நிலையில் இறை பரசிவம் எனப் போற்றப்படும்.

பரசிவத்தின் உண்மையியல்பைப் பலவிடங்களில் சுட்டிச் செல்கின்றார் திருமூலர்.

பேர ருளாளன் (1772-1)
அறவாழி அந்தணன் (1772-3)
ஆதிப் பராபரன் (1772-3)
நின்மலன் (1781-1)
பேரா யிரமுடைப் பெம்மான் (1784-3)

கலந்த நிலை

உயிர்களோடு இயைந்து நின்று அவற்றின் பொருட்டு, ஐந்தொழில் செய்து நிற்றலே இறைவனின் பொதுவியல்பாகச் சொல்லப்படும்.

இறை-உயிர்-இயைபு

இறைவனுக்கு உயிர்களோடு உள்ள இயைபு ஒற்றுமை(அபேதம்) என்றும் வேற்றுமை(பேதம்)என்றும், இரண்டும் (பேதாபேதம்) என்றும் மூவகையான கருத்துக்கள் நிலவுகின்றன. ஆனால், திருமூலர் மூவகையான இயைபினையும், இறைவனுக்கு உரியதாகக் காட்டுகின்றார். இறைவன் கலப்பினால் ஒன்றாயும், உயிருக்கு உயிராம் தன்மையால் உடனாயும், பொருள் தன்மையால் வேறாயும் நிற்பன் என்பது சித்தாந்தம்.

ஒன்றாதல்

உடம்பின் வேறாயினும், அவ்வேற்றுமை காணப்படாது, உயிரானது, உடம்பே என்று கருதும் அளவிற்கு இயைந்து நிற்றல் போல், இறைவனும் உயிரொடு கலந்து நிற்பன் என்றளவில்,

நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென வூனுயிர் என்ன (1772-1-2)

ஒப்புமை காட்டப்படுகின்றது.

உடனாதல்

இறை உயிர்களோடு பிரிவின்றி, உடனாகி நிற்கும் அத்வைத நிலைக்கு,

..வுடனின்று
வானென (1757-2-3)

வானம் ஏனைய பூதங்களுடன் உடனின்று இயக்குவதை உவமையாகச் சொல்கிறார்.

வேறாதல்

இறைவன் உயிர்க்குயிராகி உடனாகியும், கலப்பினால் ஒன்றாகியும் விளங்கினாலும், தானேயாய்த் தனிமுதலாய் விளங்கும் வல்லமை வாய்ந்தவன் என்பதையே வேறாதல் தன்மை உணர்த்துகின்றது.

.. உயிர்க்குயி ராய்நிலை
துன்றி யவையல்ல வாகும். (1780-2-3)

ஐந்தொழில்

ஒன்றாகியும், உடனாகியும், வேறாகியும் நிற்கும் இறைவன், அனாதிக் காலந் தொட்டு ஆணவ இருளில் மூழ்கிக்கிடக்கும் உயிரை உய்விக்கும் பொருட்டு ஐந்தொழில் ஆற்றுகின்றான்.

தானே படைத்திடுந் தானே அளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான் முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே

படைத்தல், அளித்தல் (காத்தல்) துடைத்தல்- (1778) (அழித்தல்), மறைத்தல், அருளல்(முத்தி அளித்தல்) எனப்படும் ஐந்தொழில் (பஞ்சகிருத்யம்) புரிகையில், இறைவன் கொள்ளும் ஒன்பது வகையான வடிவ வேறுபாடுகள் 'நவம்தரும் பேதம்' எனப்படும்.

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா
நவமவை யாகி நடிப்பவன் தானே (1776)

தலையான நான்குந் தனதரு வாகும்
மலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுருவாகும் (1779-1-3)

நவந்தரு பேதத்தில் சிவம், சக்தி, நாதம், விந்து எனும் நான்கும் அருவ நிலையாகும்; சதாசிவம் அருவுருவ நிலையாகும்; ஈசன், அரன், மால், அயன் எனும் நான்கும் உருவ நிலையாகும்.

மேற்கண்ட திருமந்திரப் பாடல்களின் தொகுப்பாகவே,

சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்து அருள் உருத்திரன் தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவம்தரும் அருவம் நாலு; இங்கு உருவம் நாலு; உபயம் ஒன்றாய்
நவம் தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர் (சிவ.சித்தி.164)

எனும் சித்தியார் பாடல் எழுந்தது.

இங்ஙனம் இறைவன் பலவகையான உருவெடுக்கும் போது அவனுக்குத் திருமேனியாக அமைவது அவனுடைய அருளான சக்தியேயாகும்.

உயிருக்கு உடல்போல் சிவனுக்குச் சக்தி அமைகின்றாள்.

பொருந்தும் உடலுயிர் போலுமை மெய்யே (1760-3)

பொருளால் ஒன்றாகியும், தன்மையால் இரண்டாகியும் விளங்கும் சிவம்-சக்தி இடையிலான உறவுநிலை தாதான்மியம் எனப்படும்.

கடந்த நிலையில் இறையின் சக்தி,

....*சிற்சக்தி* (1748-3)

என்றும்,

கலந்த நிலையில் ஐந்தொழில் செய்யுமிடத்து- மறைத்தலைச் செய்கையில் திரோதன சக்தி என்றும், அருளும்போது

........................*அருள் ஞான சக்தி* (1752-2)

என்றும் அழைக்கப்படும்.

இனி, முப்பொருள்களில் இறைக்கு அடுத்த நிலையில் இடம்பெறும் உயிர் பற்றிக் காணலாம்.

உயிர்

உயிர் என்பது யாது, அது எத்தன்மையது, அதன் தோற்றம் எத்தகையது என்பன குறித்த சிந்தனைகள் வேதகாலம் முதற்கொண்டு இன்று வரை காணக் கிடைக்கின்றன. இச்சிந்தனைகள் ஒவ்வொன்றும், தன்னளவில் உயிரைப்பற்றிய கருத்தாக்கத்தை நிலைநிறுத்த முற்படுகின்றன. அவ்வழி சைவ சித்தாந்த மெய்யியலும், உயிருண்மை குறித்துப் பேசுகின்றது. உயிர் என்பது இறையால் படைக்கப் பட்ட பொருள் அன்று; தோன்றி

அழியக்கூடியதன்று; இறை என்று உளதோ, அன்றே உளதானது என்பது சித்தாந்தம்.

உயிருண்மை: உயிர் என்பதை விளக்குவதாக அமையும் மாறுகோள் உரைகளின் மறுப்பு, உயிரின் ஏற்புடை வரையறை என்ற இரு நிலைகளில் இங்கு உயிருண்மை பேசப்படுகின்றது.

மேற்கோள்

ஆயும் அறிவொ டறியாத மாமாயை
ஆய கரணம் படைக்குமைம் பூதமும்
ஆய பலவிந் திரிய மவற்றுடன்
ஆய வருளைந்து மாமருட் செய்கையே (1774)

எனும் திருமந்திரப்பாடல், புறச் சமயக் கருத்துக்கு மறுப்புரை போன்றே அமைகின்றது.

தடை: ஐம்புலன்களை அறியும் காரணம் பற்றி, ஐம்பொறிகளையே ஆன்மாவாகக் கூறுவர் உலகாய்தருள் ஒரு பிரிவினரான இந்திரியான்மவாதிகள்.

ஐம்பொறிகளைத் தொழிற்படுத்துகின்ற மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கு அந்தகரணங்களே உயிராக விளங்குகின்றன என்பது அந்தக்கரணான்ம வாதியர் கருத்து.

உயிர் எனப்படுவது, கலவைப்பொருளாகிய உடம்பில் அமைந்த ஒரு தன்மையே. உடம்பிற்கு வேறாய் உயிர் என்று தனியே இல்லை. யான் பருத்தேன், யான் சிறுத்தேன் என்பது போல உடம்பினையே எல்லோரும் தான் என்று கூறுகின்றனர். ஆதலால் ஆன்மா ஆவது உடம்பே என்பது உலகாய்தர் கருத்து.

இங்ஙனம் பருவுடம்பு, அதன்கண் உள்ள ஐம்பொறிகள், அவற்றிற்குப் புலனாகின்ற பொருள்கள் மற்றும் மனம் முதலிய உட்கருவிகள் ஆகியவற்றுள் எதுவும் ஆன்மாவாகத் தோன்றவில்லை. எனவே ஆன்மா என்பது சூனியமே(இன்னதெனச் சொல்ல வாராத பொருள்) என்பது பௌத்தர் வாதம்.

விடை: ஐம்பொறிகள், அந்தக்கரணம், ஐம்பூதம், மாமாயை இவையாவும் அறிவில்லாத சடப்பொருள்கள்; உயிர் என்பது ஆய்ந்து அறியும் அறிவுடையது என்பது மேற்கோள் பாடலின் வழி கிடைக்கும் கருத்து.

ஐம்பொறிகள் முதலான இவை அல்லாது, இவற்றுள் ஏதோ ஒன்றை உயிராகக் கூறமுடியாது என்று, ஆராய்ந்து உண்மை காண முற்படும் அறிவு ஒன்றுளது என்பதை எவரும் மறுத்துரையார். அவ்வறிவே உயிர். அதனால்தான் உயிரை,

ஆயும் அறிவு (1774-1)

என்ற காரணப் பெயரால் சுட்டுகிறார் திருமூலர்.

ஐயத்திற்கு இடமில்லாத உண்மைப் பொருளைக் கண்டுபிடிக்க முற்பட்ட மேலைநாட்டறிஞர் டெக்கார்ட் என்பவர்,

ஒவ்வொரு நம்பிக்கையையும் எண்ணிப்பார்த்து, ஐயுற இயலாதது ஒன்றுமில்லை என்று அறிவித்தார். முடிவில், இங்ஙனம் ஐயுறுகின்ற நான் ஒருவன் இருந்துதான் ஆக வேண்டும். அதுவே ஐயத்திற்கு இடங்கொடாத உண்மை, அதையே ஆன்மா என்கிறோம் என்ற முடிவுக்கு வந்தார். அவ்வடிப்படையில்,

'உள்ளுகிறேன் ஆகையால் உள்ளேன்' (COGITO ERGO SUM)

என்ற புகழ் பெற்ற தொடரை உருவாக்கினார் (கொ. நீ.சி.பக்.18-19)

நான் சிந்தனை செய்யும் பொருளாக இருக்கின்றேன் எனும் பொருள் கொண்ட இத்தொடருக்கும் ஆயும் அறிவு எனும் திருமந்திரத் தொடருக்கும் உள்ள ஒற்றுமை குறிப்பிடத்தக்கது.

ஹெகல் என்ற மெய்யியல் அறிஞரும், மனிதனைச் சிந்திக்கும் உயிராகக் கண்டமை இங்கு நினைக்கத்தக்கது.

ஆயும் அறிவாய் விளங்குவது உயிரென்றால் அவ்வுயிரறிவு எத்தகையது என்ற விளக்கத்தையும் தருகின்றார் திருமூலர்.

உயிரியல்பு

அறிதலும் அறியாமையும் உடையதாய் விளங்கும் உயிரறிவு, உணர்த்த உணரும் சிற்றறிவாகும். உலகியல் பொருள்களோடு பொருந்தும் போது அவற்றின் வண்ணமாகவும், இறைவனோடு பொருந்தும்போது, திருவருள் வண்ணமாகவும் நிற்கும் இயல்புடையதாம். இங்ஙனம், சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையே உயிரின் உண்மை இயல்பாகும். உயிரின் சார்புத் தன்மைக்குக் கண்ணொளி உவமையாகக் காட்டப்படுகின்றது.

ஒளியிருள் கண்டகண் போல வேறாய் (1788-3)

ஒளி, இருள் இரண்டும் அல்லாத கண்ணானது ஒளியோடு கூடியவழி ஒளியாயும், இருளொடு கூடியவழி இருளாயும் நிற்பது போலலே உயிரும் விளங்கும்.

இங்ஙனம் பற்றுக் கோட்டினைச் சார்ந்தே இருக்கக்கூடிய உயிர், பாசத்தொடர்பால் நிலை வேறுபாடுகளுக்கு (அவத்தை) ஆளாகி, பிறப்பிறப்பில் சிக்கி, வினைப்போகம் நுகர்ந்து வருந்துவதே அதன் பொதுவியல்பாகச் சொல்லப்படும்.

உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப்பொருள் (தனு,கரண,புவன, போகங்கள்) கூடப்பெற்றுப் பிறப்பிற்கு உயிர் வரும் நிலை சகல நிலை எனப்படும்.

இந்நிலையை,

காயப்பரப்பில் அலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயவவ் வாறா றடைந்து திரிந்தோற்கு (1756-1-3)

எனும் பாடல் வழி விளக்குகிறார்.

இங்ஙனம் பிறப்பிறப்பிற்கு உயிர் ஆளாவதற்குக் காரணியாக விளங்கும் தளை (பாசம்) பற்றி இனிக் காணலாம்.

தளை

உயிர் துன்புற்று உழல்வதற்குரிய காரணம் பற்றி எல்லாச் சமயங்களும் ஆராய்ந்திருக்கின்றன. பௌத்தமும் சமணமும் ஆசையை முன் வைக்கின்றன. சங்கரரின் மாயாவாதம் அவித்தையை (அறியாமையை)க் காரணமாகச் சொல்கின்றது. கிறித்துவம் சாத்தானைச் சொல்கின்றது. சித்தாந்தமோ தளையை முன்னிறுத்துகின்றது.

ஆயும் அறிவு வடிவான உயிரை, அறியாமையும் சிற்றறிவும் உடையதாக்கி, உலகில் உழலுமாறு தளைத்து நிற்கின்ற தளையினை,

'...ஐம்பாசம்' (1783:2)

எனக்குறிப்பர்.

ஆணவம்; உயிரின் அறிவைத் தடை செய்வதால் ஆணவம்,

'*இருள்*' (1763:2)

எனப்படுகிறது.

கன்மம்

பிறவிக்குக் காரணமாக அமையும் கன்மமானது,

'*வினை*' (1765-1)

எனத் தமிழில் அழைக்கப்படும்.

மாயை

ஆணவப் பிணிப்புண்டு கிடக்கும் உயிரை உய்விக்கும் பொருட்டு, இறையால் கூட்டுவிக்கப்பட்டது மாயை ஆகும்.

உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயாப் படலம் (1786:1-2)

'*பாசத்தி லிட்ட தருள்* (1771:1)

மாயை, அறிவில்லாத சடப்பொருள் என்பதை,

'......................................*அறியாத மாமாயை* (1774:1)

எனும் தொடரின் வழி தெளிவுப்படுத்துகிறார்.

மாயை தனிமாயை, மாமாயை என இரண்டு வகைப்படும். இவற்றுள் தனிமாயை (அசுத்த மாயை) தேவர் இனங்களுக்கும், மந்திரங்களுக்கும், வேதாகம முறைகளுக்கும் இடம் தருவதாம். மாமாயை (மூலப்பிரகிருதி) உயிர்கள் வாழும் அண்டங்களுக்கு நிலைக்களமாம் என்பதை,

விளையும் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொளி றிலாவண்ட கோடிகளாமே (1782:3)

எனத் தெளிவுறுத்துகின்றார்.

அண்டங்கள் தோன்றுவதற்குரிய காரணப்பொருளாக அமைகின்ற மூலப் பிரகிருதியானது முதற்கண் தத்துவமாய்க் காரியப்பட்டே பின் அண்டமாய்க் காரியப்படும். தத்துவம் என்பது இங்கு கருவி எனும் பொருளில் வருகின்றது. இத் தத்துவ எண்ணிக்கையில் மெய்யியல்

கோட்பாடுகள் வேறுபடுகின்றன. சைவர்க்கு 36 தத்துவங்கள் என்பது சித்தாந்தம். இதனையே,

ஆயவவ் வாறா றடைந்து திரிந்தோர் (1756:3)

எனக் குறிப்பர் திருமூலர்.

இங்ஙனம், உயிரைத் தளைத்து நின்று, உடலில் சிறைப்படுத்தி, உலகில் பற்றுக் கொள்ளச் செய்யும் தளையின் நீக்கம் குறித்து இனிக் காணலாம்.

தளை நீக்கம்

உயிரானது, பிறவிகள் பல எடுத்து, துன்பத்தில் உழல்வதினின்று விடுபடுதல் வேண்டும் என்பதே, மெய்யியல் கோட்பாடுகளின் குறிக்கோளாக அமைகின்றது. அவ்வகையில் இவ்வுலகைத் துன்பத்தினின்று விடுபடுவதற்கான வழிமுறைகள் குறித்தும், விடுபட்ட பின்னர் உயிரின் நிலை குறித்தும் அவை விரிவாகப் பேசுகின்றன. அவ்வழி இறையடி அல்லது முக்தி நிலையைச் சைவசித்தாந்தம் இலக்காக வலியுறுத்துகின்றது. உயிரின் வினைக்கும் பிறப்பிறப்புக்கும், தளைப்பிணிப்பே காரணமாகக் கருதப்படுவதால், தளைநீக்கம் வலியுறுத்தப்படுகின்றது. இத்தளை நீக்கத்திற்கு வேண்டப்படும் சாதனமான ஞானம், சரியை, கிரியை, யோகம் எனும் படிமுறையான் நிகழ்கின்றது. இங்ஙனம் நிகழ்கின்ற வழி, ஞானம் கிட்டுவதற்கு ஏதுவாய் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகியவை நிகழும். நிகழவே குருவருள் பெற்று சிவப்பேற்றினை உயிர் எய்தும் என்பர்.

இருவினை ஒப்பு

நல்வினைப் பயனையும் தீவினைப் பயனையும் விருப்பு வெறுப்பற்று துய்க்கும்பொழுது அவை வேரற்றுப்போன நிலையில் உயிர் தன்னை உணரத் தொடங்கும்.

தானே யறியும் வினைகள் அழிந்தபின் (1765:1)

மலபரிபாகம் ஆணவ மல இருளின் ஆற்றல் தேய்தல் நிகழும்

வேண்டிக் கிடந்து விளக்கொளி யானெஞ்சம்
ஈண்டிக் கிடந்தங் கிருளறு மாமே (1762:3-4)

சத்திநிபாதம்

இருவினை நோரொப்பின் பயனாக, இறைவனின் அருட்பார்வை உயிரின்பால் வீழ்கின்றது. இந்நிலையில் இறையே குருவாய் வந்து உண்மை உணர்த்துகின்றது. இங்ஙனம் இறையின் சக்தி ஆன்மாவிற் பதியும்பொழுது, அந்த ஆன்மாவிற்கிருந்த உலகியல் உணர்வு நீங்குகிறது.

கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியால்
பாடல் உடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ னாங்குளிக் கொண்டே (1752)

குருவருள் பெற்ற உயிரானது, பாசம் நீங்கிச் சிவமாம் தன்மை பெறுகின்றது.

ஒளியிருள் நீங்க வுயிர்சிவ மாமே (1788:4)

இம்முத்தி நிலையைச் சிவசக்தி என்பர். இங்ஙனம் சிவகதி பெற்ற உயிர் மீண்டும் பிறவி எய்துதல் இல்லை.

பிறவா நெறிதந்த பேரரு ளாளன் (1772:1)

தன்னொடு கலந்திருக்கின்ற இறையைச் சகல நிலையில் (பாசப் பிணிப்புண்டு இருக்கையில்) அறியாத உயிர், முத்தி நிலையில் மட்டும் அறிந்து நிற்பது எங்ஙனம் என்று வினா எழுப்புவார்க்கு விடையளிக்கின்றார் திருமூலர்.

அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்றும் அரனே
இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றாத்
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே (1777)

இருட்படலத்தால் மறைப்புண்ட கண்ணிலும், படலமின்றி ஒளியுடன் விளங்கும் கண்ணிலும் கதிரவன் கலந்து நின்றாலும், படலம் நீங்கிய ஒளியுடைய கண்ணே கதிரொளியை அறிகின்றது. அவ்வண்ணமே இருநிலைகளிலும் கலந்து நின்றாலும்,

சகல நிலையில் தளைப்பிணிப்பால் இறையை அறியாது மயங்கி நிற்கும் உயிர், தளை நீக்கமும் சிவஞானமும் கைவரப் பெற்ற முத்திநிலையில் இறையை அறிந்து இன்புறுகின்றது என்பது பெறப்படும் கருத்து. இங்கு,

அருக்கன்நேர் நிற்பினும் அல்இருளே காணார்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க்(கு) ஈசன் அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் (சிவ.11:70,1-3)

எனும் சிவஞான போத வெண்பா அடிகளை ஒப்பு நோக்குதல் வேண்டும்.

எனவே உலகப்பற்றுக்களால் சிறைப்படுத்தப்பட்டு, பிறந்தும், இறந்தும் துன்புறும் உயிரானது, இறையைச் சார்ந்து சிவமாம் தன்மை பெறும் வழி - பேரின்பம் பெற்று நிலைபெறலாம் என்பதே திருமூலர்தம் சித்தாந்த மெய்யியல் கோட்பாடு என வரையறை செய்யலாம்.

திருமூலர்தம் சித்தாந்த அனுபவம்

தான் முன்வைத்த சித்தாந்த மெய்யியல் கோட்பாட்டின் அடிப்படையிலேயே, திருமூலர் தன் இறையனுபவத்தை விளக்கிச் செல்கின்றார்.

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக் காரமு தீந்த
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே (1789)

அகம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்
அகம்புகுந் தானந்தி யானந்தி யாமே (1773:3-4)

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன் பெருந் தன்மையை (1785:1-2)

என்றவாறு, தன் ஆணவ மலத்தை அறுத்து, சிவமாம் தன்மை பெறச் செய்த சிவனின் பெருந்தன்மையைப் போற்றுகின்றார் திருமூலர்.

நிறைவாக

மேற்கோள், தடை, விடைகளுடன் அளவை முறையில் சித்தாந்த மெய்யியல் கோட்பாட்டினை விரித்துரைப்பதற்குத் திருமந்திரம் இடம்தருவது இக்கட்டுரைவழி கண்கூடு. எனவே தமிழ் மெய்யியல் வரலாற்றில் திருமூலரைச் சித்தாந்த மெய்யியலின் முன்னோடியாக முன்மொழிவதில் மிகையில்லை.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

61. சிவபூசை, குருபூசை, மகேசுவர பூசை

வள்ளல் அடிப்பொடி. **அ. சுவாமிநாதன்**
புதுக்கோட்டை

திருமந்திரம்- திரு+மன்+ திரம்

திரு= தெய்வீகம். மன்= நிலைபேறு. திரம்= உறுதி; வீடுபேறு

வீடுபேறு= பாச நீக்கமும் சிவமாம் தன்மையுமான இருவகையின் முழுப்பயன்.

ஆக, திருமந்திரம்- என்றால் - பாச நீக்கமாகி, சிவமாம் தன்மையின் முழுப் பயனடைவதற்கு நிலையான தெய்வீகத்தை தெரிவிப்பது- என்று பொருள்.

நமது நாட்டில் இறைஞான மரபு பலவாறாக இருந்தாலும் மிகத் தெளிவான செம்மையான மரபு, சித்தர்கள் காட்டுகின்ற மரபு. அந்த மரபுதான் நமக்குள்ளே நாதனைத் தரிசித்து- முதலில் தன்னையறிந்து பிறகுதான் நானாவது ஆகும்.

அந்த மரபில் திருமந்திரம் ஏழாம் தந்திரத்தில் 11 ஆம் தலைப்பு சிவபூசை.

சிவம்= எல்லாமானதுமான கடவுள்.

பூசை= செய்கை; ஆராதனை என்றாலும், பூ+ செய்-தான் பூசை ஆனது.

பூ - என்றால் தாமரைதான். இதரப் பூக்களைக் கூறுகின்றபோது மல்லிகை, முல்லை, சாமந்தி, சம்பங்கி என்று சேர்த்துத்தான் கூறப்படுகிறது. ஆகவேதான் வள்ளுவப் பெருந்தகை "மலர்மிசை ஏகினான்" என்பார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே

ஊனுடம்பு ஆலயமாக இருக்கிறது. சீவன் சிவமாக வேண்டுமானால், சீவன் குடிக் கூலிக் கொடுத்துக் குடியிருக்கின்ற தேகத்தைப் பழுதுபடாமல் பார்த்து அருள் தேகமாக மாற்றுவதற்குரிய உபாயத்தைத் தெரிவிப்பதுதான்- தாமரை மலர் போல் பல அடுக்குகளையுடைய

மூளையை சூரிய வெப்பத்தினால் தாமரை முட்டுக்கள் பக்குவப்பட்டு மலர்வது போல் மலர வைத்துக் கொள்வதுதான். என்னுள்ளியிருக்கின்ற நான் யார்? என்ற தேடல்- அதன் விளைவு உடல் தத்துவத்தை கொண்டு வெளியில் தேடுவதை விடுத்து தமக்குள்ளே தேடுதல்- இதைத்தான் தியானம், தவம் என்பர்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். என்பார்.

கழிப்படுந் தண்கடற் கௌவை யுடைத்து
வழிப்படு வார்மலர் மொட்ட றியார்கள்
பழிப்படு வார் பல ரும்வழி வீழ
வெளிப்படு வோருச்சி மேவிநின் றானே.

கல்வி என்பது பயிற்சி. இம்மானிட தேகத்தையே நித்திய தேகமாக்கப் பயிற்சியால் சாகாத கல்வியைத் தரக்கூடிய நெற்றிக்கண் (∴) ஞானக்கண். (ஒருமைக்கண்) உண்டாக்கிக் கொண்டவர்கள் கற்றோர். கீழுள்ள இரண்டு (பன்மை கண்) கண்களும் புண். ஆகவேதான் மலர்மிசை ஏகினான் என்பதும், எழுத்தும் மொழியும் தோன்றுமுன் ஞானம் தோன்றிய அனுபவங்களை சித்திரமாகக் காட்டப்பட்ட தாமரையின் மேல் விநாயகர், சரஸ்வதி, இலக்குமி போன்ற கடவுளர் காட்சிகள் காட்டப்பட்டுள்ளன.

சாணாகத்துள்ளே அழுந்தியமாணிக்கங்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே.

தேகத்தினுள் உள்ள ஆறு ஆதாரங்களிலும் ஆருயிர் உய்தல் பொருட்டு ஊடுருவி நிற்கும் மாணிக்க வண்ணன்- சிவ பெருமானாவான். "உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்" -என்பார்- அபிராமி பட்டர். இதை உணர்த்துவதற்காகத்தான் மணிவாசகப் பெருமான், "சொல்லியப் பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்" என்ற சிவபுராணத்தில் நமச்சிவாய வாழ்க என்று ஆறு இடங்களில் வாழ்க என்றும், ஐந்து இடங்களிலி வெல்க என்றும், எட்டு இடங்களில் போற்றி என்றும் கூறுகிறார். வேதம் என்றால் புலன் என்று ஒருபொருளும் மறை என்று ஒரு பொருளுமுள்ளது.

புலன்-காட்சி. கண்டவர்களுக்கு காட்சி. காணாதவர்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. மறை என்பது பொருள். சிவலிங்கம் முன்னுள்ள விடைதான் மறைப்பாற்றல்- திரோதன சத்தி. இதேபோல்தான் மணிவாசகப்

பெருமான் ஆறு இடங்களில் வாழ்க என்றும், உயிர் உய்தல் பொருட்டு கடவுளின் அருட்கருணையினால் அளிக்கப்பட்டுள்ள புலன்கள் ஐந்தும் மாயையை வென்றது என்பதற்காக ஐந்து வெல்க என்றும், இறைவன் அட்டமூர்த்தியானவன் - மண், நீர், நெருப்பு, காற்று, வெளி, உயிர், சூரியன், சந்திரன் ஆகிய எட்டும் போற்றி என்றும் பேசுவார்.

ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே.

ஆகவே சிவபூசை என்பது வெளியில் செய்யப்படுகின்ற சடங்குகள் அல்ல; அகத்தில் உள்ள சீவனுக்குக் கடவுளருளால் அருளப்பட்டுள்ள தாமரையாகிய மூளையை அகமுகமாக தவம் செய்து மலர வைத்து இந்தச் சீவனை சிவமாக்கிக் கொள்வதாகும். சீவன் சிவமாகும் போது தேகம் அருளாக மாறும் என்பது ஞான சித்தர்கள் மரபு. இதுதான் வாழையடி வாழையெனும் திருக்கூட்ட மரபு.

குருபூசை

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதார மாறாதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே

எல்லாமுடைவராகிய ஆண்டவரின் திருவடித் தாமரையினைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஆருயிர் வீடுபேறடைவதற்கு அருமறையாகிய உபதேசம் திருவைந்தெழுத்தாகும். அதனை பெருங்கருணையினால் அருள்பவன் சிவகுரு- அவனைப் பூசிப்பது குருபூசையாகும்.

உச்சியும் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
தச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே.

மெய்ப்பரனாகிய சிவனை அடைதற்குரிய அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவானை வழிபாடு செய்தல்தான் விழுமிய அருச்சனையாகும். இவ்வருச்சனையை வேதாகமங்களெனும் ஞான நூல்தனை ஓதுதல், ஓதுவித்தல் நல்ல பொருள்களை சொல்லல்,

தான்கேட்டல் நன்றாம். இப்படியாக காலை, உச்சி, மாலை எனும் முப்பொழுதுகளிலும் இறைவழிபாட்டிற்கு பேரன்பு கொண்டு இறைவனைவிட அவன் திருநாமத்துக்கு வலிமையதிகம் என்பதை உணர்ந்து, நமச்சிவாயத்தை மனதை ஒருமனைப்படுத்தி, மனத்தின் சலனத்தையும் அடக்கி ஓதுதல் மூன்றுவகை. 1. மானசீகம் 2 . உபாம்சு 3. வைகரீ. இதில் மானசீகம் சிறந்தது. மனது நிலை கொள்ளாதபோது உபாம்சுவாகவோ (உதடும் மட்டும் அசையும்) வைகரீயாகவோ (உச்சரிப்புக் கேட்கும்) செய்ய வேண்டும். சுத்தமான இடத்தில் விரிப்பு ஆசனத்தை ஏற்படுத்திக் கொண்டு அதிலமர்ந்து, உடல், தலை, கழுத்து இவற்றை ஒரே ஒழுங்காகவும் அசையாமலும் நிறுத்தி, தன்னுடைய மூக்கு நுனியைப் பார்ப்பது போல் திருஷ்டியை (கண்களை) வைத்துச் சுற்று முற்றும் பாராமல் ஜபமும் தியானமும் செய்ய வேண்டும்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள்வது.

தவம் செய்வதற்கு இன்றியமையாத குணம் என்னவென்றால்- தனக்கு வந்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும்; தான் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமலிருப்பதும்.

தவமும் தவக்குணமான "உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை" என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களுக்குதான் பலிக்கும். இவ்விரண்டு குணங்களும் இல்லாதவர்கள் தவம் செய்வது வீண் முயற்சியாகும் என்பார் திருவள்ளுவ பெருமான்.

நாம் பிற உயிர்களை நேசிப்பது ஜீவகாருண்யமெனும் - கருணை. இறைவன் நம்மை நேசிப்பது அருளெனும் பெருங்கருணை. சீலத்தாலும் தவ வலிமையாலும் இறைவன் நம்முள் கலப்பது வீடு பேறெனும் தனிப்பெருங்கருணை என்பார் அருட்பிரகாசப் பெருமான்.

மனமாகிய எண்ணத்தினையும் அதற்குத் துணைபோகின்ற உயிர்ப்பினையும் ஜப தவத்தால் வேறு புலன்களுக்குச் செல்லவிடாமல் இறைவன் திருவடிக்கண் நிறுத்தி, நிலையில்லாததாகிய பூதவுடற்கண் காணப்படும் ஐம்பூதங்களையும் அருளால் ஒடுக்கித் திருவருளையே இடையறாது நினைக்கும் நினைவாகிய மறைப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளல் என்று வள்ளற்பெருமான் கூறுதற்கொப்ப அதனிடத்தில் உறைந்து

பேரின்பப் பேற்றிற்கு வாயிலாகிய தனி அன்பின் வழிபாடாகும்- இதுவே குருபூசையாகும்.

மகேசுவர பூசை

நாம் செய்த வினைக்கேற்ப தேகம் கிடைக்கப் பெற்றிருக்கிறது. வினையைத்தான்- விதியென்றும் விதியை மதியால் வெல்லாமென்றும் கூறுவர் பெரியோர். ஊழ்வினை எப்போதும் அகலுமென்றால்- இறைவன் குருவாக வந்து உபதேசித்த போதுதான் விலகும்.

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கீந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குத்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே.

இங்கே மூவேழ் குரவர் என்பது- தந்தை, தாய், மனைவி, குடிவழியில் ஏழு தலைமறையிலுள்ள மூதாதையர்கள்

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

சமுதாயத்திலுள்ள உறவினர், நண்பர்கள், எளியவர்கள், துறவிகளுக்கும் மேலும் பசித்திருக்கும் எவருக்கும் நிலை கெட்டுப் போனவர்களுக்கும் குடும்ப வாழ்க்கை கெட்டுப் போனவர்களுக்கும் குடும்ப வாழ்க்கை நடத்துகிறவன்தான் உதவியாவான்.

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே

இவ்வாறு ஒழுகினால்தான் பிற உயிர்களையும் தம்முயிர்போல் பாவித்தலாகிய உயிரிரக்கம் ஏற்படும். ஜீவ காருண்யமில்லாமல் செய்யப்படும் தானம், தவம் இவ்விரண்டும் மாயாசால செய்கை என்றும் இவ்வண்ணமாக ஒழுக்கங்களில் இயன்ற மட்டும் ஒழுகப்பெற்று, இடந்தனித்திருத்தல், இசையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பல நாள் முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்.

மகேசுவரன் யார் ?

நுழைவு, நோன்பு, நுண்மை என்று சொல்லப்படும்- சமயம், விசேடம், நிருவாணம், ஆச்சாரிய அபிடேகம் பெற்றவன். மூர்த்திகள் மூவர்- அயன், அரி, அரன் ஆவர்.

ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடு அந்தணர் கோடிபே ருண்பதில்
தீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே.

கோடிக்கணக்கானவர் உண்பதற்கு ஒரு பயன் உண்டென்றால் அப்பயன் திருவெண்ணீறணியும் சிவத் தொண்டர்க்கு ஒரு பிடி சோறு அளிக்க வேண்டுமென்று அன்புடன் மெய்யடியார்களை சிவபெருமான் இவர்களே என்று நினைந்து சிறப்பாக வழிபடுவார்க்கு முத்திற வினைகளான- எஞ்சு வினை, ஏன்ற வினை, ஏறு வினை என்பனவான- சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என்பன மூளாவாம்.

தாழ்விலர் பின்னும் முயல்வ ரருந்தவம்
ஆழ்வினை யாழ அவர்க்கே அறஞ்செய்யும்
ஆள்வினை நீக்கி அருவினை தன்னொடும்
போழ்வினை தீர்க்கும் அப் பொன்னுல காமே

அன்புடன் உபசரிப்பதில் தாழ்வு இல்லாதவர்களுக்கு ஆழ்வினை- ஆகாமியம். அருவினை- சஞ்சிதம். போழ்வினை- பிரார்த்தம் ஆகியவைகள் விலகி, அறம் செய்யும். அவர்கள் வாழ்கின்ற இடமே சிவவுலகமாகும்.

ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏக தேசங்களாகி, கடவுள் அருட்சக்தியால் பூதாகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்டபடியால் இந்த ஜீவர்களெல்லாம் ஓருரிமை இனத்தவர்களேயாகும். சகோதரருள் ஒருவர். ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும், கேட்ட போதும், அறிந்த போதும், அவர் தேகம் தமது சகோதர தேகமென்று தெரிந்து கொண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது தேகவுரிமையால் என்று அறிவது போல, ஒரு ஜீவன் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும், கேட்ட போதும், அறிந்த போதும் அந்த ஜீவனைத் தமது ஆன்ம இனம் என்று தெரிந்து கொண்ட மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாவது ஆன்ம உரிமையென்று அறியவேண்டும் என்பது வள்ளற்பெருமான் வாக்கு.

இதிலிருந்து நாம் அறிவது-

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு
மிடமெனநான் தெளிந்தே னந்த
வித்தகர்தம் அடிக்கசேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ.

என்ற வள்ளற் பெருமான் அறிவுரைக்கேற்ப ஜீவகாருண்யத்தையும் தத்துவ விசாரத்தையும்- இவ்விரண்டையும் பற்றி- ஜீவ காருண்யம் ஈசுவர பக்தி, பாச வைராக்கியம், பரம ஞானம் ஆகிய நான்கை அடையலாம் என்று பேசுவார். ஆகவே, உயிர்கள் உய்யும் வகைக்காக வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினர்களின் சொல்வழி ஏற்று- மகேசுவர பூசையாகிய - ஈசுவர பக்தியும், பரம ஞானமாகிய சிவபூசையும் ஆகிய நற்செய்கைகளில் பலகால் முயன்று பழகிப்பழகி இந்த தேகத்தையே நித்திய தேகமாக்கி, இறையைத்தன்னுள்ளே கண்டு, நான் தானானேன் என்பதற்கு வழிகாட்டுவதில் சிறந்தது- திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

62. முத்திரை பேதம்

*புலவர். **முத்துவெங்கடேசன்** எம்.ஏ., பி.எட்.,*
மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் (ஓய்வு)
திருமெய்யம்

ஆயிரங் காலத்து எண்ணங்களை அரை வரியில் சொன்ன அற்புதச் சித்தர் திருமூலர்.

திருமூலர் யாத்த திருமந்திரம், காலத்தால் அழியாத கருவூலம்! கருத்து மணி ஒளிரும் பேழை.

சைவ நாயன்மார்களில் சற்றே வித்தியாசமானவர் திருமூலர். நாயன்மார்களில் பலரும் இந்த உடம்பை வெறுத்தனர். ஆனால் திருமூல நாயனாரோ 'உடம்பார் அழியின் உயிரும் அழியும்'. என்றும் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றும் உடம்பின் இன்றியமையாமை பற்றி ஆய்வு செய்து முதன் முதலாகத் தன் கருத்தை வெளியிட்டவர்.

திரு மூலரின் திருமந்திரம் ஒன்பது பகுதிகளான ஒன்பது தந்திரங்களை உள்ளடக்கிய ஒப்பற்ற பனுவல்

இவற்றுள் ஏழாம் தந்திரத்துள் மொத்தம் 38 உட்பகுதிகள் உள்ளன.

அவற்றுள் ஒன்றே முத்திரை பேதம் என்ற உட்பகுதியாகும். அது என்ன முத்திரை பேதம்?

சற்றே ஆராய்வோம்.

கருவி கரண ஞானத்தை மாற்றி, முதல் நிலைக்குச் செல்வதற்குரிய உன்னதமான வழியைத்தான் முத்திரை என்பர்.

பேதம் என்பது வகை என்ற பொருளினது. சாம்பவி, கேசரி என்பனவற்றையே முத்திரை பேதம் என்கிறார் திருமூலர்.

முத்திரை பேதம் பற்றி பத்து, முத்தான பாடல்களில் எடுத்துக்காட்டுகிறார் மூலர்.

முதல் பாடல் , சிவன் திருவடிப் பேற்றை அடைய வழிகாட்டும்.

பதினொரு கருவிக்கும் சீவ போத வழியினின்று சிவபோத வழியில் மாறவே வந்தது முத்திரை என்பார். பாலமுதம் போன்ற பிரணவத்தில் அழுந்துவித்து, எல்லாவற்றுக்கும் மேலான சிவன் திருவடியை அடைவிக்க

ஆரவாரம் அடங்கி மேலான முத்திப்பேறு அமைய வழிகாட்டும் முதல் பாடல். இதோ அந்த பாடல் அமுதம்.

நாலேழு மாறிய நண்ணிய முத்திரை
பாலான மோன மொழியில் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்ய
கோலரி கலம் கெட்டுக் கூடுநன் முத்தியே

என்பது திருமந்திரம்.

இரண்டாம் பாடலில் மூன்று வகையான உறக்க நிலைகள் அடங்கவும் வழிகாட்டுவார் மூலர்.

மூவகை துரியங்கள், (உறக்க நிலை) அடங்கும் இடம் ஆகி, அரிய உரையாற்றும் நாவின் செயலை அடக்கி மருவிய சாம்பவியும், சேகரியும் உண்மையைப் பெருக்கி, ஞானம் வழங்கும் முத்திரைகள் என்பார் மூலர்.

அது என்ன சாம்பவி?

கண்விழிப் பார்வையை நாசித்துவாரங்களின் பக்கமாய் மார்பகம் வரை பார்த்துப் பழகுதல்என்பதே சாம்பவியாகும்.

புருவமத்தியில் தொடங்கி, அக நோக்கில் சிரசின் உச்சியை நோக்கிப் போதலே கேசரி என்பர்.

மூன்றாம் பாடலில், சாம்பவி, கேசரி என்னும் முத்திரை பேதம்நல்கும் அருள், ஞானம் பற்றி விளக்குவார் மூலர்.

சாம்பவி நந்தி தன்னருள் பார்வையாம்
ஆம்பவம் இல்லா அருட்பாணி முத்திரை
ஓம்பயில் ஓங்கிய உண்மைய கேசரி
நாம்பயில் நாதன் மெய்ஞ் ஞான முத்திரையே

என்பதே மூன்றாம் பாடல் - இதன் பொருள்

சாம்பவி என்பது குருவின் அருட்பார்வையை விளைவிப்பதாம். அது தொடரும் பிறவிப்பிணியை நீக்கி, அருளமுதம் வழங்கும் முத்திரையாகும்.

ஓம் என்ற பிரணவத் தியானத்தோடு, பொருந்திய கேசரியாவது, சிவ யோகியாகிய நாம் பயிலக்கூடிய மெய்ஞ்ஞான முத்திரையாகும்.

சாம்பவி அருளை வழங்கும். கேசரி ஞானத்தை நல்கும். ஆம். அருள் பெற்ற பின்னர் ஞானத்தெளிவு உண்டாகும் என்பார் திருமூலர்.

கண்டத்திலிருந்து அருள் பாலிக்கும் சதாசிவன் கருணையை எடுத்துக்கூறும் நான்காம் பாடல்.

தானத்தின் உள்ளே சதாசிவன் ஆயிடும்
ஞானத்தின் உள்ளே நற்சிவம் ஆதலால்
ஏனைச் சிவமாம் சொரூபம் மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே

என்பது திருமந்திரம்

கண்டத்திடத்து, அருள்பவனாம் சதாசிவன் வீற்றிருப்பான். திருவடி உணர்வாகிய சிவஞானத்தால் உள்ளத்தின் உள்ளமாய் - உள்ளுணர்வாய் நற்சிவன் தோன்றுவான். வாய் வாளாமையாகிய மோனத்தில் சிவமாம் உருவம் மறைந்திடும். இதுவே மோனமுத்திரை முத்திறமாம் என்பார் மூலர்.

மோனத்து முத்திரை என்பதே மவுனம். எல்லா மந்திரமும், தந்திரமும் மவுனத்தில் அடக்கம் என்பதே திருமந்திரத்தத்துவம். பின்னாளில் திருவண்ணாமலையில் ஞானத்தவமிருந்த பகவான் ரமண மகரிஷியும், 'மவுனமே சிறந்த மொழி' என்பார்.

அந்த மவுனம் இருவகை

1.செயல் - வாய்
2. மனம் (எண்ணம்)

மனத்தின் தூய எண்ணம் தான் தூய செயலாக மலரும். இதனையே மனந்தூய்மை, செய் வினைத் தூய்மை என்று வகைப்படுத்துவார் வான்புகழ் வள்ளுவர்.

வாக்கும் மனமும் இரண்டுமே மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாம்சுத்தரே
ஆக்கும்அச் சுத்தத்தை யார் அறிவார்களே

என ஐந்தாம் பாடலில் வியப்பார் மூலர்.

வாயும், மனமும் ஒருங்கிணைந்து செயலாற்றினால் பயன் உண்டு. வாய் பேசாமை ஊமை நிலை, மனம், வாய் இரண்டும் ஒன்றுபடின் அருளில் அழுந்திய தூய உயிரைக் காணலாம். 'திருவருள் உடனின்று உருவாக்கும் அந்தத் தூய்மையின் வாய்மையை அறிவார் யாரோ? என வியப்பார் மூலர்.

அட்டமாசித்திகளும் வழங்கும் சிறப்புமிகு யோக முத்திரையை விளக்கும் ஆறாம் பாடல்,

யோகத்தின் முத்திரை ஓர் அட்ட சித்தியாம்
ஏகத்த ஞானத்து முத்திரை எண்ணுங்கால்
ஆகத் தகும் வேத கேசரி சாம்பவி
யோகத்துச் கேசரி யோக முத்திரையே!

என்பது ஆறாம் பாடல். இதன் பொருள் விளக்கம்:

எட்டுவிதச் சித்திகளே யோக முத்திரை என்பர் ஒப்புயர்வு இல்லாத உண்மை உணர்வுச் சின்னத்தை ஆராயுங்கால், திருநான்மறையின் கண் வகுக்கப்பெற்ற முறையால் ஒழுகிக் கடவுள் அருளால், கைவரும் கேசரி, சாம்பவி யோக முத்திரைகள் கைகூடும்.

யோக நிலையின் உன்னத மாண்பை எடுத்துக் காட்டும் ஏழாம் பாடல் இதோ:

யோகி எண் சித்தி அருள் ஒலி வாதனை
போகி தண்புத்தி புருடார்த்த நன்னெறி
ஆகும்நன் சக்தியும் ஆதார சோதனை
ஏகமும் கண்டொன்றில் எய்தி நின்றானே

என்பது திருமந்திரம்

அகத்தவமாகிய யோகத்தால் பெறும் எண் சித்தியுள், திருவருள் உயிர்ப்பாம் அருள் மூச்சுடைய வாதனாவன்! யோகியர் புத்திக்கு மேல் உணர்ந்திடும் உணரும் நன்னெறியின் கண் உளராவர்.

செம்பைப் பொன்னாக்கும் வல்லமையே வாதனை என்பர்.

மூலமுதல் ஆறு நிலைக் களங்களிலும் நின்று அருள்பவன் சிவன் என்று துணியும் செம்பைக் கண்டு, உடனாகக் கூடி எதிர் நிற்கும் பண்பாகும் என்பது ஏழாம் பாடல் விளக்கம்.

துவாதச மார்க்கம், சோடசமார்க்கம், ஆசை அகற்றிடும் பத்து, அங்கம் ஆறு, மற்றும்வேதாந்த சித்தாந்தத் தன்மை ஆகியன பற்றி விளக்கும் எட்டாம் பாடல்.

ஒன்பதாம் பாடல் மோன முத்திரை நல்லுயிராம் முத்தர்க்குரியது என்றும், நாதராகிய சிவகுருவிற்கு உரியது ஞானமுத்திரை என்றும் வரையறுக்கும்.

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்தரை
கானிக்கு முத்திரை கண்ட சமயமே

என்பது திருமந்திரம்

செம்பொருள் துணிவாம்சித்தாந்தச் செந்நெறியாளர் முத்திரை ஆன்சுரை முத்திரை என்பர்.

ஆன்சுரை முத்திரை, தேனு முத்திரை பசுமமுத்திரை என இரண்டு வகைத்து என்பர். தூய நெறி கண்ட சுவடு பற்றி விளக்குவார் பத்தாம் பாடலில்,

இதோ, பத்தாம் பாடல்

ஆயிரம் தாமரை அருள் வழியாக, தூய வழியாக, தூய நெறியாகிய உச்சித் துளை வழி மேல் நல்வழி திகழும். உடலும் உள்ளமும் பொன் வண்ணமெனத்திகழ்ந்திட அருள் நெறியே துணை நிற்கும். மலம் நீங்கி, நலம் பெற மேலான உயிர்ப்பு வழி காட்டுகின்றார் திருமூலர்.

யோகத்தால் ஞானம் உண்டாம் அருள் உண்டாம். எல்லாரும் யோக முத்திரை வழி வாழ்ந்தால் உடலும் உள்ளமும் செம்மையுறும், சிவகதி பெறலாம் என்பதே முத்திரை பேதம் காட்டும் முத்தான வழியாகும்.

யோகமும் ஞானமும் அருளும் கைவரப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு யாக்கப் பெற்ற திருமூலர் திருமந்திரம் உலகுக்கே ஒரே மந்திரம் என்பேன். திருமூலரின் திருமந்தர வழியில் நடப்போம். வாழ்வியலில் நலமும் வளமும் பெறுவோம்.

வாழ்க வையகம்! வாழ்க அருள்நெறி! வாழ்க திருமந்திர நெறி.

திருச்சிற்றம்பலம்

✲✲✲✲✲

63. பூரண குகைநெறிச் சமாதி, சமாதிக் கிரியை

அருட்பா அவதானி. சி. செகந்நாதன்
புதுக்கோட்டை

பூரண குகைநெறிச் சமாதி என்ற தலைப்பு ஏழாம் தந்திரத்துள் 18 ஆவது தலைப்பு ஆகும்.

இப்பகுதியில் பூரணமாம் உயிர்ப்படங்கல் நிலையைப் பெற்றவர்கள் அந்தப் பூரணமாம் குகையில் ஒன்றிய நெறியே சமாதி என்பதை விளக்க வந்துள்ளது.

சமாதி என்ற சொல்லை சமம்+ஆதி என்று பிரித்து ஆதியிற் சம என்று மாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு ஆதி நாம் கற்பத்திற்குள் இருந்த நமது உயிர்ப்பே ஆகும். நாம் கற்பத்திற்குள் இருந்த வரை உயிர்ப்பு ஓடவோ, வெளி இயக்கமோ இல்லாமல் இருந்தது என்பது யாவர்க்கும் நன்கு தெரிந்ததே. கற்பத்துள் இருந்த காலவரையறையில் நாம் உயிர்ப்பை நடத்தாமலேயே உயிர்ப்படங்கி இருந்தோம். நம்முள் நமதுயிர் உள்ளே இருந்த அந்தக் காலகட்டமே நமக்கு நமது உடல், கருவி, கரணங்கள், தத்துவங்கள் ஆகியவை உண்டாக்கப்பட்டு உருவாக்கப் பெற்றது. நமது ஒவ்வொரு உறுப்பின் ஆற்றலும் அக்கால கட்டத்திலேயே நமக்கு வரையறுக்கப் பெற்றது. உதாரணமாக நமது இரு கண்களின் உயர்ந்தபட்ச ஆற்றல் என்ன தெரியுமா? சூரியனின் அனைத்து ஆற்றலையும்- நமது வலது கண் பெற்றுள்ளது. சந்திரனின் அனைத்து ஆற்றல்களையும் நமது இடது கண் பெற்றுள்ளது. இதனை விளக்க வேண்டுமாயின் சூரிய ஒளியே இயற்கையில் அனைத்திற்கும் இலை, பூ முதலியவைகளை உண்டாகத் துணை புரிகின்றன. இவ்வாறு இயற்கையை மலர வைக்கும் ஆற்றல் நமது கண்களுக்கு உண்டு என்றால் நமது ஒவ்வொரு உறுப்பின் ஆற்றல் எல்லையை மதிப்பிட ஒல்லுமா?

இவ்வளவு ஆற்றல்களையும் நமக்குள் தந்தது நமது உயிர்ப்பு ஓடாது அடங்கி நின்ற நிலையே என்பது ஆழ்ந்து எண்ணத்தக்கது ஆகும். இவ்வாறு ஆற்றல் பெற்ற நாம் பிறந்து உலகிடை வந்தபின் நமது ஒவ்வொரு மூச்சும் நமக்கு இழப்பாகி இளமை, வளமை முதலியவைகளைத் தந்து பின் முதுமையையும் தந்து இறப்பிற்குள்ளாக்குகிறது.

ஞானிகள் உயிர்ப்பினை ஊன்றிக் கண்காணித்தார்கள். அது இருப்பதும் பின் வெளி விடுவதுமாக இயங்குவதைக் கண்டார்கள். கண்டவர்கள் உயிர்ப்பை உள் இழுக்கும் பொழுது எவ்வளவு காற்றை உள் வாங்குகிறோம், பின் வெளிவிடும் பொழுது எவ்வளவு காற்றை வெளி விடுகிறோம் என்று அளந்தார்கள். அவர்களின் அளவை மூச்சின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும். மூச்சுக் காற்றை நிறுத்த முடியாது. ஆகையால் நீட்டல், அளவையில் அளந்தார்கள். அப்படி அவர்கள் அளக்கும் நுண்ணுணர்வைப் பெற்ற பொழுது உள்வாங்கும் உயிர்ப்பின் நீளம் 8 அங்குலம் என்றும், பின் வெளிவிடும் உயிர்ப்பின் நீளம் இடது நாசி வழியாக வெளிப்போந்தால் 16 அங்குலம் எனவும், வலது நாசியில் வெளிப்போந்தால் 12 அங்குலம் அளவும் வெளிச் செல்வதாக அறிந்தார்கள். இதனை,

பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினோ டாறும் உயர்கலை பான்மதி
ஒத்தநல் அங்கிய தெட்டெட்டுயர் கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்து கொள் வீரே -854

என்றும்

எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டும் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலையெனக்
கட்டப் படுந்தா ரகைக்கதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றோ டாறுங் கலதியே -856

என்று கூறுவர். இவ்வாறு நமது உடல் கர்ப்பத்துள் இருக்கும் பொழுது உயிர்ப்பே இல்லாது இருந்து, கர்ப்பத்தை விட்டு இம்மண்ணுலகத்திற்கு வந்து உலகக் காற்று நமது உடம்பில் பட்டவுடன் உள்நின்ற உயிர்ப்பு தலைகீழாக மாறி வெளி நிற்கும் உயிர்ப்பாக மாறியது.

ஞானிகள் யோசித்தார்கள். இவ்வுலகே நம் உயிர்ப்பை மாற்றியது. இம்மண்ணுலகில் இவ்வுடலோடு வாழும்பொழுதே நாம் நம் தாயின் கர்ப்பத்துள் இருந்த அந்த இயங்கா உயிர்ப்பை அடைந்து விட்டால், இம்மண்ணுலகிற்கே உரிய உயிர்ப்பு நம்மைத் தீண்டாதல்லவா என்று எண்ணினார்கள். எண்ணிய பின் உயிர்ப்பு அடங்கும் நிலை நம்முள் எங்கே உள்ளது என்று நுணுகி நுணுகி தன்னைத் தானே ஆராய்ந்தார்கள். இவ்வாறு தன் உயிர்ப்பையே தான் ஆராயும் அந்நிலையில் அவர்களுக்கு உலகத் தொடர்பு அணுவும் இல்லாது தன் கருமமே கண்ணாக இருந்தார்கள். இதனையே தவம் என்று வள்ளுவர் இப்படிக் கூறுவார்.

தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றெல்லாம்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு.

இப்படி தம் கருமமே செய்து தன்னுள் தம் உயிர்ப்பு ஒடுங்கும் இடத்தை கண்டு அவ்விடத்தே ஆடாது அசையாது இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் உடம்பு மூத்துப் போகவில்லை. பசி இல்லை, தாகம் இல்லை, மலம் சலம் இல்லை, கண் சிமிட்டல் இல்லை, உரோமம் வளர்ச்சி, தாழ்ச்சி இல்லை. உடம்புக்குரிய நிழல் இல்லை, நரை இல்லை. திரை இல்லை, உடம்பிற்குரிய வியர்வை இல்லை, உறக்கம் இல்லை, உடம்பின் ஆற்றல் 12 வயது பாலகனின் உடலாக இருந்தது. உலகில் நினைத்த இடத்தில் தான் இருப்பது கண்டார்கள். இவ்வளவு ஆற்றல்களும் தான் தன் உயிர்ப்பை வெளிவிடாது அதனையே நினைந்து கொண்டிருப்பதனால் தனக்குள் வாய்த்தது கண்டார்கள்.

ஆக, தாம் கற்பத்துள் இருந்த உயிர்ப்பைப் பெற்று இருக்கும் பொழுது முதல் நிலை சாதனையாக மேற்கண்ட ஆற்றல்களைத் தாம் அடைந்தது கண்ட நமது ஞானிகள் மேலும் மேலும் உண்மை காணத் தலைப்பட்டார்கள். அப்படித் தலைப்படும் பொழுதுதான் பூரண குகைநெறிச் சமாதியின் உண்மை அவர்களுக்குப் புரிந்தது. மேலே கண்ட ஆற்றல்கள் நமக்குக் கைவரப் பெற்றாலும் தாம் ஒரு காலக் கட்டத்தில் இறந்து, ஒரு தந்தையின் கர்ப்பத்துள் புகுந்து, தாயின் கர்ப்பத்துள் புகுந்து பிறவி ஏற்போம் என்ற உண்மை புலனாகிற்று. அதனால் அதற்கு மேலும் உணரத் தலைப்பட்டார்கள். அந்த உணர்ச்சி உணர்ந்துணர்ந்துணரினும் உணராப் பெருநிலையாக அது தன்னை வந்தடையக் கண்டார்கள்.

பூரண குகைநெறிச் சமாதி என்ற பகுதியில் கூறப்பெறும் செய்தி என்னவென்றால், ஞானத் தன்மை எய்திய உடல் என்றும் இளமையோடும், உடல் அசுத்தங்கள் நீங்கியும் (மேலே கூறப்பெற்ற 12 நிலைகள் உடல் அசுத்தங்கள் ஆகும்) பெற்ற ஞானி அதற்கு மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறும் பகுதியாகும்.

இதில் முதற் பாட்டிலேயே குகைநெறி என்றால் என்ன என்றும் கூறுவார். ஒரு ஞானி பிறவாமையை எய்தும் பொழுது பிறப்பதற்கு வழியாய் உள்ள தாய் கருப்பையில் தமது ஆன்மா வந்து தங்காத படியும், தந்தையான கருவில் தங்காதபடியும் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்னும் மிக நுண்ணிய கருத்தை எடுத்தியம்புகின்றார். ஏனெனில் கோடானு கோடிப் பிறவியில் நமது ஆன்மா தந்தை தாய் கருப்பையை நோக்கியே தனது பயணத்தைத் தொடர்ந்தது. இப்பிறவியில் அந்த

ஆன்மாவை பிறவிக்கு ஏதுவாக்க முடியாதபடி செய்ய வேண்டுவதே ஞானியின் செயல். ஞானத்தின் முழுமை. ஒரு பெண் தன் கணவனிடமிருந்து நம்மைப் பெற்றாள். அந்தக் கணவன் இயற்கையிலிருந்து நம்மை பெற்றுத் தன் மனைவிக்குத் தந்தான் என்பதை அடிப்படையாக கொண்டதே பெற்றோர் என்ற சொல்லின் பொருள்.

ஒரு ஞானி உலகில் இருக்கும் பொழுது தனது உயிர்ப்பை பன்னிரண்டு ஆண்டுகள் உள் இருத்தி பழக்கப் படுத்திக் கொண்டானானால் அவனே ஜீவ சமாதி அடையும் பக்குவ நிலையை எய்துகிறான். பன்னிரண்டு ஆண்டுகள் உயிரை உள் இருத்தி கொள்ளும் பொழுது அவனது ஆன்மா ஒரு தாயின் கற்பத்துள் புகும் நிலையை இழந்து விடுகிறது. அதன் பின் அவனது ஆன்மா ஒரு தந்தையின் கருவை நாடுவதை தவிர்க்கவே ஜீவ சமாதியை அடைகின்றான். உயிருடன் ஒரு குழியில் தான் அமர்ந்து தன்னை பலகைக் கற்களைப் போட்டு மூடிவிட செய்வது ஜீவ சமாதி ஆகும். இந்த ஜீவ சமாதி எத்துனை ஆண்டுகள் என்ற வரையறை அவனுக்கும், அவன் ஆன்மாவுக்கும் மட்டுமே தெரிகின்ற ரகசியம்.

இவ்வாறு ஜீவ சமாதி அடைபவர்கள் வளர்பிறை நாட்களையே தேர்ந்தெடுத்து செய்வாராம். இதனை திருமந்திரம்,

வளர்பிறையி ற்றேவர் தம்பாலின் மன்னி
உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி
தளர்வில் பிதுர்பதம் தங்கிச் சசியுள்
உள துறும் யோகி உடல்விட்டால் தானே -1902
பானு- சந்திரன்: தாய். பிதுர்- தகப்பன்

இவ்வாறு உயிர்ப்பு அடங்கிய நிலையை பூரணம் என்பர். உயிர்ப்பு அடங்கலாகிய பூரணத்தை தாயின் கருவாகிய குகையினின்றும் நீங்கவும், தகப்பனது கருவாகிய குகையினின்றும் நீங்கவுமே பயன்படுத்துவதால் பூரண குகைநெறிச் சமாதி என்பது தலைப்பாயிற்று. இப்பகுதியில் எட்டுப் பாடல்கள் உள்ளன. முதல் பாடலில் மேலே கண்டபடி யோகியின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அடுத்து வியோகி அதாவது யோகி ஆகாதவனின் இயல்பும், யோக நிலையின் உச்சம் வராதவனின் நிலையையும் அடுத்து இரண்டு பாடல்களில் கூறுகிறார்.

தானிவை ஒக்கும் சமாதிகை கூடாது
போனவியோகி புகலிடம் போந்துபின்
ஆனவைதீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வார் அருளின் சார்வாகியே

ஆன்+நவை-ஆனவை. உயிர்ப்பு நடத்தல் உயிருக்குக் குற்றம். இது தீரவே நிரந்தரமாய் யோகம் ஆன அவை சேர்வார் என்பது ஆனவை என்ற இரண்டு சொற்களுக்கும் தனித்தனிப் பொருள் காணல் வேண்டும்.

அவர்கள் சிதைந்து (இறந்து) உடல் விட்டால் தவமாகிய உலகம் சென்று பின் இப்புவியில் பிறந்து இவ்வுலகம் போற்றும் புண்ணியமிக்கவராய் வாழ்வார்.

தானிவ் வகையே புவியோர் நெறிதங்கி
ஆனசிவ யோகத் தாமாறாமவ்விந்து
தானதில் அந்தச் சிவயோகி ஆகும்முன்
ஊனத்தோர் சித்திவந் தோர்காய மாகுமே

சித்திகள் கைவரப் பெற்றவர்களாகி உலக நடையில், நெறியில் சித்தர்கள் இருப்பர். சிவயோகி என்பவன் பிறவாப் பெருநெறியாளன். சித்துக்கள் கைவரப் பெற்ற சித்தர்கள் பிறவாப் பெருநெறி சாராதார் ஆவார். இவ்வாறு பிறவாப் பெருநெறியாளர் தம் நெஞ்சத்தும் உடலகத்தும் எங்கும் சிவம், அருள், தற்பரம் பரவி உலகை உண்ட வான் போல அந்த ஞானியை முழுதும் விழுங்கி அவனுள் ஈசன் பிரிவுறாது நிற்பன் என்று பூரண குகைநெறிச் சமாதியில் உள்ளவனது திறம் பற்றி திருமந்திரம் கூறுகிறது.

எங்கும் சிவமாய் அருளாம் இதயத்துத்
தங்கும் சிவஞானிக் கெங்குமாம் தற்பரம்
அங்காங் கெனநின்று சகம்உண்ட வான்தோய்தல்
இங்கே இறந்தெங்கு மாய் நிற்கும் ஈசனே.

சமாதிக் கிரியை

ஏழாம் தந்திரத்துள் 19-வது தலைப்பாக வந்துள்ளது சமாதிக் கிரியை. ஒரு ஞானி உடல்விட்டால் அவரைச் சமாதியில் வைக்க வேண்டும். அப்படியில்லாது எரிப்பதனாலோ, தூரயெறிவதனாலோ வரும் கேட்டினையும், சமாதி செய்யும்பொழுது அவனுக்குரிய குழிதொண்டுதலிலிருந்து செய்யும் கிரியையை அதாவது செயலைச் சொல்லுவது இப்பகுதி.

தானந்தம் இல்லா ஆனந்தம் பொருந்தியும் அருளை உற்றும் இருந்த ஞானி உடல் விட்டால் அந்த உடலை குகை செய்ய வேண்டும். குகை என்பது சமாதி வைக்கும் கல்லறைக் குழி. இவ்வாறு அந்த ஞானியின்

உடலைச் சமாதி செய்தால் அந்நாட்டை ஆளும் அழகு பொருந்திய மன்னரும், அவன் நாட்டிடை வாழும் மக்களும், முடிவற்ற இன்பமாம் அருளை அடைவர்.

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த உடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே

அடுத்து அந்தக் குகையை எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றிக் கூறுகிறார். சாதாரண மக்கள் இறந்தால் நீளமாக குழியை வெட்டி இறந்தவர் உடலை படுக்கையாக வைத்து மண்ணைப்போட்டு மூடுவர். ஆனால் ஞானி உடல் விட்டால் அந்தக் குகை(குழி) வட்டமாக அமைத்தல் வேண்டும் என்பார். அது ஒன்பது சாண் ஆழம் உடையதாக இருக்க வேண்டும். ஐந்து சாண் சுற்றளவு பொருந்திய வட்டமாக அமைக்க வேண்டும். அதில் உள்ளே மூன்று சாண் அளவில் ஒரு முக்கோண பீடம் அமைத்தல் வேண்டும். அதன்மேல் அந்த ஞானியை பத்மாசனத்தில் இருத்தல் வேண்டும். சாண் என்ற கையளவு அந்த ஞானியின் கையளவாக இருத்தல் வேண்டும்.

நவமிகு சாணாலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணாகக் கோடிட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணாக்கிப்
பவமிகு நற்குகை பத்மா சனமே

இப்படிச் செய்யும் குகையை எங்கே அமைப்பது என்பது பற்றி அடுத்த பாடலில் குறிப்பிடுகிறார். 1. அந்த ஞானி இருந்த இடம். 2. அல்லது மக்கள் போக்குவரத்துள்ள யாவர்க்கும் பொதுவாய் உள்ள சாலை. 3. யாவர்க்கும் பொதுவான குளக்கரை 4. யாவர்க்கும் பொதுவாய் உள்ள ஆற்றங்கரை 5. நல்ல மலர்கள் பூத்து நிழல் பரப்பும் சோலை 6. நகரின் புனிதமான பகுதி. 7. அருமையும் பெருமையும் உள்ள காடு. 8. உயர்ந்த மலைச்சாரல் ஆகிய இந்த எட்டு இடங்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து அவரது உடலைக் குகை செய்ய வேண்டும்.

தன்மனை சாலை குளங்கரை ஆற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே

அடுத்து அக்குகைச் சமாதியின் சுற்றுப்புற அளவும், வழிபடுவோர்க்கு அமையும் இடமும் பற்றி உரைக்கின்றார். அக்குகையை மையமாக வைத்துச் சுற்றியுள்ள இடம் 20 சாண் அகலமுள்ளதாக இருக்க வேண்டும். (ஐந்து சாண் சுற்றளவு உடைய குகை, அதுபோல நால் வட்டம்) ஏன் என்னில் அவரை வழிபடுவோர் தம் முழந்தாள் இரண்டு, முன்கை இரண்டு, நெற்றி ஒன்று ஆகிய ஐந்து உறுப்பும் நிலத்தே படும்படி வணங்குவதற்குரிய அகல நீளம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். வைகறைப் பொழுதில் சூரியஒளி அக்குகை மீது விழும்படியாம் அழகு பொருந்தியதாக அக்குகை அமைதல் வேண்டும். அப்புறம் காலம் கருவி பணி ஆகிய மூன்றுக்கும் அணி செய்வதாகிய இடத்தை வரையறை செய்ய வேண்டும். இதுவே காலத்தால் அழியாது நிற்கும் அந்த ஞானிக்குச் செய்யும் நேர்மை முறை என்க.

நற்கை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யும் நேர்மையை தாமே

பாதம்- வைகறை

அடுத்து, அக்குகையினுள் என்னென்ன பொருள்கள் இட்டு அவரை எப்படி அமர்த்துவது என்பதும், அதன்பின் செய்வதுமாகக் கூறுகிறது. 9 சாண் ஆழம், 5 சாண் சுற்றளவு, உள்ளே மூன்று சாண் முக்கோண பீடம் உள்ள குகையில் (குழி) பஞ்சலோகங்கள் ஆகிய பசும்பொன், வெண்பொன்(வெள்ளி) செம்பொன்(செம்பு) வரைபொன் (ஈயம்) கரும்பொன் (இரும்பு) இவைகளை உள்ளே பெய்து ஒன்பது மணிகளையும் பரப்பி (பாரித்தல்) இவற்றின் மேல் இருக்கை அமைத்து அதன்மேல் தருப்பைப்புல் பரப்பி (முஞ்சி) அதன்மேல் திருவெண்ணீறு இட்டு அதன்மேல் தங்கம் செய்யும்(செம்பை பொன்னாக்கும்) ஒரு பூந்தாது உள்ளது. அவைகளைப் பெய்து அந்த ஞானியை அதன்மேல் இருத்துதல் வேண்டும். (மூன்று சாண் முக்கோண பீடம் உள்ளே அமைத்ததின் மேலே இவைகளைச் செய்தல் வேண்டும்)

பஞ்சலோ கங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலாசன மிட்டு
முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய் நற் சுண்ணம் பொதியலு மாமே

பொன் செய்யும் பூந்தாதுகளை உடைய மலர் இன்றும் இருக்கிறது. நமக்கு அந்த மலர் தெரியவில்லை. ஞானியை நல்லடக்கம் செய்ய ஒரு நாள் வந்துவிடுவான். அவனுள் அம்மலர் தெரியும். இதனை வள்ளற் பெருந்தகை தம் நெஞ்சறிவுறுத்தலில்,

.............கீழ்க்கொல்லை
பச்சிலையால் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்
இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே- 412-413-அருட்பா

என்று வீட்டுக் கொல்லையில் அல்ல-கீழ்த்தரமான கொல்லைப்புறத்தில் கிடக்கும் பச்சிலையே செம்பைப் பொன்னாக்கும் என்றால் அப்பொன்னின் மேல் உனக்கு இச்சை எப்படி வந்ததோ என்று தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துவார். மேலும் திருமூலர் காலத்து மக்களுக்குப் பொன் செய்யும் விதம் தெரிந்திருந்தது. அக்கலையைப் சிறுவர்களுக்கும் விளையாட்டு மூலமாகவும் உணர்த்தினர். இன்றும் உப்புக் கட்டி விளையாடுதல் என்று கையுள் ஒரு குச்சியை வைத்து இரு கைகளாலும் மண்ணை நீள வாட்டத்தில் குவித்து அக்குச்சியை அதில் மறைத்து வைத்தபின்அது எந்த இடத்தில் இருப்பது என்று மற்றொருவர் காட்டுதலில் வெற்றியும் தோல்வியும் கண்டு ஆனந்திப்பது உண்டு. அப்படி அக்குச்சியை மறைக்கும் பொழுது "கிச்சு கிச்சுத் தம்பலம் கிய்யாக் கிய்யாத் தம்பலம் நட்டு வைச்சாப் பட்டுப்போ" என்று கூறி விளையாடுவர். இது பகுதிக்குப் பகுதி வேறுபடும் பாட்டு. ஆனால் "கிச்சுத் கிச்சுத் தம்பலம், கிய்யாக் கிய்யாத் தம்பலம்" என்ற வரி மட்டும் யாண்டும் மாறாது நிற்கிறது. இந்தப்பாடலால் பொன் செய்யும் முறைபற்றிக் கூறப்பட்டுள்ளது. பொன்செய்நற் சுண்ணம் பொதியலுமாமே என்ற வரி தமிழினின் சீரிய ஏற்றத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது. சுண்ணம்-பூந்தாது, மணப்பொடி, பொடி-

அடுத்து, அப்படிச் செய்த அந்த ஞானியின் குகை இருபது சாண் சுற்றளவின் நடுவில் இருக்குமாறு அமைத்து, அதன்மேல் தேன்சொரியும் மலர்மாலைகள், சந்தனக்கலவை, கந்தூரி முதலிய மணக் கூட்டுக்கள், சாந்து, புனுகு, பன்னீர் முதலியவை பொதிந்து, ஒளி பொருந்திய சிறந்த நறும்புகையும் விரும்பி மகிழ்ந்து அவருக்குச் செய்தல் வேண்டும்.

நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமம் களபங்கத் தூரியும்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்
தொள்ளிய நற்றூபம் உவந்திடு வீரே

அடுத்ததாக, திருவெண்ணீற்றை நீர்படாது தூளாக மேற்கண்டவைகளின் கவசமாக இருக்கும்படி கொட்டி அதன்மேல் அந்த ஞானியின் உடலை தாமரை இருக்கையில் (பத்மாசனம்) வைத்து அதன்மேலும் மணப்பொடியும் திருவெண்ணீறும் பொலிவித்திட வேண்டும். அதன் பின் இவைகளை செம்மையுறச் செய்ய வேண்டும்.

ஓதிடும் வெண்ணீற்றால் உத்தூளங் குப்பாய
மீதினில் இட்டா சனத்தினின் மேல் வைத்துப்
போதறு சுண்ணமும் நீறும் பொலிவித்து
மீதி விருத்தி விரித்திடு வீரே

இவ்வாறு திருந்தவுட்செய்து மேற்புறம் நான்குபுறமும் மூடி விட வேண்டும். மூடியபின் இலை விரித்து பொன்போற் பொதிந்து கறிவகைகளும், போனகமாகிய திருவமுதும், இளநீரும் வைத்தும் அந்தச் சிவ குருவின் முன்வைத்து நிவேதனம் செய்திட வேண்டும். பின் அதன்மேல் கட்டிட வேண்டுவன செய்திட வேண்டும்.

விரித்தபின் னாற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே

இவ்வாறு செய்த பின் திருவெண்ணீறும், மணப்பொடியும் பலவகை மலர்களும் தருப்பைப்புல்லும், வில்வமும் கைக் கொண்டு, மழை நீரால் நீராட்டி வழிபாடு செய்க. இவ்வாறு வழிபாடு செய்தல், மூன்று நிலைகளில் அமையும். அவை காலம், கருவி, பணி என்பன ஆகும். காலம் மூன்று. ஆவன: காலை, நண்பகல், மாலை. கருவி மூன்று அவை: உள்ளம், உரை, உடல். இதனை அன்பு, இன்பு, அடைவு என்றும் கூறலாம். இதில் அன்பால் கும்பிடுவோர் இன்பம் அடையக் கருதி வழிபடுவோர். உலகியல் நினைந்து வழிபடுவோர் ஆவார். பணி மூன்று: அவை, அன்பு, அறிவு, ஆற்றல் பெற வழிபடுவோரும் உண்டு. ஆகவே இந்த முத்தரப்பான மூன்று தனியிடங்கள் அமைத்து வைக்க வேண்டும். இதனை மூன்றுள் மூன்று அணிகலன் செய்வீரே என்பார் திருமூலர்.

மீதுசொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே

கல்லறைப்படுத்திய குகை மீது (சமாதி மீது) அரசமரம், சிவலிங்கம் ஆகிய இவ்விரண்டனுள் தகுதியான ஒன்றை நிலை நாட்டிட வேண்டும். சிவலிங்கம் வைத்தால் அதனை கிழக்கு, வடக்கு முகமாக வைத்தல் வேண்டும். வைத்து அதற்குப் பதினாறு வகைச் சிறப்புக்களுடன் காதலால் ஆன பூசனை செய்ய வேண்டும். பதினாறு வகையாவன: 1. திருமஞ்சனம், 2. நறுமலர் 3. மணக்கூட்டு 4. நறும்புகை 5. சுடர். 6. குளிர்நீர் 7. திருவமுது. 8. தூசு (ஆடை) 9. அடைகாய் 10. கண்ணாடி 11. குடை 12. கவரி. 13. ஆலவட்டம் 14. விசிறி 15. ஆடல் 16. வாத்தியம்.

ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினில் ஒன்றைத்தா பித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே

தானந்தம் இல்லா ஆனந்தம் அருளை உற்ற ஞானியின் உடலை மேற்கண்டவாறு பொருந்தி சமாதி செய்து வழிபட வேண்டும். இவ்வாறு செய்தால் அந்த நாட்டை ஆளும் அழகு பொருந்திய மன்னரும், அந்நாட்டு மக்களும் முடிவற்ற இன்பம் பெறுவர். நல்லருளுக்குப் பாத்திரர் ஆகி நலமுடன் வாழ்வர்.

இப்படி யல்லாது அந்த ஞானியைத் தீமூட்டி அவரது உடலை வேக வைத்திட்டால் அந்த ஞானி இருந்த நாடு அனைத்தும் தீப்பற்றி வெதும்பும். அந்த நாட்டு மக்களின் உடலை நாயும், நரியும் உண்ணும் அவலநிலை வந்தெய்தும். பகைநாட்டவர் அந்நாட்டு மக்களைக் கொன்று குவித்து விடுவர். அப்பொழுதும் நாயும் நரியும் அவர்களது உடலை உண்ணும்.

அந்த ஞானியின் உடலைத் தீயில் எரித்தால் அது ஒருகோயிலைத் தீ வைத்து கொளுத்தியதற்குச் சமம் ஆகும். இந்த நாட்டில் மழைவிழாது வறங் கூரும். அந்நாட்டில் பஞ்சம் தலைவிரித்து ஆடும். ஆட்சி ஒழுங்காக நடைபெறாது. மன்னர்கள் அடிக்கடி அரசினை இழக்க நேரிடும்.

அச்சிவ ஞானியின் உடலைப் புதைப்பது புண்ணியச் செயலாகும். அவரது உடலைப் புதைக்காமலோ, எரிமூட்டி அழிக்காமலோ, தூர வீசி எறிந்து விட்டால், அந்த நாட்டின் அழகெல்லாம் பாழ்பட்டுப் போகும். அந்நாட்டில் தணியா வெப்பும், தீயும், பிணியும் பிறவும் அம் மண்ணுலகெங்கும் பெருகிப் பெருந் துன்பம் விளைவித்திடும்.

சமாதிக் கிரியையில் ஒரு ஞானி உடல் விட்டால் அவரைக் குகை செய்து வழிபடுவது ஒரு சிறந்த முறை. அப்படிச் செய்ய முடியாத போது மண்ணில்

புதைப்பது நற்செயல். இவை இரண்டையும் விடுத்து எரித்து அழிப்பதும், தூர வீசி எறிந்து அழிய விடுவதும் ஆகாது. அப்படிச் செய்தால் அந்நாடு எந்நிலைக்காகும் என்றும் எச்சரித்துள்ளது.

அன்று வாழ்ந்த மன்னருக்கும், மக்களுக்கும் உண்மை ஞானி யார் என்பது நன்கு தெரிந்திருந்தது. ஆனால் இன்று நமக்கோ உண்மை எது, போலிஎது என்பதே தெரியாவண்ணம் போலித் துறவிகள் மிகுந்துள்ளனர்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

64. விந்துற்பணம்

கவிஞர். அகத்தீஸ். மு.உடையப்பன்
தேவகோட்டை

உதயத்தில் விந்துவில் ஓங்கு குண்டலியும்
உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்
விதியில் பிரமாதி கள்மிகு சக்தி
கதியில் கரணம் கலைவை கரியே

பொழிப்புரை

விந்து என்று சொல்லப்படும் தூமாயை தோற்றத்தில் சிறந்த குண்டலியும் பெருவெளியில் மாயாகாரியமான வைந்தவம் ஒன்பதும் அவற்றின் முறையில் அவன் முதலிய ஒன்பதின்மரும் திருவருள் முறையாகக் கரணங்கள் கலைகள், வைகரி முதலிய ஓசைகள் ஆகிய எல்லா ஆக்கப்பாடுகளும் தோன்றும்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

விந்துவின் உற்பத்தி உலகத் தோற்றம், உயிரின் தோற்றம் இந்த இரண்டிற்கும் காரணமான விந்து ஆற்றலை விளக்குவது படைப்பில் விந்துவில் தோன்றும் குண்டலி, விந்துவின் காரியமான பிரம்மன் முதலான ஒன்பது ஆற்றல்களும் அவற்றிற்கான சக்திகளும் இவைகளின் இயக்கத்தால் அந்தக்கர்ணங்கள் ஐங்கலைகள் வைகரியாகிய வாக்குகள் ஆகிய எல்லாம் உண்டாயின.

ஒன்பது ஆற்றல் - பரமசிவன், பராசக்தி, சத்தி, சிவம், சதாசிவம், மகேஷ்வரர், உருத்திரர், திருமால், பிரமன்

அந்தக்கரணங்கள்- மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

கலை- நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்தியதீதை

வைகரி- மத்தியமை, பைசந்தி ஆக்குமை.

செய்திடும் விந்து பேதத்திறன் ஐஐந்தும்
செய்திடும் நாதபேதத்திறனால் ஆறும்
செய்திடும் மற்றவை ஈர் இரண்டில்திறம்
செய்திடும் ஆறுஆறு சேர்தத் துவங்களே

பொழிப்புரை

விந்துவின் காரியத்தால் பிரமன், விஷ்ணு, உருத்திரர், மகேசுவரர், சதாசிவராகிய ஐவரும் ஐந்து கொத்தாக உடலிற் பொருந்தித் தொழிற்படுவர். நாதபேத காரணத்தால் அது ஆறு வகையாகப் பிரியும். இவ்விதம் அமைவதால் உருவமூர்த்திகளான பிரமன் விஷ்ணு உருத்திரர் மகேசுவரர் ஆகிய நால்வர்பால் மற்ற தத்துவங்கள் பொருந்தும். இவற்றின் விரிவே உடலைப் பற்றியும் உயிரைப் பற்றியுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களாம்.

நயஉரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

விந்து பேதத்தால் உண்டானவை 25 தத்துவங்கள் நாத பேதத்தால் உண்டானவை 24 தத்துவங்கள் விந்துவும் நாதமும் சேர உண்டாகும் நான்கு தன்மைகள் 36 தத்துவங்கள் ஆகும்.

வந்திடு பேதமெலாம் பரவிந்து
தந்திடு மாமாயை வாகேசி தற்பரை
உந்து குடிலையோடு எழுறு குண்டலி
விந்துவில் இந்நான்கும் மேவா விளங்குமே

பொழிப்புரை

பரவிந்துவில் தோன்றும் மாமாயை மேலோதிய இருபத்தைந்து சிவ வடிவங்களையும் தந்திடும். மேலும் வாகேசி தற்பரை செலுத்தும் குடிலை இன்புறுத்தும்; குண்டலி என்னும் விந்துவில் பொருந்தித் தோன்றும்.

நயஉரை - சிறப்புப் பொருள்- ஆழ்பொருள்

உண்டாகும் வேறுபாடுகளுக்கெல்லாம் காரணம் பரவிந்து, பரவிந்துவில் தோன்றுகிற சுத்த மாயை, சிவசக்தி வாக்கு சக்தியும் மேல் எழும்புவதோடு உயிருக்குக் களிப்பூட்டும் நான்கு வாக்குகள் விந்துவில் பொருந்தியிருக்கும்.

விளங்கு நிவிர்த்தாதி மேவகராதி
வளங்கொள் உகாரம் மகாரத் துள்விந்து
களங்கமில் நாதாந்தம் கண்ணினுள் நண்ணி
உளங்கொள் மனாதியுள் அந்தமும் ஆமே.

பொழிப்புரை

விளங்குகின்ற நிவிருத்தியாதி கனல்அகாராதி கலையில் பொருந்தும் வளமை மிக்க உகாரம் மகாரத்துள் அடங்கும். விந்து குற்றமில்லாத நாத முடிவை எய்தி அந்தக் கரணமாகிய மனமாதியவற்றுள் அந்தம் அடையும்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

நிவிர்த்தி முதலான ஐந்து கலைகள் *அ* கரத்தில் பொருந்தும். வளப்பமான உ கரம் *ம* கரத்துள் அடங்கும் குறையற்ற நாதம் நாதாந்தம் இவைகளை மனதில் நிறுத்தி அறிய, மனம் முதலான அந்தக்கரணங்கள் அடங்கும்.

அந்தமும் ஆதியும் ஆகிப் பராபரன்
வந்த வியாபி எனலாய அந்நெறி
கந்தம தாகிய காரண காரியம்
தந்து ஐங் கருமமும் தான் செய்யும் வியமே

பொழிப்புரை

காரண காரியமாகிய முதல் விளைவுகளுக்கு எண்ணத் துணையாய் நிற்கும் முழுமுதற் சிவன் பராபரன் எனப்படுவன். அவன் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் வியாபியாவன். அந்நிலையில் மணஞ்சேர் காரண காரிய முதல்வராய்த் திருத் தொழில் ஐந்தினையும் இடையறாது புரிவன். இவையே அவன்தன் அளவில் பெருமையாம்.

நயஉரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

பரம்பொருள் எல்லாவற்றையும் தன்னுள் கொண்டும் எல்லாவற்றிலும் தான் பொருந்தியும், முடிவும் முதலுமாக இருக்கிறான். உலக உற்பத்தியை மேற்கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐம்பெரும் தொழில்களுக்குத் தனது ஆற்றலே காரணமாகவும், மூலமாகவும் கொள்கிறான்.

வியம தாகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காயஐம் பூதமும் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம்புறம் ஆகுமே

பொழிப்புரை

பெருமை உடைத்தாகிய விந்துவின் ஆற்றலால் அகண்டமும் அண்டமும் ஆகிய அனைத்து ஆக்கப்பாடுகளும் உண்டாவன. ஆகாயம் முதலிய

ஐம்பூதம் உள்ளிட்ட முப்பத்தொரு மெய்களும் தூமாயை யாகிய விந்துவின் காரியம் போன்ற படங்குடில் ஆனாற் போலும் வளர்ச்சியன்று, பால் தயிரானாற் போன்ற திரிபு. இதனைத் தூவர மாயை என்பர். இவை தூமாயையின் கீழ்ப் பகுதியாகும். இவ்விந்து முப்பத்தாறு மெய்களுக்கும் அகம்புறம் என்ப. விந்து எனினும் காரண மாயை எனினும் ஒன்றே.

நயஉரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

விதையான விந்துவின்ஆற்றலால் அகண்டமும் உலகமும் விளங்கிட விண்-மண்-காற்று-நீர்-நெருப்பு முதலான ஐம்பூதங்களும் சுத்த மாயையின் காரியமாகிய அசுத்த மாயையில் விரிய விந்து உள்ளும் புறமும் என எங்கும் பரவி நின்றது.

புறம் அகம் எங்கும் புகுந்து ஒளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதம் செம்மை
உறமகிழ் சத்தி சிவபாதம் ஆயுள்
திறனொடு வீடு அளிக்கும் செயல் கொண்டே

பொழிப்புரை

மேல் ஓதியவாறு விந்து புறம் அகம் எங்கும் விரவி ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. விந்துவின் நிறம் வெண்மை. நாதத்தின் நிறம் செம்மை அறிவு ஆற்றல்களால் ஆருயிர்களை மகிழ்விக்க மகிழும் சக்திசிவம் இரண்டிற்கும் முறையே விந்து நாதம் பதித்த நிலைக்களமாகும்.

நயஉரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

விந்துவின் நிறம் வெள்ளை, நாதத்தின் நிறம் சிவப்பு. இவை இரண்டும் மகிழ்ந்து பொருந்துவதால் ஆன்மாக்களின் ஆயுள் கூடுகிறது. பேரின்ப வீடும் கிடைக்கிறது.

கொண்ட இவ்விந்து பரமம்போல் கோதற
நின்ற படம்கட மாய்நிலை நிற்றலின்
கண்டகலாதியின் காரண காரியத்து
அண்டம் அனைத்துமாய் மாமாயை ஆகுமே

பொழிப்புரை

உடலுக்கு வெளியேயுள்ள ஒளி நிலையே குற்றமில்லா ஆடையும் குடமும் உருக்கொண்டு நிற்றல் போல் நிலைபெற்ற பஞ்ச கலைகள் ஆகிய காரணத்தினின்று காரியமாகிய பிரபஞ்சம் அனைத்துமாய் விரிந்து

மாமாயையாகும். நூல் காரணம்; ஆடை காரியம்; மண் காரணம், குடம் காரியம். அதுபோல கலைகள் முதலியவை காரணம்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

பரம்பொருள் போல விந்து பரவி நிற்கிறது. அதில் இருந்து பொருள் வடிவம் பெற்று நிற்க. அன்னையின் ஆற்றலான எல்லாம் வல்ல, மாமாயையின் காரண காரிய இயல்பே ஆகும்.

அது வித்திலே நின்று அங்கு அண்ணிக்கும் நந்தி
இது வித்திலே உளவாற்றை உணரார்
மதுவித்திலே மலர் அன்னமதாகிப்
பொது வித்திலே நின்ற புண்ணியன்தானே.

பொழிப்புரை

அகண்டத்தில் வித்தாக, விளங்கித் தோன்றும் சிவமே பிண்டத்தில் விந்துவாக உள்ள முறைமையை மக்கள் உணரார், இன்பம் பொருந்திய சுவாதிட்டான மலரில் அன்ன ரூபமாக உள்ளவனே பரமாகாயத்தில் விளங்கும் புண்ணியனாகிய சிவனாகும்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

விந்துவில் சிவப்பரம் பொருளே விதையாக விளங்கும். இதை உலகத்தால் அறியமாட்டார். நமது மனத்தாமரையில் அன்னப்பறவை போல நடராஜப் பெருமான் நின்று அருளுகிறான். மலர் என்றால் சுவாதிட்டானம் என்றும் அன்னம் என்றால் அம்ச மந்திரம் என்றும் கூறுவர். பொது வித்து என்பதற்கு பராகாயம் என்றும் பொது நடமிடும் திருச்சபை என்றும் கூறுவர்.

வித்தினில் அன்றி முளையில்லை அம்முளை
வித்தினில் அன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறில்லை
அத்தன்மை யாரும் அரன்நெறி காணுமே

பொழிப்புரை

வித்தில் அன்றி வேறிடத்தில் முளை இல்லை. அதனால் அம்முளை வித்தில் இருந்ததல்லாமல் வேறிடத்திலிருந்து தோன்றுதல் இல்லை. வித்தும் முளையும் ஒன்றைவிட்டு ஒன்று இல்லாமையால் இரண்டையும் ஒருபொருளாகக் கருத வேண்டும். அது போன்றே விந்துவும் சிவமும் ஆகும்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

விதையும் முளையும் வேறு வேறு அல்ல. முளைதானே வெளிப்படாது. விதையில் இருந்துதான் வெளிப்படும். எனவே விதையும் முளையும் ஒன்றாக உள்ளதை உலகம் அறிய வேண்டும். இதைப் போல விந்தும் சிவமும் விளங்கும் இயல்பையும் உணர்தல் வேண்டும்.

அருந்திய அன்னம் அவை மூன்று கூறாம்
பொருந்தும் உடல் மனம் போம் மலம் என்னத்
திருந்தும் உடல் மனமாம் கூறு சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதமது ஆகுமே

பொழிப்புரை

உண்ட உணவுகள் உயிர் பொருந்துவதற்குரிய உடல், மனம், கழியும் மலம் என்று மூன்று பகுதியாகும். திருந்தும் உடலும் மனமும் ஆகிய இருபகுதிகளும் சேர்ந்து முன்னால் உண்ட உணவின் சாரத்தால் அமைந்து இருந்தன. உணவின் தன்மைக்கேற்ப உடலோடு உள்ளமும் அமைகிறது. சாத்துவிக உணவு நல்ல உடலுறுதியும், மன அமைதியும் தந்து யோகம் பயில உதவும்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

நாம் உண்ணும் உணவு மூன்று பகுதியாகும். அவை உயிரில் இருக்கும் உடலுக்கு, உடலில் இருக்கும் மனதுக்கு, மற்றும் வெளியேறும் மலம், மனமும் உடலும் இருப்பது அவை உண்ட உணவின் சத்தினாலே ஆகும்.

இரதம் முதலான ஏழ்தாது மூன்றில்
உரிய தினத்தில் ஒரு புல் பனிபோல்
அரிய துளிவிந்து வாகும் ஏழ்மூன்றின்
மருவிய விந்து வளரும் காயத்திலே

பொழிப்புரை

இரதமாகிய சாரம் முதலாகச் சொல்லப்படும் ஏழ் முதற் பொருள்களால் ஆக்கப்பட்டது. இவ்வுடல் தாது-முதற் பொருள். அவ்ஏழும் வருமாறு சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மூளை, வெண்ணீர் ஆகிய மூன்றும் ஒரு நாள் ஒரு புற்பனிபோல் திரளும். இத்திரட்சியே விந்து எனப்படும். இவ்விந்து ஏழு மூன்றாகிய இருபத்தொரு நாள்வரை உடம்பில் வளரும்.

நயஉரை - சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

நமது உடம்பு நாம் உண்ணும் உணவின் மூலம் வரும் ஏழு தாதுக்களால் ஆனது சத்து-ரத்தம்-சுக்கிலம் என்ற 3 தாதுக்கள் சேர்ந்து சிறு அளவில் விந்துவாக உருப்பெறும். இது 21 நாளில் உண்டாகி வளரும். ஏழு தாதுக்கள் எவை? சத்து, இரத்தம், எலும்பு, தோல், சதை, சுக்கிலம், நிணம்.

காயத்திலே மூன்று நாளில் கலந்திட்டுக்
காயத்துள் தன்மனம் ஆகும் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல் வோர் மனத்தோடு அழியுமே

பொழிப்புரை

அதன்பின் மூன்று நாள் காறும் பரந்து கலந்து முன் உடல் விந்துவாக இருந்த அது மனவிந்துவாக மாறும். அதனைக் கலையாகிய அறிவு விந்துவாக அமைத்துச் சிவன் திருவடியுணர்வாய் நீங்காது நின்றோர்க்கு அவ்விந்துவும் நீங்கா. பற்று அறாமையின் உலக மயக்கில் ஈடுபடுவோர்க்கு அவ்விந்து மனத்துடன் அழியும். இதனையே கனவிற் கழிதல் என்ப.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

உடலில் கலந்த விந்து மனவிந்தாகிறது. பின்னர் கலையாகிய ஞான விந்தாகிறது. பரம்பொருளின் மேல் வைத்த ஆழ்ந்த பக்தியில் ஆழ்ந்திருப்போருக்கு விந்து வெளிப்பட்டு வீணாகாது. அப்படி இல்லாமல் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பவர்களுக்கு விந்து அழிந்து வீணாகும்.

அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னையும் காக்கலும் தேரார்
அழிகின்ற காயத்து அழிந்து அயர் உற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே

பொழிப்புரை

அழிகின்ற விந்துவின் அளவை அறியமாட்டார், இறந்து அழிகின்ற தன்னை உள்ளே காத்துக் கொள்ளுதலையும் தெளியமாட்டார். அழிகின்ற தன்மையை அறிந்தும் விந்து நீக்கத்தினின்றும் ஒழியார். விந்து கழிவதால் வாழ்நாளும் உடலும் பாழாகும். ஏனெனில் பன்மடங்கு இரத்தமே மாறி ஒரு துளி வீரியம் ஆகிறது.

நய உரை-சிறப்புப் பொருள்-ஆழ்பொருள்

விந்து வீணாக வெளிப்படாது. அப்படி வெளிப்பட்டுக் காக்கத் தெரியாதவர்கள் அதன் அளவை அறியமாட்டார்கள். காக்கும் தன்மையும் இவர்களுக்கு தெரியாது. வீணாவதால் உடல் சோர்ந்து விடும். சோர்வுக்கு காரணம் தெரியாது. தங்களை காத்துக் கொள்ளவும் தெரியாது.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

65. விந்து செயம், போக சரவோட்டம்

முனைவர். சபா. அருணாசலம்
தேவகோட்டை

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

எனத் திருமூலர் தாம் திருமந்திரம் படைத்த குறிக்கோளை விளக்குகிறார். குறிஞ்சிப்பாட்டின் அடிக்குறிப்பில் உள்ள *ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது* என்ற தொடர் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தமிழ் என்பது வெறும் மொழியைக் குறிக்காமல் அகப்பொருளைக் குறித்தது. தமிழ் தமிழ்ப் பண்பாட்டைக் குறித்தது போல இங்கே தமிழ் என்பது தமிழர் சமய ஒழுக்கத்தைக் குறிக்கின்றது.

முதல் எட்டுத் திருமுறைகளில் இடம் பெறாத யோக நெறி குறித்துத் திருமூலர் திருமந்திரத்தில் விரிவாகப் பேசுகிறார். திருமூலர் செய்த திருமந்திரம் முதல் தமிழ் ஆகமம் என டாக்டர். சுப. அண்ணாமலையார் கூறுகிறார். தமிழ் நெறியைத் தழுவி வடமொழியில் எழுதப்பட்ட ஆகமங்களை ஒப்பத் தமிழில் முதல் ஆகமமாகத் தமது நூலைத் திருமூலர் அமைத்தார். இதனைத் "தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப் பொருளை மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப" எனச் சேக்கிழார் திருமூலர் புராணத்தில் பாடுகிறார். ஆகமம் என்ற வடசொல்லுக்குத் தொன்றுதொட்டு வரும் மரபின் வழி வருவது என்ற பொருள். தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வரும் அன்பு நெறியின் மரபில் இறையன்பின் வெளிப்பாடாக ஆடல் பாடல் நெறி திருமூலர் காலத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு படிநிலைக் கூறுகளை உடையதாக வளர்ந்திருந்தது. சைவ ஆகமங்கள் இந்நான்கையும் பாதங்களாகக் கொண்டு சைவநெறியை விளக்குவன என்பர். திருமூலர் தமது ஆகமநூலில் யோக பாதத்தை விரிவாகவும் ஏனைய மூன்றையும் பண்டைத் தமிழ் நெறியைத் தழுவிச் சுருக்கமாகவும் கூறுகின்றார்.

திருமந்திரம் சிவயோகம் பற்றித் தோன்றிய முதற்பெருநூலாகும். யோகியரைச் சித்தர் எனத் திருமூலர் கூறுகிறார். திருமூலரே தமிழகத்தின் முதற் சித்தர் ஆவார். அவரது சிவயோக முறை ஒரு புது உண்மையைத் தோற்றுவித்தது. "அழியும் தன்மையதாகிய உடம்பை யோக சாதனையால் அழியாமல் நிலை நிறுத்தலாம், இறவாமை பெறலாம் என்பதை திருமூலர்

முதன் முதலாகக் கூறி நிலை நாட்டினார்" என்று டாக்டர். சுப. அண்ணாமலை கூறுவது நோக்கத்தக்கது.

அழியும் உடம்பைக் கருவியாகக் கொண்டே அழியா நிலையாகிய சிவப்பேற்றை முக்தி நிலையை அடைய முடியும்; சிவபோகம் துய்க்க முடியும் என்பதைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டபின்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்

எனத் திருமூலர் உடம்பால் உயிர் பெறும் பயனைப் பற்றிப் பேசுகிறார்.

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்

என்னும் திருவள்ளுவர் குறளிலும் இவ்வுண்மை உட்பொருளாக ஒலிப்பதைக் காணலாம். எய்தற்கரியது மானிடப்பிறவி, அவ்வாறு பிறவி எய்தி உடம்பு பெறின் அதன்மூலம் செயற்கரிய செய்து சிவபோகமாம் பெரும்பயன் அடைய வேண்டும் என்ற நுண் பொருளையும் இக்குறள் உணர்த்தக் காணலாம். உடம்பினால் அவ்வாறு பெறும் பெரும் பயனையே ஏழாம் தந்திரத்தில் விந்துசெயம் என்ற பகுதியில் திருமூலர் விளக்குகிறார்.

சிவயோகி

.... உள்ளம் உருக அழல் மூட்டி
பார்க்கின்ற கண் ஆசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகிதானே

உலக இன்பங்களிலிருந்து விலகி அகமுகமாக எண்ணுவதாகிய உள்ளத்தைப் பெற்று இறையன்பினால் உள்ளத்தை உருக்கி அத்துடன் அமையாது யோகத்தையும் பயின்று மூலக்கனலை மூட்டி ஆசைகள் சிதையுமாறு கண்பார்வையை நாசியின் அடியில் வைக்கும் யோகி சிவயோகியாவார். அவரே விந்துவை வெற்றிக் கொண்டவர், விந்து செயம் பெற்றவர் எனத் திருமூலர் கூறுகிறார். அருள் உதவ அதனால் சிவயோகத்தைத் தொடர்ந்து பயிலாமல் இடையே காமம், கோபம், இவறன்மை, மையல், செருக்கு, பகைமை என்னும் குணங்களால் தடைப்படுவோன் தன் தவற்றை எண்ணி அஞ்சுவான். இக்குணங்கள் ஒரோவழி அன்றி அவனிடம் ஆட்சி செலுத்துமாயின் அவனது உடம்பின்

நன்மை அழியும். உடம்பு அக்குணங்களில் சிக்கி உயிரைப் பாதுகாக்காமல் அழியும்.

மத்தில் இருக்கும் மாங்கனி

வித்து இடுவோர்க்கு அன்றி மேல் ஓர் விளைவு இல்லை
வித்து இடுவோர்க்கு அன்றி மிக்கு ஓர் அறிவில்லை
வித்தினில் வித்தை விது அற உணர்வரேல்
மத்தில் இருந்தது ஓர் மாங்கனியாமே

எனத் திருமூலர் விந்துவை மேல்நிலையில் யோக சாதனையில் செலுத்துவாரே செயம் பெற்றவர் என விளக்குகிறார். விதைப்பவருக்கே விளைவு கிடைக்கும். அதுபோல விந்துவை யோக சாதனையில் கனலாக்குபவர்க்கே ஞானம் கிடைக்கும். உடம்பில் ஊறும் விந்துவுக்கும் தாங்கும் ஆதாரமாகச் சுத்த மாயா தத்துவமான விந்து இருப்பதைச் சலனமின்றி உணர்ந்தால் மாங்கனியும் அதன் மத்தியில் உள்ள கொட்டையும் அக்கொட்டையிலிருந்தே கனி கிடைத்ததை உணர்த்திக் கொண்டிருப்பதைப் போல உடம்பிற்கு ஆதாரமாகிய விந்து சுத்தமாயைத் தத்துவமாகிய ஒளி அவ்வுடம்பிலேயே வெளிப்படும். மாங்கனி தோன்றக் காரணம் மாமரத்தின் விதை. அது கொட்டையாக மாம்பழத்தின் மத்தியில் இருக்கிறது. மாம்பழத்தில் மட்டுமே கொட்டை மத்தைப் போல் பெரிதாக இருக்கிறது. கொட்டை காரணம் கனி, காரியம். அவை உடனாகவே இருப்பதைப் போல உடம்பில் தோன்றும் விந்து(ஒளி) காரியம், விந்து தத்துவம் காரணம். யோக சாதனைகளில் உடம்பின் விந்துவே விந்து தத்துவத்தால் ஒளிமயமாகி உடம்பிலேயே வெளிப்படுகிறது. அப்போது விந்துவும் ஒளியும் உடம்பில் உடன் நிற்கின்றன.

விந்து சயமே சத்தி

மூலக்கனலை மூட்டி விந்து கீழ்நோக்காது தடுத்து அதை எரித்துச் சக்தியாக்கி சுழுமுனை வழியாகச் சகஸ்ராரத்திற்கு ஏற்றி சோதியைத் தரிசித்து சந்திர மண்டலத்தின் அமுதை மீண்டும் மீண்டும் சுரப்பித்து உண்பவரே சிவயோகி ஆவார்.

காலம் கடந்த வன்காண் விந்து செற்றவன்
காலம் கடந்து அழிந்தான் விந்து செற்றவன்
காலங்களின் விந்து செற்று உற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பு அறியாரே

என விந்துவை வென்றவருக்கும் விந்துவால் அழிந்தவருக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறார். தூல விந்துவை அடக்கியவன் காலம் கடந்து வாழ்பவன் ஆவான். விந்துவை அடக்காமல் அதனால் வெல்லப்பட்டவனோ காலத்தினால் வெல்லப்பட்டு வீழ்வது உறுதி. உரிய காலத்தில் தூல விந்துவை எரித்து குண்டலி சக்தி அக்கனலோடும் மூச்சுக்காற்றோடும் மேல்நோக்கி ஏற எய்தும் சிவானுபவத்தை அனுபவித்தவரே அறிவார்.

விந்துவும் நாதமும் விளைய விளைந்தது
வந்த இப்பல்லுயிர் மன்உயிருக்கு எலாம்
அந்தமும் ஆதியும் ஆம் மந்திரங்களும்
விந்து அடங்க விளையும் சிவோகமே

உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் விந்து நாதங்களின் ஆதாரத்தில் உள்ள அசுத்த மாயையிடமிருந்து உடம்பு தோன்றியது. அவற்றுக்கும் மந்திரங்களுக்கும் விந்துவே ஆதியும் அந்தமும் ஆகும். ஆகவே ஆன்ம உணர்வு விந்துவில் அடங்கினால் சிவமாதல் என்ற உணர்வு அதற்கு ஏற்படும் என யோகநெறியில் திருமூலர் தாம் ஆய்ந்து கண்ட வழியை உலகுக்கு உணர்த்துகிறார்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

66. அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன்

முனைவர். அரங்க இராமலிங்கம்
தமிழ்ப்பேராசிரியர், தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப்பல்கலைக்கழகம்

திருமந்திரம் ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரத்து நாற்பத்தைந்து (மிகைப் பாடல்கள் பல உள) பாடல்களின் வழி திருமூலரின் அனுபவத்தினை அறிந்து கொள்ள இயல்கிறது. இந்நூல் பக்தி நூல் என்றும், சாத்திர நூல் என்றும், வேதாந்த நூல் என்றும் தாந்திரிக நூல் என்றும் ஞான நூல் என்றும் வாழ்வியல் நூல் என்றும் பலரும் பகர்வர். திருமூலர் போன்ற சித்தர் நூல்களில் உள்ள பாடல்கள் மூன்று நிலைகளில் பொருளைத் தருவதாக அமைந்திருக்கும். மேலோட்டமாகப் பார்க்கின்றபொழுது அகராதியில் குறிப்பிட்ட சொற்களுக்குரிய பொருளையும் உள்ளுறைப் பொருளாக ஆழ்ந்து பார்க்கும்போது உண்மைப் பொருளும் (உள்ளுறை), ஒரு மெய்க்குருபிரான் சுட்டிக்காட்டும்போது அதன் மெய்ப்பொருளும் (இறைச்சிப் பொருள்) தெரியவரும். எனவே, திருமூலர் போன்ற சித்தர் நூல்களை மெய்க்கல்வி பயின்ற மெய்க்குருபிரான் தயவால் விளங்கிக் கொள்ள வேண்டும். நடுக்கண் புருவப்பூட்டு திறந்து கொள்ளாதவர்களால் மெய்ப்பொருளைக் காணமுடியாது.

ஆதித்த நிலை என்ற பொருள் குறித்து ஏழாம் தந்திரத்தில் ஐந்து அதிகாரங்களில் முப்பது பாடல்களில் திருமூலர்பிரான் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்கள். மேலோட்டமாகப் பார்த்தால் சூரியனைப் பற்றிக் குறிப்பிடுவதாகத் தெரியும். ஆதித்தன் என்றால் சூரியன். ஆதித்த நிலை என்றால் சூரியனின் இயக்க நிலைகள் என்று பொருள்படும். சூரியனின் இயங்கு நிலைகளை 1. அண்டாதித்தன் 2. பிண்டாதித்தன் 3. மனவாதித்தன் 4. ஞானாதித்தன் 5. சிவாதித்தன் என ஐந்து நிலைகளில் ஐந்து அதிகாரங்களாகத் திருமூலர் விளக்கியுள்ளார். அண்டாதித்தன் என்பது இந்தப் பிரபஞ்சமாகிய அண்டத்தில் விளங்கும் சூரியனைப் பற்றிக் கூறுவது. பிண்டாதித்தன் உடம்பில் விளங்கும் ஆதித்தனைக் குறிப்பது. மனவாதித்தன் என்பது நம்முடைய எண்ணங்களின் தொகுதியான மன மண்டலத்தில் விளங்கும் சூரியனைப் பற்றிக் கூறுவது. ஞானாதித்தன் என்பது நம் உடம்பிற்குள்ளே ஞானமாக விளங்கும் ஞான சூரியனைப்

பற்றிக் கூறுவது. இறுதியாக விளங்கும் சிவாதித்தன் நம் ஊனுடம்பிற்குள்ளே சிவமாய், ஜோதியாய், அறிவாய், உயிராய் ஒளிரும் சிவத்தைப் பற்றிக் கூறுவது.

இங்கே நாம் கருத்தில் கொள்ள வேண்டியது திருமூலர் குறிப்பிடும் ஆதித்தன் என்பது நாம் கண்ணால் பார்க்கக் கூடிய காலையில் தோன்றி மாலையில் மறையும் சூரியனை அன்று. இந்தச் சூரியன் ஒருநாள் அழிந்து போகும். திருமூலர் போன்ற சிவயோகிகள் குறிப்பிடுவது கோடி சூரியப் பிரகாசமுடைய ஞான சூரியனைப் பற்றித்தான். நம் கண்களுக்குப் புலனாகும் கதிரவன் உலகின் புற இருளைத்தான் போக்கும். அக இருளை இந்த உலகச் சூரியனால் விரட்ட முடியாது. இந்த ஒரு சூரியனன்று- ஒரு கோடி சூரியன் வந்தாலும் சீவனைப் பற்றியிருக்கக் கூடிய அறியாமை இருளைப் போக்கமுடியாது. ஆனால் ஒரு மெய்ஞ்ஞான சூரியன் குருபிரான் வடிவில் வருகின்றபொழுது உங்களுடைய பல பிறவிகளுக்குக் காரணமாக இருக்கும் அறியாமைப் பேரிருள் அனைத்தும் அகன்றுவிடும். ஏழு திரைகளும் (மறைப்பு) அற்று வீழ்ந்து விடும். அறியாமையே பிறவிக்கு வித்து. ஞான சூரியனை இப்பிறப்பில் முயற்சியோடு குருபிரானின் தயவால் கண்டுவிட்டால் பிறவி ஒழிந்துவிடும் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு (திருக்குறள்-358)

அறியாமை இருளால் உருவாகும் பிறவி, ஞான சூரியனாகிய மெய்ப்பொருளைக் கண்ணாரக் காணும்போது அழிந்து ஒழியும். மெய்ப்பொருளாக இருக்கின்ற இந்த ஞான சூரியனைக் காண்பதற்குத் தான் நாம் படிக்கும் படிப்பு, முயற்சி, தவம் எல்லாம்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (திருக்குறள்-356)

மெய்ப்பொருளாக ஒளிர்ந்து உலகை வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஞான சூரியனின் ஐந்து நிலைகளைத்தான் ஐந்து அதிகாரங்களில் திருமூலர்பிரான் அருளியிருக்கிறார். முப்பது பாடல்களில் உள்ள பொருள் மேலோட்டமாகப் பார்க்கிறவர்களுக்கு அகராதியில் உள்ள சொற்கள் தரும் உலகியல் பொருள் தெரியும். தத்துவார்த்தமாக ஆழ்ந்து பார்க்கின்றவர்க்கு யோக நிலையில் ஆறு ஆதாரங்களிலும் இயங்கும் ஞான சூரியனின் இயக்கத்தை அறிந்துகொள்ள இயலும். ஆனால், ஞான நெறியில் நின்று ஒரு மெய்க்குருபிரானின் அன்பிற்குப் பாத்திரமாகி மெய்ப்பொருளை

அறிந்தவர் இந்த ஞானசூரியன் ஒவ்வொரு மானிட தேகத்திற்குள்ளும் சுடர்விட்டு ஒளிர்வதை உணர்வர். எனவே, முதல்நிலையில் உலகியலாகக் கூறப்பெறும் விளக்கம் சரியை, கிரியை நெறிகளின் பாற்பட்டது. இரண்டாம் நிலையில் கூறப்பெறும் விளக்கம் யோக நிலையின் பாற்பட்டது. மூன்றாம் நிலையில் கூறப்பெற்றது ஞானநெறியின்பாற்பட்டது. யார் யாருக்கு எந்நெறி விருப்பமோ அந்நெறியின் வழி இத்திருப்பாடல்களுக்குப் (திருமந்திரத்திற்கு) பொருள் கொள்ளலாம்.

1. அண்டாதித்தன்

அண்டத்தில் விளங்கும் சூரியன் என்று இவ்வதிகாரத்திற்குப் பொருள் கொள்ளலாம். இவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ள, பத்துப்பாடல்களின் திரண்ட கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

சூரியன் மேரு மலையை வலம் வருதற்குக் காரணம் ஈசனின் திருவடியைப் பெற முயலும் தவமுயற்சியாகும். உயிர்கள் அனைத்திற்கும் புண்ணியநாதன் சிவன், சூரியனே திருமாலாகத் திகழ்ந்து உலக உயிர்கள் உய்வதற்கு உதவி செய்கிறான். ஏழுலகங்களையும் ஓங்கச் செய்வதுடன் முதற்பொருளாகத் திகழ்வது சூரியனே. தேவர் அந்தணர் உட்பட அனைவரும் சூரியனை வழிபடக் காரணம் சிவத்தின் அன்பைப் பெற்று ஒளி பெறுவதற்கே ஆகும். தத்துவத் தோற்றம், ஆத்மாவின் சக்தி, சூரிய சந்திரனாக விளங்குவதும் அச்சிவமேயாகும். மூலாதார சுவாதிட்டான சக்கரங்களோடு தூய்மையான மணிபூரகச் சக்கரத்துக்குமேல் பதினாறு இதழ்களுடைய விசுத்திச் சக்கரத்தில் (திருநீலகண்டம்) ஐயமற விளங்குபவன் சூரியனாவான். சந்திர மண்டலம் அமையும் நிலைக்கும் சூரியனே முதன்மை, பாரசக்தி நிலைபெற்று உணர்த்துகின்ற வேதப்பொருளை அறிவு நிலையில் உணர முடியாது.

நீருக்குரிய மணிபூரகத்துக்கும் தீயினுக்குரிய அநாகதத்துக்கும் இடையில் சூரியன் உதிக்கிறான். இரு கண் பார்வையும் கொண்ட ஆஞ்ஞையில் களிப்பூட்டுகின்ற ஆனந்தத்தை மேலிடச் செய்பவன் சூரியன், மகாமேருவை சிரசு என்று அறிந்தவர் ஊனுடம்பிற்குள்ளே சூரியன் வலம் வரும் முறையை அறிவர்.

இதுவரை சொல்லப்பெற்ற விளக்கம் உலகியலான விளக்கம். அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உள்ளது என்பர். அண்டத்திலுள்ள சூரியனும், சந்திரனும் நம் உடம்பில் இருகண்களாக அமைந்துள்ளன. இதனைச் சிவவாக்கியர்,

இடதுகண் சந்திரன் வலதுகண் சூரியன்
இடக்கைசங்கு சக்கரம் வலக்கைசூல மான்மழு
எடுத்த பாத நீள்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல்கலந்து நின்றமாயம் யாவர்காண வல்லரே. (52)

என்று குறிப்பிடுவது உணரத்தக்கது. அசைவற்ற சிவத்துடன் சக்தி இடம் பக்கம் இணைந்தபோது (அர்த்தநாரீஸ்வரர்) உலகில் இயக்கம் தோன்றியது. உருவாகிய இயக்கம் தொடர்ந்து இயங்கிட(அதனைக் காத்திட) நாராயணனாகிய திருமால் இடது பக்கம் இணைந்து (சங்கர நாராயணர்) செயல்படும் நுட்பத்தைச் சிவவாக்கியர் உணர்த்துகிறார். இந்த இயற்கை - இறை சூட்சும இரகசியம் உடலுக்குள்ளும் நடக்கிறது. உணர்வுடையார் உணர்ந்து உய்தி பெறுவார்களாக! அண்டத்திலுள்ள நவகோள்களும் இந்த ஊனுடம்பின் கண்டத்துக்கு மேலே சிரசாகிய தலைக்குள் அமைந்துள்ளன. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானமன்றோ? ஆறு ஆதாரங்களும் சிவமாகிய ஞான சூரியன் வீற்றிருக்கும் தலைக்குள்ளேயே அமைந்துள்ளன. மூலாதாரம் தொடங்கி ஆக்ஞை வரை செல்லும் ஆறு ஆதாரங்களும் உடம்பின் கீழிருந்து மேலே செல்வதாகக் கூறுவது யோக நெறி மரபு. ஆனால் ஆறு ஆதாரங்களும் சிரசாகிய தலைக்குள்ளேயே அமைந்திருப்பதாகக் கூறுவது ஞானநெறி மரபு. இவற்றை முறையே கீழாதாரங்கள் மேலாதாரங்கள் எனக் குறிப்பிடுவர். அந்த ஞான சூரியனே எல்லாமாகத் திகழ்வதைத் தானே உலகிற்குத் தத்துவனாய் நிற்கும்(1978) என்னும் பாடல் வழி உணர்த்துகிறார். ஞானசூரியன் முக்கோணமாக அறுகோண வட்டத்திற்குள் எட்டாகக் குறிக்கப்பெறும். பிரம்மப் பிரகாசமாகிய ஆதித்தன் அகரத்தில் உதித்து ஒளிவிடுவதை வலையம் முக்கோணம் என்ற பாட்டில் குறிப்பிடுகிறார்.

வலையம் முக்கோணம் வட்டம் அறுகோணம்
துலைஇரு வட்டம் துய்யவிதம் எட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈரெட்டு இதழா
மலைவுஅற்று உதித்தனன் ஆதித்த னாமே (1979)

எனத் திருமூலர் ஆதித்தனாகிய தெய்வம் உதிக்கும் இடத்தைக் குறிப்பிடுகிறார். தெய்வம் இருக்கிற இடத்திற்கு அகரம் என்று பெயர். இதனை,

தகரமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளிஎனும்
அகரநிலைப்பதி அருட்பெருஞ் ஜோதி (அருட்பெருஞ்சோதி-அகவல்: 45-46

என்று வள்ளலாரும்,

அகரமு மாகி யதிபனுமாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி (திருப்புகழ் 441)

என்று அருணகிரியாரும் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

இந்த அகர வட்டத்திற்குள்ளேதான் அனைத்து தேவரகசியங்களும் அடங்கி உள்ளன. இந்த மெய்ஞ்ஞான சூரியன் அதாவது ஆதித்தன் என்று குறிக்கப் பெறும் அருட்பெருஞ்ஜோதி நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன். யாருக்கும் எட்டாத ஆதித்தன் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாதம் ஆதித்தன் தானே

இத்திருப்பாட்டில் ஞானசூரியன் ஊனுடம்பிற்குள்ளே உதித்து நாதமாக உருவெடுக்கும் இடத்தைத் திருமூலர் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

இந்த ஞான சூரியன் இருக்கும் மகாமேருமலையை அறிந்தவர் அதனை வலம் வந்து வழிபடுவர். இப்படி நினைவால் வலம் வந்து வழிபடுவதை அறம் வலம் வருதல் எனக் குறிப்பர். இவ்வாறு மானுட தேகத்திற்குள்ளே உதித்து ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஞான சூரியனாகிய ஆதித்தனைத்தான் திருமூலர் பிரான் குறிப்பிட்டுள்ளார்.

2. பிண்டாதித்தன்

பிண்டம் என்றால் உடம்பு. உடம்பில் விளங்கும் ஆதித்தன் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். மூன்று திருப்பாடல்களில் பிண்டாதித்தனைப் பற்றித் திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்.

'உணர்வு கீழ் நோக்காது மேல் நோக்கி எழ ஞான சூரியன் வெளிப்படுவான். சூரியன் அடங்கும் ஈசான திக்கை அறிந்தவர் சாதிக்கவல்லவர்- சகஸ்ரதளத்தை அடைபவர் அவரே. தம்மை உணர்ந்த தவஞானியும் அவரே. தன்னை உணராதவர் மாய்ந்தொழிவர். சூரியன் சொருகிக் கிடக்கும் ஈசான திக்கை அறிந்தவர்பால் அன்பு உருகி பெருகி எழும். உலகியலாக மேற்சொன்ன பொருள் சொல்லப்பெறுகிறது. நம் உடம்பிற்குள்ளே உதித்த ஞான சூரியன் வலம் இடத்தோடும், இடம் வலத்தோடும் ஒன்று சேர்ந்து கலந்து இயக்க வேண்டும். அதாவது சிவசக்தி இணைய வேண்டும். இணைகிறபொழுது தான் இயக்கம் நிகழும். ஈசான திசை என்பது இடப்பக்கமாக இருக்கின்ற சக்தி நிலைபெறும் இடம். அந்தச்

சக்தியோடு சிவத்தை இணைக்கின்ற பொழுது உயிரின் இயக்கம் புரியும். அது மட்டுமல்லாமல் உயிர்கள் பிறக்குமிடம், உயிர்கள் வாழுமிடம், அவை மறையும் இடம், உடலை விட்டபிறகு சிரஞ்சீவியாக வாழுமிடம் இந்த அனைத்தையும் ஞானியர் அறிவர். இவையெல்லாம் ஓரிடத்தில் நிகழ்கிறது என்பதை உணர்ந்த ஞானிகள் உருகி உருகி உள்ளன்பு பெருகிக் கிடப்பர். இதனை,

உருவிப் புறப்பட்டு உலகை வலம்வந்து
சொருகிக் கிடக்கும் துறைஅறிவார் இல்லை
சொருகிக் கிடக்கும் துறை அறிவாளர்க்கு
உருகிக் கிடக்கும்என் உள்ளன்பு தானே (1987)

என நுட்பமாக உணர்த்துகிறார் திருமூலர். இந்த இடத்தை மாணிக்கவாசகரும் பின்வருமாறு உணர்த்துகிறார்.

செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறியும்அறிவு எவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள் ஒருபொருளாம் மெய்ப்பொருளை
அத்தன்எனக்கு அருளியவா(று) ஆர்பெறுவோர் அச்சோவே

(அச்சோப்பதிகம்: 10)

3. மனவாதித்தன்

மனம், உள்ளம், நெஞ்சம், இதயம் எனச் சொல்லப் பெறுபவை எல்லாம் ஒரு பொருள் குறித்த பல சொற்கள். இவையெல்லாம் ஒரே மெய்ப்பொருளைக் குறிக்க வந்த பல சொற்கள். எண்ணங்களின் தொகுப்பே மனம். மனம் என்ற ஒன்றோ, நெஞ்சம் என்ற ஒன்றோ உள்ளம் என்ற ஒன்றோ உடலில் எதுவும் இல்லை. மெய்ஞ்ஞானிகள் தங்களுடைய மெய்ஞ்ஞான நூல்களில் குறிப்பிடும் இதயம் என்பது நாம் நினைக்கும் இந்த இரத்தத்தை ஓடச் செய்யும் இதயமன்று. அவர்கள் சொல்லும் இதயம் ஞானசூரியனாகிய ஆதித்தன் உதிக்கின்ற இடம். அந்த இடத்தில்தான் பரம்பொருளாகிய சிவம் ஒளிவீசிக் கொண்டு இருக்கிறது. எனவேதான் பெரியோர்கள் ஈசன் இருக்கும் இடம் இதயம் என்றும் அவனை இருதய தாமரையில் ஒளிர்பவன் என்றும் குறிப்பிடுவர். அவன் இருக்குமிடம் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்பதால் இதயம் சுத்தமானவர்களுக்கே இறைவன் காட்சி கொடுப்பான் என்றும் கல்பு (இதயம்) பிரகாசமடைய வேண்டும் என்றும் குறிப்பிடுவர்.

உடலில் இயங்கிக் கொண்டிருக்கும் சூரியனும் சந்திரனும் உயிரில் ஒன்றானால் பௌர்ணமியாகும். சந்திரகலையும் சூரிய கலையும் சகஸ்ர தளத்தில் பொருந்தி நிற்கும். ஞானிகள் சிவமேயாவார்கள். குண்டலினி, சூரியன், சந்திரன், சீவஒளி ஆகியவை ஒன்றானபோது பூசனை அமையும் (பாடல் எண்: 1989) சிரசுக்கு மேல் விளங்கும் பிரம்மாண்டத்தில் உயர்ந்து செல்லும் ஒளியை அடைந்தவரே அவ்வொளியை அறியத்தக்கவராவார். ஒன்பது தத்துவங்கள் பொருந்தியுள்ளவராயினும் சிவன் அருள் இல்லாதவர் இன்பமில்லாத இருள் சூழ்ந்த அண்டா காயத்தையே பெறுவர்.

மனவாதித்தன் என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள ஐந்து பாடல்களுக்கு உலகியல் வழி மேற்கண்டவாறு பொருள் கொள்வர். தொடக்கத்தில் குறிப்பிட்டது போல நம் உடம்பிற்குள்ளே வலம் இடமாக அமைந்துள்ள சூரிய சந்திரர்களை இணைத்துச் சிகரமாக ஒளிரும் மூலக் கனலோடு (சிகரமாகிய அக்னி) ஒன்றாகும்போது சீவன் சிவத்தோடு ஐக்கியமாகி சிவமயமாய் நிறைகிறது. அப்போதுதான் சுழிமுனைப் பூட்டுத் திறக்கும் இதனை,

கையறவி லாநடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு

என வடலூர் அருட்பிரகாச வள்ளலார் குறிப்பிடுகிறார்.

சுழிமுனைக்குள்ளேதான் எல்லாத் தேவ இரகசியங்களும் அடங்கி இருக்கின்றன. உடம்பிற்குள்ளே இருக்கும் ஒன்பது வாசல்களை ஒக்க அடைத்து சுழிமுனை திறக்கின்றபோது ஈசன் அருளைப் பெறலாம். அது செய்ய இயலாதோர் அறியாமையாகிய இருளில் ஆழ்ந்து பிறவித் தொடரில் பிணிப்புறுவர்.

ஒன்பது வாசல் உடையது ஓர் பிண்டத்துள்
ஒன்பது நாடிஉடையதோர் ஓர் இடம்
ஒன்பது நாடி ஒடுங்க வல்லார்கட்கு
ஒன்பது வாசல் இலை நலமாமே (658)

எனத் திருமூலர் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்ந்து உணர்ந்து தெளிக. ஒன்பது வாசல்களும் (பாடல் எண்: 1992) ஒரே நேரத்தில் அடைபடும்போது (ஒக்க அடைக்கும்போது) குருபிரான் தயவால் சுழிமுனை வாசல் திறந்து திருவடி தரிசனம் கிடைக்கும். இதனை,

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே (6:99:1)

எனத் திருநாவுக்கரசர் தம்முடைய 81 ஆவது வயதில் இறைவனிடம் வேண்டுகிறார். இவ்வேண்டுதலை உணர்ந்து எடுத்தோதிப் போற்றுகிறார் வள்ளற்பிரானாகிய இராமலிங்க அடிகள்,

ஒண்ணுளே ஒன்பது வாய் வைத்தாய் என்ற
உத்தமனே சித்த மகிழ்ந்துதவு வோனே
(ஆளுடைய அரசுகள் அருள்மாலை:5)

என அருளாளர் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்க; அறிவுடையார் அறிக; கண்ணுள்ளார் காண்க. இதற்குமேல் இத்தேவ இரகசியங்களை இயம்புவதற்கு எம்மனோரால் எளிதோ அம்மா.....!

4. ஞானாதித்தன்

நம் உடம்பிற்குள்ளே ஞானசூரியனாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் இறைவனைப் பற்றி எட்டுப்பாடல்களில் திருமூலர் நுட்பமாகக் கூறியுள்ளார். விந்துவிற்கு சூக்குமத்தில் ஒளி, அறிவு எனப் பொருள். அறிவாகிய ஜோதியே விந்து. அதுவே நாதமாக செயலுக்கு வருகிறது (பாடல்:1993) இஃது விரிப்பின் பெருகும்.

ஞானாதித்தனே அருணோதயமாக உதிக்கின்றான். பரநாதத்தின் செயலாகவே மனமண்டலத்தில் ஓசை எழுகின்றது. ஐங்கலைகளிலிருந்து வெளிப்படும் இதுவே அருணோதயமாகும். பத்துத் திசைகளில் வெளிப்படும் சிவம்- மூவர்பிரான், நால்வர்பிரான் என்றும் அழைக்கப்பட்டு வானோர்கள் தங்கள் தலைவனாகக் கொண்டார்கள். அக இருளை நீக்கக் காரணமாவதும் சிவப்பொருளே. அது இருளை நீங்கச் செய்து, இனிய அமுதம் சுரக்கச் செய்து நிறைந்த சுடர்போல் சிரசின் மேல் விளங்கும் தன்மையாய் வெளிப்படும். சூரியன் ஒளி படராத இடத்திலும் சிவப்பொருள் பரவும். சுவாதிட்டானத்திலிருந்து மலர்ந்து எழுகின்ற

சூரியனது நிலையை அறிந்தவர் ஓரிடத்திலிருந்து கொண்டே எங்கும் சென்று உணர்ந்து வரும் ஆற்றல் பெறுவர். (பாடல் எண்: 1999)

உச்சித் துளை முதல் ஐந்து இடங்களிலும் ஒளி விடுகின்ற சோதியை மூவரும் (உருத்திரன், திருமால், பிரமன்) உணர்ந்திருந்தனர் என உலகியலாக இவ்வதிகாரத்தின் எட்டுப் பாடல்களுக்கும் உரை கூறப்பெறுகிறது.

ஞானாதித்தன் நம் உடம்பிற்குள்ளே உதித்தால்தான் அனைத்துச் செயல்களும் நிகழும். அணுவுக்குள் அணுவாய் அமைந்து அண்ட சராசரங்களையும் இயக்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஞான சூரியனை நம்முள்ளே கண்டு வழிபடல் வேண்டும். அந்த பிரம்ம பிரகாசத்தை நாளும் கண்டு வழிபாடு செய்யக் கூடியவர்கள் பிரம்மா, திருமால், உருத்திரன் ஆகியோர் ஆவர். யாரெல்லாம் ஞானாதித்தனாகிய இந்த ஞான சூரியனை தம்முடைய உடம்பிற்குள்ளே கண்டு வழிபாடு செய்கிறார்களோ அவர்களுக்குத் தேவர்கள் (ஒளியர்கள்) என்று பெயர். பிரம்ம பிரகாசமாக ஒளிவிடும் ஆதித்தன் ஐந்து இடங்களில் ஒளிவீசுவதாகத் திருமூலர் குறிப்பிடுகிறார். நாபிக்கமலம், மூக்கு நுனி, கண், கண்ணின் நடுப்பகுதி, புருவமத்தி ஆகிய ஐந்து இடங்களே அவை எனப் பொருள் கூறுவர். மெய்யை அறிந்த மெய்ஞ்ஞானிகளுக்கு இவ்வைந்து சொற்களும் குறிப்பிடும் இடம் ஓர் இடம் என்பது தெரியும். அந்த இடத்தை அறிந்தவர்கள் மனிதராக வாழ்ந்தாலும் அவர்களே தேவர். அவர்களே பிரம்மா. அவர்களே, திருமால். அவர்களே ருத்திரன். இதனை,

நாபிக்கண் நாசி நயன நடுவினும்
தூபியோடு ஐந்தும் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவருமாக உணர்ந்திருந் தாரே

என்ற பாடலின் வழி தெளிவாக உணர்த்துகிறார் திருமூலர்.

5. சிவாதித்தன்

இதுவரை சொல்லப் பெற்ற ஞான சூரியன் சிவனே என்பதை நான்கு பாடல்களில் விளக்குகிறார் திருமூலர். பொருள் ஒன்றுதான். அது செயல்படும் நிலை நோக்கி அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன் எனப் பெயர் பெறுகிறது.

சூரியன் முன் இருள் நீங்குவது போல ஞானபிரகாசத்தால் அஞ்ஞானமும், பாச இருளும் நீங்கும். நீர்க்குடத்தில் சூரியனை மூடிவிட இயலாது - உயிரில் நீலகண்டப் பெருமான் இருப்பதும் அத்தன்மையேதே. சூரியன், சந்திரன் அக்னி மூன்றும் இயைந்து ஓரொளியாக விளங்கும். அதுபோல பிரம்மனும் விஷ்ணுவும் சிவமும் ஒன்றாகி முதல்வனாம் தன்மை காட்டும்.

தானே விரிசுடர் மூன்றும் ஒன்றாய் நிற்கும்
தானே அயன்மால் என நின்று தாபிக்கும்
தானே உடல் உயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளி ஒளி தான்இருட்டு ஆமே (2003)

எனத் திருமூலர் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்ந்து உணர்ந்து தெளிக.

அச்சிவமே அறிவற்ற உடலிலும் அறிவுள்ள உயிரிலும் நிறைந்துள்ளது. அச்சிவமே ஆகாயமாகவும், ஒளியாகவும் இருளாகவும் உள்ளது. சிவன் உறையும் திருமேனிகளாகிய எட்டும் ஆறங்கங்களுக்கு இடமாகின்றன என உலகியலாகப் பொருள் கூறுவர்.

தெய்வச் சுடர் அங்கி ஞாயிறும் திங்களும்
வையம் புனல் அனல் மாருதம் வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க்கு இடம் இடை ஆறு அங்கம் ஆமே (2004)

எனத் திருமூலர் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்ந்து உணர்ந்து தெளிக. பரம்பொருளாகிய சிவம் அனைத்தும் தானாகி நிற்றலை இவ்வதிகாரத்திலுள்ள நான்கு பாடல்களும் எடுத்துரைக்கின்றன.

மானுட தேகமெடுத்த மனிதரொருவர் நண்பர் சுற்றத்தார் பலரும் கூடியிருக்கும் இடத்தில் தந்தைக்கு மகனாகவும் தம்முடைய மகனுக்குத் தந்தையாகவும் அண்ணனுக்குத் தம்பியாகவும் தம்முடைய தம்பிக்கு அண்ணனாகவும் மாணவனுக்கு ஆசிரியராகவும் தம்முடைய ஆசிரியருக்கு மாணவனாகவும், மனைவிக்குக் கணவனாகவும், தம் மகளுக்குத் தந்தையாகவும், தாத்தாவிற்குப் பேரனாகவும், தம்முடைய பேரனுக்கு இவன் பாட்டனாகவும், தம்மிடம் வேலை பார்ப்பவர்களுக்கு முதலாளியாகவும், தம்முடைய முதலாளிக்கு இவன் வேலையாளாகவும் இப்படி ஒரே ஆள் பல்வேறு பெயர்களை (நாம ரூபங்களை)ப் பெற்று ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் செயலாற்றுவது போல நாம் அனைவரும்

செயலாற்றுகிறோம். இப்படி ஒவ்வொருவரும் பல்வேறு பெயர்களைச் செயல்நிலை நோக்கிப் பெறுகிறோம். பெற்றுச் செயல்படுகிறோம். சாதாரண மானுட தேகம் தாங்கிய நமக்கே பல்வேறு பெயர்கள் (நாமங்கள்) வைத்து அழைக்கின்ற போது அண்ட சராசரங்களையெல்லாம் கட்டி ஆள்கின்ற பரம்பொருளுக்குச் செயல்நிலை நோக்கித்தான் பல்வேறு பெயர்கள். தெய்வம் ஒன்றுதான். அதைத்தான் திருமூலர் 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் '(2104) எனக் குறிப்பிட்டார்.

இவ்வடிப்படையில் மெய்ப்பொருளாக விளங்கும் சிவமே ஞான சூரியனாக ஐந்து நிலைகளில் செயல்படுவதை அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன் எனச் செயல்நிலை நோக்கி தனித்தனி அதிகாரங்களில் விளக்கியுள்ளார் திருமூலர் பிரான்.

நிறைவுரை

திருமந்திரம் ஓர் அனுபவ நூல். அதனை, மெய்க்கல்வி பயின்ற மெய்க்குருபிரான் தயவால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். அதன் பிறகே அனுபவிக்க முடியும்; அனுபவத்திற்கும் வரும்...

1. அகர வட்டத்திற்குள்ளேதான் அனைத்துத் தேவரகசியங்களும் அடங்கியுள்ளன.

2. மேலாதாரங்கள் கீழாதாரங்கள் என ஆதாரங்கள் இருவகைப்படும். கீழாதாரங்கள் ஆசனவாய் தொடங்கி புருவநடு ஆஞ்ஞை வரை செல்லும். மேலாதாரங்கள் தலையில் ஓர் இடத்தைச் சுற்றி அமைந்திருக்கும்.

3. ஞானசூரியன் இருக்கும் மகாமேருமலையை அறிந்தவர் அதனை வலம் வந்து வழிபடுபவர்.

4. சூரியன் அடங்கும் ஈசான திக்கை(உடம்பில் இருக்கும் இடத்தை) அறிந்தவர் சாதிக்க வல்லவர். சகஸ்ர தளத்தை அடைந்தவர் தம்மை உணர்ந்தவர்.

5. ஈசன் இருக்குமிடம் இதயம். அவன் இருதய தாமரையில் (சுழிமுனையில்) ஒளிர்பவன்.

6. சுழிமுனைக்குள்ளேதான் எல்லாத் தேவ இரகசியங்களும் அடங்கி இருக்கின்றன. உடம்பிற்குள்ளே இருக்கும் ஒன்பது வாசல்களை ஒக்க அடைத்து சுழிமுனை திறக்கின்றபோது ஈசன் அருளைப் பெறலாம்.

7. பிரம்ம பிரகாசமாகவும் கோடி சூரியப் பிரகாசமாகவும் இருக்கும் ஞான சூரியன் நாபிக்கமலம், மூக்கு நுனி, கண், கண்ணின் நடுப்பகுதி, புருவமத்தி ஆகிய இடங்களில் ஒளி வீசுகிறார்.

8. ஞானசூரியன் சிவனே. அவன் வந்தால் அஞ்ஞானமும் பாச இருளும் நீங்கும்.

9. அச்சிவமே அறிவற்ற உடலிலும் அறிவுள்ள உயிரிலும் நிறைந்துள்ளது. அதுவே ஆகாயமாகவும் ஒளியாகவும் இருளாகவும் உள்ளது.

10. சிவம் ஒன்றே. செயல்நிலை நோக்கி பல்வேறு தெய்வப்பெயர்களைப் பெற்று இயங்குவதும் சிவமே. அதுபோல ஞானசூரியன் செயல்நிலை நோக்கி அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன் என ஐந்து பெயர்களைப் பெற்றுத் திகழ்கிறது. இதனை நாம் உணர்ந்தால், பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப நிலையாகிய முக்தியைப் பெறலாம்; உணர்வுடையோர் உணர்ந்து உய்தி பெறுவார்களாக.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

67. பிராணன், புருடன், சீவன், போதன்

சித்தாந்த இரத்தினம்.
மு. செல்வநாதன் எம்.ஏ.,எம்.பில்., எம்.எட்.,
சோளிங்கர்

இறைவன்-எம்பெருமான்-சிவபரம்பொருள் ஒன்றே. அது, மாறா எண் குணப்பொருள். உயிர்களோ அந்நிறைவை நோக்கிச் செல்லும் பயணத்தில் சார்ந்ததன் வண்ணமாய் மாறுபடும், வேறுபடும் தன்மை உடைய பொருள்கள். உயிர் எதை எதைச் சாருகிறதோ, அது அதுவாக ஆகும் தன்மையது. அதனால்தான், உயிரின் ஈடேற்றத்தைச் சொல்ல வந்த திருமூலர் திருமந்திரத்தைப் பன்முகம் காட்டும் ஒருமை நூலாக இயற்றியருளினார்.

ஒன்பது தந்திரங்களை உடைய திருமந்திரத்தில் ஏழாம் தந்திரம், உயிர் சிவநெறியில் நின்று சிவனை உணரும் ஆற்றைக் கூறுகிறது. ஏழாம் தந்திரத்தில் ஒரு பகுதி, பிராணன், புருடன், சீவன், போதன் என்பன. இவற்றை நம் தரத்தில் உணர்வதற்காக இம்முறை வைப்பில் சில மாற்றங்களை உண்டாக்கித் தெளிவு பெறுவோம்.

உயிர்

உயிர், உண்மையில் கண்ணால் காணப்படும் பருப்பொருள் அன்று; நுண் பொருளே, இந்த உண்மை புரியாது. உயிரின் உரு எத்தகையது என்று வினவுவார்க்கு விடையாக, பசுவின் மயிர்களில் ஒன்றை எடுத்து, அதைப் பல நூறாயிரம் கூறு செய்தால் அவற்றுள் ஒரு கூறின் அகல, நீள, உயர அளவுகளே உயிரின் அகல நீள உயரமாம் (1980) என்கிறார் திருமூலர். இத்தகைய கன பரிமாணத்தைக் காண முடியாது ஆதலின் உயிர் பருப்பொருள் அன்று; நுண் பொருளே என்று விளக்குகிறார்.

பதியினைப் போல் பசுவாம் உயிரும் அநாதி. அநாதியான உயிர். அநாதியான ஆணவத்தை அநாதியே பற்றிக்கொண்டது. அதனால் அறியாமையைச் செய்யும் ஆணவம் உயிரை அணுத்தன்மை பெறும்படி செய்தது.(1977)

புருடன்

இறைவன் கருணையே வடிவானவன். ஆதலின், அணுத்தன்மை அடைந்த உயிரை அறியாமையிலிருந்து முழுமையாய் மீட்டெடுக்கத் திருவுள்ளம் கொண்டான். தன் எல்லாம் வல்ல ஆற்றலால் உயிரை

அறியாமையாம் ஆணவத்திலிருந்து பிரித்தெடுத்து விட முடியும். ஆனாலும் தகுதி பெறாத உயிர் மீண்டும் ஆணவத்தை நோக்கிச் செல்ல முனையும். அதன் காரணமாகவே, இறைவன் உயிரானது அறியாமையிலிருந்து விலகிப், பேரறிவுப் பொருளாம் தன்னோடு இணையும் தகுதியைப் பெறுவதற்காகக் கருவியாகிய உடம்பினைக் கொடுத்தான்.

உடம்பு என்னும் கருவிக்குள் உறுப்புக்கருவிகள் பல. முதன் முதலில் இறைவன், உயிருக்கு மாயையின் ஒரு கூறைச் சேர்த்துப் பின், காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் உறுப்புக் கருவிகளைக் கொடுத்தான். இந்த ஐந்தும் இணைந்த பகுதிக்கு ஐஞ்சட்டை என்று பெயர். ***ஐஞ்சட்டை*** அணிந்த உயிர், வினையைச் செய்வதற்கும், வினைப்பயனைத் துய்ப்பதற்கும் உரிய செவ்வியைப் பெற்றது. இந்த தகுதிப்பாட்டு நிலையிலேயே உயிர் ***புருடன்*** என்னும் பெயரைப் பெற்றது.

வைகரி ஆதியும், மாயா மல ஆதியும்
பொய் கரியான புருட ஆதி பேதமும்
மெய் கரி ஞானம் கிரியா விசேடத்தால்
செய் கரி ஈசன் அனாதியே செய்ததே (1976)

பிராணன்

ஐஞ்சட்டையாம் புருட நிலையை அடுத்து இறைவன் உயிருக்குச் சித்தம், அகங்காரம், புத்தி, மனம் என்னும் உள் உறுப்புக் கருவிகள் 4, ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் 5 ஆகிய ஒன்பது உறுப்புக் கருவிகளைக் கூட்டுவிக்கிறான். இந்த ஒன்பதோடு முன் கூட்டுவித்த மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் ஆகிய 7 உறுப்புக்கருவிகளும் சேர்ந்து உயிர்க்கு நுண்ணுடம்பு ஆகிறது. இந்த நுண்ணுடம்போடு உயிரின் வினைக்கேற்பப் பரு உடம்பையும் தருகிறான் இறைவன். வாழ்நாளில் நுண்ணுடம்பும் பரு உடம்பும் பிரிக்க வியலா நிலையில் சேர்ந்திருப்பது, பிராணன் என்னும் உயிர்ப்பால் தான்.

உள்ளிழுத்தும், வெளிவிட்டும் நாம் உயிர்க்கின்ற உயிர்ப்புத் தான் பிராணன் என்பது. இந்தப் பிராணனில் இறைவன் இருக்கிறான். இதனை,

என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து, புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசன் 5-21-1

என்கிறார் அப்பர் அடிகள். இறைவன் உயிர்ப்பாய் நம் உள் மூச்சிலும் வெளி மூச்சிலும் இருக்க, நாம் உயிர்ப்பதே-சுவாசிப்பதே ஒரு

மந்திரமாகும். வாயினால் செபிக்கப்படாததால் இது *அசபா மந்திரம்* எனப்படுகிறது. இந்த அசபா மந்திரத்தில் - உயிர்ப்பில் - இறைவன் உள்ளும் புறமுமாக அசைந்து ஆடுவதே அசபா நடனமாகும்.

மூச்சை உள்ளே இழுத்தல் *அம்* எனப்படும். மூச்சை வெளியே விடுவது *சம்* எனப்படும். ஆதலில் அசபை *அம்சம்* எனவும் சொல்லப் பெறும். அம்சம் என்பது அன்னப்பறவைக்கு உரிய பெயரும் ஆகும். எனவே பிராணனை அன்னம் என்றே திருமூலர் குறிக்கிறார்.

உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னும் மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயன் என்று அறிந்து கொண்டேனே

இந்த அசபா மந்திரத்தை - அசபா நடனத்தை - பிராணனைச் சார்ந்தே உயிர் இருப்பதால், உயிர் *பிராணன்* எனப்படுகிறது.

சீவன்

பொதுவாகப் பல்வேறு உடம்புகளில் - சிறப்பாக மனித உடம்பில் குடிகொண்டு சீவித்திருப்பதால் உயிர் சீவன் எனப்படுகிறது. இதனைத் திருமூலர், *மேவிய சீவன்* என்று குறிப்பிடுகிறார்.

போதன்

அநாதி முதலே ஆணவத்தைச் சார்ந்து அறியாமை மயமாய் நிற்கின்ற உயிர், சிவத்தைச் சாருமாயின் சிவமாயே நிற்கும். அந்நிலையில் அது போதன் எனப்படும்.

சீவன் எனச் சிவன் என்ன வெவ்வேறு இல்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவன் ஆயிட்டிருப்பரே (1986)

சீவனார் சிவனாரை அறிவது எப்படி?

ஊனில் அதாவது உடம்பின் உள்ளே உள்ள உயிர் சீவன் எனப்படும். இத்தகைய உயிர் நுண்பொருள். கண்ணுக்குத் தெரியாது. அதனினும் நுண்பொருளாக- மிகுநுண் பொருளாக இறைவன் உயிரின் உள்ளே நிறைந்திருக்கிறான்.

எம் இறை.

ஊனே சிறுமையின் உட்கலந்து அங்கு உளன் (1981)

இப்படி உடம்பின் உள்ளே நிறைந்திருக்கிறது. உயிராம் சீவன் தன் உள்ளே நிறைந்திருக்கிற சிவனை ஒரு பொழுதும் அறியாவிடினும், சிவன் சீவனை எப்பொழுதும் அறிந்து கொண்டே இருக்கும்.

தூய உடம்பு, இயல்பாகவே ஆணவம் இன்மை, இயற்கை அறிவு, பேரறிவு, பேராற்றல், பெருங்கருணை, பேரின்பம், தன் வயத்தன் ஆகிய எண் குணங்களை உடைய கூத்தப்பிரான் மனத்தை விளக்காகக் கொண்டு, பொருள்களை அறிந்து வருகின்ற நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம், படம் தோன்றும் மணியாகிய விளக்கினை உடைய பல தலைப்பாம்பு போலவும், இரவிலும் பல விளக்குகளை ஏற்றி வைத்துக் கொண்டு பொருள்களைக் காவல் செய்கின்ற கண்காணி போலவும் இருக்கின்றான் என்கிறார் திருமூலர்.

குணவிளக்கு ஆகிய கூத்தப்பிரானும்
மண விளக்கு ஆகிய மன்னுயிர்க்கு எல்லாம்
பண விளக்கு ஆகிய ப:றலை நாகம்
கண விளக்கு ஆகிய கண்காணி ஆமே

இப்படிச் சிவன் சீவனை எப்பொழுதும் அறிந்து கொண்டே இருப்பதால், உரிய பொழுதில் சீவனுக்கு வெளிப்பட்டு அருளச் சீவன் போதன் ஆகும்.

உரிய பொழுது எது?

மாயா காரியமாகிய கருவிக் கூட்டமாம் உடம்பு அறிவற்ற சடப்பொருள் ஆதலின், உயிருக்குக் கூடாப்பொருளே - அன்னியமே. எனினும் அவ்வுயிரின் உள்ளே என்றும் உள்ள சிவன் அதன் பக்குவம் அறிந்து அருள் காரணமாகக் குருவாகி எதிர்வந்து உடம்பாகிய சடத்தினின்றும் உயிரைப் பிரிக்க, அவ்வாறே உயிரும் பிரிந்து திருவருளில் புகும். புகுந்து துரியம் என்னும் அருள் பேருறக்கத்தை எய்தி அமைதியுற்று இருக்கும் என்கிறார் திருமூலர்.

மாயா உபாதி வசத்தாகும் சேதனத்து
ஆய குரு அருளாலே அதில் தூண்ட
ஓயும் உபாதியோடு ஒன்றின் ஒன்றாது உயிர்
ஆய துரியம் புகுந்து அறிவாகவே (1983)

சிவமாம் இறைவன் உயிருக்கு உயிராக உயிரினுள் இருக்கிறான். அதாவது பல கிளைகளும் விழுதுகளுமாய் விரிவடையும் ஆற்றலைத் தன்னுள்ளே அடக்கியிருக்கும் ஆலம் விதை போல இறைவன் உயிரினுள் இருக்கிறான். எனவே உயிர் தன்னை அச்சிவத்திற்கு ஏற்ற தூய இடமாகச் செய்யுமானால், அந்த திருவருள் ஒளி துணையாக, துன்பத்தையே தனது இயல்பாகக் கொண்ட ஆணவமாகிய இருளை ஓட்டி, ஞான நடனனாகிய சிவபெருமான் தரத் கருதும் நல்வழியைத் தான் உணரும் வாய்ப்பு உண்டாகும்.

படர் கொண்ட ஆலத்தின் வித்தது போலச்
சுடர் கொண்டு அணுவினைத் தூவழி செய்ய
இடர் கொண்ட பாச இருள் அற ஓட்டி
நடர் கொண்ட நல்வழி நாடலும் ஆமே. (1978)

உயிர் தன்னைத் தூய்மை செய்து கொள்வது எவ்வாறு? அழுக்கு, அழுக்காறு, ஆணவம் இந்த மூன்றையும் படிப்படியே உயிர் நீக்கிக்கொள்ளுமானால் உயிர் தூய்மை அடையும். இவற்றை முறையே புறப்புறத் தூய்மை, புறத்தூய்மை, அகப்புறத்தூய்மை ஆகிய மூன்றும் இணைந்த புறந்தூய்மை, அகத்தூய்மை, உள்ளகத் தூய்மை எனலாம்.

மண்மாசு, நீர்மாசு, காற்றுமாசு இவற்றை நீக்கிச் சுற்றுப்புறச் சூழல் தூய்மை பேணுவது புறப்புறத்தூய்மை. உடலில் - ஐம்பொறிகளில் சேராமல் பாதுகாத்துக் கொள்வது புறத்தூய்மை. உடலின் உள்ளே குடலில் அழுக்குச் சேராமல் பார்த்துக் கொள்வது அகப்புறத்தூய்மை. எவர் மீதும் பொறாமை கொள்ளாமல் இருப்பது அகத்தூய்மை. நான், எனது என்னும் தன் முனைப்பை -செருக்கை- அறவே நீக்கிக் கொள்வது உள்ளகத் தூய்மை. இப்படி உள்ளும் புறமும் தூய்மை செய்து கொள்வதே உயிர் தன்னைச் சிவத்திற்கு ஏற்ற தூய இடமாகச் செய்து கொள்வதாம். இப்படிச் செய்து கொண்டால், இறைவனைக் குருவாய்ப் பெறும் வாய்ப்பு கிட்டும்.

சிவன் அறியாமையோடு கலவாது அறிவாகவே இருப்பவன். அவன் சீவன்களின் அறிவில் பொருந்திச் சீவர்கள் அறிவனவற்றையெல்லாம், தான் உடனாய் நின்று அறிவன். அதனால் அவன் சீவன்களாகியும் இருப்பன். ஆகையால் இந்நிலையை உணர்கின்ற சீவன் தானும் அச்சிவனேயாய் நிற்கும். ஆதலால் அத்தகைய சீவனே ஒன்றையும் அறியாத இருள்நிலையும், பொறிகளின் வழிப்பட்டு உலகை ஏகதேசமாய் அறிகின்ற மருள் நிலையும் ஆகிய இவற்றினின்றும் நீங்கிச் சிவனைப்போல எங்கும் வியாபகமாய் நின்று அறியும் நிலையை எய்திப் போதன் எனப்படும்.

அறிவாய் அறியாமை நீங்கி, அவனே
பொறிவாய் ஒழிந்து எங்கும் தான் ஆன போதன்
அறிவாய் அவற்றினுள் தான் ஆய் அறிவன்
செறிவாகி நின்ற அச்சீவனும் ஆகுமே (1988)

மாயா காரியங்கள் ஆகிய தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும். அவை, நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை, மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், சித்தம், புத்தி, அகங்காரம், மனம், செவி, மெய், கண், வாய், மூக்கு, கை, கால், வாய், கருவாய், எருவாய், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம், வான், வளி, தீ, நீர், மண் என்பனவாம். இந்த முப்பத்தாறு தத்துவங்களும் உயிர்க்கு உடம்பு, உள்கருவிகள், உலகு, போகப் பொருள்களாய் இறைவனால் தரப்படுகின்றன.

இவற்றைச் சாருகின்ற உயிர் இவற்றையே தானாகக் கருதி மயங்குகிறது. சிவபெருமான் அருளைப் பற்றுகின்ற போதுதான் உண்மை உணர்கிறது. உணர்ந்தவுடன் இந்தத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு இறைவன் இருத்தலையும் உணர்கிறது.

ஆறாறின் தன்மை அறியாதிருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர் நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்த பின்
ஆறாருக்கு அப்புறமாகி நின்றானே (1989)

ஆகவே உயிர் அநாதியே ஆணவ இருளைப் பற்றிக் கட்டுண்டு பசு என்று பெயர் பெற்றது. கருணைமிக்க சிவபெருமான் உயிரை ஆணவ இருளிலிருந்து நீக்கத் தத்துவக் கருவியாம் உடம்பினைக் கொடுக்கிறான். உடம்பில் பல உட்கருவிகள் இருக்கின்றன. முதலில் காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐஞ்சட்டை ஏற்ற உயிர் புருடனாம் தன்மையை அடைகிறது. பின் நுண்ணுடம்பும் பருவுடம்பும் பிரிக்க இயலா நிலையில் சேர்ந்திருக்க அமைந்துள்ள உயிர்ப்பை- பிராணனைச் சாருவதால் உயிர் பிராணன் என்னும் பெயரைப் பெறுகிறது. உடம்பிலே சீவித்திருப்பதால் சீவன் என்னும் பெயரைப் பெறுகிறது.

சீவன் -சீ- இரண்டு மாத்திரை. அறியாமையும் அறிவும் கலந்துள்ள நிலை.

சிவன் -சி- ஒரு மாத்திரை. அறியாமை கலவாத முழு அறிவாய் உள்ள நிலை. இரண்டு மாத்திரை உடைய சீவன் ஒரு மாத்திரையாய்ச் சிவனாய் ஆக வேண்டுமானால் அதற்குத் தகுதி பெறவேண்டும்.

அத்தகுதி என்பது சீவன் தன் இச்சையை முழுமையாய்ச் சிவனை நோக்கிச் செலுத்துவதே ஆகும். அப்போதுதான் சீவன், குருவாய் வரும் இறைவன் உணர்த்துவதை உணர்த்திய நிலையில் உணர்த்தியவாறே உணர்ந்து கொள்ளும். அதுவே பக்குவம் எனப்படும். இந்தப்பக்குவ நிலையில் இறைவன் உணர்த்த உணரும் சீவன், சிவபெருமானின் எண்குணங்களைப் பெற்றுச் சிவனாய் ஆகி விடும். இறைவனின் தூய அறிவே போதம் எனப்படும். அந்தப்போதத்தைச் சிவமாய் ஆகும் சீவன் பெறுவதால் போதன் எனப்படும்.

இத்தகைய பேற்றினைப் பெற முயலாத பலப்பல மனிதர்களைப் பார்த்துத் திருமூலர் இரக்கத்தோடு பாடுகிறார்.

நாள்தோறும் விருப்பு வெறுப்புக் காரணமாக நல்வினை, தீவினைகளைச் செய்து செய்து உழல்பவர்கள், நாள்தோறும் நடப்பன எல்லாம் தம் வினைப்பயனாய் சிவபெருமான் ஊட்டுவதால் நடக்கின்றன என்பதை உணராதும், சிவஞான உண்மைகளை ஆசிரியர் வழி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர்களுக்கே சிவபெருமான் தன் அருளை வழங்குகிறான் என்பதை உணராதும் இருக்கின்றனரே!

நாள்தொறும் ஈசன் நடத்து தொழில் உன்னார்
நாள்தொறும் ஈசன் நயந்து ஊட்டல் நாடிடார்
நாள்தொறும் ஈசன் நல்லோர்க்கு அருள் நல்கலால்
நாள்தொறும் நாடார்கள் நாள் வினையாளரே (1991)

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

68. ஐந்திரியம் அடக்கும் அருமை, ஐந்திரியம் அடக்கும் முறைமை

சிவநெறிச்செல்வர். **சிவ. ஆ. பக்தவச்சலம்**
ஆசிரியர், தமிழ்வேதம்,
குடியாத்தம்.

திருமந்திரமாலை மூவாயிரத்தில் அறம் பேசப்படுகிறது. தத்துவம் பேசப்படுகிறது. எல்லாவற்றினுக்கும் மேலாக யோகம் பேசப்படுகிறது. யோகத்திற்குத் தனிஇடம் கொடுத்தும் சிறப்புச் செய்கிறார் திருமூலர். வழிபாட்டிற்குச் சிறப்பிடம் கொடுக்காது சாதனைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது.

அடியவர்களின் உடம்பு சிவன் எழுந்தருளியிருக்கும் ஆலயம் எனக்கருதி உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்று உடம்பினைக் காக்கும் தன்மையைக் கூறுகிறார். உடம்பினை இடமாகக் கொண்டது சிவன் மட்டும் அல்ல. நம்மை இருவினைக்கும் ஆட்படுத்தும் ஐந்து இந்திரியங்களும் ஆகும். இவ்வைந்தும் அடக்கப்படல் வேண்டும். அடங்கவில்லை எனில் சிவனைக் காண முடியாது.

மக்கள் பேரின்ப வாழ்வை நோக்கிப் பயணப்படல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் பொறிகளின் வழியே சிதறவிட்டு வாழ்வைப் பாழ்படுத்துகின்றனர். ஐம்புலன்களும் மதம்பிடித்து ஒடிக்கொண்டே இருக்கும். அப்படி ஓடாது யானைப்பாகன் கையில் உள்ள அங்குசத்தின் வசப்பட்டு அடங்குதல் போல ஐந்து இந்திரியங்களும் அடக்கப்படல் வேண்டும். அவ்வாறு அடக்கியவன் அமரன் எனப்படுவான்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தின் வழியே இவற்றின் பண்புகளான உறுதல், சுவைத்தல், காண்டல், முகர்தல், கேட்டல் நிகழ்கின்றன. ஆனால் இவ்வைந்தும் தொழிலால் வேறுபடினும் அறிவினால் விளைகின்ற பயன் ஒன்றாகும். அவ்வறிவினைக் கொண்டு இவ்வைந்தினையும் மேய்த்தல் உயிர் என்பதனால் நிகழும். இவைகள் துன்புற்றுப் போகும் வழிகளோ ஒன்பதாகும்.

மேய்ப்பவன் சிவன் எனக்கொண்டால் மேய்த்தல் தொழில் மட்டும் அவனிடம் உண்டாதல் போல பொறிகளின் பயனைத் துய்ப்பவர், அப்பொருள்களைச் சுமந்து செல்வது உயிர் என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நம் உடம்பு என்னும் காட்டினில் சிங்கமென அலைந்து திரிபவை ஐந்து இந்திரியங்களாகும். இவைகள் தன் கட்டுப்பாட்டை விட்டு (உடம்பை விட்டு) வெளியே சென்று பொருள்களைச் சுவைத்த பின்பு மீண்டும் அகத்தே வந்து சேருகின்றன.

சிங்கத்தின் வலிமை பொருந்திய பற்களையும், நகங்களையும் வெட்டிவிட்டால் சிங்கத்தின் பலம் குன்றிப்போகும். அதுபோல ஐந்து இந்திரியங்களின் வேகத்தை, பலத்தைக் குறைக்க வேண்டும்.

ஐந்து இந்திரியங்களும் தன் விருப்பப்படி செல்ல அனுமதிப்பது எது? இவ்வைந்திற்கும் தலைவனாக இருக்கும் மனம். எனவேதான் *வள்ளலார், மனம் எனும் பேய்க்குரங்கே* என்கிறார். ஐவரும் வலிமை மிக்கவர்களாக இருந்துவிட்டால் மனம் அடக்கமின்றி கடும் நரகில் சென்று துன்பப்பட வேண்டிவரும். ஐந்து இந்திரியங்களும் அவற்றினைப் பிரிந்து செல்லாது ஒட்டியே செல்லும் மனத்தினை வெற்றி காண வேண்டும்.

எளிதாகப் போக்க முடியாத ஆணவம் என்னும் இருள் நிறைந்த பழமையான பாழ்பட்ட இடமாக நமது, உடல் உள்ளது. இதனால் நாம் 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றோம்'.

மனத்தினை அடக்கி இறைவனை அடைய நம் ஐந்து இந்திரியங்களை அவனது திருவடியில் சரண் செய்ய வேண்டும். இரு வினைகளின் நிலைக் களமான இந்த வையகத்தில் ஐம்பொறிகளின் தலைவனான மனத்தினை அடிமை செய்தால் ஐந்தும் ஒடுங்கி பரமானந்தப் பேரின்பம் கிட்டும்.

ஐந்திரியம் அடக்கும் முறைமை

மானுட வாழ்வு பயனுற்றுப் போகாமல் வந்த நிலை உணர்ந்து தோன்றிய இடத்தில் சரண்புகுதல் வேண்டும். இறைமைப் பயணத்தில் தடைக்கற்களாக நமக்கு அமைவது ஐந்து இந்திரியங்களாகும்.

மாடு ஒன்று தன்மனம் போனபடி வெவ்வேறு இடங்களில் அலைந்து திரிந்தும், மாற்றான் வயலில் சென்றும் மேய்ந்தும் பலரிடம் அடிபட்டும் கிடக்கின்றது. அப்படித் திரிகின்ற மாட்டினை, நீண்ட கயிறு கொண்டு ஒரு முனையில் மாட்டின் கழுத்திலும் மறுமுனை ஒரு மரத்தினிலும் கட்டினால் இப்போது மாடு முன்போல் திரியாது. அதன் எல்லைக்கு உட்பட்டு அந்த மரத்தையே சுற்றிவரும். முதலில் மாடும் மரமும் கயிறும் ஒன்று பட்டு அவ்விடத்தை விட்டு நகர முடியாது நின்றுவிடும்.

இதனைப் போன்றே இறைவன் என்னும் மரத்தினில் அன்பு என்னும் கயிறு கொண்டு மனம் என்னும் மாட்டினைக் கட்ட வேண்டும். மனம் எப்படிச் சுற்றினாலும் இறைவனது தொடர்பை மேற்படுத்திக் கொண்டே இருக்கும். முன்பு ஓடி ஆடித் திரிந்த மனம் ஒரு கட்டுப்பாட்டில் மடைமாற்றம் பெற்று கோயிலுக்கும், அவன்புகழ் பேசுவதற்கும், எண்ணுவதற்கும் பக்குவப்பட்டதாக அமைந்துவிடும்.

ஒருவன் ஒருவர்மீது அதிகமான அன்புசெய்தால் தான் பார்க்கும் ஒவ்வொன்றிலும் தம்மால் அன்பு செய்யப்பட்டவர்களும் உள்ளனர் என எண்ணுகின்றான். அதுபோலவே பார்க்கும் பொருள் யாவும் நீக்கமற நின்ற மாமணிச்சோதியைத் தன் மனத்தே நிலைநாட்டிவிடின் புலன் ஐந்தும் அவை விரும்பும் இடம் செல்லாது. மனம் விரும்பும் மாணிக்கத்தை அடைகின்றது. இருவினையைத் தந்து இடர்பட்டு வாழ்கின்ற நிலைமாறி ஒருமுகமாய் விளங்கும் பரம்பொருளில் நாட்டம் விழ வேண்டும். 'புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்' என்பார் ஆன்றோர் பெருமக்கள்.

புலன்களை உலகாயத்தே உலவ விடக்கூடாது. கட்டுக்கடங்கா காட்டாற்று வெள்ளத்தைத் தேக்கி அதனைக் கொண்டு மின்சக்தி உண்டாக்குதல் போல கட்டுக்கடங்கா மனத்தை அடக்கி ஆன்ம சக்தியை நாம் பெற முடியும்.

ஐந்து இந்திரியங்களாகிய ஐந்து பசுக்கள் மேய்ப்பவர் இல்லாமல் அடங்காமல் திரிகின்றது. அதனை அடக்கி வைராக்கியத்தினால் சிவ சிந்தனையில் ஒடுக்கிவிட்டால் ஞானமெனும் பேரின்பம் என்னும் பாலைச் சொரியும்.

பொதுவாகப் புலன்கள் அடங்கவில்லை என்றால் ஆசை உண்டாகும். ஆசையால் கோபம் ஏற்படும். கோபத்தால் மயக்கம் ஏற்பட்டு உள்ளம் சிதையும். உள்ளம் சிதைந்தால் உணர்வு மாயும், உணர்வு மாய்ந்தால் யாவும் அழிந்து போகும். அதனால்தான் அறுமின் அறுமின் ஆசை அறுமின் என்றனர்.

மனித உடம்பில் குண்டலினியம் தூங்கிக் கொண்டு இருக்கும். அது தூங்கும்போது மனம் விழித்திருக்கும். மனம் தூங்கினால் (பொறிவழிச் செல்லாது ஒடுங்கினால்) குண்டலினியம் விழித்துக் கொள்ளும். அவ்வாறு விழித்து எழுந்தால் சிவானந்தம் பேரின்பம் கிடைக்கும்.

ஐந்தில் ஒடுங்கில் அகலிடம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது

ஐந்தில் ஒடுங்கில் அரன்பதம் ஆவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே.

என்கிறார் திருமூலர்.

ஐம்புலன்களும் நமசிவாய என்னும் மந்திரத்தால் ஒடுங்கச் செய்ய வேண்டும். இதுவே சிறந்த தவமாகும். ஒடுங்குதல் என்பது தன் தேவைகளைச் சுருக்கிக் கொண்டு அடங்கி விடுதல் என்று பொருள். ஐம்புலன்களும் ஒடுங்கினால் சிவநிலை கிடைக்கும். சிவநிலை என்பது சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பதாகும்.

அகலிடம் என்பது சாலோபம் என்னும் இறை உலகில் நிலைக்கும் பேற்றினையும், அருந்தவம் என்பது சாமீபம் என்னும் இறைவனின் அருகே இருத்தல் என்னும் பேற்றினையும், அரன்பதம் என்பது சாரூபம் என்னும் சிவத்தன்மை என்னும் பேற்றினையும்; அருளுடையாரே என்பது சாயுச்சியம் என்னும் சிவனாகவே ஆதல் என்ற பேற்றினையும் பெறமுடியும் என்பதாகும்.

எனவே, திருவைந்தெழுத்து என்னும் மகாமந்திரத்தினால் ஐந்து இந்திரியங்களை அடக்கி சிவநிலை அடைந்து பிறவிப் பயன் பெற்று வாழ்வாங்கு வாழ விழைவோம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

69. அசற்குரு நெறி, சற்குருநெறி

இலக்கிய சுடர். கவிஞர். **மு.பாலசுப்பிரமணியன்**
புதுக்கோட்டை

உலகில் இன்று அறிவியல் வாழக்கையின் சிகரத்தில் நிற்கிற மனித சமூகம் அறவியல் வாழ்க்கையின் அகரத்திலேயே இருப்பதாக நான் கருதுகிறேன். இதற்கு என்ன காரணம்? போதிப்பவனின் தவறா? சாதிப்பவனின் தவறா? சற்று சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயக் கடமை. சாதிப்பவரைப்பற்றி பின்னர்ப் பார்ப்போம். முதலில் போதிப்பவரைப் பற்றி திருமூலரின் வழி இக்கட்டுரையில் ஆய்வோம். படைக்கப் பெற்ற ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை வளர்த்தெடுத்தலையும், வழிகாட்டுதலையும் எதிர்நோக்கியே இருக்கின்றன என்பது உண்மை. வளர்த்தெடுத்தலும் வழிகாட்டுதலும் செம்மையுடன் இருந்தால்தான் உலகிற்கு நன்மை. பிள்ளைக்குப் பெற்றோர் வழிகாட்டி; தொண்டனுக்குத் தலைவன் வழிகாட்டு; மாணவர்கட்கு ஆசிரியர் வழிகாட்டி; சீடனுக்கு குரு வழிகாட்டி; குருவே சிவமானால் அதுவே பிறப்பறுக்கும். உண்மையுற்ற வழிகாட்டுதல் குருடன் தானும் குழியில் விழுந்து தன்னைப் பின்பற்றியவனையும் படுகுழியில் விழச்செய்வதற்கு ஒப்பாகும். இதைத் திருமூலர்,

குருடர்க்கும் கோல்காட்டிச் செல்லும் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வார்கள் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே -2048

எனத் தெளிவுறுத்துகிறார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

என்பார் வள்ளுவர்.

நீதி வழங்குபவன் முதலில் தன்னை அதற்குத் தகுதியுடையவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதுபோல குருவும் முதலில் தன்னை நன்னெறியுடையவராக ஆக்கிக்கொண்டு தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டு பிறருக்குச் சன்மார்கத்தை அறிவுறுத்த வேண்டும். எனவேதான் திருமந்திரம். சிவசிந்தனை இல்லாத மூடன், உண்மைப் பொருளை ஆராயாதவன், சிக்கல் இல்லாமல் வேதநெறியைக் காணாதவன், அடக்கம் இல்லாதவன், மற்றவற்றைப் பழிப்பவன் ஆன்ம போதம் உடையவன்

முதலியோர் சன்மார்க்கத்தை உபதேசிக்கும் நெறியற்றவர் என்கிறது. சிவத்தை உணர்ந்து அதனால் அமையும் பரிச உணர்வைத் தன்னிடம் பெற்றிராத குரு மற்றவருக்கு அதை உண்டாக்க முடியாது என்று கூறுகிறது.

உலகத்து வாழ்வைப் பற்றிய எண்ணங்களை நீக்காமல் மந்திரத்தை உபதேசம் செய்தால் சிவசிந்தனை சிறந்து வெளிப்படாது சுருங்கிவிடும். காமம், மோகம், லோபம், மதம், மாச்சாரியம் எனும் ஆறு பகைகளும் நீங்கப் பெறாது, பாவிகளுக்கு மெய்யை உணர்த்தாது பொய்யை உணர்த்தும் அறிவற்ற செயலைச் செய்பவன் அசற்குருவே ஆவான் என்றும் இத்தகைய குருமார்களால் வாழ்கின்ற நாட்டுக்கும் மன்னனுக்கும் தீமை உண்டாகும் என்றும் முன்பே சிவபெருமான் மொழிந்துள்ளார் எனவும் திருமூலர் அசற்குருநெறி பற்றி அறிவுறுத்துகிறார். நல்ல நெறியை அறிந்த குரு அதாவது சற்குரு யார்? என்பதையும் பின்வருமாறு கூறுகின்றார்.

சற்குரு என்பவன் சிவத்தின் திருவடியான சிவ உணர்வைச் சீடன் சிரசில் அமையுமாறு செய்யும் ஆற்றல் உடையவன். சிவத்தின் திருவடி பதிப்பதால் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து விளங்கும் சீவனின் பாசங்களை ஞானம் அளித்துத் தணிக்க வல்லவன். தன்னிடம் நல்லுரை பெற்ற அடியார்கள் வினை நீங்கும்படி திருவருள் செய்து, இயமனும் அவனது தூதரும் அடியாரை அணுகாமல் பிறவித்துன்பம் நீங்கச் செய்பவன் என்கிறார் அவர்.

கறந்தபால் மடிமீண்டும் புகுவ தில்லை!
கடந்துவிட்ட காலம்பின் வருவ தில்லை!
இறந்தஉடல் உயிர்பெற்று எழுவ தில்லை!
இளமையது கடந்தால்பின் மீள்வ தில்லை

என்பது போல உண்மையான குருவால் பக்குவம் செய்யப் பெற்றவன் மீளவும் பிறவிக்கு வாரான் என்பதை இரசவாத முறையால் பொன்னான இரும்பு மீண்டும் இரும்பாக மாறாது என்ற உவமை மூலம் அழகாகத் தெளிவுபடுத்துகிறார் திருமூலர். தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் மருந்து பட்ட இடமெல்லாம் மேன்மையத் தருகின்ற பொன்தன்மை ஆவதைப் போன்று சற்குருவின் திருவடிப்பட்ட உலகத்தவர் யாவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் நீங்கிச் சிவகதி பெறுவர் என்பது அவர் கருத்து.

சிவகுரு என்பவன் வேதாகமம் கூறும் பேரின்ப வடிவு உடையவன். அவ்வடிவு உடையவனாகிச் சிவபோகத்தை உயிர்க்குச் சேர்ப்பித்து அருள்வான். அவ்வுயிர் திருவடி உணர்வு வரப்பெற்றமையால் வேறோர் எண்ணமும் உண்டாவதில்லை. அதனை உயரச் செய்து பாசத்தை அகற்றி அகத்தே தோன்று மேலான சிவத்திடம் வருவித்துச் சேர்ப்பவன் ஆவான். சத்தான (அழிவற்ற) சிவமும்; அசத்தான மாயையும்; சத்துடன் கூடிச் சத்தாகவும் அசத்துடன் கூடி அசத்தாக உள்ள ஆன்மாவும் ஆகிய முப்பொருள்களின் இயல்பை உணர்த்தி சித்தான ஆன்மாவையும் அசித்தாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் சிவத்துடன் சேர்த்துச் சுத்த மாயையும் அசுத்த மாயையும் அகல, இன்ப வடிவான பிரணவ உபதேசம் அளிக்கின்ற தலைவனே அருட்குரு எனக் கூறப்படுவான்.

பக்குவமின்மையால் உயிர் பாச ஞானத்தையே உண்மை ஞானமாகக் கருதி நிற்றலால் அநாதியே அதனைப் பற்றிய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐம்மலங்களும் அதனை விட்டு நீங்காது அதனைப் பற்றியே நிற்கும். பக்குவம் வந்தபொழுது பாச ஞானத்தை வெறுத்துப் பதியாகிய சிவனை நோக்கி நின்று அவனைப் பலமுறையால் வணங்குதலால் முன்கூறி ஐம்மலங்களும் அற்று ஒழியும். ஆகவே தம்மை கட்டியுள்ள பாசக் கூட்டத்தால் தாம் சிவனை விட்டு நீங்கி இருக்கும் நிலையைச் சீவதுரியம், சிவதுரியம், பரதுரியம் எனும் முத்துரிய நிலைகளால் முறையே போக்கிச் சிவனை அடைய முயல்பவரே சற்குருவின் அருள்வழி நிற்கும் சாதகர் ஆவார். அனைத்து உயிர்களும் இன்பம் அனுபவித்தற்குரிய வன்மை மிக்க புலன் உணர்வுடன் பொருந்த வரும் காலத்து இறைவன் இறைவியுடன் உள்ளத்தில் தோன்றிடவே சொல்லாமலேயே ஐம்மலக்குறும்புகளும் அடங்கி உயிர் சிறந்து மீண்டும் வாரா நெறியை அடையச் செய்தல் இறைவனுக்கு விளையாட்டாகும்.

இழிவான பிறப்பு நிலையில் அதன் இழிவு தோன்றாதவாறு மறைத்து மீள மீள அதிலே நின்ற கருவிக் கூட்டத்தின் இயல்பை உணர்த்தி, அதனின்றும் பிரித்து உயிர் தனது இயல்பினைத் தான் உணருமாறு செய்து அவ்வுணர்விலே சிறிது காலம் நின்று தாமதிக்கச் செய்தலும் பின்பு இறைவன் இயல்பை உணர்த்தி உயிருணர்வினின்றும் பிரித்து இறையுணர்விலே நிலைத்திருக்கச் செய்தலும், பின் இறை இன்பத்திலே தோய்ந்து பேச்சற்றிருக்கச் செய்தலும் ஆகிய இவையெல்லாம் முத்தான்மாவாய் நின்ற சற்குருவின் செய்கைகளாய் விளங்கும். சிவன் தனது கருணை காரணமாகச் செய்யும் முத்தொழில்களாகிய விளையாட்டு நிகழும் இடம் சடமாகிய மாயையினிடத்திலாம். ஆயினும் அவ்விளையாட்டிற்குப் பயன்

அறிவுடைப் பொருளாகிய உயிரை, சித்து இவை, அசித்து இவை என்பதை அறியச் செய்து மும்மலங்களைத் துடைத்துத் தூய்மையுறப் பண்ணி மறைத்தல், அருளல் ஆகிய இரு தொழில்களால் மெய்ப்பொருளை அடையச் செய்தலேயாகும். இதனால் இறைவன் செய்யும் தொழில்களில் முடிவானது சற்குருவாய் வந்து ஞானத்தை அருளுதலே என்பது கூறப்பட்டது.

உலகீர், எங்கள் சிவபெருமான் தனக்கு வேறாய் விலகி நிற்கும் பொருள் எதுவும் இல்லை என்று அறிந்து தன்பால் செலுத்தப்படும் அன்பிலே விளங்கி நிற்பவன் அத்தகைய அன்பர்க்குப் அவன் அனைத்துப் பொருளின் உண்மைகளையும் தெளிவாக உணரக் காட்டினான். ஆதலால் நீங்கள் அவனது வியாபகத்தைக் கடந்து அவனின் வேறாக யாதொரு பொருளும் இல்லை என உணர்ந்து உடம்பில் உள்ளபொழுதும் அவனை எவ்வகையிலேனும் உணர்ந்து போற்றுங்கள். மாணிக்க மணிகளைக் கோத்த ஒரு வடத்தைத் தூங்க விட்டது போல உடம்பினுள்ளே ஒன்றின் மேல் ஒன்றாய் அமைந்து ஒளிவிட்டு விளங்கும் மூலாதாரம் முதலாக உச்சி ஈறாக ஏழு மண்டலங்கள் உள்ளன. அங்கெல்லாம் அவற்றுக்கு மேல் உள்ள மாற்றுயர்ந்த பொன்போன்றதொரு நற்பொருளினின்றும் ஓர் அமுதம் ஊற்றெடுத்துப் பாய்கிறது. அதனை அறிந்து போற்றிக் கொண்டு உண்டவர்களை பிறப்பற்றிருக்கின்றார்கள். அதனை அறியாதவரெல்லாம் விலங்கோடொத்து உணவை உண்டு வயிறு வளர்ப்பதற்காகவே வாழ்கின்றனர்.

எனவே மலத்துடன் கூடிய ஆன்மா உயிர்த்தன்மை நீங்கவும் கூட்டப்பட்ட பாசப் பற்றுகள் அழிந்து ஒழியவும், சுத்த மாயை அசுத்த மாயை என்னும் இரு மாயைகளையும் நெகிழ்வித்து அணுவாகிய ஆன்மாவை அங்கே கூட்டியவனும் பிரணவ உபதேசம் செய்பவனும் சிவன் ஆவான்.

மூலாதாரத்தினின்று தலையை நோக்கி ஏறும் பாதையில் உயிரைப் பிணிக்கும் மல இயல்பைச் சுட்டெரித்து மேலே செலுத்தலாலும், முடிவில்லாத நாத ஒலியால் இருளை நீக்குதலாலும், பசுவின் இயல்பான பாசத்தன்மை கெடுமாறு வாட்டுவதாலும் முத்திவுலகை அடையும்படி உபதேசிக்கும் சிவமே குருவாகும். இவ்வாறு இறைவன் தனது அருட்சக்தியால் உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தைப் படிப்படியாய் நீக்குதலை,

மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலம் துரந்து

என சிவஞான போதம் கூறுவதனாலும் உணர்க. இவ்வாறு அசற்குரு நெறி பற்றியும், சற்குருநெறி பற்றியும் திருமூலர் திருமந்திரம் வழித் தெளியலாம்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

70. கூடாவொழுக்கம், கேடு கண்டிரங்கல்

ஆர். தமிழரசி
ஆசிரியை, சென்னை

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்பது வள்ளுவரின் உயர்வாக்கு. மனம்போன போக்கில் சென்று அல்லல் படாமல் அதனை அடக்கி நல்வழியில் செலுத்தத் தெய்வீக நினைவே துணைபுரியும். செந்தமிழாம் தீம்பாலோடு தெய்வீக நறுந்தேனைச் சேர்த்துக் கலந்ததைப் போல் அருள் வாக்குகள் வாழ்வில் வளமும் நலமும் தந்து வாழ்வைப் புனிதமாக்கும். எண்ணிய எல்லாமும் தரும். அத்தகைய அருள் மொழிகளுள் திருமந்திரமும் ஒன்றெனலாம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருமூலர் ஒருவர். 'நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன் ' என்ற தொடர் திருமூலரின் சிறப்பாகும்.

மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது.

என்ற திருமூலரின் வாக்கால் மூவாயிரம் பாடல்களால் ஆனது திருமந்திரம் என அறியலாம். தாயினும் நல்லன். தாழ்சடையோனே என்றும் ஈசன் உறவுக் கெதிரில்லை தானே என்றும்;

எப்பரி சாயினும் ஒத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே

என்ற வரிகளும் திருமூலர் ஈசனின் மீது கொண்ட பக்தியின் உறுதி வெளிப்பாடெனலாம். உள்ளத் தூய்மையால் உலக முதல்வனாம் இறைவனை உறவாக்கிக் கொள்ளலாம் என்பதை உரைப்பதே பெரியபுராணம் எனலாம். அன்பர்களின் அன்புக்கும் உண்மையான பக்திக்கும் ஈசன் இறங்கி வந்து அருள்புரிவான் என்பதைப் பெரியபுராணத்தில் காணலாம். அத்தகைய நாயன்மார்களின் வரிசையில் வந்த திருமூலர் கூடாவொழுக்கம் எனச் சிலவற்றையும், அன்பர்களின் கேடு கண்டிரங்கல் எனச் சிலவற்றையும் கூறி அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உலகில் உள்ளோர் தாங்கள் செய்யும் நன்மை தீமைகளை, மேல் பார்க்கும் அதிகாரி இல்லை என்று பலவிதமான வஞ்சகச் செயல்களைச் செய்வர். எல்லாரையும் மேற்பார்வை செய்யும் இறைவனாகிய கண்காணி

இல்லாத இடமே இல்லை. உலகவரை மேற்பார்வை செய்யும் இறைவனாகிய கண்காணியை தங்களின் ஞானக்கண்ணால் உணர்ந்தவர் இவ்வுலகில் கள்ளம் ஒழிவர்.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா இடமில்லை காணுங்கால்

கடல் சூழ்ந்த இவ்வுலகில் கழுத்தில் விடத்தை உடைய நீலகண்டப் பெருமான் பொய்யிது, மெய்யிது என்பதை உணர்வான் என்ற இறைத்தத்துவத்தை உணராது, பொய்யான புராணக் கதைகளைப் பேசித்திரிவர். ஆனால் அவர்கள் உண்மை உணர்ந்து உண்மைப் பேசுவராயின் உலகவரை விண்ணோரும் தொழச் செய்வான் இறைவன். அதாவது மெய்ப்பொருளான சிவத்தை உணர்ந்து உண்மை பேசுபவர் விண்ணோராலும் தொழப்படுவர் என்கிறார்.

பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு
மத்தகர்க் கீன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக் குற்றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே

அதாவது புராணபடனம் செய்து அதனால் பொருளீட்டல் மறுபிறப்பினை உண்டாக்கும். பிறப்பை உண்டு பண்ணுகின்ற காமாதி விதையை நசுக்கிக் கண்டத்துக்குக் கீழ் உள்ள பகுதியாகிய விளை நிலத்தைக் கெடுத்து தரிசாக்கும் பித்தர்கட்கு என்றும் பிறப்பில்லையாம் என்கிறார்.

வடக்கு வடக்கு என வடக்கே சென்று வணங்கென்பர் உலகோர். வடக்கே சென்று காணவேண்டியது ஒன்றுமில்லை. அவரவர் உடலிலேயே வடக்கே உள்ளது அடக்கம் என்பதை உணர்ந்தவர் ஞானியராவர்.

காயத்தை அதாவது உடலை உயிரோடு இணைத்து வைப்பவனும், உடலையே கோயிலாகக் கொண்டவனையும், காயத்துள் தேடாமல், தேயத்துள் தேடி அலைதல் கூடாவொழுக்கம் என்கிறார்.

மூலதார, அக்னியில் கலந்து மேற்பார்வை செய்பவனாகவும், அவரவர் உள்ளத்தில் கருத்தில் இருந்து மேற்பார்வை செய்பவனாகவும், அவரவர் உடலிலும் உள்ளத்திலும் கலந்து இருப்பவனாகவும் விளங்கி, அவனை நம்பும் உயிர்களைக் காக்கும் காதலன் அவனேயாகும் என்கிறார்.

உலகவர் பலரும் ஒவ்வொரு வகையில் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்கின்றனர். அதாவது கன்னியர் வசப்பட்டும், கடுந்தவம் புரிந்தும்,

தன்னையும், தலைவனையும் உணர முற்பட்டும் சிறைப்பட்டு நிற்பர். இவர்களெல்லாம் அனுபவமின்மையில் இறைவனை உணரவில்லை என்கிறார்.

காணமுடியாத படலம் உடைய கண்களை உடையவர் இவ்வுலக ஒளியைக் காணமுடியாதவர் ஆவர். அப்படலம் நீக்கப் பெற்றால் உணருவர். அதைப்போல இறைவன் இவ்வுலகெங்கும் வியாபித்து இருந்தாலும் அஞ்ஞானம் உடையவர் அறியமாட்டாதவர். மெய்ஞ்ஞானம் உடையோர் மட்டுமே உணரக் கூடியவர் ஆவர்.

அட்டமா சித்திகளாகிய நிலம், நீர், தீ, காற்று, விண், சூரியன், சந்திரன் ஆன்மா ஆகிய எட்டும் சிவத்தின் உறுப்புகளாகும். கண் முதலியவற்றின் மயக்கத்தாலும், சூழ்வினைகளாலும் இவ்வுண்மையினை உணரப்பெறார். அதனால் புலன்வழியான சிற்றின்பத்தையே தேடி அலைவர்.

ஒன்று இரண்டு எனப் பிரித்துப்பார்த்து நிற்போருக்கு சிவனோடு ஒன்றும் நிலை எய்தாது. வேறாகவே அமையும். சிவனும், சீவனும் ஒன்றென்பார், சிவனோடு ஒன்றும் நிலை அடைவர் என்பதாகும். மேலும் உயிர் நின்றால் உணர்வு எங்கு வாழும்? அதனால் உயிரும் உடலும் ஒருங்கிணைந்து நல்லுணர்வோடு இருக்கும்போதே சிவப்பயிரை உள்ளத்துள் விதைத்து வளர்த்தல் வேண்டும் என்கிறார்.

உயிரின் வேறாய் அதன் உணர்வைச் செலுத்தும் பரம்பொருள் சிவம் என்பதை உலகவர் உணரமாட்டார்கள். இதுவும் கூடாவொழுக்கம் ஆகும்.

வானாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய் -திருநாவுக்கரசர்

உலகம் நிலைபெறுவதற்குரிய அச்சாணி போன்றவனும் ஒளி பொருந்திய மேலான அறிவு சொரூபமானவனும் ஆகிய இறைவன், தேவர்கள் தலைவனாகியவனை தலையில் வாக்கு ரூபமாக அறிவதே தன்னை அறியும் செயலாகும்.

உலகம் அனைத்தும் தன்னுள் ஒடுங்கும் இடமாகவுள்ள ஒப்பிலா சோதியாகிய இறைவனை உணர்ந்து, முதலில் விருப்பத்தையும், முடிவில் சோர்வினையும் நல்கும் சிற்றின்பத்தை விட்டால் நிலைத்த பேறுடைய பேரின்பத்தை அவன் அருளுவான்.

உலக முதல்வனாய் உயிர்களை உடம்பில் நிலைபெறச் செய்த ஈசனின் இயல்புணர்ந்து தன் நலம் மறந்து உயிர்கள் தானாக நின்றால் அவனொடு கலந்து இன்புறும் நிலை கூடும் என்பதாகும்.

தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே -திருநாவுக்கரசர்

ஆன்மா இந்திரியங்கள் முதலியவையோடு பொருந்தும் முறையை அறியாமை கூடாவொழுக்கம் ஆகும் என்றும் கூறுகிறார்.

இந்தியம் அந்தக் கரண மிவையுயிர்
வந்தன சூக்க வுடலன்று மானது
தந்திடும் ஐவிதத்தால்தற் புருடனு
முந்துள மன்னு மாறாறு முடிவிலே

கேடு கண்டிரங்கல்

ஒவ்வொரு கணமும் தன் வாழ்நாள் முடிவதை உணராப் பாவிகள், வினையாகிய வித்தை நாட்டி வினைபோகத்தை அறுவடை செய்வார்கள். வாழ்நாள் முடியும் முன் வினையை அறுக்க வேண்டும் என்று அறியாது அவதியுறுவர் என்கிறார்.

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதகண் டாய்சிவன் பாதநினை -பட்டினத்தார்

வாழ்நாள் திடீரென்று முடிவதைக் கண்டும், சாதனைகளைச் செய்யாமல், வாதிட்டு திருவடியை வணங்கி, அனைத்துக்கும் ஆதியாகிய அவன்பால் அன்பாய்ப் பொருந்தும் அறிவில்லாதவர்களாக இருக்கிறார்களே என்கிறார்.

கடன் பெற்றாவது நெல்லைப் பெற்றுக் குத்தி உண்டு. கயவராகிய பொறிகளைத் திருப்தி செய்து உடம்பினை ஓம்பித் திரிவர். இந்த உடல் கட்டையில் கிடத்தப்பட்டு நெருப்பில் கிடக்கும் என்பதை அறியார். அறிவில்லாதவர்கள் இறைவனை நினைந்து போற்றாது, உடலை நினைந்து போற்றிக் கெடுகிறார்கள்.

அன்று சிவன் யோகிருந்த போது கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து குருநாதன் உபதேசித்தருளிய சிவத்தை உணராது தம் சிந்தை வழி சென்று சிவபோதமே இயல்பாகக் கொண்டு ஒருப்பட்டு நின்றனர் என்று உலகவர் சிவகுரு உபதேசித்த வழியில் நில்லாமல் தம் அறிவழி நின்று கெடுகின்றனர் என்றார்.

நிலைத்த புகழையும், தவப்பயனையும் ஈசன் தன் அடியவர்க்கு நல்குவான். அஃதறியாமல் அது, இது, தேவு என்று உலகவர் பேசி அலைவதால் உலகவர் குறைபட்டவர் என்கிறார்.

இவ்வுலகில் இன்பத்துள்ளே பிறந்து இன்பச் சூழ்நிலையில் வளர்ந்து, இன்பம் அனுபவிக்கும் போது இன்பப் பொருளாகிய சிவனை நினையாமல் சோறு, ஆடை என்னும் துன்பத்துள் அறியாமையால் உழலுகின்றார்களே என இரங்குவார்.

உண்ணும்போது உயிரெழுத்தை உயரவாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும்
பெண்ணின் பாலிந்திரியம் விடும்போதெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு. -அகத்தியர் ஞானம்

இன்பத்துள் உள்ளபோது இன்பப் பொருளை நினையாது உலகவர் கெடுகின்றனர் என்று கூறுகிறார்.

பெறுவதற்குரிய இப்பிறவியைப் பெற்றும், பெறுதற்கரிய பிரானடி பேணாமல், பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மாக்கள் எல்லாம் பெறற்கரிய தான பேரின்பப் பேற்றினை இழந்தாரே என்கிறார். அதாவது அருமையான மானுடப் பிறவியைப் பெற்றும் மேலும் இளமையில் செய்யும் யோக நெறியே அறியாது உலகவர் மாதவன் இன்பம் மறந்து ஒழிந்தார்களே என்றும், இளஞாயிறு போன்று அக்கினி மண்டலத்தில் விளங்கும் ஈசனைப் பற்றி இதுவரை உணராமல் இருந்தோமே என்கிறார்.

எவ்விதம் பார்வை செலுத்தினால் புருவமத்தி விழிப்பு அடையுமோ அவ்வழியில் செல்லாதவர் வீணே பாடியும் அழிகின்றார் என்கிறார். மனமண்டலத்தில் சிவத்தினையே நினைப்பவருக்கு மனத்தினை ஒருநிலைப்படுத்தும் சிந்தனைகளில் மலம் அலைப்புண்டு மனம் அல்லலுறும் என்கிறார்.

நேர்மையில்லாதவர் பெற்ற பொன்னைப் போற்றாது ஒழிதல் போன்று சிவசிந்தனை இல்லாதவர் சோதி வடிவமாக இறைவனைக் காணும் ஆற்றல் பெறமாட்டார்கள். தேனுண்டு திளைக்கின்ற வண்டுகளைப் போல் சிவமுதத்தினை உண்டு திளைக்காது கெடுகின்றார்.

அன்பில் பொருந்திய தேவதேவனை அனுபவத்தில் பெறாது காலத்தைப் போக்கி மக்கள் அழிகின்றார். காலத்துக்கு அஞ்சி அழியாமல், மூலக் கனலைத் தூண்டி சுழுமுனை நாடி வழியாக எழுப்பி அமுதம் பெற்றால் நீடு

வாழலாம். உடலில் ஆற்றல் மிகுந்துள்ள காலத்தில் குண்டலினியோகம் செய்யின் நரை திரை உண்டாகாது.

இறைவனை அறியும் கருத்தில்லாது காலத்தைக் கழித்து, அவன் ஒருவனே உலக உயிர்க்கெல்லாம் உயிராய் உள்ளவன் என்பதை மறந்து அன்பில் பொருந்திய தேவதேவனை அனுபவத்தில் பெறாது காலத்தைப் போக்கி அழிகின்றனர் என இரங்கிப் பாடுகின்றார். திருமந்திரம் கூறும் நல்வழிகளை நற்றுணையாகக் கொண்டு நிலைத்த பேரின்பப் பேற்றினை பெற்று நிலைபெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

71. இதோபதேசம்

முனைவர். **வே. பரமேசுவரன்**
தலைவர், தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர்

'அறிவால் அறிந்து, உணர்வால் உணர்ந்து' இறைவனை வணங்குவதே பக்குவ நிலையில் நிகழும் வழிபாடு என்பதை, இந்த ஞான பூமியில் வாழ்ந்த சித்த பெருமக்கள் உறுதிப்படுத்தினார்கள். இதனைத் தெளிவுப்படுத்துகின்ற வகையில்,

'நினைந்து நினைந்துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிறைந்து நிறைந் தூற்றறமுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந் தருளமுதே நன்னிதியே........'

என்ற திருஅருட்பாவில் அருள் அறிவோடு கூடிய நிலையே, பிறப்பு அகற்றி இறவா நிலை தரும் என்று வள்ளலார் குறிப்பிடுவார். மனிதன் இன்ப துன்பங்களில் அகப்பட்டு அழிந்து போகாமல் நிலையாக வாழ வேண்டும். அதற்கான வழி, 'என்றும் அழியாது நிலையான அருளாட்சி நடத்தும் இறை பரம் பொருளை வணங்கி வேண்டுவது ஒன்றேயாகும். இந்தவுடல் உயிர் சுமக்கும் வெறுங்கூடு. ஆதலால் அதனை விடுத்து, உயிராற்றலை மட்டும் மேலெழுப்பி இறைவனோடு ஒன்றச் செய்து விட்டால், அதுவே முக்தி நிலை என்று எத்தனையோ சித்தர்கள் பாடியுள்ளனர். ஆனால் பெருஞ்சித்தர் திருமூலநாயனாரோ இந்த 'ஊண் உடம்பே ஆலயம்', 'உள்ளம் பெருங்கோயில்' என்று பாடினார். உடம்பினைப் போற்றி, அதனுள்ளிருக்கும் உயிர் ஆற்றலால் பரம் பொருளை நம்மோடு வந்தணையும் சித்தி நிலைக்கு பாதை, அமைத்துக் கொடுத்துள்ளார். அவர் வழங்கிய 'திருமந்திரம் - ஏழாம் தந்திரத்தில்' இறுதியில் அமைந்துள்ள பகுதி 'இதோபதேசம்' என்பது. உயிக்கு உறுதி பயக்கும் நன்மொழி கூறுவதாக, ஞானகுருவின் இனிய மொழி இருபது பாடல்களில் அமைந்துள்ளன.

பிறவிக்கு மருந்து

மனிதன், இதற்கு முன்னால் எந்த உயிர் வர்க்கத்தில் பிறந்தான்? எவ்வாறு வாழ்ந்தான்? என்பது அறியாமல் தவிக்கின்றான். இருப்பினும் அறிய முயன்ற மாணிக்கவாசகப் பெருந்தகை,

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
....
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

என்று எல்லாப் பிறப்பும் பிறந்த நான், இன்றுன் திருவடி காணும்பேறு பெற்றேன் என்கிறார். மனிதன் வாழும் காலத்து, இறையிடத்து பற்று வைக்காது, உறவுகளில் பற்று வைத்து, இன்ப வாழ்வைத் துன்ப வாழ்வாக மாற்றிக் கொள்கிறான். நிலையான உலகில் நிலையற்ற வாழ்வு அமைந்து விடுகிறது. இன்னல் தீர்க்கவும், இன்பம் நிலவவும், உயிர் உள்ள காலத்தே அவனை வணங்க வேண்டும். அல்லது உயிர் போகுங்காலத்தாவது நினைக்க வேண்டும். இதனைத் திருமூலர், 'இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்' என்பார். பிறவிப்பிணி தடைபட இதுவே வழி என்பதை இங்கு அறியமுடிகிறது.

இறவாதிருந்தால் பிறவாதிருக்கலாம். கூற்றுவன் நம்மைக் கைக்கொள்ளாதிருக்க, 'கூற்றுதைத்தான்றன்னை' வணங்குவதும் ஒருவழியாகும். இந்த உடலில் உயிர் எப்போது வந்தது? இந்த வாழ்வு தொடங்கிய காலம் எக்காலம்? என்று ஆராய்வதும் அருள் ஆராய்ச்சியே என்கிறார் திருமூலர்.

'அண்டத்தில் உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவற்றை ஆராய்வது போல, பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தில் நெற்றி இவை போன்ற இடங்களில் உரோமம் தோன்றாது ஏன்? கை, விரல்களில் நகம் முளைத்தலும், அவை வளர்தலும் ஏன்?.....' என்பது போன்ற உடல் உயிர்த்தத்துவத்தை உற்று நோக்குவதே இறைவனை அறியும் வழி என்று திருவருட்பா உரைநடைப் பகுதி குறிப்பிடும். 'எக்காலத்திவ்வுடல் வந்தெமக் கானதென' என்று திருமூலர் பாடலால், பிறவிப்பிணி அகல மேற்கண்ட தத்துவ ஆய்வு முக்கியம் என்று கூறவேண்டும்.

மனித வாழ்வில், இன்பத்தில் மகிழ்வும், வாட்டமும் என்ற இவ்விரு நிலைகளும், ஒருசக்கரச் சுழற்சிபோல் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன. இவை இறைவனின் அருள் வெளிப்பாட்டால் விளைவன. சீவர்களின் விருப்பம்போல், உடன் செல்பவனும் சிவனே, பக்குவ காலத்தில் அறிவின்பம் தருபவனும் சிவனே என்பதால் உடல் கூட்டைவிட்டு உயிர்ப்பறவை பறக்கின்றபோது ஈசனைச்சிந்திப்பது ஒன்றே, பிறவிப்பிணி போக்கும் அருமருந்து ஆகும்.

இரண்டல்ல ஒன்று

திருமூலர் இறைவனின் நிலை பேராற்றலை, இல்லையெனினும் பெரிதுளன் எம்மிறை என்பார். இதேபோல், உலகத்தால் உண்டென்பது இல்லென்பான் என்று வள்ளுவர் குறிப்பிடுவார். அத்தகைய இறைவன் தனியொரு தலைவனாக வீற்றிருக்கிறான்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே

பிறப்பால் மனிதரில் ஒற்றுமையுண்டு. வேற்றுமை காணும் எண்ணம் செய்யும் தொழிலால் வந்ததின்றி வேறில்லை. மனிதகுலம் சாதி சமயப் பிணக்கின்றி வாழவேண்டும். மனச்சோர்வின்றி நல்லதே நினைக்கவேண்டும். அதுவே சிவநெறி. சகோதர உறவும், சமத்துவ நிலையும் உலக மக்கள் அனைவரிடத்தும் நிலைபெற்று ஓங்க, சிவநெறியைச் சிந்தித்திருக்க வேண்டும். கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? இல்லையா? ஒன்றானவரா? பலவடிவினரா? என்ற கருத்தும் சமுதாயத்தில் நீண்ட காலமாக உள்ளது. இவற்றிற்கு தீர்வு கூறும் வகையில், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு கூடாது. இரண்டா? நான்கா? என்ற வேறுபாடு கடவுளிடத்து இல்லை என்று மேற்கண்ட பாடல் வலியுறுத்துகின்றது.

வாழ்வின் பயன்

அடியார் கூட்டத்தோடு கூடி நின்றோ, தனித்திருந்தோ, உடலாகிய பாசறையிலிருந்தோ, தெளிவான அறிவாலோ இறைவனை வணங்குதல் வேண்டும். ஆன்றோர்கள் இதனை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று குறிப்பிடுவர்.

ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்டு
நீடிய வீற்றுப் பசுவது வாமே

என்பார் திருமூலர். ஒளிநிலையை அறிவால் அறிந்து தொழுவார்க்கு, பசு கன்றிற்குப் பால் சொரிவது போல அருளொளியை வழங்குவான். தீவினை அகன்று, வானுலக தேவநிலையைப் பெறலாம் என்பார் திருமூலர்.

இறைவனை நாடினால் இன்பம் அடையலாம். அன்பு செலுத்தினால் தவம் செய்யலாம். மெய்ஞானத்தால் பண்பு பெறலாம். அதுவே பிறவித்துன்பம் நீங்கும் வழி என்று,

இன்புறுவீர், அன்புறுவீர், பண்புறுவீர்.....
துன்புறு பாசத் துழைத் தொழிந் தீரே.

என்றும், அதற்கான வாயிலாக, மெய்த்தவம் ஒன்றுண்டு. மெய்தாளும் ஒன்றுண்டு. மெய்நெறியும் ஒன்றுண்டு. மேற்கொள்ளலாம். வேண்டிய வண்ணம் பெறலாம். வாழும் காலத்தில் அருள்நிலை பெறுவதே வாழ்வின் பயன் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

சிவன் அருள்

இறைவனிடம் பெற்ற அருளனுபவ நிலையை அருளாளர்கள் அனுபூதியாகப் பாடியுள்ளனர். திருமூலரும், ஈசனை வணங்குபவர்களுக்கு முத்தியைத் தருபவன். ஞானம் வழங்குபவன், முத்தமிழ் ஓசையானவன் என்றெல்லாம் போற்றுகிறார். ஆனால் அப்பரம்பொருளோ,

'நெய்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்'

பாலினுள் நெய்போல் அகத்தே சோதியாக அவன் வீற்றிருக்கிறான். அறிந்து வணங்குவோர் அவனருள் பெறலாம் என்கிறார். இதேபோல்,

'பாலில் படுநெய்போல் மறைய நின்றுளான் மாமணி சோதியன்' திருநாவுக்கரசர் வாக்கு.

கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியே......

என்பது வள்ளலாரின் அனுபவநிலை. வாழும் காலத்தில் அருளனுபவ நிலைபெற வேண்டும். உள்ளத்திருள் உள்ளானை உற்றறிந்து அருள் பெறவேண்டுமென்பதையே, அருளாளர்களின் அனுபூதிநிலை உணர்த்துகின்றது.

ஞானகுரு

வழிகாட்டவும், வழிநடத்தவும் ஒருவர் கிடைத்துவிட்டால் வாழ்க்கை எளிமையாகிவிடும். ஆனால் அத்தகையோரைக் காண்பது, இன்றைய சூழலில் அரிதாகவே உள்ளது. ஆதலால் நம்மையே அந்நிலைக்கு உயர்த்த திருமந்திரப்பாடல் துணை நிற்பதை அறியமுடிகியது. இங்குள்ள வாழ்வும், அதில் வரும் துன்பமும் எவ்வளவு ஆயினும், ஏன்? மரணமே வரினும்,

இறைவனை உண்மை அன்பொடு வணங்குபவர்களே அறிவில் தெளிவுடையோர். அவர்களே சற்குருவைக் கண்டடையும் தகுதி பெற்றவர்கள். ஆனால் வஞ்சகர்கள் சற்குருவை வந்தடைந்தால், உலகில் பஞ்சம் உண்டாகும். இறைவனே அஞ்சுவான். நரகமே அவர்களுக்கு இடமாகும். எனவே குருவைக் காண்பதே சித்திநிலை என்பதை,

'*செஞ்சநிற போரைத் தெரிசிக்கச் சித்தியே*

என்று திருமூலர் சுட்டிக்காட்டுகிறார். மேலும் காலாகாலமாக சிவனை வழிபட்ட தேவதேவர்கள் அடைந்த பயன் ஒன்றுமில்லை. ஞானநெறியினை வழிகாட்டும் சற்குருவை வணங்குவதே சிவனை வழிபடும் நிலை ஆகும்.

மக்களும், தேவரும் வினைச்செயலால் அழிவதுகண்டு. இரக்கம் கொண்ட குருஞானி, தம் உண்மைச் சீடரை இறைநிலைக்கு உயர்த்தும் அருள் செயலை மேற்கொள்வார். ஆதலால் அன்பொடு, செஞ்சடை நாதனைச் சிந்திப்போருக்கு, வினைகெடுத்து, ஞானகுருவாக எழுந்தருளி, ஆட்கொள்பவன் ஒப்பற்ற சிவபெருமானே

ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற
மேற்கொண் டவர்வினை போயற நாடொறு....

என்ற திருமந்திரப்பாடல் பிறவா நிலையும், இறவா வாழ்வும் பெற்றுக்கொள்ள, ஈசனே ஞானகுருவாக வந்தமர்ந்து அருள்வான். உயிர்பெற்றுக் கொள்ளும் உறுதிப்பொருள் இதுவேயென்று இனியமொழி கூறுகின்றது.

மனம் அது செம்மைப்பட்டு, முழுமையான பயன்பெற்று வாழ்வதற்கே இப்பிறவி என்றறிந்து, துணைநிற்கும் அறநெறிச் சிந்தனையை மேற்கொள்ள வேண்டும். நல்லதே நினைத்து, நன்மையே செய்து, ஒன்றான கடவுளை ஒளிவடிவில் தியானித்தால் அஞ்ஞானம் அகன்றிடும். சற்குருவை அடைந்து, அறிவின் தெளிவால் ஞானநிலை பெறலாம். அங்கு ஈசனே ஞானகுரு என்பதை இதோபதேசப்பாடல்கள் உணர்த்துகின்றன. சமுதாய மக்கள் அனைவரும் நலமோடும், வளமோடும் வாழவேண்டும் என்பதே சித்தர் பெருமக்களின் மேலான குறிக்கோளாகும். திருமூலரின் திருமந்திரம் பக்தி நெறியில் மனித மனத்தைப் பக்குவப்படுத்தி, தன்னை மட்டுமல்லாது தன்னை சார்ந்த சமுதாயத்தையும் வளப்படுத்துவதற்கான

நல்வழி காட்டுகின்றது. உயிருக்கு உறுதி கூறும் நன்மொழிகளே இப்பகுதியில் உள்ள பாடல்கள். எனினும் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று ஏற்று வாழத் தொடங்கினால், மனிதக் கூட்டம் வாழும் இடங்களிலெல்லாம் அன்பும், அமைதியும் நிறைந்து, போரும், பூசலும் ஒழிந்து, இறையருள் ஒன்றே நிறைந்திடும் என்று உறுதிபட அறிந்து கொள்ள முடிகின்றது.

திருச்சிற்றம்பலம்

எட்டாம் தந்திரம்

72. உடலில் பஞ்சபேதம், உடல் விடல்

தவத்திரு. சாது சண்முக அடிகளார்
பழனி

திருமந்திரம் நமது சமயநூல்களில் பழமையான காலவரலாறுகள் பலராலும் பலவகையாகப் பேசப்படுகிறது. பாலூர் கண்ணப்ப முதலியார் பத்தாயிரம் ஆண்டுகள் என்றும் மற்றும் சிலர் திருமந்திர காலத்தை குறைத்தும் கூறுகின்றனர். திருமுறைகளில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. மூவாயிரம் பாடல்கள் கொண்டது. ஒரு ஆண்டு யோக நிலையில் இருந்து யோகத்தில் கிடைத்த அனுபவத்தை ஓர் ஆண்டு நிறைவில் யோக நிலை நீங்கிக் கூறுவர். இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் யோக நிலையில் இருந்து தன் அனுபவத்தை, வாழ்க்கை நெறி, குரு வழிபாடு, அறநெறிகள் இறைவனது பெருமை, இயல்பு, இறைவனை அடைவதற்குரிய வழி தோத்திரம், சாத்திரம், சக்கரங்கள், எந்திரங்கள் அவற்றை வழிபடும் முறை, சமய மாறுபாடுகள் குருவை வழிபடுவதே சிறந்தது என்று கூறுகிறது. குருவழிபாடு எப்படி என்று கூறி இறைவன் குருவாகவும் வந்து வழிகாட்டுவான் என்றும், அடுத்த ஆறு ஆதாரங்கள் இலிங்கம், கலைகள் முதலியன பற்றிக் கூறுகிறது.

எட்டாம் தந்திரம் சுமார் 43 பிரிவுகளை உடையது. சாத்திரப் பகுதியாக உடையது. உடம்பின் கூறுகளை விளக்கி உயிரின் இயல்பைத் தெளிவுபடச் சொல்லி முக்தி வழியை விளக்குவது, அன்னமயம், பிராணமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் ஆகிய இடங்களைக் கடந்து மனதை தலையின் உச்சியில் நிறுத்திச் சிந்திப்பார்க்கு உடல் நினைவு இழந்திருக்குமென்றும் உடலின் பஞ்சபேதம் கூறுகிறது.

உடலில் ஐந்து வகை மாறுபாடுகள் (பேதங்கள்) உள்ளன. அவை அன்னமைய இடம் (கோசம்) பிராணமய இடம்(கோசம்) மனோமைய இடம் விஞ்ஞானமைய இடம் (கோசம்) ஆனந்த மைய இடம்(கோசம்) என்று உடலில் உள்ளது. எப்படி திருமந்திரத்தில் தோத்திரம், சாத்திரம், மந்திரம், தந்திரம், எந்திரம் ஆகிய ஐந்து அடங்கியதோ அதுபோல மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து கோசங்கள் உள்ளது எட்டாம் தந்திரத்தில்.

இதில் ஐந்து (கோசங்கள்) இடங்களின் ஆதாரம் மனம். இந்தக் காயத்தை விட்டு மனம் நீங்குமானால் மற்ற கோசங்களில் உள்ள அறிவு நீங்கி மண்ணாகிவிடும். இறைவனால் அமைந்த உடலில் இருகூறு, அது தூல

ஆக்குமம், சுத்த ஆக்குமம். இவை இரண்டும் உடலைப்பற்றியது. இது புரியட்டகாயம். புரியகட்டகாயம் என்பது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் (உடன் புத்தி, மனம், அகங்காரம்) அறிவு, மனம், தன்முனைப்பு என எட்டுமே புரியட்டகாயம். கண்ணுக்குத் தெரியா நுண்ணியது இது. தூய உடலைச் சுற்றி இதன் ஆற்றல் உள்ளும், புறமும் உள்ளது. முதல் ஐந்தின் தன் மாத்திரையில் இருந்து மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன தோன்றும். இவை அகத்தும் புறத்தும் தொடர்புடையவை. அகம் என்பது மனம். புறம் என்பது உடல்.

உடற்சாரம் (சத்து) இரத்தம், இறைச்சி, தோல் நரம்பு இவ்வைந்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இருக்கும். அறியாமையால் அனைத்தும் ஒன்று என்று கூறலாம். ஆனால் ஒன்று ஆகாது. இப்படி உண்டாக்கிய இறைவனின் பெருமை அளவிடற்கரியது. உடல் 1. மண்ணின் தன்மையான மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை ஆகிய ஐந்தும் 2. நீரின் தன்மையான நீர், இரத்தம், மூளை, நிணநீர், சுக்கிலம் ஆகிய ஐந்தும் 3. நெருப்பு தன்மையான ஆகாரம், தூக்கம், பயம், மைதுமை, சோம்பல் ஆகிய ஐந்தும் 4. காற்றின் தன்மையான ஓடல், இருத்தல், கிடத்தல், நடத்தல், தத்தல் ஆகிய ஐந்தும் 5. ஆகாயத்தின் தன்மையான குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஐந்தும், ஆக 25 ஆம் மற்றும் கன்மேந்திரங்கள் 5 -ம் வாயுக்கள் 10, நாடிகள் 10, வாக்குகள் 4, ஈசனை 3, குணம் 3, ஆக 60-ம் சிறப்புத் தத்வங்களான தன்மாத்திரை 5-ம் அந்தக்கரணம் 3-ம் சேர்த்து இருவகை சரீரங்களையும் அமைத்துக் காவலாய் இருக்கும் செயலைச் செய்த அண்ணலின் பெருமையை யார் அறிவர்?

ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர் கைகளில் எட்டு சாண் இருக்கும் இந்த உடம்பில் கண், கால், கை ஆகிய அறுபத்தெட்டும், மறைத்தல் ஆகிய இரண்டும் தூல உடம்பில் இருப்பதால் அறுபத்தெட்டும் ஒன்று நட்பினால் சேர்கின்ற தன்மையைக் காத்தல், மறைக்கின்ற ஆகிய இரண்டும் தூல உடம்பில் இருப்பதால் அறுபத்தெட்டும் ஒன்று சேர்கின்ற தன்மைமாயமாக இருப்பதால் தூலமும் சுக்குமம் ஆகும். தூல உடம்பிற்கும் தூலமில்லாத பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய ஆகிய நாலும் உடம்பிற்கும் உயிராக விளங்குவதும் ஆன்மா. ஆன்மா பரத்தோடு ஒடுங்கும் பிரம்மம், உடல், உயிர் இரண்டிலும் கலந்திருப்பதை போன்று சிவன் ஐங்கோசங்களில் கலந்து தொழில் படுவதையும், இவ்வுடம்பை விட்டு நீங்கு முறைமையும் எப்படி பிரம்மம் உடல், உயிர் இரண்டிலும்

கலந்து நிற்கின்றதோ அதுபோல சிவன் ஐங்கோசங்களிலும் கலந்து நின்று தொழில்படும் அதனுடைய அனுபவத்தை பெறும்.

குண்டலி சத்தியும், சிவசத்தியும் ஆறு ஆதாரங்களில் பின்னிப்பின்னி அன்னமய கோசத்தைத் தாண்டி சகசரதளத்தில் சேரும்போது பிராணமைய கோசத்தின் தொழில் நின்றுவிடும். உடலை விட்டுத் தனித்து இயங்கும் கோசம் மனோமயம், விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் ஊறும் உடம்பு அன்னமயகோசம் உயிருடம்பு பிராணமய கோசம் ஊறும் உடம்பு உயிருடம்பை எண்ணுவது அன்னமய கோசத்தை பிராணமய கோசம் கருதி நடத்துகிறது. சிவன் பரிச உணர்வோடு கூடிய தூல உடம்பைக் கருதி நடத்துகிறது. இறைவன் திருவடிக்குள் சிவன் என்றுணரும் போது தூல உடம்பு அழிந்துபட்டு காட்சிக்கு இருக்காது. போர்க்குதிரை எப்படி போர்முனை சென்று விட்டு மீண்டும் இருக்கும் இடத்திற்கு வருகின்றதோ அதே போல சூக்கும உடல் பல காயங்களில் புகுந்து மீண்டும் பழைய இடத்திற்கே சென்று இயங்கும் தன்மை உடையது. சிவன் ஆணையால் உயிர் உடலை விட்டுப் பிரிந்து தானே செயல்படுகின்றது. தகுதிக்கேற்ப நல்வினை, தீவினைகளை சொர்க்க நகரங்களை அனுபவிக்கும்.

இந்த உயிர் உடலைவிட்டு விடுவது, எப்படி பாம்பு தன்தோலை உரித்துவிட்டு கண்டு கொள்ளாது போவதுபோல உயிர் உடலைவிட்டுச் செல்லுகிறது. அதுபோல சூக்கும உடல் தூல உடலைவிட்டுச் செல்கிறது. தூல உடலை விட்டு சூக்கும உடல் சொர்க்க நகரத்தின் பயன் தான் செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப அனுபவித்து அது முடிந்தவுடன் மீண்டும் சூக்கும உடல் தூல சூக்குமத்தில் வந்து பிறக்கும் என்றும், தூல உடல் உள்ளபோதே பரம்பொருளை அறிந்து கண்டவர்களுக்கு சொர்க்க நரகமில்லாது பிறவிப்பயனை மாற்றி அமைக்கும் வல்லமை உடையவராவர். ஞானி தான் செய்த ஞானத்தால் தன்னுடம்பு சிவதனுவாகும். காயம் அழிவுடையது. சிவதனு அழிவில்லாதது. சிவம் ஞானியின் உடலில் (காயத்தில்) இடம் கொள்ளுதலால் ஞானியினது காயம் சிவத்திற்கு உடம்பாகின்றது. எனவே 'உடலிடங் கொண்டாய் எந்தையே ஈசா' என்ற திருவாசக வரியை நினைவு கூர்தல் வேண்டும். யோகிக்கு ஒளியும் ஒலியும் சிரசின்மேல் சிந்தித்திருக்கும். எனவே யோகிக்கு ஒளி உடம்பாகும். மோனி எப்பொழுதும் மோன நிலையில் இருப்பவர். திருமூலர் மோனர். மோனிக்கு ஆணவம், கன்மம், மாயை மூன்றும் கெட்டு தூல உடம்பு செட்டு சிவசாயுச்சியம் பெறுவர். எனவே ஞானிகள் ஆணவம், கன்மம், மாயை நீக்கப் பெற்று சிவதனுவாகிய உடம்பைப் பெறுவர். மலத்தால் ஆன உடம்பை ஒதுக்காது இதுவே சிறந்தது

என்று எண்ணிக் கொண்டிருப்பர் அறிவிலிகள். ஞானிகள் பூதவுடலை விட்டு ஞான நெறியில் நிற்றல் பிறவிப் பயனை நீக்கி வாழ்வர். நல்லதையே நினைத்துப் பேசி செய்துக் கொண்டிருப்பர். சிவத்தை அடைவர். உலக இன்பங்களில் பேசிக் காலத்தைப் போக்குபவர் துன்பத்தை அடைவர். இன்பத்தைத் தருகின்ற பேச்சு ஒரு பயனும் தராது.

மனதை சிரசின்மேல் நிறுத்திச் சிந்தித்து பார்த்தால் உடல் நினைவு இருக்காது. நாம் மேற்கொள்ளும் விரதங்கள், அறங்கள், வாக்குத் தவறாமை இவையெல்லாம் உயிர்க்கு அல்லது உடம்பிற்கு எந்தப் பயனும் இல்லை. மலை போன்ற அசையாத சித்தம் சிவத்தை முன்னிட்டு சிந்தித்திருக்கின் ஆசைக் கடலில் அழுந்தாது. இவ்வுடல் ஒளிபெற்று வேதனை நீங்கி இன்பம் உண்டாகும் என்பர்.

திருமூலர்: எட்டாந்தந்திரத்தில் கூறிய தத்துவக் கருத்துக்கள் நாம் ஆசையில் சிக்கி அலைபட்டு பேரின்பத்திற்குத் தடையாக இருக்கும் சிறுமைகளை விலக்கினால் பூதவுடல் ஒளியுடலாக மாறும் என்று உலகாய உதாரணங்களையும், நடைமுறை உதாரணங்களையும் கூறி உடலில் பஞ்சபேதம் பற்றியும் அதனால் உடல்விடல் பற்றியும் கூறியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

73. கீழாலவத்தை, மத்திய சாக்கிரவத்தை, அத்துவாக்கள்

பெரும் புலவர். **வீ. தமிழ்ச்சேரனார்** *எம்.ஏ.,*
அம்மாப்பேட்டை

திருமந்திரம் அண்டத்தைப்பற்றியும், பிண்டத்தைப் பற்றியும் எடுத்துரைக்கும் ஓர் அற்புதமான, தத்துவ நூலாகும். அண்டம் என்ற சொல் பிரபஞ்சம் என்பதாகும். பிண்டம் என்பது உடல் ஆகும். அவத்தை என்பது நிலை என்ற பொருளுடையது. உடம்பு இருபத்து நான்கு தத்துவங்களால் ஆன ஓர் மாயப் பொறியாகும். ஆன்மா என்பது இவ்வுடலாகிய மாயப் பொறியை உள்ளிருந்து கொண்டு இயக்கி வருகின்றது. ஆன்மாவை, வளர்ச்சி பெற்ற உயிர் என்று சொல்லலாம். நீண்ட காலமாக, இவ்வுடலில், உயிர் எங்கே உள்ளது என்ற கேள்வியைப் பலர் கேட்டு வந்தனர். இதற்குத் திருமூலர் தெளிவாக விடை தருகின்றார். நம் உடலில் உள்ள உயிர், நெற்றியின் நடுவில் புருவமத்தியிலிருந்து, கீழே மூலாதாரம் வரை பிரயாணம் செய்கின்றது. பிரயாணத்தில் ஐந்து இடங்களில் தங்கும். இதையே உயிரின் அவத்தை நிலை என்பர். இது, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து நிலைகளில் சாக்கிரம் என்ற விழிப்பு நிலையில், உயிர் புருவமத்தியில் நிற்கும். இந்த நிலையில் 35 தத்துவங்கள் செயற்படுகின்றன. அவை முறையே, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, அவற்றின் செயலாகிய ஐம்புலன்கள் 5, கன்மப்புலன் 5, தச வாயுக்கள் 10, அந்தக்கரணம் 4, புருடன் 1 ஆக இந்த 35 தத்துவங்களுடன் உயிர் புருவமத்தியில் நிற்கும் நிலையே; சாக்கிரம் என்னும் விழிப்பு நிலை. பின்னர், உயிர் கண்டத்தில் நிற்கும் நிலையே கனவு நிலையாகும். இதை சொப்பன நிலை என்பர். பொறிகள் 10 நீங்கிய நிலையில், 25 தத்துவங்கள் தொழிற்படும்.

பின்னர் உயிர் இதயத்தானத்தில் நிற்கும் நிலையே சுழுத்தியாகும். உறக்கம் என்ற நிலை. இங்கே உயிரும், உள்ளமும் செயற்படும். துரியம், நாபி அல்லது கொப்பூழ் என்ற இடத்தில் உயிர் நிற்பதாகும். இது பேருறக்கம் ஆகும்.

உயிர் அடங்கி, மூலாதாரத்தில் நிற்கும் நிலையை துரியாதீதம் அல்லது உயிர்ப்படக்கம் என்பர். இவ்வாறு உயிர் மேற்கொள்ளும் கீழ்நோக்கிய பயணத்தையே *கீழாலவத்தை* என்று திருமூலர் கூறுகின்றார்.

ஐம்பூதங்களின் நிறத்தைப்பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். பார் என்னும் பூமி பசுமை, பொன்மை நிறம் உடையது. நீர் வெண்மை நிறம், நெருப்பு செம்மைநிறம், காற்று கருமை, வான் புகை நிறம். ஐம்பூத தத்துவங்களால் ஆயது உடல். இதில் 36 தத்துவங்களும், 60 தாத்து விகங்களும் அடங்கியுள்ளன.

ஆணின் உடம்பும், பெண்ணின் உடம்பும் உடனுறைவு செய்வதால் புதிய உடம்பு ஒன்று உயிருடன் வருகின்றது. உடம்பில் உயிர் இருக்குமிடத்தை அறியாமல் பலர் பலவாறு உரைப்பார்கள். அவர்களைத் திருமூலர் *மடம் புகு நாய்* என்று பழித்துரைப்பர்.

அசபை என்னும் நடனம் நம் உடம்பில் நடைபெறுகின்றது. ஹம், ஸம் என்ற ஒலியுடன் மூச்சை வெளிவிடுவதும் இழுப்பதுமாக இருக்கின்றோம்.

முன்னிக் கொருமகன், மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர், வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர் முனாளில்லை
கன்னியைக் கன்னியே காதலித் தானே - திருமந்திரம்

முன்னிக்கு ஒரு மகன் என்பது முதற்பூதமாகிய ஆகாயத்திற்கு ஓசை என்ற மகன் ஒருவன் உண்டு என்பதாகும். அதன்பின் வந்த காற்றுக்கு ஓசை, ஊறு என்று இரண்டு மக்கள் உளர். வன்னி என்ற நெருப்புக்கு, ஓசை, ஊறு,ஒளி என்ற மூவர் மக்களாவர். வதுவை என்ற காற்றுக்கு, ஓசை, ஊறு,ஒளி, சுவை என்ற நான்கு மக்கள் உள்ளனர். கன்னியாகிய பூமிக்கு, ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்து மக்கள். ஐம்பூத உண்மையை உணர்ந்தோர், ஆன்மாவின் உண்மையை உணர்ந்தவராவர்.

ஊமை எழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சு மடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே -திருமந்திரம்

ஆன்மீக உலகத்தில் சில பரிபாஷைச் சொற்கள் வழங்கி வருகின்றன. திருமூலர், தாம் கூற வந்த கருத்துக்களிற் சில பூடகப் பொருள் கொண்டுள்ளன.

சி என்ற எழுத்தை சித்தருலகம் ஊமை எழுத்து என்று கூறும். *வா* என்ற எழுத்து பேசும் எழுத்தாகும். சிவா, சிவா என்று யோக நிலையில் அமர்ந்து, மந்திரம் செபிப்பானாயின், அவனிடம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களும் அடங்கும். பின்னர், ஓம் சிவாய என்ற மந்திரத்தின்

பூரணப் பலனை உடல் பெற்று, ஒளிமயமாகிப் பிரகாசிக்கும். அப்போது நாம் என்னும் தன் முனைப்பு நீங்கி, சீவன் சிவத்துடன் கலக்கும். இதையே அத்வைத நிலை என்று தத்துவநூல்கள் கூறுவ. இந்த நிலையை எய்தியவர் பேரின்ப நிலையைப் பெறுவர்.

கீழால அவத்தையில் தன்னை மறந்து மானுடன் துயில்வான். போக நிலையில் உள்ள எல்லா மானுடரும் இந்த நிலையை எய்துகின்றார்கள். ஆனால் ஞானிகள் யோக மார்க்கத்தில் இருப்பதால், தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் நிலையை எய்துவர். இஃது ஓர் அரிய நிலையாகும்.

ஆசான் முன்னே துயில் மாணவகரைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய வீசனும் நீடாணவத்தரை
ஏசாத மாயாள் தன்னால் எழுப்புமே -திருமந்திரம்

உயிர்கள் கேவலநிலையில், தன்னையுமறியாது தலைவனையும் அறியாது ஆணவமலத்தால் மூடுண்டு கிடப்பதை ஆண்டவன் காண்கின்றான். இது ஓர் உறக்க நிலையாகும். உடம்பை எடுக்காது உயிர் தனித்திருக்கும்போது கூண்டுப்புழுப்போல ஆணவத்தால் மூடப்பட்டுள்ளது. வகுப்பில் தூங்குகின்ற மாணவனை ஆசான் பிரம்பால் அடித்து எழுப்புவது போல, மாயை என்ற பெண்ணைக் காட்டி கடவுள் எழுப்புகின்றார். ஆம் - உயிருக்கு, உடல், உறுப்புகள், உலகம் நுகர்ச்சி என்ற பொருள்களைத் தந்து சிறிது விழிப்புறச் செய்கின்றார். இந்த நிலையில், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஏழு ஆன்ம தத்துவங்கள் உண்டாகின்றன.

மத்திய சாக்கிர அவத்தை

மேலால் அவத்தை ஐந்து உண்டென்று ஞானிகள் கூறுவர். சாக்கிரம் என்ற விழிப்பு நிலையில் புருவமத்தியிடை நிற்கும் மேல் நோக்கிச் செல்லும் நிலையாகும்.

மேலாவத்தை என்பது, உயிர் நெற்றியின் புருவமத்தியிலிருந்து மேல் நோக்கிச் செய்யும் பயணம். விழிப்பு நிலையில் இருந்து கொண்டே அதீதத்தில் ஞானிகள் செல்வர். இவர்கள் உடலுபாதையை மறந்து, தவ நிலையில் நிற்கும் மேலோர்கள் ஆவார்கள். மனிதன் விலங்கு நிலையிலிருந்து விடுபட்டு வளர்ச்சி பெறுபவன்.

சாக்கிரத்தில் சாக்கிரம் திரோதாயி

இதில் ஞானிகள் பரத்திலே லயித்திருப்பர். சகம் என்ற உலகம் அவர்களுக்குத் தோன்றாது. தோன்றாமல் இருக்கச் செய்வது திரோத மாயை என்பதாகும். இதையே ந என்று பஞ்சாட்சர மந்திரத்தில் கூறுவர். சாக்கிரத்தில் சொப்பனம், இதில் அரிய காட்சிகள் தென்படும். சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் என்பவை இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையாகும். இவர்கள் இறப்பின்றி நெடுங்காலம் வாழ்வார்கள்.

96 தத்துவங்களைப் பொதுவானவை என்று சிலர் சொல்லுவர். ஆனால் சைவர்கள் 36 தத்துவங்களைப் பற்றிக் கூறுவர். வைணவர்கள் 24 தத்துவங்கள் உண்டு என்பர். தத்துவங்களை உணர்ந்து கொண்டால், ஞானிகளாக மாறிப் பல காலம் வாழலாம். உலகத்தை இயக்குவது உயிர்தான். எனவே உயிர்நிலையினை உணர்ந்தவன் ஞானி. சாக்கிரத்தில் மேனிலை கண்டவர்கள் சாகாதிருப்பர்.

அத்துவாக்கள்

அத்துவா என்றால் வழி என்று பொருள்படும். இந்த அண்டம் எப்படி வந்தது என்றால், அதுவந்த வழியை உரைப்பது அத்துவாக்கள் ஆகும்.

உலகம் சொல்லுலகம் என்றும் பொருள் உலகம் என்றும் இருவகையாகப் பகுக்கப்படும்.

அத்துவாக்கள் ஆவன 6, வன்னம், பதம், மந்திரம், புவனம், தத்துவம், கலை என்ற ஆறினையும் அத்துவாக்கள் என்பர். வன்னம் என்றால் எழுத்து எனப்பொருள்படும். பதம் என்றால் சொல் எனப் பொருள் படும். மந்திரம் என்பது மனனம் செய்யப்படுவது.

மனித உயிர், வினையை நுகர்வதற்கு இவை ஆறும் வழிகளாகின்றன.

எழுத்து- 51 ஆகும். பதம் 81.
மந்திரம் 11. புவனம் 214
தத்துவம் -36. கலை 5.

இவை சைவ சித்தாந்தம் கண்ட கணக்காகும். பாசத்தில் கட்டுண்ட உயிர், மாயையின் காரியமாகிய அத்துவாக்களின் கட்டுப்பட்டுள்ளன. இந்த சாக்கிரவமாதி உடம்பினாற் கண்டு அனுபவிப்பவர்கள், சிவபெருமானுடைய தாண்டவ தரிசனத்தை நித்தம் திரிசித்து சிவ உபாதை மாறி சிவமாகவே விளங்குவர் என்பது திருமூலருடைய அறிவிப்பு ஆகும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

74. சுத்த நனவாதி பருவம்

புலவர். **தி.சு. மலையப்பன்** எம்.ஏ.,எம்.எட்.,
புதுக்கோட்டை

தமிழில் தோன்றிய முதல் யோக நூல் திருமந்திரம். இதை இயற்றிய திருமூலரே முதல் சித்தன் என்பர். ஒன்பது தந்திரங்களை உள்ளடக்கிய நூல் திருமந்திரம்.

அருளாளர்கள் மொழிவன எல்லாம் மந்திரங்கள். நினைப்பவர்களை காப்பது மந்திரங்கள். மந்திரங்களைச் சொல்வதைக் காட்டிலும் நினைப்பதற்கே ஆற்றல் அதிகம். மந்திர மொழிகளை வழங்கியவர்களை *நிறைமொழி மாந்தர்* என்பார் தொல்காப்பியர்.

சைவ சமய நூல்களைத் தோத்திரம் சாத்திரம் என இருவகையாகப் பகுப்பர். தோத்திரம் அன்பின் அடிப்படையில் எழுதுவது. சாத்திரம் அறிவின் அடிப்டையில் எழுதுவது. இறைவனது கருணைப் பெருக்கால் நடைபெறும் ஐவகைத் தொழில்களையும் போற்றிப் புகழ்ந்து கசிந்து உருகிப் பாடுதல் தோத்திரம் எனப்படும். அன்புடையார் அறிவுமிகுதிப் பாட்டால் இறைவன் பெருமைகளையும் உயிர்களின் சிறுமைகளையும் உலக இயல்புகளையும் ஒக்க ஆய்ந்து திருவருள் வலிமையால் கடைத்தேறி அருளிச் செய்தவையே சாத்திரமாகும். எனவேதான் அப்பர் பெருமான் 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார்' என இறைவனைப் பாடினார்.

சைவத் திருமுறைகளில் பத்தாம் முறையாக வைத்துப் போற்றப்படுவது திருமூலர் இயற்றிய திருமந்திரம் ஆகும்.

தேவதைகளை வசப்படுத்தித் திருப்தி செய்து நம்பால் இழுப்பதால் தைரியம், தோற்றப் பொலிவு முதலியவை கூடி இடர்ப்பாடு களையப்பட்டு இச்சைகள் நீங்குகின்றன.

ஐந்து பிரம்ம மந்திரங்களும் ஆறு அங்க மந்திரங்களும் ஆக பதினொன்று மந்திரங்கள் என்று கூறும் திருமுறை கண்ட புராணம். அதில் 10 -வது மந்திரம் நேத்திரமாக உள்ளது. எனவே 10 ஆம் திருமறை கண்ணுக்கு (நேத்திரத்திற்கு) ஒப்பாகக் கருதப்படுகிறது. இறைவனுக்கு முக்கண் இருப்பது போல ஒவ்வொரு வரியிலும் மூன்று கண்களும் உண்டு. மூன்றாவது கண் யோக முயற்சியால் திறக்கப்படத்தக்கது.

உடலில் உள்ள குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்து தலையில் உள்ள பராசக்தியோடு அமுதக் கலவையைப் பருகி சிவயோக நெறியை வளர்த்துக் கொள்ள வழிகாட்டுவது திருமந்திரம். இதில் ஒன்பது தந்திரங்களின் 3000 பாடல்கள் அடங்கியுள்ளன. முதல் நான்கு தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் உணர்த்துகின்றன. 5 முதல் 9 தந்திரங்கள் வீடுபேறு, அதனை அடையும் வழி, வழிபாட்டுக்குரிய உறுதி, பயன், அதனால் பெறும் வாழ்வு ஆகியவற்றை உணர்த்துகின்றன. முதல் தந்திரத்தில் உயிர்களுக்கு வாழ் முதலாய் இருப்பவன் இறைவன். அவன் அருள்பெற ஏதுவாகிய அறநெறிகளில் நின்று வாழ்வாங்கு வாழ்வும், இரண்டாம் தந்திரத்தில் அவனை அடைதலே பிறவிப்பயன். அதனை அடைய கருணை வழி மெய்ப்பொருள் சிவபிரான் நிகழ்த்திய அட்டவீரட்டச் செயல்கள் முதலியனவும், மூன்றாம் தந்திரத்தில் பெருமானை அடையத்தக்க மோட்ச சாதனங்களையும், நான்காம் தந்திரத்தில் மந்திர, இயந்திரங்களில் வைத்து *சிவாய நம* எனும் ஐந்தெழுத்தைப் போற்றும் வகையின் சிறப்பு பற்றியும்,

ஐந்தாம் தந்திரத்தில் நால்வகை சைவ நெறிகளையும் அவற்றால் அடையும் பயன்களையும், ஆறாம் தந்திரத்தில் குரு அருள்பெற்று திருவடிப்பேறு பெற வழியும் அதற்கு ஏதுவாக துறவு, தவம் பற்றியும் சிவபெருமானே குரு என்னும் திருநீற்றுப் பெருமையையும், ஏழாம் தந்திரத்தில் அக வழிபாடு, புறவழிபாடு, குருவழிபாடு, இலிங்கவழிபாடு, அடியவர் வழிபாடு ஆகியவற்றையும், அதன் பயனையும், உயிர்கள் உய்வதற்குரிய ஐம்புல அடக்கமும் கூறுகிறது.

எட்டாம் தந்திரத்தில் உடம்பின் வகைகள் உடம்பு அவத்தையால் அழிவது வீட்டின்பத்திற்கு அனுக்கராம் தன்மை அதனை அடையும் வழிபற்றியும்,

ஒன்பதாம் தந்திரத்தில் ஐந்தெழுத்தின் உண்மைகள், அவற்றின் பயன். வீட்டின்பச் சிறப்பு ஆகியவற்றைக் கூறி எங்கும் நிறைந்த இறைவனைப் போற்றி முடித்துள்ளார்.

உயிர் தனது உணர்வு விடுபட்டுச் சென்று திருவருள் காட்சியில் தோய்கின்ற நிலையை எட்டாம் தந்திரத்தில் சுத்த நனவாதி பருவத்தில் 40 பாடல்களில் பொதிந்து தந்துள்ளார்.

உடம்போடு கூடி நிற்கும் பொழுதே திருவருள் வயப்பட்டு நிற்பது சுத்தம் எனப்படும். தம்மால் உணரப்படும் பொருளையும் தம்மையும் வேறு வேறாக அறிந்து அந்த அளவில் அனுபவிக்கும் உணர்வு உடையவராவர்.

ஆணவம், மாயை, கன்மம் என்பன அரிசிக்கு முளை, தவிடு, உமி இவை போல. எனவே பாசங்களில் பற்றுக் கொள்ளாது பதியாகிய சிவனைப் பற்றி இன்புற வேண்டும். பல்வேறு நிறம் பெற்றிருப்பினும் பசுக்கள் தரும் பால் வெண்மை நிறமுடையது. அப்பசுக்கூட்டத்தை மேய்ப்பவன் ஒருவனே. மேய்ப்பவன் பசுக்களை மேய்க்காமல் அதன் இச்சைப்படி விட்டால் அவை அலைந்து திரிந்து அல்லல்படும். உடம்பு ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், அந்தகரணங்கள் ஆகிய இயல்பினை அறியாமையால் நரகக்குழி வீழ்ந்து நாசமடைகின்றன.

முப்பத்தாறு தத்துவங்களில் இருபத்து நான்கு ஆன்மதத்துவம், வித்யாதத்துவத்தின் புருடதத்துவம் ஒன்றும் ஆக இருபத்தைந்து தத்துவங்களையும் ஆன்மா தன்னில் வேறாகக் கண்டு நீக்குதலே சுத்த சாக்கிரமாகும். சடத்தன்மை சிறிதும் இன்றி தூய அறிவாய் நிற்கின்ற ஆன்மா, சிவன் அருளை மறவாது தொடர்ந்து அவ்வருள் வழியே அவனை உணர்த்தி நிற்குமாயின் தூய்மை கெடாது உயர்நிலை கைகூடும்.

சிவதத்துவம் ஐந்தும் வித்தியா தத்துவம் ஏழும் ஆன்மாவை விட்டு எப்போதும் நீங்கா நிற்கும். பாச அறிவை நீக்கி நிற்றல், தத்துவசுத்தி எனப்படும். பதியறிவை நாடி அதனை அறிந்து ஆன்மா அதன்வழி நிற்றல் சிவதரிசனம், சிவயோகம் ஆகும்.

முதல்வன் அருளால் மலம் நீங்கப் பெற்று பொருளியல்புகளை உள்ளவாறு உணர்ந்த உணர்வுடையார்களுக்கு பிறிதொரு பொருள் புலனாகாது. இறைவன் உயிர்களின் உயிராயும், உருவமும் அருவமும் ஆகிய பொருளாகவும், பொருளை அறிகின்ற அறிவாகவும், சக்தியும் சிவமுமாக இயங்காவிட்டால் உயிர்கள் உயிரிலாப் பொருள்கள் மூடர்களாய், சூனியமாய் ஒழியும். இறைவன் திருவருள் உடனாய் நிற்கவே ஆன்மா செயல்படுகிறது.

செம்பில் களிம்பின் கலப்புப்போல நம் ஆன்மாவை மலம் பற்றியிருக்கிறது. களிம்பை நீக்கிய செம்பு பளிச்செ்ன விளங்குவது போல சிவக்கலப்பால் மலம் நீங்கப் பெற்று மாண்பினைப் பெறலாம். அவா, ஆசை, கோபம் முதலியவற்றை நீக்கி ஐம்பொறிகளை அடக்கியும் வாழ்ந்தால் சிவனருளைப் பெறமுடியும். யானை தன் பாகனைச் சுமப்பது போல சிவன் எனும் *ஆனை* அடியார்களாகிய பாகர்கள் சுமப்பார்.

யோக முறையில் முதல் மூலாதாரம் அக்னி மண்டலமாகி மற்றைய மூன்று ஆதாரங்கள் ஞாயிற்று மண்டலமாயும், ஏழாந்தானம் திங்கள் மண்டலமாகவும் கொள்ளப்படும்.

விடியல் வராத பொழுதும் சில பறவைகள் விடியல் வந்ததாகத் தவறாகக் கருதிக் கொண்டு ஆரவாரம் செய்வதைப் போல உயிர்கள் தம்மை நோக்கித் திருவருள் கிட்டாத நிலையிலும் பொய்யை *மெய்* எனக் கொண்டு மயங்குகின்றன.

உலக முதல்வன் யார் என ஆராய்ந்து அவன் அருளை என்பால் வருவிக்கும் வழியறிந்து, அவ்வழி செயல்பட்டு அவனை மனத்தில் நிலையாக நிற்கச் செய்தேன் என்பர் உறுதி பற்றி நிற்போர். ஒளி தரும் விளக்கை ஏற்ற வேண்டிய இடத்தில் ஏற்ற வேண்டிய முறைப்படி ஏற்றி வைத்தலே இறைவனை அடையும் வழியாகும்.

யோக வித்தையை முறையாகக் கற்று புருவ மத்தியில் நாடியை நிறுத்தி அகக்கண்ணாம் ஞானக் கண்ணைத் திறந்து ஐம்புலனசைவை ஒடுக்கி வெட்ட வெளியில் சிவனைக் கண்டு மகிழ்தலே வாழ்வின் பயன். பாசமென்னும் பசுவை நீக்கி பதியை அறிவோரே பாக்கியவான்கள்.

உயிர்கள் சீர்மையோடு செயல்பட்டால் படிப்படியாய் உயர்ந்து இறைகாட்சியைக் காணலாம். திருவருள் பேறு பெற்றும் மூவாசைகளை முற்றும் துறந்தும் பேரின்ப வீட்டிற்குச் செல்ல வழிகண்டு மகிழ்பவரே மனிதர்.

காலினில் ஊறும், கரும்பில் வெல்லக்கட்டியும் பாலினுள் நெய்யும், பழத்தில் சுவையும், பூவின் நாற்றமும் போல இறைவன் எங்கும் எப்பொருளிலும் நீக்கமற நிற்கின்றான். தெளிந்த அறிவால், ஞான மார்க்கத்தால் மும்மல நீக்கத்தால் மேலான பரம்பொருளைக் கண்டு உய்வோம். உயர்வு பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

75. கேவல சகல சுத்தம்

திருமுறை இன்னிசை மாமணி, திருமதி. சுவர்ணா சோமசுந்தரம்
கோயம்புத்தூர்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

என்பது திருவருட்பயன். தன் நிலைமையாகிய சுத்த நிலையை உயிர்கள் பெற வேண்டும் என்பது அருளே திருமேனியாக உள்ள இறைவனின் இச்சை. உயிர்கள் இருக்கும் நிலைமையை உள்ளவாறு தெரிவது உயிர்களுக்கு உயிர்க்கு உயிராய் அறிவுக்கு அறிவாய் விளங்கும் ஞானசக்தி. உயிர்களை ஈடேற்ற இறைவனின் கிரியா சக்தி ஓவாது துணை புரிந்து கொண்டே இருக்கிறது.

அனாதி கேவலத்தின் உயிர்கள் காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக்குழவி போல் இருந்தன. 'அறிவிலன் அமூர்த்தன் அராகாதி ஒன்றும் இல்லான்' என்று சித்தியாரில் கூறப்பட்டது போல் இயங்குவதற்கு ஓர் உடல், கருவி கரணம் ஒன்றும் இன்றி ஒரு பயனும் இன்றி இருந்த நிலை கேவல நிலை. ய+ம = கேவல நிலை.

குருடனுக்கு கோல் கொடுத்தது போல ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள பிறவிகளில் தட்டுத் தடுமாறித் தன் பயணத்தைத் தொடர்கிறது உயிர். அறியாமையை விளைவிக்கும் ஆணவம் என்னும் நோய்க்கு உடலே மருந்தாக அமைகிறது. நாம் செய்வதாக நாம் நினைத்துச் செய்யும் வினைகளும், வினைப்பயன்களும், வினைப் புசிப்புகளும் சிகிச்சை (treatment) ஆகிறது. வைத்தியர்- பவரோக வைத்திய நாதப்பெருமான். சிகிச்சை நடக்கும் காலம் சகல நிலை. சகல நிலையில் சகல விதமான கருவிகளும் உயிரைப்பற்றி சகல விதமான வியாபாரங்களும் நடைபெறும். ய+ ந = சகலநிலை.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே

என்பது திருமந்திரம். *தீதும் நன்றும் பிறர் தர வாரா* என்பது சங்கநூற் செல்வர் தந்தருளியது. இனி சுத்த நிலை என்பது,

பொய்யான போதாந்தம் ஆறாறும் விட்டகன்று
எய்யாமை நீங்கவே எய்தவன் தானாகி
மெய்யாஞ் சராசரமாய் வெளிதன்னுட்புக்கு
எய்தாமல் எய்தும் சுத்தாவத்தை என்பதே.

ஆறாறையும் நீத்து அதன் மேனிலையைப் பெறா அடியேன் பெறுமாறுளதோ என்று அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் அருளியவாறு நாம் கேட்க வேண்டிய வரமாகும். 36 கருவிகளால் நாம் பெறுவது மயக்க உணர்வே. ஆகவே, கருவிகள் அனைத்தும் இருந்தும் கரணங்களாற்படும் ஏகதேசக் காட்சிகளில் தான் தோயாது அக்கருவி கரணங்கட்கு வேறாய் வியாபக அறிவுள் ஒடுங்கினாலன்றி பொற்புறு கருவி யாவும் புணராத உண்மையைப் பெறுதற்கரியது. கேவலத்தில் கலாதி முதலிய பத்தும் இல்லை. சகலத்தில் பத்தும் உண்டு.

சுத்த நிலையில்,

1. காலதி 2. குணாதி 3. இச்சை 4. ஞானம் 5. கிரியை 6. உருவம் 7. முதன்மை 8. போகப் பற்று 9. அறிதல் தொழில் உண்டாதல், ஒடுங்குதல் 10. சுட்டுணர்வு. ஆகிய பத்தும் இருந்தும் இல்லாத நிலை.

சுத்தாவத்தை

விபரீத ஞானத்தை, மயக்க உணர்வையே தருகின்ற முப்பத்தாறு தத்துவங்களின்றும் விடுபட்டு, போய் மறுபடியும் ஆணவ மலம் வந்து பற்றுதலாகிய கேவலத்தில் வீழாமல் மெய்யறிவுடன் எல்லாப் பொருளிலும் ஒப்பில் அருள் விளங்குவதைக் கண்டு சிவத்துண்மை உணர்ந்து நினையாமல் நினைந்திருப்பதாகும்.

'இன்றெனக்கருளி' என்ற திருவாசகத்தின் இதயப் பாசுரத்தை உள்ளபடி அனுபவிப்பதே வேண்டத்தக்கது.

அவத்தை என்ற தலைப்பில் உள்ள திருமந்திரங்களின் பிழிவாக ஒன்றைக் கூறலாம். சகல நிலையில் சாக்கிர அவத்தையில் அனைத்துக் கருவிகளுடன் உள்ள ஆன்மா கீழே சொப்பனம் முதல் துரியாதீதம் வரை செல்வது கீழாலவத்தை என்றும் கீழே இருந்து மேலே வருவதை மேலாலவத்தை என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

போவதும் வருவதும் அவத்தை ஆகா. இதில் உடலுக்கும் கருவி கரணங்களுக்கும்(rest) இளைப்பாறும் நன்மை கிடைக்குமே தவிர அறிவு வளர்ச்சிக்கு இடமில்லை. அதே போல மத்தியாலவத்தையிலும் அதிர்ச்சிக்கு

ஆளாகும் ஆன்மாவுக்கு மூர்ச்சை வரை வந்து அறிவு வளர வாய்ப்பே இல்லை.

குருவருளைப் பெற்று நின்மல அவத்தைக்கு வந்த ஆன்மா தூங்காமல் தூங்கி சுகம் பெறத் துவங்குகிறது.

ஓங்குணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத்
தூங்குவர் மற்றேதுண்டு சொல்

என்ற திருவருட் பயனே நாம் பெற வேண்டிய நிலை.

ஓங்குணர்வு- பசு ஞானம் சிவஞானமாய் நிற்றல்

உள்ளம் - ஜீவன் முக்த் நிலையை அடைந்த ஆன்மா

இன்பு ஒடுங்குதல்- அந்த ஆன்மாவினுள் சிவானந்தம் ஒடுங்குதல்

தூங்குதல்- ஒடுங்கினோம் என்ற போதமும் ஒழிதல் வகாரத்துள் யகாரம் அடங்கி அதனுள் சிகாரம் ஒடுங்க; அந்நிலையை உணராது சுத்தமாய் நிற்பர். ஆண்டு இன்பத் துயிலன்றி வேறு பேச்சு யாதுளது?

ஞாதுரு - ய ஞானம்- வா நேயம் -சி

நின்மல சாக்கிரம் (சாக்கிரத்தினில் ஐந்து)

நின்மல சாக்கிரத்தானமாகிய இருதயத்திலே சிவ சக்திகளினது யோகத்தினாலே அகார, உகார, மகார, விந்து, நாதம் ஆகியவை கூடிய மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் எனும் ஐந்துடனும் கூடி நின்று, புறக்கரணங்களினாலே காணப்பட்ட சத்தாதி பிரபஞ்சத்தை (சப்த, ஸ்பரிஸ,ரூப, ரஸ, கந்தம்) அனுபவிக்கும் உலகத்தை எல்லாம் சிவாகாரமாகவும், விஷய சுகங்களைச் சிவானந்தமாகவும் கண்டு நிற்பது நின்மல சாக்கிரம்.

நின்மல சொப்பனம் (கனவினில் நான்கு)

சாக்கிர அவத்தைக்குக் காரணமாகிய அகாரம், உகாரத்தில் லயிக்கும். அகங்காரம் புத்தியில் லயிக்கும். புத்தி முதலாய மூன்றும் அவற்றை இயக்கும். மகார, விந்து, நாதம் ஆகிய மூன்றும் சுழுத்தித் தானமாகிய நாவின் இருபக்கத்தின் அடியிலும் (தாலுமூலம்) நிற்கும். அப்பொழுது உடல், கருவி, செயல் ஒழிந்து மனம் வாக்குக்கு எட்டாத ஞேய, ஞான, ஞாதுரு என்னும் மூன்று வகை (திரிபுடி) ஞானமாகி நிற்பது நின்மல சுழுத்தி.

ஞேயம் - சிவம் - சி- காணப்படுபொருள்

ஞானம் - (வ) - காட்சி

ஞாதுரு - ய- காண்பான்

சிவய

நின்மல துரியம் (துரியம் இரண்டு)

நான்காம் நிலை இது.

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடில்
நாலாம் நிலை என்று உந்தீபற
நாதர்க்கு இடம் அது என்று உந்தீபற - திருவுந்தியார்.

சுழுத்தி அவத்தைக்குக் காரணமாகிய மகாரம் விந்துவில் ஒடுங்கும். நிச்சயித்தலைச் செய்யும் புத்தி சித்தத்தில் லயிக்கும். சித்தம் முதலாகிய இரண்டும் அவற்றைத் தொழிற்படுத்தும். விந்து, நாதம் ஆகிய புருவ மத்தியிலே உடல், இந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள் இல்லாமல் ஞானம் மாத்திரமாய் நிற்பது நின்மல துரியம்.

சிவ- வசி

யகாரம் வகாரத்தில் ஒடுங்கி நிற்றல்

நின்மல துரியாதீதம் (துரியாதீதத்தில் ஒன்று)

ஓங்கு உணர்வு அகத்தடக்கி, உளத்தில் இன்பு ஒடுங்க நேரே
தூங்குபவர் தாங்கி ஏகத் தொண்மையில் துகள் இலரே
-சிவப்பிரகாசம்

நேயத்து: முதல்வன் காட்டியும் கண்டும் உபகரித்து வரும் பேருதவியை மறவாது கைப்பிடித்து ஓங்குணர்வு அகத்தடங்கி; இவ்வாறு கடைப்பிடிப்பதற்கு நிலைக்களமாய் எவ்விடமும் நிறைந்த பராசக்தியின் இடத்துத் தமது ஞானக் கிரியைகள் அடங்கி

உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குபவர் இன்பத் துயிலில் ஆழ்வர்.

அணைந்தோர் நிலைமையை அடைந்த ஆன்மாவினுள் சிவானந்தம் ஒடுங்கும். அந்த சிவானந்தத்தில் ஒடுங்கினோம் என்ற போதமும் ஒழிந்து வகாரத்துள் சிகாரம் ஒடுங்கும். அந்நிலையையும் உணராது. அதீதமாய் நிற்பதே இன்பத்துயில்.

சும்மா இரு சொல்லற என்றலும் அற்று
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே. - கந்தரனுபூதி

இந்த சுத்த நிலையில் நிற்கத் திருவருள் நிறைக!

வாழ்க திருமூலர்! வளர்க திருமந்திர நெறி.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

76. பராவத்தை

கவிஞர். அகத்தீஸ். மு. உடையப்பன்
தேவகோட்டை

பாடல்: 1

அஞ்சும் கடந்த அனாதி பரந்தெய்வம்
நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந்தேனே.

பொழிப்புரை

சிவ தத்துவமாகிய ஐந்தையும் கடந்த நிலையிலுள்ள அனாதியான பரனே தெய்வமாகும். இதுவே எல்லோரது மன மண்டலத்தில் பொருந்தியதாய் மலமற்றதாய் பிறப்பில்லாததாய் உள்ளது. இஃது அகண்ட பொருளான படியால் உடலினுள் இருந்த உயிரை வேறுபடுத்துவதற்காக மறைந்திருந்த உண்மையை நான் அறிந்தேன்.

நயஉரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

பராவத்தை என்றால் சக்தியோடு ஒன்றிய நிலை என்பது பொருள். ஐந்து மலங்களை கடந்தவன். அனாதி ஆனவன். பிறப்பு இறப்பு அற்றவன் உயிரையும், உடலையும் வேறுபடுத்தி உயிரை சிவனோடு பொருந்தி இருக்க, என்னை திருத்தி அருள என்னுள்ளே மறைந்திருக்கும். அவனுடைய வஞ்சகத்தன்மையை நான் அறியப் பெற்றேன்.

பாடல்:2

சத்தி பராபரம் சாந்தி தனிலான
சத்தி பரானந்தம் தன்னில் சுடர்விந்து
சத்திய மாயை தனுச்சக்தி ஐந்துடன்
சத்தி பெறுமுயிர் தான் அங்கத்து ஆறுமே

பொழிப்புரை

பராசக்தியே சுத்தமாயை அசுத்த மாயையில் விரவித்தன்னிலை கெடாத சாந்தி கலையில் உள்ளது. மேலான ஆனந்த நிலையில் அச்சக்தி ஒளிமயமாய் உள்ளது. அச்சத்தியே அசுத்தமாயையில் பொருந்தி உடம்பில்

சக்திகளாகிய ஐந்துடன் சீவன் உடம்பால் பெறும் பயனுக்குக் காரணமாயும் உள்ளது. பராசக்தி சீவனுக்குச் செய்யும் உபகாரம் கூறியவாறு.

நயஉரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

சக்தியின் வடிவத்திற்கு பெயர் பராபரம் ஆகவே விருப்பு, வெறுப்பு அற்ற அமைதியின் இருப்பிடம் சத்தி ஆற்றல் ஆனந்தம் ஆகும். இதனால் சத்தி ஒளிவடிவமாகத் திகழும் இந்த சக்தி தான் மாயையுடன் பொருந்தி உடம்பிற்கு ஐந்து வகையான செயல்களைச் செய்யும் ஆற்றலைத் தருகிறது. இதுவே உயர்ந்த நல்வாழ்வுக்கு வழி செய்யும் பாதை.

பாடல்: 3

ஆறாறுக்கு அப்பால் அறிவார் அறிபவர்
ஆறாறுக்கு அப்பால் அருளார் பெறுபவர்
ஆறாறுக்கு அப்பால் அறிவாம் அவர்கட்கே
ஆறாறுக்கு அப்பால் அரன் இனிதாமே

பொழிப்புரை

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அறிவோரே அறிபவர் ஆவார். அக்கடந்த நிலையில் அவர் சக்தியின் அருளைப் பெறுவர் ஆவார். அதனால் அவர்களுக்கு அங்கே எல்லா அறிவும் உண்டாகும். அப்போது அவர் சிவனோடு இனிதாய்ப் பொருந்தியிருப்பார். தத்துவங்களைக் கடந்து சிவசக்தியோடு பொருந்தியிருப்பவர் எல்லா அறிவும் உடையவர் ஆவார்.

நயஉரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

36 தத்துவங்களையும் கடந்து அறிவார்ந்தவர்கள்தாம் சிவன் அருளோடு சேர்ந்து இன்புற்று இருக்க இயலும். 36 தத்துவங்கள் எவை? சிவ தத்துவங்கள் ஐந்து, வித்தியா தத்துவங்கள் 7, ஆன்ம தத்துவங்கள் 24, ஆக 36.

பாடல்: 4

அஞ்சொடு நான்கும் கடந்து அகமேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு
நஞ்சுற நாடி நயம் செய்யு மாறே

பொழிப்புரை

ஐந்து ஞானேந்திரியங்களும் நான்கு அந்தக்கரணங்களும் தத்தம் செயல் மடங்கி உள்ளத்தில் அடங்க ஐந்து இந்திரியங்களையும் அணிகலமாகக் கொண்டு உறக்கத்தை அடைகின்ற அறிவுமயமான ஆன்மா சிற்சக்தியோடு நீல ஒளியில் மனம் தொழிற்படாமல் நிற்பதில் இன்பத்தைத் துய்க்கும்.

நய உரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

ஐம்புல உணர்வுகளும் அந்தக் கரணங்களும் தம் செயல் ஒடுங்க பற்றுகளை விட்டு அறிவு நிலையில் உள்ள ஆன்மா இறைவன் நினைவோடு பொருந்தி உடலுக்கு நலம் தரும். ஐந்தும் நான்கும் என்பதற்கு பொருள். நான்கு வகையாக சொல்லப்படும் ஐந்து இருபது. அவை பூதங்கள் ஐந்து பொறிகள் ஐந்து புலன்கள் ஐந்து தன் மாத்திரைகள் ஐந்து உட்கருவி மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும் 4 என்றும் பொருள் கொள்ளலாம்.

பாடல்: 5

உரிய நனாத்துரியத்தில் இவனாம்
அரிய துரிய நனாவாதி மூன்றில்
பரிய பரதுரியத்தில் பரனாம்
திரிய வரும் துரியத்தில் சிவமே

பொழிப்புரை

துரியம் என்று சொல்லப்படும் அப்பால் நனவில் ஆருயிர் தனித்து நிற்கும். அதனால் இவனாம் என்றருளினார். அப்பால் நனவு- துரிய சாக்கிரம். அத்தகைய அருமை வாய்ந்த அப்பால் நனவு- அப்பாற் கனவு. அப்பால் உறக்கம் என்ற மூன்றினுள் பெருமை மிக்க அப்பாலுக்கு அப்பாலாம் பரதுரியத்தில் பரன் என்று சொல்லப்படும் திருவருளுடன் கூடி உறைபவனாம். இவற்றிக்கெல்லாம் மேம்பட்ட மாறுபாடு இல்லாத அப்பால் நிலைக்கண் தூய சிவனேயாவன்.

நயஉரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

விழித்திருக்கிறோம் என்ற நினைப்பு இருக்கும்போது மனம் உறங்கும் நிலையே சிறப்பாகும். நனவாதி என்றால் நனவு, கனவு, உறக்கம் என்று பொருள். பேருறக்க நிலையில் ஜீவன் பரம் என்னும் பரம்பொருள் தன்மையை அடையும்.

பாடல்: 6

பரமாம் அதீதமே பற்றறப் பற்றப்
பரமாம் அதீதம் பயிலப் பயில
பரமாம் அதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றொன்று அறாதே

பொழிப்புரை

நின்மல சாக்கிர தீதத்தில் சிவன் தத்துவங்களை விட்டுப் பரமாகும். இவ்வகையான அதீதத்தில் பலகால் பழகப் பழகப் பரம் பொருந்தும். இவ்விதம் நிஷ்டை பொருந்தி அதீதத்தை அடையாதவர் பரமாக மாட்டார். அவரை விட்டுப் பாசமும் அதனாலாய பற்றும் நீங்கா.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

அனைத்துக்கும் மேலான பரம் பொருளைப் பற்ற மற்ற பாசங்களை விட்டொழிக்க வேண்டும். இந்த இடையறாத முயற்சியில் அந்த நிலை கை கூடும்.

பாடல்: 7

ஆயும் பொய்யும் மாயை அகம்புற மாய்நிற்கும்
வாயு மனமும் கடந்து அம்மயக்கறின்
தூய அறிவு சிவனாந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே

பொழிப்புரை

ஆராய்ச்சியால் அறியப்பட்டபோது மாயை உடலின் உள்ளும் உடலின் புறம்புமாய்ப் பொருந்தியிருக்கும். நின்மல துரியாதீதத்தில் வாயும் மனமும் கடந்த நிலையில் மயக்கம் நீங்கினபோது தூய்மையான அறிவு சிவானந்தமாய் மேல் நிறைந்து மாயையை மூடும் பொருளாக அமைந்தது தானே.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

சற்று சிந்தித்துப் பார்த்தால் பொய்யான இவ்வுலகம் உண்மை போன்று தோன்றும். உள்ளும் புறமும் மனிதர்களைப் பிடித்திருப்பது மாயை. இந்த மாயையின் உண்மை நிலையை அறிந்தவர் வாக்கு மனம் கடந்த நிலையில் இருப்பவர். ஆன்ம அறிவு எங்கும் நிறைந்து மாயை மூடி மறைத்தது.

பாடல்: 8

துரியப் பரியில் இருந்த அச்சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை ஓடத் துரத்திய நாதர்க்கு
உரிய வினைகள் நின்று ஓலமிட்டன்றே.

பொழிப்புரை

துரியமாகிய குதிரைமேல் இருந்த சீவனை மென்மையான பராவத்தையில் புகச் செய்து, இந்திரியங்களாகிய நரிகளை விரட்டிய நாதத்தைத் தரிசனம் செய்த அனுபூதிமான்களுக்கு உரியனவாகிய வினைகள் பந்திக்க மாட்டாமையால் நின்று ஓலமிட்டன.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

பாய்ந்தோடும் குதிரை போன்ற மனம் அடங்க தான் மறந்து தவ நிலையில் இருந்த ஜீவனை பரம்பொருள் ஒன்றச்செய்து புலன் இச்சைகள் எனும் நரிகள் நெருங்க விடாதபடி விரட்டியடித்த தலைவனைக் கண்டு உயர்ந்த ஞானிகளை வினைகள் நெருங்க முடியாததனால் எட்டி நின்று ஊளையிட்டன.

பாடல்: 9

நின்றஇச் சாக்கிர நீள்துரியத்தினின்
மன்றனும் அங்கே மணம் செய்ய நின்றிடும்
மன்றன் மணம்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே இவனும் அவன் வடிவாமே

பொழிப்புரை

முற்கூறியவாறு நின்ற சாக்கிரத்தில் அதீதம் புரியும் போது பரந்த ஆகாய பூத நாயகனான சபேசனும் சீவனுடன் கலந்து நிற்பான். சபேசன் சீவனுடன் பொருந்தி விளங்கும்போது மாயையாகிய இருள் விலகிவிடும். அப்போதே சீவனும் சிவன்போல் அகண்ட வடிவை அடைவான்.

நய உரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

தன்னை மறந்த தவநிலையில் பொருந்தியுள்ள ஜீவான்மாக்கள் விழிப்பு நிலையில் சிவ சிந்தனையில் பொருந்தி நிற்க அம்பலத்திலே ஆடுகின்ற இறைவன் அந்த ஆன்மாக்களோடு இணைந்திருக்கிறான். இந்த நிலையில் மாயை விலகும். ஜீவன் அவனாகி சிவ உருப்பெறும்.

பாடல்: 10

விரிந்திடில் சாக்கிரம் மேவும் விளக்காய்
இருந்த இடத்திடை ஈடான மாயை
பொருந்தும் துரியம் புரியில் தானாகும்
தெரிந்த துரியத்துத் தீது அகலாதே

பொழிப்புரை

பொறிபுலன் கலன் முதலிய உறுப்புகள் விரிந்த இடத்து நனவினைப் பொருந்தும். மாயை விளக்கு போன்று இருந்த இடத்தில் வலிமையோடு நிற்கும். நனவில் அப்பால் நிலைக்கு முன் நிலை வாய்க்குமிடத்து அருளால் ஆருயிர் தாமரையிலை நீர் போல ஒட்டாது நிற்கும். இக்கருவிகள் எல்லாம் நனவின்கண் ஏற்படும் பேருறக்க நிலையில் விட்டு அகலாமல் ஒட்டிச் செயலற்று இருக்கும்.

நய உரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

பொறி புலன்களின் ஆசை எளிதானால் மாயை விளக்கு ஒளி போல வலிமையோடு பற்றும். மாயையோடு கூடி இருக்கும் வரை அதனுடைய ஆற்றல் தீங்கு விலகாது தொடரவே செய்யும்.

பாடல்: 11

உன்னை அறியாது உடலை முன் நான் என்றாய்
உன்னை அறிந்து துரியத்து உறநின்றாய்
தன்னை அறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலன் என்று அறிதியே

பொழிப்புரை

ஆன்ம ஒளியை அறியாமல் நீ தேகாத்ம புத்தியோடு முன் இருந்தாய். பின் ஆத்ம ஒளியை அறிந்து துரியத்தில் நின்றாய் தன்னுடைய இயல்பை அறிந்தும் சிவ வியாபகத்தில் பொருந்தவில்லையென்றால் பிறவி நீங்காது. அவ்வாறு சிவத்தின் வியாபகத்தின் அடங்கி விடுதலே மாசற்ற நிலையாகும்.

நய உரை-சிறப்புப்பொருள்-ஆழ் பொருள்

உடம்பு தான் நீ என்று நினைத்து கொண்டிருந்தாய். பின்னர் இறைவன் அருளால் உன்னை அறிந்து சிவ நினைவான துரிய நிலையில் பொருந்தி

இருந்தாய். அதனால் என்ன பிரயோசனம்? பிறவித் துயர் நீங்காது- அது நீங்க எங்கும் நிறைந்த சிவப்பொருள்தான் அருள் புரிய வேண்டும்.

பாடல்: 12

கருவரம்பு ஆகிய காயம் துரியம்
இருவரும் கண்டீர் பிறப்பு இறப்பு உற்றார்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னே
இருவரும் இன்றி ஒன்றாகி நின்றாரே

பொழிப்புரை

கருவின் எல்லைக்கு உட்பட்டது துரியத்திலுள்ள சூக்கும வித்தியா தேகம். பிறப்புக்குரிய காரணம் அகற்றப்பட்டாதவரை சூக்குமமும் தூலமும் பொருந்திச் சீவர்கள் பிறவியில் பட்டுழல்வர். குருவின் சகாயத்தால் சிவத்துடன் பொருந்தும் அருளைக் கூடினவர் சூக்கும வித்தியா தேகத்தையும் தூல தேகத்தையும் விட்டுச் சிவ தத்துவத்தில் சிவத்தோடு ஒன்றாவர். இருவர்- தூல உடல், சூக்கும உடல்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

கரு உருவாகி ஒரு எல்லையை அடைந்து பின் உடம்பு என்ற பிறப்பு எடுக்கின்ற நிலையே உடல் தோற்றம். பிறந்து இறக்கும் துயரை அடைபவர்கள் உடல், முன் உடல் என்ற இரண்டும் கொண்ட ஜீவர்கள். இவர்கள் குருவின் துணையால் சிவன் அருளில் மனம் பொருந்தப் பெற்றால் இரு உடல்களையும் விட்டு சிவத்தோடு ஒன்றாய் நிற்பர்.

பாடல் : 13

அணுவின் துரியத்தில் ஆன நனவும்
அணுஅசை வின்கண் ஆன கனவும்
அணுஅசை வில்பரா தீதம் சுழுத்தி
பணியில் பரதுரியம் பரமாமே

பொழிப்புரை

ஆருயிராகிய அணுவின் பேருறக்க நிலையாம் துரியத்தில் உண்டாகும் நனவும் ஆருயிரின் புடை பெயர்ச்சியில் உண்டாகும் கனவும் அப்புடை பெயர்ச்சியின் கண் தன்னை இழப்பதாகிய உறக்கமும் பொருந்திய இடத்து அப்பால் நிலை எய்தும். எய்தலே சிவனுடன் ஒன்றாம் சிறப்பு எய்தும். இதுவே பரம் என ஓதப்பெற்றது.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ் பொருள்

தன்னை மறந்த துரிய நிலையில் ஆன்மா அடையும் நினைவு ஆன்மா புலன்களில் வழியாக அடையும் கனவு பேர் உறக்க நிலையான சுழுத்தி இவை அனைத்தும் பொருந்த சிவனோடு ஒன்றி பேரின்பம் என்கிற நிலையை அடையும்.

பாடல்: 14

பரதுரியத்து நனவும் பரந்து
விரிசகம் உண்ட கனவும் மெய்ச் சாந்தி
உருவுறு கின்ற சுழுத்தியும் ஓவத்
தெரியும் சிவதுரியத்தனு மாமே

பொழிப்புரை

மேற் பேருறக்கமாகிய பரதுரிய நனவு எங்கும் பரந்து விரிந்த உலக நுகர்வுகளை உண்டல், அது போல் கனவுப் பயனும் நுண்ணுகர்வு உண்மையாதலின் பரு துரியக் கனவு மெய்ம்மை அமைதியாகும். கருவி கரண முதலிய உருவு மட்டும் அசைவின்றி இருக்கும் உறக்க நிலையும் நீங்க, ஆண்டு அருளாற் புலனாகும் ஒன்று. அதுவே சிவதுரிய நிலையாகும். அந்நிலை எய்தியவன் சிவதுரியத்தன் ஆவன்.

நய உரை- சிறப்புப்பொருள்-ஆழ் பொருள்

உறக்க நிலை நீங்க சிவகாட்சி தெரியும். இதை கண்டவன் சிவதுரியத்தன் ஆவான். கனவு நிலையில் அமைதி காணும் கருவி கரண உரு மட்டும் ஓய்ந்திருக்கும்.

பாடல் : 15

பரமா நனவின்பின் பால்சக முண்ட
திரமார் கனவும் சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்தம் உற்றல் துறவே
தரனாம் சிவதுரியத்தனும் ஆமே

பொழிப்புரை

மேல் நனவு என்று சொல்லப்படும் பரமா நனவின் அடுத்த நிலை மெய்ம்மையும் உறுதியும் உடைய மேற்கனவின் உலக நுகர்வுகளை உண்ணும் சிறந்த உறக்க நிலை நல்லுறுதியாகும். பேருறக்க மேல்நிலை அமைதி

நிறைதல் அதன் மேல் நிலை துறவாகும். இந்நிலை சிவ துரிய நிலையாகும். இந்நிலை எய்தினான் சிவதுரியத்தன் ஆவன்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

உலகியலை விட்டு மனம் ஒளியில் பொருந்தி உறக்க நிலையில் பொருந்தி இருப்பதுதான் உயர்ந்த துறவாகும். இந்த நிலையில் தங்கி இருப்பவனும் சிவதுரியத்தன் எனப்படுவான்.

பாடல்: 16

சீவன் துரியம் முதலாகச் சீரான
ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்து
ஓவும் பராநந்தி உண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்து நின்றானே

பொழிப்புரை

சீவன் துரியம் முதலாக பெருமை பெற்ற சிவதுரியம் ஈறாகப் பத்து நிலைகளும் நீங்கும். மேலான சிவத்தின் நிறைவில் அடங்கியிருந்து அந்தக்கரணம் நான்கையும் பொருந்திய வித்தியா தத்துவம் ஏழையும் விட்டு நின்றான்.

நய உரை- சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

ஜீவன் நினைவு, கனவு, உறக்கம் முதலான சிறப்புக்குரிய சிவதுரியம் முடிவாக உள்ள நிலைகள் நீங்கி மேலான சிவப் பரம்பொருளான உண்மையில் ஒடுங்கி இருக்கப் பெற்றால் அவத்தை பத்தும் அதற்கு அப்பாலான நிலையும் நீங்கப் பெற்று சிவப்பேறு அடையும். அவத்தைப் பத்து என்றால் என்ன? ஜீவ துரியம், சிவதுரியம், பர நனவு, பர கனவு, பரசுழுத்தி, பரதுரியம், சிவ நனவு, சிவகனவு, சிவசுழுத்தி, சிவதுரியம் ஆகும்.

பாடல்: 17

பரஞ்சிவன் மேலாம் பரமம் பரத்தில்
பரம்பரன் மேலாம் பரநனவாக
விரிந்த கனாவிட்டு மேவும் சுழுமுனை
உரந்தரும் மாநந்தியாம் உண்மைதானே

பொழிப்புரை

பரம் சிவன் இரண்டற்கு மேல் பரமம் அப்பரத்திற்கு மேல் பரம்பரன் பர நனவு விரிந்த பரக்கனவு இவ்விரண்டும் ஆருயிர்களின் பிறப்புத் துன்பத்தை அகற்றும். அதற்கு மேல் பேரறிவுப் பெருமானாகிய பரநந்தியின் உண்மை நிலையினை எய்துவன்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

பரம், சிவன், பரமம் என்னும் மூன்றைக் காட்டிலும் மேலான நிலையில் இருப்பது பரம்பரன். இது பிறவித் துயரை அடுத்து உயிருக்கு உற்ற துணையாக இருக்கும். இந்த நிலையில் நந்தி எம்பெருமான் பேரருள் கிட்டும்.

பாடல்: 18

சார்வாம் பரம் சிவம் சக்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவம் மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரிஅமராபதி
தேவாம் உருத்திரன் ஈசனாம் காணிலே

பொழிப்புரை

ஆராயின், உயிர்கட்குப் பற்றுக் கோடாக அருவநிலைகளான பரம், சிவம், சத்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவமும், இப்பால் உருவமூர்த்திகளான பிரமன், விஷ்ணு, தேவர் தலைவனான உருத்திரன் மகேசனும் ஆக பதின்மர் உளர். பரம்-சத்தி சிவன் பிரிப்பின்றி உள்ள நிலை. முன் மந்திரத்தின் விரிவு இங்குக் கூறியவாறு.

நயஉரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

அனைத்துப் பொருட்களும் சார்ந்து நிற்கும். ஆதார நிலையாக சிவப்பரம்பொருள் உள்ளது. ஈசானம் என்பது வடகிழக்கு எனப் பொருள்படும்.

பாடல்: 19

கலப்பு அறியார் கடல் சூழ் உலகேழும்
உலப்பு அறியார் உடலோடு உயிர் தன்னை
அலப்பு அறிந்து இங்கு அரசாளகிலாதார்
குறிப்பது கோலம் அடலது ஆமே.

பொழிப்புரை

முன் மந்திரத்தில் கண்ட திருமேனிகள் உயிர்களோடு ஒன்றியிருந்து இயக்குவதை உலகினர் அறியமாட்டார். கடலால் சூழப்பட்ட ஏழ் உலகங்களும் அழிந்து போவதையும் இவர்கள் அறியமாட்டார்கள். உடலோடு உயிர் பொருந்தியிருக்கும் தன்மையை அறிந்து இங்கு மேன்மை அடையமாட்டாதார். மேலே கண்ட திருமேனிகளைத் தியானிப்பது வலியுடைமை ஆகுமோ? ஆகாது.

நயஉரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

பஞ்ச பூதங்களால் ஆன இந்த உலகில் எல்லாவற்றிலும் பரம்பொருள் கலந்து இருப்பதை உலகில் யாரும் அறியமாட்டார்கள். கடல் சூழ்ந்த ஏழு உலகங்களும் நிலையற்றவை. அதைப் போல உடலும் அழியும் இச்சைகளை அடக்கி அதை ஆண்டு மேன்மை அடைய இவர்களுக்குத் தெரியாது. எனவே இவர்கள் பரம் பொருளை தியானித்து இருப்பதே புலன்களை அடக்கி வெற்றி அடைய சரியான வழியாகும்.

பாடல்: 20

பின்னை அறியும் பெருந்தவத்து உண்மைசெய்
தன்னை அறியில் தயாபரன் எம்இறை
முன்னை அறிவு முடிகின்ற காலமும்
என்னை அறியலுற்று இன்புற்றவாறே.

பொழிப்புரை

குரு உபதேசத்தின் பின் விளங்கும் பெரிய தவத்தின் பயனாகிய வரவிந்து மண்டலத்தை உணரில் கருணா மூர்த்தியான எமது தலைவன் பழமையான சுட்டறிவு நீங்குகின்ற காலத்தில் என்னுடைய அகண்ட வியாபகத்தை உணரும்படி செய்து அதனால் நான் இன்பம் பெற்று உய்ந்தவாறு என்னே.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ் பொருள்

அரிய தவப்பயனின் மேன்மையை குருவருளால் உணர வேண்டும். அதன் பின்னர்தான் தம்மையே அறியும் உண்மை அறிவும் பெறலாம். தன்னை உணரும் போது அறிவும் செயலும் அடங்க இறைவன் திருவடிகளில் ஒன்றுக. இந்த நிலையில் இறைவன் அறிவில் பொருந்துவான். தன்னை அறியும் ஞானம் வந்துவிட்டால் அந்த ஞானத்தின் பயனான இறையருள் பெற்று இன்பம் கிடைக்கும்.

பாடல்: 21

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கரணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கரணங்களே

பொழிப்புரை

பொன்னால் செய்யப்பெற்ற நகையைக் காணும் போது பொன்னைப் பற்றிய காட்சியில்லை. பொன்னின் இயல்பைப் பார்க்கும் போது பொன்னால் செய்யப்பெற்ற நகையின் காட்சி பொன்னில் மறைந்தது. அதுபோல அந்தக்கரணங்கள் பகிர்முகமாக வியாபகம் பெற்றிருந்த போது ஆன்மாவின் காட்சியில்லை. ஆன்மாவின் இயல்பை உணர்ந்தபோது அந்தக்கரணங்களின் வியாபகம் ஆன்மாவில் ஒடுங்கியது.

நயஉரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

நகையைப் பார்க்கும் போது அது செய்யப்படுவதற்கு மூலமாக இருந்த பொன் மறைந்து விடுகிறது. அதுபோல் பொன்னைப் பார்க்கும் பொழுது நகை மறைந்துவிடுகிறது. இதுபோலத்தான் மனிதனை அவனது கருவிகரணங்கள் மறைத்து விடுகின்றன. அவன் தன் கருவி கரணங்களின் செயல்களை விலக்கினால் அவை விலகி அவனது உள் ஒளி வெளிப்பட்டு விளங்குகிறது.

பாடல்: 22

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே.

பொழிப்புரை

மரத்தால் செய்யப் பெற்ற யானைப் பதுமையைப் பார்க்கும் போது மரத்தைப் பற்றிய காட்சி இல்லை. வர்ணங்களை அகற்றிப் புறநிலையை மாற்றிப் பார்க்கும் போது யானையின் காட்சி மரத்தில் மறைந்தது. அது போலப் பார்த்தால் விளக்கம் பெற்ற பார் முதலிய பூதங்களைப் பார்க்கும் போது பரமானது காட்சிக்கு ஆவதில்லை. குருவருளால் பார்க்கும் போது பரமே காட்சியளித்துப் பார் முதல் பூதங்கள் பரத்தில் மறைந்தன.

நய உரை- சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

நல்ல மரத்தில் செய்யப்பட்ட யானையைப் பார்க்கும் பொழுது அந்த உயர்வான மரம் மறந்து விடுகிறது. மரத்தின் உயர்ந்த தன்மையை நினைக்கிறபோது யானையை மறந்து விடுகிறோம். அதுபோல இந்த உலகை நாம் ரசிக்கும்போது படைத்தவனை மறந்து விடுகிறோம். படைத்தவனைப் பற்றிவிட்டால் அனைத்துச் சிற்றின்பங்களையும் மறந்து விடுகிறோம்.

பாடல்: 23

ஆறாறு அகன்று நமவிட்டு அறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் சிவாய அடங்கும் பின் முத்தியே

பொழிப்புரை

முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து பஞ்சாட்சரத்தில் நம என்ற எழுத்துக்களை விட்டுப் பேரறிவாகி தத்துவங்களுக்கு வேறாய் ஆன்மா யகாரமாய் விளங்கியபோது பரையின் இறுதியிலுள்ள ஒளியான தற்பரனாகிய சிவத்தில் பேறு நிறைந்த சிவாய என சிவசக்தியோடு அடங்கி நிற்றலே முக்தியாகும்.

நய உரை-சிறப்புப்பொருள்-ஆழ்பொருள்

சிவாய நம என்கிற ஐந்தெழுத்தைச் சொல்லும் போது லௌகீக ஆன்மீக உலக இன்பங்கள் கிட்டும். ஓம் நமசிவாய என்கிற போது உலக இன்பங்கள் அனைத்தும் கிட்டும். சிவயசிவ என்று சொல்பவர் ஞானியர்களே.

பாடல்: 24

துரியத்தில் ஓரைந்தும் சொல் அகராதி
விரியப் பரையில் மிகு நாதம் அந்தம்
புரியப் பரையில் பராவத்தா போதம்
திரிய பரமம் துரியம் தெரியவே

பொழிப்புரை

பராவத்தையில் சாக்கிரம் முதலான ஐந்தும் கீழ்க்காணுமாறு ஆகும் பரையில் சொற் பிரபஞ்சத்துக்குக் காரணமான நாதம் தோன்றும் சொப்பனத்தில் நாதம் ஒடுங்க பரையில் நின்மல சுழுத்தியாகிய உறக்கம்

அமையும். நின்மல சுழுத்தியில் அழுத்தாமல் மேல் விளங்கவே மேலான சிவதுரியம் பொருந்தும்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

துரிய நிலையில் மேல் நனவு, மேற் கனவு, மேல் உறக்கம், மேல் பேருறக்கம், மேல் ஒடுக்கம் எனும் ஐந்து நிலைகளையும் அறிந்து சொல்லும் பொருளும் விரிவதற்கு காரணமான ஒளியாகிய நாதம் தோன்றும். இந்த நாதம் ஒடுங்க பராவத்தையில் மேலான நிலையிலே பராவத்தை நீங்க பரம்பொருள் காட்சி கிட்டும்.

பாடல்: 25

ஐந்தும் சகலத்து அருளால் புரிவற்றுப்
பந்திடும் சுத்த அவத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி இருள் போலும் ஐம்மலம் மாறுமே

பொழிப்புரை

பராவத்தை ஐந்தும் சகல நிலையில் சீவர்களுக்கு அருளால் பந்தம் நீங்கச் செய்து சுத்தாவத்தையில் பொருந்தும்படி செய்யும். இந்நிலையில் பொருந்தும் பிரமந்திரத் துடிப்பினால் மனம் பதியச் சிவத்தை அடைவதற்குரிய பராவத்தையில் விருப்பம் உண்டாக, மாலைக் காலத்தில் நீல ஒளியின் முன் இருள் நீங்குவது போலச் சிரசின் முன்னுள்ள ஒளியில் ஐம் மலங்களும் நீங்கும்.

நய உரை-சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

ஐந்து என்பதற்கு மெய், வாய் முதலான ஐம்புலன்கள் என்றும், நனவு, கனவு, உறக்கம் முதலான ஐந்தவத்தைகள் எனவும் இருவகையாகவும் பொருள் கொள்ளலாம். ஆன்மாக்கள் ஐம்புலன் ஆசைகளை விட்டு ஒழித்து இறைவன் அருள் பெறும் முயற்சியில் தடையாக உள்ள பந்தங்கள் நீங்க நந்தி பெருமான் திருவருள் துணையை நாடும் எண்ணம் உண்டாகும். இது அந்தி அருளை அகற்றும் விளக்கின் சுடர் ஒளி போட இருக்கும்.

ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்டு
எய்யும் படியாய் எவற்றுமாய் அன்றாகி
உய்யும் பராவத்தை உள்ளுறல் சுத்தமே

பொழிப்புரை

அசுத்த மாயையில் உள்ள புருடனுடன் கூடிய ஆன்ம தத்துவங்கள் இருபத்தைந்தும் பொய்யாகுமாறு சுத்த மாயையில் தேகத்துக்குரிய ஆத்மன் கண்டு எல்லாப் பொருளும் அடையும்படியாய் அவைகளேயாய் அவற்றினின்றும் விலகியிருக்கவும் உய்தியைத் தருகின்ற பராவத்தையே எண்ணிக் கொண்டிருத்தல் சுத்த நிலையாகும்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

உயிருக்கு உய்வை அளிக்கின்ற பராவத்தையை தியானிப்பதே உள்ளம் ஒளிபெற்று தூய்மை அடைய வழியாகும். சுத்த மாயையிலே ஆன்மா எல்லாவற்றுடன் பொருந்தி எல்லாமாகவும் அவை அல்லாத வேறாகவும் இருக்கிறது.

பாடல்: 27

நின்றான் அருளும் பரமும் முன்நேயமும்
ஒன்றாய் மருவும் உருவும் உபாதியும்
சென்றான் எனைவிடுத்து ஆங்கிற் செல்லாமையும்
நன்றான ஞானத்தின் நாதப் பிரானே

பொழிப்புரை

பண்டைய நற்றவத்தால் ஞானத்தில் விளங்கும் நாதனான சிவபெருமான் தான் ஆன்மாக்கள் மாட்டுச் செய்யும் அருளும் பரமும் அவர்கள் தன் மீது செலுத்தும் அன்புமாக நின்றான். ஆன்மாக்களோடு பிரிப்பின்றிக் கலந்து உருவத்தில் பொருந்தியிருந்தும் ஆன்மாக்களின் சாக்கிரம் முதலிய உபாதிகளில் பொருந்தாமல் இருந்தான். என்னைத் தூல சூக்கும உடல்களின் பிடிப்பிலிருந்து விடுவித்தும் என்னை விட்டு அகலாதவனாகவும் உள்ளான்.

நய உரை- சிறப்புப்பொருள்- ஆழ்பொருள்

சிவபெருமான் உயிர்களுக்கு அருள் வழங்குகிறான். அன்பு பொழிந்து பணிபவனுமாக இருக்கிறான். உயிர்களுடன் ஒன்றாய் கலந்து இருக்கிறான். பரு உடல், நுண் உடல் பொருந்தி இருக்கச் செய்கிறான். வேறாகவும் இருக்க செய்கிறான். அப்படி இருந்தாலும் ஆன்மாக்களை விட்டு விலகாமல் ஆன்மாவின் உள்ளே இருக்கிறான்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

77. முக்குண நிர்க்குணம், அண்டாதி பேதம், கலவு செலவு

முனைவர். மு. சாதிக் பாட்சா
முதுநிலை விரிவுரையாளர், ஜமால் முகமது கல்லூரி
திருச்சிராப்பள்ளி

திருமந்திரம்

மூலன் என்பவரின் உடலில் புகுந்து சுந்தரர் என்னும் யோகியார் பாடியது திருமந்திரம்.. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய இவர் திருமூலர் என அழைக்கப்பட்டவர். ஆகமப் பொருள்களை 3000 பாடல்களின் வழி கூறியுள்ளார்.

திருமூலர்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சொற்றொடர் வழி தமிழ் மக்களின் அன்பைப் பெற்றவர். தமிழக அரசியலின் மிகப் பெரிய மாற்றத்திற்கு இச்சொற்றொடர் காரணமாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. சைவ சமயச்சான்றோர், யோகி என்ற சிறப்புப்பட்டங்களைத் தாங்கி நிற்கின்றவர். இவருடைய மூன்று மந்திரங்களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

முக்குண நிர்க்குணம்

முக்குணம் - மூன்று குணங்கள்

1. சாத்துவிகம்

2. இராசதம்

3. தாமதம்

நிற்குணம்- குணமற்றதன்மை

மனிதனின் குணங்கள் மெய், வாய், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களால் தீர்மானிக்கப்படுகின்றன. மனிதன் என்பது ஓர் உறுப்பு என எடுத்துக் கொண்டு பேசினால்..... இவ்வுறுப்பிலிருந்து ஐந்து கிளைகள்தான் ஐம்புலன்கள். கிளை இல்லாத மரம் மொட்டை மரம் என்பது போல ஐம்புலனில்லாத மனிதனும் எதுவுமற்ற மொட்டை மனிதன் என்றே சொல்லலாம். மனிதன் என்னும் மரம் சமூகப் பயனுடையதாக இருக்கும்

என்ற நிலையில்தான் அவன் மனிதனாக மதிக்கப்படுகிறான். மரங்கள் சமூகப் பயன் உடையதாக இருப்பினும் அதற்கு இயற்கைக் குணங்கள் இருக்கின்றன. அந்த இயற்கைக் குணங்கள் காற்றால், மழையால், ஒளியால், மரம் விரும்பினும் விரும்பாவிட்டாலும் மேற்கண்ட மூன்றின் செயற்பாடுகளுக்கேற்றவாறு சமூகப்பயன்பாட்டை வெளிக்காட்டுகிறது. மனிதனும் சூழ்நிலை என்ற பல காரணங்களால் சமூகப் பயனுக்கு அடுத்து சில குணங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். அந்த வெளிப்படுத்தல் என்பது பலவாக இருப்பினும், அவை மூன்றாக வடிவம் பெற்றே வெளிவருகின்றன. அந்த மூன்றுதான் திருமூலரின் முக்குணம்.

மனிதன் உழைப்பு எத்தனை பயனைக் கொடுப்பினும் தவிர்க்க முடியாப் பயன் உணவு. அது வளர்க்கும் வயிறு. அது வளர்க்கும் மனிதனின் முழு உடல், அந்த உடலின் செயற்பாட்டின் தலைமைச் செயலகம் மூளை, அந்த மூளையிலிருந்து பல்வேறு செயல்கள் திருமூலரின்,

சாத்துவிதம், இராசதம், தாமதம் ஆகியவற்றின் வழியே வெளிக்காட்டப்படும். மூளை இம்மூன்றையும் தவிர்க்கும்போது குணமற்ற தன்மை என்பது மரணமே. நடந்த மூன்று இல்லையெனில் ஒன்று. மனிதன் மூன்றாக இருக்கும்போது உயிருடன் இருக்கிறான். இறக்கும்போது ஒன்றாகி விடுகிறான். மூன்றுமற்ற தன்மை உயிரற்ற தன்மையே,

இதை விளக்குவதே,

சாத்திகம் எய்தும் நனவெனச் சாற்றுங்கால்
வாய்ந்த இராசதம் மன்னும் கனவென்ப
ஒய்த்திடும் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாயத்திடும் நிற்குணம் மாசில் துரியமே -2296

என்னும் மந்திரமாகும்.

இதற்கு, அவத்தைகளில் பொருந்திய உயிர்க்கு நனவினில் ***சாத்துவகுணம்*** அமையும். கனவு என்பது அதற்குரிய ***இராசதகுணம்*** பொருந்துதலாகும். கருவி கரணங்களையும் செயற்படாது செயவைத்திடுதல் ***தாமதகுணம்*** பொருந்திய சுழுத்தியாகும். இந்திரியங்களையும் அந்தக் கரணங்களையும் செயற்படாமல் அழித்திடும் நிலையே குற்றமற்ற ***துரியமாகும்***, என்பது பொருளாகும்.

அவத்தை = உயிர்நிலையுபாதி நிலை, மரணவுபாதி, முடிவு, வேதனை
(கருவேற்பிள்ளை அகராதி)

= வேதனை, நிலை (வாசன், வெற்றி அகராதிகள்)

அவதி = துன்பம், வருத்தம், எல்லை, தவணை, அளவு, கணக்கு, இணக்கம், ஆபத்து, காலம், கிடங்கு, சமயம், முடிவு (வர்த்தமானன்).

மேற்கண்ட நிலைகளை நோக்கும்போது, அவத்தை என்பது துன்ப நிலையாகும். இது அதிகமான மகிழ்விலும் வரக்கூடியதாகும். அவத்தைகள் மூன்று என திருமூலர் சொல்கிறார். அவற்றில்,

1. சாத்துவகுணம்

இது சாத்துவிதம், சத்துவகுணம் எனவும், சத்துவம் என்பது நன்மையை நோக்கும் தன்மை உள்ளதாகும். தன்மை, சாரம், வலிமை, இயல்பு ஆகியனவும் அழைக்கப்படுகின்றன.

அமைதி என்பது வலிமைக்குச் சான்றாகவும் விளங்குகிறது. மனம், இயல்பு நிலைக்கு மாறான அமைதியாக இருப்பினும் அவத்தையாகும். அந்த அமைதி சாத்துவம் எனப்படுகிறது. இவ்வமைதியே வலிமையாகும். இக்கருத்தே நனவினில் அமைவதாகக் கூறுகிறார் திருமூலர். நன்றாக இயல்பான மனநிலையில் ஒருவன் அமைதியாக இருக்கும் நிலையில் வலிமையுடையவனாக மாறுகிறான். இது திருமூலர் கூறும் முதல் குணம். மனிதனின் முதல் வலிமை.

2. இராசதக்குணம்

இராசதம் எனில் இராசோகுணம், மேன்மையான குணம். இந்த இராசத குணம் கனவு வருகின்றபோது வரும் என்கிறார். தூக்கம் என்பது அமைதிக்கான ஓர் இடம். மனிதன் துன்பங்களில் ஆழ்ந்திருக்கும் போது உறக்கம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. அவ்வுறக்கத்தில் வரும் கனவு மகிழ்வைத் தரும். அம்மகிழ்வு மனிதனுக்கு வலிமை சேர்க்கிறது. இதுவும் மனிதனுக்கு இன்னொரு அமைதியான நிலை.

3. தாமதகுணம்

தாமதகுணம் எனில் காலநீட்டிப்பு, மந்த குணம் என்று சொல்லப்படுகிறது. ஒருவன் மிகுந்த கோபமுறும் தறுவாயில் அவன் தாமதப்படும்போது தவறு செய்வதிலிருந்து அவன் வெளியே வருகிறான். ஒருவனைத் தாக்க நினைக்கின்றபோது ஓர் ஐந்து நிமிடங்கள் தாமதப்படுத்தினால் அத்தாக்குதல் நிறுத்தப்படலாம். அந்நிலையில் மனிதன் தன்னிலையில் உயருகின்றான்.

மேற்கண்ட மூன்று குணங்களிலிருந்து நமக்குத் தெரிவது, மனிதன் மிகுந்த கோபத்துடனும், மிகுந்த துன்பத்துடனும், மிகுந்த சோர்வுடனும், மிகுந்த மன வருத்தத்துடனும் மிகுந்த சச்சரவு நிலையிலும் மனிதனுக்குத் தேவைப்படுகின்ற குணங்கள் சாத்துவிதம், இராசதம், தாமதம் ஆகியனவாகும்.

மேற்கண்ட மூன்று குணங்களிலிருந்து மனிதன் விலகி நிற்கின்ற போது மரணமடைகின்றான். அல்லது அதன் அருகில் வருகின்றான். ஆனால் திருமூலர் குற்றமற்ற குணம் என்கிறார். நிர்க்குணம் என்கிறார். மனிதன் இறப்பிலும் அதன்பிறகு குற்றம் புரிய இயலாதவனாகிறான். ஒரு மனிதனுக்கு நனவு, கனவு, தாமதம் மூன்றைத் தவிர்த்து வாழ்ந்திருப்பது ஐயமே! எனவே தான் முக்குண நிர்க்குணம் என நிர்க்குணத்தை இறுதியாகத் தருகிறார் என்று கருத இடமிருக்கிறது.

எனவே திருமூலர் மனிதன் பற்றிய சாத்துவிகம், இராசதம், தாமதம் மூன்றையும் உயர்வான குணமென்றும்.......அதைத் தவிர்க்கும் நிலையில் மனிதன் நிலை உயிரற்ற நிலையே என்ற கருத்தாகக் கொள்ளலாம்.

நிர்க்குண உயர்வான குணம் என்பது இறப்பையே கூறியிருக்க வேண்டும்.

உயிர் அவத்தைகளில் இருக்கும்போது மூன்று குணங்களைக் கடைப்பிடித்தால் வலிமை சேரும். இயலாவிடில் உயிர்துறப்பது (குணமற்றதன்மை) நன்று என்கிறார் என்றே அறியமுடிகிறது.

அண்டாதி பேதம்

இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பதற்கான பொருளிது. தூணிலும் துரும்பிலும் இறைவன் இருக்கிறான் என்பது நம்பிக்கை. மனிதன் தனக்காகப் பயன்படுத்தும் அத்துணை பொருள்களிலும், காரணங்களிலும் இறைவன் இருக்கிறான் என்பதும் நம்பிக்கை சார்ந்ததே. அதனால்தான் மனிதன் செய்யும் சரி, தவறு ஆகியனவும், மறைந்து, தெரிந்து செய்யும் அனைத்துச் செயல்களும் இறைவன் அறிவான் என்பது. இதிலிருந்து மனிதனின் நிலை என்னவென்றால், *செய்கின்ற ஒவ்வொரு செயலையும் ஒருவன் கண்காணித்துக் கொண்டேயிருப்பான்* என்றெண்ணியவாறே செய்தல் நலம்.

அதே போல் செயற்படுகின்ற மனிதன், செய்கின்ற ஒவ்வொரு நல்ல, தீய செயல்களும் இறைவனே காரணகர்த்தா என்ற மனநிலையும் கொண்டிருத்தல் நலம்.

மனிதன் உயிருடன் வாழக்கூடிய இந்நிலவுலகத்தில் மட்டுமில்லை. இதற்கு மேலுள்ள மேலுலகத்திலும் எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்திருக்கிறான். அவ்வாறெனில் மனிதன் வாழுகின்ற இவ்வுலகில் மட்டுமல்ல- மறைந்த பிறகு இருப்பதாக நம்பப்படுகின்ற மேலுலகத்திலும் கண்காணிப்புச் செய்யப்படுகிறோம் என்ற மன நிலையில்தான் உலாவ வேண்டும் என்ற எச்சரிக்கையே இப்பாடல்..........

மேலும் ஏழு கடலின் மணல் துகள்களிலும், இறைவன் இருக்கிறான் என்ற உணர்வும் மனிதனுக்கு இன்றியமையாத் தேவையாகும் என்ற எண்ணத்தை,

பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல் அளவாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும் அண்டாசனத் தேவர் பிரானே

என்ற பாடல்,

அண்டத்தை ஆசனமாகக் கொண்டு அதன் மேல் வீற்றிருக்கும் தேவாதி தேவனான சிவன், விரும்பிப் பேரண்டத்தில் வெவ்வேறாக உள்ள அண்டகோசங்களில் திரை எறிகின்ற கடல் ஏழினும் உள்ள மணலின் அத்துணை அளவாக ஒளிக்கிரணங்களில் பொன் அணியில் பொன் செறிந்து பிரகாசிப்பது போல் பிரகாசிப்பான் என விளக்குகிறது.

உலகத்தைத் தான் அமர்ந்திருக்கும் இடமாகக் கொண்ட சிவன் இவ்வுடலை தன்னகத்தே கொண்டுபோக உள்ள இப்பெரிய உலகில், தனித்தனியாக உள்ள காற்று, நெருப்பு, நீர் ஆகியவை வியாபித்திருக்கின்ற ஏழுகடல்களில் உள்ள மணல் அளவுள்ள ஒளிக்கிரணங்களில் (சூரியன்கள், சந்திரன்கள், நட்சத்திரங்கள்) உள்ள ஒளி அளவு இறைவனாகிய சிவன் பிரகாசிப்பான்.

எனவே நீ தவறுகளிலிருந்து விடுபட்டு எச்சரிக்கையாக வாழ், காரணம் நீ கண்காணிக்கப்படுகிறாய் என்பதாகும்.

இதற்கு அடுத்த பாடல் மனிதன் இறந்தபின் அவனின் ஆன்மா நிலவுலகத்தின் மேல் உள்ள ஆகாயத்தில் சிவசக்தியுடன் மகிழ்வுடன் இருக்கும் என விளக்கப்படுகிறது.

பூதம்(5), தன் மாத்திரை(5), ஞானேந்திரியம்(5), கன்மேந்திரியம்(5), மனம் அகங்காரம் புத்தி குணம் பிரகிருதி(புகழ்) இவை (5), ஆக

இருபத்தைந்தும் அசுத்தாத்துவம், அராகம், கலாதத்துவம், நியதிதத்துவம், காலதத்துவம், அராகம் முதல் காலதத்துவ மீறாகிய ஐந்தும் மிகச்சிராத்துவ இவை முப்பதும் ஆன்மாக்களுக்குத் தனித்தனியே சூக்கும தேகங்களாம். மேலும் சுத்த வித்தியாத்துவம், ஈசுரமத்துவம், சாதசிவத்துவம், சத்திதத்துவம், சிவத்தத்துவம் எனச் சொல்லப்படும் முப்பத்தாறு தத்துவங்களாய் அண்ட வெளியில் சத்தி முடிவற்ற தத்துவங்களாகவும், அளவில்லா சத்தியாகவும் அண்டத்தின் எண்மடங்கு அளவுடையதாகவும் விளங்குகிறது என்பதாகும்.

அதாவது, மானுடன் இந்நிலவுலகில் இம்மையில் இறைவனை நினைத்து, நன்றாக வாழ்ந்தால் மேலுலகில் மறுமையில் இறைவனின் சக்தியாக மகிழ்வான நிலையில் இருப்பான் என்பது நிலையாகும்.

கலவு செலவு

மனிதன் ஆன்மா என்ற நிலையிலிருந்து கேவலம் என்ற நிலையைத் தவிர்த்தல்போது ஆன்மா சுத்த நிலையை அடைகிறது என்பதை விளக்குவது இது.

கலவு = கலத்தல்

செலவு= பிரித்தல்

உடல் உறுப்புக்களுடன் (கருவிகளுடன்) கலத்தலும், அவற்றொடு பிரிதலும் இங்கு கூறப்படுகிறது.

மனிதன் உயிர் போதல் என்பது ஆன்மீக உச்சத்தில் உயர்ந்த நிலை. அது எவ்வாறாயினும் தவிர்க்க இயலாத நிலை. அதன் பிறகு தவறுகள் செய்யா நிலை. ஆனால் கேவலம் என்பது மனிதன் படும் துன்பங்களிலே பெருந்துன்பம் ஆகும்.

வாழுகின்ற இந்நிலவுலகில் வாழுகின்ற வரை நல்ல செயற்பாடுகளுடன் வாழ வேண்டும். பிறருக்குத் துன்பம் இழைத்தல் கூடாது. துரோகம் இழைத்தல் கூடாது. மாறுபடின் அது கேவலத்திற்குரிய நிலையாகும். பிறர் இகழும்படி கேவலமாக வாழுகின்ற ஒருவன் எல்லா நிலைகளிலும் துன்பம் அடைகிறான். இது தவிர்த்தல் ஆன்ம தூய்மைடைய உதவும் என்பதனை,

கேவலந் தன்னிற் கலவுச் சகலத்தின்
மேவுஞ் செலவு விடவரு நீக்கத்துப்
பாவுஞ் தனைக் காண்டன் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்திற் சித்தமே

என்ற பாடல் வழி......

கேவல அவத்தையில் விளங்கிய ஆன்மா கருவி கரணங்களோடு கலக்க அது மற்ற அவத்தைகளை ஏற்படுத்தும். கருவி கரணங்களை விட்டபோது (உடல், ஆசை அது ஏற்படுத்தும் கெட்ட செயல்களை விட்ட போது) மற்ற அவத்தைகள் ஆன்மாவிலிருந்து பிரியும். மேற்கண்ட இரு அவத்தைகளை விட்டு ஆன்மா தன்னுடைய அகண்ட உருவத்தைப் பெறுதல் ஆகிய மூன்றாவதும் (1) கேவல அவத்தை (2) மற்ற அவத்தை (3) இரண்டையும் தவிர்த்து ஆன்மா படருதலில்லாத தீமை நீங்க மேன்பட்ட நிலையில் பொருந்தியிருத்தலே சுத்த நிலையாகும்.

அதாவது, மனிதன் சுத்த நிலையை அடைய வேண்டுமெனில் கேவலம் மற்றும் சகல அவத்தைகளிலிருந்தும், ஆன்மாவை விடுவித்து மேன்பட்ட நிலையில், உயர்ந்த நிலையில் வைப்பதே தூய்மை நிலையாகும்.

மனிதன் சினத்தை விட்டு அகலல், பொறுமை என்னும் கடவுள் நிலையில் தன்னை நிறுத்தியிருத்தல், இறைவன் எண்ணத்தில் வாழுதல் போன்றவை, இருள் அகன்று இறைவனின் ஆகாய ஒளியில் அமரவைக்கும் என்ற நிலையை,

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை

அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்

கல்லும் பிளந்து கடுவெளி யாமே

என்ற பாடல் வழி,

முக்குற்றங்களில் ஒன்றாகிய (காமம், வெகுளி, மயக்கம்) சினத்தை முடிந்த அளவு விலக்கி மனத்தை இயன்ற மட்டும் இறைவனின் நினைவில் நிறுத்தி, இரவும், பகலும் இறைவனின் நினைவில் இறை ஒளிபெற்று அமைதியானால் கல்போன்ற உறுதியான பாசம் (ஆசை) என்னும் இருளகன்று பரமனின் ஆகாய வெளியில் மனிதன் அமரலாம்.

அதாவது, மனிதன் சினம், தவிர்த்து, ஆசை தவிர்த்து எக்காலமும் இறை நினைவில் வாழ்ந்தால் வீடு பேறு கிடைக்கும் என்பதாம்.

இவ்வாறு மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற நிலைகளை 8-ஆம் தந்திரத்தில் இடம் பெற்றுள்ள முக்குண நிர்க்குணம், அண்டாதி பேதம், கலவு செலவு ஆகியவற்றின் மூலம் திருமூலர் விளக்குகிறார்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

78. பதினொராந் தானமும் அவத்தையெனக் காணல்

முனைவர். திருமதி. நா. வள்ளி
பேராசிரியை, இராமசாமி தமிழ்க்கல்லூரி
காரைக்குடி

சோழநாட்டுச் சிவப்பதிகளுள் ஒன்று திருவாவடுதுறை. இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்களில் திருமூலரைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் புரட்டாசி மாதத்தில் ஏழு நாட்கள் விழா நடந்திருக்கிறது. திருவிழா மூல நட்சத்திரத்தன்று கொடியேற்றத்தோடு தொடங்கி பூரட்டாதி நட்சத்திரத்தன்று தீர்த்தம் ஆடலோடு முடிந்திருக்கிறது. பூரட்டாதி நட்சத்திரம் அன்று திருமூல நாயனார் நாடகம் நடத்தப்பட்டது என்பதையெல்லாம் அங்குள்ள கல்வெட்டுக்கள் நமக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, இத்தலத்தில் தைமாதந்தோறும் பிரமோற்சவ விழா நடைபெறுகிறது. இவ்விழாவின் இரண்டாம் நாள் விழா திருமூலரோடு தொடர்புடைய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று காலை இறைவன் திருமேனியுடன் திருமூலர் திருவுருவமும் எழுந்தருளப்பெறும். திருமூலர் திருவுருவத்தின் முன்பு ஒரு பசுவும் கன்றும் கொண்டு செல்லப்படும். சுவாமி திருமூலர் வீதி வலம் வந்து சந்நிதியை அடைந்த பிறகு திருமூலர் வரலாறு வாசிக்கப் பெறும். பின்பு பசுவுக்கும் கன்றுக்கும் பூசை நடைபெறும். இவ்வழக்கம் இன்றளவும் காணப்படுகிறது.

திருவாவடுதுறைக்கு அருகே உள்ள சாத்தனூர் இடையன் வரலாறு திருமூலர் வரலாற்றோடு தொடர்புடையது என்பது நாம் அறிந்ததே. திருமூலர் பெயரால் பல இடங்களில் மடங்கள் இருந்திருக்கின்றன. அவ்விடங்கள் இன்ன என்பதைக் கோகழி அடிகள் பாடிய *தத்துவ ரத்தினாகரம்* என்னும் நூல்,

கயிலையில் இமயம் தன்னில் கங்கையில் கூவந்தன்னில்
பயிலுமா முண்டமான மடத்துடன் பருப்பதத்தில்
இயலு காளத்திதன்னில் பெருமதில் காஞ்சி தில்லை
முயலு தண்துறையே தென்றல் கிரியிடை

ஆகிய இடங்களில் மடங்கள் இருந்ததாக அறிவிக்கிறது.

மேற்கூறிய செய்திகள் அனைத்தும் திருமூலர் வரலாற்றிலும் அவரது நூலான திருமந்திரத்திலும் மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றனவாக உள்ளன.

பன்னிரு திருமுறைகளைத் தோத்திர நூல்கள் என்று பொதுவாகக் கூறினும், பத்தாம் திருமுறையான திருமூலரின் திருமந்திரம் சாத்திரநூலாக விளங்குகிறது என்பதே உண்மை. யோக நெறிகளையும் ஞான நெறிகளையும் விளக்கும் திருமந்திரம், திருவுந்தியார் போன்ற நூல்களை மற்ற இலக்கியங்களைப் படிப்பது போல் படித்துப் பொருள் காண்பது கடினமே.

தான் பெற்ற இன்பத்தை வையகமும் பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் பாடப்பட்ட நூல் திருமந்திரம். நில்லா உலகத்தில் நிலைத்த இன்பம் பெற அதாவது முக்தி என்கிற வீடுபேற்றை அடைய வழிசொல்லும் நூல் இது. வெல்லுவது வேல். மின்னுவது மீன் என்பது போல, விடுவது அதாவது உலகப்பற்றை விடுவது வீடு. அதனால் பெறுவது பேறு. அதாவது வீட்டின்பப் பேறு. வீட்டின்பப் பேற்றை, மீண்டும் பிறவாத நிலையை அடைய வழிகாட்டும் இந்நூலைப்பற்றிச் சொல்லவந்த ஒரு புலவர்,

திருமூலர் தேவனையே சிந்தை செய்வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்

என்கிறார்.

திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்கள் உள்ளன. முதல் தந்திரம் காரணாமகத்தின் சாரத்தையும், இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரத்தையும், மூன்றாவது தந்திரம் வீராகமத்தின் சாரத்தையும், நான்காம் தந்திரம் உயர் சிந்தாகமத்தின் சாரத்தையும், ஐந்தாம் தந்திரம் வாதுள ஆகமத்தின் சாரத்தையும், ஆறாம் தந்திரம் வியாமன ஆகமத்தின் சாரத்தையும், ஏழாம் தந்திரம் கலோத்தர ஆகமத்தின் சாரத்தையும், எட்டாம் தந்திரம் சுப்பிர ஆகமத்தின் சாரத்தையும், ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரத்தையும் அறிவிக்கின்றன.

எட்டாம் தந்திரம் சாத்திரப் பகுதியாக அமைந்துள்ளது. உடம்பின் இயல்பை விளக்கி, உயிரின் இயல்பைத் தெளிவித்து முக்திநெறியை விளக்குவது இப்பகுதி.

இத்தந்திரத்தின் பதினொராவது பகுதியாக பதினொராந்தானமும் அவத்தையெனல் என்ற பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் காணப்படும்

பாடல்கள் மூன்றுதான். இதற்குப் பொருள் காண்பதில் அறிஞர்கள் வேறுபடுகிறார்கள்.

துவாதச கலைகள் பன்னிரெண்டாகும். அவை, மேதை, அருக்கீசம், விடம், விந்து, அர்த்தசந்திரன் நிரோதி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாமினி, சமனை, உண்மனை என்பவனவாம். ஒவ்வொரு கலைக்கும் மனித உடலில் ஓர் இடமுண்டு. துவாதச கலையில் பதினோராவது கலையாகிய *சமனை* என்பது பதினொராந்தானமாகக் கூறப்படுகிறது. சமனைக்குரிய இடம் சிரசின் மேற்பகுதியாகும்.

ஐந்தாவது கலையாகிய அர்த்தச் சந்திரனுக்குரிய இடம் புருவ நடு ஆகும். புருவ நடுவை விழிப்படையச் செய்தால், ஊனினை உருக்கி உள்ளொளி பெருகச் செய்தால், அமுத மயமான சந்திரனொளி பெருகும். சிரசினுள் ஏழாவது கலையாக விளங்கும் நிரோதினி கலையை உணர்ந்தால் பேரானந்தம் உண்டாகும். விந்து ஜெயம் பெறுதல் பிரணவமாகும். குரு உபதேசம் பெறும்போது வீரிய இழப்பின்றி இருக்க மந்திரசக்தியுடைய தருப்பைப்புல்லினால் ஆன கயிற்றைச் சீடனில் இடுப்பில் குருவானவர் அணியச் செய்வார். இதன் தத்துவம் வீரிய இழப்பின்றிக் காயத்ரியை செபிக்க அவ்வீரியமானது மாறிச் சிரசில் ஒளியையும் நாதத்தையும் உண்டாக்கும். இதுவே பிரணவம் எனப்படும்.

ஒன்பதாவது கலையான சத்தியானது வஞ்சகத்தைச் செய்யின் பதினோராவது கலையாகிய உள்மனையைத் துலங்கச் செய்யாமல் ஆன்மாவை பொறிகளின் வழி செலுத்தும். ஆதனால் மூலதாரச் சக்கரத்திலுள்ள குண்டலினி சக்தியே பொறிகளின் வழி ஆன்மாவைச் செலுத்தாது காத்து அருள்வாயாக என்று குண்டலினி சக்தியை நோக்கி முறையிடுவது போல அமைந்துள்ளது பின் வரும் பாடல்,

அஞ்சில் அமுதும் ஓரேழின்கண் ஆனந்தம்
முஞ்சில் ஓங்காரம் ஓரொன்பான் பதினொன்றில்
வஞ்சகமே நின்று வைத்திடிற் காயமாம்
கிஞ்சுகச் செவ்வாய் கிளிமொழி கேளே

இங்கு, கிஞ்சுகச் செவ்வாய் கிளிமொழி என்பது குண்டலினி சத்தியை. சத்தியானது ஆன்மாக்களை உலக நோக்கில் செலுத்தின் நாதமான பேரின்பம் சித்தியாகாது என்ற கருத்துடைய பாடலிது. அவனருளாலே அவன்தாள் வணங்குவதைப்போல பேரின்பத்தைப் பெற சக்தியின் அருள் வேண்டும்.

புருடனுடனே பொருந்திய சித்தம்
அருவமொடு ஆறு அதீதத் துரியம்
விரியும் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதினொன்றுமாம் அவ்வவத்தையே

மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றும் அடங்கிய மனமண்டலம் சித்தம் எனப்படும். இம்மன மண்டலத்தில் அருவமான சிவதத்துவம் ஐந்தும் புருட தத்துவத்துடன் கூடி ஆறாகும் விளங்கும் நிலையே துரியாதீதமாகும். அதாவது உயிர்கள் உடம்பொடு கூடிவாழும் நிலையில் நாள்தோறும் ஐந்து அவத்தைகளை அடையும். அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. அவற்றைத் தமிழில் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், மூச்சு அடங்கியிருத்தல் என்பர். சுழுத்தி என்பதான நிலையில் மனம், புத்தி, அகங்காரம், சப்தம்,ஸ்பரிசம், ரூபம், கந்தம், இரசம் ஆகிய புரியட்டக தேகமானது விரிந்து விளங்கும். சாக்கிர மற்றும் சொப்பன நிலைகளில் அருமையான வித்தியாதத்துவம் ஏழும் அந்தக்கரணம் நான்கும் தொழிற்படும் என்று இப்பாடலில் சித்தத்தில் உயிரானது பொருந்தி நிற்கும் அவத்தைகள் பற்றி உரைக்கப்பட்டுள்ளது.

மாயை என்னும் மூலப்பொருளிலிருந்து தோன்றும் காரியமே உலகமும் உலகப் பொருள்களும். மாயை சுத்த மாயை என்றும் அசுத்த மாயை என்றும் இருபகுதிப்பட்டு நிற்கும். அசுத்த மாயையில் தோன்றும் தத்துவங்கள் ஏழு, அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன. இத்தத்துவங்கள் ஏழும் வித்தியாதத்துவங்கள் எனப்படும். ஏழனுள் மாயை என்பது அசுத்த மாயையின் ஒரு பகுதியாகும். அதிலிருந்து காலம் முதலிய ஏனைய தத்துவங்கள் தோன்றும். உயிர்கள் வினைகளை ஈட்டுவதற்கும், வினைப்பயன்களை அனுபவித்துக் கழிப்பதற்கும் கருவியாய் இருப்பது காலம். அவரவர் வினைப்பயன் அவரவரைச் சென்று சேரும்படி செய்விப்பது நியதி, கலை என்ற தத்துவம் உயிரை மறைத்துள்ள ஆணவ மல மறைப்பைச் சிறிது நீக்கி அதன் கிரியா சக்தியை விளக்குவதாகும். வித்தை என்ற தத்துவம் உயிரின் ஞானசக்தியை அதாவது அறிவாற்றலை விளக்கும். உயிரின் செயற்பாட்டிற்கு மேற்கூறிய தத்துவங்கள் இன்றியமையாதன. அந்நிலையில் அவ்வுயிர் புருடன் எனப்படுகிறது. வித்தியா தத்துவங்கள் ஏழில் வினைக்குக் காரணங்கள் அமைந்துள்ளன. காரணங்களை அழித்துவிடின் மேலான சிவதத்துவம் விளங்கும். பொறிகளின் வழிச் செல்லாமல் சிவ நினைவில் நிற்கும் நிலை உண்டாகும். அதுவே அந்தக்கரணங்களின் ஆற்றல் கெடச்செய்யும் உபாயமாகும் என்ற பொருளில் அமைந்ததுதான் பின்வரும் திருமந்திரப் பாடல்,

காட்டும் பதினொன்றும் கைகலந்தால் உடல்
நாட்டி அழுத்திடின் நந்தி அல்லால் இல்லை
ஆட்டம் செய்யாத அது விதியே நினை
ஈட்டுமது திடம் எண்ணலு மாமே

வழிபாட்டில் உறுதிநிலை என்று கூறுவது 8 ஆம் தந்திரத்தின் உட்பொருள் எனலாம். திருமூலரின் திருமந்திரத்தில் இதுபோன்ற சாத்திரப் பகுதிகள் பலவாறாகக் காணப்படுகின்றன.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

79. அறிவுதயம்

*பேராசிரியர். முனைவர். **ச. முத்துக்குமரன்***
முன்னாள் துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

எட்டாம் தந்திரம் ஞானநிலையை விளக்குவது. அதில் 14-வது அதிகாரத்தில் மெய்யறிவின் தோற்றம் பதினான்கு மந்திரங்களால் விளக்கப்படுகிறது. முதன் நிலையில் அனுமானத்தால் தன்னை அறிதல், பின்னர் அனுபவத்தால் தன்னை முழுமையாக அறிந்து கொள்ளுதல் ஆகியவை இவ்வதிகாரத்தில் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன.

மெய்யறிவு உயர்வைத் தரும்

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே

தன்னைத் தன்னுடைய இயல்பை அறிந்திருந்தால் மற்ற பொருள்களின் இயல்புகளை அறிவது எளிது. தானும் எந்த கேடும் அடையமாட்டான். தன் இயல்புகளை அறியாத காரணத்தினால்தான் மற்ற பொருள்களின் இயல்பை புரிந்து கொள்ளாது அறிவு கெட்டு அலைகின்றான். தனது இயல்பை உள்ளது உள்ளவாறு அறிந்தால் அவனைப் பிறர்வழிபடும் அளவிற்கு அவன் உயர்வான்.

அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று
சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரேலெனப்
பொங்கார் குழலியும் போற்றிஎன் றாளே

வலிமை பொருந்திய உள்ளமுடைய பெருமை வாய்ந்த தேவர் யாவரும் வணங்கும் சிவபெருமான் தன்னை அறிந்தவன் உள்ளத்து உறைவான். அதை உணர்ந்த தேவியும் தனது சங்கு வளையல்களும் சிலம்பும் ஒலிக்க மகிழ்ச்சியுடன் விரைந்து வந்து அப்பெருமானை வணங்குவாள். சிவனும் சக்தியும் உயிர்களுக்கு மெய்யறிவு உதயமாவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் என்பதும் உயிர்களுக்கு மெய்யறிவு உதயமாவது அவர்தம் விருப்பம் என்பதும் பெறப்படும்.

மெய்யறிவைப் பெறுவது உயிரே

அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே

நான் என்பது என் உருவம் என்று மயங்கி இருந்தேன். என் குருவான நந்திதேவன் அருளால் நான் என்பது அறிவு, என் உருவம் அன்று என்பதை உணர்ந்தேன். அதாவது குரு அருளால் அறிவு உதயமாயிற்று.

அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுகள் தாமே

"அறிவுக்கு ஆக்கமும் அழிவும் இல்லை. உடம்புக்குத்தான் தோற்றமும் கேடும் உண்டு. அறிவுக்கு ஆதாரம் அறிவே ஆகும். உடல் அல்ல. ஆகவே அறிவை அறிவது அறிவே ஆகும்". என்று மறை நூல்கள் யாவும் கூறுகின்றன. அதாவது உயிருக்கு உடம்பு பற்றுக்கோடாகாது. சிவமே பற்றுக்கோடு. ஆகவே மெய்யறிவான சிவத்தை அறிவது உயிரே.

மெய்யறிவைப் பெறும் வழி

இவ்வுலகில் பலரும் குழுமி வாழ்கின்றனர். அவர்களுள் ஒருவனாக வந்து அருள் செய்ய வேண்டும் என்பதே இறைவனின் சித்தம். அங்ஙனமே சிவன் வந்து நிற்பான். அவன் நிற்கும் போது அவனை அறிந்து போற்றி அவனை விடாது பற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு பற்றிக் கொள்பவர்களை இறைவன் பாராட்டுவான். அதாவது இறைவன் குரு வடிவில் தோன்றுவான். அந்த ஆசானைக் கண்டு கொண்டு அவன் வழியாக மெய்யறிவு பெறுதல் வேண்டும்.

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல் -குறள் :415

என்பது வள்ளுவர் வாக்கு.

எது மெய்யறிவு?

சிவனையே பொருளாக உணர்ந்து அவனிடம் அன்பு செய்தேன். அதனால் அவனை உணர்ந்து பயன் பெற்றேன். அதாவது நம் அறிவு

மெய்யறிவு ஆயின் அதனைச் சிவனும் உணர்ந்து பயன் தருவான். அத்தகைய அறிவால் வீடுபேறு மட்டும் அல்லாது இடையே சித்திகள் யாவும் தாமே வந்து சேரும். அதாவது சிவனை மெய்ப்பொருளாக அறியும் அறிவே மெய்யறிவு.

மெய்யறிவைப் பெற்றவர்

அறிவு வேண்டும், வேண்டும் என்று உலக மக்கள் அலைகின்றனர். ஆனால் சாதாரண மக்கள் பெறுவது உண்மையில் அறியாமையே. இதை அவர்கள் அறியமாட்டார்கள். அந்த அறியாமை நீங்கிய பின்னர் முன்பு அறியாமையை அறிவு என்று நம்பியது தெரிந்து நகைப்பு உண்டாகும்.

அறியாமை நிலையினின்றும் நீங்கி அறிவு பெற்றவன் ஐம்புலன்களின் வழி பெறும் சிற்றின்பத்தில் மூழ்கி இருக்கும் நிலையில் இருந்து விடுபட்டு உண்மையான இன்பநிலையை எய்துவான். அந்நிலையில் அறிவாய் இருந்தவனும் சீவனாய் இருந்தவனும் தானே ஆதல் அவனுக்கு விளங்கும். திருவள்ளுவர் எது அறிவு என்பதைப் பின்வருமாறு விளக்குவார்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு -குறள் 422.

மேலும் அவர்,

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு -குறள். 354

என்பார். ஐம்புலன்களையும் அடக்கி தன்வயப்படுத்தியவருக்கு மெய்யுணர்வு இல்லையானால் பயனில்லை என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது மெய்யுணர்வு பெற்றவன் ஐம்புலன்களினால் பெறும் சிற்றின்பத்தை வேண்டான் என்று அறிகிறோம்.

மெய்யறிவை அடைந்தவர் நெஞ்சம் மிகப்பெரியது. செயற்கரிய செயல்களைச் செய்யும் ஆற்றல் பெற்றது. அதனால் முதற் கடவுளான சிவனும் அவர்தம் நெஞ்சங்களாகி அவற்றின் கண் நீங்காமல் நிற்பான். அதாவது மெய்யறிவு பெற்றோர் மனம் சாதாரண மக்கள் மனம் போன்று இல்லாது மிக உயர்ந்த சிவ மனமாக மாறிவிடும்.

உடல், நல்லுலகம் ஆகியவற்றின் முதல்வன் சிவபெருமான். அச்சிவபெருமான் அயன் மால் அரன் என மூவராய் நின்று அவர்களை முத்தொழிலில் ஈடுபடுத்தி, தான் சேய்மையில் நிற்பான். சீவர்கள் முக்தி பெறும் காலத்தில், அயன் மால் அரன் ஆகிய மூவர்க்கும் மேலான

மூர்த்தியாக வெளிப்பட்டு சீவர்கள் அருகில் கரும்புபோன்றும் அமுதம் போன்றும் இனிப்பாக நிற்பான்.

பெற்ற அறிவை வளர்த்தல்

என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னை யிட்டென்னை உசாவுகின் றானே

இவ்வளவு காலமும் நான் என்னை அறியாது வாழ்ந்தேன். குரு அருளால் என்னை நான் அறிந்தபின் முந்தைய நிலை ஒழிந்தது. நான் நானாகிய இந்த நிலையை நழுவ விடாமல் உறுதியாகப் பற்றி எனது உண்மை இயல்பை நான் ஆராய்ந்து வருகிறேன். அதாவது அறிவை உணர்ந்த நான் அதை வளர்த்து வருகிறேன்.

மெய்யறிவின் பயன்

மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே

நம் உடல் ஒரு மாய விளக்கை ஒத்தது. இது நிலையற்றது. சிலகாலம் இருந்த பின் மறைந்து விடும். இது வருத்தத்தைத் தருவது. பசி பிணி இவற்றைத் தந்து நம்மைத் துன்பத்துக்குள் ஆழ்த்தும். திருவருளாகிய விளக்கு தொலைவில் உள்ளது. அது என்றும் நின்று ஒளிரும். அது தூய்மையானது. மிகுந்த இன்பம் தரவல்லது. அதனை அடைய நான் அலைந்து கொண்டிருக்கிறேன். அதாவது மெய்யறிவை உணர்ந்தவர் இன்பம் பெறுவர். மேன்மேலும் இன்பம் பெற இறைவன் திருவருளை நாடுவர். இங்கு திருவள்ளுவர்,

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு -குறள் 352

என்றது ஒப்பு நோக்கத்தக்கது. மயக்கம் நீங்கி குற்றம் தீர்ந்த மெய்யறிவினர்க்கு அவ்வுண்மை அறிவு துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

நல்லதே உடையவனாயும் தீதே இல்லாதவனாயும் உள்ள சிவனது அருளே எல்லாவற்றுக்கும் மேலான துணை என்று உணர்ந்து அதைப் பெற

விழைகிறேன். அதை எல்லாத் திசைகளிலும் தேடுகின்றேன். அதனைத் துதிக்கின்றேன். இவ்வாறு நான் மனத்தளவில் சிவன் அருளைப் பெற்று விட்டேன். அதாவது மெய்யறிவைப் பெற்றவன் சிவனைக் காண முயல வேண்டும்.

முன்னம் பழம் பொருளுக்கும் முன்னைப் பழம் பொருளான முதல்வன் சிவபெருமான், அவனது விளையாடலால் வந்த மாயையில் மூழ்கி இருந்த ஒருவன் அம்மாயைகள் வந்த வழியே திரும்பப் போகச் செய்து தன்னை அறிந்து தன் தலைவனான சிவபெருமானை உணர்ந்து அவனது திருவடியை அடைந்து அவனுடன் இரண்டறக் கலந்தால் அதன் பின்னர் அவனுக்கு வேறு பிறவிகள் வாரா.

முன்னை முதல்வினை யாட்டத்து முன் வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தாள்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே

முடிவுரை

திருவள்ளுவர் மெய்யுணர்தல் குறித்து கூறியவை நினைவு கூரத்தக்கவை. அவர் மெய்யுணர்வு இல்லாதவர்க்கு மறுபிறவி உண்டு என்றும், மெய்யுணர்வு பெற்றவர்க்கு மேலுலகு வெகு அருகில் உள்ளது என்றும், மறுபிறவி இல்லை என்றும் பின்வருமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும்
மருளான் ஆம் மாணாப் பிறப்பு -குறள் 351

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து -குறள் 353

கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி -குறள் 356

ஓர்த்து உள்ளம் உள்ளது உளரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு -குறள் 357

பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎனும்
செம்பொருள் காண்பது அறிவு -குறள் 358

சார்பு உணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய் -குறள் 359

மேலும் மெய்கண்ட தேவர் தமது சிவஞான போதத்தில் சொல்பவை ஒப்பு நோக்கத்தக்கவை. அவர் அவையடக்கத்தில்

தம்மை உணர்ந்து தமை உடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை

என்பார். தன்னை உணர்ந்து தனது தலைவனை சிவனை உணர்ந்தவர் என்னுடன் சேர்ந்தவர் ஆவார். எனவே நான் சொல்லியதை ஏற்பார் என்பது பொருள். மேலும் பத்தாவது சூத்திரத்தில்,

அவனே தானேயாகிய அந்நெறி
ஏகனாகியிறை பணி நிற்க
மலம்மாயை தன்னோடு வல்வினையின்றே

என்று சொல்வார். இறைவன் வேறு தான் வேறு என்ற வேறுபாட்டை நீக்கி அவன் செயல் தன்செயலாகி, மலம் மாயையைப் போகச் செய்து தூய்மைப்படுத்தி வல்வினையில்லாத நிலையை அடைந்தான். அத்தகைய உயிர்க்கு வல்வினை இல்லாததால் மறு பிறவி இல்லை. ஆகவே மெய்யறிவை உணர்ந்து பிறவி அறுப்பதுவே உயிர்களின் உண்மைக் குறிக்கோள் என்பது சைவ சமய அடிப்படை என்பதை அறிவோமாக.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

80. பதி பசு பாசம் வேறாண்மை, அடிதலை அறியும் திறம் கூறல்

பேராசிரியர். **சி. சேதுராமன்**
தமிழ் விரிவுரையாளர், மாமன்னர் கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை

திருமுறைகளுள் சிறப்பாக திருமந்திரம் எனத் திருப்பெயர் பெற்றுத் திகழ்வது பத்தாம் திருமுறையாகும். இதற்கு மந்திரமாலை என்னும் மற்றொரு திருப்பெயரும் உண்டு. இத்திருமந்திரம் தமிழ் வேதாகம முழுமுதற் கருவூலமாகத் திகழ்கின்றது. இந்நூல் ஒன்பது தந்திரங்களையும் ஒருநூற்றுத் தொண்ணூற்று ஐந்து உட்தலைப்புகளையும் கொண்டிருக்கின்றது. இதில் இடம் பெற்றுள்ள எட்டாம் தந்திரம் கூறும் பதி பசுபாசம் வேறாண்மை பற்றியும் அடிதலை அறியும் திறம் கூறல் பற்றியும் இக்கட்டுரை தெளிவுற எடுத்துரைக்கிறது.

பதி-சிவன்: பசு-உயிர்: பாசம்- மூன்று

பாசத்தால் கட்டுண்ட உயிரைப் பசு என்பர். ஆணவம் பாசம் எனப்படும். பசுக்கள் பிரமன் முதலாகச் சொல்லப்படும் எண்ணில்லாத பல கோடி உயிர்களாகும். அப்பசுக்களைக் கட்டிய பாசமும் மூன்றென்பர். அம்மூன்றும் ஆணவம், கன்மம், மாயை என்பதாகும். சிவபெருமான் (பதி) திருவருளால் பசுத்தன்மை நீங்கினால் அப்பாசமும் அறும். அறுக்கப்பட்ட ஆருயிராகிய பசுக்கள் பதியாகிய தலைவனைப் பற்றிக் கொண்டுவிடும். இதனை,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு

எனத் திருவள்ளுவர் மொழிகிறார்.

பாசப்பிணிப்பிலிருந்து விடுபட கைக்கொள்ள வேண்டியவை

ஆருயிர்கள் அப்பாசப்பிணிப்பினின்றும் விடுபட கைக்கொள்ள வேண்டிய பொருள்கள் மூன்று. அவை இன்பமும் பொருளும் அறனும் என்பர். இம் மூன்றின் வழியொழுகினார் திருவடி எய்தற்குரிய நானெறியில் நடப்பர். அந்நானெறியுள் சீலத்தின் பயனாக நோன்பும், நோன்பின் பயனாகச் செறிவும் கைகூடும். இம்மூன்றின் வழி முடிந்த பயனாகிய அறிவு கைவரும். அவ்வறிவாகிய திருவடியுணர்வை நாள்தோறும் நோக்கல் நோக்கமாகக் கருதி ஒழுகி வருதல் வேண்டும்.

அப்படி ஒழுகி வந்தால் பாசப்பிணிப்பு ஒன்றும் இன்றாகும். அதன்பொருட்டு சிவபெருமானைத் திருமுறை ஓதி இடையறாது தொழுங்கள். *தொழுதால் குடக்குன்றிலிட்ட விளக்கதுவாமே* என்கிறார் திருமூலர்.

குடத்திலிட்ட விளக்காய் இருந்த ஆன்மா குன்றிலிட்ட விளக்காய் மிளிரும் என்கிறார்.

பதி,பசு,பாசம்- ஒன்றனுள் ஒன்று அடக்கம்

பதி, பசு, பாசம் மூன்றும் மீநிறைவு, வீழ்நிறைவு, மிடைநிறைவு என்ற முறையில் ஒன்றனுள் ஒன்று அடங்கி விளங்கும். இவற்றை முறையே வியாபகம், வியாப்பியம், வியாத்தி என்பர். பதி-மீநிறைவாகும். பசு- வீழ் நிறைவாகும். பாசம் - மிடைநிறைவாகும். இம் முப்பொருள் உண்மை விரிக்கும் திருவைந்தெழுத்தை நாளும் இடையறாது பொருட் குறிப்புடன் ஓதி வருதல் வேண்டும். அங்ஙனம் பயின்று வருவார்க்கு பாசப்பற்றை அறவே நீக்கியருள்வான். அத்திருவருள் கிட்டிய பின் பசு, பாசம், ஒளி முன் இருள் போன்று அவ் ஆருயிர்க்கண் நில்லாது.

பசுவின் பிணித்துன்பத்தை நீக்கல்

யாங்கணும் அறியும் தன்மை வாய்ந்த அணுவாகிய ஆருயிர் மூவகைப்படும். அவை ஒரு மலம். இருமலம். மும்மலம் என்னும் பிணிப்பால் ஆவன. அம் மூன்றுமே யாங்கணுமாக நீக்கமற நிற்கும் நிலைமையினை அறிந்த பெரும் பொருள் சிவபெருமானாவான். அவன் தொன்மையிலுள்ளவன். எங்கும் நிறைந்தவன். ஆருயிர்களின் பிணித்துன்பத்தினின்றும் விடுவிக்கத் துணிந்தனன். அவற்றிற்கு வேண்டிய உடல் கலன் உலகு உணா முதலியவற்றை மாயாகாரியமாகப் படைத்தருளினன் இறைவன். இதனை,

அறிந்த அனாதி வியாத்தனு மாவன்
அறிந்த பதிபடைப் பானங் கவற்றையே

என்கிறார் திருமூலர்.

பசு பதியை அடைதல்

ஆருயிர்கட்கு உடல் கலன் உலகு ஊண் முதலியவற்றைப் படைத்தருள வேண்டுமென்று தொன்மைக்கண் திருவுள்ளங் கொண்டது முழுமுதற் பெரும் பொருளாம் சிவம் ஆகும். அச்சிவன் மாயையினின்று இவற்றைப்

படைத்து உயிர்கட்கு அளித்துக் காத்தருள்கின்றான். அந்நுண் தொழிலைச் சிவபெருமான் செய்தருளுவதனால் ஆருயிர்கள் மலப்பிணிப்பினின்றும் விடுபடுகின்றன. விடுபடவே தூய்மை எய்துகின்றன. தூய்மை எய்துவதால் அச்சிவபெருமான் திருவடி நீழலை அவ்வுயிர்கள் எய்துகின்றன.

வீடுபேறு எய்தல்

குண்டலினியாகிய மாயையினின்று முப்பத்தாறு மெய்கள் சிவபெருமான் திருவுள்ளத்தால் தோன்றி விரியும். இம் முப்பத்தாறினையும் பகுக்குங்கால் உணர்த்து மெய் ஐந்து, உணர்வு மெய் ஏழு, உடல் மெய் இருபத்து நான்கு என்பனவாகும். ஆருயிர்கட்கு முடிந்த முடிவாக வேண்டிய கருவிகளையும் இவற்றாலேயே வகுத்தருளினன். பதி பசு பாசம் என்னும் உண்மைகளையும், தொடர்புகளையும் அருளால் உணரும் காலத்துப் பாசத்தினின்றும் பசு வேறாகும். வேறாகவே பதியினைச் சென்றெய்தும். எய்துவதே வீடுபேறாகும். இதனை திருமூலர்.

வேறாம் பதி பசு பாசம் வீடாகுமே

என்கிறார்.

பதி-பசுவாதல்- இரண்டும் ஒன்றே

பாசத்துடன் பயின்று வரும் ஆருயிர் முதல் பரமாகும். பரம்-சுமை. இயற்கையிலேயே சுமையுடையதாகுமென்பர். அப்பாசப்பிணிப்புச் சுமையுடைமையால் அவ்வுயிர் பசு எனப்பட்டது. ஆருயிர் பாசம் பயின்று தூயனாதற் பொருட்டுப் பதியும் அப்பசுவுடன் கலத்தலால் பதியும் பசுவாகும் என்பர். இது நோயாளிக்கு மருந்து சேர்த்துக் கொடுப்போன் அம்மருந்துடனும் நோயாளிடனும் தொடர்பு கொண்டிருப்பதையொக்கும். இதனை, *பாசம் பயிலப் பதி பசுவாகுமே* என்கிறார் திருமூலர்.

அடிதலை அறியும் திறம் கூறல்

தலையடி

ஆருயிரின் உடம்பகத்துத் தலை உச்சியிலுள்ளது. அடி என்பது வழியாகவுள்ளது. இவ்வுண்மையினை அருளால் அறியார். தலையடி என்பது *சிவ* என்னும் செந்தமிழ்ப் பெருமறையாகும். இவ்வறிவை அறிந்தோர் சிவமாகவே இருந்து இன்புறுவர்.

தலையடியான அறிவை அறிந்தோர்
தலையடியாகவே தானிருந்தாரே

என்கிறார் திருமூலர்.

திருவடியைத் தலையிற் சூடல்

நெருங்க வொண்ணாத ஆறாதார அகநிலை ஒளிக்கு அப்புறமாய் அதன் மேலுமாய் விளங்குவது அருட்பெரும் அறிவுப் பெருவெளி. அங்கு பொருந்தி எழுந்தருளியிருப்பவன் என் முழுமுதற் தலைவனாகிய சிவபெருமானாவான். அவனது திருப்பெயராம் மந்திரத்தை உரைத்தல் செய்யவும் ஒண்ணாது உன்னுங்கால் ஏதாவது ஓர் உருவம் மனத்து முன் தோன்றும். ஒலிக்குங்கால் ஒலி உருவம் செவிப்புலனாகும். இவ்விரண்டையும் கடந்து விரவி நின்றுணரும் மேல் நிலையாதலின் அங்ஙனம் ஓதியருளினார். அவற்றை அவன் அருளால் உணர்வின்கண் உணர்த்தியருளினன். அதனால் ஆருயிர்க்கிழவன் அவன் திருவடியைத் தலைச் சூடி நின்றனன்.

சிவபெருமானை நினைத்தல்

சிவபெருமானின் திருவடியினைப் பதம் வாய்ந்த விரிந்த மனநிலைக்கண் மாறாது நினையுங்கள். அப்படி நினைவார் மனத்து அவன் நீங்காது தங்கி நின்றருள்வான். அவன் இயல்பாகவே எங்கும் தங்கி நின்றருள்பவன். அனைவருக்கும் நாதன். விண்ணவர்கோனுக்கு முதல்வன். கருதாதவரை வெறுத்து நின்றனன். பரிபாகமுற்றாரைச் சிவன் தாங்கி நின்றனன்.

தலைக் கூடுதல்

தாமரையாகிய சுழுமுனை ஒன்றுண்டு. அதன்கண் தாது மிக்க அழகிய ஒள்ளிய மலரும் மூன்றுண்டு. அதற்குரிய தாள்களும் இரண்டுள. தாளிரண்டு. இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, மலர் மூன்று. மூன்று நரம்பும் கூடியமைந்த முடிச்சு உடம்பகத்து மூலக்கனலால் நன்றாக வெதுப்பியபோது உள்ளம் செவ்வி வாய்க்கும். செவ்வி வாய்த்த வல்லார்கட்கு வாய்த்த அப்பொழுதே சிவபெருமானைச் சென்று தலைக் கூடுதலுமாகும்.

திருவடியிணைகளை அறிவினிற் கொள்ளல்

பதியது தோற்றும் பதமது வைம்மின்

அதுவே அடிதலை அறியும் திறமாகும். அதனையே இடையறாது ஓதும் செயலை மேற் கொள்ளுங்கள். அச்சிவபெருமான்,

நதி பொதியுஞ்சடை நாரியோர் பாகன்

ஆவான். அவனைப் போற்றும் காலங்கள் நான்கு. அவை செவ்வொளிவானக் காலையும், வெள்ளொளி நண்பகலும், செவ்வொளி மாலையும் மையொளி நள்ளிரவுமாகும். இந்நாற்காலக் குறிப்பு,

காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு- மாலையில்
தாங்குருவே போலும் சடைக் கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு

என்ற காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுகிறார்.

முடிவுகள்

எட்டாந் தந்திரம் பேற்று வழிபாட்டாற் பெறப்படும் பேருறுதி வகுப்பதாகும்.

உயிரைப் பசுவென்றும், ஆணவம் உள்ளிட்ட மும்மலத்தைப் பாசம் என்றும், சிவபெருமானைப் பதி என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார். பதி, பசுவுடன் கலத்தலால் பதியும் பசுவாகும். இது வேறல்ல ஒன்றே என்கிறார்.

தலையடி அறிதலும், சிவபெருமானின் திருவடியைத் தலையில் நட்டலும், திருவடியிணைகளை அறிவிற் கொள்ளலும் அனுதினமும் சிவபெருமானை நினைத்தலும் அடிதலை அறியும் திறமாகத் திருமூலர் கூறுகிறார்.

திருச்சிற்றம்பலம்

81. முக்குற்றம், முப்பதம், முப்பரம், முத்துரியம்

வேம்பைப்புலவர். ஆறு. மெ. மெய்யாண்டவர்

முன்னுரை

சிவனொடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை -திருமந்திரம்.

பிறப்பிலியாகவும், பிஞ்ஞகனாகவும் பேரருளாளன் ஆகவும் இலங்கும் பரம்பொருளாம் பெரும் பொருளைப் பிறப்பறுக்கும் பெம்மானைப் போற்றிப் பாடப்பட்டனவே பன்னிருதிருமுறைகள். சைவ சித்தாந்தத்தின் சாரமாகவும் சிவனே செம்பொருள் எனச் செப்புவனவும் மேற்கூறிய திருமுறைகளே ஆகும். இவை தோத்திரம்/ சாத்திரம், பிரபந்தம், புராணம் என நான்குவகையாக அமைந்துள்ளன.

முதல் ஒன்பது திருமுறைகளும் தோத்திர வகையாயும், பத்தாம் திருமுறை சாத்திரவகையாயும், பதினொன்றாம் திருமுறை பிரபந்தமாகவும், பன்னிரண்டாம் திருமுறை புராணமாகவும்(பெரியபுராணம்) பகுக்கப் பெற்றுப் பனுவல்களாய்த் தமிழன்னைக்கு அணிகலன்களாய் இலங்குகின்றன. இவற்றுள் பத்தாம் திருமுறை சைவ சமயத்தின் சாத்திர நூலாய் விளங்கும் திருமூலர் இயற்றிய திருமந்திரமாகும்.

இந்நூல் கூறும் கருத்துக்கள் ஒன்பது தந்திரங்களாய்த் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் நுவலும் பொருள் இறை,உயிர், தளை என மூன்றுள் அடக்கம். இவை வடமொழியில் பதி, பசு, பாசம் எனப்படும். இறை (பதி) உயிர்களைக் காப்பது, பசு-உயிர். பாசம்- ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலப் பாசங்களில் உயிர்கட்டுண்டு கிடக்கிறது. இதைப் பற்றிய செய்திகளை எட்டாம் தந்திரத்தில் திருமூலர் முக்குற்றம், முப்பதம், முப்பரம், முத்துரியம் எனும் தலைப்புகளின் கீழ் விளக்குவாராயினர்.

முக்குற்றம்

ஆருயிர்களின் பிறப்புக்கு வித்தாய் இருப்பன மூன்று. அவை காமம், வெகுளி, மயக்கம் என்பனவாம். இம்மூன்றும் நம்மை முற்றாகத் துன்பத்தில் ஆழ்த்துவனவேயாம். மயக்கத்தால் தனக்குத் தகுதியற்ற பொருளை விரும்பி, விரும்பிய பொருள் கிட்டாத நிலையில் கோபம் உற்று அதனால் உயிர்கள் அழிகின்றன. அதனால் இன்ப துன்ப நுகர்ச்சிக்குட்பட்டுப்

பிறப்புக்கும், இறப்புக்கும் ஆளாகின்றன. இதனையே வான்புகழ் வள்ளுவர், காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றான் நாமம் கெடக் கெடும் நோய் என்றார். இச் செய்தியைத் திருமூலர்.

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்
தேமம் பிடித்திருந்தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசை யினுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப் பட்டவாறே!

என்றார்.

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றால் வரும் ஏமம்- துன்பம் எனப்பொருள் தருவர். ஓம் எனும் ஓசை உள்ளத்தில் தோன்றி அது உயிர்க்குத் தாமே இன்பம் தரும். உயிர் இறைவனோடு ஒன்றித்து நிற்கும் என்பார் திருமூலர். இதை இல்லங்களில் எப்போதும் ஏதோ ஒரு ஒழுங்கற்ற முறையற்ற சத்தம் கேட்கும். இந்தச் சத்தம் ஓம் ஒசையாய் மாற வேண்டும். இதை விநாயகர் அகவலில் ஔவையார் "சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி" எனச் சுட்டுவார்.

முப்பதம்

பதம் என்பது சொல்லைக் குறிக்கும்; இங்கே மூன்று சொற்கள் (முப்பதம்) சுட்டப் படுகின்றன. அவை தத், துவம், அசி என்பனவாம்.

உயிர்(சீவஉபாதி) படும் துன்பத்தளையிலிருந்து விடுபடுவதே தொம்பதம் ஆகும். (நீ) இறைவனது அறிவின் முடிவு தற்பதம்(அது) ஆகும். (அது) ஆன்மாவும் இறைவனும் ஒன்றுபடும் நிலை அசிபதம் (ஆகின்றாய்) ஆகும். "நீ அது ஆகின்றாய்!" என்பது பொருள். இதை அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் பின்வருமாறு அழகுறக் கூறுகின்றார்.

ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நின்றது தற்பரமே

பிறப்பு இறப்புகட்கு உட்பட்டுத் தோன்றும் உயிர் தொம்பதம் ஆகும். தொம்பதம் என்பதும் துவம் என்பதும் ஒன்றே. துவம் என்பது நீ எனும் பொருள் தரும். தத் பதம் என்பது அது என்னும் சுட்டுப் பொருளைத் தந்து சிவத்தைக் குறிக்கும், அசிதபதம் ஆகின்றாய் எனும் பொருள் தரும்.

எனவே துவம் தத் அசி எனமுப்பதமாய்ப் பிரிந்து நீ அது ஆகின்றாய் எனும் பொருள் தருவது மிகச்சிறப்பு. இதைத் திருமூலர்,

தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோடெய்தினோன்
ஆன்ற பராபரமாகும் பிறப்பற
ஏன்றனன் மானச் சிவமாயிருக்குமே

என இனிதே இயம்புவார். உயிர்களின் பிறப்பு அற உதவினன் (ஏன்றனன்) மானச்சிவமாயிருக்குமே என வரும்.

முப்பரம்

மேலாம் பரம்பொருள் தூல உடம்பு, சூக்கும உடம்பு காரண உடம்பு ஆகிய மூன்றனுள் கலந்து இயங்குவதால் முப்பரம் எனப் பேசப்பட்டது. பருவுடம்பு பிறவிக்குக் காரணமாய் அமைந்த காரண உடம்பு. இவை இரண்டும் அற்ற அறிவே வடிவமாய நுண்ணுடம்பு இவை சிவம்+அறிவு+பரம்= மூன்றும் கலந்து உடனாயும் வேறாயும் நிற்றலின் பரம் முப்பரம் எனப்பட்டது. அறிவு கொண்டு பருவுடம்பினின்றும் விலகி நுண்ணுடம்பால் சித்+அம்பரம்= சிதம்பரம் என்னும் தென்பால் உகந்தாடும் தில்லைக் கூத்தனை ஆகாயம் தலையின் உச்சியில் அமுத தாரையின் வாயிலாய் உணர்வது ஆனந்த கூத்தனாம் சிவபரம்பொருளையேயாகும்.

பரம்: மேலே இருப்பது அருவமாய் இருப்பது எங்கும் பரந்து விரிந்து எல்லா உயிர்களிடத்தும் கலந்து இன்பம் தருவது. இதையே ஆனந்தம். பரம்+ஆனந்தம். பரம்பொருளை உணர்ந்து விட்டால் பரம ஆனந்தம் என ஞானியர் நவில்வர். இப்பரம்பொருளைப் பற்றின்றிப் பற்றினால் இறைவன் நம் தலைவன் என்பதை உணர்ந்து விடலாம். இதையே திருமூலர்,

பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது
பற்றறப் பற்றிற் பரனறிவே பரம்
பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற்றிற் பரம்பர மாமே

என்றார்.

முத்துரியம்

இதுவும் தத்துவம் அசியை உணர்த்துவனவே எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். சிவதுரியம், சீவதுரியம், பரதுரியம் என்பனவே முத்துரியம் எனப்படும்

சிவதுரியம்

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி இவற்றில் நிலைகொண்டு இயங்குவது சிவதுரியம் எனப்படும்.

சாக்கிரம் - நனவு நிலை சொப்பனம், கனவு நிலை- சுழுத்தி-நினைவு சீவன்- உயிரானது நனவுநிலை கடந்து கனவு நிலையில் நின்று நினைவில் நின்றும் நீங்காமல் இறைவனைப் பேருறக்க நிலையில் உணர்வது, துரியம்- உறக்கம். துரியாதீதம் -பேருறக்கம். பரதுரியம்- பரம்பொருளின் சுவையை பேரானந்த உறக்கத்தில் மூழ்கி உணர்வது முத்துரியம் எனப்படும்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்தும், உரை, நடை, கொடை, போக்கு, இன்பம் என்னும் ஐந்தும் ஆகிய பத்து அவத்தைகள், பிராணன், உதானன் முதலான வாயுக்கள் பத்து. அந்தக்கரணம் எனப்படும் மனம், புத்தி, அகங்காரம் சித்தம் நான்கு. இந்த 34 அவத்தைகளும் ஆன்மா எனப்படும். புருடன் இயங்க உதவுகின்றன. இந்தப் புருடன் எனும் உயிர் அவத்தைகளில் நின்று விடுபட்டு இறையருட் பெருங்கருணையால் ஆட்கொள்ளப்பட்டுப் பரதுரியம் எனப்படும். பேரானந்தப் பேருறக்கத்தில் நிலைபெறச் செய்தலை விளக்கலே முத்துரியம் எனப்படும்.

இக்கருத்துகளை உள்ளடக்கி,

நனவாதி மூன்றினிற் சீவதுரியந்
தனதாதி மூன்றினிற் பரதுரியந்தான்
நனவாதி மூன்றினிற் சிவதுரியமாம்
இனதாகுந் தொந்தத்தசி பதத்தீடே

எனத் திருமூலர் திருவாய் மலர்ந்தருளினார்.

நிறைவுரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" எனத் திருமூலர் திருவாக்காலேயே தம் திருமந்திரச் சிறப்பை விளக்கினார். இத்தமிழமுதச் சாத்திரத் திருமந்திரத்திருமாலையாய் எண்ணி ஓதுவார் உயர்நிலை உய்குவார் என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

82. பரலட்சணம்

ஐயாறனடிமை, புலவர். **கோ. சுப்பிரமணியனார்**
திருவையாறு

முன்னுரை

உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபரம்பொருளின் திருவருளால் திருமூலர் வழி நமக்குக் கிடைத்த ஒப்பற்ற பரிசு- திருமந்திரம். நம் சைவத் தமிழ் மறையாம் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றிப் புகழப் பெறுவது.

திருமந்திரம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிமுறைகளின் வழி யோக நெறிக்கும், அதன்வழி அடையத்தகும் ஞான நெறிக்கும் முதலிடம் தந்து, அதற்கு அடிப்படையான உபதேச மொழிகளையும், கடவுளியல்பு, உயிரியல்புகளையும் உணர்த்தா நிற்கும். அந்நிலையில் எட்டாம் தந்திரத்தே பரலட்சணம் பற்றிய செய்திகளை பதினான்கு திருமந்திரங்கள் வழி விளக்கம் தருகின்றவற்றை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

1. சீவான்மாவும்- பரமான்மாவும்

அதீதத்து ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி அறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்-விட்ட மன்னுயிர் ஒன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே

சிவன், பரன், பதி என்பன ஒரு பொருட் பன்மொழி. மனிதன் தியானத்தமர்ந்து அதீதநிலை அதாவது ஞானநிலை கைவரப் பெற்ற ஆன்மா, தற்போதம் நீங்கி நிற்கும். அந்த உயிரே பதிநிலை பரமான்மா எனும் பெயரினைப் பெறும் என்பர். ஆக, பரமான்மாவை அடைந்ததும் சீவான்மாவும்- பரமான்மா எனும் பெயரினைப் பெறும் என்பதே இதன் கருத்தாகும்.

2. "ஆதியும் அந்தமும்....."பரம்பொருளின் தன்மை

பதியாகிய பரத்திற்குத் தோற்றமும், அழிவும் கிடையாது. அது எங்கும் நிறைந்த பேரொளியாகவும், உயிர்க்கு உயிராகவும் நிறைந்து நுண்ணிய விளக்காகவும் விளங்கி நிற்கின்றது. பிற பொருள்கள் போல வெளிப்படையாகத் தெரியாது. ஒரு சிலருக்கே தெரியும். எப்பொழுதும்

இது நடுநிலையாகவே இருக்கும். காலங்கடந்த இப்பரம்பொருளின் இயல்புகளை நன்கு உணர்ந்தவரே உயர்தவ சீலராவர்.

3. "துரியங் கடந்து......" ஆனந்தக் கூத்தன்தன் அற்புதத் தரிசனம்

திருமூலர் திருமந்திரத்தே கூறப்பெறுவன யாவும் சூட்சுமமாகவே அமைந்திருக்கும். அனுபவமுற்றோரே திருவருள் துணை கொண்டு அதனுள் அடங்கியிருக்கும் மறைபொருளை உணர இயலும். அம்முறையில் யோக நெறியில் அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, பிரமரந்திரம், துவாத சாந்தம் என்பன முறையே சரக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தைகட்குரிய தானங்களாகும். இதனுள் துரியத்தானமாகிய பிரமரந்திரத்தைக் கடந்து, அதீதத் தானமாகிய துவாத சாந்தத்தில் அரிதாகிய அம்பலத்தில் பொருந்தி ஆடுபவன் எம்பெருமானாகிய ஆனந்தக் கூத்தன். இந் நடனத்தை உள்முகத்தே காணுதல் பிரணவ கலைகளின் வழியாகத்தான் முடியும். இந்நிலையே யோகம் கைவரப் பெற்ற நிலை. மும்மல நீக்க முற்ற நிலையில்தான் இவ்வனுபவம் கிட்டும்.

4. "செம்மை முன் நிற்ப....." ஆன்ம ஞான அனுபவம்

மாணிக்க மணியின் செந்நிறம் முன்னின்ற போது பளிங்கின்வெண்மை நிறம் அச்செந்நிறமாகவே தோற்றமளிக்கும். அதுபோல நிலையான "பரம்பொருள்" நம்முன் வந்து நின்றபோது ஆன்மாவின் சுயவண்ணம் அப்பரம்பொருளின் வண்ணமாகவே இரண்டறக் கலந்து நிற்கும். அப்போது இதுகாறும் நிலையற்ற பிரபஞ்சத்தை அனுபவித்து வந்த ஆன்ம ஞானம், பாசஞானமாய் இருந்த நிலை மாயும். இந்நிலையில் சிவம் மேரு மலையாகவும், ஆன்மா மேருவை அடைந்த காகம் போல இருக்கும் என்பர்.

5. "வைச்ச கலாதி....." குருநாதன் தன் கருணை

இனி, பரம்பொருள் உயிர்கட்கு முடிநிலைப் பயனை அருளுவதை இதன் மூலம் விளக்குகிறார். அதாவது, என் குருநாதனாகிய நந்தியம்பெருமான், சிவபரம் பொருளால் எனக்கென- என்னொடு கூட்டி வைத்த கலை முதல் நிலம் ஈறாக் வருகின்ற தத்துவங்கள் அனைத்தையும் - அதனதன் தன்மை கெட்டு சிவகணங்களாகும்படியும் பின் அத்தத்துவங்கட்கு முதலாகிய அசுத்த மாயை, சுத்த மாயை ஆகிய இருமாயைகளையும் அடியொடு கெடும்படி செய்து, சிவசொரூபத்தை

அடையும்படி செய்கிறார். மேலும் இனியும் பிறவி வருமோ என்ற அச்சத்தை அகற்றி ஆட்கொண்டருளினார் என்கிறார்.

6. "என்னை அறிய....." பரம் பொருள் குருவாய் வந்தருளுதல்

என் பரமகுருநாதராகிய நந்தியம்பெருமான், முதலில் என்னையே யான் அறியுமாறு அறிவித்தருளினார். (ஆத்ம தரிசனம்), அதற்பின் என்னை யான் அறியாது நிற்கின்ற ஓர் இடத்திலே என்னைத் செலுத்தினார் (ஆன்ம சுத்தி), அதாவது சிவபோத மிகுதியால் சீவபோதம் தோன்றாது நிற்கின்ற திருவருள் நிலையில் செலுத்தினார். பின்பு, அவ்வாறு நின்ற ஒளிக்கு முதலாகிய பொருள் இன்னதென்பது புலப்பட்டது - (ஆன்ம லாபம்) அதற்பின், மேலான பொருளேயாகும்படி என் கைக்குள் வருமாறு அளித்தார் - என்பார்.

7. "பரந்துஞ் சுருங்கியும்......" பரம்பொருளின் அட்ட மூர்த்த நிலை

எல்லாம் வல்ல சிவபரம்பொருள், ஐம்பெரும் பூதங்களுடன் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) ஞாயிறு, திங்களுடன் ஆன்மாவும் இணைந்த எட்டினைத் தன் திருமேனியாக எங்கும் கலந்து, எங்கும் பரவி நிறைந்து காணப்படுகின்றான். அவனை யாரும் உணர்ந்து உய்திபெற அவனடி போற்றி நலம் பெற அழைக்கின்றார்- திருமூலர்.

8. "சத்தின் நிலையினில் ...." சிவஞானம் கைவரப் பெறல்

இறைவன் ஒன்றாயும், பலவாயும், உடனாயும் இருந்து அருளுபவன். ஆதலின், அட்டமூர்த்த வடிவில் இயங்குகின்றான். பரம்பொருள் என்றால் என்ன?- எங்கும், எதிலும் நிறைந்து காணப்படுபவன் அன்றோ! அவனை அறியும் அறிவு ஒன்றே அரனெறியாகும். அது, சிவாகம நெறிக்கண் நின்று, சிவஞானமே கண்ணாகக் கொண்டு மெய்ஞானப் பொருளாக - சிவஞானச் செல்வமாக இரண்டறக் கலந்து சிவபோகத்தை நுகர வேண்டும் என்பதே நாம் உணரவேண்டிய உண்மைக் கருத்தாகும்.

9. "மேலொடு கீழ்ப் பக்கம்......." சிவசத்தி வடிவத் தோற்றம்

உலக முழுமுதற் பொருள் சிவன்; உயிர்களிடத்துத் தாம் கொண்டுள்ள கருணையினால்தான் நினைத்த வடிவங்களைக் கொள்கிறான். அவற்றில் சிவ வடிவங்கள் யாவும் சத்தியிற் காணப்படும் என்றும், சத்தியில் காணப்படும் வடிவம் யாவும் தானாகத் தோன்றி நிற்பன என்றும்,

சத்தியிடமாகவன்றிச் சிவன் தானாகத் தோன்றான் என்றும், சிவனுக்கு வடிவம் சிற்சக்தியே என்னும் சித்தாந்த விளக்கங்களையெல்லாம் இங்கே காணலாம்.

10. "வேறாமதன் தன்மை.... "பேதமற்ற சத்தி பேதம்

சத்தியே: சத்தி, ஆதிசத்தி எனப் பெயர் கொண்டு செயலாற்றும் பொழுது, சிவனும், ஆதிசிவன், பரமசிவன், சொரூப சிவன் எனப்பல பெயர்களுடன் நிற்பான். சிவமும், சத்தியும் பெயர், உருவம், தொழில் எனும் சொல்லால் வேறுபடுகின்றனவேயன்றிப் பொருளால் வேறுபாடு சிறிதுமின்றி ஒன்றேயாம் என்ற உண்மையினை இதனால் யாம் அறியப் பெற்றோம்.

11. "தற்பர மன்னுந் தனி முதற்....." பாச அறிவும் பசு அறிவும்

சிவசத்தி- திரோதான சத்தியாய் (பாச அறிவால்) நின்று செயற்படுதலால் வரும் பயன் யாது எனில், தத் பதம்பொருளாகிய பதி தன்னிலையில் நிலையான - ஒப்பற்ற முதன்மை வாய்ந்த பேரறிவேயாகும். பாச அறிவால் உயிர் உலக(இன்ப)த்தை நுகர்ந்து வரும் வேளையில் பாச அறிவும் அதன் அறிவாகிய பசு அறிவும் நீங்கிய பொழுது முதற்கூறிய பேரொளியிற் கலந்து- அதற்கு அப்பாலும் சென்று ஒப்புயர்வற்ற உயர்நிலை பேரின்பப் பெருவாழ்வெய்தும் என்பதாம்.

12. "பண்டை மறைகள்......" பரம்பொருள் - தத்துவம்

சிவனுக்கு உண்மையில் திருமேனியாக அமைவது, அவனது சத்தியே, பரம்பொருள் ஒன்றேயாயினும் எவற்றையும் கடந்து நிற்கும் வெளியாகிய வடிவால் சிவம் என்றும், எவற்றுடனும் கலந்து எவற்றையும் தன்பால் இழுக்கும் வலிமையாகிய குணத்தால் சத்தி-என்றும் பிரித்துக் கூறியதை இதனால் அறியலாம்.

13. "வெளி கால் கனல் அப்பு......"ஐம்பெரும் பூத ஆற்றலினன்

ஐம்பூதங்கள் - உலகப் பொருள் அனைத்திலும் பரம்பொருள் அருள் காரணமாக நிறைந்திருக்கின்றான் என வேதாகமங்கள் கூறுகின்றன. அதிலும் அவனது சத்தியே நிறைந்துள்ளது என்பதே யாம் அறியக்கிடைக்கின்ற உண்மை. பூதங்களில் எல்லாம் நிறைந்திருத்தல் போல, அனைத்துலங்களிலும் நிறைந்துள்ளான். பரவொளி, பரகாயம் என்கிற அச்சத்தியே பரமனுக்கு உடலாகும்.

14. "மேருவினோடே........" யோக நிலையில் பெறும் பயன்

புருவ மத்தியில் உள்ள சுழுமுனை நாடியை மகாமேரு என்பதும், அச்சுழுமுனை நாடியின் நடுப்பாகமாகிய அனாகத விசுத்தி ஆதாரங்களை சூரிய மண்டலம் என்பதும் யோக நூல் வழக்கு. அநாகதமாகிய இருதயம் பூசைத்தானமாகக் கொள்ளப்படும். அதனால் சுழுமுனை வழியாகச் சென்று இருதயத்தானத்தில் சிவனை நினைத்து வழிபடுவோனை மேருவினூடே விரிகதிர் மண்டலத்தில் சிவனை ஆராதிப்பர் என்பதாம்.

அனாகத்தானமாகிய பன்னிரண்டு இதழ்த் தாமரை வடிவாகிய இருதயத்தானம் தான் மனத்தின் இடமாதலின் இங்கு மனத்தை ஒருநிலைப்படுத்தித் தியானிக்க வல்லோமாயின் அட்டமா சித்திகளைப் பயனாகவுடைய ஹடயோகம் சித்திக்கும். உடம்பு நரை, திரை, மூப்பு இன்றி நெடுங்காலம் வாழவல்ல யோகமாகிய இராஜயோகம் சிந்திக்கும்.

இன்று உலகில் யோக அமைப்புகள் பல இவ்வழியையே கடைப்பிடிக்கின்றன. இவை யாவும் ஞானத்தைப் பெறத் தடையாகும். ஆதலின் சிவயோகமல்லாத பிறயோகங்களை ஞானம் பெற விரும்புவார் நாடார். இக்கருத்தையே ஞானசம்பந்தப் பெருமான்,

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இட
ரான கெடுப்பன அஞ்செ ழுத்துமே

எனவும் மூன்றாந் திருமுறையில் அழகாக விளக்கியருளுவார்.

மலர் வடிவாகிய இதயத்தாமரையில் உள்ளதாகிய பதினாறு இதழ்களோடு கூடிய விசுத்தி சக்கரமாகிய தாமரை மலர் கண்டத்தானத்தில் உள்ளது. அதில் தூய ஆன்மா, சிவானந்தமே தன் வடிவாய்ச் சென்று அனைத்தையும் தன்னுட்கொண்டு சிவமே வடிவாய்ச் சத்து, சித்து, ஆனந்த சொரூபமாய் விளங்கப் பெறும். மேலும் அதனால் கிடைக்கப் பெறும் நன்மை, உள்நாக்கின் கண்டத்தே அமுததாரை தேனூற்றாகச் சொட்டுச் சொட்டாகச் சொரிந்து கொண்டேயிருக்கும். இத்தகைய இன்ப ஊற்றில் தன்னையே மறந்து அன்ன ஆகாரம் ஏதுமின்றிப் பகல், இரவு, நாள், மாதம், ஆண்டு கடந்த நிலையில் தவம்புரியும் நிலை கைகூடும். இதனையே தாயுமானவர்; "சும்மா இருக்கும் சுகம்" என்பார்.

நிறைவுரை

பரலட்ணம் வழி யாம் பெற்ற உண்மைகளாவன; பரம்பொருள் தன்னிலையில் தான் நிற்கும் போது சிவம் என்றும், உலகத்தோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் போது சத்தி என்றும், ஐந்தொழில்புரியும் போது பதி என்றும் பெயர் பெறும் என ஆகமப் பொருளை இங்கே உணர்த்தக் கண்டோம்.

இவ்வகை இலக்கணங்களையுடைய பரம்பொருளை அடைதற்கு யோகமே சிறந்த சாதனம் என்பதை இதனால் இறுதியாகக் கூறி முடிக்கிறார்.

திருமூலர் நாயனார் திருவடி மலர் போற்றி போற்றி போற்றி!

திருச்சிற்றம்பலம்

83. மும்முத்தி, முச்சொரூபம், முக்கரணம், முச்சூனிய தொந்தத்தசி, முப்பாழ்

அருட்தமிழ் அமுது. டாக்டர். அருணாசலனார்
மதுரை

முன்னுரை

சித்தத்தை ஒடுக்கி, சிவாயநம என்றிருந்தால், அபாயம் அறும். ஆனந்தம் விளையும்.

"சிவாயநம" எனும் ஐந்தெழுத்துதான் திருமந்திரத்தின் ஆதிமந்திரம்.

திருவருளும், குருவருளும் கூட்டுவிக்க ஐந்து முத்துக்களை எடுத்து வந்து அன்பர்களின் பார்வைக்கு வைக்கிறேன்.

எட்டாம் தந்திரத்தில் உள்ள மந்திர முத்துக்கள் அவை.

நூலின் நுட்பம்

நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப தொல்காப்பியம் 1434

எனும் நூற்பாவின் கருத்தின் உயிர்ப்பை காட்டுவது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் குறள்-28

தமிழகத்தில் தவறாமல் காலந்தோறும் நிறைமொழி மாந்தர் தோன்றினர். மக்களை இறையுணர்வுக்கு ஆற்றுப்படுத்தினர். திருக்குறளின் மெய்யுணர்வு நுட்பத்தைத் திருமூலர் விளக்கம் செய்தார் ......விரிவாக்கம் செய்தார்.

திருமூலரின் திருமந்திரம் நல்லதொரு அறநூலாக, தோத்திர மாலையாக சாத்திர விளக்கமாக, புராணக்களஞ்சியமாக, வாழ்க்கைத் துணை நூலாக, யோகம் மற்றும் பிராணயாமம் பற்றி விரித்துக் கூறும் தனி நூலாகவும் அமைகிறது.

திருமந்திரத்தின் உள்ளீடு யோகநெறி
யோகநெறி தொன்மை நெறி

அதுவே தமிழர் நெறியான சைவநெறி. இப்பெரும் நெறியானது திருமந்திரத்தில் அட்டாங்க யோகம், கேசரி யோகம், சந்திரயோகம், பரியங்க யோகம் என விரித்துப் பேசப்படுகிறது.

இன்றைய விஞ்ஞானிகள் கண்ட அணுவும் அதன் உட்பிரிவுகளும் அன்றே அவர் கண்ட உண்மைகள். இன்னும் பல உண்மைகள் அங்கே பொதிந்திருக்கின்றன.

அமுரி தாரணை என்பதனைத் திருமந்திரம் பேசுகிறது. இதில் இதயநோய்க்கு இன்றியமையாத மருந்துகளைத் தருகிறது.

திருமூலர் வேதத்தைப் பொதுவாக வைத்தும், ஆகமத்தைச் சிறப்பாக வைத்தும் நூல் செய்தார்.

திருமந்திரத்தின் பெரும் பிரிவுகள் தந்திரம் எனப்படும்.

அதன்கீழ் வரும் பாடல்கள் மந்திரம் எனப்படும்.

பாயிரத்துடன் ஒன்பது தந்திரங்கள் பாடப்பட்டன.

எட்டில் நுழைவோம்

எமக்கு ஏற்புடைய எட்டாம் தந்திரம் சுப்பிரமஆகமத்தைச் சொல்கிறது. சுப்பிர ஆகமத்தின் சாரம் 33 பகுதிகளாக விளக்கப்படுகிறது.

8-17 பகுதிகள் சுட்டிக் காட்டுபவை வருமாறு

1. காமம், வெகுளி, மயக்கம் எனும் முக்குற்றம்
2. தத்-துவம்-அசி எனும் முப்பதங்கள்
3. சிவ-சிவ-பர எனும் முத்துரியங்கள்
4. சீவன்முத்தி -பரமுத்தி- சிவமுத்தி எனும் மும்முத்திகள்
5. அரு-அருவுரு-உரு எனும் மூவுருவங்கள்
6. சிவ-பர-சீவ எனும் முக்கரணங்கள்
7. மாயப் பாழ், போதப்பாழ், வியோமப்பாழ் எனும் முப்பாழ்கள்.

நாம் சிந்திக்க வேண்டிய ஐந்து முத்துக்களும் இந்தப் பகுதியில்தான் இயம்பப்படுகிறது.

1. மும்முத்தி

முத்தி என்பது வீட்டுப் பேறினை குறிக்கும். சீவன் முத்தி என்பது மீண்டும் பிறப்பினை வேண்டாத நிலை. பரமுத்தி என்பது பிறக்க வேண்டிய நியதியைக் கடந்து, அறிவு வடிவாய் சிவத்தில் கலக்காமல் நிற்பது.

சிவமுத்தி அல்லது சிவானந்த முத்தி என்பது உடல் உள்ள போதே, சிவானந்தத்தில் திளைத்து, உடலை மறந்து வாழ்ந்து, சிவத்துடன் ஒன்றாகும் நிலை. உலகையும் கருவி கரணங்களையும் விட்டு நீங்கி நிற்கும் சிவத்துடன் பொருந்துதலே முத்தி ஆகும்.

எண்பெரும் சித்திகளும், வீடுபேறும் மேலான சிவமாகும், அதுவே தளையைப்போக்கும் பரசிவன்.

2. முச்சொரூபம் அல்லது முவ்வுருவம்

தான் அருவமாயும், உருவமாயும், அருவுருமாயும் ஒளிவடிவாய் வெளிப்பட்டு அருள் செய்யும் நாத சத்தியின் தலைவனான இறைவன், உயிர்களின் தொகுதி உருவமாயும் உடன் இருப்பவனாயும், அவற்றால் அறியப்படாதவனாயும் உள்ளான். உலகம் தோன்றிய வண்ணமே ஒடுங்கும். அதற்குப் பல ஊழிகள் போகும். அப்போது ஊழி முடிவில் சீவன்-பரன்-சிவன் என்ற மூன்றின் தன்மையிலும் சிவன் உடனிருந்து உபகரிக்கும்.

3. முக்கரணம்

சிவன்-பரம்-சிவன் என்ற மூன்றும் ஒன்றே என்பதை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் அறிய வேண்டும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கருவிகளின் சோர்வை நீக்கி, எல்லாவற்றையும் ஒரு சேர அறியும் திறத்தை சிவன் தருகிறார்.

பிறவியில் உயர்ந்தவன் மனிதன். ஏனெனில் மனதை உடையவன் மனிதன். எதை வேண்டுமானாலும் மனதால் நினைக்க முடியும்.

மனதுக்கு இதமாகச் சிந்தனை செய்யும் போது எண்ண அலைகள் விரிவடைகின்றன.

அதன் விளைவே வாக்காக வருகிறது. அந்த வாக்கே செயல்வடிவம் பெறுகிறது- காயத்தால் (உடலால்) நினைக்காத, சொல்லாத எதுவும் செயலாக மாறுவதில்லை. வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த இறைவனை மனம், வாக்கு, காயத்தால் வணங்க வேண்டும்.

4. முச்சூனிய தொந்தத்தசி

முப்பதமாகிய தத்பதம்-தொம்பதம்-அசிப்பதம் ஆகியவை இல்லாமையே முச்சூனிய தொந்தத்தசி ஆகும். முப்பதம் நீங்கிய நிலையே பெருநிலை.

மாயையில் தோன்றும் சீவனாக தொம்பதமும் மேலான பரையிடத்து விளங்கும் பரமான பதமான தத்பதமும், விரும்பப்படும் சாந்தியில் பொருந்தும் அதுவாக ஆகிறாய் எனும் அசிபதமும் இணையும் வாக்கியம் மேலான தொடராகும். உயிர் காலத்திலும், இடத்தாலும் வேறுபாடு அமையினும் அது சிவனே ஆகும்.

5. முப்பாழ்

மாயப்பாழ், பேதைப்பாழ், வியோமப்பாழ் என்பவையே முப்பாழ்- ஆன்ம அறிவு விளங்குவது போதப்பாழ் அல்லது சீவப்பாழ்- உபசாந்த நிலையில் பரவெளியில் நிற்பது உபசாந்தப்பாழ் அல்லது வியோமப்பாழ்- முப்பாழ் என்பவை மாயப்பாழ், சீவப்பாழ், வியோமப்பாழ் எனவும் பாகுபடும்.

முப்பாழும் நீங்க பிறவி நீங்கும். ஆணவம் அகன்றபோது உயிர் அதன் தத்துவச் சார்பு நீங்கிச் சிவ ஒளி விரிந்து பரநிலையைப் பெறும் . அகங்காரம், அறும், சிவவியாபகத்துள் தனக்குரியதை உணர்ந்து அடங்கி நிற்கும் நிலையே முப்பாழ் கெட்ட நிலை.

ஐந்தெழுத்து மந்திரம்

நவசிவாய என்பது திருவைந்தெழுத்து உடம்பில் நிற்கும் முறையாகும்.

திருவடியில்	நகரமும்
கொப்பூழில்	மகரமும்
தோள்களில்	சிகரமும்
வாயில்	வகரமும்

ஆன்ம பேரொளியை யகரமுமாக காணல் வேண்டும். திருவைந்தெழுத்தை ஓதும் முறையே சிவாய நம.

இறையனுபவம்

திருமூலர் சொல்லும் திரண்ட கருத்து இதுதான்......

கடவுளும் நானும் ஒன்றானோம்
எனக்கு அச்சம் அகன்றது
நமசிவாயக்கனியை உண்டுவிட்டேன்
நமன் வந்தால் ஞானவாள் கொண்டு எறிவேன்
சிவனோடு சேர்ந்து கண்ட அனுபவத்தால் எனக்கு,

கரும்பு கைத்தது, தேன் புளித்தது, மனம் குவிந்தது, முத்தி விளைந்தது.

காலினில் ஊறும் - கரும்பினில் கட்டியும்- பாலினுள் நெய்யும்-பழத்தினுள் இரதமும்- பூவினில் நாற்றமும் போல் இறைவன் எங்கும் உள்ளான்.

உயிரானது விருப்போடு விகிர்தனை நாடிச்செல்லும் பொற்கொடி போல் இறைவனை மனத்திடை கூடி மகிழும்.

முடிவுரை

நமசிவாயக் கனியை நாமும் உண்டு மரணமில்லா பெரு வாழ்வினைப் பெற்று திருமூலரின் வழி செல்வோம். திருமூலரின் திருவருள் பெருக்கெடுக்கும் வாழ்க்கை வரலாற்றினை விரித்துப் புராணம் சொன்ன சேக்கிழாரடி சென்னி இருத்துவோம்.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

84. காரணகாரிய உபாதி, உபசாந்தம், புறங்கூறாமை

தமிழறிஞர். இரா. இளங்குமரனார்
திருக்குறள் தவச்சாலை, திருச்சிராப்பள்ளி

திருமூலர் அந்தணர்

அகத்தெழுவளியிசை அரில்தவ நாடி அளவிற் கோடலாம் அந்தணர் மறை அருளியவர். நிறைமொழி மாந்தராம் அவர், ஆணையிற் கிளந்த மறைமொழி மந்திரம் எனத் தொல்லாசான் ஆணைவழி நிற்கிறது. (தொல் 102, 1434)

காரண காரிய உபாதி

உ- உயர்ச்சிப் பொருள் தரும் முன்ஒட்டு, உ+ தரம் = உத்தரம், உப்பரிகை. உகரம் பெற்ற சொல் உயரப் பொருளது. உச்சி, உவனம்.

உபாதி உச்சமாகப் பங்குபற்றுவதும், பாதிப்புச் செய்வதும் உபாதியாம்.

கார் வழிப்பட்ட சொல் *கருமை, வலிமைப்* பொருள் தருவன. கார் ஆகிய மழையே *காரணம் காரியம் கருவி கருத்தன்* முதலியவற்றின் மூலம்,

உயிர்ப்பிணிப்பாம் வலிய துயரும் கலைப்பிணிப்பாம் வலிய துயரும் ஆகிய இருவகைத் துயரும் (சீவ உபாதி, பரஉபாதி) நீங்கிய சீவன், சிவம் ஆகும் என்கிறார். மாசு அற்ற மணி ஒப்பது சிவம்; மாசற்ற நிலையே உபாதியற்ற உயிர்நிலை (2473) இருவகை உபாதியும் நீங்கியது. சுழுத்தி நிலை; அதனைக் கடந்த மேனிலை, துரியம்; அதனையும் கடந்த உயர்நிலை, துரியாதீதம்; உயிருக்கு உயிராகவும், ஒன்றாகவும், உடனாகவும் நிற்கும் இறையருள் பாலிப்பால் அன்றி,பேதைமைப் பிறப்புக்கு அடியாகிய ஆணவமலம் அகலுதல் இல்லை. பேதைமைப் பிறப்பு அகன்ற நிலையே, *சிவமாம், செம்பொருள்* நிலையாகும் (2474-2476)

உபசாந்தம்

சிவம், *அமைதி* அல்லது *சாந்தம்*. சிவத்தைச் சார்ந்து அமைதியால் நிலையில் திரியாது அடங்கிய நிலை *உபசாந்தம்* ஆகும். தன்னை மறந்த வீடு பேற்று நிலையை அடைதற்கு வழியாவது, இறையின் *திருப்பெயர்* வழிபாடே; இறையன்புக்கு வித்தாக அல்லது மூலமாக இருப்பது;

பணிதலுதம், திருவடி பற்றிக் கொள்ளலுமாகும். ஆன்ம உணர்வில் திருவருட்சக்தி பதிவதற்கு மூலம், ஆருயிர் உபசாந்த நிலையை உறுதல் ஆகும் (2477). ஆன்ம மெய்யியல் மூலப்பகுதியுள் ஒடுங்கும்; கலையியல், *தூய்திலா மூலப்பகுதியுள்* ஒடுங்கும். பின் தூயமூலத்துள் நிற்கும். இவையனைத்தும் அகன்ற நிலை *உபசாந்தமாம்.*

நிலைபேற்று நிலையாம்

காரிய காரணத் தொடர்பற்ற உபசாந்த நிலையே, *ஆன்மத்* தூய்மையாம். இவ்வான்மத் தூய்மை, தடைகள் நீங்கி இறைவனைக் காணும் பொழுதில் உண்டாகும். இப்பொழுது, அருட்சக்தியும் ஆன்மா உடனாகி அறிவு விளக்கப் பெருநிலையில் உபசாந்த நிலையை அடையும். இது *அருளே எங்கும் இருக்கும் விழுமிய நிலை* ஆகும்.

உபசாந்த உறுப்புகள் என எண்ணப்படுவன பத்தாகும். அவை: 1. ஆன்மா 2. காரிய காரணவாதனை 3. அவற்றின் வேறாகத் தன்னை உணர்ந்து நீங்குதல் 4. சிவமாதல் 5. சிவானந்தம் 6. அதனை அனுபவித்தல் 7. அதில் அழுந்துதல் 8. மௌன சுக அனுபவம் 9. அதனை ஆய்தல் 10. அதில் இருந்தும் நீங்கிச் சிவ வியாபகத்தில் அடங்குதல் என்பர் (2481)

புறங்கூறாமை

புறங்கூறுவோர் எவர் எனின், அவர் நெஞ்சிலர் என்கிறார் திருமூலர். திருவள்ளுவர் கூறும் புறங்கூறாமை உலகியல் பார்வையது. திருமூலர் கூறும் இப்புறம் கூறாமை சிவனிய சமயம் சார்ந்த பார்வையது. இவை சொல் ஒன்றாயினும், பொருள் கொள்வகையால் இரண்டாய் அமைவது.

நெஞ்சிலார் என்பது தானே தனக்குக் கரியாம், மனச்சான்று இல்லார். அவர் எத்தகையர் எனின், விண்ணில் காணும் மதியுள் தோன்றும் முயற்கறையை முயலாக எண்ணி வாளால் எறிவேம் என்பது போன்ற மயக்க நிலையினர். முழுதுறு முதல்வனை அறியமாட்டாதவர், முற்றிலும் அறிவேம் எனத் தருக்குதற்கும், பிறைக்கறையை எறிவேம் என்பார்க்கும் என்ன வேறுபாடு? ஒன்றும் இல்லையாம். தம்மனத்தோடு பொருந்தா ஒன்றைப், புறத்தே கூறுதல் இப்புறங்கூறுதல் ஆதல் அறிக.

இதனை, வேறு நெறிபிடித்து நிற்போர், தம்மை முற்றும் அறிந்தோராக கருதி, சைவநெறியினர் அங்ஙனம் அறியமாட்டார் என்று புறங் கூறுதல், தக்கது அன்று என மறுத்தார் என்பர் (மூலபாட ஆய்வுப் பதிப்பு 3:295) விண்ணிலே ஊடு கிழித்துப் பறந்து போகின்றது வலிய கருடன். ஆனால், மண்ணின் நீருளே கிடக்கும் பாம்பு, அதன் நிழல் கண்டு அஞ்சுகின்றது.

அலைகடலில் புகுந்து கலந்த ஆறு, ஆங்கிருந்து மீளவும் ஆறாக எதிரேறி வருமோ? வாராதல்லவோ? (2483) நெஞ்சே நீ இறைமையை அடைந்ததும், உன்இயல் நிலை அகலும்1 உன் பெருமை பேறு இவற்றை விட்டால் அன்றி நின்மதி யுற்றால் அன்றி- இறைநிலை எய்தாய்! இறையோடும் ஒன்றியபின் தன்னை எண்ணுதல், மெய்கூறல் ஆகாது, புறங்கூறலாகி விடும் அல்லவோ? (2484)

கருவுற்ற பிறவியில் நின்று கொண்டு, கருவழிப்பிறப்பை ஒழிக்க இயலுமோ? செருக்காம் மலப்பிறவி ஒழிக்க, ஒடுங்கு தவம் பயன் செய்தல் இல்லை. இறையை ஒன்று நிலை ஒன்றே அதனை அளிக்கும் (2485)

இறையருள் கிட்டுமோ கிட்டாதோ என எண்ணாமல், எம் இறையே இறை, அவனருள் எய்துதல் உறுதி என ஒன்றிவிடுக; முழுதுறும் ஒப்படைப்புப் புரிக. அமரரும் போற்றும் அவன் அருளடி சார்தலே சார்பாம் (2486)

என் உயிரினும் உயிரானவன் இறைவன்: பொன்னினும் சிறந்த சீரிய செம்மணியாயவன்; எவ்வுயிரும் ஆகியவன்: பொருந்திய வகையில் அவனை எண்ணினால் அவனும் ஒன்றி உடனாவான் (2487)

நின்றும் இருந்தும் கிடந்தும் புலன்களை வென்று நின்றார்க்கும் மாறிலா ஒருவன் என நினைக்கத்தக்கான், செம் பொருட் சிவமாம் ஒருவனேயாம் (2488)

ஒன்றாய் நிற்கும் இறையே, உலகாய் விரிந்தது. அருள் வடிவாயது. ஆவின்கன்று ஆவைத் தேடி உருகுவது போல, அதனைத் தேடி உருகுவார்க்கு, வேண்டுவவெல்லாம் விரைந்து அருள்வது அவ்விறை.(2491) என் உடலே திருக்கோயிலாகத் திருநடம் செய்வது அவ்விறை. அதனை என் கண்ணை மூடி உள் நாடிக் கண்டேன். அதனால் உலகமுழுவதும் கண்டேன் (2493) வானகமும் கண்டேன்(1494) சித்தராவார் சிவத்தைக் கண்டவர்; மாயை தோயாதவர்; முத்திக்கு மூலமானவர்; முத்தரும் ஆயவர் அவரேயாம் (2497). இவற்றை உணர்ந்து போற்றுபவர், புறங்கூறாதவர்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀

85. எட்டிதழ்க் கமல முக்குண அவத்தை, ஒன்பான் அவத்தை– ஒன்பான் அபிமானி

பெரும்புலவர். **நா. சுப்பிரமணியன்**
நாட்டரசன்கோட்டை

உயிரைப் பதித்துவமடையச் செய்வதற்காகவே சிவபெருமான் ஐந்தொழில் புரிகிறான் என்பர் திருமூலர் பெருமான். உயிரின் சிவானுபவ நிலை எனக் குறிப்பிடுபவர் கீழ்க்காணுமாறு கூறுவர்.

"ஓமயமாகியொடுங் கவின்மலம் தோமறுசுத்தாவத்தை தொழிலே" இந்நிலை பெறுவதற்கு முன் அருளாற்றலைத் தாங்கும் வன்மையினை உடலுக்கும் மனத்திற்கும் பக்குவ நிலையை வழங்குகிறான் என்பதை விளக்க முற்படும்பெருமான் எட்டிதழ்த் தாமரை முக்குண அவத்தை பற்றி விளக்குதல் சிந்திக்கத் தக்கதொன்று.

சைவ சித்தாந்த தத்துவங்களைப் பற்றிய பேச வருகின்ற பெருமான் நானூறு கோடியே நாற்பத்தி எண்ணாயிரத்து ஐநூறு (40048500) என்றும் அதனைச் சுருக்கித் தொன்னூற்றாறு இருபத்து நான்கு எனவும் அதன் சுருக்கமே சிவதத்துவம் ஐந்து வித்யாதத்துவம் ஏழு ஆன்ம தத்துவம் என்றும் விளக்கம் தருவர்.

இந்த தத்துவங்கள் பற்றிச் சித்தாதிகளே அறியவில்லை என்றால் பிறர் பற்றி என் கூறுவது?

யாருமே இதுபற்றி இதுவரையில் சிந்தித்ததாகவே தெரியவில்லை. இது ஆராயப்பட வேண்டிய இன்றியாமையாததொன்று.

எட்டிதழ்த்தாமரை உடலிலுள்ள மூல உறுப்பு. இதனை நெஞ்சத் தாமரை எனவும் இதயம் எனவும் குறிப்பிடுவர். இது நெஞ்சின் நடுப்பகுதியில் முதுகுத் தண்டோடு தொடர்புடையதாய் அமைந்திருப்பது.

உலக இயக்கம் செவ்விதின் நடைபெற வேண்டுமென்ற பெருநோக்கில் இந்திரன் அங்கி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் யீசன் ஆகியோரை எண்டிசைக் காவலர்களாக நியமித்துள்ளமை போல மாயா புலாலாகிய உடலிலுள்ள எட்டிதழ்த்தாமரையை இவ்வுடம்பகத்து முதுகுத்தண்டின் பக்கத்தில் மிகவும் நுண்ணியதாய் அமைத்துள்ள சுழுமுனை நாடியுடன் தொடர்புடையதாய் அத்தண்டின் உள்ளே அடங்கி அறிவுப்

பேரொளியினை அகத்தத்துவத்தால் அருள அமைந்துள்ளது. அதனை ஆய்ந்து உய்யும் வழி காண்டல் உயிரின் கடமை என்பர்.

அத்தாமரை மூன்று தன்மைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவைமுறையே இதழ், கொட்டை, கொட்டை நடு (காணிகை) என்ப இம்மூன்றினும் விட்டு நீங்காது தொன்மை உருவாக ஒளிவிடும். ஆவி நிறைந்து நிற்கும் உலகையே உருவாகக் கொண்டு திகழும். இறைவன் சோதி விரிசுடர் எனப்படுவன். அவனை விராட்புருடன் எனவும் கூறுவர். அத்தாமரையின் அகத்தே அமுதப் பெருக்காகிய சிற்றாறு ஒன்றுண்டு. அவ்வாறு அருளால் பெருகி நிறையும் நெஞ்சுக்குளம் ஒன்றுண்டு அங்கு திகழ்வது அளவிட இயலாத சிவபெருமான் சத்தியுடன் உடனுறைவன் எனக் கூறும் திருமூலர் பெருமான் கீழ்க்காணுமாறு கூறுதல் காண்க.

ஆறேயருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறேகு வீமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே இருக்கும் விழுப் பொருள் தானன்றே

என்பர்.

திசைகள் எட்டினையும் அருளாணையால் ஆண்டு காவல் புரியும் காவலர் ஞாயிறு முதலிய எண்மராவர். அவர்களுக்கு உரிய ஊர்திகளும் எட்டாகும். நிலம் நீர் நெருப்பு வளி விசும்பு நிலாப்பகலோன் புலனாயமைந்தன ஆகிய எண் பெருவடிவங்களாக விளங்குபவனும் சிவபெருமானே. இவை அனைத்துமாய் நிற்கின்ற ஆதியையுடைய சிவனைக் காணுமாறு காண்க. அஃது அறிதற்பொறி ஐந்து, செய்தற் பொறி ஐந்து மனம் ஒன்று புத்தியாகிய இருப்பு ஒன்று ஆகிய பன்னிரெண்டும் புடைபெயராது அசைவற்று நிற்க ஆங்கே சிவபெருமான் மறைந்து தோன்றுவான். இதுவே எட்டிதழ்த்தாமரையில் உயிர்க்குயிராய் நிற்கும் சிவபெருமான் தோற்றம் அளித்தருளும் முறைமை என்க.

மேலோதிய எட்டிதழ் தாமரையின் கிழக்கு முதல் வடக்கு ஈறாகவுள்ள ஏழு இதழ்கள் ஆருயிர் வகை ஏழின் நிலைக்களமாகும்.

வடகீழ் பால் பேருயிராகிய ஆண்டானின் நிலைக்களமாகும். கீழிதழ் சிவபெருமானின் நிலைக்களமாகும். மேலிதழ் ஆருயிரும் பேருயிரும் வேற்றப் புணர்ந்து நிற்கும் நிலைக்களமாகும். (ஆருயிர்-ஆன்மா-பேருயிர்-பதி) இதனையே திருமூலர் பெருமான்.

ஏழும் சகளம் இயம்பும் கடந்தெட்டில்
வாழும் பரமென்றது கடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வதுவான தனித்தன்மை தானன்றே

எனக் கூறுவர்.

உலகிற்குப் பல ஊழிகளை ஏற்படுத்தி வளர்ச்சியடையச் செய்து ஐந்தொழில் இயற்றுபவன் சிவபெருமானே. அவனே பகலோன் எனவும் இறைவன் எனவும் வழங்கப் பெறுவன். ஊழிகள் நீக்கல் முதலிய ஐவகைக் கிளைகளில் நிகழும் ஒடுக்கம் என்ப. இவைகள் அண்டங்களில் நிகழும் ஊழிகளாகும். அவ்வூழியுள் ஒன்றுபவனும் அவனே.

அவ்வூழிகளுக்கிடையே திருவருள் ஆட்சி செய்யும் நிலையில் தேவர் கூட்டமும் தீயும் மழையும் இயங்குவதற்கு வழியாக உள்ள வெளியும், இவையனைத்திற்கும் இடம் தரும் அறிவுப் பெருவெளியும் அருளால் நோக்குவார்க்கு அறிவுப்பெருவெளியைப் பற்றுக் கோடாகக் கொண்டு நிகழ்வது புலனாகும்.

உள்ளம் உரை உடல் எனக் கூறப்படும் மனம் மொழிமெய் மூன்றும் தம் வயப்பட்டு ஒடுங்கிய காலத்து எந்நிலையில் நின்றாலும், இருந்தாலும், புலன் வென்றிருந்து புகழ் மெய்ப் பொருளை நாடுவர். அவர்களே சிவத்திருவுடையவர் எனக் கூற வருகின்ற பெருமான்,

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்
சென்று மிருந்தும் திருவுடை யோரன்றே

எனக்கூறுவர்.

ஒன்பான் அவத்தை- ஒன்பான் அபிமானி

சிவபெருமான் யாண்டும் கலந்து நீக்கமற நிறைந்து நிற்கும் நிலையினை பலவாறு விரித்துப் பேசுவர். அவற்றுள் இதுவும் ஒன்று. 1. விசுவன்- உலக உருவினன். 2. தைசதன்- தழல் வண்ணன் 3. பிரஞ்ஞன்- பேரறிவானன் 4. விராட்டன்- பேருருவினன் 5. பொன்கறப்பன்-பொன்மேனியன் 6.அவ்யாகிருதன் - பிரிக்கப்படாதவன் 7. இதயன்-கலப்பையன் 8. பிரசாபத்தியன்- ஆருயிர் முதல்வன். 9. சாந்தன்- தண்ணளியன். இந்நிலைகள் ஒன்பதும் இறைவன் பொருளின் கண் பொருந்தியுள்ள பற்று நிலைகளாகும்.

அவத்தைகள் மூவகையில் மும்மூன்றும் ஒன்பதென்பவை. ஆருயிரின் கனவாதி மூன்றும் ஆரருளின் கனவாதி மூன்றும் பேருயிரின் கனவாதி மூன்றும் என ஒன்பதாகும். இவற்றைச் சிவச்சாக்கிரம் வேசாக்கிரம் பரசாக்கிரம் முதலாகச் சொல்லும் ஆருயிர் நனவு ஆருயிர் கனவு ஆருயிர் உறக்கம் என மூன்று பேருயிர் நனவு பேருயிர் கனவு பேருயிர் உறக்கம் என மூன்று பரசாக்கிரம். பரசொப்பனம் பரதுரியம் என மூன்று ஆக அவத்தைகள் ஒன்பானென்பர்.

பிறப்பிற்கு வாயிலாகிய மலம் குணம் முதலியவற்றின் பற்றையறுத்துப் பற்றுதற்கரிய நன்னெறி நன்மை நிற்றலுமான உண்மை அறிவு இன்ப வடிவாம் பெருமன்றமாம். பொருவில்லாப் பொதுவில் மேன்மை மிக்க செயலது நிலையாம் துரிய உணர்விற்கு உணர்வாம் உண்மை நிலையாகும் எனக் கூற வருகின்ற பெருமான் கீழ்க்கண்டவாறு கூறுதல் காண்க.

நவமாம் அவத்தை நனவாதி பற்றிற்
பவமாம் மலம் குணம் பற்றற்றுப் பற்றாத்
தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவமார் துரியஞ் சொரூபம தாமே

என்பர்.

திருவருளான் சிவனையே இடையறாது சிந்தை செய்வார் சிந்தையின் கண் நீங்காது சிவனுறைவன். நின்னைச் சிந்திப்பார் மனத்தன் சிவன் எனவும் சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன். முந்திப் பொழிவன எனவும் திருமறைகள் எடுத்தோதுதல் காண்க. ஆருயிரின் முனைப்புத் தன்மையகன்று பேருயிர்க்கு அடிமையாம் என்னும் நினைப்புத்தன்மை இடைறாது சிந்தித்தலால் கைவரும் வரவே. ஆருயிரின் முனைப்புத் தன்மையகறல். பிறப்பிற்கு வித்தாகிய ஆணவம் கன்ம மாயை என்னும் மும்மலங்கள் முற்றும் அற்று ஒழியும். ஒழியவே மேல் ஒன்பது நிலைகளின் முடிவாகிய சிவப்பேறுயிரின் அந்தத்தின் கண் நன்மை வடிவாம். சிவபோது தலைப்படும். தவ நிலையாகிய அப்போத வண்ணமாய் ஆருயிர் அருளால் ஆக்கப்பட்டுப் பெரும் பேறு எய்தும் எய்திய நிலையில் சிவமாகவே ஆகும். இதனைத் திருமூலர் பெருமான்,

சிவமான சிந்தை யிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப்பறிய
நவமான அந்தத்தின் நாற்சிவபோதந்
தவமா மவையாகித் தானல்ல வாகுமே என்பர்.

உலகம் உய்தற் பொருட்டுத் தனி முதல்வனாகிய சிவபெருமான் கூறியருளிய பதினான்கு நூல்களையும் அவை கூறியுள்ள

கருத்துக்களையும் மனமுருகி இரவு பகல் இடையறாது ஓதுபவர்கள் வல்வினை கடந்து பிறப்பறுத்தலாகிய பேற்றினைப் பெற்றுச் சிறக்க வாழ்வர்.

யாவர்க்கும் யாவைக்கும் வினை முதற்காரணம் சிவபெருமான் ஆதியாம்பரம் அவனே. அவன் கலப்பால் பராபரையாய், சோதியாய், பரமாய், உயிராய் கலையாய், மாயையிரண்டாய் வீடாய் திருவடிப் பேறாய் விளங்குவன். இத்தகைய முறைமையுடன் கூடிய ஒன்பது வேறுபாட்டுடன் விளங்குபவன் முழுமுதல்வனாகிய சிவபெருமானே என்பதைக் கீழ்க்காணுமாறு திருமூலர் கூறுதல் காண்க.

ஆதிபராபரமாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லு நற்றத்துவம்
ஓதும் கலை மாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் பேத மொன்பானுடன் ஆதியே

என்பர்.

ஆருயிரின் தெளியாத சிந்தை தெளியும் பொருட்டு மாறுபட்டவரையும் படைத்து உய்த்துணர்ந்து தெளியுமாறு தெளிவித்தருளினன். அவ்வருளின் காரணமாக ஏற்பட்டதே சிவானுபவம். ஒன்பது என்னும் பாடாகிய அவத்தையும் ஒன்பான் அபிமானி என்னும் பொருளில் பற்றினர் உளர். இவர்களே அதிதெய்வமாவர். நல்ல மெய்யாகப்பயிலப் பெறும் ஒன்பது மெய்களும் உள. இவற்றுளெல்லாம் ஆருயிர் செயலறல் ஆரருட் செயலறல், பேரருட் செயலறல் என்னும் முத்துரியமும் பொருந்தும். இங்ஙனம் பொருந்துமாறு அருளிய பொருந்தி நிற்பவன். சிவபெருமானே செம்பாற் சிவன். செம்பொருட் சிவன் எனக் கூறப் பெறுபவனே. இவ்வுண்மையினை மேற்கொண்டொழுகுவோர் செம்பொருட்டுணி வினராவர். நீங்காத சிவநினைவால் ஓங்கும் சிவமாவான். அவனே சித்தாந்தச் செல்வன் எனக் கூறப்படுவான். அந்நிலையே சித்தியாகும். சித்தாந்தச் சித்தியெனினும் திருவடிப் பேறு எனினும் ஒன்றே. இதனையே ஆருயிர்கள் பெற வேண்டுமெனத் திருமூலர் பெருமான் கீழ்க்கண்டவாறு கூறுதல் காண்க.

ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பாற் பயிலும் நவதத்துவமா
ஒன்பானில் நிற்பதோர் முத்துரியத் துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே என்பர்.

சைவமும், தமிழும் தழைத்தினிதோங்குக!

திருச்சிற்றம்பலம்

86. சுத்தா சுத்தம்

சித்தாந்த வித்தகர். **நா. சுப்பிரமணியன்**

உலகத்தைத் தோற்றுவித்து இயக்கி ஒடுக்குவதற்கு ஒருவன் வேண்டுமென்ற சிந்தனை என்று மனிதனின் மனத்தில் தோன்றியதோ அன்று ஏற்பட்டதுதான் சமய உணர்வு. அது சைவ சமயமாகத்தான் இருக்க முடியும் என சிந்து சமய வெளி நாகரிகத்தின் அடிப்படையினை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் கூறிய முடிவாகும். திருமூலர் பெருமான் தன்னொடு நந்தியெம்பெருமானிடம் (ஸ்ரீகண்ட ருத்திரரென்பாரும் உளர்) சைவ சித்தாந்தம் பாடம் கேட்டவர்கள் எண்மர் எனக்குறிப்பிடுகிறார். அவர்களில் ஒருவர் சனற்குமாரர். அவர் தம்மாணாக்கர் சத்திய ஞானதரிசினி அவர் தம்மாணாக்கர் பரஞ்சோதி முனிவர். அவர் தம் மாணாக்கர் மெய் கண்ட தேவ நாயனார். அவரே சைவ சித்தாந்த நூலான சிவஞான போதத்தின் ஆசிரியர் ஆவர். இருவரினிடையே கருத்து வேற்றுமை ஏற்பட எவ்வித நியாயமில்லை என்றாலும் மாறுபாடு ஏற்பட்டு சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் இன்று இரு வேறு கருத்துக்கள் பசுவைப் பற்றி நிலவி வருகிறதென்பதை சைவ சமயப் பேரறிஞர்கள் அனைவரும் அறிவர்.

1. திருமந்திரக் கொள்கை 2. சித்தியார் கொள்கை என்பன. இதில் எது சரியானதென உறுதி செய்தாலன்றி சுத்தா சுத்தம் என்ற அவத்தை உயிரைச் சார்ந்ததா ஆன்மாவைச் சார்ந்ததா என்ற ஐயம் ஏற்படுவது இயல்பானதே. திருமூலர் பெருமான் உயிரும் ஆன்மாவும் தனித்தனி எனக் கூறுகிறார். அருள் நந்தி சிவாச்சாரியார் இரண்டும் ஒன்றே எனக் கூறுகிறார். சிவஞான போத உரையாசிரியர் மாதவச் சிவஞான முனிவர் இதுவே சரியென்கிறார். சுமார் 700 ஆண்டுகளாகச் சைவப்பேரறிஞர்கள் மட்டுமல்ல, திருமடங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகிய அனைத்துமே அதனையே ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதில் எந்த மாறுபாடும் இல்லை. மேலும் பாளையங்கோட்டை சி. சு. மணி அவர்களால் வெளியி டப்பட்டுள்ள சிவஞான பாடியம் தெளிவுரையே சான்று பகரும். சிவஞான போதம் நான்காம் சூத்திரமும் அதனை உறுதிப்படுத்துவது போல உள்ளது. அது வருமாறு.

அந்தக்கரணம் அவற்றில் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மா சாச மலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே

இச்சூத்திரம் ஆன்மப் பிரகாசமுணர்த்துதல் நுதலிற்று என எழுதி இதன்பிண்டப் பொழிப்பாக மாதவச் சிவஞான முனிவர் கீழ்க்கண்டவாறு உரை கண்டுள்ளார்கள்.

"ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கனுள் ஒன்றன்று ஆயினும் நுண்ணுணர்வின்மையாற் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடு கூடி நின்று சாக்கிர முதலிய ஐந்தவத்தை உடையதாம் என்றவாறு" எனக்குறிப்பிட்டுள்ளார்கள்.

இதில் ஆன்மா மலத்தால் தாக்குறுதலும் ஐந்தவத்தையடைதலும் உடையதெனக் குறிப்பிட்டுள்ளார். இது சைவ சித்தாந்தத்திற்கு முற்றிலும் முரணானதென்பது அறிஞர்கள் அறியாததல்ல. இதில் சிவஞான போத நூற் பாவா? மாதவச் சிவஞான முனிவர் உரையா? எது தவறு என ஆராய்ந்து முடிவு செய்யப் பட்டிருக்க வேண்டும். அதனைக் கருத்தில் கொள்ளாது சுமார் 700 ஆண்டுகளாக வழங்கி வருகிறது. இதுதான் சைவ சமயத்தின் அவல நிலை. இதற்கு யார் பொறுப்பு?

சித்தர்கள் எனக் கூறப்படுபவர்கள். அண்டத்திலுள்ளதைத் தன் பிண்டத்தில் கண்டு, அவற்றை மனித இனம் நிலையான இன்பத்தையடைய வேண்டுமென்ற பெருநோக்கால் கூறி வழிகாட்டியவர்கள். அவர்களின் திருமூலர் பெருமான் தலையாயவர்.

திருமூலர் பெருமான் பதினான்கு சாத்திரங்களிலும் கூறப்படாத சில செய்திகளை நமக்கு அறிவித்துள்ளார். அதில் சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

உயிரின் வடிவு

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறு டன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவயின் கூறு நூறாயிரத் தொன் றாமே

இதினின்று உயிர் அணுத்தன்மையுடையது என்பது பெற்றாம்.

உயிரின் இருப்பிடம்

நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி
உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பிரமனிருப்பிடம்
சிற்றம்பலமென்று நான் தேர்ந்து கொண்டேனன்றே

ஆன்மா

இந்தியம் அந்த கரணமிவையுயிர்
வந்தன சூக்கும வுடலன்றுமானது
தந்திடும் ஐவிதத்தால் தற்புருடனு
முத்துளமன்னும் ஆறாறுமுடிவிலே

புரையற்ற பாலினுள் நெய்கலந்தாற்போல்
திரையற்ற சிந்தையுள் சிவனவன் செப்பும்
உரையற்றுணர்வோர் உடம்பிங் கொழிந்தால்
கரையற்ற சோதி கலந்த சத்தாமே

தத்துவங்கள்

நாலொரு கோடியே நாற்பத்தெண்ணாயிர
மேலுமோரைந்து நூறுவேறாயடங்கிடும்
பாலவை தொண்ணூறோடாறுட் படுமவை
கோலிய ஐயைந்துளாகும் குறிக்கிலே - 2138

திருமந்திரம் அறிஞர் பலரின் கூட்டுறவோடு ஆராய்ந்து முடிவு செய்யப்படுமானால் பழமை பாராட்டப்படும் என்பது உறுதி.

மும்மலமுடைய உயிர்கள் ஐவகைப் படுவர் எனக் குறிப்பிடுகிறார். இது வேறு எந்த நூல்களிலும் காணப்படாதது.

1. பிராணன் 2. புருடன் 3. சீவன் 4. பசு 5. போதன் என்பன.

உயிர்களின் அவத்தை நிலை

உயிர் இறையருளால் தன்னையும், தலைவனையும் அறிகின்றபோது சுத்தன் என்றும் அறியாத நிலையில் கேவலன் என்றும் கேவலத்து நின்று நீங்கி மாயையுடன் கலந்த போது சகலன் எனவும் கூறப்படுவன. இம்மூன்று நிலைகளைப் பெற்றுள்ள உயிர்கள்.

கேவல கேவலம் - கேவல சகலம் - கேவல சுத்தம்
சகல கேவலம்- சகல சகலம் - சகல சுத்தம்
சுத்த கேவலம்- சுத்த சகலம் - சுத்தா சுத்தம்

என ஒன்பது நிலைகளில் விரித்துப் பேசப்பெறும்.

சுத்தா சுத்தம் என்னும் தலைப்பு, திருமந்திரம் எட்டாம் தந்திரத்தில் பேசப் பெறுவது. அது மலச் சார்புடைய மூவகை உயிரினங்களும் அடையும்

அவத்தை நிலையைப் பற்றியதாகும். அதனைத் திருமூலர் பெருமான் கீழ்க்கண்ட பகுதிகளாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

இது பேற்று வழிபாட்டால் பெறப்படும் பேறு. இஃது ஐநூற்றுப் பதினெட்டு திருப்பாடல்களையுடையது. இஃது உடலிற் பஞ்சபேத முதல் சோதனை ஈறாக முப்பத்தி மூன்று பிரிவுகளுடையது. உடலின் பாகுபாட்டை உற்று உரைப்பார். உடலிற் பஞ்சபேதமென்றனர். நோக்கு பருமை நுண்மை போர்வை மீநுண்முன்மை ஆக்கமுடல் ஐந்தாம் அறி என்றதனால் பருவுடல், நுண் உடல் போர்வையுடல் மீநுண் உடல் முன்மையுடல் என உடல் ஐவகைப்படும். இவ்வுடல்கள் அழியும் தன்மையன. இவற்றில் பல வேறு அவத்தைகளாகிய பாடுகள் உள்ளன. இப்பாடுகளினால் அறிவு தோன்றும். அவ்வறிவினால் அறிவின் மெய் இயல்பு கைவரும். அறுவேறு முடிவுகளும் வெளிப்படும். வெளிப்படவே விரவுதலால் பதி, பசு, பாசம் வேறான்மை புலனாகும். புலனாகவே முப்பதம், முப்பரம், அப்பாலியல்பு முத்துரியம், மும்முத்தி முச்சொரூபம், முக்கரணம், மூச்சூனியம், முப்பாழ், காரண காரியவுபாதி, வேண்டுதல் வேண்டாமையின்மை, புறங்கூறாமை, எட்டிதழ்க்கமலம், ஒன்பான் அபிமானி, முக்தி நிந்தை, மும்மை இலக்கண சிவனியல்பு, உலகுயிரொடுக்கம், பொய்யொழிந்தார்க்குப் புகல் என்பது போதரும். போதரவே மெய்யுணர்ந்தார் செயல் வெளிப்படும். வெளிப்படவே பசை மல அவாவறுத்தல் உண்டாகும். அவா அறவே அடியார்க்கு அடியாராகும் பக்தி உண்டாகும். அப்பத்தியால் விளைவது முக்தியாகும். முக்தியால் பெறும் பேறு செயலற்றிருக்கும் திருந்திடம் இதனை சோதனை எனவும் கூறுவர். இவ்வெட்டாம் தந்திரம் பத்தியின் பாலராய் முத்தி பெற்ற ஆளுடைய அடிகளாகிய மணிவாசகப் பெருமான் முக்தியும், பக்தியும், முக்தி நிலையும் வலியுறுத்தியுள்ளமையும் மேலதனை உறுதி செய்யும். ஆளுடைய அடிகள் அருளியதும் எட்டாம் திருமுறை என்னும் திருவாசகமே. எண் ஒற்றுமையையும் நோக்குக. இவ்வுண்மையினை வரும் திருப்பாட்டால் உணர்க.

முத்திநெறியறிய மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தம் மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே.

உயிர்களின் அவத்தை நிலை

முன்னர் குறிப்பிட்டுள்ளது போல உயிர் சகலத்து நின்று நீங்கி சுத்தனாதற் பொருட்டு ஆதியாகிய நடப்பாற்றால் உடல் கலன் உலகு உணா என்னும்

நான்கினையும் மாயை ஆக்கமாகப் படைத்தளிக்கப்படுகின்றது. இவற்றுடன் கலந்து ஆருயிர் சகலரெனப் பெற்ற பெயரோடு பின்னமுற நிற்கும். முன்னிலையாகிய கேவல நிலையினின்று மேலதான முழு நிலையாகவும், சுத்த நிலையினின்று கீழதாய் வேறுபட்டு நிற்றல் பேதம் எனப்படும். நிலைப்பும் அறியும் அறிவுமில்லாத மாயா காரிய பொருள்களும் அல்லாமல் நினைப்பும் அறிவும் உள்ள தூய சிவனுமல்லாமல் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் நிலைபெற்ற அறியும் பொருள் சத்து. நிலையிலா அறிவுப் பொருள் அசத்து. இரண்டன் பாலும் ஆருயிர்கட்கு ஒட்டு இருப்பதால் அது சதசத்தாகும். இந்நிலை ஆருயிரின் தொழிலுக்குகேற்ப வாய்ந்த நிலையாகும்.

இவற்றை ஓர் ஒப்பில் வைத்துக் காணுங்கால் படியாமலிருப்பது கேவலம். படிப்பது சகலம். பாட்டாகத்தான் திகழ்வது சுத்தம் எனக் கூறலாம். நிலைப்பது என்பது ஒரு படித்தாய் இருப்பது. நிலையாதுதென்பது தோன்றி மறைவது. ஆருயிர் நிலைப்பு பிறப்பு இரண்டின் பாலும் நிற்கின்ற தன்மையுடைமையின் சார்புடையது எனக் கூறலாம். அதுவே சத்சத்து. அதனை ஒரு வெண்பாவினால் நினைவு கூர்வாம்.

பாட்டுப்படியாமையே படித்தலல் பாட்டாதல்
பூட்டும் புலம்புணர்ப்பே புரியும்- நாட்டும்
நிலைப்புச் சத்தாகும் நிகழ்மறப்ப சத்தாம்
தனைச்சதா சித்தா யெண்ணல் சார்பு

கேவலம்-புலம்பு, சகலம் - புணர்வு. சுத்தம்-பரிவு கருவிகளுடன் கூடிய கேவலாவத்தையுடையோர் மும்மலப்பிணிப்பாளர். மும்மலமாவது ஆணவம். கன்மம் மாயை என்பன. மும்மலப்பிணியுடையோர் யாவரெனின் ஒப்பில்லாத அயன் மால் பல தேவர்கள். இவ்வுலகில் வாழும் மக்கள் முதலாகப் புழுக்கள் ஈறாகச் சொல்லப்பட்ட அனைத்துயிர்களும் என்க. புழுவுக்குரிய குணங்கள் நான்கு. உண்டல் , உடனுறைதல்,உறங்கல், உட்குதல்(அஞ்சுதல்) இங்ஙனம் இந்நான்கு குணங்களும் அனைவருக்கும் உண்டு. சிவனெறி கல்லார் அவனெறி செல்வர். இதனையே திருமந்திரம் கீழ்க்காணுமாறு கூறுதல் காணலாம்.

தன்னையறியத் தன்றற்கேவலன் றானும்
பின்னமுற நின்ற பேதச் சகலனும்
மன்னிய சத்தசத்துச் சதசத்துடன்
துன்னுவர் தத்தம் தொழிற்கள வாகவே (2187)

சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்
புகலு மலம் மூவகையும் புணர்ந்தோர்
நிகரில் மலரோன்மால் பல்தேவர்கள்
நிகழ்நரர் கீடமந்தமு மாகுமே

சைவத் தத்துவங்கள் முப்பத்தாறாகும் அவற்றுள் உடல் மெய் இருபத்து நான்குகள் ஆள் ஒன்று ஆக இருபத்து ஐந்து மெய்களும் இணைந்து தொழிற்படும் நிலை நனவு நிலையாகும். உணர்வு மெய் ஏழனுள் ஒன்று நீங்கலாக காலம் நியதி கலை வித்தை அராகம் மாயை என்னும் ஆறு மெய்கள் மட்டும் தொழிற்படும் நிலை கனவு நிலையாகும். உணர்த்து மெய்யாகிய அத்தன் அன்னை அருளோன் ஆண்டான் ஆசான்(சுத்த மாயை) என்னும் ஐந்து மெய்கள் மட்டும் தொழிற்படும் நிலை உறக்க நிலையாகும். நுண் உடலும் மூலப்பகுதியும் சேர்த்த நிலையோடு ஆருயிர் நிற்கும் நிலையே பேருறக்க நிலையாகும். இந்நிலையினையே துரிய அவத்தையின் நிலையென்ப. இதனையே திருமூலர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

ஐயைந்து மாறுமோரைந்து நனாவினில்
எய்யு நனவு கனவு சுழுத்தியா
மெய்யும் பின்சூக்கமும் மெய்ப்பகு மாயை
ஐயமும் தான் அவனத் துரிய த்தனே (2168)

சிவபெருமான் அனைத்துயிர்களுடன் கலப்பால் ஒன்றாயிருக்கிறான். அந்நிலையில் உயிர்க்கு உயிராகிய உருவாகவும் அருவாகவும் விளங்கியருள்கின்றனன். அஃதாவது சிவன் உயிருக்கு உயிராக நிற்கும்பொழுது உருவன் எனக் கூறப்படுகிறான். அவன் பொருட்டன்மையால் வேறாய் நிற்கும்போது அயற்புணர்வாய் நிற்பன். இதனைச் சார்புப் புணர்வென்பர். அப்பொழுது அறிவாகவும் அறிவிற் பின்னிய செறிவாகவும் விளங்குவன். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சிவபெருமான் பேரறிவுப் பேராற்றல் ஆகிய சத்தியுடன் வெளிப்படுவான். அவ்வாற்றலையும் அவனையும் அவன் திருவுளக் குறிப்பினையும் உலகமும் உலகத்தை ஒட்டிய உயிர்களும் ஏற்று ஒவாது இயங்குகின்றன. அங்ஙனம் இயங்காவிட்டால் உலகமனைத்தும் இருளில் மூழ்கிக்கிடக்கு மென்பதறிக.

பிரளயா கலர்

சுத்த மாயையாலான உடலுடையவர்கள் சுத்த மாயா உலகத்தில் உறைவோர். இருமலத்தராவர். இவர்கள் இயல்பிலே இருமலத்தாரும்

ஊழி முடிவாகிய பிரளயக்காலத்தில் திருவருளால் ஒரு மலம் நீங்கிய இருமலத்தாரும் என இருவகையினரவார். மாயை அகன்ற தன்மையா மாயையகன்ற தன்மை என்பது மயக்காது விளங்கும் மாயையினை உடையவர் என்பதாம். இதுபொலமுறும் வீடகன்று நலமுறுவீட்டில் உறைவது போன்றதாகும். இங்குறைபவர்கள் சீகண்டருத்திரர். நூற்றெட்டுருத்திரர் முதலியோராவர். சீகண்ட ருத்திரரே தமிழ் ஆகமமாகிய மெய்கண்ட நூல்களின் முதல்வராவர். இதனைத் திருமூலர் பெருமான் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுதல் காண்க.

தாவிய மாயையில் தங்கும் பிரளய
மேவிய மற்றதுடம் பாய்மிக்குள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயிற் நூற்றெட்டுருத்திரர் ஆகுமே

விஞ்ஞான கலர்

ஆணவம் மட்டும் உடைய ஒரு மலத்தார். இவரை விஞ்ஞான கலர் என்பர். இந்நிலையினையுடையார் அட்டவித்தேசரெனக் கூறப்படுவர் அனந்தர் முதல் எண்மாவர்.

ஏழுகோடி மந்திரத் தலைவர்கள் முதல் பலராவர். வித்தை என்பது திருவடி உணர்வினை உணர்த்தும். இவர்கள் சிவ உலக வாசிகள் ஆவார். நனவில் உறக்கப்பாடு நிலையினை எய்தியவர்கள் (கனவிற் சுழுத்தி). சிவநுகர்வால் ஊழை வெல்வோர்கள். அஃதாவது ஊழால் வரும் நுகர்வுகளால் மொத்துணார். அவ்வூழ் உடலூழாக்கழியும் அகப்புறக்கலன்களாகிய அந்தக்கரணங்களுடன் கூடார். கூடாராகவே கன்ம மலம் நீங்கும். நீங்கவே, ஏனை ஒரு மல மாத்திரம் உடையராவர். ஆகவே அனைத்தையும் சுட்டியும் சுட்டதாகிச் சிவவுருவாய்த் தெளிந்து நிற்கும் வண்ணம் அவர்தம் அறிவைப் பேரறிவாய் விளங்கும்படி விளக்கி நிற்கும் ஐங்கலைகளோடு கூடி நிற்பர். அந்நிலையிற் பேரறிவாளர் எனப்படுவர்.

மேலோதிய தூமாயைக்கண் உறைவோர் சிவனருளால் செவ்விவாய்த்தும் அவ்வொருமலம் அகன்று உயர்ந்தோரும் சிலராவர். அத்தகையோர் விந்துவாகிய ஒளியினையும் நாதமாகிய ஒலியினையும் விட்டகல்வர். இவ்விரு மெய்யினையும் விட்டோர் பிரணவ உருவினராவர். அவ்வுருவின் கண் அடங்கி நிற்பர். அடங்குவதென்பது முனைப்பற்றுத் திருவருள் திருக்குறியின் வழி ஒழுகுவது. இங்ஙனம் ஒழுகுவதனால் அவர் தூயோராவர். இதனையே குற்றம் நீங்கிய தூவினைத்

தொழிலென்பர் (சுத்தாவத்தை) இதனையே திருமூலர் பெருமான் கீழ்க்கண்டுள்ளவாறு கூறுதல் காண்க.

ஆகின்ற கேவலத் தாணவத் தானவ
ராகின்ற வித்தேச ராமனந் தாதிய
ராகின்ற எண்மர் எழுகோடி மந்திர
ராகின்ற ஈசர் அநேகரு மாமே. -2193

ஆமவ ரிற்சிவ னாரருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகி யொடுங்கலி னின் மலத்
தோமறு சுத்தா வத்தைத் தொழிலே

சுத்தாவத்தையின் விளக்கத்தினை விரிவஞ்சி விடுத்து சுத்தத்தில் சுத்தாவத்தையைப் பற்றிக் காண்போம்.

சத்தத்திற் சுத்தநிலையிலுள்ள ஆருயிர் தொன்மையும் முன்மையும் நன்மையும் உண்மையும் அறிவும் இன்பமும் ஒருங்கமைந்த தென்னாடுடைய சிவபெருமானின் திருவுருவெய்துதல், சுத்தத்தில் கேவல நற்பணியறுதலாகிய தவ ஒழுக்கம். சுத்தத்தில் சகலமாகிய இன்பத்தில் மூழ்கும் இனிய உறைவிடம் தூய துரியம் இன்பநிலையம் என்பர். இதனையே திருமூலர் பெருமான் கீழ்க்காணுமாறு கூறுகிறார்.

சுத்தத்தில் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலம் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலா சமாஞ்
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலு மாமே -2213

தூயோனாகிய தன்மையையுடைய ஆருயிர்க் கிழவன் ஈசன் என அழைக்கப் பெறுவன். அவ்வுயிர் அப்பால் நிலையில் திருவடியுணர்வாய்த் திகழும். இவ்வுலக நுகர்வுகளை நுகரும். அருளோன் முதலாக அயன் ஈறாகச் சொல்லப்படும் தூமாயையருள் விளக்க வடிவங்களை எய்தும் திருவருளால் அவ்வடிவங்களின்று அகன்று தூய சிவனாகி ஞானவரம்பாம் மோனமெய்தி பேரறிவுப் பேரொளிப் பெரு முதல்வனாக விளங்குவன். இந் நிலை ஒலி மெய்யாகிய நாதமும் கடந்த நிலையாகும் எனக் கூற வருகின்ற திருமூலர் பெருமான் கீழ்க்கண்ட விதமாகக் குறிப்பிடுகிறார்.

ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாத்
தானுல குண்டு சதாசிவமாசத்தி

மேனிகள் ஐந்தும் போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்து ஒளிமூலத்தனாகுமே -2178

கட்டும் வீடும் நல்லோரால் பேணப்படும் தூயமாயை ஒடுக்கமும் அப்பால் நிலையும் திருவருளால் ஒரு சிறிதும் தோன்றாவாகும். தான் நுகர்ந்து கொண்டிருப்பது அத்தன் சிவபெருமானின் திருவடி இன்பம் என்றருளால் அறிவன். அறிந்த பின் எண்ணமாகிய சித்தத்தின் இயக்கமில்லை. அஃதில்லையாகவே வேறு எச்செயலுமில்லை. தானே அவன் அவனே தான் என்ற வேற்றுமையின்மையை உயிர் உணரும். ஆருயிர் அனைத்தும் மலம் தேய்தற் பொருட்டு வினைக்கீடாக உடலுடன் அருளால் வளர்ந்திட்டு, வினைச் செவ்விடவாய் தற்பொருட்டு ஒடுங்கி நின்று முழுமுதற் சிவனை ஆருயிரின் பழுதகலும் வரைவைப்பால் மறைத்திட்டு திருவடி இன்பம் பெறுவதற்கு அருள் புரிந்து சிவகுருவாகி ஆருயிரின் அகம் புகுகின்றனன்.அதனால் எல்லாம் திருவருட் செயலேயாம் எனத் திருமூலர் பெருமான் சிவபெருமானின் அருட்திறத்தை உணர்த்தக் கீழ்க்காணுமாறு கூறுதல் அறிக.

அருளிற் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்திளைப் பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத் தாரமு தீட்டி
அருளால் என்நந்தியகம் புகுந்தானே -1769

திருச்சிற்றம்பலம்

87. முக்தி நிந்தை, இலக்கணத்திரயம், தத்துவசிவாக்கியம்

முனைவர். கரு. முத்தய்யா
முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்
சேவுகனார் அண்ணாமலை கல்லூரி

பேற்றுப் பழிப்பு (முக்தி நிந்தை)

திருமூலர் தமிழ்நாட்டுச் சித்தர்களுள் காலத்தால் முற்பட்டவர்; சிவயோகி; தனது அனுபவ ஞானத்தை நூலாக்கி இவ்வுலகிற்கு அளித்துச் சென்றுள்ளார். அதுவே திருமந்திரம். அந்நூலில் சைவ சித்தாந்தத்தின் பிழிவை நாம் உணர முடிகிறது. திருவடிப்பேறு அல்லது முத்தி பற்றிய திருமூலர் கருத்தைக் காணலாம்.

தாமரை நூல் போன்ற மென்மையான அன்பு நாரால் சிவயநம எனும் ஐந்தெழுத்து மந்திரத்தைத் தொடுத்துச் சிவகுரு, சிவபெருமான் திருவடியில் மனம் படியுமாறு நன்னெறியைக் காட்டுவார். நல்வினைப்பயனால் திருவருள் நோக்கம் பெற்றவர்கள் அந்நெறியைப் பற்றிச் சிவன் திருவடிப் பேற்றினை அடைவர்.

நல்வினைப் பயனற்ற, தீவினையாளர்கள், குருவழி காட்டினாலும் அதனைக் காணாது அலைந்து துன்புறுவர். அத்தகு தீவினையாளர்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் ஆகிய நிலப்பகுதிகள் அனைத்திலும் அலைந்து திரிந்தாலும் சிவபெருமானையும், அவன் திருவருளையும் உணரமாட்டாது துன்பத்தில் உழல்வர்.

அவர்கள் தமக்குத் திருவடிப் பேற்றினைத்தரத்தக்க பொருத்தமான மந்திரம் ஐந்தெழுத்து மந்திரமே என அறிந்து அதனை ஏற்க மாட்டார்கள். பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிக்கும் சினத்தோடு பேசும் இயல்புடைய அத்தீவினையாளர்கள்தான் முத்தி எனப்படும் திருவடிப்பேறு ஒன்று இல்லை எனப் பழிப்பர். அவ்வாறு பழிப்போர் நரகத் துன்பத்தை இவ்வுலகிலேயே அனுபவிப்பர் என்கிறார் திருமூலர். அவர்கள் சோற்றுக்கு வழியற்று இரவலராய்த் திரிவர். அப்போதும் சரியான உணவு கிடைக்காமல் குதிரையைப் போல் இங்குமங்கும் ஓடி அலைவர் என்கிறார்.

பேற்றினைப் பழிக்காமல், அதனை அடைய விரும்புவோர். இவ்வுலகப் பற்றினை விடுதல் வேண்டும். அவ்வாறு விடுவதற்கு, பற்றற்றவனாகிய சிவபெருமான் திருவடியைப் பற்றுதல் வேண்டும்.

பற்றுக பற்றறான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்று இதனையே வள்ளுவரும் குறிப்பிடுகிறார். இவ்வாறு சிவன் திருவடிப் பேற்றைப் பழிக்காமல், அவன் திருவடியைப் பற்றுவோருக்கு அவனே இங்குற்றேன்; இஃதென் என்று அருளுவான் என்கிறார் திருமூலர்.

மும்மை இலக்கணம் (இலக்கணாத்திரயம்)

ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொன்றுக்குத் தந்துரைப்பதை இலக்கணை என்பர். அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும். சைவசித்தாந்தத்திலும் உயிரின் நிலைகளில் இம்மூவகை நிலையும் காணப்படுகிறது என்கிறார் திருமூலர்.

ஆருயிர் அறிவுப் பெருவெளியாம் நுண்ணிய வியோமத்துள் போதல் விட்ட இலக்கணை. அவ்வுயிர் உலகியற் செயலற்று, சிவச் செயலுற்று ஒடுங்குவது உபசாந்தம் எனப்படும் விடாத இலக்கணையாம். ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் புலன்களை அவ்வுயிர் செவி, மெய், கண், நா, மூக்கு என்னும் பொறிகள் வழிக் கொள்வது விட்டும் விடாத இலக்கணையாகும்.

ஓங்காரம் எனும் பிரணவ வில்லில், திருவைந்தெழுத்து எனும் நாணைப் பூட்டி, ஆருயிரை அம்பாக்கி, சிவனைக் குறியாக்கி எய்தால், பொறிகளாகிய கொல் யானை ஐந்தும் அழிந்து விடும். உயிர் சமாதி நிலையில் அருளொளி பெற்றுச் சிவன் திருவடிக் கீழ் ஒடுங்கும் சொரூப நிலையை அடையும் என விளக்குகிறார் திருமூலர்.

பேருரை (மகாவாக்கியம்)

நான்மறைகளுக்கு விளக்கம் கூற வந்த உபநிடதங்கள் வேதாந்தம் எனப்படும். அவ்வுபநிடதங்களில் சாந்தோக்கிய உபநிடத்தில், அருணி முனிவர் தன் மகன் சுவேத கேதுவுக்கு உபதேசிக்கும் தத்வமசி (தத்துவம் அசி- அது நீ ஆனாய்) என்பதை மகா வாக்கியம் எனக் குறிப்பிடுவர் வடமொழியாளர். தென்மொழியாளர் சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடும் சிவயநம என்ற மந்திரமும், வடமொழி மகா வாக்கியமும் உணர்த்துவது செம்பொருளான சிவம் ஒன்றையே என்கிறார் திருமூலர்,

தத்துவ மசிவே தாந்த
சிவமாமஞ் சித்தாந்த வேதாந்த மாமே -2528

இதனை விளக்க முற்படும் திருமூலர் செயலற்ற நிலை என்பது (துரியம்) மூவகைப்படும். ஆருயிர்ச் செயலறல் (சிவதுரியம்) அருட் செயலறல்(பரதுரியம்), சிவச் செயலறல்(சிவதுரியம்) என்பனவே அவை என்கிறார். அந்தச் சிவதுரியத்தில் அழுந்துதல்தான் தத்துவமசி உண்மை என்கிறார் திருமூலர்.

உயிரானது இம்மூன்று துரிய நிலைகளையும் படிப்படியே எய்தி, சிவதுரியத்தில் அழுந்த அதனை நெறிப்படுத்துவது ஓங்காரமாகிய பிரணவ மந்திரமே என்கிறார் திருமூலர். அந்தப் பிரணவ மந்திரத்தை மனத்தில் இருத்தி, ஏனைய நினைவுகளை விட்டிடப் பயின்ற மனமே சிவபெருமான் விரும்பி உறையும் ஆலயமாகும். அவ்வாறு அவன் வந்து மனத்தில் உறைந்தால், அவ்வுயிருக்குத் திருவடிப் பேறு கைகூடும் என்பது திருமூலர் காட்டும் ஆன்மிக நெறி.

சிவனின் இயல்புகளைத் திருமூலர் பட்டியல் இடுகிறார். அவர் தூய மேனியன், பற்றற்றவன், பிறப்பில்லாதவன், யாவரும் புகழத்தக்க பொன்போலும் திருமேனியையுடைய ஈடும் எடுப்பும் இல்லாப் பீடு சேர்வானவன்; தனக்குப் புறம்பாக வேறொன்று இலாமையால் எல்லாவற்றையும் உள்ளடக்கி நின்ற அகல் பரப்பினை உடையவன். பிறந்து வளரும் நிலை இல்லாததால் புது வளர்ச்சியோ, புது நிறைவோ அடையாதவன்; பேரற்றவன்; நினைவுக்கும்,அறிவுக்கும் அப்பாற்பட்டவன். இத்தகைய பேராற்றல் பெரும் பொருளாகிய சிவபெருமான், தன்னைக் காட்டுவதற்குத் தனக்குமேல் ஒரு காரணமுமின்றித் தானே காரணமாய் ஆருயிரின் தன்மை நோக்கி வெளிப்பட்டருள்வான். உயிரைத் தன் அடியானாக ஏற்றவுடன் அவ்வுயிரின் மலம் நீக்கும் ஆற்றல் உடையவன்.

இத்தகு இயல்புகளை உடையவனாகச் சிவபெருமானை உணர்த்தும் திருமூலர் சிவன் அனல் என்றும், திருவருளாம் சத்தி நீரென்றும் குறிப்பிடுகின்றார். நெருப்பும், நீருமாகிய சிவமும் சத்தியும் கலப்பதால் இயங்குவதே உலகம். இதனை நாம் அறியவேண்டும் என்றால் கூட, அவன் அறிவித்தால்தான் அறிய முடியும்.

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்பும் கலப்பும்
அறிவார் இருந்தங்கு அறிவிக்கின் அல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே -2537

என்பது திருமூலர் திருமந்திர வாக்கு.

ஆருயிரும், உலகமும், உலகியற் பொருள்களும், முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் ஆட்டுவிப்பதால் ஆடுகின்றன. குறிப்பாக, ஆருயிர்க்கு, ஆணவமறைப்போடு மட்டும் தங்கி ஏதும் அறியாமல் இருக்கும் அறியாமை நிலையையும், முற்றறிவாம் ஞானத்தை உணராமல், சுட்டறிவு, சிற்றறிவு ஆகியவற்றைப் பெற்று நிற்கும் அறிவு நிலையையும் ஒருங்கே அகற்றும் திருவருள் உடையவன் சிவபெருமானே.

அத்தகு பேராற்றலான செம்பொருளை, அவன் நம்மைவிட்டு என்றும் பிரிவின்றி நீங்காது உறையும் வண்ணம், அவனருளால், அவனை இடையறாது சிந்தித்து, தொழுது, உள்ளத்தில் நிலை நிறுத்த வேண்டும். அவ்வாறு நிலை நிறுத்தினால் உயிர் சிவமாம் நிலை பெற்றுப்பொலியும்.

இதனைத்தான் உபநிடத மகாவாக்கியமாகிய பேருரை விளக்குகிறது.

அதனைத் திருமூலர் கீழ்வரும் இரண்டு திருமந்திரங்களால் தெளிவுபடுத்துகிறார்.

சிந்தையது என்னச் சிவன் என்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி லுள்ளே சிவனிருந் தானே -2811

சீவன் எனச்சிவ னென்னவே றில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்த பின்
சீவனார் சிவனாயிட்டி ருப்பரே -1975

சீவனார் சிவனாயிட்டு இங்கிருப்பர் என்பது அது நீ ஆனாய் என்ற உபநிடத மகா வாக்கியமாகவும் உள்ளது. இந்நிலைதான் ஆன்மிகத்தின் உச்ச நிலை.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

88. விசுவக்கிராசம், வாய்மை, ஞானிசெயல்

பேராசிரியர். ம. கார்மேகம்
தமிழ்த்துறைத்தலைவர்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்பது திருமூலர் வாக்கு. அந்தத் தமிழால் அவர் தந்த திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப் பெறுகிறது. தமிழ் மூவாயிரம் என்றும் சிறப்பிக்கப் பெறும் திருமந்திரத்தை,

ஊனுடம்பிற் பிறவியிடந் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை

என்று சேக்கிழார் பாராட்டுகிறார்.

ஒன்பது தந்திரங்களைக் கொண்ட திருமந்திரத்தில் எட்டாம் தந்திரம். சிவதரிசனத்தின் பின் சிவனொடு கூடுதல் சிவயோக நிலையினை உணர்த்துகிறது என்பர். சிவஞானம் பெற்ற உயிர் பொய்ப் பொருள்களை நீக்கி மெய்ப்பொருளாம் சிவனைக் கண்டு தெளிகின்ற நிலை சிவயோக நிலை எனலாம். அதுவே மெய்கண்டதும் ஆகும். அவ்வாறு மெய்கண்ட நிலை வந்ததும் இறைவனுக்குள் உலகத்து உயிர்கள் ஒடுக்கம் ஆவதைக் கூறுவது விசுவக் கிராசம். அவ்வாறு உணர்ந்தபின் ஞானியாகிறவன் நிலை என்ன என்பதைக் கூறுவது ஞானி செயல் ஆகும். இவ்விரண்டு பகுதிகளையும் அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விசுவக்கிராசம்

இறைவனது பெருநிலையில் உலகத்து உயிர்கள் அனைத்தும் ஒடுக்கம் ஆகும். விசுவம் என்பது அகிலம்; கிராசம் என்பது கவளம். அகிலமே கவளமாக விழுங்கப் பெறும் என்ற செய்தியைத் தருவதுதான் இப்பகுதி. அனைத்து உயிர்களும் இறைவன் முன் ஒன்றுமற்று ஒடுங்கிவிடும் என்பதுதான் கருத்து. இதனை உலகுயிர் ஒடுக்கம் என்பர் பெரியோர். இக்கருத்தினை எட்டுப் பாடல்களில் விரித்துரைக்கிறார் திருமூலர்.

பரத்தில் ஒடுங்குதல்

ஆகாயத்தில் தோன்றும் நிழல் உருவம் ஆகாயத்தில் மறைந்து விடும்; ஓடும் நீரில் உண்டாகும் நீர்க்குமிழி உண்மைபோல விளங்கிப் பின்னர்

அந்நீரில் மறைந்து விடும். இந்த உண்மையை அறிந்தால் நெருப்பின் முன்னர்க் கர்ப்பூரம் போலத் தூலமாகக் காணப்பெறும் இவ்வுடம்பு, பரத்தில் ஒடுங்கிவிடும். இதனை,

எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே

என்று கூறுகிறார் திருமூலர். இக்கருத்தைப் பிற பாடல்களிலும் தொடர்ந்து உணர்த்துகிறார்.

சிவமாய் விளங்கல்

உடம்பும் உயிரும் நீக்கமற ஒன்றி இருக்கின்றன. எனவேதான் திருமூலர், உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்றார். இவ்விரண்டும் பிரிவின்றி ஒன்றுபட்டால் உடம்பிலுள்ள உயிர் சிவத்தினை அடைந்துவிடும். அதன்பின்னர் உடம்பு நுண்மெய்யாகிய சிவனுடன் கரைந்துவிடும். உடலாகிய சிறை நீக்கப்பட்டபிறகு உடலில் இருந்த உயிர், சிவம்போல எங்கும் விளங்கி நிற்கும் என்பதையும் உணர்த்துகிறார்.

தொழுது ஒடுங்குதல்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புறப்பொறிகள் ஐந்தும் கொண்டு விளங்கும் புறவுடல் அழியக் கூடியது; அது வினைகளுக்கு ஈடாக அமைந்தது. இப்பொறிகள் அடுத்தடுத்து அழியக்கூடியவை. எனவே நுண் உடலாகவும், அழியா உடலாகவும் உள்ள இவ்வுடலால் இறைவனைத் தொழுதல் வேண்டும். அதனால் மனம் குவிதல் வேண்டும். இல்லையேல் மனம் விரிந்து வருந்துவதற்குரியதாகும். எனவே இறைவனைத் தொழுது ஒடுங்குதல் உயிர்க்குரிய கடமை என்கிறார்.

வணங்கி அருள்பெறல்

சிவ பெருமான் எங்கும் நீக்கமறச் செறிந்து நிற்கிறான். அவன் அருள் புரிகின்றவன். எல்லா உயிர்களிடத்திலேயும் நிலைபேறாகி உயிர்க்குயிராய் நிற்கின்றவன். தான் அழியாமல் உலகை ஒடுக்கித் தோற்றுவித்தும் அருள்கின்றான். இந்த உண்மைகளைக் கண்டு அவனருளால் தான் வாழ்ந்ததாகக் கூறும் திருமூலர், உயிர்கள் சிவனை வணங்கி அருள் பெறலாம் என்றும் அதனால் அவனொடு ஒடுங்கலாம் என்றும் மற்றொரு பாடலில் உணர்த்துகிறார்.

சிவஞானம் பெறுதல்

மேலும் இன்னொரு பாடலில் சிவத்தின் பெருமை கூறிச் சிவஞானம் பெறும் செய்தியையும் கூறுகிறார் திருமூலர். *உயிர்களின் செவ்வியை அறிந்தவன் சிவபெருமான்*; அவ்வுயிரின் சிற்றறிவினைத் தன் முற்றறிவின்கண் அடங்கச் செய்பவனும் அவனே; தூய்மையும், செவ்வியும் சிவனினைவும் ஒருங்கமைந்த உள்ளத்தில் சிவபெருமான் மேலோங்கித் திகழ்கின்றான். எனவே உயிரும் *பரன்* என்றழைக்கப்படுகிறது. அதனால் உலகத்து நுகர்வை உயிர்கள் ஒழித்து விடுகின்றன. சிவமும் உயிரும் புணர்ந்து நின்று சிவத்துடன் இருக்கும் ஆன்மா வெட்டவெளியனாகும். அறிவு வெளியாகி ஆன்மாவைச் சுமந்தவன் சிவஞானம் பெறுவான் எனத் திருமூலர் கூறுகிறார். இதனால் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு சிவனைச் சிந்திப்பவன் சிவனோடு ஒடுங்கிச் சிவஞானம் பெறலாம் என்பது தெளிவாகிறது.

நந்தி அருள்

நந்தி அருள் நான்இருந் தேனே என்னும் திருமூலர் கூற்றுக்கிணங்க, அடுத்த பாடலில் நந்தி தன் இதயத்துள்ளான் என நவில்கிறார்.

"இரும்பிடை நீரென என்னையுள் வாங்கி" என்ற தொடரால் சிவபெருமான் தன்னைத்தன் திருவடிக்கீழ் ஒடுக்கிக் கொண்டான் என்கிறார். முப்பாழ் வெளியையும் கடந்து நின்று அருள்பவனாகிய நந்தியம் பெருமான் தம் உள்ளத்தில் உறைகின்றான் என்பதையும் உணர்த்துகிறார்.

கரியுண் விளங்கனி

அடுத்த பாடலில், உடம்புக்குள் உள்ள உயிரும் உயிரைத் தாங்கும் திருவருளும் முன்னோதிய சிவனும் அனைத்துலகங்களும் பின்னோதும் சிவன் எனும் செம்பொருளால் ஒன்றுமில்லாது ஒடுக்கப்படும் என்பதை உணர்த்துகிறார். யானை நோயால் பாதிக்கப்பட்ட விளாம்பழம் ஓட்டில் கேடின்றி இருந்தாலும் உள்ளே ஒன்றுமில்லாதது போல, இறைவனை உணர்ந்தவன், புறத்தோற்ற உடலால் தோன்றினாலும் அவன் அகத்துள்ளே எல்லாம் கடந்த ஒன்றுமற்ற நிலையினை அடைவான்; அதனால் இறைவனுடன் ஒடுக்கம் எய்துவான் என்பது பொருள்.

ஒடுக்கமாகி உணர்தல்

அந்தமும் ஆதியுமாக உள்ளான் இறைவன்; அவன் அருளாற்றலால் நம்மைத் திருவடிக் கீழ் ஒடுக்கி நிற்கின்றான். ஞானத்தால் அறியப்படும் அவன் அருள் விருப்பினை நம்மால் நுகர முடியுமே தவிர நுவல முடியாது என்பதனை, "ஞானநே யாந்தத்தே நந்தி யிருந்தனன் நாமறி யோமன்றே" என்கிறார். இறைவனுடன் ஒடுக்கமாகி ஒன்றாய் நின்று உணர்வது நுகர்வு ஆகும். அவனை அறிதல் என்பது. தான் வேறாக நின்று அறிவதாகும். எனவே அவனுக்குள் உயிர் ஒடுங்கினால் மட்டுமே உணர்வும் நுகர்வும் கிடைக்கப் பெறும் என்பதையும் வற்புறுத்துகிறார் திருமூலர்.

ஞானி செயல்

இறைவனது பெருநிலையில் எல்லாம் ஒடுக்கம் பெறும் என்பதை உணர்த்திய திருமூலர் அடுத்ததாக வாய்மை எது என்பதை விளக்குகிறார். மெய்ப்பொருளைச் சேர்தலே வாய்மை என்கிறார். இத்தகு மெய்ப்பொருளைச் சேர்ந்து தன் உண்மையை உணர்ந்த ஞானியின் செயலை அடுத்துக் கூறுகிறார்.

ஞானியின் செயல், வினைகளைக் கடிவது அல்லது நீக்குவதாகும். இறைவன் அருள்தன்மையை உணர்ந்து சிவனருள் வலத்தினால் நம்மையே அறிந்துகொள்பவர்கள்தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளின் செயலைக் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்துகிறார் திருமூலர்.

வினையின் நீங்கல்

தம்மை அறிந்து கொண்ட காரணத்தால், ஞானிகள் தாம் முற்பிறப்பில் செய்த வினைப்பயன்கள் வரும்போது அவற்றை அப்படியே ஏற்று அனுபவிப்பார்கள். முன்னோனாகிய இறைவனை நினைந்து அவ்வினைகளிலிருந்து நீங்குவார்கள். பின்னர் நிகழும் வினைகளையும் அறிந்து கொள்வதால் அவற்றைச் செய்யாது, அவற்றிலிருந்தும் விடுபடுவர் என்று திருமூலர் கூறுகிறார்.

இறைவனை உணர்ந்து கொண்டவர்கள் முற்பிறவி வினைப்பயனை ஏற்கும் பக்குவத்தையும், இனிவரும் பிறப்புக்கான வினைகளைச் செய்யாதிருக்கும் பக்குவத்தையும் பெறுவர் என்பது கருத்தாகும்.

வினைமுடிச்சை விலக்குதல்

தன்னை யறியும் தத்துவ ஞானிகள் முன்வினைப் பயனாகிய முடிச்சுக்களை அவிழ்த்து விடுவர் என்றும் அவிழ்த்த முடிச்சுகள் மீண்டும் முடிச்சு ஆகாதவாறு போல, பின்பு வரும் வினைகளுக்கு வழியின்றி அவற்றைக் குலைத்து விடுவார்கள் என்றும் கூறுகிறார் மூலர். அந்த முடிச்சுக்களை அவிழ்ப்பதும், குலைத்து விடுவதும் சிவனருளால்தான் என்றும் விளக்குகிறார்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்து பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

என்பது திருமந்திரம்

ஞானிகள் யார்?

இத்தகைய ஞானிகள் யார் என்பதையும் திருமூலர் விளக்குகிறார். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களாலும் பாவம் நிகழும்; பாவம் என்பது பிறப்பாகும். சிவன் நினைப்பின்றி வாழ்ந்தால் பாவம் உண்டாகும். எனவே மனம், காயம் என்பவற்றால் உலகியலைப் பற்றாமல் சிவனைப் பற்றினால் வினைகள் தொடராது என்பதை உணர்ந்து வினையை வெல்லச் சாதனைகள் செய்து மௌனமாய் இருப்பவரே ஞானியாவார் என்கிறார்.

இவ்விரு பகுதிகளாலும் இறைவனை உணர்ந்து அவனுள் ஒடுங்கி, வினைகளைக் கடந்து நிற்கும் ஞானிகளானால் பற்று நீங்கும்; பாவம் நீங்கும் என்பது வற்புறுத்தப் பெறுகிறது எனலாம்.

திருச்சிற்றம்பலம்

89. அவாவறுத்தல், பக்தியுடைமை, முக்தியுடைமை, சோதனை

முனைவர். கி. சுப்பிரமணியன்
பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கோயம்புத்தூர்.

திருமந்திரம் என்னும் ஞானக்களஞ்சியத்தில் எட்டாம் தந்திரத்தின் இறுதி நான்கு பகுதிகள் அவாவறுத்தல், பக்தியுடைமை, முக்தியுடைமை, சோதனை ஆகும். பக்தி எது. அதை எப்படிக் காட்டுவது. முக்தி எப்படி பெறுவது. அவற்றை அடையும் வழி என்ன. இதற்காகச் சோதனைகள் உண்டா என்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக இந்தப் பகுதி உள்ளது. மொத்தம் 33 பாடல்கள் அவற்றின் மிகச் சுருங்கிய கருத்துப் படிவம் இக்கட்டுரையுள் காட்டப்படுகிறது.

வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி யிலிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளி தாமே

அவாவறுத்தல் - ஆசையை ஒழிப்பது என்னும் பொருள்படும். *ஆரா இயற்கைஅவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்* என்கிறது திருக்குறள். எந்த ஆசையை அறுப்பது? தீரா ஆசை என்றால் தீர்க்கும் ஆசை எது? யோக நிலையில் மூழ்கி வாயுவை உயர்த்தி மனத்தினை அடக்கி உள்ளே ஒடுங்கினாலும் ஈசனைக் காணமுடியாது. உலகப் பொருள்கள் மீதும் அவற்றைத் துய்க்க வேண்டும் என்று அளவு கடந்து விரும்பும் ஆசையையும் தன் மீதும் ஆசையையும், தொடர்புடைய மனைவி மக்கள் மீது கொண்ட அன்பையும் ஒருவன் வேரற அறுக்க வேண்டும். அவை மீண்டும் தழைக்கக் கூடாது. அப்படிச் செய்வதன் மூலன் ஈசனை எளிதாக அடையும் வழி தெரியும்.

போகம் வேண்டாம் என்பது பொருளன்று. பாவச்சுமையாகிய ஆசையையும் தன்னலமாகிய அன்பையும் தலையில் வைத்துக் கொண்டு யாரும் இறையருள் பெற முடியாது. இதுவே முதற்பாட்டின் செய்தி. பேரா இயற்கை என்பது இறையருள். ஆரா இயற்கை அன்பு, ஆசை முதலியன. மேலுள்ள குறளுக்கு விளக்கம் தருவதாக இந்தப்பாட்டு அமைந்துள்ளது.

மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்

வேடத்து ளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே

இறைவன் எங்கிருக்கிறான்? மாடத்தில் இல்லை. மண்டபத்தில் இல்லை. கூடத்தில் இல்லை. கோயிலிலும் இல்லை. வெளிவேடத்தில் இல்லை. பின் எங்கு இருக்கிறான்? யாருடைய நெஞ்சில் அவா அறுக்கப்பட்டுள்ளதோ, அங்கு உள்ளே நின்று முக்தி தருவான் என்கின்றது இரண்டாம் பாடல். இந்த மாடம் முதலிய புற அமைப்புகள் கட்டாயம் வேண்டும். ஆனால் அவற்றிற்கும் அப்பால் நெஞ்சில் பக்தி வேண்டும்.

ஆசையை அறுக்க வேண்டும். ஆசையை வைக்கத் துன்பம். ஆசையை விட விட இன்பம் என்று நிரல்பட முன்வைத்து வழிகாட்டும் பாட்டு. பலரும் அறிந்த பாட்டு

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைபடப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே

பக்தியின் அடிப்படையை முன்வைக்கிறது. அவாவை விடுவது என்றால் எல்லா வகையான ஆசைகளையும் விடுவதாகும். நான் சிவபெருமானின் பக்தன் என்று சொல்லும் ஆசையும் வேண்டாம். நெஞ்சு தூயதாக இருப்பது மட்டும் சாலும்.

ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனது இவ்வுலகு. அது பெரும்பொருள். அதே ஐந்தாலானது உடல். சிறுபொருள். ஐம்பூதம் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தும் மாறுபட்டும் தருகின்ற தோற்றமே உடல், உலக இயக்கத்துக்கு காரணம். இதில் நம்முடையது என்று எதுவும் இல்லை. அடுவன பூதங்கள்- ஐந்துமே காரணம் என்று புரிந்து கொள்ள வேண்டும். நமக்கு என்று எதுவும் இல்லை. உடல், உலக, யான் என்னும் பற்றுக்களை அறுத்து அவற்றால் வரும் வேட்கையையும் விட்டால் மெய்ந்நின்ற ஞானம் தானே வரும்.

யாரும் எக்காலத்தும் நிலைத்து அழிவின்றி இருக்க முடியாது. இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பும் பின்பும் பல ஊழிகள் கழிந்து விட்டன. வானுலகத்துத் தேவரும் இன்ப துன்பங்களில் மூழ்கி அழிந்தனர். மண்ணில் உள்ளோர் ஆசைக்கடலில் பட்டு அழுந்துகின்றனர். இருப்பது ஒரு கடல்தான். என்றுமே குறைவில்லாத அருட்கடலாகிய இறைவன் மட்டுமே. அதை உணர்ந்து பக்தி செய்ய வேண்டும். கடல் போன்ற பரந்த செல்வமோ, தவமோ பயன் தராது.

ஒருவனைத் துன்புறுத்துவன நல்வினை, தீவினை ஆகிய இரண்டும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமும் ஆகும். அவற்றை எண்ணி வருந்துவதால் என்ன பயன்? அந்த நினைவிலேயே மூழ்காமல் இறையருளை எண்ணி இருவினை மும்மலம் மறந்து தொழில் செய்யும்போது ஐம்புல இன்பங்கள் அளவுள் நின்று இறையின்பத்தில் திளைக்கவும் கூடும். திருவடி உணர்வு தானே வரும். இப்படி ஆசை அறுத்தவரே தூய ஞானிகள் ஆவர்.

இவ்வாறு அவாவிட்டவர்கள் திருவடியின்பம் உணர்ந்து சித்தியும் பெறுவர். முக்தியும் கிடைக்கும். மாயையிலிருந்து விடுபட்டவர்களுக்கு அட்டமாசித்திகள் தாமே வரும். இந்த எளிய வழியை விட்டுவிட்டு எங்கு போய் ஈசனைத் தேடுகிறார்கள்? அவன் இவன் என்று எல்லாமாகி நிற்கும் பரம்பொருள் சிவனே என்று உணர்தல் வேண்டும். அவ்வாறன்றிப் பலப்பல தெய்வங்களைத் தேடியலைந்து பாவத்துக்காளாகி மேலும் மேலும் பிறவித் துன்பத்தில் அழுந்துபவர்களைக் கண்டு திருமூலர் இரக்கப்படுகிறார்.

இனிவரும் பகுதி பக்தியுடைமை. எது பக்தி? யார் பக்தர்? எப்படி யாரை வழிபடுவது? என்ற வினாக்களுக்கு இங்கு விடைகள் கிடைக்கின்றன. வீடு பேற்றினைத் தருகின்ற (முக்தி) ஞானமாகவும் அதைத் தெரிந்து கொள்ள வழிசெய்யும் ஐந்தெழுத்து மறையாகவும் இருப்பவன் சிவபரம்பொருள். எல்லாம் உயிர்க்கும் அவனே தலைவன், அழிவில்லாத அமரர்களின் தலைவனும் அவனே. இயல்பாகப் பாசத்திலிருந்து நீங்கிய தூயோராய் ஆதியந்தமில்லாத அருட் பெருஞ்சோதியாய் நிற்கின்ற கடவுளைப் பசுபதி என்று பக்தர் பரவுவர். கும்பிட வேண்டியது அந்தச் சிவமே என்கிறது இந்தப்பாடல்.

உண்மைத் தெய்வத்தை உணர்ந்து அவா அறுத்து திருவடிப் பற்றுக் கொண்டு வழிபடும் பக்தர்கள் மிக உயர்ந்தவர்கள். அவரே இறைவன் திருவருள் வாய்க்கப் பெற்றவர்கள். அந்தப் பக்தர்களுக்கு மட்டுமல்ல. அவர்களுக்குத் தொண்டு செய்யும் அடியவர்களின் ஏவலராக இருப்பது கூடப் பெருமைதான். அடியார் அடியார் அடியார் அடிமைக்கு என்பது பாட்டு. பரம்பொருள்-அடியார்-தொண்டர்-ஏவலர் என்ற வரிசை கூர்ந்து உணரத்தக்கது. ஏவலர் தொண்டர்க்குச் சொல்ல, அவர்கள் அடியார்க்குச் சொல்ல, அவர்கள் இறைவனுக்குச் சொல்வர். எல்லாரையும், எல்லாவற்றையும் கேட்ட பின்னர் பெருமான் இவனையும் அடியாரில் கூட்டுவிப்பான். “அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டோமே” என்று மாணிக்கவாசகர் பாடுவது இந்நிலையே. இங்கு ஞானம், தவம், விரதம் என்ற பேச்சில்லை. அன்பு கொண்டு செய்தால் போதும் என்ற எளிய

வழிகாட்டும் அழகுப்பாட்டு "அடியார் அடியார் அடியார் அடிமைக்கு" என்பதாகும்.

சிவனடியார் போற்றற்குரியவர். அவர்களுக்கு நீரில் குளிர்ச்சி போலப் பெருமான் அருள்புரிவார். ஆனால் அந்த உரிமை கொண்டு தவறு செய்தால் நெருப்பில் வெம்மை போலச் சுடவும் செய்வார். யாரைச் சுடுவார்? யாரைச் குளிர்விப்பார்? நாம் எப்படி இதை அறிவது? நந்தி வடிவில் அருள் புரிபவர் அறிவார். அறியக் காட்டவும் செய்வார். ஊருணி போலவும், மருந்தாகித் தப்பா மரம்போலவும், உள்ளூர்ப் பழுத்த பயன்மரம் போலவும் பிறர்க்கென வாழ்பவர் பயனார் என்கிறார் திருமூலர். இப்படி வாழ்ந்தால் ஊருக்குள்ளேயே சிவபரம்பொருளைக் காணலாம். பக்தி என்பது பிறருக்கு உழைத்தல் என்கிறது பாட்டு. அப்படிப் பிற உயிர்களுக்காகப் பாடுபடுவோரின் பக்திக்குள்ளே பக்தி வலையுள் படுபரம்பொருளாக இறைவனே வருவான். இதை விட்டு ஏழுலகத்தில் தேடினாலும் அவனை அடைய முடியாது. "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே " என்ற தாயுமானவர் பாடல் இந்தத் திருமந்திரத்தின் எதிரொலியே.

எப்படிப் பக்தி செய்வது? ஒரு பெரிய மாட்டு மந்தை. அவையவை அங்கங்கு புல் மேய்ந்து திரிகின்றன. மேய்ச்சல் சுவையில் தனை மறந்த ஒரு கன்று தாயைப் பிரிந்து தடுமாறுகிறது. அச்சம் மேலிட அம்மா என்று குரலெடுத்து அழைக்கிறது. அதைக்கேட்டுத் தாய்ப்பசு ஒடிவந்து கன்றை அணைக்கிறது. இது இயற்கை! இயல்பூக்கம்! யாரும் சொல்லித் தராமல் வந்த உணர்வு. பக்தி அப்படிப்பட்டதுதான். ஒரு நல்லுயிர் இயற்கையாக இந்நிலையில் நிற்கும் மேய்ச்சல் சுவை போல் வாழ்வுச் சுவையில் இறைவனை மறந்து விடுகிறது. தாய்ப்பசு போன்ற தெய்வத்தை எண்ணியுருகிக் கன்று போலக் கதறியழைக்க வேண்டும்.

பெருமானே பரம்பொருளே என்றும் அம்மையே அப்பா என்றும், காவாய் கனகத் திரளே என்றும் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே என்றருள் புரிவான். நினைவுக்கும் அப்பாற்பட்ட வானுக்கப்பாலனாய் இருக்கும் மறைபொருள். ஒரு பக்தன் அழுகுரல் கேட்டு ஊன்கன்றை நாடி வருவான். "அழு; அழுதால் பெறலாம்" என்று பக்தியைக் காட்டும் அழகுப் பாட்டு இது.

உலகத்தில் பலப்பல தொழில்கள் ஏது பணி செய்தாலும் ஈசன் பணி என்று சொல்ல வேண்டும். யாருக்கும் தனியாக எப்பணியும் இல்லை. பக்திப்பட்டோர்க்கு பணி ஒன்றும் இல்லை என்கிறது திருமந்திரம். எல்லாம்

அவன் செயல். என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் வாக்கு நினைவுக்கு வருகிறது.

அதேபோல உலகில் ஒருவர்க்குத் துணையாக வருபவர் பலர். யார்யாரோ எது எதுவோ துணை என்று பொய்யாகக் கருதி மக்கள் ஏமாறுகிறார்கள். உறுதுணையாவதும் பெறு துணையாவதும் பிறப்பு அறுப்பதும் செறிதுணையாவதும் சிவனடியே என்ற தெளிவு வரவேண்டும். அதுவே பக்தி. நற்றுணையாவது நமச்சிவாயமே. மலையிலும் அதைக் காட்டிலும் தேட வேண்டாம். நினைந்து ஒடுங்கி ஊனுக்குள் காணலாம். வீட்டில் இருந்து கொண்டே பக்தி செய்யலாம். உள்ளத்து மூழ்கி நின்றேனே என்று பக்தியுடைமையை நிறைவு செய்கிறார் திருமூலர்.

முக்தியுடைமை பற்றி இரண்டே பாடல்கள் உள்ளன. முக்தி என்பது வீடுபேறு. அதாவது இறைவன் திருவடிக்காட்சி வழியே இறைவனருள் பெறுதல். சோதனைகளைத் தாண்டி அவா அறுத்து பக்தி நெறியில் ஊன்றித் தத்துவங்கள் அந்தக்கரணங்கள் இவற்றின் வலைகளைத் தாண்டி மயக்கம் நீங்கிப் பரானந்த அறிவில் திளைக்கும் பேறாகும்.

ஆனால் இதை அவ்வளவு எளிதில் பெற முடியாது. சுறாமீன்கள் போலப் பல மயக்கங்கள் சூழ நின்று சோதிக்கும் அந்தச் சோதனையைப் பன்னிரண்டு பாடல்களில் திருமூலர் கூறுகிறார். பக்தி நெறி வழியே முக்தி தேடுபவன் தன்னைத் தானே சோதித்துக் கொள்ள வேண்டும். இதுவே சோதனை "அறுவழி ஆய்வு" என்று உரையாசிரியர் இதற்குப் பொருள் கூறுகிறார்.

பெருமான் அறிவு வடிவினன். மாமறைச் செறிவுள் இருப்பவன். தேவர்க்கும் தேவன். அவனை ஐம்பொறிகளாலோ புலன்களாலோ சோதிக்க முடியாது. உண்மையன்பு ஒன்று மட்டுமே அடியார்க்கு நல்வழியூட்டும்.

அடுத்த பாடல் தெரிந்த, எளிய செய்திகளை முன்வைத்து அரிய ஆழமான உண்மைத் தெளிவைக் காட்டுகிறது. காற்றில் குளிர்ச்சி, கரும்பில் இனிமை, பாலுள் நெய், பழத்தின் சுவை. பூவினுள் மணம் இவை எல்லாம் எப்படி வந்தன என்று யாரும் ஆய்வதில்லை. சோதித்துப் பார்ப்பதில்லை. இந்தக்காற்று கரும்பு முதலியனவற்றுக்கு மூலமாக இருக்கின்ற அவனை எங்குள்ளான் என்று ஏன் சோதித்துப் பார்க்க வேண்டும்? அவன் இல்லா இடம் ஏது?

ஒரு மலை. அதன் மீது படர்ந்த ஒரு பொற்கொடி உயர்ந்த ஒன்றின் மீது மிகச்சிறந்தது படர்ந்துள்ளது. மலையாகிய சிவபெருமான் மேல் அருட்கொடியாகிய உமைமங்கை. இந்த மாதொருபாகத் தோற்றம் எல்லா உயிரும் அந்நற்கதியடையலாம் என்று காட்டவே விருப்பர் மனத்திடை எங்கள் பிரானார் நெருப்புருவாகி நிற்பார். ஆனால் சோதனை செய்யாமல் விருப்பொடு அவன் திருவடியைச் சிந்திக்க வேண்டும்.

"பெருமான் என்னுள்ளிருந்தான். எந்தை வந்தான் என்று நான் எழுந்தேன். நான் எழ அவன் இருந்தான்". என்ற அரிய தொடர்கள் உள்ள பாடல் அடுத்தது. உள்ளக் கோயிலில் விளக்கேற்றிப் பெருமானை இருக்கச் செய்யும் மாயை இதுவே. மிக்கவும் சோதிக்க வேண்டா. பெருமான் எல்லா நற்பண்புகளின் உறைவிடம். தவத்தின் மேன்மை வடிவம். நலங்களுள் வல்லவன். அந்தப் புனிதனைப் புன்மை கூறாது நாடுங்கள். உமக்கும் பரிசு நல்குவான் என்று ஒரு புறம் இறைவனின் குணங்களை அடுக்கி மறுபுறம் அவன் தரும் பேற்றினையும் பட்டியலிடுகிறார்.

பெருமானும் என்னைச் சோதனைச் செய்தான். என் பக்திைத் துன்பம் கொடுத்து உறைத்து பார்த்தான். ஆனாலும் என்னுள்ளே தொடர்ந்து இருந்தான். இருந்து நல்வழியும் காட்டினான். ஆதலால் பெருமான் தந்த ஞானவாளை உருவி மாயப்படைகளை விரட்டினேன். என் கையில் அந்த வாள் இருக்கும் வரை எதுவும் என்னை நெருங்காது. அருவினை பந்தம், பிணி, அச்சம், பல்பிறப்பு ஆகிய இவற்றால் இனிச் சோதனைகள் இல்லை என்று ஒரு பக்தன் சோதனையை வென்ற மகிழ்ச்சியில் திளைக்கிறான். சதுரர் என்ற சொல் கெட்டிக்காரர்கள் திறமை படைத்தவர்கள் எனப் பொருள்படும். அவா அறுத்துப் பக்திநெறி நின்று முக்தி நாடும் போதும் சோதனைகள் வென்ற அடியார்களைத் திருமூலர் இப்படிக் குறிப்பிடுகிறார். பக்தர்கள் சதுரர்கள் என்பது அரிய கருத்து. ஏன்? அப்படிப்பக்தி நெறி நின்றதால் தற்பரம் என்று சொல்லப்படும் இறைத்தன்மையையும் பெறுவார்கள் என இந்தப்பகுதி நிறைவுறுகிறது.

அந்தக் கருவை அருவை வினைசெய்தற்
பந்தம் பணியச்சம் பலபிறப்பும் வாட்டி
சிந்தை திருத்தலும் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பரம் ஆகும் சதுரர்க்கே

திருச்சிற்றம்பலம்

✻✻✻✻✻

ஒன்பதாம் தந்திரம்

90. குருமட தரிசனம், ஞானகுரு தரிசனம்

அமுதமொழியரசு. தவத்திரு. சங்கரநாராயணனார்
சென்னை

திருமறைகள் பன்னிரண்டினுள் பத்தாந் திருமுறையாக அமைந்தது திருமூலர் திருமந்திரம் ஆகும். உணரச்செய்த மூவாயிரம் என்று குறிக்கின்ற படியால் பத்தாம் திருமுறைப் பாடல்கள் மூவாயிரம் என்பது வெளிப்படையாக தெரிகின்றது. இருபத்தாறு ஆசிரியர்களும் உலகில் வெளிவந்த உடம்போடு இருந்தே அருள் நூலைச் செய்தனர். திருமூலர் பெருமான் தான் தோன்றிய வுடம்பை விடுத்து மூலன் உடம்பில் இருந்து திருவாவடுதுறையுள் இருந்த சிவபோதியின் கீழ் சிவயோகத்தமர்ந்து இருந்து அருளிச் செய்ததாகும். இந்நிலை திருவருட்செயலால் அமைந்த அற்புதமே ஆகும். 'சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலிற்' என்ற அருள் வாக்கினால் திருமந்திரம் வெளிப்பட்ட இடம் தெளிவாக அறியமுடிகின்றது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களால் அருளிச் செய்யப்பட்டதாகும். இவ்வொன்பது தந்திரங்களும் முறையே காரணம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், கப்பிரம், மகுடம் என்னும் ஆகமங்களின் பிழிவாகச் சொல்லப்பட்டதே இத்தகைய ஒன்பது தந்திரங்கள் ஆகும்.

'அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தான் அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்' என திருமூலரே ஆகமங்கள் இருபத்தெட்டு என்பதை நமக்குத் தெரிவித்தாலும் தம் குருமூர்த்திக்கு இறைவன் அருள் மூலமாக உணர்த்தியது நவ ஆகமமே ஆகும் என்பதையும் திருமந்திரக்காரர் கூறுகிறார். தவமால் பிரமீசர் தம்மில் தாம் பெற்ற நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே என்பார்.

திருமந்திரத்தின் பெருமை

தாய்மொழியாகிய தமிழில் இறைவழிபாட்டினைச் செய்து கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு தமிழனும் நினைக்க வேண்டும். செந்தமிழாதி தெளிந்து வழிபடு. நந்தி இதனை நவ முறைத்தானே என்று கூறியது மகுடமாகவே திகழ்கின்றது. திருமந்திரத்தில் கூறாத கருத்துக்கள் வேறு எந்த நூலிலும் இல்லை. மேலும் நம் தமிழ்மொழி மண்டலம் ஐந்தும் தாவிய மொழி நம்மொழி. திருவருளின் திறத்தினைத் திறம்படப் பெற்ற பெரியோர்கள் திருவாய் மலர்ந்த மொழியே நம் திருமுறைகள். அத்தகைய

சிவநெறி நின்ற சிவயோகியர்கள் சிந்தனையால் சீலத்தோடு விளங்கிய சிவத்தின் கருணையால் சிவானந்தப் பேரமுதமாக தமக்கு கிடைத்ததே திருமந்திரம் அத்தகைய திருமந்திரம் தான் நம்பியாண்டார் நம்பிக்கும் வள்ளல் பெருமானுக்கும் ஞானக்கருவூலமாகவும், வழிகாட்டும் நூலாகவும் இருந்தது. முழுத்தமிழின்படி மன்னும் வேதத்தின் சொல் என்றும் நம்பி குறிப்பிடுவார். என் உச்சி அடி மன்ன வைத்த பிரான் என்று தனக்கு திருமூலர் திருவடி தீட்சை செய்தார் என்றும் பேசுவார். மேலும் வள்ளல் இராமலிங்க சுவாமிக்கும் இறைவன் நேரில் திருமந்திரத்தைக் காட்டித் தெளிவு பெறச் செய்தான் என்பதை,

உருவளர் திருமந்திரத் திருமுறையால்
உணர்த்திய மெய்ம் மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்மொழிப் பொருளும்
மருவளர் உனத்தே நம்பி நான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்

என்று என உருகிப்பாடுவார்.

குருமட தரிசனம்

ஒன்பதாம் தந்திரம் எனப்படும் மகுடாகமத்தில் குருமட தரிசனமும், ஞானகுரு தரிசனமும் மிகவும் முக்கியமான பகுதி. இப்பகுதியினை சற்குரு சன்மார்க்கம் என்றும் ஞானிகள் பேசுவர். இந்த நெறியில் சிறப்பாக நாம் செல்வோமேயானால் வள்ளலாரால் பேசப்படும் ஒளிநெறிக்கு தடையில்லாமல் உயிர்கள் செல்லும். குருமட தரிசனம் ஏழு பாடல்களைக் கொண்டது. திசை தவறிச் செல்லும் மடங்களும், இப்பகுதியினை சிந்திப்பார்களே ஆனால் அம்மடங்கள் திருமடங்களாக விளங்கும். சைவத்திருமடங்கள் திருவருளால் கிடைத்த மாபெரும் பொக்கிஷம். அத்திருமடத்தை திருநெறிய நெறி நின்று ஆட்சி செலுத்தி திருவோலக்கத்தில் எழுந்தருளி இருக்கும் குருமகா சந்நிதானங்கள் இறைவனே ஆகும். காரணம் குருவடிவாகி குவலயம் தன்னில் திருவடி வைத்து உயிரின் எழுச்சிக்காக வந்தவர்களே. இவர்கள் குருபிரானாக இருக்க முடியுமா? என்பது உயிரின் மயக்க நிலை. ' இறவாத இன்பத்தே எமையிருத்த வேண்டி பிறவா முதல்வன் பிறந்து ' என்று உமாபதி சிவம் சொன்னபடியால் இவர்கள் குருபிரான்களாக இருக்க முடியும். ஆனால் அத்தகைய குருபிரான்கள் எழுந்தருளி அருளாட்சி புரியும் குருமடத்தில் இப்பொழுது என்ன நடந்து கொண்டு இருக்கின்றது. என்ன என்ன

செயல்கள் நடக்க வேண்டும் என்பதே குருமடதரிசனத்தின் முதல்பாடல். பாடலை நன்கு உணர்ந்து சிந்திப்போம்.

பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும் எம் ஈசன் தனக்கென்றே யுள்கிக்
குவியுங் குருமடங் கண்டவர் தாம்போய்த்
தளிரு மலரடி சார்ந்துநின் றாரே

பலியும் என்றதால், செஞ்சாலி அரிசிச் சோறாகிய திருவமுது பலியும், அவியும் என்பதால் பறப்பையின் மூலம் செந்தமிழ் வேள்வியில் சொரியும் நெய் அவியும், ஒலி, என்பது - திருமுறைகள் ஓதப்படும் ஒலியே; கீதத்தொலி என்பார் திருவாசகனார், சிறப்பு மிக்க சைவத்திருமடத்தில் இறைவனுக்குக் காலம் தவறாது செய்யும் திருவமுது பலியும், நெய் அவியால் ஏற்படும் புகையும் திருமுறை, மற்றும் திருமறை ஒலிகள், இவை அனைத்தும் இடைவிடாது இருக்குமாயின் அங்குள்ள சைவத்திருமடத்தின் தலைவர் சிவானந்த வெள்ளத்தில் என்றென்றும் திருவோடு விளங்குவார். அதனை நினைக்க நினைக்க திருமடத்தே எழுந்தருளியிருக்கும் மகா சன்னிதானமும் உள்ளம் குளிர்ந்து இருப்பர். உயிர்களும் சிவமாக இருப்பர். அத்தகைய திருமடத்தைக் காணும் நெஞ்சங்கள் நெக்குருகி நினைந்து அன்பருளமெல்லாம் குவியும். இது அக அடையாளம். புறஅடையாளம் கைகளும் தலை மீதேறிக் குவியும். அத்தகைய குருமடங்களைக் கண்டவர் செம்மலர் நோன்றாளாம் சிவபெருமான் திருவடியினை நினைந்து இன்பார்ந்து அப்பர்பெருமான் திருவாக்கு போல் இருமாந்திருப்பன் கொலோ! என்று குருமடங் கண்டவர் இருப்பர். இப்படி குருமடங்கள் இருக்க வேண்டும் என்று திருமூலர் திருவுள்ளம் மேற்படி பாடலுக்கு தொண்டை மண்டல ஆதீனமாக இருந்த முத்து சிவம் சுவாமிகள் ஒரு குறிப்புரையும் வரைந்துள்ளார். அவர்கள் உரை குருமடம் என்பது சீடனுடைய இருதய கமலமே ஆகும். ஆதீனங்களின் திருமடக் கட்டிடமும் உள்ளே இருக்கும் துறவியும் குருமட தரிசனமாகாது. குருவுக்கு சீடன் அன்றி வேறு இல்லம் இல்லை என்பார். உண்மையான சற்குரு தரிசனம் என்பதை உயிர்கள் கண்ணுற்றால் அவ்வுயிர் இறைவனடியை என்றென்றும் சார்ந்து நிற்கும். இதனை திருமூலர் பெருமான் தளிரு மலரடி சார்ந்து நின்றாரே என்பார்.

மேலும் இரண்டாவது பாடலில் குருவையும் சிவனையும் ஒன்றாகவே பார்க்கின்றார் திருமூலர், குருவின் திருமேனிதான் இறைவனுடைய திருக்கோயிலாக விளங்க முடியும். குருவைத் தவிர சிவனுக்கு வேறில்லம் உண்டா என்று வினவுவார் போல் நம்மிடம் கேட்பார்.

உள்ளிருந்தே யென்றும் உணர்த்துகினும் கண்டிலரென
றுள்ளும் புறம்புமா வோமென்று - மெள்ள
நாகுருவாய் ஆரூரில் வந்தார் நமையாண்
டரு ள்புரி ஞானப்பிரகாசர்

என்பார் தருமை குருஞானசம்பந்த சுவாமிகள். மனிததேகம் எடுத்து வந்து நம்மை ஆட்கொள்ளும் குருமூர்த்திகளின் திருமேனி சிவத்திருமேனியாகும். மூன்றாவது பாடலில் பெருந்துறை நான் கண்டு கொண்டபின் என்கின்ற சிறப்பு வரி சிந்தனையைத் தூண்டுகிறது. மிகுசைவத்துறைதான் பெருந்துறை என்றும் அத்துறையே திருநெறியதுறை என்றும் சொல்வார் உளர். பெருந்துறை என்பது யோகமார்க்கத்தில் காண வேண்டியது என்று யோகிகள் உரைப்பர். சிவபெருமானுடைய திருவடிதான் பெருந்துறை என்பது குலசை இராமநாதம்பிள்ளை அவர்களின் குறிப்பாகும். மேலும் 2604 ஆம் பாடலாகிய இயம்புலன் ஆசனத்தோடு மலையும் என்ற பாடல்

இயம்புவன் சித்தக் குகையும் இடமும்
இயம்புவன் ஆதாரத்தோடு வனமும்
இயம்புவன் ஈராறிருநிலத் தோர்க்கே

சிவபெருமான் இருக்கை ஆருயிர்கள் உய்யும் பொருட்டு ஆகும். சிவனடியார் சித்தத்தினுள்ளும். திருக்கோயில் திருமேகம், மேலும் ஆதாரத்தோடும் இயம்புவன் வனமும் அவன் இருப்பிடமே ஆகும். காடுகளில் இறைவன் இருப்பான் என்பதை நக்கீரர் திருமுருகாற்றுப் படையாலும் உணர்க.

மேலும் மந்திரம் (2605) முகம்பீடம் என்ற பாடலில் மூலர் ஒவ்வொரு உயிரும் தத்தம் உள்ளங்களைச் சிவபெருமானுக்கு உகந்த உவப்பமை இடமாக்குதல் வேண்டும் என்பார்.

மேலும் பெருமானார் குருமட தரிசனத்தின் நிறைவான பாடலில் மாயையிரண்டு, மறைக்க மறைவுறுங் காயமோரைந்து என்கின்றார். மாயை பகுதி மாயை, தூவாமாயை எனப்படும்.

மாயா உடம்பால் உயிர் உண்மை நிலை அறியாதபடி மறைக்கப்பட்டுள்ளது. காலம் ஐந்து என்பது பருவுடம்பு. நுண் உடம்பு, குணவுடம்பு, போர்வை உடம்பு, மீதுண் உடம்பு என்பன. இவ் ஐவகை உடம்புகளை குருவின் மூலம் தெளிதலே கழிதலாகும். கழியவே உண்மை புலனாகும். புலனாக இறைவன் தோன்றியருள்வான். இறைவன்

தோன்றுவதால் உயிர் தன்னை அறியவும் கூடும். கண்ணாடியைக் காண்பான் காணானோ தன்முகம் என்பார் போல ஆருயிர்கள் சிவனை உணருங்கால் தம்மை உணரும். மாயை விலகி, அதாவது மூலப் பிரகிருதி மாயை, அசுத்த மாயை என்னும் இரண்டும் நீங்க வேண்டும் என்பதும், அன்னமய சோகம் முதலான ஐந்து கோசங்களும் நீங்க இறைவன் வெளிப்படுவான் என்ற உயர்ந்த உன்னதமான கருத்தோவியம் அமைந்த பாடல்தான்

மாயை யிரண்டு மறைக்க மறைவுறுங்
காயமோ ரைந்துங் கழியத் தானாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்தராகுமே

உயிரினுள் பரஞ்சுடர் தோன்ற அச்சொருபத்தை ஆய்பவர் ஞானம் நிறைந்த மோனத்தராவர்.

ஞான குரு தரிசனம்

ஞானகுரு தரிசனம் என்ற தலைப்பினைச் சிந்திக்க திருவருள் கூட்டியுள்ளது. ஞானகுரு என்பதால், ஞானம் இல்லாத வெறும் வேடதாரியான குருக்களும் உலகில் உண்டு என்பது தெளிவாகத் தெரிகிறது. ஞான குருக்கள் என்று தம்மைத் தானே புகழ்ந்து கொண்டு, தன்னைத் தானே அறியாதவர்கள் உலகில் பலர் உண்டு. ஞானகுரு அல்லாதாரை அரசன் சோதிக்க வேண்டும் என்றும் அவனுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும் என்றும் திருமூலர் திருமந்திரம் பேசுகின்றது. குருநெறிதான் சைவர்க்கு பெருநெறியாகும். குருவழிபாடு இல்லையானால் உயிர்கள் மாலுமி இல்லாத கப்பலைப் போல் வாழ வேண்டி இருக்கும். குருவினடி பணிந்து கூடுவதல்லார்க் கருவமாய் நிற்கும் சிவம் என்ற ஔவையார் வாக்கினை நன்கு உணர வேண்டும். மேலும் அமுத சாரம் என்ற நூல் ஆசிரியர் தன்னை ஆட்கொண்ட குருமூர்த்தியினை

உள்ளத்தினின்றும் ஒளித்தான் பரன்குரவன்
கள்ளம் தனைத் தவிர்த்துக் காட்டினார்- வள்ளல்
அருவான கோலமோ அக்கோலம் காட்டும்
குருவான கோலமோ கூறு -அமுதசாரம்

ஞான குருவின் சாதனை என்ன என்றால் அக்குருநாதன் உயிரின் நிலை அறிந்து (சீடன்) அதனைச் சோதித்து பக்குவநிலைக்குக் கொண்டு வந்து திருவெந்தெழுத்தினைச் செவியறிவுறூவாகச் சொல்லி உயிரை

தூய்மைப்படுத்துவார். உயிரிக்கு தத்துவம் முப்பத்தாறினையும் விளக்கி காட்ட, உயிர் முப்பத்தாறு தத்துவங்கள் குருவழி நின்று நன்கு உணர்ந்து இருக்குமானால் அங்கே தத்துவம் முப்பத்தாறும் அடங்கும். தத்துவம் முப்பத்தாறு எது என்பதை சிந்திப்போம்.

முப்பத்தாறு தத்துவங்கள் யாதெனில் ஆன்மதத்துவம் இருபத்தி நான்கு. வித்தியாதத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து, 24+7+5= 36 தத்துவங்களாகும். இவ்வுலகில் நான்கு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐந்நூறு (4,00,48,000) 'நாலொரு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து மேலுமோரைந்நூறு வேறாயடங்கிடும்' என்பது திருமூலர் வாக்கு, மேலும் ஆகின்ற தொண்ணூறோடு ஆறும் பொது, சைவர்கள் தத்துவம் முப்பதாறு என அளவை முறையான் அறுதியிட்டும் உறுதியாக கூறியுள்ளனர். வேதாந்தி என்று கூறப்படும் மறை முடிவினருக்கு தத்துவங்கள் 28 ஆகும். வைணவர்க்கு தத்துவங்கள் 24 ஆகும். மாயாவாதிகள் என்னும் ஒரு பொருள் கொள்கையினர் இருபத்தைந்து தத்துவங்கள் கூறுவர். எனவே சைவர்களின் தத்துவம் 36 ஆகும். திருமூலர் கூறும் தத்துவம் முப்பத்தாறு என்ன என்பதை விரிவாக காண்போம். ஆன்மத்தத்துவம்(24) - அதில் பூதங்கள் (5) ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஞானேந்திரியங்கள் (5) மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆன்மமந்திரியங்கள் (5) வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், தன்மாத்திரைகள் (5) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், அந்தக்கரணங்கள் (4) மனம் , புத்தி, சித்தம், அகங்காரம், வித்தியாதத்துவம் (7) சுவை, காலம், நியதி, கலை, பித்தை, அராகம், புருடன், மாயை. சிவதத்துவங்கள் (5) அவை, சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம் இவைகளை முப்பத்தாறு தத்துவம் என்பர்.

இந்த தத்துவம் முப்பத்தாறும் அடங்கி குருபரம் கும்பிடு தந்திடும் என்பார். மேலும் ஒரு பாடலில் தத்துவமானது தன்வழி நின்றிடில் வித்தகனாகி விளங்கியிருக்கலாம் என்பது திருமூலர் திருவுள்ளம். தத்துவக் கூட்டத்தின் செயல்பாடுகளை கண்டு இதுவே பேரின்பம் எனவும் மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றது உயிர். பெரியவர்கள் சொன்னார்கள் அதில் இன்பம் இல்லை. அதனைக் கடந்த பின்புதான் உயிருக்கு எண்ணில் மகிழ்வு உண்டு என்பதை உணர்த்தினார். திருமூலர் 'ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின் ஆறாருக்குப்புறம் ஆகி நின்றானே' என்பார். இதனை அருணகிரிநாதர் அவர்கள் 'ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையைப் பேரா அடியேன் பெறுமாறு உளதோ?' என்பார். மேலும் பரமஞானியாக பட்டினத்தடிகள் பூதமும், கரணம், பொறிகளும், புலனும் பொருந்திய,

குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும் நானுமாய்
நிற்குநாள் உளதோ என்பார்

எனவே தத்துவம் முப்பத்தாறினையும் உயிர் குருவருளால் இது இது என்று அறிந்து விடுமானால் ஆறொரு முப்பதும் அங்கே அடங்கி விடும். இதனால் குருபரன் கும்பிடு தந்திடும். உயிர் தானாக இருக்கும் நிலை அறிந்ததும் சிவபதம் மேலாய் அளித்திடும் சிவன் திருடியினை மறவா எண்ணம் உயிருக்கு வந்ததும் பேரின்பம் அளவின்றிப் பெருகி உளமெல்லாம் உருகி ஓடும். என்னே? முதல் பாட்டில் அருமை தெரிகின்றது. இனி கருத்து பார்ப்போம்.

உயிர் ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்று மும்மலத்தினுள் அழுந்தியிருப்பதால் இறைவெளிப்பாடு உயிரிக்குத் தெரியவில்லை. அரவுதீண்டியவனை கருடன் உருவம் கருதும் அளவில் அப்பருவிடம் தீர்ந்து அவன் எழுந்திருப்பது போல உயிர் ஞானகுருவின் உருவங்குறித்த அப்போதே திரிமலந்தீர்ந்து சிவனவனாமே என்று நிலை வரும்.

கருடன் உருவங் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங் கெடுமா போல்
குருவின் உருவங் குறித்த அப்போதே
திரிமலந் தீர்ந்து சிவனவனாமே

திருவருட் சக்தியின் துணை கொண்டு இறைவனைப் பற்ற வேண்டும். என்ற குறிப்பு 2613 ஆம் பாடலில் மிகவும் தெளிவு பெற வைக்கின்றது. தத்துவக்கூட்டம் முப்பத்தாற்றினையும் மற்றுமுள்ள ஐந்து கோசங்களையும் உயிர் தானாகவே கருதி மயங்குகின்றது. உயிரைப் பறவை என்கிறார் திருமூலர்.

இவையனைத்தும் தனக்கு வேறானவை என்பதை ஞானமும் தெளிவு பெறச் செய்வதால், அவ்வுயிர் தானாகவே நிற்கும். அப்பொழுதுதான் உயிருக்கு சரியையாதி பதினாறும் தத்துவ தரிசனம் முதலாகச் சிவபோகம் ஈறாகவுள்ள தசாங்கமும் தசகாரியமும் விளங்கும். இறைவனையே சதாகாலமும் உயிர் சிந்தித்தால் தற்போதும் கெடும். தன் பெருமை எண்ணாமை என்கின்ற குரு ஞானசம்பந்தர் பாடல் நினைவு கூரத் தக்கதே ஆகும். சிந்திப்பார்களாக ! தன் பெருமையைத் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகின்றார்களே. இவர்களுக்கு என்னென்று இறைவன் ணர்த்துவான்? தற்போதும் எப்போதும் சுழலும்.

தானாம் பறவை வனமெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தானாந் தசாங்கமும் வேறுள தானன்றே

என்று விவரிக்கின்றார். தசகாரிய விபரம் வேறு ஒரு கட்டுரையில் சிந்திப்போம்.

எத்தன்மை வாய்த்தோராயினும் 'சிந்தனை நின்றனக்காக்கி' என்று சிவத்தையே சிந்தித்திருப்பார்களே ஆனால் அவர்கள் உயர்ந்தோராவர். இறைவனை நினைக்கவும், வழிபடவும் செயல்படும் போது இடையூறுகள் வரத்தான் செய்யும். அப்படி நேர்ந்தால் இது விதி என்று விளக்கி மேலும் முன்னேறுக. மேலைவிதியென்று கொள்க என்பார் திருமூலர். அதை நாம் விளக்கி சில செயல்களில் ஈடுபடும் போது தான் நாம் சிவபக்தராக முடியும். அப்படிப்பட்டவர்கள் இதயத் தாமரையாகிய தகராலயத்தில் தான் இறைவன் வெளிப்படுவான். சிந்தையினுள்ளே புகுந்து நின்றானே. கடமையைச் செய்வதுதான் உயிரின் கடமை. இறைவன் சிந்தையினுள்ளே வந்து அமர்வது அவனது கண்ணியம்.

மேலும் திருமூலர் பெருமான், அடுத்த பாடலில் ஞானகுரு உயிரின் தெளிவுக்காக உபதேசித்த திருவைந்தெழுத்து மகாமந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க இலாடத்தில் மூலத்தே (புருவனடுவில்) சோதியுள் சோதியாகும் என்பார். கருத்து ஆக சிந்திக்க வேண்டியது. சற்குரு சன்மார்க்க நெறி என்பது இலாடத்தின் மூலத்தே சுந்தரச் சோதியுள் சோதியினை காண்பதுதான். வள்ளல் பெருமானாருக்கு சன்மார்க்கப் பாதைக்கு வழி வகுத்த பாடல் இப்பாடல்,

வந்த மரகத மாணிக்க ரேகை போற்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை யிலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியு மாகுமே

மேற்படி பாடலில் சற்குரு சன்மார்க்க நெறி ஒன்றை திருமூலர் அதனாக எடுத்தோதியுள்ளார். அடுத்து இறைவன் எப்படி எழுந்தருள்கின்றான் என்பதைப் பெருமானார்,

கடவுள் இருப்பது
மண்ணுநன் நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியானோர் மேனியே

என்கின்றார். மண், நீர், கனல், கால், வானம் ஆகிய ஐம்பூதங்களின் கண்ணும் பிரிப்பின்றிக் கலந்தருள்கின்ற இறைவன், பூதவெளியாகிய விண்ணையும் கடந்து அறிவுப் பெருவெளியில் இருக்கும் ஞானிகளின் திருமேனியைத் தனக்கு திருமேனியாகக் கொண்டு எழுந்தருள்வான் என்கின்றார். நாதமும் கடந்த வெளியில் நீயும், நானுமாய் நிற்கும் நாள் உளதோ? என்ற அமுத வாக்கினை நன்கு உணர்க. இறைவன்தான் முழுமுதற் கடவுள் (சிவன்) எல்லா உயிர்கட்கும் அவனே தலைவன். உலகம் முழுவதும் அவன் திருவாணையே நடக்கும். அவன் எங்கும் நீக்கமற நிறைந்து நின்றருள் பின்னே இந்நெறியாகிய சற்குரு நெறியினை உணர்ந்துள்ளதாகத் தான் மெய்யடியார்கள். அவர்கள் தான் எம்பெருமான் திருவருள் பெற்று என்றும் இருந்தார்கள். நாங்கள் வணங்கத்தக்க பொருள் சிவனே ஆகும். அவனை வணங்கும்படி அருள் புரிந்தது எம் நந்தியே. நந்தி அருள் பெற்றதால் சித்தம் தெளிந்தோம். கள்ளமகன்றோம். செத்துப் பிறந்து சிறுமையுறும் சிறுதெய்வம் இனிச்சேரோம். சித்தம் தெளிந்தமை அவனருளால் அவனாகத் திகழ்ந்தோம்.

திருச்சிற்றம்பலம்

91. பிரணவ சமாதி, ஒளி

தவத்திரு. சொக்கலிங்க சுவாமிகள்
மடாதிபதி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடம், தஞ்சாவூர்.

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்

-சுந்தரர்

திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாக வைத்துப் போற்றப்படுவது திருமந்திரம்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களுடையது. அதன் ஒன்பதாம் தந்திரத்தில் 22 உட்தலைப்புகள் உள்ளன. அவற்றின் 3,4 ஆம் தலைப்புகளே பிரணவ சமாதி, ஒளி என்பனவாம். குருமட தரிசனம், ஞானகுரு தரிசனம் ஆகிய இரண்டு தலைப்புகளில் பின்னதாகிய பிரணவ சமாதி எனத் தலைப்பிட்டு

தூலப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைச் சொரூபச் பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே

என்று தொடங்குகிறார். பிரணவமாகிய ஓம் என்னும் மொழியின் இயல்பினை உணர்ந்து இறைனோடு ஒன்றும் தன்மையினை இதில் கூறுகின்றார். இதில் பிரணவத்தின் வகைகளைக் கூறுகின்றார்.

தூலப் பிரணவம் தூல சரீரத்துக்கு ஆனந்தமும், சூக்கும பிரணவம் சூக்கும தேகத்துக்கு மகிழ்ச்சியும் தரும். காரணப் பிரணவம் திருவருட் சக்தி பதியச் செய்வதற்கும், மகாகாரணப் பிரணவம் வேதாந்த வீதியை அடையச் செய்வதற்கும் அமையும் என்கிறார். இங்கு நால்வகைப் பிரணவமாக ஓங்காரத்தைக் கூறுகின்றார்.

பிரணவத்தின் அடக்கமாகிய அ,உ,ம், விந்து, நாதம் என்பவை. சூக்கும ஐந்தெழுத்து எனப்படும். மேற்சுட்டிய அகரம் முதலிய கலைகளிலிருந்து நகரம் முதலிய ஐந்தெழுத்துக்கள் தோன்றுமென்பது சிவாகம நூல் கூறுவது.

இது மோன முத்திரையாகக் கையினால் காட்டப்பெறும் பெருவிரல்- சிவ(ம்) சுட்டு விரல் - ய நடுவிரல் - ம ஏனைய இருவிரல்கள் -ந எனப்படும்.

பிரணவம் என்பது எல்லா மந்திரங்கட்கும் முதன்மையுடையது ஓங்காரம் கூறியே மந்திரங்களைக் கூற வேண்டும். பிரணவம் இல்லாத

மந்திரம் பிராணன் இல்லாதாகும். திருவைந்தெழுத்து மட்டும் பிரணவம் இன்றியே வீரியமுடையதாகும். அதற்குக் காரணம் பிரணவத்தினின்று தோன்றி பிரணவத்தின் பொருளையே குறிப்பதால் பிரணவமே வில், ஆன்மாவே அம்பு. பிரம்மம் அதன்குறி. சோர்வு விடாமல் எய்க. அம்பைப் போல் பிரம்மத்தோடு ஒன்றும் நிலை உண்டாம் என்பது முண்டகோபனிஷத் -22 ஆம் அறிவு நாலாம் தொடர்.

அடுத்த பாடல்

ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே!

இப்பாடல் ஓங்காரத்தின் சிறப்பியல்புகளைக் கூறுகின்றது. ஓங்காரமே எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு நிற்பது. அதன் பயிற்சி சித்தி முத்திகளைத் தருவதாகும் என்கிறது.

ஓங்காரத்தினுள்ளே ஒப்பில்லாத ஒரு மொழியாகிய பெரும் பொருட் கிளவி தோன்றும். இதனை மகாவாக்கியம் என்பர். அதனுள் உருவமும், அருவமும் தோன்றும். ஊருவினை ஆருயிர் வேறுபாடுகள் இதனுள் தோன்றும். அதாவது, தாவரங்கள், விலங்குகள், மக்கள் அவருள் ஆன்றோர், அறிஞர், வானவர் முதலான உயிர் வேறுபாடுகள். ஓங்காரத்துள்ளே பிறப்பும் சிறப்புமாகிய முத்தியும் சித்தியும் பெறலாம். ஆகவே ஓங்காரமே எல்லாயிருப்பதனால் அதுவே சிவன் எனலாம். அதனால்தான் ஓங்காரன் காண் என்றும், "ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்" என்றும் அப்பரடிகள் கூறுவார். இதனையே மாணிக்கவாசகரும் "உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்று கூறுவார். இதனைப் பின்வரும் பாடலிலும் காணலாம்.

ஓங்காரத்துள்ளே ஐந்து பூதங்களும் தோன்றின. அதனுள்ளே இயங்குதிணை, நிலத்திணை பொருள்கள் அனைத்தும் தோன்றின. ஓங்காரத்துள்ளே ஒரு மலமுடையன, இருமலமுடையன, மும்மலமுடையன ஆகிய மூவகை உயிர்களும் தோன்றின. அவ்வோங்காரத்துள்ளே ஆருயிர், உரு, அருளுரு, அருளோன் உரு தோன்றின. இதில் கூறப்பட்ட சரம் என்பது நகர்வதாகவும், அசரம் என்பது நிலைபேறுடையது எனப்படும்.

ஓம் மொழியின் இனமாகிய அகர உகர மகரங்கள் வருக்கம் எனப்படும். இவை இன்பநிலை எனப்படும். அதுவே இறைவனுமாம். இம்மூன்றன் தொகுப்பே முன்கூறிய சராசரமாம். ஆதாரநிலைகளின் ஆண்மை மிக்க உருவமெல்லாம் ஓங்காரமாகும். இவ்வுண்மைகள் அனைத்தையும் உணர்ந்தோரே நிறைஞானத் தொகுப்பு உடையரெனப்படுவர்.

மனமெனுமோர் பேய்க்குரங்கு அலைந்து கொண்டே இருக்கும். அவ் அலைபாய்தலாகிய மயக்கத்தை நீக்குதற்கு சிவகுரு தேவை. அவரது காட்சிதான் தெளிவு குருவின் திருமேனிகாண்டல். அதனை ஈண்டு தீபநெறி என்றார். இதற்கு இடமும் சார்பும், உள்ளமும் தவமும் தூய்மையாதல் வேண்டும். அப்போது தவம் சித்தியாகும். இதுவே சன்மார்க்கத்து உபதேசமாகும்.

ஓம் என்பது பரம்-பொருளைக் குறிக்கும் மொழியாதலின் இது கடவுளுக்கும் கூறப்படும். இத்தகைய முதற்பொருள் நிலையைக் குறிக்கும் விமர்சப் பிரணவங்கள் சரீம், ஹரீம், ஐம், க்லீம், சௌ (சௌம்) என ஐந்து ஆகும். அடுத்து,

சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட்
காடிய ஈராறின் அந்தமும் ஈரேழில்
கூடிய அந்தமும் கோதண்ட முங்கடந்
தேறியே ஞானநே யாந்தத் திருக்கவே

எனும் பாடல், சன்மார்க்கரென்பார் நன்னெறி நின்று ஒழுகுவார். அவர்கட்கு நன்மை நெறி ஒவ்வொன்றும் நன்னான்காகத் பதினாறாகத் தோன்றும். அதுவே சோடச மார்க்கம், நன்மார்க்கம், சன்மார்க்கம் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வழி நிற்பது சன்மார்கட்கு இவை ஒவ்வொன்றும் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் இப்படி ஒவ்வொன்றும் நன்னான்காகப் பதினாறாகும்.

இவற்றுள் பன்னிரண்டின் அந்தம் செறிவில் அறிவாகும். பதினான்கின் இறுதி அறிவில் நோன்பாகும். ஞானத்தில் ஞானம் என்ற பதினாறாவது கோதண்டம் எனப்படும். இவையனைத்தையும் திருவருளால் கைக் கொண்டபின், இறைவனின் திருவடிப்பேறு கிட்டும். இதுவே பிரணவ சமாதி என்று கூறப்பட்டது.

ஒளி

ஈண்டு ஒளி என்பது காணுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் வாயில். அது காணும் ஒளி, காட்டும் ஒளி என்பனவோடு ஒளிக்கு முதலாகிய சுடர் எனப்படும். அது அறிவொளி, அறிவுக்குள் ஒளி எனப்படும். இவற்றிற்கு முதலாகிய சீவான்மா, பரமாக்கள் ஆகும். இவற்றின் இயல்பு உணர்த்தலின் இவ்வதிகாரம் ஒளி எனப்பட்டது.

ஒளியை யறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடனிருந்தானே!

ஆருயிர்களின் இயற்கை நிலை பளிங்கனைய அறிவொளியாகும். அருளால் அதனை அறிந்தால் உடற் பற்று நீங்கும். ஒடுக்கமாகிய மறைவே இயல்பாக உள்ள உருவமாகும். ஊடற்று இருப்பின் மீண்டும் பிறப்புண்டாகும். அறிவொளித் தன்மையை அறிந்தால் அதுவே சிவ உருவாம். ஒளியும் வெளியாகும். அருளொளியாகிய ஆருயிர் சிவபெருமான் திருவடிக்கண் பேரன்பு பூண்டு ஒழுகுதல் வேண்டும். அப்படி ஒழுகின் உடனாக இருக்கும் சிவபெருமான் நமக்கு வெளிப்படுவன்.

திருவருள் ஒளி ஆன்மாவைத் தூய்மையாக்குவதன்றி ஆன்மாவில் அடங்கி நிற்கும். மாயேயங்களையும் தூய்மை செய்யும் இதனை ஐந்து பேரறிவு எனவும் அளப்பருங் கரணங்கள் எனவும் திருந்து சாத்துவீகம் எனவும் கரணங்களை அடை கொடுத்துச் சேக்கிழார் கூறுவார்.

ஆளுடைய பிள்ளையார் கூத்தப்பிரானைக் கண்டு பேரின்பம் எய்தியமையை உணர்வின் நேர்பெற வருசிவ போகம் ஒழிவின்றி உருவின் கண் ஐம்பொறி அளவினும் அருளினை எனப் போற்றி எனக் குறிப்பிடுதலும் உணரத்தக்கது. ஆருயிரின் நெஞ்சத் தாமரைக்கண் ஞாயிற்றொளியின் மிக்கதாயுள்ள பேரொளி காணப்படும். அத்திருவொளி சிவபெருமானுடைய செஞ்சுடர் ஒளியாகும். இதனை,

"எரியாய தாமரைமேல் இயங்கினாரும்
இடைமருது மேவிய ஈசனாரே

என்பார் அப்பர்.

பிறப்பில்லாதவனாகிய சிவபெருமானுக்கு வலக்கண் ஞாயிறும் இடக்கண் திங்களும் நெற்றிக்கண் அக்கினியுமாம். இவை மூன்றுக்கும் ஒளியைத் தருபவன் சிவபெருமானே. ஒளிவிளங்கும் அவனது மெய் ஆகாயமாகும்.

ஐம்பூதங்களும் தோன்றி, நின்று ஒடுங்குதற்கு உரிய இடமும் திருவருள் ஒளியே. அத்திருவருள் ஒளியின் கீழ் உள்ள காற்று, அதன்கண் மறைந்திருக்கும் பூமி, அதன்கண் மறைந்துள்ள நெருப்பு, பரந்த ஒளிக்கு இடந்தரும் ஆகாயம், நீர் ஆகியவற்றை விளங்கச் செய்வதால் ஐம்பூதங்களும் ஒன்றி அடங்கும்.

இறைவன் மின்னலாய் நின்று அருளுபவன். தன்னை எப்பொழுதும் உள்ளத்தில் நினைப்பவர் தம் உடம்பை இடமாகக் கொள்கிறான் இறைவன். மேகத்தின் கண் மின்னலாய்த் தோன்றி மறையும் தன்மையான ஒளி வடிவானவன். தன்னைத் தொழும் அன்பர்க்கும் அறிவர்க்கும் மறையான். ஒளி உள்ள சுவை நிறைந்த அமுதினைத் தேவர்கள் உண்ணும் பொருட்டுத் தான் ஆலகால நஞ்சினை உண்டவன். இருள்மலத்து அழுந்தும் உயிர்கட்கு அம்மலத்தினை நீக்கி அமுதம் எனப்படும் சிவத் தன்மையை அருளுபவன்.

அடுத்து இறை, சத்தி, உயிர் மூன்றும் முச்சுடர் இயல்பைக் சுறுகிறார். தானே தன்னொளியாய்ச் சுடர்பவன் சிவபெருமான், தன் நெஞ்சக் கமலத்தே ஆன்மாவையும் அருட்சத்தியையும் அடக்கி நிற்பவன்.

அன்பர்கள் உள்ளங்களைத் தன் இருப்பிடமாகக் கொள்கிறான் சிவன். மணியின்கண் ஒளிந்து நிற்கும் சோதியானவன். இதனை மறைய நின்றுளன் மேலான அறிவு வெளியில் மின்னல் போலத் தோன்றி, அதன்கண் மறைந்து நிற்பவன். அவன்றன் குணநலன்களை ஏற்றுக் கொள்ளும் அடியார் கூட்டத்துள் அணுக்கமாய் நின்றருள்பவன்.

இயற்கை உணர்வினனாகிய சிவபெருமான், உயிர்களின் பாசமாகிய மாயை, மாயேயம், வினை என்பவற்றில், முன்பிருந்த இருள்மலம் கெடும் பொருட்டு ஐந்தொழிற் கூத்து ஆடுகின்றனன். அவன் விளங்கும் உயிர்கட்கு மாயை மயக்காது.

வீடுபேற்றை எய்தினோர் தலைவனோடு உயிர்களைக் கூட்டுதற் பொருட்டு இடையிற் சென்றவள் திரோதன சத்தியாகிய உமை, அவளுடன் கூடி உயிர்களின் இருள்மலத்தை நீக்குகின்றான்.

காணப்படும் பொருளையே உண்டு என்றும், இல்லை என்றும் மாறிக் கொள்ளும் இயல்புடையன உயிர்கள். பரம்பொருளையும் இல்லை

என்றே கூறுவர். மனத்தால் நினைத்து அறியும் மக்கள் சிவனைக் கண்டது இல்லை. அவனே உணர்வுக்கு உணர்வாய் நின்று உள்ளே ஒன்றி நின்று காண்போர்க்கு விளங்கும் ஒளியாவன். அவன் ஒளிவளர் விளக்காய், உணர்வு சூழ கடந்ததோருணர்வாயுளன். கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்.

யாவராலும், கண்ணால் பற்றிக் காணுதற்குரிய காட்சியையுடைய ஞாயிறு போல நிற்கும் தன்மையன் ஈசன். உடல், கருவி, நுகர்வு எனச் செறிந்து தன்வசப்படுத்தும் மாயையினுள்ளே நிறைந்த இருள் மலவலியை ஞானக் கருவி கொண்டு நீக்குகின்றான் ஞானத்தின் முதல்வன்.

இறைவன் உயிர்க்குற்றம் நீங்கி, பால் திருவெண்ணீற்றில் திகழ்கின்ற பவளமேனியன். செம்மேனி எம்மான் அண்டங் கடந்த ஆனந்த வெள்ளப் பொருளாகிய முழுமுதற்கடவுள் ஆதிப்பிரான். உள்ளன்போடு துதிப்பவர்தம் உள்ளத்துள்ள மல இருள்களை நீக்குபவன் என் உடனாகி நிற்கின்றான். இறைவன் உயிர்க்குற்றங்களை நீக்குகின்றான்.

உயிர்களை ஆளும் முதல்வன் எங்கும் நிறைந்துள்ளான். உயிர்களுள் நல்வினை மிகுதியாயுள்ள வானோரும் அவன் நிறைவில் அடங்கியுள்ளனர். ஆயினும் தம் சுய அறிவின்றி அறிவொளியை அறியாது வினைகளைச் செய்கின்றனர். இதனால் இருவினை உள்ளவனா இறைவன் அருளொளி விளங்காது பாசம் மூன்றே ஆயினும், வினைப்பற்று நீங்குகின்ற வினை ஒன்றே என்றிருப்பின், மணம் நிறைந்த மலர்போல, அவ்வுயிர் தன்னகத்தே சிவ ஒளியைக் கண்டு அவ்வொளியில் அடங்கும்.

அத்தகையவனை எவ்வாறு வணங்குதல் வேண்டும்? ஒருவனாகிய சிவபெருமான் மறைகளின் முடிவாக இருக்கின்றவன். தலைவனும் அவனே, முறைகளும் அவனே. இப்பரந்த உலகில் மேலோனாய் இருப்பவனை உணர்ந்து அவனைப் புகழ்ந்து போற்றி வழிபடுதல் வேண்டும்.

ஓங்காரமாகிய பிரணவமும் அவனே. அவனை உணர்ந்து அவன் திருவடிகளைப் பற்றுதல் பிரணவ சமாதியாகும். ஒளிக்கு மூலமாய் இருப்பவன் அவனே. அவ் அறிவொளியினை உணர்ந்து அவனது திருவடிகளைப் பணிந்து அறிவொளி பெற்று இன்புற்று வாழ்வோமாக.

திருச்சிற்றம்பலம்

92. தூல பஞ்சாட்கரம், சூக்கும பஞ்சாட்கரம், அதிசூக்கும பஞ்சாட்கரம்

சித்தாந்த கவிமணி . மு.பெ. சத்தியவேல் முருகனார்
ஆசிரியர், தெய்வ முரசு, சென்னை.

பஞ்சாக்கரம் என்ற சொல் வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம். அதன் தூய தமிழ்ச் சொல் ஐந்தெழுத்து என்பது. இதைத்தான் திருமூலர் தமது பாடல்களில் பயன்படுத்தி உள்ளார். பஞ்சாக்கரம் என்ற சொல் அவரது பாடல்களில் ஓரிடத்திலும் 9 ஆம் தந்திரத்தில் காணப்படவேயில்லை.

'ஆயது ஈறாம் ஐந்தோடு ஆம் எழுத்தஞ்சுமே'

'அரணம் கை கூட்டுவது அஞ்செழுத்தாமே'

'சேயுறு கண்ணி திருவெழுத்தஞ்சையும்'

'அருள்வழி காட்டுவது அஞ்செழுத்தாமே'

'பிரான் வைத்த ஐந்தின் பெருமை உணராது'

'பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே'

என இவ்வாறு பல இடங்களில் ஐந்தெழுத்து என்ற தூயத்தமிழ்ச் சொல்லையே திருமூலர் ஆண்டிருக்கிறார். திருமூலர் தாம் பாடிய மூவாயிரம் பாடல்களுக்குத் தந்திரம் என்ற பிரிவுகள் தாமே அமைத்துக் கொண்டு பாடினார் என்று கூற இயலாது. அப்படிக் கூறுவதற்குச் சான்று ஒன்றும் இல்லை. ஆனால் பிற்காலத்துச் சான்றோர் தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஒன்பது ஆகமங்களின் சாரமாக அவரது பாடல்களை ஒன்பது தந்திரங்களாக அமைக்கும் வண்ணம் பாடினார் எனலாம். பெரும் பிரிவான தந்திரத்தையே அவர் அமைத்துப் பாடாதபோது உட்பிரிவுகளையும் அவற்றிற்கு தலைப்புகளையும் திருமூலர் கொடுத்துப் பாடி இருக்க முடியாது என்பது திண்ணம். எனவே தந்திரத்தின் உட்பிரிவுகளும் உட்பிரிவுகளுக்குத் தலைப்புகளையும் பின் வந்த யாரோ ஒரு திருமந்திர ஆர்வலர் ஆக்கி அமைந்திருக்கிறார் என்பது தெளிவு. அவர் வடமொழி ஆர்வலராகவும் இருந்திருக்கிறார். ஆகவேதான் திருமூலர் ஐந்தெழுத்து என்றே பாடி இருக்க இவர் வேண்டாது வடமொழித் தலைப்பை இட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

இதனால் அந்த மந்திரம் அதாவது ஐந்தெழுத்து மந்திரம் ஏதோ வடமொழி மந்திரம் போலவும் அதைத் தமிழ்ப்படுத்தியது போலவும் ஒரு பொய்ம்மை தோற்றம் உண்டாக்கிட பஞ்சாக்கரம் என்று திருமூலர் கருத்துக்கு மாறாக, தலைப்பிட்டிருக்கிறார் எனலாம்.

காரணம், ஐந்தெழுத்து மந்திரம் தமிழ் எழுத்தாலான ஒரு தூய தமிழ் மந்திரம். *உருவில் சிவாய நம என ஓதே* என்று இதே 9 ஆம் தந்திரத்தில் திருக்கூத்துத் தரிசனத்தில் திருமூலர் இதை உறுதிப்படுத்துகிறார். இதையே திருவம்பலச் சக்கரத்தில் அதாவது நாலாவது தந்திரத்திலும் கூறுகிறார்.

ஆகின்ற பாதமும் அந்ந வாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீ யிரு தோள்வ வ்வாய்க் கண்டபின்
ஆகின்ற அச்சுடர வ்வியல் பாமே

இதை உள்வாங்கி மனவாசகம் கடந்தார் தமது உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில்,

ஆடும் படிகேள் நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே யேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்ந்தோள் சிகரம்
பகருமுகம் வமுடியப் பார்

என்று பாடினார். நடராசரின் தூக்கிய திருவடியும் ஊன்றிய திருவடியும் இடுப்பும் ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால் அதன் வடிவம் தமிழ் எழுத்தான ந என்ற எழுத்தின் வரி வடிவமாக இருப்பதைக் காணலாம். கூத்தப் பிரானுடைய சடை முடி ய என்ற தமிழ் எழுத்தின் வரிவடிவமாக இருப்பதைக் காணலாம். இப்படியே ஏனைய சி,வ,ம என்ற தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களையும் மேற்குறிப்பிட்ட திருமந்திரம் மற்றும் உண்மை விளக்கப் பாடல்களில் கூறியபடி நடராசரின் உருவத்தில் அந்தந்த அங்கங்களில் காணலாம். ஆக, நடராசரின் உருவில் காணப்படும் ஐந்தெழுத்துப் பதிவுகள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களாகவே அமைந்துள்ளதைக் காண்க. எனவே நமசிவய என்ற ஐந்தெழுத்து மந்திரம் தூய தமிழ் மந்திரமே என்பதை மறுக்க வொண்ணாச் சான்றுகளுடன் நிறுவலாயிற்று. நமது நால்வர் பெருமக்களும் ஐந்தெழுத்து என்றே பல இடங்களில் பாடி இருப்பதும் இதை உறுதிப்படுத்தும்.

இதை மறைத்து அது ஏதோ வடமொழி மந்திரம் போலவும் அதைத் தமிழில் எடுத்தாண்டது போலவும் பஞ்சாக்கரம் என்று தலைப்பிட்டது போலி. வடவரின் உள்நோக்கம் உடையது.

இவ்வாறு பொருத்தமின்றிப் போலியாக தலைப்பிட்ட அந்த வடமொழி ஆர்வலர்க்கு இதன் உட்பிரிவுகளை சரியாகப் பிரிக்கவும் தெரியவில்லை. காரணம், ஐந்தெழுத்து ஐவகையானது. இந்த ஐவகை ஐந்தெழுத்தையும் திருமூலர் பாடி இருக்கிறார். ஆனால் அதை நுனித்து உணராமல் தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம் என்று வறிதே மூன்று வகையாகப் பிரித்துத் தலைப்பிட்டு குளறுபடி செய்திருக்கிறார். ஐந்தெழுத்தின் சரியான ஐவகையாவன இவை என்பதைக் கீழே காண்க.

வடமொழி பெயர்	தமிழ்மொழிப்பெயர்		மந்திரம்
1. தூல பஞ்சாக்கரம்-	*பருவைந் தெழுத்து*	-	*நமசிவய*
2. சூக்கும பஞ்சாக்கரம்-	*நுண்ணைந்தெழுத்து*	-	*சிவய நம*
3. காரண பஞ்சாக்கரம்-	*கருவைந்தெழுத்து*	-	*சிவயசிவ*
4. அதிசூக்கும பஞ்சாக்ரம்-	*நுண்கருவைந்தெழுத்து*	-	*சிவ*
5. மகாகாரணபஞ்சாக்கரம்-	*மீநுண்கருவைந்தெழுத்து*	-	*சி*

இவற்றின் விவரங்களை சிவாகமங்கள் கூறியிருப்பதைப் போலவே திருமூலரும் கூறி இருக்கிறார். ஆனால் இவற்றைப் பதிப்பித்தவர்கள் தவற விட்டார்கள். காசி மடம் திருமந்திரப் பதிப்பில் உள்ளவற்றை எடுத்துக் கொள்வோம். அதில் மேற்கூறிய மூன்று வடமொழி தலைப்புகளில் பாடல்களை முன்னும் பின்னுமாகப் பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால் அவை எவ்வாறு மேற்கண்ட வகையாகப் பிரிக்கப்படலாம் என்பதை பாடல் தொடக்கக் குறிப்புகளுடன் கீழே காண்க.

பாடல்	மந்திரம்
1. ஐம்பதெழுத்தே, அகாரம் முதலாக அகராதியிரெண், வாயொடு கண்டம் கிரணங்கள் ஏழும், ஞாயிறு, திங்கள் குரு வழியாய, வெறிக்க வினைத்துயர் நெஞ்சு நினைந்து, பிரான் வைத்த ஒன்று கண்டீர்	*நமசிவய (பருவைந்தெழுத்து)*

இது அணைந்தோர் தன்மை என்ற தலைப்பில் 2962 ஆம் பாடலாக வருகிறது. அது இங்கே வரவேண்டும்.

2. தெள்ளமுதூறும், எளியவாது செய்வார், சிவனருளாய சிவன் திருநாமம்	*- சிவய நம (நுண்ணைந்தெழுத்து)*
3. சிவன் சத்தி, ஓதியநம்மலம் அருட்ருமாயமும்	*- சிவய சிவ (கருவைந்தெழுத்து)*
4. நமாதி நனாதி, சிவசிவ என்றே தெளிகிலர், சிவசிவ என்கிலர் நமவென்னும் நாமத்தை, சிவாய நம என்னும்	*- சிவ சிவ (நுண்கருவைந்தெழுத்து)*
*5. செஞ்சுடர் மண்டலம், அங்கமும் ஆகமம், பழுத்தன ஐந்தும் நாயோட்டும் மந்திரம் ***	*- சி (மீநுண்கருவைந்தெழுத்து)*

** நிட்டானுபூதி உரை நூலில் திருமந்திர மேற்கோளாக இப்பாடல் காணப்படுகிறது. காசிமடம் பதிப்பில் இது 3051 ஆம் பாடலாக வருகிறது.

இங்கே கூறப்பட்ட ஐந்தெழுத்துக்கள் யாவும் ஐந்தெழுத்துக்களால் ஆகிய மந்திரம். இவற்றில் எதுவும் தனித்தனி சொல்லல்ல. அதாவது உதாரணத்திற்கு சிவாய நம் என்பதை எடுத்துக் கொண்டு அதற்கு சிவனுக்கு வணக்கம் என்று பொருள் உரைக்கக் கூடாது. காரணம், அப்படிக் கூறினால் அது தமிழ் எழுத்துக்களில் வட மொழிச் சொற்கள் இரண்டை வலிந்து கண்டு அந்த இரண்டு சொற்களுக்கும் பொருள் கூறியதாக ஆகும். அப்படிக் கூறினால் அது ஐந்தெழுத்தாகாது; இரு பதம் கொண்ட வடமொழி வாக்கியம் ஆகும். அது வடமொழியல்ல என்று ஏற்கனவே நிறுவி இருக்கிறோம். ஆக அது வடமொழியுமல்ல; அவற்றில் இருபதம் கொண்ட வாக்கியமும் அல்ல.

அப்படியானால் அது என்ன? அது ஒரு தமிழ் மந்திரம். ஆதி மந்திரம். அதனால்தான் தெய்வச் சேக்கிழார் "முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதலாகும் முதல்வனார் அஞ்செழுத்து" என்றும் "ஆதிமந்திரம் அஞ்செழுத்து" என்றும் பாடியருளினார்.

மந்திரம் என்றாலே அது மறைபொருளும், ஆற்றலும் உடையதாக இருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. அப்படியானால் இந்த ஆதித் தமிழ் மந்திரத்தில் மறைந்து நிற்கும் பொருள்கள் யாவை? அவை வருமாறு:

சி-சிறப்பு; வ- வனப்பு; ய-யாப்பு; ந- நடப்பு; ம- மறைப்பு ஆம், இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதத்தின் முதலெழுத்துக்கள். இன்று கூட, டான்சி (**TANSI**), சிப்காட் (**SIPCOT**), ஹு(**WHO**) என்று கூறும் அமைப்புகள் உண்டு. இவையெல்லாம் தனித்தனிச் சொல்லல்ல. அவற்றில் சில பதங்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பதங்களின் முதலெழுத்துகளைக் கூட்டி நாம் அவ்வாறு கூறி வருகிறோம். இதில் ஹு(**WHO**) என்று ஒரு ஆங்கிலச் சொல் உண்டு. யார் என்ற கேள்வி அது. ஆனால் அது இங்கே ஒரு பதம் அல்ல. உலக நலவாழ்வு அமைப்பு (**World Health Organisation**) என்பது அதன் விரிவு.

அது போலத்தான் நமசிவய என்பதும் மேற்கூறிய பதங்களின் முதலெழுத்துக்களைக் கூட்டிச் சொன்னது. ஆகவேதான் அப்பரும் *அஞ்சுபதம் சொல்லி* என்று ஐந்தெழுத்தை அஞ்சு பதம் என்று கூறியதைத் தேவாரத்தில் காணலாம்.

இனி அஞ்செழுத்துப் பதங்களைப் பார்ப்போம். இங்கே சிறப்பு என்பது சிவபெருமானைக் குறித்தது. சிறப்பென்னும் செம்பொருள் என்பார் திருவள்ளுவர். வனப்பு என்பது அம்மையைக் குறிக்கும். அளவிறந்த ஆற்றல் உடைய இறை. ஆன்மாக்களின் ஆற்றலுக்கு ஏற்ப குறுகி வருகிறது- யானை பாகன் ஏறுவதற்கு ஏற்ப தன் உடலைக் குறுக்கிக் கொண்டு முழந்தாளிட்டுக் கொள்வது போல. சூரியன் தான் உலகை வாழ வைக்கிறது. ஆனால் சூரியனின் வெப்பம் அப்படியே பூமியைத் தாக்குமானால் பூமி தாங்காது. எனவே சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் பிரிந்து வந்து பூமியை அடைகிறது; அடைந்து அந்தக் கதிரால் தாமரை இதழை மலர்த்துகிறது. சூரியனின் வெப்பம் அப்படியே வந்து தாக்குமானால் தாமரை என்னாவது? இவ்வாறு சூரியனிலிருந்து கதிர் பிரிந்து வந்து தாமரையை அலர்த்துவது போல இறைவன் ஆன்மாவைப் பக்குவப்படுத்தி அறிவு மலர்த்த தன்னிலிருந்து தானே பிரிந்து அம்மையாகிறான். அளவிறந்த ஒன்று நம் பொருட்டு இறங்கி வருவது ஓர் அழகு. இதைத்தான் 'அருமையில் எளிய அழகே போற்றி' என்று மணிவாசகர் பாடிப் போற்றினார். இறங்கி வந்து ஆன்மாவோடு தொடர்பு கொண்ட நிலை அம்மை நிலை. அது அழகு என்பதால் வனப்பு என்று அம்மை அழைக்கப்பட்டாள்.

அடுத்து யாப்பு என்பது இங்கே உடலுக்குள் யாப்புறுத்தப்படும் உயிரைக் குறித்தது. நடப்பு என்பது இந்த உலக வாழ்வில் ஈடுபட உயிர்கள் எடுக்கும் முயற்சிக்கு வேண்டுமே ஒரு சத்தி அதைக் குறித்தது. அதை வடமொழியில் திரோதான சத்தி என்டார்கள். தமிழில் நடப்பு சத்தி என்பர். இதே போன்று இறைவனை அடைய உயிர் எடுக்கும் முயற்சிக்கு வேண்டுமே ஒரு சத்தி

அதுதான் வனப்பு சத்தி, அருட்சத்தி எனப்படும். அதுவே வனப்பாயிற்று. அடுத்து மறைப்பு என்பது அறிவுடைய ஆன்மாவினைச் சூழ்ந்து மறைத்து ஆன்மாவிற்கு அறியாமையை விளைவிக்கும் மலங்களைக் குறிக்கும்.

இவ்வாறு இறையியலில் மூழ்காது நாம் உலகியலில் மூழ்கி இருக்கும் போது நமசிவய என்று அந்த எழுத்துக்களை சித்தாந்தச் சான்றோர் அடுக்கிக் காட்டினர். இதில் நடப்பு சத்தியும் மலமறைப்பும் முன்னிற்க இவற்றிற்கும் ஆன்மாவிற்கும் இடையே சிவ என்னும் இறையும், இறையருளும் உள்ளே மறைந்திருக்கிறது.

அடுத்து குருவினால் தீக்கை அளிக்கப்பட்டுப் பக்குவத்தில் ஏறும் உயிர் ஒவ்வொரு தத்துவமாக மண் முதல் மனம் வரை 24 தத்துவங்கள் கொண்ட ஆன்மத்தத்துவத் தொகுதியைத் தாண்டி ஆன்மாவிற்கு அறிவுணர்த்தும் தத்துவம் ஆகிய வித்தியாதத்துவத்தில் கலைத் தத்துவத்தையும் வெற்றி கொள்ளும் போது சிவம் முன்னிற்கும்; நம என்பதாகிய நடப்பும் மறைப்பும் பின்னிற்கும். இடையில் யாப்பாகிய ஆன்மா சிவத்தை நோக்கி நிற்கும். இதுவே சிவயநம என்ற நிலை. ‘நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்’ என்று இதையே மணிவாசகர் பாடியருளினார். இந்த சிவயநம நிலையில் உடம்பு பொன்னாகும். இதை வட மொழியில் ஸ்வர்ண தேகம் என்பர்.

அடுத்து நடப்பும் மறைப்பும் முற்றிலுமாக சிவத்தில் ஒடுங்க ஆன்மாவை சிவம் சூழும். அது யகரத்தின் இருபுறமும் அதாவது ஆன்மாவின் இருபுறமும் சிவம் சூழ்ந்ததாகக் காட்டி *சிவயசிவ* என்ற நிலையைக் குறிக்கும். அடுத்து அந்த ஆன்மாவும் அருட்சத்தியான வனப்பில் ஒடுங்கி விடும். அது சிவ என்கிற ஐந்தெழுத்து நிலையால் குறிக்கப்பட்டது. அதன்பின் அம்மையாகப் பிரிந்த சிவ ஆற்றலும் சிகரமாகிய சிறப்பென்னும் செம்பொருளில் ஒடுங்கி விடும். அவ்வொழுக்கத்தில் ஆன்மாவிற்கு சிகரமாகிய செம்பொருள் பேரா இயற்கைப் பேரின்பத்தை ஊட்டிக் கொண்டிருக்கும். அது *சி* என்னும் ஐந்தெழுத்து நிலையால் குறிக்கப்பட்டது.

இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் எழுத்துக்களின் வைப்பு முறையில் உயிரின் பக்குவ நிலை குறிக்கப்படுகிறது என்பதுதான். எனவேதான் திருவருட்பயன் என்கிற சித்தாந்த நூல் இதனை ஐந்தெழுத்து அருள் நிலை என்று கூறியது.

இனி, *சிவ* என்பதில் இரண்டெழுத்தும், *சி* என்பதில் ஓரெழுத்தும் தானே இருக்கிறது; அவற்றை ஐந்தெழுத்து என்பது எப்படி என்று கேள்வி எழலாம் இல்லையா? சிவ என்பதில் காணப்படும் *வ* என்கிற எழுத்தில் அதாவது

அருட்சத்தியில் மறைப்புச் சத்தியான *ம* வும், நடப்புச் சத்தியான *ந* வும், ஆன்ம சத்தியான ய வும் ஒடுங்கி நிற்கின்றன. அவ்வாறு அவை மூன்றும் ஒடுங்கி இருப்பதால் அவை ஐந்தெழுத்து என்றே கூறப்படுகின்றன. அதே மாதிரி *சி* என்ற எழுத்தில் தன்னில் ஒடுங்கிய *ந,ம, ய* என்ற எழுத்துக்களோடு அம்மை எழுத்தாகிய *வ* என்னும் எழுத்தும் ஒடுங்கி நிற்பதால், தோன்றி நிற்கும் எழுத்துடன் தோன்றாமல் ஒடுங்கி நிற்கும் ஏனைய நான்கு எழுத்துக்களையும் சேர்த்து அந்த ஓரெழுத்தே ஐந்தெழுத்து எனப்பட்டது. இதைத்தான் *எழுத்தை அழுத்தும் எழுத்து* என்று *பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே* என்று தொடங்கும் பாடலில் திருமூலர் கூறினார்.

இவ்வாறே மேலே கூறிய விளக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கியே திருமூலர் ஐந்தெழுத்து என்று தாம் இட்ட தலைப்பில் 26 பாடல்களையும் பாடியுள்ளார். அவற்றைத் தனித்தனியே பாடல் பாடலாக விளக்க இது இடமல்ல என்பதாலும், அப்படிச் செய்யப்புகின் இது ஒரு தனி நூலாகி விடும் என்ற அச்சத்தாலும் இந்த அளவில் கோடிப் பொருள்களை உள்ளடக்கிய இதனை கோடி மட்டும் காட்டி நிறைவு செய்கிறேன்

இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே என்றார் அப்பர் பெருமான். அது இறைவனின் ஐந்தெழுத்திற்கும் பொருந்தும். இந்த ஐந்தை ஆறில் அடக்க முடியாது. அதாவது இந்த ஐந்தை வரையறுக்கப்பட்ட ஆறு பக்கங்களில் அடக்கிவிட முடியுமா? அது ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையைப் பேறாகப் பெறுவதைக் கூறி பரமானந்தப் பழங்கடலாக விரிவது என்பதை உணர்வோமாக.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

93. திருக்கூத்துத் தரிசனம்

பேராசிரியை. டாக்டர். சரசுவதி இராமநாதன்
பள்ளத்தூர்

திருமுறைகள் பன்னிரண்டுள் சிறப்பாகத் திருமந்திரம் எனும் பெயர் பெற்றுத் திகழ்வது பத்தாம் திருமுறையாகும். மந்திரமாலை என்ற ஒரு பெயரும் இத்திருநூலுக்குண்டு! தமிழ் வேதாகம முழுமுதற் கருவூலம் எனக்கருதப்படுவது திருமந்திரமே! ஞாலம் அளந்த மேன்மைத்தமிழ் மொழியில் அமைந்த மறை, முறை, மறைமுடிவு (வேதம், ஆகமம், உபநிடதம்) என்று தேவார, திருவாசக, திருமந்திர நூல்களைச் சொல்லலாம். திருமூலர் அருளிய பாடல்கள் மூவாயிரம் என்பர். திருமந்திரத் தொகைச் சிறப்புள் இரண்டாவது திருப்பாட்டு வருமாறு,

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவ ரன்றே

கயிலாயத்தொரு சித்தர்

நந்தித் தேவரின் அருள்பெற்ற திருமூலப் பெருமான் தில்லைத் திருநடனத்தை தரிசித்தார் என்பதற்கு திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் 'திருக்கூத்து தரிசனம்' பகுதி அகச்சான்றாகும்.

செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந் தேனே!

என்பது திருமந்திரப் பாடல்.

திருமூலரின் கால ஆராய்ச்சிக்குள் நான்புக விரும்பவில்லை. அது என் கட்டுரைத் தலைப்பும் அன்று.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்ற தமிழ்ப் பற்றாளரான இவர் கி.மு.6000 முதல் கி.மு. 100 வரை இவர் காலம் என்பர் பெரியோர்.

திருக்கூத்துத் தரிசனம்

சைவம் என்ற ஒப்பற்ற வாழ்வியல் சமயம் தமிழர் சமயம். இது ஆண் பெண் இருவருக்கும் சமநீதி, சம உரிமை எல்லாம் தந்த நாகரிக வாழ்வியல். இந்த உலகமே சிவனின் திருக்கூத்தால் இயங்குகிறது. அவனுடன் இணைந்து,

இவ்வானும் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி

வருபவள் சக்தி. இந்தப் பேருண்மை கூறும் மந்திரம்

எங்கும் திருமேனி; எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம்; எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமா யிருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன் அருள் தன்விளையாட்டதே!

உலகம் எல்லாம் சிவனது திருக்கூத்தே என்று தெளிவுப்படுத்தும் முதல் பாடல் இது. சிவன் யார்? அவன் சிவானந்தக் கூத்தன், சுந்தரக் கூத்தன், பொற்பதக் கூத்தன், பொன்தில்லைக் கூத்தன், அற்புதக் கூத்தன் என்று இவனது நடனமான திருக்கூத்து இந்த ஐந்து வகைப்படும்.

சிதம்பரமே திருமந்திரம் தான். அழகிய தில்லைச் சிற்றம்பலவன் திருமேனியே திருமந்திரம்தான்.

எடுத்த பொற்பாதம்	*ந*	*கரம்*
வயிறு	*ம*	*கரம்*
திருத்தோள்	*சி*	*கரம்*
திருமுகம்	*வ*	*கரம்*
திருமுடி	*ய*	*கரம்*

உடுக்கை உடைய வலக்கரம்	-	*சி*	*கரம்*
இடப்பால் திருக்கை	-	*வ*	*கரம்*
வலப்பால் திருக்கை(அஞ்சலிக்கை)	-	*ய*	*கரம்*
மழுவேந்திய இடக்கை	-	*ந*	*கரம்*
ஊன்றிய திருவடி	-	*ம*	*கரம்*

திருவாசி ஓங்காரம். இத்தகைய கூத்தன் திருமேனி திருவருளே வடிவம். அதுவே திருஞானம்; அத்திருமேனியே சிவநேயம். அந்திருமேனி திருவடிப் பேறாம் சித்தியுமாகும்.

சிவானந்தக் கூத்து

சிந்திப்பரியன; சிந்திப்பவர்க்குச் செந்தேன்
முந்திப்பொழிவன

இறைவனின் திருவடித் தாமரைகள் என அப்பர் சுவாமிகள் அருளினார். அந்தத் தாமரைத் திருவடிகள் ஆதியாய், அந்தமாய், தோற்றமாய், ஈறாய், போகமாய் எல்லாமாய் இருப்பன என்றார் மணிவாசக பெருமான் (திருவெம்பாவை-20)

அவனுடைய ஐந்தொழில்களும் ஆனந்தமே! இறைவனின் ஆடரங்கமும் ஆனந்தம்; திருமுறைப்பாடல்களும் ஆனந்தம்; குழல், யாழ் எனப் பல்வகை வாத்தியங்களும் ஆனந்தமே!

ஒளியாக விளங்கும் முழுமுதலும், என்றும் மாறாத சத்சித் ஆனந்தமாக விளங்கும் முழு முதலும் சிவகாமியே! அவளே சிவானந்த சக்தி. அருள் அது சக்தியாகும் அரன்தனக்கு அல்லவா?

ஒன்பது அண்டங்களும் ஆண்டு கொண்டருள்பவன் சிவன். பூதங்களால் ஆகிய பூத அண்டமும், அவற்றினின்று வேறுபட்ட பேதாண்டமும் இன்பதுன்பம் நுகரும் போகாண்டமும் செறிவினர் சேரும் யோகாண்டமும் அனைத்திலும் பரவி நிற்கும் மூதாண்டமும் திருவடிப்பேறு நல்கும். முத்தாண்டமும் திருவடிப் பேற்றின் மீது பெருவிழைவு கொள்ளும் மோகாண்டமும் நுகர்வுக்கு கருவியான தேகாண்டமும், நுகர்வின் மேல் வேட்கை கொள்ளும் தாகாண்டமும், அவன் திருவடிக்கீழ் பேதமகன்று ஒன்றிய நிலையே பிரம்மாண்டம் என்ற சொல்லழகும். பொருள் ஆழமும் என்றும் இன்பம் நல்குவன.

சிவானந்தத் திருக்கூத்து நிகழும்காலை, மானாட, மழுவாட, மதியாட, மங்கைசிவகாமியாட, அண்டபகிரண்டமாட, அட்டதிசையும் கிடுகிடுடென்றாட, சேடந்தலையாட, அதலசேடனாராட, அகிலமேரு மீதாட அபினகாளிதானாட அனைத்தும் ஆடுமாம். அத்துடனா?

வேதங்களாட, மிகு ஆகம மாடக்
கீதங்களாட, கிளர் அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆட, புவனம் முழுதாட
நாதம் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே.

இது உண்மை அறிவு இன்பப் பெருங்கூத்து. (அதுதான் சத்+சித்+ஆனந்தக்கூத்து)

ஐம்பெரும் பூதங்களில், ஐம்பொறிகளில், ஐந்து புலன்களில், நான்கு வேதங்களில், ஆகமங்களில், சித்தனான சிவன் ஆடுகிறான். அவன் சாட்டி நிற்கும் அண்டமெல்லாம் சாட்டையில்லா பம்பரம் போல் ஆட்டுவிக்கும் அண்ணல். அவன் ஆடினால் சுரர், தேவர், நரர், சித்தர், வித்யாதரர், மூவர், முப்பத்து மூவர், தாபதர், ஏழு முனிவர், சமயத்தோர், சராசரம் எல்லாமே ஆடும்.

இந்தப் பாடல்களில் சிவனே எல்லாம்; அவனே எல்லா உயிர்க்குள்ளும் உறைபவன்; அவனது இயக்கமே சராசரங்களின் இயக்கம் என்கிறார் திருமூலர்.

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே
அடங்குவித்தால் யாரொருவர் அடங்காதாரே!

என்ற அப்பரடிகளின் அருள் வாக்கை இணைத்துச் சிந்திக்கலாம்.

சுந்தரக்கூத்து

இறைவன், *மனத்தகத்தான் தலைமேலான் வாக்கில் உள்ளான்*

என்று பாடத்தொடங்கிய திருநாவுக்கரசு சுவாமிகள் ஏழண்டத்து அப்பாலான் எனவும் மொழிந்தார். அப்பாலைக் கப்பாலைப்பாடுதும் காண் அம்மானாய் என்பது மணிவார்த்தை. அந்தச் சதாசிவன் சக்தி காண ஆடுகிறான்.

கண்டம் கரியனாக, கருணை உருவனாக, உமை காணச் சுந்தரக்கூத்து ஆடுகின்றான் என்பது அழகிய திருமந்திரம்.

சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை பதினோரு திருத்தாண்டக ஆடலின் வகைகளைப்பாடும்.

கடையம் அயிராணி, மரக்கால் விந்தை கந்தன்
குடை துடி மால் அல்லியம் அல்கும்பம்- சுடர்விழியாற்
பட்ட மதன் பேடு திருப்பாவை அரன் பாண்டரங்கம்
கொட்டி யிவை காண் பதினோர் கூத்து

என்பது மேற்கோள் செய்யுள்.

1. கொடு கொட்டி - எல்லாவற்றையும் அழித்தபின் இறைவன் நின்று ஆடும் கூத்து.
2. பாண்டரங்கம் - முப்புரம் எரித்தபின் அந்த நீற்றினை அணிந்து ஆடிய கூத்து.

3. கோடு - பிரம்ம சிரக் கபாலத்தை ஏந்தி ஆடியது.

4. சங்காரம் - அழித்தல் தொழிலை நாள்தோறும் செய்ய ஆடும் கூத்து.

5. நடம் எட்டு - ஐந்தொழிலுக்குரிய நடனங்களுடன் காளிக் கூத்து, முனிக்கூத்து, ஆனந்தக் கூத்து. ஆக, 8.

6. ஐந்து நடனம் - குற்றாலம்,மதுரை, தில்லை, பேரூர், ஆலங்காடு இங்கெல்லாம் ஆடிய நடனங்கள்.

இவையெல்லாம் பரமசிவன் ஆடும் சுந்தரக் கூத்துக்கள்.

சிவன் எனும் செம்பொருளை உணரும் நெறி சன்மார்க்கம். அந்த நன்னெறி அங்குசம் என்னும் தோட்டியை ஒத்தது. சங்கரனான முழு முதல்வன் நடுநாடியான சுழுமுனையில் தொம் தீம் என்று தாளமிசைத்துக் கூத்தாடுவான். அக்காலம் திருவருள் பொங்கும் காலமாம்!

இறைவன் எங்கோ அரங்கத்தில் ஆடினால் போதுமா? அவன் நம் கருத்தில் தங்கி ஆடுகிறான். நம் சுழுமுனையில் (மூன்று நாடிகளும் ஒருங்கே சேரும் இடம் சுழுமுனை என்பர்.) அந்த இடத்தில் ஆடி, ஆனந்தத் தேனைச் சொரிகிறான். நினைத்தொறும், காண்தொறும், பேசும்தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரிகிறான்.

சுந்தரக்கூத்து ஆறாம் திருப்பாட்டில் சக்திகள் ஐந்து என்கிறார். (பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி) சிவபேதம் ஐந்து (அயன், அரி, அரன், ஈசன், சதாசிவன்) முத்தி எட்டு. (கணபதி, அயன், அரி, முருகன், ருத்ரன், இந்திரன், சண்டீசன், கயிலை)

பதம் எட்டு - (சலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம் இந்த நான்கும். உருவ, அருவ பேதப்பட்டால் எட்டு)

சித்தி எட்டு - (அணிமா, மகிமா, லகிமா, கரிமா, ப்ராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்)

சுத்தி எட்டு - பார்த்தல் (நிரீட்சணம்)
தெளித்தல் (புரோட்சணம்)
தட்டுதல் (தாடணம்)
மூடுதல் (அப்புக்கணம்)

முத்தட்டு	(தாளத்ரயம்)
திசைக்கட்டு	(திக்பந்தனம்)
வளைத்தல்	(அவகுண்டனம்)
அமிர்தம் சொரிதல்	(தேனு முத்திரை)

ஆழமான கருத்தமைந்த இத்தகைய அழகில் மந்திரங்கள் பல.

பொற்பதிக் கூத்து

சிவனுக்கு ஐந்து முகங்கள், பஞ்ச கிருத்தியங்கள்(ஐந்தொழில்) பஞ்சாட்சரம் என்று எல்லாம் ஐந்து. அறுமுகனான முருகனுக்கோ, சிவனுடைய ஐந்து முகங்களுடன் ஆறாவது முகமான அதோமுகமும் சேர்ந்ததுபோல் ஆறு முகங்கள். ஆறெழுத்து மந்திரம், ஆறுபடை வீடு என எல்லாம் ஆறு என்பர். 4 திசைகளிலும் நான்கு முகம். உச்சியில் ஒரு முகம் ஆக 5 முகங்கள் என்கிறார் திருமூலர்.

உச்சிமுகம் ஈசானம்
கிழக்கு நோக்கிய தத்புருடம்
தெற்குநோக்கிய வாமம்
மேற்கு நோக்கிய சத்யோசாதம்
வடக்கு நோக்கிய அகோரம்

என ஆறுமுகம் கொண்டவன் சிவன் என்று சிவதருமோத்திரம் கூறும்.

அடங்காத என்னை அடக்கி அடி வைத்து
இடம்காண் பரானந்தத்தே என்னை இட்டு
நடந்தான் செயும் நந்தி

என்ற மந்திரப்பாடல் நந்தி இவருக்கு ஞானாசிரியன் என்பதை உணர்த்துகிறது.

இறைவன் உம்பரில் கூத்தன், உத்தமக் கூத்தன், செம்பொன் திருமன்று சேவகக்கூத்தன்; சம்பந்தக் கூத்தன், தற்பரக் கூத்தன்; மாணிக்கக் கூத்தன்; வண்தில்லைக் கூத்தன்; மன்றுள்புரிசடைக்கூத்தன்; சிவானந்தக் கூத்தன்; ஆணிப்பொன் கூத்தன் என் று அடுக்கி அழகாகச் சொல்லும் பாடல்கள் சொல்லழகைக் காட்டி நிற்கின்றன.

அனுபவம்

பக்தி செய்பவர்க்குக் கையும் எழா; காலும் எழா; இரு கண்களின் நீரும் நில்லா; மெய்தான் அரும்பி விதிர்விதிர்க்கும்; காதலாகிக் கசிந்து கண்ணீர்

மல்கும்; நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து பரவசப்படுவது பக்தியின் வெளிப்பாடுகள். மாகமர் திருக்காளத்தி மலை எழுந்து கொழுந்தாயுள்ள மோகநாயகராம் ஏக நாயகர் சிவனைக் கண்ட திண்ணனார் (கண்ணப்பர்) மோகமாய் ஓடிச் சென்றார். தழுவினார். உச்சி மோந்தார்; என்பதெல்லாம் சேக்கிழார் காட்டும் பரவசநிலை! பொற்பதிக் கூத்தை கண்ட பேரானந்தம் எவ்வாறிருக்குமாம்? ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக மாறிவிடுமாம்!

விம்மும்; வெருவும்; விழும்; எழும்; மெய் சோரும்;
தம்மையும் தாமறியார்கள் சதுர்கெடும்

என்கிறார் மூவாயிரம் அருளிய மூலனார்.

அம்பலத்தே ஆடுகின்றார் பாங்கிமாரே
அவர் ஆட்டம் கண்டே நாட்டம் கொண்டேன் பாங்கிமாரே

என்றார் வடலூர் வள்ளலார். அந்த அம்பலம் நமது உடலே. அண்டத்தின் நடுவானது- பொன்மலைமேரு - நடுக்கோடு என்பர். உடம்பில் நடுநாடி சுழுமுனை. நடுக்கோடு என்னும் பூமத்திய ரேகைக்கு இருபுறமும் மகரரேகை கடகரேகை என்ற இரு கோடுகள் உள்ளன. உடம்பிலும் இடப்பால் நாடி இடைகலை. வலப்பால் நாடி பிங்கலை என உள்ளன. நடுக்கோட்டினை இலங்கை என்பர். அந்த நடுக்கோடான சுழுமுனையில் இறைவனின் ஒளியைக் காணுதலே - ஆனந்த நடன தரிசனம்! குண்டலினி யோக முறைகளைத் தத்துவ ரீதியாக மந்திர மாலையில் விளக்கும் பான்மை இதோ,

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும் இவ்வானின் இலங்கைக் குறியுறும்
சாரும் திலைவனத் தண்மா மலயத்தூ(டு)
ஏறும் சுழுனை இவைசிவ பூமியே -9

பொற்றில்லைக் கூத்து

சிவபெருமான்- காளியோடு ஆடி, கனகாசலத்தாடி, கூளியோடு ஆடி, குவலயத்தே ஆடி, ஐம்பெரும் பூதங்களிடையே ஆடி, அம்பலத்தே ஆடுகின்றான்.

ஆதி பரனாட அங்கைக் கனலாட
ஓதும் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதிமதியாட பாரண்ட மீதாட
நாதமோடாடினான் நாதாந்த நட்டமே -2

இடை பிங்கலை இமவானோடு இலங்கை
நடுநின்ற மேரு நடுவாம் சுழுமுனை
கடவும் திலை வனம் -6

என மீண்டும் வலியுறுத்துகிறார் திருமூலர். இடைகலை, பிங்கலை- மேருவும், இலங்கையும், நடுநாடியான சுழுமுனை- தில்லை, அங்கு இறைவன் பரவெளியில் ஆடுகின்றான் என்பது தத்துவம்.

வேத ஆகமங்கள் பிறந்தது தென்தமிழ்நாட்டில்தான் என்று திருமூலர் உறுதி சொல்கிறார்.

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே! -7

இறைவனைக் கோவில் முழுவதும் தேடி, கோபுரம் ஏறித்தேடி, தேரோடும் வீதியில் தேடி, தெப்பக்குளம்தனில் தேடி, எங்கெங்கும் காணவில்லை என்று ஏங்கிளாளாம் ஒரு பக்தை,

உள்ளத்தின் உள்ளானடி- அதை நீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாய் எனில் -கோயில்
உள்ளேயும் காண்பாயடி

என்று கவிமணி, தோழியாய் நின்று பதில் சொன்னார்.

'ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதி' அது. அந்த சோதிப்பிழம்பு கற்பனை கடந்த சோதி. அதை உள்ளே நான் கண்டு கொண்டேன். காண்டலும் அற்றது பிறப்பு! உற்றது சிறப்பு! " என்று அனுபவத்தை விண்டுரைக்கிறார் திருமூலர்.

அற்புதக் கூத்து

திருமந்திரம் தோத்திர நூலாகத் தொகுக்கப் பெற்று பத்தாம் திருமுறை என வைக்கப் பெற்றாலும், அது பலவகைச் சாத்திரங்கள் கூறும் நூல். மந்திர

சாத்திரம், மருத்துவம்,யோகம், சமுதாயம் இப்படிப் பல செய்திகள் பரந்து காணப்படுகின்றன.

நீடும் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
ஓடும் உயிரெலிழுெந் தோங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெருமான் உகந்
தாடும் இடந்திரு அம்பலந்தா னே. -3

சிரசின் உச்சிக்குமேல் பன்னிரண்டு விரற்கிடை வரை உயிர்ப்பு எழுந்து ஓடும். அந்த இடமே அம்பலம். அதுவே சிற்றம்பலம். புருவ மத்தியில் ஒளி தோன்றும். (யோகம் புரிபவர்க்கு இது புரியும்) இதைத் தெளிவுறுத்தும் மந்திரம் இதோ,

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடஞ்
சிற்றம் பலமென்று தேர்ந்து கொண்டே னே -9

அண்ட பிண்டம் எதிலும் நிறைந்து, திசைதோறும் நிறைந்து அனைத்துயிருக்குள்ளும் அற்புத நடம் புரிபவன் சிவன்.

அம்பலமாவது அகிலசராசரம்
அம்பலமாவது ஆதிப்பிரானடி
அம்பலமாவது அப்புத்தீ மண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத்தாகுமே! -14

உலகியல் உவமையை அருளியலுக்கு ஆக்குவது அருமை! புளியைக் கண்டால் நாக்கில் நீர் ஊறும்.

புளிக்கண்டவர்க்குப் புனலூறுமா போல்

திருக்கூத்துத் தரிசனம் கண்டார்க்குக் கண்ணில் புனல் அருவி ஊறும் என்கிறார் திருமூலர்.

ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுத்து ஏழதாய்
ஏழினில் ஒன்றாய் கழிந்தமைந்து ஒன்றாகி
ஏழினில் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத்தே இசைந்தா னே -22

ஏழிசையாய் இசைப்பயனாய் இருக்கும் இறைவன், குரல், துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி என்ற ஏழும் (சரி கம பத நி - என்ற

சப்தஸ்வரம் என்பர் கர்நாடக இசைநூலர்) ஓம் எனும் பிரணவமும் சேர்ந்த இசைக்கேற்பக் கூத்து ஆடுகின்றான்.

'மூன்றில் அஞ்சாகி' என்ற 23 ஆம் பாட்டில் உயிர்கள் மூவகை என்கிறார். அவை ஒரு மலம் (குற்றம்) உடையார். இருமலமுடையார், மூவகை மலம் உடையார். சுவாசபேதம் 360X6= 2160. துவாதசாந்தம் பெருவெளியான முதற்பன்னீர் மூலமாய் ஒவ்வொரு ஆன்மாவிலும் அற்புதத் திருக்கூத்து ஆடுகின்றான்.

தேனை நுகர்வான் தேனும், நாவும், தானும் ஒன்று கூடினால்தான் அந்த இன்பம் புலனாகும். சீவன், சிவனுடன் ஒன்றி நீயும் நானுமாய் ஏகபோகமாய் இறுகும் வகை பரமசுகம் என்று அருணகிரியார் அனுபவித்தாற் போல் அனுபவம் பெறச் சக்தி அருள்கிறாள். சிவன் அற்புதக் கூத்தியற்றுகின்றான்.

தத்துவம் ஆடச் சதாசிவம் தானாட
சித்தமும் ஆட, சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே -28

கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமாகி

அற்புதக் கோலம் நீடிப் பொற்புடன் நடம் செய்கிறான்.

சிவம் ஆடச் சக்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட

அந்தச் சிவன் ஆடுகிறான். அதுதான் உண்மையான ஆனந்தம். தில்லை நடனம் ஆனந்த நடனம் என்பதன் உண்மை பொருள் அதுவே!

ஆனந்தம் ஆனந்தம் என்ப அறிவிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலார்
ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்
தானந்தம் அற்றிடம் ஆனந்த மாகுமே -35

அரனின் துடி	-	*தோற்றம் (ஆக்கி)*
அமைவுக்கை	-	*காத்தல் (அளித்து)*
அக்னி	-	*சங்காரம் (நீக்கி)*
ஊன்றிய திருவடி	-	*மறைப்பு (திரோதனம்)*
எடுத்த பொற்பாதம்	-	*அருள் (அருளி)*

ஐந்தொழில் புரிபவன் அம்பலத்தரசன். மெய்ம்மையாம் உழவு செய்து பக்தி விதையிடுக. நாணம் எனும் களையை வயிராக்கியத்தால் அறுக்க. செயல் அனல் என்ற சமாதிக்காவல் காக்க. சிவயோகம் தானே விளையும்.

முடிவுரை

1. திருமந்திரம்- சிறப்புப் பெயர் பெற்ற மந்திரமாலை

2. நந்தியின் மாணாக்கர் திருமூலர். பின்னர் மூலன் என்ற கோகுலம் மேய்ப்பவன் உடலில் கூடுவிட்டுப் பாய்ந்து யோகநிட்டையில் அமர்ந்து மூவாயிரம் பாடல் யாத்தார்.

3. யோகம், மருத்துவம், உளவியல், சமுதாயயியல், பக்தி எனப்பல கருத்துக்கள் அடங்கிய கருவூலம் இப் பத்தாம் திருமுறை

4. நந்தியுடன் தில்லைத் திருக்கூத்துத் தரிசனம் பெற்றார்.

5. ஒன்பதாம் தந்திரம் கூத்தின் சிறப்பை, அரிய பல தத்துவங்களை அனுபவ ரீதியாகப் புகல்வது.

6. ஒவ்வொரு ஆன்மாவும் தில்லையம்பலமே

7. மூச்சை நிறுத்தி, மூலாதாரத்து மூண்டெழுகனலை எழுப்பிப் புருவ மத்தியில் ஒளியைக் கொணரலாம்.

8. சிவனுடைய தோற்றமே பஞ்சாட்கரம்

9. சிவனுடைய தோற்றமே ஐந்தொழில்கள்

10. அருள் என்னும் சக்தி நம்மை ஆனந்தக் கூத்தினைத் தரிசிக்க வைக்கிறாள்.

11. பக்திப் பயிர் வளர்த்துச் சித்தி, முக்தி பெறுவது உயிர்களின் தலையாய நோக்கமாயிருத்தல் வேண்டும்.

ஆகிய மையக்கருத்துக்கள் இந்த ஒன்பதாம் தந்திரப் பாடல்களால் நமக்கு அறிவுறுத்தப் பெறும் உண்மைகள்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

94. ஆகாசப்பேறு, ஞானோதயம்

புலவர். பொன் தெய்வநாயகி ஜோதி
மங்கையக்கரசியார் ஆசிரமம், சென்னை.

திருவருள் கூட்டுவிக்க- பத்தாம் திருமுறையாகிய திருமந்திர தேனாமிர்தத்தில் திருமூலர் பெருமான் எண்ணிய மூவாயிரம் ஆண்டுகள் இருந்து, தவம் செய்ததும், அதனால் கிடைத்த தமிழ் மூவாயிரம் இம்மண்ணுலகத்திற்குக் கிடைத்த மாபெரும் ஞானக்கருவூலமாகும். உயிர் உய்யும் நெறியுடைய திருவாசகமும், திருமந்திரமும் இரண்டு பெரிய ஞானக்கருவிகளாக விளங்குகிறது.

திருமந்திரத்தால்தான் வள்ளல் பெருமானுக்கு திருநெறிய வழி பிறந்தது. இறைவன் திருவருள் கூட்டுவித்த நம்பியாண்டவர் நம்பிகளுக்கு சிவ தீட்சை அளித்தது திருமூலரின் திருமந்திரம் தாம். அத்தகைய திருமந்திரம் நம் ஊழ் நல்லூழாக இருக்குமானால் திருமந்திரத்தை படிக்கவோ, சிந்திக்கவோ உயிர்க்கு வழிகோலாக அமையும். மேற்படி திருமந்திரத்தில், ஒன்பது தந்திரங்கள் சிறப்புடன் அமைந்த ஆகமங்களின் சாரமாகும்.

திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரம் தனிப்பெரும் சிறப்புடையதாக விளங்கி நின்றது. திருவருள் வளத்தால் பழுத்த ஞானிகள் இதனை மகுடாகமம் என்பர். அதில் பல்வேறு தலைப்புகளுக்கிடையே ஆகாசப்பேறு. என்கிற அருள்வெளிப் பேற்றினை திருவருளால் சிந்திக்க இருக்கின்றோம். உள்ளத்துக்குள்ளே ஓம் ஓம் என்று ஓவாகக் களிக்க, அப்பொழுதே இறைவன் வெளிப்படுவான். அந்த இறைவன் அறிவொளியாக உள்ளத்துள் திகழ்கின்றான். அவன் உள்ளத்துள் திகழ்கின்ற காரணத்தால் நம்முடம்பு சிதாகாசமாக விளங்குகிறது.

சிற்றின்பத்திற்குக் கன்னியர் பயன்படுவது போல, பேரின்பத்திற்கு பயன்படுகின்றான். அண்ட ஒளி, பிண்ட ஒளி, அகண்ட ஒளி இம்மூன்றும் தெரியாதபடி சிவவொளியை உயிர் கலந்திருக்குமானால், உயிர் கற்பகோடி காலம் வாழும். அறிவுக்கு அறிவான அகண்ட ஒளி பிரியாவலத்தினால் பேரொளியும் மூன்றும் அறியாத அடங்கி விடின், இறைவன் அடிக்குள் பிரியாது இருக்கின்ற பெருநிலை பெறலாம்.

இறைவன் அறிவுப் பேரொளியாக விளங்குகின்றான். ஐந்தலை அரவணை மேலாகவுள்ளான் சிவபெருமான். அத்தகைய பெருமான் பேரொளியாகச் செஞ்சுடர் வண்ணனாகத் திகழ்கின்றான். அத்தகைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உயிர்க்கு உயிராய் உள்ளொளியாக

இருந்து திருவுள்ளத்தில் கோயிலாக விளங்குகின்றான். திருவருள் என்ற அம்மையும் உடனாக உலாவி குலாவி நெஞ்சத்துள்ளே குடிகொள்கிறாள். அத்தகைய பெருமையால் ஆருயிர் அறிவு பெருவெளியாகத் திகழ்கின்றது. அதனைத் தான் திருமூலர் பெருமான் குயிற் கொண்ட பேதை குலாவி யுலாவி என்றார்.

உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற் கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டேன் உள்ளம் வெளியது வாமே (2809)

உலக உணர்வுகள் கெட்டு, சுழுமுனையில் தொழிற்பட்டு மேலே ஏறும் உள்ளொளி பிராணசத்தியுடன் சேரும்போது, குயில் கொண்ட பேதை குலாவி, உலாவி - இனிமையுடைய அஞ்சொல் அம்மை ஒளி தர உள்ளதின் இருளும் வினையும் நீங்கி ஒளி ஆகும் என்பதே பொருளாகும். சிவத்தின் உள்ளே இருக்கும் வெளி ஜோதி ஸ்வரூபமாகும். அத்தகைய சோதி வொளியை பணிமின், அவனுடைய திருவடிப் பேரின்பமாகிய அமுதத்தைப் பருகலாம். அதைத்தான் மந்திரத்தில், ஜோதி வொளியை பணிமின் அமுதம் பருகலாம் என்பார்.

புறத்துள் காணப்படும் பூதவெளி 224 புவனங்களுக்கும் அதற்கு உட்பட்ட உலகங்களுக்கும் இடம் கொடுத்து நிற்கிறது. உயிர்களின் உள்ளே காணப்படும் அறிவு வெளி சிவபெருமானின் ஒளியாகும். அத்தகைய ஒளிதான் திருமேனி நிலவுலக வெளி செயலறவாகிய சமாதிக்கு இடமாகும். இத்தகைய பெருமைக்குரிய அருள் வெளி பேறு என்கின்ற ஆகாச பேற்றினை ஒன்பதாவது தந்திரத்தில் ஒன்பது பாடலால் அருளிச் செய்துள்ளார். ஆகாயம் உண்டு என்பது சைவ சித்தாந்தத்தின் கொள்கை. ஆகாயம் என்பது ஒன்று இல்லை என்பது உலகாயத்தின் கொள்கை.

திருவருள் ஆகாசப் பேறு என்ற தலைப்புக்குள், புறவொளியை அகஒளியை திறம்பட உரைத்த திருமூலர் தெளிவாக கருத்துக் குவியலோடு சிந்தை மயக்கத்தெளிவு செய்துள்ளார். தெளிந்து வழிபடு - என்பது அவர்தம் கொள்கை.

தெளிவில்லாத வழிமுறையை வகுத்துக் கொள்வது, உயிர்க்கு எஞ்ஞான்றும் ஆறுதல் தரா. உயிர் உண்மை நிலையையும் அடையாது. உடம்பு ஒளியுடம்பாக மாற, திருமந்திர ஆகாசபேறு வித்தாகவுள்ளது மற்றும் உயர்ந்துள்ள திருமந்திரத்தில் ஆகாசப் பேற்றினுக்கு அடுத்த அதிகாரம் ஞானோதயம் என்பதை வைத்துள்ளார்.

அறிவு ஒன்றுதான் இறைவனை அடைவதற்கு வழி வகுக்கும். இறைவன் திருமேனி வேறு. அறிவு திருமேனி வேறல்ல. அறிவு திருமேனி என்று உணர்ந்து உன் அருளை சரணாரவிந்தம் என்று அடைவனோ என்று அருணகிரிநாதர் கேட்டார். அறிவுக்கு அறிவு இறைசத்துவருவம் என்பார் பாம்பன் சுவாமிகள்.

அறிவு ஒன்று அற நின்று, அறிகிலார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே

இத்தகை ஆகாயப் பேற்றினை உயிர்கள் அனுபவித்து மகிழ வேண்டும்.

ஞானோதயம்

'கரியட்ட கையன் கபாலங் கையேந்தி' என்ற செய்யுளில் அவனை வழிபடுவது செம்மேனி அம்மான் என்றா, கரியன் என்றா? இல்லை. அவன் வல்லமையை யானை வடிவ அசுரனைக் கொன்று அத்தோலை போர்த்தவன், அத்துடனா? அவன் தலையைக் கிள்ளி கையில் ஏந்தியான், இளம்பிறையை திருமுடியில் சூடியவன், காண்பதற்கு அறியொணாதவன், எல்லாமாய் எங்குமாய் எப்போதும் இருப்பவன் என்றே வணங்கி மகிழ்கின்றோம்.

அவனை 'நீலகண்டன் ஓம் நமோ நீலகண்டாய'- என துதித்தால் இன்னல் உடனே நீங்கி விடும். அலைகடலில் நஞ்சு பொங்கும்போது வானவரின் துன்பம் போக்க அமுதாக நஞ்சை மிடற்றில் அடக்கியவன். செம்பொன் போன்ற நம்முயிர் செம்பொன்னாக மாற்றுவான். மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன் - என வீரக்கழலைப் போற்றுவோம்.

காகம் ஒன்றை நோக்கும் போதே பிறதையும் நோக்கும். அதுவே ஆனந்தமாக தோன்றும். நம் கனவு காண்பதும் அதுவாக மாறும். மனம் முதலிய பொறிக்கருவிகளோடும் கலந்து நனவின்கண் வரும் உணர்வாகும். நம்முயிர் பெறும் இன்பமும் உலகவின்பமாகும். மனசந்நிதியில்,

பாலொடுதேனும் பழத்துன் இரதமும்
வாலிய பேரமுதாகு மதுரமும்
போலும் துரியம் பொடிபட யுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே

இறையருளில் திளைக்கும் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். சிவபிரான் துரிய நிலைக்கண் இரண்டற கலக்கின்ற நிகழ்ச்சியைத்

தெளிவுப்படுத்துகின்றார். பாலோடு கலந்த தேன், பழத்தின் இனிய சுவை, அமுதின் தூய்மையான இன்சுவை- இத்தனையும் சேர்ந்து, உடல் புளகாங்கிதம் கொள்ளவும், கண்களில் நீரரும்பவும். மயிர்க்கால் தோறும் புல்லரிக்கவும் இனிமை சேரும். இதனை அனுபவித்துத் தான், உணர்வு நிலையில் தான் காணமுடியும்.

மெய்யுணர்வை விளங்கிக் கொள்ளவும், மெய்ப்பொருளைக் காணவும், அதனால் ஏற்படும் பயனையும் திருமந்திரத்தில் விளக்குகின்றார். திருவைந்தெழுத்தை நாளும் சிந்தித்து அதன் உணர்வில் ஒன்றி நின்றார்க்கு திருவருள் ஒளியைக் காணவும், திருவடியெனும் பேரின்ப சத்தியும் தானே வந்து கூடும். விளக்குடையான் கழல் மேலறுமாமே - என விளக்கினை பிறந்து விளக்கினை போற்றி விளக்கு - என நான்கு வரிகளில் வேறு வேறு பொருள்களில் தெளிவுப்படுத்துகின்றார்.

ஓமெனும் ஓரெழுத்துள்நின்ற ஓசைபோல்,
காணவல்லார்க்கு அவன் கண்ணின் மணியொக்கும்,
உய்யவல் லாரறி வுள்ளறி வாமே,
ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி,
நானென்றுந் தானென் றிரண்டில்லையென்பது,
தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு,

எனவும், நமக்கு விளக்குகின்றார்.

நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப எனவும்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

என இறைவனை வழுத்துதற்குரிய மந்திரம், மக்களுக்கு ஆக்கம் தரும் மந்திரம். கேடுதரும் மந்திரம் என மூவகைப்படும். முதல் இரண்டும் நல்லோரை வாழ்விக்கவும், பின்னர் கூறப்பட்டது தீயர்களைத் திருத்தச் செய்யவும் ஏற்பட்டதாகும். பின்னர் இவை தவறான வழிகளிலும் பயன்பட்டன. திருமந்திரம் என்ற பெயரில் ஏற்பட்ட நூல் இது ஒன்றேயாகும்.

ஆசிரியர் மூலனின் உடம்பில் சேர்ந்து அருளியதாலும், தத்துவ நூல் என்பதாலும், யோக நிலையில் அரசின் கீழ் இருந்து பாடியதாலும்

சிறப்புடையதாகும். ஒழுக்க நெறி நின்றார்க்கு இறைவன் அருளும் நிலைகளும். பரம்பொருள் மீது பற்றுக் கொள்ளுமாறும் அருளுகின்றது.

திருமூலரைக் குருவாகக் கொண்டு, திருமந்திரத்தை வழி நூலாகக் கொண்டு சிவப்பரம்பொருளை தியானித்து உய்வடைந்து, நம் வீட்டிற்கும் நாட்டிற்கும் நலம் சேர்ப்போம்.

திருச்சிற்றம்பலம்

✼✼✼✼✼

95. மறைபொருள் கூற்று, மோன சமாதி

அருட்பா அவதானி **சி. செகந்நாதன்**
புதுக்கோட்டை

திருமந்திரத்துள் ஒன்பதாம் தந்திரத்துள் 17 ஆவது தலைப்பாக வந்துள்ளது மறைபொருள் கூற்று. இதனை பல பதிப்புக்களில் சூனிய சம்பாசனை என்றே வடமொழியில் குறிப்பிட்டுள்ளனர். இப்பகுதியில் மொத்தம் எழுபது பாடல்கள் உள்ளன. இப்பகுதி முழுவதும் பொருளை மறைத்துக் கூறுவதாகவே உள்ளது. ஆகவே இது மறைபொருள் கூற்று ஆயிற்று. இது போலவே திருவருட்பாவில் இரண்டாம் திருமுறையில் இங்கித மாலை என ஒரு பகுதி 165 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதி ஒரு வழியில் இரட்டுற மொழிதல் போல எனக் கூறினாலும் மிக ஆழ்ந்துத நுண்ணியம்மிக்க ஞானப் பொருளைக் கூறுகிறது. இவ்வாறு ஞானிகள் தங்கள் நெஞ்சங்களில் மறைத்துக் கூறும் போக்கு ஏன் நிகழுகின்றது எனச் சிந்தித்துப் பார்க்கில், ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இங்கு பேசப்படும் பொருள் இறையும், இறைச் செயல்களையும் பற்றியதே. இதனை ஞானிகள் தம் ஞானக் கண்களால் தெற்றென உணர்ந்தனர். அவர்கள் உணர்ந்ததைப் பார்த்ததை நமக்கு சொல்ல வருகையில் உலகத்துப் பொருட்களை, அதன் செய்களைகளை வைத்தே நமக்கு உணர்த்த முடியும் என்பதால் உலகில் உள்ள பொருட்களில் மூலமாக இறைவனையும் அவனது செயற்பாடுகளையும் உணர்த்துகின்றனர். ஆகவே இப்பகுதி நமக்கு மறைத்துக் கூறப் பெற்ற பொருள்களின் கூற்று என்பதாயிற்று. உண்மையில் அவர்கள் மறைத்துக் கூறவில்லை. இறைவனது செயல்களைக் கூற சொற்கள் இல்லை. ஆகவே உலகயியல் மூலமாக உணர்த்தியுள்ளனர். உதாரணமாக உயிர், உடல், இறைவன் இவைகள் எப்படி இயங்குகின்றன என்பதை எப்படிக் கூறிட முடியும்? ஆனால் கூறியே ஆக வேண்டும். ஏனெனில் ஞானிகள் நமக்கெல்லாம் ஞான வழிகாட்டிகள்.

நம்மவர்கள் விளையாடும் தாயக்கட்டப் பலகையை வைத்தே உடல், உயிர், இறைவனது செயல்களை விளக்குகிறார். தாயப் பலகை உடல். அப்பலகையுள் உள்ள 49 கட்டங்கள், 64 கட்டங்கள் நம் உடலுள் உள்ள 51 உறுப்புக்கள், 64 கலைகள். இக்கட்டத்துள் இயங்கும் தாயக் கருவிகள் நமது பொறி, புலன்கள். இவைகளை இயக்குவது பூதங்கள். அத் தாயக் கருவிகளைக் குலுக்கிப் போடும் போது விழும் எண்ணிக்கையை யாரே அறிவார்? அதுதான் இறைவனது விளையாட்டு. இதில் இன்னும் நுட்பம்

பொதிந்து உள்ளது. தாயக் கருவிகளுக்குப் பெயர் நாய். அது கட்டங்களுக்குள் இயங்கும் போது வெட்டு, குத்துக்கள் நிகழுகின்றன. அப்பொழுது அந்தக் கருவிகளுக்குப் பெயர் காய். கடைசியில் அக்காய்கள் பழுத்து விடுகின்றன. ஆட்டம் முடிவடைந்து விடுகின்றது.

நாய், காயாகிக் கனிவது தாயக் பலகை நமக்கு உணர்த்த வந்த கருத்து. இதில் தாயப் பலகை கூட ஒரு நுண்ணியத்தை உணர்த்துகிறது. அப்பலகை தனித்து இருக்கும் பொழுது கட்டை. அதனை விளையாட எடுக்கும் பொழுது தாயக் கட்டம் என்று பெயர் பெறுகிறது. தாயம் என்பது உரிமை என்றும், தந்தை வழிச் சுற்றத்தாரையும் குறிக்கும் சொல்லாகும். இந்த உடல் நமக்கு உரிமையாக்கப் படுவதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. இது இறந்து போவதற்கு அல்ல என்றும், இவ்வுடல் கருவி, கரணங்கள் இறைவனாகிய தந்தையின் வழியில் வந்தனவே அன்றி உலகியல் வழக்காம் பெண்மைக்கு அல்ல என்றும் பொருள் கொள்ள நிற்கிறது.

விளையாடும் பொழுது பலகை. அவ்விளையாட்டு இல்லாத பொழுது அது கட்டை. அதுபோல உடல் உயிரோடு கூடி இருக்கும்பொழுது உடல். உயிரற்றப் போது இது கட்டை.

இவ்வாறு இறை, உயிர், உடல் கூட்டுறவை தாயப் பலகையின் மூலம் உணர்த்துகிறார். தாயப் பலகையில் விளையாடும் விளையாட்டு தாயம் எனப்படுகிறது. உலகியல் வாழ்வும், இங்கு நமது செயல்களும், தாயக் காய்கள் ஒன்றை மற்றொன்று குத்துவதும், வெட்டுவதும் நடைபெற்று கடைசியில் நாய் காயாகிக் கனிந்து பழுக்கின்றது. இது இவ்வுடல் நாய் போல் ஓடித்திரிந்து காய் போல் முற்றாது காற்றில் ஆடி பக்குவம் வந்த காலத்தே பழுத்து மணம் பரப்பி சுவையேற்றி வித்தாகின்றது. இக்கருத்துக்களை மறைபொருள் கூற்று பகுதியின் முதல் பாடலில் குறித்துள்ளார் திருமூலர். இப்பாடல் வருமாறு.

காயம் பலகை கவறைந்து கண்மூன்றா
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே.

இவ்வாறு உலகியலைக் கொண்டு இறை, அருளியலை உணர்த்துவதே மறைபொருள் கூற்றாகும்.

இதனுள் உள்ள அனைத்து பாடல்களுக்கும் பொருள் எழுதினால் ஒரு தனிப் புத்தகமாகவே ஆகிவிடும். ஆகவே சில பாடல்களுக்கு மட்டுமே பொருள் கூற விழைகின்றேன்.

அடுத்து ஒரு பாடல்!

வாழையும் சூரையும் வந்திடம் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையைச் சூரையும் வன்துண்டஞ் செய்திட்டு
வாழையிடங் கொண்டு வாழ்கின்ற வாறே.

என்பது,

இதில் வாழைத் தோட்டத்துள் உள்ள வாழை மரங்கள். சித்திரை, வைகாசி மாதங்களில் ஏற்படும் சூரைக்காற்று. வாழைத்தோட்டத்துள் மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அத்தோட்டத்துள் சூரைக்காற்றாகிய சூறாவாளிக் காற்றும் உட்புகுந்தது. காற்றின் வேகம் பொறுக்காத வாழைகள் ஒடிந்தன. ஆனால் மடிந்து போய் விடவில்லை. அந்த வாழைத் தோடத்துள் நுழைந்த சூரைக்காற்று 1மணி அல்லது; அரைமணி, பதினைந்து நிமிடங்களிலோ உடனே அவைகள் மடிந்து ஒழிந்து போயின. வாழையை விட சூரைக்காற்று வலிமை வாய்ந்தது. பல ஆலமரங்கள், வேம்பு, அத்தி மரங்கள், அரச மரங்களையோ வேரோடு சாய்க்கும் ஆற்றல் அதற்குண்டு. ஆனால் வாழைமரமோ மிக எளிதான கடினமற்ற மரம். இந்த வாழை மரத்தை அந்தச் சூறாவளி துண்டஞ் செய்ய, அதாவது ஒடித்துப் போட முடிந்ததே தவிர வேரோடு சாய்க்க முடியவில்லை.

இதுபோல் இவ்வுடம்பாகிய வாழையை நோய், ஆபத்து போன்ற பல சூறாவளிகள் தாக்கினாலும் இந்த உடலை மட்டுமே ஒடித்து மடித்து மடிக்க முடியுமே தவிர ஒன்றும் செய்ய முடியாது. இங்கே ஆன்மா என்பது வாழைக்கிழங்கு. அதலிருந்து மறுபடியும் வாழைக்கன்று துளிர் விடுவதைப் போல மறுபடியும் இந்த ஆன்மா உடலெடுக்கும் என்பது ஒப்பிடப்படுகிறது.

ஆன்ம ஞானிகள் வாழைக் கிழங்குக்கு ஒப்பானவர்கள். அவர்களது உடம்பு அழிவற்று நிற்கும். மெய்ஞானம் பெறாத நம்மவர் உடம்பே அழிவது.

அந்தக் கருத்தை வலியுறுத்தியே வள்ளலார் தன்னை, வாழையடி வாழையென வந்தத்திருக்கூட்ட மரபினில் யானொருவன் அன்றோ! என்று கூறுகின்றார். அழிவுறாதாததும் , காய்ந்து செத்துப் போகதாததும் ஆகிய இயற்கை இயல்பை உடையது வாழைக்கிழங்கு. அந்த வாழைக்கிழங்கு போன்ற ஆன்மா இயல்பை உடையவர்கள் ஞானிகள். அவர்களுக்கு சாவே இல்லை. அப்படி சாகாது தன்னை, தன் உடலை நிலை நிறுத்திய ஞானியர்கள் வழிவழி மரபில் நானும் ஒருவன் என்கின்றார். இ௳த

விடுத்து வாழை மரத்தின் பக்கக்கட்டை என பொருள் கொள்ளுதல் மேற்படி அருட்பாவுக்கு ஆகாது.

இவ்வாறு உடலும், ஆன்மாவும் ஒன்றுபட்டு நிலைத்திருக்கும் நிலை மனித தேகத்திற்கு உண்டு என்றே கூற வந்த திருமூலர், 'வாழையும் சூரையும் வந்திடங் கொண்டன' என்று நமக்கு விளக்குகின்றார்.

போதிரண் டாகிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகிப் மகிழ்ந்துட னே நிற்கும்
தாதிரண்ட டாகிய தண்ணம் பறைவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே.

என்பது மறைபொருள் கூற்றுள் ஒரு பாட்டு.

இதனுள், போது இரண்டானது இரவும், பகலும். பகற்பொழுது,இரவுப் பொழுது என்கின்றோம். இந்த இரவும் பகலுமே உலக உயிர்களுக்கு இன்பமுற அருளால் தரப்பட்டுள்ளதாகும். இறைவனின் ஒரு பாகத்தில் உமையவள் ஒன்றி பெண்ணாள் ஆகி ஆனால் உருவம் ஒன்றாகி நிற்கின்றது. இது நமது மனமும், அறிவும் போல. மன அறிவும், அறிவுக்கறிவும் வேறுவேறு. ஆனால் அறிவு என்ற சொல்லில் இரண்டும் ஒன்றாய் இருக்கின்றது. இதுபோல சத்தியும் சிவமும் ஒன்றாகி சிவமாகவே ஒன்றி விடுகின்றது. இதனைப் 'பெண்ணியல் மனமும் ஆணியல் அறிவும் அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ்சோதி' என்ற அருட்பாவுள் வரும் அகவல் அடியால் உணரலாம்.

ஆண் தாதுவாம் சுக்கிலமும், பெண் தாதுவாம் சுரோனிதமும் ஆக இரண்டும் ஒன்றாகியே இவ்வுடலால் ஒன்று தோன்றியது. ஆனால் இவ்வுடலில் உள்ள தாமரைக்குளத்தில் வாழும் அன்னங்கள் மட்டும் இரண்டாகி வெறித்துத் திரிகின்றன என்கிறார். அன்னம் இரண்டு என்பது நமது உயிர்ப்பாம் சூரிய, சந்திர கலைகள். இவைகள் ஒன்று கூடினால் அகச்சுழுமுனை வாய்த்துத் தாமரைக் குளம் போல உடல் குளிர்ந்து இறவாமை கிடைக்கும். (தாமரைக்குளத்துள் தாமரையின் விதை அழியாமல் கிடந்து கொண்டு இருக்கும்)

இவ்வாறு இரண்டை ஒன்றாக்கி உலகை வாழ்வித்த இறைவன் உயிர்களுக்கு உயிரை இரண்டாக்கி வைத்து அவைகளை வெறித்துத் திரிய வைப்பதுதான் யாது காரணம் பற்றியோ என்று திருமூலர் கேட்கின்றார். இறைவனது அருளால் அவ்விரு உயிர்ப்புக்களும் ஒன்றாக ஆயின் நாமும் சிவமாகவும், சத்தியாகவும் விளங்கும் ஆற்றலும், சூரிய சந்திர ஆற்றலும்,

தாதுக்களாம் நாத, விந்துகளின் ஆற்றலையும் பெறுவோம். இதில் இன்னும் நுணுக்கமான கூற்று உள்ளது. நாம் சிவமாகவே ஆவோம் என்பது எப்படி? நமது உயிர்ப்பு உள்ளேயும், வெளியேயும் சென்று வந்து கொண்டிருக்கின்றன. இது உள்ளேயும், வெளியேவும் சென்று வரும்பொழுது ஏற்படும் ஓசை ஹம்சம். இதுவே ஹம்சமந்திரம் எனப்படும். இந்த இருகலைகளாம் சூரிய, சந்திரக் கலைகளாம் அன்னங்கள் ஒன்று கூடினால் அது பரம ஹம்சம் ஆக ஆகிவிடுகின்றனவாம். இது சிவநிலை அல்லவா?

அடுத்து,

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடில் பன்றியு மாமே.

இதில் போவது எட்டு. புகுவது பதினெட்டு. ஒன்பது வாயில். நாகம் எட்டு. புரவி நாலு. இவைகளை பாகன் செலுத்தாவிடில், நாகமும் புரவியும் பன்றியாய் விடுமாம். எப்படி? இதுவே மறைபொருள்.

விளக்கம் பார்ப்போம். போகின்ற எட்டும் என்பது வசனம், கமணம், தானம், ஆனந்தம், விசர்க்கம்(கழித்தல்) தார ஏடணை, புத்திர ஏடணை, தன ஏடணை (ஏடணை-விருப்பு) ஆக எட்டு. இவைகள் நம்மை விட்டுப் போகின்றன. அடுத்து புகுகின்ற பதினெட்டு. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகப் புலன் ஐந்தும்(5), அன்னமயம், பிராணமயம், மானோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆக உடம்பு ஐந்தும் (5), காமம், கோபம், மோகம், உலோபம், மதம், மாச்சர்யம், இடும்பை, வெட்கம் ஆக பகைககள் எட்டு. மொத்தம் 18. இந்தப் பதினெட்டும் நம்முள் புகுந்திருப்பது. இந்தப் பதினெட்டும் முன்கூறிய எட்டும் கூடி சஞ்சாரம் பண்ணுகின்ற வாயில்கள் ஒன்பது. கண்-2, காது-2 , மூக்கு-2, எருவாய், கருவாய் 2, வாய் -1 ஆக ஒன்பது வாயில்கள். இவைகளோடு சூர்யகலை, சந்திரகலை என்ற உயிர்பபு 2 -ம் சேர்ந்து சஞ்சாரம் செய்கின்றன. நாகம் என்பது யானை. புரவி என்பது குதிரை. வாசியாகிய குதிரையையும் அதனைப் பேதப்படுத்தும் யானையாகிய ஐம்புலன்களையும் கூறி, இவற்றை நடத்திச் செல்லும் பாகனும் சுழுமுனையில் உள்ளது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். அப்பாகனுடைய கட்டுப்பாட்டு அமையாமல் மேற்கூறிய எட்டும், பதினெட்டும் போன்று யானையும், குதிரையும் திரிந்தால், திரிய ஆரம்பித்தால், அவை மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை சேற்றில்

அழுந்தும் பன்றியாக ஆகிவிடுமாம். ஆக வாசியாகிய உயிர்ப்பு சுழுமுனையாகிய ஒருமைக் கதிக்குள் அடங்காவிட்டால் அவ்வுடல் மலத்துள் மூழ்கி, நாறி அழிந்துவிடும் என்பத மறைப்புக்கு உரிய பொருள் கூற்று ஆகும்.

அடுத்து ஒரு பாடல்,

மூங்கில் எழுந்ததோர் வேம்புண்டு வேம்பினிற்
சார்ந்து கிடந்த பனையிலோர் பாம்புண்டு
பாம்பைத் துரந்திட்டு வேம்புதின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே.

என்பது இதில் மூங்கிலின் மேலே வேப்பமரம். அவ்வேப்ப மரத்தில் ஒரு பனை மரம் சார்ந்திருக்க, அப்பனை மரமத்தில் ஒரு பாம்பு இருகிறதாம். அப்பாம்பைத் துரத்திவிட்டு வேம்பைத் தின்பார் இன்றி அவ்வேம்பு வெடித்து சிதறுகின்றதாம். இது இப்பாட்டின் மறைபொருள்.

ஒரு மரத்தின் மீது ஒரு மரம் முளைப்பது உலகில் அதிசமல்ல. ஆலமரம், அரசமரம், புல்லுருவிகள் ஆகியவை ஒருமரத்தின் மீது மூளைக்ககூடிய மரங்கள். இப்படி இல்லாது வேம்பின் மீது மூங்கிலும் அம்மூங்கில் மீது பனையும் முளைத்ததாகக் கூறுவதும் மறைபொருளே.

வேம்பு என்பது வேப்பமரம். அதற்கு அப்பெயர்வரக் காரணம் இலையுதிர் காலமாகிய வெங்கோடையில் மண்ணே வெதும்பும் வெப்பம் மிகுந்த காலம். அப்பொழுது காடும், மலையும், மரமும், செடியும், கொடியும் வெதும்பி வெதும்பி வாடும். அத் தருணத்தேதான் வேப்பமரம் துளிர்ந்து குளிர்ந்த இலைகளைப் பரப்பி பூத்துக் குலுங்கும். உலகமே வெம்பும் போது பூப்பது என்பதே வேம்பூ என்பதாயிற்று. அதன் பூவும் நெருப்புப் பொறி போன்று இருக்கும். இத்தன்மையாலும் வேம்பூ ஆயிற்று. வேம் பூவை உடைய மரம் நெருப்பு மயமாகத்தான் இருத்தல் வேண்டும். இந்த இயலை உடையது அகண்டமாகிய கீழ் மூலாதாரம். அம் மூலாதாரத்தினின்று மேற் சென்று எழும்பிக் காணும் தண்டமாம் முதுகுத் தண்டு. இங்கே மூங்கில் ஆகப் பெற்றது அத்தண்டமாம். முதுகுத் தண்டே பிரமதண்டம் என்றும் முள்ளந்தண்டம் என்றும் கூறப் பெறுகிறது. வேம்பூ மரத்தில் கால் கொண்டு எழுந்து நிற்கும். அதுவும் நெருப்பின் மயமாகத் தானே இருக்கும். அதனாலேயே உராய்வு கொண்டால் தீப்பற்றும் மூங்கில் என்பது உலகியல் உண்மை. மேலும் மூங்கில் தன்னுள் (உள்ளே குழாய் வடிவம்) அடைப்புண்டு இருக்கும். இது வாய் அடைப்பு என்பர். மனிதரிலும் வாய் பேச முடியாது இருப்பவரை மூங்கை என்ற வழக்கத்தை நினைந்து

பார்க்கவும். மூங்கிலுக்கு மூண்டு எரியும் தன்மை உண்டு. அது போலவே பிரம தண்டமாகிய முதுகுத்தண்டும் வாசியின் உராய்வால் தீசுவாலையை உண்டாக்கும் தன்மை பொருந்தியது. இம்முள்ளந்தண்டைச் சார்ந்து எழுந்து நிற்பது பனை என்கிறார். ஆம்! முள்ளந்தண்டின் உச்சிப்பகுதி நமது சிரசின் பிடரிப்பகுதி. இவற்றையே 'மூங்கில் எழுந்ததோர் வேம்புண்டு வேம்பின்றி சார்ந்து கிடந்த பனை' என்று சொல்கிறார்.

பனைமரம் சலசலப்பு ஓசையை உடையது. 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்ற பழமொழியால் உணரலாம். உடம்பில் சலசலப்பாம் நாதம் உண்டாகும் இடம் சிரசே ஆகும். ஆகவே அதனைப் பனை என்றார். அந்தச் சிரசுப் பகுதியில் மூக்காம் வளையில் இருந்து (புற்று) சீத்காரத்துடன் வெளிச்செல்லும் வாசியாம் பாம்பும் உண்டு. அந்த வெளிச் செல்லும் (அதாவது இழுத்த மூச்சைவிட அதிகமாக வெளிச்செல்லும்) உயிர்ப்பாம் பாம்பை துரத்திவிட்டு, நெருப்பைக்கக்கும் கீழ் மூலாதாரத்தில் வெந்து பாகம் செய்த உணவை (அமுது) உண்ணாது, வெந்து வெந்து வெடித்துச் சிதறுகின்றவர்கள் பலர் உள்ள உலகம் இது என்று உள்ளம் கவன்று திருமூலர் கூறுகின்றார். 'வேம்பு தின்பார் இன்றி வெடிக்கின்ற வாறே' உலகவர்கள் இறந்து மடிகின்றார்கள். அந்த வேம்புவாம் கீழ் மூலாதாரத்தே பக்குவம் செய்யப் பெற்ற மனிதன் மரணம் இன்றி நித்திய தேகம் பெற்று என்றும் நித்தியப் பேரின்பப் பெருவாழ்வு வாழ முடியும் என்று கூறி அவ்விடத்திற்கு நம்மை அழைக்கின்றார் திருமூலர்.

இவ்வாறே இப்பகுதியில் உள்ள எழுபது பாடல்களுக்கும் பொருள் உட்பொதித்து அருள் நிறைந்த திருமூலர் வைத்துள்ளார். அத்துணை பாடல்களுக்கும் பொருள் எழுதிட வேண்டும் என்றாலும், இப்பகுதியிலுள்ள இனிமை, எளிமை, ஆற்றல், அமைவு பற்றி சில கூறியுள்ளேன். திருமந்திரத்தை அறிந்து, தெளிந்து, உணர்ந்து மரணத்தை வென்று வாழ்வோமாக.

மோன சமாதி

மூன்றாம் தந்திரம் அட்டாங்க யோகத்துள் வந்த எட்டாவது நிலை சமாதி. ஏழாம் தந்திரத்துள் பூரணகுகைநெறிச்சமாதி, சமாதிக் கிரியை ஆகிய மூன்றில் அட்டாங்க யோகத்தில் வரும் சமாதி உயிர்ப்படங்கலைப் பேசுவது. சமாதிக் கிரியை சமாதி நிலையில் நின்றவர் அதன் முழுமையும் அடையக் காலமும், பக்குவமும் இல்லாத உடல் விட்டால் அவருக்குச் செய்யும் கிரியை நிலையை உணர்த்த வந்தது. பூரணகுகை நெறிச் சமாதி

உயிர்ப்படங்கி முற்றிலும் அடங்கி, தான் ஒருதந்தையின் வயிற்றிலும், தாயின் வயிற்றிலும் கருவுறாவாறு செய்து கொண்டு சமாதியுள் இருப்பது. இது சமாதி நிலையில் முற்றிய முழுமை அடைந்தோர் தன்மையை உணர்த்தியது.

மோன சமாதி என்பது உயிர்ப்படங்கலைச் செய்து பிறவா நெறி பெற்று சமாதியிற் சென்று உட்கார்ந்திருப்பவனின் தன்னிலை கூற வந்த பகுதியாகும். கல்லறையினுள் இருப்பவன் தான் தன்னின் உயிர்ப்பை உள் நிறுத்தியபின் அவனுள் இயற்கையாக நிகழும் ஓர் ஒப்பற்ற அருஞ்செயல், அருஞ்செவ்வியைப் பற்றிக் கூறப்பெறுவது.

உயிர்ப்படங்கி, ஒடுங்கி, ஒடுங்கி நிலை பெற்ற பின் அவனுள் நிகழும் நிலை, அவன் உணர்ந்தது. அவனுள் ஏற்படும் மாற்றம், அவனின் தன்மை பற்றிக் குறிப்பிடுவது. மேலும் மௌனம் என்பது வேறு. மோனம் என்பது வேறு. மௌனம் என்பது பேச்சுவரும். பேசமுடியும். ஆனால் வாய் மட்டும் திறக்காது இருத்தல். மோனம் என்பது பேச்சே எழாத நிலை என்கின்ற பொழுது எண்ணமே தோன்றாத ஒருமை நிலை ஆகும். இதனை,

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராணன் இருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறிவித்துப்
பிராணன் நடைபேறு பெற்றுண்டீர் நீரே -567

என்று நமது உயிர்ப்பு (பிராணன்) வலது மூக்கு, இடது மூக்கு இவை இரண்டிலும் மாறி மாறி விடுவதாலேயே பேச்சு வருகின்றது என்றும்., பசி தோன்றுகின்றதென்றும் கூறுவார். பிராணன் மடைமாறாது இருத்தலே மோனம் ஆகும். மேலும்,

மோனங்கை வந்தார்க்கு முத்தியும் கைகூடும்
மோனங்கை வந்தார்க்குச் சித்தியும் முன்நிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே -1611

என்று மோனங்கை வரப்பெறின் முத்தி கைகூடும், சித்தி வந்து முன்நிற்கும். மோனம் வந்தால் உண்மையாம் ஊமைத்தன்மை முற்றும். (எண்ணமே தோன்றாநிலை) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பிரம்மா, திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐவர் செய்யும் ஐந்தொழிலும் தன் முன் வந்து தானே நிற்கும். அதன் உண்மைகள் முற்றும் நமக்குள் தோன்றும் என்று மோன நிலை வாய்க்கப் பெற்றவரின் ஆற்றலை ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற பகுதியில் கூறுவார்.

மேலும், பேசாத தன்மையே மௌனம் என்றால் அவனிடத்து பேச்சு மட்டும் வரவில்லையே தவிர அவனுள் எண்ணங்கள் தோன்றுகின்றன. இது ஒரு ஊமையினிடத்து தோன்றும் செயல். ஆகையால் வெறும் மௌனியை, ஊமையன் என்றே கூறி விடலாம் அல்லவா? என்று திருமந்திரம் கூறி நிற்கும்.

வாக்கும் மனமும் இரண்டு மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாஞ் சுத்தரே
ஆக்குமச் சுத்தத்தை யாரறி வார்களே -1896

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணம் நான்கனுள், மனம் நினைப்பது, புத்தி விசாரிப்பது, சித்தம் நிச்சயிப்பது, அகங்காரம் செயலாக்குவது. இதில் சித்தமே முடிவெடுக்க நம்முள் கருவாகி நிற்பது. மோன சமாதி என்பது சித்தமே மோனமாகி விடுவது. முடிவெடுக்கும் சித்தமே செயலற நிற்கும் தன்மை. வினை என்பது நமது செயல். செயல் என்பது நமது சித்தம் எடுத்த முடிவு. சித்தமே முடிவெடுக்கும் நிலை இல்லாது போய்விட்டால் நம்மை வினை பற்றாது. நாம் வினையை நீக்கி விடுவோம். ஆகவே சித்தம் மோன நிலை பெற வேண்டும் என்பதும், சித்தம் மோனநிலை பெற்று விட்டால் நமக்குள் உள்ள திருச்சிற்றம்பலத்துள் உள்ள ஒரு மறைப்பொருள் (உண்மைப்பொருள்) தெரியும். அதனுள் நாம் சேர்ந்திருக்கும் தன்மையும் கைவரப் பெறும் என்பதை,

நின்றார் இருந்தார் கிடந்தார் எனவில்லை
சென்றார்தம் சித்த மோன சமாதியாம்
மன்றேயும் அங்கே மறைப்பொருள் ஒன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே -2936

அடுத்து இந்த மோன சமாதியை நந்தியம் பெருமானே நமக்கு வழங்கிட முடியும். மற்றும் நந்தி தந்தாலே அன்றி நம்மால் பெறப்பட முடியாது. இதனை விட்டுப் பெற்றுவிடலாம் என்று முயற்சிப்பது வீண். பயனற்றது என்பார். இதனை ஒரு அருமையான உவமை மூலம் வெளிப்படுத்துவார். ஆட்டின் வாய்க்குக் கீழே கழுத்தில் மடி போன்ற இரண்டு காம்புகள் ஒரு சில ஆட்டுக்குத் தொங்கும். அதனால் அவ்வாட்டிற்குப் பயனேதும் இல்லை. அதுபோலவே மோன சமாதியை நந்தி தரப் பெற்றுக் கொள்ளாது. முயற்சியால் பெறுதல் என்பது பயனற்றுப் பிடித்துக் தொங்குதலுக்குச் சமம் என்பார். மோன சமாதியர் காட்டலும், காட்டுதலின் குறியும், காட்டப்படும் காரணமும் கடந்தவர்கள். இந்த நிலை ஏட்டில் எழுதி வைத்துப் பயன்படாது. நந்தியெம் பெருமான் குருவாகி வந்து கூட்ட வேண்டும் என்பதை,

காட்டும் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந்த ற்றே - 2937

மோன சமாதியர்க்கு உயிர் உண்டு. ஆனால் அதன் இயக்கம் இல்லை. மோன சமாதியர்க்கு உணர்வுண்டு. விருப்பு, வெறுப்பு என்ற இருள் இல்லை. மோன சமாதியர்க்கு பொறிகளிற் பற்று இல்லை. ஆனால் அவர்கள் தன்னிலை மாறி உலகமெலாம் காணவும், உண்மையைப் பேசவும், எங்கிருக்கும் ஒசையைக் கேட்கவும் முடியும். இப்படி உலகியல் உணர்வு மாறி உண்மையியல் உணர்வு தோன்றும் இடமே மோனம். அதனைக் கூற முடியாது. கூற வார்த்தைகளே இல்லை. இருந்து கூறினும் நா எழாது.

முகத்துக் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லெனச் சொல்லுமா றெங்ஙனே -2944

என்று சிற்றின்பத்தையே வார்த்தைகளால் கூற இயலாத பொழுது பேரின்ப நிலையை எப்படிக் கூற இயலும்?

இவ்வாறு உண்மை இயல் உணர்வாலேயே அனைத்தின் உண்மை நிலையையும் அறிய முடியும். ஓதாதே அனைத்தையும் உணரலாம். தெரியாது என்றதாலும் மறைப்பு நம் முன் அறவே ஒழிந்து போகும். உலகில் உள்ள எல்லாச் சார்புகளையும் உணர முடியும்.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தராச் சார் தரும்

என்பது வள்ளுவம். இதனைத் திருமூலர்,

உணர் வுடை யார்கட் குலகமும் தோன்றும்
உணர் வுடை யார்கட் குறுதுய ரில்லை

என்று கூறுவார். அவர்கள் தூங்காமல் தூங்குவார்கள். 'உறக்கமில் போகற்றவில் இருந்தானே என்பர். அவர்கள் உடம்பு எவ்வுருவையும் எடுக்கும். அவர்கள் உடம்பில் ஊன், சதை, குருதி இருக்காது. ஆயுட் குறைவு நீங்கி ஆயுட் பெருக்க முடையவர்கள் ஆவார்கள். அவர்கட்கு நன்றும் தீதும் இல்லை. அவர்கள் தேவர்கட்கும் தேவராவார்கள். உலகில்

அவரை எதிர்ப்பார்கள் யாரும் இலர். அவர்கள் ஐந்து பூதங்களையும் ஏவல் கொள்வர். அவர் இருக்கும் இடத்தே அனைத்தையும் பெறும் திறன் உடையவர்.

உருவிலி யூனிலி யூனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குத் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே

நம் மனமே மேலே கண்ட ஆற்றல்களையும் பெறும் என்பது குறிப்பு. மனம் தன்னிலையின் மாறினால் இவ்வளவு ஆற்றல்களும் நமக்கு வந்து சேரும். இப்பொழுது நமது மனத்தின் கீழ்மை சொல்லுந்தரத்தன்றோ?

இந்த உணர்வாம் ஒருமை நந்தியைத் தன் உடம்பகத்தே கண்டறிவாரில்லை. இந்த ஒருமை உணர்வையே எட்டுத்திசைகளில் உள்ளோரும் இறைவன் என்று கூறத் தகுந்தது என்பதை உண்மை உணர்வான் உணர்ந்து ஏத்துவர் இந்த ஒருமை உணர்வாம் நந்தி எல்லா அண்டங்களில் உள்ள உயிர்களின் ஆனந்தங்களை விடவும் அளவற்ற ஆனந்தம் உடையது. இப்படிப்பட்ட நந்தியை அடியவர்கள் அடைந்த விதம் வழி துறையை அறியவொண்ணாததாக உள்ளது.

கண்டறி வாரில்லை காயத்தின் நந்தியை
எண்டிசை யோரும் இறைவனென் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே!

அந்த மோனமாகிய ஒருமை உணர்வாம் நந்தி தண்ணீரில் உப்புக் கலந்தால் எவ்வாறு வேறுபடாதிருக்கிறதோ அவ்வாறு இந்த உடலகத்தே ஒன்றி உடலாக இல்லாது உணர்வாகவே உடல் ஆகும் நிலையைப் பெறும். அவ்வுணர்வே பரம், பரை, பராபரம், பரம்பரம், தற்பரம் ஆகிய உயர்ந்த நிலைகளையும் கடந்து நிற்கும். அப்பொழுது அவ்வுணர்வே சொற்களையும், பதங்களையும் ஆளும். அதுவரை உலகவர் கூறும் சொல்லும் பதமும் உண்மையற்றதாய், நிலையற்றதாய், ஒன்றிருக்க ஒன்றை உளறுவதாய்த்தான் இருக்குமே அன்றி, ஒருமை உணர்வை அடைந்தவர்கள் சொற்கள் போல், பதங்கள் போல் நின்று நிலைத்து, உண்மை பகர்ந்து, திறம் தெரிந்த சொற்களாக பதமாக இருக்காது. இந்தத் சொற்பத உண்மையை வள்ளலார் அருட்பெருஞ்சோதி ஆண்டவரே உரைக்கின்றார்.

தோன்றியவே தாகமத்தைச் சாலமென உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்யெனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக் கண்டறிவாய் -அருட்பா

இக்கருத்தையே வள்ளுவமும் உரைத்துக் கூறும்

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூங் கில்லை குறள் ,644

ஆக ஒருமை உணர்வு வந்து கூறும் சொல்லும் பதமுமே நிலைத்ததும், உண்மையானதும் ஆகும். இந்நிலையில் அவர்களுக்குச் செயலில்லை அல்லவா? ஆகவே அவர்கள் உரைப்பது அனைத்தும் உள்நின்று இறைவன் உரைத்ததாகும், உணர்த்துவதாகவும் உணர்வர் கூறுவர். இதனை,

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நான்- ஏனுரைப்பேன்
நான்ஆர் எனக்கெனவோர் ஞானஉணர் வேதுசிவம்
ஊன்நாடி நில்லா வழி -அருட்பா, 5504

(ஊன் நாடியே இருப்பது உணர்வை) இவ்வளவு அருமையான ஒருமை உணர்வை உணர்த்தும் மந்திரம்

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பும் பராபரம் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பதம் ஆளக் கலந்தமை
எப்படி அப்படி என்னும் அவ் வாறே.

இந்த ஒருமை உணர்வாம் நந்தியம் பெருமான் தன்னை பொன் வடிவமாக்கித் தன் சிரமாம் திருச்சிற்றம்பலமாம் பொற்சபையில் வைத்தான். அந்த ஒருமை உணர்வாம் நந்தியை காஞ்சிரத்தின்பழம் என்பர். அது காண்பதற்கு அழகு. அதனைத் தின்றாரே அதன் சுவையை அறிய முடியும். ஒரு பெண் மடவியல் ஆனபின் அவளை அடைந்தவனே அப்பெண்ணின் கலவி இன்பத்தை அனுபவிக்க, உணர முடியும். அதுபோல் மனிதம் பக்குவப்பட்ட நிலையில் நம்முள் உள்ள ஒருமை உணர்வு நம்மைக்கூடி அது அனுபவிக்கும் கலப்பு இன்பத்தை அப்பொழுதான் நாம் உணர முடியும் என்று மிகமிக நுட்பமாக அந்த மோனத்தைக் கூறும் பாடல் அருமையிலும் அருமை.

கண்டார்க் கழகிது காஞ்சிரத் தின்பழம்
தின்றார்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானாற்
கொண்டான் அறிவன் குணம்பல தானே -2946

காஞ்சனம் -பொன். காஞ்சனம் நிரம்பிற் சிரம். காஞ்சிரம். தன்தலையில் உள்ளது ஒருமை உணர்வாம் நந்தி. இக்கருத்தை அதாவது பழமாக உவமித்தலை இரண்டு இடங்களில் சுட்டியுள்ளமை அறியத்தக்கது.

ஒன்றுகண்டெணி........ என்று தொடங்கும் பாடல்

கழக வெளியீட்டில் உள்ளது. காசித்திருமட வெளியீட்டில் காணப்பெறவில்லை. திருமட வெளியீட்டில்,

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவதும்
நன்றுகண் டீர்நல் நமச்சிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே - 2962

இவ்விரண்டு பாடல்களிலும் வரும் பழம் (காஞ்சிரம் பழமே) என்பது 2946-ம் பாடலால் உணரமுடிகிறது. இதனைப் பொன்னைச் செய்யும் பழம் என்பதே சரி. பொன்னாற் செய்த பழம் எனக் கூறுதல் கூடாது.

இந்த ஒருமை கைவரப்பெறின் சந்தியாவந்தனம், சமாதிகள், ஆச்சார சங்கற்ப விகற்பங்கள், சடங்குகள் அனைத்தும் தாமே ஒழிந்து போகும். இந்த ஒருமை உணர்வு நம்முள் நடு உட்தெருவில் இருக்கிறது. நடு-சுழுமுனை. சுழுமுனையின் உள்ளே அகமாக உள்ளது. (தெரு-வீதி. வீதி- நேர் ஓடல், ஒளி) அது ஒலியின் முடிவிடமாக (நாதாந்த உச்சி) இருக்கிறது. அதனை நான் அறிவுக்கறிவால் அறிந்து கொண்டேன் என்பார்.

நந்தி இருந்தான் நடுவத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே யொழிந்தன
உந்தியி னுள்ளே உதித்தெழும் ஜோதியைப்
புந்தியா னாலே புணர்ந்துகொண் டேனே -2947

(இப்பாடலில் நந்தி யார்? என்பதும், அந்த நந்தி எம்பெருமான் நம்முள் எவ்விடத்தே, எப்படி உள்ளான் என்பதும், அவனை நாம் எப்படி அடைந்து கலந்து கொண்டு நாமும் நந்தியாவதும் கூறப்பெற்ற ஓர் உன்னதமான ஞான உண்மை வெளிப்பாடு)

இந்த ஒருமை உணர்வை அடைந்தவர்களை சமாதி செய்ய வேண்டாம் என்பதும், அவர்கள் சமாதியில் அமர மாட்டார்கள் என்பதும் *சந்தி சமாதிகள் தாமே ஒழிந்தன* என்ற வரியால் அறியலாம்.

இவ்வாறு சூரியகலை, சந்திரகலைகளாகிய உயிர்ப்பு இரண்டும் அகச்சுழுமுனையில் ஒன்றியதால் நான் ஒருமை உணர்வு பெற்றேன். அவ்வுணர்வால் பராபரம் இவைகளே உணர்ந்தேன். என் உள்ளே சிவமாம் ஒருமைக் கதியை உணர்ந்தேன். இந்த உணர்வால் சிவ உணர்வினை உணர்ந்தேன். இவ்வுணர்வால் இறவாமையைப் பெற்றேன். பெற்றதோடு அமையாது வாழ்நாள் உயர்ந்து கொண்டே (வளர்ந்து) செல்லக் கண்டேன். ஆகவே பல ஊழிகளையும் நான் இறவாது இருந்து கண்டு கொண்டுள்ளேன் என மோன சமாதிப் பகுதியை முடிக்கின்றார் திருமூலர்.

ஒன்றி நின் றுள்ளே உணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே -2953

மோன சமாதி என்பது நாம் கற்பத்துள் நாமாக உருவெடுப்பதற்கு உரிய ஆன்ம உயிர்ப்பு. அதனை நாம் உலகியலில் வாழும் பொழுது பெற்று அதனுள் உறைந்து விடுவதே மோன சமாதிப் பகுதியில் திருமூலர் கூறுவது. அந்த ஆன்ம உயிர்ப்பாம் உணர்வே சிவம், சிவகதி, நந்தி, அருட்பெருஞ்சோதி, திருச்சிற்றம்பலம், திருவாவடுதுறை, திருப்பெருந்துறை, சின்மயம், சின்மயானந்தம், மோனகுரு, மௌனகுரு என்றும் இன்னும் பற்பல விதமாக அழைப்பதெல்லாம் ஆகும். இந்த உண்மை உணர்வே திருமூலர் தன் வரலாறு கூறும் பகுதியில் வரும்.

யான்பெற்ற இன்பம் பெறுகயிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே -85

இப்பாடலில் ஊன்பற்றி நின்ற உணர்வு உற்ற மந்திரம் என்பது நாம் மேற்கண்ட ஒருமை உணர்வாம் நந்தியே ஆகும். இதுவே ஆன்ம உணர்வு.

இவ்வுணர்வாம் ஒருமையை அடைவதே மனிதப் பிறவியின் நீண்ட நெடிய பிறப்பிறப்புப் பயணத்தின் முடிவிடம். இவ்விடமாம் உணர்வே பிறப்பிறப்பை நீக்கும் ஆற்றல் உடையது. இவ்வுணர்வே உலகின் ஊடு பாயும் ஐந்தொழிலுக்கும் ஊற்று. இதுவே சிவம். மனிதன் தெய்வம் ஆகி எல்லா உயிர்க்கும் இன்பம் தரத்தக்க நிலையை அடைவதே திருமூலர் நம்மிடம் எதிர்பார்க்கும் இனிய எதிர்பார்ப்பு. ஆகையால்தான் நான் இவ்வாறு நந்தியைப் புணர்ந்து நந்தியானேன். நீவிரும் என் வழி வாருங்கள் என அழைக்கின்ற பகுதியே மோன சமாதி ஆகும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

௯6. வரையுரை மாட்சி

அருட்கவியரசு. **சி. செகந்நாதன்**
புதுக்கோட்டை

ஒன்பதாம் தந்திரம் 23 தலைப்புக்களை உடையது. இதில் 19 ஆவது தலைப்பாக உள்ளது வரையுரை மாட்சி. இப்பகுதி மூன்றே பாடல்களை உடையது. வரையுரை என்பது உரை வரை என மாற்றம் செய்யப் பெற்று இதுவரை திருமந்திரத்துள் கூறப்பெற்ற மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழின் வரையறையாக அம்மூவாயிரம் பாடல்களின் மாட்சித் தொகுப்பாக (வரையுரை மாட்சி) இத்தலைப்பும் பாடலும் தரப்பெற்றுள்ளன.

வரைவு என்பதும், வரை என்பதும் ஒன்றே. வரை-எல்லை, மனம், அளவு, சித்திரம் என்று பொருள் தரும். ஒருவன் தன் எல்லையாகிய ஆயுளையும் கடந்து விட்டால் அவனுக்கு அப்புறம் எல்லை என்பதே கிடையாது. மூச்சின் 8:12:16 என்ற அளவைக் கடந்து 2 அங்குலமான பின் அவனுள் அளவு என்பதே கிடையாது. அளவு என்பது ஆயுள், ஆற்றல், அறிவு, நன்மை, நுண்மை, செயல் மற்றும் உள அளவுகள். நமது உயிர்ப்பு 2 அங்குலமானால் இறைவனாகவே நாம் ஆகிவிடலாம் என்பதைக் கூறவே,

தான்வரை வற்றபின் யாரை வரைவது
தானவ னானபின் யாரை நினைவது
காமனை வென்றகண் ணாரை யுகப்பது
தூமொழி வாசகஞ் சொல்லுமின் நீரே -2954

என்று கூறும் திருமந்திரம்.

தானே தான் இல்லாதபோது போன பின் தனக்கு யார் தந்தை? யார்தாய்? யார் மனைவி? யார் மகன்? ஏது சொத்து, ஏது சுகம்? ஏது ஊர்? ஏது நாடு? நான் என்பது நம்முள் இருப்பதனாலேயே மேலே கண்ட எல்லாம் நம்மை வரைவதும், நாம் அதனை வரைவதும் ஆகின்றது. தானே இல்லாத பொழுது நான் ஏது? இதனை அருட்பா அழகாக விரித்துரைக்கும்.

வாக்கொழிந்து மனமொழிந்து மதியொழிந்து மதியின்
வாதனையும் ஒழிந்தறிவாய் மயங்கிநின்ற விடத்தும்
போக்கொழிந்தும் வரவொழிந்தும் பூரணமாய் அதுவும்
போனபொழு துள்ளபடி புகல்வதெப் படியோ அருட்பா-5475

மேலும்,

ஒளியாகி உள்ஒளியாய் உள்ளொளிக்கும் ஒளியாய்
ஒளிஒளியின் ஒளியாய் அவ் வொளிக்குளுமோர் ஒளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய் பெருவளிக்கோர் வெளியாய்
அளியாகி அதுவாகி அதுவுமல்லா தாகி
அப்பாலாய் அப்பாலும் அல்லதுவாய் நிறைவாய்
தளியாகி எல்லாமாய் விளங்குகின்ற ஞான
சபைத்தலைவா நின்னியலைச் சாற்று வதெவ் வணமே - அருட்பா.

தான் அவனாகிய இறைமையைப் பெற்ற பின் யாரை நினைந்து கொள்ள வரும்? இறைவனை எல்லா உயிர்களும் நினைவிற் கொள்ள வேண்டும். ஏனெனில் உய்தி பெறற்கு இறைவன் யாரை நினைவது? எல்லாமும் அவனே! அவனை விட்ட எதுவும் அகிலத்துள் மட்டுமல்ல அண்ட சராசரங்களிலும் இல்லை. அத்தன்மையை ஒரு மனிதன் பெறும்பொழுது (திருமூலர் பெற்றார்) அவன் உலகில் வெளியில், அண்டத்தில், சராசரத்தில் விண்ணில், வானில், மண்ணில் யாரை நினைப்பது?

தான் அவனானது ஏதென்னில் தான் ஒருமை உணர்வாவதுவே ஆகும். இதனை,

உணர்வுடையார்க்கு உலகமும் தோன்றும்
உணர்வுடையார்க்கு உறுதுய ரில்லை
உணர்வுடையார்கள் உணர்ந்த அக்காலம்
உணர்வுடையார்கள் உணர்ந்து கண்டாரே -2938

ஊன் பற்றி ஒருமை உணர்வே வான்பற்றி நின்ற மறைபொருள். அதுவே நான்பெற்ற இன்பம். அந்த உணர்வைப் பற்றிக் கொள்ளக் கொள்ள நான் பெற்ற அந்த உணர்வு உங்களுக்குள்ளும் தலைப்படும் என்பதும் உணரத்தக்கது.

காமம் என்பது ஆசை. ஆசையை உண்டாக்குவதும் கண். அதனை அழிப்பதும் கண்ணே. கண்ணுள் ஆசை என்ற உணர்வு அற்றுப்போன பின் யாரை, எதுவை உவந்து களிப்பது அக்கண்? எதுவும் இல்லையல்லவா? இதனை காமனை வென்ற கண் யாரை யுகப்பது என்று கூறுவதால் அறியலாம். காமனை நெற்றிக்கண்ணால் இறைவன் அழித்தான் என்பது வழக்கு. காமனை வெல்லுங் கண்ணை நாமும் பெறலாம்.

இம்மூன்று கேள்விகளுக்கும் தூயமொழியால் வாசகம் பதிலை நீவிர் சொல்லுங்கள் என்கிறார். இம்மூன்றுக்கும் பதில் ஒன்றும் இல்லை என்பதே. அந்த ஒன்றும் இல்லாததே இறை. நந்தி, அருட்பெருஞ்சோதி- சிவம் எல்லாம். நாமும் ஒன்றாகிய ஒருகதியும் இல்லாதவாறு செய்து கொள்ள முடியும் என்பதே திருமந்திரம் கூறும் திறம்.

அடுத்தது, அந்த ஒருமை உணர்வாம் ஒருகதியை, கதியின் தன்மையை, ஆற்றலை உரைக்க முடியாது. உரைக்கு வரைபடாது. ஆனால் உலகில் உள்ள மதங்கள், மதத்தலைவர்கள், மதக்கூட்டங்கள் தங்கள் தங்கள் மதத்திற்கு, சமயத்திற்குரிய இறைவர்களை எம்மிறைவன், இவ்வண்ணமுடையவர், இவ்வாற்றல் உடையவன், இன்ன தன்மையன், இந்த உருவம் உடையவன் என்று உரு, குணம், தன்மை, வடிவு, வண்ணம், ஆற்றல் பற்றியெல்லாம் உரைத்து உரைத்து ஓய்ந்து போயினர். அந்த ஓர்மைக் கதியையே உலக மதங்கள் யாவும் தந்தெய்வம், எந்தெய்வம் என்று பெரு வழக்கிட்டு மதித்துப் போற்றி வணங்குகின்றனர்.

கரையில்லாத கடலின் கரையை காணமுடியுமா? அளவற்ற ஒன்றை அளவையுட் படுத்த ஒல்லுமோ? கணக்கற்ற ஒன்றுக்கு கணக்கு உரைக்க முடியுமா? அதுபோலவே நந்தியம் பெருமானாகிய ஒருமை உணர்வு கரையற்றது! எல்லையற்றது. அளவற்றது. கணக்கு வழக்கு கடந்தது.

அலைகள் அற்ற குளத்து நீர் மண்ணையும், மண்ணில் உள்ள பொருள்களையும் மறைத்து நின்றாலும் அதனால் மறைவுறாதுதெள்ளென நீரின் தெளிவு காட்டுவது போல, தத்துவங்கள் நம்முள் நமதிறையாம் ஒருமை உணர்வாம் நந்தியை மறைத்திருந்தாலும், அத்தத்துவங்கள் தெளிந்திருந்தார்க்கு உண்மை புலப்படும். அவர் தன்னுள் இறைவனைக் காண்பர். அவ்விறைவன் புரிசடையன். சடை என்பது ஒன்றாய் உடனாய் வேறாய் இருப்பதற்கு ஒப்பு. அவன் நம்முள் தெளிவு வரவர புரையற்று உண்மை ஒளியாகத் திகழ்வான் என்பது இப்பகுதியில் இரண்டாம் பாட்டின் திரண்டக் கருத்து.

உரையற்ற தொன்றை உரைசெயு மூமர்காள்
கரையற்ற தொன்றை கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தைத் தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

இப்பாடலால் இறைவனைப் பற்றிக் கூறும் எதனையும், எவரையும் உரை செய்யும் ஊமர் என்றே கூறுகின்றார். இதற்குப் பேசும் ஊமன் என்று பொருள் கொள்ளலாம். பேசாத ஒருவனையே ஊமன் என்போம். இங்கே

பேசும் ஊமர்கள் என்று உலகவரை அழைக்கின்றார். பேசும் ஊமன் என்ன செய்வான்? கை கால்களை ஆட்டி ஆட்டி வாயைத் திறந்து வீண் ஒலியை எழுப்பி நமக்குப் புலப்படுத்துவான். அந்த ஊமன் போலவே நாமும் இறைவனைப் பற்றிப் பிறரிடத்தில் கூறுதலும், நடத்தலும் எண்ணலுமாகும். என்னே உவமை நலம்?

இதிலிருந்து உரையற்ற அதனை வரையறுக்க, வரையறைப்படுத்த ஒன்றை மேன்மை யுடைய மாட்சியை விளக்குகின்றார். இந்தப் பாடலின் உண்மைக் கருத்தை ஓர்ந்த தாயுமானவர் ' திரையற்ற நீர்போல தெளிய எனத்தேர்ந்த உரைபற்றியுற்றாய் கொடுக்குநாள் எந்நாளோ?' என்று எந்நாட் கண்ணியில் பாடுகின்றார்.

மூன்றாவதாக, உலகவர்கள் தத்துவம் தத்துவம் என்று பலரும் பலவிதம் பொருள்களில் எடுத்தாளப் பெறும் தத்துவத்திற்கு ஒரு அருமையான விளக்கம் தருகின்றார். தன்னை ஆய்ந்து இருப்பதே தத்துவம் என்பது திருமூலர் கூறும் தத்துவ விளக்கம் ஆகும். தத்துவங்கள் 48 கோடியே 48 ஆயிரத்து ஐநூறு என்பது மந்திரம். இதனை,

நாலொரு கோடியே நாற்பத் தெண் ணுயிரம்
மேலுமோ ரைந்நூறு வேறா யடங்கிடும்.

இது 96 ஆகி 25 ஆக ஒலிக்கும். அந்த இருபத்து ஐந்தும் தன்னை ஆயும் தகுதிக் கானவையே அன்றி வேறில்லை.

ஆம், தான் யார்? தன்னுள் உயிர் எது? உயிருள் இருகூறு எது? நம்முள் உள்ள சூரிய, சந்திரக்கலைகளுக்கும் அண்டத்துள் உள்ள சூரிய சந்திரனுக்கும் உள்ள உறவு, இயக்கம் தொடர்பு யாது? நம்முள் நந்தி எது? ஏன் உடலை விட்டு உயிர் ஒடுங்குகிறது. உயிர் உடலெடுப்பது கற்பமாம் பையுள் மறைக்கப்படுகிறது. உயிர் உடலில் பிரிவது ஏன் வெளியில் நிகழ்கிறது. உயிர் உடல் இவை இரண்டும் நம்முள் எந்த இடத்தில் ஒன்றி நின்று நம்மை இயக்குகின்றது. இந்த உயிர் உடலிருந்து பிரியாது என்றும் இளமையாக சாவாமையைப் பெற முடியுமா? முடியுமெனில் எப்படி அது சாத்தியமாகும் நிலை எங்குள்ளது? அதனைக் கையாளுவது எங்ஙனம் என்று இவ்வாறு நம்முள் நாமே நம்மை ஆய்ந்து கொண்டிருப்பதே தத்துவம் என்ற உரைக்கும் வரையறை செய்வார் திருமூலர்.

உலகில் தோன்றிய அனைத்தும் அழியும். மனிதன் உட்பட என்பது உலகவர் அனைவரின் ஒத்த கருத்து. நூல்கள் பல இதனை வலியுறுத்துவன ஆகும். சாதுக்களும், சாமியார்களும், போலித்துறவியும் இதனையே

வலியுறுத்துவர். இவர்களின் இச்செயலைத் திருமூலர் பிதற்றல் என்கிறார். இறப்பு என்பதே பிதற்றல் அதாவது உளறல் என்கிறார். மனித உடம்பு மாய்ந்து போகாது வரையறை செய்ய முடியும் என்று உரை கூறுவது திருமந்திரம். இதனை,

ஓவுறாத் துயர்செயும் உடம்புதான் என்றும்
சாவுறா தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுறாச் சுத்தசன் மார்க்க நன்னெறி
மேவுறார் தங்களை விடுக நெஞ்சமே- அருட்பா-5401

பொத்தி மலப்பிணி புழுக்கு ரைம்பைதான்
சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்
நித்திய மாகியே நிகழும் என்பது
சத்தியம் சத்தியம் சகத்துள் ளீர்களே அருட்பா-5402

என்று திருவருட்பா சான்று பகர்ந்து நிற்கின்றது. அழியும் இயற்கை உடைய இவ்வுடல் அழிந்து போகாதவாறு செய்வதே ஞானம், அருள், இறைத்தன்மை. இந்த உடம்பை அழிந்து போகாதவாறு செய்து கொள்ளலாம் என்பதே அட்டாங்க யோகம், அட்டாங்க யோகப் பேறும் மற்றும் திருமந்திரம், திருவருட்பா, திருக்குறள், திருவாசகம் போன்றவற்றின் முழுமையும் உடல் அழியாதவாறு நிலை நிறுத்தி அதனுள் உயிரை நிலை நிற்கச் செய்வது. இதுவே ஞானத்தின் முழுமை. இதுவே திருமந்திரம். இதுவே சுத்த சன்மார்க்கம்.

இக்குறிக்கோளை விட்ட எந்த ஞானமும் அஞ்ஞானமே. எந்த தவமும் அவமாம் தவம். எந்தத்துறவும் அவத்துறவே. எந்தக் குறிக்கோளும் தற்குறிக்கோளே.

திருக்குறளிலும் *இல்வாழ்க்கை* அதிகாரம் முழுவதும் உயிராம் கணவனும் உடலாம் மனைவியும் சேர்ந்து இல்லாமல் உடலில் நிலைத்து வாழும் மரணமே அற்று வாழும் இல்வாழ்க்கையையே ஆழப் பொதிந்து வைத்துக் கூறப்படுகிறது.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய் பெறுவ தெவன்.

அறமாம் உடல் உயிர் நிலைப்பாம் வாழ்வில் (இறந்துபடாத மரணமற்ற பெருவாழ்வு) வாழ்ந்து விட்டால் புறத்தில் எதிலும் எங்கும் சென்று அடைதற்குரியது எதுவும் இல்லை என்பது திருக்குறள்.

இவ்வாறு இறைப்பற்று வாழ்ந்திட முடியும் என்று திருமூலர் போன்ற ஞானிகள் பறைசாற்றி உரைக்கும் போது, பெரும்பாலானவர்கள் இறந்து விடுகிறார்களே! காரணம் என்ன? இக்கேள்விக்கும் இதே பாடலில் காரணமும் கூறுகின்றார்.

நம்மை மாயை பிடித்துக் கொண்டு இறப்பில் ஆழ்த்துகிறது. மாயை பாசம். மாயை என்பது உண்மையை மறைக்கும் ஒரு திரை மட்டுமல்ல, பொய் எனக்காட்டும் திறனும் உள்ளது. அந்த மாயை நம்முள் எது? என்று வினவினால் நமது மனமே மாயை என்பார். இதனை *மனம் மாயை மாயையாம் மாயை மயக்க* என்று கூறும் பாடலில் மனமே மாயை என்கின்றார். மனத்தின் மயக்கமே மாயை. இம் மாயையினால் நாம் மயங்குகின்றோம். அந்த மனத்தில் உள்ள மயக்கமாம் மாயையை மாய்த்து விட்டால், உண்மையை உண்மையென அம்மனமே காட்டி நிற்கும். உண்மையை நமக்குக் காட்டுதலும் அந்த மனமே. மனதை விட்ட எதுவும் நம்முள் உண்மைப் பொருளைக் காட்டும் வல்லமை அற்றது. இதனையே மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை என்பார்.

இவ்வாறு நாம் ஏன் இறப்புக்கு உட்படுகிறோம் என்பதற்கும் வரையறையை உரையாகத் தரும் மாட்சி இன்புறத் தக்கது. மூன்றாவதாக வரும் இப்பாடலே இத்தனை கருத்துக்களையும் உள்ளடக்கி நிற்கிறது. பாடலைப் பார்ப்போமா?

மனமாயை மாயையிம் மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே -2956

வரையுரை மாட்சி என்ற இப்பகுதி மனிதனே எல்லாம் வல்ல பெருஞ்சித்திப் பெருவாழ்வுக்குரியவன். மனிதனே இறைவன் ஆகலாம். மனிதனே இறைவனைப் போல் பிறப்பு இறப்பு அற்று என்றும் எங்கும் நீக்கமற நின்று உலக உயிர்களுக்கு இன்பம் செய்யலாம் என்று கூறுவதோடு, இப்படிப்பட்ட இறைநிலையை அடையும் வாய்ப்பை நம்முள் மனமாம் மாயையே தடுத்து நிற்கிறது. அம்மனத்தின்கண் உள்ள மயக்கமாம் மாயை மாய்ந்து போனால் அந்த மனமே சுத்தமனமாகி நம்மை இறைக்கு நிறைக்கு ஏற்றும் என்று உரைவரை செய்யும் மாட்சி போற்றிப் புகழ்ந்து வணங்கத் தக்கதாகும்.

திருச்சிற்றம்பலம்

❋❋❋❋❋

97. அணைந்தோர் தன்மை, சர்வ வியாபி

பெரியபுராணப் பெருநாவலர். **துரை. நமசிவாயம்**
திருச்சிராப்பள்ளி

நாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒருவராக நம்மால் வணங்கப்படுகிற இவரது திருமந்திரம் தான் பத்தாவது திருமுறையாக நம்மால் ஓதப்படுகிறது.

ஒன்பது தந்திரங்களை உள்ளடக்கிய திருமந்திர நூலில் அணைந்தோர் தன்மை, சர்வ வியாபி என்ற இரண்டு பகுதிகளும் இன்னும் சில பகுதிகளும் ஒன்பதாம் தந்திரத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த இரண்டு பகுதிகளிலும் மொத்தம் நாற்பத்தி ஆறு பாடல்கள் இருக்கின்றன. அணைந்தோர் தன்மை என்று திருவருட்பயன் என்னும் நூலிலும் ஒரு பகுதி இருக்கிறது.

அணைந்தோர் தன்மை என்ற சொற்றொடர் எதைக் குறிக்கிறது? அணைந்தோர் என்போர் யார்? அவரது குணங்கள் யாவை? என்று நன்கு சிந்தித்தால் முழுவதும் சிவமயமாகவே ஆகியவர்களே அவர்கள் என்ற முடிவுக்கு வரமுடியும். சிவபெருமானை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து அன்பே நெகிழ்ந்து நெகிழ்ந்து சிவபெருமானை அணைந்ததால் அருளப் பெற்றவர்களே அணைந்தோர் ஆவர். அவர்களது செயல்கள் யாவும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களிலிருந்தும் விடுபட்டதாகவே இருக்கும்.

குற்றமற்ற நெறியில் மானம், அபிமானம், அகன்ற நிலையில் செயல்களைச் செவ்வனே நிறைவேற்றுவார்கள் என்று திருமூலர் சொல்கிறார்.

மலமில்லை மாசில்லை, மானாபிமானம்
குலமில்லை கொள்ளுங் குணங்களும் இல்லை
நலமில்லை நந்தியை ஞானத்தினாலே
பலமில்லை அன்பில் பதித்து வைப்போர்க்கே (2957)

அணைந்தோர் தன்மை என்பதற்கு மோனத்தில் பொருந்தியவர் இயல்பு என்று ஒரு சாராரும் சிவம் பெருக்கும் செயல்களிலேயே சிந்தையைச் செலுத்தும் சாமு சித்தர் என்னும் அருளாளர் வகையைச் சேர்ந்தவர்கள் என்று மற்றொரு சாராரும் உரை தருகிறார்கள். திருஞான சம்பந்தரும் அப்பரும், சுந்தரரும் இவ்வகையினரே

சீர்காழித் திருக்கோயில் குளக்கரையில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று அழுது கொண்டிருந்தது. அந்தக்குழந்தையின் தந்தையார் நீராடிக்

கொண்டிருந்தார். அழுகின்ற குழந்தையின் குரலைக்கேட்ட உமையம்மையார் ஓடோடி வந்து தனது திருமுலைப்பால் அளித்து அழுகையைப் போக்கிச் சிவஞான அறிவை ஊட்டினார். அவரது வாயிலிருந்து வழிந்து கொண்டிருந்த பாலின் சிதறல்களை கரையேறியபோது தந்தையார் கண்ணுற்றார். அந்தக் குழந்தையை 'இது ஏது' என்று தந்தையார் சிவபாத இருதயர் அதட்டிக் கேட்கவும், அந்தக்குழந்தை வானத்தைச்சுட்டி ஆங்கே ஒரு காட்சியைக் காண்பித்து, அப்பனை, தோடுடைய செவியன் என்றும் அப்பனுடன் இருந்த அம்மையையும் அடையாளம் காட்டியது. மகிழ்ச்சியுற்ற சிவபாத இருதயர் அந்தக்குழந்தையின் நில உலக ஆன்மீகப் பயணத்திற்குத் துணை நின்றார் என்பது வரலாறு. அம்மையால் பாலூட்டப் பெற்றுப் பேரறிவு வரப் பெற்ற அந்தக்குழந்தையின் தன்மையைச் சேக்கிழார் விவரிப்பதைக் கேட்போமே?

யாவர்க்கும் தந்தைதாய் எனும் இவர் இப்படி அளித்தார்
ஆவதனால் ஆளுடையபிள்ளை யாராய் அகில
தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச்சிவஞான சம்பந்தராயினார்

சிவஞானசம்பந்தராகி விட்டார். திருஞானசம்பந்தர் தன்னுடைய ஆன்மீகப் பயணத்தின் இறுதிக்கட்டத்தில் திருமண நிகழ்வினை ஏற்றார். அவரது அந்தத் திருமண நிகழ்வில் ஒரு பெரிய சோதி தோன்றியது. அப்பேரொளியில் திருஞானசம்பந்தரும் அவரது துணைவியாரும் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் கலந்து சிவனோடு ஒன்றும் பேறு பெற்றார்கள்.

இதனைச் சேக்கிழாரின் பெரிய புராணத்திருப்பாடல் தெரிவிக்கிறது.

காதலியைக் கைப்பற்றிக் கொண்டு வலஞ்செய்தருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞானசம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முந்தவழிப் புக்கொன்றி உடனானார்

திருஞானசம்பந்தர் உடன் இருந்தவர்களையும் இறைவனோடு இணையுமாறு செய்ததால் அனைவருமே அணைந்தோர் தன்மையைப் பெற்றவர்கள் ஆனார்கள். இவ்வாறு கடவுளோடு ஒன்றுவதை திருமூலர் பாடல் வழி அறியலாம்.

ஒழிந்தேன் பிறவி உறவு என்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்

அழிந்து ஆங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழும் சார்புடைய சிவனைக் கண்டேனே। (2958)

சிவானந்தத்தைத் தேடிச் செல்லும் ஆன்மாவுக்கு உலக இன்பம் சுவைதராது. இவர்கள் நமச்சிவாயப்பழச்சுவை மட்டுமே அறிந்தவர்கள். ஆதலால் இவர்களுக்கு கரும்பும் கசக்கும். தேனும் புளிக்கும். கரும்பு போன்ற காமமும் தேன் போன்ற அதன் சுவையும் உடம்பினுள் உணர்ச்சியைத் தூண்டினாலும் தங்களை ஆட்படுத்திக் கொள்ளமாட்டார்கள். இதற்கு அப்பரடிகள் வாழ்விலிருந்து சான்று தெரிந்து கொள்ள முடியும். அப்பரடிகள் எனப்படுகின்ற திருநாவுக்கரசர் திருப்புகலூரில் தன்னுடைய எண்பதாவது வயதில் உழவாரப்பணி செய்து கொண்டிருந்தார். அப்பொழுது ஆற்றில் பொன், மணி ஆகியவை கற்களோடு சேர்ந்து வந்தன. பொன்னையும் மணியையும் இவர் பிரித்துப் பார்க்கவில்லை. கல்லுடன் சேர்த்து தூர எறிந்து விட்டார். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கியது அவரது தனித்தன்மை. இவரது உலக இன்பங்களிலிருந்து ஒதுங்கிய தன்மையை மேலும் சோதிக்க விரும்பினார் சிவபெருமான். தேவமாதர்களை அவரது கண் முன்னே ஆடவும், பாடவும் வைத்தார். உடல் அழகைக் காணவும் வைத்தார். ஆனால் அப்பரடிகளோ அவர்களை அலட்சியப்படுத்தி ஒதுக்கி விட்டார்.

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்.

என்பது பெரியபுராணம்.

அப்பரடிகளின் இந்த வாழ்க்கை நிகழ்வு திருமூலரின் பாடல் ஒன்றிற்கு விளக்கமாக அமைகிறது.

கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ள வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே -2976

எது தவம்? மனம் உலகை நோக்கி விரிந்து துன்பம் அனுபவித்து அடங்குதலே உண்மையான தவம்.

மனம் விரியப் பெற்று அடங்க வேண்டும். அவ்வாறு அடங்கிய நிலையில் நிலைபெற்ற உயிரின் இடமாக விரிந்த மனம் ஒடுங்கி விடும். அப்போது பேச்சு குறையும். பேரானந்த முக்தி கிடைக்கும்.

மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாயு
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்து உரைமாண்டது முத்தியே

இப்பாடல் மூலம் திருமூலரின் திருவாக்கைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இப்பாடலுக்கு எடுத்துக்காட்டாகத் தாயுமானவரின் வாழ்க்கையைக் கூறலாம். இராமநாதபுரத்தில் தாயுமானவர் தனது இறுதிக் காலத்தில் பல ஆண்டுகள் யாருடனும் பேசாமல் தியானத்திலிருந்தார். அதாவது நீண்டகால நிட்டையில் இருந்தார். அங்கெங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிற்கிறான் இறைவன் என்பது தாயுமானவரின் ஆணித்தரமான கருத்து. இக்கருத்து திருமூலரின் சர்வ வியாபி என்னும் பகுதியினை அடிப்படையாகக் கொண்டது என்று கருத இடமுண்டு.

சர்வ வியாபி

இறைவன் எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிடத்தும் பொருந்தியிருக்கிறான் என்கிறார் திருமூலர்.

சில நாட்களுக்கு முன்பு கடல்கோள் என்று நாம் சொல்லுகிற சுனாமி நம் மக்களைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கியது. மீனவர்களைப் பொறுத்த மட்டில் எந்தக்கடல் அலைகள் வாழ்வித்தனவோ அந்தக்கடல் அலைகளே உயிரிழப்புக்குக் காரணமாயிற்று. அலைகள் ஒரே வேகத்தில் இருக்காது. ஒரே தன்மையிலிருக்காது. வேகமும் தன்மையும் நொடிக்கு நொடி மாற்றம் பெறுகிறது என்பது தெரிந்தும் அச்சப்படாமல் அநேகர் வாழ்ந்தனர். அச்சப்பட நேரிட்ட பொழுது துன்பத்தால் துவண்டனர். எல்லோருடைய வாழ்க்கையிலும் தோன்றுகின்ற துன்பங்கள் கடல் அலைகளைப் போல மாறி மாறி அடுக்கடுக்காக வருபவை. இத்துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் இந்த உடம்போடு வாழுகிற போதே உடம்பினுக்குள்ளே குடி கொண்டிருக்கின்ற இறைவனை அடையாளம் கண்டு வணங்க வேண்டும். அப்பொழுது துன்பங்கள் இன்பங்களாக மாற்றப்படும்.

கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்
துடலிடை வாழ்வு கொண்டு உள்ளொளி நாடி
உடலிடை வைக்கின்ற உள்ளுறு தேவனைக்
கடலின் மலி திரைக் காணலுமாமே -3028

என்பது திருமூலர் வாக்கு.

சிவச்செல்வர்களிடம் சிவபெருமான் அவர்களது உணர்வாக இருக்கிறான். அவர்களது உயிராக இருக்கிறான் அவர்களால் அறியப்படுகின்ற செய்திகளின் மையமாக இருக்கிறான். அவனை மனச்சிந்தனைக்குள்ளேயே சிறைப்படுத்திவிட முடியாது. பூக்களில் வாசனை பொருந்தி இருப்பது போல் சிவஞானியருக்கு அவர்கள் எங்கு சென்றாலும் விரைந்து அருள் தருவான்.

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணருமவன் தன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தத் துன்னி நின்றானே -3035

என்ற திருமூலப்பாடல் மூலம் இதனைத் திருமூலர் வலியுறுத்துகின்றார். இச் செய்தியையே உள்ளத்தை உருக்கும் திருவாசகம் தந்த மாணிக்கவாசகர் பெருமானும் தெளிவாகச் சொல்லுகிறார்.

பூவினாற்றம் போன்றுயர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கருளி வந்தருளி....... -திருவாசகம்

மேலும்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் காவலனே காண்பரிய பேரொளியே -சிவபுராணம்

என்றும் பாடிப்பரவுகிறார்.

சிவனுக்கு கல்வி கற்கவேண்டிய கட்டாயமில்லை. காரணம் நம்மை போன்ற ஜீவன்களுக்கு நல்ல ஞானத்தைத் தருகிற பேரானந்தமுடையவன். வேதத்தில் கூறப்பட்டுள்ள பல பொருள்களில் அவன் பரவி நிற்கிறான். இச்செய்திக்குச் சான்றாக பட்டினத்தார் வாழ்விலிருந்து ஒரு செய்தியைக் குறிப்பிடலாம்.

பட்டினத்தார் பல்வேறு இடங்களைத் தரிசித்து விட்டு திருவொற்றியூர் வந்தார். அப்போது அவருக்கு எதிர்ப்படும் யாவரும் சிவவடிவமாகவே தோன்றினர். கண்ட பொருளிலே எல்லாம் சிவனையே கண்டார். நீர்நிலைகள், மலை, வெண்ணீறு, எவற்றைப் பார்த்தாலும் அவருக்கு சிவ வடிவமாகவே தோன்றியது. வாழி திருவருள் வாழி என்று வாழ்த்தினார்.

வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்கள் எல்லாம் கணநாதர் பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருஒற்றியூர் -பட்டினத்தார்

இதே போல், தாயுமானவர் வாழ்விலிருந்தும் ஒரு மனத்தை உருக்கும் செய்தி ஒன்று உண்டு. குளிர் காலத்தில் தாயுமானவருக்கு அரசர் விலைமிக்க சால்வை ஒன்று வழங்கினார். அந்த சால்வையைப் பயன்படுத்தி தாயுமானவர் குளிரின் கொடுமையிலிருந்து விடுபட வேண்டும் என்பது மன்னரின் விருப்பம். அரசரும் தாயுமானவரும் சென்று கொண்டிருந்த போது இடை வழியில் ஒரு கிழவி குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தார். உடனே தாயுமானவர் மன்னரிடமிருந்து தான் பெற்ற சால்வையை கிழவிக்கு வழங்கி விட்டார். கிழவிக்குக் குளிரைப் போக்க வேண்டும். என்பதற்காகவே கொடுத்தார். அரசருக்கு இச்செயல் அவமதிப்பாகப் பட்டது. 'என்ன இது?' என அதிர வினவினார். தாயுமானவரோ 'நான் அகிலாண்டேஸ்வரிக்குத் தான் இச்சால்வையை அளித்தேன்' என்றார். கிழவியை அகிலாண்டேஸ்வரி வடிவில் பார்த்ததாகப் பேசினார்.

சிவன் பேரறிவுடையவனாக எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்கிறான். எல்லா அறிவிலும் நிறைந்து நிற்கிறான் என்று திருமூலர் சொல்வதைக் கேட்போம்.

புலமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
நலமையின் ஞான வழக்கமு மாகும்
விலமையில் வைத்துள வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்து நின்றானே -3036

சர்வ வியாபி என்று தலைப்புடன் திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தை நிறைவு செய்கிறார். முடிக்கும் போது இறைவன் தன் மூலமாக சொல்லிய மந்திரங்கள் சொல்லிய தமிழ், சொல்லிய உபதேசங்கள் யாவும் உலக மக்களுக்காகச் சொல்லப்பட்டவை, தமிழ், மந்திரம், உபதேசம் ஆகிய மூன்றும் ஒன்றுதான். ஒரே செய்திதான் என்று சொல்லுகிறார்.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே

மூன்றும் ஒன்று ஆமே என்று அவர் குறிப்பிடுவது மரணமிலாப் பெரு வாழ்வைத்தான் என தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் எழுதியிருக்கிறார் என்பது சிந்திக்கத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

❊❊❊❊❊

மூலன் உரை செய்த

மூவாயிரம் தமிழ்

என்னை நன்றாக
இறைவன்படைத்தனன்

தன்னை நன்றாகத்
தமிழ் செய்யுமாறே!

யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்

திலகவதியார் திருவருள் ஆதீனம்
புதுக்கோட்டை - 622 001.